Explanation 2.— The consent of the victim is immaterial in determination of the offence of trafficking.

(2) Whoever commits the offence of trafficking shall be punished with rigorous imprisonment for a term which shall not be less than seven years, but which may extend to ten years, and shall also be liable to fine.

(3) Where the offence involves the trafficking of more than one person, it shall be punishable with rigorous imprisonment for a term which shall not be less than ten years but which may extend to imprisonment for life, and shall also be liable to fine.

(4) Where the offence involves the trafficking of a minor, it shall be punishable with rigorous imprisonment for a term which shall not be less than ten years, but which may extend to imprisonment for life, and shall also be liable to fine.

(5) குற்றமானது ஒன்றுக்கு மேற்பட்ட இளவர்களை இழிதொழிலுக்குட்படுத்தலை உள்ளடக்குமிடத்து, அது பதினான்கு ஆண்டுகளுக்கு குறையாத, ஆனால் ஆயுள் தண்டனை வரை நீடிக்கலாகும் கடுங்காவல் சிறைத் தண்டனை, அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(6) இளவர் ஒருவரை இழிதொழிலுக்குட்படுத்திய குற்றத்திற்காக ஒரு தடவைக்கு மேல் ஒரு நபருக்கு தண்டனை விதிக்கப்பட்டிருந்தால், அத்தகு நபர் ஆயுள்தண்டனை, அதாவது அந்த நபரின் இயற்கையான வாழ்க்கையில் எஞ்சியுள்ள காலம் முழுவதற்குமான சிறைத்தண்டனையென பொருள்படத் தக்கவாறு, அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(7) நபர் எவரையும் இழிதொழிலுக்குட்படுத்துவதில் பொது ஊழியர் அல்லது காவல் அலுவலர் ஒருவர் சம்பந்தப்பட்டிருந்தால், அத்தகு பொது ஊழியர் அல்லது காவல் அலுவலர் ஆயுள்தண்டனை, அதாவது அந்த நபரின் இயற்கையான வாழ்க்கையில் எஞ்சியுள்ள காலம் முழுவதற்குமான சிறைத் தண்டனையென பொருள்படத்தக்கவாறு, அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

370அ. இழிதொழிலுக்குட்படுத்தப்பட்ட நபரை சுரண்டுதல் (Exploitation of a trafficked person):- (1) இளவர் ஒருவர் இழிதொழிலுக்குட்படுத்தப்பட்டிருப்பதாக தெரிந்திருக்கின்ற அல்லது நம்புவதற்கு காரணம் கொண்டிருக்கின்ற எவரொருவரும், அத்தகு இளவரை பாலியல் சுரண்டலுக்காக எந்த முறையிலேனும் ஈடுபடுத்தியிருந்தால், அவர் அய்ந்து ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் ஏழு ஆண்டுகளுக்கு நீடிக்கலாகும் கடுங்காவல் சிறைத் தண்டனை அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

---

(5) Where the offence involves the trafficking of more than one minor, it shall be punishable with rigorous imprisonment for a term which shall not be less than fourteen years, but which may extend to imprisonment for life, and shall also be liable to fine.

(6) If a person is convicted of the offence of trafficking of minor on more than one occasion, then such person shall be punished with imprisonment for life, which shall mean imprisonment for the remainder of that person's natural life, and shall also be liable to fine.

(7) When a public servant or a police officer is involved in the trafficking of any person then, such public servant or police officer shall be punished with imprisonment for life, which shall mean imprisonment for the remainder of that person's natural life, and shall also be liable to fine.

370A. Exploitation of a trafficked person.— (1) Whoever, knowingly or having reason to believe that a minor has been trafficked, engages such minor for sexual exploitation in any manner, shall be punished with rigorous imprisonment for a term which shall not be less than five years, but which may extend to seven years, and shall also be liable to fine.

(2) ஒரு நபர் இழிதொழிலுக்குட்படுத்தப்பட்டிருப்பதாக தெரிந்திருக்கின்ற அல்லது நம்புவதற்கு காரணம் கொண்டிருக்கின்ற எவரொருவரும், அத்தகு நபரை பாலியல் சுரண்டலுக்காக எந்த முறையிலேனும் ஈடுபடுத்தியிருந்தால், அவர் மூன்று ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் அய்ந்து ஆண்டுகளுக்கு நீடிக்கலாகும் கடுங்காவல் சிறைத்தண்டனை அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

9. பிரிவுகள் 375, 376, 376அ, 376ஆ, 376இ மற்றும் 376ஈ-க்காக புதிய பிரிவுகள் மாற்றீடாக்குதல் (Substitution of new sections for Sections 375, 376, 376A, 376B, 376C and 376D):– தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 375, 376, 376அ, 376ஆ, 376இ மற்றும் 376ஈ-க்காக பின்வரும் பிரிவுகள் மாற்றீடாக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

'375. வன்புணர்ச்சி (Rape):- ஓர் ஆண் -

(அ) தனது ஆண்குறியை, பெண் ஒருவரின் யோனி, வாய், சிறுநீர் ஒழுக்கு நாளம் அல்லது மலவாய் ஆகியவற்றில் எந்த அளவில் உள்நுழைத்தாலும் (penetrates) அல்லது தன்னுடன் அல்லது வேறு நபர் எவருடனும் அப்பெண்ணை அவ்வாறு செய்யச் செய்தாலும்; அல்லது

(ஆ) பொருள் எதையும் அல்லது ஆண்குறி அல்லாத உடலின் பகுதி ஒன்றை பெண் ஒருவரின் யோனி, சிறுநீர் ஒழுக்கு நாளம் அல்லது மலவாயில் எந்த அளவில் செருகினாலும் (inserts) அல்லது தன்னுடன் அல்லது வேறு நபர் எவருடனும் அப்பெண்ணை அவ்வாறு செய்யச் செய்தாலும்; அல்லது

(இ) பெண் ஒருவரின் யோனி, சிறுநீர் ஒழுக்கு நாளம், மலவாய்

---

(2) Whoever, knowingly by or having reason to believe that a person has been trafficked, engages such person for sexual exploitation in any manner, shall be punished with rigorous imprisonment for a term which shall not be less than three years, but which may extend to five years, and shall also be liable to fine.'.

9. Substitution of new sections for sections 375, 376, 376A, 376B, 376C and 376D : - For sections 375, 376, 376A, 376B, 376C and 376D of the Penal Code, the following sections shall be substituted, namely:—

'*375. Rape.*— A man is said to commit "rape" if he —

(a) penetrates his penis, to any extent, into the vagina, mouth, urethra or anus of a woman or makes her to do so with him or any other person; or

(b) inserts, to any extent, any object or a part of the body, not being the penis, into the vagina, the urethra or anus of a woman or makes her to do so with him or any other person; or

(c) manipulates any part of the body of a woman so as to cause pen-

அல்லது அவரது உடல் பகுதி எதிலும் நுழைத்தல் செய்தலுக்காக அத்தகு பெண்ணின் உடல் பகுதி எதையும் கையாண்டாலும் (manipulates) அல்லது தன்னுடன் அல்லது வேறு நபர் எவருடனும் அப்பெண்ணை அவ்வாறு செய்யச் செய்தாலும்; அல்லது

(ஈ) தனது வாயை பெண் ஒருவரின் யோனி, மலவாய், சிறுநீர் ஒழுக்கு நாளத்தின் மேல் வைத்தாலும் (applies) அல்லது தன்னுடன் அல்லது வேறு நபர் எவருடனும் அப்பெண்ணை அவ்வாறு செய்யச் செய்தாலும்,

அத்தகு செயல் பின்வரும் ஏழு விவரிப்புகளில் எவற்றின் கீழாவது வருகின்ற சூழ்நிலைகளில் இருப்பின் அவர் "வன்புணர்ச்சி" புரிந்தவர் என்று சொல்லப் படுவார்:-

முதலாவதாக.- அப்பெண்ணின் விருப்பத்திற்கு எதிராக.

இரண்டாவதாக.- அப்பெண்ணின் சம்மதம் இல்லாமல்

மூன்றாவதாக.- அப்பெண்ணை அல்லது அவள் ஆர்வம் கொண்டுள்ள நபர் எவரையும் மரணம் அல்லது காயம் விளைவிக்கப்படும் என்ற அச்சத்தில் வைத்திருப்பதன் மூலம் அவரது சம்மதம் பெறப்பட்டிருக்கும் போது, அப்பெண்ணின் சம்மதத்துடன்.

நான்காவதாக.- அப்பெண்ணின் கணவர் தான் அல்ல என்பதை அந்த ஆண் தெரிந்திருக்கின்ற போதும் மற்றும் அப்பெண் எந்த வேறொரு ஆணை சட்டப்படி மணந்திருக்கிறாரோ அல்லது அவ்வாறு நம்புகிறாரோ அவர் தாம்தான் என்ற காரணத்தால் அவளது சம்மதம் கொடுக்கப்படுகிறது என்பதை அவர் தெரிந்திருக்கின்ற போதும், அப்பெண்ணின் சம்மதத்துடன். (அதாவது சட்டமுறைப்படி மணந்த கணவன் என்று தன்னை ஒரு பெண் தவறாக நம்பி அதனால் சம்மதம் அளிக்கிறாள் என்பதைத் தெரிந்தும், அந்தச் சம்மதத்துடன்)

---

etration into the vagina, urethra, anus or any part of body of such woman or makes her to do so with him or any other person; or

(d) applies his mouth to the vagina, anus, urethra of a woman or makes her to do so with him or any other person,

under the circumstances falling under any of the following seven descriptions:—

First.—Against her will.

Secondly.—Without her consent.

Thirdly.—With her consent, when her consent has been obtained by putting her or any person in whom she is interested, in fear of death or of hurt,

Fourthly.—With her consent, when the man knows that he is not her husband and that her consent is given because she believes that he is another man to whom she is or believes herself to be lawfully married.

அய்ந்தாவதாக.- அத்தகு சம்மதத்தை கொடுக்கும் சமயத்தில், பித்து நிலை (unsoundness of mind) அல்லது போதையூட்டப்படுதல் (intoxication) காரணமாக அல்லது உணர்வை மழுங்கச் செய்யும் (stupefying) அல்லது உடல்நலத்திற்கு ஒவ்வாதன அடங்கிய சாரத்தை (unwholesome substance) அந்த ஆணே தனியாக அல்லது வேறொருவர் மூலம் செலுத்தியதால், அப்பெண் தான் சம்மதம் கொடுக்கும் செயலின் தன்மையையோ அல்லது விளைவுகளையோ அறியாதிருக்கும் போது, அப்பெண்ணின் சம்மதத்துடன்.

ஆறாவதாக.- அப்பெண் பதினெட்டு வயதிற்குட்பட்டவராக இருப்பின், அவளது சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி,

ஏழாவதாக.- அப்பெண் சம்மதத்தை தெரிவிக்க இயலாதிருக்கும் போது

விளக்கம் 1.- இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, "யோனி" (vagina) என்பது யோனியின் பெரு உதடுகளையும் (*labia majora*) உள்ளடக்கியதாகும்.

விளக்கம் 2.- சம்மதம் என்பது குறிப்பிட்ட பாலியியல் செயலில் பங்கேற்பதற்குண்டான விருப்பத்தை அப்பெண் சொற்களால், சைகைகளால் அல்லது வாய்மொழி அல்லது வாய்மொழியல்லாத தகவல் தொடர்பின் வடிவம் எதிலும் தெரிவிக்கும் போது ஏற்படுகின்ற தெளிவான தன்னிச்சையான உடன்பாடு என்று பொருள்படும்:

வரம்புரையாக உள் நுழைக்கும் செயலை உடல்ரீதியாக எதிர்க்காத பெண் ஒருவர், அந்த சங்கதியின் காரணத்தால் மட்டுமே பாலியல் செயற் பாடுகளுக்கு சம்மதம் அளித்தவராக கருதப்படுதல் ஆகாது.

Fifthly.—With her consent when, at the time of giving such consent, by reason of unsoundness of mind or intoxication or the administration by him personally or through another of any stupefying or unwholesome substance, she is unable to understand the nature and consequences of that to which she gives consent.

Sixthly.—With or without her consent, when she is under eighteen years of age.

Seventhly.—When she is unable to communicate consent.

Explanation 1.— For the purposes of this section, "vagina" shall also include labia majora.

Explanation 2.— Consent means an unequivocal voluntary agreement when the woman by words, gestures or any form of verbal or non-verbal communication, communicates willingness to participate in the specific sexual act:

Provided that a woman who does not physically resist to the act of penetration shall not by the reason only of that fact, be regarded as consenting to the sexual activity.

விதிவிலக்கு 1.- மருத்துவ நடைமுறை அல்லது தலையீடு ஒன்று வன்புணர்ச்சியை உருவாக்காது.

விதிவிலக்கு 2.- ஆண் ஒருவர், பதினைந்து வயதிற்கு கீழ் இல்லாத, தனது சொந்த மனைவியுடன் பாலியல் உறவு அல்லது பாலியல் செயல்கள் கொள்வது வன்புணர்ச்சி ஆகாது.

376. வன்புணர்ச்சிக்கு தண்டனை (Punishment for rape):- (1) வன்புணர்வு செய்கின்ற எவரொருவரும், உட்பிரிவு (2)-இல் வகை செய்யப்பட்ட நேர்வுகள் நீங்கலாக, ஏழு ஆண்டுகளுக்கு குறையாத, ஆனால் ஆயுள் வரை நீடிக்கலாகும் சிறைத் தண்டனைகளில் இரண்டில் ஒன்று அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(2) (அ) காவல் அலுவலராக இருந்து,

(i) அத்தகு காவல் அலுவலர் நியமனம் செய்யப்பட்டிருக்கிற காவல் நிலைய எல்லைக்குள்; அல்லது

(ii) காவல் நிலைய வளாகம் எதிலும்; அல்லது

(iii) அத்தகு காவல் அலுவலரின் பாதுகாப்புப் பொறுப்பில் அல்லது அத்தகு காவல் அலுவலருக்கு கீழமைந்த காவல் அலுவலர் ஒருவரின் பாதுகாப்புப் பொறுப்பில் உள்ள பெண் ஒருவர் மீது வன்புணர்வு செய்கின்ற; அல்லது

Exception 1.— A medical procedure or intervention shall not constitute rape.

Exception 2.— Sexual intercourse or sexual acts by a man with his own wife, the wife not being under fifteen years of age, is not rape.'.

376. Punishment for rape.— (1) Whoever, except in the cases provided for in sub-section (2), commits rape, shall be punished with rigorous imprisonment of either description for a term which shall not be less than seven years, but which may extend to imprisonment for life, and shall also be liable to fine.

(2) Whoever,—

(a) being a police officer, commits rape--

(i) within the limits of the police station to which such police officer is appointed; or

(ii) in the premises of any station house; or

(iii) on a woman in such police officer's custody or in the custody of a police officer subordinate to such police officer; or

(ஆ) பொது ஊழியராக இருந்து, அத்தகு பொது ஊழியரின் பாதுகாப்பு பொறுப்பில் அல்லது பொது ஊழியருக்கு கீழமைந்த பொது ஊழியர் ஒருவரின் பாதுகாப்பு பொறுப் பில் உள்ள பெண் ஒருவர் மீது வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(இ) மைய அல்லது மாநில அரசாங்கத்தால் பகுதி ஒன்றில் அணி வகுத்து நிறுத்தப்பட்டுள்ள ஆயுதப்படைகளின் உறுப்பினராக இருந்து அத்தகு பகுதியில் வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(ஈ) சிறைச்சாலை, காவல் வைப்பு இல்லம் அல்லது அச்சமயத்தில் செயல்திறத்தில் உள்ள சட்டம் எதனின் கீழும் அல்லது சட்டத்தால் நிறுவப்பட்ட பாதுகாப்பு பொறுப்புக்கான வேறு இடத்தின் அல்லது பெண்களின் அல்லது குழந்தைகளின் நிலையத்தின் மேலாண்மையில் அல்லது பணியில் இருந்து, அத்தகு சிறைச்சாலை, காவல் வைப்பு இல்லம், இடம் அல்லது நிலையத்தில் உள்ளவர் மீது வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(உ) மருத்துவமனையின் மேலாண்மையில் அல்லது பணியில் இருந்து, அந்த மருத்துவமனையில் உள்ள பெண் ஒருவர் மீது வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(ஊ) பெண்ணின் உறவினராக, பாதுகாவலராக அல்லது ஆசிரிய ராக, அல்லது அப்பெண்ணின் நம்பிக்கைக்குரிய அல்லது அதிகாரத்திற்குட்படுத்தக் கூடிய ஓர் நபராக இருந்து, அத்தகு பெண் மீது வன்புணர்வு செய்கின்ற

(b) being a public servant, commits rape on a woman in such public servant's custody or in the custody of a public servant subordinate to such public servant; or

(c) being a member of the armed forces deployed in an area by the Central or a State Government commits rape in such area; or

(d) being on the management or on the staff of a jail, remand home or other place of custody established by or under any law for the time being in force or of a women's or children's institution, commits rape on any inmate of such jail, remand home, place or institution; or

(e) being on the management or on the staff of a hospital, commits rape on a woman in that hospital; or

(f) being a relative, guardian or teacher of, or a person in a position of trust or authority towards the woman, commits rape on such woman; or

(எ) இன அல்லது பிரிவினர் வன்முறையின் போது வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(ஏ) பெண் ஒருவர் கருவுற்றுள்ளார் என்பதை தெரிந்திருந்தே அவள் மீது வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(ஐ) பெண் ஒருவர் பதினாறு வயதிற்கு கீழ் இருக்கும் போது அவள் மீது வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(ஒ) சம்மதம் கொடுப்பதற்கு திறனில்லா நிலையில் உள்ள பெண் ஒருவர் மீது வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(ஓ) பெண் ஒருவர் மீது கட்டுப்பாடு அல்லது ஆதிக்கம் கொண்டவராக இருந்து, அத்கு பெண்ணை வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(ஔ) மனரீதியான அல்லது உடல்ரீதியான இயலாமையால் பாதிக்கப்பட்டுள்ள பெண் ஒருவர் மீது வன்புணர்வு செய்கின்ற; அல்லது

(அஅ) ஒரே பெண்ணின் மீது அடிக்கடி வன்புணர்வு செய்கின்ற

எவரொருவரும்,

பத்தாண்டுகளுக்குக் குறையாத, ஆனால் ஆயுள் வரை நீடிக்கலாகும் சிறைத் தண்டனை அதாவது அந்த நபரின் இயற்கையான வாழ்க்கையில் எஞ்சியுள்ள காலம் முழுவதற்குமான சிறைத்தண்டனையென பொருள்படத்தக்கவாறு,

---

(g) commits rape during communal or sectarian violence; or

(h) commits rape on a woman knowing her to be pregnant; or

(i) commits rape on a woman when she is under sixteen years of age; or

(j) commits rape, on a woman incapable of giving consent; or

(k) being in a position of control or dominance over a woman, commits rape on such woman; or

(l) commits rape on a woman suffering from mental or physical disability; or

(m) while committing rape causes grievous bodily harm or maims or disfigures or endangers the life of a woman; or

(n) commits rape repeatedly on the same woman,

shall be punished with rigorous imprisonment for a term which shall not be less than ten years, but which may extend to imprisonment for life, which shall mean imprisonment for the remainder of that person's natural life, and shall also be

அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

விளக்கம்.- இந்த உட்பிரிவின் நோக்கங்களுக்காக,-

(அ) "ஆயுதப்படைகள்" (Armed Forces) என்பது மைய அரசாங்கம் அல்லது மாநில அரசாங்கத்தின் கட்டுப்பாட்டின் கீழ் உள்ள இராணுவம்சார் படைகள் மற்றும் துணைப்படைகள் எதனையும் உள்ளடக்கியதும், அச்சமயத்தில் செயல் திறத்தில் உள்ள சட்டம் எதனின் கீழும் கட்டமைக்கப்பட்ட ஆயுதப் படைகளின் உறுப்பினர் எவரையும் உள்ளிட்ட மற்றும் கப்பல் படை, இராணுவப் படை மற்றும் வான் படை என்று பொருள்படும்.

(ஆ) "மருத்துவமனை" (Hospital) என்பது மருத்துவமனையின் சுற்றுப் புறவிடங்கள் என்று பொருள்படும். மேலும் இது உடல் நலம் தேறி வருகின்ற நிலையில் உள்ள நபர்களை மற்றும் மருத்துவ கவனிப்பும் மறுவாழ்வும் தேவைப்படும் நபர்களை சேர்த்துக் கொண்டு சிகிச்சையளிப்பதற்கான நிலையம் எதனின் சுற்றுப்புறவிடங்களையும் உள்ளடக்கியதாகும்.

(இ) "காவல் அலுவலர்" (Police Officer) என்பது காவல் சட்டம், 1861 (5/1861)-இன் கீழ் "காவலர்" என்ற சொற்றொடருக்கு ஒதுக்கப்பட்டவாறான அதே பொருளை கொண்டு இருத்தல் வேண்டும்.

(ஈ) "பெண்களின் மற்றும் குழந்தைகளின் நிலையம்" (women's or children's institution) என்பது ஓர் நிலையம், அது அனாதை இல்லம் அல்லது புறக்கணிக்கப்பட்ட பெண்கள் அல்லது குழந்தைகளுக்கான இல்லம் அல்லது விதவைகளின் இல்லம் என பெயர் எதனால் அழைக்கப்பட்டாலும் அல்லது பெண்கள் மற்றும் குழந்தைகளை சேர்த்துக் கொண்டு கவனிப்பதற்காக

---

liable to fine.

Explanation.— For the purposes of this sub-section,--

(a) "armed forces" means the naval, military and air forces and includes any member of the Armed Forces constituted under any law for the time being in force, including the paramilitary forces and any auxiliary forces that are under the control of the Central Government or the State Government;

(b) "hospital" means the precincts of the hospital and includes the precincts of any institution for the reception and treatment of persons during convalescence or of persons requiring medical attention or rehabilitation;

(c) "police officer" shall have the same meaning as assigned to the expression "police" under the Police Act, 1861 (5 of 1861);

(d) "women's or children's institution" means an institution, whether called an orphanage or a home for neglected women or children or a widow's home or an institution called by any other name, which is established and main-

நிறுவப்பட்டு பராமரிக்கப்பட்டு வேறு பெயர் எதனாலும் அழைக்கப்படும் நிலையம் ஒன்று என்று பொருள்படும்.

376அ. பாதிக்கப்பட்டவருக்கு மரணம் விளைவித்தல் அல்லது நிரந்தர உணர்வற்ற நிலைக்கு இட்டுச் செல்லுதலுக்கு தண்டனை (Punishment for causing death or resulting in persistent vegetative state of victim):- பிரிவு 376-இன் உட்பிரிவு (1) அல்லது உட்பிரிவு (2)-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றம் ஒன்றை புரிகின்ற மற்றும் அத்தகு குற்றம் புரிதலின் போது அப்பெண்ணிற்கு மரணம் விளைவிக்கத்தக்க காயம் ஒன்றை ஏற்படுத்துகின்ற அல்லது அப்பெண் நிரந்தர உணர்வற்ற நிலையில் இருக்கும்படி செய்கின்ற, எவரொருவரும் இருபது ஆண்டுகளுக்குக் குறையாத கடுஞ் சிறைத்தண்டனையுடன், ஆனால் ஆயுள் வரை நீடிக்கலாகும் சிறைத்தண்டனை அதாவது அந்த நபரின் இயற்கையான வாழ்க்கையில் எஞ்சியுள்ள காலம் முழுவதற்குமான சிறைத் தண்டனையென பொருள்படத்தக்கவாறு, அல்லது மரண தண்டனை விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

376ஆ. பிரிந்திருக்கும் போது தனது மனைவியின் மீது கணவனால் கொள்ளப்படும் பாலியல் உடலுறவு (Sexual intercourse by husband upon his wife during separation):- பிரிவிற்கான தீர்ப்பாணை ஒன்றின் கீழ் அல்லது வேறு வகையில் பிரிந்து வாழுகின்ற தனது சொந்த மனைவியுடன் அவளது சம்மதம் இல்லாமல், பாலியல் உடலுறவு கொள்ளம் எவரொருவரும், இரண்டு ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கலாகும் சிறைத் தண்டனைகளில் இரண்டில் ஒன்று அபராதத்துடன் விதித்து தண்டிக்கப் படுதல் வேண்டும்.

விளக்கம்:- இந்தப் பிரிவில், "பாலியல் உடலுறவு" என்பது பிரிவு 375-

---

tained for the reception and care of women or children.

376A. Punishment for causing death or resulting in persistent vegetative state of victim.—Whoever, commits an offence punishable under sub-section (1) or subsection (2) of section 376 and in the course of such commission inflicts an injury which causes the death of the woman or causes the woman to be in a persistent vegetative state, shall be punished with rigorous imprisonment for a term which shall not be less than twenty years, but which may extend to imprisonment for life, which shall mean imprisonment for the remainder of that person's natural life, or with death.

376B. Sexual intercourse by husband upon his wife during separation.— Whoever has sexual intercourse with his own wife, who is living separately, whether under a decree of separation or otherwise, without her consent, shall be punished with imprisonment of either description for a term which shall not be less than two years but which may extend to seven years, and shall also be liable to fine.

Explanation.— In this section, "sexual intercourse" shall mean any of

இன் (அ) முதல் (ஈ) வரையிலான கூறுகளில் குறிப்பிடப்பட்ட செயல்கள் எதுவும் என்று பொருள்படும்.

376இ. அதிகாரத்தில் உள்ள நபர் ஒருவரால் கொள்ளப்படும் பாலியல் உடலுறவு (Sexual intercourse by a person in authority):-

(அ) அதிகாரம் செலுத்தக் கூடிய நிலை ஒன்றில் அல்லது நம்பக உறவுமுறை ஒன்றில் இருந்து; அல்லது

(ஆ) பொது ஊழியராக இருந்து; அல்லது

(இ) சிறைச்சாலை, காவல் வைப்பு இல்லம் அல்லது பாதுகாப்பு அச்சமயத்தில் செயல்திறத்தில் உள்ள சட்டம் எதனின் கீழும் அல்லது சட்டத்தால் நிறுவப்பட்ட பாதுகாப்பு பொறுப்புக்கான வேறு இடத்தின் அல்லது பெண்களின் அல்லது குழந்தைகளின் நிலையத்தின் கண்காணிப் பாளராக அல்லது மேலாளராக இருந்து; அல்லது

(ஈ) மருத்துவமனை ஒன்றின் மேலாண்மையில் இருக்கின்ற அல்லது மருத்துவமனையின் பணியில் இருந்து

ஒன்று தன்னுடைய பாதுகாப்புப் பொறுப்பில் உள்ள அல்லது தனது வசத்தில் உள்ள அல்லது வளாகத்தில் முன்னிலையாகியுள்ள பெண் எவரையும் தன்னுடன் பாலியல் உடலுறவு கொள்ளத் தூண்டுவதற்காக அல்லது தீய நெறிக்கு உட்படுத்துவதற்காக அத்தகு நிலை அல்லது நம்பக உறவுமுறையை தவறாகப் பயன்படுத்துகின்ற எவரொருவரும், அத்தகு பாலியல் உடலுறவு வன்புணர்வு குற்றமாகாத போது, அய்ந்து ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் பத்தாண்டுகளுக்கு நீடிக்கலாகும் கடுஞ்சிறைத் தண்டனைகளில் இரண்டில் ஒன்று அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

---

the acts mentioned in clauses (a) to (d) of section 375.

376C. Sexual intercourse by a person in authority.—Whoever, being-

(a) in a position of authority or in a fiduciary relationship; or

(b) a public servant; or

(c) superintendent or manager of a jail, remand home or other place of custody established by or under any law for the time being in force, or a women's or children's institution; or

(d) on the management of a hospital or being on the staff of a hospital,

abuses such position or fiduciary relationship to induce or seduce any woman either in his custody or under his charge or present in the premises to have sexual intercourse with him, such sexual intercourse not amounting to the offence of rape, shall be punished with rigorous imprisonment of either description for a term which shall not be less than five years, but which may extend to ten years, and shall also be liable to fine.

விளக்கம் 1.- இந்தப் பிரிவில், "பாலியல் உடலுறவு" என்பது பிரிவு 375-இன் (அ) முதல் (ஈ) வரையிலான கூறுகளில் குறிப்பிடப்பட்ட செயல்கள் எதுவும் என்று பொருள்படும்.

விளக்கம் 2.- இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக, பிரிவு 375க்கான விளக்கம் 1-ம் கூட பொருந்துதல் வேண்டும்.

விளக்கம் 3.- சிறைச்சாலை, காவல்வைப்பு இல்லம் அல்லது பாதுகாப்பு பொறுப்பிற்கான வேறு இடம் அல்லது பெண்களின் அல்லது குழந்தைகளின் நிலையம் ஒன்று தொடர்பாக "கண்காணிப்பாளர்" என்பது அத்தகு சிறைச்சாலை, காவல்வைப்பு இல்லம், இடம் அல்லது நிலையத்தில் பதவிப் பொறுப்பு வேறு எதனையும் வகிக்கின்ற நபர், அப்பதவியின் காரண மாக அதனுள் இருப்பவர்களின் மீது அதிகாரம் அல்லது கட்டுப்பாடு எதையும் செயல்படுத்துகின்ற அத்தகு நபர் ஒருவரையும் உள்ளடக்கும்.

விளக்கம் 4.- "மருத்துவமனை" மற்றும் "பெண்களின் அல்லது குழந்தைகளின் நிலையம்" என்ற சொற்றொடர்கள் முறையே பிரிவு 376-இன் உட்பிரிவு (2)-க்கான விளக்கத்தில் உள்ள அதே பொருளைக் கொண்டதாகும்.

376ஈ. கூட்டு வன்புணர்வு (Gang rape):- கூட்டம் ஒன்றைக் கட்டமைக்கும் அல்லது பொது நோக்கத்தை நிறைவேற்றுதற் பொருட்டு செயல்படும் ஒன்று அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் பெண் ஒருவர் வன்புணர்வு செய்யப்பட்டால், அத்தகு நபர்கள் ஒவ்வொருவரும் வன்புணர்வு குற்றத்தைச் செய்திருப்பதாகக் கருதப்படுவர். மேலும் அவர் இருபது ஆண்டு களுக்குக் குறையாத கடுஞ் சிறைத்தண்டனையுடன், ஆனால் ஆயுள் வரை நீடிக் கலாகும் சிறைத்தண்டனை அதாவது அந்த நபரின் இயற்கையான வாழ்க்கை யில் எஞ்சியுள்ள காலம் முழுவதற்குமான சிறைத் தண்டனையென பொருள்

Explanation 1.— In this section, "sexual intercourse" shall mean any of the acts mentioned in clauses (a) to (d) of section 375.

Explanation 2. — For the purposes of this section, Explanation 1 to section 375 shall also be applicable.

Explanation 3.— "Superintendent", in relation to a jail, remand home or other place of custody or a women's or children's institution, includes a person holding any other office in such jail, remand home, place or institution by virtue of which such person can exercise any authority or control over its inmates.

Explanation 4.—The expressions "hospital" and "women's or children's institution" shall respectively have the same meaning as in Explanation to sub-section (2) of section 376.

376D. Gang rape.—Where a woman is raped by one or more persons constituting a group or acting in furtherance of a common intention, each of those persons shall be deemed to have committed the offence of rape and shall

படத்தக்கவாறு, அபராதத்துடன் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

வரம்புரையாக அத்தகு அபராதம் பாதிக்கப்பட்டவரின் மருத்துவ செலவுகள் மற்றும் மறுவாழ்விற்கான செலவை சந்திக்குமளவிற்கு சரியானதாக நியாயமானதாக இருத்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக இந்தப் பிரிவின் கீழ் விதிக்கப்படும் அபராதம் எதுவும் பாதிக்கப்பட்டவருக்கு அளிக்கப்படுதல் வேண்டும்.

376உ. திரும்பச் செய்திடும் குற்றவாளிகளுக்கான தண்டனை (Punishment for repeat offenders):- பிரிவு 376 அல்லது பிரிவு 376அ அல்லது பிரிவு 376ஈ-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமொன்றிற்காக முன்பே தண்டனைத் தீர்ப்பு வழங்கப்பட்டிருந்து, அந்தப் பிரிவுகள் எவற்றின் கீழாவது தண்டிக்கத்தக்க குற்றமொன்றிற்காக பின்னிட்டு தண்டனைத் தீர்ப்பு வழங்கப்படுகின்ற எவரொருவரும் அந்த நபரின் இயற்கையான வாழ்க்கையில் எஞ்சியுள்ள காலம் முழுவதற்குமான சிறைத் தண்டனையென பொருள்படத்தக்கவாறு ஆயுள் சிறைத் தண்டனை, அல்லது மரண தண்டனை விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

10. பிரிவு 509-இன் திருத்தம் (Amendment of Section 509):- தண்டனைச் சட்டத்தின் பிரிவு 509-இல், "ஓராண்டு வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்கான வெறுங்காவல் சிறைத்தண்டனையுடன், அல்லது அபராதத்துடன், அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்" என்ற சொற்களுக்காக "மூன்றாண்டுகள் வரை நீடிக்கலாகும் ஒரு கால அளவுக்கான வெறுங்காவல் சிறைத்தண்டனையுடன், மற்றும் அபராதமும் விதித்து தண்டிக்கப்படுதல் வேண்டும்" என்ற சொற்கள் மாற்றீடாக்கப்படுதல் வேண்டும்.

---

be punished with rigorous imprisonment for a term which shall not be less than twenty years, but which may extend to life which shall mean imprisonment for the remainder of that person's natural life, and with fine:

Provided that such fine shall be just and reasonable to meet the medical expenses and rehabilitation of the victim:

Provided further that any fine imposed under this section shall be paid to the victim.

376E. Punishment for repeat offenders.— Whoever has been previously convicted of an offence punishable under section 376 or section 376A or section 376D and is subsequently convicted of an offence punishable under any of the said sections shall be punished with imprisonment for life which shall mean imprisonment for the remainder of that person's natural life, or with death.'.

10. Amendment of section 509:— In section 509 of the Penal Code, for the words "shall be punished with simple imprisonment for a term which may extend to one year, or with fine, or with both", the words "shall be punished with simple imprisonment for a term which may extend to three years, and also with fine" shall be substituted.

இயல் 3
குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-க்கு திருத்தங்கள்
(Amendments to the Code of Criminal Procedure, 1973)

11. பிரிவு 26-இன் திருத்தம் (Amendment of Section 26):- குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973-இல் (2/1974) (இதற்குப் பிறகு இந்த இயலில் இது குற்றவியல் நடைமுறைச் சட்டம் என்று குறிப்பிடப்படும்), பிரிவு 26-இல், கூறு (அ)-க்கான வரம்புரையில், "இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 376 மற்றும் பிரிவுகள் 376அ முதல் 376ஈ வரை" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எழுத்துக்களுக்காக "இந்திய தண்டனைச் சட்டம் (45/1860)-இன் பிரிவு 376, 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ அல்லது பிரிவு 376உ கீழான குற்றம்" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எபத்துக்கள் மாற்றீடாக்கப்படுதல் வேண்டும்.

12. பிரிவு 53அ-இன் திருத்தம் (Amendment of Section 54A):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 54அ-வில், பின்வரும் வரம்புரைகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"வரம்புரையாக, கைது செய்யப்பட்ட நபரை அடையாளங்காட்டும் நபர் மன அல்லது உடல் திறனற்றவராக இருந்தால், அத்தகு நபர் அவருக்கு வசதியாக உள்ள வழிமுறைகளைப் பயன்படுத்தி கைதான நபரை அடையாளம் காட்டுகிறார் என்பதை உறுதிப்படுத்துவற்கு உரிய நடவடிக்கைகளை எடுக்கக்

Chapter III
Amendments to the Code of Criminal Procedure, 1973

11. Amendment of section 26:- In the Code of Criminal Procedure, 1973 (2 of 1974) (hereafter in this Chapter referred to as the Code of Criminal Procedure), in section 26, in the proviso to clause (a), for the words, figures and letters "offence under section 376 and sections 376A to 376D of the Indian Penal Code" (45 of 1860), the words, figures and letters "offence under section 376, section 376A, section 376B, section 376C, section 376D or section 376E of the Indian Penal Code" shall be substituted.

12. Amendment of section 54A:- In section 54A of the Code of Criminal Procedure, the following provisos shall be inserted, namely:--

"Provided that, if the person identifying the person arrested is mentally or physically disabled, such process of identification shall take place under the supervision of a Judicial Magistrate who shall take appropriate steps to ensure that such person identifies the person arrested using methods that per-

கூடிய குற்றவியல் நடுவர் ஒருவரின் மேற்பார்வையின் கீழ் அத்தகு அடையாளம் காட்டும் நடைமுறை நிகழ்த்தல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக கைது செய்யப்பட்ட நபரை அடையாளங் காட்டும் நபர் மன அல்லது உடல் திறனற்றவராக இருந்தால், அந்த அடையாளம் காட்டும் நடைமுறை காணொலியாக பதிவு செய்யப்படுதல் (videographed) வேண்டும்.

13. பிரிவு 154-இன் திருத்தம் (Amendment of Section 154):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 54அ-வில், பின்வரும் வரம்புரைகள் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"வரம்புரையாக இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 326அ, பிரிவு 326ஆ, பிரிவு 354, பிரிவு 354அ, பிரிவு 354ஆ, பிரிவு 354இ, பிரிவு 354ஈ, பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ, பிரிவு 376உ அல்லது பிரிவு 509-இன் கீழான குற்றமொன்று எந்தப் பெண்ணுக்கு எதிராக செய்யப்பட்டிருப்பதாக, முயற்சிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறதோ அவளால் தகவல் கொடுக்கப்பட்டால், அத்தகு தகவல் பெண் காவலர் ஒருவரால் அல்லது பெண் அலுவலரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்:

மேலும் வரம்புரையாக -

(அ) இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 354, பிரிவு 354அ, பிரிவு 354ஆ, பிரிவு 354இ, பிரிவு 354ஈ, பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ, பிரிவு 376உ அல்லது பிரிவு 509-இன் கீழான குற்ற

---

son is comfortable with:

Provided further that if the person identifying the person arrested is mentally or physically disabled, the identification process shall be videographed.".

13. Amendment of section 154:- In section 154 of the Code of Criminal Procedure, in sub-section (1), the following provisos shall be inserted, namely:—

"Provided that if the information is given by the woman against whom an offence under section 326A, section 326B, section 354, section 354A, section 354B, section 354C, section 354D, section 376, section 376A, section 376B, section 376C, section 376D, section 376E or section 509 of the Indian Penal Code (45 of 1860) is alleged to have been committed or attempted, then such information shall be recorded, by a woman police officer or any woman officer:

Provided further that—

(a) in the event that the person against whom an offence under section 354, section 354A, section 354B, section 354C, section 354D, section 376, section 376A, section 376B, section 376C, section 376D, section 376E or section 509

மொன்று யாருக்கு எதிராக செய்யப்பட்டிருப்பதாக, முயற்சிச்கப்பட்டிருப்ப தாக சொல்லப்படுகிறதோ அந்த நபர் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக மன அல்லது உடல் திறனற்றவராக இருக்கும் நிகழ்வில், அத்தகு தகவலானது அத்தகு குற்றம் பற்றி தெரிவிக்க விழையும் நபரின் வீட்டில் அல்லது அத்தகு நபரின் விருப்பத்தின் பேரில் அமைந்த வசதியான இடம் ஒன்றில், நேர்விற்கேற்றவாறு பொருள் விளக்குபவர் அல்லது சிறப்பு கல்வியளிப்பவர் ஒருவர் முன்னிலையில் காவல் அலுவலர் ஒருவரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(ஆ) அத்தகு தகவலின் பதிவானது காணொலியாக பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(இ) அந்நபரின் வாக்குமூலத்தை பிரிவு 164-இன் உட்பிரிவு (5அ)-வின் கூறு (அ) கீழ் குற்றவியல் நடுவர் ஒருவரால் இயன்ற வரை விரைவாக காவல் அலுவலர் பதிவு செய்ய வைத்தல் வேண்டும்.

14. பிரிவு 160-இன் திருத்தம் (Amendment of Section 160):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 160-இன், உட்பிரிவு (1)-இன், வரம்பு ரையில், "பதினைந்து வயதுக்கு கீழ் அல்லது பெண்" என்ற சொற்களுக்காக, "பதினைந்து வயதுக்கு கீழ் அல்லது அறுபத்து ஐந்து வயதுக்கு மேல் அல்லது பெண் ஒருவர் மன அல்லது உடல்திறனற்ற நபர் ஒருவர்" என்ற சொற்கள் மாற்றீடாக்கப்படுதல் வேண்டும்.

15. பிரிவு 161-இன் திருத்தம் (Amendment of Section 161):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 161-இன், உட்பிரிவு (3)-இல், வரம்

---

of the Indian Penal Code (45 of 1860) is alleged to have been committed or attempted, is temporarily or permanently mentally or physically disabled, then such information shall be recorded by a police officer, at the residence of the person seeking to report such offence or at a convenient place of such person's choice, in the presence of an interpreter or a special educator, as the case may be;

(b) the recording of such information shall be videographed;

(c) the police officer shall get the statement of the person recorded by a Judicial Magistrate under clause (a) of sub-section (5A) of section 164 as soon as possible.".

14. Amendment of section 160:- In section 160 of the Code of Criminal Procedure, in sub-section (1), in the proviso, for the words "under the age of fifteen years or woman", the words "under the age of fifteen years or above the age of sixty-five years or a woman or a mentally or physically disabled person" shall be substituted.

15. Amendment of section 161:- In section 161 of the Code of Criminal Procedure, in sub-section (3), after the proviso, the following proviso shall be inserted, namely:—

புரைக்குப் பிறகு, பின்வரும் வரம்புரை சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"மேலும் வரம்புரையாக இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 354, பிரிவு 354அ, பிரிவு 354ஆ, பிரிவு 354இ, பிரிவு 354ஈ, பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ, பிரிவு 376உ அல்லது பிரிவு 509-இன் கீழான குற்றமொன்று எந்தப் பெண்ணுக்கு எதிராக செய்யப்பட்டிருப் பதாக, முயற்சிக்கப்பட்டிருப்பதாக சொல்லப்படுகிறதோ அந்தப் பெண்ணின் வாக்குமூலம் பெண் காவல் அலுவலர் அல்லது பெண் அலுவலர் ஒருவரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

16. பிரிவு 164-இன் திருத்தம் (Amendment of Section 164):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 164-இல், உட்பிரிவு (5)-க்குப் பிறகு, பின்வரும் உட்பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(5அ) (அ) இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 354, பிரிவு 354அ, பிரிவு 354ஆ, பிரிவு 354இ, பிரிவு 354ஈ, பிரிவு 376-இன் உட்பிரிவு (1) மற்றும் (2), பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ, பிரிவு 376உ அல்லது பிரிவு 509-இன் கீழ் தண்டிக்கப்படத்தக்க வழக்குகளில், யாருக்கு எதிராக அத்தகு குற்றம் புரியப்பட்டிருக்கின்றதோ அந்த நபரின் வாக்குமூலத்தை உட்பிரிவு (5)-இல் வகுத்துரைக்கப்பட்டுள்ள முறையின்படி, அக்குற்றம் புரியப்பட்ட விவரம் காவலரின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டவுடன் உடனடியாக குற்றவியல் நடுவர் பதிவு செய்தல் வேண்டும்.

"Provided further that the statement of a woman against whom an offence under section 354, section 354A, section 354B, section 354C, section 354D, section 376, section 376A, section 376B, section 376C, section 376D, section 376E or section 509 of the Indian Penal Code (45 of 1860) is alleged to have been committed or attempted shall be recorded, by a woman police officer or any woman officer.".

16. Amendment of section 164:- In section 164 of the Code of Criminal Procedure, after sub-section (5), the following sub-section shall be inserted, namely:—

"(5A) (a) In cases punishable under section 354, section 354A, section 354B, section 354C, section 354D, sub-section (1) or sub-section (2) of section 376, section 376A, section 376B, section 376C, section 376D, section 376E or section 509 of the Indian Penal Code (45 of 1860) , the Judicial Magistrate shall record the statement of the person against whom such offence has been committed in the manner prescribed in sub-section (5), as soon as the commission of the offence is brought to the notice of the police:

Provided that if the person making the statement is temporarily or permanently mentally or physically disabled, the Magistrate shall take the assistance of an interpreter or a special educator in recording the statement:

வரம்புரையாக அவ்வாக்குமூலத்தைச் செய்யும் நபர் தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக மன அல்லது உடல் திறனற்றவராக இருந்தால், அந்த வாக்குமூலத்தைப் பதிவு செய்வதில் பொருள் விளக்குபவர் அல்லது சிறப்பு கல்வியளிப்பவரின் உதவியை குற்றவியல் நடுவர் பெறுதல் வேண்டும்.

மேலும் வரம்புரையாக அவ்வாக்குமூலத்தைச் செய்யும் நபர் தற்காலிக மாக அல்லது நிரந்தரமாக மன அல்லது உடல் திறனற்றவராக இருந்தால், பொருள் விளக்குபவர் அல்லது சிறப்பு கல்வியளிப்பவரின் உதவியுடன் அந்த நபரால் செய்யப்பட்ட வாக்குமூலத்தை காணொலியாக பதிவு செய்யப்படுதல் (videographed) வேண்டும்.

(ஆ) தற்காலிகமாக அல்லது நிரந்தரமாக மன அல்லது உடல் திறனற்ற வராக உள்ளவரான நபர் ஒருவரின் உட்கூறு (அ)-இன் கீழ் பதிவு செய்யப்பட்ட வாக்குமூலம் ஒன்றை, வழக்குவிசாரணையின் போது அதை பதிவு செய்வதற்கான தேவையில்லாத, அத்தகு வாக்குமூலத்தின் மீது, வாக்குமூலம் செய்தவரை குறுக்கு விசாரணை செய்யக் கூடிய அளவிற்கு இந்திய சாட்சிய சட்டம், 1872 (1/1872)-இன் பிரிவு 137-இல் குறித்துரைக்கப்பட்ட வாறான முதல் விசாரணைக்குப் பதிலான ஓர் வாக்குமூலமாக கருதப்படுதல் வேண்டும்."

17. பிரிவு 173-இன் திருத்தம் (Amendment of Section 173):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 173-இல், உட்பிரிவு (2)-இல், கூறு (ஐ)-இன் உட்கூறு (ஏ)-இல், "இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) 376ஈ அல்லது" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எழுத்துக்காக, "இந்திய தண்டனைச் சட்டத்தின் 376ஈ அல்லது பிரிவு 376உ" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எழுத்துக்கள் மாற்றீடாக்கப்படுதல் வேண்டும்.

Provided further that if the person making the statement is temporarily or permanently mentally or physically disabled, the statement made by the person, with the assistance of an interpreter or a special educator, shall be videographed.

(b) A statement recorded under clause (a) of a person, who is temporarily or permanently mentally or physically disabled, shall be considered a statement in lieu of examination-in-chief, as specified in section 137 of the Indian Evidence Act, 1872 (1 of 1872) such that the maker of the statement can be cross-examined on such statement, without the need for recording the same at the time of trial.".

17. Amendment of section 173:- In section 173 of the Code of Criminal Procedure, in sub-section (2), in sub-clause (h) of clause (i), for the words, figures and letter "or 376D of the Indian Penal Code" (45 of 1860), the words, figures and letters" 376D or section 376E of the Indian Penal Code" shall be substituted.

18. Amendment of section 197:- In section 197 of the Code of

18. பிரிவு 197-இன் திருத்தம் (Amendment of Section 197):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 197-இல், உட்பிரிவு (1)-க்குப் பிறகு, பின்வரும் விளக்கம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"விளக்கம்.- பொது ஊழியர் ஒருவர் இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 166அ, பிரிவு 166ஆ, பிரிவு 354, பிரிவு 354அ, பிரிவு 354ஆ, பிரிவு 354இ, பிரிவு 354ஈ, பிரிவு 370, பிரிவு 375, பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ அல்லது பிரிவு 509-இன் கீழ் குற்றம் ஏதும் புரிந்திருப்பதாக சாட்டுரைக்கப்படும் நேர்வில் எந்த அனுமதியும் வேண்டுறுத்தப்படுவதில்லை என்பது அய்யப்பாடுகளை களைவதற்காக ஈங்கிதனால் விளம்பப்படுகின்றது."

19. புதிய பிரிவு 198ஆ-இன் சேர்க்கை (Insertion of new Section 198B):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 198அ-க்குப் பிறகு, பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"பிரிவு 198ஆ. குற்றத்தை புலன் கொள்ளல்:- மண வாழ்க்கை உறவு நிலையில் தரப்பினர்கள் இருக்குமிடத்து, கணவனுக்கு எதிராக மனைவியால் புகார் ஒன்று தாக்கல் அல்லது செய்யப்பட்டிருந்து, அதன் சங்கதிகள் குற்றத்தை உருவாக்குவதாக முதற்தோற்ற மனநிறைவடைவதன் பேரில் தவிர, இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 376ஆ-இன் கீழ் தண்டிக்கத்தக்க குற்றமொன்றை நீதிமன்றம் எதுவும் புலன் கொள்ளல் ஆகாது."

20. பிரிவு 273-இன் திருத்தம் (Amendment of Section 273):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 273-இல், விளக்கத்திற்கு முன்பு,

---

Criminal Procedure, after sub-section (1), the following *Explanation* shall be inserted, namely:—

"Explanation.— for the removal of doubts it is hereby declared that no sanction shall be required in case of a public servant accused of any offence alleged to have been committed under section 166A, section 166B, section 354, section 354A, section 354B, section 354C, section 354D, section 370, section 375, section 376, section 376A, section 376C, section 376D or section 509 of the Indian Penal Code (45 of 1860).".

19. Insertion of new section 198B:- After section 198A of the Code of Criminal Procedure, the following section shall be inserted, namely:—

"*198B. Cognizance of offence.*— No Court shall take cognizance of an offence punishable under section 376B of the Indian Penal Code (45 of 1860) where the persons are in a marital relationship, except upon prima facie satisfaction of the facts which constitute the offence upon a complaint having been filed or made by the wife against the husband.".

20. Amendment of section 273:- In section 273 of the Code of Criminal Procedure, before the Explanation, the following proviso shall be in-

பின்வரும் வரம்புரை வாசகம் சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"வரம்புரையாக வன்புணர்வு அல்லது பாலியல் குற்றம் பிற எதற்கும் உள்ளாக்கப்பட்டதாக சொல்லப்படுகின்ற பதினெட்டு வயதிற்கு உட்பட்ட பெண் ஒருவரின் சாட்சியம், பதிவு செய்யப்பட வேண்டியிருக்குமிடத்து, குற்றஞ்சாட்டப்பட்டவருக்குள்ள குறுக்கு விசாரணை செய்யும் உரிமையை உறுதிப்படுத்தும் அதே நேரத்தில் அத்தகு பெண் குற்றஞ்சாட்டப்பட்டவரால் எதிர்க்கப்படவில்லை என்பதை உறுதிப்படுத்த நீதிமன்றம் உரிய நடவடிக்கைகளை எடுக்கலாம்."

21. பிரிவு 309-இன் திருத்தம் (Amendment of Section 309):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 309-இல், உட்பிரிவு (1)-க்காக, பின்வரும் உட்பிரிவு மாற்றீடாக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"(1) விசாரணை அல்லது வழக்குவிசாரணை ஒவ்வொன்றிலும், வழக்கு நடவடிக்கைகளை அடுத்து வரும் நாளுக்கும் அப்பால் ஒத்தி வைப்பது, பதிவு செய்யப்படக்கூடிய காரணங்களுக்கு அவசியமாக இருப்பதாக நீதிமன்றம் முடிவு செய்தாலன்றி, அந்நடவடிக்கைகளை தோன்றியுள்ள சாட்சிகள் அனைவரும் விசாரிக்கப்படும் வரை தினந்தோறும் தொடருதல் வேண்டும்:

வரம்புரையாக அந்த விசாரணை அல்லது வழக்கு விசாரணையானது இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860)-இன் கீழான பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ அல்லது பிரிவு 376ஈ-இன் கீழான குற்றமொன்றுக்கு தொடர்பானதாக இருக்கிற போது, அந்த விசாரணை அல்லது வழக்கு விசாரணையை குற்ற அறிக்கை தாக்கல் செய்த தேதியிலிருந்து இயன்ற வரையில் இரண்டு மாதங்களுக்கான ஒரு காலஅளவுக்குள் முடித்து விடுதல் வேண்டும்."

---

serted, namely:—

"Provided that where the evidence of a woman below the age of eighteen years who is alleged to have been subjected to rape or any other sexual offence, is to be recorded, the court may take appropriate measures to ensure that such woman is not confronted by the accused while at the same time ensuring the right of cross-examination of the accused.".

21. Amendment of section 309:- In section 309 of the Code of Criminal Procedure, for sub-section (1), the following sub-section shall be substituted, namely:—

"(1) In every inquiry or trial the proceedings shall be continued from day-to-day until all the witnesses in attendance have been examined, unless the Court finds the adjournment of the same beyond the following day to be necessary for reasons to be recorded:

Provided that when the inquiry or trial relates to an offence under section 376, section 376A, section 376B, section 376C or section 376D of the Indian Penal Code (45 of 1860), the inquiry or trial shall, as far as possible be completed

22. பிரிவு 327-இன் திருத்தம் (Amendment of Section 327):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 327-இல், உட்பிரிவு (2)-இல், "இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) 376ஈ அல்லது" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எழுத்துக்காக, "இந்திய தண்டனைச் சட்டத்தின் 376ஈ அல்லது பிரிவு 376உ" என்ற சொற்கள், எண்கள் மற்றும் எழுத்துக்கள் மாற்றீடாக்கப்படுதல் வேண்டும்.

23. பிரிவுகள் 357ஆ மற்றும் 357இ-இன் சேர்க்கை (Insertion of new Sections 357B and 357C):- குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 357அ-க்குப் பிறகு, பின்வரும் பிரிவுகள் சேர்க்கப்பட வேண்டும், அதாவது:-

"357ஆ. இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 326அ அல்லது பிரிவு 376ஈ-இன் கீழான அபராதத்திற்கும் கூடுதலாக இழப்பீடு:- பிரிவு 357அ-இன் கீழ் மாநில அரசாங்கத்தால் பாதிக்கப்பட்டவருக்கு செலுத்தப்படத்தக்க இழப்பீடானது, இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 326அ அல்லது பிரிவு 376ஈ-இன் கீழான அபராதத்தின் செலுத்துகைக்கும் கூடுதலானது ஆகும்.

357இ. பாதிக்கப்பட்டவர்களுக்கு சிகிச்சையளித்தல்:- மைய அரசாங்கம், மாநில அரசாங்கம், உள்ளூர் அமைப்புகள் அல்லது வேறு நபர் எவராலும் நடத்தப்படும் பொது அல்லது தனியார் மருத்துவமனைகள் அனைத்தும், இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 326அ, 376, 376அ, 376ஆ, 376இ, 376டி அல்லது பிரிவு 376உ-இன் கீழ் அடங்கும் குற்றம் எதனாலும் பாதிக்கப்பட்டவர்களுக்கு உடனடியாக முதலுதவி அல்லது மருத்துவ சிகிச்சையை இலவசமாக வழங்குதல் வேண்டும். மேலும் அத்தகு சம்பவம் குறித்து உடனடியாக காவலருக்கு தகவல் தெரிவித்தல் வேண்டும்."

---

within a period of two months from the date of filing of the charge sheet.".

22. Amendment of section 327:- In section 327 of the Code of Criminal Procedure, in sub-section (2), for the words, figures and letter "or section 376D of the Indian Penal Code (45 of 1860)", the words, figures and letters "section 376D or section 376E of the Indian Penal Code" shall be substituted.

23. Insertion of new sections 357B and 357C:- After section 357A of the Code of Criminal Procedure, the following sections shall be inserted, namely:—

"*357B. Compensation to be in addition to fine under section 326A or section 376D or Indian Penal Code.*— The compensation payable by the State Government under section 357A shall be in addition to the payment of fine to the victim under section 326A or section 376D of the Indian Penal Code (45 of 1860).

357C. Treatment of victims.—All hospitals, public or private, whether run by the Central Government, the State Government, local bodies or any other person, shall immediately, provide the first-aid or medical treatment, free of cost, to the victims of any offence covered under section 326A, 376, 376A, 376B, 376C, 376D or section 376E of the Indian Penal Code (45 of 1860), and shall immediately inform the police of such incident.".

24. Amendment of First Schedule :- In the First Schedule to the Code of Criminal Procedure, under the heading "I. Offences under the Indian Penal Code (45 of 1860)"-

(a) after the entries relating to Section 166, the following entries shall be inserted, namely :-

1	2	3	4	5	6
"166A.	Public servant disobying direction under law	Imprisonment for minimum 6 months which may extend to 2 years and fine	Cognizable	Bailable	Magistrate of the first class.
166B.	Non-treatment of victim by hospital	Imprisonment for 1 year or fine or both	Non-Cognizable	Bailable	Magistrate of the first class.";

(b) after the entries relating to Section 326, the following entries shall be inserted, namely :-

1	2	3	4	5	6
"326A.	Voluntarily causing grievous hurt by use of acid, etc.	Imprisonment for not less than 10 years but which may extend to imprisonment for the life and fine to be paid to the victim.	Cognizable	Non-bailable	Court of Session.
326B.	Voluntarily throwing or attempting to throw acid.	Imprisonment for 5 years but which may extend to 7 years and with fine.	Cognizable	Non-bailable	Court of Session.";

(c) for the entries relating to Section 354, the following entries shall be substituted, namely :-

1	2	3	4	5	6
"354.	Assault or use of criminal force to woman with intent to outrage her modesty.	Imprisonment of 1 year which may extend to 5 years, and with fine.	Cognizable	Non-bailable	Any Magistrate.
354A.	Sexual harassment of the nature of unwelcome physical contact and advances or a demand or request for sexual favours, showing poronography.	Imprisonment which may extend to 3 years or with fine or with both.	Cognizable	Bailable	Any Magistrate.
	Sexual harassment of the nature of making sexually coloured remark.	Imprisonment which may extend to 1 year or with fine or with both	Cognizable	Bailable	Any Magistrate.
354B.	Assault or use of criminal force to woman with intent to disrobe.	Imprisonment of not less than 3 years but which may extend to 7 years and with fine	Cognizable	Non-bailable	Any Magistrate.
354C.	Voyeurism	Imprisonment of not less than 1 year but which may extend to 3 years and with fine for first conviction	Cognizable	Bailable	Any Magistrate.

		Imprisonment of not less than 3 years but which may extend to 7 years and with fine for second or subsequent conviction	Cognizable	Non-bailable	Any Magistrate.
354D.	Stalking	Imprisonment upto 3 years and with fine for first conviction. Imprisonment upto 5 years and with fine for second and or subsequent conviction	Cognizable	Bailable	Any Magistrate."

(d) for the entries relating to Section 370, the following entries shall be substituted, namely :-

1	2	3	4	5	6
"370.	Trafficking of person	Imprisonment of not less than 7 years but which may extend to 10 years and with fine.	Cognizable	Non-bailable	Court of Session.
	Trafficking of more than one person.	Imprisonment of not less than 10 years but which may extend to imprisonment for life and with fine.	Cognizable	Non-bailable	Court of Session.

1	2	3	4	5	6
	Trafficking of a minor	Imprisonment of not less than 10 years but which may extend to imprisonment for life and with fine	Cognizable	Non-bailable	Court of Session.
	Trafficking of a more than one minor	Imprisonment of not less than 14 years but which may extend to imprisonment for life and with fine.	Cognizable	Non-bailable	Court of Session.
	Person convicted of offence of trafficking of minor on more than one occasion	Imprisonment for life which shall mean the remainder of that person's natural life and with fine.	Cognizable	Non-bailable	Court of Session.
	Public servant or a police officer involved in trafficking of minor	Imprisonment for life which shall mean the remainder of that person's natural life and with fine.	Cognizable	Non-bailable	Court of Session.
370A.	Exploitation of a trafficked child	Imprisonment of not less than 5 years but which may extend to 7 years and with fine.	Cognizable	Non-bailable	Court of Session.

	Exploitation of a trafficked person	Imprisonment of not less than 3 years but which may extend to 5 years and with fine.	Cognizable	Non-bailable	Court of Session."

(e) for the entries relating to Section 376, 376A, 376B, 376C and 376D, the following entries shall be substituted, namely :-

1	2	3	4	5	6
"376.	Rape	Rigorous imprisonment of not less than 7 years but which may extend to imprisonment for life and with fine.	Cognizable	Non-bailable	Court of Session.
	Rape by a police officer or a public servant or member of armed forces or a person being on the management or on the staff of a jail, remand home or other place of custody or women's or children's institution or by a person on the management or on the staff of a hospital, and	Rigorous imprisonment of not less than 10 years but which may extend to imprisonment for life which shall mean the remainder of that person's natural life and with fine	Cognizable	Non-bailable	Court of Session.

1	2	3	4	5	6
	rape committed by a person in a position of trust or authority towards the person raped or by a near relative of the person raped.				
376A.	Person committing an offence of rape and inflicting injury which causes death or causes the woman to be in a persistent vegetative state.	Rigorous imprisonment of not less than 20 years but which may extend to imprisonment for life which shall mean imprisonment for the remainder of that person's natural life or with death.	Cognizable	Non-bailable	Court of Session.
376B.	Sexual intercourse by husband upon his wife during separation	Imprisonment for not less than 2 years but which may extend to 7 years and with fine	Cognizable (but only on the complaint of the victim)	Bailable	Court of Session.
376C.	Sexual intercourse by a person in authority	Rigorous imprisonment for not less than 5 years but which may extend to 10 years and with fine	Cognizable	Non-bailable	Court of Session.

1	2	3	4	5	6
376D.	Gang rape	Rigorous imprisonment for not less than 20 years but which may extend to imprisonment for life which shall mean imprisonment for the remainder of that persons's natural life and with fine to be paid to the victim.	Cognizable	Non-bailable	Court of Session.
376E.	Repeat offenders	Imprisonment for life which shall mean imprisonment for the remainder of that persons's natural life or with death	Cognizable	Non-bailable	Court of Session."

(f) in entry relating to Section 509, in column 3, for the words "Simple imprisonment for one year, or fine, or both ,", the words and figure "Simple imprisonment for 3 years and with fine" shall be substituted.

இயல் 4
இந்திய சாட்சியச் சட்டம், 1872-க்கு திருத்தங்கள்
(Amendments to the Indian Evidence Act, 1973)

25. புதிய பிரிவு 53அ-இன் சேர்க்கை (Insertion of new Section 53A):- இந்திய சாட்சிய சட்டம், 1872 (1/1872)-இன் (இந்த இயலில் இதற்குப் பின்னிட்டு சாட்சியச் சட்டம் என்று குறிப்பிடப்படும்) பிரிவு 53க்குப் பிறகு, பின்வரும் பிரிவு சேர்க்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"53அ. சில நேர்வுகளில் குணஇயல்பு அல்லது முந்தைய பாலியல் அனுபவம் பற்றிய சாட்சியம் தொடர்புடையதன்று :- இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 354, பிரிவு 354அ, பிரிவு 354ஆ, பிரிவு 354இ, பிரிவு 354ஈ, பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ அல்லது பிரிவு 376உ-இன் கீழான குற்றம் ஒன்றிற்கான அல்லது அத்தகு குற்றம் எதையும் செய்ய முயற்சித்தலுக்கான குற்றவழக்கு தொடர்கை ஒன்றில், சம்மதம் பற்றிய வினா பிரச்சனையில் இருக்குமிடத்து, பாதிக்கப்பட்டவரின் குணஇயல்பு அல்லது நபர் எவருடனும் அத்தகு நபரின் முந்தைய பாலியல் அனுபவம் பற்றிய சாட்சியமானது அத்தகு சம்மதம் அல்லது சம்மதத்தின் தரம் பற்றிய பிரச்சனைக்கு தொடர்புடையது ஆகாது."

26. பிரிவு 114அ-க்கு புதிய பிரிவை மாற்றீடாக்குதல் (Substitution of new section for Section 114A):- சாட்சிய சட்டத்தின் பிரிவு

Chapter IV
Amendments to the Indian Evidence Act, 1973

25. Insertation of new section 53A:- After section 53 of the Indian Evidence Act, 1872 (1 of 1872) (hereafter in this Chapter referred to as the Evidence Act), the following section shall be inserted, namely:—

"*53A. Evidence of character or previous sexual experience not relevant in certain cases.*— In a prosecution for an offence under section 354, section 354A, section 354B, section 354C, section 354D, section 376, section 376A, section 376B, section 376C, section 376D or section 376E of the Indian Penal Code (45 of 1860) or for attempt to commit any such offence, where the question of consent is in issue, evidence of the character of the victim or of such person's previous sexual experience with any person shall not be relevant on the issue of such consent or the quality of consent.".

26. Substitution of new section for section 114A :- For section 114A of the Evidence Act, the following section shall be substituted,

114அ-க்கு. பின்வரும் பிரிவு மாற்றீடாக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

'114அ. வன்புணர்வுக்கான குற்றவழக்கு தொடர்கை நிலவற்றில் சம்மதம் இல்லாமல் இருப்பது பற்றிய துணிபு:- இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 376-இன் உட்பிரிவு (2)-இன் கூறு (அ), கூறு (ஆ), கூறு (இ), கூறு (ஈ), கூறு (உ), கூறு (ஊ), கூறு (எ), கூறு (ஏ), கூறு (ஐ), கூறு (ஒ), கூறு (ஓ), கூறு (ஔ), கூறு (அஅ) அல்லது கூறு (அஆ)-இன் கீழான வன்புணர்வுக்கான குற்றவழக்கு தொடர்கை ஒன்றில், குற்றஞ்சாட்டப்பட்டவரால் செய்யப்பட்ட பாலியல் உடலுறவு மெய்ப்பிக்கப்படுகிறவிடத்து, வன்புணர்வு செய்யப்பட்டதாக சொல்லப்படுகின்ற பெண்ணின் சம்மதம் இன்றி அது செய்யப்பட்டதா என்பது வினாவாக இருந்து, அத்தகு பெண் தான் சம்மதிக்க வில்லை என்று நீதிமன்றத்தின் முன்பு தனது சாட்சியத்தில் கூறினால், அவள் சம்மதிக்கவில்லை என்பதை நீதிமன்றம் அனுமானித்தல் வேண்டும்.

விளக்கம்:- இந்தப்பிரிவில், "பாலியல் உடலுறவு" என்பது இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 375-இன் கூறுகள் (அ) முதல் (ஈ) வரையிலான கூறுகளில் குறிப்பிடப்பட்டுள்ள செயல்களில் எதுவும் என்று பொருள்படும்.'

27. பிரிவு 119-க்கு புதிய பிரிவை மாற்றீடாக்குதல் (Substitution of new section for Section 119):- சாட்சிய சட்டத்தின் பிரிவு 119-க்கு, பின்வரும் பிரிவு மாற்றீடாக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"119. வாய்மொழியாக தகவல்தெரிவிக்க இயலா சாட்சி:- பேச இயலா சாட்சி ஒருவர் தனது சாட்சியத்தை, எழுத்துப்பூர்வமாக அல்லது சைகைகள் செய்வது போன்று வேறு எந்த முறையில் புரிந்து கொள்ளும்படி அவர் செய்ய

---

namely:—

'*114A. Presumption as to absence of consent in certain prosecution for rape.*— In a prosecution for rape under clause (a), clause (b), clause (c), clause (d), clause (e), clause (f), clause (g), clause (h), clause (i), clause (j), clause (k), clause (l), clause (m) or clause (n) of sub-section (2) of section 376 of the Indian Penal Code (45 of 1860), where sexual intercourse by the accused is proved and the question is whether it was without the consent of the woman alleged to have been raped and such woman states in her evidence before the court that she did not consent, the court shall presume that she did not consent.

Explanation.— In this section, "sexual intercourse" shall mean any of the acts mentioned in clauses (a) to (d) of section 375 of the Indian Penal Code (45 of 1860).'.

27. Substitution of new section for section 119:- For section 119 of the Evidence Act, the following section shall be substituted, namely:—

"*119. Witness unable to communicate verbally.*—A witness who is

முடியுமோ அந்த முறை எதிலும் அளிக்கலாம்; ஆனால் அத்தகு எழுத்துப் பூர்வமானது மற்றும் சைகைகளானது திறந்த நீதிமன்றத்தல் எழுதப்பட வேண்டும் மற்றும் செய்யப்பட வேண்டும். அவ்வாறு கொடுக்கப்பட்ட சாட்சியம் வாய்மொழி சாட்சியமாக கருதப்படல் வேண்டும்.

வரம்புரையாக சாட்சி வாய்மொழியாக தகவல்தெரிவிக்க இயல வில்லை என்றால், அவரது வாக்குமூலத்தை பதிவு செய்ய பொருள் விளக்குபவர் அல்லது சிறப்பு கல்வியளிப்பவரின் உதவியை நீதிமன்றம் நாட வேண்டும், மேலும் அத்தகு வாக்குமூலம் காணொலியாக பதிவு செய்யப்படுதல் (videographed) வேண்டும்."

28. பிரிவு 146-இன் திருத்தம் (Amendment of Section 146):- சாட்சிய சட்டத்தின் பிரிவு 146-இல், வரம்புரைவாசகத்திற்கு, பின்வரும் வரம்புரைவாசகம் மாற்றீடாக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"வரம்புரையாக இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவு 376, பிரிவு 376அ, பிரிவு 376ஆ, பிரிவு 376இ, பிரிவு 376ஈ அல்லது பிரிவு 376உ-இன் கீழான குற்றம் ஒன்றிற்கான அல்லது அத்தகு குற்றம் எதையும் செய்ய முயற்சித் தலுக்கான குற்றவழக்கு தொடர்கை ஒன்றில், சம்மதம் பற்றிய வினா பிரச்சனை யாக இருக்குமிடத்து, அத்தகு சம்மதம் அல்லது சம்மதத்தின் தரத்தை மெய்ப்பிப்பதற்காக பாதிக்கப்பட்டவரின் பொதுவான முந்தைய குணஇயல்பு, அல்லது நபர் எவருடனும் கொண்ட முந்தைய பாலியல் அனுபவம் பற்றி சாட்சியம் அளிப்பது அல்லது அத்தகு பாதிக்கப்பட்டவரின் குறுக்கு விசாரணையில் வினாக்கள் கேட்பது அனுமதிக்கப்படுதல் ஆகாது."

---

unable to speak may give his evidence in any other manner in which he can make it intelligible, as by writing or by signs; but such writing must be written and the signs made in open Court, evidence so given shall be deemed to be oral evidence:

Provided that if the witness is unable to communicate verbally, the Court shall take the assistance of an interpreter or a special educator in recording the statement, and such statement shall be videographed.".

28. Amendment of section 146:- In section 146 of the Evidence Act, for the proviso, the following proviso shall be substituted, namely:—

"Provided that in a prosecution for an offence under section 376, section 376A, section 376B, section 376C, section 376D or section 376E of the Indian Penal Code (45 of 1860) or for attempt to commit any such offence, where the question of consent is an issue, it shall not be permissible to adduce evidence or to put questions in the cross-examination of the victim as to the general immoral character, or previous sexual experience, of such victim with any person for proving such consent or the quality of consent.".

இயல் 5
பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாத்தல் சட்டம், 2012-க்கு திருத்தம்
(Amendment to the Protection of Children from Sexual Offences Act, 2012)

29. பிரிவு 42க்கு புதிய பிரிவுகளை மாற்றீடாக்குதல் (Substitution of new sections for Section 42):- பாலியல் குற்றங்களில் இருந்து குழந்தைகளை பாதுகாத்தல் சட்டம், 2012 -இன் (32/2012) பிரிவு 42-க்கு, பின்வரும் பிரிவுகள் மாற்றீடாக்கப்படுதல் வேண்டும், அதாவது:-

"42. மாற்று தண்டனை:- செயல் அல்லது செயல் தவிர்க்கை ஒன்று இந்தச் சட்டத்தின் கீழும், இந்திய தண்டனைச் சட்டத்தின் (45/1860) பிரிவுகள் 166அ, 354அ, 354ஆ, 354இ, 354ஈ, 370, 370அ, 375, 376, 376அ, 376இ, 376ஈ, 376உ அல்லது பிரிவு 509-இன் கீழும் தண்டிக்கத்தக்க குற்றமொன்றை உருவாக்குகின்ற விடத்து, அதன் பிறகு, அப்போது செயல்திறத்தில் உள்ள சட்டம் எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும், அத்தகு குற்றத்தை இழைத்தவராக கண்டறியப்பட்ட குற்றவாளியானவர் இந்தச் சட்டத்தின் கீழான அல்லது படிநிலையில் பெரிதாக உள்ள தண்டனைக்கு வகை செய்கிற இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழான தண்டனைக்கு பொறுப்பாக்கப்படுதல் வேண்டும்.

42அ. வேறு சட்டம் எதற்கும் ஊறுவிளைவிக்காத சட்டம் :- இந்த

Chapter V
Amendment to the Protection of Children from Sexual Offences Act, 2012

29. Substitution of new sections for section 42:- For section 42 of the Protection of Children from Sexual Offences Act, 2012 (32 of 2012), the following sections shall be substituted, namely:—

"*42. Alternate punishment.*—Where an act or omission constitutes an offence punishable under this Act and also under sections 166A, 354A, 354B, 354C, 354D, 370, 370A, 375, 376, 376A, 376C, 376D, 376E or section 509 of the Indian Penal Code (45 of 1860), then, notwithstanding anything contained in any law for the time being in force, the offender found guilty of such offence shall be liable to punishment under this Act or under the Indian Penal Code as provides for punishment which is greater in degree.

42A. Act not in derogation of any other law.—The provisions of this

சட்டத்தின் வகைமுறைகள் அச்சமயத்தில் செயல்திறத்தில் உள்ள வேறு சட்டம் எதனின் வகைமுறைகளுக்கும் கூடுதலானதே தவிர, ஊறுவிளைவிப்பது அல்ல. மேலும், முரண்பாடு ஏதேனும் எழுந்தால், இந்தச் சட்டத்தின் வகை முறைகள் அத்தகு சட்டம் எதனின் வகைமுறைகளுக்கும் அந்த முரண் பாட்டளவிற்கு மேலோங்கு செல்திறம் வாய்ந்ததவையாகும்."

இயல் 6

பலவகைப்பட்டவை

(Miscellaneous)

30. நீக்கறவும் காப்புகளும் (Repeal and savings):- (1) குற்றவியல் சட்டம் (திருத்தம்) அவசரச் சட்டம், 2013 (அ.சட். 3 /2013) ஈங்கிதனால் நீக்கறவு செய்யப்படுகிறது.

(2) அவ்வாறு நீக்கறவு செய்யப்பட்டிருப்பினும், மேற்சொன்ன அவசரச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான இந்திய தண்டனைச் சட்டம் (45/ 1860), குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 (2/1974) மற்றும் இந்திய தண்டனைச் சட்டம், 1872 (1/1872)-இன் கீழ் செய்யப்பட்டது எதுவும் அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதுவும், இந்தச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான மேற்கண்ட சட்டங்களின் தொடர்புடைய வகைமுறைகளின் கீழ் செய்யப்பட்டதாக அல்லது எடுக்கப்பட்டதாக கருதப்படுதல் வேண்டும்.

Act shall be in addition to and not in derogation of the provisions of any other law for the time being in force and, in case of any inconsistency, the provisions of this Act shall have overriding effect on the provisions of any such law to the extent of the inconsistency,".

Chapter VI

Miscellaneous

30. Repeal and savings:- (1) The Criminal Law (Amendment) Ordinance (Ord. 3 of 2013), 2013 is hereby repealed.

(2) Notwithstanding such repeal, anything done or any action taken under the Indian Penal Code (45 of 1860), the Code of Criminal Procedure, 1973 (2 of 1974)and the Indian Evidence Act, 1872 (1 of 1872), as amended by the said Ordinance, shall be deemed to have been done or taken under the corresponding provisions of those Acts, as amended by this Act.

குற்றவியல் நடைமுறை [திருத்தச்] சட்டம், 2005

(எண். 25/2005)

The Code of Criminal Procedure (Amendment) Act, 2005

இந்திய தண்டனைச் சட்டத்தில் குற்றவியல் நடைமுறை (திருத்தச்) சட்டம், 2005-ஆல் பின்வரும் சில சட்டப் பிரிவுகள் புதிதாக சேர்க்கப்பட்டன.

குற்றவியல் நடைமுறை (திருத்தச்) சட்டம், 2005-ஆல் [Criminal Procedure (Amendment) Act, 2005] இந்திய தண்டனைச் சட்டத்தில் 153ஏஏ, 174ஏ, 229ஏ ஆகிய மூன்று பிரிவுகள் புதிதாகச் சேர்க்கப்பட்டன.

பிரிவு 153ஏஏ-யின்படி, "ஊர்வலம் எதிலும் தெரிந்தே ஆயுதங்கள் எடுத்துச் செல்லல் அல்லது பெருந்திரள் படைப் பயிற்சி எதையும் ஆயுதங்களுடன் ஏற்பாடு செய்தல் அல்லது நடத்துதல் அல்லது அதில் பங்கெடுத் தல்" குற்றமாகும். இதற்கு ஆறு மாதம் சிறைவாசமும் 2000 ரூபாய் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

ஆனால் இப்பிரிவு எத்தேதியிலிருந்து அமலுக்கு வரும் என்பதற்கான அறிவிக்கை இதுகாறும் அரசால் செய்யப்படவில்லை. இப்பிரிவின் ஆங்கில மூலம் வருமாறு:-

> **Section 153AA. Punishment for knowingly carrying arms in any procession or organising, or holding or taking part in any mass drill or mass training with arms.-** Whoever knowingly carries arms in any procession or organizes or holds or takes part in any mass drill or mass training with arms in any public place in contravention of any public notice or order issued or made under section 144A of the Code of Criminal Procedure, 1973 (2 of 1974) shall be punished with imprisonment for a term which may extend to six months and with fine which may extend to two thousand rupees.
>
> *Explanation* - 'Arms' means articles of any description designed or

adapted as weapons for offence or defence and includes fire arms, sharp edged weapons, lathis, *dandas* and sticks.

[The above section has been inserted by the Code of Criminal Procedure (Amendment) Act, 2005 in IPC, with effect from a date yet to be notified]

அதுபோல் பிரிவு 174ஏ-யின்படி, "குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 82(1)-இன்படி வெளியிடப்பட்ட பிரகடனம் ஒன்றில் கோரப்பட்டவாறு குறித்துரைக்கப்பட்ட இடத்திலும் நேரத்திலும் முன்னிலையாகத் தவறினால், +மூன்று ஆண்டு சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். மேலும் ஒரு நபரை பிரகடனப்படுத்தப்பட்ட குற்றவாளி என்று பகர்ந்து குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 84(4)-இன்படி விளம்புகை செய்யப்பட்டிருக்குமிடத்திலான நேர்வு ஒன்றில் அவ்வாறு முன்னிலையாகத் தவறினால் ஏழு ஆண்டு சிறைவாசம் மற்றும் அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்".

இது 23-6-2006 முதல் அமலுக்கு வந்தது. இப்பிரிவின் ஆங்கில மூலம் வருமாறு:-

Section 174A. Non-appearance in response to a proclamation under section 82 of Act 2 of 1974.- Whoever fails to appear at the specified place and the specified time as required by a proclamation published under sub-section (1) of section 82 of the Code of Criminal Procedure, 1973 shall be punished with imprisonment for a term which may extend to three years or with fine or with both, and where a declaration has been made under sub-section (4) of that section pronouncing him as a proclaimed offender, he shall be punished with imprisonment for a term which may extend to seven years and shall also be liable to fine.

[The above section has been inserted by the Code of Criminal Procedure (Amendment) Act, 2005 in IPC, with effect from 23-06-2006]

இதையடுத்து பிரிவு 229ஏ-யின்படி, "பிணையில் அல்லது பிணை யாவணத்தின்படி விடுவிக்கப்பட்ட ஆள் ஒருவர், அவற்றில் கண்டுள்ள வரை முறைகளின்படி போதுமான காரணங்கள் ஏதுமின்றி நீதிமன்றத்தில் தோன்றத் தவறினால், அவருக்கு ஓராண்டு வரையிலான சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனை யாக விதிக்கப்படும்".

இப்பிரிவும் 23-6-2006 முதல் அமலுக்கு வந்தது. இப்பிரிவின் ஆங்கில மூலம் வருமாறு:-

Section 229A. Failure by person released on bail or bond to appear in Court.- Whoever, having been charged with

an offence and released on bail or on bond without sureties, fails without sufficient cause (the burden of proving which shall lie upon him), to appear in court in accordance with the terms of the bail or bond, shall be punished with imprisonment of either description for a term which may extend to one year, or with fine or with both.

Explanation - The punishment under this section is -

(a) in addition to the punishment to which the offender would be liable on a conviction for the offence with which he has been charged; and

(b) without prejudice to the power of the court to order forfeiture of the bond.

[The above section had been inserted by the Code of Criminal Procedure (Amendment) Act, 2005 in IPC, with effect from 23-06-2006.]

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2005

(எண். 2/2006)

The Criminal Law (Amendment) Act, 2005

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2005-ஆல் [Criminal Law (Amendment) Act, 2005] இந்திய தண்டனைச் சட்டத்தில் 195ஏ என்றொரு பிரிவு புதிதாகச் சேர்க்கப்பட்டது. இது பொய்ச்சாட்சியம் தருமாறு ஆள் எவரையும் மிரட்டுதல் குற்றம் என்றும், இதற்கு ஏழு ஆண்டுகள் வரை சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும் என்றும் கூறுகிறது. மேலும் பொய்ச் சாட்சியத்தின் விளைவாக நிரபராதி ஒருவர் மரண தண்டனை அல்லது ஏழு ஆண்டுகளுக்கான மேலான சிறைவாசம் விதித்து தண்டிக்கப்படுவாராயின், அந்நிரபராதி தண்டிக்கப்பட்ட அதே முறையிலும் அதே அளவிலுமான தண்டனை, பொய்ச் சாட்சியம் தருமாறு மிரட்டிய நபருக்கு விதிக்கப்படும்.

இது 16-4-2006 முதல் அமலுக்கு வந்தது. இப்பிரிவின் ஆங்கில மூலம் வருமாறு:-

> **Section 195A. Threatening or inducing any person to give false evidence.-** Whoever threatens another with any injury to his person, reputation or property or to the person or reputation of any one in whom that person is interested, with intent to cause that person to give false evidence shall be punished with imprisonment of either description for a term which may extend to seven years, or with fine or with both;
>
> and if innocent person is convicted and sentenced in consequence of such false evidence, with death or imprisonment for more than seven years, the person who threatens shall be punished with the same punishment and sentence in the same manner and to the same extent such innocent person is punished and sentenced.

[The above section has been inserted by the Criminal Law (Amendment) Act, 2005 in IPC, with effect from 16-04-2006.]

பகுதி - I

இந்திய தண்டனைச் சட்டம்

(அல்லது)

குற்றங்கள் பற்றிய சட்டம்

[Indian Penal Code (or) Law of Crimes]

அத்தியாயம் - 1. குற்றம்

கருத்து - குற்றத்தின் அடிப்படைக் கூறுகள் - குற்ற மனம் மற்றும் குற்றச்செயல் - இயற்றப்பட்ட சட்டக் குற்றங்களில் குற்ற மனம் - இந்திய தண்டனைச் சட்டத்தில் குற்ற மனம் - குற்றவியல் சட்டத்தில் பகரப்பொறுப்பும் - கடும் பொறுப்பும்

Crime

[Concept - Constituent elements of Crime - Mens rea and Actus reus - Mens rea in statutory offences - Mens rea in Indian Penal Code - Vicarious liaiblity and strict liability in criminal law]

(அ) குற்றத்தின் கருத்து
[Concept of Crime]

1. Define "Crime" and point out the relationship between Criminal Law and Morality. ('குற்றம்' என்பதை வரையறுத்து குற்றவியல் சட்டத்திற்கும் ஒழுக்க நெறிக்கும் உள்ள உறவைச் சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

Define "Crime" and distinquish criminal liability from civil liability. ('குற்றம்' என்பதை வரையறு. குற்றவியல் பொறுப்பை உரிமையியல் பொறுப்பிலிருந்து வேறுபடுத்துக.)

(அல்லது)

Define "Crime" and differentiate it from Torts. ('குற்றம்' என்ற பதத்தை வரையறுத்து, அதனை தீங்கிலிருந்து வேறுபடுத்துக.)

(அல்லது)

What is meant by the term "Crime"? Give an account of its various attempted definitions. Distinguish Crime from Torts. ('குற்றம்' என்ற பதத்தின் பொருள் யாது? அதன் பல்வேறு வரையறைகள் குறித்து விளக்கவுரை தருக. குற்றத்தை தீங்கிலிருந்து வேறுபடுத்துக.)

முன்னுரை:

ஓர்ந்துகண் ணோடாது இறைபுரிந்து யார்மாட்டும்
தேர்ந்துசெய் வஃதே முறை **(குறள், 541)**

ஓர்ந்து - வழக்கின் கூறுகளை ஆராய்ந்து; *கண்ணோடாது* - வழக்கு தரப்பினர்களில் எவருக்கும் ஆதரவாக கண்ணோட்டம் செலுத்தாமல்; *இறைபுரிந்து யார் மாட்டும்* - நடுநிலை பிறழாமல் நின்று; *தேர்ந்து செய்வதஃதே முறை* - தீர்ப்புகளை தேர்ந்து கூறுதலே நீதிமுறை. அதாவது வழக்கின் கூறுகளை ஆராய்ந்து, வழக்குத் தரப்பினர்களில் எவருக்கும் ஆதரவாக செயல்படாமல் நடுநிலைமை பிறழாமல் நின்று தீர்ப்புகளை தேர்ந்து கூறுதலே நீதிமுறை என்று திருவள்ளுவர் மேற்படி குறளில் எவ்வளவு அழகாக நீதிமுறையின் இலக்கணத்தை வகுத்துள்ளார். நாகரிகம் அடைந்து நல்லாட்சி நிலவும் நாடுகளில் எல்லாம் இம்முறையிலேயே நீதி வழங்கப்படுகின்றது. இவ்வாறு நீதி வழங்குவதை, **நீதிமுறை நிர்வாகம் (Administration of Justice)** என்று கூறுகின்றோம். இது, **உரிமையியல் நீதிமுறை நிர்வாகம் (Administration of Civil Justice)** என்றும், **குற்றவியல் நீதிமுறை நிர்வாகம் (Administration of Criminal Justice)** என்றும் இரு வகைப்படும்.

மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் நோக்குடன் நீதி வழங்கும் முறைகளை, **'உரிமையியல் நீதிமுறை'** என்றும், அவை குறித்த வழக்குகளை **'உரிமையியல் வழக்குகள்' (Civil cases)** என்றும், அவைகளுக்கான நீதிமன்றங்களை **'உரிமையியல் நீதிமன்றங்கள்' (Civil Courts)** என்றும் கூறுகிறோம். அதுபோல், ஒருவர் மற்றொருவருக்கு எதிராக குற்றச் செயல்களைப் புரியும் பொழுது, அவர் மீது தொடரப்பெறும் வழக்குகள் **'குற்றவியல் வழக்குகள்' (Criminal Cases)** என்கிறோம். இவ்வழக்குகளை விசாரிக்கும் நீதிமன்றங்களை **'குற்றவியல் நீதிமன்றங்கள்' (Criminal Courts)** என்று கூறுகின்றோம்.

இந்தியாவில், குற்றவியல் நீதிமுறை நிர்வாகத்தை எளிதாக்கும் பொருட்டு, குற்றங்கள் எத்தனை வகை, அவற்றிற்கான தண்டனைகள் யாவை என்பன ஒரு சட்டமாக தொகுக்கப்பட்டன. அதுதான், **'இந்திய தண்டனைச் சட்டமாகும்' (Indian Penal Code).** இனி, இச்சட்டமும், சட்டவியல் அறிஞர்களும், 'குற்றம்' எனும் பதத்தை எவ்வாறு வரையறுத்துள்ளனர் என்று காண்போமா?

குற்றம் - வரையறை:

அறிஞர் சர்.வில்லியம் பிளாக்ஸ்டோன் **(Sir William Blackstone)** அவர்கள், "பொதுச் சட்டத்தினை மீறி அதனால் தடை விதிக்கப்பட்ட செயலைச் செய்வதோ அல்லது செய்ய வேண்டிய செயலை செய்யாமலிருப்பதோ குற்றமாகும்"[1] என்று குற்றத்தை வரையறுக்கிறார். அவரே மீண்டும் 'குற்றம்' எனும் பதத்திற்கு மற்றொரு வரையறையையும் தருகிறார். அஃதாவது, "பொது உரிமைகளையும் கடமைகளையும் மீறும் செயல் குற்றமாகும்"[2] என்று கூறுகிறார்.

சர் ஜேம்ஸ் ஸ்டீபன் **(Sir James Stephen)** அவர்கள், "ஒரு செயலைச் செய்தோ அல்லது செய்யாமலிருந்தோ ஒரு நபர் தவறிழைத்து, அதற்காக அவருக்கு சட்டப்படி தண்டனை வழங்கப்படலாமெனில், அச்செயல் அல்லது செயல் தவிர்ப்பு, ஒரு குற்றமாகும்"[3] என்று கூறுகிறார்.

அறிஞர் ஆஸ்டின் **(Austin)** அவர்கள், "குற்றம் என்பது சட்டம் தண்டிக்கிற ஒரு செயலோ அல்லது செயல் தவிர்ப்போ ஆகும்"[4] என்று வரையறுக்கிறார்.

அறிஞர் கென்னி **(Kenny)** கூறும் சிறந்த வரையறை: "தனிப்பட்ட மனிதன் மன்னிக்க முடியாத அரசு மட்டும் மன்னிக்கக் கூடிய, தண்டனைக்குரிய தவறுகள் அனைத்தும் குற்றமாகக் கொள்ளப்படும்"[5] என்று கென்னி வரையறை தருகிறார்.

இந்திய தண்டனைச் சட்டம் தரும் வரையறை: "குற்றம் எனும் சொல், இந்திய தண்டனைச் சட்டத்தால் தண்டனைக்குள்ளாகும்படி செய்யப்பட்ட ஒரு செயலைக் குறிக்கும்"[6] என இந்திய தண்டனைச் சட்டத்தின் **40-வது பிரிவு** குற்றத்தினை வரையறுக்கிறது.

---

1. "as an act committed or omitted in violation of public law forbidding or commanding it" - Commentaries on the Law of England, by Blackstone.
2. "A Crime is a violation of the public rights and duties..." - Blackstone.
3. "A Crime is an act or omission in respect of which legal punishment may be inflicted on the person who is in default either by acting or omitting to act"- Sir James Stephen.
4. "as any act or omission which the law punishes" - Austin.
5. "Crimes are wrongs whose sanction is punitive and is in no way remissible by any private person, but is remissible by the Crown alone, if remissible at all" - Kenny.
6. "an offence denotes a thing made punishable by the Code" - Sec. 40 of the Indian Penal Code.

குற்றவியல் சட்டத்திற்கும் ஒழுக்க நெறிக்கும் (அறநெறி) உள்ள உறவு (Relationship between Criminal Law and Morality):

மக்களின் இன்ப வாழ்வைக் குறிக்கோளாகக் கொண்டு ஒழுக்க நெறியும் சட்டமும் செயல்படுகின்றன. எனவே இரண்டிற்கும் நெருங்கிய தொடர்புண்டு. பெரும்பாலான சட்ட விதிகள், ஒழுக்க நெறிகளின் அடிப்படையில் எழுந்தவையே. எனினும் ஒழுக்க நெறி விதிகள் அனைத்தும் சட்ட விதிகளாகிவிடுவதில்லை. ஈதலும், ஒழுக்கமும், ஒப்புரவும் ஒழுக்க நெறிக் கொள்கைகள்; அவை சட்ட விதிகளல்ல. இதுபோன்றே ஒழுக்க நெறியோடு தொடர்பில்லாத சட்ட விதிகள் பலவுண்டு. வரிச் சட்டங்கள், போக்குவரத்து விதிகளைக் கூறும் சட்டங்கள் ஆகியவை ஒழுக்க நெறியோடு தொடர்பில்லாதவை. அந்த வகையில் ஒழுக்க நெறிக்கும் குற்றவியல் சட்டத்திற்கும் உள்ள வேறுபாடுகளை பின்வருமாறு கூறலாம்.

1. ஒழுக்க நெறி என்பதற்கு கடமை தவறாமை, செய்நன்றி மறவாமை, இரக்கம் கொள்ளல் போன்ற பல செயல்களைக் குறிப்பிடலாம். ஒருவர் செய்நன்றி மறந்துவிட்டார் என்றால் அவரை ஒழுக்க நெறியினை மீறியவர் என்று கூறலாம். ஆனால் அதையே காரணமாகக் காண்பித்து அவரைத் தண்டித்தல் இயலாது. ஆனால் குற்றவியல் சட்டத்தில் குற்றச் செயல்கள் இன்னதென வரையறுக்கப்படுகின்றன. அச்செயல் புரிவோர் தண்டிக்கப் படுவர். ஆகவே குற்றவியல் சட்டம், ஒழுக்க நெறியைக் காட்டிலும் மிகவும் குறுகிய வரம்பைக் (narrow) கொண்டதாகும்.

2. 'அடுத்தவர் மீது அன்பு காட்டு' என்ற ஒழுக்க நெறி 'அயலாருக்கு தீங்கு விளைவிக்காதே' என்ற சட்ட விதியாக மாறுகிறது, என்று நீதிப்பெருமகனார் அட்கின் (Lord Atkin) அவர்கள் கூறுகிறார். அதுபோலவே, 'திருடுவது பாவம்' என்று ஒழுக்க நெறி அறிவுறுத்துகிறது. ஆனால் 'திருடினால் தண்டனையுண்டு' என்று குற்றவியல் சட்டம் எச்சரிக்கிறது.

3. 'இன்னதைச் செய்' என்று ஒழுக்க நெறி நன்மையைப் பெருக்கிறது. 'இன்னதைச் செய்யாதே' என்று குற்றவியல் சட்டம் தீமையை ஒடுக்குகிறது.

4. தனிமனிதனின் குணநலனை ஒழுக்க நெறி உயர்த்துகின்றது. ஆனால் குற்றவியல் சட்டம் சமுதாய நலனுக்கு இடர் விளைவிக்காத வகையில் தனிமனிதனின் செயல்களை கட்டுப்படுத்துகிறது.

5. ஒழுக்க நெறி **இயல்பாக எழுவதாகும்.** வெளிப்படையாக சொல்வதென்றால், ஒருவனின் மனச்சாட்சி விடுக்கும் குரலையே ஒழுக்க நெறியாக கொள்ளலாம். ஆனால் குற்றவியல் சட்டம், பாராளுமன்றத்தால் **முறைப்படி இயற்றப்பட்டதாகும்.**

6. ஒழுக்க நெறிகள் மாறக் கூடியதல்ல. ஆனால் குற்றவியல் சட்டமோ, காலத்தின் சூழலுக்கேற்ப மாறக் கூடிய விதிகளைக் கொண்டது

இவ்வாறாக மக்களின் இன்பத்தை நாடியே ஒழுக்க நெறியும் சட்டமும் இயங்கினாலும், அவை வெவ்வேறு வழிகளைப் பின்பற்றுகின்றன. ஒழுக்க நெறி, மனிதனை அவனது செயலுக்குண்டான காரணம் காட்டி நல்வழிப்படுத்துகிறது; குற்றவியல் சட்டமோ, மனிதனைக் கட்டுப்படுத்தி நல்வழியில் நிறுத்துகிறது. ஒழுக்கநெறி அறிவுறுத்துகிறது; குற்றவியல் சட்டம் அச்சுறுத்துகிறது. நன்மைகளை வளர்க்கிறது ஒழுக்க நெறி; தீமைகளைத் தடுக்கிறது குற்றவியல் சட்டம். ஒழுக்க நெறி மாறாத் தன்மையுடையது; குற்றவியல் சட்டமோ மாறக் கூடியதாகும்.

மேற்கண்டவாறு ஒழுக்க நெறிக்கும், குற்றவியல் சட்டத்திற்கும் செயல்முறையில் வேறுபாடுகள் இருந்தாலும், நோக்கத்தில் மாறுபாடுகள் இல்லை. மனிதன், மனிதனாக வாழ ஒழுக்க நெறி உதவுகிறது. சமூகத்தில் மனிதன் உறுப்பினனாக வாழ குற்றவியல் சட்டம் உதவுகிறது. இந்த முறையில் குற்றவியல் சட்டமும், ஒழுக்க நெறியும் ஒன்றியிருக்கின்றன; ஆனால், ஒன்றாக இல்லை. இணைந்து நிற்கின்றன; ஆயினும் இரண்டாகவே இருக்கின்றன.

குற்றவியல் பொறுப்பானது, உரிமையியல் பொறுப்பிலிருந்து வேறுபடும் விதம் (Criminal liability and Civil liability - Distinction):

1. குற்றவியல் பொறுப்பு மற்றும் உரிமையியல் பொறுப்பு ஆகிய இரண்டும் இரு துருவங்களாகும். அவை இரண்டிற்குமிடையே எண்ணிறைந்த வேறுபாடுகள் உள்ளன. குற்றவியல் பொறுப்பானது, ஒருவனது உயிருக்கும் உடமைக்கும் தீங்கிழைத்தவன் மீது அரசால் சுமத்தப்படுகிறது. உரிமையியல் பொறுப்பானது, உரிமை பாதிப்படைந்த ஒருவனால், தொடர்புடைய மற்றொருவன் மீது சுமத்தப்படுகின்றது.

2. குற்றவியல் பொறுப்பில் சம்பந்தப்பட்ட வழக்கு நடவடிக்கையில், குற்றஞ்சாட்டப்பட்டவன் (accused) குற்றவாளி எனத் தீர்மானிக்கப் படுகின்றான். அவனுக்கு தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப் படுகின்றது; அல்லது விடுதலை செய்யப்படுகின்றான். ஆனால், உரிமையியல் பொறுப்பு சம்பந்தப்பட்ட வழக்கு நடவடிக்கையில், வாதிக்கு சார்பாக தீர்ப்பாணை (Decree) வழங்கப்படுகின்றது; அல்லது பிரதிவாதிக்கு சாதகமாக வாதியின் வழக்கு (Dismiss) தள்ளுபடி செய்யப்படுகின்றது. மாறாக பிரதிவாதிக்கு குற்றவியல் சிறைத் தண்டனை (criminal prison) வழங்கப் படுவதில்லை. அபராதமும் விதிக்கப்படுவதில்லை.

3. குற்றவியல் பொறுப்பு சுமத்தப்படுவதற்கு காரணமே, சமுதாய நலனானது, தீங்கிழைப்போர்களிடமிருந்து காக்கப்பட வேண்டுமென்பது தான். ஆனால் உரிமையியல் பொறுப்பானது, தனி மனிதனின் நலனை காத்துக் கொள்ளும் பொருட்டு எழுவதாகும்.

4. குற்றவியல் பொறுப்பானது, அரசால் சுமத்தப்படுவதாகும் என முன்னரே கண்டோம். அதுபோன்று, குற்றவாளிக்கு அளிக்கப்பட்ட

தண்டனையை குறைப்பதற்கும் அல்லது அவனை மன்னித்து விடுதலை செய்வற்கும் அரசுக்கு அதிகாரம் உள்ளது. இது அரசுக்கு மட்டுமே உரித்த அதிகாரமாகும். தனிமனிதன் இவ்வதிகாரத்தைப் பயன்படுத்த முடியாது. ஆனால் உரிமையியல் வழக்குகளில், வழக்கைத் தொடுத்த வாதி, பிரதிவாதியின் செயலை மன்னித்து வழக்கை திரும்பப் (withdraw) பெற்றுக் கொள்ளலாம்.

5. குற்றவியல் பொறுப்பு தொடர்பான வழக்குகளில் சமரசம் (Compromise) செய்து கொள்வதென்பது இயலாத செயலாகும் (சில குற்றங்களைத் தவிர). ஆனால் உரிமையியல் வழக்குகளில் வாதியும் பிரதிவாதியும சமரசம் செய்து கொள்ளலாம்.

குற்றத்திற்கும் தீங்கிற்குமிடையே உள்ள வேறுபாடு (Difference between Crime and Torts):

1. குற்றமென்பது பொது உரிமைகளையும் கடமைகளையும் மீறுவதால் ஏற்படுவதாகும். தீங்குச் செயலானது ஒரு நபருக்கு சாதாரணமாக செய்ய வேண்டிய கடமையை மீறுவதால் ஏற்படுகின்றது.

2. குற்றம் புரிந்தவர் அரசால் தண்டிக்கப்படுவர். தீங்குச் செயலினால் ஊறு ஏற்பட்ட நபர் நஷ்டஈட்டினை பெறுதலின் வாயிலாக நிவாரணம் அடைய முடியும்.

3. குற்றம் புரிந்தவரை குற்றவியல் நீதிமன்றங்களில்தான் விசாரிக்க முடியும். தீங்குச் செயல் குறித்த வழக்கில் பாதிக்கப்பட்டவர் நஷ்டஈடு கோரி உரிமையியல் சார்ந்த நீதிமன்றங்களில் முறையிட வேண்டும்.

4. குற்றம் புரிந்தவரை எதிர்த்து அரசே வழக்கு நடவடிக்கைகளை ஆரம்பிக்கும். தீங்கியற் செயல் செய்த நபரை எதிர்த்து வாதிதான் (பாதிக்கப்பட்டவர்) வழக்கைத் தொடர்தல் வேண்டும்.

5. குற்றவியல் வழக்கு விசாரணையில் 'குற்ற மனம்' (Mens rea) என்னும் கூறு மிகவும் முக்கியமானதாகும். தீங்கியற் செயல்களில் அவ்வாறில்லை.

6. குற்றவியல் வழக்குகளில் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு சந்தேகத்தின் பலன் (Benefit of doubt) அளிக்கப்படுகின்றது. ஆனால் தீங்கியற் செயல் குறித்த வழக்கில் எதிர்தரப்பினருக்கு சந்தேகத்தின் பலன் என்று எதுவும் அளிக்கப்படுவதில்லை.

7. குற்றவியல் வழக்குகளில் நிரூபிக்க வேண்டிய பொறுப்பு, வழக்கு தொடுக்கும் குற்றமுறையீட்டாளர் அல்லது அரசை சார்ந்ததாகும். ஆனால் தீங்கியற் செயல் குறித்த வழக்கில், இது சாட்சியத்தைப் பொறுத்து மாறுபடும்.

8. குற்றவியல் வழக்குகளில் கட்டப்படும் அபராதத் தொகை அரசின் கருவூலத்தைச் சென்றடையும். தீங்கியற் வழக்குகளில் கொடுக்கப்படும் நஷ்டஈடானது, பாதிக்கப்பட்ட நபரைச் சென்றடையும்.

9. குற்றவியல் சட்டத்தின் எல்லை குறுகியது. தீங்கியற் சட்டத்தின் எல்லை பரந்தது. ஆதிகாலத்தில் குற்றத்திற்கும் தீங்கிற்குமிடையே வேறுபாடு இல்லாமலேயே இருந்தது. தீங்குதான் பிற்காலத்தில் 'குற்றம்' என்ற பதம் ஏற்படுவதற்கு வழிவகுத்தது. ஒரு சில சூழ்நிலைகளில் ஒரே செயல் தீங்கியற் செயலாகவும், குற்றமாகவும் கருதப்படலாம். உதாரணமாக அவதூறு கூறுதல் (Defamation), கவனக்குறைவால் மரணம் விளைவித்தல் (Causing death by negligent act).

10. குற்றவியல் சட்டம் பகரப் பொறுப்பு (vicarious liability) என்பதை அறியாதது. ஆனால் தீங்கியல் சட்டத்தில் பகரப் பொறுப்பு பெரும்பங்கு வகிக்கிறது.

(ஆ) குற்றத்தின் அடிப்படைக் கூறுகள் [Constituent Elements of Crime]

2. Explain the Latin Maxim : *actus non-facit reum nisi mens sit rea.* (குற்றமனமில்லாச் செயல் குற்றமாவதில்லை என்னும லத்தீனிய சட்ட முதுமொழியை விளக்குக.)

(அல்லது)

Explain with illustration the maxim "*actus non-facit reum nisi mens sit rea.*" (குற்ற மனமில்லாச் செயல் குற்றமென ஆவதில்லை என்றும் சால்புரையை மேற்கோள்களுடன் விளக்குக.)

(அல்லது)

"The act alone is not sufficient to constitute a Crime unless it is accompanied by a guilty mind"- Discuss. ("குற்ற மனம் இல்லாமல் இருந்தால், செயல் மட்டும் குற்றம் ஆவதற்கு போதுமானது அன்று" - விவாதிக்க.)

(அல்லது)

Explain the terms "recklessness", "intention" and "negligence" with special reference to English Law. (ஆங்கிலச் சட்டத்தினை சிறப்பாகக் குறிப்பிட்டு 'அஜாக்கிரதை', 'கருத்து' மற்றும் 'கவனக்குறைவு' ஆகிய பதங்களை விளக்குக.)

(அல்லது)

Explain the terms: *'Actus Reum'* and *'Mens Rea'*. ('குற்றச் செயல்' மற்றும் 'குற்ற மனம்' இச்சொற்கூற்றை விளக்குக.)

(அல்லது)

Mens rea - Write short notes. (குற்ற மனம் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

குற்றத்தை இழைத்தவர் குற்றவாளி ஆகின்றார். குற்றவாளி என்று

ஒருவரைக் கொள்வதற்கு முன் அவர் செய்தது குற்றமா என்பதை ஆராய வேண்டியது அவசியமாகிறது. எனவே குற்றம் என்ற சொல்லின் உட்பொருள் என்ன, குற்றத்தின் கூறுகள் எவை என்பதைப் பற்றி நாம் விரிவாகக் காண வேண்டும். அப்பொழுதுதான் ஒருவர் குற்றம் இழைத்தவரா என்பதைக் காண முடியும்.

குற்றத்தின் கூறுகள் (Constituent Elements):

குற்றம் என்பது ஒரு செயலைக் குறிக்கிறது. கொலைக் குற்றம் என்றால் மரணத்தை விளைவிக்கும் செயல் என்பதாகும். மரணத்தை விளைவிக்கும் செயலைக் குற்றச் செயல் என்கிறோம். இந்தச் செயல் மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற தீய கருத்தோடு செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இந்தத் தீய கருத்தைக் 'குற்ற மனம்' என்கிறோம். **குற்ற மனத்தோடு கூடிய குற்றச் செயலைத்தான் 'குற்றம்' என்று சட்டம் சொல்கிறது.** எனவே, குற்றம் என்பதில் இரண்டு கூறுகள் உள்ளன. ஒன்று, குற்ற மனம்; மற்றொன்று, குற்றச் செயல். இந்த இரு கூறுகளைப் பற்றியும் விரிவாகக் காண வேண்டியது மிகவும் அவசியம். அதாவது குற்ற மனமில்லாச் செயல் குற்றமாகாது. இதுவே இலத்தீன் முதுமொழியின்படி, ***Actus non facit reum nisi mens sit rea*** என்று அழைக்கப்படுகிறது. இக்கோட்பாடு, குற்றவியல் சட்டத்தின் அடிப்படை ஆதாரமாக உள்ளது. **எனவே, ஒரு நிகழ்வு, குற்றம் என்று கூறப்படுவதற்கு இரண்டு அடிப்படைக் கூறுகள் தேவை. அவை, – (1) குற்ற மனம் (Mens rea); (2) குற்றச் செயல் (Actus reus).**

1. குற்ற மனம் (Mens rea) (அல்லது)
குற்ற மனக் கோட்பாடு (Doctrine of Mens rea)

குற்றத்திற்கான மேற்படி இரண்டு அடிப்படைக் கூறுகளில் முக்கியமானது, குற்ற மனமாகும். இது, குற்றச் செயல்களுக்குக் காரணமான எண்ணங்களைச் (மனநிலைகளைச்) சுட்டிக்காட்டுகிறது. இதனை பின்வரும் சில எடுத்துக்காட்டுகள் மூலம் காண்போமா?

எடுத்துக்காட்டு 1 : பகையின் காரணமாக ஒருவர் கையை மற்றொருவர் அரிவாளால் வெட்டிவிடுகிறார். கையை வெட்டியவர் குற்றவாளியெனத் தீர்மானிக்கப்பட்டு அவருக்குத் தகுந்த தண்டனை அளிக்கப்படுகிறது. சிறு காயத்தால் புரையோடியிருந்த நோயாளியின் கையை வைத்தியர் இரண சிகிச்சை செய்து அறுத்து அகற்றுகிறார். நோயாளியின் கையை அகற்றிய வைத்தியரைக் குற்றவாளியெனச் சட்டம் கருதுவதில்லை. ஒருவரின் கையை அறுக்கும் செயலை அரிவாளால் வெட்டியவரும் செய்திருக்கிறார். அறுவை வைத்தியரும் செய்திருக்கிறார். ஆனாலும், ஒரு செயல் குற்றம் ஆகிறது; மற்றொன்று நற்செயல் ஆகிறது. எதனால்? பகையின் காரணமாகச் செயல் புரிந்தவர், தம் எதிரிக்குத் தீங்கு இழைக்க வேண்டும் என்ற தீய எண்ணத்துடன் கையை வெட்டினார். அறுவை வைத்தியர்

நோயாளியின் நோயைக் குணப்படுத்த வேண்டும் என்ற நல்ல எண்ணத்தில் கையை வெட்டி அகற்றினார். குற்ற மனத்துடன், தீய எண்ணத்துடன் செய்யப்பட்டது முதற் செயல்; குற்ற மனமின்றி, நல்ல எண்ணத்துடன் செய்யப்பட்டது இரண்டாவது செயல். தீய எண்ணத்துடன் கூடிய செயல் குற்றமாகிறது. நல்ல எண்ணத்துடன் எழுந்த செயல் குற்றம் ஆவதில்லை.

எடுத்துக்காட்டு 2 : அய்ந்து வயது குழந்தை ஒரு கல்லை எடுத்து நம் மீது வீசுகிறது. நமக்கு அதனால் காயம் விளைகிறது. அக்குழந்தையைக் குற்றவாளி எனச் சட்டம் கொள்வதில்லை. அதே செயலால் வயதுவந்த மற்றொருவர் நமக்கு காயம் விளைவித்தால் அவரை சட்டம் தண்டிக்கிறது. ஏன்? தீங்கு செய்ய வேண்டும் என்ற எண்ணம் எழமுடியாத இளமைப் பருவத்தில் உள்ளது குழந்தை. அதாவது, தான் செய்யும் செயல் என்ன, அதன் விளைவுகள் என்ன என்பதைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் இருப்பது அய்ந்து வயதுக் குழந்தை. எனவே, குழந்தையின் செயலைச் சட்டம் குற்றம் எனக் கருதுவதில்லை.

எடுத்துக்காட்டு 3 : விருந்திற்குச் சென்றுவிட்டு வெளியே வரும்பொழுது, ஒருவர் தம்முடைய குடைதான் என்று நினைத்துக்கொண்டு மற்றொருவரின் குடையை எடுத்துச் சென்றுவிடுகிறார். இவ்வாறு தவறுதலாகப் பிறர் குடையை எடுத்துச் சென்றவர் மீது திருட்டுக் குற்றம் சாட்டப்படுவது இல்லை. ஏன்? அவர் திருட வேண்டும் என்ற தீய எண்ணத்துடன் அக்குடையை எடுக்கவில்லை.

இதிலிருந்து தெரிவதென்ன? ஒரு செயலைச் சட்டம், குற்றம் எனக் கொள்ளுவதற்கு முன் அச்செயல் தீங்கெண்ணத்துடன், குற்ற மனத்துடன் செய்யப்பட்டதா என்பதை ஆராய்கின்றது. குற்ற மனத்துடன் கூடிய செயலையே குற்றமாகச் சட்டம் கருதுகிறது. தீய எண்ணம் ஏதுமின்றிச் செய்யப்பெற்ற செயலால் ஒருவருக்குத் தீங்கு விளைந்தாலும், அதைக் குற்றமாகச் சட்டம் கொள்ளுவது இல்லை. **குற்ற மனம் இல்லாத குற்றச் செயலைச் சட்டம் தண்டனைக்குரியதாக்குவது இல்லை,**[1] **என்று அறிஞர் சால்மண்ட்** கூறுகிறார். எனவே, குற்றத்திற்கு அடிப்படையாக அமைவது குற்ற மனம். இதை ஆங்கிலத்தில் **'guilty mind'** என்றும், இலத்தீன் மொழியில் **'Mens rea'** என்றும் கூறுவார்கள். எனவே, குற்ற மனத்துடன் செய்யப்படாத செயல் குற்றமாவது இல்லை என்ற விதி *(Actus non facit reum, nisi mens sit rea)* குற்றவியல் சட்டத்தின் ஆதார விதியாகும்.

"குறிப்பிட்ட ஒரு குற்றத்திற்குக் குற்ற மனம் தேவையில்லை என்று குறிப்பிட்ட சட்டம் கூறினாலொழிய, பொதுவாக ஒருவரைக் குற்றவாளி என்று தீர்மானிப்பதற்கு முன் அவர் குற்ற மனத்துடன் குற்றமான செயலைச் செய்தாரா என்பதைப் பார்க்க வேண்டும். குற்ற மனம் இல்லாதவரைக் குற்றவாளி என்று கொள்ளுதல் கூடாது. குடிமக்களின் சுதந்திரத்தைக்

1. The act alone does not amount to guilty: it must be accompanied by a guilty mind. - Salmond.

காப்பதற்கு வேண்டிய முக்கியமான விதியாகும் இது'[1], என்று **Goddard** என்ற நீதிபதி **Brend v. Wood** எனும் வழக்கில் கூறுகிறார்.

சிந்தனை இன்றிச் செயல் இல்லை. கருத்தில் விளைவதே கருமம். எனவே, கருமத்தைவிடக் கருத்தே முக்கியமாகிறது. செயல்களின் மூலமாகச் சிந்தனை அமைவதால், புறச்செயல்களை விட அகச்செயல்களுக்குக் காரணமாயிருக்கும் மனநிலையைச் சட்டம் ஆராய்கிறது. மனநிலை குற்றமானதா என்று கண்டு அதன் பின்னரே, அந்த மனநிலையால் எழுந்த செயலைச் செய்தவர் தண்டனைக்குரியவரா என்று தீர்மானிக்கிறது. தீய எண்ணத்தில் எழுந்த செயலையே தீச்செயலென அறம் விதிக்கிறது. குற்ற மனத்தோடு புரிந்த செயல்களையே குற்றங்கள் எனச் சட்டமும் கொள்கிறது.

குற்ற மனதை எடுத்துக்காட்டும் கூறுகள் மூன்றாகும். அவை, 1. குற்றச் செயல் புரிய வேண்டும் எனும் கருத்து (Intention) இருக்க வேண்டும்; 2. அச்செயலின் விளைவு முன்னரே அறியக் கூடியதாக (Forseeable) இருக்க வேண்டும்; 3. அவ்விளைவு, அச்செயலை புரிபவரால் விரும்பப்பட்டிருக்க (Desirable) வேண்டும்.

எடுத்துக்காட்டாக, ராமு என்பவர் சோமு என்பவரை துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல வேண்டும் என்று விரும்புகிறார். துப்பாக்கியிலிருந்து குண்டு சோமு மீது பாய்ந்தால், அவர் இறந்து விடுவார் என்ற விளைவை ராமு முன்னரே அறிவார். இங்கு விருப்பமும் உண்டு; விளைவை முன்னரே அறிதலும் உண்டு. இவற்றிற்கு அடிப்படை எது? 'கொல்ல வேண்டும்' என்ற கருத்து. அதுவும் இங்குள்ளது. எனவே ராமு, சோமுவைக் கொல்ல குற்ற மனதினைக் கொண்டுள்ளார், என்பது தெளிவாகிறது.

கருத்து (Intention):

குற்ற மனதிற்கு, அடிப்படையாக விளங்குவது 'கருத்து' ஆகும். இதை மேலே கண்டோம்.

இதை, **அறிஞர் கிளான்வில்லி வில்லியம்ஸ்** அவர்கள், "குற்றமானது ஒரு குறிப்பிட்ட குற்றத்திற்கு தேவையான மனநிலையினைக் (Mental element) குறிப்பிடுகின்றது. இம்மனநிலை, ஒரு உடனடியான செயலையோ அல்லது ஒரு குறிப்பிட்ட விளைவையோ உண்டாக்கக் கூடிய **கருத்தாகவோ (intention)** அல்லது அத்தகு செயலை அல்லது விளைவை உண்டாக்கக் கூடிய **அஜாக்கிரதையாகவோ (recklessness)** இருக்கலாம்", என்று கூறுகின்றார்.

---

1. "It is of utmost importance for the protection of the liberty of the subject that a court should always bear in mind, that unless a statute either clearly or by necessary implication, rules out mens rea as a constituent part of a crime, the court should not find a man guilty of an offence against the criminal law unless he has a guilty mind" - Goodard, L.J. in Brend v. Wood (1946), 62 T.L.R. 462

ஒரு செயலின் விளைவை முன்னரே அறிந்து, அந்த விளைவை விரும்பி மனதில் ஏற்கனவே உருவான எண்ணம்தான், கருத்தாகும் (intention). இக்கருத்தினை அடிப்படையாகக் கொண்டு மேற்படி செயல் புரியப்பட்டால் அது 'கருதிய செயல்' **(intended act)** எனப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, A, B-யின் மீது கல்லை விட்டெறிகிறார். அதன் மூலம் ஏற்படும் விளைவை A முன்னரே அறிவார். மேலும் அதை அவர் விரும்பி செய்கிறார். இங்கு மேற்படி A என்பவர் கருத்துடன் B-யின் மீது கல்லை வீசியதாகப் பொருளாகும்.

வேறு சில மனநிலைகள்:

குற்ற மனதுடன் கூடிய செயல் என்றால், அது கருத்துடன்தான் செய்யப்பட்டிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. 'குற்ற மனம்' என்பது வேறு சில மனநிலைகளையும் உள்ளடக்கியதாகும். அவை பின்வருமாறு.

1. கவனக்குறைவு (Negligence): ஒரு குறிப்பிட்ட செயலால் ஏற்படும் விளைவை முன்னரே அறியாமல், விருப்பமும் (desire) இல்லாமல் ஒரு செயல் புரியப்பட்டால், அது கவனக்குறைவால் ஏற்பட்ட செயல் என்று கொள்ளப்படும்.

எடுத்துக்காட்டாக, A என்பவர் தன்னுடைய வீட்டு மாடி ஜன்னலின் வழியாக, கல்லை விட்டெறிகிறார். அது கீழே சாலையில் நடந்து சென்று கொண்டிருக்கும் B என்பவரின் தலை மீது விழுகிறது. இச்செயல் B-யை அடிக்க வேண்டும் என்ற விருப்பமில்லாமலும், அதன் மூலம் ஏற்படும் விளைவை முன்னரே எதிர்நோக்காமலும் செய்யப்பட்டதாகும். ஆகவே இங்கு A கல்லை வீசுவதில் கவனக்குறைவான மனநிலையுடன் செயல் பட்டுள்ளார் என்பது தெரியவரும்.

2. அஜாக்கிரதை (Recklessness): இங்கு ஒரு குறிப்பிட்ட செயலால் ஏற்படும் விளைவுகளை முன்னரே அறிந்து கொண்டிருந்தாலும் அத்தகு விளைவுகளை விரும்பி உண்டாக்குதல் கிடையாது.

எடுத்துக்காட்டாக, காரை கூட்டம் மிகுதியாக உள்ள இடத்தில் வேகமாக ஓட்டிச் செல்வது. இதில் காரை வேகமாக ஓட்டிச் செல்வதினால் ஏற்படும் விளைவுகளை முன்னரே அறிந்து கொண்டிருந்தாலும், அவ்விளைவுகளை விரும்பி உண்டாக்குதல் கிடையாது.

ஒருவருடைய அஜாக்கிரதையினாலோ அல்லது கவனமின்மை யினாலோ மரணம் விளைவிக்கப்பட்டால், அது குற்றம் எனச் சட்டம் கூறுகின்றது. **(Sec 304-A of I.P.C.)**

3. தெரிந்தே செய்தல் (Done Knowingly): ஒரு செயலின் விளைவைப் பற்றி நன்கு தெரிந்திருந்து அதனைச் செய்தல்.

எடுத்துக்காட்டாக, A என்பவருக்கு அடி வயிற்றில் கட்டி

இருக்கின்றது. அதனால் வயிற்றில் இலேசாக உதைத்தாலும் அவருடைய உயிருக்கு ஆபத்து விளையலாம் என்பது, B என்பவருக்கு நன்றாகத் தெரியும். இருந்தும் கட்டி உள்ளவரின் வயிற்றின் மீது, B உதைக்கின்றார். இதனால் உதைப்பட்டவரான A இறந்து விடுகிறார். இங்கு B (உதைத்தவர்) கொலைக் குற்றத்திற்கு உள்ளாகின்றார். அவர் மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் உதைக்கவில்லை. ஆனால் மரணம் விளையலாம் என்பதைத் தெரிந்திருந்து உதைத்ததால் (knowingly), அது கொலைக் குற்றமாகும்.

உட்கருத்து (Motive):

உட்கருத்து என்பது கருத்திற்கு (Intention) ஒப்பாகாது. அது மனதின் ஒரு பொதுச் செயல். சுருங்கக் கூறின், ஒரு செயல் நடைபெற உதவும் ஒரு சிறிய தூண்டுகோல். அவை அன்பு, கோபம், பயம், பொறாமை, வெறுப்பு, பணத்தாசை, பயமுறுத்தல் போன்ற பலவகைகளில் உள்ளது.

R. v. Mrs. Hyam[1] - இவ்வழக்கில், குற்றவாளி தன் போட்டியாளரை பயமுறுத்த, அவர் வீட்டின் முன் உள்ள தபால் பெட்டி மீது தீ வைத்தார். அதன் மூலம் வீடு பற்றி எரிந்து, போட்டியாளரின் மகள் இறந்துவிடுகிறாள். இங்கு குற்றவாளியின் கருத்து, தன் போட்டியாளரை போட்டியில் கலந்து கொள்ளாமல் இருக்கச் செய்வதாகும். இதைச் செயல்படுத்த அவர் கொண்ட உட்கருத்து பயமுறுத்துதல் ஆகும்.

[இவை தவிர வேறு சில மனநிலைகளை இந்திய தண்டனைச் சட்டம் கூறுகிறது. அவைகளை வினா எண் (3)-ல் காண்க.]

குற்ற மனதில் தெரிநிலைக் கோட்பாடு (Objective Standard):

குற்றம் செய்தவரின் மனநிலையினைக் குறிப்பதற்கு குற்ற மனம் இருந்தாலும், அவரின் அம்மனநிலையினை புறத்தே உள்ள சில காரணங்களைக் (External Objective Standard) கொண்டு தீர விசாரித்த பின் நீதிபதிகள், அவரின் குற்றப் பொறுப்பினை முடிவு செய்வார்கள். குற்ற மனம் தெரிநிலையா (objective) அல்லது கொள்நிலையா (subjective) என்றால், பொதுவாக தெரிநிலைதான் ஆகும். தெரிநிலை என்பது ஒரு சாதாரண மனிதனுக்கு உள்ள அறிவே ஆகும்.

Director of Public Prosecution v. Smith[2] - இவ்வழக்கில் குற்றவாளி சில திருட்டுப் பொருள்களுடன் வண்டியை வேகமாக ஓட்டிச் சென்றார். அதை அறிந்து ஒரு காவல்காரர் அவ்வண்டியில் தொற்றிக்கொண்டார். அதை உணர்ந்த அவ்வண்டியின் ஓட்டுனராகிய குற்றவாளி அவரைக் கீழே தள்ள வண்டியை தாறுமாறாக ஓட்டினார். இதனால் காவல்காரர் கீழே விழுந்து அடிபட்டு இறந்துவிட்டார். காரை எங்ஙனம் ஓட்டினால் ஒருவன் கீழே விழந்து இறப்பான் என்பது ஒரு சாதாரண மனிதனுக்கும் (reasonable

1. (1974) 2 W.L.R. 607 : (1974) 2 All. E.R. 41
2. 1960 3 All. E.R. 161

man) தெரியும். மேலும் ஓட்டுநருக்கு காவல்காரரை கொல்ல வேண்டும் என்ற கருத்து காவல்காரர் வண்டியில் தொற்றியவுடன் ஏற்பட்டுவிட்டது (immediate formulation of mens rea). ஆகவே அவ்வோட்டுநர் கொலைக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டார்.

R. v. Faulkner[1] - இந்த மற்றொரு வழக்கில் கப்பல் ஓட்டுபவர் (Sailor) ஒருவர், ரம் என்ற மதுவகை அடங்கிய பீப்பாயை திருடும் கருத்துடன், கப்பலில் அவைகள் வைக்கப்பட்டுள்ள அறைக்குள் நுழைந்தார். வெளிச்சத்திற்காக தீக்குச்சி ஒன்றினை பற்ற வைக்கும் பொழுது, மேற்படி மதுவகை தீப்பிடித்து, அக்கப்பல் முழுவதுமே எரிந்து நாசமாகியது. இவ்வழக்கில் ஒருவன் தன்னுடைய செயலினால் ஏற்படும் நேரடி விளைவுகளை அறிந்தே செயல்படுகிறான் என்றே சட்டம் ஊகம் (inference) கொள்கிறது. ஆகவே, மேற்கூறப்பட்ட கப்பல் ஓட்டுபவர், எரியூட்டல் (arson) குற்றத்திற்காக தண்டிக்கப்படுகிறார், எனக் கூறப்பட்டது. நேரடி விளைவுகளை அறிந்து செயல்படல் என்ற இத்தத்துவம் தற்காலத்தில் 'விளைவுகளை முன்னரே அறிந்து செயல்படல்' என்றாகிவிட்டது.

R v. Lipman[2] - இவ்வழக்கில் பிரதிவாதியின் படுக்கையை பகிர்ந்துகொண்ட பெண்ணின் மரணத்திற்காக, அவரின் மீது கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. இறந்து போன பெண்ணின் தலையில் இரண்டு அடிப்பட்ட காயங்கள் காணப்பட்டன. ஆனால் அவள் மூச்சு திணறி (அவளுடைய வாயை துணியால் பொத்தியதால்) இறந்திருக்கிறாள் என்பது பிரேதக் கூராய்வு அறிக்கையிலிருந்து தெரிய வந்தது. இவ்வழக்கின் விசாரணையின்போது பின்வரும் தகவல்கள் வெளியாயின. பிரதிவாதியும் அப்பெண்மணியும் போதை மருந்துக்கு அடிமையானார்கள். சம்பவ தினத்தன்று L.S.D எனும் போதை மருந்தினை அவர்கள் உட்கொண்டிருந் தனர். இதனைக் கொண்டு பிரதிவாதிக்கு, நீதிபதி கொலைக் குற்றமல்லாத (not guilty of murder) மரணம் விளைவிக்கும் குற்றத்திற்காக (manslaughter) தண்டனை அளித்து தீர்ப்பு வழங்கினார். இதை எதிர்த்து பிரதிவாதி மேல்முறையீடு செய்தார். அதில் பிரதிவாதி கொலை நடந்த சமயத்தில் தாம் என்ன செய்கிறோம் என்பதே புரியாமல் இருந்ததால், கொல்ல வேண்டும் என்ற குற்ற மனம் (mens rea) தனக்கு அப்பொழுது இல்லை என்றும், மேலும் அவளைக் கொல்லும் பொழுது, தான் பாம்புகளை எதிர்த்துப் போராடுவது போன்ற பிரமையில் (illusion) இருந்ததால், அவளுக்கு தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற குற்றக் கருத்து இல்லாமல் இருந்ததாகவும், வாதாடினார். ஆனால், அவருடைய வாதத்தினை நீதிமன்றம் நிராகரித்துவிட்டு பின்வருமாறு கூறியது. மேற்படி பெண்மணியை கொல்ல வேண்டும் என்ற கருத்தினை பிரதிவாதி கொண்டிருக்காவிட்டாலும், போதை மருந்தினை உட்கொள்ளுவதினால் அபாயகரமான சூழ்நிலைகள் ஏற்படலாம் என்பதை பிரதிவாதி முன்னரே அறிந்துள்ளார். இதுவே அவரது குற்ற மனநிலையினை

1. 1877 13, Cox C.C. 550.
2. 1969 3 W.L.R. 819 : 1969 3 All. E.R. 410

உணர்த்துகின்றது. ஆகவே அவருக்கு மரணம் விளைவிக்கும் குற்றத்திற்கான (Manslaughter) தண்டனை வழக்கப்பட்டது சரியே, என்று தீர்ப்பு கூறியது.

2. குற்றச் செயல் (Actus reus)

முன்னுரை:

குற்ற மனம் இல்லையெனில் குற்றம் இல்லை; குற்ற மனமில்லாச் செயல் குற்றமென ஆவதில்லை, என்று மேலே கண்டோம். ஆனால் குற்ற மனம் மட்டுமே குற்றமாகிவிடுவதும் இல்லை. குற்ற எண்ணம் செயலாக வெளிப்பட்டபின்தான் அது சட்டத்தின் பார்வையில் படுகின்றது. சுருங்கக் கூறின், குற்ற மனம், குற்றச் செயல் ஆகிய இரண்டும் இருந்தால்தான் குற்றம் பிறக்கின்றது.

குற்றச் செயல் - விளக்கம்:

மனம், வாக்கு, உடல் மூன்றிலும் ஏற்படும் இயக்கத்தைச் செய்கை என்கிறோம். எண்ணுதல் செய்கை; பேசுதல் செய்கை; உடலை இயக்குதல் செய்கை; உள்ளுதலும், உரைத்தலும், உடலையசைத்தலும் செய்கைகள்தாம். ஆனால், நாம் இங்கு அகநிகழ்வுகளைச் செய்கைகளாகக் கொள்ளுவதில்லை. தீய எண்ணங்கள் தோன்றுவதைக் குற்ற மனம் என்று முன்பகுதியில் சேர்த்து விட்டோம். உடல் இயக்கம், உரையாற்றல் இவைகளைப் பொறுத்தே செய்கை என்ற சொல் இங்கு பயன்படுகிறது. செய்கையைச் **'செய்வினை'** என்றும் கூறலாம்.

செயலும் (செய்வினையும்) விளைவும்:

செய்வினையால் ஏற்படும் பயனை, விளைவு (result) என்கிறோம். வினையும் விளைவும் தொடர்பு கொண்டவை. ஒருவர் கம்பினால் மற்றொருவரை அடிக்கிறார். அடித்தல் ஒரு வினை. அதன் பயனாக அடிபட்டவருக்குக் காயம் ஏற்படுகின்றது. இங்கு காயம் என்பது விளைவாகும். வினையாகிய அடித்தலும் விளைவாகிய காயமும் சேர்ந்து காயம் விளைவித்தல் என்ற செயல் ஆகின்றது. ஒருவர் செய்யும் வினையும் அதன் விளைவும் சேர்ந்து அவருடைய செயல் (act) ஆகின்றது. எனவே, காயம் விளைவித்தல் அவருடைய செயலாகும்.

ஒருவர் மற்றொருவரை நோக்கிச் சுடுகிறார். ஆனால் குறி தவறிவிடுகின்றது. எவரை நோக்கிச் சுடப்பட்டதோ அவர் இறக்கவில்லை. இப்பொழுது அச்செயலைக் கொலை முயற்சி என்கிறோம். குறி சரியாக இருந்து, சுடப்பட்டவர் மீது குண்டு பாய்ந்து அவர் இறந்துவிட்டால் அந்தச் செயலைக் கொலை என்கிறோம். சுட்டவரின் உடலியக்கம் இரண்டிலும் ஒன்றுதான். ஆனால் அதன் விளைவுகள் வேறுபட்டவை. ஒன்றில் மரணம் விளையவில்லை. மற்றொன்றில் மரணம் விளைந்தது. முன்னதைக் கொலை முயற்சி என்றும், பின்னதைக் கொலை என்றும் கூறுகிறோம். கொலை

முயற்சி என்ற செயலில் அடங்குவன, சுட்டது, மரணம் விளையாத நிலை ஆகிய இரண்டும். கொலை என்ற செயலில் அடங்குவன சுட்டது, மரணம் விளைந்தது ஆகிய இரண்டும். வினைகள் ஒன்றாக இருந்தாலும், விளைவுகள் வேறாக இருந்ததால் செயல்கள் மாறுகின்றன. சுடுதல் என்ற வினை இரண்டிலும் ஒன்றுதான். ஆனால், விளைவுகள் வேறுபட்டவை. எனவே, செயல்களும் வேறாகின்றன. ஒன்று கொலை முயற்சி என்ற செயல்; மற்றொன்று கொலை என்ற செயல்.

எனவே, ஒருவரின் உடல் இயக்கத்தை, செய்வினையை மட்டும் வைத்துச் செயலை நிச்சயிக்க முடியாது. வினையின் விளைவையும் கண்டுதான் செயலைக் கணிக்கின்றோம்.

செய்வினை, விளைவு, சூழ்நிலை மூன்றும் சேர்ந்ததே குற்றச் செயல் ஆகின்றது:

செய்வினை, விளைவு இந்த இரண்டைத் தவிர, இன்னும் ஒரு முக்கியமான கூறு ஒன்று உண்டு. அதுதான் சூழ்நிலை. வினையும், விளைவும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நிகழ்ந்ததால்தான் அது குற்றச் செயல் ஆகின்றது.

மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளியைச் சிறைச்சாலை அதிகாரி தூக்கிலிடுகிறார். ஆனால் அந்த அதிகாரி கொலைக் குற்றத்திற்கு ஆளாவதில்லை. அவர் குற்றவாளியை தூக்கிலிட்டது சட்டப்படியான செயலாகும். அவர் தூக்கிலிட்ட செய்வினையும் அதனால் குற்றவாளிக்கு விளைந்த மரணமும் இருந்தும், அது கொலைக் குற்றம் இல்லை. ஏன்? குற்றவாளி, மரணதண்டனை விதிக்கப்பட்டவர். சிறை அதிகாரியின் கடமை குற்றவாளிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை நிறைவேற்றுவதாகும். இந்தச் சூழ்நிலையால் சிறை அதிகாரி, தண்டனை பெற்றவரின் மரணத்தை விளைவித்த செயல் குற்றமற்ற செயலாகிறது. நம்மை ஒருவர் கொல்ல முயற்சி செய்கையில் நாம் தப்புவதற்கு வேறு வழியில்லையெனில், நாம் அவரைக் கொல்லலாம். இது சட்டம் நமக்கு அளிக்கும் தற்காப்பு உரிமை. இவ்வாறு, தற்காப்பு நடவடிக்கையாக ஒருவர் மற்றொருவருக்கு மரணம் விளைவித்தால் அதுவும் கொலைக் குற்றம் ஆகாது. எனவே, வினையையும் விளைவையும் மட்டும் வைத்துக் குற்றச் செயலை நிர்ணயித்தல் முடியாது. சட்டத்தால் விலக்கப்பட்ட சூழ்நிலையில் அவை நிகழ்ந்தனவா என்பதை ஆராய்ந்தே சட்டம் அவற்றைக் குற்றச் செயல் என்று கொள்ளுகிறது. பகைமையின் காரணமாக ஒருவர் மற்றொருவருக்கு மரணத்தை விளைவித்தல் குற்றச் செயல். பகையைப் போக்குவதற்கு ஒருவர் மற்றொருவரைக் கொல்லலாம் என்று சட்டம் அனுமதிப்பதில்லை. ஆனால், மேலே கூறப்பட்ட நிலையில் தம் உயிரைக் காப்பதற்கு அவசியமானால் ஒருவர் மற்றொருவரைக் கொல்லுவதைச் சட்டம் தடுப்பதில்லை. ஆதலால், ஒரு வினையும், அதன் விளைவும் சேர்ந்து குற்றச் செயல் ஆகின்றனவா என்று தீர்மானிப்பதற்கு முன் அவை எந்தச் சூழ்நிலையில் நிகழ்ந்தன என்பதை சட்டம் கவனிக்கிறது.

சட்டத்தால் தடை செய்யப்பட்ட செயல் என்றால், செய்வினை மட்டும், அல்லது விளைவு மட்டும் தடை செய்யப்பட்டது என்று பொருள் கொள்ளலாகாது. செய்வினை, சூழ்நிலை, விளைவு அனைத்தும் அடங்கிய 'செயல்' தடை செய்யப்பட்டது என்பதே பொருளாகும். ஒருவர் செய்யும் வினை, சூழ்ந்லைகள், அதனால் நேரும் விளைவு இம்மூன்றும் சேர்ந்தே 'குற்றச் செயல்' ஆகின்றது,[1] என்று **சட்டவியல் அறிஞர் சால்மண்ட்** கூறுகிறார்.

சுருங்கக்கூறின், ஒருவன் குற்ற மனதினைக் கொண்டுள்ளான் என்பதற்காக மட்டும் அவன் தண்டிக்கப்படுவதில்லை. அவன், அக்குற்ற மனதின் வழிநின்று, குற்றச் செயலைப் புரிதல் வேண்டும். அப்பொழுதுதான் அவனைத் தண்டிக்கவியலும். அதனைத்தான் ஒரு **'குற்றம்'** என்றும் கூறவியலும்.

செயல் (act) மற்றும் செயல் தவிர்க்கை (omission):

குற்றச் செயலானது, ஒரு செயலாகவோ (act) அல்லது செயல் தவிர்க்கையாகவோ (omission) இருக்கலாம். ஆனால் அவை குற்ற மனதுடனும், விருப்பப்பூர்வமானதாகவும் மற்றும் தன்னிச்சையாகவும் (voluntarily) இருக்க வேண்டியது மிகமிக இன்றியமையாததாகும்.

செயல் (act):

செயலால் ஏற்படும் குற்றம் குறித்து விரிவாக மேலே கண்டோம். அதாவது, A என்பவர் B என்பவரைக் கொல்ல வேண்டும் என்ற குற்ற மனம் கொண்டு, அவரைக் கொல்கிறார். இங்கு குற்ற மனம் தெளிவாக சுட்டிக்காட்டப்பட்டிருந்தால், இச்செயல் விருப்பப்பூர்வமானதாகும். (அதாவது Bயை கொல்ல வேண்டும் என்று விருப்பம் கொண்டு அவரைக் கொன்றது). ஆனால் பின்வரும் வழக்கில் விருப்பப்பூர்வமற்ற செயல் பற்றிக் கூறப்பட்டது.

Melbourne Case[2] இவ்வழக்கில் ஒரு தாய், தன் மகளை ஒரு சிப்பாய் ஆசை காட்டி மோசம் செய்வதாக கனவு காண்கிறாள். உடனே அவர் தூக்கத்தில் இருந்து விழித்து எழுந்து, அதே வேகத்தில் ஒரு கோடாலியால் பக்கத்தில் படுத்திருந்த தன் மகளை, சிப்பாயை கொல்வதாக நினைத்து கொன்று விடுகிறாள். இதில் அத்தாய்க்கு குற்ற மனம் எதுவும் இல்லை. மேலும் இதில் செயலும் விருப்பப்பூர்வமானது அல்ல (non-voluntary). ஆகவே இது குற்றமாகாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

மேலும் சில எடுத்துக்காட்டுகள்: 1. தூக்கத்தில் நடக்கும் வியாதி

1. Every act is made up of three distinct factors or constituent parts. These are (i) its origin in some mental or bodily activity, (ii) its circumstances, and (iii) its consequences - Salmond.
2. Reported in 'Daily Telegraph Paper' (Australia) dated Dec. 20, 1950

கொண்ட ஒருவன் (somnambulist), தான் தூக்கத்தில் நடக்கும் பொழுது, ஒரு வீட்டிற்கு தீ வைத்தால் அது குற்றமாகாது. அச்செயல் அந்நபரின் விருப்பத்தின் அடிப்படையில் செய்யப்பட்டதல்ல.

2. A-யும் B-யும் மலையேறும் பயிற்சியில் கலந்து கொண்டு, மலை ஒன்றில் ஏறிக்கொண்டிருக்கிறார்கள். அப்பொழுது A-க்கு திடீரென வலிப்பு (epileptic fit) வந்து விடுகின்றது. வலிப்பினால் A தனது கையை உதறும் வேகத்தில் B-யை ஒரு பெரிய பாறை மீது தள்ளி விடுகின்றார். இதனால் B இறந்துவிடுகிறார். ஆனால் இங்கு A எக்குற்றத்திற்கும் பொறுப்பாக மாட்டார். ஏனெனில் அவருடைய செயல் தன்னிச்சையானதல்ல; அனிச்சையானதாகும்.

செயல் தவிர்க்கை (omission):

செய்ய வேண்டிய ஒரு செயலை வேண்டுமென்றே செய்யாமல் தவிர்ப்பது, செயல் தவிர்க்கை எனப்படும். இது சட்டத்தால் தண்டிக்கப்படக் கூடியதாக அமையும்பட்சத்தில், குற்றச் செயல் (Actus reus) ஆகின்றது. அச்செயல் வேண்டுமென்றே விருப்பப்பூர்வமாக தவிர்க்கப்பட்டிருக்க வேண்டும். சுருங்கக்கூறின், குற்ற மனதுடன் ஒரு செயலைச் செய்யாமல் தவிர்த்தலும், குற்றமேயாகும். இதனைப் பின்வரும் வழக்குகள் விளக்கும்.

Gibbins and Proctor[1] - இவ்வழக்கில், ஒரு குழந்தையின் பெற்றோர்கள், அக்குழந்தை இறந்துபோக வேண்டும் என்ற கருத்துடன், அதற்கு எவ்விதமான உணவினையும் கொடுக்காமல், பட்டினி போட வைத்தனர். அக்குழந்தையும் இறந்து போயிற்று. குழந்தைக்கு உணவீட்டல் என்பது பெற்றோர் ஒவ்வொருவரின் சட்டப்படியான கடமையாகும். இவ்வழக்கில் குழந்தைக்கு உணவீட்டல் எனும் செயலை, குற்ற மனதுடன் வேண்டுமென்றே அதன் பெற்றோர்கள் தவிர்த்திருப்பதால், அவர்கள் கொலைக் குற்றத்திற்கு பொறுப்பாவார்கள்.

Common Wealth v. Cali[2] - இந்த அமெரிக்க வழக்கில், ஒருவன் தன் கட்டிடம் தீப்பற்றி எரிந்தபொழுது அவன் அதை அணைக்க முற்படாமல் திட்டமிட்டே அமைதியாக இருந்தான். ஏனெனில், தன் கட்டிடம் முழுமையாக எரிந்து போனால் காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து ஒரு கணிசமான தொகையைப் பெறலாம் என்ற குற்ற மனதுடன் இருந்தான். ஆகவே செய்ய வேண்டிய செயலான தீயை அணைக்க முற்படுவதைத் தவிர்த்தது குற்றமாகும் எனக்கூறி அவன் தண்டிக்கப்பட்டான்.

முடிவுரை:

மேற்கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்தும், தீர்மானிக்கப்பட்ட பல வழக்குகளிலிருந்தும், குற்ற மனமில்லாச் செயல் குற்றமாவதில்லை என்பது

1. 1918 13 Cr. App. Rep. 134
2. 1923, 247 Mass. 20

தெளிவாகக் புரியவரும். அதாவது ஒரு செயலினை குற்றம் என்று கூற குற்ற மனமும் தேவை. அதை அடிப்படையாகக் கொண்ட குற்றச் செயலும் தேவை என்பது உள்ளங்கை நெல்லிக்கனி போல தெரியும்.

(இ) இயற்றப்பட்ட சட்டக் குற்றங்களில் குற்ற மனம் (Mens rea in Statutory Offences)

3. How far mens rea is required for statutory offences? Refer to decided cases. (செய்சட்ட குற்றங்களுக்கு எந்த அளவு குற்ற மனம் தேவை? முடிவு செய்யப்பட்ட வழக்குகளை மேற்கோள் காட்டுக.)

(அல்லது)

Discuss the issue of mens rea in statutory offences by referring the decided cases. (முடிவு செய்யப்பட்ட வழக்குகளைக் கொண்டு இயற்றப்பட்ட சட்டக் குற்றங்களில் குற்ற மன வாத அடிப்படையை விவாதிக்க.)

(அல்லது)

Explain the Doctrine of mens rea. Elucidate the application of mens rea in statutory offences with reference to both Indian and English case laws. (குற்ற மனக் கோட்பாட்டை விளக்குக. இந்திய மற்றும் ஆங்கில வழக்குகளைச் சுட்டிக்காட்டி இயற்றப்பட்ட சட்டக் குற்றங்களில் குற்ற மனதின் பொருத்தத்தை விளக்குக.)

(அல்லது)

State the facts of R v. Prince and explain its principle. (அரச-எதிர்-பிரின்ஸ் வழக்கின் பொருண்மைகளைக் கூறி, அதன் விதியை விளக்கவும்.)

(அல்லது)

Discuss R v. Tolson. (அரசு - எதிர் - டால்சன் வழக்கினை விவாதிக்கவும்.)

விவாத தொடக்கம்:

பொதுவாக ஒருவரைக் குற்றவாளி என்று தீர்மானிப்பதற்கு முன், அவர் குற்ற மனதுடன் அக்குற்றச் செயலைச் செய்தாரா என்று கவனித்தல் அவசியம். ஆனால் இயற்றப்பட்ட சட்டங்களில் (Statutes) சில நேர்வுகளில், எச்செயல்கள் குற்றமாகும் என்று தெளிவாக வரையறுத்துக் கூறப் பட்டிருக்கும். அங்கு குறிப்பிட்ட குற்ற மனம் குறித்த வகைமுறைகள் ஏதுமிருக்காது. மேலும், அச்சட்டப் பிரிவு ஒரு முழுமையான குற்றப் பொறுப்பை (absolute liability) சுமத்தக் கூடியதாக இருக்கும். இம்மாதிரியான சட்டக் குற்றங்களில் (Statutory Offences) குற்ற மனதை கவனிக்க வேண்டிய அவசியமில்லை. அதாவது குற்றவாளியின் குற்ற மனத்தினைக் (Mens rea) கருத்தில் கொள்ளாமல், அவன் செய்த குற்றச்

செயலை (Actus reas) மட்டுமே கருத்தில் கொண்டு அவனைத் தண்டிக்கலாம். **இது குற்ற மனக் கோட்பாட்டிற்கு விதிவிலக்காகும்.** பின்வரும் முடிவு செய்யப்பட்ட மிக முக்கியமான வழக்குகள் இதனை மேலும் தெளிவாக்கும்.

ஆங்கில வழக்குகள் (English Case Laws):

R. v. Prince[1]

இயற்றப்பட்ட சட்டம் கூறுவதாவது: நபர்களுக்கெதிரான குற்றங்கள் பற்றிய சட்டம் பிரிவு 55-ன்படி (Sec. 55 of the offences against the Persons Act, 1861) "பதினாறு வயதிற்குட்பட்ட ஒரு திருமணமாகாத பெண்ணை அவளுடைய தாய் தந்தையரின் விருப்பத்திற்கு மாறாக, அவளை சட்டத்திற்கு புறம்பாகக் கூட்டிச் சென்றால், அது தவறான நடத்தை (misdemeanour) குற்றமாகும்."

இவ்வழக்கின் பொருண்மைகள் (Facts of the Case): ஹென்றி பிரின்ஸ் என்பவர் 16 வயதிற்குட்பட்ட ஒரு திருமணமாகாத பெண்ணை அவருடைய பெற்றோர்களின் இசைவு இல்லாமல், அவளுக்கு வயது 18 என்று நம்பி கடத்திச் சென்றான். (அவளுடைய வயது பதினான்கே ஆயினும் பதினாறு வயதைத் தாண்டியவள் போல் தோற்றமளிப்பாள்). இங்கு அவள் தனது வயதை 18 என்று ஹென்றி பிரின்ஸிடம் சொன்னாள். இதனை ஹென்றி பிரின்ஸ் நம்பிவிட்டான். எனவே மேற்கண்டவாறு நம்பியதின் அடிப்படையில் செயல்பட்டதால், தாம் குற்றமற்றவனென்றும் தனக்கு குற்ற மனமில்லை என்றும் ஹென்றி பிரின்ஸ் வாதிட்டான். மேற்கூறிய இயற்றப்பட்ட சட்ட வாசகத்தின்படி தண்டிக்கப்பட்டான். இங்கு குற்ற மனதை பார்க்க வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் இது ஒரு சட்டப்படியான குற்றமாகும் (Statutory Offence) என்று நீதிமன்றம் பெரும்பான்மைத் தீர்ப்பளித்தது.

இவ்வழக்கில் விளைந்த விதி (Principle of the Case): இவ்வழக்கில் தவறான நடத்தைக் குற்றம் பற்றி, மேற்கண்ட இயற்றப்பட்ட சட்டமானது, (நபர்களுக்கெதிரான குற்றம் பற்றிய சட்டம், பிரிவு 55) தெளிவாக வரையறுத்துக் கூறியுள்ளது. ஆகவே, இக்குற்றத்தினைப் புரிந்த குற்றவாளியின் குற்ற மனத்தினை (Mens rea) கவனிக்க வேண்டிய அவசியமில்லை. அவன் செய்த குற்றச் செயல் ஒன்றைக் கொண்டே அவனைத் தண்டித்துவிடலாம். இதன்படியே பிரின்ஸ் தண்டிக்கப்பட்டான்.

R. v. Bishop[2]

பித்தர்களை (Lunatics) தக்க உரிமம் பெறாமல் ஒரு வீட்டில் வைத்திருப்பது குற்றம் என்று இயற்றப்பட்ட சட்டம் ஒன்று கூறுகிறது. இவ்வழக்கில், ஒரு நபர் தக்க உரிமம் (Licence) பெறாமல், ஒரு வீட்டில்

1. 1875 2 C.C.R. 154, England case
2. S.Q.B.D., 259

பித்தர்களை வைத்திருந்தார். இதற்காக அவர் மீது வழக்கு தொடுக்கப்பட்ட பொழுது, மேற்படியானவர்கள் பித்தர்கள் அல்லர் என்று தாம் சர்வ நிச்சயமாக நம்புவதாகவும், அதற்கு தகுந்த காரணங்கள் உள்ளன என்றும் அவர் வாதாடினார். ஆனால் அவருடைய வாதத்தினை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டு அவருக்கு தண்டனை வழங்கியது. இங்கு நீதிமன்றம் குற்றவாளியின் குற்ற மனதைப் பற்றி கருத்தில் கொள்ளவில்லை. செயல் ஒன்றையே குற்றமாகக் கொண்டது.

R. v. Mrs. Tolson[1]

இயற்றப்பட்ட சட்டம் கூறுவதாவது: நபர்களுக்கெதிரான குற்றங்கள் பற்றிய சட்டம் பிரிவு 57-ன்படி (Section 57 of the Offences against the persons Act 1861) "கணவனோ அல்லது மனைவியோ உள்ள பொழுது யாரேனும் ஒருவர், வேறு யாரேனும் ஒரு நபரை இரண்டாவதாக மணம் புரிந்து கொண்டால் அது பெருங்குற்றமாகும் (Felony). இது தவிர, கணவனோ அல்லது மனைவியோ தொடர்ந்து ஏழு வருட காலத்திற்கு காணாமல் போய்விட்டால் மற்றும் அந்நபர் வாழ்ந்து கொண்டிருப்பதாக அறியப்படாத பட்சத்தில் யாரேனும் இரண்டாவது மணம் புரிந்தால் அது குற்றமாகாது அல்லது முதல் திருமணம் சட்ட முறைப்படி ரத்து செய்யப்பட்டிருந்தால், அதன் பின் நடைபெற்ற இரண்டாவது திருமணத்தை இப்பிரிவு கட்டுப்படுத்தாது".

இவ்வழக்கின் பொருண்மைகள் (Facts of the Case): இவ்வழக்கில் திருமதி டால்சன் A என்பவரை 1880-ல் மணம் புரிந்தார். 1881-ல் A அமெரிக்கா செல்லும் போது கடலில் மூழ்கிவிட்டதாகத் தகவல் தெரிய வந்தது. அதன் பின் 1887-ல் திருமதி டால்சன் மற்றொருவரைத் தன் கணவனாக மணம் புரிந்து கொண்டார். ஆனால் எதிர்பார்த்தது போல் A இறந்திருக்கவில்லை. அவர் திரும்பி வந்து குற்றவாளியாகிய தன் மனைவியின் மீது இருமணக் குற்றத்திற்கான (Bigamy) வழக்குத் தொடர்ந்தார்.

வழக்கின் முடிவு: மேற்படி வழக்கில் விசாரணை ஆரம்பமானது. இறுதியில் தீர்ப்பும் கொடுக்கப்பட்டது. ஆனால் அத்தீர்ப்பு ஒரு மாறுபட்ட தீர்ப்பாக அமைந்தது.

பொதுவாக, குற்றமொன்றிற்காக, ஒரு குற்றவாளியை தண்டிக்கும் முன்னர், அவருக்கு குற்ற மனம் (Mens rea) இருந்ததா என்று பார்க்க வேண்டியது அவசியம். ஆனால் அதுவே சட்டப்படியான குற்றமாக (statutory offence) இருந்துவிட்டால், அங்கு குற்ற மனதினைப் பார்க்க வேண்டிய அவசியமில்லை. அவன் செய்த குற்றச் செயலைக் கொண்டே அவனைத் தண்டிக்கலாம் என முன்னர் கண்டோம். இதனைக் கொண்டு குற்ற மனக் கோட்பாட்டினை மிகவும் கடுமையான ஒன்று எனக் கருதிவிடக்கூடாது. அது வளைந்து கொடுக்கும் இயல்புடையது. சுருங்கக்கூறின், அது நெகிழக்கூடியதாகும்.

1. (1889) 23 Q.B.D. 168

மேற்படி வழக்கில் திருமதி டால்சன் தன் முதல் கணவர் கடலில் மூழ்கி இறந்து விட்டார் என்று திடமாக நம்பினார். மேலும் மேற்படி இயற்றப் பட்ட சட்டத்தின்படி தன் கணவர் காணாமல் போன காலத்திலிருந்து ஏழாண்டுகள் கழித்தே அவர், மறுமணம் செய்து கொண்டுள்ளார். இவ்வழக்கின் சூழ்நிலைகளைக் கருத்தில் கொண்டு ஆராயும்பொழுது திருமதி டால்சனுக்கு தாம் குற்றம் செய்கிறோம் என்ற எண்ணமே இல்லாதது புலப்படும். ஏனெனில், தன் கணவர் காணாமல் போனதிலிருந்து ஏழாண்டுகள் வரை திரும்பி வராததால், அவர் நிச்சயமாக இறந்து போயிருப்பார் என்று, திருமதி டால்சன் நல்லெண்ணத்தின் அடிப்படையில் நம்பியதே (bonafide belief) அதற்குக் காரணமாகும். மேலும் அவர் இறந்துவிட்டார் என்ற பொருண்மைத் தவற்றின் (mistake of fact) அடிப்படையில் செயல்பட்டுள்ளார். **(பொருண்மைத் தவற்றின் அடிப்படையில் செய்யப்பட்ட செயலை சட்டம் குற்றமாக கொள்வதில்லை.)**

ஆகவே, திருமதி டால்சனுக்கு குற்ற மனம் இருந்ததா என ஆராய வேண்டிய அவசியமில்லை. மேலும் அவர் நன்னம்பிக்கையின் அடிப் படையில் செய்த செயல் குற்றச் செயலும் அல்ல. இதனால் திருமதி டால்சனின் இரண்டாம் திருமணம் செல்லும் எனக்கூறி நீதிமன்றம் அவரை விடுதலை செய்தது.

இந்திய வழக்குகள் (Indian Case Laws):

State of Maharashtra v. M.H.George[1]

இயற்றப்பட்ட சட்டமும் வழக்கின் பொருண்மைகளும்: சூரிச் என்ற இடத்திலிருந்து மணிலா எனுமிடத்திற்கு விமானத்தில் குற்றவாளி பயணம் செய்து கொண்டிருந்தார். செல்லுகின்ற வழியில், பம்பாய் விமான நிலையத்தில் விமானம் நிறுத்தி வைக்கப்பட்டிருந்தது. அப்பொழுது குற்றவாளி 34 கிராம் தங்கக்கட்டிகளை வைத்திருப்பது கண்டுபிடிக்கப் பட்டது. தங்கத்தை இந்தியாவினுள் அனுமதியின்றி கொண்டு வந்ததற்காக, அந்நியச் செலாவணிச் சட்டத்தின் பிரிவுகள் 24 (1), 23 (1) (A), 8 (1) ஆகியவற்றை மீறியதற்காகக் குற்றவாளி கைது செய்யப்பட்டார். குற்றவாளி 27-11-1962-ல் சூரிச்சிலிருந்து புறப்பட்டார். இந்தியாவில், இந்திய ரிசர்வ் வங்கி மேற்படி பிரிவு 8 (1)-ன் கீழ் முந்தய அரசு அறிவிக்கையை மாற்றி, மாற்றியமைக்கப்பட்ட அறிக்கை (Modified Notification) ஒன்றை வெளியிட்டது. அதன்படி, இந்தியாவிற்குள் அனுமதியின்றி எந்த விதத்திலும் தங்கம் கொண்டுவரக்கூடாது. மேற்படி அறிக்கை 8-11-1962-ஆம் தேதியில் வெளியிடப்பட்டது. எனவே, இவ்வறிக்கை குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்றும், எனவே, தான் அதை 'தெரிந்தே' (knowingly) மீறவில்லை என்றும் குற்றவாளி வாதிட்டான். ஆனால் மேல்முறையீட்டில், இவ்வாதத்தை பெரும்பான்மை நீதிபதிகள் ஏற்றுக்கொள்ளவில்லை. அவனைக் குற்றவாளி என்றே தீர்மானித்தனர்.

1. A.I.R. 1965 S.C. 722 : 1965 (1) Cri. L.J. 19

வழக்கில் விளைந்த கொள்கை: கடத்தலை ஒழிக்க வேண்டும் என்ற நோக்கில் கடினமான சட்டப் பிரிவுகளைக் கொண்டு இயற்றப்பட்டது, அந்நியச் செலாவணிச் சட்டமாகும். எனவே இங்கு குற்ற மனதைக் கவனிக்கத் தேவையில்லை. பிரிவு 8 (1) மற்றும் பிரிவு 24 (1)-ன் வாசகங்களை ஒன்று சேர படிக்கும் பொழுது, தன்னிச்சையாக ஒருவர் தங்கத்தை கடத்தி வந்தாரா என்று பார்க்க வேண்டுமே தவிர, அதற்கு அப்பால் சென்று அவருடைய மனநிலையை ஆராய்ந்து அது பிரிவு 23 (1) (A)-ன் கீழ் குற்றந்தானா என்ற முடிவுக்கு வரவேண்டும் என்ற அவசியமில்லை. எனவே, குற்றவாளி, மேற்படி சட்டப் பிரிவுகளை தெரிந்தே மீறினானா அல்லது தெரியாமல் மீறினானா என்பது குறித்து விவாதிக்க வேண்டிய அவசியமில்லை. அவனைத் தண்டிக்க அவனது செயல் ஒன்றே போதும், எனப்பட்டது.

Inder Sain v. State of Punjab[1]

இவ்வழக்கில் இந்தர் செயின் என்பவருக்கு, ஆப்பிள்கள் அடங்கிய பார்சல் ஒன்று ரயில் நிலையத்தில் வந்திருந்தது. அதை அவர் அங்கிருந்து பெற்றுக் கொண்டு, எடுத்துச் செல்கையில் வழியில் காவல் அதிகாரிகளால் மடக்கப்பட்டார். அவர்கள் அப்பார்சலை சோதனையிட்ட பொழுது, அதில் ஆப்பிள்களுடன் 'அபின்' (Opium) எனப்படும் போதை வஸ்துவும் இருந்தது கண்டறியப்பட்டது. 1878-ஆம் ஆண்டின் அபின் சட்டத்தின் (The Opium Act, 1878) பிரிவுகள் 9 மற்றும் 10-ன்படி, அபின் வைத்திருக்கும் எவரொருவருக்கும், மூன்று ஆண்டு சிறைத் தண்டனையும், அபராதமும் விதிக்கப்படும். இதனடிப்படையில், இந்தர் செயின் கைது செய்யப்பட்டார். ஆனால், அவரோ அப்பார்சலில் அபின் இருந்த விபரம் குறித்து தனக்கு எதுவும் தெரியாது என்று எதிர்வாதம் புரிந்தார். ஆனால், நீதிமன்றம் இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அபினுடன் எம்முறையில் ஒருவர் சம்பந்தப் பட்டிருந்தாலும், அவர் பிரிவு 9-ன் கீழான குற்றத்தைப் புரிந்தவராகவே அனுமானிக்கப்படுவார் என்றும், இதிலிருந்து விடுபட அவர் தமக்குத் தெரியாமலேயே அபின் தம் வசம் வந்துவிட்டதாக தெளிவாக மெய்ப்பிக்க வேண்டும் என்று மேற்படி சட்டத்தின் 13வது பிரிவு கூறுகிறது. ஆனால் இந்தர் செயின், தமக்குத் தெரியாமலேயே அபின் அப்பார்சலில் வந்துள்ளது என்பதை தெளிவாக மெய்ப்பிக்கத் தவறிவிட்டார் என்று அவருக்கு கீழ் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தண்டனை உச்ச நீதிமன்றத்தால் ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

இயற்றப்பட்ட சட்டக் குற்றங்களில் குற்ற மனம் குறித்த சில மாறுபட்ட தீர்ப்புகள்:

"குற்ற மனமில்லாச் செயல் குற்றமாவதில்லை". இயற்றப்பட்ட சட்டங்கள், குற்ற மனதைக் காண வேண்டியதில்லை; குற்றச் செயல் ஒன்றைக்

1. 1973 2 S.C.C. 372

கொண்டே தண்டிக்கலாம் என்று கூறியிருப்பின், அங்கு குற்றச் செயல் புரிந்தவருக்கு குற்ற மனம் இருந்ததா இல்லையா என்பதை பார்க்க வேண்டியதில்லை. இதற்கு எடுத்துக்காட்டாக நாம் சில ஆங்கில மற்றும் இந்திய வழக்குகளைக் கண்டோம். எனினும், இயற்றப்பட்ட சட்டத்தின் படியிலான குற்றங்களில், குற்றஞ்சாட்டப்பட்டவர் குற்ற மனம் கொண்டிருந்தாரா இல்லையா என்பதை அறவே பார்க்க வேண்டியதில்லை என்ற கருத்தை நீதிமன்றங்கள் ஒத்துக்கொள்வதில்லை. இது பல வழக்குகளில் ஒரு சிக்கலான பிரச்சனையாகவே இருந்துள்ளது. **R. v. Mrs. Tolson** வழக்கிலும் இத்தகு சிக்கலொன்று வந்ததையும், அதை நீதிமன்றம் சமயோசிதமாக ஆராய்ந்து தீர்ப்பு வழங்கியதையும் நாம் முன் சென்ற பத்தியில் கண்டோம். எனவே, அப்படிப்பட்ட சமயங்களில் குற்ற மனதை எந்த அளவிற்கு பார்க்க வேண்டும் என்பதற்கு பல ஆங்கில மற்றும் இந்திய வழக்குகளில் தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. அவற்றிலெல்லாம் இயற்றப்பட்ட சட்டங்களின்படி அமைந்த குற்றச் செயலிலும், குற்ற மனம் இல்லையென்ற காரணத்தினால் குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு விடுதலைத் தீர்ப்பு வழங்கப் பட்டது. இது ஒரு மாறுபட்ட நிலையை எடுத்துக்காட்டுகிறது. அவ்வழக்குகள் வருமாறு,-

சில ஆங்கில வழக்குகள்:

Sweet v. Parsley[1] - இவ்வழக்கில் S எனும் பெண்மணிக்கு அபாயகரமான மருந்துகள் சட்டத்தின், 5(b) பிரிவின்படி [Sec. 5(b) of Dangerous Drugs Act, 1965] கஞ்சா புகைப்பதற்காக இருப்பிடம் ஒன்றினைப் பயன்படுத்தியதற்காக தண்டனை வழங்கப்பட்டது. இதை எதிர்த்து அப்பெண்மணி மேல்முறையீடு செய்தாள். அதில், அவள், தான் ஆக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தில் பணிபுரிந்து கொண்டிருந்த காரணத்தால், தான் தங்கியிருந்த அறைகளை வேறு சிலருக்கு உள்வாடகைக்கு (sublet) விட்டிருந்ததாகவும், அங்ஙனம் தங்கியிருந்தவர்கள்தாம், தடை செய்யப்பட்ட மேற்படி செயலை செய்துள்ளனர் எனவும் குறிப்பிட்டிருந்தாள். வழக்கின் மேல்முறையீட்டை விசாரித்த நீதிப்பெருமகனார்கள் அவை, அப் பெண்மணிக்கு தன்னுடைய இருப்பிடம் கஞ்சா புகைப்பதற்காக பயன் படுகிறது என்பது தெரியாமல் இருந்த காரணத்தால், அவளுக்கு குற்ற மனம் (Mens rea) ஏதுமில்லை என்று கூறி, அவளை விடுதலை செய்தது.

Pharmaceutical Society of Great Britain v. Storkwain Ltd.[2] -

சில மருந்துகளை மருத்துவர்களின் மருந்துச் சீட்டு (Prescription) இல்லாமல் கொடுக்கக் கூடாது அல்லது விற்கக் கூடாது என ஒரு சட்டம் தடை விதித்திருந்தது. இவ்வழக்கில், பிரதிவாதி, தன்னிடம் வந்த ஒரு போலி யான மருந்துச் சீட்டின்படி, தடை விதிக்கப்பட்ட அம்மருந்துகளை நல்லெண்ணத்துடன் விற்றுவிட்டார். இவ்வழக்கினை விசாரித்த நீதிபதி,

1. 1969 2 W.L.R. 470 : 1969 1 All. E.R. 347
2. 1986 2 All. E.R. 635

பிரதிவாதி குற்ற மனதுடன் (Mens rea) செயல்படவில்லையெனக் கூறி அவரை விடுதலை செய்தார்.

Sherraz v. De Rutzen[1]

இயற்றப்பட்ட சட்டம் கூறுவதாவது: 1872-ஆம் ஆண்டு உரிமமாக்குதல் சட்டத்தின் பிரிவு 16-ஆனது [Section 16 of the Licensing Act, 1872], காவல் கடமையில் உள்ள காவலருக்கு மதுவகைகளை வெகுமதியாகக் கொடுக்கவோ விற்கவோ செய்தால், அப்படிச் செய்பவருக்கு அபராதம் விதிக்கப்படும் என்று கூறுகிறது.

வழக்கின் பொருண்மைகள் (Facts of the Case): ஷெராஸ் என்பவம் உரிமம் பெற்று மதுக்கடை ஒன்றை நடத்தி வந்தார். ஷெராஸ் கடையில் இருந்த சமயம், அவருடைய மகள் காவற் கடமையில் இருந்த காவலர் ஒருவருக்கு மது வழங்கினாள். அவ்விதம் மது வழங்கியபொழுது அவர் காவற் கடமையில் இருக்கிறாரா என்று அவள் அவரிடம் கேட்கவில்லை. ஏனெனில், காவலர்கள் உரிய உடையணிந்திருந்த போதிலும், அவர்கள் தங்கள் கையணியைக் (armlet) கழற்றியிருந்தால், அவர்கள் காவற் பணியில் இல்லையென்று புரிந்து கொண்டு, அவர்களுக்கு மது வழங்குவது அங்குள்ள வழக்கம். மேற்படி காவலர், அக்கடையின் வாடிக்கையாளர்களில் ஒருவர். பொதுவாகப் பணியில் ஈடுபட்டிருப்பவர் அணிந்திருக்கும் கையணியைக் கழற்றிவிட்டு, அக்காவலர் கடையினுள் நுழைந்ததால், அவர் பணி முடிந்து வீடு திரும்புகிறார் என்று நினைத்து, அவருக்கு ஷெராஸின் மகள் மது வழங்கினாள். இதற்காக ஷெராஸ் குற்றஞ்சாட்டப்பட்டார். பிரிவு 16(2)-ன்படி, ஷெராஸ் குற்றவாளி என்று கீழ் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. ஆனால் மேல்முறையீட்டில் ஷெராஸ் குற்றவாளி இல்லை என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

வழக்கில் விளைந்த கொள்கை: அனைத்துக் குற்றங்களுக்கும் குற்ற மனம் வேண்டும் எனும் பொதுவிதியிலிருந்து, பின்வரும் மூவகை குற்றங்களில் குற்ற மனதைப் பார்க்கத் தேவையில்லை என்று மேற்படி வழக்கில் கூறப்பட்டது. அவை,-

(1) குற்றவியல் சட்ட வரையறைப்படி, உண்மையில் ஒன்றைக் குற்றம் என்று கொள்ள முடியாதெனினும், பொதுநலனைக் கருதி சட்டத்தால் அபராதம் விதிக்கப்பட்டு தடை செய்யப்பட்டுள்ள செயல்கள். எடுத்துக் காட்டாக, கலப்படம் செய்யப்பட்டுள்ளது என்பதை அறியாமலேயே, கலப்படப் பொருட்களை தம்வசம் வைத்திருப்பவரும் குற்றவாளியாவார்.

(2) பொதுத் தொல்லைகள் (Public nuisances): எடுத்துக்காட்டாக, எஜமானனுக்கு தெரியாமல் அவரது பணியாள் ஒரு பொதுத் தொல்லை ஏற்படுத்தினால், அதற்கு எஜமானனும் பொறுப்பாவான். எஜமானன்

1. 1895 I Q.B. 918

அப்பொதுத் தொல்லையை விளைவிக்க குற்ற மனம் கொண்டிருந்தானா என்பதைப் பார்க்க வேண்டியதில்லை.

(3) நடவடிக்கையானது, அதன் வடிவத்தில் குற்றவியல் தன்மையைக் கொண்டிருந்தாலும், உண்மையில் ஒரு உரிமையியல் உரிமையை சுருக்க முறையில் வலியுறுத்திச் செயல்படுவதற்கான வழக்குகள். எடுத்துக்காட்டாக, வேடிக்கை மற்றும் விளையாட்டு உற்சாகத்தில், குற்ற மனமில்லாமல் அத்துமீறி நுழைந்தாலும், அது குற்றமே.

மேற்கண்ட மூவகைகளைத் தவிர மற்றவைகளில், குற்ற மனம் இருந்தது என்பது மெய்ப்பிக்கப்பட வேண்டும். மேற்கண்ட வழக்கில், ஷெராஸ் தாம் செய்வது ஒரு குற்றம் என்று தெரிந்தே செயல்பட்டார் என்பது மெய்ப்பிக்கப்படவில்லை. எனவே, ஷெராஸ் குற்றவாளி இல்லை என்று விடுதலை செய்யப்பட்டார்.

Cundy v. Lecoq[1]

இவ்வழக்கு மேற்படி ஷெராஸ் வழக்கிற்கு முன்பு எழுந்த வழக்காகும். இவ்வழக்கை ஷெராஸ் வழக்குடன் ஒப்பு நோக்கும் பொருட்டு இங்கு காண உள்ளோம். இவ்வழக்கில் மேற்படி 1872-ஆம் ஆண்டின் உரிமமாக்கும் சட்டத்தின் 13வது பிரிவின்படி, உரிமம் வழங்கப்பட்டவர் குடிபோதையில் இருப்பவர் எவருக்கேனும், போதை தரும் பொருளை விற்றால், தண்டனைக்குள்ளாக்கப்பட வேண்டும். இவ்வழக்கில் அவ்வாறு குடிபோதையில் உள்ளவருக்கு மது வழங்கியதற்காக கண்டி என்பவர் தண்டிக்கப்பட்டார். ஏனெனில், மேற்படி பிரிவு 13-ஆனது, குற்றத்திற்கான ஒரு முழுமையான பொறுப்புநிலையை (absolute liability) சுட்டிக்காட்டுகிறது. ஏற்கனவே, குடிபோதையில் உள்ள ஒருவரை எவரும் எளிதில் கண்டுகொள்ளலாம். எனவே, சம்பந்தப்பட்டவர் குடிபோதையில் இருந்தாரா, இல்லையா என்பது தனக்குத் தெரியாது என்ற கண்டியின் வாதத்தை நீதிமன்றம் நிராகரித்துவிட்டது.

சில இந்திய வழக்குகள்:

Srinivas Mall v. Emperor[2]

இயற்றப்பட்ட சட்டம் கூறுவதாவது: 1939-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட இந்திய பாதுகாப்புச் சட்டத்தின் கீழ்க் கூறப்பட்டுள்ள இந்தியப் பாதுகாப்பு விதிகளில், 11(2)-ஆவது விதியின்படி, உப்பு மற்றும் பொருட்களை விற்பனை செய்வதற்கான விலைக் கட்டுப்பாட்டு உத்திரவு (Order controlling the Prices) பிறப்பிக்கப்பட்டது. இச்சட்ட விதிகளை மீறுபவர்களுக்கு 81(4)-வது விதியின் கீழ் தண்டனை வழங்க வகை செய்யப்பட்டிருந்தது.

1. (1884) 13 Q.B.D. 207
2. A.I.R. 1947 P.C. 135

வழக்கின் பொருண்மைகள் (Facts of the Case): ஸ்ரீனிவாஸ் மால் (எ1[1]) என்பவர் தர்பாணா மாவட்டத்திற்கு உப்பு விற்பனை செய்யும் ஏஜெண்டாக நியமிக்கப்பட்டார். சீதாராம் பிரசாத் (எ2) அவருடைய வேலையாள் ஆவார். கட்டுப்பாட்டு விலையை மீறி உப்பு விற்றதற்காக மேற்படி இருவரும் (எ1 மற்றும் எ2) குற்றம் சாட்டப்பட்டனர். மேலும், அவ்விதம் விற்கத் தூண்டிய குற்றத்திற்காக கூடுதலாக மேற்படி ஸ்ரீனிவாஸ் மால் (எ1) குற்றம் சாட்டப்பட்டார்.

வழக்கின் முடிவு: மேற்படி தனது வேலையாள் சீதாராம் பிரசாத் (எ2) கட்டுப்பாட்டு விலையை மீறி உப்பு விற்றது தனக்குத் தெரியாது என்று ஸ்ரீனிவாஸ் மால் (எ1) வாதிட்டார். இதனை பாட்னா உயர் நீதிமன்றம் நிராகரித்து விட்டது. இங்கு குற்ற மனதை பார்க்க வேண்டியதில்லை எனக் கூறி, ஸ்ரீனிவாஸ் மாலுக்கு (எ1) தண்டனை விதித்தது. ஆனால் வழக்கு பிரிவி கவுன்சிலில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அங்கு குற்ற மனம் இல்லையென்றாலும் ஒருவரை அவரது குற்றச் செயலுக்காக தண்டிக்கலாம் என்று **Sherraz v. De Rutzen** வழக்கில் கூறப்பட்ட மூவகை விதிவிலக்கான குற்றங்களில் மேற்படி வழக்கு வரவில்லை; மேலும் ஸ்ரீனிவாஸ் மாலுக்கு (எ1) தெரிந்துதான் அவரது வேலையாள் சீதாராம் பிரசாத் (எ2) கட்டுப்பாட்டு விலையை மீறி உப்பை விற்றார் என்பது மெய்ப்பிக்கப்படவில்லை; எனவே, வேலையாள் செய்த குற்றத்திற்காக எஜமானை பொறுப்பாக்க முடியாது; ஸ்ரீனிவாஸ் மாலுக்கு (எ1) குற்ற மனம் ஏதுமில்லை என்று கூறி பிரிவி கவுன்சில் அவரை விடுதலை செய்தது.

Emperor v. Issac Solomon Macmull[2]

இயற்றப்பட்ட சட்டமும் வழக்கின் பொருண்மைகளும்: 1941-ஆம் ஆண்டு மோட்டார் வாகன எரிபொருள் பங்கீடு உத்திரவின் 52 (i) கூறின்படி, செல்லத்தக்க சீட்டுகளை (valid coupons) பெற்ற பின்தான், பெட்ரோல் வழங்க வேண்டும்; மீறுபவர்கள் தண்டிக்கப்படுவார்கள். இதில் பெட்ரோல் நிலைய உரிமையாளர் ஒருவரின் வேலையாள் வாடிக்கையாளர் எனும் போர்வையில் போலியாக வந்த ஒருவருக்கு அவரிடமிருந்து சீட்டுக்களை (Coupons) பெற்றுக் கொள்ளாமலேயே, நான்கு கேலன்கள் பெட்ரோலை வழங்கினார். இதனால் உரிமையாளர் மீது குற்ற வழக்கிடப்பட்டது. இங்கு உரிமையாளருக்கு குற்ற மனம் ஏதுமில்லை; வேலையாளின் குற்றச் செயலுக்கு உரிமையாளரை தண்டிக்க முடியாது என்று கூறி, அவ்வுரிமையாளரை பம்பாய் நீதிமன்றம் விடுதலை செய்தது.

மேற்படி வழக்கின் பொருண்மைகளை ஒத்த **Hariprasad Rao v.The State[3]** எனும் வழக்கிலும், மேற்படி வழக்கின் தீர்ப்பினைப் பின்பற்றி

1. எதிரி 1 - A1 (Accused No. 1)
2. A.I.R. 1948 Bom. 364
3. 1951 S.C.J. 296 : A.I.R. 1951 S.C. 204

பெட்ரோல் நிலைய உரிமையாளர் (எஜமானர்) விடுதலை செய்யப் பட்டார்.[1]

Nathulal v. State of Madhya Pradesh[2]

உணவு தானியங்களை விற்பதற்காக உரிமம் கோரி, அதற்குரிய விண்ணப்பத்தினை குற்றஞ்சாட்டப்பட்டவர் செய்திருந்தார். அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டதற்கான எந்தத் தகவலும் அவருக்கு கிடைக்கவில்லை. அவ்வப்போது உணவு தானியங்களை வாங்கி விற்பனை செய்து வந்ததோடு, அதற்குரிய கணக்கு வழக்குகளையும், உரிம அதிகாரிக்கு அவ்வப்போது அனுப்பி வைத்தார். உரிமம் இல்லாமல் உணவு தானியங்களை தேக்கி வைத்து வியாபாரம் செய்ததற்காக அவர் மீது 1955-ஆம் ஆண்டு அத்தியாவசிய பண்டங்கள் சட்டத்தின் 7வது பிரிவின்படி குற்றஞ் சாட்டப்பட்டது. உரிமம் தயாரித்து வைக்கப்பட்டிருந்த போதிலும் அது அதிகாரிகளால் அவருக்கு அனுப்பி வைக்கப்படவில்லை என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவர் செயல் பட்டிருந்ததாக வழக்கின் சாட்சியங்களிலிருந்து தெரியவந்தது. உச்ச நீதிமன்றத்தில், நீதிபதிகள் மூவரில் இருவர், மேற்படி குற்றஞ்சாட்டப் பட்டவருக்கு குற்ற மனமில்லையாதலால் அவர் குற்றவாளி அல்ல என்று தீர்ப்பளித்தனர்.

விவாத முடிவு:

குற்ற மனதில் பின்வரும் இரு தன்மைகள் உள்ளடங்கியிருக்கின்றன, என **நீதிபதி டெவ்லின்** கூறுகிறார். முதலாவது, ஒரு செயலைச் செய்ய வேண்டும் என்ற கருத்து, இரண்டாவது, செய்யும் செயல் குற்ற செயல் என்ற சூழ்நிலையைத் தெரிந்து செயல்படுதல். **R. v. Prince** வழக்கில் குற்றவாளி நல்லெண்ணத்தின் (good faith) அடிப்படையில் செயல்பட்டிருந்தாலும் அவன் இயற்றப்பட்ட சட்டத்தின்படி தண்டிக்கப்பட்டான். ஆனால் இந்நிலை **R. v. Mrs. Tolson** வழக்கிலிருந்து மாறத் தொடங்கியது. இயற்றப்பட்ட சட்ட குற்றங்களிலும் நல்லெண்ணம் கருத்தில் கொள்ளப் பட்டது. இக்கருத்து அதன்பின் வந்த பல வழக்குகளிலும் பின்பற்றப்பட்டது. நல்லெண்ணம் கருத்தில் கொள்ளப்பட காரணம் என்னவென்றால், குற்றங்கள் சந்தேகமற சில சமயங்களில் நிரூபிக்கப்படுவதில்லை. சந்தேகம் ஏற்படும் பட்சத்தில் குற்றஞ்சாட்டப்பட்டவரை குற்றப் பொறுப்புக்கு ஆளாக்குவதை விட குற்றத்திலிருந்து விடுவிப்பதே மேலானது. ஏனெனில் குற்றம் செய்யாத ஒரு நிரபராதியைத் தண்டிப்பதை விட நூறு குற்றவாளிகளை சந்தேகத்தின் பலனால் விடுதலை அளிப்பது மேலானது என்பது, குற்றவியலின் முக்கியக் கோட்பாடுகளில் ஒன்றாகும்.

---

1. எனினும் திறமையற்ற வேலையாட்களை வேலைக்கு வைத்திருந்த காரணத்தால், தண்டிக்கப்பட்டார்.
2. A.I.R 1966 S.C. 43

(ஈ) இந்திய தண்டனைச் சட்டத்தில் குற்ற மனமும் குற்றச் செயலும் (Mens rea and Actus reus in the Indian Penal Code)

4. Explain the Doctrine of mens rea. How are this mens rea Doctrine is applicable for offences under the Indian Penal Code? (குற்ற மனதின் கோட்பாட்டை விளக்குக. இந்த கோட்பாடு இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்கு எவ்வாறு பொருந்தும்?)

(அல்லது)

Indicate the terms which denote Mens rea in the Indian Penal Code. (இந்திய தண்டனைச் சட்டத்தில் 'மென்ஸ் ரியாவை' குறிப்பிட்டுக் காட்டும் சொற்கூறுகளைச் சுட்டிக்காட்டுக.)

(அல்லது)

Discuss in detail the meaning of atleast four words in the Indian Penal Code. Refer to appropriate sections in the Indian Penal Code. (இந்திய தண்டனைச் சட்டத்தில் குற்ற மனதைக் குறிக்கும் ஏதாவது நான்கு சொற்களின் அருஞ்சொற்பொருளை விரிவாக விவாதிக்க. இந்திய தண்டனைச் சட்டத்தின் தகுந்த பிரிவுகளைக் குறிப்பிடுக.)

குற்ற மனதின் கோட்பாடு (Doctrine of Mens rea):

[வினா எண் (2)-ல் காண்க]

இந்திய தண்டனைச் சட்டத்தில் குற்ற மனதினைக் குறிப்பிட்டுக் காட்டும் சொற்கூறுகள்:

'குற்ற மனம்' (Mens rea) என்ற பதமானது இந்திய தண்டனைச் சட்டத்தில் அப்படியே எடுத்தாளப்படவில்லை. ஆனால் அது கூறும் கருத்தானது, இந்திய தண்டனைச் சட்டத்தின் சில பிரிவுகளைத் தவிர, மற்ற அனைத்திற்கும் பொருந்தும் வண்ணம் உள்ளது. அரசிற்கு எதிராக போர் தொடுத்தல் **(பிரிவு 121)**, அரசுத் துரோகம் **(பிரிவு 124-A)**, ஆட்கவர்தல் மற்றும் ஆட்கடத்தல் **(பிரிவுகள் 359, 362)** கள்ள நாணயம் தயாரித்தல் **(பிரிவு 232)** ஆகிய குற்றங்களில் குற்ற மனம் தேவையில்லை. குற்றச் செயல் ஒன்றைக் கொண்டே தண்டிக்கலாம். இவை தவிர, குற்றம் புரிபவரின் குற்ற மனமானது (தீய மனநிலை) பின்வரும் சொற்கூறுகளால், இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளது. அவை,

1. கருத்துடன் (Intentionally):

ஒரு செயலின் விளைவை முன்னரே அறிந்து, அந்த விளைவை விரும்பி, அச்செயலைச் செய்தால், அது கருத்துடன் செய்யப்பட்டதாக பொருள்படும்.

எடுத்துக்காட்டாக, சட்ட விரோதமான கூட்டத்தில் கருத்துடன் சேருதல் **(பிரிவு 142),** ஒரு ஆவணத்தை அல்லது மின்னியக்க ஆவணத்தை[1] (Electronic record) முன்னிலைப்படுத்த கருத்துடன் தவிர்த்தல் **(பிரிவு 175),** அரசு ஊழியர் ஒருவரால் செய்யப்படும் ஒரு சொத்து விற்பனையை கருத்துடன் தடுத்தல் **(பிரிவு 184)** போன்ற பலவற்றை இந்திய தண்டனைச் சட்டத்தில் குறிப்பிடலாம்.

2. தன்னிச்சையாக (Voluntarily):

இந்திய தண்டனைச் சட்டத்தின் **39வது பிரிவு** இதற்கு வரையறை தருகிறது. ஒருவர் ஒரு செயலை செய்ய கருத்து கொண்டிருப்பதனாலோ அல்லது அச்செயலைப் புரிவதற்கான வழிகளைக் கையாளும் சமயத்தில் அவ்விளைவு ஏற்படும் என்று அறிந்திருந்தாலோ, அல்லது நம்புவதற்கு காரணம் கொண்டிருந்தாலோ, ஒரு விளைவை அவர் தன்னிச்சையாக உண்டாக்குகிறார் என்று கருதப்படும்.

எடுத்துக்காட்டு: A என்பவர், பெரிய நகரமொன்றில் இருக்கும், குடியிருக்கும் வீடு ஒன்றில் கொள்ளையடிப்பதற்கு வசதியாக அதற்கு இரவில் தீ வைக்கின்றார். இதனால் ஒருவன் இறந்து போய் விடுகிறான். இங்கு A-யின் கருத்து மரணம் விளைவிக்க வேண்டும் என்பதல்ல. மேலும் தன்னுடைய செயலினால் ஏற்பட்ட மரணத்திற்கு A வருத்தப்படுபவனுமல்ல. ஆனால், தன்னுடைய செயல் மரணத்தை விளைவிக்கும் என்று A அறிந்திருந்தால், அவன் அம்மரணத்தை தன்னிச்சையாக புரிந்துள்ளான் என்று பொருள்படும்.

3. மோசடியாக மற்றும் நேர்மையற்று (Fradulently and Dishonestly):

'நேர்மையற்று' (Dishonestly) என்ற பதத்திற்கு, இந்திய தண்டனைச் சட்டத்தின் **24வது பிரிவு** வரையறை தருகிறது. அதன்படி, "**தவறான ஆதாயம் (wrongful gain)** ஒருவர் பெற வேண்டும், அல்லது **தவறான நஷ்டம் (wrongful loss)** ஒருவருக்கு உண்டாக வேண்டும் என்ற கருத்துடன் யாரேனும் எதையாவது செய்தால், அவர் அதை நேர்மையற்று செய்வதாகச் சொல்லப்படுவார்". இவ்வகை குற்ற மனம், சொத்துகளுக்கு எதிரான குற்றங்களைக் குறிப்பிடும்பொழுது வருகிறதே தவிர நேர்மை, நாணயம் பற்றி இது குறிப்பிடவில்லை. **'தவறான ஆதாயம்'** என்பது ஒரு சொத்தைப் பெறுவதற்கு சட்டப்படி உரிமையில்லாத நபர் ஒருவர், அதை சட்ட முரணான வழியில் அடைதல். **(பிரிவு 23–ன் முதற்பத்தி).** அவ்வாறே **'தவறான நஷ்டம்'** என்பது ஒரு சொத்தைப் பெறுவதற்கு சட்டப்படி உரிமையுள்ள ஒரு நபரை, சட்ட முரணான வழியில் அதை அவர் இழக்குமாறு செய்வதன் மூலம் அவருக்கு நஷ்டம் விளைவித்தல். **(பிரிவு 23–ன் இரண்டாவது பத்தி).**

'மோசடியாக' (Fradulently) என்பதற்கு **பிரிவு 25** வரையறை

1. 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தால் இந்திய தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது.

தருகிறது. அதன்படி, "ஒருவர் ஒரு செயலை ஏமாற்றும் கருத்துடன் செய்தால், அதை அவர் மோசடியாக செய்துள்ளதாகச் சொல்லப்படுவார்"

ஏமாற்றுதல் என்பது சட்ட விரோதமானதாக இருக்க வேண்டும். எடுத்துக்காட்டாக, ஒரு கணவன் தன் மனைவிக்கு 50 ரூபாய் கூட ஆகாத ஒரு பொருள் 150 ரூபாய் மதிப்புடையது என பரிசாக கொடுக்கிறான். இங்கு ஏமாற்றுதல் நடைபெற்றிருந்தாலும், அது அம்மனைவிக்கு எவ்வித கெடுதலையும் விளைவித்திருக்க முடியாது. மாறாக அவள் தன் கணவன் தனக்கு பரிசளிப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவாள். மேற்படி எடுத்துக் காட்டில் ஏமாற்றுதல் என்பது சட்ட விரோதமாக நடைபெறவில்லை. ஆகவே கணவனுக்கு மோசடியான கருத்து கிடையாது.

ஒரு சொத்தினை மோசடியாக அகற்றுவது அல்லது மறைப்பது குற்றம் என **பிரிவு 206** கூறுகிறது. இங்கு மோசடியாக அகற்றுதல் என்பது, ஒரு நீதிமன்ற தீர்ப்பாணையின் நிறைவேற்றத்தில் (execution of a decree) ஒருவருடைய சொத்து ஜப்தி செய்யப்படுவதைத் தடுக்கும் கருத்துடன் அவர் செயல்படுதல் ஆகும். இதில் நீதிமன்றத்தை ஏமாற்ற வேண்டும் என்பது சட்ட விரோதமானதாகும். ஆகவே, மோசடியான கருத்து உள்ளது.

வேறு சில குற்ற மனநிலைகள்:

குற்ற மனத்தினை (Mens rea) குறிப்பிடும் வண்ணம் உள்ள வேறு சில சொற்கூறுகளை இந்திய தண்டனைச் சட்டம் பின்வருமாறு கூறுகிறது. **இழிந்த (corruptly)** - மனதின் கொடிய கருத்தினைக் குறிப்பிடுகிறது. **குரோதமான (Malignantly)** - அழிக்க வேண்டும் என்ற கீழான விருப்பத்தைக் குறிப்பிடுகிறது. இது **தீய எண்ணத்துடன் (Maliciously)** என்ற சொல்லுக்கு நிகரானது. **வேண்டுமென்றே (Wantonly)** - மற்றவர்களுடைய உரிமைகள் மற்றும் பாதுகாப்புகளைப் பற்றி சிந்திக்காமல் செயல்படுதல். **அஜாக்கிரதையான (rashly), கவனக் குறைவான (negligently)** போன்ற சொற்றொடர்களை முன்னரே கண்டுள்ளோம். **கவனமின்றி (heedlessly)** - விளைவுகளைப் பற்றி கருத்தில் கொள்ளாமல் ஒரு செயலைச் செய்தல்.

5. Distinguish between
Dishonestly and Fradulently.

வேறுபடுத்திக் காட்டுக.
நேர்மையின்மை மற்றும் மோசடி.

1. மோசடி என்பதில் **'ஏமாற்றுதல்' (deception)** என்பது கண்டிப்பாக இருக்க வேண்டும். நேர்மையின்மையில் அவ்வாறில்லை.

2. நேர்மையின்மையில் சொத்திற்கு எதிராக தீங்கு விளைவிக்கப் பட்டிருக்க வேண்டும். மோசடி என்பது சொத்து உள்பட எதற்கும் தீங்கு விளைவித்ததாக இருக்கலாம்.

3. நேர்மையற்ற செயலினால் ஒரு குறிப்பிட்ட தனிநபரின் சொத்திற்கு தீங்கு விளைவிக்கப்படுகிறது. மோசடிச் செயலினால் முன்பின் அறியாத நபரின் அல்லது யாரேனும் ஒருவரின் குறிப்பிட்டுக் கூற முடியாத எந்தவொரு சொத்திற்கும் தீங்கு விளைவிக்கப்படுகிறது.

4. நேர்மையின்மை குறித்து பிரிவு 24-ம், மோசடி குறித்து பிரிவு 25-ம் வரையறுக்கிறது.

6. Dishonestly - Write short notes. (நேர்மையின்மை - சிறு குறிப்பு வரைக.)

[வினா எண் (4)-ல் காண்க]

7. What is under the Indian Penal Code in an "act" and what is an "omission"? (இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் ஒரு 'செயல்' என்றால் என்ன? மற்றும் ஒரு 'செயல் தவிர்க்கை' என்றால் என்ன?)

(அல்லது)

"In some instances an omission will create criminal liability without any positive act". Elucidate this statement, giving references to the relevant provisions in the Indian Penal Code. ("சில சமயங்களில் எவ்வித நேர்ச் செயலும் இல்லாமல் ஒரு செயல் தவிர்க்கை குற்றப் பொறுப்பை உண்டாக்கிவிடும்". இக்கூற்றை இந்திய தண்டனைச் சட்டத்தின் தொடர்புடைய சட்ட வகைமுறைகளை சுட்டிக்காட்டி விளக்குக.)

முன்னுரை:

ஒரு குற்றச் செயலானது ஒரு செயலாகவோ (act) அல்லது செயல் தவிர்க்கையாகவோ (omission) இருக்கலாம் என முன்சென்ற பகுதிகளில் கண்டோம். செய்ய வேண்டிய ஒரு செயலை செய்யாது விடுத்தலும் ஒரு குற்றமே. தற்பொழுது செயல் (act), செயல் தவிர்க்கை (omission) மற்றும் சட்ட விரோதமான செயல் (illegal act) குறித்து இந்திய தண்டனைச் சட்டத்தின் வகைமுறைகளை பின்வருமாறு காண்போம்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் வகைமுறைகள்:

"இந்திய தண்டனைச் சட்டத்தின் ஒவ்வொரு பகுதியிலும், ஒரு செயல் (act) என்பது, முரண்பாடான கருத்து தோன்றாதவரை, சட்ட விரோதமான செயல் தவிர்க்கைகளையும் (illegal omission) உள்ளடக்கியதாகும்" என **பிரிவு 32** கூறுகிறது.

'செயல்' (act) என்ற பதமானது ஒரு தனிச் செயலைப் போன்று பல செயல்கள் கொண்ட (series of acts) தொகுதியையும் குறிப்பிடுகின்றது. **'செயல் தவிர்க்கை' (omission)** என்ற பதமானது, ஒரு தனிச் செயல் தவிர்க்கையைப் போன்று பல செயல் தவிர்க்கைகளைக் கொண்ட தொகுதியையும் குறிப்பிடுகின்றது, என **பிரிவு 33** கூறுகின்றது.

'சட்ட விரோதமான' (illegal) என்ற பதமானது, ஒரு குற்றமான எதற்கும், அல்லது சட்டத்தால் தடை விதிக்கப்பட்ட எதற்கும், அல்லது உரிமையியல் நடவடிக்கைக்கான (civil action) காரணம் ஒன்றினைத் தரக்கூடிய எதற்கும் பொருந்துவதாகும். ஒரு நபர் **'சட்டப்படி செய்யக் கடமைப்பட்டவர்' (legally bound to do)** எனச் சொல்லப்பட்டால், அவர் எவையெல்லாம் சட்ட விரோதமாக உள்ளதோ அவற்றையெல்லாம் தவிர்க்க வேண்டியவராவார், என **பிரிவு 43** கூறுகிறது.

எடுத்துக்காட்டுகள்:

(1) ஒரு ஜெயில் வார்டன் தன்னுடைய கட்டுப்பாட்டின் கீழ் உள்ள கைதிகளை கவனமுடன் பராமரித்து வர சட்டப்படி கடமைப்பட்டவராவார். இவர் கைதி எவருக்கேனும் உணவளிக்காமல் பட்டினியால் மரணம் ஏற்படுவதற்கு வழிவகுத்தால், இச்சட்டத்தின்படி, 'செயல் தவிர்க்கைக்காக' தண்டிக்கப்படுவார்.

(2) நோயாளி ஒருவருக்கு சிகிச்சை அளிப்பதற்காக பொறுப்பேற்றுக் கொண்ட மருத்துவர் ஒருவர், அவருக்கு தக்க சிகிச்சை அளிக்காவிட்டால், அவர் செயல் தவிர்க்கைக்காக தண்டிக்கப்படுவார்.

(3) ஒரு இரயில் நிலைய அதிகாரி ரயில் வருவது குறித்து அபாய சமிக்ஞை செய்யாமல் விட்டுவிட்டார். இதனால் ஏற்பட்ட விபத்தில் ஒரு ஆணும் பெண்ணும் மரணமடைந்தனர். மேற்படி அதிகாரி அவர்களை கொலை செய்த குற்றத்திற்குள்ளாவார்.

குற்றப் பொறுப்பும், சட்டப்படியான கடமையும்:

குற்றப் பொறுப்பானது 'சட்டப்படியான கடமை' **(legal duty)** ஒன்றை செய்யாதிருக்கும் பொழுதுதான் ஏற்படுகின்றது. உதாரணமாக ஒரு குழந்தைக்கு உணவளிக்கப்படாமல் அது புறக்கணிக்கப்படுகிறது என்றால், அதன் தாய் தந்தையர் உள்பட நாட்டில் உள்ள அனைவருமே அதனைப் புறக்கணித்துவிட்டதாகப் பொருளாகும். ஆனால் குழந்தைக்கு உணவீட்டல் எனும் கடமை அதன் பெற்றோர்களைப் பொறுத்தவரை சட்டப்படியான கடமையாகும் (legal duty); உலகில் உள்ள மற்றவர்களைப் பொறுத்தவரை, அது தார்மீக அடிப்படையிலான கடமையாகும் (moral duty). சட்டப் படியான கடமையான உணவளித்தல் என்ற அச்செயலை செய்யாதிருந்த அக்குழந்தையின் பெற்றோர்களைத்தாம் சட்டம் தண்டிக்குமேயொழிய, மற்றவர்களைத் தண்டிக்க முடியாது.

R. v. Nicholls[1] என்ற வழக்கில் வயதான பெண்மணி ஒருத்தி, தன் சிறுவயது பேரனுக்கு சரியான உணவு கொடுக்காமல், அவனுக்கு மரணம் உண்டாக்கினாள். அப்பெண்ணிற்கு மரணம் விளைவிக்கும் குற்றத்திற்காக (Manslaughter) தண்டனை வழங்கப்பட்டது.

1. 13 Cox. C.C. 75

இந்திய தண்டனைச் சட்டம் தண்டிக்கும் செயல் தவிர்க்கைகள்:

இதைச் செய்தால் குற்றம், அதைச் செய்தால் குற்றம் என்று கூறும் இந்திய தண்டனைச் சட்டம் சில செயல் தவிர்க்கைகளையும் குற்றம் என்று கூறுகிறது. அவை பின்வருமாறு.

1. ஆவணத்தை அல்லது மின்னியக்க ஆவணத்தை (electronic document) சட்டப்படி பொது ஊழியருக்கு கொண்டு வந்து தரக் கடமைப்பட்டவர், அதைக் கொண்டு வந்து தராது விடுத்தல். **(பிரிவு 175)**

2. ஒரு பொது ஊழியருக்கு அறிவிப்பு அல்லது தகவல் தருவதற்கு சட்டப்படி கடமைப்பட்டவர், அதைத் தராமல் விடுத்தல். **(பிரிவு 176)**

3. ஒரு பொது ஊழியருக்கு உதவி செய்ய சட்டப்படி கடமைப் பட்டவர், அவ்வாறு செய்யாமல் விடுத்தல். **(பிரிவு 187)**

4. கைது செய்யக் கடமை கொண்டுள்ள பொது ஊழியர் ஒருவர் குற்றவாளி ஒருவரை கைது செய்யாது விடுதல். **(பிரிவுகள் 221 மற்றும் 222)**

(உ) குற்றத்தில் பகரப் பொறுப்பும் கடும் பொறுப்பும் (Vicarious Liability and Strict Liability in Crime)

8. State the offences in the Indian Penal Code which are made punishable without Mens rea. (இந்திய தண்டனைச் சட்டத்தில் 'குற்ற மனம்' இல்லாமல் தண்டிக்கக் கூடிய குற்றங்களைக் கூறுக.)

(அல்லது)

"The act and intent must concur to constitute the crime" - Comment. What are the exceptions, if any, to this doctrine under the Indian Penal Code? ('செயலும் கருத்தும்தான் ஒரு குற்றத்தை உருவாக்குகிறது' - விமர்சிக்க. இக்கோட்பாட்டிற்கு இந்திய தண்டனைச் சட்டத்தில் விதிவிலக்குகள் யாவை?)

(அல்லது)

How far is the doctrine of vicarious liability applicable in criminal law? State the provisions if any, of the Indian Penal Code. (குற்றவியல் சட்டத்தில் பகரப் பொறுப்பு கோட்பாடு எவ்வளவு தூரத்திற்கு பயன்படத் தக்கதாக இருக்கிறது? இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ், வழிவகைகள் ஏதேனும் இருந்தால் எடுத்துக் கூறுக.)

(அல்லது)

"Vicarious liability is unknown to Criminal Law" - Elucidate. ('பகரப் பொறுப்பு குற்றவியல் சட்டம் அறியாதது' - விவரி.)

முன்னுரை:

ஒரு குற்றம் குற்ற மனதுடன் செய்யப்படவில்லையென்றால், அக்குற்றம், குற்றமெனக் கொள்ளப்பட முடியாது, என்பது குற்ற மனக் கோட்பாட்டின் விதி. ஆனால், குற்ற மனம் இல்லாமலேயே தண்டிக்கக்கூடிய குற்றங்களைப் பற்றி இந்திய தண்டனைச் சட்டம் கூறுகிறது. அதாவது, இக்குற்றங்களில், குற்றவாளிக்கு குற்ற மனம் இருந்ததா, இல்லையா என்று பார்க்க வேண்டிய அவசியமில்லை. சுருங்கக்கூறின், குற்ற மனக் கோட்பாட்டிற்கு சில விதிவிலக்குகளை (exceptions) இந்திய தண்டனைச் சட்டம் தருகிறது.

(i) பகரப் பொறுப்பில் (Vicarious Liability):

பொதுவாக ஒரு நபர், தான் செய்த செயல்களுக்கு மட்டுமே பொறுப்பாவார். ஆனால் பகரப் பொறுப்பில் மற்றவர்களுடைய செயல்களுக்கும், அந்நபர் பொறுப்பேற்க வேண்டியுள்ளது. அதாவது குற்றம் எதையும் செய்யாத ஒருவர், மற்றொருவர் செய்த குற்றச் செயலுக்கு பொறுப்பேற்க வேண்டும். இங்கு அந்நபருக்கு குற்ற மனம் இருந்ததா என்று கவனிக்க வேண்டிய அவசியமில்லை.

குற்றவியல் சட்டத்தில் பகரப் பொறுப்புக் கோட்பாடு (The Doctrine of Vicarious Liability), தீங்கியல் சட்டத்தைவிட (Law of Torts) குறைவான அளவிலேயே பயன்படுத்தப்படுகிறது. தீங்கியலைப் பொறுத்த வரையில் தொழிலாளியின் நன்மைக்காகவும், வேலையில் ஈடுபட்டிருக்கும் பொழுது தொழிலாளி தானே செய்யும் தீங்கிற்கும் முதலாளி பொறுப்பாவார். ஆனால் குற்றவியல் சட்டத்தில் அப்படியல்ல. **கடும் பொறுப்புதான் (strict liability)** பயனாகிறது. அதாவது, செய்த செயலுக்கு, அவரே பொறுப்பாகுதல். எனினும் இதற்கு ஒன்றிரண்டு விதிவிலக்குகளை இந்திய தண்டனைச் சட்டம் தருகிறது.

சுருங்கக்கூறின், இந்திய தண்டனைச் சட்டத்தினைப் பொறுத்த வரையில் பகரப் பொறுப்புக் கோட்பாடு பொருந்துவதில்லை. எனினும், பின்வரும் பிரிவுகளுக்கு பகரப் பொறுப்பு பொருந்துகிறது.

ஒரு நிலத்தின் உரிமையாளர், தன்னுடைய நிலத்தில் கலகக் குற்றமானது ஏற்பட்டிருந்து, அதனை அவர் காவல் அதிகாரிகளிடம் அறிவிக்காமல் இருந்தால், அக்கலகக் குற்றத்திற்கு (riot) அவரும் பகர நிலையில் பொறுப்பாவார். **(பிரிவு 154).**

எந்த நிலத்தைப் பொறுத்து கலகம் நடக்கிறதோ, அந்நிலத்தின் உரிமையாளர் அதனால் ஏதேனும் அனுகூலம் பெறுபவராக இருந்தால், அக்கலகக் குற்றத்திற்கு அவரும் பொறுப்பாவார். **(பிரிவு 155).**

முதல்வர் (Master) இல்லாத சமயத்தில் கலகக் குற்றத்திற்காக, அவரின் முகவர்களையோ (Agents) அல்லது மேலாளர்களையோ (Managers) பொறுப்பாக்கலாம். **(பிரிவு 156).**

R. v. Prayag Singh[1] என்ற வழக்கில், பிரயாக் சிங் என்பவரின் நிலத்தில் கலகம் நடந்தது. அதில் ஒருவர் கொல்லப்பட்டார். இதில் பிரயாக் சிங் என்பவருக்கு நேரடித் தொடர்பு இல்லாது போனாலும், பகரப் பொறுப்பில் பிரிவு 154-ன்படி, 1000 ரூபாய் அபராதம் விதித்து, தண்டிக்கப்பட்டார்.

Kazi Ahmed v. R.[2] **-** இவ்வழக்கில் ஒருவரின் நிலத்தில் அவரின் முகவரின் தவறினால் (agent's fault) கலகம் நடைபெற்றது. இதற்காக அந்நிலத்தின் உரிமையாளர் பிரிவு 154-ன்படி தண்டிக்கப்பட்டார்.

இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள மேற்கண்ட குற்றங்களைத் தவிர உணவு கலப்படத் தடுப்புச் சட்டம், கடை மற்றும் வாணிப அமைப்புகள் சட்டம், எடை மற்றும் அளவுச் சட்டம் ஆகியவைகளிலும் பகரப் பொறுப்பின் கீழ் முதலாளி குற்ற மனம் கொண்டிருக்காவிட்டாலும், தனது தொழிலாளியின் குற்றச் செயலுக்காக தண்டிக்கப்படுவார். ஒரு நிறுவனம் கூட, தன்னுடைய மேலாளர், இயக்குநர், அல்லது முகவர் புரிந்த குற்றச் செயலுக்காக குற்றவியல் சட்டப்படி பகரப் பொறுப்பில் தண்டிக்கப்படலாம்.

(ii) கடும் பொறுப்பில் (Strict Liability):

கடும் பொறுப்பில், செய்யப்படும் செயலுக்கு குற்ற மனம் இருந்ததா என்பதை கவனிக்க வேண்டிய அவசியமில்லை. இது முற்றிலும் விலக்கப்பட்டுள்ளது. ஒரு நபர், ஒரு செயலைச் செய்வதற்கான கருத்தினைக் (intention) கொண்டிருக்காவிட்டாலும், அச்செயலுக்கு அவர் பொறுப்பாக்கப்படுவார். அவர் கவனக் குறைவாக (Negligence) செயல்படாமல், முழு கவனத்துடன் செயல்பட்டிருந்தாலும், அச்செயலுக்கு பொறுப்பேற்றுக் கொண்டே ஆக வேண்டும். அத்தகு செயல்கள் பின்வருமாறு.

1) 'இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுத்தல்' போன்ற அரசுக்கு எதிரான குற்றங்கள் (பிரிவு 121)

2) அரசுத் துரோகம் (பிரிவு 124-A)

3) அரசு அதிகாரிகளைத் தாக்குதல் (பிரிவு 152)

4) இந்திய நாணயத்தைப் போன்று கள்ள நாணயம் தயாரித்தல் (பிரிவு 232)

---

1. I.L.R. 1890 12 All. 550
2. I.L.R. 1901 28 Cal. 504

5) ஆட்கவர்தல் (Kidnapping) (பிரிவு 359)

6) ஆட்கடத்தல் (Abduction) (பிரிவு 362)

7) அத்தியாவசியப் பண்டங்கள் சட்டம், அந்நிய செலாவணிச் சட்டம், சுங்கவரிச் சட்டம் போன்ற சட்டங்களுக்கு எதிரான குற்றங்கள்.

முடிவுரை:

மேற்சொன்ன குற்றங்கள் யாவும் குற்ற மனம் இல்லாமல் தண்டிக்கப் படக் கூடியவையாகும். எனினும் சில சூழ்நிலைகளில் சிலவர்களை குற்றவியல் சட்டமானது குற்றப் பொறுப்பிலிருந்து விடுவிக்கிறது. அவர்களின் குற்ற மனத்தையோ, அல்லது குற்றச் செயலையோ அது கருத்தில் கொள்வதில்லை. குழந்தைகள், புத்தி சுவாதீனமற்றவர்கள், போதைக்கு உட்படுத்தப்பட்டவர்கள் ஆகியோர் குற்றம் புரிந்திருப்பினும், அவர்களை குற்றவியல் சட்டம் தண்டிப்பதில்லை. (இவை குறித்து விரிவாக பின்னர் 'பொது விதிவிலக்குகள்' என்ற தலைப்பின் கீழ் வரும் அத்தியாயத்தில் காண்போம்)

- o -

அத்தியாயம் - 2. குற்றத் தரப்பினர்கள்

[கூட்டுப் பொறுப்பு மற்றும் சட்ட விரோதக் கூட்டத்தில் சேரும் குற்றப் பொறுப்பு – கூட்டுருக்களின் குற்றப் பொறுப்பு – பிரதான குற்றவாளிகளும் குற்றத்திற்கு துணை புரிந்தவர்களும் – குற்ற நடத்தை – குற்றமுறு சதி – குற்ற முயற்சி]

Parties to a Crime

[Joint and Constructive Liability - Corporate Liability - Principals and Accessories - Abetment - Criminal Conspiracy - Criminal Attempt]

(அ) கூட்டுப் பொறுப்பு (Joint Liability)

1. What is joint liability? Illustrate with case laws. (கூட்டுப் பொறுப்பு என்றால் என்ன? வழக்குகளை மேற்கோள் காட்டி விளக்குக.)

(அல்லது)

Explain the facts and principles laid down in Mahboobshah's case. (மஹபூப் ஷா வழக்கின் பொருண்மைகளையும் கொள்கைகளையும் விளக்கிக் கூறுக.)

கூட்டுப் பொறுப்பு (Joint Liability) - முன்னுரை:

எந்த ஒரு செயலையும் தனித்து ஒருவர் செய்வதைவிட, பலர் கூடி இணைந்து செய்வது எளிதாகிறது. இது நற்செயல்களுக்கும் தீச்செயல் களுக்கும் பொருந்துவதாகும். நல்ல செயல்களைப் பலர் கூடிச் செய்வதைச் சட்டம் வரவேற்கிறது. ஆனால், தீமையான செயல்களைச் செய்வதில் பலர் இணைந்து நின்றால், அதனால் விளைவது பெருங்கேடாகும். எனவே, சட்டம் அதைத் தடுக்கிறது.

ஒன்றுக்கு மேற்பட்ட பேர்கள் ஒரு தீய காரியத்தைச் செய்வதென்று சேர்ந்துவிட்டால்; ஒருவருக்கொருவர் துணையாக நிற்கின்றனர். தனித்து அதே தீச்செயல்களைச் செய்வதற்கு ஒருவர் அஞ்சலாம். ஆனால் துணைவர்கள் இருக்கும்பொழுது அவருக்குத் துணிவு ஏற்பட்டுவிடுகிறது. தனித்தனியாகச் செய்ய முடியாத ஒரு குற்றத்தை இரண்டு அல்லது மூன்று பேர்கள் சேர்ந்து எளிதில் செய்துவிடலாம். இவ்வாறு கூடி இயங்கிக்

குற்றங்கள் புரிவதைத் தடுக்கும் பொருட்டு சட்டம், கூடி இயங்கும் ஒவ்வொருவரையும் அந்தக் குற்றத்திற்கு பொறுப்பாக்கித் தண்டிக்கின்றது.

கூட்டுப் பொறுப்பு - விளக்கம்:

இரண்டு நபர்கள் கூடி ஒரு வீட்டில் திருட வேண்டும் என்று கருதுகின்றனர். இந்த பொதுக் கருத்தை (common intention) நிறைவேற்றும் வகையில் அந்த ஒருவர், வீட்டு வாசலருகில் நின்று கொண்டு தெருவில் யாராகிலும் வருகின்றனரா என்று பார்த்துக் கொள்கிறார். மற்றொருவர், பூட்டை உடைத்து வீட்டிற்குள் சென்று பணத்தையோ, நகைகளையோ எடுத்து வருகிறார். இப்பொழுது அந்த இரண்டு பேர்களுமே வீட்டில் நுழைந்து திருடிய குற்றத்திற்கு ஆளாகின்றனர். தெருவில் நின்று கொண்டிருந்தவர் நான் வீட்டிற்குள் சென்று திருடவில்லையே; எனவே நான் திருடியதற்கு பொறுப்பாகவில்லை என்று கூறினால், அதைச் சட்டம் ஏற்பதில்லை. வீட்டிற்குள் நுழைந்து நகையைத் திருடிய செயலைத் தெருவில் நின்று கொண்டிருந்தவரும் செய்ததாகத்தான் சட்டம் கொள்கிறது. ஏன்? இவருடைய பொதுக் கருத்தும் திருட வேண்டும் என்பதுதான். அந்த கருத்தை நிறைவேற்றும் வகையில்தான் ஒருவர் தெருவில் நின்று எவரும் வந்துவிடாத படி பார்த்துக்கொண்டிருந்தார். எனவே, அவரும் திருடிய செயலுக்குப் பொறுப்பாகின்றார். இவ்வாறு பலர் கூடிச் சேர்ந்து செய்த குற்றத்திற்கு ஒவ்வொருவருமே பொறுப்பாவதைக் **'கூட்டுக் (குற்றப்) பொறுப்பு'** என்கிறோம்.

கூட்டுப் பொறுப்பு - பிரிவு 34 கூறும் வரையறை:

மேற்படி கூட்டுப் பொறுப்புக் கொள்கையை இந்திய தண்டனைச் சட்டத்தின் 34-ஆம் பிரிவு தெளிவாக பின்வருமாறு வரையறுக்கின்றது. அதன்படி, "பொதுவான கருத்தை நிறைவேற்றும் வகையில் (in furtherence of the common intention) பலர் கூடி ஒரு குற்றத்தைச் செய்தனரெனில், அவர்கள் தனித்தனியே அக்குற்றத்தைச் செய்திருந்தால் எவ்வாறு பொறுப்பாவார் களோ, அவ்வாறே ஒவ்வொருவரும் பொறுப்பாகின்றனர்.

பிரிவு 34-ன் ஆக்கக் கூறுகள் (Ingredients of Sec. 34):

1. ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் சேர்ந்து,
2. குற்றம் புரிய வேண்டும் என்ற பொதுவான கருத்துடன்,
3. குற்றச் செயல் ஒன்றைப் புரிந்திருக்க வேண்டும்.

கூட்டுப் பொறுப்பை விளக்கும் முக்கிய வழக்குகள்:

Barendra Kumar Ghosh v. Emperor[1]

இது 'போஸ்ட் மாஸ்டர் கொலை வழக்கு' **(Post Master Murder**

1. 1925 I.L.R. Cal. Vol. 52 p. 197

Case) என்றும், **'அலிப்பூர் சதி வழக்கு' (Alipur Conspiracy Case)** என்றும் அழைக்கப்படுகிறது.

இவ்வழக்கில், சிலர் ஒரு தபால் அலுவலகம் உள்ளே சென்று அங்கிருந்த உதவி தபால் அலுவலரிடம் பணத்தை கொடுக்குமாறு மிரட்டினர். அதைத் தொடர்ந்து அவர் மீது சிலர் சுட்டனர். இதனால் அவர் ஸ்தலத்திலேயே மரணம் அடைந்தார். தாக்கியவர்கள் பணத்தை எடுத்துக் கொள்ளாமலேயே ஓடிவிட்டனர். அஞ்சலக உதவியாளர் ஒருவர் அவர்களை துரத்திச் சென்றதில் அவர்களில் ஒரு குற்றவாளி மட்டும் பிடிபட்டான். நீதிமன்றத்தில் அக்குற்றவாளி, தான் வெளியே நின்றிருந்ததாகவும் உள்ளே சென்றவர்கள்தாம் சுட்டதாகவும் கூறினான். இறந்தவர் மீது பாய்ந்திருந்த தோட்டாக்கள் குற்றவாளியிடமிருந்த தோட்டாக்களை ஒத்திருந்தன. குற்றவாளிக்கு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவுகள் 34 r/w 302-ன்படி அமர்வு (செஷன்ஸ்) நீதிமன்றம் மரண தண்டனை விதித்தது. அமர்வு (செஷன்ஸ்) நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பு சரியானதுதான் என்று கல்கத்தா உயர் நீதிமன்றமும், பிரிவி கவுன்சிலும் உறுதி செய்து, தீர்ப்பினைக் கூறும்பொழுது **Lord Sumner** கூறியுள்ளதாவது. "எல்லோரும் பொதுக் கருத்தை நிறைவேற்றற் பொருட்டு செயலில் ஈடுபடும்பொழுது ஒத்த அல்லது வெவ்வேறுபட்ட வெவ்வேறு செயல்களில் ஈடுபட்டால் அச்செயலின் விளைவிற்கு ஒவ்வொருவரும் அவரவர் செய்தால் எவ்விதம் குற்றவாளி ஆவாரோ அவ்விதம் அச்செயலுக்கு குற்றவாளி ஆவார்."

Mahabub Shah v. Emperor[1]

இது **'சிந்து நதி வழக்கு' (Indus River case)** என்றழைக்கப்படுகிறது. இவ்வழக்கில் அல்லாதத் என்பவன் சிலருடன் சிந்து நதியில் நாணல் (reeds) பறிக்க ஒரு படகில் சென்றான். நதியில் குளித்துக் கொண்டிருந்த மகமது ஷா என்பவன் தனக்கு சொந்தமான நிலத்தில் இருந்து நாணல் பறிக்கக் கூடாது என்று எச்சரித்தான். இவற்றைக் கேளாமல் அல்லாதத் அந்நிலத்தின் நாணலைப் பறித்துக் கொண்டு திரும்பி வருகையில் மகமது ஷாவின் சிற்றப்பா மகன் காஸீம் ஷா, அல்லாதத்தை தடுத்து அந்நாணல் கட்டுகளை பறிக்க முயற்சித்தான். அப்பொழுது அல்லாதத் கீழே தள்ளப்பட்டான். உடனே அல்லாதத் கீழே கிடந்த மூங்கில் துடுப்பை எடுத்து காஸீம் ஷாவை அடித்தான். காஸீம் ஷா உதவிக்காக கத்தினான். அவன் அலறலைக் கேட்டவுடன் வாலி ஷா மற்றும் மகபூப் ஷா கையில் தோட்டா நிரம்பிய துப்பாக்கியுடன் வந்தனர். (வேட்டைக்கு சென்று திரும்பி வந்து கொண்டிருந்தனர்). அவர்களைக் கண்டவுடன் அல்லாதத்தும் அவன் நண்பன் அமீதுல்லாவும் ஓட முயன்றனர். ஆனால் அதற்குள் வாலி ஷா அல்லாதத்தை சுட்டான். அதனால் அவன் மாண்டான். மகபூப் ஷா அமீதுல்லாவை நோக்கிச் சுட்டதில் அவன் கொடுங்காயத்திற்கு உள்ளானான். இதில் வாலி

1. 1945 L.W. (Mad.) Vol. 58 p. 368 : 47 Bom. 4. R. 941

ஷா தலைமறைவாகிவிட்டான். ஆனால் மகபூப் ஷா கொலை முயற்சி குற்றத்திற்காக ஏழு ஆண்டுகள் தண்டிக்கப்பட்டான். ஆனால் லாகூர் உயர் நீதிமன்றம் அவனை பிரிவு 34 r/w 302-ன்படி, கூட்டுப் பொறுப்புக்குள்ளாக்கி மரண தண்டனை விதித்தது. மகபூப் ஷா பிரிவி கவுன்சிலுக்கு மேல்முறையீடு செய்ததில், **"இருவருடைய பொதுக் கருத்தும் (Common Intention) ஒன்றாக இல்லை. வாலி ஷாவிற்கும் மகபூப் ஷாவிற்கும் இருந்த ஒத்த கருத்து (same intention) யாதெனில் காஸீம் ஷாவைக் காப்பாற்ற வேண்டும் என்பதே; குற்றச் செயல் புரிய வேண்டும் என்ற பொதுக் கருத்து இல்லை"** எனக் கூறி மரண தண்டனையை இரத்து செய்து கொடுங்காயம் விளைவித்த குற்றத்திற்கு மட்டும் அவனை தண்டித்தது.

Nachimuthu Gounden and others v. State of Tamil Nadu[1]

மகபூப் ஷா வழக்கில், பிரிவி கவுன்சில் ஏற்படுத்திய விதி யாதெனில், "ஒத்த கருத்து (same intention) என்று நிரூபித்தால் மட்டும் போதாது. இருவரிடையேயும் பொதுக் கருத்து (Common intention) இருந்தது. அதை நிறைவேற்றும் பொருட்டுதான் செயலில் ஈடுபட்டனர் என்று நிரூபிக்கப்பட வேண்டும். செயலில் இறங்கும் முன்னரே இருவரும் பொதுக் கருத்துடன் ஆலோசித்து ஈடுபட்டனர் என்றிருக்க வேண்டியதில்லை. செயலின் ஆரம்பத்தில் பொதுக் கருத்துடன் இல்லாமல், இடையில் கூட எழுந்ததாக இருக்கலாம்".

இது மேற்கண்ட நாச்சிமுத்து வழக்கில் பின்பற்றப்பட்டது. இதில் எ-1, எ-2 ஆகியவர்களை காவலர்கள் காவல்நிலையத்திற்கு இழுத்துச் சென்று கொண்டிருந்தனர். அப்பொழுது நாச்சிமுத்து கவுண்டனும், மற்றவர்களும் (எ-3 முதல் எ-5 வரை உள்ளவர்கள்) சேர்ந்து ஒரு காவலரை மிருக வெறியுடன் தாக்கிக் கொன்றனர். அதில் ஒருவன் **"தீர்த்துக் கட்டுங்கடா" (finish him)** என்று தாக்குதலின் போது ஆவேசமாகக் கூறினார் என்பதற்கு சாட்சியம் இருந்தது. ஆகவே அவன் அவ்விதம் கூறிய நேரத்திலிருந்து மற்ற எதிரிகளும், பொதுக் கருத்துடன் செயல்பட்டனர் என முடிவு கட்டப்பட்டு பிரிவுகள் 34 r/w 302-ன்படி எதிரிகளுக்கு தண்டனை விதிக்கப்பட்டது.

Lalai v. State of U.P.[2]

இவ்வழக்கின் பொருண்மையின்படி, X என்பவர் தன்னுடைய வீட்டில் ஒரு கட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தபோது, A என்பவர் X என்பவரைக் கொலை செய்கின்றார். அந்த சமயம் A-யின் சகோதரனான B என்பவர் மேற்படி குற்றச் செயலில் பங்கெடுக்கவில்லையெனினும், கையில் கொடுவாளுடன் அவ்வீட்டின் வாசல் அருகே நின்று கொண்டிருந்தார். ஏனெனில் அவர்களுடைய நோக்கத்தை நிறைவேற்ற முடியாத அளவிற்கு வெளியிலிருந்து இடையூறு ஏதேனும் வந்தால், அதற்கு ஈடு கொடுப்பதற்காக

1. 1947 I.L.R. Mad. 425
2. A.I.R. 1974 S.C. 2118

அவ்வாறு நின்று கொண்டிருந்தார். A மேற்படி குற்றத்தை நிறைவேற்றி முடித்ததும் இருவரும் ஒன்று சேர ஓடிவிட்டனர். இருவருக்கும் X-ஐக் கொல்ல வேண்டும் என்ற பொதுக் கருத்து இருந்தது என்று தீர்ப்பளிக்கப்பட்டு, அதன்படி, தண்டிக்கப்பட்டனர். பொதுக் கருத்தை அனுமானிப்பதற்கு மேற்படி வழக்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

(ஆ) கூட்ட விரோதக் கூட்டத்தில் சேரும் குற்றப் பொறுப்பு (Constructive Liability)

2. Explain and compare the nature of the liability under Section 34 and Section 149 of IPC. Refer to decided cases. (இந்திய தண்டனைச் சட்டத்தில் பிரிவு 34 மற்றும் பிரிவு 149 ஆகியவற்றின் கீழான பொறுப்புநிலையின் தன்மையை விளக்கி ஒப்பிடுக. தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Define common intention and common object and differentiate one from the other citing leading cases. (பொது உட்கருத்துக்கும் பொது குறிக்கோளுக்கும் வரையறை எழுதி அவை ஒன்றுக்கொன்று எவ்வாறு வேறுபடுகின்றன என்பதை முக்கிய வழக்குகளுடன் எடுத்துக்காட்டுக.)

(அல்லது)

Unlawful assembly - Write short notes. (சட்ட விரோதமான கூட்டம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Common Object - Write short notes. (பொது நோக்கம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

(a) Define unlawful assembly

(b) Distinguish between joint liability under Section 34 and constructive liability under Section 149.

(அ) சட்ட விரோதமான கூட்டத்தை வரையறு.

(ஆ) 34-ஆம் பிரிவின் கீழ் கூட்டுப் பொறுப்பு நிலையையும், 149-ம் பிரிவின் கீழ் ஆக்கச் சார்பான பொறுப்புநிலையையும் வேறுபடுத்துக.

(அல்லது)

Distinguish between
Common Intention and Common Object.
வேறுபடுத்துக
பொதுக் கருத்து மற்றும் பொது நோக்கம்.

பிரிவு 149-ன் கீழான பொறுப்பு நிலை:

சட்ட விரோதக் கூட்டத்தில் சேரும் குற்றப் பொறுப்பு நிலை குறித்து பிரிவு 149 பின்வருமாறு விளக்குகிறது.

"ஒரு சட்ட விரோதக் கூட்டத்தைச் (unlawful assembly) சேர்ந்த எவரேனும் அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களின் பொதுவான நோக்கத்தை (common object) நிறைவேற்றுதற் பொருட்டு செயல்படுகின்ற குற்றச் செயலுக்கோ, அந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு குற்றச் செயல் நிகழலாம் என்று தெரிந்து பங்கேற்றதற்கோ அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் பொறுப்பாவார்".

சட்ட விரோதமான கூட்டம் (Unlawful Assembly) - பிரிவு 141:

இங்கு சட்ட விரோதமான கூட்டம் என்றால் என்ன என்பதை அறிந்து கொள்ளல் அவசியம். இதை பிரிவு 141 கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறது.

பின்வரும் குற்றங்களில் ஏதேனும் ஒன்றை பொது நோக்கமாகக் கொண்டு, அய்ந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூடினால் அக்கூட்டம் சட்ட விரோதமான கூட்டம் ஆகிறது.

1. மத்திய அரசு, மாநில அரசு, பாராளுமன்றம், சட்டமன்றம், பொது ஊழியர் இவர்களைக் குற்றமுறு வன்முறையால் (Criminal force) தாக்கவோ, தாக்குவதாக அச்சுறுத்தவோ செய்வதற்காகக் கூடுகின்ற கூட்டம்.

2. சட்டப்படியான உத்திரவுகளை அல்லது நடவடிக்கைகளை நிறைவேற்ற விடாமல் எதிர்க்கும் கூட்டம்.

3. சொத்தழிப்பு (mischief) அல்லது குற்றமுறு அத்துமீறல் அல்லது வேறு குற்றங்களைச் செய்யும் கூட்டம்.

4. குற்றமுறு வன்முறையால் தாக்கியோ, தாக்கப் போவதாக அச்சுறுத்தியோ ஒருவரின் உடமையைக் கைப்பற்றினாலோ அல்லது மற்றவர்களின் சுவாதீன அனுபவத்தை பறித்தாலோ அல்லது அவற்றில் தங்கள் உரிமைகளை நிலைநாட்டவோ செய்தல்.

5. குற்றமுறு வன்முறையால் தாக்கியோ, தாக்கப்போவதாகக் காட்டியோ, சட்டப்படியான கடமையை ஒருவர் செய்வதைத் தடுத்தல் அல்லது அவர் சட்டப்படி செய்ய வேண்டாததைச் செய்யும்படி வற்புறுத்தல்.

விளக்கம்: கூடும்போது சட்ட விரோதமானதாக இல்லாத ஒரு கூட்டம், பின்னால் ஒரு சட்ட விரோதமான கூட்டமாக ஆகலாம்.

பிரிவு 149-ன் உட்கூறுகள் (Ingredients):

1. பிரிவு 141-ல் வரையறுக்கப்பட்டபடி அய்வர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கொண்ட சட்ட விரோதமான கூட்டம் ஒன்று இருக்க வேண்டும்.

2. அக்கூட்டத்தின் ஒரு உறுப்பினரால் குற்றச் செயல் ஒன்று புரியப்பட்டிருக்க வேண்டும்.

3. அச்செயல் அக்கூட்டத்தின் பொதுவான நோக்கத்தை நிறைவேற்றுதற் பொருட்டு நடந்திருக்க வேண்டும் அல்லது நடக்க வாய்ப்பிருக்க வேண்டும்.

4. அக்கூட்டத்தில் உறுப்பினர்கள் தாமே வலிய பங்கேற்றிருக்க வேண்டும்; அதன் பொதுவான நோக்கத்தை அறிந்திருக்க வேண்டும்.

முக்கியமான வழக்குகள்:

Mohan Singh and others v. State of Pubjab[1]

இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அய்ந்து பேரும் அதற்கு மேலும் எனக்கூறி ஐந்து பேரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தும் பொழுது அதில் இரண்டு பேர் விடுதலை செய்யப்பட்டாலும், மீதமுள்ள மூன்று பேர் பிரிவு 149-ன் கீழ் தண்டிக்கப்படலாம் என்று தீர்ப்பு கூறப்பட்டது.

Queen v. Sabed Ali[2]

இவ்வழக்கில் சட்ட விரோதமான கூட்டத்தின் பொதுநோக்கத்திற்கு முரணாக ஒரு நபர் குற்றம் புரியும் பொழுது, அது மற்ற நபர்களை கட்டுப்படுத்தாது என்று தீர்ப்பாகியது.

Nanak Chand v. State of Punjab[3] **(அல்லது) பிரிவு 34-க்கும் 149-க்கும் உள்ள வேறுபாட்டை எடுத்துக் கூறிய வழக்கு:**

இவ்வழக்கில் மேற்கண்ட பிரிவுகளின் வேறுபாடானது தெளிவானது. இவ்வழக்கில் மேற்கண்ட பிரிவுகளின் வேறுபாட்டைப் பற்றி உச்ச நீதிமன்றம் கூறியதாவது,-

ஒரு குற்றத்தைச் செய்ய குற்றம் புரிந்தவர்களிடையே பொதுக் கருத்து (common intention) இருக்க வேண்டும் என்கிறது பிரிவு 34. அப்பொது கருத்தைச் செயலாக்குதற் பொருட்டு பலர் பல்வேறு வகையான செயல்கள் மூலம் ஒரு குற்றத்தைச் செய்யலாம். அவ்விதமாயின் ஒவ்வொருவரும் தனித்தனியாக அக்குற்றத்தைச் செய்தால் எவ்விதம் பொறுப்பாவாரோ, அவ்விதம் இக்குற்றச் செயலுக்கும் பிரிவு 34-ன் கீழ் பொறுப்பாவார்.

பிரிவு 149-ல் பொதுக் கருத்து (common intention) என்பதற்கே இடமில்லை. சட்ட விரோத கூட்டத்தைச் சேர்ந்த ஒருவர் ஒரு குற்றத்தைச் செய்தால், அதைச் செய்தவருக்கும் அக்கூட்டத்தைச் சேர்ந்த மற்றவர்களுக்கும் பொதுக் கருத்து இல்லையென்றாலும், கீழ்வரும் நிலைகளில் பொறுப்பாவார்கள்.

1. A.I.R. 1963 S.C. 174
2. II BLR 347 FB
3. A.I.R. 1955 S.C. 274

1. பிரிவு 141-ல் கூறப்பட்ட பொது நோக்கத்தைச் (common object) செயல்படுத்துவதற்காகக் கூடிய சட்ட விரோதக் கூட்டமாயிருப்பின் அக்கூட்டத்திலுள்ள எல்லோரும் குற்றவாளிகள் ஆவார்கள், அல்லது

2. பொது நோக்கத்தை நிறைவேற்றும் பொழுது ஒரு குற்றம் நிகழ்த்தப்படலாம் என்று எவரொருவருக்குத் தெரிந்து இருக்கின்றதோ அவர்கள் எல்லோரும் அக்குற்றத்திற்குப் பொறுப்பாவார்கள். அவர்களுக்கும் குற்றத்தைச் செய்தவருக்கும் பொதுக் கருத்து இல்லையென்றாலும், அவர்கள் அச்செயலில் பங்கெடுத்துக் கொள்ளவில்லையென்றாலும் கூட, குற்றப் பொறுப்புக்கு ஆளாவார்கள்.

Chikkarange Gowda and others v. State of Mysore[1]

இவ்வழக்கானது, பிரிவு 34-க்கும் மற்றும் பிரிவு 149-க்கும் உள்ள வேறுபாட்டை மேலும் தெளிவாக்குகிறது. இதில் புட்ட கவுடா மற்றும் நஞ்ச கவுடா என்ற இரு சகோதரர்கள் மாதம்மா என்ற காமக்கிழத்தியிடம் தொடர்பு வைத்திருந்தனர். இதனைக் கண்டிக்கும் வகையில் அவ்வூர் மக்கள் சுமார் 100 பேர் கூடி அவர்கள் வீட்டைத் தாக்கினர். இத்தாக்குதலின் போது அவ்விரு சகோதரர்களும் கொல்லப்பட்டனர். இதற்காக அக்கூட்டத்தில் இருந்த சிக்கரஞ்ச கவுடா உள்ளிட்ட நால்வர் மீது மட்டும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. ஏனெனில், மேற்படி சட்ட விரோதமான கூட்டத்தின் பொது நோக்கம் (common object) யாதெனில், கொல்லப்பட்ட மேற்படி சகோதரர்களின் தீய நடத்தையை **'கண்டித்தலே'** ஆகும். மேலும் இப்பொது நோக்கத்தின் விளைவாக, மேற்படி சகோதரர்கள் கொல்லப்படலாம் என்பதை மேற்படி சட்ட விரோதக் கூட்டத்தின் உறுப்பினர்கள் அறிந்திருந்தனர் என்று மேற்படி குற்றச்சாட்டு கூறவில்லை. அக்கூட்டத்தின் உறுப்பினர்கள் சிலரால் விளைவிக்கப்பட்ட மரண காயத்தின் காரணமாக மேற்படி சகோதரர்கள் கொல்லப்பட்டுள்ளனர். இதனடிப்படையில் மரண காயம் விளைவிக்காத இருவர் உள்ளிட்ட மேற்பட்ட நால்வருக்கு பிரிவு 302 r/w 149 மற்றும் 34-ன் கீழ் விசாரணை நீதிமன்றம் தண்டனை விதித்தது.

இத்தண்டனைத் தீர்ப்பை எதிர்த்து, அந்நால்வரும் மேல்முறையீடு செய்தனர். அங்கு, மேற்படி கூட்டத்தினரின் பொது நோக்கம் 'கண்டித்தல்' ஆகும். மாறாக, மேற்கண்ட நால்வரும், மேற்படி சகோதரர்களைக் கொல்ல வேண்டும் என்ற **தனிப்பட்ட பொது நோக்கம் (separate common intention)** கொண்டிருந்ததாக, அவர்கள் மீது குற்றஞ்சாட்டப்படவில்லை. எனவே, பிரிவு 302 r/w 149 மற்றும் 34-ன் கீழ் மரண காயத்தை விளைவிக்காத இருவரின் மீதான கொலைக் குற்றம் நிலைக்கத்தக்கதல்ல எனப்பட்டு, அவர்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டனர்.

1. A.I.R. 1956 S.C. 731

வேறுபாடு காண்பிக்கும் அட்டவணை

பொதுக் கருத்து (பிரிவு 34)	பொது நோக்கம் (பிரிவு 149)
1. நபர்களின் எண்ணிக்கை பற்றி அக்கறையில்லை. ஆனால் ஒன்றுக்கு மேற்பட்டவர் இருக்க வேண்டும்.	அய்ந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் அவசியம்.
2. பொதுக் கருத்து (common intention) அவசியம்.	பொது நோக்கம் (common object) அவசியம்.
3. குற்றச் செயல் நடைபெற்றால் தான் குற்றப் பொறுப்பு ஏற்படும்.	பிரிவு 141-ல் கூறப்பட்ட பொது நோக்குடன் கூட்டம் கூடினாலே போதும்.
4. குற்றச் செயல் நடைபெற்றால் தான் இதில் ஒருவன், குற்றவாளி ஆகிறான்.	சட்ட விரோதமான கூட்டத்தில் ஒருவன் உறுப்பினராக இருந்தாலே குற்றவாளி ஆகிறான்.
5. குற்றப் பொறுப்புடைமையை (ciminal liability) எடுத்தியம்புகிறது.	தனிக் குற்றத்தை (separate offence) இயம்புகிறது.

(இ) கூட்டுருக்களின் குற்றப் பொறுப்பு (Criminal liability of Corporations)

3. Discuss the Criminal liability of Corporations. (கூட்டுருக்களின் குற்றப் பொறுப்புநிலையை விவாதிக்க.)

குற்ற மனம் பார்த்து தண்டனை வழங்கும் குற்றங்களுக்கு கூட்டுருக்கள் எந்த அளவிற்குப் பொறுப்பாகும்? இருமணம் (Bigamy), வன்புணர்ச்சி (Rape) போன்ற குற்றங்கள் தனிப்பட்ட மனிதர்களாலேயே செய்யப்படக் கூடியதாகும். இத்தகு குற்றங்களுக்கு கூட்டுருக்களைப் பொறுப்பாக்க இயலாது. மரண தண்டனை விதிக்கத்தக்க குற்றங்களாயிருப்பினும் அவற்றிற்கும் கூட்டுருக்களைப் பொறுப்பாக்க முடியாது. அதாவது உடல்ரீதியாக கூட்டுருக்கள் தண்டிக்கப்படவியலாது. ஏனெனில் அதற்கான உடல் கிடையாது. ஆனால் அபராதம் விதிக்கப்படலாம்.

இவ்விதிவிலக்குகளுக்கு உட்பட்டு குற்ற மனம் பார்த்துக் குற்றப் பொறுப்புக்கு ஆளாக்கத்தக்க குற்றங்களாயிருப்பின், அவற்றிற்கு கூட்டுருக்களை குற்றப் பொறுப்புக்கு ஆளாக்கலாம். அச்சந்தர்ப்பங்களில்

கூட்டுருக்கள் அவற்றின் முகவர்கள் மூலமாகக் குற்றங்களைச் செய்கின்றன. அத்தகு முகவர்கள் செய்யும் குற்றத்திற்கு, அவர்கள் சார்ந்துள்ள நிறுவனம் எந்த அளவுக்குப் பொறுப்பாகும் என்பதும், முகவர்களின் குற்றமுறு மனநிலைகளான கருத்து (intention), தெரிந்து செயல்படுதல் (knowingly) போன்றவைகளை நிறுவனங்களுக்குச் சுமத்த முடியுமா என்பதும் வழக்கின் பொருண்மைகளை (facts) பொறுத்து அமைவதாகும்.

State of Maharashtra v. Messrs Syndicate Transport Co. Pvt. Ltd. and others[1] என்ற வழக்கில் பிரிவு 420-ன்படி நிறுவனத்தைக் குற்றப் பொறுப்புக்கு ஆளாக்க இயலாது, என்று தீர்ப்பளிக்கப்பட்டது. எனினும் **Superintendent and Remembrance of Legal Affairs, West Bengal v. Corporation of Calcutta**[2] எனும் வழக்கில், அரசு மற்றும் அதன் துறைகள் அல்லது பொது அமைப்புகள் (Public bodies) அல்லது கூட்டுருக்கள் (Corporations), இந்திய தண்டனைச் சட்டத்தின் அளாவுகையிலிருந்து குறிப்பாக விலக்கப்படாத பட்சத்தில், அவைகளும் குற்றவியல் நடவடிக்கைகளுக்கு உட்பட்டதே என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது.

(ஈ) பிரதான குற்றவாளிகளும் குற்றத்திற்கு துணை புரிந்தவர்களும் (Principals and Accessories)

ஒரு சிறு விளக்கம்

குற்றச் செயலில் பங்கெடுத்துக் கொள்பவர்களை முதற்படி பிரதான குற்றவாளி (Principal in the first degree), இரண்டாம்படி பிரதான குற்றவாளி (Principal in the second degree), குற்றத்திற்கு முன் துணையர் (Accessories before the fact), குற்றத்திற்கு பின் துணையர் (Accessories after the fact) என்று நான்கு பிரிவினராக இங்கிலாந்து சட்டத்தில் வகைப்படுத்தி கூறப்படுவதுண்டு.

நேரடியாக ஒரு குற்றச் செயலைச் செய்பவரோ, குற்றத்தை நிறைவேற்றுவதில் நேரடிப் பங்கேற்பவரோ முதற்படி பிரதான குற்றவாளியாவார். எடுத்துக்காட்டாக, விஷத்தை மருந்தென்று கூறி, செவிலியிடம் (Nurse) கொடுத்து, அதை அவள் மூலம் நோயாளிக்கு கொடுக்கச் செய்யும் மருத்துவர், முதற்படி பிரதான குற்றவாளி ஆவார்

குற்றம் நடைபெறும் இடத்திலோ அல்லது வேறு இடத்திலோ

1. A.I.R. 1964 Bom. 195
2. A.I.R. 1967 S.C. 997 : 1967 Cri. L. J. 950

இருந்து, குற்றவாளிக்குத் துணை புரியவோ அல்லது குற்றத்தைச் செய்யும் பொருட்டுக் குற்றவாளியை நேரடியாகத் தூண்டவோ செய்பவர், இரண்டாம்படி பிரதான குற்றவாளியாவார். எடுத்துக் காட்டாக, முதல் திருமணத்தின் மூலம் வந்த மனைவி உயிருடன் இருக்கும் பொழுது, அத்திருமணம் சட்டப்படி இரத்தாகவில்லை என்று தெரிந்தே, அவனை இரண்டாம் திருமணம் செய்து கொள்ளும் இரண்டாவது மனைவி, இரண்டாம்படி பிரதான குற்றவாளியாவார்.

இனி பின்னிரண்டு பிரிவினராக, குற்றத்திற்கு முன் துணைவர் மற்றும் குற்றத்திற்கு பின் துணைவரைக் குறித்து பின்வருமாறு சற்று விளக்கமாக காண்போமா?

4. Accessory before the fact - Write short notes. (குற்றத்திற்கு முன் துணையர் - சிறு குறிப்பு வரைக.)

ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்ட பிரதான (Principals) குற்றவாளிகளை சேர்த்தியங்கச் செய்பவரோ அல்லது அக்குற்றச் செயலுக்கு ஆலோசனை அளிப்பவரோ குற்றச் செயலுக்கு முன் துணை புரிந்தவராவார். குறிப்பிட்டவாறு அல்லாமல் வேறு வகையால் குற்றம் நிகழ்த்தப் பட்டிருப்பினும், அதற்கு ஆலோசனை அளித்து துணை புரிந்தவர், குற்றவாளி ஆவார். இதை **பிரிவு 111** கூறுகிறது.

இப்பிரிவின் கீழ் ஒருவரைக் குற்றப் பொறுப்புக்கு உள்ளாக்க வேண்டுமெனில், 1. எந்தச் செயல் நிகழ்த்தப்படவிருக்கிறதோ அது நிகழ்த்தப்படவிருக்கிறது என்று அவருக்கு தெரிந்திருக்க வேண்டும். 2. அதற்கு அவர் அனுமதி அளித்திருக்க வேண்டும். 3. அவருடைய அனுமதியின் காரணமாகக் குற்றத்தைச் செய்வதில் பிரதான குற்றவாளி ஆர்வமூட்டப் பட்டிருக்க வேண்டும்.

குற்றம் செய்வதற்கெனப் பொருள் கொடுத்து உதவியவர்களும், தகவல் கொடுத்தவர்களும் அக்குற்றத்திற்கு துணை புரிந்தவர்களாவார்களா, என்பது சிக்கலான கேள்வி. இருந்தாலும் சில சந்தர்ப்பங்களில் அவர்களும் அவ்விதம் செய்வதன் மூலம் பொறுப்பாக நேரிடும்.

முதலாளி, தன்னுடைய தொழிலாளியிடம் மதுப்புட்டியைக் கொடுத்து சட்ட விரோதமாக வெளியில் விற்றுவரும்படிச் சொன்னால், அவரும் அக்குற்றத்தின் தரப்பினராகத் தண்டிக்கப்பட வேண்டியவரே.

இந்திய தண்டனைச் சட்டத்தின் **107 முதல் 120 வரையுள்ள பிரிவுகளில்** குற்றச் செயலுக்கு முன் துணை நிற்பவர்களின் குற்றப் பொறுப்புப் பற்றிக் கூறப்பட்டிருப்பதைக் காணலாம்.

5. Accessory after the fact - Write short notes. (குற்றத்திற்குப் பின் துணையர் - சிறு குறிப்பு வரைக.)

குற்றச் செயல் நிறைவேற்றப் பெற்ற பின்னர் குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, அவருக்குப் பாதுகாப்போ, புகலிடமோ அளிப்பவர்கள் குற்றத்திற்குப் பின் துணை புரிந்தவர்களாவர். குற்றவாளியைக் கைது செய்ய விடாமல், மறைவாகப் பாதுகாத்து வருவது அல்லது அவருக்கெதிரான சாட்சியங்களை இல்லாமல் ஆக்குவது போன்றவைகள் இப்பிரிவில் அடங்கும்.

இங்கிலாந்தில் 1861-ஆம் ஆண்டில் குற்றத் துணைவர்களும் குற்ற உடந்தையர்களும் சட்டம் (Accessories and Abettors Act) இயற்றப்பட்ட பிறகு, குற்றத்திற்கு பின் துணையர் தவிர மற்ற முதல் மூன்று பிரிவினரிடையே இருந்து பாகுபாடு ஒழிக்கப்பட்டுவிட்டது. அப்பிரிவினர்கள் அனைவரும் அவர்களே நேரடியாக குற்றச் செயலில் ஈடுபட்டவர்களாக பாவிக்கப்பட்டனர்.

இந்தியத் தண்டனைச் சட்டமானது, குற்றம் செய்பவர்களுக்கும் குற்ற உடந்தையருக்கும் இடையே பரந்த அளவிலான ஒரு வேறுபாட்டை வகுத்துள்ளது. குற்றத்திற்குப் பின் துணைவர்களை இந்திய தண்டனைச் சட்டம் பெரிதளவு அங்கீகரிக்காது போனாலும், அவர்களும் சில குற்றங்களில் தண்டனைக்குள்ளாகித்தான் வருகின்றனர். அக்குற்றங்கள் வருமாறு (1) குற்றத்திற்கான சாட்சியத்தை மறையும்படிச் செய்தல் அல்லது குற்றவாளியைக் காப்பதற்கு பொய்த் தகவல் கொடுத்தல் (பிரிவு 201). (2) குற்றஞ்செய்தவருக்கு புகலிடம் அளித்தல் (Harbour) (பிரிவு 212). (3) அரசுக் கைதிக்கு அல்லது போர்க் கைதிக்கு புகலிடம் அளித்தல் (பிரிவு 130). (4) கடமையை விட்டோடியவருக்கு புகலிடம் அளித்தல் (பிரிவு 136). (5) காவலிலிருந்து தப்பிய குற்றவாளிக்கு புகலிடம் அளித்தல் (பிரிவு 216). (6) கொள்ளையர் அல்லது கூட்டுக் கொள்ளையருக்கு புகலிடம் அளித்தல் (பிரிவு 216-A). (7) ஒருவர், தாம் சட்டப்பூர்வமாகக் கைது செய்யப்படுவதற்கு அவரே எதிர்த்தல் அல்லது தடுத்தல் (பிரிவு 224). (8) மற்றவர் எவரையேனும் சட்டப்பூர்வமாகக் கைது செய்வதை எதிர்த்தல் அல்லது தடுத்தல் (பிரிவு 225).

6. Harbouring - Write short notes. (புகலிடம் அளித்தல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Harbouring offenders - Write short notes. (குற்றச் செயல் புரிந்தோரை பாதுகாத்தல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

நாம் சென்ற வினாவில் குற்றத்திற்கு பின் துணையரில் புகலிடம் அளிக்கும் (Harbour) குற்றத்தை செய்பவர்கள், முதலிடம் வகிப்பது கண்டோம். எனவே புகலிடம் அளித்தல் என்பதற்குண்டான வரையறையை நாம் காண வேண்டியது இங்கு அவசியமாக உள்ளது.

புகலிடம் - பிரிவு 52-A-ன் வரையறை:

புகலிடம் அளித்தல் என்றால், குற்றவாளிகளை மறைத்து வைத்திருந்து, அவர்களை தண்டனையிலிருந்து தப்பிக்க வைத்தல் ஆகும். இதனைப் பற்றி, பிரிவு 52-A பின்வருமாறு கூறுகிற்து.

"157-ஆவது பிரிவிலும் 130-ஆவது பிரிவிலும் புகலிடம் அளிக்கப் பட்டவரின் மனைவி அல்லது கணவரால் புகலிடமளிக்கப்படும் சந்தர்ப்பத்தில் தவிர 'புகலிடம் அளித்தல்' என்னும் சொல் ஒருவருக்கு தங்குமிடம், உணவு, பானம், பணம், உடை, ஆயுதங்கள், வெடிமருந்து அல்லது வாகன வசதி வழங்குவதையோ அல்லது இந்தப் பிரிவில் விவரிக்கப்பட்ட அதே வகையிலானாலும் இல்லாவிட்டாலும் கைது செய்வதைத் தவிர்க்க எந்த வழியிலேனும் ஒருவருக்கு உதவி செய்வதையோ உள்ளடக்கும்"

புகலிடம் அளிப்பவருக்கு (Harbouring Offender) தண்டனை:

புகலிடம் அளிக்கப்பட்ட குற்றவாளி மரண தண்டனைக் குற்றம் புரிந்திருந்தால், புகலிடம் அளித்தவருக்கு அய்ந்து ஆண்டுகள் சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும். இதே, ஆயுள் தண்டனைக்கோ அல்லது 10 ஆண்டு சிறைக் காவலுக்கோ உண்டான குற்றமாக இருந்தால், புகலிடம் அளித்தவருக்கு மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும். இதே ஓராண்டிலிருந்து 10 ஆண்டுகளுக்கு மேற்படாத சிறைக் காவல் அளிக்கப்படக்கூடிய குற்றத்தினை புகலிடம் அளிக்கப்பட்ட குற்றவாளி புரிந்திருந்தால், புகலிடம் அளிக்கப்பட்டவருக்கு அளிக்கப்பட்ட தண்டனையில் உச்சகால வரம்பில் நான்கில் ஒரு பங்கு காலம் சிறைக் காவல் தண்டனையாக விதிக்கப்படும். **(பிரிவு 212)**

எடுத்துக்காட்டு:

B என்பவர் கூட்டுக் கொள்ளை புரிந்திருக்கிறார் என்பது A-க்குத் தெரியும். இதனைத் தெரிந்துகொண்டே, B-யை தண்டனையிலிருந்து தப்புவிக்க அவரை A மறைத்து வைக்கிறார். B-க்கு ஏற்கனவே ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. ஆகவே A-க்கு மூன்று ஆண்டுகள் வரை சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்பட்டது.

முடிவுரை:

குற்றவாளிக்கு உறைவிடம், உணவு, உடை, பணம், ஆயுதங்கள், வாகன வசதி முதலிய வசதிகள் செய்து கொடுத்தல், புகலிடம் அளித்தல் என்று கூறப்படும். கணவன் குற்றவாளி என்று அறிந்தே புகலிடம் அளிக்கும் மனைவி, புகலிடம் அளித்தல் என்ற குற்றத்தைச் செய்தவர் ஆகார். அதுபோலவே மனைவிக்குப் புகலிடம் வழங்கும் கணவனும் அக்குற்றத் திற்காகத் தண்டிக்கப்படமாட்டான். இது பிரிவு 52-A-க்கு உள்ள விதிவிலக்காகும் (exception).

(உ) குற்ற உடந்தை (Abetment)

7. Who is an abettor? Whether an abettor is liable when the act abetted is not committed? What is abetment of an abetment? (குற்ற உடந்தையர் என்பவர் யார்? குற்றம் செய்ய செயலை செய்யவில்லையெனில் குற்ற உடந்தையர் பொறுப்பாவாரா? குற்ற உடந்தைக்கு உடந்தையாயிருத்தல் என்றால் என்ன?)

(அல்லது)

Explain the offence of abetment under the Indian Penal Code. (இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் குற்ற உடந்தைக் குற்றத்தை விளக்குக.)

(அல்லது)

(a) Explain as to when a person is said to abet the doing of a thing.

(b) A instigates B to murder C. B refuses to do so. Is A guilty of the offence of abetment? Discuss and decide.

(அ) எப்பொழுது ஒரு நபர் ஒன்றினைச் செய்ய குற்ற உடந்தையாக இருப்பதாக கருதப்படுவார் என்பதை விளக்கு.

(ஆ) Cயைக் கொல்ல A, Bயைத் தூண்டுகிறார். B அவ்வாறு செய்ய மறுக்கிறார். இங்கு A உடந்தைக் குற்றம் புரிந்தவரா? விவாதித்து முடிவு செய்க.[1]

முன்னுரை:

நாம் ஏற்கனவே கண்ட குற்றத்திற்கு முன் துணையர் (Accessory before the fact) எனும் வகையினருள், குற்ற உடந்தையர் வருகின்றனர். ஏனெனில், நிகழ உள்ள குற்றத்திற்கு குற்ற உடந்தையர் துணை நிற்கின்றனர். இக்குற்ற உடந்தையின் அடிப்படை வகைமுறைகளைப் பற்றி இந்திய தண்டனைச் சட்டத்தின் 107, 108, 108-A, 109 ஆகிய பிரிவுகள் விளக்குகின்றன. அப்பிரிவுகளைக் காண்போமா?

எது குற்ற உடந்தையாகிறது? (அல்லது) ஒரு செயலைச் செய்ய எப்பொழுது ஒரு நபர் குற்ற உடந்தையாக இருப்பதாக கருதப்படுவார்? (When a person is said to abet the doing of a thing?) (பிரிவு 107):

பிரிவு 107: ஒன்றினைச் செய்வதற்கு ஒருவர் எப்பொழுது உடந்தையாகி இருக்கிறாரென்றால், அவர் (A person abets the doing of a thing who) -

---

1. A உடந்தைக் குற்றம் புரிந்தவரே. விரிவாக இவ்வினாவின் விடையில் குற்ற உடந்தையர்' (பிரிவு 108) எனும் தலைப்பின் கீழான 2-வது விளக்கத்தில் முதல் எடுத்துக்காட்டைக் கவனிக்கவும்

முதலாவதாக,– அச்செயலைச் செய்ய எவரையேனும் தூண்டுதல் **(instigates);** *(தூண்டுதல்)* அல்லது

இரண்டாவதாக,– அச்செயலைப் புரிய ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட நபர்களுடன் சதியில் **(conspiracy)** ஈடுபடுதல்; அச்சதியின் விளைவாக ஒரு செயலோ அல்லது சட்ட விரோதமான ஒரு செயல் தவிர்ப்போ நிகழ்த்தி அச்செயலைச் செய்தல்; *(சதி)* அல்லது

மூன்றாவதாக,– செய்கை அல்லது செயல் தவிர்க்கை ஏதேனு மொன்றால் அந்தச் செயலைச் செய்வதற்கு கருத்துடன் உதவி **(intentionally aids)** செய்தல். *(உதவி).*

விளக்கம் 1 : வேண்டுமென்றே திரித்துக் கூறுவதன் மூலம் அல்லது தாம் வெளியிடக் கட்டுப்பட்டுள்ள ஒரு முக்கியமான பொருண்மையை வேண்டுமென்றே மறைப்பதன் மூலம் ஒன்றைத் தன்னிச்சையாக செய்விக் கின்ற (causes) அல்லது முயன்று பெறுகிற (procures) அல்லது செய்விக்க அல்லது முயன்று முடிக்க முயல்கிற (attempts to cause or procure) ஒருவர், அந்தச் செயலைச் செய்யத் தூண்டுவதாகச் (instigate) சொல்லப்படுவார்.

எடுத்துக்காட்டு : Z என்பவரைக் கைது செய்ய A எனும் பொது அலுவலருக்கு ஒரு நீதிமன்றத்தால் பிடியாணை வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பொருண்மையையும் மற்றும் C என்பவர் Z என்பவர் அல்லர் என்பதையும் தெரிந்திருந்தும், A-விடம் Cயை Z என்று வேண்டுமென்றே B என்பவர் எடுத்துரைக்கிறார். இதன் மூலம் கருத்துடனேயே C-யை, A கைது செய்யுமாறு செய்விக்கிறார். இங்கு Cயைக் கைது செய்யத் தூண்டியதன் மூலம் B குற்ற உடந்தைக் குற்றம் செய்தவராகிறார்.

விளக்கம் 2 : ஒரு செய்கை செய்யப்படுவதற்கு முன்பு, அல்லது செய்யப்படும் காலத்தில் அந்தச் செய்கையைச் செய்வதற்கு வசதி செய்யும் பொருட்டு எதையேனும் செய்து, அதன் மூலம் அது செய்யப்படுவதற்கு வசதி செய்கிற எவரொருவரும், அந்தச் செய்கையைச் செய்தலுக்கு உதவுவதாகச் சொல்லப்படுவார்.

சில வழக்குகள்:

Kartar Singh v. State of Punjab[1] எனும் வழக்கில் கணவனுடன் சேர்ந்து கொண்டு அவரது மனைவியை கொடுமைப்படுத்துபவர்கள், பிரிவு 107-ன் மூன்றாவது உட்கூறின்படி அக்கணவனுக்கு கருத்துடன் உதவி புரிபவர்கள் (intentionally aids) என்பதில் அடங்குவர் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Nallammal v. State[2] எனும் வழக்கில் குற்றச் செயலின் பின்னணியில்

1. 1994 (2) ALL India Cr. L.R. 332 (S.C.)
2. A.I.R. 1999 S.C. 2556

ஏதும் செய்யாமல், குற்றம் நிகழும் சமயத்தில் வெறுமனே ஆஜராகியிருப்பதைக் கொண்டு மட்டும், ஒருவரை பிரிவு 107-ன் கீழான குற்றத்தைப் புரிந்தவர் எனக் கூற முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

மேற்கண்டவற்றை ஆராயும் பொழுது, குற்ற உடந்தையானது மூன்று செயல்களால் நடைபெறுகிறது. அவை, (1) தூண்டுதல் (2) சதி (3) உதவி. இனி குற்ற உடந்தையர் யார் என்பதைப் பார்ப்போமா?

குற்ற உடந்தையர் (Abettor) - பிரிவு 108:

ஒரு குற்றத்தைச் செய்வதில் உடந்தையாயிருக்கிறவரோ அல்லது ஒரு குற்றத்தில் முடியும் எனக் கூடிய செயலுக்கு உடந்தையாயிருக்கிறவரோ அக்குற்றத்திற்கு உடந்தையர் (abettor) எனப்படுகிறார். ஆனால், அக் குற்றமானது குற்ற உடந்தையருக்கு உள்ள அதே கருத்துடனும் அறிவுடனும் அதைச் செய்ய சட்டப்படி திறனுடைய நபரால் புரியப்பட்டிருக்க வேண்டும், என்று **பிரிவு 108** கூறுகிறது.

விளக்கம் 1 : ஒரு செயலை சட்ட விரோதமாக செய்யாமல் இருப்பதற்கு உடந்தையாக இருப்பதும் குற்றமாகும்.

விளக்கம் 2 : ஒரு குற்றச் செயலுக்கு உடந்தையாக இருந்து அதனால் அச்செயல் நிகழாவிடினும், அல்லது அச்செயலின் விளைவு குற்றமாக அமையாவிட்டாலும், குற்ற உடந்தைக் குற்றம் நிகழ்ந்ததாகவே கொள்ளப் படும். அதாவது, குற்ற உடந்தைக் குற்றத்திற்கு உடந்தையாக இருந்து ஒரு செயல் நிகழ வேண்டும் என்பதோ, அல்லது அச்செயலின் விளைவு குற்றமாக முடிய வேண்டுமென்பதோ அவசியமில்லை.

(எ.கா.) 1. Cயைக் கொல்ல A, Bயைத் தூண்டுகிறார். B அவ்வாறு செய்ய மறுக்கிறார். எனினும் Cயைக் கொலை செய்ய Bக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காக A தண்டிக்கப்படுவார்.

2. Dயைக் கொல்ல A, Bயைத் தூண்டுகிறார். அதன் விளைவாக B, Dயைக் கத்தியால் குத்தி விடுகிறார். D அக்காயத்திலிருந்து குணமடைகிறார். எனினும் Dயை கொலை செய்ய தூண்டிவிட்ட குற்றத்திற்காக A தண்டிக்கப்படுவார்.

விளக்கம் 3 : எவருக்கு உடந்தையாய் இருந்தாரோ அவர் சட்டப்படி குற்றமொன்றைச் செய்யும் திறனுடையவராக இருக்க வேண்டும் என்பதோ அல்லது உடந்தையாயிருப்பவருக்குள்ள அதே குற்றக் கருத்தை அல்லது அறிவைக் கொண்டிருக்க வேண்டும் என்பதோ அவசியமில்லை.

மேற்படி விளக்கத்தின் உட்பொருள் யாதெனில், எவரையும் (பித்துப்பிடித்தவர், 18 வயதிற்குட்பட்டவர், குடிகாரர், மூடர்) குற்றம் புரிய தூண்டலாம். அவர் அக்குற்றம் புரிய திறனுடையவராக இருக்க

வேண்டுமென்பதில்லை அல்லது ஒரே குற்றக் கருத்து அல்லது அறிவு கொண்டிருக்க வேண்டுமென்பதும் அவசியமில்லை. பித்து நிலை உள்ளிட்ட மேற்கண்ட கபடமற்ற சூழலில் உள்ள ஏதுமறியாதவர்கள், சில சமயங்களில் குற்ற உடந்தையர்களின் கைப்பாவைகளாகின்றனர். அதற்கு குற்ற உடந்தையரே உண்மையான பொறுப்பாளி ஆவார்.

விளக்கம் 4 : ஒரு குற்றத்திற்கு உடந்தையாக இருப்பது ஒரு குற்றமாக இருப்பதால், அத்தகைய உடந்தைக்கு உடந்தையாக இருப்பதும் கூட ஒரு குற்றமாகும் (The abetment of an offence being an offence, the abetment of such an abetment is also an offence).

(எ.கா). Z என்பவரைக் கொலை செய்ய C என்பவரைத் தூண்டும்படி B என்பவரை A என்பவர் தூண்டுகிறார். அவ்வாறே Z-ஐக் கொலை செய்யும்படி C-யை B தூண்டுகிறார் மற்றும் B-யின் தூண்டுதலின் விளைவாக C அக்குற்றத்தைச் செய்கிறார். (எனவே கொலைக் குற்றத்திற்குண்டான தண்டனைக்கு C உள்ளாகிறார்.) இங்கு Cயை கொலை செய்ய தூண்டிய Bயும், குற்ற உடந்தையர் எனும் முறையில் அதே கொலைக் குற்றத்திற் குண்டான தண்டனைக்குள்ளாகிறார். அதுபோல் Z-ஐக் கொலை செய்ய C-யை தூண்டும்படி B என்பவரை தூண்டிய A-யும், அதே கொலைக் குற்றத்திற்கான தண்டனைக்குள்ளாகிறார். எனவே குற்ற உடந்தைக்கு உடந்தையாக இருத்தலும் ஒரு குற்றமேயாகும்.

விளக்கம் 5 : சதியின் மூலமாக உடந்தைக் குற்றத்தைச் செய்வதற்கு அதைச் செய்கிறவருடன் சேர்ந்து உடந்தையாயிருப்பவர், திட்டமிட வேண்டும் என்பது அவசியமில்லை. எந்தச் சதியைத் தொடர்ந்து அக்குற்றம் செய்யப்படுகிறதோ அந்தச் சதியில் அவர் ஈடுபட்டிருப்பாரானால் அது போதுமானது.

குற்ற உடந்தையின் ஐந்து முக்கிய ஆக்கக் கூறுகள் (Ingredients):

1. சட்டப்படி செய்ய வேண்டியதைச் செய்யாதிருப்பதற்கு உடந்தையாக இருப்பதும், குற்ற உடந்தையாகும்.

2. ஒரு குற்றச் செயலுக்கு உடந்தையாக இருந்து அதனால் அச்செயல் நிகழாவிடினும், அல்லது அச்செயலின் விளைவு குற்றமாக அமையா விட்டாலும், குற்ற உடந்தைக் குற்றம் நிகழ்ந்ததாகவே கொள்ளப்படும்.

Troylukho Nath Chowdry[1] என்ற வழக்கில் A என்பவன் B என்பவனின் சொத்தை திருட அவனுடைய பணியாளான C-யின் உதவியை நாடுகின்றான். C இதை தன் பணித்தலைவரான B-யிடம் தெரிவிக்கிறான். A-யை தண்டனைக்குள்ளாக்க வேண்டும் என்ற நோக்கில் C-யை, A-க்கு உதவி செய்யும்படி B தெரிவிக்கிறான். இங்கு எந்த குற்றமும் நடைபெறவில்லை யென்றாலும் A குற்ற உடந்தைக் குற்றத்திற்குள்ளாவான் என முடிவு செய்யப்பட்டது.

1. டிராய்லுகோ நாத் சவ்திரி வழக்கு (1878) 4 Cal. 366

3. குற்ற உடந்தை குற்றம் புரியும் நபர் சட்டத் தகுதி பெற்றிருக்க வேண்டிய அவசியமில்லை. அதுபோல் குற்றம் புரிபவன் கொண்டுள்ள அதே கருத்தை கொண்டிருக்க வேண்டுமென்பதும் அவசியமில்லை.

Ram Charan[1] என்ற வழக்கில் A என்பவன் C என்பவனுக்குச் சில மரங்களை விற்பனை செய்கிறான். இந்த மரங்கள் உண்மையில் வேறொருவருக்குச் சொந்தமானவை என்பது C என்பவனுக்குத் தெரியாவிட்டாலும், B என்பவனுக்குத் தெரியும். இந்த மரங்கள் வெட்டி வீழ்த்தப்பட்டு எடுத்துச் செல்லப்பட வேண்டுமென்ற கருத்துடன் C-க்கு விற்கப்பட்டன. இங்கு B திருட்டுக்கு உடந்தையாக இருந்தான் எனக் கொண்டு அவன் குற்றமிழைத்தவன் என்று தீர்ப்பு வழங்கப்பட்டது.

4. குற்ற உடந்தைக்கே உடந்தையாக இருப்பதும் குற்றமே ஆகும்.

5. சதி நடைபெற உடந்தையாக இருக்கும் குற்ற உடந்தையாளர் அச்சதியின் விளைவால் நடைபெறும் குற்றத்தில் பங்கு பெற வேண்டும் என்பதில்லை.

குற்ற உடந்தைக்குத் தண்டனை - பிரிவு 109:

எந்தக் குற்றம் நடைபெற உடந்தையாக இருக்கிறாரோ அந்தக் குற்றத்திற்கு இந்திய தண்டனைச் சட்டம் கூறும் தண்டனையை குற்ற உடந்தையாளரும் அடைய வேண்டும், என்று **பிரிவு 109** கூறுகிறது. ஆனால் ஒரு குறிப்பிட்ட குற்ற உடந்தைக்கான தண்டனை குறித்து இந்திய தண்டனைச் சட்டமானது, வெளிப்படையான வகைமுறைகள் ஏதும் செய்திருப்பின், அதற்கு அத்தண்டனையே பொருந்தும்.

மேலும் சில வழக்குகள்:

Lord Audley's Case[2] - இப்பிரபலமான வழக்கில் ஒரு கணவன், தனது வீட்டு சமையல்காரனை விட்டு தனது மனைவியை வன்புணர்வு (rape) செய்விக்கச் செய்தான். அக்கணவன் குற்ற உடந்தைக்காக தண்டிக்கப் பட்டான்.

Director of Public Prosecution v. Morgan[3] - இம்முக்கிய வழக்கில் மோர்கான் என்பவன், தனது மூன்று நண்பர்களை விட்டு தன் மனைவியை வன்புணர்ச்சிக்கு உட்படுத்தினான். இங்கு வன்புணர்ச்சிக்கு மேற்படி மோர்கான் உடந்தையாக உள்ள குற்றத்தை புரிந்ததாக இங்கிலாந்தின் நீதிப் பெருமகனார்கள் அவை (House of Lords) தீர்ப்பளித்தது.

Manbir Singh v. State of U.P.[4] எனும் இந்திய வழக்கொன்றில் L

1. (1898) A.W.N. 147
2. 1931 3 St. Tr. 401
3. 1975 2 All. E.R. 347
4. 1994 S.C.C. (Cr.) 1150 at p. 1151

என்பவர் குண்டுகள் நிரம்பிய துப்பாக்கியை கையில் வைத்திருந்தார். இதை தெளிவாக அறிந்திருந்த A என்பவர் B என்பவரைக் காட்டி, மேற்படி L என்பவரிடம், **"அவனைத் தீர்த்துக் கட்டு" (Maro salo ko)** என்று இந்தி மொழியில் கூறினான். இங்கு B-யைக் கொல்ல L என்பவரை மேற்படி A தூண்டியுள்ளது தெளிவாக நிரூபணமாகிறது. எனவே, A என்பவர் கொலைக் குற்றத்திற்கு உடந்தையானவர் என்று கூறி, அவருக்கு பிரிவு 302 r/w 109-ன் கீழ் உச்ச நீதிமன்றம் ஆயுள் தண்டனை வழங்கியது.

குற்ற உடந்தைக்கான செயல் நிகழாது போனால், குற்ற உடந்தையர் தண்டிக்கப்படுவாரா?

தண்டிக்கப்படுவார் என்று பிரிவு 108-ன் கீழான 2-வது விளக்கம் கூறுகிறது. (முன் சென்ற 'குற்ற உடந்தையர்' எனும் தலைப்பில் நாம் விரிவாகக் கண்டுள்ளோம்)

குற்ற உடந்தைக்கு உடந்தையாக இருப்பது ஒரு குற்றமா?

ஆம். இது குறித்து நாம் ஏற்கனவே 'குற்ற உடந்தையர்' எனும் தலைப்பின் கீழான 4-வது விளக்கத்தில் விரிவாகக் கண்டுள்ளோம்.

8. (a) What are the essentials of criminal abetment?

(b) A in India, instigates B a foreigner in America to commit a murder in London. Decide.

(அ) குற்ற உடந்தையின் முக்கிய கூறுகள் யாவை?

(ஆ) இந்தியாவிலுள்ள 'அ' என்பவர், அமெரிக்காவிலுள்ள 'ஆ' என்னும் அயல்நாட்டினரை இலண்டனில் ஒரு கொலை செய்யும்படி தூண்டுகிறார். ஆராய்ந்து தீர்ப்பைக் காண்க.

(அ) முந்தைய வினாவின் விடையில் காண்க.

(ஆ) இந்தியாவிலுள்ள 'அ' என்பவர், அமெரிக்காவிலுள்ள 'ஆ' என்னும் அயல்நாட்டினரை இலண்டனில் ஒரு கொலை செய்யும்படி தூண்டுகிறார். இதில் 'அ' என்பவர் கொலைக் குற்றத்திற்கு உடந்தையாக இருந்தவர் எனக் கூறப்பட்டு தண்டிக்கப்படுவார். இதைத்தான் **பிரிவு 108-A** தெளிவாக பின்வருமாறு கூறுகிறது. அதாவது, "இந்தியாவில் செய்யப்பட்டால் ஒரு குற்றமாக அமையும் செயல் எதையேனும் இந்தியாவிற்கு வெளியேயும், அப்பாலும் செய்வதற்கு இந்தியாவில் உடந்தையாயிருக்கிற ஒருவர், இந்தச் சட்டத்தின் (இந்திய தண்டனைச் சட்டத்தின்) பொருளின்படி குற்றமொன்றுக்கு உடந்தையாகிறார்" என **பிரிவு 108-A** விளக்கமாக கூறுகிறது.

உதாரணமாக, ஜப்பானில் உள்ள B எனும் ஓர் அயல்நாட்டினரை ஜப்பானில் (அல்லது சிங்கப்பூரில்) ஒரு கொலையைச் செய்யும்படி, இந்தியாவிலுள்ள A என்பவர் தூண்டுகிறார். கொலைக்கு உடந்தையாக இருக்கும் குற்றத்தை A செய்தவராவார்.

(ஊ) குற்றமுறு சதி (Criminal Conspiracy)

9. Define Criminal Conspiracy. Whether it is actionable per se? Refer to decided cases. (குற்றமுறு சதியின் இலக்கணம் கூறுக. குற்றமுறு சதிக்காக மட்டும் நடவடிக்கை எடுக்க முடியுமா? முடிவு செய்யப்பட்ட வழக்கினை குறிப்பிடுக.)

(அல்லது)

Define Criminal Conspiracy. Distinguish between criminal conspiracy and abetment by conspiracy. (சதிக் குற்றத்தை வரையறுக்க. குற்றமுறு சதியையும், சதி மூலமான உடந்தையையும் வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

When overt act is necessary in order to punish a person for conspiracy? (குற்றச் சதி குற்றத்திற்கு தண்டனைக்குள்ளாவதற்கு எப்பொழுது வெளிப்படையான செயல்கள் தேவை?)

முன்னுரை:

இந்திய தண்டனைச் சட்டத்தின் **பிரிவு 120-A** குற்றமுறு சதியை வரையறுக்கிறது. **பிரிவு 120-B** அதற்கான தண்டனையைக் கூறுகிறது.

குற்றமுறு சதி - பிரிவு 120-A கூறும் வரையறை:

பிரிவு 120-A : இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர்கள்,-

(1) சட்டத்திற்கு முரணான ஒரு செய்கையை, அல்லது

(2) சட்ட முரணான வழியில், சட்டத்திற்கு முரணல்லாத ஒரு செய்கையை செய்ய உடன்படும் பொழுது, அல்லது செய்விக்கும் பொழுது அத்தகைய உடன்படிக்கை ஒரு குற்றமுறு சதி எனப்படும்.

குற்றமுறு சதியினைப் பொறுத்தவரை, ஒரு செயலைச் செய்ய இருவர் உடன்பட்டிருக்க வேண்டியது மிக முக்கியமானதாகும். உடன்படிக்கைதான் குற்றமுறு சதியின் அஸ்திவாரமாகும். அதன்படி அமைந்த செயலைப் பற்றி சட்டம் அவ்வளவாக கவலை கொள்வதில்லை.

குற்றமுறு சதி - பிரிவு 120-B கூறும் தண்டனை:

மரண தண்டனை, ஆயுள் தண்டனை, அல்லது இரண்டு ஆண்டுகள், அல்லது அதற்கு மேற்பட்ட ஒரு கால அளவுக்குக் கடுங்காவல் விதித்துத் தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றத்தைச் செய்வதற்கான குற்றமுறு சதியில் பங்கு கொள்கிற எவரொருவரும், அத்தகைய ஒரு குற்றமுறு சதியைத் தண்டிப்பதற்கு இந்திய தண்டனைச் சட்டத்தில் தனிப்பட்ட வகைமுறை எதுவும் செய்யப்படாதவிடத்து, அத்தகைய குற்றத்திற்கு உடந்தையாயிருந்தது போன்றே அவர் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மேலே சொன்ன தண்டனைக்குரியவையில்லாத வேறு குற்றங்களுக்

கென சதி செய்யப்பட்டிருந்தால், சதியில் சம்பந்தப்பட்டவர்களுக்கு ஆறு மாதங்களுக்கு மேற்படாத சுருங்காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

குற்றமுறு சதிக்காக மட்டும் நடவடிக்கை எடுக்க முடியுமா?

குற்றமுறு சதிக்காக மட்டுமே நடவடிக்கை எடுக்கவியலும். சதியினால் **குற்றச் செயல் எதுவும் வெளிப்படையாக (overt act) நடைபெற வேண்டிய அவசியமில்லை.** குற்றச் செயலை செய்வதற்கு இருவர் உடன்பட்டாலே போதும். அதனைக் கொண்டே குற்றமுறு சதிக்காக தண்டிக்கலாம்.

(எ.கா.) A என்பவரும் B என்பவரும் சேர்ந்து C என்பவருக்கு நஞ்சு கொடுத்து கொல்ல வேண்டும் என்று சதி செய்கின்றனர். அதைத் தொடர்ந்து அவர்கள் ஏதேனும் செயலை நிறைவேற்றும் பொருட்டு செயலில் ஈடுபட்டனர் என்று நிரூபிக்க வேண்டியதில்லை. இருவரும் அதற்கு உடன்பட்டனர் என்பதற்கான திட்டத்தை (plot) நிரூபித்தாலே போதுமானது.

முக்கியமான வழக்குகள்:

Reg. v. Gill[1] என்ற வழக்கில், குற்றமுறு சதியே ஒரு குற்றமாகும். எனவே, குற்றமுறு சதி ஒன்று செய்யப்பட்டதென்றும், அதன் நோக்கம் சட்ட விரோதமானது என்றும் நிரூபித்தாலே போதும். குற்றமுறு சதியைத் தொடர்ந்து ஒரு குற்றச் செயல் செய்யப்பட்டுள்ளது என்று நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை என்று கூறப்பட்டது. சுருங்கக்கூறின், சதிக் குற்றத்தின் பேரில் நடவடிக்கை எடுக்க, நபர்களிடையே ஏற்பட்ட உடன்படிக்கை மிக அவசியம். சதிக் குற்றத்தின் சாராம்சமே உடன் படிக்கைதான் என்று கூறப்பட்டது.

Noor Mohammed Yusuf Momin v. The State of Maharashtra[2] - இவ்வழக்கில் "சதித்திட்டம் சிலரால் தொடங்கப்படலாம், சிலர் அதில் கலந்து கொள்ளாமல் இடையில் கூட வந்து சேரலாம், எனினும் அது முறிந்து போவது வரையில் திட்டம் தொடர்வதாகவே கொள்ளப்படும்" எனப்பட்டது.

அலிப்பூர் சதி வழக்கு **(Alipur Conspiracy Case)** என்றழைக்கப்படும் **Barindra Kumar Ghose v. Emperor**[3] என்ற வழக்கில், தலைமை நீதிபதி ஜென்கின்ஸ் கூறியதாவது. "சதிக் குற்றத்தை நிலைநாட்டுவதற்கு உடன்பாடு இருக்க வேண்டும். ஆனால் குற்றத்தில் ஈடுபட்டவர்கள் நேரடியாக சந்தித்தார்கள் என்பதை நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. அவர்களின் கருத்தொருமித்த சதித் திட்டத்தை சுற்றுப்புற சூழ்நிலைகளிலிருந்து அனுமானிக்க முடியும்."

1. 2 B and Ald. 204 TAC
2. A.I.R. 1971 S.C. 885
3. 1925 I.L.R. Cal. Vol. 52 p.197

Fakhruddin v. The State of Madhya Pradesh[1] என்ற வழக்கில், ஃபக்கிருதீனுடன் நால்வர் ஒரு குற்றத்தின் பொருட்டு விசாரிக்கப்பட்டனர். பின்னர் அந்நால்வர் விடுதலை செய்யப்பட்டனர். எனவே, மேற்படி நால்வர் விடுவிக்கப்பட்ட பின்னர் எவருடன் ஃபக்கிருதீன் சதியில் ஈடுபட உடன்பாடு செய்து கொண்டார் என்பதை நிரூபிக்க இயலவில்லை. எனவே அவர் விடுதலை செய்யப்பட்டார்.

Lennart Schussier and another v. Director of Enforcement and another[2] என்ற வழக்கில் அந்நிய செலாவணியை சட்ட விரோதமாக ஈட்டும் பொருட்டு உடன்பாடு செய்து கொண்டதற்காக இரு நபர்களும் அவர்களின் நண்பர்களும் குற்றம் சுமத்தப்பட்டனர். உடன்பாடு வெளிநாட்டில் ஏற்பட்டது. அப்போது செலாவணி சட்டம் அமலில் இல்லை. எனினும் அச்சட்டம் இந்தியாவில் செல்லுபடியான பின்னரும், முன்னர் ஏற்பட்ட உடன்பாட்டின்படி தொடர்ந்து சட்ட விரோதமான செயலில் ஈடுபட்டனர். வெவ்வேறு இடங்களில் செயல்பட்ட போதிலும், ஒரு உடன்பாட்டின் படியே செயல்பட்டதனால் அவர்கள் தண்டனைக்கு ஆளாக்கப்பட்டனர்.

State of Andhra Pradesh v. I.B.S. Prasad Rao and Others[3] - இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட நால்வரும், மத்திய கூட்டுறவு வங்கியில் பணிபுரிபவர்கள். இவர்கள் அனைவரும், போலியான வரைவோலைகள் (demand drafts) மற்றும் இரசீதுகளை தயார் செய்து தாங்கள் பணி புரியும் வங்கியை ஏமாற்ற சதித் திட்டம் தீட்டினர். இவர்களது இச்சதி கண்டறியப்பட்டு, இவர்கள் இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 420 r/w 120-B-ன்படி தண்டிக்கப்பட்டனர்.

V.C.Shukla v. State[4] எனும் வழக்கில் பிரிவு 120-B-ன் கீழான குற்றமுறு சதியை மெய்ப்பிக்க, குற்றமொன்றை புரிய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்களுக்கு இடையே உடன்படிக்கை ஒன்று இருந்தது என்பதற்கு நேரடி அல்லது சூழ்நிலைச் சாட்சியம் இருக்க வேண்டும் எனப்பட்டது. மேற்படி வழக்கில் அவ்வாறு ஏதும் இல்லாததால், குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டார்.

குற்றமுறு சதிக்கு வெளிப்படையான செயல் (overt act) எப்பொழுது தேவை?

நாம் முன்னரே கண்டபடி, ஆங்கில மற்றும் இந்திய தண்டனைச் சட்டப்படி, குற்றமுறு சதிக்கு வெளிப்படையான செயல்கள் ஏதும் நிகழத் தேவையில்லை. சட்ட முரணான ஒரு செய்கையை அல்லது சட்ட முரணான வழியில், சட்டத்திற்கு முரணல்லாத ஒரு செய்கையை செய்ய இருவர்

1. A.I.R. 1967 S.C. 1326
2. A.I.R. 1970 S.C. 549
3. A.I.R. 1970 S.C. 648
4. (1980) 2 S.C.C. 665

அல்லது அதற்கு மேற்பட்டவர் உடன்பட்டாலே போதும், அது குற்றமுறு சதியாகிவிடும். அந்த உடன்படிக்கையின்படி செயல் ஏதும் வெளிப்படையாக செய்யப்பட வேண்டிய அவசியமில்லை.

எனினும், குற்றமுறு சதியின் நோக்கமானது குற்றவியல் சட்டப்படி குற்றமாகாத ஒரு **தீங்குச் செயலை (tort)** அல்லது **வெறும் சட்ட முரணான தீங்குச் செயலை (merely illegal wrong)** செய்வதற்காக எனும் பொழுது, அக்குற்றமுறு சதிக்கு வெளிப்படையான செயல் தேவையாகிறது. எடுத்துக்காட்டாக, ஒப்பந்தம் ஒன்றை மீறும்படி ஒருவரைத் தூண்டும் பொழுது அல்லது தொழிலாளர்களை வேலை நிறுத்தத்தில் ஈடுபடும்படி தூண்டும்பொழுது, அதற்குண்டான சதியை மெய்ப்பிக்க வெளிப்படையான செயல் தேவையாகிறது.

குற்ற உடந்தைச் சதி மற்றும் குற்றமுறு சதி ஆகிய இரண்டுக்குமுள்ள வேறுபாடுகள் (Distinctions between abetment by Conspiracy and Criminal Conspiracy):

ஒரு குற்றமான செயலைச் செய்வதெனச் சதி செய்வதுதான் குற்ற உடந்தைச் சதியாகிறது. குற்றமல்லாத, ஆனால் சட்ட முரணான செயல் குறித்தும், சட்ட முரணான வழிகளைப் பின்பற்றுவது குறித்தும் சதி செய்யப்பட்டால், அது 'குற்றமுறு சதி' ஆகிவிடுகிறது. இது குற்ற உடந்தைச் சதி ஆவதில்லை. குற்ற உடந்தைச் சதியில் செய்வதற்கென ஒப்புக் கொள்ளப்பட்ட செயல் தண்டனைக்குரிய குற்றமாக இருக்க வேண்டும் ஆனால் 'குற்றமுறு சதியில்' செய்வதற்கென ஒப்புக்கொள்ளப்பட்ட செயல் சட்ட முரணான செயலாக இருந்தாலே போதுமானது. 'குற்ற உடந்தைச் சதி'யில் சதியின் விளைவாக ஏதாவது ஒரு செயல் செய்யப்பட்டிருத்தல் வேண்டும். இல்லையெனில் குற்ற உடந்தைச் சதி எழுவதில்லை. குற்றமுறு சதியில் அந்தச் சதியே குற்றமாகிவிடுகிறது. சதியின் பயனாக எந்தவிதச் செயலும் செய்யப்பட வேண்டிய அவசியம் இல்லை.

(எ) குற்ற முயற்சி (Criminal Attempt)

10. What stages precede the commission of a crime? State the law relating to attempt and distinguish it from preparation to commit a crime. When is mere preparation punishable? (ஒரு குற்றம் நிகழ்த்தப்படுவதற்கு முந்தைய நிலைகள் யாவை? முயற்சி குறித்தான சட்டத்தை எடுத்துரைத்து அதனை முன்னேற்பாட்டிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக. எப்போது வெறும் முன்னேற்பாடு தண்டிக்கப்படுகிறது?)

(அல்லது)

Discuss the law relating to attempt to commit a crime, bringing out the distinction between attempt and preparation. (குற்றமொன்றைச்

செய்வதற்காக முயற்சி செய்வது பற்றிய சட்டத்தை ஆராய்ந்து, குற்ற முயற்சிக்கும் முன்னேற்பாட்டிற்கும் இடையேயுள்ள வேறுபாட்டை எடுத்துரைக்க.)

(அல்லது)

Explain the stages which preced the commission of a crime. (ஒரு குற்றம் நிகழ்ந்து வருவதற்கு முன் உள்ள பல்வேறு நிலைகள் பற்றி விவாதி.)

(அல்லது)

Define "attempt to commit a crime". "The sections on attempt in the Indian Penal Code can be divided into three broad divisions". -Elucidate and explain the three broad divisions with illustrations. ('குற்றம் செய்ய முனைதலை' வரையறை செய்க. "குற்றம் செய்ய முனைதல் குறித்து இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பிரிவுகளை விரிவான முன்று பகுதிகளாகப் பிரிக்கலாம்". அந்த முன்று விரிவான பகுதிகளை எடுத்தியம்பி எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Attempt - Write short notes. (குற்ற முயற்சி - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Distinguish between Preparation and Attempt to commit an offence. (குற்றமொன்றைப் புரிய முன்னேற்பாடு செய்தல் மற்றும் முயற்சித்தலை வேறுபடுத்துக.)

முன்னுரை:

நினைப்பதையெல்லாம் நிகழ்த்திவிட முடிவதில்லை; கருதுவதெல்லாம் கை கூடுவதில்லை. எனவே குற்றங்கள் புரிய முனைபவர்களும் தங்கள் முயற்சியில் தோல்வியுறுவதுண்டு. குற்ற முயற்சியில் தோல்வியடைந்தவர் களைச் சட்டம் தண்டிக்காது போனால், அவர்கள் மீண்டும் மீண்டும் அம்முயற்சிகளில் இறங்குவதற்கு ஏதுவாகும். இது அவர்களை ஊக்க மளிப்பது போலாகிவிடும். எனவே, குற்ற முயற்சியை ஒரு தனிக் குற்றமாக இந்திய தண்டனைச் சட்டம் கொள்கிறது. திருடுவது குற்றமென்றால், திருட முயற்சிப்பதும் ஒரு குற்றமே. கொலை செய்வது கொடுங்குற்றமெனில், கொலை செய்ய முயற்சித்தலும் ஒரு குற்றமே. இவ்வாறு, ஒரு குற்றத்தைச் செய்ய முயலுவதும் தண்டிக்கத்தக்க தனிக் குற்றமாகிறது. சுருங்கக் கூறின், ஒரு குற்றம் எவ்வாறு தண்டனைக்குரியதாகிறதோ, அவ்வாறே குற்ற முயற்சியையும் தண்டனைக்குரியதாகவே சட்டம் கொள்கிறது.

ஒரு குற்றம் நிகழ்த்தப்படுவதற்கு முந்தய நிலைகள் (Stages precede the commission of a crime):

பொதுவாக ஒரு குற்றச் செயல் முற்றுப்பெற நான்கு நிலைகள் தேவைப்படுகின்றன. அவை, 1. கருத்து (Intention), 2. முன்னேற்பாடு (Preparation), 3. முயற்சி (Attempt), மற்றும் 4. செயல் (Commission)

எனவே, ஒரு குற்றம் நிகழ்த்தப்படுவதற்கு முந்தய நிலைகளாக, மேற்கண்ட நிலைகளில் முதல் மூன்றைக் குறிப்பிடலாம்.

1) கருத்து (Intention) : ஒரு மனிதனின் முயற்சிக்கு காரணமாயிருப்பது அவனுடைய எண்ணக் கருத்துகளே. அவ்வாறு கருதியதை அடைய, அவன் செயலில் ஈடுபடுகின்றான். ஆனால் எச்செயலுமின்றி, வெறும் கருத்தை மட்டும் சட்டம் தனது பார்வைக்கு எடுத்துக் கொள்வதில்லை. குற்றச் செயல் தொடராக் கருத்து, குற்றமென கொள்ளுவதற்கில்லை. எடுத்துக்காட்டாக, ஒரு நபர் குற்றமொன்றைப் புரிய கருதுகிறார் (intent) என்று வைத்துக் கொள்வோம். இங்கு அக்கருத்து ஒன்றை மட்டுமே வைத்து, அவரை தண்டிக்கவியலாது. ஏனெனில் இங்கு எவ்வித குற்றச் செயலும் நடைபெறவில்லை.

2. முன்னேற்பாடு (அல்லது) ஆயத்தம் (Preparation) : கருத்திற்கு அடுத்துவரும் நிலை முன்னேற்பாடு ஆகும். குற்றம் புரிய திட்டமிட்டுச் செயல்படுவதோ அல்லது அக்குற்றத்தை நிறைவேற்றுவதற்கான வழியையோ நடவடிக்கையையோ மேற்கொள்வதோ, முன்னேற்பாடு என்கிறோம். குற்றச் செயல் புரிய முன்னேற்பாடாக உள்ள நிலையையும் (அய்ந்து வகை குற்றங்களைத் தவிர [1]). தண்டனைச் சட்டம் தண்டிப்பதில்லை. எண்ணிய கருத்து முன்னேற்பாட்டிலேயே அழிந்து விடுமானால், அங்கு குற்றச் செயல் ஏதும் நடைபெறவில்லை என்பதாகத்தான் தண்டனைச் சட்டம் கொள்கிறது. மேலும் முன்னேற்பாட்டு நிலையால் மக்களுக்கு எவ்வித தீங்கும் ஏற்படுவதில்லை.

3. முயற்சி (Attempt) : முன்னேற்பாட்டிற்கு அடுத்த நிலையாக வருவது முயற்சியாகும். இம்முயற்சி நிலை குற்றச் செயலை நிகழ்த்துவதற்கு நேரடித் தொடர்புடன் இயங்குகின்றது. ஒரு நபர் தான் கருதியதை முடிப்பதன் பொருட்டு ஒரு செயலை வேண்டுமென்றே செய்யும் பொழுது, வேறு இடைப்பட்ட நிகழ்ச்சிகள் காரணமாக அவருடைய கருத்து எண்ணியபடி நிறைவேறாமற் போகிறது; எனினும் அவர் தன்னுடைய கருத்தை நிறைவேற்றற் பொருட்டு முயற்சித்தவரே ஆவார். இம்முயற்சியின் காரணமாக, மற்றவர்களின் உடலுக்கும் உடைமைக்கும் தீங்கு விளைகிறது. மக்களின் மனதில் பயத்தையும், பீதியையும் கிளப்பி விடுகிறது. எனவே முதலிரண்டு நிலைகளான கருத்து மற்றும் முன்னேற்பாட்டை தண்டனைச் சட்டம் தண்டிக்காது போனாலும், குற்ற முயற்சியை சட்டம் விழிப்புடன் இருந்து தண்டிக்கிறது. சுருங்கக்கூறின், இங்கு குற்றச் செயல் முற்றிலும் நடந்து முடிந்திருக்க வேண்டிய அவசியமில்லை. ஒருவரைத் தண்டிக்க அவரது குற்ற முயற்சி ஒன்றே போதும். மேற்கண்டவாறு தண்டிக்காது போனால், ஒரு முறை முயற்சி செய்து தோல்வியடைந்த குற்றவாளி, பிறகு நன்றாக திட்டம் தீட்டி தெளிவான முன்னேற்பாடுகளுடன் குற்றத்தை

1. அக்குற்றங்கள் எவை என்பதை அடுத்த வினாவின் விடையில் விரிவாகக் காண உள்ளோம். - ஆசிரியர்.

மீண்டும் மீண்டும் செய்யத் தலைப்படுவானல்லவா? எனவே, குற்ற முயற்சி தண்டனைக்குரியதாகிறது. அந்த வகையில், இந்திய தண்டனைச் சட்டம் பல்வேறு குற்ற முயற்சிகளை பல்வேறு பிரிவுகளின் வாயிலாகத் தண்டிக்கிறது.

4. செயல் (Commission) : ஒரு குற்றம் முற்றுப்பெற இறுதியாக வரும் நிலை, அக்குற்றச் செயலாகும். குற்ற முயற்சியையே தண்டிக்கும் சட்டம், குற்றச் செயலை தண்டிக்காது விட்டுவிடுமா? எனவே, மக்களின் உடலையும், உடைமையையும் காக்க, தண்டனைச் சட்டமானது பல்வேறு குற்றச் செயல்களை கடுமையாகத் தண்டிக்கிறது.

மூன்று பெரும் பகுதிகள் (Three broad divisions):

இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள 'குற்ற முயற்சி குறித்த சட்டப் பிரிவுகளை மூன்று பெரும் பகுதிகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவை வருமாறு.

I. ஒரே சட்டப் பிரிவிலேயே குற்றம் புரிதலும், குற்ற முயற்சியும் கூறப்பட்டிருந்து, அவை இரண்டிற்கும் ஒரே அளவிலான தண்டனை கூறப்பட்டிருக்கும் சட்டப் பிரிவுகள் இந்த முதல் பகுதியின் கீழ் வருகின்றன. அத்தகு சட்டப் பிரிவுகள் வருமாறு. **பிரிவு 121** (அரசிற்கெதிராக போர் தொடுத்தல் அல்லது முயற்சித்தல்), **பிரிவு 124** (குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநரைத் தாக்குதல் அல்லது தாக்க முயற்சித்தல்), **பிரிவு 124-A** (அரசுத் துரோகம் - sedation), **பிரிவு 130** (அரசுக் கைதி அல்லது போர்க் கைதியை சட்டப்பூர்வமான பாதுகாப்பிலிருந்து மீட்க முயலுதல்), **பிரிவு 131** (முப்படை வீரர்களை அவர்களது கடமையிலிருந்து பிறழச் செய்ய முயற்சித்தல்), **பிரிவு 152** (கலகம் முதலியவற்றை பொது ஊழியர் அடக்குகிற போது அவரை தடை செய்ய முயற்சித்தல்), **பிரிவு 152-A** (வெவ்வேறு சமய, இன, மொழி அல்லது சாதிகள் அல்லது சமூகங்களிடையே ஒற்றுமை யின்மை அல்லது பகையுணர்வை வளர்க்க முயற்சித்தல்), **பிரிவு 161** (பொது ஊழியர் கைக்கூலி பெற முயற்சித்தல்), **பிரிவு 162** (பொது ஊழியரை வசப்படுத்த எவரேனும் கைக்கூலி பெற முயற்சித்தல்), **பிரிவு 163** (பொது ஊழியரிடத்தில் சொந்த செல்வாக்கைச் செலுத்த எவரேனும் கைக்கூலி பெற முயற்சித்தல்), **பிரிவு 165** (பொது ஊழியர் தம்மால் நடத்தப்படும் அலுவலில் சம்பந்தப்பட்டவரிடமிருந்து விலை மதிப்புள்ள பொருளைப் பெற முயற்சித்தல்), **பிரிவு 196** (பொய்ச் சாட்சியத்தை பயன்படுத்த முயற்சித்தல்), **பிரிவு 197** (பொய்ச் சான்றிதழை உண்மையானதைப் போல் பயன்படுத்த முயற்சித்தல்), **பிரிவு 200** [பொய் என்று அறிந்தே ஓர் உறுதியுரையை (declaration) உண்மை போல பயன்படுத்த முயற்சித்தல்], **பிரிவு 213** (குற்றஞ்செய்தவரை தண்டனையிலிருந்து காப்பாற்ற வெகுமதி முதலியன பெற முயற்சித்தல்), **பிரிவு 224** (சட்டரீதியான காவலிலிருந்து தப்ப முயலுதல்), **பிரிவு 225** (வேறு ஒருவரை சட்டப்படி கைது செய்யும்பொழுது, தடுக்க அல்லது மீட்க முயலுதல்), **பிரிவு 239** (தாம் வைத்திருப்பது கள்ள

நாணயம் என்று அறிந்தே அதைக் கொடுக்க முயற்சித்தல்), **பிரிவு 240** (இந்திய நாணயத்தைப் போன்ற கள்ள நாணயத்தை பிறர் பெற்றுக் கொள்ளும்படி தூண்ட முயற்சித்தல்), **பிரிவு 251** [மாறுதல் (altered) செய்யப்பட்ட ஓர் இந்திய நாணயம் என்று அறிந்தே அதனை மற்றவர் பெற்றுக்கொள்ளும்படி தூண்ட முயற்சித்தல்], **பிரிவு 385** (அச்சுறுத்திப் பறிக்கும் பொருட்டு, காயம் விளையுமென்ற அச்சத்திற்கு ஒருவரை உள்ளாக்க முயற்சித்தல்), **பிரிவு 387** (அச்சுறுத்திப் பறிக்கும் பொருட்டு மரணம் அல்லது கொடுங்காயம் விளையுமென்ற அச்சத்திற்கு ஒருவரை உள்ளாக்க முயற்சித்தல்), **பிரிவு 389** (அச்சுறுத்திப் பறிக்கும் பொருட்டு ஒரு குற்றத்தைச் சுமத்தப் போவதாக ஒருவரை மிரட்ட முயற்சித்தல்), **பிரிவு 391** (கூட்டுக் கொள்ளையடிக்க முயற்சித்தல்), **பிரிவு 397** (மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிப்பதற்கான முயற்சியுடன் கூடிய கொள்ளை அல்லது கூட்டுக் கொள்ளை), **பிரிவு 398** (அபாயகரமான ஆயுதத்துடன் கொள்ளையடிக்க முயற்சி) மற்றும் **பிரிவு 460** (இரவில் பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழையும் பொழுது, எவருக்கேனும் மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிக்க முயற்சித்தல்).

மேற்கண்ட 27 வகையான குற்றங்கள் மேற்கண்ட பகுதியில் அடங்குகின்றன. இவற்றில், சம்பந்தப்பட்ட குற்றச் செயலும் அதே சமயத்தில் அதற்கான முயற்சியும் ஒரே சட்டப் பிரிவின் கீழாகவே, ஒரே அளவு தண்டனையுடன் தண்டிக்கப்படுகின்றன.

II. சில குற்றங்களுக்கான முயற்சிகள் தனிப்பட்ட சட்டப் பிரிவுகளின் வாயிலாகத் தண்டிக்கப்படுகின்றன. அவை,- கொலை முயற்சி (attempt to commit murder) **பிரிவு 307–ஆலும்**, மரணம் விளைவிக்கும் குற்ற முயற்சி (attempt to commit culpable homicide) **பிரிவு 308-ஆலும்**, தற்கொலை முயற்சி, (attempt to commit suicide) **பிரிவு 309–ஆலும்**, கொள்ளையடிக்க முயற்சித்தல் (attempt to commit robbery) **பிரிவு 393-ஆலும்** தண்டிக்கப் படுகின்றன.

III. மேற்கண்ட இரண்டு பகுதிகளில் கூறப்பட்டுள்ள குற்றங்களைத் தவிர, மேலும் பல குற்றங்கள் இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப் பட்டுள்ளன. ஆனால் அக்குற்றங்களுக்குண்டான முயற்சிக்கு தண்டனை விதிக்க தனியான சட்டப் பிரிவுகள் ஏதும் இந்திய தண்டனைச் சட்டத்தில் கொடுக்கப்படவில்லை. அக்குற்ற முயற்சிகளை எங்ஙனம் தண்டிப்பது? இதற்கு கை கொடுக்க இந்திய தண்டனைச் சட்டத்தின் இறுதிப் பிரிவாகிய 511 உதவிக்கு வருகிறது. இதில் குற்ற முயற்சி பற்றி பொதுவாகக் கூறப்பட்டு, அதற்கான தண்டனை வரையறுக்கப்பட்டுள்ளது. சுருங்கக்கூறின், இந்திய தண்டனைச் சட்டத்தில் தனியாக கூறப்படாமல், விடுபட்டுப்போன குற்ற முயற்சிகள் அனைத்தும் மேற்படி பிரிவு 511-ல் மறைமுகமாக கொண்டு வரப்பட்டுள்ளன. இதனை அப்பிரிவு 511-ஐ படிக்கும் பொழுதே உணரலாம். **அப்பிரிவைக் காண்போமா?**

பிரிவு 511 என்ன கூறுகிறது?

பிரிவு 511 : இந்திய தண்டனைச் சட்டப்படி ஆயுள் தண்டனை அல்லது மற்ற சிறைத் தண்டனை விதிப்பதற்குரிய ஒரு குற்றத்தைச் செய்ய முயல்கிற அல்லது அக்குற்றம் செய்வதை விளைவிக்க முயல்கிற மற்றும் அம்முயற்சியில் அந்தக் குற்றத்தைச் செய்வதற்கான ஒரு செய்கையைச் செய்கிற எவரொருவருக்கும், அந்த முயற்சிக்குத் தண்டனையாக, இந்தச் சட்டத்தில் வெளிப்படையாக வகை செய்யப்படாமலிருக்குமிடத்து, நிலவரத்திற்கேற்ப, ஆயுள் சிறைத் தண்டனையில் ஒரு பாதிவரை நீட்டிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறைத் தண்டனையோ அல்லது அந்த குற்றத்திற்கு வகை செய்யப்பட்டிருக்கும் சிறைத் தண்டனை வகை எதிலும் எவ்வளவு அதிக கால அளவுக்கு சிறைத் தண்டனை கொடுக்க முடியுமோ அதில் ஒரு பாதி அளவுக்கு தண்டனையோ அல்லது அந்தக் குற்றத்திற்கு வகை செய்யப்பட்ட அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்பட வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்: 1. A ஒரு பெட்டியை உடைத்து திறந்து சில நகைகளை திருட முயற்சி செய்கிறார். அப்பெட்டியை அவ்விதம் திறந்த பின்பு அதில் நகை எதுவும் இல்லை என்று காண்கிறார். எனினும் A பிரிவு 511-ன்படி குற்றவாளி ஆகிறார்.

2. A என்பவர் Z-ன் பையில் கைவிட்டு அவரது மணிபர்சை திருட முயற்சிக்கிறார். Z-ன் பையில் ஒன்றும் இல்லாததன் விளைவாக அந்த முயற்சியில் A தோல்வியடைகிறார். என்றாலும் A, பிரிவு 511-ன்படி குற்றவாளி ஆகிறார்.

முக்கியமான வழக்குகள்:

R. v. Goodall[1] என்ற வழக்கில் கருச்சிதைவு உண்டாக்க குற்றவாளி மாத்திரைகள் சிலவற்றைக் கொடுத்தார். ஆனால் மாத்திரைகளை உட்கொண்ட மாது கருத்தரிக்கவே இல்லை என்று பின்னாளில் தெரிய வந்தது. ஆகவே, மேற்படி குற்றவாளி கருச்சிதைவு உண்டாக்க முயற்சி செய்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டார்.

Abhayanand Mishra v. State of Bihar[2] என்ற வழக்கில் A என்பவர் தானொரு பட்டதாரி என்றும், தன்னை M.A., தேர்வினை தனியாக (Private) எழுத அனுமதி கொடுக்குமாறும் பல்கலைக்கழகத்திடம் விண்ணப்பித் திருந்தார். இது தொடர்பாக சில சான்றிதழ்களையும் அனுப்பியிருந்தார். ஆனால் அவர் ஒரு பட்டதாரியே அல்ல என்பது பின்னர் தெரிய வந்தது. உடன் பல்கலைக்கழகம் தனது அனுமதியை இரத்து செய்துவிட்டு அவர் மீது குற்ற வழக்கிட்டது. தனது குற்றம் முன்னேற்பாட்டு நிலையையே

1. 2 Cox C.C. 41
2. A.I.R. 1961 S.C. 1698

(Preparation) தாண்டவில்லை; ஆகவே தனது செயல் ஒரு குற்றமல்ல என A வாதாடினார். ஆனால் உச்ச நீதிமன்றம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. மாறாக **பிரிவு 420 r/w 511**-ன் கீழ் ஏமாற்ற முயற்சி செய்த குற்றத்திற்காக A-யை தண்டித்தது.

Sudhir Kumar Mukherjee v. State of W.B.[1] – இவ்வழக்கிலும், செய்யப்பட்ட செயல் ஒரு முன்னேற்பாடே தவிர, அது குற்ற முயற்சி நிலையை எட்டவில்லை என குற்றஞ்சாட்டப்பட்டவரால் வாதிடப்பட்டது. இவ்வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்ட சுதிர் குமார் முகர்ஜி என்பவர் நிறுவனமொன்றின் ஊழியர் ஆவார். அவர் பணி புரியும் நிறுவன விதிமுறைகளின்படி, நிறுவனத்திற்கு அளிக்கப்பட்ட சரக்குகளுக்காக அந்நிறுவனத்தின் சம்பந்தப்பட்ட அலுவலரும், அவரும் இரசீதில் (Challan) கையொப்பமிட்டால்தான், அச்சரக்குகளுக்குண்டான தொகையை சரக்கு அளித்தவருக்கு தர முடியும். இதை நன்கு அறிந்து கொண்ட அவர், சுண்ணாம்புக் கல் வியாபாரி ஒருவருடன் வஞ்சகக் கூட்டு (collusion) சேர்ந்து கொண்டு, தாம் பணிபுரியும் நிறுவனத்தை ஏமாற்றி பணம் பறிக்க கருதினார். மேற்படி சுண்ணாம்புக்கல் சரக்கு அளிக்கப்படாமலேயே, அவை அளிக்கப்பட்டதாக போலியாகக் காட்டி, அதனை பெற்றுக் கொண்டதாக இரசீதில் அந்நிறுவனத்தின் அலுவலரின் போலிக் கையெழுத்தை இட்டு, பின்னர் அந்த இரசீதை நிறுவனத்திடம் அளித்து பணம் பறிக்க முயன்றார். ஆனால் இடையிலேயே சுதிர் குமார் முகர்ஜி பிடிபட்டுவிட்டார். அப்பொழுது சரக்குகளைப் பெற்றுக்கொண்டதற்காக முதற்கண் அவர் தனது கையொப்பத்தையே நிறுவன விதிமுறைப்படி மேற்படி இரசீதில் போட்டிருக்கவில்லை. வழக்கு உச்ச நீதிமன்றம் வரை சென்றது. அங்கு சரக்குகள் உண்மையில் பெறப்படாமல் அவை பெறப்பட்டதாகக் காட்டும் பொருட்டு இரசீதில் கையொப்பமிடுவது ஒரு முன்னேற்பாடா அல்லது குற்ற முயற்சியா என்ற வினா எழுந்தது. உச்ச நீதிமன்றம், நாம் முன்கண்ட அபயானந்த மிஸ்ரா வழக்கின் தீர்ப்பினைப் பின்பற்றி, பின்வருமாறு கூறியது. அதாவது, சரக்கு அளித்தவர் தொகை பெறுவதற்கு வசதியாக அந்த இரசீதில் சுதிர் குமார் முகர்ஜி கையொப்பமிடுதலும் நிறுவன முத்திரையை (Seal) வைத்தலும் முற்றுப் பெற்றிருக்கவில்லையென்றாலும், அளிக்கப்படாத சரக்கிற்காக அவர் இரசீது தயார் செய்துள்ளதும், அதில் நிறுவன விதிமுறைப்படி சம்பந்தப்பட்ட அலுவலரின் சுருக்கொப்பத்தை பெற்றிருக்கும் செயலும், தான் பணிபுரியும் நிறுவனத்தை ஏமாற்றும் குற்றத்தைப் புரிய ஒரு திட்டவட்டமான அடியை எடுத்து வைத்துள்ளார் என்பதையே சுட்டிக்காட்டுகிறது. எனவே, இது முன்னேற்பாட்டு நிலையைத் தாண்டி குற்ற முயற்சி நிலையை அடைந்துவிட்டது என்று கூறி, சுதிர் குமார் முகர்ஜியை பிரிவுகள் 420 r/w 511-ன்படி ஏமாற்ற முயற்சித்த குற்றத்திற்காக உச்ச நீதிமன்றம் தண்டித்தது.

1. A.I.R. 1973 S.C. 2655

முன்னேற்பாடு மற்றும் குற்ற முயற்சி - வேறுபாடுகள் (Distinctions between Preparation and Attempt):

1. குற்றம் புரியக் கருதப்பட்டவுடன் அடுத்த நிலையாக வருவது முன்னேற்பாடு செய்தல் (preparation) ஆகும். அதற்கடுத்த நிலையாக வருவதுதான் குற்ற முயற்சி (attempt) ஆகும்.

2. வெறும் முன்னேற்பாட்டை மட்டும் தண்டனைச் சட்டம் தண்டிப்பதில்லை. ஆனால் வெறும் குற்ற முயற்சியை சட்டம் தண்டிக்கிறது.

3. இந்திய தண்டனைச் சட்டம் குற்றம் புரிய முன்னேற்பாடு செய்தலை அய்ந்து சூழ்நிலைகளில்[1] மட்டும் தண்டிக்கிறது. குற்ற முயற்சியை இந்திய தண்டனைச் சட்டம் பல்வேறு குற்றச் சூழ்நிலைகளில் தண்டிக்கிறது.

4. குற்றம் புரிய முன்னேற்பாடு செய்தலுக்கென தனிச் சட்டப் பிரிவு ஏதும் இந்திய தண்டனைச் சட்டத்தில் ஒதுக்கப்படவில்லை. ஆனால் இந்திய தண்டனைச் சட்டத்தால் குறிப்பாக தண்டிக்கப்படாத பிற குற்ற முயற்சிகளுக்கான தண்டனைகளை பிரிவு 511 தனியாக வரையறுக்கிறது.

எப்பொழுது வெறும் முன்னேற்பாடு தண்டிக்கப்படுகிறது?

(அடுத்த வினாவின் விடையில் காண்க)

முடிவுரை:

'முயற்சி திருவினையாகும்' என்பார்கள். ஆனால் குற்ற முயற்சி தீய வினையில் (குற்றச் செயலில்) அல்லவா முடியும்!?. அதனால் பாதிக்கப்படுவது மக்கள்தானே. எனவே அடியோடு வேரறுக்க வேண்டும் அல்லது முளையிலேயே கிள்ளியெறிய வேண்டும் என்பதற்காக குற்ற முயற்சிகளை இந்திய தண்டனைச் சட்டம் கண்டிப்பாக தண்டிக்கிறது.

11. What are the circumstances in which a person is made liable for the offence of preparation? Explain the three rules regarding attempt. (எந்தச் சூழ்நிலைகளில் ஒரு நபர் குற்றம் செய்ய முன்னேற்பாடு (ஆயத்தம்) செய்வதற்காக பொறுப்புரிமையாக்கப்படுவார்? குற்றம் செய்ய முயற்சித்தல் குறித்த மூவகை விதிகளை விளக்குக.)

ஒரு குற்றத்தின் நான்கு நிலைகள்:

ஒரு குற்றத்திற்கு 1.கருத்து 2.முன்னேற்பாடு 3.முயற்சி மற்றும் 4. செயல் ஆகிய நான்கு நிலைகள் தேவை. இவற்றை நாம் சென்ற வினாவின் விடையில் விரிவாகக் கண்டோம். இந்நிலைகளில் முதலிரண்டும் தண்டனைக் குரியதல்ல. பின்னிரண்டும் தண்டனைக்குரியதாகும். எனினும் சில சூழ்நிலைகளில் இரண்டாவது நிலையான முன்னேற்பாட்டு நிலையை இந்திய தண்டனைச் சட்டம் தண்டிக்கிறது. அச்சூழ்நிலைகள் வருமாறு.

1. விரிவாக அடுத்த வினாவில் காண்க.

முன்னேற்பாட்டு நிலை தண்டிக்கப்படும் சூழ்நிலைகள்:

பின்வரும் அய்ந்து வகையான சூழ்நிலைகளில், குற்றம் புரிய முன்னேற்பாடு செய்தாலே அதனை இந்திய தண்டனைச் சட்டம் தண்டிக்கிறது. அவை,-

(1) இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுப்பதற்கு முன்னேற்பாடாக ஆட்கள், ஆயுதங்கள் அல்லது வெடிமருந்துகளை திரட்டுதல்; **(பிரிவு 122)**

(2) இந்திய அரசுடன் இணக்கமாக உள்ள அல்லது அமைதி உறவு கொண்டுள்ள அரசின் எல்லைகளில் சூறையாட (depredation) முன்னேற் பாடுகள் செய்தல்; **(பிரிவு 126)**

(3) கள்ள நாணயங்கள் அல்லது அரசு முத்திரைகளுக்கான (government stamps) கருவிகளைத் தயாரித்தல் அல்லது விற்றல் அல்லது வைத்திருத்தல். இவை மற்றவர்களை வஞ்சிப்பதற்கான முன்னேற்பாடுகள் ஆகும்; **(பிரிவுகள் 233-35 மற்றும் 257)**

(4) கள்ள நாணயம், அரசு முத்திரைகள், போலி எடை அல்லது அளவையைத் தம்வசம் வைத்திருத்தல்; இவை மற்றவர்களை மோசடி செய்வதற்கான முன்னேற்பாடு ஆகும்; **(பிரிவுகள் 242-43, 259 மற்றும் 266)**

(5) கொள்ளை அல்லது கூட்டுக் கொள்ளையடிக்க முன்னேற்பாடு செய்தல் **(பிரிவு 399).**

எது முன்னேற்பாடு? எது குற்ற முயற்சி?

ஒரு செயல் முன்னேற்பாட்டு நிலையைத் தாண்டி முயற்சி நிலையை அடைந்து விட்டதா அல்லது முன்னேற்பாட்டு நிலையிலேயே நின்று விட்டதா என்று தீர்மானிப்பதில் அடிக்கடி சிக்கல்கள் எழுகின்றன. பொதுவாக முடிவு பெற்ற குற்றங்கள் தெளிவாகத் தெரிகின்றன. எனவே அக்குற்றங்களைத் தீர்மானிப்பதில் சிரமம் ஏதுமில்லை. கருதிய செயல் கைகூட வேண்டும் என்பதற்காக பல காரியங்கள் செய்யப்படுகின்றன. அவை முன்னேற்பாடான காரியங்களாகவும் இருக்கலாம். குற்றச் செயலை ஏற்படுத்தத்தக்க முயற்சிகளாகவும் இருக்கலாம். இவைகளில் எது முன்னேற்பாட்டுச் செயல், எது முயற்சிச் செயல் என்று தீர்மானிப்பதில் மேற்கூறியபடி சிக்கல்கள் எழுகின்றன.

ஒரு செயலைச் செய்து முடிப்பதற்கு முன், பல காரியங்களைச் செய்ய வேண்டியது அவசியமாகிறது. அச்செயலுக்கு அவசியமான கருவிகளையும் இதர பொருட்களையும் திரட்டுவது, அதற்கான திட்டம் தீட்டுவது போன்ற காரியங்களைச் செய்த பின்னர்தான் குறித்த செயலைச் செய்ய முடிகிறது. **எடுத்துக்காட்டாக,** ஒருவன் ஒரு வீட்டில் கன்னமிட்டு நுழைந்து திருடத் திட்டமிட்டிருக்கிறான் என்று வைத்துக் கொள்வோம். இங்கு கன்னமிட்டு நுழைவது குற்றமான செயலாகும். அச்செயலைச் செய்வதற்கு

முன்னேற்பாடாக அவன் சுவரில் கன்னம் வைப்பதற்கு அவசியமான கடப்பாரை போன்ற கருவிகளைத் திரட்டுகிறான். வீட்டிற்குள் இருக்கும் பணப்பெட்டியைத் திறப்பதற்கு பலவித திறவுகோல்களைச் சேகரிக்கிறான். இருட்டில் பிறர் எளிதில் காணமுடியாதபடி இருப்பதற்காகக் கறுப்பு உடைகளைத் தயார் செய்து கொள்கிறான். இவையனைத்தும் முன்னேற் பாட்டுச் செயல்கள். இவைகளில் எதை வைத்தும் அவனைத் தண்டிக்க முடியாது. கடப்பாரை வாங்குவோரெல்லாம் பிறர் வீட்டில் கன்னம் வைப்பதற்கென்று வாங்குகிறார்கள் என்று பொருள் கொள்ள முடியுமா? அல்லது கருப்பு நிற உடைகளை தைத்து வைத்திருப்பதைக் கொண்டு, சம்பந்தப்பட்டவன் குற்ற மனம் கொண்டுள்ளான் என்றுதான் கூறிவிட முடியுமா? முடியாது. எனவே, இவையெல்லாம் முன்னேற்பாட்டு செயல்கள்தாம். இங்கு அவன் அந்த வீட்டின் அருகில் அமர்ந்து ஆயுதங்களை எடுத்துச் சுவரில் துளையிட ஆரம்பித்துவிட்டான் என்றால், மேற்படி முன்னேற்பாட்டுச் செயல்கள் குற்ற முயற்சி நிலையை அடைந்து விட்டதாகக் கூறலாம். அதுவரை, அக்குற்றச் செயல் ஆரம்பமாகவில்லை. எனவே, அதற்கு முந்திய காரியங்களையெல்லாம் முன்னேற்பாடுகளாகத்தான் கொள்ள வேண்டியுள்ளது; முயற்சியாக அன்று. வீட்டுச் சுவரின் அருகில் அமர்ந்து ஆயுதங்களை பரப்பி அச்சுவரில் கடப்பாரையால் குத்தும்போதே அவனது குற்றக் கருத்து தெளிவாகத் தெரிகின்றது. அவனது அந்நிலை, சுவரில் துளையிட்டு வீட்டிற்குள் நுழைவதற்காகத்தான் என்பதை தெளிவாக்குகிறது. எனவே, அச்செய்கையைத்தான் 'குற்ற முயற்சி' என்கிறோம். சுருங்கக்கூறின், முன்னேற்பாடும், முயற்சியும் ஒன்றுக்கொன்று வேறுபட்டு நிற்பதாகும்.

இருப்பினும், சில சமயங்களில் எது முன்னேற்பாடு, எது முயற்சி என்பதைக் காண்பது எளிதன்று. குற்றச் செயலுக்காக செய்யப்படும் செய்கைகளின் தொடரில் எதுவரை முன்னேற்பாடாகக் கொள்ளுவது, எதிலிருந்து முயற்சியாகக் கருதுவது என்பதற்கு திட்டவட்டமான விதிகள் ஏதும் இல்லை. எனினும் பலவித வழக்குகளில் வழங்கப்பட்ட தீர்ப்புகளிலி ருந்து எழுந்த மூவகை விதிகள் இச்சிக்கலைத் தீர்க்க உதவுகின்றன. அவற்றை அடுத்த பத்தியில் சற்று விரிவாகக் காண்போம்.

குற்றம் செய்ய முயற்சித்தல் குறித்த மூவகை விதிகள் (Three Rules regarding Attempt):

1. **நெருக்கநிலை விதி (The Proximity Rule):** ஒரு செயல், குற்றமொன்றைப் புரிவதற்கான முயற்சி என்று கூறப்படுவதற்கு அது அக்குற்றச் செயலை நிறைவேற்றி முடிக்கும் நிலைக்கு போதுமான அளவில் நெருக்கமாக (proximate) இருக்க வேண்டும். வேறுவிதத்தில் கூறுவதானால், குற்ற விளைவை ஏற்படுத்தும் கடைசிச் செயல், குற்ற முயற்சியாகும். இந்த கடைசிச் செயலைச் செய்துவிட்டால், அவன் கருதிய குற்ற விளைவு அவனது பங்கு ஏதுமில்லாமலேயே முற்றுப்பெற்றுவிடும். இதனை, குற்ற விளைவான குற்றச் செயல் முற்றுப்பெறுவதற்கு முன்புள்ள கடைசிச் செயல் என்றும்

கூறலாம். அதாவது கடைசிச் செயலுக்கு அடுத்த நிலை அவன் கருதிய செயலின் குற்ற விளைவு எனும் அளவில் நெருக்கம் இருக்க வேண்டும்.

இதை பின்வரும் எடுத்துக்காட்டு ஒன்றின் வாயிலாகக் கண்டால் மேலும் தெளிவாகும். ஒரு வேலையாள் தனது முதலாளியை பாலில் நஞ்சிட்டு கொல்லக் கருதுகிறான் என்று வைத்துக் கொள்வோம். இதற்காக அவன் நஞ்சு கலந்த பாலை தனது முதலாளியின் முன் வைக்கின்றான். இச்செயல், அவன் தனது முதலாளியைக் கொல்லுவதற்கு மிக நெருக்கமாக உள்ள கடைசிச் செய்கையாகும். நஞ்சைக் கடையில் வாங்குவதும், தம் வசம் வைத்திருப்பதும், பாலில் கலப்பதும், கொலை செய்வதற்கு வேண்டிய நெருக்கமான கடைசிச் செயல் அன்று. நஞ்சு கலந்த பாலை மேசையின் மீது வைத்த பிறகு வேலையாள் செய்ய வேண்டியது ஏதுமில்லை. அப்பாலை எடுத்துக் குடிக்க வேண்டிய வேலை முதலாளியுடையது. இங்கு வேலையாள் செய்ய வேண்டிய காரியங்கள் எல்லாவற்றையும் செய்து விட்டான். அவன் செய்ய வேண்டிய வேலைகளில் கடைசி வேலை பாலை முதலாளியின் மேசை மீது வைப்பதாகும். இந்தக் கடைசி வேலையைத்தான் 'குற்ற முயற்சி' என்கிறோம். இதற்கு முந்தய செயல்கள் யாவும் முன்னேற்பாட்டுச் செக்கைகள்தாம். விஷத்தை வாங்குவது, அதை வைத்திருப்பது, பாலில் கலப்பது ஆகிய அனைத்துமே முன்னேற்பாடான செயல்கள்தாம்.

கருதிய விளைவு கைகூட வேண்டுமெனில், எந்தச் செயல் கடைசியாக செய்யப்பட வேண்டியது அவசியமோ அச்செயல்தான் முயற்சியாகும் என்று சில சட்ட அறிஞர்கள் [1] கூறுவதுண்டு.

நாம் சென்ற வினாவின் விடையில் கண்ட **Abhyanand Mishra v. State of Bihar**[2] எனும் வழக்கையும் **Sudhir Kumar Mukherjee v. State of W.B**[3] எனும் வழக்கையும் இங்கு குறிப்பிடல் பொருத்தமாகும்.

2. குற்ற மனம் திருந்தும் வாய்ப்புக் கோட்பாடு (Doctrine of *Penitenliae*): குற்ற மனம் மாறுவதற்கு வழி இருக்கும் வரை, ஒருவரது செயல்களைக் குற்ற முயற்சியாகக் கொள்ளலாகாது என்பது மற்றொரு கோட்பாடாகும். எடுத்துக்காட்டாக, தம் எதிரியைத் துப்பாக்கியால் சுட்டுக் கொல்ல வேண்டும் என்ற கருத்துடன் ஒருவர் துப்பாக்கியை விலைக்கு வாங்குகிறார். துப்பாக்கியை எடுத்துக்கொண்டு எதிரி இருக்கும் இடத்திற்கு செல்கிறார்; அங்கு ஓர் இடத்தில் மறைவாகப் பதுங்கி இருக்கிறார். இந்த மூன்று செயல்களையுமே முன்னேற்பாடுகள் என்றுதான் கொள்ள முடியும்.

1. It seems that the act of the accused is necessarily proximate of, though it is not the last act that he intended to do, it is the last that is legally necessary for him to do if the result desired by him is afterwards brought about without further conduct on his part - Prof. Glanville Williams
2. A.I.R. 1961 S.C. 1698
3. A.I.R. 1973 S.C. 2655

ஏனெனில், முடிவில் எதிரியைச் சுடாமலேயே அவர் இருந்து விடலாம். அவர் மனம் மாறுவதற்கு (திருந்துவதற்கு) இன்னும் வாய்ப்பு இருக்கிறது. எதிரியை நோக்கி சுட்டுவிட்டார்; ஆனால் குறி தவறி விடுகிறதெனில், சுட்ட செய்கை குற்ற முயற்சி (கொலை முயற்சி) ஆகிறது. துப்பாக்கியை விலைக்கு வாங்கிய பின்னும் எதிரியிடத்திற்கு சென்ற பின்னும், பதுங்கி இருந்த பின்னும் கூட, குற்றம் இழைக்கக் கருதிய மனம் திருந்தி, அதைச் செய்யாமல் இருப்பதற்கு வாய்ப்புள்ளது. அந்த வாய்ப்பு இருக்கும்வரை, அவரது செயல்கள் முயற்சி நிலையை அடைவதில்லை. ஆனால் மேற்கண்டவாறு சுட்ட பிறகு அதற்கான வாய்ப்பே இல்லை. எனவே, சுட்டது குற்ற முயற்சியாகும். இவ்வாறு, குற்ற மனம் திருந்தும் வாய்ப்பு இருப்பதை வைத்து குற்ற முயற்சியைத் தீர்மானிக்கலாம்.

Malkiat Singh v. State of Punjab[1] - பஞ்சாப் மாநில ஏற்றுமதி சுட்டுப்பாட்டு உத்திரவின்படி, பஞ்சாபிலிருந்து வேறு மாநிலங்களுக்கு நெல் கடத்துவது குற்றமாகும். மேற்படி வழக்கில் 75 நெல் மூட்டைகளை ஒரு லாரியில் ஏற்றி, அதை அதன் ஓட்டுநரும், உதவியாளரும் பஞ்சாபிலிருந்து கொண்டு செல்லும் பொழுது, பஞ்சாபில் உள்ள சாமால்கா சுங்க எல்லையருகே பிடிபட்டனர். நெல்லை மேற்படி பஞ்சாப் மாநில சுட்டுப்பாட்டு உத்திரவை மீறி டெல்லிக்கு கடத்திச் செல்ல முயன்றதாக அவர்கள் மீது குற்ற வழக்கிடப்பட்டது. ஆனால் அவர்கள் பிடிபட்ட இடத்திலிருந்து பஞ்சாப்-டெல்லி எல்லையானது 14 மைல்கள் தள்ளி இருந்தது. கீழ் நீதிமன்றம், மேற்படி செயல் குற்ற முயற்சி என்று கூறி மேற்படி ஓட்டுநரையும், உதவியாளரையும் தண்டித்தது. ஆனால் மேற்படி ஓட்டுநரும், உதவியாளரும் தளர்ந்து விடவில்லை. உச்ச நீதிமன்றம் வரை சென்றனர். அங்கு, மேற்படி குற்ற மனம் திருந்தும் வாய்ப்புக் கோட்பாட்டை உச்ச நீதிமன்றம் பயன்படுத்தியது. அதன்படி, பஞ்சாபிலிருந்து நெல் மூட்டைகளை எடுத்துக்கொண்டு மேற்படி ஓட்டுநரும், உதவியாளரும் டெல்லி எல்லைக்குள் சென்றுவிடவில்லை. மாறாக பஞ்சாபிலேயே 14 மைல்கள் தள்ளி இருந்த பொழுதுதான் பிடிபட்டனர். இந்த 14 மைல்களை கடப்பதற்குள் அவர்கள் மனம் திருந்தி நெல் மூட்டைகளை டெல்லிக்கு கடத்தாமல் திரும்பிவிட வாய்ப்புண்டு. இவ்வாறு வாய்ப்பிருப்பதால், அவர்கள் செயல் ஒரு குற்ற முயற்சியாகாது; மாறாக முன்னேற்பாடே என்று கூறி அவர்களை விடுதலை செய்தது.

3. கருதிய குற்ற விளைவு கைகூட முடியாச் சோதனை (The Impossibility Test): இந்த மூன்றாவது விதி, கருதிய குற்ற விளைவு கைகூட முடியாத நிலையிலும் குற்ற முயற்சி செய்யப்படலாம், என்று கூறுகிறது. ஒருவன் ஒன்றைக் கருத்தில் கொண்டு அதன்படி செயல்படுகின்றான். ஆனால் அவன் கருதிய விளைவு கைகூட முடியாத நிலை ஏற்படுகிறது. எனினும், அவனது செயல் குற்றக் கருத்தை வெளிப்படுத்தி நின்றால், அது குற்ற முயற்சியேயாகும்.

1. A.I.R. 1970 S.C. 713

குற்ற முயற்சிகளை தண்டிக்கும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 511-வது பிரிவின் கீழான முதல் எடுத்துக்காட்டின்படி, மற்றவரின் நகைப் பெட்டியில் உள்ள நகைகளை திருட வேண்டும் என்று கருதி, ஒருவன் அதன் பூட்டை உடைத்துத் திறந்து பார்க்கிறான். ஆனால் அப்பெட்டியினுள் நகை ஏதுமில்லை. இங்கு, மேற்கண்டவாறு பெட்டியைத் திறந்த செயல் குற்றமானதா, இல்லையா என்றால், குற்றந்தான். அதுபோல் பிரிவு 511-ன் இரண்டாவது எடுத்துக்காட்டின்படி, அடுத்தவர் சட்டைப் பையில் பணம் இருந்தால் அதைத் திருட வேண்டும் என்ற கருத்தோடு ஒருவர் அந்தப் பையில் மெதுவாகக் கையை விடுகின்றார். ஆனால், பையில் பணம் இல்லை. பையில் கையை விட்டவரைப் பிடித்துக் கேட்டால், "அடுத்தவர் பையில்தான் பணம் இல்லையே, அப்படியிருக்க நான் எப்படி திருடியிருக்க முடியும்? ஆதலால், நான் ஒரு குற்றமும் செய்யவில்லை" என்று அவர் கூறுகிறார். இப்போது அவரைத் தண்டிப்பதா, இல்லையா? அவர் குற்ற முயற்சிக்காக தண்டிக்கத்தக்கவர்தான்.

எனவே, ஒரு செயல், கருதிய குற்ற விளைவு கை கூடுவதற்கெனச் செய்யப்பட்டதாக இருக்கிறதா என்பதையே சட்டம் கவனிக்கிறது. அந்த விளைவு கைகூடும் சூழ்நிலை இருக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. பிறருடைய பெட்டியைத் திறந்ததும், அடுத்தவர் பைக்குள் கைவிட்டதும் பிறர் பொருளைத் திருடுவதற்கென்று செய்யப்பட்ட செயல்தான், என்பது தெளிவு. எனவே, 'திருடுவதற்கான குற்ற முயற்சிகள்' (attempts to commit theft) ஆகின்றன. பெட்டியில் நகை இல்லை என்பதாலோ, பையில் பணம் இல்லை என்பதாலோ, அச்செயல்களின் குற்றத் தன்மை மறைந்து விடுவதில்லை. ஆகவே குற்றவாளியால் முடியாத செயல்களைக் குறித்தும் முயற்சிகள் இருக்கலாம் என்பதை மேற்படி சோதனை உணர்த்துகிறது.

முடிவுரை:

மேற்கண்டவற்றை சுருக்கமாகச் சொல்லப்போனால், பொதுவாக முன்னேற்பாட்டு நிலை தண்டனைக்குரியதாக ஆகாவிட்டாலும் அய்ந்து வகை சூழ்நிலைகளில் முன்னேற்பாடும் இந்திய தண்டனைச் சட்டத்தால் தண்டிக்கப்படுகின்றன. ஒரு செயல் முன்னேற்பாட்டு நிலையைத் தாண்டி குற்ற முயற்சி நிலையை அடைந்துவிட்டதா என்பதை தீர்மானிக்க மூன்று விதிகள் பயனாகின்றன. ஒரு செயல் குற்ற முயற்சியை அடைந்துவிட்டால், அதுவும் தண்டனைக்குரிய ஒரு குற்றமாகிறது.

12. What do you mean by "Inchoate Crimes" and how are they accepted as offences punishable by IPC? ('நிறைவேறாத குற்றங்களை' பற்றி தங்கள் கருத்து என்ன? அவை எவ்விதம் இந்திய தண்டனைச் சட்டத்தால் தண்டனைக்குரிய குற்றங்கள் என ஏற்றுக் கொள்ளப்படுகின்றன?)

நிறைவுறாத குற்றங்கள் (Inchoate Crimes) - விளக்கம்:

ஒரு குற்றம் நிறைவுற நான்கு படிநிலைகள் தேவைப்படுகின்றன.

அவை, 1. கருத்து (Intention) 2. ஆயத்தம் (Preparation) 3. முயற்சி (Attempt) 4. செயல் (Commission). இவற்றில் நான்காவது படி நிலையாகிய இறுதி நிலையை அடையாத ஒரு செயல் குற்றச் செயலாக முடியாது. எனினும் மூன்றாவது நிலையாகிய குற்ற முயற்சியை சட்டம் தண்டிக்கிறது. அந்த குற்ற முயற்சியே நிறைவுறாத குற்றங்கள் (Inchoate Crimes) ஆகின்றன. ஏனெனில் இங்கு குற்றச் செயல் முழுமையாக நிறைவு பெறவில்லை.

நிறைவுறாத குற்றங்கள், இந்திய தண்டனைச் சட்டத்தால் ஏன் தண்டனைக்குரிய குற்றங்களாக ஏற்றுக் கொள்ளப்பட வேண்டும்?

குற்றவாளி செய்கின்ற முயற்சி அவன் நினைத்த வெற்றியைத் தரவில்லை என்றாலும், மற்றவர்களுடைய மனதில் பயத்தையும் பீதியையும் கிளப்பி விடுகிறது. எந்நேரமும் குற்றம் நேரலாம் என்ற அச்சம் ஏற்படுகிறது. இப்படிப்பட்ட அச்சத்தையும் பீதியையும் ஏற்படுத்த யாருக்கும் உரிமை கிடையாது. எனவே அப்படிப்பட்டவரை தண்டிக்க "முயற்சி ஒன்று மட்டுமே போதும். இதனால்தான் குற்ற முயற்சியின் காரணமாக விளைந்த நிறைவுறாத குற்றங்கள், தண்டனைக்குரியவைகளாக இந்திய தண்டனைச் சட்டத்தால் ஏற்கப்பட்டுள்ளன. [வினா எண் (10)-ல் கூறப்பட்டுள்ளவற்றை சுருக்கமாகச் சுட்டிக்காட்டுக.]

இந்திய தண்டனைச் சட்டத்தின் சட்டப் பிரிவுகள்:

'நிறைவுறாத குற்றங்கள்' எனப்படுவது 'குற்ற முயற்சியே' என்பது மேற்கண்ட விளக்கத்திலிருந்து தெளிவாகியிருக்கும் என்பது திண்ணம். இதற்கான சட்டப் பிரிவுகள் பல உள்ளன. [அவற்றையெல்லாம் முந்தைய வினா எண் (10)-ன் விடையில் விரிவாக கண்டுள்ளோம். எனவே அதில் காண்க.]

- o -

அத்தியாயம் – 3. அதிகாரவரம்பு

[தனிப்பட்ட, எல்லை, புறநிலை எல்லை மற்றும் கடல்சார்ந்த அதிகாரவரம்புகள்]

Jurisdiction

[Personal, Territorial, Extra-territorial and Admiralty Jurisdictions]

1. Who are the persons exempted from the operation of the Indian Penal Code? (இந்திய தண்டனைச் சட்டத்தின் செயலாட்சி எல்லையிலிருந்து விலக்கப்பட்ட நபர்கள் யார்?)

முன்னுரை:

இந்திய தண்டனைச் சட்டத்தின் **பிரிவு 1**, "இந்தச் சட்டம் இந்திய தண்டனைச் சட்டம் என்று வழங்கப்பெறும் மற்றும் இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கும்" என்று கூறுகிறது..

முன்பு "ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக" இந்தியா முழுமைக்கும் அளாவி நின்ற இந்திய தண்டனைச் சட்டம் அண்மையில் கொண்டு வரப்பட்ட **"ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம் 2019"** என்ற சட்டம் மேற்படி பிரிவு 1-இல் ஒரு திருத்தத்தைக் கொண்டு வந்து "ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக" என்ற சொற்களை நீக்கிவிட்டது. இதனால் மேற்படி 2019-மறுசீரமைப்பு செயல்விளைவுக்கு வந்த 31/10/2019-ஆம் தேதியிலிருந்து இந்தியா முழுமைக்கும் பொருந்தும் சட்டமாக இந்திய தண்டனைச் சட்டம் ஆனது.

தனிப்பட்ட அதிகாரவரம்பு (Personal Jurisdiction) அல்லது யார் தண்டனைக்குள்ளாக்கப்பட முடியும்? - பிரிவு 2:

"இந்திய தண்டனைச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு மாறான செய்கை (act) அல்லது செயல்தவிர்க்கை (omission) ஒவ்வொன்றிற்கும் இந்தியாவிற்குள் குற்றவாளி ஆகின்ற ஒவ்வொருவரும் இந்திய தண்டனைச் சட்டத்தின்படி தண்டனைக்கு உள்ளாக்கப்பட வேண்டும்" என்று பிரிவு 2 கூறுகிறது. இது **தனிப்பட்ட அதிகாரவரம்பு** (Personal Jurisdiction) என அழைக்கப்படுகின்றது.

இப்பிரிவின்படி குற்றம் செய்த ஒவ்வொருவரும் இந்திய தண்டனைச் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவர். அவர்களுக்கு தாங்கள் பெற்ற பட்டம், பதவி, தகுநிலை (அந்தஸ்து) போன்ற செல்வாக்குகள் எதுவும் அவர்கள் தண்டனை பெறுவதிலிருந்து காப்பாற்றாது. ஏழை-பணக்காரன் என்ற ஏற்றத் தாழ்வற்ற சம நீதியையே குற்றவியல் சட்டம் வழங்குகிறது. இந்தியாவிற்குள் குற்றம் புரிந்த ஒருவர், வெளிநாட்டுக்காராராக இருந்தாலும், அவரும் இந்திய தண்டனைச்சட்டத்தின்படியே தண்டிக்கப்படுவார்.

யார் தண்டனையிலிருந்து விலக்கி வைக்கப்பட்டவர்கள்?

"குற்றம் செய்த எவரொருவரும் இந்திய தண்டனைச் சட்டத்தின்படி தண்டிக்கப்படுவர்" என்று பிரிவு 2 கூறினாலும், குறிப்பிட்ட சில நபர்களை இச்சட்டத்தின் கீழ் தண்டனைக்குள்ளாக்க முடியாது. அதாவது, அந்த நபர்களுக்கு இந்திய தண்டனைச் சட்டத்தின் செயலாட்சி எல்லையிலிருந்து (Operation) விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு விதிவிலக்கு அளிக்கப் பட்டுள்ளதை பிரிவு 2 குறிப்பிடாவிட்டாலும், மற்ற சட்டங்களும், பன்னாட்டு சட்டத்தின் (International law) வழிவந்த கொள்கைகளும், பின்வரும் நபர்களை இந்திய தண்டனைச் சட்டத்திலிருந்து விலக்களித்துள்ளன.

(i) குடியரசுத் தலைவர் (President), ஆளுநர்கள் (Governors), இராஜப் பிரமுகர்கள் (Raj Pramukhs) ஆகியோர் இந்திய நீதிமன்றங்களின் அதிகார வரம்பிலிருந்து விலக்கு (Immunity) அளிக்கப்பட்டுள்ளனர்.

(ii) உச்ச நீதிமன்ற தலைமை நீதிபதி, உச்ச நீதிமன்ற நீதிபதிகள், இந்திய உயர் நீதிமன்றங்களின் தலைமை நீதிபதிகள் மற்றும் பிற நீதிபதிகள் ஆகியோர்களும் சாதாரண நீதிமன்றங்களின் (Ordinary Courts) முன் நடக்கும் வழக்கு விசாரணையில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளனர். ஆனால் இவர்கள் புரியும் குற்றங்களை சிறப்பு நடைமுறை (Special Procedures) மூலம் விசாரித்து முடிவு செய்யலாம்.

(iii) தூதுவர் (Ambassadors), அவர்தம் குடும்பங்கள், செயலாளர்கள், செய்தி அனுப்புபவர்கள் (Messengers) மற்றும் பணியாட்கள் (Servants) – இவர்களுக்கும் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்கு அளிக்கப்பட்டுள்ளது.

(iv) தூதியல் முகவர்கள் (Diploma Agents).

(v) வெளிநாட்டு அரசர்கள் (Foreigh Sovereigns).

(vi) அயல்நாட்டு எதிரிகள் (Alien enemies) - ஒரு நாட்டினுள் நுழையும் அயல்நாட்டு எதிரிகள் சாதாரண நீதிமன்றங்களின் முன் விசாரிக்கப்பட மாட்டார்கள். இதிலிருந்து அவர்களுக்கு விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. ஆனால் இராணுவ நீதிமன்றத்தில் விசாரிக்கப்படுவார்கள். வெளிநாட்டு படைத்துருப்புகளும், இதே முறையில் விசாரிக்கப்படுவார்கள்.

2. "Criminal jurisdiction of the Indian Penal Code is territorial as well as extra-territorial" - Explain with reference to leading case-laws. (இந்திய தண்டனைச் சட்டத்தின் செயலாட்சி எல்லையிலிருந்து விலக்கப்பட்ட நபர்கள் யார்?)

(அல்லது)

Explain territorial and extra - territorial operation of the Indian Penal Code with suitable illustrations. (இந்திய தண்டனைச் சட்டத்தின் எல்லை மற்றும் புறநிலை எல்லை அதிகாரவரம்பு குறித்து தக்க எடுத்துக்காட்டு களுடன் விளக்குக.)

(அல்லது)

Examine the provisions of the Indian Penal Code wihich provides liaiblity for

extra-territorial offences. (நாட்டிற்கு அப்பால் செய்யப்படும் குற்றங்களுக்கு பொறுப்புநிலை ஏற்படுத்தும் இந்திய குற்றவியல் சட்டத்தின் பிரிவுகளை ஆராய்க.)

(அல்லது)

How far is the Indian Penal Code applicable to the crimes committed beyond the territory of India? (இந்திய எல்லைக்கு வெளியே நிகழ்ந்த குற்றங்களுக்கு இந்திய தண்டனைச் சட்டம் எந்த அளவிற்குப் பொருந்தும்?

(அல்லது)

Explain the provision of the Indian Penal Code which provides for offences committed by offenders beyond the territories of India. (இந்தியாவின் எல்லைக்கப்பால் குற்றவாளிகளால் புரியப்படும் குற்றங்களுக்கு இந்திய தண்டனைச் சட்டத்தில் வகுக்கப்பட்டிருக்கும் விதிமுறையை ஆராய்க.)

எல்லை அதிகாரவரம்பு (Territorial Jurisdiction) - பிரிவு 1 :

நமது இந்திய அரசியலமைப்பின் 370-ஆவது உறுபு ஜம்மு-காஷ்மீர் மாநிலத்திற்கென சிறப்பு தகுதிலையை (அந்தஸ்து) முன்னதாக வழங்கியிருந்தது. இதனால் அம்மாநிலம் மட்டும் தனக்கான தண்டனைச் சட்டத்தை தனியாக இயற்றிக் கொண்டு, அதன்படி செயல்பட்டது. ஆனால் அண்மையில் கொண்டு வரப்பட்ட **"ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டம் 2019" (The Jammu and Kashmir Reorganisation Act, 2019)** மேற்சொன்ன சிறப்புத் தகுநிலையை நீக்கிவிட்டது. இதற்காக 31/10/2019-ஆம் தேதியில் அமலுக்கு வந்த இச்சட்டம் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 1-இல் ஒரு சிறு திருத்தத்தைக் கொண்டு வந்து "இந்திய தண்டனைச் சட்டம் ஜம்மு-காஷ்மீர் மாநிலம் நீங்கலாக இந்திய முழுமைக்கும் அளாவி நிற்கும்", என்று இருந்ததை, தற்போது "இந்திய தண்டனைச் சட்டம் இந்தியா முழுமைக்கும் அளாவி நிற்கும்" என்று ஆக்கிவிட்டது. எனவே தற்போது இந்திய தண்டனைச் சட்டம் இந்தியா முழுமைக்கும் பொருந்தும். இதில் எந்த மாநிலத்திற்கும் விதிவிலக்கில்லை. இதுவே **எல்லை அதிகாரவரம்பு** என்றும் சொல்லப்படுகிறது.. இதன் பொருள் யாதெனில், இந்தியாவிற்குள் மட்டும் நிகழும் குற்றங்களையே இந்திய தண்டனைச் சட்டம் தண்டிக்கவியலும் என்பதாகும்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 1 மேற்கண்டவாறு கூறினாலும், அதன் பின்னர் வரும் 3 மற்றும் 4வது பிரிவுகள் இந்திய தண்டனைச் சட்டம் நிலவரையில் மட்டுமல்லாமல், நிலவரைக்கு அப்பால் உள்ள புறநிலை எல்லையிலும் செயல்படும் என்று கூறுகின்றன.

புறநிலை எல்லை அதிகாரவரம்பு (Extra-Territorial Jurisdiction) - பிரிவுகள் 3 மற்றும் 4 :

ஒரு நாட்டின் எல்லைக்கு வெளியே செய்யப்பட்ட குற்றச் செயலைப் பற்றி விசாரணை செய்யும் அதிகாரம் **புறநிலை எல்லை அதிகாரவரம்பு** எனப்படுகிறது. இதைப் பிரிவுகள் 3 மற்றும் 4 விளக்குகின்றன.

பிரிவு 3 : இந்தியச் சட்டம் எதனாலாவது விசாரணைக்கு உள்ளாகிற

எவர் ஒருவரும் ஏதேனும் செய்கையை இந்தியாவிற்கு வெளியே செய்திருந்தால், அத்தகைய செய்கை இந்தியாவிற்குள் செய்யப்பட்டிருப்பின் எப்படியோ, அப்படி இச்சட்டத்தின் வகைமுறைகளின்படி அவர் மீது நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

பிரிவு 4 : இந்தச் சட்டத்தின் வகைமுறைகள்:

1. இந்தியாவுக்கு வெளியிலும், அப்பாலும் உள்ள எவ்விடத்திலேனும் இந்தியக் குடிமகன் எவரேனுமொருவரால்,

2. இந்தியாவில் பதிவு செய்யப்பட்ட கப்பல் அல்லது ஆகாய விமானம் எதிலும், எவரேனும் ஒருவரால், அது எங்கிருந்தாலும்,

செய்யப்பட்ட குற்றம் ஏதொன்றின் மீதும் கூட இயங்கும்.

விளக்கம்: இந்தியாவில் தண்டனைக்குரிய குற்றத்தை இந்தியாவிற்கு அப்பால் செய்தலும் குற்றமாகும்.

(எ.கா.) இந்தியக் குடிமகனான A என்பவர் உகாண்டாவில் ஒரு கொலையைச் செய்கிறார். அவர் இந்தியாவில் எங்கு காணப்பட்டாலும் அங்கேயே கொலைக் குற்றத்திற்காக விசாரித்து தண்டிக்கப்படலாம்.

எனவே மேற்கண்ட பிரிவுகள் 3 மற்றும் 4-ன்படி, ஒரு இந்தியக் குடிமகன், வெளிநாடு ஒன்றில் குற்றம் ஏதேனும் புரிந்தாலும், அது அவ்வெளிநாட்டில் ஒரு குற்றமாக இல்லாது போனாலும், அக்குற்றம் இந்தியாவில் செய்யப்பட்டிருந்தால், அவன் எப்படி தண்டிக்கப்படுவானோ அதே போன்றே இந்திய தண்டனைச் சட்டத்தால் தண்டிக்கப்படுவான், என்பது தெளிவாகிறது. இதேபோல், ஒரு வெளிநாட்டவர், சம்பந்தப்பட்ட குற்றச் செயல் நடைபெறும் சமயத்தில் அவர் இந்தியாவில் இல்லாது போனாலும்கூட, அச்செயல் இந்தியாவில் முடிவடைந்தால், அவர் இந்திய தண்டனைச் சட்டத்தால் தண்டனைக்குள்ளாவார். பின்வரும் வழக்கு இதற்கு சிறந்ததொரு எடுத்துக்காட்டாகும்.

Mobarik Ali Ahmed v. State of Bombay[1] - இவ்வழக்கில் பாகிஸ்தான் நாட்டு குடிமகன் ஒருவர், தொலைபேசி, தந்தி, கடிதங்கள் மற்றும் தனது முகவர்கள் மூலமாக பம்பாயிலுள்ள வியாபாரி ஒருவரை ஏமாற்றினான். அவன் ஒரு வெளிநாட்டுக் குடிமகனாக இருந்தாலும் அல்லது குற்றம் நடைபெறும் சமயத்தில் இந்தியாவில் உடல்ரீதியாக ஆஜராகியிருக்க வில்லையென்றாலும் (not corporally present), அவனது செயல் இந்தியாவில் ஒரு குற்றத்தில் சென்று முடிந்துள்ளதால், பிரிவு 2 அவனுக்குப் பொருந்தக் கூடியதே என்றும், எனவே அவனை இந்திய தண்டனைச் சட்டத்தின்படி பம்பாய் உயர் நீதிமன்றம் தண்டித்தது சரிதான் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்புரைத்தது.

1. A.I.R. 1957 S.C. 857 : 1957 Cri. L.J. 1346

Central Bank of India Ltd. v. Ram Narain[1] எனும் மற்றொரு வழக்கின் பொருண்மைகள் சற்று மாறுபட்ட நிலையில் இருந்ததால் குற்றஞ் சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டார். வழக்கின் பொருண்மை களின்படி, ராம் நாராயண் என்பவர் பாகிஸ்தான் நாட்டு குடிமகனாவார். அவர் பாகிஸ்தானில் உள்ள Central Bank of India எனும் வங்கியில், தனது வணிக இருப்புகளை (Stock in trade) அடகு வைத்து கடன் பெறுகிறார். பிறகு அக்கடனை அவரால் கட்ட இயலவில்லை. இதனால் மேற்படி வங்கி, அடகு வைத்த வணிக இருப்புகளை ஜப்தி செய்து அவற்றை விற்று, தனது கடனுக்கு ஈடாக்கிக் கொள்ள மேற்படி ராம் நாராயணனின் மீது நடவடிக்கை எடுத்தது. இந்நிலையில் ராம் நாராயண் அவ்வணிக இருப்புகளை சட்டத்திற்கு முரணாக வேறு இடத்தில் மாற்றிச் சென்று, இறுதியில் பாகிஸ்தானில் உள்ள கராச்சியில் விற்று விடுகிறார். அப்பொழுது இந்தியா-பாகிஸ்தான் பிரிவினை நடந்து கொண்டிருந்தது. இதை தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொண்டு, ராம் நாராயண் இந்தியாவிற்கு குடிபெயர்ந்து வந்துவிடுகிறார். இதையறிந்து கொண்ட மேற்படி வங்கி, ராம் நாராயண் மீது குற்ற வழக்கு தொடர குற்றவியல் நடைமுறைச் சட்டம், பிரிவு 188-ன்படி மத்திய அரசிடமிருந்து அனுமதி பெற்று இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 380 மற்றும் 454-ன் கீழ் அவருக்கெதிராக குற்ற முறையீடு செய்தது. அதற்கு ராம் நாராயண், பின்வரும் அடிப்படையில் அதிகாரவரம்பு குறித்து ஆட்சேபணை செய்தார். அதாவது, நடந்ததாகச் சொல்லப்படும் குற்றம் நடந்த சமயம், தான் ஒரு பாகிஸ்தான் குடிமகன் என்றும், குற்றம் நடைபெற்றதாக சொல்லப்படும் இடம் பாகிஸ்தான் என்றும் இருக்கும் பொழுது, தன்னை எப்படி இந்திய தண்டனைச் சட்டத்தின் அதிகாரவரம்பிற்குட்படுத்த முடியும் என்று வாதிட்டார். அவர் மேலும் வாதிடுகையில், அக்குற்றச் செயலுக்கு பின்னிட்டு தாம் இந்தியக் குடியுரிமையை பெற்றறுள்ளதின் அடிப்படையில், இந்திய நீதிமன்றங்கள் தன் மீது எவ்வித நடவடிக்கையையும் தொடர முடியாது, என்றார்.

முதலில் இவ்வாதத்தை விசாரணை நீதிமன்றமும், கூடுதல் அமர்வு நீதிமன்றமும் ஏற்றுக்கொள்ளவில்லை. எனவே, ராம் நாராயண் சிம்லா உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அங்கு ராம் நாராயணின் மேற்படி வாதம் ஏற்றுக்கொள்ளப்பட்டது. ஆனால் மேற்படி வங்கியோ விடுவதாக இல்லை; உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது.

அங்கு, ஒரு வெளிநாட்டவர் இந்தியாவிற்கு வெளியே குற்றமொன்றைச் செய்துவிட்டு, பின்னர் இந்தியக் குடியுரிமையை அடைந்தால், அவர் அவ்வாறு இந்தியக் குடியுரிமையை அடைந்ததை மட்டும் அடிப்படையாகக் கொண்டு, அவருக்கெதிரான குற்ற வழக்கை விசாரிக்க இந்திய நீதிமன்றங் களுக்கு முன்மேவு அதிகாரவரம்பில்லை என்றும், அச்செயல் இந்திய தண்டனைச் சட்டப்படி ஒரு குற்றமாக இருந்தாலும் கூட, அதை கருத்தில்

1. A.I.R. 1955 S.C. 36 : 1955 Cri. L.J. 152

கொள்வதற்கில்லை என்றும் உச்ச நீதிமன்றம் மேற்படி வங்கிக்கு எதிராக தீர்ப்பளித்தது.

கடல் சார்ந்த அதிகாரவரம்பு (Admiralty Jurisdiction):

போக்குவரத்திற்கும், பாதுகாப்பு அமைப்புக்கும் கப்பல் ஒரு நாட்டின் இன்றியமையாத ஒன்றாகும். கடல் நடுவே மிதக்கும் கப்பல், ஒரு மிதக்கும் தீவு. அது எந்த நாட்டுக் கொடியை பறக்க விட்டுள்ளதோ, அந்த நாட்டைச் சார்ந்ததாகும். **பிரிவு 4-ன் உட்பிரிவு 2** இதைப்பற்றிக் கூறுகிறது. (முன் காண்க)

கடல் நடுவே நிகழும் குற்றங்களை விசாரிக்கும் அதிகாரவரம்பு கடல் சார்ந்த அதிகாரவரம்பு என அழைக்கப்படுகிறது. எனவே, 1. இந்தியக் கப்பலில், அது எங்கு இருப்பினும் அதில் நிகழ்ந்த குற்றங்கள், 2. இந்திய எல்லைக்குட்பட்ட நீரில் ஒரு வெளிநாட்டு கப்பலில் நிகழ்த்தப்பட்ட குற்றங்கள் ஆகியவை இந்திய தண்டனைச் சட்டப்படி தண்டிக்கப்படும்.

3. What is extradition? What are the conditions for granting it? (அயல் நாட்டிடம் ஒப்படைப்பு என்றால் என்ன? அவ்வாறு அளிப்பதற்கான நிபந்தனைகள் யாவை?)

(அல்லது)

What is extradition? Explain. (குற்றவாளியை உரிய நாட்டுக்கு கொண்டு வருதல் என்றால் என்ன? விளக்குக.)

(அல்லது)

Extradition - Write short notes. (மீட்டொப்படைத்தல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய தண்டனைச் சட்டத்தின் அதிகாரவரம்பைப் பொறுத்தவரை ஒன்றை நினைவில் கொள்வது நல்லது. அதாவது இந்திய எல்லைக்குள் இந்திய குடிமகன் ஒருவராலோ அல்லது வெளிநாட்டுக் குடிமகன் ஒருவராலோ செய்யப்பட்ட குற்றங்களை மட்டுமே தண்டிக்கும் அதிகாரத்தை இந்திய தண்டனைச் சட்டம் பெற்றுள்ளது. ஆனால், ஒரு வெளிநாட்டவர் இந்திய எல்லைக்கு அப்பால் உள்ள ஒரு வெளிநாட்டில் குற்றம் ஒன்றைப் புரிந்தால், அவரை இந்திய தண்டனைச் சட்டம் தண்டிக்க முடியாது. எடுத்துக்காட்டாக, ஒரு ஆங்கில நாட்டுப் பிரஜை இலங்கையில் கொலைக் குற்றம் ஒன்றைப் புரிந்தால், அவரை இந்திய தண்டனைச் சட்டத்தால் தண்டிக்க முடியாது. ஆனால் இதுவே இந்திய நாட்டுக் குடிமகன் ஒருவர், இலங்கையில் அதே கொலைக் குற்றத்தைப் புரிந்திருந்தால் அவரை அங்கிருந்து மீட்டு தங்களிடம் ஒப்படைக்கும்படி (extradited) இந்தியா, இலங்கையிடம் விண்ணப்பம் செய்து கொண்டதன்பேரில், அவன் இந்தியாவிற்குள் வரும் பொழுது அவரை இந்திய தண்டனைச் சட்டதின்படி தண்டிக்கலாம். எனவே இங்கு **'மீட்டொப்படைத்தல்'**

அல்லது **'அயல்நாட்டிடம் ஒப்படைப்பு' (extradition)** என்பதன் பொருளை அறிந்து கொள்ளல் அவசியம்.

அயல் நாட்டிடம் ஒப்படைப்பு - விளக்கம்:

ஒரு நாட்டிற்கு தப்பி வந்த குற்றஞ்சாட்டப்பட்டவரை, அவர் குற்றம் புரிந்த நாட்டின் வேண்டுகோளின் பேரில், விசாரணைக்கென அந்நாட்டிடமே திரும்ப ஒப்படைப்பது, 'அயல் நாட்டிடம் ஒப்படைப்பு' எனப்படும்.

எடுத்துக்காட்டாக, வெளிநாட்டில் குற்றம் புரிந்த ஒருவன், இந்திய நாட்டிற்குள் தப்பி வந்து விடுகிறான். அந்த வெளிநாட்டிற்கும் இந்திய நாட்டிற்கும் இடையே நட்புரீதியிலான உறவுகள் (friendly terms) உள்ளன. ஆகவே அந்த வெளிநாடு இந்தியாவிடம் கேட்டுக்கொண்டதன் பேரில், குற்றவாளியை அங்கு விசாரிப்பதற்காக அவனை அந்நாட்டிடம் இந்தியா ஒப்படைத்தால் அது **'அயல்நாட்டிடம் ஒப்புவிப்பு'** எனப்படும்.

Tourvil Case (டூர்வில் வழக்கு): இதில் டூர்வில் என்ற பிரிட்டிஷ் குடிமகன், 1879-ஆம் ஆண்டில் ஆஸ்ட்ரிய நாட்டில் உள்ள தனது மனைவியைக் கொன்றுவிட்டு மீண்டும் தன் நாட்டிற்கு தப்பிச் சென்று விட்டான். ஆஸ்ட்ரிய நாடு அவனைத் திருப்பித் தருமாறு வேண்டிக் கொண்டதற்கிணங்க பிரிட்டன் அவனைத் திருப்பி ஒப்படைத்தது.

அயல் நாட்டிடம் ஒப்படைப்பதற்கான நிபந்தனைகள்:

1. குற்றவாளியை திரும்பக் கேட்கும் நாட்டிற்கும், குற்றவாளி தப்பிச் சென்றுள்ள நாட்டிற்கும் இடையே 'குற்றவாளிகளை ஒப்படைப்பது' குறித்தான உடன்படிக்கைகள் (extradition treaties) இருக்க வேண்டும். நாடுகளிடையே உள்ள உறவு நட்புறவாக இருக்க வேண்டும்.

Dharma Teja Case - இவ்வழக்கில் தர்ம தேஜா என்பவர் இந்தியாவில் கோடிக்கணக்கான ரூபாய்களை கையாடல் செய்துவிட்டு கியூபா நாட்டிற்கு தப்பிச் சென்றுவிட்டார். கியூபாவிடம், மேற்படி குற்றவாளியை தங்களிடம் ஒப்படைக்கும்படி, இந்திய அரசு கேட்டுக் கொண்டபொழுது, கியூபா நாட்டு அரசு அவரை ஒப்படைக்க மறுத்துவிட்டது. ஆனால் இதற்கிடையே தர்மதேஜா கியூபாவிலிருந்து இங்கிலாந்து சென்றார். இங்கிலாந்து அரசு இந்தியாவின் வேண்டுகோளின் பேரில் அவரைக் கைது செய்து இந்திய அரசிடம் ஒப்படைத்தது. ஏனெனில் இந்தியாவிற்கும் இங்கிலாந்திற்கும் இடையே குற்றவாளிகளை ஒப்படைத்தல் தொடர்பான ஷரத்துக்களைக் கொண்ட உடன்படிக்கை (treaty) இருந்தது. மேலும் இந்திய அரசும் பிரிட்டிஷ் அரசும் மக்கட் பொதுவுரிமை அரசு நாடுகளில் (Common Wealth Countries) உறுப்பினர்களாகும்.

2. திருப்பித் தரும் நாடு சில சமயங்களில் குறிப்பிட்ட நிபந்தனை களின் பேரில் குற்றவாளியை திருப்பித் தருவது உண்டு. அப்பொழுது திரும்பப் பெற்ற நாடு எந்த நிபந்தனைகளின் அடிப்படையில் குற்றவாளியைப்

பெற்றதோ, அந்த நிபந்தனைகளை மீறி குற்றவாளியை தண்டிக்க முயற்சித்தால், குற்றவாளியை ஒப்படைத்த நாடு அக்குற்றவாளியை மீண்டும் திருப்பிப் பெற உரிமை பெற்றதாகும்.

3. குற்றவாளியை திரும்ப ஒப்படைத்தல் என்பது அரசியல் குற்றம் புரிந்த குற்றவாளிகளுக்கு பொருந்துவது இல்லை.

In Re Castioni[1]

இவ்வழக்கில் சுவிட்சர்லாந்து நாட்டில் அரசியல் புரட்சி நடந்து கொண்டிருந்த சமயத்தில் ரோசி என்ற நகராட்சி ஆணையாளர் கொல்லப் பட்டார். இதற்காக கேஸ்டியோனி மீது குற்றஞ்சாட்டப்பட்டது. கேஸ்டி யோனி என்பவர் புரட்சியாளர்களுள் ஒருவர். அவருக்கு ரோஸியை யார் என்றே தெரியாது. இந்நிலையில் அவர் அடைக்கலம் வேண்டி இங்கிலாந்து நாட்டிற்கு ஓடி விட்டார். மீட்டொப்படைக்கும் சட்டத்தின் கீழ், குற்றவாளியை தங்களிடம் ஒப்படைக்குமாறு சுவிட்சர்லாந்து அரசு இங்கிலாந்திடம் கேட்டுக் கொண்டது. ஆனால் தப்பியோடிய குற்றவாளி ஒருவர் புரிந்த குற்றம், அரசியல் குற்றமாக இருந்ததால், அவரை உரிய நாட்டிடம் திருப்பி ஒப்படைக்க முடியாது என கேஸ்டியோனிக்கு சார்பாக மேற்படி வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

அயல்நாட்டிடம் ஒப்படைத்தல் தொடர்பான முக்கிய வழக்குகள்:

Savarkar's Case[2]

'நாசிக் சதி வழக்கு' (Nasik Conspiracy Case) எனச் சிறப்பாக அழைக்கப்படும் இவ்வழக்கில் சாவார்க்கார் என்பவர், அரசு எதிர்ப்புக் குற்றத்திற்காக விசாரணை செய்யும் பொருட்டு, இலண்டனில் இருந்து இந்தியா கொண்டு வரப்பட்டார். அப்படி கொண்டு வரப்படும் வழியில் அவர் பிரான்க நாட்டில் உள்ள மார்செயில்ஸ் என்ற இடத்தில் தப்பிவிட்டார். பிரான்சு நாட்டு காவலர்கள் சாவார்க்காரைப் பிடித்து, அவரைத் தேடிக் கொண்டிருந்த காவலர்களிடம் திரும்ப ஒப்படைத்தனர். அங்கிருந்து பம்பாய்க்கு கொண்டு வரப்பட்ட அவர் தன்னை சட்ட விரோதமான வழியில் ஒரு வெளிநாட்டி லிருந்து (பிரான்சு) பிடித்துக் கொண்டு வந்ததாக குற்றம் சாட்டினார். (அதாவது அயல்நாட்டிடம் ஒப்படைத்தலுக்குண்டான விதிகளைப் பின்பற்றாமல் கொண்டு வந்ததாக குற்றம் சாட்டினார்.) ஆனால் அதனை பம்பாய் உயர் நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவருக்கு தண்டனை அளித்தது.

Mobarik Ali Ahmed v. State of Bombay[3]

இவ்வழக்கில் குற்றவாளி பாகிஸ்தான் நாட்டிலிருந்து கடிதம் மற்றும் தொலைபேசியின் வாயிலாக செய்திகளை பொய்யாகக் கொடுத்ததன் மூலம்

1. 1891 1 Q.B. 149
2. (1910) 13 Bom. L.R. 296, 304
3. A.I.R. 1957 S.C. 857

(false representation) பம்பாயிலிருக்கும் வியாபாரி ஒருவருக்கு பெருத்த நஷ்டம் ஏற்படுமாறு செய்து ஏமாற்றிவிட்டான். இந்நிகழ்ச்சிக்குப் பிறகு, அவன் இங்கிலாந்துக்கு சென்றுவிட்டான். பின்னர் இந்தியா கேட்டுக் கொண்டதற்கிணங்க, இங்கிலாந்து அரசு அவனை மேற்படி குற்றத்திற்காக தண்டிக்க இந்தியாவிடம் ஒப்படைத்தது. இந்தியாவில் அவன் பிரிவு 420-ன்படி தண்டிக்கப்பட்டான்.

State of Madras v. C.G.Menon[1]

பிரிட்டிஷ் அரசு இந்தியாவை ஆட்சி புரிந்த பொழுது, இரண்டு அரசுக்கும் இடையே, தப்பியோடிய குற்றவாளிகள் சட்டம் (Fugitive Offenders Act) அமலில் இருந்தது. அதன்படி, தப்பியோடிய குற்றவாளிகள் திரும்ப உரிய அரசிடம் ஒப்படைக்கப்பட்டனர். ஆனால் இப்பொழுது இந்தியா சுதந்திர நாடாக ஆகிவிட்டது. ஆகவே மேற்படி ஆங்கிலச் சட்டம் (Fugitive Offenders Act) இந்தியாவிற்கு பொருந்தாது என இவ்வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது. இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, ஒரு இந்தியப் பிரஜையை (திரு. மேனன்) சிங்கப்பூரில் குற்றம் புரிந்ததற்காக கைது செய்ய சிங்கப்பூர் குற்றவியல் நீதித்துறை நடுவர் (Magistrate) பிடியாணை (Warrant) பிறப்பித்தார். ஆனால் திரு மேனன் இந்தியாவிலேயே தற்பொழுது வசித்து வருவதால், அவரைக் கைது செய்ய முடியாது என்றும், தப்பியோடிய குற்றவாளிகள் சட்டத்தின் பிரிவுகள் இந்தியாவிற்கு பொருந்தாது என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. (ஏனெனில் மேற்படி ஆங்கிலச் சட்டம் தற்பொழுது இந்தியாவிற்கு பொருந்துவதில்லை)

State of West Bengal v. Jugal Kishore More[2]

ஆங்கில அரசின் பழைய மீட்டொப்படைப்புச் சட்டங்கள் (Extradition Laws) தற்பொழுது இந்தியாவிற்கு பொருந்தாது என சிஜி.மேனன் வழக்கில் அளிக்கப்பட்ட தீர்ப்பிற்கு பிறகு, இந்திய பாராளுமன்றம் 1962-ஆம் ஆண்டில் மீட்டொப்படைப்புச் சட்டத்தினை (Extraditon Act 32 of 1962) இயற்றியது.

மேற்படி வழக்கில் இந்தியக் குடிமகன் ஒருவர், கல்கத்தாவில் சதி ஒன்றில் ஈடுபட்டுவிட்டு ஹாங்காங் (அச்சமயத்தில் ஆங்கில அரசின் ஆதிக்கத்திற்கு உட்பட்ட நாடு) சென்றுவிட்டார். ஹாங்காங்கிற்கும் இந்தியாவிற்கும் இடையே மீட்டொப்படைப்பு ஒப்பந்தம் இல்லாததால், குற்றவாளியை தகுந்த முறைகளின்படி ஹாங்காங்கிலிருந்து இந்தியாவிற்கு திரும்பக் கொண்டு வர முடியவில்லை. இதனால் 1881-ஆம் ஆண்டின் தப்பியோடிய குற்றவாளிகளின் சட்டத்தின் கீழ் மேற்படி குற்றவாளியை தங்களிடம் திரும்ப ஒப்படைக்குமாறு இந்திய அதிகாரிகள், ஹாங்காங் நாட்டின் செயலாளரிடம் விண்ணப்பித்துக் கொண்டனர். இதன் விளைவாக

1. A.I.R. 1954 S.C. 517
2. A.I.R. 1969 S.C. 1171

குற்றவாளியும், தப்பியோடிய குற்றவாளிகளின் சட்டத்தின்படியே, இந்தியாவிற்கு திரும்ப அனுப்பப்பட்டார். இந்தியா வந்த குற்றவாளி, தன்னை ஆங்கில அரசு இயற்றிய ஒரு சட்டத்தின் வாயிலாக இந்தியாவிடம் திருப்பி ஒப்படைத்தது செல்லாது என்று வாதிட்டார். அவரின் வாதத்தினை கல்கத்தா உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு, சி.ஜி.மேனன் வழக்கில் கூறப்பட்ட முடிவினைப் பின்பற்றி, சுதந்திரம் பெற்ற இந்தியாவில் ஆங்கில சட்டத்தினைப் பின்பற்றி குற்றவாளியை மீட்டொப்படைத்திருப்பது சரியானதல்ல எனத் தீர்ப்பளித்தது. ஆனால் உச்ச நீதிமன்றம் 1962-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட மீட்டொப்படைப்புச் சட்டத்தில் இதற்கு தீர்வு இல்லை என்ற காரணத்தாலும், ஆங்கில சட்டம் பின்பற்றப்பட்டதாலும், குற்றவாளியை இந்தியாவிற்கு கொண்டு வந்தது சரியானதல்ல என்று கூறிவிட முடியாது எனக் கூறி, குற்றம் செய்தவரைத் தண்டிக்க வேண்டும் என்ற பொது நியதிப்படி குற்றவாளியைத் தண்டித்தது.

முடிவுரை:

குற்றமிழைத்தவன் யாராக இருந்தாலும், அவன் மனித சமுதாயத்தின் நன்மையைக் கருதி தண்டிக்கப்படல் வேண்டும். சட்ட நிபுணர்களில் ஒருவரான குரோஸியஸ் என்பவர், ஒரு நாடு, தன்னிடம் புகுந்துள்ள வேற்று நாட்டு குற்றவாளியை, அந்நாட்டிடம் தண்டனை தருவதற்காக திருப்ப ஒப்படைக்கக் கடமைப்பட்டதென்று கூறியுள்ளார்.

- o -

அத்தியாயம் - 4. சில பதங்களுக்குண்டான பொது விளக்கங்கள் (அல்லது) வரையறைகள்

General Explanations or Definitions to Certain Terms

உள்ளே நுழைவதற்கு முன் சிறு விளக்கம்

இந்திய தண்டனைச் சட்டத்தின் இரண்டாவது அத்தியாயமானது (Chapter II), மேற்படி சட்டத்தில் எடுத்தாளப் பட்டிருக்கும் சில பதங்களுக்குண்டான பொது விளக்கங்களை (வரையறைகளை) 6 முதல் 52-A வரையிலான பிரிவுகளின் வாயிலாகத் தருகின்றது. அவற்றில் மிக முக்கியமானதும் மற்றும் தேர்வில் அடிக்கடி வினவப்பட்டுள்ளதுமான பதங்களுக்கு இந்த அத்தியாயத்தில் விளக்கமளிக்கப் பட்டுள்ளன. அவை பெரும்பாலும் ஒரு சிறு குறிப்பு வரையும் வினாவாகவே கேட்கப்பட்டுள்ளன என்பதை அறிக. இனி மேலே தொடர்வோமா?

1. Judge - Write short notes. (நீதிபதி - சிறு குறிப்பு வரைக.)

நீதிபதி (Judge) - பிரிவு 19 கூறும் வரையறை:

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 19-ஆனது, 'நீதிபதி' எனும் பதம், நீதிபதி என்று அலுவல் முறையில் பதவிப் பெயர் கொடுக்கப்பட்டவர் மட்டுமல்லாமல், பின்வருபவர்களையும் உள்ளடக்கும் என்று கூறுகிறது. அதன்படி உரிமையியல் மற்றும் குற்றவியல் வழக்கு நடவடிக்கைகளில் அறுதியான ஒரு தீர்ப்புரை வழங்கவோ அல்லது மேல்முறையீடு செய்யப்படாவிட்டால், அறுதியாக அமையும் ஒரு தீர்ப்புரை வழங்கவோ, அல்லது வேறொரு அதிகாரத்தால் ஊர்ஜிதம் செய்யப்பட்டால் அறுதியாக அமையும் ஒரு தீர்ப்புரை வழங்கவோ (definitive judgment), சட்டத்தால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் நீதிபதி என்ற பதத்தில் உள்ளடங்கியவர். இவர்களைத் தவிர மேற்படி தீர்ப்புரைகளை வழங்குவதற்கு அதிகாரமளிக்கப் பட்டுள்ள பல நபர்களைக் கொண்ட ஒரு அமைப்பில் (body of persons) உள்ள ஒரு நபரும் நீதிபதி (judge) என்ற சொல்லில் அடங்குவார்.

எடுத்துக்காட்டுகள்:

(a) 1859-ஆம் ஆண்டு 10-வது சட்டத்தின்படி உரிமையியல் வழக்கொன்றில் அதிகாரவரம்பு கொண்டுள்ள ஒரு ஆட்சியர் (Collector), நீதிபதியாவார்.

(b) ஒரு குற்றச்சாட்டின் மீது, மேல்முறையீட்டிற்கு உட்பட்ட அல்லது உட்படாத அபராதமோ அல்லது சிறைத் தண்டனையோ விதிக்க அதிகாரம் பெற்றிருந்து, அதைப் பொறுத்து அதிகாரம் செலுத்துகின்ற ஒரு குற்றவியல் துறை நடுவர் (Magistrate), ஒரு நீதிபதியாவார்.

(c) 1816-ஆம் ஆண்டு சென்னை சட்டத் தொகுப்பின் ஒழுங்குமுறை VII-ன்படி (Regulation VII, 1816 of the Madras Code) உரிமை வழக்குகளை விசாரணை செய்து முடிவு செய்யும் அதிகாரம் பெற்றிருக்கின்ற ஒரு பஞ்சாயத்து உறுப்பினர் (Member of a Panchayat), ஒரு நீதிபதியாவார்.

(d) ஒரு குற்றச்சாட்டை பொறுத்தமட்டில் வேறு ஒரு நீதிமன்றத்திற்கு மேல்விசாரணைக்காக அனுப்புவதற்கு மட்டுமே அதிகாரம் பெற்றிருந்து, அதைப் பொறுத்து அதிகாரம் செலுத்துகின்ற ஒரு குற்றவியல் துறை நடுவர் (Magistrate), ஒரு நீதிபதியாவார்.

2. Servant of Government - Write short notes. (அரசு ஊழியர் - சிறு குறிப்பு வரைக.)

இந்திய தண்டனைச் சட்டத்தின் 14-வது பிரிவின்படி, 'அரசு ஊழியர்' எனும் பதங்கள், அரசின் அதிகாரத்தால் அல்லது அதிகாரத்தின் கீழ் இந்தியாவில் வேலையில் தொடர்ந்து வைத்துக் கொள்ளப்படும், நியமிக்கப்படும் அல்லது அமர்த்தப்படும் அலுவலர் அல்லது ஊழியர் எவரையும் குறிக்கும்.

3. Public Servant - Write short notes. (பொது ஊழியர் - சிறு குறிப்பு வரைக.)

பின்வருவனவற்றில் எதன் கீழும் வருகின்ற ஒரு நபர், பொது ஊழியராவார் என்று பிரிவு 21 கூறுகிறது. அதன்படி,

முதலாவது.- [நீக்கப்பட்டது]

இரண்டாவது.- இந்திய தரைப்படை, கடற்படை அல்லது வான்படையில் ஆணை பெற்ற அலுவலர் ஒவ்வொருவரும்;

மூன்றாவது.- நீதிபதிகள்;

நான்காவது.- கலைப்பதிகாரி (liquidator), சொத்துப் பேணுநர் (receiver) அல்லது ஆணையர் (commissioner) உள்ளிட்ட ஒவ்வொரு நீதித்துறை அலுவலரும்;

அய்ந்தாவது.- ஒரு நீதிமன்றத்திற்கோ அல்லது பொது ஊழியருக்கோ உதவுகின்ற சான்றாயர் (Juryman), தீர்ப்புதவியாளர் (assessor) அல்லது பஞ்சாயத்து உறுப்பினர் ஒவ்வொருவரும்;

ஆறாவது.- இசைவுத் தீர்ப்பாளர் (Arbitrators) ஒவ்வொருவரும்;

ஏழாவது.– பதவி காரணமாக எவரொருவரையும் சிறைப்படுத்த அல்லது சிறையில் வைக்க அதிகாரம் அளிக்கப்பட்டிருந்து, அத்தகைய பதவி எதையும் வகிக்கிற நபர் ஒவ்வொருவரும்;

எட்டாவது.– குற்றங்களைத் தடுக்க, குற்றங்களைப் பற்றி தகவல் கொடுக்க, நீதியின் பார்வையில் குற்றவாளிகளை நிறுத்த அல்லது பொதுச் சுகாதாரம், பாதுகாப்பு அல்லது வசதி இவைகளை பாதுகாக்கும் கடமையுடைய அரசு அதிகாரிகள்;

ஒன்பதாவது.– அரசின் சார்பில் சொத்து எதையும் எடுப்பதை, பெறுவதை, வைத்து வருவதை அல்லது செலவிடுவதையோ அல்லது அரசின் சார்பில் நில அளவை மதிப்பீடு அல்லது ஒப்பந்தம் எதையும் செய்வதை அல்லது வருவாய்த் துறை கட்டளை எதையும் நிறைவேற்றுவதையோ, அல்லது அரசின் நிதிநலன்களை பாதிக்கின்ற விஷயம் எதைப்பற்றியும் பரிசீலனை செய்வதை, அல்லது அறிக்கை செய்வதை அல்லது அரசின் நிதிநலன்கள் சம்பந்தமான ஆவணம் எதையும் தயார் செய்வதையோ, உறுதியொப்பமிடுவதையோ அல்லது வைத்து வருவதையோ, அல்லது அரசின் நிதிநலன்களைப் பாதுகாப்பதற்கான சட்டம் எதனையும் மீறுதலைத் தடுப்பதையோ, அலுவலர் என்ற முறையில் தம் கடமையாகக் கொண்டுள்ள அலுவலர் ஒவ்வொருவரும்;

பத்தாவது.– சொத்து எதையும் எடுப்பதை, பெறுவதை, வைத்து வருவதை அல்லது செலவிடுவதையோ, அல்லது கிராமம், நகரம் அல்லது மாவட்டம் ஏதொன்றின் சமயச் சார்பற்ற பொது நோக்கம் எதற்காகவேனும் நில அளவை அல்லது மதிப்பீடு எதையும் செய்வதை, அல்லது தீர்வை அல்லது வரி எதையும் விதிப்பதையோ, அல்லது கிராமம், நகரம் அல்லது மாவட்டம் ஏதொன்றின் மக்களுடைய உரிமைகளை உறுதியாகத் தெரிந்து கொள்வதற்காக ஆவணம் எதையும் தயார் செய்வதையோ, உறுதியொப்ப மிடுவதையோ அல்லது வைத்து வருவதையோ, அலுவலர் என்ற முறையில் தம் கடமையாகக் கொண்டுள்ள அலுவலர் ஒவ்வொருவரும்;

பதினோராவது.– பதவி காரணமாக வாக்காளர் பட்டியலொன்றைத் தயாரிக்க, வெளியிட, பராமரிக்க அல்லது திருத்தவோ அல்லது ஒரு தேர்தலை அல்லது ஒரு தேர்தலின் பகுதியை நடத்தவோ அதிகாரம் அளிக்கப் பட்டிருந்து, அத்தகைய பதவி எதையும் வகிக்கிற ஒவ்வொருவரும்,

பனிரெண்டாவது.– பின்வரும் ஒவ்வொருவரும் (a) அரசின் ஊழியத்தில் உள்ள அல்லது அரசிடம் ஊதியம் வாங்குகின்ற அல்லது பொதுக்கடமை எதையும் புரிவதற்காக அரசினால் கட்டணங்கள் அல்லது தரகு என்னும் வகையில் ஊதியமாக அளிக்கப் பெறுகின்றவர்;

(b) ஒரு உள்ளூர் அதிகார அமைப்பின், அல்லது ஒரு மத்திய, மாகாண அல்லது மாநிலச் சட்டத்தினால் அல்லது அதன்படி நிறுவப்பட்ட ஒரு

கூட்டுருக் கழகத்தின் (Corporation), ஓர் அரசு வணிக நிறுவனத்தின் ஊழியத்தில் உள்ள அல்லது அதனிடம் ஊதியம் வாங்குகிறவர்.

எடுத்துக்காட்டு : ஒரு நகராட்சி ஆணையாளர் ஒரு பொது ஊழியராவார்.

4. Valuable Security - Write short notes. (மதிப்பாவணம் - சிறு குறிப்பு வரைக)

ஒரு ஆவணத்தினால் சட்டப்படியான பயன் எழுவதாக இருந்தால், அந்த ஆவணம் மதிப்பாவணம் எனப்படுகிறது. விவரமாகக் கூறிடின், ஒரு ஆவணம் சட்ட உரிமையை உண்டாக்கினாலோ அல்லது உண்டாக்கும் தன்மை உடையதாக இருந்தாலோ அது மதிப்பாவணம் ஆகிறது. மேலும், ஒரு ஆவணம் சட்ட உரிமையை நீட்டித்தாலோ, அல்லது விடுவித்தாலோ, அதுவும் மதிப்பாவணம் என்றே கூறப்படுகிறது, என **பிரிவு 30** வரையறுக்கிறது. மதிப்பாவணத்தை, **'பெறுமதியான பத்திரம்'** என்றும் அழைக்கலாம்.

(எ.கா.) A என்பவர் தன்னுடைய பெயரையே ஒரு மாற்றுச் **சீட்டின்** (Bill of Exchange) பின்புறத்தில் எழுதுகிறார். இவ்வாறு மேற்குறியிட்டதன் (Endorsement) விளைவாக, அதன் உரிமை எந்த நபருக்கும் மாற்றியளிக்கப் படுகிறது. அந்த மாற்றுச் சீட்டினை வைத்திருப்பவர் யாராக இருந்தாலும், அவர் அதனை சட்டப்படியாக வைத்திருப்பவர் (Lawful holder) ஆகிறார். இங்கு இவ்வாறு மேற்குறியிட்டது மதிப்பாவணம் ஆகிறது.

குலுக்கல் செய்யப்படாத லாட்டரிச் சீட்டு, முன்பதிவு செய்யப்பட்ட சினிமா டிக்கெட் இவைகளையும் மதிப்பாவணமாக குறிப்பிடலாம். மேலும், ஒரு விவாகரத்து ஆவணத்தையும் (Deed of divorce) மதிப்பாவணமாக குறிப்பிடலாம். ஆனால், மதிப்பாவணத்தின் நகலை (Copy) மதிப்பாவணமாக ஏற்றுக் கொள்ளமுடியாது.

5. Good faith - Write short notes. (நல்லெண்ணம் - சிறு குறிப்பு வரைக)

தகுந்த பொறுப்பும் கவனமும் இன்றிச் செய்யப்பட்ட அல்லது நம்பப்பட்ட எது ஒன்றும் நல்லெண்ணத்தின்படி செய்யப்பட்டதாகவோ அல்லது நம்பப்பட்டதாகவோ கூறமுடியாது, என்று இந்திய தண்டனைச் சட்டத்தின் **52வது பிரிவு** நல்லெண்ணத்திற்கு வரையறை தருகிறது. ['Good faith' - Nothing is said to be done or believed in 'good faith' which is done or believed without care and attention (Section 52)]. மேற்படி வரையறை, நல்லெண்ணம் எது என்று நேரடியாகப் பொருள் தரவில்லை. ஆகவே, மேற்படி வரையறையைச் சற்று நெகிழ்த்தி பின்வருமாறு பொருள் கொண்டால், 'நல்லெண்ணம்' என்பதின் பொருள் எளிதில் விளங்கிவிடும். அதாவது, தகுந்த பொறுப்புடனும், கவனத்துடனும் செய்யப்படும் அல்லது நம்பப்படும் எது ஒன்றும், நல்லெண்ணத்தின்படி

செய்யப்பட்டதாகவும், நம்பப்பட்டதாகவும் கருதப்படும். உதாரணமாக, ஒருவன் நல்லெண்ணத்துடன் செயல்பட்டானென்றால், அவன் அவ்விஷயம் குறித்து தகுந்த பொறுப்புடனும் கவனத்துடனும் செயல்பட்டான் என்று பொருளாகும்.

Emperor v. P.C.Tarpore[1] என்ற வழக்கில் ஒரு எழுத்தாளருக்கு ஒரு விஷயத்தில் அடிப்படை உண்மைகள் அனைத்தும் தெரிந்த பொழுதும், அவற்றைப் புறக்கணித்துவிட்டு செயல்படுகின்றார். இங்கு அவ்வெழுத்தாளர், தாம் நல்லெண்ணத்துடன் செயல்பட்டதாக வாதிட முடியாது. ஏனெனில் அவர் தக்க பொறுப்புடனும் கவனத்துடனும் செயல்படவில்லையென தீர்ப்பு கூறப்பட்டது.

உங்கள் கவனத்திற்கு...

தவறான இலாபம் (Wrongful gain), தவறான நஷ்டம் (Wrongful loss), நேர்மையற்ற (Dishonestly), மோசடியாக (Fradulently), செயல் (Act), செயல் தவிர்க்கை (Omission), சட்ட விரோதமான (Illegal) ஆகிய பதங்களுக்குண்டான வரையறை களை அத்தியாயம் 1-லும், புகலிடம் அளித்தல் (Harbour) எனும் பதத்திற்குண்டான வரையறையை அத்தியாயம் 2-லும் நாம் ஏற்கனவே கண்டுள்ளோம்.

- o -

1. A.I.R. 1140 Sind. 239

அத்தியாயம் - 5. தண்டனை

[நோக்கம், அடிப்படை மற்றும் வகைகள்]

Punishment

[Objective, basis and types]

1. Enumerate the various kinds of punishments provided under the Indian Penal Code. Do you think that the list is sufficient? (இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பல்வேறு வகையான தண்டனைகளை எடுத்தியம்புக. இந்தப் பட்டியல் போதுமானதென்று தாங்கள் கருதுகிறீர்களா?)

(அல்லது)

Kinds of Punishment - Write short notes. (தண்டனையின் வகைகள் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

(a) Explain the kinds of punishment provided in the Indian Penal Code.

(b) Under what circumstances enhanced punishment can be awarded?

(அ) இந்திய தண்டனைச் சட்டத்தில் வழிவகை செய்யப்பட்டுள்ள தண்டனையின் வகைகளை விளக்குக.

(ஆ) எச்சூழ்நிலைகளின் கீழ் அதிகரிக்கப்பட்ட தண்டனை வழங்கப் படலாம்?

(அல்லது)

Explain briefly the various punishments prescribed under the Indian Penal Code. (இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள பல்வேறு தண்டனைகளை சுருக்கமாக விளக்குக.)

தண்டனை - அடிப்படை (Basis):

குற்றச் செயல்களை அரசு கண்டனம் செய்தால் மட்டும் போதாது. கண்டனத்திற்குள்ளான காரியங்களைச் செய்வோர் தண்டனைக்கு ஆளாவார்கள் என்று சட்டம் இருந்தால்தான் தீச்செயல்களை தடுப்பது இயலும். தண்டனை இல்லாத வெறும் கண்டனத்தால் யாதொரு பயனும் இல்லை. ஆதலால், குற்றம் இழைத்தவர்களை அரசு துன்பத்திற் குள்ளாக்குகிறது. குற்றவாளிகளை அரசு துன்பமுறும்படி செய்வது, ஒறுத்தல் அல்லது தண்டனை அளித்தல் (Punishment) என்கிறோம். எனவே, குற்றம் என்று அரசு ஒன்றைக் கூறினால், அதற்குரிய தண்டனை உண்டு என்பது பொருளாகும். சுருங்கக்கூறின், தண்டனையில்லாத குற்றம் இருப்பதில்லை இவ்வாறு குற்றவியல் சட்டத்தின் அடிப்படையாக தண்டனை முறை அமைகிறது.

தண்டனை அளிப்பதன் நோக்கங்கள் (Objectives):

குற்றம் இழைத்தோரை தண்டிப்பதின் நோக்கங்கள் பின்வரும் நான்கு கோட்பாடுகளின் வழியாக அமைகின்றது. அவை,

1) 'அச்சுறுத்துவது தண்டனை' எனும் கோட்பாடு (Deterrent Theory of Punishment): சட்டத்தால் அளிக்கப்படும் தண்டனை குற்றவாளியின் உடலுக்கு வேதனையும், உள்ளத்திற்கு அச்சுறுத்தலையும் அளிக்கிறது. எனவே, தண்டனையை அனுபவித்தவன் இனி எதிர்காலத்தில் குற்றங்கள் செய்வதற்கு அஞ்சுகிறான். குற்றவாளி தண்டனையில் உழல்வதைச் சமூகத்தில் உள்ள பிறரும் பார்க்கின்றனர். குற்றமிழைத்தால் இதுபோன்ற தண்டனை தமக்கும் கிடைக்கும் என்ற அச்சம் அவர்கள் மனதிலும் எழுகின்றது. குற்றம் செய்வதில் ஓரளவு நாட்டமுள்ளவர்கள், குற்றவாளி படும் தண்டனைகளைக் கண்டு மனம் திருந்தலாம். இவ்வாறு அளிக்கப்படும் தண்டனை, அதைப் பெற்ற குற்றவாளிகளையும் அச்சுறுத்துகிறது; பிறரையும் அச்சுறுத்தி நல்வழி நிற்கச் செய்கிறது. இந்த வகையில் தண்டனை அச்சுறுத்தி நல்வழிப் படுத்துகிறது. இதைத்தான் மேற்படி கோட்பாடு உணர்த்துகிறது.

2) 'பழிவாங்குவது தண்டனை' எனும் கோட்பாடு (Retributive Theory of Punishment): ஒருவன் செய்த குற்றத்தால் தீங்கு அடைந்தவர் தனி நபராக இருந்தாலும், அக்குற்றம் உலக சமுதாயத்திற்கு எதிரான செயலே யாகும். எனவே, சமுதாயம் அக்குற்றவாளிக்குத் தண்டனை அளித்து அவன் மீது வஞ்சம் தீர்த்துக் கொள்கிறது. சமுதாயத்திற்கு எதிராகக் குற்றவாளி இழைத்த குற்றச் செயலுக்கு பழிவாங்கும் வகையில் அவனுக்கு தண்டனை விதிக்கப்படுகிறது. எடுத்துக்காட்டாக, முந்தய காலகட்டங்களில் சில நாடுகளில் ஒருவன் மற்றொருவனின் கையை வெட்டிவிட்டால், அவனுக்குரிய தண்டனையாக அவனது கையையும் வெட்டுவது நடைமுறையில் இருந்து வந்தது. இவ்வாறு, குற்றவாளி மீது பழிவாங்கும் முறையில் தண்டனை அமைகிறது, என்கிறது மேற்படி கோட்பாடு.

3) 'குற்றங்களைத் தடுப்பது தண்டனை' எனும் கோட்பாடு (Preventive Theory of Punishment): தண்டனையால் குற்றவாளிகளுக்கு அச்சம் ஏற்படுகிறது என்பது உண்மைதான். 'பழிக்குப் பழி வாங்க வேண்டும்' என்ற வேட்கை தணிகிறது என்பதும் உண்மைதான். எனினும், குற்றவியல் சட்டத்தின் நோக்கம் என்ன? சமுதாயத்தில் குற்றங்கள் நிகழாதவாறு தடுக்க வேண்டும் என்பதேயாகும். எனவே, அளிக்கப்படும் தண்டனையானது, குற்றங்கள் நிகழ்வதைத் தடுக்கும் முறையாகவும் அமைகிறது. குற்றம் செய்த ஒருவர் மீண்டும் அக்குற்றத்தைச் செய்ய இயலாத நிலையில் வைக்கப்பட வேண்டும். திருடியவனைச் சிறையில் அடைத்தால், சிறையில் இருக்கும்வரை திருடும் வாய்ப்பு அவனுக்கு இல்லை. சிறையில் அடைக்கப்பட்டதால் ஏற்பட்ட துன்பம் அவன் மனத்தைத் திருத்தி மீண்டும் திருடாதவாறு தடுக்கின்றது. இதைத்தான் மேற்படி கோட்பாடு வலியுறுத்துகிறது.

4) 'சீர்திருத்துவது தண்டனை' எனும் கோட்பாடு (Reformative Theory of Punishment): தண்டனை என்பது உடலை வருத்துவதாக மட்டுமல்லாமல் உள்ளத்தைத் திருத்துவதாவும் இருக்க வேண்டும், எனும் இக்கோட்பாடு தற்காலத்தில் பலராலும் ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது.

'குற்ற மனம் இன்றிக் குற்றச் செயல் இல்லை' என்று முன்னர் கண்டோம். எனவே குற்றவாளியின் மனதில் குற்ற மனம் தோன்றாதவாறு, அவனை சீர்திருத்தும் விதமாக அளிக்கப்படும் தண்டனை அமைய வேண்டும்.

அழுக்காறு, அவா, வெகுளி முதலிய தீய குணங்களால் மனம் பீடிக்கப்பட்டிருக்கும் பொழுதுதான், தீய (குற்றச்) செயல்கள் எழுகின்றன. எனவே, குற்றவாளிகளில் பெரும்பாலானோர் மேற்படி தீய குணங்களெனும் நோயுற்ற மனத்தோடு உள்ளவர்கள். உடல் நோயுள்ளவர்களுக்கு மருந்து கொடுத்து குணப்படுத்துவதைப் போல, உள நோயுள்ள குற்றவாளிகளுக்கு அளிக்கப்படும் தண்டனை அவர்களுடைய உள்ளத்தைக் குணப்படுத்தி திருத்த வேண்டும். சுருங்கக்கூறின், தண்டனையளிப்பதின் நோக்கம், குற்றவாளியின் உடலை வருத்துவதாக இன்றி, அவன் உள்ளத்தைத் திருத்துவ தாகவும் அமைதல் வேண்டும்.

மேற்படி கோட்பாட்டின்படி, தண்டனை அச்சுறுத்துவதாக மட்டுமன்றி அறிவுறுத்துவதாகவும், பழிவாங்குவதாக மட்டுமன்றிப் பண்பூட்டுவதாகவும் அமைகிறது. இதுவே குற்றவியல் சட்டத்தின் நோக்கத்திற்கு உகந்ததாகும்.

முடிவாக, அச்சுறுத்துவது, பழிவாங்குவது, குற்றங்களைத் தடுப்பது, சீர்திருத்துவது ஆகிய நால்வகைக் கோட்பாடுகளின் அடிப்படையில் தண்டனை முறை இயங்குகின்றது எனக் கண்டோம். இவை ஒவ்வொன்றும் முரண்பட்டவையல்ல. ஏனெனில், குற்றவாளியை சீர்திருத்த வேண்டும் என்ற ஒரே கருத்துடன் தண்டனை அளிக்கப்படுவதில்லை. கொலைக் குற்றவாளியைத் தூக்கிலிட்ட பின் அவனைச் சீர்திருத்தும் பிரச்சனையே எழுவதில்லை. கொலையாளிக்கு அளிக்கப்படும் மரணதண்டனை பிறரை அச்சுறுத்துவதாகவும், அக்கொலையாளியைப் பழிவாங்குவதாகவும் அமைகிறது. ஆனால், சிறிய குற்றங்களைச் செய்தோரைச் சீர்திருத்த வேண்டும் என்ற நோக்கத்துடன்தான் சிறையிலடைக்கின்றோம். எனவேதான், அச்சுறுத்துவதோடு அறிவுறுத்துவதும், பழிவாங்குவதோடு பண்பூட்டுவதும் தண்டனை முறையின் கோட்பாடுகளாக அமைகின்றன.

தண்டனையின் வகைகள் (Types of Punishment):

முந்தய காலங்களில் பலவித கொடுந்தண்டனைகள் நடைமுறையில் இருந்தன. ஆனால் தற்பொழுது இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 53-ஆனது, பின்வருமாறு தண்டனையின் வகைகளைக் குறிப்பிடுகிறது.

பிரிவு 53 : குற்றவாளிகளுக்கு இந்தச் சட்டத்தின் கீழ் கிடைக்கக் கூடிய தண்டனைகள்:

1. மரணதண்டனை. 2. ஆயுள் தண்டனை. 3. (சட்டத்தால் நீக்கப்பட்டது). 4. இரண்டு வகைப்பட்ட சிறைக்காவல். (i) கடுங்காவல் (Rigorous), [கடுமையான உழைப்புடன் கூடியது] (ii) வெறுங்காவல் (Simple imprisonment). 5. சொத்துக்களைப் பறிமுதல் செய்தல். 6. அபராதம்.

முதல் நான்கு வகையும் உடல் சம்பந்தமான தண்டனை ஆகும். இறுதி இரண்டும் சொத்து சம்பந்தமான தண்டனை ஆகும். நீதிபதிக்கு தண்டனைகளை விதிப்பதில் எல்லையற்ற தன்னுரிமை உண்டு. ஆனால் மரண தண்டனையை ஏதேச்சையாக விதிக்க முடியாது.

மரண தண்டனை (Death):

மரண தண்டனை எனப்படுவது, இந்தியாவைப் பொறுத்தவரை, குற்றவாளியை தூக்கில் மாட்டி அவனது உயிரைப் பறித்தலாகும். மரண தண்டனைத் தீர்ப்பில், "சாகும் வரையில் தூக்கில் தொங்கப்பட வேண்டும்" **("He be hanged by neck till he is dead") (Sec. 354 of Cr.P.C.)** என்று பகரப்படும். பின்வரும் குற்றங்கள் மரணதண்டனைக்குரிய குற்றங்களாகும்.

(1) இந்திய அரசுக்கெதிராகப் போர் தொடுத்தல் **(பிரிவு 121);** (2) கலக உடந்தை **(பிரிவு 132);** (3) பொய்ச்சான்று மூலம் ஒரு நிரபராதியை மரண தண்டனைக்குள்ளாக்குதல் **(பிரிவு 194);** (4) கொலை **(பிரிவு 302);** (5) இளவர், புத்தி சுவாதீனமற்றவர், குடிபோதையில் இருப்பவர் ஆகியோர்கள் தற்கொலை செய்துகொள்ள உடந்தையாக இருத்தல் **(பிரிவு 305);** (6) ஆயுட்கைதியின் கொலை முயற்சி **[பிரிவு 307(2)];** (7) கொலை தொடர்ந்த கூட்டுக் கொள்ளை **(பிரிவு 396).**

பிரிவு 54 : மரணதண்டனை விதிக்கப்பட்டுள்ள ஒவ்வொரு வழக்கிலும், உரிய அரசு குற்றவாளியின் இசைவு இல்லாமலேயே, அத்தண்டனையை இந்த சட்டத்தால் வகை செய்யப்பட்ட வேறெந்த தண்டனையாகவும் மாற்றலாம்.

ஆயுள் தண்டனை (Imprisonment for life):

ஆயுள் தண்டனை என்பது ஒருவனது ஆயுளில் எஞ்சிய வாழ்வு முழுவதையும் சிறையில் கழிப்பதற்காக விதிக்கப்படுவதாகும். **K.M.Nanavathi v. State of Maharashtra[1], Naib Singh v. State of Punjab[2]** ஆகிய வழக்குகளில், ஆயுள் தண்டனை என்பது, கைதியின் கடைசி மூச்சு இருக்கும் வரை அவனுக்கு கடுஞ் சிறைத் தண்டனை முறையில், சிறையில் இருத்தி வைப்பதாகும் என்று உச்ச நீதிமன்றத்தால் விளக்கப்பட்டுள்ளது.

பிரிவு 55-ன்படி, ஆயுள் தண்டனை விதிக்கப்படக்கூடிய ஒவ்வொரு

1. A.I.R. 1962 S.C. 605
2. A.I.R. 1983 S.C. 855 : 1983 Cri. L.J. 1345

வழக்கிலும், உரிய அரசு (appropriate Government), குற்றவாளியின் இசைவு இல்லாமலேயே, அத்தண்டனையை 14 ஆண்டுகளுக்கு மேற்படாத இருவகைச் சிறைத் தண்டனையில் எந்த ஒரு வகை தண்டனையாகவும் மாற்றலாம்.

பிரிவு 57-ன்படி, தண்டனையின் கால அளவில் உள்ள பின்னங்களைக் (fractions) கணக்கிடுவதில், ஆயுள் தண்டனையானது இருபது வருடங்களுக்கான சிறைத் தண்டனையாக கணக்கிடப்பட வேண்டும். இந்தப் பிரிவின் அளாவுகை பின்வரும் முக்கிய வழக்கொன்றில் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

G.V.Godse v. State of Maharashtra[1] - நமது தேசப்பிதா மகாத்மா காந்தியை சுட்டுக் கொன்றவன் G.V.கோட்ஸே என்பதை நாமனைவரும் அறிவோம். அவனுக்கு மேற்படி கொலைக் குற்றத்திற்காக, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. ஆனால் தனக்கு விதிக்கப்பட்ட ஆயுள் தண்டனையானது, பிரிவு **57-ன்படி**, 20 ஆண்டுகள் ஆனவுடன் முடிவுக்கு வந்துவிடும் என வாதிட்டான். மேலும் இது சம்பந்தமாக சிறைச்சாலை சட்ட விதிகளையும் (Prisons Act and Jail Manual) ஆதாரமாகக் காண்பித்தான். ஆனால் உச்ச நீதிமன்றமானது, பிரிவு 57-ன் உட்பொருள் அதுவல்ல என்றும், தண்டனைக் கால அளவுகளின் பின்னங்களைக் கணக்கிடுவதில்தான் (in calculating fractions of terms of punishment) அவ்வாறு கொள்ள வேண்டுமென்றும், மற்றபடி ஆயுள் தண்டனை என்பது குற்றவாளியை மன்னித்து அவனது தண்டனையை உரிய அரசு குறைக்கும் வரை (remission by appropriate Government) அவனுடைய வாழ்நாள் முழுவதும் சிறைத் தண்டனையே என்றும், மேலும் ஆயுட்தண்டனைக்கு காலவரம்பு இல்லையென்றும் கூறியது. இவ்வழக்கு, **'மகாத்மா காந்தி கொலை வழக்கு' (Mahatma Gandhi Murder Case)** என்றும் அழைக்கப்படுகிறது.

ஆயுள் தண்டனைக் காலம் தொடர்பாக மேற்படி வழக்கு ஒரு சிறு சலசலப்பை உண்டு செய்ததினால், அதனைத் தீர்க்கும் பொருட்டு பின்வரும் விதிகள் கொண்டு வரப்பட்டன, அஃதாவது, (1) ஆயுட்தண்டனையானது 20 ஆண்டுகள் ஆனபின் தானாக முடிவுக்கு வராது. (2) சிறைச்சாலை விதிப் புத்தகங்களில் (Jail Manuals) கூறப்பட்ட விதிமுறைகள் நிர்வாக நலனுக் காகவே ஒழிய, அது இந்திய தண்டனைச் சட்டத்தின் வகைமுறைகளை மீறி செயல்பட முடியாது. (3) ஆயுட்தண்டனையை உரிய அரசு குறைத்தாலொழிய கைதியின் வாழ்நாள் முழுவதும் சிறைத் தண்டனை ஆகும். (4) தண்டனையை குறைக்கக் கூடிய அதிகாரம், எந்த மாநில அரசு தண்டனையை விதித்ததோ அந்த மாநிலத்திற்குத்தான் உண்டு.

ஆயுட்தண்டனைக்குரிய குற்றங்கள்: அரசிற்கெதிராக போர் தொடுத்தல் **(பிரிவு 121)**, கலகத்திற்கு (mutiny) உடந்தையாய் இருத்தல் **(பிரிவு**

1. A.I.R. 1961 S.C. 600

131), கொலை (பிரிவு 302), மரணம் விளைவிக்கும் குற்றம் (பிரிவு 304), வன்புணர்ச்சி (பிரிவு 376) போன்று 46 வகையான குற்றங்கள்.

சிறைத் தண்டனை (Imprisonment):

குற்றவாளி ஒருவனை சிறையில் அடைத்து வைப்பதற்காக கொடுக்கப் படும் தண்டனை சிறைத் தண்டனை எனப்படுகிறது. இது இரு வகைப்பட்டதாகும். (i) கடும் உழைப்புடன் கூடிய கடுங்காவல் சிறைத் தண்டனை (ii) வெறுங்காவல் சிறைத் தண்டனை.

பிரிவு 60-ஆனது, மேற்கண்ட இரண்டு வகைச் சிறைத் தண்டனையில், எந்த ஒரு வகைச் சிறைத் தண்டனையேனும் விதித்து ஒரு குற்றவாளி தண்டிக்கப்படக் கூடிய ஒவ்வொரு வழக்கிலும், அத்தகைய குற்றவாளியைத் தண்டிக்கும் நீதிமன்றம், அத்தகைய சிறைத் தண்டனை முழுவதும் கடுங்காவலாக இருத்தல் வேண்டுமென்றோ அல்லது அச்சிறைத் தண்டனை முழுவதும் வெறுங்காவலாக இருக்க வேண்டுமென்றோ அல்லது அத்தகைய சிறைத் தண்டனையின் எந்தப் பகுதியேனும் கடுங்காவலாகவும், எஞ்சியது வெறுங்காவலாகவும் இருக்க வேண்டுமென்றோ அத்தண்டனைத் தீர்ப்பில் உத்திரவிடுவதற்கு அதிகாரமுடையதாக இருக்கும், என்று கூறுகிறது.

இங்கு நாம் மேற்படி இரு வகைத் தண்டனைகளின் விளக்கத்தை அறிந்து கொள்ள வேண்டியது அவசியமாகிறது.

(i) கடுங்காவல் சிறைத் தண்டனை (Rigorous Imprisonment): இது மண் வெட்டுதல், மரம் வெட்டுதல், நீர் இறைத்தல், மாவு அரைத்தல் போன்ற கடும் உழைப்புடன் கூடிய தண்டனை ஆகும். நிரபராதிக்கு மரண தண்டனை கிடைக்கக் கூடிய வகையில் பொய்ச் சாட்சியம் அளித்தல் **(பிரிவு 194),** மரண தண்டனைக்குரிய குற்றம் செய்யும் பொருட்டு வீட்டினுள் அத்துமீறி நுழைதல் **(பிரிவு 449)** ஆகியவை கடுங்காவல் சிறைத் தண்டனைக்குரிய குற்றங்களாகும்.

(ii) வெறுங்காவல் சிறைத் தண்டனை (Simpie Imprisonment): இங்கு குற்றவாளி சிறைப்படுத்தப்படுவாரேயன்றிக் கடும் உழைப்புகளுக்கு உள்ளாக்கப்படமாட்டார். முறைகேடான தடுப்பு **(பிரிவு 341),** அவதூறு **(பிரிவு 500),** குடிபோதையில் தொந்தரவு செய்தல் **(பிரிவு 510)** போன்று 22 வகையான குற்றங்கள், வெறுங்காவல் சிறைத் தண்டனையால் தண்டிப் பதற்குரியதாகும்.

சிறைக்காவல் தண்டனை, அதிகபட்சமாக பதினான்கு ஆண்டுகள் வரை அளிக்கப்படலாம். கொள்ளை அல்லது கூட்டுக் கொள்ளை நிகழ்த்தும் போது குற்றவாளி கொடும் ஆயுதம் வைத்திருக்கவோ, எவருக்கேனும் கொடுங்காயத்தை ஏற்படுத்தவோ செய்யும் குற்றம் **(பிரிவு 397),** கொள்ளை அல்லது கூட்டுக் கொள்ளை முயற்சியில் ஈடுபட்டுள்ளபோது, குற்றவாளி கொடிய ஆயுதங்களைப் பயன்படுத்தும் குற்றம் **(பிரிவு 398)** ஆகிய

இரு குற்றங்களில் குற்றவாளிக்கு பதினான்கு ஆண்டுகள் சிறைத் தண்டனை விதிக்கப்படுகின்றது. அதுபோல் குறைந்த பட்சமாக 24 மணி நேரம் வெறுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். பிரிவு 510-ன்படி, குடிபோதையில் பொது இடத்தில் தொந்தரவு செய்யும் வண்ணம் நடந்து கொண்டால், அவ்வாறு நடந்து கொள்ளும் குற்றவாளிக்கு 24 மணி நேர வெறுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

சிறைவாசிகளுக்கு குறைந்தபட்ச ஊதியம் (Minimum wages for prisoners): கடுங்காவல் சிறைத் தண்டனையில் சிறைவாசிகளிடம் கடுமையான உழைப்பை வாங்கிக் கொண்டு அவர்களுக்கு ஊதியம் ஏதும் கொடுக்காமல் விடுவிப்பது இந்திய அரசியலமைப்பின் 23-வது ஷரத்தை[1] மீறியதாகும் என பல வழக்குகளில் பல உயர் நீதிமன்றங்கள் கூறியுள்ளன. எனினும், சில உயர் நீதிமன்றங்கள் இதற்கு மாறான கருத்தையும் தெரிவித்துள்ளன. இவற்றிற்கு ஒரு முற்றுப்புள்ளி வைக்க **State of Gujarat v. Hon'ble High Court of Gujarat**[2] எனும் வழக்கில், தண்டனையின் ஒரு பகுதியாக கடும் உழைப்பையும் நல்க வேண்டியுள்ள சிறைவாசிகளுக்கு, அவ்வுழைப்பிற்காக குறைந்தபட்ச ஊதியத்தை அளிக்க வேண்டியது மிக அவசியமானதாகும், என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும், சிறைவாசி பெறும் ஊதியத்தின் ஒரு பகுதியை, அவரது குற்றச் செயலால் பாதிக்கப் பட்டவருக்கு நஷ்டஈடாக வழங்க அரசு தக்க சட்டமியற்ற வேண்டும் என்றும் உச்ச நீதிமன்றம் பரிந்துரை செய்தது.

சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் (Forfeiture of Property):

சொத்துக்களைப் பறிமுதல் செய்தல் குற்றவாளிக்கு மட்டுமில்லாமல் குற்றம் இழைக்காத அவரது உறவினர்களையும் பாதிப்பதாக உள்ளது. ஏனெனில் சொத்தைப் பொறுத்த வரையில் வழிவழியாக வரும் வாரிசுரிமை உள்ளதல்லவா? ஆகையால் சொத்துக்களை முழுமையாக பறிப்பது தடுக்கப்பட்டது. குற்ற வழிகளில் கிடைப்பது மட்டும் பறிக்கப்பட்டது. இது மூன்று குற்றங்களுக்குப் பொருந்தும்.

பிரிவு 126 : இந்திய அரசுடன் அமைதி உறவு கொண்டுள்ள அரசின் ஆட்சி எல்லைகளில் சூறையாடுவதன் மூலம் கைப்பற்றப்பட்ட சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும்.

பிரிவு 127 : மேற்கூறிய வகையில் சூறையாடப்பட்ட சொத்து என்று தெரிந்தே ஒருவர் அதைப் பெற்றுக்கொண்டால், அது பறிமுதல் செய்யப்படும்.

பிரிவு 169 : சொத்தை சட்டபூர்வமற்ற வகையில் வாங்குகின்ற பொது ஊழியர் தண்டிக்கப்படுவதோடல்லாமல், அச்சொத்தும் பறிக்கப்படும்.

---

1. **ஷரத்து 23** – சுரண்டப்படுதலுக்கெதிரான உரிமை.
2. A.I.R. 1998 S.C. 3164

அபராதம் (Fine):

அபராதம் என்பது தண்டனையாக பணத்தை வசூலிப்பதாகும். அபராதம் தண்டனையுடன் சேர்ந்தோ அல்லது தனியாகவோ விதிக்கப் படலாம். அபராதம் விதித்து தண்டிக்கப்படக் கூடிய குற்றங்கள் 11 உள்ளன.

அபராதம் தொடர்பான சட்டப் பிரிவுகள்: எந்தத் தொகை வரையிலும் ஓர் அபராதம் விதிக்கலாமென்று வெளிப்படையாகக் கூறப்படாதவிடத்து குற்றவாளி செலுத்துவதற்கு உள்ளாகிய அபராதத் தொகையானது வரம்பில்லாததாயிருக்கும். ஆனால் அது மிகையாக இருத்தல் கூடாது, என்று **பிரிவு 63** கூறுகிறது.

அபராதம் செலுத்தாமைக்கு சிறைத் தண்டனை விதித்தலைப் பற்றி **பிரிவு 64** கூறுகிறது.

சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கக்கூடியதாக இருக்கும் போது, அபராதம் செலுத்தாமைக்கான சிறைத் தண்டனையின் கால அளவிற்குண்டான வரம்பைப் பற்றி **பிரிவு 65** கூறுகிறது.

அபராதம் செலுத்தாமைக்கான சிறைத் தண்டனையின் வகை குறித்து **பிரிவு 66** கூறுகிறது.

அபராதம் மட்டும் விதித்துத் தண்டிக்கப்படக் கூடிய குற்றமாக இருக்கும் போது, அபராதம் செலுத்தாமைக்கான சிறைத் தண்டனை குறித்து **பிரிவு 67** கூறுகிறது. இதன்படி அபராதத் தொகை ரூ. 50/-க்கு மேற்படக் கூடாது என்றிருக்கும் பொழுது, அதனை குற்றவாளி செலுத்தவில்லை யானால், அவனுக்கு இரண்டு மாதத்திற்கு மேற்படாத கால அளவுக்கு சிறைத் தண்டனை விதிக்கப்படலாம். அதுபோல் ரூ. 100/-க்கு 4 மாதம், ரூ.100/-க்கு மேல் 6 மாதம்.

அபராதம் செலுத்தத் தவறியதற்காக விதிக்கப்படும் சிறைத் தண்டனையானது, அபராதத் தொகை செலுத்தப்பட்டவுடன் முடிவுக்கு வரும், என்று **பிரிவு 68** கூறுகிறது.

அதுபோல், அபராதத் தொகையின் மீதிப்பகுதி செலுத்தப்பட்டதும் சிறைத் தண்டனை முடிவுறும், என்று **பிரிவு 69** கூறுகிறது.

எச்சூழ்நிலைகளில் அதிகரிக்கப்பட்ட தண்டனை வழங்கப்படலாம் (Circumstances for enhanced punishment):

இது குறித்து இந்திய தண்டனைச் சட்டத்தின் **75-வது பிரிவு** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, இந்திய தண்டனைச் சட்டத்தின் XII-வது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்காகவோ (நாணயம் மற்றும் அரசாங்க முத்திரைகள் தொடர்பான குற்றங்கள்) அல்லது XVII-வது அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ள குற்றங்களுக்காகவோ (சொத்திற்கு எதிரான குற்றங்கள்) ஒரு நபருக்கு மூன்று ஆண்டுகளோ அல்லது அதற்கு மேலோ

தண்டனை விதிக்கப்பட்டிருந்து, அதே நபர் திரும்பவும் மேற்படி குற்றங்களைப் புரிந்தால் அவருக்கு அதிகரிக்கப்பட்ட தண்டனையாக ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் வரை சிறைத் தண்டனையோ விதித்து தீர்ப்பளிக்கப்படும்.

2. Death Sentence - Write short notes. (மரண தண்டனை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Bachan Singh v. State of Punjab - Write short notes. (பச்சன் சிங் - எதிர் - பஞ்சாப் மாநிலம் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய தண்டனைச் சட்டத்தின் 53-வது பிரிவு தண்டனைகளின் வகைகளைக் கூறுகிறது. அதில் முதலாவதாக வருவது மரண தண்டனை யாகும். அரசுக்கெதிராக போர் தொடுத்தல், கொலை போன்ற 7 வகையான குற்றங்களுக்கு மரண தண்டனை விதிக்கப்படுகிறது. இக்குற்றங்களில் ஏதேனுமொன்றைப் புரிந்த குற்றவாளியின் உயிர், அவனைத் தூக்கிலிடுவதன் மூலம் பறிக்கப்படுவது, மரண தண்டனையாகும். ஆனால், ஒரு குற்றத்திற்குண்டான தண்டனையாக இந்திய தண்டனைச் சட்டத்தில் மரண தண்டனை குறிப்பிடப்பட்டிருக்கும் பொழுது, அதை மட்டுமே பெரிதாகக் கருத்தில் கொண்டு நீதிமன்றங்கள் குற்றவாளிக்கு மரண தண்டனையை அளித்துவிடக் கூடாது. ஏனெனில், மரண தண்டனையால் ஒருவரின் உயிர் பறிக்கப்படுகிறதல்லவா? எனவே, அங்கு நீதிமன்றங்கள் கவனமாகவும், நிதானமாகவும் சிந்தித்து, அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனையை வழங்க வேண்டும். அந்த வகையில், எச்சூழ்நிலையில் மரண தண்டனையை குற்றவாளிக்கு வழங்குவது நியாயமானதாகும் என்பது குறித்தும், மரண தண்டனையை வழங்குவதில் ஏற்பட்ட சட்ட சிக்கல் தீர்க்கப்பட்ட விதம் குறித்தும் பின்வரும் முக்கிய வழக்கொன்றில் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

Bachan Singh v. State of Punjab[1]

மேற்படி வழக்கில், பச்சன் சிங் என்பவர் தேசா சிங், துர்கா பாய் மற்றும் வீரன் பாய் ஆகியவர்களைக் கொன்ற குற்றத்திற்காக அமர்வு நீதிபதியால் (Sessions Judge) விசாரிக்கப்பட்டு இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302-ன் படி மரண தண்டனை விதிக்கப்பட்டான்.

இதை எதிர்த்து பச்சன் சிங் உயர் நீதிமன்றத்துக்கு மேல்முறையீடு செய்தான். ஆனால் உயர் நீதிமன்றமோ, பச்சன் சிங்கிற்கு அமர்வு நீதிமன்றம் வழங்கிய மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்து, அவனது மேல் முறையீட்டை தள்ளுபடி செய்து விட்டது.

1. A.I.R. 1980 S.C. 898 : 1980 S.C.C. 684

சற்றும் மனம் தளராத பச்சன் சிங், உயர் நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து உச்ச நீதிமன்றத்திற்கு இரண்டாம் முறையீடு (Second Appeal) செய்தான். ஒரு மனிதனின் உயிரை சட்டத்தின் போர்வைக்குள் பறிப்பது, இந்திய அரசியலமைப்புச் சட்டம், தனது 19[1] மற்றும் 21[2] ஆகிய ஷரத்துகள் வழியாக மக்களுக்கு அளித்துள்ள அடிப்படை உரிமைகளை பறிப்பதாகும், என பச்சன் சிங் உச்ச நீதிமன்றத்தில் பிரிவு 302-ன் சட்ட செல்லுதன்மை (Constitutional validity of death sentence) குறித்து வாதிட்டான்.

ஆனால், உச்ச நீதிமன்றத்தின் பெரும்பான்மை நீதிபதிகள் பின்வருமாறு தீர்ப்பளித்தனர். அஃதாவது, கொலைக் குற்றத்திற்கு மாற்றுத் தண்டனையாக இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 302-ன் கீழ் வழங்கப்படும் மரண தண்டனையானது, அரசியலமைப்புச் சட்டத்தின் 19 அல்லது 21-வது ஷரத்துக்களை மீறவில்லை. மேலும் பிரிவு 302-ஆனது, நியாயமற்றது என்பதும் தவறு; அது பொது நலனின்பாற்பட்டதாகும், என்று தீர்ப்பில் கூறியது. உச்ச நீதிமன்றம் மேலும் கூறுகையில், அரசியலமைப்புச் சட்டம் ஷரத்து 19-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள சுதந்திரங்களில் கொலை செய்யவும் அல்லது பிற குற்றங்களைப் புரியவும் சுதந்திரம் உண்டு என்று விதண்டா வாதமாக கருதுதலும் தவறு. எனவே, இந்திய தண்டனைச் சட்டம் போன்ற தண்டனைச் சட்டங்கள், அரசியலமைப்புச் சட்டம் 19(1)-வது ஷரத்தினால் எவ்வித பாதிப்பும் அடைவதில்லை. அது போன்றே கொலைக்கு மாற்றுத் தண்டனையாக வழங்கப்படும் மரண தண்டனையானது, அரசியலமைப்புச் சட்டத்தின் 21-வது ஷரத்தை மீறுகிறது என்றும் கூறுவதற்கில்லை. ஏனெனில், ஷரத்து 21-க்கு பொருள் விளக்கம் கொடுத்து, அதனுள் பொதிந்திருக்கும் பொருளை கண்டோமானால், சட்டத்தால் வகுக்கப்பட்டுள்ள நியாயமான மற்றும் நேர்மையான நடைமுறைகளின்படி ஒருவனது தனிப்பட்ட சுதந்திரம் மற்றும் வாழ்வில் தலையிட அரசுக்கு உரிமை உண்டு என்பது புலனாகும். அதாவது சட்டத்தால் வகுக்கப்பட்ட நியாயமான, நேர்மையான நடைமுறை களின் கீழ், சட்டப்படி ஒருவனது உயிரை மரண தண்டனையின் வாயிலாகப் பறிக்க அரசுக்கு உரிமை உண்டு, என்று மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் நிலைநாட்டியது. இதனடிப்படையில் பச்சன் சிங் வாதத்தை நிராகரித்தது.

மேற்படி வழக்கிலேயே கொலை செய்த குற்றவாளிக்கு, எச்சந்தர்ப்பத்தில் மரண தண்டனை வழங்கப்படலாம் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது.

அதாவது, குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் (Criminal Procedure Code) 354(3)-வது பிரிவானது, குற்றவாளிக்கு மரண தண்டனை விதிப்பதாக

---

1. **ஷரத்து 19** – குடிமக்களுக்கு அளிக்கப்பட்டுள்ள 6 வகையான சுதந்திர உரிமைகள்.
2. **ஷரத்து 21** – எந்த நபரின் வாழ்க்கையோ அல்லது தனிப்பட்ட சுதந்திரமோ சட்டத்தால் ஏற்படுத்தப்பட்ட நடைமுறைகளில் தவிர பிற வழிகளில் மீறப்படக் கூடாது

இருப்பின், அதற்குண்டான சிறப்புக் காரணங்களை (Special reasons) நீதிபதி தீர்ப்புரையில் குறிப்பிட வேண்டும், என்று கூறுகிறது. அதே போன்று குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 235(2)-வது பிரிவின்படி, குற்றவாளிக்கு தண்டனை விதித்து தீர்ப்பு வழங்குவதற்கு முன்னர், நீதிபதி அவரிடம் தண்டனை குறித்து வினவ வேண்டும். அதன் பின்னரே தண்டனை விதிக்க வேண்டும். மேற்படி இரண்டு சட்டப் பிரிவுகளையும் ஒருங்கே கண்ணோக்கிப் பார்த்தால், நீதிமன்றம் ஒருவனை தண்டிப்பதற்கு முன் அவன் செய்த குற்றத்தை மட்டும் பாராமல், அவனது தனிப்பட்ட சூழ்நிலையையும் கருத்தில் கொண்டு செயல்பட வேண்டும், என்பது தெளிவாகிறது. அத்தோடு மட்டுமல்லாமல் எக்காரணிகள் குற்றத்தின் கடுமையை தணிவிக்கின்றன அல்லது அதிகரிக்கச் செய்கின்றன என்பதையும் வழக்கின் சூழ்நிலைகள் மற்றும் பொருண்மைகளைக் கொண்டு ஆராய்ந்தறிந்த பின்னரே தண்டனை வழங்க வேண்டும் என்றும், எனவே மரண தண்டனை தவிர வேறு எந்த தண்டனையும் வழங்க **தீர்க்கமான மாற்று வழி ஏதும் இல்லாத அரிதிலும் அரிதான வழக்குகளில் தவிர (except in the rarest of rare cases)** பிற வழக்குகளில் மரண தண்டனை வழங்கப்படக் கூடாது என்றும், மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது. இங்கு அரிதிலும் அரிதான வழக்குகள் என்பதில் ஈவு இரக்கமில்லாமல் பிஞ்சுக் குழந்தைகளைக் கொல்வது, சற்றும் சிந்திக்காமல் பலரது உயிரை கொடூரமாகப் பறிப்பது, பெண்களை பலவந்தப்படுத்தி, கொடுமைக்குள்ளாக்கி சிறிது சிறிதாக உயிர் பிரியும் வரை கொல்வது போன்ற கொடூர பாதகமான செயல்கள் அடங்கும். இக்கொடுஞ் செயல் மூலம் கொலை புரிபவர்களுக்கு மரண தண்டனை அளிப்பதை உச்ச நீதிமன்றம் தடுக்கவில்லை. ஆனால் அவ்வாறு இல்லாத கொலை வழக்குகளில், குற்றவாளிக்கு மரண தண்டனை அளிப்பது, நீதிக்கு உகந்ததல்ல என்று மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கருத்து தெரிவித்தது.

இறுதியாக, மேற்படி வழக்கைப் பொறுத்தவரை பச்சன் சிங் மிகக் கொடூரமாக மூன்று பேரைக் கொலை செய்துள்ளதால், இது அரிதிலும் அரிதான வழக்கு என்ற அடிப்படையின் கீழ் வருவதாகக் கூறி அவருக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது.

முன்னதாக **Jagmohan Singh v. State of U.P.**[1] எனும் வழக்கிலும் **Rajendra Prasad v. State of U.P.** [2] என்ற வழக்கிலும், மரண தண்டனை வழங்கப்படுவதற்கு **'சிறப்பு காரணங்கள்' (Special reasons)** இருக்க வேண்டும், என்று உச்ச நீதிமன்றம் கூறியது. இது பின்னர் எழுந்த மேற்படி **Bachan Singh** வழக்கிலும் உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது.

Bachan Singh வழக்கில் கூறப்பட்ட 'அரிதிலும் அரிதான வழக்கு' எனும் கொள்கை அதற்குப்பின் எழுந்த **Machhi Singh v. State of Punjab**[3] வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டது.

1. A.I.R. 1973 S.C. 947
2. A.I.R. 1979 S.C. 916
3. A.I.R. 1983 S.C. 957

State of Tamil Nadu v. Nalini[1]

இது முன்னாள் பிரதமர் இராஜீவ் காந்தி கொலை பற்றிய வழக்காகும். இராஜீவ் காந்தி கொலையில் சதி செய்ததாக 26 பேர்கள் மேற்படி வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டனர். அவர்கள் அனைவருக்கும் விசாரணை நீதிமன்றத்தால் மரண தண்டனை வழங்கப்பட்டது. எனவே, குற்றவாளிகளால் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அங்கு, நளினி (A1), சாந்தன் (A2), முருகன் (A3), ராபர்ட் பயாஸ் (A9), ஜெயக்குமார் (A10), ரவிச்சந்திரா (எ) ரவி (A16) மற்றும் பேரறிவாளன் (எ) அறிவு (A18) ஆகிய ஆறு பேர்களுக்கு மட்டும் தண்டனையை உச்ச நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது. மீதமுள்ளோர்களை விடுதலை செய்தது. அந்த அறுவரில், நளினி, சாந்தன், முருகன் மற்றும் பேரறிவாளன் ஆகிய நால்வருக்கு மட்டும் உச்ச நீதிமன்றம் மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்தது. இங்கும் நளினிக்கு எதிரான மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்வதில் நீதிபதிகள் **வாத்வா (Wadhwa)** மற்றும் **குவாட்ரி (Quadri)** ஆகியோர் நளினிக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது சரிதான் என்று கூறினர்; ஆனால் **நீதிபதி K.T. தாமஸ் (K.T. Thomas)** அவர்கள் தனது தனித் தீர்ப்பில் நளினிக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று கூறினார்.

இவ்வாறு ஆயுள் தண்டனையாக குறைக்க வேண்டும் என்று **நீதிபதி K.T. தாமஸ்** வழங்கிய தீர்ப்பில் அதற்குண்டான காரணங்களை பின்வருமாறு கூறுகிறார். அதன்படி, நளினி, ஒரு பச்சிளம் பெண் குழந்தையின் தாயார் ஆவார். **"சட்டத்தின் பார்வைக்கு தாய் தந்தையர் தெரியமாட்டர்" (*Justicia non novit patrem nee matrem* - justice knows no father nor mother)** என்ற முதுமொழி இருப்பினும், அந்த அளவு கடுமையை இங்கு தண்டனையை நிர்ணயிப்பதில் பயன்படுத்த அனுமதிக்க முடியாது; அப்பச்சிளம் குழந்தையின் தந்தைக்கு (முருகன்) நாம் மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்திருந்தாலும், அக்குழந்தை அனாதையாவதைத் தடுக்கும் பொருட்டு, அதன் தாயை நாம் தூக்குமேடையில் இருந்து காப்பாற்ற முயற்சிப்பது நீதிக்கு எதிரானதாகாது; எனவே நளினியின் மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட வேண்டும், என்று நீதிபதி K.T.தாமஸ் கூறினார்.

மேலும், அவர் கூறுகையில், **Bachan Singh** வழக்கில் கூறப்பட்டபடி மரண தண்டனை வழங்கப்பட இது ஒன்றும் அரிதிலும் அரிதான வழக்காகாது. ஏனெனில், நளினி பாலினத்தால் ஒரு பெண். அவர் சிவராசன் மற்றும் அவனது கூட்டாளிகளின் மாய வலையிலிருந்து தப்பிக்க வழியேதும் தெரியாமல் இருந்துள்ளாள். அவள் சிவராசனின் அனைத்து கட்டளை களுக்கும் அடங்கி நடந்துள்ளாள் என்ற ஒன்று மட்டுமே இதை 'ஒரு அரிதிலும் அரிதான வழக்காக' ஆக்காது, என்று கூறினார்.

இதற்கு மாறாக, **நீதிபதி வாத்வா** நளினிக்கு விதித்த மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்து தனது தீர்ப்பில் பின்வருமாறு கூறினார்

1. A.I.R. 1999 S.C. 2640

நளினி, குற்றத்தின் தன்மை மற்றும் அதில் தனது பங்களிப்பைக் குறித்து ஏதும் அறிந்திருக்காவிட்டாலும், சம்பந்தப்பட்ட கொலைக் குற்றம் நிகழ அவள் ஒரு சம்மத தரப்பினராக (willing party) இருந்துள்ளாள். நீதிமன்ற மானது குற்றம் மற்றும் குற்றவாளி ஆகிய இரண்டையுமே கருத்தில் கொள்ள வேண்டியுள்ளது. அப்பொழுது பின்வரும் வினா ஒன்று எழுவதாக நீதிபதி கூறினார். **அதாவது குற்றத்தால் இறந்தவரின் குழந்தைகள், மனைவி அல்லது கணவரது நிலை என்ன?** குற்றத்தின் கொடூரத் தன்மைக்கு அவர்கள் யாரும் தென்படுவதில்லை. அக்குற்றத்தால்[1] நாடே அதிர்ச்சியுற்றது. எனவே நீதிபதி வாத்வா அவர்கள், மேற்படி நால்வருக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை ஊர்ஜிதம் செய்யப்படத்தக்கதே என்று தீர்ப்பளித்தார். அதுபோல், **நீதிபதி குவாட்ரி** அவர்கள் தனது தீர்ப்பில், நளினி ஒரு இந்தியப் பிரஜை; அவள் முருகன் (A3) மீது கொண்ட காதலால் மட்டுமே, இராஜீவ் காந்தியை கொலை செய்ய சதி செய்த கூட்டத்தினருடன் சேர்ந்தாள். எனவே, அச்சதியில் அவள் தனது பங்கை செய்தாள். அதன் விளைவாக இராஜீவ் காந்தி கொலை செய்யப்பட்டார். இது, வேறு வழியில்லாமல் அவள் அச்சதியில் ஈடுபட்டாள் என்பதைச் சுட்டிக்காட்டவில்லை. மாறாக நன்றாக திட்டமிடப்பட்ட அத்தந்திரமான சதியில் ஈடுபட்டு இராஜீவ் காந்தியின் கொலைக்கு காரணமாக இருந்துள்ளாள் என்பதையே தெளிவாக்குகிறது என்று கூறி, நளினி உட்பட நால்வருக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனையை அவர் ஊர்ஜிதம் செய்தார்.

எனினும், பின்னர் நளினியின் கருணை மனுவின் அடிப்படையில் அவரது மரண தண்டனை ஆயுள் தண்டனையாக குறைக்கப்பட்டது, என்பது இறுதித் தகவல்.

மேற்படி வழக்கிலிருந்து, குற்றவாளி ஒருவருக்கு மரண தண்டனையை ஊர்ஜிதம் செய்ய அல்லது செய்ய மறுக்க நீதிபதிகள் எவ்வளவு தூரம் அலசி ஆராய்ந்துள்ளனர் என்பது தெளிவாகிறது.

Suresh Chandra Bahri v. State of Bihar[2]

இவ்வழக்கில் சுரேஷ் சந்திரா பஹாரி என்பவர் தனது மனைவி, தனது சொத்து விவகாரத்தில் தலையிடுகிறார் என்பதற்காக அவளைக் கொன்று அவளது உடலை இரு துண்டாக்கி அப்புறப்படுத்திவிட்டான். அதுபோல், தனது இரு சிறு குழந்தைகளையும் வெளியூர் செல்வதாக அழைத்துச் சென்று, அவர்களையும் கொடூரமாகக் கொன்று, அவர்களது உடல்களை துண்டுதுண்டாக்கி நதியில் வீசிவிட்டான். இக்கொலை, ஒரு தகப்பனாராலேயே மிகக் கொடூரமான, இரக்கமற்ற முறையில் செய்யப்பட்டுள்ளதால், இது **Bachan Singh** வழக்கில் கூறப்பட்டபடி ஒரு அரிதிலும் அரிதான வழக்காகும் (rarest of rare category) என்று கூறி, அவனுக்கு விசாரணை

1. இராஜீவ் காந்தியின் மரணத்தால்
2. A.I.R. 1924 S.C. 2420

நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மரண தண்டனையை உச்ச நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது.

Om Prakash v. State of Haryana[1]

இவ்வழக்கில், ஓம் பிரகாஷ் என்பவரின் குடும்பத்தினருக்கும் மற்றொரு குடும்பத்தினருக்கும் சொத்துக்கள் தொடர்பாக நெடுநாள் பகை இருந்து வந்தது. பகை குடும்பத்தினர் தங்களது அரசியல் பலம் மற்றும் பண பலத்தைப் பயன்படுத்தி, ஓம் பிரகாஷ் குடும்பத்தினருக்கு பல தொந்தரவுகள் கொடுத்து வந்தனர். இதை ஓம் பிரகாஷ் காவல் அதிகாரிகளிடம் புகார் செய்தார். ஆனால் அவர்கள் மீது எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்பட வில்லை. எனவே, மேற்படி ஓம் பிரகாஷ், அப்பகை குடும்பத்தினரின் ஏழு உறுப்பினர்களைக் கொன்று விட்டார். விசாரணை நீதிமன்றமும், உயர் நீதிமன்றமும் ஓம் பிரகாஷிற்கு மரண தண்டனை விதித்தது. ஆனால் இதை எதிர்த்து அவர் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அங்கு மேற்படி கொலைச் செயல் கொடுமையானது என்றாலும், பகை குடும்பத்தினரின் தொந்தரவுகளிலிருந்து தனது குடும்பத்தினைக் காப்பாற்ற அக்குடும்பத்தினை பழி வாங்க வேண்டும் என்ற மனதுடன் ஓம் பிரகாஷ் அப்பகை குடும்ப உறுப்பினர்களைக் கொன்றுள்ளார், என்பது தெளிவாகிறது; எனவே அவர் செய்தது அவரைப் பொறுத்து நியாயமானதாகவே உள்ளது; இதனால் ஓம் பிரகாஷிற்கு மரண தண்டனை வழங்கப்படுவதற்கு இது ஒரு அரிதிலும் அரிதான வழக்காகாது; மேலும் மேற்படி கொலைகள் பொன்னாசையாலோ அல்லது பெண்ணாசையாலோ செய்யப்படவில்லை. வேறு தீய உட்கருத்துகளும் ஏதுமில்லை. மாறாக, பகை குடும்பத்தினரால் தனது குடும்பத்தினருக்கு இழைக்கப்பட்ட அநீதியைக் கண்டு கொதிப்படைந்ததன் காரணமாக, குற்றவாளி ஓம் பிரகாஷால் செய்யப்பட்ட குற்றமாகும். மேற்கண்டவாறு கூறி, அவனுக்கு விதிக்கப்பட்ட மரண தண்டனையை ஆயுள் தண்டனையாக உச்ச நீதிமன்றம் குறைத்தது.

முடிவுரை:

இவ்வாறு மரண தண்டனை விதிப்பதில் சர்ச்சைகள், வழக்குகள் எத்தனையோ. எனினும் **Jagmohan Singh v. State of W.B.**[2] வழக்கில் கூறப்பட்ட கொள்கையான, குற்றவாளிக்கு மரண தண்டனை விதிக்கப்பட சிறப்புக் காரணங்கள் இருக்க வேண்டும் என்பதும், **Bachan Singh v. State of Punjab**[3] வழக்கில், அரிதிலும் அரிதான வழக்குகளில் மட்டுமே மரண தண்டனை விதிக்கப்பட வேண்டும் எனும் கொள்கையும் இதுவரையிலும் பல வழக்குகளில் உச்ச நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டு வருகிறது என்பது மறுக்க முடியாத ஒன்றாகும்.

1. A.I.R. 1999 S.C. 1332
2. A.I.R. 1973 S.C. 947
3. A.I.R. 1980 S.C. 898 : 1980 S.C.C. 684

3. Imprisonment for life - Write short notes. (ஆயுள் தண்டனை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Discuss the case G.V.Godse v. State of Maharashtra. (ஜி.வி.கோட்சே - எதிர் - மகாராஷ்டிரா மாநிலம் எனும் வழக்கை விவாதிக்கவும்.)

[வினா எண் (1)-ன் விடையில் காண்க.]

4. Appropriate Government - Write short notes. (உரிய அரசு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Commutation of Sentence - Write short notes. (தண்டனையைக் குறைத்தல் - சிறு குறிப்பு வரைக.)

'**உரிய அரசு**' என்பதின் விளக்கத்தை அறியும் முன்னர், இந்திய தண்டனைச் சட்டத்தின் **54 மற்றும் 55-வது பிரிவுகளை** அறிதல் அவசியம். மரண தண்டனையைக் குறைத்தல் (Commutation of sentence of death) குறித்து **பிரிவு 54** கூறுகிறது. அஃதாவது, மரண தண்டனை விதிக்கப் பட்டிருக்கும் ஒவ்வொரு வழக்கிலும், 'உரிய அரசு' குற்றவாளியின் இசைவு இல்லாமலேயே, அத்தண்டனையை இந்திய தண்டனைச் சட்டத்தால் வகை செய்யப்பட்ட வேறெந்தத் தண்டனையாகவும் குறைக்கலாம், என மேற்படி பிரிவு கூறுகிறது. அதே போன்று ஆயுள் தண்டனையை குறைத்தல் (Commutation of sentence of imprisonment for life) பற்றி **பிரிவு 55** கூறுகிறது. அதாவது, ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் ஒவ்வொரு வழக்கிலும், 'உரிய அரசு' குற்றவாளியின் இசைவு இல்லாமலேயே அத்தண்டனையை 14 ஆண்டுகளுக்கு மேற்படாமல் இரண்டு வகைச் சிறைத் தண்டனைகளில் எந்த ஒரு வகைத் தண்டனையாகவும் குறைக்கலாம், என்று மேற்படி **பிரிவு 55** கூறுகிறது.

மேற்படி பிரிவுகள் 54 மற்றும் 55-ல் குறிப்பிடப்பட்டிருக்கும் 'உரிய அரசு' என்ற சொற்றொடர் எதனைக் குறிக்கிறது என **பிரிவு 55-A** பின்வருமாறு கூறுகிறது.

அதன்படி, '**உரிய அரசு**' என்ற சொற்றொடர், (a) விதிக்கப்பட்ட தண்டனையானது, மரண தண்டனையாகவோ அல்லது மத்திய அரசின் நிர்வாக அதிகாரத்தின் (executive power of the Union) கீழ் வருகின்ற ஒரு விஷயம் சம்பந்தப்பட்ட சட்டம் எதற்கும் எதிரான ஒரு குற்றத்திற்காகவோ இருக்கும் வழக்குகளில், '**மத்திய அரசு**' என்றும், (b) விதிக்கப்பட்ட தண்டனையானது (மரண தண்டனையானாலும் அல்லது அவ்வாறு இல்லையென்றாலும்) மாநிலத்தின் நிர்வாக அதிகாரத்தின் கீழ் வருகின்ற ஒரு விஷயம் சம்பந்தப்பட்ட சட்டம் எதற்கும் எதிரான ஒரு குற்றத்திற்காக இருக்கும் வழக்குகளில், எந்த மாநிலத்திற்குள் குற்றவாளியாகத் தண்டிக்கப் படுகிறாரோ அந்த '**மாநிலத்தின் அரசு**' என்றும் பொருள்படும்.

5. Solitary Confinement - Write short notes. (தனிமைச் சிறைவாசம் - சிறு குறிப்பு வரைக.)

சிறைவாசங்களிலேயே, **'தனிமைச் சிறைவாசம்'** என்பது கொடுமை யானதொரு சிறைவாசமாக கூறப்படுகின்றது. இச்சிறைவாச காலத்தில் குற்றவாளி யாரையும் பார்க்கவியலாது; யாருடனும் பேச முடியாது. வெறுமனே நான்கு இருட்டுச் சுவர்களுள் அடைந்து கிடக்க வேண்டியது தான். தனிமையில், தான் செய்த குற்றச் செயலை எண்ணி எண்ணி மனந்திருந்தக் கூடிய ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டி கடுங்காவல் சிறைத் தண்டனை (rigorous imprisonment) பெற்ற குற்றவாளிகளுக்கு இத்தனிமைச் சிறைத் தண்டனை விதிக்கப்படுகிறது. இது அவனுக்கு விதிக்கப்பட்டுள்ள கடுஞ் சிறைத் தண்டனையில் ஏதேனும் ஒரு குறிப்பிட்ட காலகட்டத்திற்கு இருக்கலாம். இது குறித்து இந்திய தண்டனைச் சட்டத்தின் **73-வது பிரிவு** விளக்குகிறது.

மேலும் ஒரு குற்றவாளியை தனிமைச் சிறைவாசத்தில் மூன்று மாதங்களுக்கு மேற்பட்டதொரு காலத்திற்கு அடைத்து வைக்கக்கூடாது என மேற்படி பிரிவு 73, பின்வரும் அளவுத் திட்டத்தின் (scale) வாயிலாக கூறுகிறது. அஃதாவது,

குற்றவாளி பெற்ற கடுங்காவல் தண்டனைக் காலத்தின் அளவு (Terms of Imprisonment)	தனிமைச் சிறைவாசம் (Solitary Confinement)
1. ஒரு வருடத்திற்கு மேற்பட்ட தொரு காலத்திற்கான கடுங்காவல் சிறைத் தண்டனை குற்றவாளிக்கு விதிக்கப்பட்டால்:-	மூன்று மாதங்களோ அல்லது அதற்கு குறைவோதான் தனிமைச் சிறைவாசத்தில் அடைக்க வேண்டும்.
2. ஆறு மாதங்களுக்கு மேற்பட்டும் ஒரு வருடத்திற்குள்ளாகவும் கடுங் காவல் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டிருப்பின்:-	இரண்டு மாதங்களோ அல்லது அதற்கு குறைவோதான் தனிமைச் சிறைவாசத்தில் அடைக்க வேண்டும்.
3. ஆறு மாதங்களுக்கு மேற்படாத தொரு காலகட்டத்திற்கான கடுங் காவல் சிறைத் தண்டனை விதிக்கப் பட்டிருப்பின்:-	ஒரு மாதமோ அல்லது அதற்கும் குறைவோதான் தனிமைச் சிறை வாசத்தில் அடைக்க வேண்டும்.

தனிமைச் சிறைவாசமானது ஒரேயடியாக நீண்டதொரு கால கட்டத்திற்கு தொடர்ந்தால், குற்றவாளிக்கு பித்து பிடிக்கவும் வாய்ப்புண்டு. ஆகவே, பெறப்பட்ட தண்டனையின் அளவைப் பொறுத்து தக்க கால இடை வெளி குற்றவாளிக்கு அளிக்கப்படுகிறது. இது தொடர்பாக, தனிமைச்

சிறையில் அடைத்து வைத்தலுக்கான வரம்பைப் (limits of solitary confinement) பற்றி பிரிவு 74 கூறுகிறது. அதன்படி ஆரம்பத்தில் வழங்கப்பட்ட சிறைத் தண்டனையானது (Original imprisonment),

1. மூன்று மாதங்களுக்கு குறைவாக இருப்பின்:-	தனிமைச் சிறைவாச காலமானது (அ) ஒட்டுமொத்தமாக 14 நாட்களுக்கு மேல் இருக்கக்கூடாது. (ஆ) அதே போன்று தனிமைச் சிறையில் அடைத்து வைக்கும் காலகட்டத்திற்கு இடையே உள்ள இடைவெளியானது 14 தினங்களுக்கு குறைவாக இருத்தல் கூடாது.
2. மூன்று மாதங்களுக்கு மேற்பட்டு இருப்பின்:-	தனிமைச் சிறைவாச காலமானது (அ) ஒரு மாதத்தில் ஒட்டுமொத்தமாக 7 தினங்களுக்கு மேற்பட்டு இருக்கக் கூடாது. (ஆ) அதே போன்று, மேற் கண்ட 7 தினங்களுக்கு பிறகு இடைவெளியானது 7 தினங்களுக்கு குறைவாக இருத்தல் கூடாது. அதாவது 7 தினங்கள் தனிமைச் சிறை; அதன் பின் 7 தினங்கள் இடைவெளி; அதன்பின் 7 தினங்கள் தனிமைச் சிறை, என்று இருத்தல் வேண்டும்.

- o -

அத்தியாயம் - 6. பொது எதிர்வாதங்கள்
General Defences
(அல்லது)
பொது விதிவிலக்குகள்
General Exceptions

உள்ளே நுழையும் முன் ஒரு சிறு விளக்கம்

குற்றங்கள் சிலரால், சில சமயங்களில் செய்யப்படும் பொழுது, அவற்றை சட்டம் தண்டிப்பதில்லை. சட்டம் அவற்றிற்கு விலக்கு அளிக்கிறது. அத்தகு தருணங்கள் பின்வருமாறு.

அ) பொருண்மைத் தவறு (Mistake of Fact)

ஆ) நீதிமுறைச் செயல்கள் (Judicial Acts)

இ) தற்செயல் நிகழ்ச்சி மற்றும் துரதிர்ஷ்டம் (Accident and Misfortune)

ஈ) தேவை (அல்லது) தவிர்க்க முடியாத விபத்துகள் [Necessity (or) Inevitable Accidents]

உ) குழந்தைத் தன்மை (Infancy)

ஊ) பித்து நிலைமை [Insanity (or) Mental Abnormality]

எ) குடிபோதை நிலை [Drunkenness (or) Intoxication]

ஏ) சம்மதம் (அல்லது) இசைவு (Consent)

அய்) வற்புறுத்தல் (அல்லது) வலுக்கட்டாயம் [Compulsion (or) Duress]

ஒ) அற்பமான விஷயங்கள் (அல்லது) அற்பமான செயல்கள் [Trifles (or) Triviality]

ஓ) தற்காப்புரிமை (Right of Private Defence)

வழக்குகளின் போது, மேற்கண்டவற்றை ஒரு எதிர் வாதமாக (defence) பயன்படுத்தலாம். இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக பின்வருமாறு காண்போமா?

(அ) பொருண்மைத் தவறு [Mistake of Fact]
(பிரிவுகள் 76 மற்றும் 79)

1. Discuss 'Mistake of fact' as a defence. ('பொருண்மைத் தவறு' ஒரு எதிர்வாதமாக விவாதிக்கவும்.)

(அல்லது)

In what circumstances does mistake of fact constitute an exception to criminal liability? (எந்த சூழ்நிலையில் சங்கதி பற்றிய தவறு குற்றவியல் பொறுப்பிற்கு விலக்காகிறது?)

(அல்லது)

State the circumstances under which Mistake of fact could be pleaded as a good defence under the Indian Penal Code. (எவ்வித சூழ்நிலைகளில் இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பொருண்மைத் தவறை ஒரு நல்ல எதிர்வாதமாக வாதிடலாம் என்பதைக் கூறு.)

(அல்லது)

"Nothing is an offence which is done by any person who is justified by law, or who by reason of a mistake of fact and not by reason of a mistake of law, in good faith, believes himself to be justified by law, in doing it" (Sec. 79 of I.P.C.) - Comment and explain the above.

பொருண்மைத் தவறு - விளக்கம்:

ஒன்றை சரியென்று நல்லெண்ணத்துடன் நம்பிச் செய்யும் பொழுது, அதன் விளைவு வேறுவிதமாக ஆகிவிட்டால், அது தவறுதலாகச் செய்யப்பட்டுவிட்டது என்று கூறுகிறோம். அதாவது ஒரு 'பொருண்மை' யானது தவறாகப் புரிந்துகொள்ளப்பட்டு, அதன்படி செயல்படும் பொழுது ஏற்படும் வேறு விளைவு 'பொருண்மைத் தவறு' (mistake of fact) எனப்படுகிறது. இது இவ்வாறு பொருண்மையைத் தவறாகப் புரிந்து கொள்ளுதலைக் குறிப்பிடுகிறதேயன்றி, சட்டத்தை தவறாகப் புரிந்து கொள்ளுதலைக் குறிப்பிடவில்லை. எனவே, ஒரு பொருண்மையை தவறாகப் புரிந்து செயல்பட்டதாக நிலைநாட்டுவது, சம்பந்தப்பட்ட வழக்கிற்கு நல்லதொரு எதிர்வாதமாக அமைகிறது. அச்சமயத்தில், தொடர்புடைய ஒரு செயல் குற்றமாவதில்லை. இதைத்தான் இந்திய தண்டனைச் சட்டத்தின் 76 மற்றும் 79-வது பிரிவுகளும் அவற்றின் கீழான எடுத்துக்காட்டுகளும் பின்வருமாறு விளக்குகின்றன.

பிரிவு 76 யாது கூறுகிறது?

சட்டப்படி ஒன்றைச் செய்வதற்குக் கட்டுப்பட்டிருக்கின்ற ஒருவரால் அல்லது சட்டத்தைப் பற்றிய ஒரு தவற்றின் காரணமாக அல்லாமல் பொருண்மை பற்றிய ஒரு தவற்றின் காரணமாக அதைச் செய்வதற்குத் தான் கட்டுப்பட்டிருப்பதாக நல்லெண்ணத்தோடு நம்புகிற ஒருவரால் செய்யப்படும் எதுவும் ஒரு குற்றமல்ல.[1]

1. Nothing is an offence which is done by a person who is, or who by reason of a mistake of fact and not by reason of mistake of law in good faith believes himself to be bound by law to do it - Sec. 76 of I.P.C.

எடுத்துக்காட்டுகள்:

(1) தம் மேல்நிலை அதிகாரியின் ஆணைக் கிணங்க சட்டத்தின் ஆணைகளுக்கிணங்கிய வகையில், தரைப்படை வீரரான A என்பவர், ஒரு கூட்டத்தினரைப் பார்த்துச் சுடுகிறார். A ஒரு குற்றமும் செய்யவில்லை.

(2) ஒரு நீதிமன்ற அலுவலரான A என்பவர் B என்பவரை கைது செய்வதற்காக அந்த நீதிமன்றத்தால் உத்திரவிடப்பட்டதன் பேரில் உரிய விசாரணைக்குப் பின்னர் B என்று நம்பி, Cஎன்பவரைக் கைது செய்கிறார். A ஒரு குற்றமும் செய்யவில்லை.

பிரிவு 79 யாது கூறுகிறது?

எதையேனும் ஒருவர் செய்வது சட்டப்படி நியாயமானதாக இருக்கும் பொழுது அவரால் அல்லது சட்டத்தைப் பற்றிய ஒரு தவற்றின் காரணமாக அல்லாமல், பொருண்மை பற்றிய ஒரு தவற்றின் காரணமாக அதைத் தாம் செய்வது சட்டப்படி நியாயமானதென்று நல்லெண்ணத்தோடு ஒருவர் நம்பும்போது, அவரால் செய்யப்படும் எதுவும் ஒரு குற்றமல்ல.[1]

எடுத்துக்காட்டு :

கொலை என்று தமக்குத் தோன்றுகின்ற செய்கையை Z என்பவர் செய்வதை A என்பவர் காண்கிறார். கொலைச் செயலில் ஈடுபடும் கொலையாளிகளைப் பிடிப்பதற்காக அனைவருக்கும் சட்டம் கொடுக்கின்ற அதிகாரத்தைத் தமக்கு மிகவும் சிறந்தது என்று தோன்றும் முடிவின்படி நல்லெண்ணத்தோடு செலுத்தித் (to the best of his judgment exeited in good faith) தக்க அதிகாரிகளின் முன்பு Z-ஐக் கொண்டு சென்று நிறுத்துவதற்காக, அவனைப் பிடிக்கிறார். இங்கு கொலை செய்வதாக A-க்கு தோன்றிய Z-ன் செயல், தற்காப்பிற்காக Z-ஆல் செய்யப்பட்டதென்று பின்னர் மாறினாலும், A ஒரு குற்றமும் செய்யவில்லை.

முக்கிய வழக்குகள்:

R. v. Mrs. Tolson[2] வழக்கில், தனது கணவன் காணாமல் போய் ஏழாண்டுகள் வரை திரும்பி வராததால், அவர் இறந்து போய்விட்டிருக்கக் கூடும் என்று தக்க காரணங்களை அடிப்படையாகக் கொண்டும், நல்லெண்ணத்துடனும், திருமதி டால்சன் இரண்டாம் மணம் செய்து கொண்டார். ஆனால் உண்மையில் அவரது கணவன் இறந்திருக்கவில்லை. அவா திரும்பி வந்து டால்சன் மீது இருமண குற்றத்திற்காக (Bigamy)

1. Nothing is an offence which is done by any person who is justified by law, or who by reason of a mistake of fact and not by reason of a mistake of law in good faith, believes himself to be justified by law, in doing it - Sec. 79 of I.P.C.

2. (1889) 23 Q.B.D. 168

வழக்குத் தொடுத்தார். ஆனால் டால்சன், தனது கணவர் இறந்து போய்விட்டிருப்பார் என்ற பொருண்மைத் தவற்றுடனும் (mistake of fact) நல்லெண்ணத்துடனும் செயல்பட்டிருப்பதால், அவர் மீது இருபானைக் குற்றத்தினை சுமத்த முடியாது எனக் கூறி நீதிமன்றம் அவரை விடுவித்தது.

Emperor v. Gopalia[1] என்ற வழக்கில், காவல் அதிகாரி ஒருவர், தக்க விசாரணைக்குப் பின்னர் புகார் கொடுத்தவன் கைது செய்யப்பட வேண்டியவன் என்ற முடிவுக்கு வந்து அவனைக் கைது செய்கிறார். ஆனால் வேறு நபர் தவறாகக் கைது செய்யப்பட்டிருக்கிறான் என்பது பிறகு அறிய வந்தது. சட்ட விரோதமாக அடைத்து வைத்திருந்த (wrongful confinement) குற்றத்துக்காகப் புகார் கொடுத்தவன், அக்காவல் அதிகாரி மீது வழக்குத் தொடர்கிறான். காவல் அதிகாரி பிரிவு 76-ன்படி குற்றம் ஏதும் இழைக்கவில்லை என்று தீர்ப்பாயிற்று.

State of West Bengal v. Shaw Mangal Singh[2] எனும் வழக்கில், ஒரு வன்முறைக் கூட்டத்தினைக் கலைக்க, காவல்துறை மேலதிகாரியின் ஆணைகளின்படி, இரண்டு காவலர்கள் ஒரு கூட்டத்தினைப் பார்த்து சுட்டதில், சகோதரர்கள் இருவர் கொல்லப்பட்டனர். மேற்படி காவலர்கள் பிரிவு 76-ன்படி செயல்பட்டுள்ளதால், அவர்கள் குற்றவாளியல்லர் என்று கூறி, உச்ச நீதிமன்றம் அவர்களை விடுதலை செய்தது.[3]

Dakhi Singh v. State[4] இவ்வழக்கில் ஒரு நபரை திருடன் என சந்தேகப்பட்டு, அவரை காவலர் ஒருவர் கைது செய்கிறார். அப்பொழுது, அந்நபர் அதை எதிர்க்கிறார். இதனால், அக்காவலர் அந்நபரை துப்பாக்கியால் சுட்டு விடுகிறார். அந்நபரும் இறந்துவிடுகிறார். இக்குற்றச் செயலுக்காக அக்காவலர் கைது செய்யப்படுகிறார். இங்கு திருடன் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் அந்நபரை பொருண்மைத் தவற்றின் காரணமாகவும் தனது செயல் சட்டப்படி நியாயமானது என்ற காரணத்தின் அடிப்படையிலும் சுட்டுவிட்டதாகவும், எனவே தனது செயல் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவுகள் 76 மற்றும் 79-ன்படி ஒரு குற்றமாகாது என்றும், அக்காவலர் எதிர்வாதம் புரிந்தார். ஆனால் அவரது செயல் சட்டப்படி நியாயமானதுதானா என்று கண்டறிய அலகாபாத் உயர் நீதிமன்றம் குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 46-வது பிரிவை ஆராய்ந்தது. அப்பிரிவு 46-ஆனது, ஒருவரைக் கைது செய்வதற்கு தேவையான அனைத்து வழிகளையும் ஒரு காவல் அதிகாரி பயன்படுத்தலாம் என்றும், அதே சமயத்தில், மரண அல்லது ஆயுள் தண்டனையால் தண்டிக்கத்தக்க குற்றமொன்றைப் புரியாத ஒரு நபரைக் கைது செய்யும் பொழுது, அவருக்கு மரணம் விளைவிக்கும் உரிமை காவல் அதிகாரிக்கு கிடையாது என்றும்

1. (1924) 26 Bom. L.R. 138
2. A.I.R. 1981 S.C. 1917
3. இவ்வழக்கு பிரிவு 76-ன் கீழான முதல் எடுத்துக்காட்டை ஒத்ததாகும்.
4. A.I.R. 1955 All. 379 at 381

கூறுகிறது. மேற்படி வழக்கில், இறந்து போன நபரை திருட்டுக் குற்றத்திற்காக மட்டுமே சந்தேகப்பட்டு, அவ்ரைக் கைது செய்ய முனைந்ததாக அக்காவலர் கூறியுள்ளார். திருட்டுச் செயலானது, மரண தண்டனையாலோ அல்லது ஆயுள் தண்டனையாலோ தண்டிக்கப்படக்கூடிய ஒரு குற்றமல்ல. எனவே, அக்காவலரின் செயல், பிரிவுகள் 76 மற்றும் 79-ன்படி சட்டப்படி நியாயமானதாக இல்லை (not justified by law); மேலும் அச்செயலைச் செய்ய சட்டத்தால் அவர் கட்டுப்பட்டவருமல்ல (not bound by law) எனவே இது ஒரு பொருண்மைத் தவறாகாது என்று கூறி, அவரைக் குற்றவாளி என அலகாபாத் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Raj Kapoor v. Laxman[1] - இவ்வழக்கில், **'சத்தியம் சிவம் சுந்தரம்'** எனும் திரைப்படத்தை ராஜ்கபூர் தயாரித்தார். அதற்கு அரசு, தணிக்கைச் சான்றிதழும் வழங்கிவிட்டது. எனவே, அத்திரைப்படம் திரையரங்குகளில் காண்பிக்கப்பட்டது. ஆனால் மேற்படி திரைப்படத்தில் ஆபாசமான காட்சிகள் பல உள்ளதாக புகார் வந்ததின் பேரில், ராஜ்கபூரை இந்திய தண்டனைச் சட்டத்தின் 292-ஆவது பிரிவின் கீழ் காவலதிகாரிகள் கைது செய்தனர். இதை எதிர்த்து ராஜ்கபூர் உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்தார். அங்கு தனது திரைப்படத்தை தணிக்கையதிகாரிகள் பார்வையிட்டு, தணிக்கை செய்து, சட்டப்படி சான்றிதழும் கொடுத்துள்ளனர். இவ்வாறு சான்றிதழ் கொடுக்கப்பட்டுள்ளதால், தனது திரைப்படத்தை பொதுமக்களுக்கு திரையிட்டு காண்பித்த செயலை அச்சான்றிதழ் சட்டப்படி நியாயமாக்குகிறது எனும் நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான், தாம் அத்திரைப்படத்தை பொதுமக்களின் காட்சிக்காக வெளியிட்டதாகவும், எனவே பிரிவு 79-ன்படி, தான் குற்றவாளியல்ல என்று ராஜ்கபூர் எதிர்வாதம் புரிந்தார். அதனை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு ராஜ்கபூர் மீது பிரிவு 292-ன் கீழ் தொடரப்பட்ட குற்றவியல் நடவடிக்கைகளை இரத்து செய்ய உத்திரவிட்டது.

(அ) (i) சட்டத் தவறு
[Mistake of Law]

2. 'Mistake of law is no excuse'. Is there any exception to this principle? ("சட்டத் தவறு மன்னிப்பு தரக்கூடியது அல்ல". இந்த விதிக்கு ஏதேனும் விதிவிலக்கு உள்ளதா?)

முன்னுரை:

பொருண்மைத் தவறு ஒரு நல்ல எதிர்வாதமாகும் என்றும், அதை சட்டம் மன்னிக்கிறது என்றும் பிரிவுகள் 76 மற்றும் 79-ன் வாயிலாக முன்னர் கண்டோம். ஆனால் சட்டத் தவறை சட்டம் மன்னிப்பதில்லை. இதை ஆங்கிலத்தில் "Ignorance of Law is no excuse" என்பார்கள் இது

1. A.I.R. 1980 S.C. 605

இலத்தீன் முதுமொழியான 'Ignorantia juris non excusat' -லிருந்து பிறந்ததாகும். இதை, "சட்ட அறியாமையை சட்டம் மன்னிப்பது இல்லை" என்றும் கூறலாம்.

சட்டத் தவறு மன்னிப்புக் கரக் கூடியது அல்ல - விளக்கம்:

"நான் செய்த செயல் சட்டப்படி குற்றமானது என்று எனக்குத் தெரியாது; ஆகவே, அதைச் செய்து விட்டேன். சட்டம் எனக்குத் தெரியததாகையால் நான் குற்றவாளி அல்லன்" என்று குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவர் வாதாடினால், நீதிமன்றம் அதை ஏற்றுக் கொள்ளாது. சட்டத்தை அறியாத தவறை ஏற்றுக் கொண்டு, குற்றப் பொறுப்பிலிருந்து ஒருவரை விலக்குவது என்று ஏற்பட்டால், நீதி வழங்குவது இயலாததாகிவிடும். எந்தக் குற்றவாளியையும் தண்டிக்க முடியாத நிலை ஏற்பட்டு விடும். குற்றம் புரிந்தவர்கள் பலரும் தங்களுக்குச் சட்டம் தெரியாது என்ற காரணத்தைக் காண்பித்து தப்பிக்க முயலுவார்கள். 'சட்டம் தெரியாது' என்று கூறுபவர்களுக்கு உண்மையிலேயே சட்டம் தெரியுமா, தெரியாதா என்பதைக் கண்டுபிடிப்பதும் எளிதன்று. எனவே, 'எல்லோரும் சட்டம் தெரிந்தவர் களாகவே கருதப்படுகின்றனர்" (Everyone is presumed to know the law) என்ற அடிப்படையிலேதான் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. எனவே, ஒரு நாட்டின் குடிமகன் தனது நாட்டின் சட்டத்தினையும் அதனை மீறுவதின் விளைவையும் அறிந்திருத்தல் அவசியம். சட்டம் தனக்குத் தெரியாது என்று கூறுவது ஒரு எதிர்வாதமாகாது. வெளிநாட்டவருக்கும் 'சட்ட அறியாமை' அல்லது 'சட்டத் தவறு' எந்த விதிவிலக்கையும் அளிப்பதில்லை.

முக்கிய வழக்குகள்:

R. v. Bailey[1] என்ற வழக்கில் ஒரு மாலுமி, ஒரு குற்றத்திற்காக, படகில் சென்று கொண்டிருந்த பொழுது கைது செய்யப்பட்டான். உண்மையில் அவனை அக்குற்றத்திற்காக கைது செய்வதற்கு உண்டான சட்டம் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டது என்பதை அறியாத நிலையில் அவன் கடலில் வெகு தொலைவில் இருந்தான். அது சட்டத் தவறாகும். சட்டத்தைப் பற்றி தனக்குத் தெரிய வாய்ப்பில்லை என்று அவன் கூற முடியாது.

R. v. Prince[2] என்ற வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவன், மணமாகாத 16 வயதிற்குட்பட்ட பெண்ணை, அவள் தந்தையின் விருப்பத்திற்கு மாறாக அவரிடமிருந்து கடத்திச் சென்றுவிட்டான். குற்றஞ்சாட்டப்பட்டவனின் எதிர்வாதம் யாதெனில், அப்பெண் 16 வயதிற்கு மேற்பட்டவர் என்று, தான் நல்லெண்ணத்துடன் நம்பிச் செயல்பட்டது என்பதாகும். ஆனால் ஒரு பெண்ணை கடத்திச் செல்வது என்பது சட்டம் ஏற்காத செயல் ஆகையால்

1. 1810 R & R 1 T.A.C.
2. 1875 2 C.C.R. 154

மேற்படி எதிர்வாதம் சரியானதல்ல என்று முடிவாயிற்று. முன் கூறப்பட்ட திருமதி டால்சன் வழக்கில், டால்சன் தன் கணவன் இறந்துவிட்டான் என்று எண்ணி மறுமணம் புரிந்து கொள்கிறாள். டால்சனின் இந்தச் செயலை எந்த விதத்திலும் ஒழுக்கமற்றதெனக் கூறிவிட முடியாது. மாறாக அது இயற்கையானதும் சட்டப்பூர்வமானதுமாகும். மேலும் தனது கணவன் இறந்துவிட்டான் என்ற பொருண்மையில் தவறு ஏற்பட்டிருப்பதற்கு ஆதாரம் காண்பிக்க தக்க காரணங்கள் உள்ளன. ஆனால் பிரின்ஸ் வழக்கினைப் பொறுத்தவரை, பெண்ணைக் கடத்திச் சென்றதே சட்ட விரோதமானதாகும். இதில் அப்பெண்ணின் வயதைப் பற்றி, தான் நல்லெண்ணம் கொண்டிருந்ததாக பிரின்ஸ் கூறுவதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளுமா? ஏற்றுக் கொள்ளாமல் அவனைத் தண்டித்தது.

மேற்படி விதிக்கு ஏதேனும் விதிவிலக்கு உள்ளதா?

மேற்படி விதிக்கு எவ்வித விதிவிலக்கும் கிடையாது. சட்டத் தவறை ஒரு விதிவிலக்காக அனுமதித்தால், ஒவ்வொரு வழக்கிலும், அதன் தரப்பினர்கள் தங்களுக்கு சட்டத்தைப் பற்றி எதுவும் தெரியாது என வாதிடுவார்கள். இதைப் பற்றி தீர்மானிப்பதே நீதிமன்றத்தின் முழு வேலையாகிவிடும், என **அறிஞர் ஆஸ்டின்** குறிப்பிடுகிறார். எடுத்துக் காட்டாக, ஒரு நபர் திருடிவிட்டார் என்றால், அவர் திருடுவது சட்டப்படி தண்டனைக்குரியது என்பது தமக்குத் தெரியாது என்று கூறி குற்றப் பொறுப்பிலிருந்து தப்பித்துக் கொள்ள முயலுவார். ஆகவே, சட்டத் தவறுக்கு விதிவிலக்கு கிடையாது.

3. "*Ignorantia juris non excusat: Ignorantia facit excusat*" - Explain the maxim with illustrations under English Criminal Law. ("சட்டத் தவறு மன்னிப்புத் தரக்கூடியது அல்ல; பொருண்மைத் தவறு மன்னிக்கப்படக் கூடியது". ஆங்கில குற்றவியல் சட்டத்தின் கீழ் எடுத்துக்காட்டு கொடுத்து மேற்படி முதுமொழியை விளக்குக.)

(முந்திய இரண்டு வினாக்களையும் தொடர்புபடுத்தி எழுதுக.)

(ஆ) நீதிமுறைச் செயல்கள் [Judicial Acts]

(பிரிவுகள் 77 மற்றும் 78)

4. How far judicial acts are protected by the Indian Penal Code? Discuss. (நீதிமுறைச் செயல்கள் எந்த அளவிற்கு இந்திய தண்டனைச் சட்டத்தால் பாதுகாக்கப்பட்டுள்ளன? விவாதிக்க.)

(அல்லது)

Discuss the general defence 'Acts of judicial officers'. ('நீதிமுறை அலுவலர்களின் செயல்கள்' எனும் பொது எதிர்வாதத்தை விவாதிக்க.)

நீதிமுறைச் செயல்கள் (Judicial Acts) - விளக்கம்:

I. நீதிமுறையில் செயல்படும் பொழுது நீதிபதியின் செயல் (Act of Juage when acting judicially) (பிரிவு 77):

நீதிமுறை நிர்வாகம் திறம்பட நடைபெற வேண்டுமெனில், நீதிபதிகள் எவ்வித அச்சமுமின்றித் தங்கள் கடமைகளைச் செய்தல் வேண்டும். சட்டத்தின் வழி நின்று, நடுநிலை தவறாது நீதி வழங்க வேண்டும். எனவே, நீதிபதிகள் தங்கள் கடமையை செவ்வனே ஆற்றுவதற்கு, அவர்களுக்கு சட்டம் முழுப் பாதுகாப்பளிக்கிறது. இதனால் நீதிமுறைச் செயல்கள் (judicial acts) எதுவும் குற்றப் பொறுப்புக்கு உள்ளாக்கப்படுவதில்லை. இதைத்தான் **பிரிவு 77** பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 77 கூறுவதாவது:

ஒரு நீதிபதி தமக்குச் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள, அல்லது தமக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தாம் நல்லெண்ணத்தோடு நம்புகிற அதிகாரம் எதனையும் செலுத்தி நீதிமுறையில் செயற்படும்போது, அவரால் செய்யப்பட்ட எதுவும், ஒரு குற்றமாகாது.

எடுத்துக்காட்டாக, நீதிபதி, திருடன் ஒருவனுக்கு சிறைத் தண்டனை விதித்து தண்டிக்கிறார். பொதுவாக ஒருவரை மற்றொருவர் சிறையிலடைப்பது குற்றமானதாகும். ஆனால் குற்றம் செய்தவர் என்று தீர்மானிக்கப் பெற்ற ஒருவரை நீதிபதி சிறையிலடைக்க உத்திரவிடுவது குற்றச் செயல் ஆவதில்லை. அதுமட்டுமன்று; சிறைத் தண்டனை பெற்றவர், மேல் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு (appeal) செய்கின்றார். மேல் நீதிமன்றம், அவரைக் குற்றவாளியல்ல என்று கூறி, விடுதலை செய்யலாம். இதனால் என்ன ஏற்படுகிறது? அவரைக் குற்றவாளி என்று தீர்மானித்து, சிறையிலடைக்க உத்திரவிட்ட கீழ் நீதிமன்ற நீதிபதியின் தீர்ப்பு தவறு என்றாகிறது. உடனே இதைக் கொண்டு அக்கீழ் நீதிமன்ற நீதிபதியின் மீதே, நீதிமுறை தவறி ஒருவரைச் சிறைக்கு அனுப்பி விட்டார் என்று குற்ற வழக்கிட முடியுமா? முடியாது. ஏனெனில், நீதிமுறையில் செய்யப்படும் நீதிபதியின் செயல்கள் எதுவும் பிரிவு 77-ன்படி குற்றமாவதில்லை.

II. நீதிமன்றத் தீர்ப்பு அல்லது உத்தரவை நிறைவேற்றுவதற்காக செய்யப்படும் செயல் (Act done pursuant to the judgment or order of Court) (பிரிவு 78):

நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது உத்திரவு, நீதித்துறை அதிகாரிகள் மூலமாக நிறைவேற்றப்பட வேண்டும். அப்படி நிறைவேற்றுவதற்காக செய்யப்படும் செயல் எதுவும் ஒரு குற்றமாகாது.

எடுத்துக்காட்டாக, நீதிமன்றத் தீர்ப்புப்படி, மரண தண்டனை பெற்ற கைதியைச் சிறை அதிகாரி தூக்கிலிடுகிறார். குற்றவாளியைச் சிறை அதிகாரி தூக்கிலிட்டுக் கொன்ற செயல் 'கொலைச் செயல்' ஆவதில்லை. ஏனெனில் அது நீதிமன்றத்தின் உத்திரவுப்படியான செயலாகும்.

சில வேளைகளில் நீதிமன்றம் பிறப்பித்த தீர்ப்பு அல்லது உத்தரவு அதன் அதிகாரவரம்பிற்குப் புறம்பானதாக இருக்கலாம். இருப்பினும், அந்த உத்தரவை நிறைவேற்றுபவர், அது அந்த நீதிமன்றத்தின் அதிகாரவரம்பிற்கு உட்பட்ட உத்தரவுதான் என்ற நல்லெண்ணத்தோடு நம்பி அதை நிறைவேற்றினார் எனில், அவர் எந்தக் குற்றத்திற்கும் ஆளாவதில்லை.

மேற்கண்டவற்றைத்தான் பிரிவு 78 தன் பாணியில் பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 78 கூறுவதாவது:

ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது உத்தரவைத் தொடர்ந்து செய்யப்படும் செயல் அல்லது அந்தத் தீர்ப்பு அல்லது உத்திரவால் அதிகாரமளிக்கப்படும் எதுவும், அந்தத் தீர்ப்பு அல்லது உத்தரவு அமலில் இருந்து வருங்கால் செய்யப்படுமானால், அத்தகைய தீர்ப்பை அல்லது உத்தரவைப் பிறப்பிக்க அந்த நீதிமன்றத்திற்கு அதிகாரவரம்பு இருந்திருக்க வில்லை என்றாலும் கூட, அந்த நீதிமன்றத்திற்கு அத்தகைய அதிகாரவரம்பு இருந்தது என்று அந்தச் செயலைச் செய்கின்றவர் நல்லெண்ணத்தோடு நம்புவாரானால், அது குற்றமாகாது.

முடிவுரை:

இவ்வாறு, நீதிபதிகளையும், நீதிமுறைக் கடமைகளைச் செய்யும் அதிகாரிகளையும், நீதிமன்ற உத்தரவுகளை நிறைவேற்றுபவர்களையும் இந்திய தண்டனைச் சட்டம் பாதுகாத்து, அவர்களை குற்றப் பொறுப்பிலிருந்து விலக்குகிறது.

(இ) தற்செயல் நிகழ்ச்சி (அல்லது எதிர்பாராத விளைவு) மற்றும் துரதிர்ஷ்டம் [Accident and Misfortune] (பிரிவு 80)

5. Accident - Write short notes. (தற்செயல் நிகழ்ச்சி - சிறு குறிப்பு வரைக)

(அல்லது)

Misfortune - Write short notes. (துரதிர்ஷ்டம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Explain the concept of 'Accident' and distinguish it from 'intention'. ('தற்செயல் நிகழ்ச்சி' என்னும் கருத்தை விளக்குக. அதனை 'கருத்து' என்பதிலிருந்து வேறுபடுத்துக.)

தற்செயல் நிகழ்ச்சி மற்றும் துரதிர்ஷ்டம் - விளக்கம்:

ஒரு விளைவு தற்செயலாக அல்லது துரதிர்ஷ்டமாக நிகழ்ந்தால்,

அதற்கு காரணமானவரை குற்றப் பொறுப்புக்கு உள்ளாக்க முடியாது. அதாவது ஒரு விளைவு தற்செயலாக நிகழ்ந்தது என்று சொன்னால், அந்த விளைவிற்கு காரணமாக இருந்த செயல், அந்த விளைவை உண்டு செய்யும் கருத்துடன் செய்யப்பட்டதாகச் சொல்ல முடியாது. ஏனெனில், தற்செயல் நிகழ்ச்சியில் இந்தச் செயலால், இந்த விளைவு, இன்ன சூழ்நிலைகளில் ஏற்படும் என்று சாதாரண அறிவு கொண்ட எந்த ஒரு மனிதனும் முன்னரே எதிர்பார்த்து (foreseen) முன்னெச்சரிக்கையுடன் செயலாற்ற முடிவதில்லை. எனவே, இப்படிப்பட்ட தற்செயல் நிகழ்ச்சியை **'எதிர்பாராத விளைவு'** என்றும் கூறுகிறோம். அதுபோல், ஒரு விளைவு துரதிர்ஷ்டவசமாக மற்றொருவருக்கு தீங்கை விளைவித்துவிட்டால், அதற்காக அவரைக் குற்றப் பொறுப்புக்கு உள்ளாக்க முடியுமா? முடியாது. ஏனெனில், அதிர்ஷ்டமும், துரதிர்ஷ்டமும் ஒருவன் எதிர்பாராமல் ஏற்படுவதாகும். ஆனால் கவனக்குறைவாக அல்லது வேண்டுமென்றே மற்றவர்களுக்கு விளைவிக்கப் படுகின்ற தீங்கு, தற்செயல் நிகழ்ச்சியால் ஏற்பட்டதென்றோ அல்லது துரதிர்ஷ்டவசமாக நிகழ்ந்ததென்றோ கூற முடியாது. இவற்றைத்தான் **பிரிவு 80** பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 80 கூறுவதாவது:

சட்டப்பூர்வமான செயலொன்றை சட்டப்பூர்வமான முறையில் சட்டப்பூர்வமான வழிகளைப் பின்பற்றி போதிய கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் எவ்விதக் குற்றக் கருத்தும் எண்ணமும் (knowledge) இன்றிச் செய்யும் பொழுது, தற்செயலாகவோ அல்லது துரதிர்ஷ்ட வசமாகவோ விளையும் செயல், ஒரு குற்றமாகாது.

எடுத்துக்காட்டு:

A என்பவர் ஒரு கைக்கோடாரியுடன் வேலை செய்கிறார். அக் கோடாரியின் தலைப்பாகம் கழன்று அருகில் நின்று கொண்டிருந்தவரைக் கொன்று விடுகிறது. இங்கு A தக்க எச்சரிக்கையுடன் அச்செயலை புரிந்திருந்தால், அவரது செயல் ஒரு குற்றமாகாது; மன்னிப்பதற்குரியதாகும்.

மேற்படி எடுத்துக்காட்டில் A ஒரு மரம் வெட்டி. அவர் தனது கைக்கோடாரி கொண்டு மரத்தை வெட்டிக் கொண்டிருக்கிறார். அவர், அருகில் நின்று கொண்டிருப்பவருக்கு மரணத்தை விளைவிக்க வேண்டும் என்று எவ்வித குற்றக் கருத்தும் கொண்டிருக்கவில்லை. மேலும் மரத்தை வெட்டியது, சட்டப்பூர்வமான செயல். அதை அவர் கவனத்துடன்தான் செய்து கொண்டிருந்தார். அக்கோடாரியின் தலைப்பாகம் கைப்பிடியிலி ருந்து கழன்று சென்று விட்டது. இது அம்மரம் வெட்டியின் கவனக் குறைவினால் ஏற்பட்டதல்ல; மாறாக துரதிர்ஷ்டவசமாக நிகழ்ந்த செயலாகும். எனவே, அம்மரம் வெட்டியை கொலைக் குற்றத்திற்கு ஆளாக்குவது நியாயமன்று. இந்திய தண்டனைச் சட்டமும் இதை ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்று கொள்கிறதேயொழிய, குற்றமாகக் கொள்வதில்லை. எனவே, அம்மரம் வெட்டி எவ்வித குற்றத்திற்கும் ஆளாவதில்லை.

முக்கிய வழக்குகள்:

Tunda v. Rex[1] - இவ்வழக்கில் A, B எனும் இரு போட்டியாளர்கள் மல்யுத்தப் போட்டியில் கலந்து கொண்டனர். அவ்விருவருக்குமிடையே நடந்த மல்யுத்தத்தில், B காயமடைந்து இறந்துவிடுகிறார். எனவே, A-யின் மீது கவனக் குறைவு மற்றும் அஜாக்கிரதையால் மரணம் விளைவித்த குற்றத்திற்காக பிரிவு 304-A-ன்படி குற்றஞ்சாட்டப்பட்டது. வழக்கை விசாரித்த நீதிமன்றம் பின்வருமாறு தீர்ப்பு கூறியது. அதன்படி, A, B இருவரும் ஒருவர் மற்றொருவருடன் மல்யுத்தத்தில் மோத உடன்பட்டுள்ளனர். அங்கு தவறான ஆட்டம் (foul play) ஏதும் மெய்ப்பிக்கப்படாததால், A-யால் B-க்கு ஏற்பட்ட மரணம் ஒரு தற்செயல் நிகழ்ச்சியே தவிர, குற்றக் கருத்துடன் செய்யப்பட்டதாகாது என்று கூறி, பிரிவு 80-ன் கீழான அனுகூலத்தை A-க்கு அளித்து, அவரை விடுதலை செய்தது.

State Government of M.P. v. Rangaswami[2] - இவ்வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்ட நபர், 152 அடி தூரத்திலிருந்து ஒரு உருவத்தை நோக்கிச் சுடுகிறார். ஆனால் அந்தோ பரிதாபம்! அவர் சுட்டது ஒரு மனிதனை. இங்கு அக்குற்றஞ்சாட்டப்பட்ட நபர், அவ்வுருவம் ஒரு கழுதைப்புலி (hyena) என்ற நல்லெண்ணத்தின் அடிப்படையில்தான் தாம் சுட்டதாகவும், அவ்வாறு சுடும் பொழுது, மழை பெய்து கொண்டிருந்ததால், சம்பந்தப்பட்ட அந்த இடத்தில் ஒரு மனிதன் நின்று கொண்டிருப்பான் என்பதைத் தாம் எதிர்பார்க்கவில்லை என்றும், எதிர்வாதம் புரிந்தார். இந்த எதிர்வாதத்தை நீதிமன்றம் ஏற்றுக்கொண்டு அக்குற்றஞ்சாட்டப்பட்ட நபரால் மேற்கண்ட சூழ்நிலையில் ஒருவருக்கு மரணம் ஏற்பட்டது முழுக்க முழுக்க ஒரு தற்செயல் நிகழ்ச்சியே என்று கூறி பிரிவு 80-ன் கீழான பாதுகாப்பை அவருக்கு அளித்தது.

Girish Saikia v. State of Assam[3] - இவ்வழக்கில், கிரிஷ் என்பவர் படுத்துக் கொண்டிருந்த பொழுது, அவரது சகோதரர் அவரைத் தாக்கினார். கிரிஷின் கழுத்தை நெறிக்க முயற்சித்தார். அவர்கள் இருவரும் கட்டிப்புரண்டு சண்டை போட்டனர். அப்பொழுது கிரிஷின் கையில் ஒரு மூங்கில் தடி அகப்பட்டது. அதைக் கொண்டு தனது சகோதரரை அடிக்க முயற்சித்தார். ஆனால் இடையில் திடீரென அவர்களது தகப்பனார் அச்சண்டையினுள் நுழையவே, சகோதரனை குறி பார்த்து கிரிஷ் ஓங்கிய மூங்கில் தடி, அவரது தந்தையின் தலையில் விழுந்தது. இதனால் தலையில் அடிபட்டு, அவர் மரணமுற்றார். வழக்கை விசாரித்த கவுஹாத்தி உயர் நீதிமன்றம், இது ஒரு தற்செயல் நிகழ்ச்சி என்று கூறி, கிரிஷை விடுதலை செய்தது.

Bhupendra Singh Chandasama v. State of Gujarat[4] - இவ்வழக்கில்

1. A.I.R. 1950 All. 95
2. A.I.R. 1952 Nag. 268, p.270
3. 1993 Cri. L.J. 3808 (Gau.)
4. A.I.R. 1997 S.C. 3790

பலத்த மழையின் காரணமாக, ஒரு அணைக்கட்டு அபாய நிலையில் இருந்தது. எனவே, அணைக்கருகில் ரோந்துப் பணி (patrol duty) மேற்கொள்வதற்காக இரு காவலர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்களும் ரோந்து வந்து கொண்டிருந்தனர். அப்பொழுது அவர்களில் ஒருவர், துப்பாக்கிச் சூடு நடத்தினார். இதன் விளைவாக குண்டடிபட்டு ஒரு நபர் இறந்து விடுகிறார். இதனால் அக்காவலர் மீது .கொலைக் குற்றம் சாட்டப்பட்டது. ஆனால் அக்காவலரோ, அணைக்கருகே தாம் தீயைப் பார்த்ததாகவும், அதனால் சுட்டதாகவும், கொலைக்குரிய கருத்து ஏதுமில்லை என்றும், மரணம் நிகழ்ந்தது ஒரு தற்செயல் நிகழ்ச்சியே என்றும், எதிர்வாதம் புரிந்தார். ஆனால் உச்ச நீதிமன்றம் இதை ஏற்றுக்கொள்ளாமல் பின்வருமாறு தீர்ப்பளித்தது. அதாவது, அக்காவலர், தாம் எதன் மீது குறி வைத்துள்ளோம் என்பதை அறிந்து கொள்ளாமலேயே, மிக அருகிலிருந்து சுட்டுள்ளார் என்பது சாட்சியங்களிலிருந்து தெளிவாகிறது; எனவே, இது அக்காவலர் உரிய கவனமும் எச்சரிக்கையுமுமின்றி சுட்டுள்ளார் என்பதையே சுட்டிக்காட்டுகிறது என்று கூறி, கொலைக் குற்றத்திற்காக அவருக்கு அளிக்கப்பட்ட ஆயுள் தண்டனையை உச்ச நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது.

தற்செயல் நிகழ்ச்சி மற்றும் கருத்து - வேறுபாடு:

'தற்செயல் நிகழ்ச்சி' என்பதற்கும் 'கருத்து' என்பதற்கும் மிகப் பரந்த வேறுபாடு உண்டு. 'தற்செயல் நிகழ்ச்சி' கருத்துடன் செய்யப்படுவதில்லை. அது தற்செயலாக, ஒரு விபத்தாக நிகழ்வதாகும். 'கருத்து' என்பது ஒன்றைக் கருதி செய்வதாகும். தற்செயல் நிகழ்ச்சியால் விளைந்த குற்றச் செயலை சட்டம் மன்னிக்கிறது. கருத்துடன் செய்த குற்றச் செயலை சட்டம் கடுமையாக தண்டிக்கிறது.

(ஈ) தேவை (அல்லது) தவிர்க்க முடியாத விபத்துகள் [Necessity (or) Inevitable Accidents]

(பிரிவு 81)

6. Discuss 'Necessity' as a defence. ('தேவை' என்பதனை ஒரு எதிர்வாதமாக விவாதிக்க.)

(அல்லது)

***Jus Necessitatus* - Explain this latin maxim. (தேவையின்பாற் எழும் உரிமை - இந்த இலத்தீன் முதுரையை விளக்கவும்.)**

(அல்லது)

***Quod necessitatus non habet legam* - Write short notes. (தேவையின்பாற் செய்யப்படுவது குற்றமாவதில்லை - சிறு குறிப்பு வரைக.)**

(அல்லது)

a) "He who preserveth his own life at the expense of another man's, is excusable through unavoidable necessity". Explain.

b) A and B who are swimming in the sea after a ship wreck, got hold of a plank which is not large enough to support two persons. A pushes of B who is drowned in the sea. Discuss whether A has committed any offence.

அ) "தவிர்க்க முடியாத தேவையினால் ஒருவன் தன் உயிரை காப்பாற்றிக் கொள்வதற்காக பிற மனிதன் ஒருவனின் உயிரை எடுப்பது மன்னிக்கப்படுகிறது" - விளக்குக.

ஆ) ஒரு கப்பல் சிதறுண்ட பிறகு A-யும் B-யும் நடுக்கடலில் நீந்திக் கொண்டிருக்கையில் ஒரு மரத்துண்டைப் பற்றிக் கொள்கிறார்கள். அம்மரத்துண்டு இரண்டு நபர்களை தாங்கக் கூடியதாக இல்லை. B-யை A தள்ளி விடுகிறார். B கடலில் முழ்கிப் போகிறார். A ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

முன்னுரை:

"ஆபத்திற்கு பாவம் இல்லை" என்பது பழமொழி. ஓர் ஆபத்தில் இருப்பவர் அதைத் தடுப்பதற்கு செய்யும் செயல்களால், பாவம் விளைவ தில்லை எனும் கோட்பாடு, நடைமுறை அனுபவத்தின் அடிப்படையில் எழுவதாகும். சட்டமும் இக்கோட்பாட்டை ஓரளவு ஏற்றுக் கொள்கிறது.

ஒருவரின் உடலுக்கோ அல்லது உடைமைக்கோ பெரும் தீங்கு (அதாவது பெரும் ஆபத்து) ஏற்படவுள்ளது எனும் நிலை உள்ள பொழுது, அதைத் தவிர்ப்பதற்கென மற்றொரு சிறிய தீங்கு செய்ய வேண்டிய தேவை ஏற்பட்டால், அப்பெரும் தீங்கைத் தடுப்பதற்கு, மற்றொரு சிறு தீங்கை செய்வது தவிர்க்க முடியாதது ஆகிறது. இவ்வாறு தவிர்க்க முடியாத தேவையின்பாற் செய்யப்பட்ட சிறு தீங்குச் செயல் குற்றமாவதில்லை. இதனை **தவிர்க்க முடியாத விபத்துகள் (Inevitable accidents)** என்றும் அழைக்கலாம். இவற்றை சட்டம் மன்னிக்கிறது. இதைத்தான் **பிரிவு 81** பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 81 கூறுவதாவது:

தீங்கு செய்ய வேண்டும் என்ற கருத்து இல்லாமலும், ஆளுக்கு அல்லது சொத்துக்கு வேறு தீங்கு ஏற்படுவதைத் தடுக்கும் அல்லது தவிர்க்கும் பொருட்டு நல்லெண்ணத்துடன் ஏதேனும் செய்யப்படுமானால், அது அநேகமாகத் தீங்கை விளைவிக்கக்கூடும் என்ற அறிவுடன் செய்யப்படுகிறது என்ற காரணத்தால் மட்டுமே, ஒரு குற்றமாகாது.

விளக்கம் : தடுக்கப்பட வேண்டிய அல்லது தவிர்க்கப்பட வேண்டிய தீங்கின் தன்மையும், அது உடனடியாக நிகழப்போகிறது என்ற நிலையும், அநேகமாகத் தீங்கு விளைவிக்கக் கூடும் என்ற அறிவோடு ஒரு செயலினைச் செய்வதை நியாயமானதாக்கும் அளவுக்கு அல்லது மன்னிக்கத்தக்கதாக்கும்

அளவுக்கு இருந்தனவா என்பது, அத்தகைய ஒரு சந்தர்ப்பத்தில், பொருண்மை (Fact) பற்றிய விஷயமாகும்.

எடுத்துக்காட்டுகள்:

(1) A என்பவர் ஒரு நீராவிக் கப்பலின் (steam vessel) தலைவர். அவர் அக்கப்பலை கடலில் செலுத்திக் கொண்டிருக்கும் பொழுது, தனக்கு சிறிது தூரம் முன்னால் ஒரு படகு சென்று கொண்டிருப்பதைக் கண்டார். அதில் 20 அல்லது 30 நபர்கள் பிரயாணம் செய்து கொண்டிருக்கின்றனர். எனவே, எவ்வித சுவனக்குறைவும் இன்றி தனது கப்பலை நிறுத்த வேண்டுமென்றாலும், அக்கப்பல் முன்னால் சென்று கொண்டுள்ள படகின் மீது மோதி அதில் பிரயாணம் செய்து கொண்டுள்ள 20 அல்லது 30 நபர்களின் உயிருக்கு பெரும் ஆபத்தை ஏற்படுத்திவிடும். இந்நிலையில் தனது கப்பல் செல்லும் பாதையை மாற்றிச் செலுத்தி நிறுத்தலாமென்றால், அத்திசையில் இரண்டு நபர்களைக் கொண்டதொரு சிறிய படகு உள்ளது. அக்கப்பல், அதன் மீது மோதி அவ்விருவரின் உயிருக்கு ஆபத்தை விளைவித்துவிடும். இங்கு, அக்கப்பலின் தலைவர் எப்படியாகிலும் மோத வேண்டியது என்பது தவிர்க்க முடியாததாகி விட்டது; எனவே, 20 அல்லது 30 நபர்கள் கொண்ட படகின் மீது மோதி பெரும் ஆபத்தை ஏற்படுத்துவதைவிட அதனைத் தவிர்த்து, இருவர் பிரயாணம் செய்யும் அப்படகின் மீது மோதி ஆபத்தின் விளைவை சிறியதாக்கிவிடலாம் என்ற நல்லெண்ணத்துடன் எவ்வித குற்றக் கருத்துடன் இல்லாமல், அச்சிறிய படகின் மீது மோதி விடுகிறார். அதனால், அச்சிறிய படகில் இருந்த இருவரும் கடலில் மூழ்கி இறந்து விடுகின்றனர். இங்கு அக்கப்பல் தலைவரைக் குற்றப் பொறுப்புக்குள்ளாக்க முடியுமா? முடியாது. ஏனெனில் நல்லெண்ணத்துடன் ஒரு பெரும் தீங்கைத் தவிர்ப்பதற்கான அவர் ஒரு சிறிய தீங்கைச் செய்ய வேண்டிய தேவை இங்கு ஏற்பட்டு விட்டது. எனவே, அவரது செயல் பிரிவு 81-ன்படி ஒரு குற்றமல்ல.

(2) ஒரு பெருந்தீயின் சுவாலை பரவுவதை தடுப்பதற்காக, அத்தீயினால் எரிந்து கொண்டிருக்கும் வீட்டின் அடுத்ததாக உள்ள வீட்டின் கூரையை A என்பவர் பிரித்துப் போடுகிறார். மனித உயிர்களையும், அதற்கடுத்துள்ள வீடுகளையும் பாதுகாக்கும் கருத்துடனும் நல்லெண்ணத்துடனும் A அவ்வாறு செய்தார். இங்கு A அவ்வாறு செய்யவில்லையானால், அத்தீ பரவிக்கொண்டே சென்று, ஊர் முழுவதையும் கண நேரத்தில் அழித்துவிடும். எனவே ஒரு பெரிய தீங்கை தடுப்பதற்காக எவ்விதக் குற்றக் கருத்தும் இல்லாமல் நல்லெண்ணத்துடன் ஒரு சிறிய தீங்கு செய்யப்பட்டுள்ளது. இங்கு ஒரு தவிர்க்க முடியாத தேவையின் பொருட்டு A அவ்வாறு செய்துள்ளதால், அவர் பிரிவு 81-ன்படி ஒரு குற்றவாளியல்லர்.

ஆனால், மேற்கண்டவாறு வீட்டின் கூரையை பிரித்துப் போடும் செயலை மேற்படி A குற்றக் கருத்துடன் செய்திருந்தால், அவருக்கு பிரிவு 81-ன் கீழான விதிவிலக்கு கிடைக்காது.

தவிர்க்க முடியாத தேவையினால் ஒருவன் தன் உயிரைக் காப்பாற்றிக்

கொள்வதற்காக மற்றொருவரைக் கொல்லலாமா? அல்லது தன்னுயிர்க் காப்புக் கோட்பாடு (Doctrine of Self-preservation):

"நம்மைக் கொல்ல வரும் பசுவையும் நாம் கொல்லலாம்" என்பது பண்டைய கால விதி. எனவே, ஒருவரை மற்றொருவர் கொல்ல வந்தால், அவர் தன்னைக் காத்துக் கொள்வதற்காக, அம்மற்றொருவரைக் கொன்றுவிடலாம். ஆனால், ஒருவர் உயிர் வாழ வேண்டும் என்பதற்காக மற்றொரு நபரைக் கொல்லலாமா என்பது ஒரு சிக்கலான வினா. இங்கு தற்காப்பிற்கெனக் கொல்லுவது ஒன்று; உயிர் வாழ்வதற்கெனக் கொல்லுவது வேறொன்று என்பதைக் கவனத்தில் கொள்ள வேண்டும். தற்காப்பிற்காகக் கொல்லுவதைச் சட்டம் அனுமதிக்கிறது. ஏனெனில் தம்மை மற்றொருவரின் தாக்குதலிலிருந்து காத்துக் கொள்ள வேண்டியது, இங்கு தேவையின்பால் எழுகிறது. மேலும் பொதுவாக தற்காப்பின் பொழுது கொல்லப்படுபவர் குற்றமிழைத்தவர். எனினும், அனைவரும் குற்றமிழைத்தவர்களாக இருப்பதில்லை. ஆனால் தேவையின்பாற் அல்லாமல் ஒரு சாதாரண சூழலில் ஒருவர் உயிர் வாழ்வதற்காக குற்றமற்ற மற்றொருவரைக் கொல்வதைச் சட்டம் மன்னிப்பதில்லை. மேற்கண்ட நிலைப்பாடே, **தன்னுயிர்க் காப்புக் கோட்பாடு** எனப்படுகிறது. இதனை பின்வரும் வழக்குகள் விளக்கும்.

United States v. Holmes[1] எனும் வழக்கின் பொருண்மைகளின்படி, ஒரு கப்பலில் ஓட்டை விழுந்து, அதில் கடல்நீர் சிறிது சிறிதாக உள்ளே நுழைகிறது. அக்கப்பலிலோ அதிகமான பேர்கள் உள்ளனர். அவர்களது எடையின் காரணமாக, அக்கப்பல் வெகு சீக்கிரத்திலேயே கடலில் மூழ்கி விடும் ஆபத்து உள்ளது. ஆனால் கப்பலின் எடையைக் குறைத்தால், கரை சேரும் வரை அக்கப்பல் மூழ்காது. இந்நிலையில் அக்கப்பல் சிப்பந்தி ஒருவர், அக்கப்பலில் உள்ள 16 ஆண் பிரயாணிகளை கடலில் தள்ளி, மீதமுள்ள பேர்களை காப்பாற்றி கரை சேர்க்கின்றார். இங்கு அச்சிப்பந்தி கொலைக் குற்றத்திற்காக தண்டிக்கப்படவில்லை. எனினும் இங்கு எழுந்த சிக்கலான வினா யாதெனில், ஒரு கப்பல் மூழ்க நேருகையில், அதன் எடையைக் குறைக்க முதலில் அக்கப்பலில் இருந்து குதிக்க வேண்டியவர்கள், அக்கப்பலின் சிப்பந்திகளே. ஆனால், இங்கோ, ஒரு கப்பல் சிப்பந்தி, 16 ஆண் பிரயாணிகளை கடலில் தள்ளி விடுகிறார். முதலில் உயிர்த் தியாகம் செய்ய வேண்டிய சிப்பந்தி, பிரயாணிகளின் உயிரை முதலில் வாங்கி விடுகிறார். இது ஒழுக்கக் கடமையிலிருந்து தவறியதற்கு ஒப்பாகும் என்று கூறி, அச்சிப்பந்திக்கு ஆறு மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது.

மற்றொரு சூழலில்,[2] ஒரு கப்பல் சிதறுண்ட பிறகும், A-யும் B-யும் நடுக்கடலில் நீந்திக் கொண்டிருக்கின்றனர். அப்பொழுது அங்கு ஒரு மரத்துண்டு மிதந்து வந்தது. அவர்கள் இருவரும் அம்மரத்துண்டைப் பற்றிக்

1. (1842) Federal Case 360, No.15383 reported in Textbook of Criminal Law, 2nd Edn. p.604
2. வினாவில் கொடுக்கப்பட்டுள்ள பிரச்சனையின் தீர்வு

கொள்கிறார்கள். அம்மரத்துண்டோ அவ்விரண்டு நபர்களையும் தாங்கக் கூடியதாக இல்லை. எனவே, B-யை A கடலில் தள்ளி விடுகிறார். இதனால் B கடலில் மூழ்கி இறந்து போகிறார். இங்கு A கொலைக் குற்றத்திற்கு உள்ளாவதில்லை ஏனெனில் B-யைக் கொல்ல வேண்டுமென்ற குற்றக் கருத்து ஏதும் A-க்கு இல்லை. மேலும் இருவருமே அம்மரத்துண்டை பற்றிக் கொள்ளவில்லையானால், இருவருமே கடலில் மூழ்கி இறந்து போகக் கூடிய ஆபத்து உள்ளது. எனவே இது தவிர்க்க முடியாத தேவையின் காரணமாக விளைந்த செயலாகிறது. எனவே, A குற்றமேதும் புரியவில்லை. தவிர்க்கமுடியாத தேவையால், தன்னுயிரைக் காத்துக் கொள்ளவே அவ்வாறு செய்துள்ளார் என்றே சட்டம் கொள்கிறது.

R. v. Dudley and Stephens[1] எனும் மிக முக்கிய வழக்கொன்றில், ஒரு கப்பல் கடும் புயலின் காரணமாக நடுக்கடலில் கவிழ்ந்து விட்டது. அக்கப்பலிலிருந்த மூன்று மாலுமிகளும் ஒரு சிறுவனும் சிறு படகொன்றில் ஏறிக் கடலில் மிதந்து கொண்டிருந்தனர். பல நாட்கள் உணவும் நீரும் இன்றி அவர்கள் தவித்தனர். பசி தாங்காமல் டட்லி மற்றும் ஸ்டீஃபன்ஸ் எனும் இரு மாலுமிகள் உடனிருந்த சிறுவனைக் கொன்று அவனது உடலைத் தின்று விட்டனர். அவ்வாறு அவர்கள் அச்சிறுவனைக் கொன்று தின்னவில்லையெனில், அவர்களும் மடிந்து போயிருக்கலாம். சில நாட்களில் அந்த வழியே வந்த மற்றொரு கப்பல், அவர்களிருவரையும் காப்பாற்றி கரை சேர்த்து விட்டது. பின்னர், சிறுவனைக் கொன்று தின்றதற்காக அவ்விரு மாலுமிகள் மீதும், கொலை வழக்கு தொடரப்பட்டது. "எங்கள் உயிரைக் காப்பாற்றிக் கொள்வதற்கான அவசியத்தால், நாங்கள் சிறுவனைக் கொன்று தின்றோம். எனவே, நாங்கள் குற்றவாளியல்லர்" என்று அவ்விரு மாலுமிகளும் வாதாடினர். ஆனால் இதனை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. அவர்களுக்கு கொலைக் குற்றத்திற்கான மரண தண்டனையை விதித்தது. எனினும், பின்னர் அரசாங்கம் அதனை ஆறு மாத சிறைத் தண்டனையாக மாற்றியது.

நாம் இதற்கு முன் கண்ட ஒரு எடுத்துக்காட்டிற்கும், இவ்வழக்கிற்கும் வேறுபாடு உண்டு. எவ்வாறெனில், அங்கு மரத்துண்டைப் பற்றி கரை சேர்வதில் ஒருவர் மற்றொருவருக்கு இடைஞ்சலாக இருந்தார். அந்த இடைஞ்சலை களையவில்லையென்றால், இருவருமே மூழ்கியிருக்க வேண்டியதுதான். ஆனால் மேற்படி வழக்கில் அவ்விரு மாலுமிகள் உயிர் வாழ்வதற்கு அச்சிறுவன் ஒன்றும் இடைஞ்சலாக இல்லை. உயிர் தப்புவதற்கு இடைஞ்சலாக இருந்ததைக் களையும் செயல் போன்றதன்று, சிறுவனை அவ்விரு மாலுமிகள் கொன்ற செயல். எனவே, அங்கு A செய்தது குற்றமாகவில்லை; இங்கு அவ்விரு மாலுமிகள் செய்தது குற்றமாகியது.

முடிவுரை:

மேற்கண்டவைகளிலிருந்து, ஒரு தீங்கைத் தவிர்ப்பதற்கென

1. (1884) 14 Q.B.D. 273

இன்னொரு தீங்கை விளைவிக்கலாம் என்ற கோட்பாட்டில், பின்வரும் நான்கு முக்கிய கூறுகள் இருக்க வேண்டும் என்பது தெளிவாகிறது. அவை,

(1) தவிர்க்கப்பட்ட தீங்கு, செய்யப்பட்ட தீங்கை விட பெரியதாக இருந்திருக்க வேண்டும்.

(2) அந்தப் பெரிய தீங்கைத் தவிர்ப்பதற்கு வேறு வழிகள் ஏதும் இல்லாதிருந்திருக்க வேண்டும்.

(3) பெரிய தீங்கைத் தவிர்ப்பதற்கு எந்த அளவிற்கு தேவையாக உள்ளதோ அந்த அளவிற்கே செய்யப்பட்ட தீங்கும் அமைதல் வேண்டும்.

(4) முக்கியமாக குற்றக் கருத்து ஏதுமில்லாமல் நல்லெண்ணத்துடன் அது செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(உ) குழந்தைத் தன்மை [Infancy]
(பிரிவுகள் 82 மற்றும் 83)

7. Doli incapax - Write short notes. (குற்றச் செயல் இயலாமை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

இந்திய தண்டனைச் சட்டத்தின் 82 மற்றும் 83-வது பிரிவுகள், குழந்தைகளின் செயல்கள் சில சூழல்களில் குற்றமாவதில்லை என்று கூறுகின்றன.

குற்றச் செயல் இயலாமை (Doli incapax):

ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைகள் எவ்விதக் குற்றத்திற்கும் ஆளாவது இல்லை என்று பிரிவு 82 கூறுகிறது. ஏனெனில், அவ்வயதுடைய குழந்தைகள் குற்றச் செயல் செய்ய இயலாத சூழலில் இருப்பதாக சட்டம் அனுமானிக்கிறது. இதுவே, **'குற்றச் செயல் இயலாமை அல்லது இல்லாமை'** எனப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, ஆறு வயதுக் குழந்தை ஒன்று கீழே கிடந்த கத்தியை எடுத்து அருகில் நின்றவர் மீது விட்டெறிந்தால், அவருக்கு காயம் ஏற்படலாம். இதை வைத்து அக்குழந்தையைத் தண்டிக்கலாமா? "கூடாது" என்று கூறுகிறது சட்டம். இதே செயலை வயதுவந்தவர் செய்தால், அவர் காயம் விளைவித்த குற்றத்திற்காக பொறுப்பாகின்றார்; அதற்குரிய தண்டனையும் பெறுகின்றார். ஆனால் குழந்தையைக் குற்றவாளி எனச் சட்டம் கொள்ளுவதில்லை. தான் செய்யும் செயலின் தன்மையை அறியக்கூடிய திறன் இல்லாதது இளங்குழந்தை. குற்ற மனத்தோடு கூடிய செயல்தான் குற்றமாகிறது என்று நாம் ஏற்கனவே கண்டுள்ளோம். குழந்தைக்கு ஏது குற்ற மனம்? குற்ற மனமில்லாக் குழந்தையைக் குற்றவாளி எனச் சட்டம் கொள்ளுவதில்லை.

நன்மை எது, தீமை எது, ஒரு செயலின் தன்மை என்ன, அதன் விளைவு என்ன என்பன பற்றிக் குழந்தைக்குத் தெரிவதில்லை. இதற்கான அறிவுத்திறன் அச்சிறு வயதில் அதற்கு வர வாய்ப்பில்லை. எனினும், குழந்தைகளின் செயல்களால் பெரிய தீமைகளும் பொதுவாக விளைவ தில்லை. இது இயற்கையின் விதி என்றே கூற வேண்டும். எனவே, சட்டம் ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைகளுக்குக் குற்றப் பொறுப்பிலிருந்து பூரண விலக்கு அளிக்கிறது. எந்தவிதச் செயல்களுக்கும் அக்குழந்தைகளைப் பொறுப்பாக்க முடியாது. இந்திய தண்டனைச் சட்டத்தின் **82-ஆம் பிரிவு,** "ஏழு வயதிற்குட்பட்ட குழந்தையின் செயல் எதுவும் குற்றமாவது இல்லை" என்று தெளிவாகக் கூறுகிறது.

கத்தியை எடுத்து வீசிக் காயப்படுத்திய ஐந்து வயதுக் குழந்தை குற்றவாளியாவதில்லை. ஆனால், அக்குழந்தையை அவ்வாறு வீசும்படி வயது வந்த இன்னொருவர் தூண்டி, அதன் பயனாகக் குழந்தை கத்தியை வீசியது என்றால், தூண்டியவர் அக்குற்றத்திற்குப் பொறுப்பாகின்றார். "கத்தியை வீசிய குழந்தை குற்றவாளி இல்லையே? தூண்டிய நான் மட்டும் எவ்வாறு குற்றவாளி ஆக முடியும்?" என்று அவர் வாதாட முடியாது. இது 'குற்ற உடந்தை' குற்றமாகிவிடும்.

Walters v. Lunt[1] என்ற வழக்கில் தங்களுடைய ஏழு வயதிற்குட்பட்ட மகனிடமிருந்து ஒரு மூன்று சக்கர வண்டியை, அது தங்களுடைய மகனால் திருடப்பட்டு உள்ளது என்பதை அறிந்தே, அதனைப் பெற்றுக் கொண்டதற்காக அவன் பெற்றோர்களின் மீது குற்றம் சாட்டப்பட்டது. குழந்தை ஏழு வயதிற்குட்பட்டதால், அது செய்தது குற்றச் செயலல்ல என்ற அடிப்படையில் அதன் பெற்றோர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

8. Discuss 'Infancy' as a general defence. ('குழந்தைத் தன்மை' ஒரு பொது எதிர்வாதமாக விவாதிக்க.)

முன்னுரை:

குழந்தைகளின் செயல்கள் குற்றமாவதில்லை என்று பிரிவுகள் 82 மற்றும் 83 கூறுகின்றன. பிரிவு 82-ன்படி, ஏழு வயதிற்குட்பட்ட ஒரு குழந்தையின் செயல் எதுவும் குற்றமாகாது. இதை நாம் சென்ற வினாவின் விடையிலேயே விரிவாகக் கண்டுவிட்டோம். இனி பிரிவு 83 யாது கூறுகிறது என்பதைப் பார்ப்போமா?

பிரிவு 83 கூறுவதாவது:

ஒரு செய்கையைச் செய்யும் பொழுது, தனது நடத்தையின் தன்மையையும், அதன் விளைவுகளையும் ஆராய்ந்து அறிந்து கொள்வதற்குப் போதுமான மனப் பக்குவமடைந்திராத, ஏழு வயதுக்கு மேற்பட்ட, ஆனால் 12 வயதிற்குட்பட்ட ஒரு குழந்தையினால் செய்யப்படும் செயல் எதுவும், ஒரு குற்றமாகாது.

1. 1951 2 All. E.R. 645

குழந்தைத் தன்மை - எதிர்வாதம்:

இதை ஒரு எதிர்வாதமாக பயன்படுத்த பின்வருவன மெய்ப்பிக்கப்பட வேண்டும். அவை, (1) குழந்தையின் வயது 7-க்கு மேல் ஆனால் 12-க்குட்பட்டது; (2) அக்குழந்தை அச்செயலைச் செய்யும் பொழுது, தன் நடத்தையின் தன்மையையும் அதன் விளைவுகளையும் ஆராய்ந்தறிந்து கொள்ள போதுமான பக்குவமடைந்திராமல் உள்ளது.

முக்கிய வழக்குகள்:

Krishna Case [1] - இவ்வழக்கில் 9 வயதுக் குழந்தையொன்று நகைகளைத் திருடி, அதனை A என்பவருக்கு விற்றுவிட்டது. இங்கு அக்குழந்தைக்கு தான் செய்யும் செயலின் விளைவு என்னவென்பதை அறிந்து கொள்ளும் பக்குவம் இருந்தது என்பது வழக்கு விசாரணையில் தெரிய வந்தது. எனவே, அக்குழந்தை திருட்டுக் குற்றத்திற்காகவும், நகையை வாங்கிய A, திருட்டுப் பொருளை பெற்ற குற்றத்திற்காகவும் தண்டிக்கப்பட்டனர்.

Ulla Mahapatra Case[2] எனும் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சிறுவன் பதினோரு வயதுக்கு மேல் பனிரெண்டு வயதுக்குட்பட்டவன். அவன் தன்னிடமிருந்த கத்தியை A என்பவனிடம் நீட்டி, அவனை வெட்டித் துண்டமாக்கிவிடுவதாகக் கூறிக்கொண்டே மிரட்டும் பாவணையில் அவனை உண்மையிலேயே குத்திவிடுகிறான். இதனால் A மரணமடைந்துவிடுகிறான். இங்கு கத்தியால் குத்துவதால், தான் எதிர்பார்த்த விளைவு ஏற்படும் என்பது அச்சிறுவனுக்கு தெரிந்திருந்தது. எனவே கட்டாக் உயர் நீதிமன்றம் அவனை குற்றவாளி என்று கூறி, சிறுவர் சீர்திருத்தப் பள்ளிக்கு அனுப்பியது.

குழந்தைகளின் குற்றப் பொறுப்புநிலையைக் காட்டும் ஒரு எளிய வரைபடம்:


குழந்தை
7 வயதிற்குட்பட்டது (குற்றப் பொறுப்பு இல்லை) (பிரிவு 82)
7 வயதிற்கு மேல் 12 வயதிற்குட் பட்டது (பிரிவு 83)
12 வயதிற்கு மேற்பட்டது (குற்றப் பொறுப்பு உண்டு)
செயலின் தன்மை மற்றும் விளைவை அறிந்து கொள்ளும் பக்குவமடைந்திருப்பின் குற்றப்பொறுப்பு உண்டு.
செயலின் தன்மை மற்றும் விளைவை அறிந்து கொள்ளும் பக்குவமடைந்திருக்கவில்லை என்றால், குற்றப் பொறுப்பு இல்லை.

1. 1883 Madras
2. A.I.R. 1950 Cuttack 239

(ஊ) பித்து நிலைமை [Insanity]
(பிரிவு 84)

9. Explain the nature and scope of the plea of insanity under the IPC. (இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் பித்துநிலைமை என்ற எதிர்வாதத்தின் தன்மை மற்றும் எல்லையை விளக்குக.)

(அல்லது)

Examine the extent of insanity as a defence of criminal liability. (குற்றப் பொறுப்புநிலைக்கு எதிர்வழக்கு உரையாக பித்துநிலை அமைவதின் அளாவுகையை ஆராய்க.)

(அல்லது)

Discuss the scope of the defence of insanity with particular reference to Indian Case Law. (பித்துநிலை எதிர்வாதத்தின் அளாவுகையை குறிப்பாக இந்திய வழக்குச் சட்டத்தை குறிப்பிட்டு விவாதிக்க.)

(அல்லது)

Discuss the scope and extent of the defence of insanity in Indian Criminal law bringing out the degree of insanity and standard of proof required to prove the defence in the criminal charge. (இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் பித்துநிலை எதிர்வாதத்தின் அளாவுகை மற்றும் நோக்கம் ஆகியவற்றை விவாதித்து எழுதுக. குற்றச்சாட்டின்போது எதிர்வாதத்திற்கு சாதகமாக அமையும் பித்துநிலை மதிப்பு மற்றும் ஆதாரத்தின் மதிப்புத் தகவு ஆகியவற்றை தெளிவுபடுத்தி எழுதுக.)

(அல்லது)

Discuss the Mc.Naughten's Case with facts and principles. (மெக்னாட்டன் வழக்கின் பொருண்மைகளையும் விதிகளையும் விவாதிக்க.)

(அல்லது)

"The Mc Naughten's rules are still received in the Courts as the binding authority on the defence of insanity". Examine the statement. ("பித்துநிலை என்ற எதிர்வாதத்திற்கு கட்டுப்படுத்தக் கூடிய அதிகாரம் கொண்டதாக மக்நாட்டன் விதிகள் இப்பொழுதும் நீதிமன்றத்தால் ஏற்கப்படுகின்றன". ஆராய்க.)

(அல்லது)

Explain the defence of legal insanity and in what way it is distinguished from medical insanity. (சட்டப் பித்துநிலை என்ற எதிர்வாதத்தினையும் அது எவ்வழியில் மருத்துவ பித்துநிலையிலிருந்து வேறுபடுத்தப்படுகின்றது என்பதையும் விளக்குக.)

(அல்லது)

Durham Doctrine - Write short notes. (டுர்ஹம் கோட்பாடு - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Delirium tremens - Write short notes. (மட்டற்ற குடியினால் ஏற்படுகிற பித்து - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

'பித்துநிலை' என்பது குற்றப் பொறுப்புக்கு ஒரு விதிவிலக்காக சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. இது நாம் ஏற்கனவே விரிவாகக் கண்ட 'குற்ற மனக் கோட்பாட்டை' (Doctrine of mens rea) அடிப்படையாகக் கொண்டதாகும். ஏனெனில், குற்ற மனம் உடையவரே, சட்டத்தால் தண்டிக்கப்படுவர். ஆனால், பித்துநிலையில் உள்ளவர்கள், தன்னிலையற்ற குழப்பமான மனநிலையுடன் வாழ்பவர்கள். எனவேதான், அவர்களை சட்டம் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்கி வைத்துள்ளது. **'பித்துப் பிடித்தவன் தன்விருப்பற்றவன்'** மற்றும் **'அவன் இல்லாதவன்'** என ***Furiosis nulla voluatas est*** (a mad man has no will) மற்றும் ***Furiosus absentis low est*** (a mad man is like one who is absent) எனும் இலத்தீன் மூதுரைகள் பகருகின்றன. இது குறித்து பிரிவு 84 பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 84 கூறுவதாவது:

ஒரு செயலைச் செய்யும் காலத்தில், பித்துப்பிடித்ததின் காரணத்தால், அச்செயலின் தன்மையை, அல்லது தீங்கானதாகவோ அல்லது சட்டத்திற்கு முரணானதாகவோ உள்ள செயலைத் தாம் செய்கிறோம் என்பதை அறியும் திறனற்றவராக உள்ள ஒருவரால் செய்யப்படும் எதுவும், ஒரு குற்றமாகாது.

பித்துநிலைக்கு தேவையான உட்கூறுகள் (Ingredients):

1. பித்துநிலையில் இருக்க வேண்டும்;
2. செய்யும் செயலின் தன்மையை அறிந்து கொள்ள முடியாதவராக இருக்க வேண்டும்; அல்லது
3. தாம் செய்து கொண்டிருக்கிற செயல் தீங்கானது என்பதை அறியமுடியாத நிலை; அல்லது
4. தாம் செய்து கொண்டிருக்கிற செயல் சட்டத்திற்கு முரணானது என்பதை அறிய முடியாத நிலை.

மிக மிக முக்கியமான வழக்கு:

Mc Naughten Case[1]

இவ்வழக்கில் மெக்னாட்டன் என்பவன், இங்கிலாந்தின் பிரதம

1. 1843

மந்திரியான சர் இராபர்ட் பீல் என்பவரை தனது எதிரியாக பாவித்து, தனக்கு உள்ள மனநோய் காரணமாக அவனது அந்தரங்க செயலாளரான டிரம்மண்டை, சர் இராபர்ட் பீல் என நினைத்து சுட்டுக் கொன்றுவிட்டான். இங்கு மெக்னாட்டன் பித்துநிலையில் மேற்கண்ட செயல் புரிந்துள்ளான் எனக்கூறி நீதிபதிகள் அவனை விடுவித்தனர். ஆனால் இத்தீர்ப்பு மக்களிடையே பெருஞ்சலசலப்பை ஏற்படுத்தியது. பித்துநிலை என்று கூறி எத்தகு குற்றத்தை வேண்டுமானாலும் புரிய ஏதுவாக இத்தீர்ப்பு உள்ளது என்றும், இதற்கு தகுந்த சட்டம் வேண்டும் என்றும் மக்கள் கிளர்ச்சி செய்தனர். இதனால் நீதிப்பெருமகனார்கள் அவையில் (House of Lords) விவாதம் எழுந்தது. இதன் விளைவாக நீதிப்பெருமகனார்களின் முன் 5 கேள்விகள் வைக்கப்பட்டன. அதற்கு நீதிபதிகள் கீழ்க்கண்டவாறு பதில் அளித்தனர். **இதனை இவ்வழக்கின் கொள்கைகள் (Principles) எனவும் கூறலாம்.**

மேற்படி வழக்கில் விளைந்த கொள்கைகள்:

1. முரண்பாடான கருத்து ஏதேனும் நிரூபிக்கப்படும் வரையில் ஒவ்வொரு மனிதனும் புத்தி சுவாதீனம் உடையவனாகவே கருதப்படுவான்.

2. பித்துநிலையை ஒருவன் எதிர்வாதமாக பயன்படுத்த வேண்டுமெனில், அவன் அக்குற்றத்தைப் புரியும் பொழுது மூளை நோயால் பாதிக்கப்பட்டுள்ளான் என்றும், அச்செயலின் தன்மை அறியாதவனாக உள்ளான் என்றும் நிரூபிக்கப்பட வேண்டும்.

3. குற்றம் சாட்டப்பட்டவன், தன்னுடைய செயல் சட்டத்திற்கு முரணானது என அறிந்திருந்தால் அவன் தண்டிக்கப்படுவான்.

4. பித்துநிலையில் ஏற்பட்ட குழப்பம், முழுத் தடுமாற்றமானதாக இருப்பதற்கான சூழ்நிலைகள் இருந்தால் மட்டுமே அவனுக்கு விதிவிலக்கு உண்டு.

5. குற்றம் சாட்டப்பட்டவனை இதற்கு முன் கண்டிராத ஒரு மருத்துவ சாட்சியிடம் குற்றச் செயல் நடைபெற்ற பொழுது, குற்றம் சாட்டப்பட்டவனின் மனநிலை என்னவாக இருந்தது, அல்லது அவன் தனது செயல் சட்டத்திற்கு முரணானது என்று அறிந்து செயல்பட்டானா போன்ற வினாக்களை கேட்கக் கூடாது.

மேற்கண்ட கொள்கைகளின் அடிப்படையிலேயே நமது இந்திய தண்டனைச் சட்டத்தின் மேற்படி 84-வது பிரிவும் அமைக்கப்பட்டுள்ளது என்று சொன்னால் அது மிகையாகா. இது மட்டுமல்லாது உலக நாடுகள் அனைத்தின் தண்டனைச் சட்டத்திலும் இக்கொள்கைகள் 'பித்துநிலை' என்பதிக் கீழ் சேர்க்கப்பட்டுள்ளன. **இன்றுவரை இக்கொள்கைகள் பித்துநிலையை ஒரு எதிர்வாதமாக பயன்படுத்தும் வழக்குகளிலெல்லாம் நீதிமன்றத்தால் பின்பற்றப்பட்டு வருகின்றன என்று சொன்னால், அதுவும் மிகையன்று.**

State of Maharashtra v. Umesh Krishna Pawar[1]

மேற்கண்ட சமீபத்திய இந்திய வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவன் சிறுமி ஒருத்தியை தனது சைக்கிளில் வைத்துக் கொண்டு மறைவான ஓரிடத்திற்கு கடத்திச் சென்று அவளிடம் பாலியல் பலாத்காரம் செய்தான். அதன் விளைவாக அவள் மரணமடைந்து விட்டாள். இக்குற்றத்தை மறைக்க அவளது உடலை ஒரு கால்வாயில் வீசியெறிந்து விட்டு, ஓடிவிட்டான். வழக்கு விசாரணையில் அவன் பித்துப் பிடித்தவன் என்ற எதிர்வாதம் அவனது சார்பாக முன் வைக்கப்பட்டது. ஆனால் நீதிமன்றம் இதை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், குற்றம் சாட்டப்பட்டவன் நன்கு திட்டமிட்டே செயல்பட்டுள்ளான்; அவனது செயல்கள் பித்துபிடித்த மனிதனின் செயலைப் போல இல்லை என்று கூறி, நீதிமன்றம் அவனை தண்டித்தது.

பித்து நிலைமை - இரு பெரும் வகைகள்:

பித்து நிலைமையில் இரண்டு பெரும் வகைகள் உள்ளன. முதலாவது, மருத்துவரீதியான பித்து நிலைமை (Medical Insanity), இரண்டாவது, சட்டரீதியான பித்து நிலைமை (Legal Insanity). இதில் சட்டரீதியான பித்து நிலைமையைத்தான் நீதிமன்றம் கருத்தில் கொள்ளும். சற்று விளக்கமாக பின்வருமாறு காண்போமா?

விளக்கம் : ஏழு வயதிற்குட்பட்ட குழந்தைகள் குற்றங்கள் ஏதேனும் புரிந்தால், அது குற்றமாகாது என அவர்களுக்கு இந்திய தண்டனைச் சட்டம் குற்றப் பொறுப்பிலிருந்து முழுமையான விலக்களிக்கிறது. **(பிரிவு 82).** இது நாமனைவரும் அறிந்ததே. ஆனால், மேற்கண்டது போன்று, பித்துப் பிடித்தவர்களுக்கு சட்டம் முழு விலக்களிப்பது இல்லை. ஏனெனில் பித்துநிலைகளில் பல வகைகளுண்டு. பிறவியில் பித்துநிலை, பின்வந்த பித்துநிலை, இடையிடையே வந்து போகும் பித்துநிலை என்றெல்லாம் அது வகைப்படுத்தப்படுவதுண்டு. சில வேளைகளில் பித்துப் பிடித்தவர்கள் நல்ல முறையில் நடந்து கொள்வதுமுண்டு. செயல்களையும் அதன் இயல்பு களையும் தெரிந்து நடப்பதுண்டு. இவ்வாறு இடையிடையே வரும் சித்தத் தெளிவை **"Lucid Intervels'** என்று ஆங்கிலத்தில் கூறுவார்கள். இந்த நிலையில் அவர்கள் சாதாரண மக்களைப் போலவே நடந்து கொள்கின்றனர்.

எனவே, மேற்படி பிரிவு 84-ன்படி, பித்துப் பிடித்தவர் ஒரு குற்றமான செயலைச் செய்தால், அதைச் செய்த பொழுது அவருக்கிருந்த மனநிலை என்ன? அந்தச் செயலின் தன்மையை அவரால் தெரிந்து கொள்ள முடிந்ததா? அவர் செய்தது தீங்கானது என்றோ, சட்டத்திற்கு முரணானது என்றோ அவருக்குத் தெரிந்து கொள்ளும் மனத்திறன் இருந்ததா? என்ற இந்தக் கூறுகளையெல்லாம் ஆய்ந்த பின்னர்தான் குற்றச் செயலுக்கான பொறுப்பு நிச்சயிக்கப்படுகிறது.

1. 1994 Cri. L.J. 774 at p. 777 (Bom.)

எடுத்துக்காட்டு : தான் செய்த செயலின் தன்மையை அறியாத மனநிலைக்கு ஒரு நல்ல உதாரணத்தை, குற்றவியல் சட்டத்தைத் தொகுப்பதில் பங்கு கொண்ட ஆங்கில அறிஞர் **சர் ஜேம்சு ஸ்டீஃபன் (Sir James Stephen)** அவர்கள் பின்வருமாறு கூறுகிறார். பித்துப் பிடித்த ஒருவன் தூங்கிக்கொண்டிருந்த ஒருவரின் தலையை வெட்டி அகற்றிவிட்டான். "ஏன் இவ்வாறு வெட்டினாய்?" என்று கேட்டால் தலையை இழந்தவர் தூங்கி விழித்ததும் தன் தலை எங்கே போயிற்று என்று தேடுவார். அதை வேடிக்கை பார்க்க வேண்டும் என்றுதான் அவர் தலையை வெட்டி அகற்றிவிட்டேன் என்று அந்தப் பித்துப் பிடித்தவன் கூறினானாம். தலையை வெட்டிவிட்டால் மனிதன் இறந்துவிடுவான் என்பது தெரியாத மனநிலை அந்தப் பித்துப் பிடித்தவனுக்கு இருந்ததை இது காட்டுகிறது. இதைத்தான் செயலின் தன்மையையோ, விளைவையோ அறியாத மனநிலை என்கிறோம்.

இதனடிப்படையில்தான் சட்டப் பித்துநிலை மற்றும் மருத்துவ பித்துநிலை என்ற வகைப்பாடுகள் ஏற்படுகின்றன என்றால் அது மிகையாகாது.

சட்டப் பித்துநிலை (Legal Insanity) : பித்துப் பிடித்த அனைவரையும் சட்டம் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிப்பதில்லை. அதை முன் சென்ற பத்திகளில் கண்டுள்ளோம். பின் எந்த பித்துநிலையில் உள்ளவரை சட்டம் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிக்கிறது என்ற வினா எழுந்தால், அதில் வியப்பேதுமில்லை. அதாவது, சட்டப் பித்துநிலை உள்ளவர்களை (Legal Insanity) மட்டுமே, சட்டம் குற்றப் பொறுப்பிலி ருந்து விலக்களிக்கிறது. இங்கு மேற்கண்ட பிரிவு 84-ல் கூறப்பட்டிருக்கும் நிலையே சட்டப் பித்துநிலை எனப்படும்.

அதாவது, பித்துநிலையில் உள்ள ஒருவர், தான் செய்த செயலின் தன்மை என்ன என்றோ, தாம் செய்தது தீங்கு என்றோ அல்லது சட்டத்திற்கு முரணானது என்றோ தெரிந்து கொள்ள முடியாத மனநிலையில் இருந்தார் எனில் (incapable of knowing the nature of the act, or that he is doing what is either wrong or contrary to law), அவரை அச்செயலுக்கு சட்டம் பொறுப்பாக்குவது இல்லை. அவர் அந்தச் செயலைச் செய்யும் வேளையில் அவருக்கு அத்தகைய மனநிலை இருந்திருக்க வேண்டும். அந்த மனநிலை, செயலைச் செய்வதற்கு முன்னோ, அதற்குப் பின்னோ இருந்து பயனில்லை. இதுவே சட்டப் பித்துநிலை எனப்படுகிறது.

மருத்துவ பித்துநிலை (Medical Insanity): முன்கண்டவாறு பித்துநிலைகளில் பிறவிப் பித்து, பின் வந்த பித்து, இடையிடையே வந்து போகும் பித்து எனப் பலவகை உண்டு. அவையெல்லாம் ஒருவரை மருத்துவரீதியாக பித்துநிலையில் உள்ளவர்களாகக் காட்டலாம். அதாவது, தமது செயலின் விளைவை அறியும் திறன் கொண்டு விளங்குவார்கள். ஆனால் அவர்களது மூளையில் மருத்துவரீதியான கோளாறுகள் ஏற்பட்டிருக்கலாம். ஒரு மருத்துவரைப் பொறுத்தவரை, அவர் பித்து

நிலையில் உள்ளவராக இருக்கலாம். இதுவே மருத்துவப் பித்துநிலை எனப்படுகிறது. உதாரணமாக, தனக்குத் தானே சிரித்தும் பேசிக் கொண்டும் இருப்பவர்கள், அனாவசியமாக பயப்பட்டு அலறுபவர்கள், பழைய நினைவுகளை சம்பந்தா சம்பந்தமில்லாமல் ஓயாமல் பேசித் திரிபவர்கள் என்று சொல்லிக் கொண்டே போகலாம். ஆனால் மருத்துவ பித்துநிலைக்கும் சட்டப்பித்துநிலைக்கும் பின்வருமாறு வேறுபாடு உண்டு.

சட்டப் பித்துநிலை, மருத்துவ பித்துநிலை வேறுபடும் விதம் : மருத்துவரைப் பொறுத்தவரை ஒருவர் பித்து நோய் கொண்டிருக்கலாம். இது மருத்துவ பித்துநிலை. ஆனால் அவர் சட்டப் பித்துநிலை என்ற வரம்பிற்குள் வர வேண்டுமெனில், பிரிவு 84-ன்படி தனது செயலின் தன்மையையோ அல்லது தாம் செய்தது தீங்கானது என்றோ அல்லது சட்டத்திற்கு முரணானது என்றோ தெரிந்து கொள்ள முடியாத மனநிலையில் இருக்க வேண்டும். இப்பித்துநிலை அச்செயலின் பொழுது இருந்திருக்க வேண்டும். வேறு விதத்தில் கூறுவதானால், பித்து நோய் உள்ள ஒருவர், தனது செயலின் தன்மையையோ அல்லது தனது செயல் தீங்கானது அல்லது சட்டத்திற்கு முரணானது என்பதையோ, அச்செயலின் பொழுது அவர் அறிந்திருந்தார் என்று மெய்ப்பிக்கப்பட்டால், அவர் சட்டப் பித்துநிலையில் உள்ளவராகக் கருதப்பட மாட்டார். அவருக்கு பிரிவு 84-ன்படி குற்றப் பொறுப்பிலிருந்து விலக்கு கிடையாது. அதாவது அவரை மருத்துவ பித்துநிலை உள்ளவராக சட்டம் தீர்மானிக்கிறது. எனவே, ஒருவர் தனது குற்றச் செயலின் பொழுது பித்துநிலையில் இருந்ததாக கூறினால், அவரை சட்டம் உடனடியாக குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களித்து விடாது. அவர் அச்சமயத்தில் மேற்கண்டவாறு சட்டப் பித்துநிலையில் இருந்ததாக மெய்ப்பிக்க வேண்டும். அதாவது சட்டப் பித்துநிலைமையைத்தான் நீதிமன்றம் கருத்தில் கொள்ளும்.

முக்கிய வழக்குகள்:

Sajjan Singh Case[1] - எனும் வழக்கில், "மருத்துவரீதியாக சில வகை மனநோயை ஒருவன் கொண்டிருக்கலாம். ஆனால் தாம் செய்வது சட்டத்திற்கு முரணானது என்ற சட்டரீதியான நிலை காணப்படாவிட்டால், அது பித்துநிலை ஆகாது என்றும், வெறும் மருத்துவரீதியாக பித்தாக இருந்தால் மட்டும் போதாது; சட்டரீதியாக செயலின் தன்மை, விளைவு இவைகளை அறிய முடியாத நிலைமையிலும் இருக்க வேண்டும்" என்று கூறப்பட்டது.

Lakshman Dagdu[2] என்ற வழக்கில், குற்றவாளி கடுமையான காய்ச்சலின் காரணமாக மயக்கமும் தடுமாற்றமும் கொண்டான். அப்பொழுது தன் குழந்தையின் அழுகுரல் கேட்டு அவர்கள் மீது வெறுப்பு கொண்டு அவர்களைக் கொன்று விடுகிறான். இங்கு மருத்துவரீதியாக சோதனைகளை மேற்கொண்டால், அவனுக்கு ஏற்பட்ட கடும்

1. 32 Cr. L.J. 84
2. 10 B 512

காய்ச்சலினால் புத்தி தடுமாற்றம் ஏற்பட்டிருந்தது என்பது நிரூபிக்கப் பட்டது. ஆனால் சட்டரீதியாக, அவன் அச்செயலைச் செய்யும் பொழுது, அச்செயலின் தன்மை மற்றும் விளைவை அறியும் திறன் பெற்றிருந்தான் என்பதற்கு சாட்சியம் இருந்தது. ஆகவே, அவனுக்கு குற்றப் பொறுப்பிலி ருந்து விலக்களிக்கப்படவில்லை.

எனவே, இந்தப் பொறுப்பிலிருந்து விலக்கு பெற மருத்துவ பித்துநிலை மட்டும் போதாது; இந்திய தண்டனைச் சட்டம் பிரிவு 84-ன்படி சட்டப் பித்துநிலையும் இருத்தல் அவசியம், என்பது மேற்கண்டவற்றிலிருந்து தெளிவாகிறது.

டுர்ஹம் கோட்பாடு (Durham Doctrine):

United States v. Durham[1] என்ற வழக்கிலிருந்து, அவ்வழக்குத் தரப்பினர் **Durham** என்பவரின் பெயராலேயே மேற்படி கோட்பாடு எழுந்தது என்று கூறலாம். மேற்படி வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவன் ஒருவனின் சட்ட விரோதமான செயல், அவனுக்கு ஏற்பட்ட மனநோயின் காரணமாகவோ அல்லது மூளைத்திறன் குறைபாட்டின் காரணமாகவோ செய்யப்பட்டிருந்தால், அவனை குற்றப் பொறுப்புக்கு ஆளாக்க முடியாது. ('An accused is not criminally responsible if his unlawful act was the product of mental disease or mental defect'). சுருங்கக்கூறின், மூளை கலங்கியதால் குற்றம் புரியப்பட்டிருப்பின், அதனைப் புரிந்த குற்றவாளியை தண்டிக்க முடியாது. இதுவே, 'டுர்ஹம் கோட்பாடு' என அழைக்கப் படுகிறது. பின்வரும் இந்திய வழக்குகள் இதனை மேலும் தெளிவாக்கும்.

Jailal v. Delhi Administration[2] என்ற வழக்கில் ஜெய்லால் என்பவன் தனது அண்டை வீட்டில் உள்ளவர்களை கத்தியால் கொலை செய்துவிட்டு, அக்கத்தியை எங்கோ மறைத்து வைத்து விட்டான். பிறகு போலீசார் அவனைப் பிடித்து விசாரணை செய்ததில் தான் செய்த கொலையை மறைப்பதற்காக மிகச் சாதுர்யமாக பதிலளித்தான். இவையெல்லாம், அவன் அந்தக் கொலையை குற்றம் என அறிந்தே, நல்ல மனநிலையுடன் செய்துள்ளான், என்பதைத் தெளிவாகக் காண்பித்தது. ஆனால் இந்நிகழ்ச்சிக்குப் பிறகு அவனுடைய மனநிலை பாதிக்கப்பட்டது. ஜெய்லாலை பரிசோதித்த மனநோய் மருத்துவர், அவனுக்கு மூளை முரண் நோய் (Schizophrenia) ஏற்பட்டுள்ளது எனவும், தற்பொழுது குணமடைந்து விட்டது எனவும் சாட்சியம் அளித்தார். ஆனால் ஜெய்லால் கொலை செய்யும் பொழுது, எந்த மனநோயாலும் பாதிக்கப்படவில்லை; விளைவு களை அறிந்தே, கொலை செய்துள்ளான். ஆகவே பிரிவு 84-ன் கீழ் பாதுகாப்பைப் பெறவியலாது எனக்கூறி அவனை நீதிமன்றம் தண்டித்தது.

Parmanad Patra v. State[3] என்ற வழக்கில், ஒருவன் காளி தெய்வத்தை

1. 214 F, 2nd 862
2. A.I.R. 1969 S.C. 19
3. A.I.R. 1969 Orissa 222

வணங்கிக் கொண்டிருக்கும்பொழுது, தன் எதிரில் இருந்த ஒரு குழந்தையின் தலையை வெட்டிவிட்டு "**காளிக்கு வெற்றி**" (காளிமாதா கி ஜே) என்ற கோஷமிட்டபடி ஓடினான். காளி தெய்வத்தை திருப்திப்படுத்த வேண்டும் என்பதற்காக முழு அறிவுடனும், தான் செய்யும் செயலின் தன்மையை முற்றிலும் உணர்ந்தவனாகவும், அவன் அச்செயலைச் செய்துள்ளான் என்பதை, அவனது மேற்கண்ட நடத்தையே தெளிவாக சுட்டிக் காட்டுகிறது. ஆகவே, குழந்தையை கொலை செய்த குற்றத்திற்காக அவன் தண்டிக்கப் பட்டான். (இங்கு மனநோய் பாதிக்கப்பட்டதால் கொலை புரியவில்லை. ஆகவே டுர்ஹம் கோட்பாடு பொருந்தாது)

பித்துநிலையில் உள்ளவர்கள் - வகைகள்:

பித்துநிலையில் உள்ளவர்களை நான்கு வகைகளாகப் பிரிக்கலாம். 1. மூடன் (idiot), 2. சுகவீனத்தின் காரணமாக புத்தி இழந்தவன் (one made non compose mentis), 3. பித்தன் (Lunatic) அல்லது பைத்தியக்காரன் (mad man), 4. மட்டற்ற குடியினால் ஏற்படுகிற பித்து (Delirium tremens).

மட்டற்ற குடியினால் ஏற்படுகிற பித்து (Delirium tremens):

சாதாரண குடிபோதையில் விளையும் செயலுக்கு குற்றப் பொறுப்பு உண்டு. ஆனால் மட்டற்ற குடிப்பழக்கத்தால் பித்துப் பிடித்து (சித்தப் பிரமை) எது சரி, எது தவறு என்று பிரித்துணரும் திறன் இழந்தவனுக்கு குற்றப் பொறுப்பு இல்லை. மட்டற்ற குடியினால் நிரந்தரமாகவோ அல்லது விட்டுவிட்டோ பித்துநிலை ஏற்பட்டால், அது வேறு காரணங்களால் விளையும் பித்துநிலைமையைப் போன்றே கருதப்பட்டு அவனது குற்றச் செயலுக்கு விலக்கு வழங்கப்படுகிறது. குடியினால் ஏற்படும் பித்து என்பது போதைப் பொருள்களை உபயோகிப்பதால் ஏற்படும் பித்துநிலைமையையும் உள்ளடக்கும்.

Sakharam Valad Ramji[1] என்ற வழக்கில், குற்றம் சாட்டப்பட்டவன் கஞ்சா என்ற போதைப் பொருளுக்கு அடிமையானவன். அவன் மனைவி மக்களுடன் வேறு கிராமத்திற்கு போக விரும்பியதை, அவனது மனைவி மறுத்ததினால் சச்சரவு ஏற்பட்டு மனைவியையும், மக்களையும் கொன்றுவிடுகிறான். இந்த வழக்கில் கஞ்சா புகைக்கும் பழக்கத்தினால் சிந்தை கலங்கி, தான் செய்வது குற்றம்தானா என்று அறிய முடியாத அல்லது தன் செயலின் தன்மை என்ன எனப் பகுத்துணரும் திறனற்ற நிலை ஏற்பட்டிருந்தால் மட்டுமே குற்றம் சாட்டப்பட்டவனுக்கு பாதுகாப்பு உண்டு என்று முடிவாயிற்று.

ஒருவனுடைய விருப்பத்திற்கு மாறாக, அவனை மது குடிக்க வைத்து அதன் மூலம் ஏற்பட்ட போதையினால் அவன் ஏதேனும் குற்றச் செயல்கள் புரிந்தால் அவனுக்கு பிரிவு 84-ன் கீழ் பாதுகாப்பு உண்டு. மேலும் பிரிவு

1. (1890) 14 Bom. 564

85, 86-ன் கீழும் பாதுகாப்பு உண்டு. (இந்நிலையை அடுத்து வரும் வினாவில் விரிவாகக் காண்போம்)

(எ) குடிபோதை நிலை [Drunkenness or Intoxication] (பிரிவுகள் 85 மற்றும் 86)

10. How far drunkenness has been accepted as a defence under the Indian Penal Code? (இந்திய தண்டனைச் சட்டத்தில் எந்த அளவுக்கு 'குடிபோதை' ஒரு எதிர்வாதமாக ஏற்றுக் கொள்ளப்படுகிறது?)

(அல்லது)

Explain the scope of the plea of intoxication as a defence to a criminal charge. (ஒரு குற்றச்சாட்டிற்கு போதையூட்டப்பட்ட நிலையை ஒரு எதிர்வாதமாக எடுத்தாள்வதில் அவ்வாதத்தின் பரவெல்லையை விளக்குக.)

(அல்லது)

Discuss the scope of intoxication as a defence of criminal liability. (குற்றப் பொறுப்புநிலைக்கு எதிர் வழக்கு உரையாக குடி மற்றும் நஞ்சுப் பொருளால் மதி மயங்கிய நிலையின் நோக்கெல்லையை விவாதிக்க.)

முன்னுரை:

மது குடித்து மதி மயங்கிப் புரியும் குற்றச் செயல்களை சட்டம் மன்னிப்பதில்லை. அதற்கு மது குடித்தவர் பொறுப்பாகின்றார். ஆனால் மேற்படி சூழலில் எப்பொழுது ஒருவர் குற்றப் பொறுப்புக்குள்ளாவதில்லை என்றால், தாமறியாமலோ அல்லது தன் விருப்பத்திற்கு மாறாகவோ அல்லது மற்றவரது சூழ்ச்சியாலோ பலவந்தமாக குடிபோதையூட்டப் பெற்றவர்கள், அக்குடி போதையின் காரணமாக தான் செய்யும் செயலின் தன்மையையும், தரத்தையும் அறியும் திறனற்ற நிலையில் செய்யும் செயல்களுக்குத்தான் சட்டம் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிக்கிறது. அப்பொழுதுதான், குடிபோதை யூட்டப்பட்டவர் தனது குடிபோதை நிலையை ஒரு எதிர்வாதமாக (defence) பயன்படுத்தவியலும். மாறாக, ஒரு குற்றத்தைப் புரிய வேண்டும் என்ற கருத்துடன் தாமே அதிகமாகக் குடித்து, போதையுண்டாக்கிக் கொண்டு, குற்றச் செயல் புரிந்தால், அதற்கு தண்டனை நிச்சயம் உண்டு. இந்நிலையைத்தான் **பிரிவு 85** பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 85 கூறுவதாவது (அல்லது) குடிபோதைநிலை ஒரு எதிர்வாதமாக ஏற்றுக் கொள்ளப்படும் சூழல்:

ஒரு செயலைச் செய்யும் காலத்தில் குடிபோதை காரணமாக (intoxication) அந்தச் செயலின் தன்மையையோ, அல்லது தான் செய்வது தீங்கானது அல்லது சட்டத்திற்கு முரணானது என்றோ அறியும்

திறனற்றவராகவுள்ள ஒருவரால் செய்யப்படும் எதுவும், அவருக்கு போதை உண்டாக்கிய பொருள் அவருக்குத் தெரியாமல் அல்லது அவரது விருப்பத்திற்கு விரோதமாக அவருக்கு கொடுக்கப்பட்டிருக்குமானால், ஒரு குற்றமாகாது, என்று பிரிவு 85 கூறுகிறது.

எடுத்துக்காட்டு :

ஒருவர் சோடா பானம் என்று நினைத்து தன் நண்பர் கொடுத்ததைக் குடிக்கின்றார். ஆனால், அது மதுபானமாக இருக்கிறது அல்லது வெறியூட்டும் பொருள் கலந்த பானமாக இருக்கிறது. இதனால், அதை அருந்தியவர் போதைக்கு ஆளாகின்றார். இப்பொழுது அவரடைந்த நிலைக்கு அவர் பொறுப்பல்லர். எனவே அவரது செயல் ஒரு குற்றத்தில் முடிந்தாலும், அது ஒரு குற்றமாகாது. ஒருவருடைய விருப்பத்திற்கு விரோதமாக அவரைப் பலாத்காரமாகக் கட்டாயப்படுத்திப் பலர் சேர்ந்து குடிக்க வைக்கலாம். இதனாலும் அவர் குடிவெறி நிலையை அடையலாம். இதற்கும் அவர் பொறுப்பில்லாதவர். இவ்வாறு தாமறியாமலோ, தம் விருப்பத்திற்கு விரோதமாகவோ, போதையூட்டப் பெற்றவர்களுக்கு மட்டும் சட்டம் சலுகை காட்டுகிறது. (The thing which intoxicated him was administered to him without his knowledge or against his will.)

முக்கிய வழக்குகள்:

Basudev v. State of Pepsu[1] - ஒரு திருமண விழாவில், ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரி ஒருவர் குடிபோதையில் இருந்த நிலையில், அங்கிருந்த ஒரு சிறுவனிடம் கொஞ்சம் நகர்ந்து உட்காருமாறு கேட்டுக் கொண்டார். சிறுவன் மறுக்கவே, தன்னிடமிருந்த துப்பாக்கியால் அவனை சுட்டுக் கொன்றுவிட்டார். இராணுவ அதிகாரி கொலைக் குற்றத்திற்கு தண்டிக்கப் பட்டார். ஏனெனில், அவர் போதையில் இருந்த போதிலும் அவரால் நடக்க முடிந்தது, பேச முடிந்தது, சுடும்போது நிற்க முடிந்தது. சுட்ட பிறகு ஓடவும் முடிந்தது. பின் மன்னிப்பு கேட்கவும் முடிந்தது. இவையெல்லாம், நடந்தது குற்றம் என்பதை அறியும் தகுதி அவருக்கு இருந்தது என்பதை புலப் படுத்துகிறது. அவரின் குடிபோதை நிலை எதிர்வாதம் ஏற்றுக்கொள்ளப் படவில்லை.

பாசுதேவ் வழக்கிலிருந்து உருவாக்கப்பட்ட கொள்கைகள்: (1) குடிபோதை ஊட்டப்பட்டதால் செயலின் தன்மை, விளைவுகளை அறிய முடியாத நிலையில் எதிர்வாதம் ஏற்றுக். கொள்ளப்படும். (2) குற்றத்தை உருவாக்குவதற்கு அவசியமான குற்றக் கருத்தினை குற்றம் சாட்டப்பட்டவர் கொண்டிருக்கவில்லை என்பதற்கு வழிவகுக்கும் குடிபோதை நிலை குறித்த சாட்சியமானது, அவருக்கு அக்குற்றக் கருத்து இருந்ததா இல்லையா என்பதை தீர்மானிக்க உதவும் பிற நிரூபிக்கப்பட்ட பொருண்மைகளையும் கொண்டு ஆராயப்பட வேண்டும். (3) குடிபோதையினால் மனம் பாதிக்கப்பட்டிருந்தது

1. A.I.R. 1956 S.C. 488

என்பதை மட்டும் எடுத்துக்கொள்ள முடியாது. குற்றச் செயலின் குழ்நிலைத் தன்மையும் ஆராயப்பட வேண்டும்.

Director of Public Prosecution v. Beard[1] - இவ்வழகில் 13 வயது சிறுமி ஒருத்தியை, குற்றம் சாட்டப்பட்ட ஆலைக் காவலாளி ஒருவன் கற்பழிக்க முயன்றான். அவள் கத்தினாள். எனவே காவலாளி தன்னுடைய கைகளால் அவள் வாயை மூடியும், விரல்களால் கழுத்தை நெரித்தும் அவள் கத்துவதைத் தடுக்கிறான். இதனால் அவள் மூச்சுத் திணறி மரணமடைகிறாள். அவன் அச்சமயம் குடிபோதையில் இருந்ததற்கு சாட்சியங்கள் இருந்தன. ஆகவே, தான் குடிபோதையில் இருந்ததால், அவளைக் கொல்ல வேண்டும் என்ற எண்ணம் தனக்கு இல்லை என்றும், மேலும் இது மரணம் விளைவித்த குற்றமாகலாமே (culpable homicide) தவிர கொலைக் குற்றமாகாது என்றும் எதிர்வாதம் செய்தான். ஆனால் அது ஏற்றுக் கொள்ளப்படவில்லை. ஏனெனில் இதில் குற்றம் சாட்டப்பட்டவனின் செயல்கள் ஒன்றுக்கொன்று தொடர்புடையதாக உள்ளன. அதாவது கற்பழிப்பைத் தொடர்ந்து கழுத்தை நெறித்த கொடூரச் செயலைத் தனித்தனியான செயலாகக் கருத முடியாது. ஆகையால் அவன் கொலைக் குற்றத்திற்காகவே தண்டிக்கப்பட்டான்.

Attorney General for Northern Ireland v. Gallacher[2] - இவ்வழக்கில், மனைவியைப் பழி தீர்க்க வேண்டும்; அதற்கு வீரம் வேண்டும் என்று நினைத்த குற்றவாளி விஸ்கி எனும் மதுபாட்டிலுடன் கத்தியும் வாங்கினான். மட்டற்ற அளவுக்குக் குடித்தான். இதனால் அவன் தன் நிலை மறந்தான். மனைவியைக் குத்திக் கொன்றான். அதற்கு குடிபோதை நிலை என்று எதிர்வாதம் செய்தான். இதனை டென்னிங் நீதிப்பெருமகனார் ஒத்துக்கொள்ளவில்லை. நீதிப்பெருமகனார்கள் அவை (House of Lords) அவனுக்கு கொலைக் குற்றத்திற்கான தண்டனை வழங்கிற்று.

Venkappa Kannappa Chowdri v. State of Karnataka[3] - இவ்வழக்கில், ஒரு குடிகாரனின் மகன் விபத்தொன்றில் இறந்து விடுகின்றான். அதற்கு நஷ்டஈடாக வழங்கப்பட்ட ரூ.10,000/- அவனது மனைவியின் பேரில் வங்கியில் வைப்பீடு (fixed deposit) செய்யப்பட்டது. சம்பவ தினத்தன்று, அவன் முட்டக் குடித்துவிட்டு வீட்டிற்கு வந்து, அத்தொகையை எடுத்துத் தரும்படி தனது மனைவியிடம் தகராறு செய்தான். அவளோ மறுத்து விட்டாள். இதனால் அவன் அவளை அடித்து உதைத்தான். மேலும் மண்ணெண்ணையை அவள் மீது தெளித்து, தீயும் வைத்து விட்டான். அவள் தீக்காயம்பட்டு அலறினாள். இதைக் கேட்டு அக்கம் பக்கத்திலுள்ளோர் வந்து அவளை மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு அவள் நடந்ததை மரண வாக்குமூலமாகக் கொடுத்தாள். ஆனால் அக்குடிகாரனோ, தான் குடிபோதையில் அவ்வாறு செய்து விட்டதாக பிரிவு

1. 1920 A.C. 479
2. 1961 3 All. E.R. 299
3. 1996 Cri. L.J. 15 (Kant)

85-ன்படி எதிர்வாதம் செய்தான். ஆனால் அவனது எதிர்வாதத்தை உயர் நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில் அவன் தானே விரும்பி மதுவருந்தி விட்டு, அக்குற்றச் செயலைப் புரிந்துள்ளான். எனவே, அவனுக்கு ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

குடிபோதையில் இருப்பவர் கருத்துடனோ அல்லது தெரிந்தோ செய்யக் கூடிய குற்றம்:

ஒரு செயலை தெரிந்தோ அல்லது கருத்துடனோ செய்தாலன்றி அச்செயல் குற்றமாகாது. அச்செயலை குடிபோதையிலுள்ள ஒருவன் செய்தாலும், அவன் குடிபோதையில்லாத நிலையில் செய்திருந்தால் எந்த விதத்தில் நடத்தப்படுவானோ அவ்வாறே நடத்தப்படுவான். ஆனால், அவனுக்குத் தெரியாமலோ அல்லது அவனது விருப்பத்திற்கு விரோதமாகவோ போதையூட்டப்பட்டிருந்தால், அச்செயல் ஒரு குற்றமாகாது. இந்நிலையை **பிரிவு 86** பின்வருமாறு விளக்குகிறது.

பிரிவு 86 கூறுவதாவது:

செய்யப்படும் ஒரு செயலானது, குறிப்பிட்ட அறிவுடன் அல்லது கருத்துடன் செய்யப்பட்டாலன்றி ஒரு குற்றமாகாது, என்ற சந்தர்ப்பங்களில் குடிபோதை நிலையில் அந்தச் செயலை செய்கிற ஒருவர் பேரில் போதை உண்டாக்கிய பொருள் அவருக்குத் தெரியாமல், அல்லது அவரது விருப்பத்திற்கு விரோதமாக கொடுக்கப்பட்டிருந்தாலன்றி, அவருக்கு குடிபோதை ஏற்படுத்தாமலிருந்தால் எந்த அறிவை அவர் பெற்றிருந் திருப்பாரோ அதே அறிவை அவர் பெற்றிருந்தாற் போன்றே மேற்கொள்ளப் படும் நடவடிக்கைக்கு அவர் உள்ளாவார்.

எடுத்துக்காட்டு :

A என்பவன் அதிகமாக மதுவருந்தியிருந்தாலும் அவன் என்ன செய்கிறான் என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. அவன் தன் வீட்டிற்கு சென்று வாள் எடுத்து வந்து ஏற்கனவே அவன் விரோதித்திருந்த B என்பவனைக் குத்திக் கொலை செய்யப்போவதாக உரத்தக் குரலில் வீதி நெடுக சொல்லிக் கொண்டே செல்கிறான். வழியில் சென்று கொண்டிருந்த C என்பவன், A-யை சமாதானப்படுத்த முயல்கிறான். அப்பொழுது C-யையே A குத்திக் காயப்படுத்துகிறான். C அதனால் சில நிமிடங்களில் இறந்து விடுகிறான். இங்கு A மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாகிறான்.

முக்கிய வழக்கு:

Naga Sein Gale[1] - இவ்வழக்கிற்கு மேற்கண்ட எடுத்துக்காட்டு பொருந்தி வருகிறது. இவ்வழக்கில் குற்றவாளி தானே விருப்பப்பட்டு மது அருந்தியிருந்தான். தான் செய்யும் செயல் யாது என்பது அவனுக்குத் தெரிந்திருந்தது. இந்தச் சூழ்நிலையில் அவன் குடிபோதையில் இல்லாத

நேரத்தில் எவ்வாறு அவன் தெரிந்து செயல்படுகிறானோ அதே போல் அவன் குடிபோதையில் உள்ள போதும் தெரிந்து செயல்படுவதாகவே கொள்ள வேண்டும் என்று தீர்ப்பாயிற்று.

முடிவுரை:

தாமறியாமலோ, தன் விருப்பத்திற்கு விரோதமாகவோ குடிபோதையூட்டப்பட்டவர்களின் மாறுபட்ட மனநிலையைச் சட்டம் கவனிக்கிறது. குற்றமான செயலைச் செய்யும்பொழுது, அச்செயலின் தன்மையைத் தெரியாத அல்லது அச்செயல் தீங்கானது என்பதைத் தெரியாத மனநிலை இருந்திருக்க வேண்டும். ஊட்டப்பட்ட குடிபோதையின் அல்லது நஞ்சுப் பொருளின் மதிமயங்கிய நிலையின் பயனாய் இத்தகைய மனநிலை ஏற்பட்டிருந்தால் மட்டுமே, அவர்களை குற்றப் பொறுப்பிலிருந்து பிரிவுகள் 85 மற்றும் 86 விலக்குகின்றன.

(ஏ) சம்மதம் (அல்லது) இசைவு [Consent]

(பிரிவுகள் 89 முதல் 92 முடிய)

11. "Consent cannot be taken as a good defence in Criminal Law" - Discuss. ("சம்மதம் என்பதை குற்றவியல் சட்டத்தில் ஒரு சிறந்த எதிர்வாதமாக கொள்ள இயலாது" - விவாதிக்க.)

(அல்லது)

Consent is no defence under Criminal Law - Comment. (குற்றவியல் சட்டத்தில் இசைவு என்பது சிறந்த எதிர்வாதம் அல்ல - விமர்சிக்கவும்.)

(அல்லது)

Will the legal maxim "*volenti - non fit injuria*" be applicable to Indian Penal Code also? Discuss. ("இசைந்தோர்க்கு இழைப்பது தீங்காதல் இல்லை" என்னும் சட்ட முதுமொழி இந்திய தண்டனைச் சட்டத்துக்கும் பொருந்துமா? விவாதிக்கவும்.)

(அல்லது)

"He who consents suffers no injury" - Explain the applicability of this principle to criminal liability. ("சம்மதிப்பவனுக்கு தீங்கில்லை". குற்றவியல் பொறுப்புக்கு இக்கொள்கையின் பொருத்தத்தை விளக்குக.)

(அல்லது)

Discuss how far consent can be pleaded as defence in criminal cases. (குற்ற வழக்குகளில் சம்மதம் எந்த அளவிற்கு எதிர்வாதமாக எடுத்துரைக்கலாம் என்பதை விவாதி.)

(அல்லது)

1. 1934 12 Rang. 445

What is Consent? Explain the extent to which consent is recognised as good defence or justification for committing a crime. (சம்மதம் என்றால் என்ன? ஒரு குற்றத்தைப் புரிவதில் சம்மதம் என்பது சிறந்த எதிர்வாதமாக அல்லது நியாயப்படுத்துவதாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதின் அளாவுகையை விளக்குக.)

முன்னுரை:

இந்திய தண்டனைச் சட்டத்தில், 'சம்மதம்' (consent) என்ற எதிர்வாதம் சில கட்டுவரம்புகளுக்கு உட்பட்டே செயல்படுகிறது. சம்மதம் என்பது ஒருவரால் கொடுக்கப்பட்டிருப்பினும், அப்பொழுது அவரது நிலை, தன்மை, இடம் மற்றும் சூழ்நிலை இவைகளைக் கொண்டே எதிர்வாதத்தின் நிலைமையும் அமைகிறது. பெரும்பாலும் சம்மதம் என்பதை குற்றவியல் சட்டத்தில் ஒரு சிறந்த எதிர்வாதமாக கொள்ள இயலாது. ஏனெனில் இங்கு பலவற்றை நிரூபிக்க வேண்டிய கடப்பாடு குற்றம் சாட்டப்பட்டவனுக்கு ஏற்படுகிறது.

இருப்பினும், சம்மதத்துடன் செய்யப்பட்ட செயல்கள் எந்த அளவிற்கு குற்றப் பொறுப்பிலிருந்து விலக்கி வைக்கப்பட்டுள்ளன என்பது குறித்து இந்திய தண்டனைச் சட்டத்தின் 87 முதல் 89 வரையுள்ள பிரிவுகளிலும், மற்றும் 92-வது பிரிவிலும் கூறப்பட்டுள்ளன. அவற்றைப்பற்றி விளக்க முற்படும் முன் சம்மதம் என்றால் என்ன என்பது குறித்து அறிதல் அவசியம்.

சம்மதம் (Consent) - பிரிவு 90 கூறுவதாவது:

அச்சத்தினாலோ தப்பெண்ணத்தினாலோ கொடுக்கப்படுவதாகத் தெரியும் சம்மதம் (Consent known to be given under fear or misconception): தீங்கு ஏற்படும் என்ற அச்சத்தினால் அல்லது பொருண்மை பற்றிய தப்பெண்ணத்தினால் ஒருவரால் சம்மதம் கொடுக்கப்படுமானாலும், அத்தகைய அச்சம் அல்லது தப்பெண்ணத்தின் விளைவாக அச்சம்மதம் கொடுக்கப்படுவதாக அச்செயலைச் செய்பவர் அறிந்திருந்தாலும், அல்லது நம்புவதற்கு காரணம் கொண்டிருந்தாலும்; அல்லது

பித்துநிலையரின் சம்மதம் (Consent of insane person): புத்தி சுவாதீனம் இல்லாததால் அல்லது போதையால் எதற்குத் தாம் சம்மதம் கொடுக்கிறோமோ அதன் தன்மையையும் விளைவையும் புரிந்து கொள்ள இயலாதவராகவுள்ள ஒருவரால் அந்தச் சம்மதம் கொடுக்கப்படுமானால்; அல்லது

குழந்தையின் சம்மதம் (Consent of child): சூழலானது முரணானது எதையும் தோற்றுவித்தாலன்றி, பனிரெண்டு வயதுக்குட்பட்ட ஒருவரால் சம்மதம் கொடுக்கப்படுமானால்,

அது, **இந்திய தண்டனைச் சட்டத்தின் எந்தப் பிரிவிலும் கருதப்படும் ஒரு சம்மதமாகாது.**

பிரிவு 90 உணர்த்தும் பொருள்:

மேற்படி பிரிவு 90-லிருந்து 'சம்மதம்' என்பதற்கு எவ்வித வரையறையும் கொடுக்கப்படவில்லை என்பதை நாம் அறிகிறோம். அதில் 'சம்மதமாகாதது எது' என்பது பற்றியே விளக்கமளிக்கப்பட்டுள்ளது. எனவே மேற்கண்ட சூழ்நிலையின் அடிப்படையிலான சம்மதம் தவிர, பிற சூழலில் கொடுக்கப்படும் சம்மதத்தை, நாம் சம்மதம் என்று அனுமானிக்கலாம்.

முக்கிய வழக்குகள்:

R. v. Day [1] - எனும் வழக்கில் முரடன் ஒருவன் பிடியில் சிக்கித் தவிக்கும் குழந்தையொன்று தரும் சம்மதம், அச்சத்தினால் எழுவதாகும்; எனவே அது ஒரு சம்மதமாகாது என்று கூறப்பட்டு அம்முரடன் தண்டிக்கப்பட்டான்.

R. v. Nichol [2] - எனும் வழக்கில் ஒரு இசை ஆசிரியர், இசை கற்க வந்த ஒரு 16 வயது மாணவியிடம், உடலுறவு கொண்டால் நல்ல குரல் வளம் கிடைக்கும் என்று கூறி அவளுடன் உடலுறவு கொண்டான். இங்கு அந்த இசை ஆசிரியர் செய்வது யாது என்று அறியாமல் அவனுடைய செயலுக்கு அம்மாணவி இசைந்தாள். பிறகு அவள் உண்மை நிலையை அறிந்து வழக்கு தொடர்ந்த பொழுது, பொருண்மையை (fact) தவறாகக் கூறுவதன் மூலம் அந்த இசை ஆசிரியர் சம்மதம் பெற்றிருக்கிறான் என்றும், அவன் வன்புணர்ச்சிக் குற்றத்திற்கு ஆளாவான் என்றும் தீர்ப்பானது.

Poonai Fattemah[3] என்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவன், தன்னை பாம்பாட்டி என்றும், பாம்பு கடித்து இறந்தவர்களின் உடலிலிருந்து நஞ்சு இறக்கி தீங்கிலிருந்து காப்பாற்றும் மந்திர சக்தியுடையவன் என்றும் மற்றவர்களை நம்பவைத்து, அவர்களிடமிருந்து சம்மதம் பெறுகிறான். இந்த வழக்கில் பாம்பு கடியால் இறந்துவிட்டவர்கள் பாம்பாட்டிக்கு கொடுத்த சம்மதம், குற்றஞ் சாட்டப்பட்ட பாம்பாட்டிக்கு மந்திரத்தினால் நஞ்சு இறக்கும் சக்தி உண்டு என்ற பொருண்மையை (fact) தவறாகப் புரிந்துகொண்டு எழுந்ததாகையால், இறந்தவர்கள் கொடுத்தது சம்மதமாகாது என்றும், ஆகவே குற்றம் சாட்டப்பட்டவர் தண்டனைக்குரியவர் என்றும் தீர்ப்பு வழங்கப்பட்டது.

R. v. Shay[4] என்ற வழக்கில் மருத்துவர் ஒருவர் தன்னை மருத்துவப் பரிசோதனை செய்து கொண்டிருப்பதாக 42 வயதுடைய ஒரு பெண்மணி நம்பிக் கொண்டிருந்தாள். ஆனால் பிறகுதான் தெரிந்தது, அவளுடைய கற்பு பறிபோன விஷயம். தன்னை மருத்துவர் வன்புணர்ச்சி செய்து விட்டதாக வழக்கு தொடுத்தாள். வழக்கினை தீர விசாரித்த நீதிபதி, மருத்துவர் பெற்ற

1. 9 C. & P. 722
2. R. & R. 130
3. 1869 12 W.R. (Cr.) 7
4. 19 Cox. C.C. 76

இசைவு மோசடியானதாக இருந்தாலும், வன்புணர்ச்சி செய்த குற்றத்திற்கு ஆளாகமாட்டார் என்று தீர்ப்பளித்தார். ஏனெனில் 42 வயதுடைய மற்றும் புத்து சுவாதீனமுடைய பெண்மணிக்கு மருத்துவர் செய்வது மருத்துவ பரிசோதனையா அல்லது வன்புணர்ச்சியா என்பது தெரியாமலா இருக்கும்? ஆகவே மருத்துவரின் செயலுக்கு உட்கிடையான சம்மதமும், விருப்பமும் அப்பெண்மணிக்கு இருந்ததாக சட்டம் கொள்கிறது, என நீதிபதி மேலும் கூறினார்.

'சம்மதத்தை' ஒரு எதிர்வாதமாக பயன்படுத்தும் சூழ்நிலைகள் ("Consent' as a defence):

சம்மதத்துடன் செய்யப்படுகின்ற செயல்கள் எந்த அளவிற்கு மன்னிக்கப்படுகின்றன என்பது பற்றி 87 முதல் 89 வரையிலுள்ள பிரிவுகளிலும், 92-வது பிரிவிலும் கூறப்பட்டுள்ளன. அதாவது, இச்சூழ்நிலைகளில் 'சம்மதம்' என்பதை ஒரு எதிர்வாதமாகக் குற்றம் சட்டப்பட்டவர் பயன்படுத்தலாம். அப்பிரிவுகளையும், அவை உணர்த்தும் பொருளையும் பின்வருமாறு காண்போமா?

பிரிவு 87 கூறுவதாவது:

பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒரு நபருக்கு அவரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான சம்மதத்தின் பேரில் இழைக்கப்பட்ட தீங்கு, ஒரு குற்றமாகாது.

மேற்கண்ட விதிவிலக்கின் கீழ் இடம் பெற:

1) மரணம் அல்லது கொடுங்காயம் உண்டாக்க வேண்டும் என்ற கருத்து இருக்கக் கூடாது;

2) மரணம் அல்லது கொடுங்காயம் தன்னுடைய செயலால் உண்டாகும் என்பதை அறியாதிருக்க வேண்டும்;

3) சம்மதம் கொடுத்தவர் அத்தகு சம்மதத்தினால் தீங்கு ஏற்படக்கூடும் என்பதை அறிந்தவராக இருக்க வேண்டும்;

4) சம்மதம் அளிப்பவர் 18 வயதிற்கு மேற்பட்டிருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு:

A, B-யுடன் பொழுதுபோக்கிற்காக போடும் வாட்சண்டையில் A-வினால் B-க்கு காயம் உண்டாகிறது. இங்கு A குற்றம் எதுவும் புரியவில்லை வாட்சண்டையில் ஏற்படும் தீங்கை ஏற்றுக் கொள்ள இருவரும் சம்மதித்திருப்பது உட்கிடையாக உள்ளது. மேலும் A நேர்மையான முறையில் வாட்சண்டை போடும் பொழுதுதான் B-க்கு காயம் உண்டாக்கியுள்ளார். [தப்பாட்டம் (foul game) ஆடி காயம் விளைவித்தால், அங்கு சம்மதம் எனும் எதிர்வாதம் எடுபடாது; தண்டனை நிச்சயம்]

பிரிவு 87 உணர்த்தும் பொருள்:

இப்பிரிவு பொதுவாக, விளையாட்டுப் போட்டியில் பங்கேற்பவர் களுக்கு பாதுகாப்பு அளிக்கிறது. இப்பிரிவு **"இசைந்தோர்க்கிழைப்பது தீங்காதல் இல்லை" *(Volenti-non fit injuria)*** எனும் சட்ட மூதுரையின் அடிப்படையில் அமைந்ததாகும். இம்மூதுரை மேற்படி பிரிவிற்கு முழுவதும் பொருந்தாது. ஏனெனில் மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடனோ அல்லது அவ்வாறு தெரிந்தோ ஒருவர் செயல் ஏதேனும் புரிய மற்றவர் சம்மதம் அளித்திருப்பின், அதை ஒரு சம்மதமாக பிரிவு 87 ஏற்றுக்கொள்வதில்லை.

எனினும், சில ஆண்டுகளுக்கு முன்னர் கிரிகெட் விளையாட்டில் பந்தடி பட்டு நமது இந்திய வீரர் இராமன் லம்பா என்பவர் மரணமடைந்ததற்கு யாரையும் குற்றப் பொறுப்புக்கு சட்டம் ஆளாக்கவில்லை என்பது குறிப்பிடத்தகுந்தது. அங்கு தீங்கை எதிர்கொள்ள இராமன் லம்பா உட்கிடையாக சம்மதித்துள்ளார் என்றே சட்டம் கொண்டது. ஆனால் ஒருவரை விளையாட்டின் பொழுது கொல்ல வேண்டும் என்ற கருத்துடன் தப்பான ஆட்டம் ஆடி அவ்வாறு செய்வதை சட்டம் மன்னிப்பதில்லை. அதாவது, அங்கு சம்மதம் இருந்ததா இல்லையா என்பதை சட்டம் ஆராய்வதில்லை. அச்செயலைச் செய்தவர் மீது சட்டம் சற்றும் இரக்கம் கொள்ளாமல் தண்டிக்கிறது.

பிரிவு 88 கூறுவதாவது:

மரணம் விளைவிக்கும் கருத்து இல்லாமல் ஒருவரது நலனுக்காக அவருடைய வெளிப்படையான அல்லது உட்கிடையான சம்மதத்துடன், நல்லெண்ணத்தினால் செய்யப்படும் செயலால், தீங்கு விளைந்தால் அது குற்றமாகாது.

எடுத்துக்காட்டு :

வலியை அனுபவிக்கிற Z என்பவருக்கு ஒரு குறிப்பிட்ட அறுவை சிகிச்சை செய்தால், அது அவருக்கு மரணத்தை அநேகமாக விளைவிக்கலாம் என்று தெரிந்தே, ஆனால் Z-க்கு மரணம் விளைவிக்கும் கருத்தின்றி, நல்லெண்ணத்துடன் Z-ன் நலன் கருதி, A என்ற அறுவை மருத்துவர் Z-ன் சம்மதத்துடன் Z-க்கு அந்த அறுவை சிகிச்சை செய்கிறார். முடிவில் Z இறந்து விடுகிறார். எனினும் மேற்படி பிரிவு 88-ன்படி A குற்றம் எதுவும் செய்யவில்லை.

பிரிவ 87 மற்றும் பிரிவு 88 - வேறுபாடு:

பிரிவு 87-ம் மேற்படி பிரிவு 88-ம் ஒன்றுக்கொன்று இரண்டு விதத்தில் வேறுபடுகின்றது. முதலாவதாக, பிரிவு 88-ல் மரணத்தைத் தவிர வேறு எந்தத் தீங்கும் விளைவிக்கலாம். இரண்டாவதாக, சம்மதம் தருபவரது வயது பிரிவு 88-ல் குறிப்பிடப்படவில்லை. ஆனால் நாம் ஆரம்பத்தில் கண்ட பிரிவு

90-ன்படி, சம்மதம் தருபவரது வயது, பனிரெண்டோ அல்லது அதற்கு மேற்பட்டோ இருக்க வேண்டும்.

பிரிவு 88 உணர்த்தும் பொருள்:

மேற்படி பிரிவு 88, அறுவை சிகிச்சை செய்யும் மருத்துவர்களுக்கும், மாணவர்களுக்கு நேர்மையான முறையில் தண்டனை வழங்குகின்ற நல்லெண்ண ஆசிரியர்களுக்கும் பாதுகாப்பு அளிக்கிறது எனலாம். ஆனால் மருத்துவத் தேர்ச்சி பெறாதவர்கள் இப்பிரிவின் கீழ் விதிவிலக்குப் பெற முடியாது. ஏனெனில், பிரிவு 52-ல் வரையறுக்கப்பட்டுள்ள நல்லெண்ணத்துடன் அவர்கள் செயல்படுவததாகக் கொள்ள முடியாது.

முக்கிய வழக்கு:

Ghatga[1] என்ற வழக்கில் ஒரு தலைமை ஆசிரியர் பள்ளியில் ஒழுங்கை நிலைநாட்ட வகுப்பில் கலவரம் செய்து கொண்டிருந்த ஒரு மாணவருக்கு நல்லெண்ணத்தின் அடிப்படையில் உடற்காயம் விளையும்படி தண்டனை வழங்கினார். ஆனால் தலைமை ஆசிரியர் மேற்கண்ட பிரிவின்படி பாதுகாப்பு பெறுவதால், பிரிவு 323-ன் கீழ், தன்னிச்சையாக காயம் விளைவித்த குற்றத்திற்கு (Hurt) ஆளாக மாட்டார் என்று தீர்ப்பாகியது. மேலும் மாணவரின் சம்மதம் உட்கிடையாக பெறப்பட்டுள்ளது என்றும் முடிவானது.

மேற்படி வழக்கில் பள்ளியின் கட்டுப்பாடுகளுக்குட்பட்டும், ஒழுக்கமாகவும் ஒரு குழந்தை செயல்பட அக்குழந்தைக்கு மிதமான உடல் தண்டனை அளிக்கலாமென்றும், அதற்கு அக்குழந்தையின் **பெற்றோரின் அல்லது காப்பாளரின் சம்மதம்** உட்கிடையாக உள்ளது என்றும், அதுபோல் பனிரெண்டு வயதுக்கு மேற்பட்ட பள்ளிச் சிறுவர்கள் ஒழுங்கீனமாக நடந்து கொள்ளும் பொழுது, அவர்களைத் திருத்த மிதமான உடல் தண்டனை கொடுக்கலாமென்றும், அதற்கு **அவர்களது சம்மதம்** உட்கிடையாக பெறப்பட்டுள்ளது என்றும், நீதிபதிகள் கூறினர்.

பிரிவு 89 கூறுவதாவது:

பனிரெண்டு வயதிற்கு உட்பட்ட குழந்தை அல்லது புத்தி சுவாதீனமற்ற ஒருவரின் நலனுக்காக, அவர்களது காப்பாளரால் அல்லது அவருக்குச் சட்டப்பூர்வமாக பொறுப்பேற்றிருக்கும் மற்றொருவரால் அளிக்கப்படும் வெளிப்படையான அல்லது உட்கிடையான சம்மதத்தின் மூலம், நல்லெண்ணத்துடன் செய்யப்படும் எச்செயலும் குற்றமாகாது. ஆனால்,-

1. மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்து இருக்கக் கூடாது.

2. ஒரு செயல் மரணத்தை, அநேகமாக விளைவிக்கக் கூடும் அல்லது கொடுங்காயம் விளையக்கூடும் என்று அறிந்தே ஒருவர் அச்செயல் எதையும்

1. (1949) 51 Bom. L.R. 103

மரணம் அல்லது கொடுங் காயத்தைத் தடுத்தல் அல்லது கொடிய நோயை குணப்படுத்தும் நோக்கம் தவிர, வேறு ஏதேனும் தீய நோக்கத்திற்காக புரியக்கூடாது.

3. தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்தலானது அல்லது கொடுங்காயம் விளைவிக்க முயற்சி செய்தலானது, அது மரணம் அல்லது கொடுங்காயத்தைத் தடுக்கும், அல்லது கொடிய நோயைக் குணப்படுத்தும் நோக்கத்திற்காக மட்டுமே செய்யப்பட வேண்டுமேயொழிய, வேறு நோக்கத்திற்காக செய்யப்படக் கூடாது.

4. எந்த ஒரு குற்றத்தின் மீது மேற்படி பிரிவு 89-ன் கீழான விதிவிலக்கு இயங்காதோ, அந்த குற்றத்திற்கு உடந்தையாயிருக்கும் குற்றத்தின் மீதும் அவ்விதிவிலக்கு இயங்காது.

எடுத்துக்காட்டு:

A என்பவர் தன் குழந்தையின் நலனுக்காக தம் குழந்தையின் சம்மதமின்றி அதன் காலை எடுத்து விடுவதற்கான ஓர் அறுவை சிகிச்சைக்கு குழந்தையை உட்படுத்துகிறார். அவ்வறுவை சிகிச்சை குழந்தைக்கு அநேகமாக மரணத்தை விளைவிக்கக் கூடும் என்று அறிந்தே ஆனால் மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்து இல்லாமல் நல்லெண்ணத்துடன் செயல்படுகிறார். இங்கு A எக்குற்றமும் புரியவில்லை.

பிரிவு 91 கூறுவதாவது:

சம்மதம் கொடுப்பவருக்கு, அல்லது எவர் சார்பாகச் சம்மதம் கொடுக்கப்படுகிறதோ அவருக்கு விளைவிக்கப்படலாமெனக் கூடிய அல்லது விளைவிக்க கருத்து கொள்ளப்பட்டுள்ள அல்லது அநேகமாக விளையப்படலாம் எனத் தெரியக் கூடிய தீங்கு யாதொன்றின் சம்பந்தமில்லாமலேயே, தாமே குற்றங்களாக இருக்கும் செயல்களின் மீது 87, 88, 89-ஆம் பிரிவுகளிலுள்ள விதிவிலக்குகள் இயங்காது என்று **பிரிவு 91** கூறுகிறது.

அதாவது, சம்மதித்து ஒருவர் ஒரு தீங்கை ஏற்றுக் கொள்ளலாம். அவருக்கு விளையும் தீங்கு ஒரு புறமிருக்க, அச்செயலே சில சமயங்களில் ஒரு தனிப்பட்ட குற்றமாகிறது. அப்படிப்பட்ட சூழலில் அத்தீங்கிற்காக சம்மதம் அளிக்கப்பட்டிருந்தாலும் அச்செயல் தண்டனைக்குரியதாகிறது. அதற்கு 87, 88, 89 ஆகிய பிரிவுகளின் கீழான விதிவிலக்குகள் பொருந்தாது.

எடுத்துக்காட்டு :

கருவைக் கலைப்பது குற்றமான செயலாகும். (அக்கர்ப்பிணியின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு நல்லெண்ணத்துடன் அக்கருக் கலைப்புச் செயல் செய்யப்பட்டாலன்றி). இங்கு அக்கர்ப்பிணியோ அல்லது அவளது காப்பாளரோ அக்கருக் கலைப்பிற்கு சம்மதித்தாலும் கூட, அது குற்றமான

செயல்தான். கர்ப்பத்தைக் கலைக்கும் முயற்சியில், அக்கர்ப்பிணியின் உடலுக்கு ஏதாவது தீங்கு விளைந்தால் அது குற்றமாகாதிருக்கலாம். ஏனெனில், அதற்கு அவள் அல்லது அவளது காப்பாளர் சம்மதித்து உள்ளார்கள். ஆனால், கருவைக் கலைப்பதே ஒரு தனிப்பட்ட குற்றமாதலால், அக்கர்ப்பிணியின் அல்லது அவளது காப்பாளரின் சம்மதம் இருந்தாலும், அது ஒரு குற்றமேயாகும்.

பிரிவு 92 கூறுவதாவது:

சில சூழ்நிலைகளில், எவருடைய நன்மைக்காக ஒரு செயல் செய்யப்படுகிறதோ, அவருடைய சம்மதத்தைப் பெறுவது இயலாததாடலாம்; அல்லது சம்மதம் கொடுக்க வேண்டியவர், அவ்வாறு கொடுக்க திறனற்றவராகியிருக்கலாம்; மேலும் அவரது காப்பாளரின் சம்மதத்தைப் பெற முடியாத சூழலும் ஏற்பட்டிருக்கலாம். அச்சமயங்களில் சம்பந்தப்பட்டவரின் சம்மதம் இன்றியே அவருடைய நலனுக்காக நல்லெண்ணத்துடன் செய்யப்படும் செயல் எதுவும், அது அவருக்கு தீங்கு விளைவிக்கலாம் என்றாலும் கூட, ஒரு குற்றமாகாது.

ஆனால், இவ்வாறு ஒருவரின் சம்மதமின்றிச் செய்யப்படும் செயல்,

1. வேண்டுமென்றே கருத்துடன் அவருக்கு மரணத்தை விளைவிக்கும் செயலாக இருக்கக் கூடாது;

2. மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடும் என்று தெரிந்தே ஒருவர், அச்செயல் எதையும் மரணம் அல்லது கொடுங் காயத்தை தடுக்கும் அல்லது கொடிய நோயை குணப்படுத்தும் நோக்கத்தை தவிர, வேறு (தீய) நோக்கத்திற்காக செய்தல் கூடாது.

3. மரணத்தை அல்லது காயத்தைத் தடுக்கும் நோக்கத்தோடன்றி, வேறெந்த நோக்கத்திற்காகவும், தன்னிச்சையாக காயம் விளைவிக்கும் அல்லது அதற்கான முயற்சி செய்யும் செயல் எதுவும் செய்தல் கூடாது.

4. எந்த ஒரு குற்றத்தின் மீது மேற்படி பிரிவு 92-ன் கீழான விதிவிலக்கு இயங்காதோ, அந்தக் குற்றத்திற்கு உடந்தையாக இருக்கும் குற்றத்தின் மீதும் அவ்விதிவிலக்கு இயங்காது.

எடுத்துக்காட்டுகள் :

1. Z என்பவர் தம் குதிரையினின்று தூக்கி எறியப்பட்டு உணர்விழந்து விட்டார். A என்னும் அறுவை மருத்துவர், அவருக்கு மண்டையோட்டினைத் துளையிட்டு சிகிச்சை செய்ய வேண்டியிருக்கிறது என்ற முடிவுக்கு வருகிறார். Z-ன் மரணத்தை விளைவிக்கும் கருத்தின்றி ஆனால் நல்லெண்ணத்தோடு, Z-ன் நலனுக்காக, Z தாமே நிதானித்து உணரும் சக்தியைப் பெறுவதற்கு முன்பு, மண்டையோட்டினைத் துளைத்து A அறுவை சிகிச்சை செய்கிறார். மேற்படி செயலால் Z-க்கு மரணம் ஏற்பட்டு

விட்டாலும், அதற்கு A பொறுப்பாக மாட்டார். அவர் பிரிவு 92-ன்படி குற்றம் ஏதும் செய்யவில்லை.

2. Z என்பவரை புலி ஒன்று தூக்கிச் சென்று விடுகிறது. புலியை சுட்டு Z-ஐக் காப்பாற்ற முனைகிறார், A எனும் அவரது நண்பர். இங்கு அவ்வாறு சுடுவதினால் அது Z-ஐயும் அநேகமாகக் கொன்று விடலாம் என்று அறிந்தே, ஆனால் Z-ஐக் கொல்லும் கருத்து ஏதுமின்றி, Z-ன் நலன் கருதி, நல்லெண்ணத்தோடு, A அந்தப் புலியைப் பார்த்துச் சுடுகிறார். A-வின் துப்பாக்கிக் குண்டு Z-க்கு மரண காயத்தை ஏற்படுத்துகிறது. எனினும், A குற்றம் எதுவும் செய்யவில்லை.

3. உடனடியாக அறுவை சிகிச்சை செய்தாலன்றி அநேகமாக மரணம் ஏற்படக் கூடிய நிலையில் இருக்கும் விபத்துக்கு ஆளான ஒரு குழந்தையை A என்னும் ஓர் அறுவை மருத்துவர் பார்க்கிறார். அக்குழந்தையின் காப்பாளரிடம் அனுமதி கோர நேரமில்லை. அக்குழந்தை எவ்வளவோ கெஞ்சிக் கேட்டும், அதைப் பொருட்படுத்தாமல் குழந்தையின் நலனைக் கருதி நல்லெண்ணத்துடன் A அறுவை சிகிச்சை செய்கிறார். இதனால் ஒருவேளை அக்குழந்தைக்கு மரணம் ஏற்பட்டு விட்டாலும், A குற்றம் எதுவும் செய்யவில்லை.

4. தீப்பற்றி எரிகிற ஒரு வீட்டின் மாடியில் Z என்கிற குழந்தையுடன் A என்பவர் இருக்கிறார். கீழே உள்ளவர்கள் ஒரு சமுக்காளத்தை விரித்துப் பிடிக்கிறார்கள். மேலிருந்து விழுந்தால் குழந்தை அநேகமாக இறக்கக் கூடும் என்று அறிந்தும், ஆனால் குழந்தையைக் கொல்லும் கருத்தில்லாமலும், குழந்தையின் நலனைக் கருதி, நல்லெண்ணத்தோடு மாடியிலிருந்து A. அக்குழந்தையை கீழே போடுகிறார். இங்கு அவ்வாறு விழுந்ததினால் அக்குழந்தை இறந்தாலும்கூட A குற்றம் எதுவும் செய்யவில்லை.

முடிவுரை:

மேற்கண்ட சட்டப் பிரிவுகளை தொகுத்துப்பார்த்தால், பிரிவு 90, எவை சம்மதமாகாது என்று சம்மதத்தை எதிர்மறையாக வரையறுக்கிறது. 87 முதல் 89 வரையிலான பிரிவுகளும், 92-வது பிரிவும், சம்மதத்தை ஒரு எதிர்வாதமாக பயன்படுத்தும் சூழலை விளக்குகின்றன. பிரிவு 91 ஒரு செயல் தாமே ஒரு குற்றமாக இருக்கும் பொழுது, அங்கு அச்செயலுக்கு சம்மதம் அளிக்கப்பட்டிருந்தாலும் அது ஒரு குற்றமே என்று கூறுகிறது. இந்த அளவிற்கு சம்மதம் என்பது ஒரு எதிர்வாதமாக இந்திய தண்டனைச் சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. மேற்படி பிரிவுகளில் பல நுணுக்கமான நிபந்தனைகள் இருப்பதால் 'சம்மதம்' என்பதை ஒரு சிறந்த எதிர்வாதமாக பயன்படுத்த இயலாது என்பது உண்மைதான். 'சம்மதம்' எனும் எதிர்வாதம் சற்று இடறினாலும், குற்றப் பொறுப்புக்கு ஆளாக வேண்டியதுதான்.

(அய்) வற்புறுத்தல் (அல்லது) வலுக்கட்டாயம் [Compulsion (or) Duress] (பிரிவு 94)

12. Compulsion - Write short notes. (வற்புறுத்தல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Duress - Write short notes. (வலுக்கட்டாயம் சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

***Duress per mines* - Explain this latin maxim.**

(அல்லது)

Discuss 'Compulsion' as a general defence. (வற்புறுத்தல் எனும் பொது எதிர்வாதத்தை விவாதிக்க.)

வற்புறுத்தல் அல்லது வலுக்கட்டாயம் - விளக்கம்:

ஒரு குற்றத்தைச் செய்யுமாறு ஒருவர் மற்றொருவரை அச்சுறுத்துகிறார். அச்சுறுத்தப் பெற்றவர் அக்குற்றச் செயலைச் செய்கின்றார். அச்சுறுத்தலுக்கு அஞ்சி அவர் செய்த செயலைச் சட்டம் மன்னித்து விடுகிறதா?

ஒரு வீட்டில் நுழைந்து திருடியவன், "என்னை இவ்வாறு திருடும்படி இன்னொருவர் அச்சுறுத்தி வற்புறுத்தினார். திருடவில்லையெனில் என் கையை வெட்டி விடுவதாகப் பயமுறுத்தினார். இதற்கு அஞ்சியே நான் திருடினேன்" என்று கூறினால், இதை வைத்து, அவனைக் குற்றப் பொறுப்பிலிருந்து சட்டம் விலக்கலாமா? விலக்கினால் விளைவு என்ன ஆகும்? இந்த வாதத்தைச் சட்டம் ஏற்பதென்றால், குற்றவாளிகள் அனைவருமே இத்தகைய சமாதானங்களைக் கூற முற்படுவார்கள். குற்றம் இழைக்க விரும்புபவர்கள் ஒருவருக்கொருவர் உதவியளிக்கும் முறையில் மறைவாகத் திட்டமிட்டுக் குற்றங்களைச் செய்வதற்கு சட்டமே வழிவகுத்துக் கொடுக்கும் நிலை ஏற்பட்டுவிடும். எனவே, பிறர் அச்சுறுத்தலுக்கு அஞ்சித் தீங்கு இழைக்கப்பட்டாலும் அது குற்றமேயாகும். அக்குற்றத்தைச் செய்தவர் தண்டனைக்கு ஆளாகின்றார்.

ஆனால், இந்திய தண்டனைச் சட்டமானது ஒரே ஒரு நிலையில் மட்டும், **பிரிவு 94**-ன் கீழ் மேற்படி சூழ்நிலைக்குச் சற்று பரிவு காட்டுகிறது.

பிரிவு 94 என்ன கூறுகிறது?

"ஒரு செயலைச் செய்யாவிட்டால், தமக்கு உடனடியாக மரணம் ஏற்படும் என்னும் அச்சத்தை உண்டாக்கக் கூடிய அச்சுறுத்தல்கள் மூலம் அவர் எச்செயலையும் செய்யக் கட்டாயப்படுத்தப்பட்டால், அச்செயல் எதுவும் குற்றமாகாது; ஆனால் கொலையும், அரசுக்கெதிரான போர்ச் செயலும் எந்நிலையிலும் கூடாது."

பிரிவு 94 உணர்த்தும் பொருள்:

உடனடியாக மரணம் விளையலாம் என்ற அச்சத்தில் உள்ளவர், அந்த நிலையில் இழைக்கும் தீங்குகளைக் குற்றமாகக் கொள்ளுவதில்லை. ஒரு தீங்கைச் செய்யவில்லையெனில் சில மணி நேரங்கழித்து அல்லது சில நாட்கள் கழித்துத் தம்மை அச்சுறுத்தியவர் கொன்று விடலாம் என்ற பயம் தலைவலியிலிருந்து பாதுகாப்பளிப்பது இல்லை. அந்தத் தீங்கைச் செய்யவில்லையெனில், அங்கேயே, அப்பொழுதே, தம்மை மற்றவர் கொன்றுவிடுவார் என்ற மரண பயம் அவருக்கு உண்மையிலேயே இருந்து, உடன் மரணம் உற்றுவிடும் என்ற உண்மையான அச்சத்தால், ஒருவர் செய்யும் செயல்களைச் சட்டம் குற்றங்களாகக் கொள்வதில்லை.

உடன் மரணம் உற்றுவிடும் என்ற உண்மையான அச்ச நிலையிலும் இருவகைக் குற்றங்கள் இழைக்கப்படுவதைச் சட்டம் பொறுப்பதில்லை. ஒன்று கொலை, மற்றொன்று, அரசுக்கெதிரான குற்றங்கள். கொலை 302-ஆம் பிரிவுப்படியும், இந்திய அரசுக்கெதிரான போர்ச் செயலில் ஈடுபடுவது, 121-ஆம் பிரிவுப் படியும், கொடுங்குற்றங்கள்.

பிரிவு 94-ன் கீழான இரு விளக்கங்கள் (Explanations):

விளக்கம் 1: ஒருவர் தாமே விரும்பியோ அல்லது அடிக்கப்படுவோம் என்ற காரணத்தினாலோ கூட்டுக் கொள்ளையடிக்கும் கும்பலுடன் அவர்களது இயல்பைத் தெரிந்துகொண்டே சேர்ந்து கொண்டு, அக்கும்பலின் வற்புறுத்தலின் பேரில் குற்றமாகக் கூடிய செயல் ஏதேனும் செய்தால், அவர் மேற்படி பிரிவு 94-ன் கீழான விதிவிலக்கு பெற உரியவர் ஆகார்.

விளக்கம் 2: ஒருவர், கூட்டுக் கொள்ளையடிக்கும் கும்பலால் பிடிக்கப்பட்டு, உடனடி மரணம் ஏற்படும் என்னும் அச்சுறுத்தல் மூலம் சட்டப்படி குற்றமாகிய ஒன்றைச் செய்யுமாறு வற்புறுத்தப்பட்டு, அவர் அதன்படி எச்செயலையாவது செய்தால், அவர் பிரிவு 94-ன் கீழான விதிவிலக்கைப் பெற உரியவராவார். எடுத்துக்காட்டாக, இரும்புப் பெட்டிகளைத் திறக்கத் தெரிந்த ஒரு தொழிலாளியைக் கூட்டுக் கொள்ளையர்கள் பிடித்து வந்து, ஒரு பெட்டியைத் திறக்கச் சொல்லி வற்புறுத்துகின்றனர். திறக்கவில்லையெனில் உடனே கொன்றுவிடுவதாகக் கத்தியைக் காட்டி அச்சுறுத்துகின்றனர். இவ்வாறு உடன் மரண அச்சத்தால், அத்தொழிலாளி பெட்டியைத் திறந்து கொடுக்கின்றார். இப்பொழுது அந்தத் தொழிலாளியின் செயலைக் குற்றமெனச் சட்டம் கொள்ளுவதில்லை. அவர் பிரிவு 94-ன் கீழான விதிவிலக்கின் பயனைப் பெற உரியவராவார்.

சில வழக்குகள்:

Queen Empress v. Lalif Khan[1] - இவ்வழக்கில் தலைமைக் காவல்

1. (1898) I.L.R. 20 Bom. 394 (DB) referred in A.I.R. Manual, Vol. 27, 4th edn., p. 862

அதிகாரியின் உத்திரவின் பேரில் அவருக்கு கீழ்ப் பணிபுரியும் காவலதிகாரி ஒருவர், குற்றஞ்சாட்டப்பட்ட ஒருவரிடமிருந்து ஒப்புதலுரையை (confession) பெறுவதற்காக, அவனை சித்ரவதை செய்கிறார். தம்மை காவலதிகாரி சித்ரவதை செய்து காயம் விளைவித்ததாக அக்குற்றம் சாட்டப்பட்டவன் நீதிமன்றத்தில் கூறினான். அக்காவலதிகாரி தன்னுடைய மேலதிகாரியின் வற்புறுத்தலினால்தான், தாம் அவ்வாறு செய்ததாக எதிர்வாதம் புரிந்தார். ஆனால் இதை நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில், இங்கு அவ்வாறு மிரட்டி ஒப்புதலுரை வாங்கவில்லையானால் உடனடி மரணம் ஏற்படும் என்ற அச்சத்தை அம்மேலதிகாரி அக்காவலதிகாரிக்கு ஏற்படுத்தியிருக்கவில்லை.

Queen Empress v. Maganlal & Molilal[1] எனும் வழக்கில் ஒருவர், தனக்கு பொருள்ரீதியான மற்றும் தனிப்பட்ட இழப்பு ஏதும் ஏற்படாமலிருப்பதற்காக, காவலதிகாரி ஒருவருக்கு கைக்கூலி (bribe) அளித்தார். ஆனால் அக்காவலதிகாரி கைக்கூலி பெற்றதற்காக பிடிபட்டார். கைக்கூலி கொடுத்தவர் வற்புறுத்தியதின் பேரில்தான், தாம் கைக்கூலி பெற்றதாக எதிர்வாதம் புரிந்தார். ஆனால் இதை நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளவில்லை. ஏனெனில், இங்கு தனக்கு எவ்வித இழப்பும் ஏற்படாமலிருக்க கைக்கூலி பெறாவிட்டால், உடனடி மரணம் ஏற்படும் என்று, கைக்கூலி கொடுத்தவர் அக்காவலதிகாரியை அச்சுறுத்தியிருக்கவில்லை.

(ஒ) அற்பமான விஷயங்கள் (அல்லது) அற்பமான செயல்கள் [Trifles (or) Trivial Acts]

(பிரிவு 95)

13. *De menimis non curat lex* - Write short notes. (சட்டத்திற்கில்லை அற்பத்தில் அக்கறை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

சட்டத்திற்கு எண்ணற்ற பணிகள் உள்ளன. அது எத்தனையோ வழிகளில் செயலுறுகின்றது. இப்படி இருக்கையில், சட்டம் அற்பமான (அதாவது சிறிய) விஷயங்களில் ஆர்வம் கொண்டிருந்தால், அரிதான மற்றும் முக்கியமான விஷயங்கள் தேங்க ஆரம்பித்துவிடும். பிறகு நீதியின் நிலைமை சீர்குலையலாம். ஆகவே சட்டம் அற்பமான விஷயங்களில் அக்கறை காட்டுவதில்லை. இந்த வகையில் அற்பமான செயல்களை குற்றமெனக் கொள்வதில்லை. இதைத்தான் **பிரிவு 95** பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 95 கூறுவதாவது:

சாதாரண அறிவும், சுபாவமும் உடைய எவரும் ஒரு தீங்கைப் பற்றிக்

1. 1890 I.L.R. 14 Bom. 115 at pp. 131-32 referred in A.I.R. Manual, vol. 27, 4th edn., p. 832

குறை கூறமாட்டார் என்னும் அளவுக்கு அத்தீங்கானது அற்பமானதாக இருக்கும்போது, செயல் எதுவும் அத்தகைய தீங்கு எதையேனும் விளைவிக்கிறது அல்லது விளைவிக்க கருத்து கொண்டுச் செய்யப்படுகிறது அல்லது அநேகமாக விளைவிக்கக்கூடும் என்று தெரிந்து செய்யப்படுகிறது என்னும் காரணத்தால், அது ஒரு குற்றமாகாது.

அதாவது, சாதாரண மனநிலையில் உள்ளவர்கள் அற்பமானதென்று கருதும் தீங்குகளை சட்டம் குற்றங்களாகக் கொள்ளுவதில்லை.

எடுத்துக்காட்டுகள்:

ஒருவரின் சம்மதமின்றி அவரை மற்றொருவர் தொடுவதே 'தாக்குதல்' என்ற குற்றமாகிவிடுகிறது. இரு சகோதரர்களுக்குள் வாக்குவாதம் முற்றிய நிலையில் ஒருவர் மற்றொருவர் மீது கை வைத்து சிறிது தள்ளுகிறார். உடனே தள்ளியவர் மீது 'தாக்குதல்' எனும் குற்றஞ்சாட்டி, குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடுப்பதா? கூட்டமாக பேருந்தில் ஏறும்பொழுது, ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிக் கொண்டுதான் ஏறுகிறோம். எல்லோரும் 'தாக்குதல்' குற்றத்திற்குள்ளாவதா?

அது போல் ஒருவர் சம்மதமின்றி மற்றொருவர் பொருளை எடுத்துக்கொள்வது 'திருட்டுக்"குற்றமாகும். ஒருவத் தன் பேனாவில் மை தீர்ந்துவிட்டதால், எதிரில் எழுதிக் கொண்டிருப்பவரின் மைப்புட்டியிலிருந்து மை ஊற்றிக் கொள்வதால், அவரை 'திருட்டுக்' குற்றத்திற்கு உள்ளாக்க முடியுமா? முடியாது. ஏனெனில், இவை போன்ற செயல்கள் குறித்துச் சாதாரண மனநிலையில் (அதாவது சாதாரண அறிவும், சுபாவமும் கொண்டவர்கள்) உள்ளவர்கள் எவரும் குற்ற வழக்கிட மாட்டார். எனவே, இந்த அற்பச் செய்கைகளைக் குற்றங்களாகச் சட்டம் கொள்ளுவதில்லை.

முக்கிய வழக்குகள்:

Kasya bin Ravji[1] - என்ற வழக்கில் அரசாங்கத்திற்கு சொந்தமான ஒரு பாழ் நிலத்தில் வளர்ந்திருந்த ஒரு மரத்திலிருந்து விலை பெறாத சருகுகளைப் பறித்துச் சென்றதாக ஒருவன் குற்றம் சாட்டப்பட்டான். அவனது செயல் பிரிவு 95-க்கு உட்பட்டது என்றும், ஆதலால் அவன் குற்றவாளியல்லன் என்றும் தீர்ப்பாயிற்று.

South Indian Railway Co. v. Rama Krishna[2] என்ற வழக்கில் வாதி, தான் தவறான இரயில் டிக்கெட்டுடன் பயணம் செய்ததாகக் குற்றம் சாட்டப்பட்டதால், தன் செல்வாக்கிற்கு பங்கம் ஏற்பட்டுவிட்டதாக இரயில் நிறுவனத்தின் மீது வழக்குத் தொடர்ந்தார். அதில் பிரிவு 95-ன்படி செல்வாக்கிற்கு ஏற்படுத்தப்பட்ட பங்கம், இங்கு தண்டனைக்குரிய ஒரு குற்றமாவதில்லை என்று கூறி, வாதியின் வழக்கை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

1. (1865) 5 B.H.C. (Cr.C.) 35
2. (1889) 13 Mad. 34

Rupen Deol Bajaj v. K.P.S. Gill[1] - **இது, நாடறிந்த பரபரப்பான தொரு சமீபத்திய வழக்காகும்.** இவ்வழக்கில் திருமதி பஜாஜ் என்பவர் இந்திய ஆட்சிப் பணியின் (I.A.S.) மூத்த அதிகாரி ஆவார். K.P.S. கில் என்பவர் பஞ்சாப் காவல்துறையின் தலைமை இயக்குநர் (Director General of Police) ஆவார். திருமதி பஜாஜ் உடன் பணிபுரியும் சக ஊழியர் ஒருவரது வீட்டில் விருந்தொன்றுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்கு திருமதி பஜாஜ்-ம் அழைக்கப்பட்டிருந்தார். அப்பொழுது, K.P.S.கில்-ம் வந்திருந்தார். அவர், திருமதி பஜாஜ்-ஐ அழைத்து தனக்கு அருகே உள்ள நாற்காலியில் அமரச் சொன்னார். அவரது அழைப்பை ஏற்று, அந்நாற்காலியில் திருமதி பஜாஜ் உட்கார முயன்ற பொழுது, K.P.S.கில் அந்நாற்காலியை தனக்கு இன்னும் மிக நெருக்கமாக இழுத்து விட்டார். இதனால் வியப்படைந்த திருமதி பஜாஜ், மீண்டும் நாற்காலியை அதன் பழைய இடத்திற்கு கொண்டு சென்று, அதில் மீண்டும் அமர முயற்சித்தார். அப்பொழுது, K.P.S.கில் மீண்டும் அந்நாற்காலியை தனக்கு மிக நெருக்கமாக இழுத்து விட்டார். ஏதோ தவறாக நடப்பதை உணர்ந்த திருமதி பஜாஜ், அவரை விட்டு அகன்று வேறு இடத்தில் சென்று அமர்ந்தார். 10 நிமிடங்கள் கழித்து, K.P.S.கில் தனது நாற்காலியிலிருந்து எழுந்து, திருமதி பஜாஜ் அமர்ந்திருந்த இடத்தருகே வந்து நின்று கொண்டார். தன்னுடன் வருமாறு தனது கைவிரல்களைக் கொண்டு அசிங்கமான முறையில் சைகை செய்து காட்டினார். அதற்கு ஆட்சேபணை தெரிவித்து, தன்னை விட்டு அகலுமாறு திருமதி பஜாஜ், K.P.S.கில்-ஐ கேட்டுக் கொண்டார். ஆனால் K.P.S.கில் அந்த இடத்தை விட்டு நகரவில்லை. மீண்டும் அந்த சைகையை செய்து காண்பித்து, தன்னுடன் வருமாறு அதிகார தோரணையில் கட்டளையிட்டார். மேலும் அவரை நாற்காலியிலிருந்து எழ விடாமல் தடுத்தார். எனவே, நாற்காலியை சுமார் 1½ அடிக்கு பின்னுக்குத் தள்ளி, அதிலிருந்து எழுந்தார். அப்பொழுது, **K.P.S.கில், திருமதி பஜாஜ்-ன் பின்புறத்தில் (பிட்டத்தில்) தன் கையால் தட்டினார்.** இச்செயல் அங்கு குழுமியிருந்த அனைத்து விருந்தாளிகள் மற்றும் பெண்கள் முன்னிலையில் நிகழ்ந்தது. திருமதி பஜாஜ்-க்கு பெருத்த அவமானம் ஏற்பட்டு விட்டது. எனவே K.P.S.கில் மீது குற்ற முறையீடு செய்து, ஒரு முதல் தகவல் அறிக்கையை (First Information Report) பதிவு செய்து விட்டார்.

இந்த முதல் தகவல் அறிக்கையை இரத்து செய்யும்படி K.P.S.கில் உயர் நீதிமன்றத்தில் மனுச் செய்தார். உயர் நீதிமன்றமும், முதல் தகவல் அறிக்கையில் K.P.S.கில் மீது கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் எதுவும் புலன் கொள்ளத் தக்கவை ஆகாது என்றும், திருமதி பஜாஜ்-க்கு K.P.S.-ஆல் செய்யப்பட்டதாகக் கூறப்படும் தீங்கின் தன்மை பிரிவு 95-ன்படி அற்பமானதாகும் என்றும், எனவே K.P.S.கில் குற்றம் ஏதும் புரியவில்லை என்றும் கூறி, அந்த அறிக்கையை இரத்து செய்ய உத்திரவிட்டது.

இதை எதிர்த்து, திருமதி பஜாஜ் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு

1. A.I.R. 1996 S.C. 309; 1996 Cri. L.J. 381

செய்தார். உயர் நீதிமன்றத்தின் கருத்தை உச்ச நீதிமன்றம் ஏற்றுக்கொள்ள மறுத்து விட்டது. மாநில காவல்துறையில் மிக உயர் பதவியில் இருக்கும் ஒரு அதிகாரியான K.P.S.கில், பிற அதிகாரிகளின் முன்னிலையில், திருமதி பஜாஜ்-யிடம், அவரது ஆட்சேபணைக்குப் பின்னிட்டும், தொடர்ந்து ஒழுக்கக் கேடான மற்றும் அநாகரிகமான முறையில் நடந்து கொண்டதை, பிரிவு 95-ன்படி அற்பமான செயல் என்று கூறிவிட முடியாது என்றும், பெண்ணை அற்பமாக நினைத்து அவர்களது கற்புநெறிக்கு களங்கம் கற்பிக்கும் அற்பமானவர்களின் குற்றச் செயல்களை, எந்தச் சூழ்நிலையிலும் அற்பமென இந்நீதிமன்றம் ஏற்றுக்கொள்ளாது, என உச்ச நீதிமன்றம் திட்டவட்டமாகக் கூறியது.

(ஓ) தற்காப்புரிமை [Right of Private Defence]
(பிரிவுகள் 96 முதல் 106 முடிய)

14. Explain the law relating to the right of private defence and state the limitations to the same. (தற்காப்புரிமை தொடர்பான சட்டத்தினை விளக்கி, அதன் மீதான வரம்புகளை குறிப்பிடுக.)

(அல்லது)

State as to how far the right of private defence exists in respect of the following: (a) Body; (b) Property. (கீழ்க்கண்டவற்றைப் பொறுத்து தற்காப்புரிமை எவ்வாறு உள்ளது என்பதை விளக்குக: அ) உடல்; ஆ) சொத்து.)

(அல்லது)

Right of private defence - Write short notes. (தற்காப்புரிமை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஒருவருக்கு தன் உடலையும் (body) சொத்தையும் (property) காப்பாற்றிக் கொள்ள சட்டம் உரிமை அளிக்கிறது. மேலும் பிறரது உடலையும் சொத்தையும் காப்பதற்கும் உரிமை அளிக்கிறது. ஆனால் இந்த உரிமையை உபயோகிக்க இரண்டு வரம்புகள் உள்ளன.

தற்காப்புரிமைக்கு இரண்டு வரம்புகள்:

1. தற்காப்பு நடவடிக்கை எடுக்கத் தேவையில்லாத சூழ்நிலையில் செய்யப்படும் எந்த குற்றச் செயலும் குற்றமாகவே கருதப்படும் (எ.கா) தன்னைக் காத்துக் கொள்வதாகக் கூறி பின்வாங்கி ஓடுகிற திருடனை விரட்டி அடித்தால் அது தற்காப்புரிமை ஆகாது

2. தாக்குதலைத் தானே வலிய வருவித்துக் கொண்டு அதற்கு தற்காப்புரிமை தேட முடியாது. (எ.கா) சட்ட விரோதமான கூட்டத் திலருடன் சேர்ந்து கொண்டு அடிபட்டுவிட்டு தற்காப்புரிமை என்ற பெயரில் திருப்பி அடித்தால் அதற்கு இந்த எதிர்வாதம் பொருந்தாது.

தற்காப்புரிமை - இந்திய தண்டனைச் சட்டத்தின் வகைமுறைகள்:

இந்திய தண்டனைச் சட்டத்தின் 96 முதல் 106 வரையுள்ள பிரிவுகள், தற்காப்புரிமையை ஒரு எதிர்வாதமாகப் பயன்படுத்தும் சூழலை விவரிக்கின்றன. அவற்றில் பிரிவு 96 தற்காப்புரிமை குறித்த பொதுக் கோட்பாட்டைக் கூறுகின்றது.

பிரிவு 96 கூறுவதாவது:

"தற்காப்புரிமையை பயன்படுத்தும் பொழுது செய்யப்படுகின்ற செயல் எதுவும், ஒரு குற்றமாகாது."

Onkarnath Singh v. State of U.P.[1] எனும் வழக்கில் தற்காப்புரிமை என்பது தன்னைக் காத்துக் கொள்ளும் ஒரு உரிமையே தவிர, பழிவாங்குவதற்காகவோ அல்லது தண்டிப்பதற்காகவோ அளிக்கப்பட்டுள்ள ஒரு உரிமையாகாது, என உச்ச நீதிமன்றத்தால் விளக்கமளிக்கப்பட்டுள்ளது.

நான்கு தலைப்புகளின் கீழ் வகைப்பாடு:

மேற்கண்ட பிரிவு 96 போக, மீதமுள்ள பிரிவுகளான 97 முதல் 106 வரையிலானவற்றை பின்வரும் நான்கு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

1. உடல் தற்காப்புரிமை (Right of private defence body)
2. சொத்து தற்காப்புரிமை (Right of private defence of property)
3. தற்காப்புரிமை என்ற எதிர்வாதம் ஏற்றுக் கொள்ளவியலாத செயல்கள் (Acts against which there is no right of private defence)
4. தற்காப்புரிமை, குற்றம் விளைவிப்பவருக்கு மரணம் விளைவிக்கும் அளவிற்கு நீடிக்கும் தருணங்கள் (The right of private defence extends to causing to death of the offender)

இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக பின்வருமாறு காண்போமா?

1. உடல் தற்காப்புரிமை (Right of private defence of body):

உடல் தற்காப்புரிமை குறித்து 97 முதல் 102 வரையுள்ள பிரிவுகளும் மற்றும் 106-வது பிரிவும் பின்வருமாறு விளக்குகின்றன.

பிரிவு 97 கூறுவதாவது:

பிரிவு 99[2]-ல் கூறப்பட்டுள்ள வரம்புகளுக்குட்பட்டு, ஒவ்வொரு நபரும்,-

---

1. A.I.R. 1974 S.C. 1550
2. எச்செயல்களைப் பொறுத்து தற்காப்புரிமை இல்லை என்பது பற்றிக் கூறுகிறது. விரிவாக பின்னர் காண உள்ளோம். - ஆசிரியர்.

முதலாவதாக, தனது உடலையும், பிற நபரின் உடலையும், மனித உடலை பாதிக்கின்ற வகையில் செய்யப்படும் குற்றம் எதிலிருந்தும் காத்துக் கொள்ள உரிமை படைத்தவர்.[1]

இரண்டாவதாக, தனது அல்லது பிற நபரின் அசையும் அல்லது அசையாச் சொத்தை திருட்டு, கொள்ளை, அழிம்பு (mischief) அல்லது குற்றமுறு அத்துமீறல் ஆகியவற்றின் வரையறைக்குள் வருகின்ற ஒரு குற்றச் செயலிலிருந்து அல்லது அச்செயலைப் புரிய முயற்சிப்பதிலிருந்து காத்துக் கொள்ள உரிமை படைத்தவர். [2]

Pandu's Case[3] - இவ்வழக்கில் ஒரு மரமானது உண்மையில் குற்றம் சாட்டப்பட்டவரைச் சார்ந்தது. ஆனால் அவருடைய வாடகைதாரர்களில் ஒருவர், மரம் தன்னைச் சார்ந்தது என தவறாக எண்ணிக் கொண்டிருந்தார். ஒரு நாள் குற்றம் சாட்டப்பட்ட வீட்டு உரிமையாளர் மரத்தை வெட்டி, அதன் கட்டைகளை அங்கிருந்து கொண்டு செல்ல முயன்றார். வாடகைதாரர் இம்முயற்சியை எதிர்த்தார். குற்றம் சாட்டப்பட்டவர் வாடகைதாரரை தாக்கினார். ஆனால் குற்றம் சாட்டப்பட்டவர் நீதிமன்றத்தில் விடுதலை செய்யப்பட்டார். ஏனெனில் மரம் வீட்டு உரிமையாளரைச் சார்ந்தது. மேலும் அவர் தன்னையும் தன் சொத்தாகிய மரத்தையும் காத்துக் கொள்ள வாடகைதாரரை அடித்ததால் இது குற்றமாகாது எனவும், தற்காப்புரிமை பேணப்பட்டுள்ளது எனவும், நீதிபதிகளால் கூறப்பட்டது.

Ram Ratan v. State of Bihar[4] - இவ்வழக்கில் A என்பவனின் கால்நடைகள் B என்பவனின் நிலத்தினுள் சென்று மேய்ந்தது. எனவே B அக்கால்நடைகளை தனது பண்ணையில் கொண்டு அடைத்து விட்டான். இதை அறிந்த A, தனது கால்நடைகளை B-யிடமிருந்து மீட்க கையில் ஆயுதங்களுடன் ஆட்களை திரட்டிக் கொண்டு வந்தான். இதை அறிந்த B, தன்னை A-யும் அவனது ஆட்களும் கையிலுள்ள ஆயுதங்களால் எப்படியும் தாக்கக்கூடும் என்ற அச்சத்தில், தன்னைக் காத்துக் கொள்ள B, தனது ஆட்களுடன் சேர்ந்து கொண்டு A-யையும் அவனது ஆட்களையும் தாக்குகின்றான். இதில் A-யின் ஆள் ஒருவனும் இறந்து போய்விடுகின்றான். இது தற்காப்பிற்காக செய்யப்பட்ட செயல் என்று கூறி உச்ச நீதிமன்றம் B-யையும், அவனது ஆட்களையும் விடுதலை செய்தது.

State of Punjab v. Karnail Singh[5] இதில் இறந்து போனவனின் முதுகில் குண்டு பாய்ந்திருந்தது. இது அவன் திரும்பி ஓடிப் போய்க் கொண்டிருக்கும் பொழுது, சுடப்பட்டதைக் காண்பிக்கிறது என்று கூறி,

1. இப்பத்திதான் உடல் தற்காப்புரிமை குறித்து கூறுகிறது.
2. இப்பத்தி சொத்து தற்காப்புரிமை குறித்துக் கூறுகிறது. இதனை பின்னர் விரிவாகக் காண உள்ளோம்.
3. 23 S.C. 704
4. A.I.R. 1965 S.C. 926
5. A.I.R. 1993 S.C. 278

சட்டவலின், தற்காப்புரிமை என்ற எதிர்வாதத்தை உச்ச நீதிமன்றம் நிராகரித்து, அவனுக்கு ஆயுள் தண்டனை விதித்தது.

இந்தியா, இங்கிலாந்து - சட்ட வேறுபாடு:

பிரிவு 97-ல் கூறப்பட்டுள்ள உடற்காப்புரிமை, இங்கிலாந்து நாட்டு சட்டத்தின் உடற்காப்புரிமையை விட விரிவான பொருளுடையதாகும். மற்றவரின் உடலுக்கோ அல்லது சொத்துக்கோ தீங்கு விளைவதைத் தடுக்க ஒரு அந்நியர் கூட தற்காப்புரிமையை பயன்படுத்தலாம் என்று மேற்கண்ட பிரிவு கூறுகிறது. ஆனால் இங்கிலாந்தில் மேற்கண்டவாறு தற்காப்புரிமையை பயன்படுத்த வேண்டுமெனில் கணவன்-மனைவி, காப்பாளர்-காப்பிலுள்ளோர், தாய்-மகன், தலைவர்-பணியாளர் போன்ற உறவு இருக்க வேண்டும். இதைக் கீழ்க்கண்ட வழக்கு விவரிக்கும்.

Crown v. Rose[1] - இங்கிலாந்தில் நடந்த இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட ஒருவன் தன் தந்தை, தன் தாயின் கழுத்தை வெட்ட முற்படுவதாக நம்பிக்கொண்டு, தந்தையை சுட்டுக் கொன்று விடுகிறான். தாய்-மகன் என்ற உறவு இருப்பதால் தற்காப்புரிமையை தன் தாய்க்காக பயன்படுத்தியது சரியே என இங்கிலாந்து சட்டப்படி முடிவு செய்யப்பட்டது. இங்கு உறவல்லாத ஒரு அந்நியர் தற்காப்புரிமையை பயன்படுத்தி இருப்பின், இங்கிலாந்து நாட்டுச் சட்டப்படி அவன் தண்டனைக்குள்ளாவான்.

பிரிவு 98 கூறுவதாவது:

இளமை, புரிந்து கொள்ளும் பக்குவமின்மை, புத்தி சுவாதீனமின்மை அல்லது போதையின் காரணமாகவோ அல்லது நல்லெண்ணம் எதனின் காரணமாகவோ ஒருவர் புரியும் குற்றச் செயலை குற்றமாக கருத இயலாவிட்டாலும், அந்தச் செயல் ஒரு குற்றமாக இருந்தால் என்ன தற்காப்புரிமையை ஒவ்வொருவரும் பெற்றிருப்பாரோ, அந்தச் செயலைப் பொறுத்தும், அதே தற்காப்புரிமையை பெற்றிருப்பார்.

எடுத்துக்காட்டுகள்:

1. பித்துநிலையின் பாதிப்பில் Z என்பவர் A என்பவரைக் கொல்ல முயல்கிறார். Z ஒரு குற்றத்தையும் செய்யவில்லை. ஆனால் Z புத்தி சுவாதீனமுடையவராக இருந்தால், A என்ன தற்காப்புரிமையைப் பெற்றிருப்பாரோ, அதே தற்காப்புரிமையைப் பெற்றிருப்பார்.

2. A என்பவர், சட்டப்படி நுழைய தமக்கு உரிமை உள்ள வீடொன்றில் இரவில் நுழைகிறார். அவரை Z என்பவர், வீட்டில் கன்னமிட வந்தவர் என்று நினைத்து கெட்ட எண்ணம் எதுவுமின்றி A-யைத் தாக்குகிறார். இங்கு Z மேற்படி தட்பெண்ணத்தோடு A-யைத் தாக்குவதானால்

1. 1884 15 Cox 540

குற்றம் எதுவும் செய்யவில்லை. ஆனால் Z அந்தத் தப்பெண்ணத்தின்படி செயற்படாமலிருந்தால், என்ன தற்காப்புரிமையைத் தாம் பெற்றிருப்பாரோ அதே தற்காப்புரிமையை Z-ஐப் பொறுத்தமட்டில் A பெற்றிருப்பார்.

மேற்படி பிரிவு 98 உணர்த்தும் உட்பொருள் யாதெனில், ஒருவர் தற்காப்புரிமையைப் பயன்படுத்த மேற்கண்ட உடல் தன்மைகளும், தப்பெண்ணமும் ஒரு தடையாக இருக்காது என்பதேயாகும்.

பிரிவு 99 கூறுவதாவது:

பிரிவு 99, எச்செயல்களைப் பொறுத்து தற்காப்புரிமை இல்லை (Acts against which there is no right of private defence) என்பது குறித்து கூறுகிறது. அதன்படி,

1. மரணம் அல்லது கொடுங்காயம் ஏற்படுமென்னும் அச்சத்தை நியாயமாக விளைவிக்காத ஒரு செயலானது,–

(i) ஒரு பொது ஊழியரால் நல்லெண்ணத்துடன் செய்யப்பட்டால் அல்லது செய்ய முயற்சி செய்யப்பட்டால்; அல்லது

(ii) அச்செயலானது ஒரு பொது ஊழியரின் உத்தரவின்படி செய்யப்பட்டால் அல்லது செய்ய முயற்சி செய்யப்பட்டால், அந்த பொது ஊழியரின் செயலோ அல்லது பொது ஊழியரின் உத்தரவோ சட்டப்படி நியாயமானதாக இல்லையென்றாலுங்கூட அச்செயலைப் பொறுத்தமட்டில் தற்காப்புரிமையை பயன்படுத்த முடியாது.

Kanwar Singh v. Delhi Administration[1] - இவ்வழக்கில் K என்பவர் தனக்குச் சொந்தமான கால்நடையை பொது இடங்களில் திரிய விட்டிருந்தார். அதனை தில்லி மாநகராட்சி ஊழியர்கள் பிடித்துக் கொண்டு செல்ல வந்தனர். தகவலறிந்து அங்கு வந்த K, அவ்வாறு பிடித்துக் கொண்டு செல்வதை எதிர்த்து, மாநகராட்சி ஊழியர்களை அடித்து காயப்படுத்தினார். இங்கு பொது ஊழியர்களின் சட்டப்படியான கடமைகளுக்கு எதிராக எவ்வித தற்காப்புரிமையும் கிடையாது என்று கூறி, K-யின் தண்டனையை உச்ச நீதிமன்றம் ஊர்ஜிதம் செய்தது.

Kesho Ram v. Delhi Administration[2] - இவ்வழக்கிலும், மேற்கண்ட வழக்கின் நிலைதான். இவ்வழக்கில், K என்பவரிடமிருந்து பால் வரி பாக்கியை வசூலிக்கவும், அவர் வரி பாக்கி செலுத்தாத பட்சத்தில் கறவை மாட்டை பறிமுதல் செய்யவும் தில்லி மாநகராட்சி ஆய்வாளர்கள் வந்தனர். K-க்கு வரி கேட்பு அறிவிப்பு (demand notice) ஏதும் தராமலேயே, அக்கறவை மாட்டை அவர்கள் பறிமுதல் செய்தனர். அதனை K எதிர்த்து, ஆய்வாளர்களில் ஒருவரின் மூக்கில் குத்து விட்டார். இதனால் அவரது [illegible]க்கு

1. A.I.R. 1965 S.C. 871
2. A.I.R. 1974 S.C. 1158; 1974 Cri. L.J. 814

எலும்பு உடைந்துவிட்டது. அறிவிப்பு ஏதும் தராமல் கறவை மாட்டை பறிமுதல் செய்ததால், தற்காப்புரிமையை பயன்படுத்தியதாக K எதிர்வாதம் புரிந்தார். இதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாமல் பின்வருமாறு கூறியது. அதன்படி, மாநகராட்சி ஆய்வாளர்கள் பொது ஊழியர்களாவர். மாநகராட்சி ஆணையர், அந்த ஆய்வாளர்களிடம் ஒப்படைத்த அதிகாரங்களின்படி, அவர்கள் நல்லெண்ணத்துடன் செயல்பட்டுள்ளனர். எனவே, பிரிவு 99-ன்படி, K-க்கு தற்காப்புரிமை ஏதும் கிடையாது.

2. எச்சமயத்தில் ஒருவன் தனது தற்காப்புரிமையை மேற்கண்ட பிரிவைப் பொறுத்து இழப்பதில்லையென்றால்,-

(i) ஒரு பொது ஊழியரால் அச்செயல் செய்யப்படுகிறது என்பதை அறியாமல் ஒருவன் தற்காப்புரிமையை பயன்படுத்தியிருந்தால் அது குற்றமாகாது.

(ii) ஒரு பொது ஊழியரின் உத்திரவுப்படி செயல் நடைபெறுகிறது என்பதை அறியாமல் தற்காப்புரிமையைப் பயன்படுத்தியிருந்தால், அது குற்றமாகாது.

3. காக்கும் நோக்கத்திற்கு அவசியமாக, எந்த அளவிற்கு தீங்கு உண்டாக்கலாமோ அதைவிட அதிகமான தீங்கை உண்டாக்கும் அளவிற்கு தற்காப்புரிமை எச்சந்தர்ப்பத்திலும் நீடிக்காது.

இதன் உட்பொருள் யாதெனில், பாதுகாப்பிற்கு தேவையான அளவைவிட அதிகமாக தீங்கு விளைவிக்கும் வகையில் தற்காப்புரிமையைப் பயன்படுத்தலாகாது என்பதே ஆகும். பின்வரும் வழக்கு இதை விவரிக்கும்.

Emperor v. Mammun[1] - இவ்வழக்கில் குற்றம் சாட்டப் பட்டவர்களாகிய அய்வர், தங்கள் வயலில் இரவில் நெற்கதிர்களை அறுத்துக் கொண்டிருந்த ஒருவனை தடிகளைக் கொண்டு தாக்கினர். இதில் அவன் மண்டையோடு உடைந்து மரணமடைந்தான். அந்த அய்வர் மீதும் கொலைக் குற்றம் சாட்டப்பட்டதற்குத் தங்கள் சொத்து காப்புரிமையைப் பயன் படுத்தியதாக வாதிட்டனர். ஆனால் பிரிவு 99 (3)-ன் கீழ் அந்த அய்வரும் தற்காப்புக்குத் தேவையான அளவிற்கு மீறி தீங்கு விளைவித்திருக்கிறார்கள் என்று தீர்ப்பு கூறப்பட்டது.

பிரிவு 100 கூறுவதாவது:

உடலைத் தற்காத்துக் கொள்ளும் உரிமை மரணம் விளைவிக்கும் அளவுக்கு எப்பொழுது நீடிக்கிறது (When the right of private defence of the body extends to causing death) என்பது குறித்து **பிரிவு 100** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

உடலைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டு மரணமோ அல்லது

1. 18 Cri. L.J. 367

வேறு தீங்கு ஏதேனும் எதிரிக்கு விளைந்தாலோ, அது பின்வரும் சூழ்நிலைகளில் எனில் அதைக் குற்றமாக கருத முடியாது. தற்காப்புரிமை இங்கு நீடிக்கும். அவை,

1. சம்பந்தப்பட்டவரை எதிரி தாக்கி மரணம் (death) விளைவிக்கலாம் என்ற அச்சத்தை உண்டாக்கத் தக்கதான ஒரு தாக்குதலின் (assault) பொழுது,

2. சம்பந்தப்பட்டவரை எதிரி தாக்கி கொடுங்காயம் (grievous hurt) விளைவிக்கலாம் என்ற அச்சத்தை உண்டாக்கத் தக்கதான ஒரு தாக்குதலின் பொழுது,

3. வன்புணர்ச்சி (rape) செய்யும் கருத்துடன் தாக்கும் பொழுது,

4. இயற்கைக்கு மாறான காம இச்சையைத் (unnatural lust) திருப்தி செய்து கொள்ளும் கருத்துடன் தாக்கும் பொழுது.

5. ஆட்கவரும் (kidnapping) அல்லது கடத்தும் (abduction) கருத்துடன் தாக்கும்பொழுது,

6. சட்டப்பூர்வமான பொது அதிகாரிகளை அணுகி உதவி (aid) பெறமுடியாத நிலையில், ஒருவரை முறையின்றி அடைத்து வைக்கும் கருத்துடன் தாக்கும்பொழுது.

மேலே குறிப்பிட்ட ஆறுவகைத் தாக்குதல்களில் ஏதேனும் ஒன்றிற்கு உள்ளானால், தற்காப்புக்காக அவ்வாறு தாக்குபவரைக் கொல்லவும், அல்லது எவ்விதமான உடற்காயத்தையும் விளைவிக்கலாம். இச்செயல் மேற்படி பிரிவு 100-ன்படி ஒரு குற்றமாகாது.

முக்கிய வழக்குகள்:

Gurulingappa[1] என்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட இருவரை, ஆயுதம் தாங்கிய சிலர் கூட்டமாக வந்து கொல்லப் போவதாக தெரிவித்தனர். குற்றம் சாட்டப்பட்ட இருவரும் ஓடிச்சென்று அடுக்களையில் பதுங்கினர். அக்கூட்டம் அவர்களைப் பின்தொடர்ந்து வந்து, அடுக்களைக் கதவை உடைத்து உள்ளே சென்று அவர்களைத் தாக்கியது. தாக்கியவர்களில் ஒருவரைக் குற்றம் சாட்டப்பட்டவர்கள், தம் உயிருக்காகப் போராடிக் கொண்டிருக்கும் பொழுது கொன்று விடுகின்றனர். இங்கு உடல் தற்காப்புரிமை பயன்படுத்தப்பட்டிருப்பதால், குற்றம் சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்பட்டனர். இது பிரிவு 100(1)-க்கு விளக்கம் தரும் வகையில் அமைந்துள்ளது.

Viswanath v. State of U.P.[2] - மேற்கண்ட 100-வது பிரிவின் உட்பிரிவு (5)-னை விளக்கக்கூடிய வகையில் இவ்வழக்கு அமைந்துள்ளது.

1. 23 Bom. L.R. 817
2. A.I.R. 1960 S.C. 67

இதில் V-யின் சகோதரியை அவளது கணவன் ஆட்கடத்தும் எண்ணத்துடன் தாக்கியபொழுது, தன் சகோதரியைக் காக்க V அவளது கணவனை கத்தியால் குத்தினாள். அவன் மரணமடைந்தான். இதில் V மேற்கண்ட உட்பிரிவின் படியிலான சூழ்நிலையின் பொழுது தற்காப்புரிமையை பயன்படுத்தியதால் அதை குற்றமாகக் கருத முடியாது, எனத் தீர்ப்பாகியது.

Amjad Khan v. State[1] என்ற வழக்கில் காட்னி என்ற இடத்தில் சிந்திக்களுக்கும் முஸ்லீம்களுக்கும் இடையே இனக்கலவரம் மூண்டது. இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவனும், அவனது சகோதரனும் முஸ்லீம்கள். இவர்கள் இருவரும், மேற்படி இடத்தில் அருகருகே கடை வைத்து வியாபாரம் செய்து வந்தனர். மேலும் அவர்களது வீடுகளும் கடைக்கு அருகிலேயே உள்ளன. இனக் கலவரத்தின்பொழுது குற்றம் சாட்டப்பட்டவனின் சகோதரனின் கடையை ஒரு கும்பல் சூறையாடியது. பின்னர் அது குற்றம் சாட்டப்பட்டவனின் கடையையும் சூறையாட எண்ணி கதவைத் தாக்கியது. அப்பொழுது குற்றம் சாட்டப்பட்டவன், தனது கடைக்கு அருகிலிருந்த வீட்டிலிருந்து ஒரு தடுப்புச்சுவரின் ஓட்டை வழியாக அக்கூட்டத்தை நோக்கிச் சுட்டான். அதில் சிந்தி இனத்தவர் ஒருவர் மாண்டு போனார். உயர் நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவனுக்கு கொலைக் குற்றத்திற்கான தண்டனை அளித்தாலும், மேல்முறையீட்டில் உச்ச நீதிமன்றம் பிரிவு 97, 99, 100 மற்றும் 102-ன்படி அவனை விடுதலை செய்தது. முக்கியமாக, சம்பவம் நடந்த சமயத்தில், பிரிவு 100 (6)-ன்படி சட்டப்பூர்வமான பொது அதிகாரிகளான காவல்துறையினரின் உதவியை நாட முடியாத சூழ்நிலையில் குற்றம் சாட்டப்பட்டவன் இருந்ததை உச்ச நீதிமன்றம் கருத்தில் கொண்டது. மேலும் அவனுடைய மற்றும் அவனது குடும்பத்தினருடைய உயிருக்கும் உடலுக்கும் ஊறு நேரலாம் என்ற அவனது நியாயமான அச்சத்தையும் வழக்கின் பொருண்மையிலிருந்து உச்ச நீதிமன்றம் அறிந்து கொண்டு அவனை விடுதலை செய்தது.

பிரிவு 101 கூறுவதாவது:

பிரிவு 100-ல் கூறப்பட்டுள்ள தற்காப்புரிமை எப்பொழுது மரணத்தை தவிர வேறு தீங்கு எதையும் உண்டாக்குமளவுக்கு நீடிக்கும் (When such[1] right extends to causing any harm other than death) என்பது குறித்து **பிரிவு 101** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

சம்பந்தப்பட்ட குற்றச் செயல், பிரிவு 100-ல் விவரிக்கப்பட்டுள்ள ஆறு வகைகளில் ஏதொன்றின் கீழும் வரவில்லையானால், உடலைத் தற்காத்துக் கொள்ளும் உரிமை, அவ்வாறு தாக்குபவருக்கு தன்னிச்சையாக (voluntarily) மரணத்தை விளைவிக்கும் அளவுக்கு நீடிக்காது; ஆனால் தாக்குபவருக்கு மரணத்தைத் தவிர வேறு எந்தத் தீங்கையும் விளைவிக்கும் அளவிற்கு பிரிவு 99-ல் கூறப்பட்ட வரம்புகளுக்கு உட்பட்டு நீடிக்கவே செய்யும்.

1. A.I.R. 1952 S.C. 165
2. right under Section 100

பிரிவு 102 கூறுவதாவது:

உடல் தற்காப்புரிமை தொடங்கும் மற்றும் தொடர்ந்திருக்கும் காலத்தைப் (commencement and continuance of the right of private defence of the body) பற்றி பிரிவு 102 பின்வருமாறு விளக்குகிறது. அதன்படி,

உடலுக்கு அபாயம் நேரப் போகிறது என்ற நியாயமான அச்சம் எழுகின்ற உடனேயே, உடலைப் பொறுத்து தற்காப்புரிமை தொடங்குகிறது. அத்தகு அச்சம் தொடர்ந்து இருந்து வரும் வரை தற்காப்புரிமையும் தொடர்ந்திருக்கும்.

மேற்படி பிரிவு 102-ன்படி, மற்றவரால் தன் உடலுக்கு அபாயம் விளையுமென்று அவர் கொள்ளும் அச்சம் நியாயமானதாக (reasonable apprehension) இருக்க வேண்டும். அபாயம் ஏற்படலாம் என்று கற்பனை அல்லது ஊகம் செய்து கொண்டு, தற்காப்புரிமையைப் பயன்படுத்தலாகாது.

முக்கிய வழக்குகள்:

Deo Narain v. State of U.P.[1] என்ற வழக்கில் குற்றம் சாட்டப்பட்ட A என்பவரை, B என்பவர் தடியால் அடித்தார். அதற்கு பதிலடியாக தன்னை தற்காத்துக் கொள்ளும் பொருட்டு, A ஒரு ஈட்டியால் B-யின் மார்பில் குத்தினார். B இறந்து போனார். இவ்வழக்கினை மேல்முறையீட்டின் பொழுது விசாரித்த உச்ச நீதிமன்றம், குற்றம் சாட்டப்பட்டவனின் செயல், பிரிவு 100-ன்படி, தற்காப்புரிமையின் பாற்பட்டதே என்று தீர்ப்பு வழங்கி அவனை விடுதலை செய்தது. ஏனெனில், A-யை மேற்படி B தடியால் அடித்தவுடனே, B மீண்டும் தாக்கக்கூடும் என்ற நியாயமான அச்சம் A-க்கு ஏற்பட்டுள்ளது. எனவே B தாக்கிய அந்த நிமிடத்திலிருந்து தற்காப் புரிமையும் தொடங்கி விட்டது. மேலும் B தனது கையில் தடி வைத்திருந்ததால், அந்த அச்சம் தொடர்ந்தது; இதனால் A-யின் தற்காப் புரிமையும் தொடர்ந்தது. அவ்வாறு தொடர்ந்த நேரத்தில் A, மேற்படி B-யைக் குத்திக் கொன்றது, பிரிவு 102-ன்படி தற்காப்பிற்காக எழுந்த செயலே என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்தியது.

Kala Singh[2] எனும் வழக்கில் A என்பவன் மிகுந்த வலிமையுடைய முரடன். முன்பே, ஒருவனைக் கொன்றவன். ஒரு நாள் அவன் B என்பவனிடம் சண்டைக்கு வந்தான். B-யை கீழே தள்ளி கழுத்தைப் பிடித்து நெறித்தான். B மிகவும் மெலிந்தவன். இப்படி சண்டை நடந்து கொண்டிருக்கையில், B, A-யின் பிடியிலிருந்து சற்று விடுபட்டு, ஒரு சிறு கோடாரி எடுத்து A-யின் தலையில் அடித்தான். மூன்று தினங்கள் கழித்து A மரணம் அடைந்தான். மரணமடைந்த A-யின் செயல்கள் அனைத்தும்

1. 1973 II S.C.J. 137
2. (1933) 34 Cri. L.J. 1175

கொடூரமானவை என்றும், B-க்குத் தான் கொலை செய்யப்பட்டு விடுவோம் என்ற நியாயமான அச்சத்தை A-யின் செயல்கள் உண்டு செய்துள்ளன என்றும், அதனால் B தற்காப்புரிமையுடன் செயல்பட்டான் என்றும் கூறி, நீதிமன்றம் B-யை விடுதலை செய்தது.

பிரிவு 106[1] கூறுவதாவது:

நிரபராதி ஒருவருக்குத் தீங்கு நேரிடும் நிலை ஏற்படும் போது உயிராபத்தான தாக்குதலுக்கு எதிரான தற்காப்புரிமை (Right of private defence against a deadly assault when there is risk of harm to innocent person) குறித்து பிரிவு 106 பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

மரணம் ஏற்படும் என்றும் அச்சத்தை நியாயமாக உண்டாக்குகிற ஒரு தாக்குதலுக்கெதிராகத் தற்காத்துக் கொள்ளும் தற்காப்புரிமையைப் பயன்படுத்தும் பொழுது, நிரபராதியான ஒருவருக்குத் தீங்கு விளைவிக்கும் ஆபத்தை ஏற்படுத்தாமல் பயன் தரும் வகையில் அந்த உரிமையைப் பயன்படுத்த முடியாத நிலையில் தற்காத்துக் கொள்பவர் இருந்தால், அவரது தற்காப்புரிமை, அந்த ஆபத்தை விளைவிக்கும் அளவிற்கு நீடிக்கிறது.

மேற்படி பிரிவு 106 உணர்த்தும் பொருள் யாதெனில், மரணம் ஏற்படும் என்னும் அச்சம் உண்டாக்கக் கூடிய தாக்குதலுக்கு எதிராக தன்னை தற்காத்துக் கொள்ளும் தற்காப்புரிமையைப் பயன்படுத்தும் போது, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் நிரபராதி (சபடமற்ற அப்பாவி) ஒருவருக்கு தீங்கு விளைவித்துவிட்டால், அது ஒரு குற்றமாகாது. இந்நிலையை பின்வரும் எடுத்துக்காட்டு மேலும் தெளிவாக்கும்.

எடுத்துக்காட்டு:

A என்பவர், அவரைக் கொலை செய்ய முயல்கின்ற ஒரு கும்பலால் தாக்கப்படுகிறார். அக்கும்பலின் மீது துப்பாக்கிப் பிரயோகம் செய்யாமல், பயன் தரும் வகையில் அவர் தனது தற்காப்புரிமையை பயன்படுத்த முடியாது மற்றும் அந்தக் கும்பலில் கலந்திருக்கும் சிறு குழந்தைகளுக்கு தீங்கு ஏற்படுத்தும் ஆபத்தில்லாமலும் அவர் சுட முடியாது. அவ்வாறு சுடுவதினால் குழந்தைகள் எவருக்கேனும் A தீங்கு விளைவித்தாலும், அவர் குற்றம் எதுவும் செய்தவர் ஆகார்.

முக்கிய வழக்கு:

Yogendra Morarji v. State of Gujarat[2] - இவ்வழக்கில்

1. பிரிவுகள் 103, 104 மற்றும் 105 ஆகியவை சொத்து தற்காப்புரிமை குறித்து கூறுகின்றன. எனவே, அவற்றை இங்கு இடைநீக்கிவிட்டு, உடல் தற்காப்புரிமையின் மற்றொரு பிரிவாகிய 106-ஐ இங்கு காண்கிறோம்.
2. A.I.R. 1980 S.C. 669 : 1480 Cr. L.J. 459

தொழிலாளர்கள் A-வை வட்டமிட்டு தங்கள் கூலித் தொகையை உடனே கொடுக்கும்படி அச்சுறுத்தினர். தொழிலாளர்கள் தங்கள் வேலையை ஒழுங்காக செய்யாததால் A கூலித் தொகையை கொடுக்க மறுத்தார். இறுதியில், அவர்களால் தனக்கு மரணம் சம்பவிக்கலாம் என்ற அச்சத்தினால் A அக்கூட்டத்தினரைப் பார்த்து சுடுகிறார். இதனால் ஒரு தொழிலாளி மரணமடைகிறான். இதில் A தன்னைக் காத்துக் கொள்ள வேறு வழி இல்லாத நிலையில் சுட்டதால், A குற்றம் எதுவும் புரியவில்லை எனத் தீர்ப்பானது.

2. சொத்து தற்காப்புரிமை (Right of private defence of property):

சொத்து தற்காப்புரிமையைப் பற்றி 97 (இரண்டாம் பத்தி), 99, 103, 104, 105 ஆகிய பிரிவுகள் பின்வருமாறு கூறுகின்றன.

பிரிவு 97-ன் இரண்டாவது பத்தி கூறுவதாவது:

தனது அல்லது பிற நபரின் அசையும் அல்லது அசையாச் சொத்தை திருட்டு, கொள்ளை, அழிம்பு அல்லது குற்றமுறு அத்துமீறல் ஆகியவற்றின் வரையறைக்குள் வருகின்ற ஒரு குற்றச் செயலிலிருந்து அல்லது அச்செயலைப் புரிய முயற்சிப்பதிலிருந்து காத்துக் கொள்ள ஒவ்வொரு நபரும் உரிமை படைத்தவர். ஆனால் இது பிரிவு 99-ல் கூறப்பட்டுள்ள வரம்புகளுக்குட் பட்டு இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டு:

திருடன் ஒருவனைப் பிடிக்க காவலர் ஒருவர் ஒரு வீட்டினுள் இரவில் நுழைகிறார். அவ்வீட்டின் உரிமையாளர், காவலரை திருடன் என தவறாக நினைத்து நன்றாக அடித்து விடுகிறார். இங்கு உரிமையாளர், எக்குற்றத்தையும் புரியவில்லை. ஏனெனில், அவர் சொத்து தற்காப்புரிமையை பயன்படுத்தியுள்ளார்.

பிரிவு 99 கூறுவதாவது:

இப்பிரிவை நாம் ஏற்கனவே உடல் தற்காப்புரிமை எனும் தலைப்பின் கீழ் விரிவாகக் கண்டுள்ளோம். அதில் கூறப்பட்டுள்ள சூழ்நிலைகளில் எப்படி ஒருவருக்கு உடல் தற்காப்புரிமை கிடைப்பதில்லையோ, அதே போன்று சொத்து தற்காப்புரிமையும் கிடைக்காது.

பிரிவு 103 கூறுவதாவது:

சொத்து தற்காப்புரிமை எப்பொழுது மரணத்தை விளைவிக்கும் அளவுக்கு நீடிக்கும் (When the right of private defence of property extends to causing death) என்பது குறித்து **பிரிவு 103** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

சொத்தைப் பொறுத்த தற்காப்புரிமையானது, அவ்வுரிமையை

பயன்படுத்த வாய்ப்பளிக்கும் குற்றம், பின்வரும் சூழ்நிலைகளில் ஏதாவதொன்றாக இருக்குமேயானால், தீங்கிழைப்பவருக்கு தம்மிச்சையாக மரணத்தை அல்லது வேறு தீங்கு எதனையும் விளைவிக்கும் அளவுக்கு நீடிக்கும். ஆனால் இது பிரிவு 99-ல் கூறப்பட்டுள்ள வரம்புகளுக்குட் பட்டிருக்க வேண்டும். அத்தகு குற்றங்கள்,-

1. கொள்ளை

2. இரவில் கன்னமிடுதல்

3. மனிதக் குடியிருப்புக்காக, அல்லது பொருளின் பாதுகாப்பிற்காகப் பயன்படுத்தப்படும் இடமாக உள்ள கட்டிடம், கூடாரம் அல்லது கலம் எதற்கும் தீயிட்டு அழிம்பு செய்தல்

4. அத்தகைய தற்காப்புரிமையைப் பயன்படுத்தாவிட்டால், விளைவு மரணமாகவோ, கொடுங் காயமாகவோ இருக்கும் என்ற அச்சத்தை நியாயமாக உண்டாக்கக் கூடிய சூழ்நிலையில் செய்யப்படும் திருட்டு, அழிம்பு அல்லது வீட்டினுள் அத்துமீறி நுழைதல்.

பிரிவு 104 கூறுவதாவது:

பிரிவு 103-ல் கூறப்பட்டுள்ள தற்காப்புரிமை அப்பொழுது மரணத்தைத் தவிர வேறு தீங்கு எதையும் உண்டாக்குமளவிற்கு நீடிக்கும் (When such[1] right extends to causing any harm other than death) என்பது குறித்து பின்வருமாறு பிரிவு 104 கூறுகிறது. அதன்படி,

சம்பந்தப்பட்ட குற்றச் செயல் அல்லது அதன் முயற்சி பிரிவு 103-ல் விவரிக்கப்பட்டுள்ள நான்கு வகையின் கீழ் வராத திருட்டு, அழிம்பு அல்லது அத்துமீறல் குற்றமாக இருக்குமானால், அந்த உரிமை தன்னிச்சையாக மரணத்தை உண்டாக்குமளவுக்கு நீடிக்காது. ஆனால் தீங்கிழைப்பவருக்கு மரணத்தைத் தவிர வேறு தீங்கு எதையேனும் தம்மிச்சையாக உண்டாக்குமளவிற்கு பிரிவு 99-ல் சொல்லப்பட்டிருக்கும் வரம்புகளுக்கு உட்பட்டு, நீடிக்கவே செய்யும்.

முக்கிய வழக்கு:

King Emperor v. Aiyya Anna Samy Aiyangar[2] என்ற சென்னை வழக்கில், மகாஜன சபா ஒன்றின் பொருளாளர் ஒருவர், குற்றம் சாட்டப்பட்டவர் வசம் உள்ள நிலத்திலிருந்து தங்களது சபாவிற்கு சேர வேண்டிய நெல்லை எடுப்பதற்கு முயன்றார். அப்பொழுது குற்றம் சாட்டப்பட்டவர் தனக்கு சொந்தமான நெல்லைத்தான் அவர் எடுக்கிறார், என நினைத்துக் கொண்டு, அவரை அடித்து காயப்படுத்திவிடுகிறார்.

1. right under Section 103
2. I.L.R. 25 Mad. 624

இங்கு நீதிமன்றம் குற்றம் சாட்டப்பட்டவருக்கு சொத்து தற்காப்புரிமை இருந்ததாகக் கூறி, அவரை விடுதலை செய்தது. (**Pandu's Case**-யும் இங்கு குறிப்பிடலாம்.)

பிரிவு 105 கூறுவதாவது:

சொத்து தற்காப்புரிமை தொடங்கும் மற்றும் தொடர்ந்திருக்கும் காலத்தைப் (Commencement and continuance of the right of private defence of property) பற்றி **பிரிவு 105** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி,

சொத்துக்கு அபாயம் நேரிடுமென்ற ஓர் அச்சம் தொடங்குகிற போது, சொத்தை பொறுத்த தற்காப்புரிமை தொடங்குகிறது.

திருட்டிலிருந்து சொத்தை காத்துக்கொள்ளும் தற்காப்புரிமையானது, சொத்தை திருடனிடமிருந்து மீட்கும் வரையிலும் அல்லது பொது அதிகாரிகளின் உதவி பெறப்படும் வரையிலும் தொடர்ந்து இருக்கிறது.

கொள்ளைக் குற்றம் இழைப்பவர் மரணமோ, காயமோ அல்லது சட்ட முரணான தடையோ எவருக்கேனும் உண்டாக்கிக் கொண்டிருக்கும் பொழுதிலும் அல்லது உடனடி மரணம், காயம், ஆள் தடுப்பு ஏற்படும் என்ற அச்சம் தொடர்ந்து இருக்கும் வரை தற்காப்புரிமை தொடர்ந்து இருக்கும்.

குற்றமிழைத்தவர் அத்துமீறல் அல்லது சொத்து அழித்தல் குற்றங்களை தொடர்ந்து செய்யும் வரையில் தற்காப்புரிமை தொடர்ந்து இருக்கும்.

இரவில் வீட்டை உடைத்து உள்ளே புகுந்தவன், வெளியே வரும் வரையிலும் தற்காப்புரிமை தொடர்ந்து இருக்கும்.

முக்கிய வழக்கு:

Amer Singh V. State[1] - இவ்வழக்கில் சொத்து தற்காப்புரிமை நீடிக்கும் காலம் குறித்து சில கருத்துகள் இராஜஸ்தான் உயர் நீதிமன்றத்தால் பின்வருமாறு கூறப்பட்டது. அதன்படி, ஒரு பொருளைத் திருடன் எடுத்துச் செல்கின்ற பொழுது, உடனடியாக அதை மீட்டற் பொருட்டு தற்காப்புரிமையை பயன்படுத்தியிருக்க வேண்டும். பொருளை எடுத்துச் செல்வதும், அதை மீட்டலும் ஒரே நிகழ்ச்சியின் பகுதிகளாக இருக்க வேண்டும். ஆனால் பொருளை எடுத்துச் சென்ற பிறகு, ஒரு குறிப்பிட்ட கால இடைவெளி கடந்து, அதன் சொந்தக்காரர் அல்லது அவர் சார்பாக உரிமை பெற்றவர் அதை மீட்பது நியாயமாக இருப்பினும், அதை மீட்கும் முயற்சியில் ஈடுபடும் பொழுது, அவர்கள் தற்காப்புரிமையில் செயல் படுவதாகக் கொள்ள முடியாது. இது போன்ற சூழல்களில் குற்றச் செயல் முற்றுப் பெறும் முன்னர் அல்லது குற்றவாளி பொருளுடன் ஓடி மறையும்

1. A.I.R. 1968 Raj. 11

முன்னர் உடனடியாக மீட்புரிமையில் இறங்கும் பொழுது பயன்படுத்தப்படும் தற்காப்புரிமையை மட்டுமே மேற்படி பிரிவு 105 உணர்த்துகின்றது, என்று இராஜஸ்தான் உயர் நீதிமன்றம் கூறியது.

3. தற்காப்புரிமை என்ற எதிர்வாதம் ஒத்துக்கொள்ளவியலாத செயல்கள்:

(பிரிவு 99-ஐக் குறிப்பிடவும்.)

4. தற்காப்புரிமை குற்றம் விளைவிப்பவருக்கு மரணம் விளைவிக்கும் அளவிற்கு நீடிக்கும் தருணங்கள்:

(பிரிவு 100 மற்றும் பிரிவு 103-அய்க் குறிப்பிடுக.)

15. Explain the right of private defence of the body under the Indian Penal Code. Under what circumstances does the right go to the extent of causing the death of the assailant? (இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் உடற்காப்புரிமையை விளக்கவும். எந்நிலைகளில் இவ்வுரிமை தாக்குபவரின் மரணம் விளைவிக்கும் அளவிற்குச் செல்கிறது?)

(வினா எண் 14-ன் விடையின் கீழான 'உடல் தற்காப்புரிமை' எனும் தலைப்பின் கீழ் உள்ளவற்றை அப்படியே குறிப்பிடவும்.)

16. When does the right of private defence extends to causing death to the offender? (தற்காப்புரிமை, குற்றம் விளைவிப்பவருக்கு மரணம் விளைவிக்கும் அளவிற்கு எப்பொழுது நீடிக்கும்?)

(வினா எண் 14-ல் உள்ள பிரிவுகள் 100 மற்றும் 103-அய்க் குறிப்பிடவும்.)

17. Under what circumstances does the right of private defence of the body extends to causing death? (எந்தச் சூழ்நிலைகளில் உடற்காப்புரிமை மரணம் விளைவிக்கும் அளவிற்கு செல்கிறது?)

(வினா எண் 14-ல் உள்ள பிரிவு 100-அய்க் குறிப்பிடவும்.)

18. Discuss the scope of the right of private defence in defence of property. When does the right extend to the voluntary causing of death? (சொத்துரிமை காப்பதில் தற்காப்புரிமை எதிர்வாதத்தின் அளாவுகையை விவாதிக்க. இவ்வுரிமை எப்பொழுது தன்னிச்சையாக மரணம் ஏற்படும் அளவுக்கு நீளுகிறது?)

(வினா எண் 14-ல் 'சொத்துத் தற்காப்புரிமை' எனும் தலைப்பின் கீழ் உள்ள 97, 99, 103, 104, 105 ஆகிய பிரிவுகளை குறிப்பிடுக.)

19. Explain the circumstances in which a person can cause the death of another while exercising the right of private defence against property. (சொத்திற்கெதிரான தற்காப்புரிமையை பயன்படுத்தும் போது

ஒரு நபர் எந்த சூழ்நிலைகளில் மற்றவருக்கு மரணத்தை ஏற்படுத்தலாம் என்பதை விளக்குக.)

(வினா எண் 14-ல் பிரிவு 103-ன் கீழ் உள்ளவற்றைக் குறிப்பிடவும்.)

20. Explain the acts which there is no right of private defence. (செயல்கள் எவை பொறுத்தமட்டில் தற்காப்புரிமை என்னும் எதிர்வாதம் ஏற்றுக் கொள்ளவியலாது என்பதை விளக்குக.)

(பிரிவு 99-ஐக் குறிப்பிடவும்.)

- o -

இதுவரை...

நாம் இதுகாறும் கண்ட ஆறு அத்தியாயங்களின் வழியாக இந்திய தண்டனைச் சட்டத்தின் பல அடிப்படையான கருத்துகளையும், பொதுவான விபரங்களையும் அறிந்தோம். இனி, **"குறித்த வகை குற்றங்களை" (Specific Offences)** இந்திய தண்டனைச் சட்டத்தின் பல்வேறு பிரிவுகளின் வழியாகக் காண உள்ளோம் மேலே தொடர்வோமா?

அத்தியாயம் - 7. குறித்த வகை குற்றங்கள்
Specific Crimes

(அ) பொதுமக்களை பாதிக்கும் குற்றங்கள் [Offences affecting Public]

உள்ளே நுழையும் முன் ஒரு சிறு விளக்கம்

பொதுமக்களின் நலனைப் பேணி வளர்த்து, அவர்களின் அடிப்படைத் தேவைகளைப் பூர்த்தி செய்து, அவர்களது வாழ்க்கை, உயிர் மற்றும் உடைமையின் பாதுகாப்பிற்காக, ஒரு அரசாங்கம் இயங்குகிறது. அதன் அங்கங்களாக சட்டமியற்றுத் துறை (Legislative), நிர்வாகத் துறை (Executive) மற்றும் நீதித்துறை (Judiciary) இயங்குகின்றன. எனவே, இவற்றை பாதிக்கும் குற்றங்கள் பொதுமக்களை பாதிக்கும் குற்றங்களாகின்றன. அத்தகு குற்றங்களைத்தாம் இங்கு பின்வரும் ஆறு பெரும் தலைப்புகளின் வழியாக நாம் காண உள்ளோம். மேலே தொடர்வோமா?

(i) அரசுக்கு எதிரான குற்றங்கள் [Offences against State]

(பிரிவுகள் 121 முதல் 130 முடிய)

1. Explain briefly the offences against the State. (அரசிற்கு எதிரான குற்றங்களைப் பற்றி சுருக்கமாக விளக்குக.)

(அல்லது)

Enumerate the various offences against the State as provided under the Indian Penal Code. Do you think that the existing provisions are sufficient to cope up with the need of time? (இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறியுள்ளபடி அரசுக்கெதிரான பல்வேறு குற்றங்களை எடுத்தியம்புக. தற்போது கூறப்பட்டுள்ள வழிமுறைகள் தற்போதைய காலத்தின் தேவைக்கு போதும் என தாங்கள் கருதுகிறீர்களா?)

(அல்லது)

Enumerate the various offences against the State as provided under Chapter VI of the Indian Penal Code. (இந்திய தண்டனைச் சட்டத்தின் ஆறாவது அத்தியாயத்தில் கூறியுள்ளபடி அரசுக்கெதிரான பல்வேறு குற்றங்களை எடுத்தியம்புக.)

முன்னுரை:

பெரும்பாலும் குற்றங்கள் ஒருவர் பிறருக்குத் தீங்கு விளைவிக்கும் செயல்களாகவே அமைகின்றன. அச்செயல்களைச் செய்தவர்களை அரசு தண்டிக்கிறது. ஆனால் அரசுக்கே தீங்கு விளைவிக்கும் செயல்களைச் செய்வோர் நிலையென்ன? அவர்களும் குற்றவாளிகள்தாம். அரசு நன்முறையில் அமைந்து செயல்பட்டால்தானே, மக்கள் நல்வாழ்வு வாழ முடியும். அரசியலமைப்பின் உறுதிப்பாட்டிற்கே ஆபத்தை விளைவிப்பது நாட்டிற்கும் நல்வாழ்விற்கும் பெருந்தீங்கு பயப்பதாகும். எனவே, அரசுக்கெதிராக வன்முறையைப் பயன்படுத்தி அரசியலமைப்பை நிலைகுலையச் செய்பவர்களை, முயலுபவர்களை அல்லது உடந்தையாக இருப்பவர்களை இந்திய தண்டனைச் சட்டம் கடுமையாக தண்டிக்கிறது. இதற்கான வகைமுறைகளை அது தனது **VI-வது அத்தியாயத்தின் (Chapter VI)** கீழான 121 முதல் 130 வரையுள்ள பிரிவுகளின் வாயிலாகப் பின்வருமாறு கூறுகின்றது. அரசுக்கு எதிரான குற்றங்களில் 1) அரசுக்கெதிராக போர் தொடுத்தல் (waging war against the State) (பிரிவு 121); 2) அரசுத் துரோகம் (Sedition) (பிரிவு 124-A) ஆகியன மிக முக்கியமானவையாகும். மற்ற பிரிவுகளின் கீழானவை அவற்றின் உடன் நிகழ்வான குற்றங்களாகும். சற்று விரிவாக பின்வருமாறு காண்போமா?

இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுத்தல் (Waging War against Government of India) [பிரிவு 121]:

இந்திய அரசிற்கு எதிராகப் போர் தொடுப்பவர், போர் தொடுக்க முயற்சி செய்பவர், போர் தொடுப்பதற்கு உடந்தையாக இருப்பவர் ஆகியோருக்கு மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப் படுவதுடன் அபராதமும் விதிக்கப்படும்.

எடுத்துக்காட்டு:

இந்திய அரசாங்கத்தைக் கவிழ்க்கும் ஒரு வன்முறைக் கிளர்ச்சியில் (insurrection) A என்பவர் சேருகின்றார். அவர் பிரிவு 121-ன்படி குற்றம் செய்தவராகிறார்.

போர் - விளக்கம்:

போர் என்பது, பன்னாட்டுச் சட்டத்தில் கூறியபடி அமைந்திருக்க வேண்டிய அவசியமில்லை. அரசை, அதன் பணிகளை ஒழுங்காகச் செய்யவிடாமல் தடுத்து, அரசு மேற்கொள்ளும் தடுப்பு நடவடிக்கைக்கு எதிராக வன்முறையை உபயோகித்திருந்தாலே அது போராகும். சுருங்கக் கூறின், அரசுக்கு அடங்கி நடக்க வேண்டுமென்ற அரசுப் பற்றுறுதிக் கொள்கையை (allegiance) கைவிட்டு, அரசின் ஆதிக்க அதிகாரத்தை நேரடியாக எதிர்த்து, பகை நாட்டினர் நம் நாட்டிற்குள் வந்து போர்ச் செயலில் ஈடுபட்டால் எவ்வாறு இயங்குவார்களோ, அவ்வாறு இயங்கு

வதைத்தான் மேற்படி பிரிவு 121 தண்டனைக்குள்ளாக்குகிறது. இதனடிப் படையில்தான் தடா (TADA) போன்ற தீவிரவாத தடைச் சட்டங்கள் இயற்றப்பட்டன.

முக்கிய வழக்குகள்:

Manganlal Radhakrishnan v. Emperor[1] - இதில் குற்றம் சாட்டப் பட்டவனும் அவனது சகாக்கள் 200 பேரும் இந்துஸ்தான் சிவப்பு படை (Hindustan Red Army) என்ற அமைப்பைச் சேர்ந்தவர்கள். இவர்களின் தலைமையகம் நாக்பூர் ஆகும். சம்பவ தினத்தன்று இவர்கள் முன்கூட்டியே திட்டமிட்டு ஒரு காவல் நிலையத்தைத் தாக்கி அங்கிருந்த இரு காவலாளிகளை சுட்டுக் கொன்றனர். இவர்கள் செய்தது பிரிவு 121-ன்படி குற்றம் என நாக்பூர் உயர் நீதிமன்றம் தீர்ப்பு கூறி அவர்களை தண்டித்தது. மேலும் இப்பிரிவின்படி, குற்றத்தை நிர்ணயிக்க சில விதிகளையும் கூறியது. அவை, 1. இக்குற்றத்திற்கு நபர்களின் எண்ணிக்கை அவசியமில்லை; 2. அவர்கள் எக்கருவியைக் கொண்டுள்ளனர் என்பதும் அவசியமில்லை; 3. அக்கூட்டத்தின் நோக்கம் மிக அவசியம்; 4. அந்நோக்கம் பொதுமக்களை வன்முறைக்குள்ளாக்கி அதன் மூலம் அரசை ஸ்தம்பிக்கச் செய்வதாக இருக்க வேண்டும். 5. பிரதானக் குற்றவாளிக்கும் துணைக் குற்றவாளிக்கும் வித்தியாசம் கிடையாது. எல்லோரும் ஒரே மாதிரியாக தண்டிக்கப்படுவார்கள்.

இந்திய அரசுக்கெதிராக போர்த் தொடுத்தலில் பிற குற்ற நிலைகள்:

பிரிவு 121-A-ன்படி, இந்தியாவிற்குள்ளோ அல்லது வெளியிலோ, மேற்கண்ட 121-வது பிரிவின்படி தண்டிக்கப்படத் தக்க குற்றங்களில் எதையேனும் செய்யச் சதி செய்யும், அல்லது மத்திய அரசு அல்லது மாநில அரசு எதற்கேனும் குற்றமுறு வன்முறை (criminal force) மூலமாகவோ அல்லது குற்றமுறு வன்முறையைக் காட்டுவதன் மூலமாகவோ பேரச்சம் (overawe) விளைவிக்கச் சதி (conspiracy) செய்யும் எவரொருவரும், ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரை நீடிக்கக் கூடிய சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றால் தண்டிக்கப்படுவர்; மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

Aravindan v. State of Kerala[2] எனும் வழக்கில் **'பேரச்சம்' (overawe)** எனும் பதம், எச்சரிக்கையை அல்லது அச்சத்தை மனதில் உண்டாக்குமாறு செய்தலை விட மேலானது என்றும், அச்சமயத்தில் அரசுக்கெதிரான வன்முறைக்கு அடிபணிவதா அல்லது ஒரு பெரிய அபாயத்தை அரசும் அதன் மக்களும் எதிர்கொள்வதா என்ற இரண்டில் ஏதேனுமொன்றை அரசு தேர்ந்தெடுத்துக் கொள்ள கட்டாயப்படுத்தப்படும் அளவிற்கு இருக்கும் சூழலைத்தான் 'பேரச்சம்' எனும் பதம் குறிக்கிறது என்றும், கேரளா உயர் நீதிமன்றம் கூறியது.

1. A.I.R. 1946 Nag. 1731
2. 1983 Cri. L.J. 1259 (Ker.)

பிரிவு 122-ன்படி, இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுக்கும் கருத்துடன் ஆட்கள், ஆயுதங்களை அல்லது வெடிமருந்துகளை திரட்டுகிற எவரொருவருக்கும், ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 123-ன்படி, இந்திய அரசுக்கு எதிராக போர் தொடுக்கும் திட்டத்திற்கு வசதி செய்யும் கருத்துடன் எதையேனும் மறைப்பவருக்கு (concealing) பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 124-ன்படி, சட்டப்பூர்வமான அதிகாரம் எதையும் செலுத்துவதைக் கட்டாயப்படுத்தும் அல்லது தடைப்படுத்தும் கருத்துடன் குடியரசுத் தலைவர் அல்லது ஆளுநர் முதலியவர்களைத் தாக்கினால், அவ்வாறு தாக்குபவர்களுக்கு ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.[1]

பிரிவு 125-ன்படி, இந்திய அரசுடன் இணக்கமாக உள்ள (in alliance) ஆசிய அரசு (Asiatic Power) எதற்கும் எதிராக போர் தொடுப்பவருக்கு அபராதமும் சேர்க்கப்படலாமெனக் கூடிய ஆயுள் தண்டனையோ அல்லது அபராதமும் சேர்க்கப்படலாமெனக் கூடிய ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப்படும்.

பிரிவு 126-ன்படி, இந்திய அரசுடன் அமைதி உறவு கொண்டுள்ள அரசின் எல்லைகளில் சூறையாடல் (Committing depredation on territories of Power at peace with Government of India) செய்பவர்களுக்கு, ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும். இத்தோடு மட்டுமல்லாது, சூறையாடலால் கைப்பற்றப்பட்ட சொத்தும் பறிமுதல் செய்யப்படும்.

பிரிவு 127-ன்படி, மேற்கண்ட 125, 126 ஆகிய பிரிவுகளில் சொல்லப்பட்ட போரினால் அல்லது சூறையினால் கிட்டிய சொத்து என்று அறிந்தே அதை எவரேனும் பெற்றுக் கெண்டால், அவருக்கு ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும். இத்தோடு மட்டுமல்லாது, அவ்வாறு பெற்றுக் கொள்ளப்பட்ட சொத்தும் பறிமுதல் செய்யப்படும்.

அரசுக் கைதிகளை தப்ப விடுதல் (Escape of State Prisoners): அரசுக் கைதி எனப்படுபவர், இந்திய அரசின் பாதுகாப்பிற்காகவும், இந்தியா நட்புறவு கொண்டுள்ள நாடுகளில் அமைதியை நிலைபெறச் செய்யவும், கைது செய்யப்பட்டவர்கள் ஆவர். போர்க் கைதி (Prisoner of war) என்பவரும், ஒரு அரசுக் கைதியே. அரசுக்கெதிரான போர், இவர்களால்

1. இப்பிரிவிற்கு அடுத்து, பிரிவு 124-A வருகிறது. அது அடுத்த வினாவில் விரிவாக விளக்கப்பட்டுள்ளது. அதையும் இந்த வினாவிற்கு விளக்க வேண்டும்

தொடுக்கப்படுகிறது. இவர்களை கைது செய்வதே பெரும்பாடு. அப்படியிருக்கையில், அவர்கள் தப்பிச் செல்ல தன்னிச்சையாக அனுமதிக்கிற பொது ஊழியரை என்ன செய்வது? தண்டிக்க வேண்டியதுதான். இதற்கான வகைமுறைகளை, பிரிவுகள் 128, 29, 130 ஆகியன பின்வருமாறு கூறுகின்றன.

பிரிவு 128-ன்படி, அரசுக் கைதியை அல்லது போர்க் கைதியை தப்பிச் செல்லத் தன்னிச்சையாக அனுமதிக்கின்ற பொது ஊழியருக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 129-ன்படி, அரசுக் கைதியை அல்லது போர்க் கைதியை தப்பிச் செல்ல கவனக்குறைவாக (negligently) விட்டுவிடும் பொது ஊழியருக்கு, மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 130-ன்படி, அரசுக் கைதி அல்லது போர்க் கைதி தப்பிச் செல்ல உதவுதல் (aiding), அவரை மீட்டல் (rescuing) அல்லது அவருக்கு புகலிடம் அளித்தல் (harbouring) ஆகியவற்றை செய்கின்ற எவரொரு வருக்கும், ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கப்படும்.

2. What is Sedition? Explain with case law. (அரசுத் துரோகம் என்றால் என்ன? வழக்குகளைக் கொண்டு விளக்குக.)

(அல்லது)

Define Sedition. Discuss the constitutional validity of Section 124-A of the Indian Penal Code. (அரசை பகைமூட்டும் குற்றத்தை வரையறு. இந்திய தண்டனைச் சட்டத்தில் 124-A பிரிவு அரசமைப்பு சட்டப்படி செல்லுபடியாதலைப் பற்றி விவாதி.)

(அல்லது)

Sedition - Write short notes. (அரசை பகைமூட்டும் குற்றம் - சிறு குறிப்பு வரைக.)

அரசுத் துரோகம் (Sedition) - விளக்கம்:

மக்களாட்சி நிலவும் நாடுகளிலெல்லாம் ஒரு அரசாங்கம் தவறான பாதையில் சென்று கொண்டிருக்கின்றது என்றால், அது மக்களால் கண்டிக்கப்படுகின்றது. அரசை நடத்தும் அரசியற் கட்சியினர் குறை கூறப்படுகின்றனர். இக்குறைகளை சுட்டிக்காட்ட, அரசியலமைப்புச் சட்டம் மக்களுக்கு பேச்சுரிமையும் எழுத்துரிமையும் அளித்துள்ளது. பத்திரிக்கைகள் அரசின் குறைபாடுகளை வெளிப்படுத்துகின்றன.

ஆனால் அதே சமயத்தில் ஒவ்வொருவரும் அரசியலமைப்பை மதித்து

நடத்துதல் வேண்டும். ஆட்சி நெறியைப் பேணல் வேண்டும். அமைதிவழி நின்று செயல்பட வேண்டும். இந்த நெறியுணர்வு மக்களிடையே பரவி நிற்கிறது. ஆனால் இதைப் போக்க முயன்று எவரேனும் மக்களிடையே அரசின் மீது வெறுப்புணர்வு, இழிவுணர்வு, பகையுணர்வை உண்டாக்க முயன்றால், அவர் தான் வாழ்ந்து கொண்டிருக்கும் நாட்டிற்கே இரண்டகம் செய்வதாகும்; துரோகமாகும். எனவே, இவ்வாறு செய்தலை, **'அரசுத் துரோகம்' (Sedition)** என்கிறோம். மக்களிடையே அரசைப் பற்றி இல்லாததும் பொல்லாததுமாகக் கூறி வெறுப்பையும், பகைமையையும் உண்டாக்குவதால், இதனை **'அரசுப் பகைமை மூட்டல்'** என்றும் அழைக்கலாம். இது குறித்து பிரிவு 124-A பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 124-A கூறுவதாவது:

ஒருவர் வாய்மொழி, எழுத்து, சைகை, காட்சிச் சின்னங்கள் ஆகியவற்றால்,

இந்தியாவில் சட்ட முறையில் நிலைபெற்றுள்ள அரசின் மீது வெறுப்புணர்வு (hatred), இழிவுணர்வு (contempt), பகையுணர்வு (disaffection) ஆகியவற்றினை மக்களிடையே உண்டாக்குவது, தூண்டுவது (excite) அல்லது அவற்றிற்காக முயல்வது 'அரசுக்கு துரோகம்' செய்யும் குற்றமாகும்.

இவ்வாறு உண்டாக்குபவர்களுக்கு அல்லது முயல்பவர்களுக்கு, அபராதம் சேர்க்கப்படலாமெனக் கூடிய ஆயுள் தண்டனையோ அல்லது அபராதம் சேர்க்கப்படலாமெனக் கூடிய மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ விதிக்கப்படும்.

பிரிவு 124-A-யின் கீழான விளக்கங்கள் (Explanations):

விளக்கம் 1.- 'பகையுணர்வு' (disaffection) என்பதில் அரசின் மீது பற்றுறுதி இன்மையும் (disloyalty), அனைத்து விதமான பகையுணர்வும் (all feelings of enmity) அடங்கும்.

விளக்கம் 2.- வெறுப்புணர்வு, இழிவுணர்வு, பகையுணர்வு ஆகியவற்றினைத் தூண்டாமல் அல்லது தூண்ட முயலாமல், அரசாங்கத்தின் நடவடிக்கைகளைக் கண்டித்து கருத்துரை தெரிவித்து, அந்நடவடிக்கைகளை சட்ட முறையில் மாற்ற முயலுதல், மேற்படி பிரிவின் கீழ் ஒரு குற்றமாகாது

விளக்கம் 3.- அரசாங்கத்தின் நிர்வாக அல்லது வேறு செயலை கண்டிக்கும் கருத்துரையை வெறுப்புணர்வு, இழிவுணர்வு, பகையுணர்வு ஆகியவற்றினைத் தூண்டாமல் அல்லது தூண்ட முயலாமல் வெளியிடுதல் மேற்படி பிரிவின் கீழ் ஒரு குற்றமாகாது.

பிரிவு 124-A உணர்த்தும் பொருள்:

அரசாங்கத்தின் மீது வெறுப்புணர்வும், பகையுணர்வும் வளர்ந்தால்

என்னவாகும்? மக்கள் அரசுக்கெதிரான வன்முறைக் கிளர்ச்சியில் இறங்கி விடுவார்கள். அரசின் அடிப்படையும், அமைதியான வாழ்வும் ஆபத்திற்குள்ளாகின்றன. ஒருவரது பேச்சாலோ, எழுத்தாலோ அரசுக் கெதிரான கிளர்ச்சி மூண்டிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. அத்தகைய கிளர்ச்சியைத் தூண்டிவிட வேண்டுமென்ற கருத்துடன், அக்கருத்தை வெளிப்படுத்தும் வகையில் எழுதுவதும், பேசுவதும் மேற்படி குற்றமாகின்றன. சுருங்கக்கூறின், மக்களிடையே அரசின் மீது அதிருப்தியை விளைவித்து, அதன் மீதான பற்றுறுதியை குலைத்து, வெறுப்பையும், பகைமையையும் வளர்த்து, கிளர்ச்சியையும் உள்நாட்டுக் கலகத்தையும் மூட்டிவிடும் செயல்களையே மேற்படி பிரிவு 124-A தண்டிக்கிறது. பின்வரும் முக்கிய வழக்குகளைக் கண்டால், இது மேலும் தெளிவாகும்.

R. v. Sullivan[1] என்ற வழக்கில் "அரசுத் துரோகம் என்பது சமுதாயத்திற்கு எதிரான குற்றமாகும். அரசின் அமைதியைக் குலைக்கும் படியான வார்த்தைகள், செயல்கள் மற்றும் எழுத்துமூலமான வாசகங்கள் போன்ற அனைத்தையுமே அரசுத் துரோக நடவடிக்கை என்பதில் சேர்க்கலாம். இது, மேற்கண்டவைகளின் மூலம், அறியா மனிதன் ஒருவனை அரசாங்கத்தினை கவிழ்ப்பதற்கும் மற்றும் சட்ட ஒழுங்கை சீர்குலைப் பதற்கும் தூண்டி விடுதல்..... உள்நாட்டு போர் (civil war) ஏற்படுவதற்கு வழிவகுத்தல் ஆகியவற்றையும் உள்ளடக்குகிறது....." என்று கூறப்பட்டது.

Queen Empress v. Bal Gangadar Tilak[2] - ஆங்கிலேயர் நம் நாட்டை ஆண்டு வந்த நாட்களில், நாட்டு விடுதலைக்காக பாடுபட்ட விடுதலைப் போராட்ட வீரர் பால கங்காதர திலகர் ஆவார். **மேற்படி வழக்கு சரித்திரப் புகழ் பெற்ற அரசுத் துரோக வழக்காகும்.** இதில் பாலகங்காதர திலகர் ஆங்கிலேய ஆட்சிக்கு எதிராக தனது பேச்சினாலும் எழுத்தாலும் இந்திய மக்களை விடுதலைக்காக தூண்டிவிட்டார். இது 'அரசுத் துரோகம்' என பாலகங்காதர திலகர் மீது ஆங்கிலேய அரசு குற்றஞ்சாட்டியது. அப்பொழுது, நீதிமன்றத்தில், **வன்முறையை தூண்டிவிடுதல் (incitement of violence),** அரசுத் துரோகக் குற்றத்திற்கு தேவையான ஒரு கூறாகுமா, என்ற வினா எழுந்தது. இதற்கு பதிலளிக்கையில், ஒரு வன்முறைக் கிளர்ச்சியை அல்லது கலகத்தை உண்டாக்கக் கூடிய பேச்சோ, எழுத்தோ, அரசுக்கு எதிராக வன்முறையைத் தூண்டுமேயானால், அது நிச்சயமாக அரசுத் துரோகக் குற்றமே ஆகும், என்று பம்பாய் உயர் நீதிமன்றம் கூறி, பாலகங்காதர திலகரை அரசுத் துரோகக் குற்றத்திற்காக தண்டித்தது. இதை எதிர்த்து திலகர் பிரிவி கவுன்சிலில் மேல்முறையீடு செய்தார். ஆனால் பயனில்லை அங்கு திலகர் மீதான தண்டனை ஊர்ஜிதம் செய்யப்பட்டது.

Niharendu Dutt Majumdar v. The King Emperor[3] என்ற வழக்கில்

1. 1841, Car & M-209: 15 Digest (Repl) 988
2. 22 Bom. 112
3. 1942 F.C.R. 33

அரசைப் பற்றி குறை கூறவோ அல்லது கருத்துரை செய்யவோ சட்டம் விதித்திருக்கும் வரம்பை மீறாமல் பேசப்படும் பேச்சு, அரசுத் துரோகக் குற்றமாகாது என கூட்டாட்சி நீதிமன்றம் (Federal Court) தீர்ப்பளித்தது.

Rama Kurup v. Sirkar[1] என்ற வழக்கில் பிரசுரமானது (publication), அரசுக்கு எதிராக வெறுப்புணர்வு, இழிவுணர்வு, பகையுணர்வு ஆகிய உணர்வுகளை அநேகமாக ஏற்படுத்தலாம் என அரசுத் துரோகக் குற்றத்தில் நிரூபணம் செய்தாலே போதுமானது. மாறாக, கலகம் செய்ய மக்களை தூண்டுகிறது என நிரூபணம் செய்யத் தேவையில்லை, எனத் தீர்ப்பானது.

Romesh Thapper v. State of Madras[2] என்ற வழக்கில் இரோமேஷ் தாப்பர் நடத்தி வந்த பத்திரிக்கையை, சென்னை அரசு தடை செய்தது. இதை எதிர்த்து மனுதாரராகிய இரோமேஷ் தாப்பர் இந்திய அரசியலமைப்புச் சட்டம் தனக்கு வழங்கியுள்ள அடிப்படை உரிமைகளில் ஷரத்து 19(1)-ன் படியான, பேசுவதற்கும், கருத்து வெளியிடுவதற்கும் உள்ள உரிமை இதனால் பாதிக்கப்பட்டுள்ளது என உச்ச நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்தார். இதில் நீதிமன்றம், பொது பாதுகாப்பிற்கு (Public Security) பங்கம் ஏற்படும் பொழுதுதான் பேசுவதிலோ அல்லது கருத்து வெளியிடுவதிலோ தடைகள் புகுத்தப்படுகின்றன. ஆனால் மனுதாரரின் பத்திரிக்கையானது எவ்வித பங்கத்தையும் பொதுப் பாதுகாப்பிற்கு விளைவிக்கவில்லை. ஆகவே பத்திரிக்கையின் மீது இருந்த தடை நீக்கப்பட வேண்டும் என்று தீர்ப்பளித்தது.

State of Bihar v. Shailabala Devi[3] என்ற வழக்கில், **நீதிபதி திரு. B.K.Mukherjee** பின்வரும் கருத்துக்களை தெரிவித்தார். "வளர்ந்து வரும் தற்பொழுதைய மக்களாட்சி அரசுகளில், அரசிற்கு எதிரான பிரச்சாரங்களைப் பற்றி மக்கள் கவலை கொள்வதில்லை. பத்திரிக்கைகளைப் படிப்பவர்கள் பெரும்பாலும் கல்வியறிவு வாய்ந்தவர்களாக உள்ளனர். நன்று எது, தீது எது என்பதை பகுத்துணரும் தன்மை கொண்டவர்களாக உள்ளனர். ஆகவே, அரசிற்கு எதிரான தூண்டுதல் அடங்கிய பத்திரிக்கைகள் மற்றும் பிரச்சாரங்கள் அவர்கள் மனதில் எவ்விதமான கிளர்ச்சியையும் உண்டு செய்வதில்லை. மாறாக புரட்சியால் அரசை மாற்றுவேன் என்று கூறுபவர்களைக் கண்டு, எள்ளி நகையாடக்கூடிய அளவுக்கு மக்கள் வளர்ந்துவிட்டனர்".

Kedarnath v. State of Bihar[4] என்ற வழக்கில், வன்முறையைப் பயன்படுத்தி அரசாங்கத்தினைக் கவிழ்க்கக்கூடிய வகையில் ஒருவனுடைய எழுத்தோ அல்லது பேச்சோ இருந்தால், அது பிரிவு 124-A-ன் கீழ் வரும் என்று கூறப்பட்டது.

1. 1949 K.L.T. 27
2. 1950 S.C.R. 594
3. A.I.R. 1952 S.C. 329
4. 1963 1 S.C.J. 18 : A.I.R. 1962 S.C. 955

Bilal Ahmed Kaloo v. State of A.P.[1] எனும் வழக்கில் குடிமகன் ஒருவரை அரசுத் துரோகக் குற்றத்திற்காக தண்டிப்பதற்கு முன், நீதிமன்றங்கள் மிகுந்த கவனமுடன் செயல்பட வேண்டும், என உச்ச நீதிமன்றம் கீழமை நீதிமன்றங்களுக்கு அறிவுறுத்தியது.

பிரிவு 124-A இந்திய அரசியலமைப்புச் சட்டப்படி செல்லுபடியாகுமா?

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் ஷரத்து 19(1)-ஆனது, பேச்சு மற்றும் கருத்துகளை வெளியிடும் சுதந்திரத்தை (Freedom of Speech and Expression) இந்தியக் குடிமக்கள் ஒவ்வொருவருக்கும் அளித்துள்ளது. எனினும், அச்சுதந்திரத்தின் மீது நியாயமான தடைகள் (reasonable restrictions) விதிப்பதன் வாயிலாக அதனைக் கட்டுப்படுத்தலாமென **ஷரத்து 19(2)** கூறுகிறது. மேலும், மேற்படி சுதந்திரத்திற்கு முரணாக எச்சட்டம் இயற்றப்பட்டாலும், அது செல்லாத ஒன்றாகும், என **ஷரத்து 13(1)** கூறுகிறது. இந்நிலையில் இந்திய தண்டனைச் சட்டத்தின் மேற்படி 124-A-வது பிரிவை ஒப்பிட்டுப் பார்க்கையில், அது குடிமக்களின் பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தைப் பாதிப்பதாக உள்ளது. ஆகவே, இது ஷரத்து 19(1)(a)-ன் கீழ் வழங்கப்பட்டுள்ள சுதந்திரத்தை மீறுகிறது. இதனால் ஷரத்து 13(1)-ன்படி மேற்படி பிரிவு 124-A செல்லாத ஒன்றாகிறது என **இரோமேஷ் தாப்பர்** வழக்கிலும் அதனைத் தொடர்ந்து **Tarachand Gopichand v. State**[2] என்ற வழக்கிலும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு கூறியது.

ஆனால், மேற்படி தீர்ப்பிற்குப் பின்னர், இந்திய தண்டனைச் சட்டத்தின் மேற்படி 124-A-வது பிரிவிற்கு உயிர் கொடுக்கும் வகையில் 1951-ஆம் ஆண்டில் அரசியலமைப்புச் சட்டத்தில், முதல் திருத்தச் சட்டத்தின் (First Amendment Act, 1951) வாயிலாக பின்வரும் திருத்தமானது உடனே கொண்டு வரப்பட்டது. அஃதாவது, மேற்படி திருத்தச் சட்டத்தின் 3-வது பிரிவின் மூலமாக, ஷரத்து 19(2)-ஆனது, பின்வருமாறு திருத்தி அமைக்கப்பட்டது. அதன்படி, ஷரத்து 19(1)(a)-ன்படி வழங்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டு சுதந்திரத்தின் மீது அமலில் இருக்கும் ஒரு சட்டமானது (existing law) நாட்டின் பாதுகாப்பு (security of the State), அயல்நாடுகளுடன் கொண்டுள்ள நட்புறவு, பொது அமைதி, அறநெறியான ஒழுக்கம், நீதிமன்ற அவமதிப்பு, அவதூறு கூறல், குற்றம் செய்யத் தூண்டுதல் ஆகிய இவற்றினைக் கருத்தில் கொண்டு தடைகள் ஏதும் விதித்திருந்தால், அவை நியாயமான தடைகளாகும் (reasonable restrictions). அதாவது, மேற்கண்டவற்றின் அடிப்படையில் அமலில் இருக்கும் ஒரு சட்டம், மேற்படி சுதந்திர உரிமையின் மீது தடை விதித்து அதனைக் கட்டுப்படுத்தியிருந்தால், அச்சட்டம் ஷரத்து 13(1)-ன்படி, அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரணாகக் கருதப்பட முடியாது. மாறாக, அது அரசியலமைப்புச் சட்டப்படி, செல்லுடைமை கொண்டதாகும். மேலும், இவ்வாறு

1. A.I.R. 1997 S.C. 3483
2. A.I.R. 1951 Punjab 27

நியாயமான தடைகள் விதிக்கும் பொருட்டு புதிய சட்டங்கள் ஏதேனும் இயற்றப்பட்டாலும், அவைகளும் அரசியலமைப்புச் சட்டத்தின்படி செல்லுபடியாகும். ஆக, இந்திய தண்டனைச் சட்டத்தின் 124-A-வது பிரிவானது, அரசியலமைப்புச் சட்டப்படி செல்லுபடியாகும்.

முடிவுரை:

ஒருவர் மற்றொருவருக்கு அவதூறு விளைவித்தால், அது பிரிவு 499 ன்படி குற்றமாகிறது. ஒரு சமூகத்தினர் அல்லது இனத்தினருக்கு அவதூறு விளைவித்தால், அது பிரிவு 153-A-ன்படி, குற்றமாகும். அதுபோல், அரசுத் துரோகம் என்பது, அரசுக்கு செய்யப்படும் அவதூறாகும். இந்த அவதூறை விளைவித்து, அரசின் மேல் மக்களுக்கு வெறுப்புணர்வும், இழிவுணர்வும் பகைமையுணர்வும் ஏற்படும்படி செய்தால், அது மேற்படி பிரிவு 124-A யின்படி, குற்றமாகிறது. நாம் வாழும் அரசை அவமதிப்பது, நம்மை ஈன்ற தாயை அவமதிப்பது போலாகும். அது எந்நிலையிலும் கூடாது.

(ii) பொது அமைதிக்கு எதிரான குற்றங்கள்

(சட்ட விரோதமான கூட்டம் - கலகம் விளைவித்தல் - சச்சரவு)

[Offences against the Public Tranquility]

(Unlawful Assembly - Rioting - Affray)

(பிரிவுகள் 141 முதல் 160 முடிய)

உள்ளே நுழையும் முன் ஒரு சிறு விளக்கம்

பொதுமக்கள் வாழ்வில் அமைதி நிலவ வேண்டும். அமைதியான வாழ்வே, நல்வாழ்வாகும். அந்த அமைதி குடி கொள்ள வேண்டிய இடம், மக்களின் மனது. அமைதியான மனமிருப்பின், மனிதன் ஆக்கப் பூர்வமான செயல்களை திறம்பட செய்து முடிக்கிறான். அச்செயல்கள் நாட்டிற்கும் வீட்டிற்கும் பயன் தருகின்றன. இந்நிலையில் ஒருவர் மனத்தில் அச்சம் ஏற்பட்டு விட்டால், அவரது மன அமைதி குலைந்து விடுகிறது. மக்கள் மனத்திலே எவ்வித அச்சமும் எழாதவாறு வாழ்வு அமைந்தால் தான், அதை அமைதியான வாழ்வு என்கிறோம். அத்தகு அமைதியை நிலை நிறுத்த வேண்டியது அரசின் கடமையாகும். எனவே, பலர் கூடிப் பொதுமக்களுக்கு அச்சம் உண்டாக்குவதை சட்டம் தடை செய்கிறது. அந்த வகையில், பொதுமக்கள் மனதில் அச்சத்தை விளைவிக்கும் செய்கைகளைப் பொது அமைதிக்கு எதிரான குற்றங்கள் (Offences against the Public Tranquility) என இந்திய தண்டனைச் சட்டம் தனது 141 முதல் 160 வரையிலான பிரிவுகளின் வழியாகக் கூறுகிறது. சட்ட விரோதமான கூட்டம், கலகம் விளைவித்தல், சச்சரவு செய்தல் ஆகியவை பொது அமைதிக்கு விரோதமான குற்றங்களாகக் கூறுகிறது. அவற்றையெல்லாம் பின்வருமாறு காண்போமா?

சட்ட விரோதமான கூட்டம்
(Unlawful Assembly)

3. a. What is unlawful assembly? (சட்ட விரோதமான கூட்டம் என்றால் என்ன?)

b. When an assembly becomes unlawful and explain Dalip Singh v. State of Punjab. (A.I.R. 1953 S.C.J. 532) (ஒரு கூட்டம் எப்பொழுது சட்ட விரோதமான கூட்டமாக ஆகிறது? தாலிப்சிங் - எதிர் - பஞ்சாப் அரசு வழக்கினை விளக்கவும்.)

(அல்லது)

Define and explain the essential ingredients of unlawful Assembly. (சட்ட விரோதக் கூட்டம் - வரையறை செய்து அதன் அடிப்படைக் கூறுகளை விளக்குக.)

(அல்லது)

What is an unlawful assembly? What are the circumstances which would constitute an assembly an unlawful assembly? (ஒரு சட்ட விரோதமான கூட்டம் என்றால் என்ன? ஒரு கூட்டத்தினை சட்ட விரோதக் கூட்டமாக மாற்றியமைக்கும் சூழ்நிலைகள் யாவை?)

(a) சட்ட விரோதமான கூட்டம் - விளக்கம்:

அய்ந்து அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கூடினால், அதைக் கூட்டம் (assembly) என்று சட்டம் கருதுகிறது. அக்கூட்டத்தின் பொது நோக்கம் சட்டத்திற்கு விரோதமான செயல்கள் புரிவதாக இருந்தால், அது சட்ட விரோதமான கூட்டம் ஆகிறது. இதைப் பற்றி பின்வரும் பிரிவு 141 மேலும் தெளிவாக்குகிறது.

(b) ஒரு கூட்டம் எப்பொழுது சட்ட விரோதமான கூட்டம் ஆகிறது?

இதை **பிரிவு 141** கீழ்க்கண்டவாறு வரையறுக்கிறது.

பின்வரும் குற்றங்களில் ஏதேனும் ஒன்றை பொது நோக்கமாகக் கொண்டு, அய்ந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் கூடினால் அக்கூட்டம் சட்ட விரோதமான கூட்டம் ஆகிறது.

1. மத்திய அரசு, மாநில அரசு, பாராளுமன்றம், சட்டமன்றம், பொது ஊழியர் இவர்களைக் குற்றமுறு வன்முறையால் (Criminal force) தாக்கவோ, தாக்குவதாக அச்சுறுத்தவோ செய்வதற்காகக் கூடுகின்ற கூட்டம்; அல்லது

2. சட்டப்படியான உத்திரவுகளை அல்லது நடவடிக்கைகளை நிறைவேற்ற விடாமல் எதிர்க்கும் கூட்டம்; அல்லது

3. அழிம்பு (சொத்தழிப்பு) (mischief) அல்லது குற்றமுறு அத்துமீறல் அல்லது வேறு குற்றங்களைச் செய்யும் கூட்டம்; அல்லது

4. குற்றமுறு வன்முறையால் தாக்கியோ, தாக்கப் போவதாக அச்சுறுத்தியோ ஒருவரின் உடமையைக் கைப்பற்றினாலோ அல்லது மற்றவர்களின் சுவாதீன அனுபவத்தை பறித்தாலோ அல்லது அவற்றில் தங்கள் உரிமைகளை நிலைநாட்டவோ செய்தல்; அல்லது

5. குற்றமுறு வன்முறையால் தாக்கியோ, தாக்கப்போவதாகக் காட்டியோ, சட்டப்படியான கடமையை ஒருவர் செய்வதைத் தடுத்தல் அல்லது அவர் சட்டப்படி செய்ய வேண்டாததைச் செய்யும்படி வற்புறுத்தல்.

விளக்கம்: கூடும்போது சட்ட விரோதமானதாக இல்லாத ஒரு கூட்டம், பின்னால் ஒரு சட்ட விரோதமான கூட்டமாக ஆகலாம்.

பிரிவு 141-ன் உட்கூறுகள் (Ingredients):

ஒரு கூட்டத்தை, சட்ட விரோதமான கூட்டம் என்று கூற பின்வரும் உட்கூறுகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும்.

(1) அய்ந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களைக் கொண்ட கூட்டம் ஒன்று இருத்தல் வேண்டும்;

(2) அதற்கு பொது நோக்கம் (common object) ஒன்று இருத்தல் வேண்டும்;

(3) அப்பொது நோக்கம், மேற்படி பிரிவு 141-ல் குறிப்பிடப்பட்ட அய்ந்து வகைகளில் ஏதேனுமொன்றாக இருத்தல் வேண்டும்.

ஒருவர் சட்ட விரோதமான கூட்டமொன்றின் உறுப்பினராக எப்பொழுது ஆவார்? - பிரிவு 142 கூறும் விளக்கம்:

பிரிவு 142-ன்படி, கூட்டம் எதையும் ஒரு சட்ட விரோதமான கூட்டமாக ஆக்குகிற பொருண்மைகளைப் பற்றி அறிந்திருந்து, அந்தக் கூட்டத்தில் கருத்துடன் சேருகிற அல்லது அதில் தொடர்ந்து இருக்கிற எவரொருவரும் ஒரு சட்ட விரோதமான கூட்டத்தின் ஓர் உறுப்பினராக இருப்பவர் என்று சொல்லப்படுவார்.

முக்கிய வழக்குகள்:

R. v. Hunt[1] எனும் பழைய ஆங்கில வழக்கொன்றில், "ஒரு சட்டத்தின் முக்கிய அம்சம் அதன் நடத்தைதான். அந்நடத்தை அமைதியைக் குலைப்பதற்காக இருப்பின், அது சட்ட விரோதமான கூட்டம் ஆகிறது. ஓரிடத்தில், 50,000 பேர் கூடியிருக்கலாம். ஆனால் இதை மட்டும் கருத்திற் கொண்டு, அதை ஒரு சட்ட விரோதமான கூட்டம் என்று கூறிவிட முடியாது. அவர்கள் எந்நோக்கத்திற்காக கூடியுள்ளனர்; அவர்கள் வந்துள்ள விதம் எவ்வாறு; அவர்கள் பயன்படுத்தும் வழிமுறைகள் யாவை, ஆகியவற்றை எல்லாம் கவனித்துதான், அது ஒரு சட்ட விரோதமான கூட்டமா என்பதைத் தீர்மானிக்க வேண்டும்" என நீதிபதி **Bayley** அவர்கள் கூறியுள்ளார்.

1. 1820, 1st Trial S 171 per Bayley J.

Moli Das. V. Bihar[1] - பிரிவு 141-ன் கீழ் கொடுக்கப்பட்டுள்ள விளக்கமானது, கூடும் பொழுது சட்ட விரோதமாக இல்லாத ஒரு கூட்டம், பின்னர் ஒரு சட்ட விரோதமான கூட்டமாக ஆகலாம், என்று கூறுகிறது. இதற்கு மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் பின்வருமாறு விரிவாக்கம் கொடுத்தது. அதன்படி, கூடும் பொழுது சட்ட விரோதமாக இல்லாத ஒரு கூட்டம், அதன் உறுப்பினர்களில் ஒருவர், குறிப்பிட்ட ஒரு நபரைத் தாக்கும்படி மற்றவர்களுக்கும் அழைப்பு விடுக்க, அவர்களும் அவ்வழைப்பை ஏற்று, தாக்குதலுக்கு அஞ்சி ஓடிக் கொண்டிருந்த அந்நபரைத் துரத்த ஆரம்பிக்கும் அந்த நிமிடத்திலிருந்து, அக்கூட்டம் ஒரு சட்ட விரோதமான கூட்டமாகி விடுகிறது; இங்கு அவ்வாறு துரத்துபவர்களின் நோக்கம், அந்நபரைத் தாக்கும்படி அழைத்த அக்கூட்டத்தின் உறுப்பினர் ஒருவருக்குள்ள அதே நோக்கம்தான்; அதாவது அந்நபரைத் தாக்குவதுதான். இதை மேற்படி பொருண்மைகளிலிருந்து எவரும் ஊகிக்கலாம், என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Musa Khan and others v. State of Maharashtra[2] என்ற வழக்கில், வெறுமனே ஒரு சட்ட விரோதமான கூட்டத்தின் முன் நின்றதினால் மட்டுமே ஒருவனை சட்ட விரோதக் கூட்டத்தின் உறுப்பினனாக்க முடியாது. அக்கூட்டத்தின் பொது நோக்கை செயல்படுத்தும் வகையில் ஏதேனும் ஒரு செயலை அவன் செய்தான் என்று சாட்சியம் இருந்தால்தான், அவனை அக்கூட்டத்தின் குற்றத்திற்கு பொறுப்பாக்க முடியும், என தீர்ப்பு வழங்கப்பட்டது.

சட்ட விரோதமான கூட்டத்தின் உறுப்பினருக்கு தண்டனை - பிரிவு 143:

பிரிவு 143-ன்படி, ஒரு சட்ட விரோதமான கூட்டத்தில் உறுப்பினராக இருக்கும் எவரொருவருக்கும் ஆறு மாதம் வரையிலான சிறைக் காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

சட்ட விரோதமான கூட்டத்தில் சேர்ந்தால் ஏற்படும் குற்றப் பொறுப்பு:

இது குறித்து **பிரிவு 149** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, "ஒரு சட்ட விரோதக் கூட்டத்தைச் (unlawful assembly) சேர்ந்த எவரேனும் அக்கூட்டத்தைச் சேர்ந்தவர்களின் பொதுவான நோக்கத்தை (common object) நிறைவேற்றுதற் பொருட்டு செயல்படுகின்ற குற்றச் செயலுக்கோ, அந்நோக்கத்தை நிறைவேற்றும் பொருட்டு குற்றச் செயல் நிகழலாம் என்று தெரிந்து பங்கேற்றதற்கோ அக்கூட்டத்திலுள்ள ஒவ்வொருவரும் பொறுப்பாவர்'.

முக்கிய வழக்குகள்:

Dalip Singh v. State of Punjab[3] என்ற வழக்கில் குற்றம்

1. A.I.R. 1954 S.C. 657 : 1954 Cri. L. J. 1708
2. 1977 1 S.C.C. 733
3. A.I.R. 1953 S.C. 364 : 1953 Cri. L.J. 1465

சாட்டப்பட்டவர்களில் சிலரை விடுதலை செய்துவிட்டாலும், மீதமுள்ளவர்களை பிரிவு 149-ன் கீழ் குற்றப் பொறுப்புக்கு ஆளாக்கலாம் என தீர்ப்பளிக்கப்பட்டது. இது பின்வரும் வழக்கில் பின்பற்றப்பட்டது.

Mohan Singh v. State of Punjab[1] - இவ்வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர்கள் அய்ந்து பேரும் அதற்கு மேலும் எனக்கூறி அய்ந்து பேரை நீதிமன்றத்தின் முன் நிறுத்தும் பொழுது, அதில் இரண்டு பேர் விடுதலை செய்யப்பட்டாலும் மீதமுள்ள மூன்று பேரை பிரிவு 149-ன் கீழ் தண்டிக்கலாம் என்று தீர்ப்பு கூறப்பட்டது.

Muthu Naicken v. State of Tamilnadu[2] - பொதுவாக, இரு தரப்பினர்களுக்கிடையே சண்டை என்றால், அதை வேடிக்கை பார்க்க ஒரு கூட்டம் கூடுவதுண்டு. இது கிராமப்புறங்களில் மிக அதிகம். இங்கு, அச்சண்டையில் கலந்து கொள்ளும் நோக்கம் எதுவுமில்லாமல், வெறுமனே வேடிக்கை பார்க்கக் கூடும் பார்வையாளர்களில் ஒருவரை பிரிவு 149-ன் கீழ் சட்ட விரோதக் கூட்டத்தின் ஒரு உறுப்பினராக பொறுப்பாக்க முடியாது, என்று மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றம் கூறியது.

Mariadasan v. State of Tamilnadu[3] எனும் வழக்கின் பொருண்மைகளின்படி., இரு தரப்பினர்களிடையே சண்டை மூண்டது. இச்சண்டையை இடையில் வந்த ஒருவர் விலக்க முற்பட்டார். அப்பொழுது ஏற்பட்ட உணர்ச்சிக் கொந்தளிப்பின்போது, அவ்வாறு விலக்க முற்பட்டவர், தாக்கப்பட்டு மரணமடைந்தார். மேல்முறையீட்டில் வழக்கை ஆராய்ந்த உச்ச நீதிமன்றமானது, இங்கு சண்டையை விலக்க இடையில் புகுந்த நபரை தாக்க வேண்டும் என்ற பொது நோக்கம் அத்தரப்பினர்களிடையே இல்லாததால், அது ஒரு சட்ட விரோதமான கூட்டமாகாது. எனவே, குற்றஞ்சாட்டப்பட்ட ஒவ்வொருவரும் அவர்களது தனித் தனியான செயல்களுக்கு மட்டுமே பொறுப்பாவார், என்று தீர்ப்பு கூறியது.

முடிவுரை:

நல்ல காரியங்களுக்காக மக்கள் கூடுகின்றனர். திருமணங்கள், திருவிழாக்கள் ஆகியவற்றில் மக்கள் கூடுகின்றனர். ஆன்மீக சொற்பொழிவுகள், அரசியல் பேச்சுகள் ஆகியவற்றைக் கேட்க மக்கள் கூடுகின்றனர். அரிய சேவைகளை ஒருங்கிணைந்து செய்ய மக்கள் கூடுகின்றனர். எனவே மக்கள் ஆயுதங்கள் ஏதுமின்றி அமைதியாகக் கூடி இயங்குவதை, ஓர் அடிப்படை உரிமையாக (fundamental right), நமது அரசியலமைப்புச் சட்டமும் அங்கீகரித்துள்ளது. இம்மாதிரியான கூட்டங்களில் பங்கேற்பதை இந்திய தண்டனைச் சட்டம் தடை செய்வதுமில்லை; தண்டிப்பதுமில்லை. ஆனால் அக்கூட்டத்தின் பொது

1. A.I.R. 1963 S.C. 174
2. A.I.R. 1978 S.C. 1647; 1978 Cri. L.J. 1713
3. A.I.R. 1980 S.C. 573 ; 1980 Cri. L.J. 412

நோக்கம் சட்டத்திற்கு விரோதமான செயல்களைச் செய்வதெனில், அதைத்தான் இந்திய தண்டனைச் சட்டம் தண்டிக்கிறது. ஒரு கூட்டம் சட்டத்திற்கு விரோதமானது எனில், ஒதுங்கியிருப்பது நன்று. அல்லது ஒரு கூட்டம், அது தொடங்கும் பொழுது சட்டத்திற்கு விரோதமானதாக இல்லாமல், அது நடந்து கொண்டிருக்கும் பொழுது, இடையில் சட்டத்திற்கு விரோதமானதாக ஆகி விடுமென்று தோன்றினால், அதிலிருந்து உடன் பிரிந்து விடுவது உத்தமானது. "துஷ்டனைக் கண்டால் தூர விலகு" எனும் முதுமொழி, இங்கு முற்றிலும் பொருந்தும்.

கலகம் விளைவித்தல் (Rioting)

4. When a person will be made liable for the offence of rioting? (கலகம் விளைவித்தல் குற்றத்திற்கு ஒரு நபர் எப்பொழுது பொறுப்புடையவராவார்?)

(அல்லது)

Rioting - Write short notes. (கலகம் விளைவித்தல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

What do you mean by unlawful assembly? When can a member of such assembly be guilty of rioting? (சட்ட விரோதக் கூட்டம் என்றால் தாங்கள் அறிவதென்ன? சட்ட விரோக் கூட்டத்தின் ஓர் உறுப்பினர் எப்போது கலகக் குற்றத்திற்காக தண்டிக்கப்படலாம்?)

முன்னுரை:

சட்ட விரோதக் கூட்டமென்று, தனது பொது நோக்கத்தை நிறைவேற்றுதற்பொருட்டு வன்முறையைப் பயன்படுத்தினால், அது 'கலகம் விளைவித்தல்' எனும் குற்றமாகிறது. இது குறித்து பிரிவு 146 பின்வருமாறு கூறுகிறது.

கலகம் விளைவித்தல் (Rioting) - பிரிவு 146:

பிரிவு 146-ன்படி, ஒரு சட்ட விரோதமான கூட்டத்தால் அல்லது அதனுடைய உறுப்பினர் எவராலேனும் அத்தகைய கூட்டத்தின் பொதுவான நோக்கத்தை நிறைவேற்றுகையில் வன்முறை (force) அல்லது வன்செயலைப் (violence) பயன்படுத்தும் போதெல்லாம் அத்தகைய கூட்டத்தின் ஒவ்வொரு உறுப்பினரும் கலகம் விளைவித்த குற்றத்தை செய்தவராவார்.

சுருங்கக் கூறின், **சட்ட விரோதமான கூட்டம் + வன்முறை அல்லது வன்செயல் = கலகம் விளைவித்தல்.**

எடுத்துக்காட்டாக, எதிரியை தாக்க வேண்டும் என்ற பொது நோக்கத்துடன் ஒரு கூட்டம் கூடுகிறது. மற்றவரை தாக்குதல் ஒரு குற்றமான செயல். எனவே, அந்த நிலையில் அக்கூட்டம், 'சட்ட விரோதமான கூட்டம்' எனப்படுகிறது. அக்கூட்டத்தின் உறுப்பினர் ஒருவர், அதன் பொது

நோக்கத்தை நிறைவேற்றும் வகையில் எதிரியை தாக்கி விட்டார் எனில், அக்கூட்டத்தை சேர்ந்தவர்கள் ஒவ்வொருவரும் கலகக்காரர் ஆகிவிடுகின்றனர்.

கலகம் விளைவித்தலுக்குத் தேவையான உட்கூறுகள் (Ingredients):

கலகம் விளைவித்தலின் முக்கிய அம்சமே, சட்ட விரோதமான கூட்டமொன்று வன்முறையின் மூலம் தனது பொது நோக்கத்தை நிறைவேற்றிக் கொள்ளலில் அடங்கியுள்ளது. எனவே கலகம் விளைவித்தல் குற்றத்தை மெய்ப்பிக்க பின்வரும் உட்கூறுகள் இருக்க வேண்டியது இன்றியமையாததாகும்.

1. அய்வர் அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் கொண்ட சட்ட விரோதக் கூட்டம், 2. அதன் பொது நோக்கம் சட்ட விரோதமானதாக இருக்க வேண்டும், 3. சட்ட விரோதக் கூட்டத்தினரால் அல்லது அவர்களில் யாரேனும் ஒருவரால் வன்முறை அல்லது வன்செயல் பயன்படுத்தப் பட்டிருத்தல் வேண்டும், 4. அத்தகு வன்முறை அல்லது வன்செயல், கூட்டத்தின் பொது நோக்கத்தை நிறைவேற்றுவதாக அமைய வேண்டும்.

முக்கிய வழக்குகள்:

Prabhakar Shankar Sawant v. State of Maharashtra[1] எனும் வழக்கில் சட்ட விரோதமான கூட்டமொன்று தனது பொது நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக, வன்முறையை அல்லது வன்செயலைப் பயன்படுத்தினால், அது கலகம் விளைவிக்கும் குற்றமாகிறது. இங்கு சட்ட விரோதமான பொது நோக்கம் அக்கூட்டத்தினருக்கு இருந்தது என்பது மெய்ப்பிக்கப்படவில்லையானால், குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் விடுதலை செய்யப்படுவர், என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

Lakshmiammal v. Samiappa Goundan[2] எனும் வழக்கில், பிரிவு 146-ல் பயன்படுத்தப்பட்டுள்ள **'வன்முறை' (force)** எனும் செயல் இந்திய தண்டனைச் சட்டத்தின் 350-வது பிரிவின் கீழான **'குற்றமுறு வன்முறை'க்குண்டான (Criminal force)** குறுகிய வரையறையைக் குறிப்பிடுவதாகும். எனவே வன்முறை என்பது முக்கியமாக நபர்களுக்கெதிராக பிரயோகிக்கப்படுவதாகும்; மற்றொரு பதமான **'வன்செயல்' (violence)** என்பது அளவில் பரந்ததாகும். இது, சொத்துக்கள் மற்றும் அசையாப் பொருட்களின் மீது பிரயோகிக்கப்படுவதாகும், என்று சென்னை உயர் நீதிமன்றம் கூறியது.

கலகம் விளைவித்தல் - தண்டனை:

பிரிவு 147-ன்படி, கலகம் விளைவித்த குற்றத்தைச் செய்கிற

1. A.I.R. 1979 S.C. 1265 : 1979 Cri. L.J. 856
2. A.I.R. 1968 S.C. Mad. 310 : 1968 Cri. L.J. 1084

எவரொருவருக்கும் இரண்டாண்டுகள் வரை சிறைக் காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 148-ன்படி, அபாயகரமான ஆயுதத்தைத் தாங்கி கலகம் விளைவித்தால் மூன்றாண்டுகள் வரை சிறைக் காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

சச்சரவு (Affray)

5. Affray - Write short notes. (சச்சரவு - சிறு குறிப்பு வரைக.)

சச்சரவு - விளக்கம்:

பொதுப் பாதை, சந்தை, பொதுப் பூங்கா போன்ற பொது இடங்களில் ஒருவருக்கொருவர் சண்டையிட்டுக் கொள்வதுண்டு. 'சண்டை' என்றால் ஒருவரையொருவர் வாய் வார்த்தையால் திட்டிக் கொள்ளலாம் அல்லது அடித்துக் கொள்ளவும் செய்யலாம். அதாவது, இருவருக்குள் வாய்ச் சண்டை முற்றி ஒருவர் மற்றொருவரை அடிப்பதற்குக் கையை ஓங்குவதும், அந்த மற்றொருவரும் திருப்பி அடிக்கப் போவதுமாகக் கூறித் தம் கையை ஓங்குவதும் நடந்தாலே அது சண்டைதான். அதுபோல், வாய்ச் சண்டை முற்றி, ஒருவர் மற்றொருவரை அடித்து விடுவதும் சண்டைதான். இச்செயல், அக்கம்பக்கத்தில் உள்ளவர்களின் அமைதியைக் குலைப்பதேயாகும். அவர்கள் மனதில் அச்சத்தை உண்டு செய்வதாகும். இதைத்தான் இந்திய தண்டனைச் சட்டமானது தனது 159-வது பிரிவின் வாயிலாக **'சச்சரவு' (affray)** என்று கூறுகிறது.

சச்சரவு - பிரிவு 159 கூறுவதாவது:

பிரிவு 159-ன்படி, இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டவர்கள், ஒரு பொது இடத்தில் சண்டையிடுவதன் மூலம் பொது அமைதியைக் குலைக்கும் போது அவர்கள் 'ஒரு சச்சரவு செய்வதாகச்' சொல்லப்படுவர்.

'சச்சரவு' எனும் குற்றத்திற்கு தேவையான உட்கூறுகள் (Ingredients):

(i) இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள், (ii) தங்களுக்குள் சண்டையிட்டுக் கொள்ள வேண்டும், (iii) அச்சண்டை பொது இடத்தில் நடந்திருக்க வேண்டும், (iv) அச்சண்டை பொது அமைதியைக் குலைப்பதாக இருக்க வேண்டும்.

சச்சரவு குற்றத்திற்கு மெய்ப்பிக்கப்பட வேண்டியவை:

சச்சரவு குற்றத்திற்காக குற்றஞ்சாட்டப்பட்டவர்களை, அக்குற்றத்திற்காக தண்டிக்க வேண்டுமாயின், பின்வரும் கூறுகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும். அவை,

1. குற்றஞ்சாட்டப்பட்டவர்கள் சண்டை யிட்டுக் கொண்டிருந்தனர்.
2. அச்சண்டை பொது இடத்தில் (public place) நடந்து கொண்டிருந்தது.
3. அச்சண்டை பொது அமைதியை (public peace) குலைப்பதாக இருந்தது.

சச்சரவு - தண்டனை:

சச்சரவில் எவரெல்லாம் ஈடுபடுகின்றனரோ, அவர்கள் எல்லோரும் சச்சரவு குற்றத்திற்கான தண்டனைக்குள்ளாகின்றனர். எடுத்துக்காட்டாக, இரு நபர்கள் சச்சரவுச் சண்டையில் ஈடுபட்டிருந்தால், அந்த இருவருக்குமே தண்டனை உண்டு. "முதலில் சச்சரவு செய்தவர் அவர்தாம்" என்று கூறியோ அல்லது "சச்சரவிற்கு காரணமே அவர்தாம்" என்று கூறியோ எவரும் தப்பித்துக் கொள்ள முடியாது. இதற்குண்டான தண்டனையை பிரிவு 160 பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 160-ன்படி, சச்சரவு செய்கிற எவரொருவருக்கும் ஒரு மாதம் வரையிலான சிறைக் காவலோ அல்லது நூறு ரூபாய் அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

முக்கிய வழக்கு:

Sheoraj Singh v. State[1] எனும் வழக்கில், பிரிவு 159-ன்படி இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்ட நபர்கள் பொது இடத்தில் சண்டையிட்டுக் கொள்வதின் மூலம், பொது அமைதியைக் குலைத்தால், அவர்கள் சச்சரவு செய்தவர்களாகக் கருதப்படுவர். மேற்படி பிரிவு, இருவர் அல்லது இருவருக்கு மேற்பட்டவர் பொது இடத்தில் ஒருவரையொருவர் தாக்கிக் (சண்டையிட்டுக்) கொள்ள வேண்டும் அல்லது ஓர் அமைதிக் குலைவை செய்தல் வேண்டும் என்பதையே உட்பொருளாக உணர்த்துகிறது. எனவே, பொது இடத்தில் வெறுமனே வாய் வார்த்தைகளால் திட்டுவதும், தகராறு செய்து கொள்ளுதலும் மட்டுமே, சச்சரவு குற்றத்திற்கு போதுமானதல்ல; கூடுதலாக ஒருவரையொருவர் அடித்துக் கொள்ள வேண்டும்; அப்பொழுது தான் பிரிவு 160-ன்படி சச்சரவு குற்றத்திற்காக தண்டிக்க முடியும், என சற்று மாறுபட்ட கோணத்தில் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

6. Distinguish between Affray and Riot. (சச்சரவை கலகத்திலிருந்து வேறுபடுத்துக.)

சச்சரவு (Affray)	கலகம் (Riot)
1. இது பொது இடத்தில் செய்யப் பட்டிருத்தல் வேண்டும்.	இது பொது இடம் அல்லது தனி இடம் எங்காயினும் செய்யப் படலாம்.

1. 1978 Cri. L.J. N.O.C. 84 (All.)

2. இது இருவர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் செய்யப் பட்டிருக்க வேண்டும்.	இது அய்வர் அல்லது அதற்கு மேற்பட்டவர்களால் செய்யப் பட்டிருக்க வேண்டும்.
3. தங்களுக்குள் சண்டையிடுதல் மூலம் பொது அமைதியைக் குலைத்தல்.	வன்முறையால் மற்றவர்களை அச்சுறுத்தி பொது அமைதியைக் குலைத்தல்.
4. இங்கு சச்சரவு செய்பவர் களிடையே பொது நோக்கம் (common object) இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம்	இங்கு கலகம் செய்பவர்களிடையே பிரிவு 141-ல் குறிப்பிட்ட அய்ந்து வகைகளில் ஏதேனுமொன்று, அவர்களது பொது நோக்கமாக இருத்தல் வேண்டும்.
5. சச்சரவு திடீரெனவும் முன் கூட்டித் திட்டமிடப்பட்டாலும் எழுவது.	'கலகம்' பொதுவாக முன்கூட்டியே திட்டமிடப்பட்டு, செய்யப் படுவதாகும்.
6. குறைந்த தண்டனை	அதிக தண்டனை.
7. இங்கு உண்மையில் பங்கு கொண்டவர்கள் மட்டுமே தண்டிக்கப்படுவர்.	இங்கு வன்முறையில் நேரடியாகப் பங்கு கொள்ளாமல் அக்கூட்டத்தில் இருந்தவர்களும் தண்டிக்கப்படுவர்.

(iii) பொது நிர்வாகத்திற்கு எதிரான குற்றங்கள்
[Offences against Public Administration]

ஒரு சிறு விளக்கம்

'பொது நிர்வாகத்திற்கு எதிரான குற்றங்கள்' எனும் இத்தலைப்பின் கீழ், நாம் பின்வரும் இரண்டு உட்தலைப்புகளின் கீழ் சில குறிப்பிட்ட வகையிலான குற்றங்களைக் காண உள்ளோம். மேலே தொடர்வோமா?

(a) பொது ஊழியர்களால் செய்யப்படும் அல்லது அவர்கள் சம்பந்தமான குற்றங்கள்
[Offences by or relating to Public Servants]
(பிரிவுகள் 161 முதல் 171 முடிய)

உங்களின் முக்கியமான கவனத்திற்கு...

இந்திய தண்டனைச் சட்டத்தின் IX-வது அத்தியாயம் 'பொது

ஊழியர்களால் செய்யப்படும் அல்லது அவர்கள் சம்பந்தமான குற்றங்கள்' குறித்து விளக்குகிறது. அதில் 161 முதல் 165-A முடிய உள்ள சட்டப் பிரிவுகள் பொது ஊழியர்கள் கைக்கூலி (gratification) பெறுதலைக் குற்றமெனக் கூறுகிறது. ஆனால் மேற்படி பிரிவுகள் 1988-ஆம் ஆண்டில் இயற்றப்பட்ட ஊழல் தடுப்புச் சட்டத்தின் 31-வது பிரிவின் வாயிலாக இந்திய தண்டனைச் சட்டத்திலிருந்து நீக்கப்பட்டு விட்டன (Section 161 to 165-A of IPC, omitted by Section 31 of the Prevention of Corruption Act, 1988). ஆனால் இவ்வாறு நீக்கப்பட்டதற்குப் பின்னிட்டும், மேற்படி பிரிவுகளிலிருந்து பல்கலைக்கழகத் தேர்வில் வினாக்கள் கேட்கப்பட்டுள்ளதால், அவை மீண்டும் இந்த அத்தியாயத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. அப்பிரிவுகள், மேற்படி 1988-ஆம் ஆண்டின் ஊழல் தடுப்புச் சட்டத்தின் கீழ் 7 முதல் 12 வரையிலான பிரிவுகளாகச் சேர்க்கப்பட்டுள்ளன. எனினும், மீதமுள்ள 166 முதல் 171 வரையிலான பிரிவுகள் தொடர்ந்து இந்திய தண்டனைச் சட்டத்தில் அமலிலேயே உள்ளன. இனி வினாக்களுக்குச் செல்வோமா?

7. Discuss briefly the provisions of the Indian Penal Code regarding "offences relating to Public Servants". ('பொது ஊழியர் குறித்த குற்றங்கள்' இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ளபடி சுருக்கமாக விவாதிக்க.)

பிரிவு 161 - பொது ஊழியர்கள் கைக்கூலி (gratification) பெறுதல்:

பொது ஊழியராக இருப்பவர் அல்லது அவ்வாறு ஆவதை எதிர்பார்த்து இருப்பவர்,

தமது உத்தியோகபூர்வமான செயல் எதையும் (official act) செய்யவோ அல்லது செய்யாதிருக்கவோ,

உத்தியோகபூர்வமான நடவடிக்கைகளில் ஒருவருக்கு அனுகூலம் காட்டவோ அல்லது காட்டாதிருக்கவோ, மத்திய அரசு அல்லது மாநில அரசு, பாராளுமன்றம் அல்லது சட்டமன்றங்கள், உள்ளூர் நிர்வாகம், அரசாங்கம் நிறுவும் நிறுவனம், பிற பொது ஊழியர், இவர்களிடமிருந்து ஒருவருக்கு உபகாரம் பெற்றுக் கொடுக்கவோ அல்லது அபகாரம் விளைவிக்கவோ, இவற்றில் ஒன்றைச் செய்வதற்கென்று,

தூண்டுகோலாகவோ அல்லது சன்மானமாகவோ,

சட்டப்படியான ஊதியம் அல்லாத வேறு எந்த வகையிலான கைக்கூலியையும்,

பிறரிடமிருந்து,

தமக்கென்றோ அல்லது வேறொருவருக்கென்றோ,

ஏற்றல், பெறுதல், ஏற்பதற்கு இசைதல், பெறுவதற்கு முயற்சி செய்தல்,

இவற்றில் எதையேனும் ஒன்றைச் செய்தால், அதற்கு மூன்று ஆண்டுக்கால சிறைவாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

விளக்கம்.– 'பொது ஊழியராக ஆவதை எதிர்பார்த்துக் கொண்டிருப்பவர்' (Expecting to be a public servant) - பதவி வகிக்கப் போவதை எதிர்பார்க்காத ஒருவர், தாம் விரைவில் பதவி வகிக்கப் போவதாகவும், அதன் பிறகு மற்றவர்களுக்கு உபகாரம் செய்வதாகவும் அவர்களை நம்பிக்கைக் கொள்ளச் செய்து, ஏமாற்றிக் கைக்கூலி ஒன்றைப் பெற்றுக் கொண்டால், அவர் ஏமாற்றும் குற்றம் செய்தவராகலாம்; ஆனால் அவர் இப்பிரிவில் (பிரிவு 161) வரையறை கூறப்பட்டுள்ள குற்றத்தைச் செய்தவராகார்.

'கைக்கூலி' (Gratification) - எனும் பதம் பண சம்பந்தமான கைக்கூலி அல்லது பணத்தால் மதிப்பிடக் கூடிய கைக்கூலியை மட்டுமே குறிப்பதன்று.

எடுத்துக்காட்டாக, கைக்கூலி என்பது எதாக வேண்டுமானாலும் இருக்கலாம்; விருந்து (பார்ட்டி) வைப்பது, ஆப்பிள் பழங்களை கொடுப்பது போன்றவைகளும் கைக்கூலியே ஆகும்.

'சட்டப்படியான ஊதியம்' (Legal remuneration) - எனும் பதங்கள், ஒரு பொது ஊழியர் சட்டப்படி கோரக் கூடிய ஊதியத்தை மட்டும் குறிப்பன அல்ல; ஆனால், தாம் பணியாற்றும் அரசினால் தாம் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிற ஊதியங்கள் அனைத்தையும் உள்ளடக்கும்.

'செய்வதற்கு ஒரு தூண்டுகோல் அல்லது சன்மானம்' (A motive or reward for doing) - தாம் செய்யக் கருத்து கொண்டிராத ஒன்றை தாம் செய்வதற்கு தூண்டுகோலாக அல்லது தாம் செய்திராத ஒன்றைச் செய்வதற்கு சன்மானமாக ஒரு கைக்கூலியைப் பெற்றுக் கொள்கிற ஒருவரை மேற்படி பதங்கள் குறிக்கும்.

எடுத்துக்காட்டுகள்:

1. Z எனும் ஒரு வங்கியர் ஒரு வழக்கில் கட்சிக்காரராக இருக்கிறார். அவ்வழக்கில் A என்ற முன்சீப், வங்கியருக்குச் சாதகமாகத் தீர்ப்பளித்துவிட்டு, அதற்கு சன்மானமாக முன்சீப் தம்முடைய தம்பிக்கு வங்கியில் ஒரு வேலையைப் பெறுகிறார். முன்சீப்பின் செயல் இப்பிரிவின்படி குற்றமாகும்.

2. அயல்நாடு ஒன்றில் தூதர் (Consul in a Foreign State) பதவியை வகிக்கும் A என்பவர், அந்நாட்டின் அமைச்சரிடமிருந்து ஒரு இலட்சம் ரூபாயை பெற்றுக் கொள்கிறார். குறிப்பிட்ட உத்தியோகபூர்வமான செயல்கள் ஏதேனும் செய்யவோ அல்லது செய்யாமல் விடவோ அல்லது அந்நாட்டிற்காக, இந்திய அரசிடமிருந்து உபகாரம் ஏதேனும் செய்து

தருவதற்கு அல்லது செய்து தர முயல்வதற்கு ஒரு தூண்டுகோலாக அல்லது சன்மானமாக A அந்தத் தொகையை ஏற்றுக்கொண்டதாக தெரியவில்லை. ஆனால் பொதுவாக, தம்முடைய உத்தியோகம் தொடர்பான எந்தச் செயலிலும் அந்நாட்டிற்கு அனுகூலம் செய்யத் தூண்டுகோலாக அல்லது சன்மானமாக அப்பணத்தைப் பெற்றுள்ளார் என்பது தெரிய வந்தது. A-யின் இச்செயல் இப்பிரிவின்படி குற்றமாகும்.

3. பொது ஊழியராகிய A என்பவர், அரசிடம் தமக்குள்ள செல்வாக்கினால்தான் Z என்பவருக்கு பட்டம் (title) கிடைத்துள்ளது, என Z-ஐ தவறாக நம்ப வைக்கின்றார். இந்த உபகாரத்திற்கு சன்மானமாக தனக்கு பணம் தரவேண்டும் என A, Z-ஐ தூண்டுகிறார். A இப்பிரிவின்படி குற்றம் புரிந்துள்ளார்.

முக்கிய வழக்குகள்:

Dalpatsingh v. State of Rajasthan[1] - என்ற வழக்கில் இராஜஸ்தான் எல்லையோரக் காவல் பணியில் ஈடுபட்டிருந்த குற்றவாளிகள், கேட்ட பணம் கொடுக்கவில்லையென்றால் சட்ட முரணாகப் பாகிஸ்தானுக்குள் செல்வதாகவும், கடத்தலில் ஈடுபட்டிருப்பதாகவும், ஆடுகளைக் கடத்திச் சென்று பாகிஸ்தானில் விற்பதாகவும் மேலதிகாரிகளிடம் கூறப்போவதாக அச்சுறுத்தி, கிராமவாசிகளிடம் பணம் பறித்து வந்தனர். வழக்கினை தீர விசாரித்த உச்ச நீதிமன்றம், அவர்களை விடுதலை செய்தது. அவர்கள் செய்த செயல்கள் இப்பிரிவின் கீழ் குற்றம் என்று கூற முடியாது. ஏனெனில், கிராமவாசிகள் குற்றவாளிகளிடமிருந்து உத்தியோகபூர்வமான அனுகூலம் எதையும் எதிர்பார்க்கவில்லை. மேலும் தங்களை கீழ்த்தரமாக நடத்தாதிருப்பதற்காகவும், துன்புறுத்தாமலிருக்கவுமே பணம் கொடுத்திருந்தனர். ஆகவே இதனை கைக்கூலி குற்றம் என்று கூற முடியாது.

State of Gujarat v. Manshankar Prabhasankar Dwivedi[2] - இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர், அரசினர் கல்லூரியில் முதுநிலை விரிவுரையாளராக பணிபுரிந்து வந்தார். பௌதீகத் தேர்வுத் தாள்களைத் திருத்துவதற்காக அவர் பல்கலைக்கழகத்தால் நியமிக்கப்பட்டார். ஆனால், அவர் அரசினர் கல்லூரியில் பணிபுரிந்து வருகிறார் என்பதால் மட்டுமே, அவரைத் தேர்வுத் தாள்களை திருத்த பல்கலைக்கழகம் நியமிக்கவில்லை. இவ்வாறு நியமனம் பெற்ற பிறகு, ஒரு மாணவருக்கு அதிக மதிப்பெண் வழங்குவதற்காக ரூ. 500/-ஐ கைக்கூலியாக பெற்றுக் கொண்டுள்ளார் என்பது தெரியவந்தது.

வழக்கை விசாரித்த நீதிமன்றம், அவர் பொது ஊழியர் என்ற முறையில் எதையும் கைக்கூலியாகப் பெறவில்லை. மேலும் தேர்வுத் தாள்கள் திருத்துவதற்குண்டான பணத்தை, அதற்காக வசூலித்த தொகையில் இருந்து

1. A.I.R. 1969 S.C. 17
2. 1973 II S.C.J. 211

பல்கலைக்கழகம் மட்டுமே கொடுக்கிறது. எனவே தேர்வாளர் என்ற புதிய தகுதியிலேயே அவர் அப்பொழுது செயல்பட்டுள்ளார். அரசினர் கல்லூரி விரிவுரையாளர் என்ற முறையில் அல்ல. ஆகவே அவர் பொது ஊழியர் ஆகமாட்டார். பொது ஊழியர் அல்லாத நபர் பெறும் பணம் கைக்கூலி யாகாது. ஆகவே, அவர் குற்றவாளி அல்லர் என்று தீர்ப்பு கூறப்பட்டது.

Trilokchand Jain v. State of Delhi[1] என்ற வழக்கில், குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது மேலதிகாரியின் ஆணைக்கிணங்க பணம் பெற்றுக் கொண்டார். ஆனால், எதற்காக மேலதிகாரி பணம் வாங்கும்படி கூறினார் என்பது தெரியாது. ஆனால், பொதுவாக பொது ஊழியர் ஆதாயம் பெறுவது உபகாரம் செய்யவோ அல்லது அனுகூலமாக செயல்படவோ ஆகும். பொது ஊழியர் இவ்வாறு செயல்பட நோக்கம் கொண்டிருந்தார் என்று நிரூபிக்க வேண்டியது, அரசுத் தரப்பின் பொறுப்பு ஆகும். குற்றஞ்சாட்டப்பட்டவர், தான் அவ்வாறு செயல்படவில்லை என்று நிரூபிக்க வேண்டிய அவசியமில்லை. இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப் பட்டவரின் குற்றத்தை அரசு நிரூபிக்க முடியவில்லை. ஆகவே, அவர் விடுதலை செய்யப்பட்டார்.

பிரிவு 162 கூறுவதாவது:

உளறல் அல்லது சட்ட விரோதமான வழிகள் மூலமாகப் பொது ஊழியரை வசப்படுத்துவதற்காக கைக்கூலி (Taking gratification, in order, by corrupt or illegal means, to influence public servant) எதையும் ஏற்கிற அல்லது கேட்டுப் பெறுகின்ற அல்லது ஏற்க உடன்படுகிற அல்லது கேட்டுப் பெற முயல்கிற எவரொருவருக்கும், மூன்றாண்டுகள் வரையிலான சிறைவாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 163 கூறுவதாவது:

பொது ஊழியரிடத்தில் சொந்தச் செல்வாக்கைச் செலுத்தக் கைக்கூலி (Taking gratification for exercise of personal influence with public servant) எதையும் ஏற்கிற அல்லது கேட்டுப் பெறுகிற அல்லது ஏற்க உடன்படுகிற அல்லது கேட்டுப்பெற முயல்கிற எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான வெறுங்காவல் வாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 164 கூறுவதாவது:

மேற்படி பிரிவுகள் 162 அல்லது 163-ல் வரையறுக்கப்பட்டுள்ள குற்றங்களுக்கு ஒரு பொது ஊழியர் உடந்தையாயிருந்தால், அவருக்கு மூன்றாண்டுகள் வரையிலான சிறைவாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

1. A.I.R. 1977 S.C. 665

பிரிவு 165 கூறுவதாவது:

பொது ஊழியர் தம்மால் நடத்தப்படும் நடவடிக்கை அல்லது அலுவலில் சம்பந்தப்பட்டவரிடமிருந்து மறுபயனின்றி விலை மதிப்புள்ள பொருளைப் பெற்றுக் கொண்டால் (public servant obtaining valuable thing, without consideration, from person concerned in proceeding or business transacted by such servant), அவருக்கு மூன்றாண்டுகள் வரையிலான சிறைவாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 165-A கூறுவதாவது:

மேற்கண்ட பிரிவுகள் 161 அல்லது 165-ல் வரையறுக்கப்பட்டுள்ள குற்றங்களுக்கு உடந்தையாயிருக்கும் எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைவாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 166 கூறுவதாவது:

எவருக்கேனும் தீங்கு விளைவிக்கும் கருத்துடன் சட்டத்தின் உத்திரவுக்குக் கீழ்ப்படியாதிருக்கின்ற பொது ஊழியர் (public servant disobeying law, with intent to cause injury to any person) எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான வெறுங்காவல் வாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 167 கூறுவதாவது:

தீங்கு விளைவிக்கும் கருத்துடன் சரியில்லாத ஒரு ஆவணத்தை உருவாக்குகின்ற பொது ஊழியர் (public servant framing an incorrect document with intent to cause injury) எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைவாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 168 கூறுவதாவது:

வாணிகத்தில் சட்ட விரோதமாக ஈடுபடுகின்ற பொது ஊழியர் (public servant unlawfully engaging in trade) எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான வெறுங்காவல் வாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 169 கூறுவதாவது:

சொத்தை சட்ட விரோதமாக வாங்குகிற அல்லது ஏலம் கேட்கிற பொது ஊழியர் (public servant unlawfully buying or bidding for property) எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான வெறுங்காவல் வாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

மேலும் அந்தச் சொத்து அவ்வாறு விலைக்கு வாங்கப்பட்டிருப்பின், அது பறிமுதல் செய்யப்படும்.

ஆள்மாறாட்டம் (Personation) - பிரிவு 170 கூறுவதாவது:

பொது ஊழியரைப் போல ஆள்மாறாட்டம் செய்து (personating a public servant) அந்தப் பதவியின் போர்வையில் செயல் எதையேனும் செய்கிற அல்லது செய்ய முயல்கிற எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைவாசமோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 171 கூறுவதாவது:

பொது ஊழியரால் பயன்படுத்தப்படும் உடுப்பை அல்லது அடையாளச் சின்னத்தை மோசடியான கருத்துடன் அணியும் அல்லது கொண்டு செல்லும் (wearing garb or carrying token used by public servant with fradulent intent) எவரொருவருக்கும் மூன்று மாதங்கள் வரையிலான சிறைவாசமோ அல்லது ரூபாய் இருநூறு வரையிலான அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்ப்படும்.

8. What is Bribery? Discuss. (கைக்கூலி என்றால் என்ன? விவாதிக்கவும்.)

(அல்லது)

What is bribery? Enumerate the ingredients to be proved to punish a person for the offence of bribery. (கையூட்டு என்றால் என்ன? கையூட்டு என்ற குற்றத்திற்காக ஒருவரை தண்டிக்க வேண்டுமெனில் என்ன முக்கிய உட்கூறுகளை மெய்ப்பிக்க வேண்டும் என்பதை எடுத்தியம்புக.)

(முந்தய வினாவின் விடையில் பிரிவு 161-ன் கீழ் உள்ளவற்றை மட்டும் குறிப்பிடவும்.)

(b) தேர்தல்கள் தொடர்பான குற்றங்கள்
[Offences relating to Elections]

(பிரிவுகள் 171-A முதல் 171-I முடிய)

9. State the offences relating to elections as enumerated in the Indian Penal Code. Is it necessary to create any new offences in this behalf? (இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறப்பட்டுள்ள தேர்தல்கள் குறித்த குற்றங்களை எடுத்துரைக்க. இது குறித்து ஏதேனும் புதிய குற்றங்கள் சேர்க்க வேண்டிய தேவையுள்ளதா?)

(அல்லது)

State briefly the provisions of the Indian Penal Code regarding

"Offences relating to Elections". ('தேர்தல் சம்பந்தமான குற்றங்களை' சார்ந்து இந்தியக் குற்றவியல் சட்ட வழிவகைகளை சுருக்கமாக எடுத்துக் கூறவும்.)

(அல்லது)

Election Offences - Write short notes. (தேர்தல் குற்றங்கள் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

தேர்தல்களில் மக்கள் தங்கள் வாக்குகளைத் தங்களது விருப்பப்படி தாங்கள் விரும்பும் வேட்பாளருக்கு அளிப்பது மிகவும் முக்கியமாகும். தேர்தல்களில் பணத்தின் செல்வாக்கைக் கொண்டோ, தனி மனிதனின் செல்வாக்கைக் கொண்டோ, அல்லது பொய்யாக பிரச்சாரம் செய்தோ மக்களின் வாக்குகளைப் பெற முயல்வது மக்களாட்சிக்கு விரோதமானதாகும். ஆகவே இம்மாதிரியான செயல்களைக் குற்றங்கள் என இந்திய தண்டனைச் சட்டம் கூறுகிறது.

தேர்தல் உரிமைகள் (Election Rights):

தேர்தலில் வேட்பாளராக நிற்பது, நிற்காமல் இருப்பது அல்லது வேட்பாளராக இருப்பதிலிருந்து விலகிக் கொள்வது அல்லது தேர்தலில் வாக்களிப்பது அல்லது வாக்களிக்காமல் இருப்பது, இவையனைத்தும் ஒரு நபருக்குள்ள 'தேர்தல் உரிமைகள்' **(Electoral Rights)** ஆகும். **(பிரிவு 171-A)**

I. தேர்தல்களில் இலஞ்சம் (Bribery) கொடுத்தல்:

பிரிவு 171-B : 1. (i) தேர்தல் உரிமை (Electoral right) எதனையும் பயன்படுத்த எவரையேனும் அல்லது வேறு எவரையேனும் தூண்டும் அல்லது அத்தகைய உரிமை எதையேனும் பயன்படுத்தியிருப்பதற்குச் சன்மானமளிக்கும் நோக்கத்துடன் அவருக்கு கையூட்டு (Gratification) கொடுக்கிற, அல்லது

(ii) அத்தகைய உரிமை எதனையும் பயன்படுத்த அல்லது வேறு எவரையும் அத்தகைய உரிமை எதனையும் பயன்படுத்தத் தூண்ட, அல்லது தூண்ட முயல தமக்காகவோ அல்லது வேறு எவருக்காகவோ பரிசாக, கையூட்டு எதையேனும் பெற்றுக்கொள்கிற,

எவரொருவரும் இலஞ்சக் குற்றத்தை செய்தவராவார்.

ஆனால், பொதுக் கொள்கையை அறிவித்தலோ அல்லது பொது நடவடிக்கையைப் பற்றி வாக்கு கொடுத்தாலோ, இப்பிரிவின்படி, ஒரு குற்றமாகாது. (அதாவது, அரசியல்வாதிகள், தாம் ஆட்சிக்கு வந்தால் "இதைச் செய்வேன், அதைச் செய்வேன்" என வாக்குக் கொடுத்துவிட்டு, ஆட்சிக்கு வந்தபின் செய்யாமலிருந்தால் அதனைக் குற்றம் எனக் கொள்ள முடியாது)

2. கையூட்டு கொடுக்க முனைகிற, அல்லது கொடுக்க உடன்படுகிற, அல்லது முயன்று பெறுவதற்கு முனைவு செய்கிற, அல்லது முயல்கிற ஒருவர் கையூட்டு கொடுப்பதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

3. கையூட்டு பெறுகிற அல்லது பெற உடன்படுகிற, அல்லது பெற முயல்கிற ஒருவர் கையூட்டு பெறுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும். மற்றும் தாம் செய்யக் கருதாததைச் செய்ய ஒரு தூண்டுகோலாக, அல்லது தாம் செய்திராததைச் செய்வதற்கு சன்மானமாக கையூட்டு பெற்றுக் கொள்பவர், சன்மானமாக (reward) அந்தக் கையூட்டைப் பெறுவதாகக் கொள்ளப்படுதல் வேண்டும்.

இலஞ்சம் கொடுப்பதற்கு தண்டனை:

பிரிவு 171-E : இலஞ்சம் கொடுத்த குற்றத்தைச் செய்கிற எவரொருவருக்கும் ஓராண்டு வரை சிறைக்காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும். ஆனால் விருந்தளிப்பதன் (treating) மூலம் இலஞ்சம் கொடுத்ததற்கு அபராதம் மட்டுமே தண்டனையாக விதிக்கப்படும்.

விளக்கம் : 'விருந்தளித்தல்' என்பது, உணவு, பானம், கேளிக்கை அல்லது தேவையைப் பூர்த்தி செய்தல் இவற்றில் ஏதேனுமொன்று கையூட்டில் அடங்கியிருக்குமானால், அந்த வகை, இலஞ்சம் என்று பொருள்படும்.

II. தேர்தல்களில் தகாத முறையில் செல்வாக்கைப் பயன்படுத்துதல் (Undue influence at elections):

பிரிவு 171-C : தேர்தல் உரிமை எதனையும் தடையின்றிச் செயல்படுத்துவதில் தம்மிச்சையாக தலையிடுகிற அல்லது தலையிட முயல்கிற எவரொருவரும் தேர்தலில் தகாத முறையில் செல்வாக்கைப் பயன்படுத்தும் குற்றத்தைச் செய்தவராகிறார்.

ஒரு வேட்பாளருக்கோ அல்லது வாக்காளருக்கோ, அல்லது அவர்கள் அக்கறை கொண்டுள்ள மற்றவருக்கோ எவ்விதமான தீங்கும் ஏற்படுத்துவதாக, பயமுறுத்தல் கூடாது. மேலும், அவர்களுக்குத் தெய்வத்தின் சாபம் ஏற்படும் என்று அச்சுறுத்தி அவர்கள் சுதந்திரமாகச் செயல்படுவதைக் கெடுக்க முயலுவதும் குற்றமாகும். இது தகாத முறையில் செல்வாக்கை பயன் படுத்துவதாகும்

ஒரு மதத் தலைவர் அந்த மதத்தைச் சார்ந்தவர்கள் கூடியுள்ள கூட்டம் ஒன்றில் ஒரு குறிப்பிட்ட நபருக்கு வாக்களிக்க வேண்டும் என்று கூறி, அவ்வாறு செய்யவில்லையெனில், அது அந்த மதத்திற்குச் செய்யும் துரோகம் என்று கூறினால், அது தகாத முறையில் செல்வாக்கைப் பயன் படுத்தலாகும்

தகாத முறையில் செல்வாக்கைப் பயன்படுத்துதலுக்குத் தண்டனை:

பிரிவு 171-F : தேர்தல்களில் தகாத முறையில் செல்வாக்கைப் பயன்படுத்துதலுக்கு ஓராண்டு வரை சிறைக் காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

III. தேர்தல்களில் ஆள் மாறாட்டம் (Personation at elections):

பிரிவு 171-D : ஒரு தேர்தலில் ஒரு வாக்குச் சீட்டுக்காக விண்ணப்பிக்கிற அல்லது உயிரோடிருக்கிற, அல்லது இறந்துபோன வேறு எவரேனும் ஒருவரின் பெயரால், அல்லது ஒரு கற்பனைப் பெயரால், வாக்களிக்கிற, அல்லது அத்தகைய தேர்தலில் ஒரு முறை வாக்களித்த பின் அதே தேர்தலில் தமது சொந்தப் பெயரில் ஒரு வாக்குச் சீட்டுக்கு விண்ணப்பிக்கிற எவரொருவரும், அத்தகைய எந்த வழியிலேனும் எவரேனும் வாக்களிப்பதற்கு உடந்தையாயிருக்கிற, வாக்களிப்பதை முயன்று பெறுகிற அல்லது முயன்று பெற முயல்கிற எவரொருவரும் ஒரு தேர்தலில் ஆள் மாறாட்டக் குற்றத்தைச் செய்தவராவார்.

தேர்தல்களில் ஆள் மாறாட்டத்திற்கு தண்டனை:

தேர்தலில் ஆள் மாறாட்டக் குற்றத்திற்கு ஓராண்டு வரை சிறைக் காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும் என நாம் முன்கண்ட பிரிவு 141-F-லேயே கூடுதலாக கூறப்பட்டுள்ளது.

IV. தேர்தலில் பொய்ப் பிரசாரம் (False Statement in election):

பிரிவு 171-G : தேர்தலின் முடிவை பாதிக்கும் கருத்தோடு வேட்பாளரின் தனிப்பட்ட நடத்தை பற்றியோ, அவரின் குண இயல்பு பற்றியோ ஒருவர் தமக்குப் பொய் என்று தெரிந்த ஒன்றை உண்மை என்று கூறிப் பிரசாரம் செய்து, அந்தப் பிரசாரத்தில் கூறப்பட்ட விஷயங்கள் பொய்யானவையாக இருந்தால், அது குற்றமாகும். இதற்கு அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.

V. தேர்தலுக்கென சட்டத்திற்கு முரணான வகையில் பணம் கொடுத்தல் (Illegal payments in connection with an election):

பிரிவு 171-H : ஒரு வேட்பாளரின் எழுத்துமூலமான அனுமதியின்றி அத்தகைய வேட்பாளர் தேர்ந்தெடுக்கப்படுவதை ஆதரிப்பதற்காக, அல்லது அதை முயன்று பெறும் காரணத்திற்காக பொதுக் கூட்டம் எதனையும் நடத்துவதற்கு அல்லது வேறு ஏதேனுமொரு விளம்பரம், சுற்றறிக்கை அல்லது வேறு எந்த வகையிலேனும் செலவுகளைச் செய்கிற அல்லது அதற்கு அனுமதியளிக்கிற எவரொருவரும் அய்நூறு ரூபாய் வரை அபராதம் விதித்து தண்டிக்கப்படல் வேண்டும்.

ஆனால் பத்து ரூபாய்க்குக் குறைந்த செலவை ஒருவர் செய்யலாம். ஆனால் செலவு செய்த தேதியிலிருந்து பத்து நாட்களுக்குள் அச்செலவிற்கான அனுமதியினை வேட்பாளரிடமிருந்து எழுத்துமூலமாகப் பெறுதல் வேண்டும்.

VI. தேர்தல் கணக்குகளை வைத்திருக்கத் தவறுதல் (Failure to keep election accounts):

பிரிவு 171-I : அவ்வப்போது அமலிலுள்ள சட்டம் எதனாலேனும், அல்லது சட்டத்தின் ஆற்றல் பெற்ற எதனாலேனும் ஒரு தேர்தலில், அல்லது தேர்தல் தொடர்பாகச் செய்யப்பட்ட செலவுகளுக்குக் கணக்குகளை வைக்கக் கோரப்பட்டிருந்து, அத்தகைய கணக்குகளை வைக்கத் தவறுகிற எவரொருவருக்கும் அய்நூறு ரூபாய் வரை அபராதம் விதிக்கப்படும்.

முடிவுரை:

ஒரு தேர்தல் நடக்கும்பொழுது அதில் என்னென்ன குற்றங்கள் நிகழுமோ, அவையனைத்தும் மேலே கண்டவாறு இந்திய தண்டனைச் சட்டத்தில் வகைப்படுத்தப்பட்டுள்ளன. ஆகவே, தேர்தல்கள் சார்பாக ஏதேனும் புதிய குற்றங்கள் உண்டாக்க வேண்டியது அவசியமா, என்ற வினா எழுந்தால், அதற்கு 'அவசியமில்லை' என்றுதான் பதில் கூற வேண்டும். எனினும், தற்காலத்தில் தேர்தல் நடக்கும்பொழுது, அது முடிந்த பிறகும் வன்முறைகள் பல நடப்பதால் பலரின் உடைமை சேதமாகிறது; உயிர் பறி போகிறது. ஆகவே, தேர்தல்கள் நடக்கும் பொழுது, அதன் அமைதியைக் குலைக்கும் வண்ணம் வன்முறைச் செயல்களில் ஈடுபடுவோர் தக்கபடி தண்டிக்கப்பட வேண்டும். இது குறிப்பிட்ட தொரு (specific) குற்றப் பிரிவாக, இந்திய தண்டனைச் சட்டத்தில் 'தேர்தல்கள் சம்பந்தமான குற்றங்கள்' என்கிற மேற்படி அத்தியாயத்தில் சேர்க்கப்பட வேண்டும்.

(iv) பொய்ச் சாட்சியமும் பொது நீதிக்கு எதிரான குற்றங்களும் [False evidence and Offences against Public Justice]

(பிரிவுகள் 191 முதல் 229 முடிய)

உள்ளே நுழைவதற்கு முன் ஒரு சிறு விளக்கம்

பொய்ச் சாட்சியம் அளித்தல், புனைதல் மற்றும் பொது நீதிக்கு எதிரான குற்றங்கள் யாவும் நீதித்துறைக்கு எதிரான குற்றங்களாகும் (Offences against administration of justice). இவைகளைக் குறித்து இந்திய தண்டனைச் சட்டத்தின் XI-வது அத்தியாயமானது 191 முதல் 229 முடிய உள்ள சட்டப் பிரிவுகளின் வாயிலாகக் கூறுகிறது. இச்சட்டப் பிரிவுகளை நாம் இரு பெரும் தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவை,

1. பொய்ச் சாட்சியம் அளித்தல் மற்றும் பொய்ச் சாட்சியம் புனைதல்.
2. பொது நீதிக்கு எதிரான குற்றங்கள். சற்று விரிவாக இனி நாம் காண்போமா?

பொய்ச் சாட்சியம் அளித்தல் மற்றும் பொய்ச் சாட்சியம் புனைதல்

[Giving false evidence and Fabricating false evidence]

(பிரிவுகள் 191 முதல் 200 முடிய)

10. Enumerate the essential elements of the offence of giving false evidence. Refer to decided cases. ('பொய்ச் சாட்சியம் அளித்தல்' என்ற குற்றத்தின் முக்கிய கூறுகளை எடுத்தியம்புக. முடிவு செய்யப்பட்ட வழக்குகளைக் குறிப்பிடுக.)

(அல்லது)

Explain the offence of giving false evidence with illustrations. (பொய்ச் சாட்சியம் அளித்தல் குற்றத்தினை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Giving false evidence - Write short notes. (பொய்ச் சாட்சியம் அளித்தல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஒரு அரசாங்கம் சட்டமியற்றுத் துறை, நிர்வாகத் துறை, நீதித்துறை எனும் மூன்று அங்கங்களைக் கொண்டு தனது ஆட்சியை செலுத்துகிறது என்று நாம் ஆரம்பத்திலேயே கண்டோம். அவற்றில் நீதி செலுத்துவது, நீதித்துறையின் பணியாகும். மக்களுக்குள் எழும் வழக்குகளை நீதிபதிகள் தீர்த்து நியாயம் வழங்குகின்றனர். அவ்வழக்குகள் உரிமையியல் (Civil) தன்மை கொண்டதாகவோ அல்லது குற்றவியல் (Criminal) தன்மை கொண்டதாகவோ இருக்கலாம். வழக்கின் தன்மை எப்படிப்பட்டதாக இருப்பினும், அதைத் தீர்த்து நியாயம் வழங்குவதற்கு அடிப்படை ஆதாரதங்களாக இருப்பது சாட்சியங்களேயாகும். எனவே, சாட்சியங்கள் இன்றிப் பெரும்பாலான வழக்குகளை நியாயமான முறையில் தீர்ப்பது இயலாது. எனினும், அப்படிப்பட்ட சாட்சியம் உண்மையாக இருக்கும் பொழுதுதான், சரியான நீதியும் கிடைக்கிறது. ஆனால் அதே சாட்சியம் பொய்யாக இருந்து விட்டால்? கொடுக்கும் தீர்ப்பிலும் உண்மையான நியாயம் இருக்காது போய் விடும். இதனைத் தடுக்கும் பொருட்டுதான், பொய்ச் சாட்சியம் அளித்தலை இந்திய தண்டனைச் சட்டம் தண்டிக்கிறது.

மேலும் ஒருவர் கூறுவது உண்மையா பொய்யா என்பதை துல்லியமாகக் கண்டறிவதற்கு எந்த விஞ்ஞானக் கருவியும் இதுவரையில்

கண்டுபிடிக்கப்படவில்லை. எனவே, அவரவர்கள் மனச்சாட்சிக்கு உட்பட்டே ஒவ்வொருவரும் உண்மையே கூற வேண்டும் என்று சட்டம் வற்புறுத்துகிறது. அதற்காக நீதிமன்றத்தில் ஒருவர் சாட்சியம் கூறுவதற்கு முன், "சத்தியமாகக் கூறுகிறேன்" என்று பிரமாணம் எடுக்கும்படி ஒவ்வொரு சாட்சியையும் சட்டம் கட்டளையிடுகிறது. அவ்வாறு பிரமாணம் செய்த பின்தான், நீதிமன்றங்களில் சாட்சிகள் விசாரிக்கப்படுகின்றனர். எனவே, **"சத்தியமாகக் கூறுகிறேன்"** என்று பிரமாணம் செய்து விட்டு உண்மையைக் கூற வேண்டிய ஒருவர் பொய்யுரைத்தால், அது 'பொய்ச் சாட்சியம் அளித்தல்' குற்றமாகி விடுகிறது. இதைத்தான் பிரிவு 191 பின்வருமாறு கூறுகிறது. சற்று விளக்கமாகப் பார்ப்போமா?

பொய்ச் சாட்சியம் அளித்தல் (Giving false evidence) - பிரிவு 191 கூறுவதாவது:

தாம் எடுத்துக் கொண்ட ஒரு பிரமாணத்தின்படி அல்லது சட்டத்தின் வெளிப்படையான வகைமுறையின்படி உண்மையைக் கூறுவதற்கு, சட்டப்படி கட்டுப்பட்ட அல்லது ஏதேனும் ஒரு விஷயம் (subject) மீது விளம்புகை (declaration) ஒன்றைச் செய்ய சட்டப்படி கட்டுப்பட்ட எவராயினும், பொய்யாய் இருக்கிற உரை எதனையும், அது பொய் என்று அறிந்தே அல்லது நம்பியே அல்லது உண்மையென தாம் நம்பாத உரை எதனையும் செய்தால், அவர் பொய்ச் சாட்சியம் அளிப்பவர், எனப்படுவார்.

விளக்கம் 1.- ஒரு உரை வாய்மொழியாகச் செய்யப்பட்டாலும், அல்லது வேறு வகையாகச் செய்யப்பட்டாலும், அவ்வுரை இப்பிரிவின் பொருளில் அடங்கியதாகும்.

அதாவது, மேற்படி விளக்கத்தின்படி, 'உரை' என்பது வாய்மொழியான வாக்குமூலமாகவும் இருக்கலாம், அல்லது எழுதித் தயாரித்ததாகவும் இருக்கலாம். நீதிமன்றத்தில் சாட்சிக் கூண்டேறி கொடுக்கும் வாக்கு மூலங்களும், ஒரு உரையே. அது போல், எழுத்துமூலமாக பிரமாணம் செய்து, வாக்குமூலங்களை ஒரு பிரமாணப் பத்திரிக்கையாக (affidavit) நீதிமன்றத்தில் சமர்ப்பிப்பதும், ஒரு உரையே ஆகும்.

விளக்கம் 2.- சாட்சிக் கையொப்பமிட்டவரது நம்பிக்கையைப் பற்றிய ஒரு பொய்யுரை இப்பிரிவின் பொருளில் அடங்கும் (A false statement as to the belief of the person attesting is within the meaning of the section). மற்றும் ஒருவர் தாம் நம்பாத ஒன்றைத் தாம் நம்புவதாகக் கூறுவதாலும், தாம் அறியாத ஒன்றைத் தாம் அறிந்ததாகக் கூறுவதாலும் அவர் பொய்ச் சாட்சியம் கூறுகிற குற்றம் செய்தவராகலாம்.

பிரிவு 191-ன் கீழான எடுத்துக்காட்டுகள்:

(அ) Z-க்கு எதிரான ரூபாய் ஓராயிரத்திற்காக B-யின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாக A ஒரு விசாரணையின் போது B-யின்

கோரிக்கையை Z ஒப்புக்கொண்டதைத் தாம் கேட்டதாகப் பொய் எனவும் அறிந்தே பொய்யாகப் பிரமாணம் செய்கிறார். A பொய்ச் சாட்சியம் கூறியவராகிறார்.

(ஆ) உண்மையைக் கூறுவதற்குப் பிரமாணத்தால் கட்டுப்பட்டிருக்கிற A, Z-ன் கையெழுத்து என்று ஒன்றைத் தாம் நம்பாத போது, ஒரு குறிப்பிட்ட கையொப்பத்தை Z-ன் கையெழுத்து எனத் தாம் நம்புவதாகக் கூறுகிறார். இங்கே A தமக்குப் பொய் என்று தெரிந்திருக்கிற ஒன்றைக் கூறுகிறார். ஆகவே, அவர் பொய்ச் சாட்சியம் கூறுகிறார்.

(இ) Z என்பவரின் பொதுவான தன்மையை அறிந்த A என்பவர் ஒரு குறிப்பிட்ட கையொப்பம் Z-ன் கையெழுத்து என்று தாம் நம்புவதாகக் கூறுகிறார். நல்லெண்ணத்தோடு A அது அவ்வாறிருப்பதாக நம்புகிறார். இங்கு A-யின் உரை அவரது நம்பிக்கையை பொறுத்தமட்டில் உண்மை. ஆகையால் அந்தக் கையொப்பம் Z-ன் கையெழுத்தாக இல்லாதிருக்கக் கூடுமாயின் A பொய்ச் சாட்சியம் கூறியிருக்கவில்லை.

(ஈ) உண்மையைச் சொல்வதற்காகப் பிரமாணத்தின் மூலம் கட்டுப்படடுள்ள A என்பவர், குறிப்பிட்ட ஒரு இடத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் Z என்பவர் இருந்தார், என்பது தமக்குத் தெரியும் என்று அந்த விஷயத்தைப் பற்றி ஏதொன்றையும் அறியாதிருந்தும் கூறுகிறார். குறிப்பிட்ட அந்த நாளில் Z அந்த இடத்தில் இருந்திருந்தாலும், இல்லாதிருந்தாலும் A பொய்ச் சாட்சியம் கூறுகிறார்.

(உ) ஓர் உரையை அல்லது பத்திரத்தை உண்மையாக வாய்வழி மொழிபெயர்க்க அல்லது எழுத்துவழி மொழிபெயர்க்க பிரமாணத்தின் மூலம் கட்டுப்பட்டுள்ள வாய்வழி மொழிபெயர்ப்பவரான அல்லது எழுத்துவழி மொழிபெயர்ப்பவரான A என்பவர் ஓர் உண்மையில்லாத, தாம் உண்மை என்று நம்பாத, வாய்வழி மொழிபெயர்ப்பை அல்லது எழுத்துவழி மொழிபெயர்ப்பை, உண்மையான வாய்வழி மொழிபெயர்ப்பு அல்லது உண்மையான எழுத்துவழி மொழிபெயர்ப்பு என்று கூறுகிறார் அல்லது உறுதிச் சான்றளிக்கிறார். A பொய்ச் சாட்சியம் கூறியுள்ளார்.

பிரிவு 191-ல் கூறப்பட்டுள்ள 'பொய்ச் சாட்சியம் அளித்தல்' எனும் குற்றத்தில் உள்ள அய்ந்து கூறுகள் (Five elements):

(1) ஒரு நபரால் கூறப்படும் ஒரு பொய்யான உரை, அவர்; (A false statement made by a person, who is:)

(2) உண்மையைக் கூறுவதற்கு ஒரு பிரமாணத்தின்படி கட்டுப் பட்டிருக்க வேண்டும் (Bound by an oath to state the truth; or); அல்லது

(3) உண்மையைக் கூறுவதற்கு சட்டத்தின் ஒரு வெளிப்படையான வகைமுறையின்படி கட்டுப்பட்டிருக்க வேண்டும் (Bound by an express provision of law; or); அல்லது

(4) எந்த விஷயம் குறித்தாவது ஒரு நபர் விளம்புகை ஒன்றை செய்ய சட்டப்படி கட்டுப்பட்டிருக்க வேண்டும் (A declaration which a person is bound by law to make on any subject; and) மற்றும்

(5) அந்த உரை அல்லது விளம்புகையை பொய் என்று தெரிந்தே அல்லது பொய் என்று நம்பியே அல்லது உண்மை என்று நம்பாமல் அவர் செய்திருக்க வேண்டும்.

'பொய்ச் சாட்சியம் அளித்தல்' குற்றத்திற்கு தேவைப்படும் மூன்று முக்கிய முன் நிபந்தனைகள் (The three essential prerequisite conditions for the offence of giving false evidence):

(1) உண்மையை கூற வேண்டும் என்ற சட்டக் கடப்பாடு (A legal obligation to state the truth);

(2) பொய்யான உரையைச் செய்தல் (The making of a false statement); மற்றும்

(3) அதன் பொய்மையில் நம்பிக்கை வைத்தல் (Belief in its falsity).

அறிந்து கொள்ளலில் மூன்று நிலைகள் (Three Degrees of Knowledge):

பிரிவு 191-ன் கீழான பொய்ச் சாட்சியம் அளித்தல் குற்றத்தில், அளிப்பது பொய்யுரை என்பதை அறிந்து கொள்வதில் மூன்று நிலைகள் உள்ளன. அவை,-

1. ஒரு உரை பொய்யானது என்று அறிந்தே, அதனை அளித்தல் (a statement known to be false): இதை நாம் ஏற்கனவே கண்ட எடுத்துக்காட்டுகளில் (அ) மற்றும் (ஆ) ஆகியவை தெளிவாக்குகின்றன.

2. ஒரு உரை பொய்யானது என்று நம்பி, அதனை அளித்தல் (a statement believed to be false): இதனை (ஆ), (இ) மற்றும் (உ) எடுத்துக்காட்டுகள் தெளிவாக்குகின்றன. அவற்றில் (இ) எடுத்துக்காட்டு, மேற்படி நம்பிக்கை எப்பொழுது 'பொய்ச் சாட்சியம் அளித்தல்' குற்றமாகாது என்பதை விளக்குகிறது.

3. ஒரு உரை, உண்மையானது என்று நம்பாமல், அதனை அளித்தல் (a statement not believed to be true): இது குறித்து (உ) எடுத்துக்காட்டு தெளிவாக்குகிறது.

பிரமாணம் செய்தல் (Oath) - விளக்கம்:

பிரிவு 191-ல் கண்ட பிரமாணம் என்பது, "உண்மையே பேசுவேன், முழு உண்மையைத் தவிர வேறு எதுவும் பேச மாட்டேன்" (will speak the truth, the whole truth, nothing but truth) என்று கடவுள் பெயரால் சத்தியம் செய்வதாகும். நடைமுறையில் நீதிமன்றத்தில் சாட்சியளிக்கும் முன்னர் சாட்சிகளிடம் "சத்தியமாகச் சொல்கிறேன்" என்று பிரமாணம் வாங்குவது வழக்கம்.

பொய்யுரைத்தல் (Perjury):

பிரிவு 191-ன்படி, பொய்ச் சாட்சியம் அளித்தல் இங்கிலாந்து நாட்டில் பொய்யுரைத்தல் (Perjury) என அழைக்கப்படுகிறது. இரண்டும் பொதுவாக ஒன்றே என்றாலும் பொய்யுரைத்தலில், குறைந்தது இரண்டு சாட்சியங்களாவது அதை நிரூபிக்க வேண்டும். ஆனால், பொய்ச் சாட்சியம் அளித்தலில் சாட்சிகளின் எண்ணிக்கை அவசியமில்லை. மேலும், பொய்யுரைத்தலில், பிரமாணத்தின்படி கொடுக்கின்ற உரையானது, சம்பந்தப்பட்ட நடவடிக்கையில் எடுத்துக் கொள்ளப்பட்ட விஷயத்திற்கு மூலாதாரமாக இருக்க வேண்டும். ஆனால் பொய்ச் சாட்சியம் அளித்தலில் அவ்வாறிருக்க வேண்டுமென்ற அவசியமில்லை. ஒருவர் அளித்தது பொய்ச் சாட்சியம் என்று தெரிய வந்தாலே, அவரை தண்டித்து விடலாம்.

பொய்ச் சாட்சியம் அளித்தலுக்கு தண்டனை - பிரிவு 193:

பிரிவு 193, பொய்ச் சாட்சியம் அளித்தல் மற்றும் பொய்ச் சாட்சியம் புனைதல் ஆகிய இரண்டு குற்றங்களுக்கும் பொதுவான ஒரு தண்டனையையே விதிக்கிறது. எனவே, அதிலிருந்து இங்கு பொய்ச் சாட்சியம் அளித்தல் குற்றத்திற்குண்டான பகுதியை மட்டுமே காண உள்ளோம்.

பிரிவு 193-ன்படி, ஒரு நீதிமுறை நடவடிக்கையின் எந்தக் கட்டத்திலாவது கருத்துடன் பொய்ச் சாட்சியம் தருபவருக்கு ஏழாண்டுகள் வரை சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும். வேறு சந்தர்ப்பத்தில் கருத்துடன் பொய்ச் சாட்சியம் தருபவருக்கு மூன்றாண்டுகள் வரை சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

முக்கிய வழக்குகள்:

Baban Singh v. Jagdish Singh[1] எனும் வழக்கில் பிரமாணப் பத்திரிக்கை (affidavit) என்பது, சத்தியப் பிரமாணமொன்றின் கீழ் செய்யப்பட்ட ஒரு உறுதிமொழியாகும். எனவே, பிரிவு 191-ல் கூறப்பட்டுள்ள 'பொய்ச் சாட்சியம் அளித்தல்' எனும் குற்றத்திற்கான வரையறை, பிரமாணப் பத்திரிக்கைகளுக்கும் பொருந்தும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

K.T.M.S. Mohd. v. UOI[2] எனும் மற்றொரு முக்கிய வழக்கில் பிரிவு 191-ன் கீழ் வழக்கு நடவடிக்கைகளைத் தொடரும் முன்னர், மிகுந்த எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும், என்று கூறப்பட்டது. மேலும் பிரமாணம் செய்து சாட்சியம் அளிப்பவர், ஒன்றுக்கொன்று முரணான இரண்டு உரைகளை செய்துள்ளார் என்பது மட்டும் போதாது; அவை கருத்துடன் (intentionally) செய்யப்பட்டுள்ளன என்பதும் மெய்ப்பிக்கப்பட

1. A.I.R. 1967 S.C. 68 at p. 70
2. A.I.R. 1992 S.C. 1831 at p. 1840; 1992 (3) S.C.C. 178 : 1998 Cri. L.J. 2781

வேண்டும். மேலும் பொய்யுரைத்தலுக்காக வழக்கிடுவது நீதியின் நலனுக்கு உகந்ததாக இருக்கும் பொழுது மட்டுமே, அவ்வாறு வழக்கிட வேண்டும், என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபட விளக்கியது.

முடிவுரை:

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று (குறள் 297)

பொய்ம்மையே பல தீமைகளுக்கும் வித்தாக அமைகிறது. ஆதலால், பொய் பேசுவதில்லை என்று உறுதி பூண்டோர் எவரும் தீச்செயல்களைத் துணிந்து செய்யமாட்டார்கள். இதனால் மற்ற அறங்கள் பொய்யாமையைப் போற்றுவோரிடம் இயல்பாகவே அமைந்து விடுகின்றன. எனவேதான், பொய்யாமையாகிய நல்லறத்தை ஆற்றுபவர்கள் வேறு எந்த அறச் செயலையும் தனித்துச் செய்ய வேண்டியதில்லை என்பதை மேற்படி குறள் மூலம் வள்ளுவர் வலியுறுத்துகிறார்.

11. Explain with illustration the offence of fabricating false evidence. (பொய்ச் சான்று புனைதல் குற்றத்தை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Fabricating false evidence - Write short notes. (பொய்ச் சாட்சியம் புனைதல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

நீதிமன்றத்திலோ அல்லது ஒரு அதிகாரியால் நடத்தப்பெறவிருக்கும் சட்டப்படியான நடவடிக்கையிலோ பயன்படுத்தப்படுவதற்கென ஓர் ஆவனத்தை எழுதுவதும், ஆவணங்களைத் திருத்துவதும், சூழ்நிலைகளை உண்டு செய்வதும் பொய்ச் சாட்சியம் புனையும் குற்றமாகும். இதைத்தான் இந்திய தண்டனைச் சட்டத்தின் 192-வது பிரிவு சட்ட மொழியில் பின்வருமாறு கூறுகிறது.

பொய்ச் சாட்சியம் புனைதல் - பிரிவு 192 கூறும் வரையறை:

புத்தகம் அல்ல பதிவேடு எதிலும் சூழ்நிலை எதையேனும் அல்லது பொய்யான பதிவு (false entry) எதையேனும், அல்லது ஒரு பொய்யுரையைக் கொண்ட ஆவணம் (document containing a false statement) எதையேனும், அத்தகைய சூழ்நிலை, பொய்ப்பதிவு, பொய்யுரை ஒரு நீதிமன்ற நடவடிக்கையிலோ (in a judicial proceeding) அல்லது ஒரு பொது ஊழியர் என்ற முறையில் அவர் முன்போ, அல்லது ஒரு இசைவுத் தீர்ப்பாளர் முன்போ எடுக்கப்பட்ட நடவடிக்கையில் (in a proceeding taken by law before a public servant as such or before an arbitrator), சாட்சியத்தில் வெளியாகும் என்றும் மற்றும் அவ்வாறு சாட்சியத்தில் வெளியாகும் சூழ்நிலை, பொய்ப்பதிவு அல்லது பொய்யுரை அத்தகைய நடவடிக்கையில்

அந்தச் சாட்சியத்தின் பேரில், ஓர் அபிப்பிராயத்தைத் கொள்ள வேண்டியிருக்கிற எவரையும் (may cause any person who in such proceeding is to form an opinion upon the evidence), அந்த நடவடிக்கையில் முடிவுக்கான ஒரு முக்கியமான விஷயத்தையொட்டித் தவறான அபிப்பிராயம் கொள்ளுமாறு செய்யக் கூடும் என்ற கருத்துடன் உண்டாக்குகிற, செய்கிற அல்லது புனைகிற எவரொருவரும் பொய்ச் சாட்சியம் புனைபவர் எனப்படுவார்.

பிரிவு 192 உணர்த்தும் பொருள்:

பிரிவு 192-ல் கண்ட கடினமான சட்ட வாசகங்களை நாம் பின்வரும் முறையில் எளிதாக்கலாம். அதாவது, நீதிமன்ற நடவடிக்கை, பொது ஊழியர் அல்லது இசைவுத் தீர்ப்பாளர் நடத்தும் சட்டப்படியான நடவடிக்கை ஆகியவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் அதிலும் ஒரு முக்கியமான விஷயம் குறித்து தவறான அபிப்பிராயம் கொள்ள வேண்டும் என்ற கருத்தோடு புத்தகத்திலோ, பதிவேட்டிலோ பொய்யாக எழுதி அல்லது ஒரு பொய்யுரையைக் கொண்ட பொய்யான ஆவணம் உண்டாக்கி, அல்லது ஒரு சூழ்நிலையை உண்டு செய்து அதன் மூலம் அந்த நடவடிக்கைக்கான பொய்ச் சாட்சியம் உண்டாக்குதல், 'பொய்ச் சாட்சியம் புனைதல்' குற்றமாகிறது. அவ்வாறு உண்டாக்குகிற, செய்கிற அல்லது புனைகிற எவரொருவரும். 'பொய்ச் சாட்சியம் புனைபவர்' ஆவார்.

பிரிவு 192-ன் கீழான எடுத்துக்காட்டுகள்:

(அ) Z என்பவருக்கு சொந்தமான ஒரு பெட்டியில் நகைகளை, அந்தப் பெட்டியில் அவை காணப்படலாம் என்றும், அந்த சூழ்நிலை Z திருட்டுக் குற்றத்திற்காகத் தீர்ப்புத் தண்டனை பெறுவதற்கு காரணமாகலாம், என்கிற கருத்துடன் A என்பவர் போடுகிறார். A என்பவர் பொய்ச் சாட்சியம் புனைந்திருக்கிறார்.

(ஆ) ஒரு நீதிமன்றத்தில் ஒன்றுக்கு உறுதியூட்டும் சாட்சியமாகப் பயன்படுத்தும் பொருட்டு, A என்பவர் தம் கடைப் புத்தகத்தில் ஒரு பொய்ப்பதிவுச் செய்கிறார். A பொய்ச் சாட்சியம் புனைந்திருக்கிறார்.

(இ) ஒரு குற்றச் சதிக்காக Z என்பவர் தண்டிக்கப்பட வேண்டும் என்ற கருத்துடன், அத்தகைய குற்றச் சதிக்கு கூட்டுக் குற்றவாளி ஒருவருக்கு எழுதப்படுவது போன்று, Z-யின் கையெழுத்தைப் போல் தோன்றும் முறையில் A என்பவர் ஒரு கடிதம் எழுதி காவல் அலுவலர்கள் அநேகமாகச் சோதனை செய்யக்கூடும் என்று தாம் அறிகிற இடத்தில் அந்தக் கடிதத்தை வைக்கிறார். A பொய்ச் சாட்சியம் புனைந்திருக்கிறார்.

பொய்ச் சாட்சியம் புனைதல் குற்றத்திற்குத் தேவையான மூன்று கூறுகள் (Three elements for the offence of fabricating false evidence):

(1) (அ) சூழ்நிலை ஏதேனும் இருப்பதாக உண்டாக்கச் செய்தல் (causing of any circumstances to exist); அல்லது

(ஆ) பொய்யான பதிவு எதையேனும் உண்டாக்குதல் (making any false entry); அல்லது

(இ) பொய்யுரை கொண்ட ஆவணம் எதையேனும் உண்டாக்குதல் (making any document containing a false statement);

2. அவை (அ) ஒரு நீதிமன்ற நடவடிக்கையிலோ; அல்லது (ஆ) ஒரு பொது ஊழியர் முன்பு; அல்லது (இ) ஒரு இசைவுத் தீர்ப்பாளர் முன்பு சட்டப்படி எடுக்கப்பட்ட ஒரு நடவடிக்கையில் சாட்சியத்தில் வெளியாகலாம் என்ற கருத்துடன் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

3. அவை, அத்தகு நடவடிக்கைகளில் அந்தச் சாட்சியத்தின் பேரில் ஓர் அபிப்பிராயத்திற்கு வர வேண்டியிருக்கிற எவரையும், அந்த நடவடிக்கைகளில் முடிவுக்கான ஒரு முக்கியமான விஷயத்தையொட்டித் தவறான அபிப்பிராயம் கொள்ளுமாறு செய்தலுக்காக இருக்க வேண்டும்.

பொய்ச் சாட்சியம் புனைதல் - பிரிவு 193 கூறும் தண்டனை:

பிரிவு 193-ன்படி, ஒரு நீதிமுறை நடவடிக்கையின் எந்தக் கட்டத்திலாவது உபயோகிக்கப்படும் பொருட்டுப் பொய்ச் சாட்சியம் புனைபவருக்கு ஏழாண்டுகள் வரை சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும். வேறு எந்தச் சந்தர்ப்பத்திலும் கருத்துடன் பொய்ச் சாட்சியம் புனைபவருக்கு மூன்றாண்டுகள் வரை சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

முக்கிய வழக்குகள்:

Abramayi v. Joseph[1] - பிரிவு 192-ன்படி, ஒரு நீதிமுறை நடவடிக்கையில் அல்லது ஒரு பொது ஊழியர் என்ற முறையில் அவர் முன்பு சட்டப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கையொன்றில் பயன்படும் வண்ணம் சாட்சியம் புனையப்படுதல், பொய்ச் சாட்சியம் புனைதலாகிறது. இதிலி ருந்து நீதிமுறை அல்லது நீதிமுறை போன்ற (judicial or quasi-judicial) நடவடிக்கைகளில் மட்டுமல்லாது, பொது ஊழியர் முன்பு எடுக்கப்படும் நீதிமுறையல்லாத நடவடிக்கைகளில் (non-judicial proceedings) பயன்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் புனையப்படும் சாட்சியத்திற்கும் பிரிவு 192 பொருந்தக் கூடியதே என்பது தெளிவாகிறது. இவற்றின் அடிப்படையில் சர்ச்சைக்குள்ளான மேற்படி வழக்கில் ஒரு பிரச்சனை எழுந்தது.

மேற்படி வழக்கின் பொருண்மைகளின்படி குற்றஞ்சாட்டப்பட்டவன் பட்டறை ஒன்றைக் கட்ட விரும்பினான். அதற்கு நகராட்சியின் நிர்வாக அதிகாரியிடமிருந்து உரிமம் பெற வேண்டும். ஆனால் பட்டறை கட்டுவதற்கு இடம் கிடைக்கவில்லை. எனவே உரிமம் வழங்குவதற்காக நகராட்சி நிர்வாக அதிகாரி முன்பு சட்டப்படி எடுக்கப்படும் நடவடிக்கையில்

1. 1960 K.L.J. 1307

ஒரு சாட்சியமாக பயன்படுத்த வேண்டும் என்ற கருத்துடன், ஒரு பொய்யான வாடகை ஆவணத்தை எழுதிக் கொண்டான் அந்நடவடிக்கையில் அது ஒரு பொய்யான ஆவணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இது, பிரிவு 192-ன் கீழான பொய்ச் சாட்சியம் புனையும் குற்றமாகும், என்று கேரளா உயர் நீதிமன்றம் கூறியது. அப்பொழுது நீதியரசர் **P.T. இராமன்** அவர்கள், பிரிவு 192-ல் உள்ள 'பொது ஊழியர் என்ற முறையில் அவர் முன்பு சட்டப்படி எடுக்கப்பட்ட நடவடிக்கை' என்பதில் நீதிமுறையல்லாத நடவடிக்கைகளும் அடங்கும் என்றும், ஆனால் அவை சட்ட வகைமுறைகளின் கீழ் எடுக்கப்பட்டதாக இருக்க வேண்டும் என்றும், மேற்கண்ட வழக்கில் நகராட்சி நிர்வாக அதிகாரியின் முன்பு உரிமம் வழங்குவதற்காக எடுக்கப்பட்ட நடவடிக்கை நீதிமுறையல்லாததானாலும், சட்டப்படியானது என்றும், எனவே அதில் பொய்யான வாடகை ஆவணத்தை கொடுத்தது பொய்ச் சாட்சியம் புனைதல் குற்றமாகிறது என்றும் கூறினார்.

Dr. Dutt v. State of U.P.[1] - எனும் மற்றொரு முக்கிய வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர், இலண்டன் மாநகரில் உள்ள விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்பஞ் சார்ந்த இம்பீரியல் கல்லூரியில் பட்டயப் படிப்பு படித்துள்ளதாகக் கூறப்பட்டார். எனவே குற்ற வழக்கொன்றில் அவர் வல்லுநர் சாட்சியம் (expert evidence) அளிக்க அழைக்கப்பட்டார். அவரை சாட்சிக் கூண்டிலேற்றி விசாரணை செய்யும் பொழுது, அவரது மேற்படி படிப்பு தொடர்பான சான்றிதழ்களை ஆஜர்படுத்தும்படி கோரப்பட்டார். அவரும், தனது சான்றிதழ்களை நீதிமன்றத்தில் சமர்ப்பித்தார். ஆனால் அவை யாவும் பொய்யானவை என்பது கண்டறியப்பட்டன. எனவே அவர் பொய்ச் சாட்சியம் புனைந்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டார். எனினும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. அங்கு, மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவர் தம்மை சம்பந்தப்பட்ட துறையில் ஒரு வல்லுநராக பொய்யாக புனைந்து கொண்டு, அவர் சாட்சியமளித்த வழக்கில் ஒரு தவறான அபிப்பிராயத்திற்கு வரும்படி, அந்நீதிமன்ற நீதிபதியைச் செய்துள்ளதால் அவர் பிரிவுகள் 192 மற்றும் 196-ன்படி தண்டனைக்குரியவரே என்று தீர்ப்பு பகரப்பட்டது.

பொய்ச் சாட்சியம் அளித்தல் அல்லது பொய்ச் சாட்சியம் புனைதல் ஆகிய குற்றங்களின் மிகுதீங்கு நிலைகள் (Aggravated forms of the offences of Giving or Fabricating false evidence)[2]:

பிரிவு 194-ன்படி, மரண தண்டனையை முயன்று ஒருவருக்கு வாங்கித்தரும் கருத்துடன் பொய்ச் சாட்சியம் அளித்தல் அல்லது புனைதல் குற்றத்தை செய்யும் எவரொருவருக்கும் ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைவாசமோ தண்டனையாக விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கலாம்.

1. A.I.R. 1966 S.C. 523; 1966 Cri. L.J. 459.
2. முந்தய வினாவின் விடைக்கும் இப்பத்தியை சுட்டிக் காட்டலாம் - ஆசிரியர்

பிரிவு 195-ன்படி, ஆயுள் தண்டனையோ அல்லது சிறைத் தண்டனையோ விதித்துத் தண்டிக்கப்படக் கூடிய குற்றத்திற்கான தண்டனைத் தீர்ப்பை முயன்று பெற்றுத்தரும் கருத்துடன் பொய்ச் சாட்சியம் அளித்தல் அல்லது புனைதல் குற்றத்தை செய்கிற எவரொருவருக்கும் அக்குற்றத்திற்காக தண்டனைத் தீர்ப்பளிக்கப்பட்ட ஒருவர் தண்டனைக்குள்ளாவதைப் போன்றே தண்டனை விதிக்கப்படும்.

பிரிவு 196-ன்படி, பொய் என்று தெரிந்தே சாட்சியத்தைப் பயன்படுத்தும் எவரொருவருக்கும், பொய்ச் சாட்சியம் கொடுத்தது போன்றே அல்லது புனைந்தது போன்றே தண்டனை விதிக்கப்படும்.

பிரிவு 197-ன்படி, பொய்ச் சான்றிதழ் அளிக்கும் அல்லது அதற்குக் கையொப்பமிடும் (issuing or signing false certificate) எவரொருவருக்கும் அவர் பொய்ச் சாட்சியம் கொடுத்தது போன்றே தண்டனை விதிக்கப்படும்.

பிரிவு 198-ன்படி, பொய்யானது என்று தெரிந்த ஓர் சான்றிதழை உண்மையானது போலப் பயன்படுத்தும் எவரொருவருக்கும், அவர் பொய்ச் சாட்சியம் கொடுத்தது போன்றே தண்டனை விதிக்கப்படும்.

பிரிவு 199-ன்படி, சட்டப்படி சாட்சியமாகப் பெற்றுக் கொள்ளத் தக்க விளம்புகையில் (declaration) பொய்யுரை செய்யும் எவரொருவருக்கும் அவர் பொய்ச் சாட்சியம் கொடுத்தது போன்றே தண்டனை விதிக்கப்படும்.

பிரிவு 200-ன்படி, பொய் என்று தெரிந்தே ஓர் விளம்புகையை உண்மை போலப் பயன்படுத்தும் எவரொருவருக்கும், அவர் பொய்ச் சாட்சியம் கொடுத்தது போன்றே தண்டனை விதிக்கப்படும்.

12. Distinguish between
Giving false evidence and Fabricating false evidence.

வேறுபடுத்துக.
பொய்ச் சான்றளித்தலையும் பொய்ச் சான்று புனைதலையும்.

பொய்ச் சாட்சியம் அளித்தல் (பிரிவு 191)	**பொய்ச் சாட்சியம் புனைதல்** (பிரிவு 192)
1. இதில், பொதுக் கருத்து இருந்தாலே போதும் (அறிதல், நம்புதல் போன்று).	இதில் குறிப்பிட்ட கருத்து தேவை (இல்லாத சூழ்நிலை, பொய்ப் பதிவு, பொய்த் தகவல் போன்று)
2. இதில், பொய்ச் சாட்சியம் அளிக்கப்பட்டவுடன் குற்றம் முடிவுற்றதாகிறது.	இதில், பொய்ச் சாட்சியம் புனையப் பட்டு அதனால் யாருக்கேனும் கேடு விளைவித்தால்தான் குற்றம் முடிவுற்றதாகும்.

3. பொது ஊழியரையோ நீதி மன்றத்தையோ ஒரு விஷயத்தைப் பற்றி தவறான முடிவுக்கு கொண்டு வர வேண்டிய அவசியமில்லை.	இங்கு அவசியம்.
4. பொய்ச் சாட்சியம் அளிக்கும் நபர் சத்தியப் பிரமாணம் போன்ற வற்றால் கட்டுப்பட்டிருத்தல் அவசியம்.	இங்கு அவசியமில்லை.
5. ஒரு நீதிமன்ற நடவடிக்கையின் போதுதான் பொய்ச் சாட்சியம் அளிக்கப்பட வேண்டும்.	அவ்வாறு தேவையில்லை. ஏற்படப் போகும் ஒரு நீதிமன்ற நடவடிக் கையில் அல்லது நீதிமுறையல்லாத நடவடிக்கையில் பயனாகும் கருத்துடன் பொய்ச் சாட்சியம் புனையப்படலாம்.

13. a) What is false evidence.
b) Distinguish it from fabricating false evidence.

அ) பொய்ச் சாட்சியம் அளித்தல் என்றால் என்ன?
ஆ) அதனை பொய்ச் சாட்சியம் புனைதலிலிருந்து வேறுபடுத்துக.

(வினா (அ)-விற்கு வினா எண் 10-ன் விடையை எழுதுக.
வினா (ஆ)-விற்கு வினா எண் 12-ன் விடையை எழுதுக.)

பொது நீதிக்கு எதிரான குற்றங்கள்
[Offences against Public Justice]
(பிரிவுகள் 201 முதல் 229 முடிய)

14. State briefly the provisions of the Indian Penal Code regarding "Offences against Public justice". ('பொது நீதிக்கு எதிராள குற்றங்களைப்' பொறுத்து இந்திய குற்றவியல் சட்டத்திலுள்ள வழிவகைகளை சுருங்கக் கூறுக.)

முன்னுரை:

'பொது நீதிக்கு எதிரான குற்றங்கள்' பற்றி இந்திய தண்டனைச் சட்டத்தின் 201 முதல் 229 வரையுள்ள பிரிவுகள் கூறுகின்றன. அவற்றைப் பின்வருமாறு சுருக்கமாக காண்போமா?

சட்டப் பிரிவுகள் கூறுவதாவது:

பிரிவு 201 : ஒரு குற்றம் செய்யப்பட்டிருப்பதாக அறிந்திருந்து அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்து, சட்டப்படியான தண்டனையிலிருந்து

குற்றவாளியை காப்பாற்ற வேண்டுமென்ற கருத்துடன் அக்குற்றம் செய்யப்பட்டதற்கான சாட்சியத்தை யாரேனும் மறைத்தால், அவர் பின்வரும் விதத்தில் தண்டிக்கப்படக்கூடியவர். அதாவது செய்யப்பட்ட குற்றமானது மரண தண்டனைக்குரியதாக இருப்பின், அக்குற்றம் தொடர்பான சாட்சியத்தை மறைக்கும் நபருக்கு ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். அல்லது செய்யப்பட்ட குற்றமானது ஆயுள் தண்டனைக்குரியதாகவோ அல்லது பத்து ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடியதாக இருப்பின், மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். அல்லது செய்யப்பட்ட குற்றத்திற்கு பத்து ஆண்டுகளுக்கும் குறைவான சிறைத் தண்டனை விதிக்கப்படக் கூடியதாக இருப்பின், மேற்படி குற்றத்திற்காக நிர்ணயிக்கப்பட்டுள்ள உச்ச அளவு சிறைத் தண்டனையில் நான்கில் ஒரு பாகம் மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

எடுத்துக்காட்டு : B என்பவர் Z என்பவரைக் கொலை செய்திருக்கிறார் என்பதை அறிந்தே, B-யை தண்டனையிலிருந்து காப்பாற்ற வேண்டும் என்ற கருத்துடன், கொலை செய்யப்பட்ட மேற்படி Z-யின் உடலை மறைத்து வைப்பதற்கு A என்பவர் B-க்கு உதவி புரிகிறார். இங்கு மேற்படி A-க்கு ஏழு ஆண்டு காலத்திற்கு சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 202 : ஒரு குற்றம் செய்யப்பட்டிருப்பதாக அறிந்திருந்தும், அதனைப் பற்றிய தகவலை சட்டப்படி தெரிவிக்க கடமைப்பட்டிருந்தும், அவ்வாறு ஒருவர் செய்யாமல், அதனைக் கருத்துடன் தெரிவிக்காது விட்டுவிட்டால், (intentional omission) அவருக்கு ஆறுமாதம் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 203 : செய்யப்பட்ட ஒரு குற்றத்தைப் பற்றி பொய்யான தகவல் (false information) தருபவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 204 : பத்திரமொன்றை நீதிமன்றத்தில் ஒரு சாட்சியாக தாக்கல் செய்யப்படுவதை தடுக்கும் பொருட்டு, அதனை யாரேனும் அழித்து விட்டால் (destruction), அவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 205 : உரிமையியல் அல்லது குற்றவியல் வழக்குகளில் பொய்யான ஆள்மாறாட்டம் (false personation) செய்பவருக்கு மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 206 : பறிமுதல் செய்வதன் மூலமாகவோ அல்லது நிறைவேற்றுகை செய்வதன் மூலமாகவோ சொத்து கைப்பற்றப்படுவதைத்

தடுப்பதற்காக மோசடியாக அதை அகற்றும் அல்லது மறைத்து வைக்கும் (fradulent removal or concealment) எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 207 : பறிமுதல் அல்லது நிறைவேற்றுகை செய்வதன் மூலமாக, சொத்து கைப்பற்றப்படுவதைத் தடுப்பதற்காக, அச்சொத்தில் தனக்கு பாத்தியதை உள்ளது என மோசடியாக கோரிக்கை செய்யும் (fradulent claim) எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 208 : தனக்குச் சேரவேண்டியதல்லாத தொகைக்கு மோசடியாகத் தீர்ப்பாணையைத் (Decree) தம் பேரில் பிறப்பிக்கும்படி செய்யும் நபர் எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 209 : நீதிமன்றத்தில் நேர்மையற்ற முறையில் (dishonestly) பொய்யான பாத்தியதை கொண்டாடும் நபர் எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 210 : தனக்குச் சேர வேண்டியதல்லாத தொகைக்காக மோசடியாக நீதிமன்றத்திலிருந்து தீர்ப்பாணை பெறும் நபர் எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 211 : தீங்கு செய்யும் கருத்துடன் பொய்யாக குற்றஞ்சாட்டுபவருக்கு (false charge) இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 212 : குற்றஞ்செய்தவருக்கு புகலிடம் (Harbouring Offender) அளிப்பவரை இப்பிரிவு தண்டிக்கிறது.[1]

பிரிவு 213 : ஒரு குற்றஞ்செய்தவரை தண்டனையிலிருந்து காப்பதற்கு பரிசுப் பொருள்கள் (Taking gift, etc.) பெறுபவரை இப்பிரிவு தண்டிக்கிறது.

பிரிவு 214 : குற்றஞ்செய்தவரைக் காப்பதற்கு மறுபயனாக பரிசுப் பொருள்கள் அளிப்பவரை அல்லது சொத்தை திரும்ப ஒப்படைப்பவரை இப்பிரிவு தண்டிக்கிறது.

பிரிவு 215 : திருட்டுப் பொருளை மீட்பதற்கு உதவி செய்வதன் பொருட்டு பரிசுப் பொருள்கள் எதனையும் பெறுபவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

1. ஏற்கனவே பக்கம் எண் 49-ல் விரிவாகக் கண்டுள்ளோம் - ஆசிரியர்

பிரிவு 216 : காவலிலிருந்து தப்பிவிட்ட அல்லது கைது செய்யப்படக் கட்டளையிடப்பட்டிருக்கிற குற்றவாளிக்கு புகலிடம் அளிப்பவரை இப்பிரிவு தண்டிக்கிறது.

பிரிவு 216-A : கொள்ளைக்காரர் அல்லது கூட்டுக் கொள்ளைக்காரர் களுக்குப் புகலிடம் அளிப்பவர்களுக்குண்டான தண்டனையை இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 217 : தண்டனையிலிருந்து ஒரு நபரையும், பறிமுதலிலிருந்து ஒரு சொத்தையும் காக்கும் கருத்துடன் சட்டத்தின் உத்தரவுக்கு கீழ்படியாதிருக்கும் பொது ஊழியருக்கு (public servant) இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 218 : தண்டனையிலிருந்து ஒரு நபரைக் காக்கும் அல்லது பறிமுதலிலிருந்து சொத்தைக் காக்கும் கருத்துடன் பொது ஊழியர் சரியானதல்லாத பதிலை அல்லது எழுத்தை வனைந்தால் அவருக்கு மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 219 : பொது ஊழியர் ஒருவர் நீதிமுறை நடவடிக்கைகளில் சட்டத்திற்கு முரணான அறிக்கை முதலியவற்றை நெறிகேடான முறையில் செய்தால், அவருக்கு ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 220 : அதிகாரம் பெற்ற ஒருவர், தாம் சட்டத்திற்கு முரணாக நடப்பதைத் தெரிந்தே ஒருவரை மேல்விசாரணைக்கு அனுப்பினால் (commitment for trial) அல்லது அடைத்து வைத்தால் (confinement) அவருக்கு ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 221 : கைது செய்யக் கட்டுப்பட்டுள்ள பொது ஊழியர், கருத்துடன் ஒருவரைக் கைது செய்யாது விடுத்தால், அவருக்கு தண்டனை வழங்குவது குறித்து இப்பிரிவு விளக்கமாகக் கூறுகிறது.

பிரிவு 222 : தீர்ப்புத் தண்டனைக்கு அல்லது சட்டப்படி மேல்விசாரணைக்கு அனுப்புதலுக்குட்பட்ட நபரைக் கைது செய்யக் கட்டுப்பட்ட பொது ஊழியர் கருத்துடன் ஒருவரைக் கைது செய்யாது விடுத்தால், அவருக்கு தண்டனை வழங்குவது குறித்து இப்பிரிவு விளக்கமாகக் கூறுகிறது.

பிரிவு 223 : அடைத்து வைக்கப்பட்டதிலிருந்து அல்லது காவலி லிருந்து ஒருவரைக் கவனக்குறைவின் காரணமாக தப்பவிடும் பொது ஊழியருக்கு, இரண்டு ஆண்டுகள் வரையிலான வெறுங்காவல் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 224 : தம்மைச் சட்டப்படி கைது செய்வதை எதிர்ப்பவருக்கு அல்லது தடுப்பவருக்கு, இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப் படும்.

பிரிவு 225 : எவரையேனும் சட்டப்படி கைது செய்வதை எதிர்ப்பவருக்கு அல்லது தடுப்பவருக்கு தண்டனை விதிப்பது குறித்து இப்பிரிவு விளக்குகிறது.

பிரிவு 225-A : மற்றபடி வகை செய்யப்படாத சந்தர்ப்பங்களில் பொது ஊழியர் கைது செய்யாது விடுத்தால் அல்லது தப்பிச் செல்ல இடங்கொடுத்தால், அதற்குண்டான தண்டனை குறித்து இப்பிரிவு விளக்குகிறது.

பிரிவு 225-B : மற்றபடி வகை செய்யப்படாத சந்தர்ப்பங்களில் சட்டப்படி கைது செய்யப்படுவதை எதிர்த்தால் அல்லது தடுத்தால் அல்லது தப்பிச் சென்றால் அல்லது மீட்டால், அவ்வாறு செய்பவருக்கு ஆறு மாதங்கள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 226 : [நீக்கப்பட்டது]

பிரிவு 227 : தண்டனைத் தள்ளுபடி (remission of punishment) நிபந்தனையை மீறுபவரை தண்டிப்பதைப் பற்றி இப்பிரிவு கூறுகிறது.

பிரிவு 228 : நீதிமுறை நடவடிக்கை நடத்தும் போது பொது ஊழியரை கருத்துடன் அவமதிப்பவருக்கு அல்லது குறுக்கிடுபவருக்கு, ஆறு மாதங்கள் வரையிலான வெறுங்காவல் தண்டனையோ அல்லது ஓராயிரம் வரையிலான அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 228-A : சில குற்றங்களால் பாதிக்கப்பட்டவரின் அடையாளத்தை பதிப்பு மற்றும் அச்சடித்தல் மூலம் வெளிப்படுத்துபவருக்கு, இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப் படும்.

பிரிவு 229 : நடுநிலையாளராக (juror) அல்லது மதிப்பீட்டாளராக (assessor) ஆள்மாறாட்டம் செய்பவருக்கு, இரண்டு ஆண்டுகள் சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப் படும்.

முடிவுரை:

நாம் இதுகாறும் கண்ட பொது நீதிக்கு எதிரான குற்றங்களில், 217 முதல் 223 வரையிலான பிரிவுகளும் மற்றும் பிரிவு 225-A-ம் பொது ஊழியர்களால் பொது நீதிக்கு எதிராக செய்யப்படும் குற்றங்களாக உள்ளன என்பது கவனிக்கத்தக்கது.

(v) பொதுமக்களின் சுகாதாரம், பாதுகாப்பு, வசதி, பண்புநலம் மற்றும் ஒழுக்கம் இவற்றைப் பாதிக்கும் குற்றங்கள்

[Offences affecting the Public Health, Safety, Convenience, Decency and Morals]

(பிரிவுகள் 268 முதல் 294 முடிய)

உள்ளே நுழைவதற்கு முன் ஒரு சிறு விளக்கம்

இந்திய தண்டனைச் சட்டத்தின் XIV-வது அத்தியாயத்தில் மேற்கண்ட குற்றங்கள் பொதுத் தொல்லை, மக்களின் உயிருக்கு ஆபத்தான தொற்றுநோயை பரவவிடும் செயல்களைச் செய்தல், உணவுப் பொருட்களில் கலப்படம் செய்தல், மருந்துகளில் மாற்றுப் பொருள்களைக் கலத்தல், பொதுக் குளங்கள், கிணறுகள் இவற்றின் நீரைக் கெடுத்தல், ஆரோக்கியத்திற்கு கெடுதலை விளைவிக்கும் சுற்றுச்சூழலை உருவாக்குதல், பொதுப் பாதுகாப்பிற்கெதிரான குற்றங்கள், ஒழுக்கத்திற்கெதிரான குற்றங்கள் ஆகிய தலைப்புகளின் கீழ் 268 முதல் 294 வரையிலான பிரிவுகளின் வாயிலாக விளக்கப்பட்டுள்ளன. அவற்றில் நாம் இங்கு மிக முக்கியமாக காணவிருக்கும் தலைப்புகள் பொதுத் தொல்லை மற்றும் ஒழுக்கத்திற்கெதிரான குற்றங்களாகும். இனி மேலே தொடர்வோமா?

15. Define "Public Nuisance" and distinguish it from "Private Nuisance". ('பொதுத் தொல்லையை' வரையறுத்து அதை 'தனிப்பட்ட தொல்லை'யிலிருந்து வேறுபடுத்துக.)

(அல்லது)

Distinguish between
Public nuisance and Private nuisance.

வேறுபடுத்துக
பொதுத் தொல்லை மற்றும் தனிப்பட்ட தொல்லை.

(அல்லது)

Public Nuisance - Write short notes. (பொதுத் தொல்லை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

தொல்லை (Nuisance) என்பது இரு வகைப்படும். 1. பொதுத் தொல்லை (Public Nuisance) 2. தனிப்பட்ட தொல்லை (Private Nuisance). பொதுத் தொல்லையென்பது பொதுமக்கள் அனைவரையும் பாதிக்கக் கூடியது. தனிப்பட்ட தொல்லையென்பது ஒரு குறிப்பிட்ட தனிநபரை பாதிப்பதாகும்.

இந்திய தண்டனைச் சட்டம், பொதுமக்களை பாதிக்கும் பொதுத் தொல்லைகளைத்தான் பிரிவு 268-ன் மூலம் விளக்குகிறது. மேலும் பொதுத் தொல்லை விளைவிப்பவர்களை பிரிவு 290-ன் மூலம் தண்டிக்கிறது.

பொதுத் தொல்லை (Public Nuisance) - பிரிவு 268-ன் வரையறை:

பொதுமக்களுக்கு அல்லது அக்கம்பக்கத்திலுள்ள (vicinity) சொத்தில் வசிக்கும் பொதுமக்களுக்கு அல்லது பொதுவாக மக்களுக்கு (people in general), தீங்கு (injury), அபாயம் (danger) அல்லது தொந்தரவு (annoyance) எதையும் விளைவிக்கிற அல்லது பொது உரிமை எதையும் பயன்படுத்தும் சந்தர்ப்பம் பெறக் கூடிய எவருக்கேனும் தீங்கு, இடைஞ்சல் (obstruction), அபாயம் அல்லது தொந்தரவை நிச்சயம் விளைவிப்பதான செயல் (act) அல்லது சட்ட முரணான செயல் தவிர்க்கை (illegal omission) **'பொதுத் தொல்லை'** ஆகும். இவ்வாறு செய்பவர் அல்லது செயல் தவிர்ப்பவர், 'பொதுத் தொல்லை' குற்றம் செய்தவராகிறார்.

பொதுத் தொல்லையில் தனிப்பட்ட ஒருவருக்கு சிறிது வசதி அல்லது அனுகூலம் ஏற்படுகிறது என்ற காரணத்தால், அப்பொதுத் தொல்லையை சட்டம் மன்னிப்பதில்லை.

பொதுத் தொல்லையிலிருந்து காப்பாற்றப்படும் மூன்று மக்கள் பிரிவினர்:

பொதுமக்களின் மூன்று பிரிவினரை பொதுத் தொல்லையிலிருந்து காப்பாற்ற மேற்படி பிரிவு 268 முயற்சிப்பதை அதற்குண்டான மேற்படி வரையறையிலிருந்து அறிந்து கொள்ளலாம். அவர்கள் (a) பொதுமக்கள், (b) அக்கம்பக்கத்திலுள்ள சொத்தில் வசிக்கும் பொதுமக்கள் (c) பொது உரிமையை பயன்படுத்தும் சந்தர்ப்பத்தை பெற்றுள்ள பொதுமக்கள்.

அடிப்படைக் கொள்கை:

"உன்னுடைய சொத்தை பொதுமக்களின் உரிமைக்கு ஊறு விளைவிக்காமல் அனுபவி" (*Sic utere tuo ut rem publicum non laedas* - Enjoy your property in such a way as not to injure the rights of the public) என்ற இலத்தீன் முதுமொழி கூறும் கொள்கையின் அடிப்படையில் 'பொதுத் தொல்லை' என்பது அமைந்துள்ளது.

பொதுத் தொல்லை குற்றத்திற்கு பிரிவு 290 கூறும் தண்டனை (Punishment):

பொதுத் தொல்லைக் குற்றம் செய்பவருக்கு ரூபாய் இருநூறு வரையிலான அபராதம் விதிக்கப்படலாமென **பிரிவு 290** கூறுகிறது.

முக்கிய வழக்குகள்:

Byramaji Edalji[1] எனும் வழக்கில், தங்கள் கண் முன்னர் ஒருவன்

1. 12 B. 4232

தனது வீட்டின் வெரண்தாவில் (Verandah) மாமிசம் அறுக்கிறான் என்றும், அது தங்களது மதத்திற்கு விரோமானது என்றும் ஜெயின மதத்தைச் சார்ந்தோர் சிலர் முறையிட்டனர். ஆனால் இது ஒரு தொல்லையாகாது என பம்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது. ஏனெனில், இங்கு மதம் தலைதூக்குகிறது. இந்திய தண்டனைச் சட்டம் பொதுவாக, பொதுமக்கள் அனைவரையும் பொதுத் தொல்லையிலிருந்து காக்க விரும்புகிறதே தவிர ஒரு குறிப்பிட்ட மதத்தினரை மட்டுமல்ல.

ஆனால், ஆடு, மாடு போன்ற வாயில்லாப் பிராணிகளை ஒரு பொது இடத்தில் கதறக் கதற, இரத்தம் பீச்ச வெட்டினால், அது அவ்வழியாகச் செல்லும் பொதுமக்கள் ஒவ்வொருவருக்கும் செய்யப்படும் தொல்லையாகக் கருதப்படுமென **Zaki-Uddin**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது.

ஆகவே, பொதுப் பாதையிலோ அல்லது அதற்கு அருகிலோ மாமிசம் வெட்டி விற்பதோ அல்லது மீன் விற்பதோ பொதுத் தொல்லையாகாது என **Paung Tha Ri**[2] என்ற வழக்கில் கூறப்பட்டது.

Saminatha Pillai[3] என்ற வழக்கில் பிணத்தை எரியூட்டுவது அல்லது புதைப்பதன் மூலம் அப்புறப்படுத்துவது அனைவராலும் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஒரு வழிமுறையாகும். இதில் சட்டமுரணான தன்மை ஏதும் இல்லை. ஆனால் அவ்வாறு எரியூட்டுவதும் புதைப்பதும் ஒரு பொதுத் தொல்லைக்கு வழிவகுக்கும் முறையில் இருப்பின் அதைத்தான் இந்திய தண்டனைச் சட்டம் தண்டிக்கிறது என்று கூறப்பட்டது. இத்தீர்ப்பு பின்னர் **Muhammad Mahiddin v. Municipal Commissioner**[4] எனும் வழக்கிலும் பின்பற்றப்பட்டது.

Gobind Singh v. Shanti Sarup[5] எனும் வழக்கில் ஒரு ரொட்டி வியாபாரி, ரொட்டி சுட ஒரு சூட்டடுப்பையும் (Oven) மற்றும் ஒரு புகைபோக்கியையும் (Chimney) கட்டினார். அப்புகைபோக்கியிலிருந்து வந்த புகை காற்றில் கலந்து சுற்றிலும் பரவி பொதுமக்களின் உடலுக்கு தீங்கு விளைவித்தது. எனவே, இது ஒரு பொதுத் தொல்லையாகும் என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

தனிப்பட்ட தொல்லை (Private Nuisance):

தனிப்பட்ட ஒருவரை மட்டும் பாதிக்கும் தொல்லைச் செயல், தனிப்பட்ட தொல்லை எனப்படுகிறது. இதனைத் தண்டிக்க இந்திய தண்டனைச் சட்டத்தில் வழியில்லை. ஏனெனில் இது ஒரு உரிமையியல் தீங்காகும் (civil wrong).

1. 10 A. 44
2. 1860 P.T.L.R. 94
3. 19 M. 464
4. 25 M. 118
5. A.I.R. 1979 S.C. 143

எடுத்துக்காட்டாக, அடுத்த வீட்டில் உடல் நலனுக்கு ஒவ்வாத அயல் பொருட்களை புகவிட்டு தொந்தரவு செய்தல் (நீர், புகை, ஆவி, நாற்றம், ஒலி, செடி கொடிகள், நோய் பரப்பும் கிருமிகள், இவை போன்ற அயல் பொருட்களை அடுத்தவர் வீட்டிற்குள் புக விடுதல்). இச்செயல் தனிப்பட்ட தொல்லை ஆகிறது. பாதிக்கப்பட்டவர் உரிமையியல் நீதிமன்றத்தில் வழக்கிட்டுதான் தடையுறுத்துக் கட்டளை (injunction), நஷ்டஈடு போன்ற நிவாரணங்களைப் பெற முடியும்.

பொதுத் தொல்லை, தனிப்பட்ட தொல்லை - வேறுபாடு:

பொதுத் தொல்லை (Public Nuisance)	தனிப்பட்ட தொல்லை (Private Nuisance)
1. பொதுத் தொல்லை என்பது பொதுவாக, பொதுமக்கள் அனைவருக்கும் செய்யப்படக் கூடியதாகும்.	தனிப்பட்ட தொல்லை என்பது ஒரு குறிப்பிட்ட தனி நபருக்கு மட்டும் இழைக்கப்படுவதாகும்.
2. பொதுத் தொல்லை செய்பவர் இந்திய தண்டனைச் சட்டத்தால் தண்டிக்கப்படுவார்.	தனிப்பட்ட தொல்லை செய்பவரை தண்டிக்க இந்திய தண்டனைச் சட்டத்தில் வழியில்லை.
3. இது பொதுத் தீங்காகும் (Public wrong).	இது தனிப்பட்டதொரு தீங்காகும் (Private wrong). பாதிக்கப்பட்டவர் இழப்பீடு கோரி வழக்குத் தொடுக்கலாம்.
4. பொதுத் தொல்லையானது ஒரு குற்றவியல் வழக்காக அரசால் தொடுக்கப்படும் (Public Prosecution).	தனிப்பட்ட தொல்லை சம்பந்தப்பட்ட வழக்கு உரிமையியல் வழக்காகும். இது பாதிக்கப்பட்ட நபரால் தொடரப்படும்.

16. What is obscene? Comment. (ஆபாச வெளியீடுகள் என்றால் என்ன? விமர்சிக்கவும்.)

(அல்லது)

Obscene - Write short notes. (ஆபாசம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Hicklin's Test - Write short notes. (ஹிக்கிலின்ஸ் தேர்வு - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

புத்தகங்கள், துண்டு வெளியீடுகள், சித்திரம், ஓவியம், உருவமைப்பு

போன்றவைகள் மனிதனின் காம இச்சையை தூண்டும் விதமாக இருப்பின், அவை ஆபாச வெளியீடுகள் (Obscene) எனப்படுகின்றன. இந்த ஆபாச வெளியீடுகளை விற்பதும், வாடகைக்கு விடுவதும் குற்றமாகும். ஆனால் மேற்படி வெளியீடுகள் மத சம்பந்தமான நோக்கங்களுக்காக இருப்பின், அதனை ஆபாச வெளியீடுகள் எனக் கூறவியலாது. உதாரணமாக கோவில்களில் உள்ள நிர்வாண சிற்பங்களை குறிப்பிடலாம். இவை குறித்து **292 முதல் 294 வரை உள்ள பிரிவுகள்** குறிப்பிடுகின்றன.

ஆபாச புத்தகங்கள் முதலியவற்றை விற்பனை செய்தல் முதலியன (Sale, etc. of obscene books, etc.) - பிரிவு 292(2) கூறுவதாவது:

பிரிவு 292(2) (a) : ஆபாச புத்தகம், துண்டு வெளியீடு, தாள், சித்திரம், ஓவியம், உருவமைப்பு அல்லது உருவம், அல்லது வேறு ஆபாசப் பொருள் எதையாகிலும் விற்கிற, வாடகைக்கு தருகிற, விநியோகம் செய்கிற, பொதுமக்களுக்குக் காட்சியாக வைக்கிற, அல்லது வேறெந்த முறையிலேனும் புழக்கத்திற்கு விடுகிற, அல்லது விற்பனை, வாடகை, விநியோகம், பொதுக்காட்சி, அல்லது புழக்கத்தின் பொருட்டுச் செய்கிற, உண்டாக்குகிற அல்லது தம் வசம் வைத்திருக்கிற, அல்லது

(b) ஏதேனும் ஆபாசப் பொருளை மேற்சொன்ன நோக்கங்களில் எதற்காகவேனும் அல்லது அத்தகைய பொருள் விற்கப்படும், வாடகைக்கு தரப்படும், விநியோகம் செய்யப்படும் அல்லது பொதுமக்களுக்குக் காட்சியாக வைக்கப்படும் என்று, அல்லது அவ்வாறு நம்பக் காரணம் பெற்றிருந்து, இறக்குமதி செய்கிற அல்லது ஏற்றுமதி செய்கிற அல்லது அனுப்புகிற, அல்லது

(c) தொழில் ஏதொன்றினின்றும் அது நடைபெறும் போது மேற்சொன்ன நோக்கங்களில் எதற்காகவேனும், அத்தகைய ஆபாசப் பொருள்கள் எவையேனும் செய்யப்படுகின்றன, உண்டாக்கப்படுகின்றன, விலைக்கு வாங்கப்படுகின்றன, வைத்திருக்கப்படுகின்றன, இறக்குமதி செய்யப்படுகின்றன, ஏற்றுமதி செய்யப்படுகின்றன, அனுப்பப்படுகின்றன, பொதுமக்களுக்கு காட்சியாக வைக்கப்படுகின்றன, அல்லது ஏதேனுமொரு முறையில் புழக்கத்தில் விடப்படுகின்றன என்று அறிந்து, அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்து பங்கு கொள்கிற, அல்லது இலாபம் பெறுகிற, அல்லது

(d) இந்தப் பிரிவின்படி குற்றமாகிற செய்கை எதிலும் எவரேனும் ஈடுபட்டிருப்பதாக, அல்லது ஈடுபடத் தயாராக இருப்பதாக, அல்லது அத்தகைய ஆபாசப் பொருள் எதுவும் எவர் ஒருவரிடமிருந்து அல்லது எவர் மூலமாகப் பெற்றுக்கொள்ள முடியும் என்று விளம்பரம் செய்கிற, அல்லது எந்த வழியிலாகிலும் தெரியப்படுத்துகிற, அல்லது

(e) இப்பிரிவின்படி குற்றமாகின்ற எந்தச் செய்கையையும் செய்ய முனைகிற அல்லது செய்ய முயலுகிற எவராயினும்,

அவர் முதல் தடவை மேற்படி குற்றம் செய்தவராக இருப்பின், அவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் மற்றும் இரண்டாயிரம் ரூபாய் வரையிலான அபராதமும் விதிக்கப்படும். இதே, அவர் இரண்டாவது தடவையாகவும் அதற்கு பின்னிட்டும் செய்தவராக இருப்பின், அவருக்கு அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் மற்றும் அய்யாயிரம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 292-ன் கீழான விதிவிலக்கு:

புத்தகம், துண்டு வெளியீடு, எழுத்து, சித்திரம் அல்லது ஓவியம் எதுவும் மத சம்பந்தமான நோக்கங்களுக்காக வைக்கப்படுகிற அல்லது பயன்படுத்தப்படுகிற எதற்கும் இப்பிரிவு பொருந்தாது. மேலும் கோவில் எதிலும் அல்லது விக்கிரகங்களைத் தாங்கிச் செல்கிற தேர் எதிலும் சிற்பமாக்கப்பட்ட, செதுக்கப்பட்ட, ஓவியமாக்கப்பட்ட எந்த ஓர் உருவமைப்பிற்கும் இப்பிரிவு பொருந்தாது.

எது ஆபாசம் ஆகாது? - விதிவிலக்கிற்கு எடுத்துக்காட்டுகள்:

ஆபாச வெளியீடுகள் இலக்கிய வளர்ச்சிக்காகவோ, கலை வளர்ச்சிக்காகவோ, கல்வி வளர்ச்சிக்காகவோ அல்லது விஞ்ஞான வளர்ச்சிக்காகவோ இருப்பின் அவைகளை ஆபாச வெளியீடுகள் என்று கூற முடியாது. இலக்கியங்களில் காளிதாசரால் எழுதப்பட்ட சாகுந்தலம் எனும் நூல், மிகுந்த காதற் சுவை கொண்டதாகும். கூடல், அதன் பின் ஊடல், ஊடல் தணிந்து மீண்டும் கூடல் என்று மன்னவனுக்கும் சகுந்தலைக்கும் இடையில் இருந்த காதல் ரசத்தை அந்நூல் சித்தரித்தது. அதில் காம ரசமும் இருந்தது. ஆனால் அதை விரசம் என்று ஒதுக்கிவிட முடியாது. தமிழ் இலக்கியங்களில் ஒன்றான அகநானூற்றில் தலைவன் - தலைவியின் காதல், கவிதை வடிவில் காவியமாக உள்ளது. இவையெல்லாம் இலக்கிய வளர்ச்சியாகுமே தவிர இழிவான ஆபாச வெளியீடுகள் ஆகா.

Lady Chatterly's Lover, Memories of the funny hill என்ற புத்தகங்கள் **டி.எச். லாரன்ஸ்** என்ற புகழ் பெற்ற ஆசிரியரால் எழுதப்பட்டவை. அவைகள் சில நாடுகளில் ஆபாச புத்தகங்கள் என்றும் சில நாடுகளில் கலை நோக்குடன் எழுதப்பட்ட இலக்கிய நூல்கள் என்றும் கூறப்பட்டன.

இந்தியாவில் **கஜுராஹோ கோவில்களில்** உள்ள சிற்பங்கள் காம இச்சையை தூண்டும் படியாகத்தான் உள்ளன. ஆனால் அவை பிரிவு 292-ன் கீழ் உள்ள விதிவிலக்கின்படி ஆபாச வெளியீடுகள் ஆகாது. அவற்றைக் கலைக் கண்களோடு பார்க்க வேண்டுமேயொழிய காமக் கண்களோடு பார்த்தல் கூடாது.

முக்கிய வழக்குகள்:

Re Ghulam Hussain[1] என்ற வழக்கில் ஒரு பதிப்பகத்தினர், ரம்ஜான் நோன்பு சமயத்தில் செய்யத் தடை செய்யப்பட்டுள்ள உடலுறவு உள்ளிட்ட பல செயல்களை ஆபாசமான விளக்கங்களுடன் ஒரு புத்தகத்தை அச்சிட்டு வெளியிட்டது. இவ்வாறு செய்தது மேற்கண்ட பிரிவின்படி குற்றமாகும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Shaw v. DPP[2] என்ற வழக்கில் உடலுறவு கொள்ள பரத்தைகளை (Prostitutes) அழைக்க உதவும் தொலைபேசி எண்கள் அடங்கிய ஒரு தொகுப்புப் புத்தகத்தை (Ladies Directory) குற்றவாளி வெளியிட்டார்.[3] இது ஆபாச வெளியீட்டுக் குற்றம் என தீர்ப்பளிக்கப்பட்டது.

Ranjit D. Udeshi v. State of Maharashtra[4] எனும் வழக்கில் பிரிவு 292-ஆனது இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 19-வது ஷரத்தால் வழங்கப்பட்டுள்ள பேச்சு மற்றும் கருத்து வெளியீட்டுச் சுதந்திரத்தினை மீறுவதாக உள்ளது; எனவே பிரிவு 292-ஐ அரசியலமைப்புச் சட்டத்தை மீறியது என்றும், அதனால் செல்லாது என்றும் அறிவிக்கக் கோரி உச்ச நீதிமன்றத்தில் மனுச் செய்யப்பட்டது. ஆனால் ஆபாசமாக பேசவோ அல்லது ஆபாசக் கருத்துகளை வெளியிடவோ எவருக்கும் சுதந்திரம் இல்லை என்றும், அது பேச்சு மற்றும் கருத்து வெளியிட்டு சுதந்திரத்தின் மீதான ஒரு நியாயமான கட்டுப்பாடாகும் (reasonable restriction) என்றும், எனவே பிரிவு 292, அரசியலமைப்புச் சட்டப்படி செல்லத்தக்கதே என்றும் உச்ச நீதிமன்றம் கூறி, மேற்படி மனுவை தள்ளுபடி செய்து விட்டது.

Uttam Singh v. State[5] - இவ்வழக்கில் சீட்டுக்கட்டு (Playing Cards) வியாபாரி ஒருவர் விற்ற சீட்டுக்கட்டிலுள்ள சீட்டுக்களின் மறுபுறம் பெண்களின் நிர்வாணப் படங்கள் இருந்தன. எனவே, அவ்வியாபாரிக்கு பிரிவு 292-ன்படி ஆறுமாத கடுங்காவல் தண்டனையும், அய்ந்நூறு ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

Raj Kapoor v. Laxman[6] - இவ்வழக்கு, ஆபாசக் காட்சிகள் நிறைந்த 'சத்தியம் சிவம் சுந்தரம்' எனும் சர்ச்சைக்குள்ளான திரைப்படம் தொடர்பானதாகும். *(இதன் விரிவான பொருண்மைகளுக்கு இந்நூலின் பக்கம் எண் 109-ல் காண்க. - ஆசிரியர்)*

1. 1917 P.R.No. 5; 39 I.P.C. 473
2. 1962 Appeal Cases 220; [1961] 2 All. E.R. 446
3. இத்தகைய அழைப்புகள் தற்பொழுது இணையதளத்தின் (Internet) வழியாக வெளியாகின்றன என்பது அதிர்ச்சி தரும் உண்மை. அவையும் தண்டிக்கத் தக்கதே.
4. A.I.R. 1965 S.C. 881 : 1965 (2) Cri. L.J. 8
5. A.I.R. 1974 S.C. 1230 : 74 Cri. L.J. 923
6. A.I.R. 1980 S.C. 605

இளைஞர்களுக்கு ஆபாசப் பொருட்களை விற்பனை செய்தல் முதலியன (Sale, etc. of obscene objects to young persons) - பிரிவு 293 கூறுவதாவது:

பிரிவு 293 : இருபது வயதிற்கு உட்பட்ட எவருக்கும் முந்திய உடைசிப் பிரிவில் (அதாவது பிரிவு 292-ல்) கூறப்பட்டிருப்பதைப் போன்ற அத்தகைய ஆபாசப் பொருள் எதையும் விற்கிற, வாடகைக்குத் தருகிற, விநியோகம் செய்கிற, காண்பிக்கிற, அல்லது புழக்கத்தில் விடுகிற அல்லது அவ்வாறு செய்ய முனைகிற அல்லது முயலுகிற எவரொருவருக்கும்,

அவர் முதல் தடவை மேற்படி குற்றத்தைச் செய்தவராக இருப்பின் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் இரண்டாயிரம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும். இதே, அவர் இரண்டாவது தடவை அல்லது அதற்கு பின்னிட்டு செய்தவராக இருப்பின், அவருக்கு ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும், அய்ந்தாயிரம் ரூபாய் வரை அபராதமும் விதிக்கப்படும்.

ஆபாச செயல்களும் பாடல்களும் (Obscene acts and songs) - பிரிவு 294 கூறுவதாவது:

பிரிவு 294 : மற்றவர்களுக்குத் தொந்தரவாக இருக்கும்படி,

a) ஒரு பொதுவிடத்தில், ஆபாசச் செயல் எதையும் செய்கிற, அல்லது

b) ஒரு பொதுவிடத்தில், அல்லது அதற்கு அருகில் ஆபாசப் பாடல்கள், கதைப் பாடல்கள் அல்லது சொற்கள் எதையும் பாடுகிற, ஒப்பிக்கிற அல்லது மொழிகிற எவரொருவருக்கும் மூன்று மாதம் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

ஹிக்கிலின்ஸ் தேர்வு (Hicklines Test) அல்லது ஆபாசச் சோதனை (Test of Obscenity):

ஒரு விஷயம் எந்நிலையில் ஆபாசமாக ஆகிறது என்பதைச் சோதனை செய்ய, **R. v. Hicklin**[1] என்ற வழக்கில் **தலைமை நீதிபதி Cockbourn** பின்வருமாறு விளக்குகிறார். "ஆபாசம் என குற்றம் சாட்டப்பட்டுள்ள விஷயத்தின் போக்கானது, ஒழுக்கக் கேடான தாக்கங்களுக்காக யார் ஒருவரின் மனது திறந்துள்ளதோ அல்லது யார் ஒருவரின் கையில் இம்மாதிரியான பதிப்பு விழலாம் என்று உள்ளதோ அவர்களை சீரழிக்கவோ அல்லது கெடுக்கவோ செய்ய வேண்டும்".[2]

---

1. [1868] 3 Q.B. 360. at p. 371
2. "Whether the tendency of the matter charged as obscene is to deprave and corrupt those whose minds are open to immoral influence and in whose hands a publication of this sort may fall" - Cockbourn C.J.

நூல்களை படிப்பவர்களிடையே ஒழுக்கக் கேடான, நெறிகெட்ட ஆபாச நூல்களை விரும்பிப் படிக்கும் வாசகர்களும் இருக்கலாம். ஆபாச நூல்கள் பெரும்பாலும் இளவயதில் இருக்கும் ஆண், பெண் இருபாலாரிடமும் புழங்குகின்றன. (ஏனெனில் இவர்களது மனதுதான் எளிதாக ஒழுக்கக்கேடான தாக்கங்களுக்கு பலியாகிறது). அத்தகு நூல்கள் அல்லது அத்தகு விஷயங்கள் அவர்கள் மனதினை சீரழித்து உடலைக் கெடுக்கும் அளவிற்கு இருந்தால், அது ஆபாசமான விஷயம் ஆகும்.

முடிவுரை:

முன்பு ஆபாச புத்தகங்களும், வெளியீடுகளும் அரிதாகத்தான் இருந்தன. ஆனால் இப்பொழுதோ தொலைக்காட்சிப் பெட்டியில், பல 'சேனல்கள்' மூலம் ஆபாச நடனங்கள் மற்றும் காட்சிகள் ஒளிபரப்பப் படுகின்றன. தரமான வாரப் பத்திரிக்கை கூட தனது விற்பனைக்காக, நடுப்பக்கத்தில் கவர்ச்சி நடிகைகளின் அரைகுறை படத்தை நாடுகிறது. திரைப்படங்களும் ஒரு கவர்ச்சி நடனம், ஒரு குளியல் காட்சி இல்லாமல் திரைக்கு வருவதில்லை. 'சி.டி.' மூலம் ஆபாசப் படம், 'இன்டெர்நெட்டில்' 'அரட்டை' (Chatting) எனும் பெயரில் ஆபாசம், தொலைபேசி மூலம் ஆபாசப் பேச்சு ஆகிய இவையெல்லாம் இந்திய தண்டனைச் சட்டத்தில் ஆபாச வெளியீட்டுக் குற்றத்திற்காக கூறப்பட்டுள்ள தண்டனையின் கடுமை போதவில்லை என்பதைச் சுட்டிக் காட்டுகின்றனவா அல்லது இவையெல்லாம் ஆபாசமான ஒரு விஷயமே அல்ல என்ற நாகரிக முன்னேற்றப் போக்கை காண்பிக்கின்றனவா? விவாதத்திற்குரிய விஷயம்தான்.

(vi) நாணயம் மற்றும் அரசு முத்திரைகள் சம்பந்தமான குற்றங்கள் [Offences relating to Coin and Government Stamps]

(பிரிவுகள் 230 முதல் 263-A முடிய)

17. State briefly the provisions of the Indian Penal Code regarding "Offences relating to Coin and Govt. Stamps." ('நாணயம் மற்றும் அரசு முத்திரைகள் சம்பந்தமான குற்றங்களைப்' பொறுத்து இந்திய குற்றவியல் சட்டத்திலுள்ள வழிவகைகளை சுருங்கக் கூறுக.)

முன்னுரை:

இந்திய தண்டனைச் சட்டத்தின் XII-வது அத்தியாயமானது, 'நாணயம் மற்றும் அரசு முத்திரைகள் சம்பந்தமான குற்றங்களைப்' பற்றிக் குறிப்பிடுகிறது. அதில் 230 முதல் 254 வரையுள்ள பிரிவுகள் **'நாணயம்' (Coin)** சம்பந்தமான குற்றங்களைப் பற்றியும், 255 முதல் 263-A வரையுள்ள பிரிவுகள் **'அரசு முத்திரைகள்' (Government Stamps)** சம்பந்தமான குற்றங்களைப் பற்றியும் குறிப்பிடுகின்றன. ரூபாய் நோட்டுக்கள் சம்பந்தமான குற்றங்கள் (கள்ள நோட்டு அச்சடித்தல்), இந்த மேற்படி பிரிவுகளில்

சேர்க்கப்படாது போனாலும், அவற்றை இந்திய தண்டனைச் சட்டத்தின் 'சொத்துக்கு எதிரான குற்றங்கள்' என்ற அத்தியாயமானது தண்டிக்கிறது. இனி, நாணயங்கள் சம்பந்தமான குற்றங்களைப் பற்றி முதலில் காண்போம்.

I. நாணயங்கள் சம்பந்தமான குற்றங்கள் (Coins):

நாணயங்கள் சம்பந்தமான குற்றங்களைப் பார்ப்பதற்கு முன், 'நாணயம்' என்பதின் விளக்கத்தையும், 'இந்திய நாணயம்' என்பதின் பொருளையும் அறிதல் அவசியம். அவற்றை **பிரிவு 230** கூறுகிறது.

நாணயம் (Coin) - பிரிவு 230 கூறும் வரையறை:

பணமாக பயன்படுத்தப்படும் பொருட்டு ஏதாவது ஒரு அரசின் அதிகாரத்தால் முத்திரையிடப்பட்டு வெளியிடப்படுவதும், அச்சமயத்தில் பயன்படுத்தப்படுவதுமான உலோகம் 'நாணயமாகும்'. (இந்திய நாணயம் அல்லது பிற நாணயமாக இதனைக் கொள்ளலாம்).

இந்திய நாணயம் (Indian Coin) - பிரிவு 230 கூறும் வரையறை:

பணமாக பயன்படுத்தப்படும் பொருட்டு இந்திய அரசின் அதிகாரத்தால் முத்திரையிடப் பெற்று வெளியிடப்பெறும் உலோகம் இந்திய நாணயமாகும்; மற்றும் அவ்வாறு முத்திரையிடப் பெற்றிருக்கிற, மற்றும் வெளியிடப் பெற்றிருக்கிற உலோகம் பணமாகப் பயன்படுத்தப்படுவது நிறுத்தப்பட்டு விட்டதென்றாலும், அது இந்த அத்தியாயத்தின் நோக்கங் களுக்காக இந்திய நாணயமாகத் தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

உதாரணமாக, இந்திய அரசின் அதிகாரத்தின்படி முன்பு பணமாகப் பயன்படுத்தப்பட்ட **'பருக்காபாத்'** ரூபாய், இப்போது அவ்வாறு பயன்படுத்தப்படாவிட்டாலும், இந்திய நாணயமாகும்.

அதாவது, ஒன்று நாணயம் என அழைக்கப்பட அதற்கு பின்வரும் பண்புகள் இருக்க வேண்டும். அவை, 1) அது உலோகத்தால் ஆனதாக இருக்க வேண்டும் (must be metal), 2) பணமாக பயன்படுத்தப்பட வேண்டும் (must be used as money), 3) அது அரசால் வெளியிடப்பட்டிருக்க வேண்டும் (must have been issued by State), 4) அதில் அரசு முத்திரையிடப்பட்டிருக்க வேண்டும் (must be stamped), 5) அச்சமயத்தில் பணமாக பயன்படுத்தப்படக்கூடியதாக இருக்க வேண்டும் (must be current), அதாவது செல்லாது என அரசால் அறிவிக்கப்பட்ட நாணயங்கள் மேற்படி வரையறைக்கு வராது.

நாணயக் குற்றங்கள் - மூவகை:

1. கள்ள நாணயம் தயாரித்தல் (Counterfeiting);

2. நாணயச் சாலையில் பணிபுரிவோர்களின் குற்றச் செயல்கள் (Criminal Acts of Mint Employees);

3. நாணயங்களை மாற்றியமைத்தல் (Alteration of Coins).

மேற்கண்ட தலைப்புகளின் கீழான சட்டப் பிரிவுகளை பின்வருமாறு காண்போம்.

1. கள்ள நாணயம் தயாரித்தல் - பிரிவுகள் 231 முதல் 243 வரை:

(a) இந்திய நாணயம் அல்லாத பிற நாணயத்தை கள்ளத்தனமாக தயாரிப்பவர்களுக்கு ஏழாண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 231).** இந்திய நாணயத்தைப் போன்ற கள்ள நாணயத்தை தயாரிப்பவர்களுக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 232).**

(b) பிற நாணயம் அல்லது இந்திய நாணயத்தை கள்ளத்தனமாக தயாரிக்க பயன்படுத்தப்படும் அச்சு அல்லது கருவியை செய்யும் அல்லது செப்பனிடும் அல்லது அக்கருவியை வாங்கும், விற்கும் அல்லது வேறு ஏதேனும் வழிகளில் மாற்றம் செய்யும் எந்நபரும் தண்டிக்கப்படுவர். அது பிற நாணயமாக இருப்பின் மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 233);** அது இந்திய நாணயமாக இருப்பின், ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 234).**

(c) பிற நாணயம் அல்லது இந்திய நாணயத்தை கள்ளத்தனமாக தயாரிக்க பயன்படுத்தப்படும் கருவி அல்லது பொருட்களை வைத்திருத்தல் தண்டனைக்குட்பட்டதாகும். அது பிற நாணயமாக இருப்பின் மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப் படும். அது இந்திய நாணயமாக இருப்பின் பத்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 235).**

(d) இந்தியாவுக்கு வெளியே கள்ள நாணயம் தயாரிப்பதற்கு இந்தியாவுக்குள்ளிருந்து உடந்தையாக இருக்கிற எவரும், இந்தியாவுக்கு உள்ளே அத்தகைய கள்ள நாணயத்தை தயாரிப்பதற்கு அவர் உடந்தையாயிருந்தால், தண்டிக்கப்படுவது போன்று அதே முறையில் தண்டிக்கப்படுதல் வேண்டும். **(பிரிவு 236).**

(e) பிற நாணயம் அல்லது இந்திய நாணயத்தை அது கள்ள நாணயம் என்று அறிந்து அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்து, இந்தியாவிற்குள் இறக்குமதி செய்கிற அல்லது இந்தியாவிலிருந்து ஏற்றுமதி செய்கிற எவராயினும் தண்டிக்கப்படுவார். அது பிற நாணயமாக இருப்பின், மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப் படும். **(பிரிவு 237);** அது இந்திய நாணயமாக இருப்பின் ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 238).**

(f) தாம் வைத்திருப்பது கள்ள நாணயம் என்று அறிந்தே அதை மற்றவருக்கு கொடுத்தல், அது பிற கள்ள நாணயமாக இருப்பின் அய்ந்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். (பிரிவு 239); அது இந்திய நாணயமாக இருப்பின் ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 240).**

(g) முதலில் தம் கைவசம் வந்தபோது கள்ள நாணயம் என்று அவர் அறிந்திராது ஆனால் கள்ள நாணயமென்று பின்னர் அறிந்து கொண்டு, அதை அசல் என்று பெற்றுக் கொள்ள வேறு எவரையேனும் தூண்ட முயலுகிற எவராயினும் அவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அக்கள்ள நாணயத்தின் மதிப்பைப் போல் பத்து மடங்கு அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும். **(பிரிவு 241).**

(h) கள்ள நாணயம் கைவசம் வந்தபோது அந்த நாணயம் ஒரு கள்ள நாணயம் என்று அறிந்திருந்து மோசடிக் கருத்துடன் அதைத் தம் வசம் வைத்திருப்போர் எவராயினும் அவர் தண்டிக்கப்படுவார். அது பிற கள்ள நாணயமாக இருப்பின் மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 242);** அது இந்திய கள்ள நாணயமாக இருப்பின் ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 243).**

2. நாணயச் சாலையில் பணிபுரிவோர்களின் குற்றச் செயல்கள் - பிரிவுகள் 244 மற்றும் 245:

(a) இந்தியாவில் சட்டப்படி நிறுவப்பட்ட நாணயச்சாலை (mint) எதிலும் பணிபுரிபவர், அந்த நாணயச் சாலையிலிருந்து வெளியாகும் நாணயம் எதையும் சட்டம் நிர்ணயித்துள்ள எடை மற்றும் அமைப்பிலி ருந்து வேறுபட்டதாகச் செய்யும் கருத்துடன் செயல்படுதல் அல்லது அதற்காக செயல் ஒன்றை செய்யாது விடுத்தல் குற்றமாகும். இதற்கு ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப் படலாம். **(பிரிவு 244).**

(b) நாணயச் சாலையிலிருந்து நாணயம் செய்யும் கருவி அல்லது சாதனம் எதையும் சட்டப்படியான அதிகாரமின்றி எடுக்கிற எவராயினும், அவருக்கு ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படலாம். **(பிரிவு 245).**

3. நாணயங்களை மாற்றியமைத்தல் - பிரிவுகள் 246 முதல் 254 வரை:

(a) மோசடியாக அல்லது நேர்மையின்றி நாணயத்தின் எடையைக் குறைத்தல் அல்லது அமைப்பை மாற்றுதல் குற்றம். அது இந்திய நாணயம் அல்லாத பிற நாணயமாக இருப்பின் மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத்

தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 246);** அது இந்திய நாணயமாக இருப்பின் ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத், தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும். **(பிரிவு 247).**

(b) நாணயத்தின் தோற்றத்தை அல்லது வேறு நாணயமாக வழங்க வேண்டும் என்ற கருத்துடன், நாணயத்தை மாற்றுதல் குற்றம். பிற நாணயமாக இருப்பின், மூன்று ஆண்டுகள் வரையிலான சிறை மற்றும் அபராதமும் **(பிரிவு 248),** இந்திய நாணயமாக இருப்பின், ஏழு ஆண்டுகள் வரையிலான சிறை மற்றும் அபராதமும் **(பிரிவு 249)** தண்டனையாக விதிக்கப்படும்.

(c) தம் வசமிருக்கும் ஒரு நாணயம் மாறுதல் செய்யப்பட்டது என்பதை அறிந்தே, அதனை மற்றவருக்கு கொடுத்தல் குற்றமாகும். அந்நாணயம் பிற நாணயமாக இருப்பின், அய்ந்து ஆண்டுகள் வரையிலான சிறை மற்றும் அபராதமும் **(பிரிவு 250),** இந்திய நாணயமாக இருப்பின் பத்து ஆண்டுகள் வரையிலான சிறை மற்றும் அபராதமும் **(பிரிவு 251)** தண்டனையாக விதிக்கப்படும்.

(d) தம் கைவசம் வந்தபோதே, அது மாறுதல் செய்யப்பட்ட நாணயம் என்று அறிந்திருந்து ஒருவர் அதனைத் தம் வசம் வைத்திருந்தால், அது குற்றம். அந்நாணயம் பிற நாணயமாக இருப்பின், மூன்று ஆண்டுகள் வரையிலான சிறை மற்றும் அபராதமும் **(பிரிவு 252),** இந்திய நாணயமாக இருப்பின் அய்ந்து ஆண்டுகள் வரையிலான சிறை மற்றும் அபராதமும் **(பிரிவு 253)** தண்டனையாக விதிக்கப்படும்.

(e) முதலில் தம் கைவசம் வந்தபோது மாறுதல் செய்யப்பட்ட நாணயம் என்று அவர் அறிந்திராது, ஆனால் மாறுதல் செய்யப்பட்ட நாணயமென பின்னர் அறிந்து கொண்டு, அதை அசல் நாணயம் போல கொடுக்கிற அல்லது ஒருவரை பெற்றுக்கொள்ள தூண்டுகிற எவராயினும் அவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அந்நாணயத்தின் மதிப்பைப் போல் பத்து மடங்கு அபராதம் தண்டனையாக விதிக்கப்படும். **(பிரிவு 254).**

II. அரசு முத்திரைகள் (Stamps) சம்பந்தமான குற்றங்கள்:

(a) அரசு முத்திரையைப் போல் கள்ளத்தனமாக தயாரிக்கிற அல்லது கள்ளத்தனமாகத் தயாரிக்கும் முறையில் ஏதாவதொரு பகுதியை அறிந்தே செய்கிற எவராயினும் ஆயுள் தண்டனை அல்லது பத்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதித்து தண்டிக்கப் படலாம். **(பிரிவு 255).**

(b) அரசு முத்திரையைப் போல கள்ளத்தனமாக தயாரிப்பதற்கான கருவியை அல்லது பொருளைத் தம்வசம் வைத்திருக்கும் எவராயினும் ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதித்து தண்டிக்கப்படலாம். **(பிரிவு 256).**

(c) அரசு முத்திரையைப் போலக் கள்ளத்தனமாகத் தயாரிப்பதற்கான சாதனத்தைச் செய்தல் அல்லது விற்றல் குற்றம். இதற்கு ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படலாம் **(பிரிவு 257).**

(d) கள்ளத்தனமாக தயாரிக்கப்பட்ட அரசு முத்திரையை விற்பனை செய்பவருக்கு ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படலாம். **(பிரிவு 258).**

(e) கள்ளத்தனமாக தயாரிக்கப்பட்ட அரசு முத்திரையை தம்வசம் வைத்திருக்கும் நபருக்கு ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படலாம். **(பிரிவு 259).**

(f) அரசு முத்திரையொன்று கள்ளத்தனமாக தயாரிக்கப்பட்டது என்பதை அறிந்தே அதனை அசல் என்று பயன்படுத்துவோருக்கு ஏழு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். **(பிரிவு 260).**

(g) அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தும் கருத்துடன் அரசு முத்திரையைத் தாங்கியுள்ள பொருளிலிருந்து எழுதப்பட்டதை அழித்து விடுதல் அல்லது பத்திரத்திலிருந்து அதற்காக உபயோகப்படுத்தப்பட்ட முத்திரையை நீக்கிவிடுதல் குற்றமாகும். இவ்வாறு செய்வோருக்கு மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும் **(பிரிவு 261).**

(h) ஒரு அரசு முத்திரை முன்னரே பயன்படுத்தப்பட்டது என்று தெரிந்தே அதனை திரும்பவும், அரசுக்கு நஷ்டம் ஏற்படுத்தும் கருத்துடன் மோசடியாக பயன்படுத்துதல் குற்றம். இதற்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும். **(பிரிவு 262).**

(i) அரசு முத்திரை பயன்படுத்தப்பட்டுவிட்டது என்பதைக் காட்டக் குறிகள் (Seal of Marks) இடப்படும். இக்குறிகளை மோசடியாக அல்லது அரசுக்கு நஷ்டம் உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் அழித்தல் குற்றம் இதற்கு மூன்று ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும். **(பிரிவு 263).**

(j) (அ) போலி முத்திரை எதனையும் செய்கிற, அறிந்து செலாவணியாக்குகிற, அதில் வணிகம் நடத்துகிற அல்லது விற்கிற அல்லது போலி முத்திரை எதையும் அறிந்தே அஞ்சல் எதன் பொருட்டும் பயன்படுத்துகிற, அல்லது (ஆ) போலி முத்திரை எதையும் சட்டப்படியான காரணமின்றித் தம்வசம் வைத்திருக்கிற, அல்லது (இ) போலி முத்திரை எதையும் செய்வதற்கான அச்சு, தகடு, சாதனம் அல்லது பொருள்கள் எதையும் செய்கிற எவராயினும் இருநூறு ரூபாய் வரையிலான அபராதத்தால் தண்டிக்கப்படுதல் வேண்டும். **(பிரிவு 263-A).**

(ஆ) மனித உடலைப் பாதிக்கும் குற்றங்கள் [Offences affecting Human Body]

உள்ளே நுழைவதற்கு முன் ஒரு சிறு விளக்கம்

இந்திய தண்டனைச் சட்டத்தின் XVI-வது அத்தியாயமானது மனித உடலைப் பாதிக்கும் குற்றங்கள் பற்றி பல்வேறு உட்தலைப்புகளின் கீழ் 229 முதல் 377 வரையிலான பிரிவுகளின் வாயிலாக விளக்குகிறது. இக்குற்றங்களை **'தனிநபர்களுக்கு எதிரான குற்றங்கள்' (Offences against the person of the individuals)** என்றும் கூறலாம். இனி அந்த உட்தலைப்புகளுக்குச் செல்வோமா?

(i) உயிரைப் பாதிக்கும் குற்றங்கள் [Offences affecting Life]

(பிரிவுகள் 299 முதல் 311 முடிய)

மரணம் விளைவிக்கும் குற்றம் [Culpable Homicide]

1. Explain with case laws

(a) Justifiable Homicide

(b) Excusable Homicide

(அ) நியாயப்படுத்தக் கூடிய மரணம் விளைவிக்கும் குற்றம்

(ஆ) மன்னிக்கக் கூடிய மரணம் விளைவிக்கும் குற்றம் ஆகியவை குறித்துத் தீர்ப்பு வழிச் சட்டங்களுடன் விளக்குக.

மரணம் விளைவித்தல் (Homicide):

ஒரு தனிநபருக்கு எதிரான குற்றங்களிலேயே முதன்மையானதாகவும் முக்கியமானதாகவும் விளங்குவது, அந்நபருக்கு மரணத்தை விளைவிக்கும் குற்றமேயாகும் என்று சொன்னால் அது மிகையன்று. ஏனெனில் இங்கு ஒரு மனிதனின் உயிருக்கு வலுக்கட்டாயமாக முற்றுப்புள்ளி வைக்கப்படுகிறது. இங்கு ஒரு மனிதன், மற்றொரு மனிதனைக் கொல்வதே, 'மரணம் விளைவித்தல்' (Homicide) எனப்படுகிறது.

மரணம் விளைவித்தல் - பல்வேறு நிலைகள்:

1. நியாயப்படுத்தக் கூடிய மரணம் விளைவித்தல் [Justifiable Homicide]

2. மன்னிக்கக்கூடிய மரணம் விளைவித்தல் [Excusable Homicide]
3. மனிதனைக் கொல்லுதல் [Manslaughter]
4. கொலை [Murder]
5. தற்கொலை [Suicide]
6. சிசுக் கொலை [Infanticide]
7. சிசுவைக் கருவிலேயே அழித்தல் (அல்லது) கருக்கலைப்பு [Child Destruction]

மரணம் விளைவித்தல் - பிரிவுகள்:

மரணம் விளைவித்தலின் வகைகளை நாம் சென்ற பத்தியில் கண்டோம். அதனடிப்படையில் அவற்றை நாம் சில பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதற்கான ஒரு எளிய வரைபடம் வருமாறு.



I. சட்டப்படியான மரணம் விளைவித்தல் (Lawful Homicide):

(a) நியாயப்படுத்தக் கூடிய மரணம் விளைவித்தல் (Justifiable Homicide): ஒரு மனிதனுக்கு மரணம் விளைவித்தது சட்டப்படி நியாயமானதுதான் என்ற சூழ்நிலையின் பொழுது அது நியாயப்படுத்தக் கூடிய மரணம் விளைவித்தல் ஆகிறது. அத்தகு சூழ்நிலைகளை நாம் **'பொதுவான விதிவிலக்குகள் அல்லது எதிர் வாதங்கள்' (General Exceptions or Defences)** எனும் அத்தியாயத்தின் கீழ் பிரிவுகள் 76, 77, 78, 79, 81, 100, 103 ஆகியவற்றின் வாயிலாக விரிவாக வழக்குகளுடன் கண்டுள்ளோம். எனினும் அவற்றை இங்கு மீண்டுமொரு முறை விரைவாக நினைவுக்குக் கொண்டு வரல் நன்று.

நியாயப்படுத்தக் கூடிய மரணம் விளைவித்தலுக்கு எடுத்துக் காட்டாக அமையும் சட்டப் பிரிவுகள்: (1) சட்டப்படி ஒன்றைச் செய்வதற்குக் கட்டுப்பட்டிருக்கின்ற ஒருவரால் அல்லது சட்டத்தைப் பற்றிய ஒரு தவற்றின் காரணமாக அல்லாமல் பொருண்மை பற்றிய ஒரு தவற்றின் காரணமாக அதைச் செய்வதற்குத் தான் கட்டுப்பட்டிருப்பதாக நல்லெண்ணத்தொடு நம்புகிற ஒருவரால் செய்யப்படும் எதுவும் (இங்கு மரணம்) ஒரு குற்றமல்ல. **(பிரிவு 76).** ஏனெனில் மேற்கண்ட சூழலில் விளைவிக்கப்படும் மரணம், பிரிவு 76-ன்படி (அதாவது சட்டப்படி) நியாயப்படுத்தப்படக் கூடியதாகும். **எடுத்துக்காட்டாக,** தம் மேல்நிலை அதிகாரியின் ஆணைக்கிணங்க சட்டத்தின் ஆணைகளுக்கிணங்கிய வகையில், தரைப்படை வீரரான A என்பவர் ஒரு கூட்டத்தினைப் பார்த்து சுடுகிறார். அதனால் Z என்பவர் இறந்து விடுகிறார். இங்கு A ஒரு குற்றமும் செய்யவில்லை.[1]

(2) ஒரு நீதிபதி தமக்குச் சட்டத்தின் மூலம் கொடுக்கப்பட்டுள்ள அல்லது தமக்குக் கொடுக்கப்பட்டிருப்பதாகத் தாம் நல்லெண்ணத்தோடு நம்புகிற அதிகாரம் எதனையும் செலுத்தி நீதிமுறையில் செயற்படும்போது, அவரால் செய்யப்பட்ட எதுவும் (இங்கு மரணம்), ஒரு குற்றமாகாது.[2] **(பிரிவு 77). எடுத்துக்காட்டாக,** தூக்குதண்டனை மூலம் குற்றவாளி ஒருவரின் உயிரைப் பறிக்க தீர்ப்பெழுதிய நீதிபதியை, மரணம் விளைவித்தலுக்காக தண்டிக்க முடியாது.

(3) ஒரு நீதிமன்றத்தின் தீர்ப்பு அல்லது உத்திரவைத் தொடர்ந்து அதனை நிறைவேற்றுவதற்காக நல்லெண்ணத்தோடு நம்பி செயல்பட்டு, ஒருவருக்கு மரணம் விளைவிக்கும் எவரையும் மரணம் விளைவித்தற்காக குற்றவாளியாக்க முடியாது.[3] **(பிரிவு 78). எடுத்துக்காட்டாக,** நீதிமன்றத் தீர்ப்பின் அடிப்படையில், குற்றவாளி ஒருவரை தூக்கிலிடும் அதிகாரி, மரணம் விளைவிக்கும் குற்றம் செய்தவரல்ல.

(4) எதையேனும் ஒருவர் செய்வது சட்டப்படி நியாயமானதாக இருக்கும் பொழுது அவரால் அல்லது சட்டத்தைப் பற்றிய ஒரு தவற்றின் காரணமாக அல்லாமல், பொருண்மை பற்றிய ஒரு தவற்றின் காரணமாக அதைத் தாம் செய்வது சட்டப்படி நியாயமானதென்று நல்லெண்ணத்தோடு ஒருவர் நம்பும் போது, அவரால் செய்யப்படும் எதுவும் (இங்கு மரணம்), ஒரு குற்றமல்ல. **(பிரிவு 79)**[4]

(5) தீங்கு செய்ய வேண்டும் என்ற கருத்து இல்லாமலும், ஆளுக்கு அல்லது சொத்துக்கு வேறு தீங்கு ஏற்படுவதைத் தடுக்கும் அல்லது தவிர்க்கும்

---

1. இந்நூலின் பக்கம் எண் 106 மற்றும் 107-ல் விரிவாகக் காணலாம்.
2. இந்நூலின் பக்கம் எண் 112-ல் விரிவாகக் காணலாம்.
3. இந்நூலின் பக்கம் எண் 113-ல் விரிவாகக் காணலாம்.
4. இந்நூலின் பக்கம் எண் 107-ல் விரிவாகக் காணலாம்.

பொருட்டு நல்லெண்ணத்துடன் ஏதேனும் செய்யப்படுமானால், அது அநேகமாகத் திங்கை (இங்கு மரணத்தை) விளைவிக்கக் கூடும் என்ற அறிவுடன் செய்யப்படுகிறது என்ற காரணத்தால் மட்டுமே, ஒரு குற்றமாகாது. **(பிரிவு 81)**[1]

(6) உடல் அல்லது சொத்து தற்காப்புரிமையை பயன்படுத்தும் பொழுது, மரணம் விளைவித்தால் அது ஒரு குற்றமாகாது. **(பிரிவுகள் 100 மற்றும் 103)** [2]

(b) மன்னிக்கக்கூடிய மரணம் விளைவித்தல் (Excusable Homicide): ஒரு மனிதனுக்கு மரணம் விளைவித்தது, சட்டத்தால் மன்னிக்கத் கூடியதாக சூழ்நிலையின்படி இருக்கும்பொழுது, அது மன்னிக்கக்கூடிய மரணம் விளைவித்தலாகிறது. **(பிரிவு 80).** அத்தகு சூழ்நிலைகளையும் நாம் ஏற்கனவே **'பொதுவான விதிவிலக்குகள் அல்லது எதிர்வாதங்கள்'** எனும் அத்தியாயத்தின் கீழ், பிரிவுகள் 80, 82, 83, 84, 85, 87, 88, 92 ஆகியவற்றின் வாயிலாகக் கண்டுள்ளோம். எனினும், அவற்றை இங்கு மீண்டுமொரு முறை சுருக்கமாகக் காண்பது நன்று.

மன்னிக்கக்கூடிய மரணம் விளைவித்தலுக்கு எடுத்துக்காட்டாக அமையும் சட்டப் பிரிவுகள்: (1) சட்டப்பூர்வமான செயலொன்றை சட்டப்பூர்வமான முறையில் சட்டப்பூர்வமான வழிகளைப் பின்பற்றி போதிய கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் எவ்விதக் குற்றக் கருத்தும் எண்ணமும் இன்றிச் செய்யும் பொழுது, தற்செயலாகவோ அல்லது துரதிர்ஷ்டவசமாகவோ விளையும் செயல் (அதாவது இங்கு மரணம்) ஒரு குற்றமாகாது. **எடுத்துக்காட்டாக,** A என்பவர் ஒரு கைக்கோடரியுடன் வேலை செய்கிறார். அக்கோடரியின் தலைப்பாகம் கழன்று அருகில் நின்று கொண்டிருந்தவரைக் கொன்று விடுகிறது. இங்கு A தக்க எச்சரிக்கையுடன் அச்செயலைப் புரிந்திருந்தால், அவரது செயல் மரணம் விளைவித்த ஒரு குற்றமாகாது. மன்னிப்பதற்குரியதாகும்.[3]

(2) ஏழு வயதிற்குட்பட்ட குழந்தையின் செயல் எதுவும் (அது மரணம் விளைவித்ததாக இருந்தாலும் கூட), ஒரு குற்றமாவதில்லை. **(பிரிவு 82)** [4]

(3) ஒரு செய்கையைச் செய்யும் பொழுது, தனது நடத்தையின் தன்மையையும், அதன் விளைவுகளையும் ஆராய்ந்து அறிந்து கொள்வதற்குப் போதுமான மனப்பக்குவமடைந்திராத ஏழு வயதுக்கு மேற்பட்ட, ஆனால் 12 வயதிற்குட்பட்ட ஒரு குழந்தையினால் செய்யப்படும் செயல் எதுவும் (இங்கு மரணம்) ஒரு குற்றமாகாது. **(பிரிவு 83)** [5]

---

1. இந்நூலின் பக்கம் எண் 117-ல் விரிவாகக் காணலாம்
2. இந்நூலின் பக்கம் எண் 155 மற்றும் 160-ல் விரிவாகக் காணலாம்.
3. இந்நூலின் பக்கம் எண் 114-ல் விரிவாகக் காணலாம்.
4. இந்நூலின் பக்கம் எண் 111-ல் விரிவாகக் காணலாம்.
5. இந்நூலின் பக்கம் எண் 112-ல் விரிவாகக் காணலாம்

(4) பித்துப்பிடித்தவரின் செயல், அது மற்றவரின் மரணத்தில் முடிந்தாலும், ஒரு குற்றமாவதில்லை. **(பிரிவு 84)**[1]

(5) குடிபோதைக்குள்ளாக்கப்பட்ட நபர், அந்நிலையில் ஒருவருக்கு மரணம் விளைவித்தாலும், அது ஒரு குற்றமாவதில்லை. **(பிரிவு 85)** [2]

(6) பதினெட்டு வயதுக்கு மேற்பட்ட ஒரு நபருக்கு அவரின் வெளிப்படையான அல்லது உட்கிடையான சம்மதத்தின் பேரில் இழைக்கப் பட்ட தீங்கு (இங்கு மரணம்) ஒரு குற்றமாகாது. **(பிரிவு 87)** [3]

(7) மரணம் விளைவிக்கும் கருத்து இல்லாமல் ஒருவரது நலனுக்காக அவருடைய வெளிப்படையான அல்லது உட்கிடையான சம்மதத்துடன் நல்லெண்ணத்தினால் செய்யப்படும் செயலால், தீங்கு (இங்கு மரணம்) விளைந்தால், அது குற்றமாகாது. **(பிரிவு 88)**[4] எடுத்துக்காட்டாக, நோயாளியின் சம்மதத்துடன் செய்யப்படும் அறுவை சிகிச்சையால், அந்நோயாளி இறந்துவிட்டால், மருத்துவரை மரணம் விளைவித்த குற்றத்திற்குள்ளாக்க முடியாது.

(8) சில சூழ்நிலைகளில், எவருடைய நன்மைக்காக ஒரு செயல் செய்யப்படுகிறதோ, அவருடைய சம்மதத்தைப் பெறுவது இயலாததாகி விடலாம்; அல்லது சம்மதம் கொடுக்க வேண்டியவர் அவ்வாறு கொடுக்க திறனற்றவராகியிருக்கலாம்; மேலும் அவரது காப்பாளரின் சம்மதத்தைப் பெற முடியாத சூழலும் ஏற்பட்டிருக்கலாம். அச்சமயங்களில் சம்பந்தப் பட்டவரின் சம்மதம் இன்றியே அவருடைய நலனுக்காக நல்லெண்ணத் துடன் செய்யப்படும் செயல் எதுவும், அது அவருக்கு தீங்கு (இங்கு மரணம்) விளைவிக்கலாம் என்றாலும் கூட, ஒரு குற்றமாகாது. **(பிரிவு 92).**[5] ஏனெனில் அச்செயல் மன்னிப்பதற்குரியதாகும்.

II. சட்ட விரோதமாக மரணம் விளைவித்தல் (Unlawful Homicide):

(c) மனிதனைக் கொல்வது (Manslaughter): 'மனிதனைக் கொல்வது'[6] எனும் பதம்தான், இந்திய தண்டனைச் சட்டத்தில் **'மரணம் விளைவிக்கும் குற்றம்' (Culpable Homicide)** எனும் மாற்றுப் பெயரால் அழைக்கப்படுகிறது. இங்கு **"Culpable"** என்பது 'குற்றத்திற்குரிய' என்ற பொருளைத் தருவதாகும். ஒரு செயல் அல்லது செயல் தவிர்க்கை குற்றத்திற்குரியதாக வேண்டுமெனில், அது சட்டத்திற்கு விரோதமானதாக

1. இந்நூலின் பக்கம் எண் 125-ல் விரிவாகக் காணலாம்.
2. இந்நூலின் பக்கம் எண் 132-ல் விரிவாகக் காணலாம்.
3. இந்நூலின் பக்கம் எண் 139-ல் விரிவாகக் காணலாம்.
4. இந்நூலின் பக்கம் எண் 140-ல் விரிவாகக் காணலாம்.
5. இந்நூலின் பக்கம் எண் 143-ல் விரிவாகக் காணலாம்
6. 'மனிதனைக் கொல்வது' (Manslaughter) எனும் பதம் இங்கிலாந்து நாட்டின் தண்டனைச் சட்டத்திற்குரியதாகும். இது, இந்திய தண்டனைச் சட்டத்தில் 'மரணம் விளைவிக்கும் குற்றம்' (Culpable Homicide) எனப்படுகிறது

இருக்க வேண்டும். இதனடிப்படையில், 'சட்ட விரோதமாக மரணம் விளைவித்தலின்' முதல் வகையான மனிதனைக் கொல்வதை நாம் இந்திய தண்டனைச் சட்டத்தில் 'மரணம் விளைவிக்கும் குற்றம்' என்கிறோம். இது குறித்து **பிரிவு 299** வரையறுக்கிறது. மேலும் இதனடிப்படையில்தான், பிரிவு 304-A (தகாத துணிச்சலினாலும் கவனமின்மையாலும் மரணம் விளைவித்தல்), பிரிவுகள் 305 மற்றும் 306 (தற்கொலைக்கு உடந்தையாயிருத்தல்) ஆகியவை அமைகின்றன. (இவற்றையெல்லாம் நாம் அடுத்தடுத்த வினாவின் விடையில் விரிவாகக் காண உள்ளோம்)

(d) **கொலை (Murder):** குற்றங்களிலேயே மிகக் கொடிய குற்றம், கொலைக் குற்றமாகும். இதற்கும் மரணம் விளைவிக்கும் குற்றத்திற்கும் சிறிது வேறுபாடு உண்டு. இது குறித்து பிரிவு 300 வரையறுக்கிறது. (இதனை விரிவாக பின்னர் காண உள்ளோம்)

முடிவுரை:

ஒருவரின் உயிரை மற்றவர் பறிப்பது ஒரு சில சூழ்நிலைகளில் சட்டப்படி குற்றமாவதில்லை. அது நியாயப்படுத்தக் கூடியதாகவும், மன்னிக்கத்தக்கதாகவும் இந்திய தண்டனைச் சட்டத்தால் அங்கீகரிக்கப் படுகின்றது. ஆனால் இதே, ஒரு சில சூழ்நிலைகளில் கடுமையாக தண்டிக்கப்படுகின்றன. எடுத்துக்காட்டாக, மரணம் விளைவிக்கும் குற்றம், கொலைக் குற்றம் ஆகியவை சட்டத்திற்கு விரோதமானதாக உள்ளதால், அவற்றைச் செய்பவர்கள் தண்டிக்கப்படுகிறார்கள். இதற்கு, அனைத்து செயல்களையும், அனைத்து சூழ்நிலைகளிலும் ஒரே மாதிரியாக எடை போடக் கூடாது, என இந்திய தண்டனைச் சட்டத்தை வரைந்தவர் எண்ணியதுதான் காரணம் என்று சொன்னால் அதில் மிகையொன்றுமில்லை.

2. (a) Define and explain "Culpable Homicide".

(b) A knows Z to be behind a bush. B does not know it. A intending to cause, or knowing it to be likely to cause Z's death, induces B to fire at the bush. B fires and kills Z. Examine the liability of A and B.

(அ) 'மரணம் விளைவிக்கும் குற்றத்தை' வரையறுத்து விளக்குக.

(ஆ) Z என்பவர் ஒரு புதருக்குப் பின் இருப்பது A என்பவருக்குத் தெரியும். B இதனை அறியவில்லை. Z-ன் மரணத்தை விளைவிக்கும் கருத்துடன் அல்லது அநேகமாக Z-ற்கு மரணம் விளையலாம் என்று அறிந்திருந்து B-யை அந்த புதரை நோக்கி சுடும்படி A தூண்டுகிறார். அதன்படி B சுடுகிறார். இதனால் Z கொல்லப்படுகிறார். இங்கு A மற்றும் B-யின் பொறுப்புநிலையை ஆராய்க.

(a) மரணம் விளைவிக்கும் குற்றம் - வரையறையும் விளக்கமும் - பிரிவு 299:

பிரிவு **299** : a) மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன்

(with the intention of causing death), அல்லது

b) மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடல் காயத்தை விளைவிக்கும் கருத்துடன் (with the intention of causing such bodily injury as is likely to cause death), அல்லது

c) அத்தகைய செய்கையால் தாம் மரணம் அநேகமாக விளைவிக்கக்கூடும் என்ற அறிவுடன் (with the knowledge that he is likely by such act to cause death)

ஒரு செய்கையைச் செய்வதன் மூலம் மரணம் விளைவிக்கிற எவரொருவரும் மரணம் விளைவிக்கும் குற்றத்தைச் செய்தவராவார்.

பிரிவு 299-ன் கீழான எடுத்துக்காட்டுகள்:

1. மரணத்தை விளைவிக்கும் கருத்துடன் அல்லது அதனால் மரணம் அநேகமாக விளைவிக்கப்படும் என்ற அறிவுடன், ஒரு குழியின் மீது குச்சிகளையும், சருகுகளையும் A என்பவர் பரப்பி வைக்கிறார். Z என்பவர் நிலம் உறுதியாக இருப்பதாக எண்ணி அதன் மேல் நடக்கும் போது, உள்ளே விழுவதன் மூலம் கொல்லப்படுகிறார். A மேற்கண்ட குற்றத்தை புரிந்தவராகிறார்.

2. Z என்பவர் ஒரு புதருக்குப் பின் இருப்பது A என்பவருக்குத் தெரியும். B இதனை அறியவில்லை. Z-ன் மரணத்தை விளைவிக்கும் கருத்துடன் அல்லது அநேகமாக Z-ற்கு மரணம் விளையலாம் என்று அறிந்திருந்து B-யை அந்தப் புதரை நோக்கி சுடும்படி A தூண்டுகிறார். அதன்படி B சுடுகிறார். இதனால் Z கொல்லப்படுகிறார். இங்கு புதரை நோக்கிச் சுட்ட B குற்றவாளி ஆவதில்லை. ஏனெனில் Z-ஐக் கொல்ல வேண்டும் என்ற கருத்தோடு அவர் சுடவில்லை. ஆனால் B சுடுவதினால் அநேகமாக மரணம் விளையலாம் என்பதை அறிந்திருந்த A, மரணம் விளைவிக்கும் குற்றத்தைச் செய்தவராகிறார்.

3. ஒரு பறவையைக் கொன்று அதைத் திருடும் கருத்துடன் A சுடும்பொழுது, புதருக்குப் பின் இருந்த B கொல்லப்படுகிறார். இங்கு A சட்ட விரோதமாக ஒன்றைச் செய்தாலும் B-யைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தோ அல்லது தன் செய்கை B-யின் மரணத்தில் முடியும் என்ற அறிவோ இங்கு இல்லை. ஆகவே, A மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாக மாட்டார்.

பிரிவு 299-ன் கீழான விளக்கங்கள்:

விளக்கம் 1 : நலக்குறைவு, நோய் அல்லது உடல் பலவீனத்தால் அவதியுறும் மற்றொருவருக்கு உடற்காயத்தை விளைவித்து, அதன் மூலம் அவருடைய மரணத்தை விரைவுபடுத்துகிற ஒருவர், அவருடைய மரணத்தை விளைவித்தவராக கொள்ளப்படுதல் வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்: (அ) தீர்க்க முடியாத வியாதியினால் அவதியுறும் A-யை B பலமாக அடிக்கிறார். சில தினங்களில் A இறக்கிறார். B மரணம் விளைவிக்கும் குற்றம் புரிந்தவராகிறார்.

(ஆ) ஒருவர் தீராத நோயினால் அவதிப்பட்டுக் கொண்டிருக்கிறார். அவருக்கு 'பென்சிலின்' ஒவ்வாது என்று தெரிந்து, அதைச் செலுத்தி அவருடைய மரணத்தை விரைவுபடுத்தினால், அதைச் செலுத்தியவர் மேற்படி குற்றத்திற்குள்ளாவார்.

R. v. Hayward[1] என்ற வழக்கில் A ஒரு குழந்தையை அச்சுறுத்தி பயமுறுத்துகிறான். இதனால் அக்குழந்தை பயத்தால் இறக்கிறது. A, அக்குழந்தைக்கு மரணம் விளைவித்த குற்றத்திற்குள்ளாவான், எனப்பட்டது.

விளக்கம் 2 : உடற்காயத்தால் மரணம் விளைவிக்கப்பட்டிருக்கும் சமயத்தில், தக்க சிகிச்சை மேற்கொண்டிருந்தால் மரணத்தை தடுத்திருக்கலாம் என்றாலும், அத்தகு உடற்காயத்தை விளைவித்தவர் அந்த மரணத்தையும் விளைவித்ததாகக் கொள்ளப்படும்.

R. v. Hollend[2] என்ற வழக்கில் A, B-க்கு மரணம் உண்டாக்கக் கூடிய உடற்காயத்தை திட்டமிட்டு விளைவிக்கிறார். மரணத்திலிருந்து B-யைக் காக்க மேற்கொள்ள வேண்டிய அறுவை சிகிச்சையை செய்ய அனுமதிக்காமல் A தடுக்கிறார். இதனால் B இறக்கிறார். இங்கு A மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாகிறார்.

விளக்கம் 3 : தாயின் கருவில் உள்ள ஒரு சிசுவிற்கு சாவு விளைவிப்பதானது மரணம் விளைவிப்பதாகாது. ஆனால், ஒரு சிசுவின் பாகம் ஏதாவது கருப்பையிலிருந்து வெளிப்பட்ட பிறகு, அச்சிசு மூச்சு விடாமலிருந்தாலும் சரி, அல்ல முழுமையாக பிறக்கவில்லை என்றாலும் சரி, அது ஓர் உயிருள்ள குழந்தைக்கு மரணத்தை விளைவிக்கும் குற்றமாகலாம்.

முக்கிய வழக்குகள்:

Sengoda Goundan Case[3] - இவ்வழக்கில் சத்தம் போடாமல் இருப்பதற்காகவும், கொலை செய்யும் கருத்து இல்லாமலும் ஒருவரின் வாயை துணி கொண்டு குற்றவாளிகள் மூடுகின்றனர். ஆனால் அவன் இதனால் இறந்து விடுகிறான். குற்றவாளிகளுக்கு கொலை செய்யும் கருத்து எதுவும் இல்லையென்றாலும் மரணத்தை அநேகமாக விளைவிக்கக் கூடும் எனும் உடல் காயத்தை அவர்கள் விளைவித்துள்ளதாக பிரிவு 299(c)-யின்படி கருதப்பட்டு, மரணம் விளைவித்த குற்றத்திற்காக அவர்கள் தண்டிக்கப் பட்டனர்.

1. 21 Cox. C.C. 1909 692
2. 2 Moor and R.O. 351
3. 1916 A.I.R. Mad. 651

R. v. Ketabdi Mundul[1] - இவ்வழக்கில் எட்டு வயது நிரம்பிய தன் மனைவியை காலால் அவள் உடலின் பின் பாகத்தில் அவள் கணவன் எட்டி உதைக்கிறான். அவள் கீழே விழுந்து இறந்து விடுகிறாள். இதில் அப்படிப்பட்ட உதை அநேகமாக மரணம் விளைவிக்கும் என்ற அறிவு (Knowledge) **(பிரிவு 299-C)** அக்கணவனுக்கு இருந்ததாக கொள்ளப்பட்டு, அவன் கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டான்.

மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்தோ, அறிவோ இல்லாத மரணங்கள்:

மரணம் விளைவித்தவருக்கு அது விளைவிக்க வேண்டும் என்ற கருத்தோ, அல்லது தன்னுடைய செயலால் மரணம் அநேகமாக விளையக்கூடும் என்ற அறிவோ இருக்க வேண்டும். இவ்விரு குற்ற மனமும் இல்லாது, மரணத்தை விளைவித்திருப்பின் குற்றவாளிக்குக் **'குற்றமுறு வன்முறைக்கான' (தாக்குதலுக்கான) (Criminal Force)** தண்டனையோ, **'காயம்' (Hurt)** ஏற்படுத்தியதற்கான தண்டனையோ, **'கொடுங்காயம்' (Grievous hurt)** ஏற்படுத்தியதற்கான தண்டனையோ, வழக்கின் பொருண்மைகளுக்கு (facts) தக்கவாறு வழங்கப்படலாம்.

மரணம் விளைவிக்கும் குற்றத்திற்கு தண்டனை - பிரிவு 304:

பிரிவு 304 : கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்தைச் செய்கிற எவரொருவருக்கும், ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் வரை சிறைக் காவலோ தண்டனையாக விதிக்கப்படும். மற்றும் மரணம் விளைவிக்கும் அல்லது அநேகமாக மரணம் விளைவிக்கக் கூடிய உடற்காயத்தை ஏற்படுத்தும் கருத்துடன் மரணம் விளைவித்த செயல் செய்யப்பட்டால் அதற்கு அபராதமும் விதிக்கப்படலாம்; அல்லது

மரணம் அநேகமாக விளைவிக்கப்படலாம் என அறிந்து, ஆனால் மரணம் விளைவிக்க வேண்டும் என்ற அல்லது மரணம் அநேகமாக விளைவிக்கக் கூடிய உடற்காயத்தை விளைவிக்கும் என்ற எந்தக் கருத்துமின்றி அச்செய்கை செய்யப்பட்டால், பத்தாண்டுகள் வரை சிறைக் காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

(b) இப்பிரச்சனைக்குண்டான தீர்வை (a) வினாவின் கீழான எடுத்துக்காட்டு 2-ல் பார்க்கவும்.

கொலைக் குற்றம் [Murder]

3. When Culpable Homicide becomes Murder? Illustrate with decided cases. (மரணம் விளைவிக்கும் குற்றம் எப்பொழுது கொலைக் குற்றமாக மாறுகிறது? தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை எடுத்துக்காட்டுக.)

1. I.L.R. IV Cal. 764

(அல்லது)

Define Murder and discuss with case laws. (கொலைக் குற்றத்தை வரையறுத்து அதனை வழக்குகளுடன் விவாதிக்க.)

கொலை (Murder) - பிரிவு 300 கூறும் வரையறை:

மரணம் விளைவிக்கும் குற்றம் பின்வரும் சூழ்நிலைகளில் செய்யப்பட்டிருந்தால் அது கொலைக் குற்றமாகிறது, என்று பிரிவு 300 கூறுகிறது. அத்தகு சூழ்நிலைகள் வருமாறு.

பிரிவு 300 : இதற்குப்பின் விலக்கப்பட்டுள்ள தருணங்களில் தவிர (விதிவிலக்குகளில் கூறப்பட்டுள்ள சமயங்களில் தவிர) எச்செய்கை மரணத்தை விளைவிக்கிறதோ, அச்செய்கை மரணத்தை விளைவிக்கும் கருத்துடன் செய்யப்பட்டிருக்கிறதென்றால், அல்லது

இரண்டாவதாக, தீங்கு செய்யப்படுகிறவருக்கு மரணத்தை அநேகமாக (likely) விளைவிக்கக் கூடும் என்று குற்றவாளியின் அறிவுக்குப் படுகிற உடற்காயத்தை விளைவிக்கும் கருத்துடன், அது செய்யப் படுகிறதென்றால், அல்லது

மூன்றாவதாக, எவருக்கேனும் உடற்காயத்தை விளைவிக்கும் கருத்துடன் அது செய்யப்பட்டு, உண்டாக்கக் கருதிய அந்த உடற்காயமானது இயற்கையின் சாதாரணப் போக்கில் மரணத்தை உண்டாக்குவதற்குப் போதுமானதாக இருக்கிறதென்றால், அல்லது

நான்காவதாக, அச்செய்கையைச் செய்கின்றவர், அது பெரும்பாலும் (probability) உறுதியாக நிகழ்தற்குரிய மரணத்தையோ அல்லது மரணத்தை அநேகமாக விளைவிக்கக் கூடிய உடற்காயத்தையோ விளைவிக்கவோ செய்யும் என்னும் அளவுக்கு உடனடி அபாயகரமானது என்பதை அறிந்து, மரணத்தையோ அல்லது மேற்சொன்னவாறான காயத்தையோ விளைவிக்கும் ஆபத்தை மேற்கொள்வதற்கு யாதொரு காரணமுமில்லாமல் அத்தகு செய்கையைச் செய்வாரானால்,

மரணத்தை விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகும்.

எடுத்துக்காட்டுகள்:

1. A என்பவர் Z என்பவரைக் கொல்லும் கருத்துடன் சுடும் விளைவாக Z இறந்து விடுகிறார். A கொலைக் குற்றம் புரிந்தவராவார்.

2. Z என்பவர், ஒரே அடியில் அவரது மரணம் அநேகமாக விளையக்கூடும் என்ற அளவிற்கு நோய்வாய்ப்பட்டிருக்கிறார் என்பதை A என்பவர் அறிந்திருந்து, அவருக்கு உடற்காயத்தை விளைவிக்கும் கருத்துடன் அவரை அடிக்கிறார். இதனால், Z இறக்கிறார். A கொலைக் குற்றம் புரிந்தவராகிறார்.

3. இயற்கையின் சாதாரணப் போக்கில் மரணத்தை விளைவிக்கப் போதுமான ஒரு வாள் வெட்டையோ அல்லது உருட்டுத்தடிக் காயத்தையோ A என்பவர் Z என்பவருக்கு கருத்துடன் உண்டாக்குகிறார். இதனால் Z இறக்கிறார். இங்கு Z-ன் மரணத்தை விளைவிக்கும் கருத்தை A கொண்டிருக்கவில்லையானாலும் அவர் கொலைக் குற்றம் புரிந்தவராகிறார்.

4. ஒரு மக்கள் கூட்டத்துக்குள் காரணமேதுமின்றி ஒரு வெடிமருந்து அடைக்கப்பட்ட பீரங்கியைச் சுட்டு கூட்டத்தில் ஒருவரை A கொன்று விடுகிறார். இதற்கு முன்கூட்டியே A திட்டமிட்டவராக இல்லாதிருப்பினும், கொலைக் குற்றத்தைச் செய்தவராகிறார்.

உட்பிரிவுகளும், அது தொடர்பான வழக்குகளும்:

(1) மேற்படி பிரிவு 300-ல் ஒரு செய்கை மரணத்தை விளைவிக்கும் கருத்துடன் செய்யப்பட்டிருக்கிறதென்றால், அது கொலைக் குற்றமாகிறது என முதலாவதாக கூறப்பட்டிருக்கிறது. **[பிரிவு 300(1)]**

Bandampalli Venkateswarlu v. State of A.P.[1] எனும் வழக்கில் Z என்பவர் உடல் மீது A என்பவர் மண்ணெண்ணையை ஊற்றுகிறார். பின்னிட்டு அவர் மீது B என்பவர் தீ வைக்கிறார். இங்கு Z-க்கு மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்து B-க்கு இருந்தது என்பது தெளிவாகத் தெரிவதாக உச்ச நீதிமன்றம் கூறியது.

Selvaraj v. State of T.N.[2] எனும் வழக்கில் S என்பவன் D என்பவரைப் பார்த்தவுடன் "உன்னைத்தான் எங்கெங்கோ தேடிக் கொண்டிருக்கிறேன்" என்று கூறிக் கொண்டே, தான் வைத்திருந்த கத்தியினால் D-யின் உடலில் குத்தினான். குறிப்பாக உடலை இரண்டாக வெட்டுவதைப்போல, கத்தியை கீழ்முகமாக செலுத்தி இழுத்தான். S-ன் இச்செயல், D-க்கு மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்தை அவன் கொண்டிருந்தான் என்பதை உள்ளங்கை நெல்லிக்கனி போல் தெளிவாக்குகிறது என்று உச்ச நீதிமன்றம் கூறியது.

(2) இரண்டாவதாக, மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடும் என்று குற்றவாளியின் அறிவுக்குப் படுகிற உடற்காயத்தை விளைவிக்கும் கருத்துடன் ஒரு செயல் செய்யப்படுகிறதென்றால், அது கொலைக் குற்றமாகிறது. **[பிரிவு 300(2)]**

Sheikh Choolye[3] எனும் வழக்கில் குற்றவாளி, தூங்கிக் கொண்டிருந்தவரைக் கம்பு கொண்டு கொடூரமாக மண்டையில் அடித்ததால் மண்டை ஓடு கீறல் விட்டு அவர் மரணமடைந்தார். தன்னுடைய கொடூரத் தாக்குதலால் மரணம் ஏற்படலாம் என்று குற்றவாளிக்கு தெரிந்திருக்க

1. 1975 (3) S.C.C. 492 at p. 494
2. 1998 (9) S.C.C. 308; 1998 S.C.C. (Cri.) 1009
3. (1866) 4 W.R.Cr. 35

வேண்டும் என்று ஊகிக்க இடமிருப்பதால் அது கொலைக் குற்றமென தீர்மானிக்கப்பட்டது.

Gowri Shankar[1] வழக்கில் 9 வயது சிறுவனுக்கு 'ஆர்செனிக்' என்ற நஞ்சைக் கொடுத்தால் அதன் காரணமாக அச்சிறுவனின் தந்தை நீதிமன்றம் வந்து தனக்கு எதிராகச் சாட்சி சொல்வது தடைப்படும் என்று கருதிய குற்றவாளி, அதன்படி செயல்பட்டான். இதனால் மேற்படி சிறுவன் மரணமடைந்தான். இது இப்பிரிவின்படி கொலைக் குற்றம் எனப்பட்டது.

Tulsha[2] வழக்கில் ஊமத்தை விதையை அரைத்து கொடுத்ததால் ஒரு குடும்பத்திலுள்ள மூவர் மரணமடைந்தனர். குற்றவாளிக்கு மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்தில்லாதிருந்த போதிலும், மரணம் அநேகமாக விளையலாம் என்று குற்றவாளிக்கு தெரிந்திருக்க வாய்ப்புண்டு என்பதின் அடிப்படையில் மேற்படி பிரிவின் கீழ் அவன் கொலைக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டான்.

Muniandi Servai[3] வழக்கில் இருவரிடையே பேச்சு முற்றி, தகராறில் முடிவுற்றது. ஒருவரை ஒருவர் அடித்துக் கொண்டனர். குற்றவாளி உலக்கை ஒன்று எடுத்து மற்றொருவன் மண்டையில் ஓங்கி அடித்தான். அவன் மண்டை பிளந்து மரணமடைந்தான். இங்கு குற்றவாளி மேற்படி உடற்காயத்தால் மரணம் அநேகமாக விளையலாம் என அறிந்திருந்து செயல்பட்டதால் மேற்படி உட்பிரிவு இரண்டின்படி கொலைக் குற்றத்திற்கு உள்ளாக்கப்பட்டான்.

(3) மூன்றாவதாக, இயற்கையின் சாதாரணப் போக்கில் (in the ordinary course of nature) மரணத்தை உண்டாக்கப் போதுமானதாக இருக்கும் உடற்காயத்தை விளைவிக்கும் கருத்துடன் செய்தல். **[பிரிவு 300(3)]**.

Hamid[4] சம்பந்தப்பட்ட வழக்கில், குற்றவாளி ஒரு கூர்மையான ஆயுதம் கொண்டு வயிற்றில் குத்தி மேல் நோக்கி கீறினான். அதனால் ஏற்பட்ட மரணம் பிரிவு 300-ன் உட்பிரிவு 3-ல் அடங்கும் என தீர்மானிக்கப்பட்டது.

Virsa Singh v. State of Punjab[5] - இவ்வழக்கில் குற்றவாளி, ஈட்டியால் குத்தி கஹிம்சிங் என்பவருக்கு காயம் உண்டாக்கினான். இயற்கையின் சாதாரணப் போக்கில் இந்த உடற்காயம் மரணம் விளைவிக்கப் போதுமானது என மருத்துவர் சாட்சியமளித்தார். ஆகவே, குற்றவாளி கொலைக் குற்றத்திற்கு உள்ளானான்.

---

1. (1918) 40 Ali. 360
2. (1897) 20 All. 143
3. 1944 Mad. 818
4. 1903 2 L.B.R. 63
5. A.I.R. 1958 S.C. 465

Sudershan Kumar v. State of Delhi[1] - சுதர்ஸன் குமாரின் காதலி மாயாதேவி. அவள் தன்னை மணக்க மறுத்ததால், அவளுடைய முகத்தை உருக்குலைக்கும் கருத்துடன் திராவகத்தை ஊற்றியதால் அவள் இறந்தாள். சுதர்ஸன் குமார், கொலைக் குற்றம் சாட்டப்பட்டான். அவனுடைய எதிர்வாதம், சரியான மருத்துவச் சிகிச்சை அளிக்கப்படவில்லையென்றும், மருத்துவரின் அலட்சியமின்மையே அவள் இறப்பதற்கு காரணம் என்றும் பிரிவு 299, விளக்கம் 2-ன்படி வாதிட்டான். உச்ச நீதிமன்றம் அவனுடைய எதிர்வாதத்தை ஏற்றுக் கொள்ளவில்லை. ஏனெனில் இது ஒரு திட்டமிட்ட செயல்; திராவகத்தை ஊற்றுவதன் மூலம் உடற்காயத்தை ஏற்படுத்தி இயற்கையின் சாதாரணப் போக்கில் மரணம் உண்டாக்கியதால் இது ஒரு கொலைக் குற்றமே. எனவே சுதர்ஸன் குமார் பிரிவு 300(3)-ன் கீழ் கொலைக் குற்றம் புரிந்தவனானான்.

(4) **நான்காவதாக,** பெரும்பாலும் (probability) நிகழ்வதற்குரிய மரணத்தையோ அல்லது மரணத்தை விளைவிக்கக்கூடிய உடற்காயத்தையோ விளைவிக்கச் செய்யும் அளவிற்கு அநேகமாக ஆபத்தானது (so imminently dangerous) என்பதை அறிந்து எந்தவித காரணமும் இன்றி அத்தகு மரணத்தையோ அல்லது உடற்காயங்களையோ ஏற்படுத்துதல். **[பிரிவு 300(4)].**

Kankai[2] வழக்கில், குற்றவாளிகள் நால்வர் தடியுடன் வந்தனர். எதிரில் நின்றவரை கீழே வீழ்த்தினர். அவரிடம் எதிர்ப்பதற்கென எந்த ஆயுதமும் கிடையாது. நிராயுதபாணியாக இருந்த அவரை பலம் கொண்ட மட்டும் தாக்கினர். மண்டை பிளந்து அவர் மரணம் அடைந்தார். மேற்படி குற்றவாளிகளுக்கு இந்த 4-வது உட்பிரிவின் கீழ் கொலைக் குற்றத்திற்கான தண்டனை வழங்கப்பட்டது.

Sehaj Ram v. State of Haryana[3] எனும் வழக்கில், கையில் 303 இரக துப்பாக்கியை வைத்திருந்த ஒரு காவல்காரர் (Constable), மற்றொரு காவல்காரரை நோக்கி பலமுறை சுடுகிறார். அதில் ஒரு குண்டு அக்காவல்காரரின் வலது கால் முட்டிக்கு கீழே பாய்ந்தது. இதனால் அவர் கீழே விழுந்து விடுகிறார். இதற்குப் பின்னிட்டும் மேற்படி துப்பாக்கி வைத்திருந்த காவல்காரர், அவரை நோக்கி மீண்டும் சுடுகிறார். ஆனால் குண்டு எதுவும் அவர் மீது பாயவில்லை. அவரது முட்டிக்கு கீழே குண்டு பாய்ந்ததால், அவரைக் கொல்ல வேண்டும் எனும் கருத்து எதுவும் தனக்கு இல்லை; மாறாக அவரை பயமுறுத்த அல்லது கொடுங்காயம் விளைவிக்கவே, தாம் அவ்வாறு செய்ததாக குறைந்த தண்டனையை விரும்பி அவர் எதிர்வாதம் புரிந்தார். ஆனால் இதை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ள வில்லை. அவரது செயல் மேற்படி பிரிவு 300-ன் 4-வது உட்பிரிவின் கீழ் வருகிறது என்று கூறி, அவரை கொலைக் குற்றத்திற்காக தண்டித்தது.

1. 1975 1 S.C. W.R. 259
2. (1921) 11 A.L.J.R. 752
3. A.I.R. 1983 S.C. 614

செயல் ஒன்றினால் மரணம் ஏற்படுவது போன்றே, ஒரு செயலை செய்யாமல் (omission) இருந்ததினால் ஏற்பட்ட மரணமும் கொலைக் குற்றமே ஆகும்:

ஒருவரது வேலையாள் திடீரென நோய்வாய்ப்பட்டு எழுந்து நடக்க முடியாமல் அவரது வீட்டில் ஓர் அறையில் கிடக்கிறான். அய்ந்தாறு நாட்களாக அவனுக்கு எந்த உணவும் நீரும் கொடுக்காமல் மருத்துவரிடமும் அழைத்துச் செல்லாமல் விட்டு வைத்திருந்தார், அவனது முதலாளி. இதனால் விளைந்த வேலையாளின் மரணத்திற்கு முதலாளி பொறுப்பாக்கப்பட்டார்.

Instan[1] என்ற ஆங்கில வழக்கில், வேலையாளைப் பராமரிக்கும், அதிலும் நோயாகக் கிடக்கும் அவனைக் கவனிக்கும் பொறுப்பு அவனுடைய முதலாளிக்கு ஒரு சட்டப்படியான கடமை ஆகும். ஆனால் அதை வேண்டுமென்றே செய்யாதிருந்து மரணத்தை விளைவித்த செயல் கொலைக் குற்றமே ஆகும் என்று கூறப்பட்டது.

கொலைக் குற்றத்திற்கான தண்டனை - பிரிவு 302:

பிரிவு 302 : கொலை செய்கிற எவரொருவருக்கும் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கப்படுவதுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.[2]

முடிவுரை:

மரணம் விளைவிக்கும் குற்றம் எச்சூழ்நிலைகளில் கொலைக் குற்றமாகிறது என்பதை பிரிவு 300-ன் வழியாக இதுகாறும் கண்டோம். அதே பிரிவின் கீழான அய்ந்து விதிவிலக்குகள், மரணம் விளைவிக்கும் குற்றம் எச்சூழ்நிலைகளில் கொலைக் குற்றமாகாது (அல்லது கொலைக் குற்றம் எப்பொழுது மரணம் விளைவிக்கும் குற்றமாகிறது) என்று கூறுகிறது. (அவற்றைத்தாம், நாம் அடுத்த வினாவில் விரிவாகக் காண உள்ளோம்).

4. Explain the circumstances under which Culpable Homicide does not amount to murder. (எச்சூழ்நிலைகளின் கீழ் மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது என்பதை விளக்குக.)

(அல்லது)

When murder becomes Culpable Homicide? Discuss. (எப்பொழுது கொலைக் குற்றம் மரணம் விளைவிக்கும் குற்றமாக ஆகிறது? விவாதிக்க.)

(அல்லது)

"Culpable homicide will not amount to murder under five circumstances" - Explain. ("மரணம் விளைவிக்கும் குற்றம் அய்ந்து

1. 1893
2. ஆயுள் தண்டனை விதிக்கப்பட்ட ஒரு கைதி, கொலைக் குற்றம் புரிந்தால் அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும் - பிரிவு 303.

சூழ்நிலைகளில் கொலைக் குற்றமாகாது" - விளக்குக.)

(அல்லது)

"An offence may possess all the essential ingredients of murder. But yet be only Culpable Homicide if mitigating elements act out in the exceptions" - Explain the statement. ("ஒரு குற்றமானது கொலைக் குற்றத்திற்குத் தேவையான எல்லாக் கூறுகளையும் கொண்டிருக்கலாம். எனினும், விதிவிலக்குகளில் கூறப்பட்டுள்ள தணிவிக்கும் கூறுகளை பயன்படுத்தும்போது அது மரணம் விளைவிக்கும் குற்றமேயாகும்" - இக்கூற்றினை விளக்குக.)

(அல்லது)

"Every Culpable Homicide is murder unless it comes under one of the five exceptions to Section 300 of the Indian Penal Code" - Explain with illustrations. ("இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 300 ன் கீழ் அய்ந்து விதிவிலக்குகளில் ஏதேனும் ஒன்றில் வந்தாலன்றி ஒவ்வொரு மரணம் விளைவிக்கும் குற்றமும் கொலைக் குற்றமாகும்" - எடுத்துக் காட்டுகளுடன் விளக்குக.)

மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாத சூழ்நிலைகள் - விதிவிலக்குகள்:

பிரிவு 300-ஆனது, மரணம் விளைவிக்கும் குற்றம் எப்பொழு தெல்லாம் கொலைக் குற்றமாகிறது என்பதை விளக்குகிறது. ஆனால் அப்பிரிவில் கூறப்பட்டுள்ள அய்ந்து விதிவிலக்குகள், எப்பொழுதெல்லாம் மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது என்பதைக் கூறுகிறது. அதாவது, பிரிவு 300-ல் அய்ந்து விதிவிலக்குகள் உள்ளன. அவ்விதிவிலக்கு களில் ஏதேனும் ஒன்றின்படி அமைந்துள்ள சூழ்நிலையின் கீழ் ஒரு கொலைக் குற்றம் நிகழ்ந்தால் அது கொலைக் குற்றமாகாது. மாறாக மரணம் விளைவிக்கும் குற்றமே ஆகும். இவ்விதிவிலக்குகளை 'தணிவிக்கும் கூறுகள்' **(mitigating elements)** என்றும் கூறலாம். அதாவது, கொலைக் குற்றத்தினை தணிவித்து மரணம் விளைவிக்கும் குற்றமாக ஆக்குகிறது. சுருக்கமாகச் சொல்லப்போனால், இவ்விதிவிலக்குகள் கொலைக் குற்றம் சாட்டப் பட்டவர்களுக்கு கிடைக்கும் அருமையான **அய்ந்து எதிர்வாதங்கள் (Defences)** எனலாம்.

விதிவிலக்கு - 1 (Exception) - கடுமையான மற்றும் திடீர் ஆத்திரம் (Grave and Sudden Provocation):

குற்றவாளி கடுமையாகவும் திடீரென்றும் ஆத்திரமூட்டப்பட்டுத் தம்மை அடக்கிக் கொள்ளும் சக்தியை இழந்த நிலையில் ஆத்திர மூட்டியவருடைய மரணத்தை விளைவித்தால், அல்லது வேறு எவருடைய மரணத்தைத் தவறுதலாக அல்லது தற்செயலாக விளைவித்தால், அது கொலைக் குற்றமாகாது. மரணம் விளைவிக்கும் குற்றமேயாகும்.

இது பின்வரும் நிபந்தனைகளுக்குட்பட்டது:

முதலாவதாக, ஆத்திரத்தை பிறர் ஊட்டுவதற்கு பதிலாக தன்னிச்சையாக வலிய தேடிக் கொண்டிருத்தல் கூடாது.

இரண்டாவதாக, அத்தகு ஆத்திரமானது, ஒரு பொது ஊழியர் தம் அதிகாரத்தை செயல்படுத்தும் போது அவருக்கு எதிராக ஏற்பட்டிருத்தலாகாது.

மூன்றாவதாக, ஒருவன் தற்காப்புரிமையைப் பயன்படுத்தும்போது அவனுக்கு எதிராக ஆத்திரமானது ஏற்பட்டிருக்கக் கூடாது.

விளக்கம் : மரணம் விளைவிக்கும் அளவிற்கு ஆத்திரம் உண்டாக்கப் பட்டதா என்பதை சூழ்நிலையைப் பொறுத்துதான் முடிவு எடுக்க வேண்டும்.

R. v. Balku[1] - அக்கா, தங்கையை முறையே மணம் முடித்த இருவர், வீட்டின் வராண்டாவில் படுத்திருந்தனர். குற்றவாளியின் மனைவி வீட்டினுள் படுத்து இருந்தாள். நள்ளிரவில் குற்றவாளி கண் விழித்துப் பார்த்தபொழுது, அவனருகில் படுத்திருந்த உறவினனைக் காணவில்லை. குற்றவாளி சந்தேகம் கொண்டு தன் மனைவி படுத்திருக்கும் அறையின் கதவிடுக்கு வழியே பார்த்தான். அங்கு உறவினனும் குற்றவாளியின் மனைவியும் உடலுறவு கொண்டு இருந்தனர். இதைப் பார்த்தவுடன் ஆத்திரம் தலைக்கேறிய நிலையில் (Sudden Provocation) திரும்ப வந்து தன் படுக்கையில் படுத்துக் கொண்டான். பிறகு உறவினன், தன் மனைவியின் அறையில் இருந்து வெளி வந்து அவனிடத்தில் படுத்துக் கொண்டான். இதைக் கவனித்த குற்றவாளி தன்னிடமிருந்த கத்தியின் மூலம் பல தடவை குத்தி உறவினனைக் கொன்றான். இது கொலையாகாது. ஏனெனில், தன் மனைவியின் கெட்ட நடத்தையினால் திடீரென ஆத்திரமுற்று மரணம் விளைவித்ததால் இது மரணம் விளைவிக்கும் குற்றமேயாகும், என்று மேற்படி வழக்கில் கூறப்பட்டது. (299) (Culpable Homicide).

R. v. Chanan Khan[2] என்ற வழக்கில், பதான் (Pathan), அவரது மகன் மற்றும் மருமகள் ஆகிய மூவரும் ஒரே வீட்டில் வசித்து வந்தார்கள். மருமகள் மட்டும் வீட்டில் தனிமையில் இருந்தாள். பதானும் அவர் மகனும் வெளியில் சென்றிருந்தனர். அச்சமயம் பார்த்து நாவிதன் ஒருவன் வீட்டினுள் நுழைந்தான். அவன் நுழைவதைப் பதான் தூரத்தில் நின்று பார்க்க நேரிட்டது. உடன் தன்னுடைய மகனையும் அழைத்துக் கொண்டு, வீட்டிற்குள் நுழைந்தார். அப்பொழுது மருமகளும் நாவிதனும் உடலுறவில் இருந்தனர். இதை பதானும், அவரது மகனும் நேரில் பார்த்தவுடன் அவர்கள் இருவரையும் வெட்டிக் கொன்றனர். முதல் விதிவிலக்கு இவர்களுக்கு பொருந்துமாதலால் கொலையின்பாற்படாத மரணத்தை விளைவித்ததற்கான தண்டனை வழங்கப்பட்டது.

1. (1938) All. 789
2. (1942) 25 Lah. 72

முறை தவறிய புணர்ச்சிக் குற்றத்தில் ஈடுபட்டவர்களை கண்டவுடன் உணர்ச்சி வேகத்தில் ஆத்திரப்பட்டு மரணத்திற்கு உள்ளாக்கும் பொழுது முதல் விதிவிலக்கின் கீழ் உய்வு பெற வழி உண்டு. இதே, நின்று நிதானித்து திட்டம் போட்டு மரணத்தை ஏற்படுத்தினால் அவர்களுக்கு இவ்விதிவிலக்கு பொருந்தாது. மாறாக கொலைக் குற்றத்திற்காக தண்டிக்கப்படுவர்.

K.M.Nanavathi v. State of Maharashtra[1] - இது, பிரிவு 300-ன் கீழான முதல் விதிவிலக்கை பொறுத்த **மிக முக்கியமான வழக்காகும்.** இவ்வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்டவர், கப்பற்படை அதிகாரியாவார். அவருக்கு திருமணமாகி மூன்று குழந்தைகள் உள்ளனர். ஒருநாள், அவரது மனைவி தனக்கும், X என்ற மற்றொரு நபருக்கும் இடையே கள்ளத் தொடர்பு உள்ளது என்பதை தனது கணவனான மேற்படி குற்றஞ்சாட்டப்பட்டவரிடம் ஒப்புக் கொண்டார். இதைக் கேட்டு ஆத்திரமடைந்த அவர், தனது கப்பலுக்குச் சென்று, அதிலுள்ள அறையொன்றினுள் நுழைந்து அங்கிருந்த துப்பாக்கி ஒன்றையும், ஆறு தோட்டாக்களையும் எடுத்துக்கொண்டு X எனும் கள்ளக் காதலன் குடியிருந்த வீட்டை அடைந்து, அவன் படுத்திருந்த படுக்கையினுள் நுழைந்து அவனை சுட்டுக் கொன்றார். பின்னர் காவல் நிலையத்தில் சரணடைந்தார். இந்நிலையில், மேற்படி வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் முன் எழுந்த பிரச்சனை யாதெனில், குற்றஞ் சாட்டப் பட்டவரின் மேற்படி செயல் பிரிவு 300-ன் கீழான முதல் விதிவிலக்கின் கீழ் (அதாவது கடுமையாகவும் திடீரென ஆத்திரமூட்டப்பட்ட நிலையில் மரணம் விளைவித்தல்) வருகிறதா என்பதேயாகும்.

ஒருவர் மற்றவரது செயலினால் கடுமையாகவும் திடீரெனவும் ஆத்திரமூட்டப்பட்டிருக்கிறாரா என்பதை சோதித்தறிய, சில விதிகளை உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் வகுத்துக் கொடுத்தது. அவை வருமாறு.

1) குற்றஞ்சாட்டப்பட்டவர் வாழ்ந்து வரும் அதே வகுப்பைச் சேர்ந்த ஒரு தகுதியான மனிதனை (reasonable man), குற்றஞ்சாட்டப்பட்டவர் இருந்த அதே நிலையில் வைத்தால், அவர் தன்னிலையை (self-control) இழக்குமளவிற்கு ஆத்திரமடைந்திருப்பாரா? இவ்வினாவிற்கு "ஆம்" என்ற விடை வந்தால், குற்றஞ்சாட்டப்பட்டவரும் கடுமையான மற்றும் திடீரென ஆத்திரமடைந்துள்ளார் என்றே கருத வேண்டும்.

(2) இந்தியாவில், சில சூழ்நிலைகளில் சில சொற்களும் சைகைகளுமே கடுமையான மற்றும் திடீர் ஆத்திரத்தை ஏற்படுத்தக் கூடியதாகும். அப்பொழுது பிரிவு 300-ன் கீழான மேற்படி முதல் விதிவிலக்கு குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு பொருந்தும்.

(3) குற்றத்தால் பலியான நபரின் முந்தய செயலால் தோற்றுவிக்கப் பட்ட மனநிலையின் பின்னணியை, அவரது பிந்தய செயல் குற்றம் புரிவதற்கான கடுமையான மற்றும் திடீரென மூட்டப்பட்ட ஆத்திரத்திற்கு

1. A.I.R. 1962 S.C. 605

காரணமாக இருந்ததா என்பதை நிர்ணயிப்பதற்காக கருத்தில் கொள்ள வேண்டும்.

(4) ஆத்திரத்தால் உணர்ச்சி வசப்பட்ட நிலையில் விளைவிக்கப்பட்ட மரண அடியை கருத்தில் கொள்ள வேண்டுமே தவிர, காலம் கடந்ததால் அந்த உணர்ச்சி கொந்தளிப்பு அடங்கிய பிறகு அல்லது முன்கூட்டியே திட்டமிட்டு விளைவிக்கப்பட்ட மரண அடியை கருத்தில் கொள்ளலாகாது.

மேற்படி நானாவதி வழக்கில், தனக்கு கள்ளத் தொடர்பு உண்டு என்பதை தனது மனைவியின் வாயிலிருந்தே கேட்ட பிறகு, அவள் கணவன் (குற்றஞ்சாட்டப்பட்டவர்) அந்த நிமிடத்தில் தன்னிலை இழந்தவனாக ஆகியிருக்கலாம். அதில் அய்யமொன்றுமில்லை. ஆனால் அதற்குப் பின்னிட்டு, குற்றஞ்சாட்டப்பட்டவர் தனது மனைவியையும், குழந்தைகளையும் திரைப்படம் பார்க்க திரையரங்கிற்கு கொண்டு சென்று விட்டு விட்டு, தனது கப்பலுக்குச் சென்று, அங்கிருந்து துப்பாக்கியைத் தேடி எடுத்துக் கொண்டு, சில அலுவல்களைப் பார்த்து விட்டு, தனது காரை தனது மனைவியின் கள்ளக் காதலனின் அலுவலகத்திற்கு ஓட்டிச் சென்று, அங்கு அவன் இல்லாததால் மீண்டும் அவனது வீட்டிற்கு ஓட்டிச் சென்று, அவன் படுத்திருந்த அறையைத் தேடிக் கண்டுபிடித்து, அவனை சுட்டுக் கொன்றுள்ளார். இதற்கிடையில் மூன்று மணி நேரம் கடந்து விட்டது. எனவே, ஆத்திரமூட்டப்பட்ட நிலையிலிருந்து தன்னிலைக்கு திரும்ப குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு போதுமான கால அவகாசம் இருந்தது. இதனடிப்படையில் குற்றஞ்சாட்டப்பட்டவரின் செயலுக்கு, பிரிவு 300-ன் கீழான முதல் விதிவிலக்கு பொருந்தாது, என்ற முடிவிற்கு உச்ச நீதிமன்றம் வந்து அவரைக் கொலைக் குற்றவாளி என்று தீர்மானித்து, ஆயுள் தண்டனை விதித்தது.

விதிவிலக்கு - 2: தற்காப்பு உரிமையியல் வரம்பு மீறிச் செயல்படுதல் (Exceeding the right of Private defence):

தன்னையும் தன் உமைமையையும் தற்காத்துக் கொள்ளும் பொருட்டு போராடும் ஒருவர், சில வேளைகளில் சட்ட வரம்பை மீறிச் செயல்படக் கூடும். அப்போது தன்னைத் தாக்குவோரைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தும் ஆலோசனையும் இன்றி, பிறரைக் கொல்லலாம். இதனால் உண்டாகும் மரணம், மரணம் விளைவித்த குற்றமே ஆகும். கொலைக் குற்றம் ஆகாது.

எடுத்துக்காட்டாக, பூட்டை உடைத்து வீடு புகுந்து திருடுபவன், தாம் பிடிபட்டு விடுவோம் என பயந்து ஓடும் பொழுது, அவனை வெகு தூரம் துரத்திச் சென்று கொலை செய்ய நேர்ந்தால் கொலை செய்தவனுக்கு இந்த விதிவிலக்கு கிடைக்காது.

Gokul Bowree[1] என்ற வழக்கில் கிழவி ஒருத்தி, அறுவடையான

1. (1866) 5 W.R. Cr. 33

வயலில் உள்ள நெற்கதிர்களை திருடிவிட்டாள் என்பதற்காக அவளைக் கொடூரமாக அடித்து அவளுடைய மரணத்தை விளைவித்த குற்றவாளிக்கு இந்த 2-வது விதிவிலக்கு கிடைக்காது, எனப்பட்டது.

Nathan v. State of Madras[1] எனும் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவனும் அவனது மனைவியும் சில நிலங்களை குத்தகைக்கு எடுத்து, அவற்றில் பல காலம் விவசாயம் செய்து வந்தனர். ஆனால் நில உரிமையாளருக்கு குத்தகை பாக்கியை கட்ட முடியவில்லை. எனவே, நில உரிமையாளர் அவர்களை நிலத்திலிருந்து காலி செய்யவும், நிலத்தில் உள்ள பயிர்களை அறுவடை செய்து கொண்டு போகவும் முனைந்தார். இதை எதிர்த்து, குற்றஞ்சாட்டப்பட்டவர் சொத்து தற்காப்புரிமையைப் பயன்படுத்தும் பொழுது, அந்நில உரிமையாளரைக் கொன்று விடுகிறார். உச்ச நீதிமன்றம், இது குற்றஞ்சாட்டப்பட்டவரின் தற்காப்புரிமை என்ற எதிர்வாதத்தை ஏற்றுக் கொண்டது. ஆனால், அதே வேளையில், அந்நில உரிமையாளர் கையில் ஆயுதங்கள் ஏதுமின்றி, குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு மரணத்தை அல்லது கொடுங்காயத்தை விளைவிக்க வேண்டும் என்ற எவ்வித அச்சுறுத்தலும் இன்றி அங்கு வந்துள்ளார். அந்நிலையில் சொத்து தற்காப்புரிமை என்பது பிரிவு 104-ன்படி மரணம் விளைவிக்காத தீங்குச் செயலின் அளவு வரை மட்டுமே நின்று விடுகிறது. இங்கு அந்த அளவை மீறி, குற்றஞ்சாட்டப்பட்டவர் நில உரிமையாளரின் மரணத்தை விளைவித்துள்ளார். எனவே இது தற்காப்புரிமையில் வரம்பு மீறி செயல்பட்டதாகும் என்று கூறி, பிரிவு 300-ன் இரண்டாவது விதிவிலக்கின் படி குற்றஞ்சாட்டப்பட்டவரை கொலைக் குற்றமாகாத மரணம் விளைவித்த குற்றத்திற்காக மட்டும் தண்டித்தது.

விதிவிலக்கு - 3 : பொது ஊழியர் தன் அதிகாரவரம்பை மீறல் (Public Servant exceeding his power):

ஒரு பொது ஊழியர் அல்லது அவருக்கு உதவி புரியும் ஒருவர், பொது நீதியை நிலைநாட்டும் வகையில் செயல்படும்போது, தமக்கு அளிக்கப் பட்டுள்ள அதிகாரத்தை மீறி அவசியமானதென்றும் நல்லெண்ணத்துடனும் ஒரு செய்கையைச் செய்து, அதன் மூலம் மரணம் விளைந்தால் அது கொலைக் குற்றம் ஆகாது. ஏனெனில், பொது நீதியை நிலைநாட்ட வேண்டுமென்ற கருத்தைத் தவிர மரணம் விளைவிக்கப்பட்டவர் மீது தனி வெறுப்பு பொது ஊழியருக்கு இல்லை.

Subha Naik[2] என்ற வழக்கில் காவலர் ஒருவர் தன் மேலதிகாரியின் ஆணைப்படி ஒரு மாக்கள் (mob) கூட்டத்தின் மீது சுடுகிறார். இதனால், ஒருவர் மரணமடைகிறார். பொதுமக்களின் பாதுகாப்பிற்காக, அச்செயல் செய்யப்பட்டது என்று எதிர்வாதம் புரியப்பட்டாலும், அங்கு சுட்டுத் தீர வேண்டிய அவசியமில்லை. அச்செயல் நல்லெண்ணத்துடனும்

1. A.I.R. 1973 S.C. 665 : 1973 Cri. L.J. 608
2. (1898) 21 Mad. 249

செய்யப்படவில்லை. ஆகவே குற்றவாளிக்கு பிரிவு 300-ன் கீழான 3-வது விதிவிலக்கு பொருந்தாது என்று கூறி, அவருக்கு கொலைக் குற்றத்திற்கான தண்டனையை நீதிமன்றம் விதித்தது.

Dakhi Singh v. State[1] எனும் வழக்கில், ஒருவரை, திருடன் எனும் சந்தேகத்தின் அடிப்படையில் காவலர் ஒருவர் கைது செய்து, அவரை ஒரு இரயில் வண்டியிலேற்றி, அழைத்துச் செல்கிறார். அப்பொழுது, ஓடும் இரயிலிலிருந்து அத்திருடன் குதித்து, தப்பி ஓடுகிறான். இந்நிலையில், அக்காவலர் அத்திருடனை நோக்கிச் சுடுகிறார். ஆனால் குண்டு அங்கு வேலை செய்து கொண்டிருந்த மற்றொருவர் மீது பாய்ந்து, அவரைக் கொன்று விடுகிறது. இங்கு பொது ஊழியராகிய அக்காவலர் தனது அதிகாரத்தை மீறி, ஆனால் நல்லெண்ணத்தோடு செயல்பட்டிருப்பதால், அவருக்கு பிரிவு 300-ன் கீழான மேற்படி 3-வது விதிவிலக்கு பொருந்தும் என்று கூறி, அவரை கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்திற்காக உச்ச நீதிமன்றம் தண்டித்தது.

விதிவிலக்கு - 4 : திடீர் சண்டையில் மரணம் ஏற்படல் (Death caused in sudden fight):

முன் ஆலோசனையின்றி ஏற்படும் திடீர் சண்டையில் உணர்ச்சி வேகத்தில் மரணம் ஏற்படுகிறது. அச்சண்டையில், குற்றவாளி தகாத முறையில் தமக்கு எதிரியிடமிருந்து அனுகூலம் தேடிக் கொள்வதில்லை. மேலும் செயலானது கொடூரமாகவோ அல்லது அசாதாரணமாகவோ நடப்பதில்லை ஆகவே இது கொலைக் குற்றமாகாது. மரணம் விளைவித்த குற்றமாகும்.

விளக்கம் : இங்கு யார் சண்டையைத் தூண்டியவர், மேலும் யார் முதல் தாக்குதலை புரிந்தவர் என்பது ஒரு பொருட்டன்று.

Somirudden[2] என்ற வழக்கில், A-க்கும், B-க்கும் இடையே திடீரென சண்டை ஏற்பட்டது. இதில் A, B-யை தடியால் பலமாக அடித்தான். இந்த அடியினால் தடுமாறி கீழே விழுந்த B, சமாளித்து எழும்போது, தன் அருகில் ஒரு கத்தி கிடப்பதை கண்டான். உடனே அக்கத்தியை எடுத்து அக்குறுப்பத்தின் நடுவே, A-யை குத்தி உடற்காயம் ஏற்படுத்துகிறான். இதனால் A மரணமடைந்து விடுகிறான். இங்கு B-க்கு இவ்விதிவிலக்கின் கீழ் கொலைக் குற்றமல்லாத மரணம் விளைவித்த குற்றத்திற்கான தண்டனை வழங்கப்பட்டது.

Chamru Budhwa v. State of M.P.[3] என்ற வழக்கில், புதுவா, டம்ரு ஆகிய இருவரும் திஹரு என்பவரை சுடுமையான வாய்ச் சண்டைக்கு பின்னர் தாக்கிக் கொன்றனர். இது மேற்படி விதிவிலக்கின்பாற்பட்டது என்று கூறப்பட்டது.

1. A.I.R. 1955 All. 370 : 1955 Cri. L.J. 905 (DB)
2. 1875 23 W.R. Cr. 48
3. 1954 Cri. L.J. 1676

விதிவிலக்கு - 5 : சம்மதம் பெற்று மரணம் விளைவித்தல் (Death caused with consent):

பதினெட்டு வயதிற்கு மேற்பட்ட ஒரு நபர் தன்னை மரணத்திற்கு உட்படுத்திக் கொள்வதாகவோ அல்லது மரண அபாயத்தை மேற் கொள்ளுவதாகவோ சம்மதம் அளித்தன் பொருட்டு, அவருக்கு மரணம் விளைவிக்கப்பட்டால், அது கொலைக் குற்றமாகாது. மரணம் விளைவித்தல் குற்றமே ஆகும்.

போர்க்களத்தில் குற்றுயிராய் கிடக்கும் வீரன், மேலும் வலியால் அவதிப்படுவதை தடுக்கும் பொருட்டு, அருகில் நின்று கொண்டிருந்த தன் நண்பனிடம் தன்னை கூட்டுக் கொன்றுவிடும்படி கூறினால், அது அவர் தனது மரணத்திற்கு சம்மதம் தெரிவித்ததாகும். நண்பன் அவ்விதமாகக் கூட்டுக் கொன்றான். இது மரணம் விளைவிக்கும் குற்றமாகும். கொலைக் குற்றமாகாது.

Ujagar Singh[1] - சம்பந்தப்பட்ட வழக்கில் தன்னுடைய மூன்று எதிரிகளை எப்படியாவது கொலைக் குற்றத்திற்குள்ளாக்கிவிட வேண்டும் என்பதற்காக குற்றஞ்சாட்டப்பட்டவன் தனது வயதான, நோய்வாய்ப்பட்ட மாற்றாந் தந்தையை, அவரது சம்மதத்துடன் கொன்று விடுகின்றான். இங்கு குற்றஞ்சாட்டப்பட்டவன் செய்தது பிரிவு 300-ன் அய்ந்தாவது விதிவிலக்கின் படி கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றமே என்று இலாகூர் உயர் நீதிமன்றம் தீர்ப்புக் கூறியது.

Poonai Fattemah[2] என்ற வழக்கில் பாம்புக் கடியால் நோயை குணப்படுத்த முடியும் என்று பாம்பாட்டிகள் சொன்னதை நம்பி பாம்பு கொத்துவதற்கு இருவர் சம்மதம் தெரிவித்தனர். அதன்படி பாம்புக் கடிக்கு தங்களை உட்படுத்திக் கொண்டனர். இதனால் அவ்விருவரும் மாண்டனர். பாம்பாட்டிக்கு இவ்விதிவிலக்கு கொடுக்கப்பட்டது.

Ganesh Dooley[3] என்ற வழக்கில் ஒரு பாம்பாட்டி விஷப்பல் எடுக்கப்படாத சில பாம்புகளை வைத்துக்கொண்டு தன்னுடைய திறமையை காண்பித்துக் கொண்டிருந்தான். அதனை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒருவரின் சம்மதத்தின் பேரில், அவர் தலையின் மீது அவ்விஷப் பாம்பை, பாம்பாட்டி வைக்கிறான். அப்பாம்பு அவரைக் கொத்தி விடுகிறது. அவர் இறந்து விடுகிறார். இங்கு பாம்பாட்டிக்கு இவ்விதி விலக்கின்படி, கொலைக் குற்றம் அல்லாத மரணம் விளைவித்த குற்றத்திற்கான தண்டனை அளிக்கப்பட்டது. விஷப் பாம்பை தலையில் வைத்துக் கொண்டால் அதன் விளைவு என்னவாகும் என்பதை இறந்து போனவர்

1. A.I.R. 1918 Lah. 145 referred to in A.I.R. Manual, Vol.28, 4th Edn. at p.354
2. (1869) 12 W.R. (Cr.) 7
3. 1879 I.L.R. 5 Cal. 351 referred to in A.I.R. Manual, Vol.28 4th Edn. at p. 353

தெளிவாக அறிந்த (full knowledge) பின்பே சம்மதம் கொடுத்துள்ளார் என்று மேற்படி வழக்கில் கொள்ளப்பட்டது.

5. Explain the ingredients of the offence of Murder. Discuss the circumstances under which the offence of Murder can be reduced to Culpable Homicide not amounting to Murder. (கொலைக் குற்றத்தின் இன்றியமையாத கூறுகளை விளக்குக. கொலைக் குற்றம், கொலைக் குற்றமாகாத நிலையிலுள்ள மரணம் விளைவிக்கும் குற்றம் என்ற குறைந்த நிலையுடையதாக எச்சூழ்நிலைகளில் கருத முடியும் என்பதை ஆராய்க.)

(அல்லது)

Define Murder. Discuss the exceptions to the offence of Murder. (கொலைக் குற்றத்தை வரையறு. கொலைக் குற்றத்திற்கான விதிவிலக்குகளை விவாதிக்க.)

[வினா எண் 3-க்கு பிறகு வினா எண் 4-ஐ சேர்த்து எழுதுக.]

6. What is the effect of Provication on murder? (கொலைக் குற்றத்தில் ஆத்திரத்தின் விளைவு என்ன?)

(அல்லது)

Grave and sudden provocation - Write short notes. (திடீரென்று கடுமையாக ஆத்திரமூட்டுதல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Nanavathi v. The State of Maharashtra - Write short notes. (நானாவதி - எதிர் - மகாராஷ்டிர மாநிலம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

State the facts and rule laid down in Nanavathi v. State of Maharashtra. (நானாவதி - எதிர் - மகாராஷ்டிரா அரசு என்ற வழக்கின் பொருண்மைகளையும் கூறப்பட்ட விதியையும் கூறுக.)

[வினா எண் 4-ல் விதிவிலக்கு 1-ஐக் குறிப்பிடவும்.]

7. Differentiate
Culpable Homicide and Murder.

வேறுபடுத்திக் காட்டுக
மரணம் விளைவிக்கும் குற்றமும், கொலைக் குற்றமும்.

(அல்லது)

Distinguish Culpable Homicide from Murder. Refer to decided cases. (கொலைக் குற்றத்திலிருந்து, மரணம் விளைவிக்கும் குற்றத்தினை வேறுபடுத்துக. தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை குறிப்பிடுக.)

(அல்லது)

The academic distinction between "murder and culpable homicide not amounting to murder" has vexed the Courts for more than a century. Elucidate this statement by explaining the difference between murder and culpable homicide. ("கொலை மற்றும் கொலையாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்திற்குள்ள" கல்வி அளவேயான வேறுபாடு ஒரு நூற்றாண்டிற்கு மேல் நீதிமன்றங்களுக்கு எரிச்சலூட்டியது. கொலை மற்றும் மரணம் விளைவிக்கும் குற்றம் ஆகியவற்றிற்குள்ள வேறுபாட்டை விளக்கி இக்கூற்றை கூர்ந்தாராய்க.)

(அல்லது)

"The difference between culpable homicide and murder is the weakest point of this code" - Elucidate. ("கொலைக்கும், மரணம் விளைவிக்கும் குற்றத்திற்குமுள்ள வேறுபாடு தண்டனையியல் சட்டத்தின் பலமிழந்த பகுதியாகும்" - கூர்ந்தாராய்க.)

முன்னுரை:

இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 299-ன் கீழான மரணம் விளைவிக்கும் குற்றத்திற்கும், பிரிவு 300-ன் கீழான கொலைக் குற்றத்திற்கும் இடையே வேறுபாடு இருந்தாலும், அதை மிக நுணுக்கமான அளவில் ஆராய்ந்தால்தான், ஒருவர் மற்றவரின் உயிரைப் பறித்தது மரணம் விளைவிக்கும் குற்றமா அல்லது கொலைக் குற்றமா என்ற முடிவிற்கு நீதிமன்றங்கள் வர இயலும். இதற்காக நீதிமன்றங்கள் அதிக சிரத்தை எடுத்துக் கொள்ள வேண்டியுள்ளது. எனவே இந்த இரண்டு பிரிவுகளுக்கு மிடையே ஏட்டளவில் உள்ள வேறுபாடானது, ஒரு நூற்றாண்டுக்கும் மேலாக நீதிமன்றங்களை எரிச்சலூட்டியே வந்தன, என்று சொல்வதில் தவறொன்றுமில்லை. இந்த வேறுபாட்டை, இந்திய தண்டனைச் சட்டத்தின் பலமிழந்த பகுதியென்றும் கூறலாம். "காரணம் தப்பினால் மரணம்" என்று சொல்வதுண்டு. அதுபோல் மற்றவரின் உயிரைப் பறித்த ஒருவரின் சூழ்நிலை சிறிது தவறினாலும், மரணம் விளைத்த குற்றம், கொலைக் குற்றமாகலாம். அதே சூழ்நிலை குற்றஞ்சாட்டப்பட்டவருக்கு சிறிது சாதகமாக இருப்பின், கொலைக் குற்றம், மரணம் விளைவிக்கும் குற்றமாகவும் ஆகலாம். இவ்வாறு, குற்றச் சூழ்நிலைகளை சாட்சியங்களின் வாயிலாக எடை போட்டு, ஒருவர் செய்தது மரணம் விளைவித்த செயலா அல்லது கொலைச் செயலா என்பதை தீர்மானிப்பதில் நியாயம் காக்கும் நீதிபதிகள் உளவியல் ரீதியாக, பெரும் அவஸ்தைக்கு உள்ளாகின்றனர் என்றுதான் சொல்ல வேண்டும்.

அவ்வாறு மெல்வில் (Melvil J.) எனும் ஆங்கில நாட்டு நீதிபதி ஒருவரால் மேற்படி இரு பிரிவுகளுக்குமிடையே உள்ள வேறுபாடு ஆய்வு செய்யப்பட்டதொரு முக்கிய வழக்கைத்தான் நாம் அடுத்து காண உள்ளோம்.

வேறுபாட்டை விளக்கிய முக்கிய வழக்கு:

Reg. v. Govinda[1]

இவ்வழக்கில்தான் நீதிபதி மெல்வில் அவர்கள் மரணம் விளைவிக்கும் குற்றத்திற்கும், கொலைக் குற்றத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை ஆராய்ந்தார்.

மேற்படி வழக்கின் பொருண்மைகளின்படி, கோவிந்தன், தன் 15 வயதான மனைவியை உதைத்து கீழே தள்ளி, ஒரு காலை அவளுடைய நெஞ்சில் வைத்து அழுத்திக் கொண்டு, தன்னுடைய மூடிய கரங்களில் மிருக பலத்தோடு அவளை 2, 3 தடவை குத்துகிறான். அதன் காரணமாக அவளுடைய மூளையிலுள்ள இரத்த நாளங்கள் தெறித்து சிறிது நேரத்திற்குள்ளாக அவள் மரணமடைகிறாள். கோவிந்தனுக்கு, அவளைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தில்லாததாலும் அவளுக்கு ஏற்படுத்தப்பட்ட காயம் சாதாரண மனிதனுக்கு மரணத்தை விளைவிக்கப் போதுமானதாக இல்லாததாலும், கொலை ஆகாத, மரணம் விளைவித்த குற்றமாகும் என்று இந்த வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

வேறுபடுத்தும் அட்டவணை

மரணம் விளைவிக்கும் குற்றம் (பிரிவு 299)	கொலைக் குற்றம் (பிரிவு 300)
மரணம் விளைவித்த செயலை	மரணம் விளைவித்த செயலை
a. மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் (intention of causing death) செய்வது.	1. மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் (intention of causing death) செய்வது.
b. மரணத்தை அநேகமாக விளைவிக்கக் கூடிய உடற்காயத்தை உண்டு பண்ணும் கருத்துடன் (bodily injury as is likely to cause death) செய்வது.	2. ஒருவருக்கு மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடிய உடற்காயம் இன்னது என்பதை அறிந்து (knows) அந்த உடற்காயத்தை உண்டு பண்ணும் கருத்துடன் செய்வது.
	3. இயல்பான போக்கில் மரணத்தை விளைவிக்கத்தக்க தன்மை கொண்ட உடற்காயத்தை உண்டு பண்ணும் கருத்துடன் (in the ordinary course of nature) செய்வது.

1. 1876 1 Bom. 344-46

c. அச்செயல் அநேகமாக மரணத்தை விளைவிக்கக் கூடியது என்று அறிந்தும் (with the knowledge) அதை செய்வது.	4. அச்செயல் மரணத்தையோ அல்லது மரணம் விளைவிக்கக்கூடிய உடற் காயத்தையோ நிச்சயமாக (probability) தோற்றுவிக்கும் உடனடியான ஆபத்தைக் கொண்டது, (so imminently dangerous) என்பதை அறிந்தும் அதைச் செய்வது.

பிரிவு 299-க்கும் பிரிவு 300-க்கும் உள்ள வேறுபாடு குறித்து நீதிபதி மெல்வில் அவர்களின் ஆய்வு:

பிரிவு 299(a) & 300(1):

299(a) மற்றும் 300(1), இரு உட்பிரிவுகளும், ஒருவர் கொல்ல வேண்டும் என்ற கருத்தில் செயல்பட்டால், அது கொலைக் குற்றமாகும் என்று கூறுகிறது.

பிரிவு 299(b) & 300(2) மற்றும் (3):

299(b)-ஆனது 300(2) மற்றும் (3)-க்கு சமமாக உள்ளது. பிரிவு 299(b)-ன்படி, மரணத்தை அநேகமாக (likely) விளைவிக்கக்கூடிய உடற்காயத்தை விளைவிக்கும் கருத்துடன் செயல்படல். ஆனால் பிரிவு 300(2)-ன்படி, மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடும் என்று குற்றவாளியின் அறிவுக்குட்படுகிற (Offender knows) உடற்காயத்தை விளைவிக்கும் கருத்துடன் செயல்படல், இதன்படி ஒருவரின் தனிப்பட்ட உடல்நிலை காரணமாகவோ அல்லது முதிர்ச்சி பெறாத இளமையின் காரணமாகவோ அல்லது வேறு சிறப்பு சூழ்நிலையின் காரணமாகவோ அவருக்கு ஏற்படுத்தப்பட்ட உடற்காயம், சாதாரண உடல் நலத்துடன் இருப்பவருக்கு மரணத்தை விளைவிக்கத் தக்கதாய் இல்லாதிருப்பினும், அக்காயம் ஏற்படுத்தப்பட்டவருக்கு அது மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடும் என்று அக்காயத்தை ஏற்படுத்தியவருக்குத் தெரிந்திருந்தால், அது கொலைக் குற்றமாகும்.

எடுத்துக்காட்டு: A கடும் நோய்வாய்ப்பட்டிருப்பதும், அந்நிலையில் அவனை ஓங்கி அடித்தால் அது அவனுடைய மரணத்தை விளைவிக்கலாம் என்பதும் B-க்குத் தெரியும். இச்சூழ்நிலையில் A-க்கு உடற்காயம் ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்தில் B அவனை ஓங்கி அடிக்கிறான். A இறக்கிறான். இங்கு B-யானவர் அடித்த அடி, சாதாரண உடல் நலத்துடன் இருக்கிற ஒருவருடைய மரணத்தை விளைவிக்கப் போதுமானதில்லையென்றாலும், B கொலைக் குற்றப் பொறுப்பாளி ஆகிறான்.

பிரிவு 299(b)-ன்படி, A என்பவன் B அமைதியாக இருக்க அவனது வாயில் துணியைத் திணிக்கிறான். இதனால் B இறந்து விடுகிறான். இது மரணம் விளைவித்த குற்றமாகும். ஏனெனில் மரணத்தை அநேகமாக

விளைவிக்கக்கூடிய உடற்காயத்தை விளைவிக்கும் கருத்துடன் செய்யப்பட்டுள்ளது. இதே பிரிவு 300(3)-ன்படி, கொலைக் குற்றமாக்கப்பட வேண்டுமெனில், இயற்கையின் சாதாரணப் போக்கில் மரணத்தை உண்டாக்கப் போதுமானதாக இருக்கும் உடற்காயத்தை ஏற்படுத்தும் கருத்துடன் செயல் புரிதல் வேண்டும்.

சுருக்கமாக, உடலின் முக்கிய உறுப்பில் குச்சியாலோ அல்லது கையாலோ அடித்துக் காயப்படுத்துதல் அநேகமாக மரணத்தை விளைவிக்கும். [299(b)]. (இது மரணம் விளைவிக்கும் குற்றமாகிவிடுகிறது) ஆனால் உடலின் முக்கிய உறுப்பில் கத்தியால் குத்துதல் இயற்கையின் சாதாரணப் போக்கில் நிச்சயமாக மரணத்தை விளைவிக்கும். [300(3)]. (இது கொலைக் குற்றமாகி விடுகிறது)

பிரிவு 299(c) & 300(4):

மரணமோ அல்லது மரணம் விளைவிக்கும் உடற்காயமோ ஏற்படுத்தும் கருத்தின்றி செயல்படும்பொழுது, மேற்கண்ட இரு உட்பிரிவு களும் பெரும்பாலும் பொருந்திவரும். மரணம் விளைவிக்கும் குற்றமா அல்லது கொலைக் குற்றமா என்று முடிவு கட்டுவதற்கு, மனித உயிருக்கு ஏற்பட இருந்த அபாயத்தின் அளவைக் கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். செயலின் விளைவு மரணத்தை அநேகமாக (likely) விளைவிக்கக் கூடும் என்ற அய்யத்தில் விழுமேயானால் அது மரணம் விளைவித்த குற்றமாகும் [299(c)] அல்லது செயலின் விளைவு மரணத்தைப் பெரும்பாலும் உறுதியாக (in all probabilities) விளைவிக்கும் என்ற அளவிற்கு நிச்சயமானதாயிருப்பின், அது கொலைக் குற்றமாகக் கொள்ளப்படும் [300(4)].

எடுத்துக்காட்டாக, ஒருவர் நடமாட்டம் அதிகமுள்ள குறுகலான கடைத் தெருவின் வழியாக தன்னுடைய காரை வேகமாக ஓட்டிச் செல்கிறார். குறிப்பிட்ட எவருடைய மரணத்தையும் விளைவிக்க வேண்டும் என்ற கருத்து அவருக்கு இல்லாமல் இருந்தாலும், தன்னுடைய செயல் யாருக்கேனும் மரணத்தை விளைவிக்கும் என்று அவருக்கு தெரிந்திருக்கலாம். இத்தருணத்தில், அவர் வழியில் சென்று கொண்டிருந்தவருடைய மரணத்தை விளைவித்தால் அது கொலையாகாத, மரணம் விளைவிக்கும் குற்றமாகும்.

ஆள் நடமாட்டம் நிறைந்த கடைத் தெருவில் வண்டியை ஓட்டிச் செல்வதற்கு மாறாக, அவர் மக்கள் பெருவாரியாகக் கூடி நிற்கின்ற, ஒரு மைதானத்தின் வழியே வண்டியை கண்மூடித்தனமாக ஓட்டிச் செல்கிறார் என்றால், அவருடைய செயல் மரணத்தையோ, மரணம் விளைவிக்கும் உடற்காயத்தையோ உடனடியாகப் பெரும்பாலும் உறுதியாக நிகழ்த்தவல்லது (so immunently dangerous that it must in all probability cause death) என்று தெரிந்த நிலையில் அவர் செயல்பட்டதாக கருதப்பட்டு **பிரிவு 300(4)**-ன் படி கொலைக் குற்றத்திற்கு ஆளாவார். இவ்வேறுபாடுகளை குறித்து மேலும் இரண்டு முக்கியமான வழக்குகளை பின்வருமாறு காண்போம்.

Palani Goundan's case[1] - இவ்வழக்கில் கணவன் ஏதோ கோபத்தில் தன் மனைவியின் கழுத்தை நெறித்தான். அதனால் அவள் மயங்கி விழவே, அவள் இறந்துவிட்டதாக கருதி, தன் மீது கொலைக் குற்றம் ஏற்பட்டுவிடக் கூடாது என்ற அச்சத்தால், மனைவியின் உடலை தூக்கிலிட்டான். இங்கு அவ்வாறு தூக்கிலிட்டதன் விளைவாக அந்த பெண் இறந்துவிட்டாள். இப்பொழுது, கணவனைக் கொலைக் குற்றத்திற்கு ஆளாக்க முடியாது. ஏனெனில் பெண்ணின் கழுத்தை கணவன் கோபத்தில் நெரித்தபொழுது, அவளைக் கொல்ல வேண்டும் என்ற கருத்து இருந்தாலும், அச்செயல் அவள் உயிரைப் போக்கவில்லை. இரண்டாவது செயலும், அத்தகு கொலைக் கருத்தின்றிச் செய்யப்பட்டது. எனவே இங்கு மரணம் விளைந்திருந்தாலும், கணவன் கொலைக் குற்றவாளியாகவோ அல்லது மரணம் விளைவித்த குற்றவாளியாகவோ ஆவதில்லை. மாறாக கொடுங்காயம் (Grievous hurt) விளைவித்த குற்றவாளியாக ஆகின்றான் என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது. ஆனால் பின்வரும் மற்றொரு வழக்கில் ஒரு மாறுபட்ட தீர்ப்பு கொடுக்கப்பட்டது.

Kaliappa Goundan's Case[2] - இவ்வழக்கில் இரண்டு பேர்கள் தங்களில் ஒருவனின் மனைவியைக் கொல்ல வேண்டும் என்ற பொதுக் கருத்துடன் (common intention) அவளை ஓர் இடத்திற்கு கடத்திச் சென்று அவளுடைய கழுத்தை நெரித்தனர். அவள் மயக்கமுற்றுக் கிடக்கவே அவளை இழுத்துச் சென்று ஓர் இரயில் தண்டவாளத்தின் மீது கிடத்திவிட்டார்கள். சிறிது நேரங்கழித்து வந்த இரயில் வண்டி அவள் மீது ஏறியதால் அவள் உடல் துண்டிக்கப்பட்டது. இப்பொழுது குற்றவாளிகள் என்ன குற்றத்திற்கு ஆளாகின்றனர்?

அவளை இரயில் தண்டவாளத்தின்மீது கிடத்துகையில் அவள் இறக்கவில்லை. எனவே அவளது மரணம் விளையவில்லை. இரயில் அவள் மீது ஏறியதால்தான் உடல் துண்டிக்கப்பட்டு அவள் மாண்டாள். இருந்தாலும், அவளைத் தாக்கியவர்களின் கருத்து அவளைக் கொல்ல வேண்டும் என்பதுதான். அந்த கொலைக் கருத்தை நிறைவேற்றத்தான் அவர்கள் அவள் கழுத்தை நெரித்தது மற்றும் அதற்கு பின்னிட்டு அவளை இரயில் தண்டவாளத்தில் கிடத்தியது. தண்டவாளத்தில் கிடத்திய செயலை தங்கள் குற்றத்தை மறைக்கும் கருத்துடன் அவர்கள் செய்திருக்கலாம். கழுத்து நெரிப்பினால் அவளுக்கு மரணம் விளையவில்லை. தண்டவாளத்தில் அவளைக் கிடத்தி அவள் மீது இரயில் வண்டி ஏறி, அதனால் அவளுக்கு மரணம் விளைய வேண்டும் என்ற கருத்து இல்லாமலும் இருக்கலாம். அவள் மரணம் கருதிய செயலான கழுத்து நெரிப்பால் அவள் இறக்கவில்லை. இரயில் பாதையில் போடப்பட்ட செயல் அவளுக்கு மரணம் விளைவிக்க வேண்டும் எனக் கருதிய செயல் அன்று. எனவே குற்றவாளிகள் எவ்வாறு கொலைக் குற்றத்திற்கு பொறுப்பாகின்றனர் என்ற கேள்வி எழலாம்.

1. 1919 42 Madras 547 (FB)
2. 1938 57 Madras 158

ஒரு பெண்ணைக் கடத்திச் சென்று, கழுத்தை நெரித்து, இரயில் தண்டவாளத்தில் அவளைக் கிடத்திச் சென்றவர்களின் கருத்து அப் பெண்ணுக்கு மரணத்தை விளைவிக்க வேண்டும் என்பதுதான். எனவே கழுத்தை நெரித்த செயலையும் சேர்த்தே அவற்றை ஒரே தொடர்ச் செயலாகவே கொண்டு குற்றவாளிகளின் பொறுப்பினைத் தீர்மானிக்க வேண்டும். அவ்வாறு ஆராய்ந்தால் குற்றவாளிகள் கொலைக் குற்றத்திற்கு பொறுப்பாகின்றனர் என்று சென்னை உயர் நீதிமன்றம் மேற்படி வழக்கில் தீர்ப்பளித்தது.

மேற்படி இரண்டு வழக்கிற்கும் சென்னை உயர் நீதிமன்றம் எதனடிப்படையில் தீர்ப்பு வழங்கியது என்பதை எடுத்துக்காட்டும் பொழுது - **பழனிக் கவுண்டன் வழக்கில்** குற்றவாளிக்கு ஆரம்பத்திலிருந்தே கொலை செய்ய வேண்டும் என்ற கருத்தோ அல்லது தன்னுடைய செயல் மரணத்தை அநேகமாக விளைவிக்கக்கூடும் என்ற அறிவோ கிடையாது. ஆனால் **காளியப்ப கவுண்டன் வழக்கில்** குற்றவாளிகளுக்கு ஆரம்பத்திலிருந்தே கொலை செய்ய வேண்டும் என்ற பொதுக் கருத்து (common intention) இருந்தது. இதன் காரணமாகத்தான் பழனி கவுண்டன் வழக்கில், குற்றவாளிக்கு வெறுமனே கொடுங்காயம் விளைவித்த குற்றத்திற்கு மட்டும் தண்டனை வழங்கப்பட்டது. காளியப்ப கவுண்டன் வழக்கில் குற்றவாளி களுக்கு கொலைக் குற்றத்திற்கான தண்டனை வழங்கப்பட்டது.

முடிவுரை:

மேற்கண்ட மூன்று முக்கிய வழக்குகளிலும், ஒருவரின் மரணத்தை விளைவித்த செயலை நீதிமன்றங்கள் எந்த அளவிற்கு நுணுக்கமாக ஆய்வு செய்து, அது மரணம் விளைவிக்கும் குற்றமா அல்லது கொலைக் குற்றமா என்பதை ஆய்வு செய்து தீர்ப்பளித்துள்ளன என்பது சொல்லாமலேயே விளங்கக் கூடிய ஒன்றாகும். இதிலிருந்து பிரிவு 299-ம், பிரிவு 300-ம் மிக நுணுக்கமான சூழ்நிலையில் வேறுபடக் கூடியன என்பது புரிய வரும்.

8. Transferred Malice - Write short notes. (மாற்றப்பட்ட உள்மனக் கெடுதி - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

"மாற்றப்பட்ட உள்மனக்கெடுதி" எனில், ஒருவருக்கு மரணம் விளைவிக்கக் கருதிச் செய்யப்பட்ட செயல் மற்றொருவருக்கு மரணம் விளைவித்து விடுதல் ஆகும். அப்படி மற்றொருவருக்கு மரணம் ஏற்படும் பொழுது குற்றவாளி தப்பித்துக் கொள்ள முடியாது. மரணம் விளைவித்த குற்றத்திற்காகவோ, அல்லது கொலைக் குற்றத்திற்காகவோ தண்டனைக்கு உள்ளாக்கப்படுவான்.

சட்டப் பிரிவு கூறுவதாவது:

இது குறித்து **பிரிவு 301** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, "மரணம்

விளைவிக்கும் கருத்துடனோ அல்லது அநேகமாக மரணம் விளைவிக்கக் கூடும் என்று அறிந்தோ செய்யும் செய்கை எதனாலேனும் எந்த ஒருவரின் மரணத்தைத் தாம் விளைவிக்கும் கருத்தில்லையோ அல்லது மரணத்தை அநேகமாகத் தாம் விளைவிக்கக் கூடும் என்று அறியவில்லையோ, அவரது மரணத்தை விளைவித்து மரணம் விளைவிக்கும் குற்றத்தைச் செய்கிற ஒருவர் செய்யும் மரணம் விளைவிக்கும் குற்றமானது, எவரொருவரின் மரணத்தை அவர் விளைவிக்க கருத்துக் கொண்டிருந்தாரோ அல்லது மரணத்தை தாம் அநேகமாக விளைவிக்கக்கூடும் என்று அறிந்திருந்தாரோ, அவரது மரணத்தை விளைவித்திருந்தால் எந்த வகைக் குற்றமாகுமோ அந்த வகைக் குற்றமாகிறது.

எடுத்துக்காட்டு:

A, B-யைக் கத்தியால் குத்துகிறான். அது குறுக்கே வந்த C-யிற்கு மரணத்தை விளைவிக்கிறது. B மரணமடைந்திருந்தால் அதற்காக A எங்ஙனம் மரணம் விளைவித்த குற்றத்திற்காகவோ அல்லது கொலைக் குற்றத்திற்காகவோ தண்டிக்கப்படுவானோ அதே போல் C-க்கு ஏற்பட்ட மரணத்திற்கும் பொறுப்புக்குள்ளாக்கப்படுவான்.

முக்கிய வழக்குகள்:

Hale[1] வழக்கில், A என்பவன், தன் மனைவியை கொல்லக் கருதி நஞ்சு கலந்த ஒரு பழத்தை அவளிடம் கொடுத்து உண்ணச் சொன்னான். அவளுக்கு அந்தப் பழம் நஞ்சு கலந்தது என்று தெரியாது. அவள் அந்தப் பழத்தை தன் குழந்தைக்கு சாப்பிடக் கொடுத்தாள். பழத்தை சாப்பிட்ட் அக்குழந்தை இறந்து விட்டது. இப்பொழுது அக்குழந்தையின் மரணத்திற்கு யார் பொறுப்பு என்றால், நஞ்சிட்ட பழத்தைக் கொடுத்தவனே பொறுப்பு. ஆகவே குழந்தையைக் கொன்ற கொலைக் குற்றத்திற்கு அவன் தந்தையாகிய A தண்டனைக்குள்ளாக்கப்பட்டான்.

Public Prosecutor v. Suriyanarayana Moorthi[2] - இவ்வழக்கில் நரசிம்மனைக் கொல்ல வேண்டும் என்று கருதி, நாராயணன் அவருக்கு நஞ்சு கலந்த இனிப்பு பட்சணத்தைத் தருகிறார். நரசிம்மன் அதில் கொஞ்சம் சாப்பிட்டுவிட்டு மீதியை தூர எறிந்து விடுகிறார். குற்றவாளியின் மைத்துனனின் 8 வயது மகள் அதை எடுத்து சாப்பிட்டுவிட்டு, மீதியை ஒரு குழந்தைக்கு கொடுக்கிறாள். இரு குழந்தைகளும் மரணமடைகின்றனர். நாராயணன் கொலைக் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கப்பட்டது.

முடிவுரை:

இவ்வாறு, ஒருவருக்கு மரணம் விளைவிக்கும் கருத்தோடு செய்யப்பட்ட செயலின் விளைவாக, மற்றொருவருக்கு மரணம் ஏற்பட்டால், அந்த மரணத்திற்கும் அச்செயலைச் செய்தவரே பொறுப்பாகின்றார்.

1. P.C. 436
2. (1912) M.W.N. 136

கவனமின்மையினால் மரணம் விளைவித்தல்
[Causing Death by Negligence]

9. Examine the offence of causing death by rash and negligent act. (தகாத துணிச்சலும் கவனமின்மையுமான செயலினால் மரணம் விளைவிக்கும் குற்றத்தை கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

Death due to Negligent and Rash act - Write short notes. (அசட்டை மற்றும் கவனமின்றி விளைவிக்கப்பட்ட மரணம் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஓர் ஆபத்தான செயலால் பிறருக்கு மரணம் விளையலாம் என்பது ஒருவருக்கு தெரிகின்றது. அப்படி மரணம் விளைந்தாலும் அக்கறையில்லை என்ற மனநிலையில் அச்செயலைச் செய்வது **"தகாத துணிச்சலினால் அல்லது முரட்டுத்தனத்தால்" (rash)** செய்யும் செயலாகும். தெளிவான அறிவும் முன்யோசனையும் உள்ள மனிதன் குறிப்பிட்ட செயலைப் பொறுத்து எதைச் செய்வானோ அதைச் செய்யாதிருத்தலும், எதைச் செய்யமாட்டானோ அதைச் செய்தலும், அது **"கவனமின்மையினால்" (negligence)** ஏற்பட்ட செயலாகும்.

சட்டப் பிரிவு கூறுவதாவது:

தகாத துணிச்சலினாலோ அல்லது கவனமின்மையினாலோ ஒரு செயலைச் செய்து அதன் விளைவாக பிறருக்கு மரணம் விளைவித்தால், அச்செயலைச் செய்தவர், கவனமின்மையினால் மரணம் விளைவித்தல் (causing death by negligence) குற்றத்திற்கு ஆளாகின்றனர். இது குறித்து பிரிவு 304-A பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 304-A: மரணம் விளைவிக்கும் குற்றமாகாமல், முரட்டுத்தனமாக அல்லது கவனமின்மையான செய்கை எதனாலாவது எவரது மரணத்தையேனும் விளைவிக்கிற எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரை சிறைக்காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவுகள் 299, 300-ல் கூறப்பட்டுள்ள வகைமுறைகள் பிரிவு 304-A-க்கு பொருந்தாது. ஏனெனில், பிரிவு 304-A-ல் செயலானது கருத்துடனோ அல்லது அறிவுடனோ புரியப்படுவதில்லை.

முக்கிய வழக்குகள்:

Sukaroo Kobiraj [1] வழக்கில் மூல நோயால் (Piles) அவதிப்பட்டுக்

1. (1887) 14 Cal. 566

கொண்டிருந்த ஒருவரை, சுகாதார முறைப்படி சுத்தம் செய்யாத கத்தியைக் கொண்டு அறுவை சிகிச்சை செய்ததன் காரணமாக ஏராளமான குருதி வடிந்து அதன் காரணமாக இறந்து போனார். சாதாரணக் கத்தியை அறுவை சிகிச்சைக்காக பயன்படுத்தியது தகாத துணிச்சலான அல்லது கவனமின்மையான செயல் ஆகிறது என்று அவருக்கு இப்பிரிவின்கீழ் தண்டனை வழங்கப்பட்டது.

R. v. Bhutan[1] வழக்கில் படகுக் குழாமின் உரிமையாளர், ஓட்டத் தகுதியற்ற உடைந்த படகொன்றை வாடகைக்குக் கொடுத்தார். அது ஆற்றைக் கடந்து கொண்டிருக்கையில் கவிழ்ந்தது. அதில் சிலர் மரணம் அடைந்தனர். படகுக் குழாம் உரிமையாளர், இப்பிரிவின்கீழ் குற்றம் இழைத்தவர் என்று தீர்மானிக்கப்பட்டது.

Kamaruddin v. R.[2] என்ற வழக்கில் குற்றவாளி இரண்டு பெட்டி பூட்டுகள் அனுப்புவதாக கூறிவிட்டு பட்டாசுகளை வைத்து அனுப்பினார். புகைவண்டியில் அவற்றை ஏற்றும்பொழுது, ஒரு பெட்டி உடைந்து பட்டாசு வெடிகள் வெடித்ததில் ஒரு கூலியாள் இறந்தான். அப்பெட்டிகளை அனுப்பியவர் இப்பிரிவின்படி குற்றமிழைத்தவராகிறார்.

Ramana[3] என்ற வழக்கில் கணவன் - மனைவி உறவைப் பலப்படுத்தும் சொக்குப் பொடி என்று நம்பி தன்னுடைய கணவனுக்கு 'ஆர்சனிக் ஆக்ஸைடு' கலந்த நஞ்சைக் குற்றவாளி கொடுத்தாள். கணவன் மரணமடைந்தான். அவள் இப்பிரிவின்படி தண்டிக்கப்பட்டாள்.

De Soaza[4] என்ற வழக்கில் புட்டியின் மீது 'விஷம்' என்று எழுதியிருந்ததை கவனியாமல், அதைக் காய்ச்சல் மருந்தாகக் கலக்கிக் கொடுத்ததால், சிலர் மரணமடைந்தனர். மருந்து கலக்கியவர் இப்பிரிவின்படி குற்றவாளி ஆவார்.

முடிவுரை:

இன்று சாலை விபத்துகள், பலரை பலி கொண்டு விடுகின்றன. இதற்கு காரணம், வாகனம் ஓட்டுபவர்களின் தகாத துணிச்சலும் கவனக் குறைவும்தான் என்றால் அது மிகையாகா. வீட்டை விட்டு வெளியே சென்று, திரும்பவும் வீட்டை அடைந்தால்தான், நாம் இன்னமும் உயிருடன்தான் உள்ளோம் என்ற நிலைப்பாடு மேற்படி விபத்துக்களினால் ஏற்பட்டுவிட்டது. பொறுப்புடனும், கவனமாகவும் வாகனத்தை ஓட்டினால், அங்கு விபத்துக்கோ அல்லது அதன் வாயிலான மரணத்திற்கோ இடமில்லை. இவ்வாறு வண்டியை ஓட்டி மரணம் ஏற்படுத்தும் ஓட்டுநர்களெல்லாம் மேற்படி பிரிவு 304-A-யின் கீழ்தான் தண்டிக்கப்படுகிறார்கள். சாலை

1. (1894) 16 All. 472
2. (1905) P.L.R. 112 : Crl. L.J.R. II 207
3. (1915) 17 Bom. L.R. 217
4. (1920) 42 All 272

விபத்துக்களை குறைக்க வேண்டுமெனில், மேற்கண்டவாறு வண்டி ஓட்டி மரணம் விளைவிப்பவர்களுக்கு, கொலைக் குற்றத்தைப் போல் அதிக தண்டனை விதிக்க வேண்டும். பிரிவு 304-A-யில் கூறப்பட்டுள்ளது போல் இரண்டு ஆண்டுகள் தண்டனை போதாது.

வரதட்சணை மரணம் [Dowry Death]

10. Dowry Death - Write short notes. (வரதட்சணை மரணம் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

வரதட்சணை மரணங்கள் இன்று சகஜமாகிவிட்டன. திருமணமான புது மணப்பெண்கள் திடீரென எரிந்து போகின்றனர். கேட்டால் கியாஸ் சிலிண்டர் வெடித்தது என்கின்றனர். சமைக்கும்போது புடவை தீயில் பற்றிக் கொண்டது என்கின்றனர். ஆனால், ஆராய்ந்தால்தான் தெரியும், அது வரதட்சணை மரணம் என்பது. இப்படிப்பட்டதொரு நிலையைக் களைந்து, பெண்களைப் பாதுகாக்க, வரதட்சணைத் தடுப்புச் சட்டம் (Dowry Prohibition Act) ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அது வரதட்சணைக் கேட்டு பெண்களை கொடுமைப்படுத்துவோர்களை தக்க விதத்தில் தண்டிக்கவில்லை. எனவே 1986-ம் ஆண்டில் மேற்படி சட்டத்தில் ஒரு திருத்தம் (Amendment) கொண்டு வரப்பட்டது. அதன்படி இந்திய தண்டனைச் சட்டத்தின் 304-B என்ற ஒரு பிரிவு புதிதாக சேர்க்கப்பட்டது. இது வரதட்சணை மரணம் பற்றியும் அதற்கான தண்டனை பற்றியும் குறிப்பிடுகின்றது. விரிவாக வருமாறு.

வரதட்சணை மரணம் - பிரிவு 304-B கூறும் வரையறை:

திருமணமான ஏழு ஆண்டுகளுக்குள் இயற்கையான சூழ்நிலைகளால் ஏற்படாத, உடற்காயத்தினாலோ அல்லது தீப்புண்களினாலோ ஒரு பெண்ணிற்கு மரணம் சம்பவித்திருந்து, அவள் இறப்பதற்கு முன் வரதட்சணை கோருதல் தொடர்பாக அவளது கணவனாலோ அல்லது அவள் கணவனின் உறவினர்களாலோ அப்பெண் கொடுமைக்குள்ளாக்கப்பட்டிருப்பதோ அல்லது தொந்தரவுக்குள்ளாக்கப்பட்டிருப்பதோ சுட்டிக்காட்டப் படுமானால், அந்த மரணம் 'வரதட்சணை மரணம்' (Dowry death) எனப்படும்.

வரதட்சணை மரணம் விளைவிப்போருக்கு தண்டனை (Punishment):

வரதட்சணை மரணம் விளைவிக்கும் எவராயினும் 7 ஆண்டுகளுக்கு குறையாத ஆனால் ஆயுள் தண்டனை வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனை விதிக்கப்பட்டு தண்டிக்கப்படல் வேண்டும்.

முடிவுரை:

திருமணமான ஒரு பெண் ஏழு ஆண்டுகளுக்குள் மரணமடைகிறாள் எனும் பொழுது, அங்கு வரதட்சணைக் கொடுமையால் அப்பெண் இறந்திருக்கலாம் என அப்பெண் வீட்டினர் சந்தேகத்தை கிளப்பினால், காவல் துறையினர் தமது புலனாய்வுப் பணியை ஆரம்பித்து விடுவார்கள். பிறகு பிரச்சனைதான். எனவே, வரதட்சணை வாங்குவதும், தராவிட்டால், தாரத்தை கொடுமைப்படுத்துவதும் தரங்கெட்ட செயல்களாகும். நம்பி வந்த நங்கையை நாசம் செய்தால், கம்பி எண்ண வேண்டியதுதான்.

தற்கொலை [Suicide]

11. Examine the offence of attempt to commit suicide. ('தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தல்' என்னும் குற்றத்தை கூர்ந்து ஆராய்க.)

(அல்லது)

Attempt to commit suicide - Write short notes. (தற்கொலை செய்ய முயற்சித்தல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

மற்றவர்களின் உயிரைப் பறிப்பதற்கு எப்படி ஒருவனுக்கு உரிமை இல்லையோ, அவ்வாறே தன் உயிரை போக்கிக் கொள்ளவும் ஒருவனுக்கு உரிமை கிடையாது.

சட்டப் பிரிவு கூறுவதாவது:

பிரிவு 309 : யாராவது தற்கொலை செய்து கொள்ள முயன்று, அதற்கென ஏதாவது ஒரு செயலைப் புரிந்திருந்தால் அதற்கு ஓர் ஆண்டு வரை வெறும் காவலோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

தற்கொலை முயற்சிக்கு இரண்டு கூறுகள் தேவை. 1. முயற்சி; 2. தற்கொலைக்காக எடுக்கப்பட்ட ஒரு செயல். (மூழ்குதல், விஷம் சாப்பிடல்).

முக்கிய வழக்குகள்:

Mulia[1] வழக்கில், A தன் உயிரைப் போக்கிக் கொள்ள விரும்பி ஒரு கிணற்றில் விழுந்து விட்டான். பின் மீட்கப்பட்டான். இது தற்கொலை முயற்சி என தண்டிக்கப்பட்டான்.

Ramakka[2] வழக்கில் பெண் ஒருத்தி கிணற்றில் குதித்து உயிரை விடும்

1. 17 A.L.J. 478, 50 I.C. 1003
2. (1884) 8 Mad. 5

பொருட்டு ஓடினாள். அப்பொழுது தடுத்து மீட்கப்பட்டாள். ஆனால் இங்கு அவள் தண்டிக்கப்படவில்லை. ஏனெனில், அவள் அவ்வாறு ஓடும்பொழுது, தன் மனதை மாற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளாமல் இருக்கலாம் அல்லவா? மேலும் இது ஒரு முன்னேற்பாடே (preparation) ஒழிய, முயற்சி (attempt) ஆகாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Ram Sundar Dubey[1] வழக்கில் சத்தியாகிரகம், பட்டினிப்போர் முதலியவை தற்கொலை முயற்சி ஆகாது, எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

P.Rathinam v. Union of India[2] எனும் வழக்கில் இந்திய அரசியலமைப்புச் சட்டம், தனது ஷரத்து 21-ன் வழியாக 'வாழ்வுரிமையை' (right to live) ஒரு அடிப்படை உரிமையாக குடிமக்களுக்கு அளித்துள்ளது; அதில் வாழாமல் சாகும் உரிமையும் அடங்கும் எனப்பட்டது. எனவே, தற்கொலை முயற்சியை தண்டிக்கும் இந்திய தண்டனைச் சட்டத்தின் 309-வது பிரிவு, ஷரத்து 21-ஐ மீறுவதாக உள்ளது என்றும், எனவே, பிரிவு 309 இல்லாநிலையது என்றும் மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

ஆனால் பின்னர் எழுந்த **Gian Kumar v. State of Punjab**[3] என்ற வழக்கில், மேற்படி **P.Rathinam** வழக்கில் கூறப்பட்ட தீர்ப்பு உச்ச நீதிமன்றத்தால் ஒதுக்கித் தள்ளப்பட்டு ஷரத்து 21-ன் கீழான வாழ்வுரிமையில், வாழாமல் சாகும் உரிமை அடங்காது எனப்பட்டது. வாழ்விற்கும் தனிப்பட்ட சுதந்திரத்திற்கும் உத்திரவாதம் அளிக்கும் ஷரத்து 21, அவ்வாழ்வை இயற்கைக்கு முரணாக தற்கொலை மூலம் முடித்துக் கொள்ளவும் உரிமையளிக்கும் ஒன்றாக சுற்பனையிலும் எண்ணிப் பார்க்க முடியாது, என உச்ச நீதிமன்றம் கூறியது.

தற்கொலைக்கு உடந்தையாயிருத்தல் [Abetment of Suicide]

12. Abetment of Suicide - Write short notes. (தற்கொலைக்கு உடந்தையாயிருத்தல் - சிறு குறிப்பு வரைக.)

தற்கொலைக்கு முயற்சித்தல் எவ்வாறு தண்டிக்கப்படக்கூடியதோ, அதே போன்று அத்தற்கொலைக்கு உடந்தையாயிருப்பவர்களும் தண்டிக்கப் படக் கூடியவர்களே. இதனை இந்திய தண்டனைச் சட்டத்தின் இரண்டு சட்டப் பிரிவுகள் தண்டிக்கின்றன. அவை பின்வருமாறு.

பிரிவு 305 : 18 வயதிற்குட்பட்டவர், பித்து பிடித்தவர், வெறி பிடித்தவர், முட்டாள் அல்லது குடிபோதையிலிருக்கும் எவரேனும் தற்கொலை செய்து கொண்டால், அத்தகைய தற்கொலை செய்து

1. (1962) I Cri. L.J. 699 : 1961 All. L.J. 550
2. (1994) 3 S.C.C. 394
3. A.I.R. 1996 S.C. 94 6

கொள்ளப்படுவதற்கு உடந்தையாயிருக்கிற எவரொருவரும் மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையோ விதித்து தண்டிக்கப்படுவர். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

பிரிவு 306 : ஒருவர் தற்கொலை செய்து கொண்டால், அவ்வாறு தற்கொலை செய்து கொள்ளுமாறு தூண்டுபவர்களுக்கும், துணை நிற்பவர்களுக்கும் பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை யுடன் அபராதமும் விதிக்கப்படும். கணவன் இறந்ததும் 'சதி' என்னும் பழைய வழக்கத்திற்கு கட்டுப்பட்டு அவனது மனைவி தீக்குளிப் பதற்கு உதவி செய்பவர்களும் மேற்படி பிரிவின்கீழ் தண்டிக்கப்படக் கூடியவர்களே.

கொலை செய்ய முயற்சி [Attempt to Murder]

13. Attempt to Murder - Write short notes. (கொலை செய்ய முயற்சி - சிறு குறிப்பு வரைக.)

தான் செய்யும் செயல் மற்றொருவருக்கு மரணத்தை விளைவிக்கும் என்றும், அதனால், தான் கொலைக் குற்றத்திற்கு ஆளாவோம் என்றும் அறிந்திருந்தே அச்செயலைச் செய்தால், அது கொலை செய்ய முயற்சித்தல் ஆகும். மேற்படி செயலின் விளைவாக எவருக்கேனும் காயம் ஏற்பட்டால், மேற்படி நபருக்கு ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் சிறைத் தண்டனையுடன் கூடிய அபராதமோ விதிக்கப்படும். வேறு சூழ்நிலைகளில், பத்தாண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமும் குற்றவாளிக்கு விதிக்கப்படும். இவ்வாறு **பிரிவு 307** கூறுகின்றது.

மேலும் ஆயுள் தண்டனைக் கைதி ஒருவர் செய்யும் கொலை முயற்சியில் மற்றொருவருக்கு காயம் ஏற்படுமானால், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படலாம்.

எடுத்துக்காட்டுகள்:

(1) Z என்பவருக்கு மரணம் ஏற்பட்டால் A என்பவர் கொலைக் குற்றம் செய்தவராவார் என்ற சூழ்நிலையில் Z என்பவரைக் கொல்லும் கருத்துடன் Z-அய் பார்த்து A சுடுகிறார். எனினும் அதிலிருந்து Z தப்பி விடுகிறார். இங்கு A கொலை முயற்சிக்காக தண்டிக்கப்படுவார்.

(2) பச்சிளம் குழந்தையொன்றின் மரணத்தை விளைவிக்கும் கருத்துடன், A என்பவர் அதை மனித நடமாட்டம் இல்லாத இடத்தில் பாதுகாப்பின்றி விட்டு விடுகிறார். குழந்தையின் மரணம் அதனால் விளையாவிட்டாலும் மேற்படி A ஆனவர், கொலை செய்ய முயற்சித்தல் குற்றம் புரிந்தவராகிறார்.

(ii) கருவைச் சிதைவித்தல், பிறக்காத குழந்தைகளுக்கு தீங்குகள், கைக்குழந்தைகளைப் பாதுகாப்பின்றி விடுதல் மற்றும் பிறப்பை மறைத்தல்

[Causing of miscarriage, injuries to unborn children, exposure of infants and the concealment of birth]

(பிரிவுகள் 312 முதல் 318 முடிய)

14. State briefly the provisions of the Indian Penal Code regarding "Offences against children". ('குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைப்' பொறுத்து இந்திய குற்றவியல் சட்டத்திலுள்ள வழிவகைகளை சுருங்கக் கூறுக.)

(அல்லது)

Discuss the offences relating to the birth of children. (குழந்தைகள் பிறப்பு பற்றிய பல்வேறு குற்றங்களை விவாதிக்க.)

(அல்லது)

Explain in detail the various offences relating to the birth of children as provided under the Indian Penal Code. (இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறியுள்ளபடி குழந்தைகள் பிறப்பு குறித்த பல்வேறு குற்றங்களை விரிவாக விளக்குக.)

முன்னுரை:

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைப் பற்றி இந்திய தண்டனைச் சட்டத்தின் 312 முதல் 318 வரையிலான பிரிவுகள் விளக்குகின்றன.

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் - நான்கு வகை:

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களை 1. கருவைச் சிதைவித்தல்; 2. பிறக்காத குழந்தைகளுக்கு தீங்கு விளைவித்தல்; 3. கைக் குழந்தைகளை பாதுகாப்பின்றி விடுதல்; 4. குழந்தைப் பிறப்பை மறைத்தல் என நான்கு தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம். அவை ஒவ்வொன்றையும் விரிவாக பின்வருமாறு காண்போம்.

1. கருவைச் சிதைவித்தல் (Causing Miscarriage):

312, 313 மற்றும் 314-வது பிரிவுகள் கருச்சிதைவு குறித்து கூறுகின்றன. அவை வருமாறு.

(a) **பிரிவு 312-ன்படி,** கருவுற்றிருக்கும் ஒரு பெண்ணுக்கு கருச் சிதைவை அப்பெண்ணின் உயிரைக் காக்கும் பொருட்டு, நல்லெண்ணத் துடன் அத்தகைய கருச்சிதைவு விளைவிக்கப்படாதிருக்குமானால், தன்னிச்சையாக விளைவிக்கும் எவராயினும், அவருக்கு 3 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ

விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அப்பெண் கருவியக்க நிலையிலிருந்தால் 7 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

விளக்கம் : தானே கருச்சிதைவு விளைவித்துக் கொள்ளும் ஒரு பெண், மேற்படி பிரிவின் பொருளின் கீழ் தண்டனைக்குரியவராவார். [மேலும் விளக்கத்திற்கு அடுத்த வினாவின் விடையில் காண்க.]

(b) **பிரிவு 313-ன்படி,** சம்பந்தப்பட்ட பெண்ணின் சம்மதமின்றி, அந்தப் பெண் கருவியக்க நிலையில் இருந்தாலும் இராவிட்டாலும், முன்கண்ட பிரிவு 312-ன்படியிலான கருச்சிதைவு குற்றத்தைச் செய்கிற எவராயினும், அவருக்கு ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்ட னை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

இப்பிரிவின்படி, பெண்ணிற்கு கருச்சிதைவைச் செய்கிற நபர் மட்டுமே தண்டிக்கப்படுகிறார்.

(c) **பிரிவு 314-ன்படி,** கருவுற்ற ஒரு பெண்ணுக்குக் கருச்சிதைவை விளைவிக்கும் கருத்துடன், அந்தப் பெண்ணின் மரணத்தை விளைவிக்கிற செய்கை எதையும் செய்கிற எவராயினும், அவருக்கு 10 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

மற்றும் அந்தப் பெண்ணின் சம்மதமில்லாமல் அந்தச் செய்கை செய்யப்படுமானால், அதற்கு ஆயுள் தண்டனை அல்லது மேற்சொல்லப் பட்ட தண்டனை விதிக்கப்படும்.

விளக்கம் : இந்தக் குற்றத்திற்கு அந்தச் செயல் அநேகமாக மரணம் விளைவிக்கக்கூடும் என்று குற்றவாளி அறிந்திருக்க வேண்டும் என்ற அவசியமில்லை.

2. பிறக்காத குழந்தைக்கு தீங்கு விளைவித்தல் (Injuries to unborn children):

(a) **பிரிவு 315-ன்படி,** குழந்தை எதுவும் பிறக்கும் முன்பே அந்தக் குழந்தை உயிருடன் பிறப்பதைத் தடுக்க அல்லது பிறந்த பின் அதை இறக்கச் செய்யும் கருத்துடன் அந்தக் குழந்தை பிறக்கும் முன்பு செய்கை எதையும் செய்கிற எவராயினும், தாயின் உயிரைக் காப்பாற்றும் பொருட்டு அந்தச் செயலை நல்லெண்ணத்துடன் செய்திருந்தாலன்றி, 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

(b) **பிரிவு 316-ன்படி,** மரணம் விளைவிக்கும் குற்றச் செயலினால் (Culpable Homicide) உயிர் பெற்று இன்னும் பிறக்காத ஒரு குழந்தையின் (கருவியக்க நிலையிலுள்ள குழந்தை) (quick born child) மரணத்தை விளைவிக்கும் எவராயினும், அவருக்கு 10 ஆண்டுகள் வரை சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

3. கைக்குழந்தைகளை பாதுகாப்பின்றி விடுதல் (Exposure and Abandonment of Infants):

பிரிவு 317–ன்படி, பனிரெண்டு வயதிற்கு குறைந்த ஒரு குழந்தையின் தந்தையாக, அல்லது தாயாக இருக்கிற, அல்லது அத்தகைய குழந்தையைப் பராமரிக்கிறவர், அக்குழந்தையை முழுவதும் கைவிட்டுவிட வேண்டும் (wholly abandoning) என்ற கருத்துடன் விட்டு விடுதல் அல்லது அபாயத்திற்கு உள்ளாக்குதல் குற்றமாகும். இதற்காக மேற்படியார்களுக்கு 7 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

விளக்கம் : அபாயத்திற்கு உள்ளாக்குதலின் விளைவாக அந்தக் குழந்தை இறந்து விடுமாயின், குற்றம் செய்தவரை மரணம் விளைவித்த குற்றத்திற்காக விசாரணை செய்யலாம். இதை மேற்படி பிரிவு தடுக்காது.

4. பிறப்பை மறைத்தல் (Concealment of birth by secret disposal):

பிரிவு 318–ன்படி, ஒரு குழந்தை பிறப்பதற்கு முன்போ அல்லது பின்போ அல்லது பிறக்கும்போதோ இறந்துவிடும் பொழுது, அக்குழந்தையின் இறந்த உடலை இரகசியமாகப் புதைப்பதனால் அல்லது வேறுவிதமாக அப்புறப்படுத்துவதனால் அந்தக் குழந்தையின் பிறப்பை கருத்துடன் மறைக்கிற அல்லது மறைக்க முயல்கிற எவரொருவரும், 2 ஆணடுகள் வரை சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படல் வேண்டும்.

15. What is miscarriage? Is there any change introduced by Termination of Pregnancy Act? Explain. (கருச்சிதைவு என்றால் என்ன? மருத்துவ கருச்சிதைவு சட்டம் ஏதேனும் மாற்றங்களை கொண்டு வந்ததா? விளக்குக.)

(அல்லது)

What is miscarriage? What is effect of Medical Termination of Pregnancy Act, 1971, over Indian Penal Code?

(அல்லது)

Miscarriage - Write short notes. (கருச்சிதைவு - சிறு குறிப்பு வரைக.)

கருச்சிதைவு - பிரிவு 312-ன் விளக்கம் பின்வருமாறு:

"கருவுற்றிருக்கும் ஒரு பெண்ணுக்கு கருச்சிதைவை அப்பெண்ணின் உயிரைக் காக்கும் பொருட்டு, நல்லெண்ணத்துடன், அத்தகைய கருச்சிதைவு விளைவிக்கப்படாதிருக்குமானால், தன்னிச்சையாக விளைவிக்கும் எவராயினும், அவருக்கு மூன்று ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்குச் சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்றோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

மற்றும் அப்பெண் கருவியக்க நிலையிலிருந்தால் ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய ஒரு கால அளவுக்கு சிறைத் தண்டனை வகைகள் இரண்டில் ஒன்று விதித்துத் தண்டிக்கப்படுதல் வேண்டும். மற்றும் அவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம்."

விளக்கம் : தானே கருச்சிதைவு விளைவித்துக் கொள்ளும் ஒரு பெண் இந்தப் பிரிவின் பொருளில் அடங்கியவராவார்.

கருவுற்றிருக்கும் ஒரு பெண்ணிற்கு கருச்சிதைவு உண்டாக்கும் ஒரு நபர் கருச்சிதைவித்தல் என்னும் குற்றத்தைச் செய்தவர் ஆவார். கரு இயக்க நிலைக்கு வந்த பின்னர் சிதைவித்தல் கொடிய குற்றமாகும். 'கரு இயக்க நிலை' என்பது கருவுற்ற நான்கு அல்லது அய்ந்து மாதங்களில் கரு அசைவதால் ஏற்படும் உணர்வை உணரக்கூடிய நிலையைக் குறிக்கும். கருவுற்ற பெண்ணின் உயிரைக் காப்பதற்காக நல்ல எண்ணத்தில் கருச்சிதைவு செய்யப்படுமானால் அது குற்றமாகாது. சட்டத்திற்கு புறம்பாக கருச்சிதைவு செய்து கொள்ளும் பெண்ணும் அதனைச் செய்பவரும் தண்டனைக்கு உள்ளாவார்கள். எனினும், 1971-ல் இயற்றப்பட்ட மருத்துவ கருச்சிதைவுச் சட்டமானது, பிரிவு 312-ன் கடுமையைச் சற்றே தளர்த்தி சில மாற்றங்களை கொண்டு வந்தது. அவை பின்வருமாறு.

மருத்துவக் கருச்சிதைவுச் சட்டம், 1971 (Medical Termination of Pregnancy Act, 1971):

பதிவு செய்யப்பட்ட மருத்துவர்கள் பின்வரும் சூழ்நிலைகளில் கருச்சிதைவு செய்யலாம். அதற்கு மேற்படி சட்டம் அவர்களுக்கு குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிக்கிறது.

1. கரு வளர்வது கருவுற்றிருப்பவரின் உள்ளத்திற்கும் உயிருக்கும் ஆபத்து எனும் பொழுது; 2. கரு வளர்ந்து குழந்தையாக பிறந்தால் அது உள்ள ஊனம், உடல் ஊனம் ஆகியவற்றால் பாதிப்படையும் எனும் பொழுது; 3. கருத்தடை முயற்சி மேற்கொண்ட பின்னர் கரு உண்டாகும் பொழுது; 4. வன்புணர்ச்சியின் விளைவாக பெண்ணிற்கு கரு உண்டாகும் பொழுது; 5. சமூகப் பொருளாதார பின்னணியில் ஒரு கரு தேவையற்றது எனக் கருதும் பொழுது. பதிவு செய்யப்படாத மருத்துவர் கருச்சிதைவு செய்தால், இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் தண்டனைக்குரியவராவார். பதிவு பெற்ற மருத்துவர் மேற்கண்ட சூழ்நிலைகளில் கருச்சிதைவு உண்டாக்கலாம்.

முக்கிய வழக்கு:

R. v. Bourne[1] என்ற வழக்கில் சுமார் 15 வயதுப் பெண் மிருகத் தனமான வன்புணர்ச்சிக்கு ஆளானாள். அதன் விளைவாக கருவுற்றாள். இதனால் அவளுடைய உடலும் உள்ளமும் சீரழிந்துவிடும் என்று எண்ணிய மருத்துவர் கருச்சிதைவு செய்தார். இது நல்லெண்ணத்தின்பால் செய்த

1. 1938 3 All. E.R. 615

கருச்சிதைவு ஆகும். மேலும் அது மருத்துவரின் கடமை என்றும் கூறப்பட்டது. ஆகவே மேலே குறிப்பிட்ட சட்டப்படி, மருத்துவரின் செயல் குற்றமன்று எனத் தீர்மானிக்கப்பட்டது.

(iii) காயம் மற்றும் கொடுங்காயம் [Hurt and Grievous Hurt]

(பிரிவுகள் 319 முதல் 338 முடிய)

16. What is hurt? When does it amount to grievous hurt? (காயம் என்றால் என்ன? அது எப்பொழுது கொடுங்காயம் என்று அழைக்கப்படுகிறது?)

(அல்லது)

Distinguish between
Hurt and Grievous hurt.

வேறுபடுத்துக
காயம் மற்றும் கொடுங்காயம்.

(அல்லது)

"We have found it very difficult to draw a line between those bodily injuries which are serious and those which are slight..." (Law Commissioners). Explain this statement. Give the two types of hurts with necessary essential ingredients. ("பயங்கர உடல் ஊறுகளையும் சாதாரண உடல் ஊறுகளையும் வேற்றுமைப்படுத்துவதில் நாங்கள் மிகவும் கஷ்டப்பட்டோம்." (சட்ட ஆணையர்கள்). இக்கூற்றை விளக்குக. முக்கிய மற்றும் தேவையான உட்கூறுகளுடன் இருவகை ஊறுகளைத் தருக.)

(அல்லது)

Hurt - Write short notes. (காயம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Grievous Hurt - Write short notes. (கொடுங்காயம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Define Grievous hurt. Do you think that the eight clauses ennumerated under Section 320 are sufficient to deal with the present situation? ('கொடுங்காயம்' - வரையறை செய்க. பிரிவு 320-ன் கீழ் கூறப்பட்டுள்ள எட்டு துணைப் பிரிவுகளும் தற்போதைய சூழ்நிலைக்கு போதுமானவை என தாங்கள் கருதுகிறீர்களா?)

முன்னுரை:

'காயம்' இருவகைப்படும். 1. சாதாரண காயம் (Simple hurt), 2.கொடுங்காயம் (Grievous hurt). 'சாதாரண காயம்' என்பதே சுருக்கமாக 'காயம்' என்று இந்திய தண்டனைச் சட்டத்தில் பிரிவு 319-ன் கீழ்

வரையறுக்கப்பட்டுள்ளது. கொடுங்காயம் பிரிவு 320-ன் கீழ் வரையறுக்கப் பட்டுள்ளது.

காயம் (Hurt) - பிரிவு 319 கூறும் வரையறை:

ஒருவருக்கு உடல்வலி (bodily pain), நோய் (disease) அல்லது பலவீனம் (infirmity) விளைவிக்கிற எவரும், காயம் விளைவிக்கிறார் என்று சொல்லப்படுவார், என பிரிவு 319 கூறுகிறது.

தன்னிச்சையாக காயம் விளைவித்தல் (voluntarily causing hurt) - பிரிவு 321 கூறும் வரையறை:

ஒருவர் வேண்டுமென்றே மற்றொருவருக்கு காயம் விளைவித்தல் குற்றமாகும். இதைத்தான் பிரிவு 321 பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, எவருக்கேனும் செய்கை எதன் மூலமேனும் காயம் விளைவிக்கும் கருத்துடன் அல்லது அதனால் தாம் எவருக்கேனும் அநேகமாக காயம் விளைவிக்கக் கூடும் என்று அறிந்து, அச்செய்கையைச் செய்து, அதன் மூலம் எவருக்கேனும் காயம் விளைவிக்கும் எவரொருவரும், தன்னிச்சையாக காயம் விளைவிப்பதாகச் சொல்லப்படுவார், என பிரிவு 319 கூறுகிறது.

தன்னிச்சையாக காயம் விளைவித்தல் - பிரிவு 323 கூறும் தண்டனை:

தன்னிச்சையாக காயம் விளைவிக்கும் எவரொருவருக்கும், ஓராண்டு வரையிலான சிறைவாசமோ அல்லது ஆயிரம் ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

காயம் விளைவித்தல் - விளக்கம்:

மேற்கண்ட இரு பிரிவுகளிலும் 'காயம் விளைவித்தல்' எனும் சொற்கள் வருகின்றன. பொதுவாக, உடலுக்கு ஊறு ஏற்படுத்துவதைக் 'காயம் விளைவித்தல்' என்று கூறுகிறோம். காயம் என்பது, இரத்தம் கசியும் வெட்டுக் காயமாகவோ (incised wound), புண்ணாகவோ இருக்க வேண்டும் என்பதில்லை. உடம்பின் உள்ளுறுப்புகளுக்கு ஊறு விளைவிக்கும் இரத்தக்கட்டு (contuision), சிராய்ப்பு (abrasion), வலி (pain), நோய், பலவீனம் ஆகியவற்றை விளைவித்தலும் காயமேயாகும். சுருங்கக்கூறின், எந்த வகையில் உடலுக்கு ஊறு விளைவித்தாலும் அதைக் 'காயம்' என்று குறிப்பிடுகிறோம். இதனடிப்படையில்தான், பிரிவு 319-ல் கூறப்பட்டுள்ள 'காயத்தின்' வரையறையும் அமைந்துள்ளது.

காயம் விளைவித்தலில் மிகுதீங்கு நிலைகள் (Aggravated forms of hurt):

இவ்வாறு காயம் விளைவித்தலானது அபாயகரமான ஆயுதங்களைக் கொண்டோ **(பிரிவு 324)**, சொத்தை அச்சுறுத்திப் பறிப்பதற்காகவோ **(பிரிவு 327)**, ஒரு குற்றத்தை செய்யும் கருத்துடன் நஞ்சு முதலியவற்றின் மூலமாகவோ **(பிரிவு 328)**, ஒப்புதலுரையை அச்சுறுத்திப் பெறுவதற்காகவோ (extort

confession) (பிரிவு 330), பொது ஊழியரை அவரது கடமையிலிருந்து தடுக்கவோ (பிரிவு 332), ஆத்திரமூட்டப்பட்டதன் பேரிலோ (பிரிவு 334), உயிருக்கு அல்லது மற்றவர்களின் உடற்பாதுகாப்பிற்கு அபாயம் விளைவிப்ப தற்காகவோ (பிரிவு 337) இருக்கலாம். மேற்கண்ட வையெல்லாம் அந்தந்தப் பிரிவுகளின் வாயிலாகவே உரிய தண்டனையால் தண்டிக்கப் படுகின்றன.

முக்கிய வழக்குகள்:

Bysagoo Noshyo[1] சம்பந்தப்பட்ட வழக்கில் ஒரு பெண்ணின் கணவன் யதேச்சையாக அப்பெண்ணின் மண்ணீரல் பகுதியில் ஆத்திர மடைந்த நிலையில் உதைக்க, அவள் இறந்து போனாள். அவருடைய மண்ணீரல் ஏற்கனவே நோயால் பாதிக்கப்பட்டுள்ளது. இது அவளுடைய கணவனுக்குத் தெரியாது. மேலும் அந்த உதை மனித வாழ்விற்கு ஊறு விளைவிக்கும் காயத்தை உண்டு பண்ணும் என்ற கருத்தோ அல்லது அறிவோ அக்கணவனுக்கு கிடையாது. ஆகவே அவன் காயம் விளைவித்த குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டான்.

Anis Beg[2] - சம்பந்தப்பட்ட வழக்கில் 16 வயது நிரம்பிய ஆண்மகன் தன் 12 வயது காதலிக்கு, தன் காதலின் வேகத்தை புலப்படுத்த இனிப்புப் பண்டம் வாங்கிக் கொடுத்தான். அதை அவளும், அவளது வீட்டாரும் சாப்பிட்டனர். இதனால் கடுமையான உடல் உபாதைக்கு ஆளாயினர். எனவே மருத்துவ பரிசோதனை செய்யப்பட்டது. அதில் ஊமத்தைச் செடியின் விதைகளைத் தின்றதற்கான அறிகுறிகள் கண்டுபிடிக்கப்பட்டன. ஆதலால், குற்றவாளி காயம் (hurt) விளைவித்த குற்றத்திற்கு தண்டிக்கப் பட்டான்.

Jarnail Singh v. State of Punjab[3] என்ற வழக்கில், ஒருவர் கம்பெடுத்து மற்றொருவரின் காதில் அடித்தார். இது அபாயகராமான கருவினைக் கொண்டு காயம் விளைவித்த செயல் என்று கூறி பிரிவு 324-ன் கீழ் அவ்வாறு அடித்தவரை நீதிமன்றம் தண்டித்தது.

கொடுங்காயம் (Grievous Hurt) - ஒரு சிறு விளக்கம்:

கையால் அடிப்பதாலும் காயம் விளைகிறது. கத்தியால் குத்துவதாலும் காயம் விளைகிறது. கையால் அடிபட்டவருக்கு உடலில் வீக்கம் ஏற்படுகிறது. கத்தியால் குத்தப்பட்டவருக்கோ உயிருக்கு ஆபத்து விளைவிக்கும் வகையில் வெட்டுக் காயம் ஏற்படுகிறது. இரண்டுமே உடலுக்கு விளைந்த காயங்கள்தாம் என்றாலும், ஒன்றின் தன்மையும் விளைவும் சாதாரண மானவை. மற்றொன்றின் தன்மையும் விளைவும் உயிருக்கு ஆபத்தானவை. எனவே, கையால் அடித்தவருக்கும் கத்தியால் குத்தியவருக்கும் ஒரே விதத்

1. (1867) 8 W.R. (Cr.) 29
2. (1923) 46 All. 77
3. 1982 Cr. L.J. 386 at p. 386

தண்டனை அளிப்பது பொருந்தாததாகும். இரு செயல்களையும் ஒரே விதக் குற்றமாக கொள்ளுவதும் முறையன்று எனவே, அச்செயல்களை அவற்றின் விளைவிற்கேற்ப இருவகைக் குற்றங்களாகச் சட்டம் பிரிக்கின்றது. கையால் அடித்ததைக் காயம் விளைவித்தல் (causing hurt) என்றும், கத்தியால் குத்தியதைக் கொடுங்காயம் விளைவித்தல் (causing grievous hurt) என்றும் சட்டம் பாகுபாடு செய்கிறது. கொடுங்காயம் விளைவித்தவர் அதிகத் தண்டனைக்கு ஆளாகின்றார்.

இதன் அடிப்படையில் காயங்களை அவற்றின் தன்மைக்கும் விளைவுக்கும் ஏற்ப வகைப்படுத்தி, அதிகத் துன்பம் விளைவிக்கும் ஆபத்தான காயங்களை 'கொடுங்காயங்கள்' என்று பிரிவு 320-ன் வாயிலாக இந்திய தண்டனைச் சட்டம் கூறுகிறது.

சுருங்கக் கூறின், காயங்கள் பிரிவு 320-ல் கூறப்பட்டுள்ள தன்மையையும் விளைவையும் கொண்டிருப்பின், அது கொடுங் காயங்கள் ஆகும்.

கொடுங்காயம் - பிரிவு 320 கூறும் வரையறை (அல்லது) ஒரு காயம் எப்பொழுது கொடுங்காயமாகிறது?

பிரிவு 320: பின்வரும் காயத்தின் வகைகள் மட்டுமே 'கொடுங்காயம்' எனப்படுகின்றன. அவை,

1. ஆண்மை இழக்கச் செய்தல் (Emasculation),
2. ஏதாவது ஒரு கண் பார்வையை நிரந்தரமாக இழக்கச் செய்தல்,
3. ஏதாவது ஒரு காதின் கேட்கும் திறனை நிரந்தரமாக இழக்கச் செய்தல்,
4. ஏதாவது ஒரு உடல் உறுப்பை அல்லது மூட்டினை (any member or joint) இழக்கச் செய்தல்,
5. ஏதாவது ஒரு உடல் உறுப்பு அல்லது மூட்டின் வலிமையை அழித்தல் அல்லது நிரந்தரமாக பழுதாக்குதல்,
6. தலை அல்லது முகத்தை நிரந்தரமாக உருக்குலைத்தல்,
7. ஏதாவது ஒரு எலும்பை உடைத்தல் அல்லது பல் எதையும் இடம் பெயரச் செய்தல்,
8. உயிருக்கு ஆபத்தை விளைவிக்கிற காயம் அல்லது காயத்தினால் வேதனைப்படுபவரை இருபது நாட்கள் வரை கடுந்துன்பம் தரவல்ல காயம் அல்லது இருபது நாட்களுக்கு வழக்கமான அவரது அலுவல்களை செய்யாமல் தடுக்கக்கூடிய காயம் எதுவும் புரிதல்.

தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்தல் (Voluntarily causing grievous hurt) - பிரிவு 322 கூறும் வரையறை:

தன்னிச்சையாக ஒரு காயம் விளைவிப்பவர், தாம் விளைவிக்க

வேண்டும் என்று கருத்து கொள்கிற அல்லது தம்மால் அநேகமாக விளைவிக்கக் கூடும் என்று தாம் அறிகிற காயம் கொடுங்காயமாக இருக்குமானாலும், மற்றும் அவர் விளைவிக்கிற காயம் கொடுங்காயமாக இருக்குமானாலும் அவர் தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவிப்பதாக சொல்லப்படுவார், என்று பிரிவு 322 கூறுகிறது.

எடுத்துக்காட்டு: Z என்பவரின் முகத்தைத் தாம் அநேகமாக நிரந்தரமாக உருக்குலைக்கக் கூடும் என்ற கருத்து கொண்டே அல்லது அறிந்தே A என்பவர் Z-க்கு ஓர் அடி கொடுக்கிறார். அந்த அடி Z-ன் முகத்தில் ஒரு நிரந்தரமான உருக்குலைவை ஏற்படுத்தவில்லை; ஆனால் அது இருபது நாட்கள் கால அளவிற்கு கடுமையான உடல்வலியால் Z-அய் துன்புறுமாறு செய்தது. இங்கு A மேற்படி பிரிவு 322-ன்படி தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்தவராவார்.

தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்தல் - பிரிவு 325 கூறும் தண்டனை:

தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவிக்கும் எவரொருவருக்கும், ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

கொடுங்காயம் விளைவித்தலில் மிகுதீங்கு நிலைகள் (Aggravated forms of grievous hurt):

இவ்வாறு கொடுங்காயம் விளைவித்தலானது அபாயகரமான ஆயுதங்களைக் கொண்டோ (பிரிவு 326), சொத்தை அச்சுறுத்திப் பறிப்பதற்காகவோ (பிரிவு 329), ஒப்புதலுரையை அச்சுறுத்திப் பெறுவதற்காகவோ (பிரிவு 331), பொது ஊழியரை அவரது கடமையிலிருந்து தடுக்கவோ (பிரிவு 333), ஆத்திரமூட்டப்பட்டதன் பேரிலோ (பிரிவு 335), உயிருக்கு அல்லது மற்றவர்களின் உடற்பாதுகாப்பிற்கு அபாயம் விளைவிப்பதற்காகவோ (பிரிவு 338) இருக்கலாம். மேற்கண்டவை எல்லாம் அந்தந்தப் பிரிவுகளின் வாயிலாகவே உரிய தண்டனையால் தண்டிக்கப் படுகின்றன.

முக்கிய வழக்குகள்:

Modi Ram v. State of M.P.[1] எனும் வழக்கில், 21 வயதான மோடி ராம் என்பவர் ஜானிபாய் எனும் பெண்ணை மணந்து கொண்டு, தனது இல்வாழ்வைத் தொடங்கினார். இனிதாக சென்று கொண்டிருந்த அவர்களது இல்லறத்தில் சன்னிலால் என்பவர் 'சனி'யாக உள்ளே நுழைந்தார். ஜானிபாயும் சன்னிலாலும் நட்பானார்கள். ஒருநாள், சன்னிலால் ஜானிபாயை காதல் வார்த்தைகள் கூறி கற்பழித்துவிட்டார். பின்னர் ஜானிபாய் தனது கணவன் மோடி ராமை கைகழுவிவிட்டு, தன்னை கற்பழித்த

1. A.I.R. 1972 S.C. 2438 : 1972 Cri. L.J. 1521

சன்னிலாலுடன் சேர்ந்து கொண்டு, மோடி ராம் வசித்து வந்த அதே பகுதியிலேயே ஒரு வீட்டில் சன்னிலாலுடன் வாழ ஆரம்பித்தார். கட்டிய மனைவி, கைப்பிடித்தவனை மறந்து காதல் வார்த்தைகள் கூறியவனுடன் சென்றுவிட்டாள். மோடி ராம் வெறுமனே இருப்பாரா? ஒரு நாள் சன்னிலால் தனது இயற்கைக் கடனை கழிப்பதற்காக போய்க் கொண்டிருக்கும் பொழுது, அய்ந்தாறு நபர்கள் அவரைச் சுற்றி வளைத்து, அடித்தனர். அப்பொழுது அதிலிருந்த மோடி ராம் ஆத்திரம் தலைக்கேறிய நிலையில் சன்னிலாலின் மூக்கையும், ஆணுறுப்பையும் துண்டித்து விட்டார்.[1]

வழக்கை விசாரித்த கீழ் நீதிமன்றம் தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்ததற்காக மோடிராமுக்கு ஓராண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தது. இந்த குறைந்த தண்டனையைக் கண்டு அரசுத் தரப்பினர் உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். அங்கு மேற்படி தண்டனை எட்டு ஆண்டுகளாக உயர்த்தப்பட்டது. இதை எதிர்த்து மோடிராம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். அங்கு, மோடிராமின் இளம் வயது, திருமணமான சில காலத்திற்குள்ளாகவே கைப்பிடித்தவள் சன்னிலாலுடன் ஓடிச் சென்றதால் மோடிராமின் மனதில் ஏற்பட்ட காயம், அதனால் ஏற்பட்ட ஆத்திரம் ஆகியவற்றையெல்லாம் உச்ச நீதிமன்றம் கருத்தில் கொண்டு, அத்தண்டனை மூன்றாண்டுகளாகக் குறைந்தது.

நாம் ஏற்கனவே கண்ட **Palani Goundan**[2] வழக்கில் மனைவிக்கு மரணம் ஏற்பட்ட போதிலும், கணவன் கொடுங்காயம் விளைவித்ததாகவே கருதப்பட்டு, தண்டிக்கப்பட்டான்.

Anta Dadoba[3] சம்பந்தப்பட்ட வழக்கில் பழுக்கக் காய்ச்சிய ஒரு இரும்புக் கம்பி கொண்டு குற்றஞ்சாட்டப்பட்டவன், சிறுமி ஒருத்தியின் கன்னத்தில் சூடு வைத்தான். இதனால் அவள் முகத்தில் நிலையான தழும்புகள் ஏற்பட்டன. இவ்வாறு முகத்தை உருக்குலைத்ததால், இது பிரிவு 320(6)-ன்படி, கொடுங்காயமாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

Jiva[4] சம்பந்தப்பட்ட வழக்கில் ஒரு கணவன், தனது மனைவியை ஆறடி உயரமுள்ள ஜன்னல் ஒன்றின் வழியாக தள்ளி விட்டான். அப்பொழுது அவள் ஜன்னலில் மாட்டப்பட்டிருந்த தடுப்புப் பலகையில் விழுந்ததால், கீழே விழவில்லை. எனினும், அவளது கால் எலும்பு உடைந்து விட்டது. எனவே பிரிவு 320(7)-ன்படி கணவன் கொடுங்காயம் விளைவித்ததாக தீர்ப்பளிக்கப் பட்டது.

Hori Lal v. State of U.P.[5] எனும் வழக்கில் பிரிவு 320(7)-ன் கீழ்

1. பிரிவு 320 (1)-ன்படி ஆண்மையை இழக்கச் செய்வது கொடுங்காயமாகும்.
2. (1919) 42 Mad. 547 (F.B.)
3. (1863) 1 B.H.C. 101
4. (1891) Unrep. Cr. C. 558
5. A.I.R. 1970 S.C. 1969

கூறப்பட்டுள்ள 'எலும்பு முறிவு' (fracture of bone) என்பதற்கு உச்ச நீதிமன்றம் விளக்கம் தந்தது. அதன்படி, வெட்டுவதால் எலும்பில் ஏற்படும் உடைப்போ அல்லது சிம்புகளாக (splintering) எலும்பு நொறுங்குதலோ அல்லது அதில் வெடிப்பு (rupture) அல்லது பிளவு (fissure) ஏற்படுவதோ ஆகிய இவையனைத்துமே, பிரிவு 320(7)-ன் கீழான எலும்பு முறிவில் அடங்கும் என்று கூறியது. இதனடிப்படையில் மேற்படி வழக்கில், எலும்பில் ஏற்படுத்தப்பட்ட வெட்டுக்காயங்கள், எலும்பு முறிவிற்கு சமம் என்றும், எனவே அவை கொடுங்காயங்கள் என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது.

Pandurang v. State of Hyderabad[1] எனும் வழக்கில் கோடாலி யால் அதன் முனை தலையில் 1/2 அங்குலம் உள் நுழையுமாறு அடித்தல், உயிருக்கு அநேகமாக ஆபத்தை விளைவிக்கும் செயலாகும் என்றும், எனவே இது பிரிவு 320(8)-ன்படி கொடுங்காயமாகும் என்றும் உச்ச நீதிமன்றம் கூறியது. இதனடிப்படையில் குற்றவாளி பிரிவு 326-ன் கீழ் தண்டிக்கப் பட்டான்.

Dukhmochan Pandey v. State of Bihar[2] எனும் வழக்கில், கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்திற்கும் (culpable homicide not amounting to murder) கொடுங்காயத்திற்கும் இடையே உள்ள கோடானது மிக மெல்லியதென்றும், மரணத்தை அநேகமாக விளைவிக்கக் கூடும் எனும் உடல் காயங்கள் (injuries likely to cause death) பிரிவு 299-ன்படி, மரணம் விளைவிக்கும் குற்றமாகும் என்றும், அதே சமயத்தில் உயிருக்கு ஆபத்தை விளைவிக்கலாமெனும் உடற்காயங்கள் (injuries which endangers life) பிரிவு 320(8)-ன்படி கொடுங்காயம் விளைவிக்கும் குற்றமாகும் என்றும் உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

முடிவுரை:

ஒரு காயம், பிரிவு 320-ன் எட்டு உட்கூறுகளுக்குள் கூறப்பட்டுள்ள ஒன்றாக இருப்பின் அது கொடுங்காயமாகி விடுகிறது. அந்த எட்டு உட்கூறுகளுமே ஓரளவிற்கு, உடலுக்கு கொடிய அளவில் ஊறு ஏற்படுத்தும் தன்மையுடைய அனைத்து காயங்களையும் வகைப்படுத்துகின்றன. எனவே, தற்போதைய சூழ்நிலைக்கு அவை போதுமானதுதான்.

(iv) முறைகேடான தடுப்பும், முறைகேடான சிறை வைப்பும் [Wrongful Restraint and Wrongful Confinement]

(பிரிவுகள் 339 முதல் 348 முடிய)

17. Define "wrongful restraint" and distinguish it from "wrongful confinement". (முறைகேடான தடுப்பை வரையறுத்து, அதனை

1. A.I.R. 1955 S.C. 216
2. A.I.R. 1998 S.C. 40

முறைகேடான சிறை வைப்பிலிருந்து வேறுபடுத்துக.)

(அல்லது)

What do you mean by wrongful restraint? How does it differ from wrongful confinement? When is "gherao" punishable under I.P.C.? (சட்ட விரோதமாக தடுத்து வைத்தல் என்பதால் நீங்கள் அறிவது யாது? அது எவ்வாறு சட்ட விரோதமாக அடைத்து வைத்தலிலிருந்து வேறுபடுகிறது? இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் 'கெரோ' எப்போது தண்டிக்கப்படக் கூடியது?)

(அல்லது)

Discuss the offences affecting human freedom as enumerated in the Indian Penal Code. (இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறியுள்ளபடி மனித சுதந்திரத்தை பாதிக்கும் குற்றங்களை விவாதிக்க.)

(அல்லது)

Wrongful restraint - Write short notes. (முறைகேடான தடுத்தல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Wrongful confinement - Write short notes. (சட்ட விரோதமாக அடைத்து வைத்தல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Distinguish between
Wrongful restraint and wrongful confinement.

வேறுபடுத்திக் காட்டுக
முறையின்றித் தடுத்தல் மற்றும் முறையின்றி அடைத்து வைத்தல்.

முன்னுரை:

முறைகேடான தடுப்பும், முறைகேடான சிறை வைப்பும் ஆகிய இரண்டு குற்றங்களும், 'மனித சுதந்திரத்திற்கு (human freedom) எதிரான குற்றங்கள்' எனப்படுகின்றன.

முறைகேடான தடுப்பு (Wrongful Restraint) - வரையறையும் தண்டனையும்:

பிரிவு 339 : ஒரு குறிப்பிட்ட திசையில் செல்ல உரிமை பெற்றுள்ள ஒரு நபரை அத்திசையில் செல்லவிடாமல் தன்னிச்சையாக தடுத்து நிறுத்துவது 'முறைகேடான தடுப்பு' எனக் கூறப்படுகிறது.

விதிவிலக்கு : நிலத்தின் மீதோ அல்லது நீரின் மீதோ செல்லும் ஒரு தனியார் வழியைத் தடை செய்யத் தமக்கு சட்டப்படி உரிமை உள்ளது என்று நல்லெண்ணத்துடன் நம்புகிற ஒருவர் அதைத் தடைச் செய்வது இப்பிரிவின்படி குற்றமாகாது.

எடுத்துக்காட்டு: பாதையைத் தடை செய்வதற்கு தமக்கு ஓர் உரிமை உண்டு என்று நல்லெண்ணத்தோடு நம்பாத A என்பவர் Z என்பவர் செல்வதற்கு உரிமையுடைய ஒரு பாதையில் தடை ஏற்படுத்துகிறார். இங்கு A, Z-அய் முறைகேடாக தடுத்து வைக்கிறார்.

பிரிவு 341 : முறைகேடான தடுப்பு செய்பவருக்கு ஒரு மாதம் வரையிலான வெறுங்காவலோ அல்லது அய்ந்நூறு ரூபாய் வரையிலான அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

முக்கிய வழக்குகள்:

Arumuga Nadar[1] வழக்கில், A-வும் அவரது மனைவி, மக்களும் ஒரு வீட்டில் வசித்து வந்தனர். அவர்கள் தற்காலிகமாக வீட்டை விட்டு வெளியே சென்றிருந்தபொழுது குற்றவாளி வெளியே கதவைப் பூட்டி விட்டான். இதனால் அவர்கள் திரும்பி வந்த பொழுது வீட்டினுள் நுழைய முடியவில்லை. அவர்கள் செல்ல உரிமை பெற்றுள்ள திசையில் அவர்களைச் செல்ல விடாமல் தடுத்ததற்காக குற்றவாளி மேற்படி பிரிவின்படி தண்டிக்கப்பட்டான்.

Ram Lala[2] வழக்கில், ராம்லாலா மாட்டு வண்டியில் செல்லும் போது தடுக்கப்பட்டான். பின் அவன் மட்டும் அப்பாதையில் போக அனுமதிக்கப் பட்டான். ஆனால் அவனது மாடும், மாட்டு வண்டியும் அவ்வாறு அனுமதிக்கப்படாமல் தடுக்கப்பட்டது. ஏனெனில் இது மனிதனின் சுதந்திரத்திற்கு எதிரான குற்றம்; விலங்குகளின் சுதந்திரத்திற்கு எதிரான குற்றம் அல்ல, எனப்பட்டது.

முறைகேடான சிறை வைப்பு (Wrongful Confinement) - வரையறையும் தண்டனையும்:

பிரிவு 340 : ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட எல்லையை மீறிச் செல்ல முடியாத வகையில், எவரையேனும் முறைகேடாக தடுப்பதை முறைகேடான சிறை வைத்தல்[3] என்று கூறப்படுகிறது.

எடுத்துக்காட்டுகள்: (1) A என்பவர் Z என்பவரைச் சுவர் சூழ்ந்த ஓர் இடத்திற்குள் போகும்படி செய்து பூட்டி விடுகிறார். வரம்பிற்குட் படுத்தும் சுவருக்கு அப்பால் எந்த திசையிலும் செல்லமுடியாதபடிக்கு Z இவ்வாறு தடுக்கப்படுகிறார். Z-ஐ முறைகேடான வகையில் A சிறை (அடைத்து) வைக்கிறார்.

(2) ஒரு கட்டிடத்தின் அனைத்து செல்வாயில்களிலும் A என்பவர் ஆட்களை துப்பாக்கிகளுடன் நிறுத்தி வைத்து, அந்தக் கட்டிடத்தை விட்டு

1. (1910) M.W.N. 727
2. (1912) 15 Bom. L.R. 103
3. இதனை 'முறைகேடாக அடைத்து வைத்தல்' என்றும் 'சட்ட விரோதமாக அடைத்து வைத்தல்' என்றும் அழைக்கலாம்.

வெளியேற Z முயன்றால், Z-அய் அவர்கள் சுடுவார்கள் என்று Z-யிடம் கூறுகிறார். Z-அய் A முறைகேடாக சிறை வைக்கிறார்.

பிரிவு 242 : முறைகேடான சிறை வைத்தல் புரியும் எவரொரு வருக்கும் ஓராண்டு வரை சிறைக் காவலோ அல்லது ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

முக்கிய வழக்குகள்:

Shambu Narain[1] வழக்கில் மருத்துவ வசதி உடைய நகரத்தில் வாழ்ந்த ஒருவர், அடிக்கடி பைத்தியமாகிவிடும் தன் சகோதரனை சங்கிலியால் கட்டிப்போட்டது, முறைகேடான சிறை வைப்பு ஆகும் எனத் தீர்ப்பளிக்கப் பட்டது.

Bhagwati v. State[2] என்ற வழக்கில், ஒரு மனிதனை உடல்ரீதியாக அடைத்து வைக்க வேண்டிய அவசியமில்லை. மனரீதியாக, தான் வெளியேறினால் தன் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என பயந்து எங்கும் வெளியேறாமல் இருந்தாலே போதும். அப்படி மிரட்டியவர்கள் முறைகேடான சிறை வைப்பிற்காக தண்டிக்கப்படுவார்கள் எனத் தீர்ப்பானது.

ஒரு மனிதனின் உடலை தடுத்து சிறை வைப்பது மட்டுமின்றி, அவன் மனம் விரும்புகிற இடத்திற்கு சுதந்திரமாகச் செல்ல விடாது, அவனுடைய மனதில் படும்படி கூறி, அவனை அவ்விடம் விட்டு நகர முடியாது என அவன் மனத்தைத் தடை செய்வதும் முறைகேடான சிறைவைப்பு ஆகும் என **Bird v. Jones**[3] வழக்கில் தீர்ப்பானது.

Shamsudheen v. State of Kerala[4] எனும் வழக்கில், X என்பவர் முறைகேடாக சிறை வைக்கப்பட்டதை புலனாய்வு செய்ய இரு காவலர்கள் S என்பவரின் இடத்திற்கு சென்றனர். அப்பொழுது S அவ்விரு காவலர் களையும் சிறை வைத்துவிட்டார். எனவே, காவலர்களை முறைகேடாக சிறை வைத்ததற்காக S தண்டிக்கப்பட்டார். கடமையைச் செய்ய வந்த காவலர்களை சிறை வைத்ததால், S-க்கு ஆயிரம் ரூபாய் அபராதமும், இரண்டு மாத வெறுங்காவல் சிறைவாசமும் தண்டனையாக விதிக்கப்பட்டது.

மேற்கண்ட இரு குற்றங்களுக்குமுள்ள முக்கிய வேறுபாடு:

முறைகேடான தடுப்பில் ஒருவன், தான் செல்ல வேண்டிய திசையில் மட்டும் செல்லவிடாமல் தடுக்கப்படுகிறான். அத்திசையைத் தவிர வேறு எந்தத் திசையிலும் செல்ல அவனுக்கு உரிமை உண்டு.

---

1. (1923) 45 All. 495
2. 1971
3. (1845) 7 Q.B. 742 at pp. 751-52
4. 1989 Cri. L.J. 2068

முறைகேடான சிறை வைப்பில், ஒருவன் ஒரு குறிப்பிட்ட சுற்றுப்புற எல்லையை விட்டு எங்கும் போகமுடியாதபடி சிறை வைக்கப்படுகிறான்.

'கெரோ' செய்தலும் தண்டிக்கப்படக்கூடியதே:

'கெரோ' (gherao) செய்வதென்பது ஒருவரைச் சுற்றி பலர் நின்று கொண்டு அவரை எங்கும் நகர விடாமல் தடுப்பதாகும். இது பெரும்பாலும் தொழிற்சாலைகளில் நடப்பதாகும். தொழிற்சாலைக்கு வரும் அதிகாரிகளை, அங்கு பணிபுரியும் தொழிலாளர்கள் சுற்றி வளைத்துக் கொண்டு தங்கள் கோரிக்கைகளைப் பற்றி உரக்க கோஷமிட்டு, அவரை எங்கும் செல்லாதபடி தடுத்து நிறுத்துவர். கெரோ செய்வதும், முறைகேடாக தடுத்தல் மற்றும் சிறை வைத்தல் போன்றே தண்டிக்கப்பட வேண்டிய ஒரு குற்றமாகும், என **Jay Engineering Works v. State of W.B.**[1] என்ற வழக்கில் கூறப்பட்டது. இவ்வழக்கில் தொழிற்சாலை நிர்வாகப் பிரதிநிதியை, அத்தொழிற்சாலையில் பணிபுரியும் தொழிலாளர்கள் பலர் சுற்றி வளைத்து நகர விடாமல் 'கெரோ' செய்தனர்.

குற்றமுறு வன்முறை (அல்லது) குற்றமுறு தாக்குதல் மற்றும் தாக்க முனைதல்

[Criminal Force and Assault]

(பிரிவுகள் 349 முதல் 358 முடிய)

18. Criminal Force - Write short notes. (குற்றமுறு வன்முறை - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஒருவர் குற்றம் எதையேனும் செய்யும் பொருட்டு மற்றொருவர் மீது வன்முறையைப் பயன்படுத்துவது 'குற்றமுறு வன்முறை' (Criminal Force) எனப்படுகிறது. இங்கு 'வன்முறை' (Force) என்பதை 'தாக்குதல்' என்று கொள்வதே சாலச் சிறந்ததும், உகந்த பொருளைத் தரக் கூடியதும் ஆகும். இதன்படி பார்த்தால், 'குற்றமுறு வன்முறை' என்பது 'குற்றமுறு தாக்குதல்' ஆகிறது. இதற்குண்டான வரையறையை **பிரிவு 350** பகருகிறது. இதைக் காண்பதற்கு முன், 'குற்றமுறு தாக்குதல்' என்ற சொற்களில் உள்ள 'தாக்குதல்' (Force) என்ற பதம் எதைக் குறிக்கிறது என்பதை நாம் இங்கு காண வேண்டியுள்ளது. இதன் விளக்கத்தை **பிரிவு 349** பின்வருமாறு கூறுகிறது. அதைக் காண்போமா?

தாக்குதல் (Force) - பிரிவு 349-ன் வரையறை:

'தாக்குதல்' என்றால் ஒருவர் மற்றொருவரை கம்பினாலோ அல்லது கையாலோ அடித்தல் வேண்டும் என்பது மட்டுமன்று. பின்வரும்

1. 1968 A.I.R. Cal. 407

செயல்களும் 'தாக்குதல்தான்' என்று **பிரிவு 349** கூறுகிறது. அவை வருமாறு.

(1) ஒருவர், மற்றொருவரின் உடலை அசைத்தல், உடலின் அசைவை (இயக்கத்தை) மாற்றுதல் அல்லது உடலின் அசைவை நிறுத்தல், இது 'தாக்குதல்' ஆகிறது.

(2) ஒரு பொருளை இயக்கியோ, அதன் இயக்கத்தை மாற்றியோ அல்லது அந்தப் பொருளை,

(அ) பிறரது உடலைத் (எந்தப் பகுதியையாவது) தொடும்படி செய்தல்,

(ஆ) அவர் அணிந்திருக்கும் அல்லது சுமந்திருக்கும் பொருளைத் தொடும்படி செய்தல்,

(இ) அவரது உடலுணர்வைப் பாதிக்கும் வகையில் அமைந்திருக்கும் வேறொரு பொருளைத் தொடும்படிச் செய்தல். இதுவும் 'தாக்குதல்' எனப்படுகிறது.

இவ்வாறு தாக்குவதை (அ) ஒருவர் தமது உடலாற்றலால் நேரடியாகச் செய்யலாம்; (ஆ) ஒரு பொருளைக் கையாளும் வகையாலும் செய்யலாம்; (இ) ஓர் உயிரினத்தை இயக்கிவிட்டோ, அதன் இயக்கத்தை மாற்றியோ, நிறுத்தியோ இதைச் செய்யலாம்.

அனைத்து தாக்குதல்களும் குற்றமுறு தாக்குதல்கள் ஆவதில்லை (All Forces are not Criminal Forces):

'தாக்குதல்' என்பதின் விளக்கத்தை நாம் மேலே கண்டோம். நாம் பேருந்திலோ அல்லது இரயில் வண்டியிலோ ஏறும் பொழுது, ஒருவரையொருவர் இடித்துத் தள்ளிக்கொண்டு ஏறுகின்றோம். இதனால், நம் உடலுக்கு அசைவு ஏற்படுகிறது. எனவே, இது பிரிவு 349-ன்படி ஒரு தாக்குதல்தான். உறியடிக்கும் ரங்கோலி திருவிழாவில் ஒருவர் மற்றொருவர் மீது வண்ண நீரைப் பீய்ச்சி அடிக்கின்றனர். அதுபோல் திருமண விழாவின் போது, விருந்தினர் மீது, திருமண வீட்டினர் பன்னீர் தெளித்து வரவேற்கின்றனர். இவ்வாறு வண்ண நீரை பீய்ச்சி அடிப்பதும், பன்னீர் தெளிப்பதுமே கூட, பிரிவு 349-ன்கீழ், ஒரு 'தாக்குதலே' ஆகும். எனினும், இச்செயல்கள் யாவும் குற்றமுறு தாக்குதல் ஆவதில்லை. ஏனெனில் இத்தாக்குதல் குற்றம் எதையேனும் செய்யும் பொருட்டு செய்யப்படுவதில்லை. இதனடிப்படையில் ஒரு தாக்குதல், எப்பொழுது குற்றமுறு தாக்குதலாகிறது என்பதை பிரிவு 350 பின்வருமாறு கூறுகிறது.

குற்றமுறு தாக்குதல் (Criminal Force) - பிரிவு 350:

ஒரு குற்றமான செயலைச் செய்வதற்கென்று, ஒருவருடைய சம்மதமின்றி அவரைத் தாக்குவதும்,

ஒருவருக்குத் தீங்கு, அச்சம், தொந்தரவு விளைவிக்கும் கருத்துடன்,

அவருடைய சம்மதம் இன்றி அவரைத் தாக்குவதும், 'குற்றமுறு தாக்குதல்' எனப்படும்.

எடுத்துக்காட்டுகள்:

(அ) ஆற்றுத்துறையில் பிணைத்து நிறுத்தப்பட்ட படகொன்றில் Z என்பவர் அமர்ந்திருந்தார். A என்பவர் அப்பிணைப்பை அவிழ்த்து விட்டு, அதன் மூலம் அப்படகு ஆற்றின் போக்கில் போகும்படி சுருத்துடன் செய்கிறார். அதாவது, இங்கு Z-க்கு சுருத்துடன் A அசைவை உண்டாக்கு கிறார் மற்றும் வேறு எவரும் வேறு எந்தச் செய்கையையும் செய்யாமலேயே அசைவை உண்டாக்கும் வகையில் பொருள்களைச் செலுத்துவதன் மூலம் அவர் இதனைச் செய்கிறார். எனவே Z-யிடம் சுருத்துடன் A தாக்குதல் செய்துள்ளார். Z-ன் சம்மதம் இன்றியே அவர் அவ்வாறு செய்திருந்தால், அல்லது குற்றமெதையும் செய்யும் பொருட்டு, அல்லது இந்தத் தாக்குதலைச் செய்வது Z-க்கு தீங்கு, அச்சம் அல்லது தொந்தரவை விளைவிக்கும் சுருத்துடன் அல்லது அநேகமாக விளைவிக்கக் கூடும் என்று அறிந்திருந்து அப்படி அவர் செய்திருந்தால் Z மீது குற்றமுறு தாக்குதலை A பயன் படுத்தியுள்ளார், என்று கூறப்படும்.

(ஆ) Z என்பவர் ஒரு தேரில் சவாரி செய்கிறார். Z-ன் குதிரைகளை A சவுக்கால் அடிக்கிறார் மற்றும் அதன் மூலம் குதிரைகளை இன்னும் வேகமாக போகும்படி செய்கிறார். இங்கு A குதிரைகளின் அசைவுகளை மாற்றத் தூண்டுவதன் மூலம் Z-ன் அசைவிலும் மாற்றத்தை விளைவிக்கிறார். ஆகவே, Z-யிடம், A தாக்குதலை பயன்படுத்தியவராகிறார். அதனால் Z-க்கு தீங்கு, அச்சம் அல்லது தொந்தரவு விளைவிக்கும் சுருத்துடன் அல்லது அநேகமாக விளைவிக்கக் கூடும் என்று அறிந்திருந்து Z-ன் சம்மதமின்றி A இதைச் செய்திருந்தால், Z மீது குற்றமுறு தாக்குதலை A பயன்படுத்தியுள்ளார், என்று கூறப்படுவார்.

(இ) Z என்பவரின் சம்மதமின்றி அவர் மேல் A என்பவர் ஒரு நாயை எவ்விப் பாயும்படி ஏவுகிறார். இங்கு Z-க்கு தீங்கு, அச்சம் அல்லது தொந்தரவு விளைவிக்கும் கருத்தை A கொண்டிருந்தால் அவர் Z மீது குற்றமுறு தாக்குதலை பயன்படுத்தியுள்ளார், என்று கூறலாம்.

குற்றமுறு தாக்குதலுக்கு தண்டனை - பிரிவு 352:

குற்றமுறு தாக்குதல் செய்கிற எவரொருவருக்கும் மூன்று மாதம் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அய்ந்நூறு ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

19. Assault - Write short notes. (தாக்க முனைதல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

'குற்றமுறு தாக்குதல்' எவ்வாறு ஒரு குற்றமாகிறதோ, அதே போல் தாக்க முனைதலும் ஒரு குற்றமாகிறது.

ஒருவர் மற்றொருவர் மீது கல்லை வீசுகின்றார். அது அவருக்கு நீங்கை அல்லது அச்சத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் வீசப்பட்டிருப்பின், அது குற்றமுறு தாக்குதல் (Criminal Force) எனப் படுகிறது. இதே, ஒருவர் மற்றொருவர் மீது கல்லை வீச கையை ஓங்குகிறார். ஆனால் வீசி விடவில்லை. எனினும் அக்கல் தம்மீது விழுந்துவிடுமோ என்ற அச்சத்தை அந்த மற்றொருவரின் மனதில் ஏற்படுத்துகிறது. இவ்வாறு அச்சத்தை ஏற்படுத்தும் செய்கையே, தாக்க முனைதலாகிறது (Assault). இது குறித்து பிரிவு 351 பின்வருமாறு கூறுகிறது.

தாக்க முனைதல் (Assault) - பிரிவு 351 கூறுவதாவது:

ஒருவர், தன் முன்னுள்ள மற்றொருவர் குற்றமுறு தாக்குதலைப் பயன்படுத்தப் போகிறார் என்னும் அச்சத்தை அவருக்கு விளைவிக்கும் கருத்துடன் ஒரு சைகையோ அல்லது ஓர் முன்னேற்பாடோ செய்தல், தாக்க முனைதல் என்ற குற்றமாகும்.

எடுத்துக்காட்டுகள்:

(அ) A என்பவர் Z என்பவரை அடிக்கப் போகிறார் என்று B-யை நம்பவைக்கும் கருத்துடன் அல்லது அநேகமாக நம்பக்கூடும் என்று அறிந்திருந்து Z-யை நோக்கி கை முட்டியை (fist) ஆட்டுகிறார். A தாக்க முனைதல் குற்றத்தைச் செய்திருக்கிறார்.

(ஆ) Z என்பவரை நாய் தாக்கும்படி செய்யப் போகிறார் என்று Z-யை நம்ப வைக்கும் கருத்துடன், ஓர் உக்கிரமான நாயின் வாய் மூடியை A என்பவர் அவிழ்த்து விடத் தொடங்குகிறார். Z, A-யைத் தாக்க முனைகிற குற்றத்தைச் செய்திருக்கிறார்.

விளக்கம்: வெறும் சொற்களால் மட்டுமே தாக்க முனைதல் ஏற்படாது. ஆனால் ஒருவருடைய சைகைகள் அல்லது முன்னேற் பாடுகளைத் தாக்க முனைதலாக ஆக்கும் அளவிற்கு அவர் பயன்படுத்தும் சொற்கள் அவருடைய சைகைகள் அல்லது முன்னேற்பாடுகளுக்குப் பொருள் கொடுக்கலாம்.

(இ) "நான் உன்னை அடிக்கக் போகிறேன்" என்று Z என்பவரிடம் சொல்லிக் கொண்டே A என்பவர் ஒரு தடியை எடுக்கிறார். இங்கு A பயன்படுத்திய சொற்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தாக்க முனைகிற குற்றமாகாதென்றாலும் வேறு சூழ்நிலையோடு சேர்ந்து வராத பொழுது, வெறும் சைகை மட்டுமே தாக்க முனைகிற குற்றமாகக் கூடியதல்ல என்றாலும், சொற்களால் விளக்கப்பட்ட சைகை தாக்க முனைகிற ஒரு குற்றமாகக் கூடும்.

தாக்க முனைதலுக்கு தண்டனை - பிரிவு 352:

தாக்க முனையும் எவரொருவருக்கும் மூன்று மாதம் வரையிலான

சிறைத் தண்டனையோ அல்லது அய்ந்நூறு ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.[1]

20. Distinguish between Criminal Force and Assault.

வேறுபடுத்துக
குற்றமுறு தாக்குதல் மற்றும் தாக்க முனைதல்.

1. குற்றமுறு தாக்குதல் என்பது தாக்க முனைதலுக்கு அடுத்த நிலை ஆகும்.

2. தாக்க முனைதல் என்பது குற்றமுறு தாக்குதலைவிட குறைந்த விளைவை உடையதாகும்.

3. குற்றமுறு தாக்குதலில் தாக்குதல் நிகழ்கிறது. தாக்க முனைதலில் தாக்குதல் நிகழ்வதில்லை.

4. குற்றமுறு தாக்குதல் ஒவ்வொன்றும், தாக்க முனைதலையும் உள்ளடக்கியதாகும். தாக்க முனைதலில், குற்றமுறு வன்முறை பயன்படுத்தப்படவிருக்கிறது என்று அச்சுறுத்துவது மட்டும் உள்ளது.

5. குற்றமுறு வன்முறை குறித்து பிரிவு 350 கூறுகிறது. தாக்க முனைதலை பிரிவு 351 வரையறுக்கிறது. (ஆனால் இரண்டிற்கும் உண்டான தண்டனை பிரிவு 352-லேயே கூறப்பட்டுள்ளது.)

21. Define "Criminal Force" and "Assault". Give atleast two illustrations to each one of them. Point out the distinction between Criminal Force and Assault. ('குற்றமுறு தாக்குதல்' மற்றும் 'தாக்க முனைதல்' இவற்றின் இலக்கணம் கூறுக. ஒவ்வொன்றிற்கும் குறைந்த அளவாக இரண்டு எடுத்துக்காட்டுகள் தருக. குற்றமுறு தாக்குதல் மற்றும் தாக்க முனைதல் இவற்றின் வேறுபாட்டைக் கூறுக.)

(முந்தய மூன்று வினாக்களின் விடைகளையும் ஒன்றன்பின் ஒன்றாக தேர்வில் குறிப்பிடவும்)

ஆட்கவர்தல் (பிள்ளைபிடித்தல் அல்லது சிறுவர் கடத்தல்) மற்றும் ஆட்கடத்தல்.

[Kidnapping and Abduction]

(பிரிவுகள் 359 முதல் 369 முடிய)

22. (a) What is Kidnapping?

(b) Discuss the offence of kidnapping from
- **i) India**
- **ii) Guardianship.**

1. குற்றமுறு தாக்குதல், தாக்க முனைதல் ஆகிய இரு குற்றங்களுக்கும், பொதுவான ஒரே தண்டனையை பிரிவு 352 கூறுகிறது.

(அ) சிறுவர் கடத்தல் என்றால் என்ன?

(ஆ) கீழ்வரும் சிறுவர் கடத்தல் என்ற குற்றத்தினை விவாதிக்கவும்.
i) இந்தியாவில் இருந்து.
ii) காப்பாளரிடமிருந்து.

a) ஆட்கவர்தல் (சிறுவர் கடத்தல்) (Kidnapping) - விளக்கம்:

பொதுவாக 'கவர்தலைப்' பற்றி கூற வேண்டுமெனில் இது ஒரு நபரைச் சட்ட விரோதமாக கொண்டு செல்லல் (முக்கியமாக சிறுவர்களை, குழந்தைகளை) ஆகும். இது தொடர்பான சட்டப் பிரிவுகளின் நோக்கமே, குழந்தைகளை மற்றும் சிறுவர்களை சில தீய வழிக்கு பயன்படுத்த கவர்ந்து செல்வதைத் தடுப்பதே ஆகும். இவ்வாறு கடத்திச் சென்று அவர்களை தீய வழிகளில் ஈடுபடுத்தி சட்ட விரோதமாக இலாபம் சம்பாதிப் பவர்களை இந்திய தண்டனைச் சட்டம், கடுமையாக தண்டிக்கிறது. ஆங்கிலச் சட்டத்தில், இது 'குழந்தையைத் திருடுதல்' **(child stealing)** என அழைக்கப்படுகிறது. இதனை சாதாரணத் தமிழில் குறிப்பிட வேண்டுமெனில் 'சிறுவர் கடத்தல்' என்றும் 'பிள்ளை பிடித்தல்' என்றும் கூறலாம். சட்டத் தமிழில் கூற வேண்டுமெனில் 'ஆட்கவர்தல்' என்று குறிப்பிட வேண்டும்.

ஆட்கவர்தல் (சிறுவர் கடத்தல்) - பிரிவு 359 கூறும் இரு வகைகள்:

ஆட்கவர்தல் (சிறுவர் கடத்தல்) இருவகைப்படும் என **பிரிவு 359** கூறுகிறது. அவை இந்தியாவிலிருந்து கவர்தல் **(kidnapping from India)** மற்றும் சட்டபூர்வமான பாதுகாப்பிலிருந்து கவர்தல் **(kidnapping from lawful guardianship)** ஆகும்.

(b) (i) இந்தியாவிலிருந்து கவர்தல் (Kidnapping from India) - பிரிவு 360:

ஒருவரை அவரது சம்மதம் இல்லாமலோ அல்லது அவர் பொருட்டு சம்மதம் தரச் சட்டப்படி அதிகாரம் பெற்ற ஒருவரது சம்மதமின்றி, அவரை இந்திய எல்லைக்கு அப்பால் கொண்டு சென்றால், இந்தியாவிலிருந்து ஆளைக் கவர்ந்து செல்லல் என்று கூறப்படும்.

இக்குற்றத்திற்கு தேவையான ஆக்கக்கூறுகள் (Ingredients):

1. ஒரு நபரை இந்திய எல்லைக்கு அப்பால் கொண்டு சென்றிருக்க வேண்டும்;

2. அப்படி கொண்டு செல்ல, அந்நபரிடமிருந்து சம்மதம் பெற்றிருக்கக்கூடாது; அல்லது

3. அவர் பொருட்டு சம்மதம் தரச் சட்டப்படி அதிகாரம் பெற்றவரிடமிருந்து சம்மதம் பெற்றிருக்கக்கூடாது.

(b) (ii) சட்டபூர்வமான பாதுகாப்பிலிருந்து கவர்தல் (Kidnapping from lawful guardianship) - பிரிவு 361:

பதினாறு வயதிற்குட்பட்ட ஓர் ஆணை அல்லது பதினெட்டு வயதிற்குட்பட்ட ஓர் பெண்ணை அல்லது புத்தி சுவாதீனம் இல்லாத ஒருவரை, அவர்களின சட்டபூர்வமான காப்பாளரிடமிருந்து சம்மதம் பெறாமல் ஆசை காட்டி இழுத்துக் கொண்டு (entices) அல்லது தூக்கிக் கொண்டு போவது (takes) சட்டபூர்வமான பாதுகாப்பிலிருந்து கவர்தல் என்று கூறப்படும்.

விளக்கம்: மேற்படி பிரிவில் உள்ள **'சட்டபூர்வமான காப்பாளர்'** என்னும் சொற்களில் மேற்கண்ட வயதை அடையாதவர் அல்லது வேறு ஒருவரைக் கவனித்துக் கொள்ளும் அல்லது பாதுகாப்பில் வைத்துக் கொள்ளும் பொறுப்பானது, சட்டபூர்வமாக ஒப்படைக்கப்பட்ட எவரையும் உள்ளடக்கும்.

விதிவிலக்கு: முறைகேடாக பிறந்த ஒரு குழந்தைக்கு தான் தந்தை என்ற நல்லெண்ணத்துடன் நம்பி, தூக்கிச் செல்வதும் அல்லது ஒரு நபரை பாதுகாக்கும் பொறுப்பு தனக்கு இருக்கிறது என்ற நல்லெண்ணத்துடன் நம்பி அப்படி செய்வதும் குற்றமாகாது.

இக்குற்றத்திற்கு தேவையான ஆக்கக் கூறுகள் (Ingredients):

1. வயது வராதவரையோ, புத்தி சுவாதீனமற்றவரையோ ஆசை காட்டி இழுத்துச் செல்லல் அல்லது தூக்கிக் கொண்டு செல்லல்.

2. அவர் ஆணாக இருப்பின் 16 வயது பூர்த்தியாகாதவராகவோ அல்லது பெண்ணாக இருப்பின் 18 வயது பூர்த்தியாகாதவராகவோ இருக்க வேண்டும்.

3. மேற்கண்டவாறு செய்வது, அவரது சட்டபூர்வமான காப்பாளரின் பாதுகாவலிலிருந்து அகற்றுவதைக் குறிப்பிடும்.

4. எனவே, அக்காப்பாளரின் சம்மதமின்றி அவ்வாறு அகற்றி, கொண்டு சென்றிருக்க வேண்டும்.

முக்கிய வழக்குகள்:

Rekha Ray[1] வழக்கில், உரிமை வயதை அடையாத சிறுமி ஒருத்தி தன் வீட்டு மாடியில் நின்று கொண்டிருந்தாள். குற்றவாளி அவளை கீழே இறங்கி வருமாறும் வண்டியினுள் ஏறுமாறும் ஆசை காட்டுகிறான். இதன் காரணமாக அவள் கீழே வந்து வண்டியினுள் ஏறிவிடுகிறாள். வண்டியை ஓட்டுநர் ஓட்ட ஆரம்பித்த உடன் ஆட்கவர்தல் குற்றம் புரியப்பட்டதாகிறது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

1. (1927) 6 Pat. 471

Jagannadha Rao v. Kamaraju[1] என்ற வழக்கில் தந்தை ஒருவர், தன் மகளைப் பராமரிக்கும் பொறுப்பை மற்றொரு நபரிடம் ஒப்படைத்திருந்தார். அந்நபரின் இசைவு பெற்றுச், சிறுமியை அங்கிருந்து எடுத்துச் சென்று, அவருடைய தந்தையின் இசைவு பெறாது வேறொருவருக்குத் திருமணம் செய்து வைத்தது குற்றம் என்று தீர்ப்பளிக்கப்பட்டது. இங்கு தந்தை தற்காலிகமாக தன் மகளைப் பராமரிக்கும் பொறுப்பை தன் நண்பரிடம் ஒப்படைத்திருந்தாலும், அவருடைய சட்டபூர்வமான காப்பிலிருந்து அகற்றப்பட்டதாகவே கருத வேண்டும்.

S.Varadarajan v. State of Madras[2] - இது ஆட்கவர்தல் சம்பந்தப்பட்ட ஒரு முக்கியமான வழக்கு ஆகும். வழக்கின் பொருண்மைகள் பின்வருமாறு:

நடராஜன் என்பவருக்கு இரண்டு மகள்கள், மூத்தவள் பெயர் ரமா. இளையவள் பெயர் சாவித்திரி. இருவரும் முறையே சென்னை மருத்துவக் கல்லூரியிலும், எத்திராஜ் கல்லூரியிலும் (B.Sc. II Year) பயின்று வந்தனர்.

நடராஜன் வீட்டிற்கு அண்டை வீட்டில் வரதராஜன் வசித்து வந்தார். சாவித்திரிக்கும் வரதராஜனுக்கும் இடையே நட்பு மலர்ந்து காதலாக கனிந்தது. ஒரு நாள் இதைச் சாவித்திரியின் அக்கா ரமா கண்டறிந்து, சாவித்திரியிடம் விசாரித்த பொழுது, அதற்கு அவள், தான் வரதராஜனை திருமணம் செய்து கொள்ள ஆசைப்படுவதாகக் கூறியிருக்கிறாள். ரமா இதனை உடனே பெற்றோருக்கு தெரிவித்தாள். இதைக் கேட்ட நடராஜன் அதே தினத்தில் சாவித்திரியை கோடம்பாக்கத்தில் உள்ள தன் உறவினர் ஒருவரின் வீட்டிற்கு கூட்டிச் சென்று, அங்கு அவளை விட்டுவிட்டார்.

இவ்வழக்கின் முக்கியத் திருப்பமே இங்குதான் ஆரம்பமாகிறது. அதற்கு அடுத்த நாள், சாவித்திரி தான் தங்கியிருந்த வீட்டை விட்டு கிளம்பி, வரதராஜனுக்கு தொலைபேசி செய்து, தன்னை குறிப்பிட்ட ஒரு இடத்தில் வந்து சந்திக்குமாறு கூறி தொலைபேசியை வைத்துவிட்டாள். அவள் தன்னிச்சையாக, தான் ஏற்கனவே தொலைபேசியில் குறிப்பிட்ட அந்த இடத்திற்கு சென்றாள். அங்கு வரதராஜன் காருடன் இருந்தார். பிறகு இருவரும் திருமணத்திற்கு வேண்டிய பொருட்களை வாங்கிக் கொண்டு, பதிவுத் திருமண அலுவலகத்திற்கு சென்று திருமணம் செய்து கொண்டு, தம்பதி சமேதராய் கோயம்புத்தூர், தஞ்சாவூர் ஆகிய இடங்களுக்கு சென்று திரும்பும் பொழுது, அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

வரதராஜன், நடராஜன் என்பவரின் உரிமை வயதடையாத (மைனர்) மகளை கவர்ந்த குற்றத்திற்காக கைது செய்யப்பட்டார்.

வழக்கு ஆரம்பமானது; இவ்வழக்கில் உச்ச நீதிமன்றத்தால் ஒரு மாறுபட்ட தீர்ப்பானது கொடுக்கப்பட்டது.

1. (1900) 24 Mad. 284: Baz, (1922)
2. A.I.R. 1965 S.C. 942: 1965(2) Cri.L.J. 33

உச்ச நீதிமன்றம் இவ்வழக்கின் சூழ்நிலைகளை ஆராய்வது அவசியம் எனக் கருதியது. இங்கு சாவித்திரி B.Sc., இரண்டாமாண்டு படிக்கும் மாணவி; உரிமை வயதை (Majority) அடையும் பொழுதும் ஒரு பெண். மேலும் வழக்கின் பொருண்மைகளின்படி, அவளுக்கு தான் செய்வது என்ன, அதன் விளைவு யாது என்பதை அறிய முழுவதான மற்றும் சரியான மனப்பக்குவம் உடையவளாக இருந்திருக்கிறாள் என நீதிமன்றம் கூறியது. மேலும் வலுக்கட்டாயமோ அல்லது குற்ற வழிகளோ குற்றவாளியால் கையாளப்பட்டதற்கு சான்று எதும் இல்லை. அதற்கு பதிலாக தன்னை திருமணம் செய்து கொள்ள வேண்டும் என்று குற்றவாளியை அவள் தூண்டியதாகத் தெரிகிறது. ஆகவே இது சட்டபூர்வமான காப்பிலிருந்து கவர்ந்த குற்றமாகாது எனக் கூறி வரதராஜுலை உச்ச நீதிமன்றம் விடுவித்தது. பின் இத்தீர்ப்பு பல வழக்குகளில் பின்பற்றப்பட்டது.

மேற்படி வழக்கிற்கு மாறுபட்ட பொருண்மைகளை உடைய மற்றொரு வழக்கில், குற்றவாளி ஆட்கவர்தலுக்காக தண்டிக்கப்பட்டான். அவ்வழக்கை பின்வருமாறு காண்போமா?

State of Haryana v. Raja Ram[1] இவ்வழக்கின் பொருண்மைகளின் படி 14 வயதுடைய Z எனும் சிறுமி, A என்பவருடைய மகளாவார். ஜெய்நாராயன் என்பவர் மேற்படி A-யின் வீட்டிற்கு அடிக்கடி வருகை தரக்கூடியவர். இதனால் Z எனும் அச்சிறுமி, ஜெய்நாராயனுடன் நட்பாகப் பழகிவார். இது Z-யின் தந்தை A-க்கு பிடிக்கவில்லை. எனவே, தனது வீட்டிற்கு வர வேண்டாமென்று அவர் ஜெய்நாராயனுக்கு தடை விதித்தார். இருந்தாலும் ஜெய்நாராயன், தனது நண்பர் இராஜாராம் என்பவர் மூலமாக, Z-க்கு தகவல்கள் அனுப்பினார். Z-ஐ வீட்டை விட்டு வெளியே வருமாறும், அப்படி வந்தால் ஜெய்நாராயன் Z-க்கு சகல வசதிகள் செய்து தரத் தயாராக உள்ளதாகவும், இராஜாராம் Z-யிடம் ஆசை வார்த்தைகள் கூறி அவளை வீட்டை விட்டு வெளியே வரத் தூண்டினார்.

ஒரு நாள் இரவு Z எனும் அச்சிறுமி ஜெய்நாராயனை சந்திக்க இராஜாராமுடன் அவரது வீட்டிற்கு சென்றாள். அங்கு அவளை ஜெய்நாராயணன் கற்பழித்து (வன்புணர்வு) விட்டார். எனவே ஜெய்நாராயன் உரிமை வயதடையாத (மைனர்) ஒரு சிறுமியை கற்பழித்த குற்றத்திற்காக பிரிவு 376-ன்படியும், ஆசை வார்த்தை கூறி உடலுறவுக்காக பலவந்தப்படுத்தும் நோக்கத்துடன் Z-ஐ கூட்டிக்கொண்டு சென்ற (taken) குற்றத்திற்காக இராஜாராம் பிரிவு 366-ன்படியும்[2] தண்டிக்கப்பட்டார்.

இவ்வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் முன் எழுந்த வினா யாதெனில், அச்சிறுமி, தானே விரும்பி, இராஜாராமுடன், ஜெய்நாராயன் வீட்டிற்கு சென்றதால், இராஜாராம் அவளைக் கூட்டிக் கொண்டு சென்றுள்ளார் (taken) என்று கூற முடியுமா என்பதுதான். இங்கு ஆசை வார்த்தைகள் கூறி

1. A.I.R. 1973 S.C. 819; 1973 Cri. L.J. 651

2. ஆட்கவர்தல் குற்றத்தின் மிகுதிங்கான நிலையாகும்.

கூட்டிச் செல்வதற்கோ அல்லது கொண்டு செல்வதற்கோ, வன்முறையோ அல்லது மோசடியோ பயன்படுத்தப்பட்டிருக்க வேண்டும் என்பது அவசியமில்லை என்றும், தனது சட்டபூர்வமான காப்பாளரிடமிருந்து (அதாவது A-யிடமிருந்து) வெளியேறுவதற்குண்டான விருப்பத்தை அச்சிறுமிக்கு ஏற்படுத்தும் வண்ணம் தூண்டிய செயல் ஒன்றே ஆட்கவர்தலுக்காக இராஜாராமை தண்டிக்கப் போதுமானது என்றும், உச்ச நீதிமன்றம் கூறியது.

ஆட்கவர்தலுக்கு தண்டனை - பிரிவு 363:

இந்தியாவிலிருந்து அல்லது சட்டபூர்வமான பாதுகாப்பிலிருந்து ஒருவரைக் கவர்ந்து செல்கிற எவரொருவருக்கும் ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். அவரை அபராதத்திற்கு உள்ளாக்கவும் செய்யலாம், என்று **பிரிவு 363** கூறுகிறது.

23. Define kidnapping and abduction and discuss it with important cases. (ஆளைக்கவர்தல் மற்றும் ஆட்கடத்துதல் ஆகியவைகளுக்கு வரையறை தந்து முக்கியமான வழக்குகளுடன் விவாதிக்க.)

(அல்லது)

Abduction - Write short notes. (ஆட்கடத்தல் - சிறு குறிப்பு வரைக.)

ஆட்கவர்தல் (Kidnapping) - வரையறை:

(முந்திய வினாவின் விடையை எழுதுக)

ஆட்கடத்தல் (Abduction) - பிரிவு 362 கூறும் வரையறை:

ஓர் இடத்திலிருந்து செல்லும்படி ஒருவரை வன்முறையால் கட்டாயப்படுத்துகிற (by force compels) அல்லது வஞ்சனையான முறை எதனாலும் தூண்டுகிற (by any deceitful means induces) எவரொருவரும், அவரை ஆட்கடத்துகிறார் என்று சொல்லப்படுவார்.

ஆட்கடத்தல் குற்றத்திற்கு தேவையான ஆக்கக் கூறுகள் (Ingredients):

1. வன்முறையிலான கட்டாயம் அல்லது வஞ்சனையான முறையிலான தூண்டுதல் செய்யப்பட்டிருக்க வேண்டும்;

2. அதன் மூலம் ஒரு நபரை ஓரிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு செல்லும்படி செய்திருத்தல் வேண்டும்.

ஆட்கடத்தலுக்கான தண்டனைகள்:

ஆட்கடத்தல் என்பதற்கு மட்டும் தனியாக தண்டனைப் பிரிவு கிடையாது. வன்முறையால் கட்டாயப்படுத்துதலோ அல்லது வஞ்சிக்கும் முறைகளோ இன்றி இச்செயல் நடைபெற முடியாது. எனினும், குறிப்பிட்ட கருத்துடன் மேற்கண்ட கட்டாயமோ அல்லது வஞ்சித்தலோ

ஏற்பட்டால்தான் அது தண்டனைக்குரியது. பிரிவுகள் 364, 365, 369 ஆகியவை அப்படிப்பட்ட சுருத்து கொண்ட சில ஆட்கடத்தல் குற்றங்களுக்குண்டான தண்டனைகளைக் கூறுகின்றன.

பிரிவு 364 : கொலை செய்ய வேண்டும் என்ற சுருத்துடன் ஆட்கவர்தல் அல்லது ஆட்கடத்தல் செய்கின்றவருக்கு ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரை சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 365 : மறைவாகவும், முறைகேடாகவும் சிறை வைக்கும் சுருத்துடன் ஆளைக் கவர்தலும் ஆளைக் கடத்தலும் குற்றமாகும். அதற்கு ஏழு ஆண்டுக் காலம் வரை சிறையும் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 369 : பத்து வயதிற்குட்பட்ட குழந்தை அணிந்திருக்கும் பொருளைத் திருட வேண்டும் என்ற சுருத்துடன் குழந்தையைக் கவர்தல் அல்லது கடத்தல் செய்பவருக்கு ஏழாண்டுகள் வரை சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

24. Distinguish between Kidnapping and Abduction.

வேறுபடுத்துக
ஆட்கவர்தல் மற்றும் ஆட்கடத்தல்.

(அல்லது)

Examine the essential ingredients of the offence of kidnapping. Distinguish between kidnapping and the offence of abduction. (பிள்ளை பிடித்தல்' குற்றத்தின் அடிப்படை கூறுகளை ஆராய்க. பிள்ளை பிடித்தல் குற்றத்தை ஆட்கடத்தல் குற்றத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.)

ஆட்கவர்தல் (Kidnapping)	ஆட்கடத்தல் (Abduction)
1. உரிமை வயது எய்தப் பெறாதவர்கள், புத்தி சுவாதீனம் அற்றவர்கள் கவரப்படுகிறார்கள்.	எல்லா வயதினருக்கும் பொருந்தும்.
2. கவரப்படுபவர், சட்டக் காப்பாளரின் காப்பிலிருந்து அகற்றப்படும் பொழுதுதான் குற்றம் ஏற்படுகிறது.	அவ்வாறு தேவையில்லை.
3. ஆசை காட்டிக் கொண்டு செல்லல் (enticed) அல்லது தூக்கிக் கொண்டு செல்லல் (Taken	வலுக்கட்டாயம், வன்முறை, ஏமாற்று வழிகள் போன்றவை இதில் பயனாகிறது.

away) போன்றவை ஆளை, காப்பாளரிடமிருந்து அகற்றும் வழிகள்.	
4. இங்கு கவரப்படுகிறவரின் சம்மதம் முக்கியமல்ல (Consent is immaterial).	இங்கு கடத்தப்படுகிறவர் தன் சம்மதத்தை தன்னிச்சையாக தெரிவித்தால், ஆட்கடத்தல் குற்றம் மன்னிக்கப்படுகிறது.
5. இங்கு குற்றவாளி எந்த கருத்தின் (intention) அடிப்படையில் செயல்பட்டான் என்பது அவசியமில்லை.	இங்கு குற்றவாளியின் கருத்து (கொலை செய்வதற்கு, திருடுவதற்கு) குற்றத்திற்கு முக்கியமானதாகும்.
6. இது ஒரு தொடர் குற்றமல்ல (Continuing offence).	இது ஒரு தொடர் குற்றமாகும்.
7. இதற்கு தண்டனைப் பிரிவு தனியாக உள்ளது.	இதற்கு தண்டனைப் பிரிவு தனியாக கிடையாது. அது சில குறிப்பிட்ட கருத்துடன் செய்யும் பொழுதுதான் தண்டனைக்குரிய குற்றமாகிறது

25. Define Kidnapping and Abduction. Distinguish between them. (கவர்தல் மற்றும் ஆட்கடத்தல் இவற்றின் இலக்கணம் கூறுக. இவற்றை வேறுபடுத்திக் காட்டுக.)

(முந்தய மூன்று வினாக்களின் விடைகளையும் ஒன்றன் பின் ஒன்றாக தேர்வில் குறிப்பிட வேண்டும்)

பாலியல் குற்றங்கள்

[Sexual Offences]

(பிரிவுகள் 375 முதல் 376-D முடிய)

26. Enumerate the ingredients of the offence of rape. To what extent can an accused plead consent as a defence? (வன்புணர்ச்சி குற்றத்தின் முக்கியமான கூறுகளைக் கூறுக. குற்றஞ் சாட்டப்பட்டவர் இசைவினை எந்த அளவுக்கு எதிர்வாதமாக்கலாம்?)

(அல்லது)

Explain the meaning of rape as provided in the Indian Penal Code with the help of explanation and exception. Do you think that the provisions relating to custodial rape are sufficient to meet the need of the present time? (வன்புணர்ச்சி என்னும் குற்றத்தின் பொருளை இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறியுள்ளபடி விளக்கம் மற்றும் விதிவிலக்கின் துணை

கொண்டு விளக்குக. பராமரிப்பில்[1] இருக்கும்போது வன்புணர்ச்சி குறித்த வழிமுறைகள் தற்போதைய காலத்தின் தேவைக்கு போதுமானவை என தாங்கள் கருதுகிறீர்களா?)

(அல்லது)

Explain

(a) What is Rape?

(b) What is Custodial Rape?

With caselaw with the new approach.

(அ) வன்புணர்ச்சி என்றால் என்ன?

(ஆ) பாதுகாப்பில் உள்ள பெண்கள் மீது வன்புணர்ச்சி என்றால் என்ன?

ஆகியவற்றினை தீர்ப்பு வழிச் சட்டங்களுடனும் புதிய அணுகு முறைகளுடனும் விளக்குக.

(அல்லது)

Mens rea in Rape - Write short notes. (வன்புணர்ச்சியில் குற்றமனம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Rape - Write short notes. (வன்புணர்ச்சி - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

உலகியல் மரபுப்படி ஒரு ஆணுக்கு பெருமை சேர்க்கும் செல்வங்கள் அவனது நன்னடத்தை, நற்கல்வி, நற்தொழில் அல்லது வேலை, சம்பளம் அல்லது வருமானம். அதுபோல் ஒரு பெண்ணுக்கு ஒப்பற்ற செல்வமாக திகழ்வது, அவளது கற்பேயாகும். கற்பெனும் திண்மையுடைய பெண்ணை விடப் பெருமையானது வேறு இல்லை என்று பின்வரும் குறள் மூலம் வள்ளுவர் தெளிவுபடுத்துகிறார்.

பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னும்
திண்மை யுண்டாகப் பெறின் **(குறள் 54)**

இத்தகு பெருமையுடைய கற்பினை சூறையாடுவது, ஒரு பெண்ணைக் கொலை செய்வதற்கு ஒப்பான கொடிய செயலாகும். காம வெறியால் மதியிழந்து, அவளின் சம்மதமின்றி, வன்முறையாக ஒரு பெண்ணைப் புணரும் பேதமைச் செயல் **'வன்புணர்ச்சி' (rape)** ஆகும். இதையே, இந்தியத் தண்டனைச் சட்டம் சற்று விரிவாக தனது பிரிவு 375-ன் மூலமாக பின்வருமாறு விளக்குகிறது. மேலும் இத்தகு வன்புணர்ச்சி செய்பவர்களை பிரிவு 376-ன் மூலம் தண்டிக்கிறது.[2]

1. 'பாதுகாவல்' அல்லது 'பாதுகாப்பு' ஆகியவைதான் "Custody" என்பதின் சரியான மொழிபெயர்ப்பு ஆகும். வினாவில் குறிப்பிடப்பட்ட 'பராமரிப்பு' அல்ல.

2. பாலுறவுக் குற்றங்கள், 1983-ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தச் சட்டத்தின்படி திருத்தியமைக்கப்பட்டுள்ளது.

வன்புணர்ச்சி (Rape) - பிரிவு 375 கூறும் வரையறை:

இப்பிரிவிற்குப் பின் விளக்கப்பட்டுள்ள விதிவிலக்கான சந்தர்ப்பத்தில் தவிர, பின்வரும் விவரங்கள் ஆறில் ஏதாவது ஒன்றின் கீழ் வரும் சூழ்நிலையில் ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்ளும் ஒரு ஆண் 'வன்புணர்ச்சி' செய்வதாகச் சொல்லப்படுகிறார்.

முதலாவதாக, அப்பெண்ணின் விருப்பத்திற்கு மாறாக (Against her will);

இரண்டாவதாக, அப்பெண்ணின் சம்மதம் இல்லாமல் (Without her consent);

மூன்றாவதாக, மரணம் அல்லது காயம் ஏற்படும் என்று அப்பெண்ணை அச்சுறுத்தி அவளுடைய சம்மதத்தைப் பெற்று விட்ட பிறகு அவளது சம்மதத்துடன்;

நான்காவதாக, முறைப்படி மணந்த கணவன் என்று தன்னை ஒரு பெண் தவறாக நம்பி, அதனால் சம்மதத்தை அளிக்கிறாள் என்பதைத் தெரிந்தும், அந்தச் சம்மதத்துடன்;

அய்ந்தாவதாக, பித்துநிலையின் காரணமாகவோ அல்லது உணர்வை மழுங்கச் செய்யும் (stupefying) அல்லது உடல்நலத்திற்கு ஒவ்வாதன (unwholesome) அடங்கிய ஏதேனும் கொடுக்கப்பட்டதாலோ, அப்பெண் தான் சம்மதம் அளிக்கும் செய்லின் தன்மையையோ அல்லது விளைவு களையோ அறியாதிருந்து, அச்சமயத்தில் அவள் கொடுக்கும் சம்மதத்துடன்;

ஆறாவதாக, அப்பெண் பதினாறு வயதிற்குட்பட்டவராக இருப்பின், அவளது சம்மதத்துடன் அல்லது சம்மதமின்றி.

விளக்கம்: வன்புணர்ச்சிக் குற்றத்திற்கு அவசியமான பாலியல் உடலுறவாக அமைவதற்கு 'நுழைதல்' (Penetration) போதுமானதாகும். (அதாவது விந்து வெளியாகி இருக்க வேண்டுமென்றோ அல்லது கன்னித்திரை (Hymen) கிழிந்து இருக்க வேண்டுமென்றோ அவசியமில்லை. பெண்ணுறுப்பினுள், ஆணுறுப்புப் புகுந்தாலே போதுமானது.)

விதிவிலக்கு: ஒருவர் தன் மனைவியோடு, அந்த மனைவி பதினைந்து வயதிற்குட்பட்டவராக இல்லாதபோது, கொள்ளும் பாலியல் உடலுறவு, வன்புணர்ச்சியாகாது.

முக்கிய வழக்குகள்:

Camblin[1] என்ற வழக்கில் குற்றவாளி ஒரு பெண்ணைக் குடிபோதைக்குள்ளாக்கி அவள் மயங்கிய நிலையில், அவளோடு உடலுறவு கொண்டான். இது வன்புணர்ச்சி எனப்பட்டது. இங்கு, அவளது

1. (1845) 4 Cox 220

சம்மதமின்றி, வன்புணர்ச்சி செய்யப்பட்டதாக எடுத்துக் கொள்ளப்பட்டது.

Williams[1] வழக்கில் 16 வயதுச் சிறுமிக்குப் பாட்டுச் சொல்லித் தருவதற்காக ஆசிரியர் ஒருவர் நியமிக்கப்பட்டார். சிறுமியின் குரல் சரியாக இல்லை; அதற்காக சிறு அறுவை சிகிச்சை ஒன்று செய்ய வேண்டும் என்ற பாசாங்கு காட்டி, அவளோடு அவர் உடலுறவு கொண்டார். அந்த ஆசிரியர், வன்புணர்ச்சிக்காக தண்டிக்கப்பட்டார்.

Reg. v. Ferroll[2] என்ற வழக்கில் ஆறு வயது சிறுமி ஒருத்தியை குற்றம் சாட்டப்பட்டவன் வன்புணர்ச்சி செய்தான். ஆனால் அவளுக்கு எவ்வித உடற்காயமோ அல்லது பிறப்புறுப்பு காயமோ ஏற்பட்டிருக்கவில்லை. எனினும், குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு இருந்த அதே பால்வினை நோய் (gonorrohoea), அச்சிறுமிக்கும் தொற்றியிருப்பது கண்டறியப்பட்டு, குற்றஞ் சாட்டப்பட்டவன் வன்புணர்ச்சிக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டான்.

Madan Gopal Kakkad v. Naval Dubey[3] - இவ்வழக்கில், வன்புணர்ச்சிக்கு ஆளான பெண் ஒருவரை பரிசோதித்த மருத்துவர், அவளுடைய பிறப்புறுப்பின் இதழ் போன்ற பகுதியில் *(labia majora)* உராய்வுக் காயம் (abrasion) இருந்ததென்றும், ஆனால் கன்னித்திரை (hymen) கிழிபடவில்லை என்றும், எனவே வன்புணர்ச்சி செய்வதற்கான ஒரு முயற்சி (attempt to rape) மேற்கொள்ளப்பட்டுள்ளதே தவிர, வன்புணர்ச்சி பூர்த்தியாகவில்லை என்று நீதிமன்றத்தில் சாட்சியம் அளித்தார். ஆனால் உச்ச நீதிமன்றம் இதை ஏற்றுக்கொள்ளவில்லை. வன்புணர்ச்சிக்கு மேற்படி பிரிவு 375-ன் கீழான விளக்கம் கூறும் பத்தியில் கண்டுள்ளவாறு, **'நுழைத்தல்'** மட்டுமே போதுமானது; உடலுறவு பூர்த்தியடைந்திருக்க வேண்டுமென்பதில்லை என்று கூறி, அந்த வன்புணர்ச்சிக்கு காரணமான குற்றவாளியை தண்டித்தது.

State of Maharashtra v. Madhukar Narayan Mardikar[4] என்ற வழக்கில் காவல் துறை ஆய்வாளர் (Police Inspector) கள்ளச் சாராயம் காய்ச்சுபவர்களைப் பிடிக்க திடீர்ச் சோதனை மேற்கொள்கிறார். சாராயம் காய்ச்சப்படும் இடத்தில், பானுபாய் என்ற பெண் இருந்தாள். தன்னுடன் உடலுறவு கொள்ள வருமாறு அந்த ஆய்வாளர் அப்பெண்ணை மிரட்டினார். அவள் வர மறுத்தாள். எனவே, அவர் அவளை வலுக்கட்டாயப்படுத்தி இணங்க வைக்க முயன்றார். அந்த முயற்சிக்கு, அப்பெண் கத்தி கூச்சலிட்டு, பின் சுதாரித்து எழுந்து குற்றமுறையீடு செய்தாள். வழக்கு விசாரணையில் அப்பெண் ஒரு ஒழுக்கங் கெட்டவள் என்றும், அப்படிப்பட்டவளின் சாட்சியத்தை ஆதாரமாகக் கொள்ளக் கூடாது என்றும், அக்காவல்துறை ஆய்வாளர் கூறினார். வழக்கு உச்ச

1. (1923) 1 K.B. 340
2. 1923 26 Cr. L.J. 1185
3. 1992 (3) S.C.C. 204
4. A.I.R. 1991 S.C. 207

நீதிமன்றம் வரை சென்றது. அங்கு, ஒரு பெண் ஒழுக்கங் கெட்டவளாக இருந்தாலும், அவளது உடலை எவர் வேண்டுமானாலும் அவர்கள் நினைத்த நேரத்தில் அணுக இடமில்லை. ஏனெனில் அவருக்கும் அந்தரங்க உரிமை (right of privacy) உள்ளது. மேலும் தனது விருப்பத்திற்கு விரோதமாக செய்யப்படும் செயலிலிருந்து, தனது உடலை காத்துக்கொள்ள அவருக்கு சட்டப்படி உரிமை உண்டு. எனவே, ஒழுக்கங்கெட்டவள் என்ற ஒரு காரணத்திற்காக, அவளது சாட்சியத்தை கருத்தில் கெள்ளாது விட இயலாது, என்று ஆணித்தரமாக உச்ச நீதிமன்றம் விளம்பியது.

State of Maharashtra v. Prakash[1] என்ற வழக்கு, பிரிவு 375-ன் கீழான 3-வது உட்கூறை விளக்குவதாக அமைந்துள்ளது. இதில் மணமான ஒரு பெண், தான் பிறந்த கிராமத்தில் நடக்கும் திருவிழாவைக் காண தனது பெற்றோர் வீட்டிற்கு சென்றாள். அந்த விழாவின் பந்தோபஸ்திற்காக பிரகாஷ் எனும் ஒரு காவலர் அனுப்பப்பட்டிருந்தார். அவரும், மற்றொரு வியாபாரியும் சேர்ந்து, அவளது வீட்டிற்குச் சென்று, சில வெற்றுத்தாள்களில் கையெழுத்து போடும்படியும், அவ்வாறு போடாது போனால், அவளது கணவனை சிறையில் வைத்து விடுவோம் என்று மிரட்டி அவளை ஒரு வீட்டிற்கு கொண்டு சென்று விட்டனர். அங்கு அவளை இருவரும் வன்புணர்ச்சி செய்துவிட்டனர். பின், இதை வெளியில் சொல்லக் கூடாது என மிரட்டி, அவளை அவளது வீட்டிற்கு அனுப்பி வைத்தனர். அடுத்த நாள் காலை, தனக்கு நடந்த கொடுமையை மற்றொரு காவலரிடம் அவள் கூறினாள். அவரது ஆலோசனையின்படி, அவள் அதனை காவல் நிலையத்தில் புகார் செய்தாள். அது தொடர்பான வழக்கில், அப்பெண்ணின் உடலில் காயங்கள் ஏதுமில்லை. எனவே, அவள் அந்த புணர்ச்சிக்கு விருப்பத்துடன் சம்மதம் தெரிவித்துள்ளாள் என்ற அடிப்படையில் மேற்படி பிரகாஷ் என்ற காவலரையும் அவ்வியாபாரியையும் பம்பாய் உயர் நீதிமன்றம் விடுதலை செய்தது. ஆனால், இதை எதிர்த்து அப்பெண் உச்ச நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்தாள். அங்கு, பின்வரும் கூறுகளை உச்ச நீதிமன்றம் கருத்தில் கொண்டது. அதாவது, 1. அக்காவலர் பிரகாஷ் சம்பவம் நடந்த சமயத்தில் பந்தோபஸ்து பணியில் ஈடுபட சீருடையுடன் இருந்துள்ளார். 2. அப்பெண் ஒரு ஏழை கிராமவாசி. 3. அவளது கணவனை சிறை வைத்துவிடுவதாக, அக்காவலரால் அப்பெண் மிரட்டப் பட்டிருக்கிறாள். எனவே, பிரகாஷின் உடற்கட்டாயம் மற்றும் மிரட்டலுக்கு அப்பெண் தன்விருப்பமில்லாமல் அடிபணிந்துள்ளாள். இதனால் இவ்வழக்கு பிரிவு 375-ன் கீழான 3-வது உட்கூறின் கீழ் வருகிறது என்று கூறி, அக்காவலர் பிரகாஷையும், அவ்வியாபாரியையும் உச்ச நீதிமன்றம் மூன்று ஆண்டு கடுங்காவல் தண்டனை விதித்து தண்டித்தது.

Addepalli Setti Babu v. State of A.P.[1] - ஒரு பெண்ணை திருமணம் செய்து கொள்வதாக பொய் வாக்குறுதி கொடுத்து, அதனடிப்படையில்

1. A.I.R. 1992 S.C. 1275
2. 1994 Cri. L.J. 1420 (A.P.)

அவளது சம்மதத்தை மோசடியாகப் (by fraud) பெற்று வன்புணர்ச்சி செய்து விட்டால், அவள் கொடுத்த சம்மதம் ஒரு செல்லத்தக்க சம்மதமாகாது என ஆந்திர பிரதேச உயர் நீதிமன்றம் மேற்படி வழக்கில் தெளிவு படுத்தியது.

Harpal Singh v. State of H.P.[1] - ஒரு பெண்ணை வன்புணர்ச்சி செய்து விட்டதாக தொடரப்பட்ட மேற்படி வழக்கில், அப்பெண் வழக்குமாக தன்னுடன் உடலுறவு கொள்பவர் என்றும், அவளது பிறப்புறுப்பில் காயங்கள் ஏதுமில்லாதது ஒன்று மட்டுமே, அவள் உடலுறவிற்கு சம்மதம் தெரிவித்துள்ளாள் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது என்றும், எனவே அது வன்புணர்ச்சி ஆகாது என்றும் குற்றஞ் சாட்டப்பட்ட ஹர்பல் சிங் என்பவர் எதிர்வாதம் புரிந்தார். எனினும் உச்ச நீதிமன்றம் தனக்கே உரிய நீதிமன்றக் கண்ணோட்டத்தில் அப்பெண்ணின் வயதை ஆராய்ந்தது. அப்பொழுது அப்பெண்ணின் வயது 16-க்கும் குறைவாக இருந்ததை அறிந்தது. பிரிவு 375-ன் கீழான 6-வது உட்கூறின்படி, வன்புணர்ச்சிக்கு ஆளான பெண் 16 வயதிற்குட்பட்டவளாக இருப்பின், அவள் அதற்கு சம்மதம் கொடுத்துள்ளாள் என்பதோ அல்லது சம்மதம் கொடுக்கவில்லை என்பதோ இங்கு பிரச்சனைக்குரிய வினாவல்ல என்றும், 16 வயதிற்குட்பட்ட பெண்ணை, அவளது சம்மதம் பெற்று அல்லது பெறாமல், கொள்ளப்பட்ட உடலுறவு வன்புணர்ச்சியேயாகும் என்றும் கூறி, குற்றஞ் சாட்டப் பட்டவனை தண்டித்தது. (ஆனால் பிரிவு 375-ன் கீழான விதிவிலக்கின்படி, 15 வயதிற்கு மேற்பட்ட மனைவியிடம் அவளது கணவன் உடலுறவு கொள்வது, வன்புணர்ச்சிக் குற்றமாகாது என்பதை கவனத்தில் கொள்ள வேண்டும்)

பாதுகாப்பில் உள்ள பெண்களின் மீது வன்புணர்ச்சி (Custodial Rape):

ஒரு பெண் காவல் நிலைய பாதுகாப்பில் இருக்கும் பொழுதோ அல்லது சிறையில் இருக்கும் பொழுதோ, அவளை முறையே காவலதிகாரிகளோ அல்லது சிறைச்சாலை அதிகாரிகளோ வன்புணர்ச்சி செய்வது, பாதுகாப்பில் உள்ள பெண்களின் மீதான வன்புணர்ச்சி (Custodial Rape) என்று பொதுவாகக் கூறலாம். மேலும் பாதுகாப்பு இல்லங்கள் அல்லது பெண்களை பாதுகாப்பதற்கென சட்டத்தால் அமைக்கப்பட்ட வேறு இடங்கள், பெண்கள் மற்றும் குழந்தைகள் அமைப்பகங்கள், மருத்துவமனைகள் ஆகியவற்றில் இருக்கும் பெண்களும், பாதுகாப்பில் உள்ள பெண்களே ஆவர். இவர்களை சம்பந்தப்பட்ட இடத்தில் உள்ள அதிகாரிகள் வன்புணர்ச்சி செய்தால், அதுவும் பாதுகாப்பில் உள்ள பெண்களை வன்புணர்ச்சி செய்த குற்றமாகவே ஆகும்.

1983-ஆம் ஆண்டு வரை பாதுகாப்பில் உள்ள பெண்களை வன்புணர்ச்சி செய்பவர்களை தண்டிப்பதற்கென்று தனியான சட்ட வகைமுறைகள் ஏதும் இந்திய தண்டனைச் சட்டத்தில் இல்லை. எனினும்

1. A.I.R. 1981 S.C. 361

1983-ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்ட இந்திய தண்டனை (திருத்தச்) சட்டத்தின் வாயிலாக 376-A முதல் 376-D வரையிலான சட்டப் பிரிவுகள் இந்திய தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டன. இதற்கு காரணமாக இருந்தது, பின்வரும் முக்கிய வழக்கொன்றில் சர்ச்சைக்கிடமான ஒரு தீர்ப்பை உச்ச நீதிமன்றம் வழங்கியதுதான் என்று சொன்னால், அது மிகையன்று. அவ்வழக்கைக் காண்போமா?

Tukaram and others v. State of Maharashtra[1] - இவ்வழக்கு **மதுரா வன்புணர்ச்சி வழக்கு (Mathura Rape Case)** என பிரபலமாக அழைக்கப்பட்டதாகும்.

இவ்வழக்கின் பொருண்மைகளின்படி, 18 வயதுடைய மதுரா என்னும் தாழ்த்தப்பட்ட பெண்ணொருத்தி, தனது சகோதரனுடன் வசித்து வந்தாள். அவர்கள் இருவரும் கூலி வேலை செய்து பிழைத்து வந்தனர். மதுரா, அசோக் என்பவருடன் பழகி வந்தார். இருவரும் திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்தனர். இதை அறிந்த மதுராவின் சகோதரர், ஆட்கவர்தல் குற்றத்திற்காக அசோக் மீது தேசாங் கான்ஜ் காவல் நிலையத்தில் புகார் செய்தார். இதனடிப்படையில், மதுரா, அசோக் மற்றும் அசோக்குடன் இருந்த இருவர், காவல் நிலையத்திற்கு விசாரணைக்காக கொண்டு வரப்பட்டனர். அவர்களது வாக்குமூலங்களை காவலர்கள் பதிவு செய்து கொண்டனர்.

பிறகு அவர்கள் வீடு திரும்ப முயன்ற பொழுது, அவர்களில் மதுராவை மட்டும் காவல் நிலையத்தில் இருக்கச் சொல்லிவிட்டு, மற்றவர்களை வெளியேறும்படி காவலர்கள் கூறினர். அவர்கள் வெளியேறியவுடன், கண்பத் எனும் காவலர் மதுராவை காவல் நிலைய கழிப்பிடத்திற்கு கூட்டிச் சென்று, அவரது எதிர்ப்பை மீறி, அவளை வன்புணர்ச்சி செய்து விட்டார். அவருடன், துக்காராம் எனும் மற்றொரு காவலர் மதுராவை வன்புணர்ச்சி செய்ய முயன்றார். ஆனால் அதிகமான குடிபோதையில் இருந்ததால், வன்புணர்ச்சி செய்ய இயலவில்லை.

இடையில், காவல் நிலையத்திற்கு வெளியே காத்துக் கொண்டிருந்த அசோக் மற்றும் அவருடன் வந்த இருவரும், காவல் நிலையத்தின் விளக்குகள் அணைக்கப்பட்டு, அதன் நுழைவு வாயில் உள்பக்கமாக தாழிடப்படுவதைக் கண்டனர். எனவே, அவர்கள் காவல் நிலையத்தின் பின்புறம் சென்று, "மதுரா..... மதுரா....." என்று கத்தினர். துக்காராம் என்ற காவலர் வெளியே வந்து, மதுரா ஏற்கனவே சென்று விட்டதாக கூறினார். ஆனால் அப்பொழுது மதுரா, காவல் நிலையத்தின் பின்பக்க கதவு வழியாக வெளியே வந்து, கண்பத் என்ற காவலர் தனது ஆடைகளை களையச் சொல்லி கட்டாயப்படுத்தி, வன்புணர்ச்சி செய்து விட்டார் என்று அசோக்கிடமும் மற்றவர்களிடமும் கூறினார்.

1. A.I.R. 1979 S.C. 185

வழக்கை மேல்முறையீட்டில் கேட்ட பம்பாய் உயர் நீதிமன்றம் வன்புணர்ச்சி குற்றத்திற்காக கண்பத் என்ற காவலருக்கு அய்ந்தாண்டுகள் கடுஞ் சிறைத் தண்டனையும், துக்காராம் என்ற காவலருக்கு ஓராண்டு கடுஞ் சிறைத் தண்டனையும் விதித்தது. இவ்வாறு தண்டனை விதிக்க பின்வரும் கூறுகளை பம்பாய் உயர் நீதிமன்றம் கருத்தில் கொண்டது. அதாவது, ஒரு பெண் வன்புணர்ச்சிக்கு **'சம்மதிப்பதற்கும்' (consent)** மற்றும் அவள் தன் உடலை **'ஒப்படைக்க வைப்பதற்கும்' (passive submission)** அதிக வேறுபாடு உண்டு என்றும், மிரட்டல் அல்லது பயமுறுத்தல் மூலமாக ஒரு பெண்ணைத் தூண்டி, வன்புணர்ச்சிக்கு அவள், தன் உடலை ஒப்படைக்கச் செய்வது, அவளது சம்மதத்துடன் நடந்த வன்புணர்ச்சியாகாது என்றும், வன்புணர்ச்சி நடந்த உடனே அப்பெண் வெளியே வந்து தனக்கு நேர்ந்ததை தன்னைச் சார்ந்தவர்களிடம் கூறியதோடு மட்டுமல்லாமல், அங்கு வெளியில் கூடியிருந்த மக்களிடமும் கூறியது, அவள் பட்ட வேதனையை வெளிப்படுத்தும் அவள் செயலை தெளிவாகச் சுட்டிக் காட்டுகிறது என்றும் கூறியது.

ஆனால் இத்தீர்ப்பை எதிர்த்து அவ்விரு காவலர்களும் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தனர். அது வழக்கை வேறு கோணத்தில் ஆராய்ந்து, சர்ச்சைக்கிடமான தீர்ப்பை அளித்து விட்டது. அதன்படி, மதுரா காவல் நிலையத்தில் காவலர்களால் பயமுறுத்தப்படவில்லை அல்லது மிரட்டப்படவில்லை. குறிப்பாக, அவளைச் சார்ந்தவர்கள் காவல் நிலையத்திற்கு வெளியே காத்திருக்கும் பொழுது, காவலர்கள் அவ்வாறு செய்திருக்க வாய்ப்பில்லை. மேலும், மதுராவின் உடலிலோ அல்லது பிறப்புறுப்பிலோ எவ்விதமான காயமும் இல்லை. எனவே, உடலுறவு எவ்வித ஆட்சேபணையும் இன்றி, அமைதியான முறையில் நடந்தேறியுள்ளது, என்று உச்ச நீதிமன்றம் கூறியது. மேலும், வன்புணர்ச்சியை தாம் எதிர்த்ததாகவும், கத்தி கூச்சலிட்டதாகவும் மதுரா கூறிய வாக்குமூலத்தை உச்ச நீதிமன்றம் நம்ப மறுத்துவிட்டது. அதனை ஒரு சோடிக்கப்பட்ட பொய் என்று ஒதுக்கித் தள்ளிவிட்டு, அவ்விரு காவலர்களையும் உச்ச நீதிமன்றம் வன்புணர்ச்சி குற்றத்திலிருந்து விடுதலை செய்ய தீர்ப்பெழுதியது.

இத்தீர்ப்பை எதிர்த்து நாடெங்கிலும் உள்ள பெண்கள் மற்றும் சமூக நல அமைப்புகள் கண்டனக் குரல்கள் எழுப்பின. பாராளுமன்றத்திலும் விவாதம் நடந்தது. எனவே மேற்படி தீர்ப்பு மற்றும் அச்சமயத்தில் எழுந்த பிற வழக்குகளில் கூறப்பட்ட தீர்ப்புகளின் செயல்விளைவை செல்லாததாக்கும் பொருட்டு, 1983-ஆம் ஆண்டில் இந்திய தண்டனைச் சட்டத்தில் விரிவான திருத்தங்கள் கொண்டு வரப்பட்டன. அதனடிப்படையில் 376-A, 376-B, 376-C, 376-D ஆகிய பிரிவுகள் இந்திய தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப் பட்டன. அப்பிரிவுகளை பின்வருமாறு காண்போமா?

இந்திய தண்டனைச் சட்டத்தில் 1983-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தினால் சேர்க்கப்பட்ட சட்டப் பிரிவுகள்:

பிரிவு 376-A: பிரிந்து வாழ்வதற்கென வழங்கப்பட்ட ஒரு

தீர்ப்பாணையின் கீழ் அல்லது வழக்கம் அல்லது வழக்காறின் கீழ் தனியாக வாழும் தனது சொந்த மனைவியிடம் அவருடைய சம்மதமில்லாமல் உடலுறவு கொள்ளும் கணவனுக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 376-B: ஒரு பொது ஊழியர் தனது அல்லது தனக்கு கீழுள்ள பொது ஊழியரின் பாதுகாப்பிலுள்ள பெண் எவரையாவது, தனது பதவிநிலையை அனுகூலமாகப் பயன்படுத்தி, அவளைத் தூண்டி அல்லது தீயநெறிக்கு இழுத்து அவளுடன் பாலியல் உறவு கொண்டால், **வன்புணர்ச்சி குற்றமாகாத அப்படிப்பட்ட பாலியல் உடலுறவுக் குற்றத்திற்காக** அவருக்கு அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 376-C: சிறைச்சாலை அல்லது பாதுகாப்பு இல்லம் அல்லது சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வேறு இடங்கள் அல்லது பெண்கள் அல்லது குழந்தைகள் அமைப்பகத்தின் கண்காணிப்பாளர் அல்லது மேலாளர், அந்த சிறைச்சாலை, பாதுகாப்பு இல்லம், இடம் அல்லது அமைப்பகத்தில் இருக்கும் பெண் எவரையாவது தமது பதவிநிலையை அனுகூலமாகப் பயன்படுத்தி அவரைத் தூண்டி அல்லது தீய நெறிக்கு இழுத்து அவளிடம் பாலியல் உடலுறவு கொண்டால், **வன்புணர்ச்சிக் குற்றமாகாத அப்படிப்பட்ட பாலியல் உடலுறவுக் குற்றத்திற்காக,** அவர்களுக்கு அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 376-D: ஒரு மருத்துவமனையின் நிர்வாகத்தில் பங்கு கொண்டுள்ள எவராவது அல்லது ஒரு மருத்துவமனையின் ஊழியர் எவராவது தனது பதவிநிலையை அனுகூலமாகப் பயன்படுத்தி, அந்த மருத்துவமனையில் உள்ள எந்தப் பெண்ணிடமாவது பாலியல் உடலுறவு கொண்டால், **வன்புணர்ச்சிக் குற்றமாகாத அப்படிப்பட்ட பாலியல் உடலுறவுக் குற்றத்திற்காக,** அவருக்கு அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

மேற்கண்டதில் 376-B முதல் 376-D வரையிலான பிரிவுகளின் வழியாக நாம் தெரிந்து கொள்வது என்னவென்றால், பொது ஊழியரின் பாதுகாப்பில் உள்ள, அல்லது சிறைச்சாலை, பாதுகாப்பு இல்லம் ஆகியவற்றில் உள்ள, அல்லது மருத்துவமனையில் உள்ள ஒரு பெண்ணிடம், முறையே அப்பொது ஊழியர், கண்காணிப்பாளர், மேலாளர், மருத்துவமனை நிர்வாகம் சார்ந்தவர்கள் அல்லது மருத்துவமனை ஊழியர் பாலியல் உடலுறவு கொண்டுவிட்டு, அந்த உடலுறவிற்கு அப்பெண்ணின் சம்மதம் இருந்தது என்று எதிர்வாதம் புரிந்து தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்ள முடியாது. ஏனெனில் மேற்படி பிரிவுகள் சம்மதத்தைப் பற்றியோ அல்லது அதனடிப்படையிலான வன்புணர்ச்சியைப் பற்றியோ பேசுவதில்லை.

பாலியல் உடலுறவு கொண்டு, அதை அப்பெண் புகார் செய்தாலே போதும், அய்ந்தாண்டுகள் வரையிலான தண்டனை உறுதி. சம்மதம் குறித்த விஷயத்தை நீதிமன்றம் ஆராய்விற்கு எடுத்துக்கொள்ள வேண்டியதில்லை. எனவேதான் மேற்படி பிரிவுகளில் **'வன்புணர்ச்சிக் குற்றமாகாத அப்படிப்பட்ட பாலியல் உடலுறவு கொள்ளும்' (such sexual intercourse not amounting to the offence of rape)** என்னும் சொற்றொடர் சேர்க்கப்பட்டுள்ளது கவனிக்கத்தக்கதாகும். இப்பிரிவுகள், பாதுகாப்பில் உள்ள பெண்களுக்கு வன்புணர்ச்சியிலிருந்து முழுப் பாதுகாப்பை நல்குகின்றன என்றே கூற வேண்டும்.

பிரிவு 375-ன் கீழான வன்புணர்ச்சியில் சம்மதத்தின் முக்கியத்துவம் (The importance of consent in Rape):

ஒரு பெண்ணின் சம்மதமில்லாமல் அவளுடன் சட்டவிரோதமாக உடலுறவு கொள்வதே, வன்புணர்ச்சி ஆகும். அப்புணர்ச்சியே அவளது சம்மதம் பெற்று நடக்குமாயின், அதனை வன்புணர்ச்சி என்று கூற முடியாது. புணர்ச்சியில் வன்மை இருத்தல் வேண்டும். இதனை சாதாரணமாக அப்பெண்ணின் ஆடை அலங்கோலங்கள், உடம்பெங்கும் குறிப்பாக பிறப்புறுப்பில் காயங்கள் இவற்றைக் கொண்டே வன்புணர்ச்சி செய்யப்பட்டுள்ளதா அல்லது இல்லையா என்பதை கண்டறிந்துவிடலாம். வன்புணர்ச்சியில் சம்மதத்தின் முக்கியத்துவம் குறித்து பின்வரும் வழக்குகள் விளக்குகின்றன.

Pratap Misra and others v. State of Orissa[1] - இதில் ஒரு கணவனும் அவனது கர்ப்பிணி மனைவியும் ஒரு ஓய்வு விடுதியில் தங்கியிருந்தனர். அப்பொழுது பிரதாப் மிஸ்ராவும் பலரும் அங்கு வந்து, அந்த கர்ப்பிணியை கற்பழித்ததாகவும், இதனால் ஏழு மாதங்களுக்கு பிறகு அவளுக்கு கருக்கலைப்பு ஆனதாகவும் குற்றம் சாட்டப்பட்டது. கற்பழித்த குற்றத்திற்காக பிரதாப் மிஸ்ரா மற்றும் பலர் உயர் நீதிமன்றத்தில் தண்டிக்கப்பட்டனர். ஆனால் உச்ச நீதிமன்றத்தில் அவர்கள் மேல்முறையீடு செய்ததில் விடுதலை செய்யப்பட்டனர். ஏனெனில், அப்புணர்ச்சிக்கு அவள், தன்னுடைய கணவனின் மறைமுக ஆதரவுடன் சம்மதம் தெரிவித்திருப்பதாக சான்றுகள் இருந்தன. வன்புணர்ச்சிக்கே உரித்தான உடற்காயங்கள் (பிறப்புறுப்பு காயங்கள்) போன்றவை இல்லை என்று மருத்துவச் சான்று கூறுகிறது. மேலும் வன்முறையாக பலாத்காரத்துடன் புணர்வு செய்யப் பட்டிருப்பின் அக்கர்ப்பிணிப் பெண்ணின் கரு அப்பொழுதே கலைந்து போயிருக்கும். திடகாத்திரமான, விபரமறிந்த பெண்மணி ஒருத்தியை அவளது சம்மதம் இல்லாமல், எதிர்ப்பு இல்லாமல், தனியாக, வன்புணர்ச்சிக்கு ஆளாக்குவது என்பது இயலாத செயல். ஆகவே வன்புணர்ச்சி அப்பெண்ணின் முழு சம்மதத்துடனேயே நிகழ்ந்துள்ளது என முடிவு கட்டப்பட்டு பிரதாப் மிஸ்ரா மற்றும் பலர் விடுதலை செய்யப்பட்டனர்.

1. A.I.R. 1977 S.C. 1307

Saheed Mian v. State of Bihar[1] - ஒரு பெண் வன்புணர்ச்சிக்கு ஆளாகியிருப்பின், எவ்வளவு விரைவாக முடியுமோ அவ்வளவு விரைவாக தன்னை வன்புணர்ச்சி செய்தவனின் பெயரை அல்லது சம்பவத்தை தெரியப்படுத்தியிருக்க வேண்டும். மேற்படி வழக்கில் வன்புணர்ச்சிக்கு ஆளான பெண், அவள் தெளிவான உணர்வுடன் இருந்த போதும், தம்மை வன்புணர்ச்சி செய்தவனின் பெயரையோ அல்லது சம்பவத்தையோ தனது பெற்றோரிடத்தில் கூட குறிப்பிடவில்லை. மேலும் மார்பகங்களின் மீது நகக் குறிகளோ, கீறல்களோ அல்லது பிறப்புறுப்பில் உராய்வுக் காயங்களோ ஏதும் அவளுக்கு ஏற்பட்டிருக்கவில்லை. இது அப்புணர்ச்சி அவளது சம்மதத்துடனேயே நடந்துள்ளதை சுட்டிக்காட்டுகிறது என்று கூறி, குற்றஞ் சாட்டப்பட்டவனுக்கு அமர்வு நீதிமன்றம் அளித்த தண்டனையை பாட்னா உயர் நீதிமன்றம் இரத்து செய்து, அவனை விடுதலை செய்தது.

வன்புணர்ச்சியில் குற்றமனம் (Mens rea in rape):

வன்புணர்ச்சியில் குற்றமனம் என்பது, ஒரு பெண்ணை அவளது சம்மதம் அல்லது விருப்பம் இல்லாமல்தான் அடைய முடியும் என்ற நிலையில், அவளுடன் உடலுறவு கொள்ள வேண்டும் என்ற மனநிலையை சுட்டிக்காட்டுகிறது. ஒருவேளை அப்பெண் உடலுறவுக்கு தனது சம்மதத்தை அளித்துள்ளாள் என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் இருந்தன; எனவேதான், தான் புணர்ச்சியில் ஈடுபட்டதாக குற்றஞ் சாட்டப்பட்டவன் எதிர்வாதம் புரியலாம். இதை நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்வதும் அல்லது ஏற்க மறுப்பதும், சூழ்நிலைச் சாட்சியத்தைப் பொறுத்ததாகும். இந்நிலைப் பாட்டை பின்வரும் முக்கிய வழக்கொன்று தெளிவாக விளக்குகிறது.

Director of Public Prosecution v. Morgan[2] - இவ்வழக்கில் மோர்கான் என்பவர் Royal Air Force-ல் ஒரு மூத்த அதிகாரியாக பணி புரிந்து கொண்டிருந்தார். அவர் தனக்கு கீழ் பணிபுரிந்து கொண்டிருந்த தனது மூன்று நண்பர்களை தன் மனைவியுடன் உடலுறவு கொள்ள வருமாறு அழைத்தார். மேலும் தன் மனைவிக்கு இம்மாதிரியான உடலுறவில் ஆர்வம் அதிகம் என்றும் கூறினார். வீட்டிற்கு வந்த அம்மூன்று நண்பர்களும், திருமதி. மோர்கான் (மோர்கானின் மனைவி) ஒரு அறையில் தூங்கிக் கொண்டிருப்பதைக் கண்டனர். உடனே அவரை வேறொரு அறைக்கு பலவந்தமாக தூக்கிக் கொண்டு சென்று அம்மூவரும் உடலுறவு கொண்டனர். திருமதி. மோர்கான் மேற்படி மூவரும் தன்னை வன்புணர்ச்சி செய்ததாகவும், தன்னால் முயன்றவரை அதற்கு எதிர்ப்பு தெரிவித்ததாகவும், அது பலனில்லாமல் போய் தன் கற்பு பறிபோய் விட்டதாகவும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்தார். ஆனால் குற்றவாளிகள் மூவரும் திருமதி. மோர்கான் உடலுறவில் மிக ஆர்வத்துடன் இருந்ததாகவும், தாங்கள் எந்த அளவிற்கு இன்பம் அனுபவித்தனரோ அதே அளவிற்கு திருமதி. மோர்கானும்

1. 2000 Cr. L.J. 1221 at p. 1223 (Patna)
2. 1975 2. All. E.R. 347

உடலுறவில் இன்பம் அனுபவித்தார் என்றும் எதிர்வாதம் செய்தனர். அதாவது உடலுறவிற்கு திருமதி. மோர்கானின் சம்மதம் இருந்தது என்று தாங்கள் நம்புவதற்கு நியாயமான (reasonable) காரணங்கள் இருந்தன என்று வாதிட்டனர். ஆனால் நீதிப்பெருமகனார்கள் அவை (House of Lords) சபை இதனை ஏற்றுக்கொள்ளவில்லை. திருமதி. மோர்கான் உடலுறவிற்கு சம்மதம் தந்தார் என்பதை குற்றவாளிகளால் சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்க இயலவில்லை. ஆகவே அம்மூன்று நண்பர்களை வன்புணர்ச்சி குற்றத்திற்காகவும், மோர்கானை வன்புணர்ச்சிக்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்காகவும் நீதிப் பெருமகனார்கள் அவை தண்டித்தது.

பிரிவு 375-ன் கீழான வன்புணர்ச்சிக்கு பிரிவு 376 கூறும் தண்டனை:

பிரிவு 376: (1) இதன் கீழ்வரும் 2-வது உட்பிரிவில் கூறப்பட்டுள்ள நேர்வில் தவிர, வன்புணர்ச்சி செய்யும் எவரொருவருக்கும் ஏழாண்டுகளுக்குக் குறையாத ஆனால் பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும். அதே சமயத்தில், வன்புணர்ச்சிக்கு ஆளான பெண் தனது சொந்த மனைவியாகவும் மற்றும் பனிரெண்டு வயதிற்குட்பட்டவராகவும் இருப்பின், அவளை வன்புணர்ச்சி செய்யும் அவளது கணவனுக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

எனினும், நீதிமன்றம் தனது தீர்ப்புரையில் போதுமான மற்றும் சிறப்பான காரணங்களைக் குறிப்பிடுவதின் மூலம் ஏழாண்டுகளுக்கு குறைவான சிறைத் தண்டனையும் விதிக்கலாம்.

(2) எவரேனும்,

(a) அவர் ஒரு காவல் துறை அதிகாரியாக இருந்து-

(i) தாம் நியமிக்கப்பட்டுள்ள காவல் நிலையத்தின் எல்லைக்குள்ளோ; அல்லது

(ii) தாம் நியமிக்கப்பட்டுள்ள காவல் நிலையத்திற்குள்ளோ அல்லது வெளியிலோ அமைந்துள்ள நிலைய இல்லத்தின் (Station house) கட்டிடத்திற்குள்ளோ; அல்லது

(iii) தனது பாதுகாவலில் அல்லது தனக்கு கீழுள்ள காவல் துறை அதிகாரியின் காவலில் உள்ள ஒரு பெண்ணை,

வன்புணர்ச்சி செய்துவிட்டால்; அல்லது

(b) அவர் ஒரு பொது ஊழியராக இருந்து, தனது பதவிநிலையை ஒரு அனுகூலமாக பயன்படுத்தி, தனது பாதுகாவலில் அல்லது தனக்கு கீழுள்ள ஒரு பொது ஊழியரின் பாதுகாவலில் உள்ள ஒரு பெண்ணை வன்புணர்ச்சி செய்து விட்டால்; அல்லது

(c) அவர் ஒரு சிறைச்சாலை அல்லது பாதுகாப்பு இல்லம், அல்லது சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட வேறு இடங்கள் அல்லது பெண்கள் அல்லது குழந்தைகள் அமைப்பகத்தின் நிர்வாகத்தினராகவோ அல்லது ஊழியராகவோ இருந்து, தமது பதவிநிலையை ஒரு அனுகூலமாகப் பயன்படுத்தி அப்படிப்பட்ட சிறைச்சாலை, பாதுகாப்பு இல்லம், இடம் அல்லது அமைப்பகத்தில் இருக்கும் எந்தப் பெண்ணையாவது வன்புணர்ச்சி செய்து விட்டால்; அல்லது

(d) அவர் ஒரு மருத்துவமனையின் நிர்வாகத்தினராகவோ அல்லது ஒரு ஊழியராகவோ இருந்து, தனது பதவிநிலையை ஒரு அனுகூலமாகப் பயன்படுத்தி, அந்த மருத்துவமனையில் உள்ள ஒரு பெண்ணை வன்புணர்ச்சி செய்து விட்டால்; அல்லது

(e) கர்ப்பிணி என்று தெரிந்தே ஒரு பெண்ணை வன்புணர்ச்சி செய்தால்; அல்லது

(f) பனிரெண்டு வயதிற்குட்பட்ட ஒரு பெண்ணை வன்புணர்ச்சி செய்தால்; அல்லது

(g) கூட்டாக வன்புணர்ச்சி (gang rape) செய்தால்,

அவ்வாறு செய்பவருக்கு, பத்தாண்டுகளுக்கு குறையாத அளவில் ஆயுள் காலத்திற்காக இருக்கலாமெனக் கூடிய கடுஞ் சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

எனினும், நீதிமன்றம் தனது தீர்ப்புரையில் போதுமான மற்றும் சிறப்பான காரணங்களைக் குறிப்பிடுவதின் மூலம் பத்தாண்டுகளுக்கு குறைவான சிறைத் தண்டனையும் விதிக்கலாம்.

மேற்கண்ட தண்டனையில் பிரிவு 376(1)-ன் கீழான தண்டனை பொதுவான வன்புணர்ச்சிக்கு விதிக்கப்படுவதாகும். பிரிவு 376(2)-ன் கீழான தண்டனை, பாதுகாப்பில் உள்ள பெண்களை வன்புணர்ச்சி (Custodial Rape) செய்ததற்காக விதிக்கப்படுவதாகும். பிரிவு 376(2)-ஆனது, **1983–ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தால்**, இந்திய தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டதாகும்.

முடிவுரை:

மலரினும் மெல்லிது காமம் சிலரதன்
செவ்வி தலைப்படு வார். **(குறள் 289)**

காமம் மலரைவிட மென்மையுடையதாகும்; அந்த உண்மையை உணர்ந்து, அதன் நலனைப் பெறுபவர் சிலரேயாவர் என்று வள்ளுவர் கூறுகின்றார். காமத்தின் மலரினும் மெல்லிய தன்மையை உணராதோர், காமத்தால் மதிமயங்கி, அறிவிழந்து, வெறி கொண்டு, வலிந்து கொள்வதே காமம் என்று கருதி, வன்புணர்ச்சியெனும் தீச்செயலைப் புரிந்து விடுகின்றனர்.

இவர்கள் பெண்மை நலம் பேணாப் பித்தர்கள். இந்நிலையில் நல்ல பலரினும் மெல்லியதான காமம், நஞ்சினும் கொடியதாக மாறி விடுகிறது. மங்கையரின் மாண்பினை மறந்து, அவர்தம் பெருமையைப் பேணாது, அவர்களது விருப்பத்திற்கு மாறாகவோ, ஏமாற்றி, கட்டாயப்படுத்தி அல்லது மிரட்டி சம்மதிக்க வைத்தோ, அல்லது சம்மதம் பெறாமலோ வன்புணர்ச்சி செய்பவர்களை வலிந்து மேற்கண்டவாறு தண்டிக்கிறது சட்டம். அதிலும் பாதுகாப்பில் உள்ள பெண்ணிடம் பாலியல் பலாத்காரம் அதாவது வன்புணர்ச்சி (custodial rape) செய்தல் கொடுமையிலும் பெருங் கொடுமை. அவ்வாறு செய்பவர்களை, திருத்தச் சட்டத்தின் வாயிலாக இந்திய தண்டனைச் சட்டத்தில் கொண்டுவரப்பட்ட சட்டப் பிரிவுகள் தயவுதாட்சண்யம் காட்டாமல், தண்டிக்கின்றன. எனினும், தற்காலத்தின் குற்றமனப் போக்கிற்கு, இத்தண்டனைகள் மேலும் அதிகப்படுத்தப்படலாம்.

இயற்கைக்கு மாறான சேர்க்கை
(அல்லது)
இயற்கைக்கு மாறான குற்றங்கள்
[Unnatural Offences]
(பிரிவு 377)

27. Unnatural Offences - Write short notes. (இயற்கைக்கு மாறான குற்றங்கள் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

உடலின் உணர்வால் ஊறும் இன்பத்தைச் 'சிற்றின்பம்' என்றும், உள்ளத்து உயர்வால் பெறும் இன்பத்தை 'பேரின்பம்' என்றும் பெரியோர்கள் கூறுவார்கள். உடலுணர்வான சிற்றின்பம் பெறுவதற்கும் உற்ற முறைகள் உண்டு. அந்த வகையில் சிற்றின்பப் புணர்ச்சிக்கு அதை விரும்பும் ஆண், பெண் என்ற இருவரும் வேண்டும். இந்த இரு எதிர் பாலரின் (opposite sex) புணர்ச்சியில் விளையும் இன்பமே இயல்பான இன்பமாகும். இயற்கையானதாகும். இதற்கு மாறுபட்ட வகையில் ஒருவர் பெறும் இன்பம், இயல்பில்லா இன்பமாகும். இயற்கைக்கு மாறான சேர்க்கையாகும். இதைத்தான் இந்திய தண்டனைச் சட்டம் தனது 377-வது பிரிவின் வழியாக 'இயற்கைக்கு மாறான குற்றங்கள்' என்று கூறுகின்றது. அப்பிரிவினைக் காண்போமா?

இயற்கைக்கு மாறான குற்றங்கள் (Unnatural Offences) - பிரிவு 377:

இயற்கை முறைக்கு மாறாக, ஆண் அல்லது பெண் எவருடனேனும், அல்லது விலங்கு எதனுடனேனும் தம்மிச்சையாக **காம விகார உடலுறவு (Carnal intercourse)** கொள்கிற எவரொருவருக்கும் ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

விளக்கம்: மேற்படி பிரிவில் விவரிக்கப்பட்ட குற்றத்திற்கு அவசியமான காம விகார உடலுறவாக அமைவதற்கு 'நுழைத்தல்' (Penetration) போதுமானதாகும்.

மேற்படி பிரிவு 377 உணர்த்தும் பொருள்:

ஆணுடன் ஆண் முட்டிமை (Sodomy) உறவு கொள்ளல் அல்லது பெண்ணுடன் இயற்கைக்கு மாறான வகையில் புணர்ச்சி கொள்ளல் (Buggery) அல்லது பெண்ணுடன் பெண் உறவு கொள்ளல் (Lesbian) அல்லது விலங்குகளை புணர்தல் (Bestiality) ஆகியவற்றை மேற்படி பிரிவு இயற்கைக்கு மாறான குற்றங்களாக தண்டிக்கிறது. மேற்கண்ட மாதிரியான புணர்ச்சிக்கு சம்பந்தப்பட்டவரின் இசைவு பெறப்பட்டிருக்கிறதா என்பது அவசியமில்லை (Consent is immaterial). இதில் விருப்பத்துடன் ஈடுபடும் எதிர் தரப்பினரும் தண்டிக்கப்படுவர்.

முடிவுரை:

மேற்கண்ட செயல்கள் முந்தய காலகட்டங்களில் தீச்செயல்களாக உலக நாடுகளால் கருதப்பட்டன. ஆனால் நாளடைவில் ஆணுடன் ஆணும் (homosexual), பெண்ணுடன் பெண் (lesbian) உறவு கொள்ளும் ஓரினச் சேர்க்கையர்கள் உலகெங்கிலும் பெருகி விட்டனர். எனவே இங்கிலாந்தில் கூட, மேற்கண்ட செயல்களுக்கு தடை விதிக்கும் சட்டங்கள் (anti-sodomy laws) நீக்கப்பட்டு விட்டன. அதைப் பின்பற்றி ஆஸ்திரேலியா, தென் ஆப்பிரிக்கா ஆகிய நாடுகளிலும் ஓரினச் சேர்க்கை அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஓரினச் சேர்க்கையில் ஈடுபடுவதில் தவறொன்றுமில்லை எனும் அளவிற்கு அது உலகமெங்கும் வளர்ந்து விட்டது என்றே கூறலாம். இவ்வளவு ஏன்? அவர்களுக்கென ஒரு சங்கம் வைத்துக் கொண்டு, அவர்கள் செயல் படுகின்றனர். பெண்ணும் பெண்ணும் மணமுடித்துக் கொள்கின்றனர். இவற்றின் அடிப்படையில், நம் நாடும் மேற்படி பிரிவு 377-ல் தகுந்த திருத்தங்கள் கொண்டுவந்து, அல்லது அப்பிரிவை நீக்கிவிட்டு பாதுகாப்பான ஓரினச் சேர்க்கைக்கு வழிவகைகளை ஏற்படுத்தலாம்.

(இ) சொத்துக்கு எதிரான குற்றங்கள்
(அல்லது)
பொருளுக்கு எதிரான குற்றங்கள்
[Offences against Property]

(i) திருட்டு (Theft)
(பிரிவுகள் 378 முதல் 382 முடிய)

1. Discuss the offence of theft with ingredients. (திருட்டுக் குற்றத்தை அதன் உட்கூறுகளுடன் விவாதிக்க.)

(அல்லது)

Define 'Theft'. When it will amount to robbery? Can a person commit theft of his own property? ('திருட்டு' வரையறை செய்க. அஃது எப்பொழுது கொள்ளைக் குற்றமாகும்? ஒரு நபர் தனது பொருளையே திருட முடியுமா?)

முன்னுரை:

பொருட்களில் அசையும் பொருள், அசையாப் பொருள் என இரு வகை உண்டு. அவற்றில் அசையும் பொருட்களுக்கு எதிரான குற்றங்களில் முதன்மையானது 'திருட்டு' ஆகும். அக்குற்றத்தின் வரையறையை பிரிவு 378 கூறுகிறது. அதனைக் காண்போமா?

திருட்டு - பிரிவு 378 கூறும் வரையறை:

எவரேனும் ஒருவரது உடைமையில் இருந்து அசையும் பொருள் எதையேனும் அவரது சம்மதம் இல்லாமல் நேர்மையின்றி எடுத்துக் கொள்ளும் கருத்து கொண்டு, அவ்வாறு எடுத்துக் கொள்ளும் பொருட்டு அந்தப் பொருளை நகர்த்தும் எவரொருவரும், திருட்டுக் குற்றம் செய்ததாகச் சொல்லப்படுகிறார்.

விளக்கம் 1 : ஒரு பொருள் அசையும் பொருளாக இல்லாதிருந்து அது பூமியோடு பொருந்தி இருக்கும் வரையில் அது திருட்டுக்கு உட்பட்டதாகாது. ஆனால், பூமியிலிருந்து அது பிரிக்கப்பட்ட உடனேயே அது திருட்டுக்கு உட்படக் கூடியதாகிறது.

விளக்கம் 2 : பிரித்தலை உண்டாக்கும் ஒரு செய்கையே, நகர்த்தலையும் உண்டாக்குமானால், அது ஒரு திருட்டாகலாம்.

விளக்கம் 3 : ஒரு பொருளை நகர்த்துவதற்கு தடையாக இருந்த ஓர் இடையூறை அகற்றுவதனாலும் அல்லது வேறெந்த பொருளிலிருந்து

அதனைப் பிரிப்பதனாலும், அதை உள்ளபடியே நகர்த்துவதன் மூலமுங்கூட, ஒருவர் அப்பொருளை நகர்த்துவதாகச் சொல்லப்படுகிறார்.

விளக்கம் 4 : ஒரு விலங்கை எந்த வழியிலேனும் நகர்த்துகிற ஒருவர், அந்த விலங்கை நகர்த்துவதாகவும், அவ்வாறு உண்டாக்கப்பட்ட நகர்த்துதலின் விளைவாக, அந்த விலங்கினால் நகர்த்தப்பட்ட ஒவ்வொரு பொருளையும், அவர் நகர்த்துவதாகவும் சொல்லப்படுகிறார்.

விளக்கம் 5 : மேற்படி பிரிவு 378-ன் வரையறையில் சொல்லப்பட்டுள்ள சம்மதமானது வெளிப்படையானதாகவோ, உட்கிடையானதாகவோ இருக்கலாம். மற்றும் பொருளைத் தம் வசம் வைத்திருப்பவராலோ அல்லது அந்த நோக்கத்திற்காக வெளிப்படையாக அல்லது உட்கிடையாக அதிகாரம் பெற்றிருப்பவராலோ, அச்சம்மதம் கொடுக்கப்படலாம்.

மேற்படி பிரிவு 378-ன் கீழ் திருட்டுக் குற்றத்தை விளக்க (a) முதல் (p) வரையிலான **பதினாறு எடுத்துக்காட்டுகள்** கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் சிலவற்றை பின்வரும் பத்திகளில் பொருத்தமான இடங்களில் காண்போம்.

திருட்டுக் குற்றத்திற்கு தேவையான உட்கூறுகள் (Ingredients):

பிரிவு 378-ன்படி, திருட்டுக் குற்றம் ஒன்றிற்கு பின்வரும் உட்கூறுகள் தேவை என்பது புலனாகிறது. அவை,

(1) சம்பந்தப்பட்ட பொருள், அசையும் பொருளாக இருக்க வேண்டும் (It should be a movable property);

(2) எவருடைய உடைமையிலாவது இருக்க வேண்டும் (In the possession of any one);

(3) அந்த நபரின் உடைமையிலிருந்து அப்பொருளை எடுத்துக் கொள்ள நேர்மையற்ற கருத்து இருக்க வேண்டும் (A dishonest intention to take it out of that person's possession);

(4) அவருடைய சம்மதம் இல்லாமல் (without his consent); மற்றும்

(5) அப்படி எடுத்துக் கொள்ள அப்பொருளை நகர்த்த வேண்டும் (A moving in order to such taking).

மேற்படி உட்கூறுகள் உணர்த்தும் பொருள்:

(1) அசையும் பொருள் (Movable Property):

அசையும் பொருட்களைத்தான் ஒருவர் திருடுதல் இயலும். மாறாக அசையாப் பொருட்களான 'நிலம்' அல்லது 'கட்டிடம்' திருடு போயிற்று என்று கூற முடியாது.

அசையும் பொருள் என்பதின் வரையறையை இந்திய தண்டனைச் சட்டத்தின் **22-வது பிரிவு** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, "நிலம், நிலத்தோடு இணைந்திருக்கும் பொருட்கள், அப்பொருள்களோடு நிலையாகப் பிணைந்திருப்பவை, ஆகியவைகள் நீங்கிய இதர பருப்பொருள்கள் யாவும் அசையும் பொருள்கள் ஆகும்."

எனவே, பூமியில் நிற்கும் மரங்களும், பயிர்களும் அசையாப் பொருள்கள். அது போல கட்டிடங்களும், அவற்றில் நிலையாகப் பதிக்கப்பட்டிருக்கும் சாமான்களும் அசையாப் பொருட்கள். அதன்படி அறுவடையாகாத பயிர் அசையாப் பொருள்தான் என்றாலும், நாம் முன்கண்ட **விளக்கம் 1-ன்படி**, அது அறுக்கப்பட்டவுடன் அசையும் பொருளாகி விடுகிறது. அதுபோல் நிலத்தின் மீது வளர்ந்துள்ள ஒரு மரம், வெட்டப்பட்டதும் அசையும் பொருளாகி விடுகிறது. எனவே, நேர்மையின்றி எடுத்துக் கொள்ளும் கருத்தோடு, ஒருவர் பயிரை அல்லது மரத்தை மற்றொருவர், முறையே அறுத்தல் அல்லது வெட்டுதல் திருட்டு ஆகிறது.

மேலும் இதே கருத்தோடு ஒருவர் நிலத்திலுள்ள மரத்தை மற்றொருவர் வெட்டுவதும் திருட்டுக் குற்றமாகும். மரத்தை வெட்டி, அதன் கட்டையை அப்புறப்படுத்தி அகற்றிய பின்னர்தான் திருட்டுக் குற்றம் பூர்த்தியாகிறது என்பதில்லை. நிலத்தில் நிற்கும் மரத்தை வெட்டும் செயலே, அந்த மரத்தை உடையவரின் உடைமையிலிருந்து அகற்றும் செயலாகவும் கருதப்படுகிறது. இங்கு "வெட்டிய மரத்தைத்தான் நான் எடுத்துச் செல்லவில்லையே" என்று அவர் எதிர் வழக்காட முடியாது. இதைத்தான் பிரிவு 378-ன் கீழான **2-வது விளக்கம்**, "பிரித்தலை உண்டாக்கும் ஒரு செய்கையே, ஒரு நகர்த்தலையும் உண்டாக்குமானால், அது ஒரு திருட்டாகலாம்" என்று கூறுகிறது. இங்கு மரத்தை நிலத்திலிருந்து பிரிக்கும் (அதாவது வெட்டும்) செயலில், துண்டான மரம் நகரும் செயலும் அடங்கியுள்ளது. எனவே, நேர்மையின்றி எடுத்துக் கொள்ளும் கருத்துடன் மரத்தை வெட்டிய செயல் ஒன்றே, திருட்டுக் குற்றத்திற்கு வழிவகுத்துவிடும்.

மேற்கண்ட நிலைப்பாட்டை பிரிவு 378-ன் கீழான **எடுத்துக்காட்டு (a)-ஆனது** பின்வருமாறு விளக்குகிறது. அதன்படி, Z என்பவரின் உடைமையிலிருந்து அவரது சம்மதமில்லாமல் நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்துடன், Z-ன் நிலத்தில் வளர்ந்துள்ள ஒரு மரத்தை A என்பவர் வெட்டி வீழ்த்துகிறார். அவ்வாறு எடுத்துக் கொள்வதற்காக, A நிலத்திலிருந்து மரத்தை பிரித்த உடனேயே அவர் திருட்டைச் செய்தவராகிறார்.

ஒருவர் நிலத்திலுள்ள மண்ணையோ, கற்களையோ எடுத்தாலும், அது திருட்டுதான். மண்ணும், கல்லும் பூமியிலிருந்து அகற்றப்பட்டவுடன், அவை அசைவும் பொருள்களாகி விடுகின்றன. அதுபோல், ஆடு, மாடு, நாய் போன்ற விலங்குகளும், கோழி, வாத்து போன்ற பறவைகளும் அசையும் பொருள்கள்தாம். அவற்றை எடுத்துக் கொள்வதும் திருட்டுதான். இதை

எடுத்துக்காட்டு (b)–ஆனது, பின்வருமாறு விளக்குகிறது. அதன்படி, A என்பவர் நேர்மையற்ற முறையில் Z என்பவரது நாயை Z-ன் சம்மதமில்லாமல் தன் பின்னால் தொடர்ந்து வருமாறு, நாய்களை கவர்ந்திழுக்கும் இரையை தன் சட்டைப் பையில் வைத்துக் கொண்டு செல்கிறார். அந்நாய் A-யை பின்தொடரத் தொடங்கிய உடனேயே, அது திருட்டுக் குற்றமாகி விடுகிறது. A, நாயை திருடிய குற்றத்திற்குள்ளாகிறார்.

இந்த இடத்தில், **எடுத்துக்காட்டு (c)–யையும்,** நாம் கவனிக்க வேண்டும். அதன்படி, A என்பவர் பொக்கிஷப் பேழையைத் தாங்கிச் செல்கிற ஓர் எருதைப் பார்த்தவுடன், அப்பொக்கிஷத்தை நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொள்ளலாமென்பதற்காக, அவர் அந்த எருதை ஒரு குறிப்பிட்ட திசையில் விரட்டுகிறார். அவ்வெருது அந்த திசையில் நகரத் தொடங்கியவுடனேயே, A அப்பொக்கிஷத்தை திருடிய குற்றத்திற்காளாவார். இந்த எடுத்துக்காட்டு பிரிவு 387-ன் கீழான **4–வது விளக்கத்தை** தெளிவு படுத்துவதாக உள்ளது.

Chandi Kumar Das v. Abanidhar Roy[1] என்றொரு **முக்கிய வழக்கில்** உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. அஃதாவது, ஒருவர் உடைமையிலுள்ள குளத்திலிருந்து மீன்களை[2] பிடித்தல் திருட்டாகும். அந்தக் குளம் எவர் உடைமையிலிருக்கின்றதோ, அவர் உடைமையிலேயே அதிலுள்ள மீன்களும் இருக்கின்றன. ஆனால், அந்தக் குளத்திற்கு நீர் வருவதற்கென்று ஒரு வாய்க்கால் இருந்து, அந்த வாய்க்கால் வழி குளத்திற்குள் வரும் மீன்கள் மீண்டும் வாய்க்கால் வழியாகவே குளத்திலிருந்து வெளியே செல்லுகின்றன என்றால், குளத்திலுள்ள மீன்கள் ஒருவரின் தனி உடைமையில் இருப்பதாகக் கொள்வதற்கில்லை. எனவே அவை திருட்டுக்குரிய பொருள்களாவதில்லை.

Avtar Singh v. State of Punjab[3] - இவ்வழக்கில் நேர்மையற்ற முறையில் மின்சாரத்தை பிரித்தெடுப்பது (abstraction) இந்திய மின்சாரச் சட்டம், 1910 பிரிவு 29-ன் கீழ் குற்றமாகுமே தவிர இந்திய தண்டனைச் சட்டப்படி திருட்டுக் குற்றமாகாது. ஏனெனில், மின்சாரம் ஒரு அசையும் பொருளாகாது என்றும், பிரிவு 378-ல் மின்சாரத் திருட்டு உள்ளடங்க வில்லை என்றும், தீர்ப்பானது.

(2) உடைமை (Possession):

'திருட்டு' என்பதே ஒருவருடைய 'உடைமைக்கு' எதிரான குற்றமாகும். திருட்டுக் குற்றத்தால் ஒரு பொருளின் உடைமைக்கு உரியவர், அந்த உடைமையை இழக்கிறார். எனவே, எவருடைய உடைமையிலும் இல்லாத பொருள் எதுவும் திருட்டுக் குற்றத்திற்கு உரியதன்று.

---

1. A.I.R. 1965 S.C. 585
2. மீன்களும் அசையும் பொருட்களே.
3. (1965) 1 Cri. L.J. 605 (S.C.)

இதை, பிரிவு 328-ன் கீழான **எடுத்துக்காட்டு (g)-ஆனது,** பின்வருமாறு தெளிவாக்குகிறது. அதன்படி, எவர் உடைமையிலும் இல்லாத ஒரு மோதிரத்தை ஒரு நெடுஞ்சாலையில் A என்பவர் பார்க்கிறார். A அதை (காவல் நிலையத்தில் ஒப்படைக்காமல்) எடுத்து தம் வசம் வைத்துக் கொண்டால், அவர் ஒரு 'குற்றமுறு கையாடல் குற்றத்தை' (Criminal misappropriation) செய்தவராக ஆகலாமே தவிர, திருட்டுக் குற்றத்தை செய்தவர் ஆக மாட்டார். ஏனெனில் அம்மோதிரத்தை எவர் உடைமையிலிருந்தும் A எடுத்துக் கொள்ளவில்லை.

இதற்கு மாறாக உள்ள **எடுத்துக்காட்டு (f)-வைக்** கவனிப்போம். அதன்படி, Z என்பவர் வசிக்கிற வீட்டின் ஒரு மேஜையின் மீது Z-க்குச் சொந்தமான ஒரு மோதிரத்தை A என்பவர் பார்க்கிறார். இங்கு அந்த மோதிரம் Z-ன் உடைமையில் இருக்கிறது. அதை நேர்மையற்ற முறையில் A அப்புறப்படுத்தினால் (எடுத்துக் கொண்டால்) A திருட்டுக் குற்றத்தை செய்தவர் ஆவார்.

இங்கு 'உடைமை' என்பது ஒரு பொருள் ஒருவரிடம் **நேரடி உடைமையில் (actual possession)** இருக்க வேண்டுமென்பதில்லை. அது அவரின் வீட்டில், அல்லது அவரது அலுவலகத்தில் அல்லது அவரது ஆளுகைக்குட்பட்ட இடத்தில் இருந்தாலுமே, அது அவரது உடைமையில் இருப்பதாகப் பொருளாகும். இது **கொள்நிலை உடைமை (constructive possession)** எனப்படுகிறது. ஒருவர் தனது பொருளை, தனது வேலையாளிடம் கொடுத்திருந்தாலும், அது அவருடைய உடைமையில் இருப்பதாகவே பொருளாகும். பிரயாணி ஒருவர் தனது பெட்டியை சுமை தூக்கும் கூலி ஒருவரிடம் ஒப்படைக்கிறார். அவர் அதை தூக்கிக் கொண்டு ஓடிவிட்டால், அதுவும் திருட்டுக் குற்றமே. இங்கு அப்பெட்டி அக்கூலியின் வசம் இருந்தாலுமே, அது அப்பிரயாணியின் உடைமையில் இருந்து திருடிச் செல்லப்பட்டதேயாகும். எனவே, ஒருவரது உடைமையில் உள்ள பொருள்கள் யாவும் அவரது பார்வையிலேயே அல்லது அவர் எட்டிப் பிடிக்கும் நிலையிலேயே இருக்க வேண்டுமென்பது அவசியமில்லை. சேலத்திலுள்ள A என்பவரது வீட்டிலுள்ள பொருள்கள் அவர் சென்னையில் இருக்கும் பொழுதும் அவரது உடைமையில் இருப்பதாகவே சட்டம் கொள்கிறது. எனவே, சேலம் வீட்டிலுள்ள பொருள்களை ஒருவர் திருடி விட்டாலும், சென்னையிலுள்ள A-யின் உடைமையிலிருந்து திருடி விட்டதாகவே பொருளாகும்.

(3) நேர்மையற்ற கருத்து (Dishonest Intention):

எந்தக் குற்றத்திற்கும் பொதுவாக 'குற்றமனம்' வேண்டுமென்று நாம் ஆரம்பத்திலேயே கண்டுள்ளோம். திருட்டுக் குற்றம் செய்பவர்களின் குற்றமனம் என்ன? நேர்மையற்ற முறையில் ஒரு பொருளை எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்துதான் இங்கு அவனது குற்றமனமாகும்.

A என்பவன் B என்பவனின் பணப்பையைத் திருடுகிறான். இங்கு இதனால் A-க்கு முறையற்ற ஆதாயம் (wrongful gain) கிடைக்கிறது. பணப்பெட்டி இழந்த B-க்கு முறையற்ற இழப்பு (நஷ்டம்) (wrongful loss) ஏற்படுகின்றது. இவ்வாறு ஒருவருக்கு முறையற்ற ஆதாயமோ அல்லது மற்றொருவருக்கு முறையற்ற இழப்போ விளைவிக்கும் செயலே, நேர்மையற்ற (dishonestly) செயல் ஆகிறது, என இந்திய தண்டனைச் சட்டத்தின் 24-வது பிரிவு[1] கூறுகிறது. இவ்வாறு நேர்மையற்ற கருத்துடன் ஒரு பொருளை எடுத்துக் கொள்வதே, திருட்டுக் குற்றமாகிறது. இந்த நேர்மையற்ற கருத்து இல்லையெனில், திருட்டுக் குற்றமும் விளைவதில்லை.

மேற்கண்ட நேர்மையற்ற கருத்து ஒரு பொருளை எடுத்துக் கொள்வதற்காக, அதை நகர்த்தும் சமயத்தில் இருக்க வேண்டும். இதை பிரிவு 378-ன் விளக்கம் (h), (i) ஆகிய எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு தெரிவிக்கின்றன. அவை,

எடுத்துக்காட்டு (h) : Z என்பவர் வீட்டில் ஒரு மேஜை மீது Z-க்குச் சொந்தமான மோதிரம் வைக்கப்பட்டு இருப்பதை A என்பவர் பார்க்கிறார். தம்மை எப்படியும் சோதனை செய்வார்கள் என்றும், கண்டுபிடித்து விடுவார்கள் என்றும் அஞ்சியதால், அந்த மோதிரத்தைச் சட்ட விரோதமாக உடனே கையாளுவதற்கு துணியாமல், அம்மோதிரம் காணாமற் போனதை மறந்து போன பிறகு, அதை மறைத்து வைத்திருக்கிற இடத்திலிருந்து எடுத்து விற்றுவிட வேண்டும் என்ற கருத்துடன் Z என்பவரால் கண்டுபிடிப்பதற்கு மிக அரிதான இடத்தில் அதை மறைத்து வைக்கிறார். இங்கு அந்த மோதிரத்தை முதலில் நகர்த்திய போதே, A திருட்டுக் குற்றத்தைச் செய்தவர் ஆவார்.

எடுத்துக்காட்டு (i): A என்பவர் தம் கைக்கடிகாரத்தை ஒழுங்கு படுத்துவதற்காக அதை Z என்னும் நகைக் கடைக்காரரிடம் ஒப்படைக்கிறார். Z அதை தம் கடைக்கு எடுத்துச் செல்கிறார். அந்த கடைக்காரர் அக்கடிகாரத்தை ஓர் ஈடாக (security) வைத்துக் கொள்வதற்கு A அவரிடம் எக்கடனும் படாது இருந்தும், A அந்தக் கடைக்குள் பகிரங்கமாக நுழைந்து Z-ன் கையிலிருந்து அக்கடிகாரத்தை தாக்குதல் மூலம் எடுத்துச் செல்கிறார். இங்கு A குற்றமுறு அத்துமீறலையும், தாக்க முனைதலையும் செய்தவர் ஆகலாம். இங்கு அவர் செய்தது நேர்மையற்ற முறையில் இல்லாத காரணத்தால், அவர் திருட்டுக் குற்றத்தை செய்தவர் ஆகமாட்டார்.

நேர்மையற்ற கருத்து என்பது தீயெண்ணமாகும். இத்தீய எண்ணம் இருந்தால்தான், திருட்டுக் குற்றமே விளைகிறது. மாறாக நல்லெண்ணத்துடன் ஒரு பொருளை எடுத்துக் கொண்டால், அது திருட்டாகாது. **எடுத்துக்காட்டு (p)–ஆனது,** இதை விளக்குகிறது. அதன்படி, A நல்லெண்ணத்தில் Z-க்குச் சொந்தமான பொருளைத் தம்முடைய பொருள் என்ற நம்பிக்கையில் Z-ன்

1. இந்நூலின் பக்கம் எண் 29-ல் விரிவாகக் கண்டுள்ளோம்.

உடைமையிலிருந்து எடுத்துக் கொள்கிறார். இங்கு A நேர்மையற்ற முறையில் அதை எடுத்துக் கொள்வதில்லையாதலால், அவர் திருட்டைச் செய்தவர் ஆகார்.

Nobin Chandar Hoidar[1] என்ற வழக்கில் முதலாளியின் மீன் பண்ணையை மற்றொரு பகை மீன் கூட்டத்தினரிடம் இருந்து பாதுகாக்க வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன், குற்றஞ் சாட்டப்பட்டவர் தன் முதலாளியின் மீன்பிடி வலையை, தன்னுடைய உடைமையில் எடுத்து வைத்துக் கொண்டார். இது திருட்டுக் குற்றமாகாது என்று தீர்ப்பளிக்கப் பட்டது. ஏனெனில், இங்கு நேர்மையற்ற கருத்து குற்றஞ் சாட்டப் பட்டவருக்கு இல்லாமல் இருந்ததே காரணமாகும்.

Mohan Singh v. State of Rajasthan[2] என்ற வழக்கில் A என்பவர், துப்பாக்கியை கையில் வைத்துக் கொண்டிருந்தார். அவர் சுட்டு எவரையும் பலி வாங்கிவிடக்கூடாது என்ற நல்லெண்ணத்தில், அவர் கையிலிருந்த துப்பாக்கியை B என்பவர் பறித்துக் கொண்டார். உடனே அதை B, காவல் நிலையத்தில் ஒப்படைத்து விட்டார். இங்கு திருட்டுக் குற்றத்தை செய்யும் நேர்மையற்ற கருத்து எதுவும் B-க்கு இருந்திருக்கவில்லை என்று கூறி, உச்ச நீதிமன்றம் B-யை விடுதலை செய்தது.

Suvvari Sanyasi Apparao v. B.Lakshminarayana[3] என்ற வழக்கில் அப்பாராவ் என்பவர் ஒரு அச்சு இயந்திரத்தை, அதன் உண்மையான உரிமையரல்லாத (வெளித்தோற்றத்திற்கு உரிமையாளராக தெரியாதவர்) (Ostensible Owner) B என்பவரிடமிருந்து விற்பனை பத்திரம் ஒன்றின் மூலம் வாங்கி விடுகிறார். ஆனால் B-தான் அதன் உண்மையான உரிமையாளர் என்ற நன்னம்பிக்கையில் அவ்விற்பனைப் பத்திரத்தில் அப்பாராவ் கையெழுத்திட்டுள்ளார். அச்சு இயந்திரத்தின் உரிமைதான் தன்னிடம் வந்து விட்டதே என்று கருதி, அப்பொழுது C என்பவரின் உடைமையில் இருந்த அச்சு இயந்திரத்தை அகற்றிக் கொண்டு சென்று விடுகிறார். மேற்படி C என்பவர்தான், அதன் உண்மையான உரிமையாளர். அவர் அப்பாராவ் மீது திருட்டுக் குற்றத்திற்காக வழக்குத் தொடர்ந்த பொழுது, அப்பாராவ் திருட்டுக் குற்றம் செய்யவில்லை என்றும், அவர் தனக்கு அந்த அச்சு இயந்திரத்தின் மீது உரிமை உள்ளது எனும் நன்னம்பிக்கையில் (bonafide belief) அடிப்படையில்தான் அவ்வாறு அந்த இயந்திரத்தை அகற்றியுள்ளாரே தவிர, நேர்மையற்ற கருத்தின் அடிப்படையில் அல்ல என்றும் கூறி, அவரை உச்ச நீதிமன்றம் விடுதலை செய்தது.

(4) சம்மதமில்லாமல் (Wihtout Consent):

ஒரு பொருளை, அதன் உடைமைக்கு உரியவரின் சம்மதமில்லாமல்

1. 1866 W.R. (Cri.) 79
2. 1980 Supp. S.C.C. 655
3. A.I.R. 1962 S.C. 586

எடுத்துச் செல்வதுதான் திருட்டுக் குற்றமாகிறது. சம்மதம் பெற்று எடுத்துச் செல்வது, குற்றமாகாது. இச்சம்மதம் பிரிவு 378-ன் கீழான 5-வது விளக்கத்தின்படி வெளிப்படையானதாகவோ அல்லது உட்கிடையான தாகவோ இருக்கலாம். இதை பிரிவு 378-ன் கீழான (m), (n) ஆகிய எடுத்துக்காட்டுகள் தெளிவாக்குகின்றன. அவை வருமாறு.

எடுத்துக்காட்டு (m): A-யும், B-யும் நண்பர்கள். ஒருமுறை A இல்லாத போ து B அவருடைய நூலகத்தினுள் சென்று, A-யின் வெளிப்படையான சம்மதமில்லாமல் ஒரு புத்தகத்தை, அதை படித்துவிட்டு திருப்பித் தரும் எண்ணத்துடன் எடுத்துச் செல்கிறார். இங்கு B, A-யின் மறைமுகமான சம்மதம் தமக்கிருக்கலாம் எனக் கருதுவது, சாத்தியமான ஒன்றாகும். அது B-யின் எண்ணமாகயிருப்பின் B திருட்டுக் குற்றம் புரியவில்லை.

எடுத்துக்காட்டு (n): Z-ன் மனைவியிடமிருந்து A ஒரு தானம் கேட்கிறார். அவருடைய கணவான Z-க்குச் சொந்தமானவை என்று A அறிந்திருக்கிற பணம், உணவு மற்றும் உடையை அவள் A-க்குத் தருகிறாள். இங்கு தானமாக வழங்குவதற்கு வேண்டிய அதிகாரத்தை Z-ன் மனைவி பெற்றிருக்கிறார் என் A கருதியிருப்பார் என்பது அநேகமாகச் சாத்தியமானதொன்றாகும். இது A-வின் எண்ணமாயிருந்தால், A திருட்டைச் செய்தவர் ஆகார்.

H.J.Ramson v. Triloki Nath[1] என்ற வழக்கில் ஒரு பொருளின் உரிமையாளர் சம்மதமில்லாமல், அப்பொருளை உடைமையில் கொண்டிருக்கும் வேறு நபர்களின் சம்மதத்தோடு அப்பொருளை எடுத்துச் சென்றாலும் அது திருட்டுக் குற்றமே ஆகும் என்று கூறப்பட்டது. மேற்படி வழக்கில் லாரி ஒன்றை தவணைக் கொள்முதல் (Hire purchase) அடிப்படையில் வாங்கிய உரிமையாளரின் சம்மதமில்லாமல், அவர் தவணைக் கடனை சரிவர கட்டவில்லை என்ற காரணத்திற்காக, அவருக்கு லாரி வாங்க கடன் கொடுத்த நிறுவன அலுவலர்கள் அந்த லாரி உரிமையாளரது பணியாளரின் சம்மதம் பெற்று பறிமுதல் செய்து கொண்டு போனது. இங்கு உரிமையாளரின் சம்மதமில்லாமல் மேற்கண்டவாறு அந்நிறுவன அலுவலர்கள் செயல்பட்டுள்ளதால், அச்செயல், திருட்டுக் குற்றமாகிறது என்று நீதிமன்றம் கூறியது.

(5) நகர்த்துதல் அல்லது எடுத்துக் கொள்ளல் (Moving or Taking):

திருட்டுக் குற்றத்தின் இறுதிக் கூறு, பிறர் உடைமையிலிருக்கும் அசையும் பொருளை அந்த உடைமையிலிருந்து நேர்மையற்ற முறையில் எடுத்துச் செல்வதற்காக (அல்லது அகற்றுவதற்காக) நகர்த்துவதாகும்.

ஒருவன் ஒரு பெண் அணிந்திருந்த நகையை அறுத்து எடுத்துக் கொண்டு ஓடிவிடுகிறான். இது திருட்டுக் குற்றமாகிறது. மற்றொரு நிகழ்வில்,

1. 1942 17 Luck. 663

நகையை அணிந்திருப்பவருக்கு தெரியாமல் அது திருடப்படுகிறது. ஓரிரு மாதங்கள் கழித்து அதைத் திருடியவன் பிடிபட்டு விடுகிறான். அப்பொழுது அந்நகையை தான் உருக்கி விற்றுவிட்டதாகவும், விற்ற பணத்தை செலவழித்து விட்டதாகவும் கூறுகிறான். அப்பொழுதும் அது திருட்டுக் குற்றம்தான். ஒருவர் கழுத்தில் அணிந்துள்ள தங்கச் சங்கிலியை மற்றொருவன் அவருக்கு தெரியாமல் கத்தரித்து விடுகிறான். அச்சங்கிலி கீழே விழுந்து விடுகிறது. அதைக் கவனித்தவுடன் சங்கிலியை அணிந்திருந்தவர் அவனைப் பிடித்து விடுகிறார். இப்பொழுது சங்கிலியை அறுத்தவன் என்ன குற்றம் செய்தான்? திருட்டுக் குற்றந்தான். அறுபட்ட சங்கிலியை இன்னும் அவன் கையில் எடுக்கவில்லைதான். இருந்தாலும் திருட்டுக் குற்றம் பூர்த்தியாகி விட்டது. நகையை அறுத்துக் கொண்டு ஓடிய செயலும், தெரியாமல் எடுத்த செயலும், எடுத்துக் கொள்வதற்காக சங்கிலியை கத்தரித்த செயலுமே, திருட்டுக் குற்றச் செயல்கள்தான்.

மேற்கண்டவற்றிலிருந்து தெரிவது யாதெனில், பிறரது உடைமையிலிருந்து அசையும் பொருள் ஒன்றை எடுத்துக் கொள்ளும் வகையில், அதைச் சிறிது நகர்த்தினாலும் போதும், திருட்டுக் குற்றம் பூர்த்தியாகி விடுகிறது. அதாவது அப்பொருளை நகர்த்துவதே திருட்டுக் குற்றச் செயலாகி விடுகிறது. திருடன் அப்பொருளை எடுத்துக் கொண்டு போய்த் தனது உடைமையாக்கிக் கொண்ட பிறகுதான், அது திருட்டுக் குற்றமாகிறது என்று கூற முடியாது.

ஒரு பொருளை நகர்த்துவதற்குண்டான வழிமுறைகளை நாம் ஏற்கனவே பிரிவு 378-ன் கீழான 3-வது மற்றும் 4-வது விளக்கங்களின் வாயிலாகக் கண்டோம். எனவே, அந்த வழிமுறைகளில் செயல்பட்டாலும், அது ஒரு பொருளை நகர்த்துவதேயாகும்.

இவ்வாறாக திருட்டுக் குற்றத்தின் அய்ந்து உட்கூறுகள் அமைகின்றன. இங்கு நாம் மற்றொரு வினோதமான சூழலையும் ஆராய வேண்டியுள்ளது. அது வருமாறு.

தன் பொருளைத் தானே திருடல் (Theft of his own property):

ஒருவர் தனது பொருளை மற்றவரது சட்டப்படியான பொறுப்பில் கொடுத்திருக்கும் பொழுது, அதை அவர் நேர்மையற்ற கருத்துடன் எடுத்துக் கொண்டால், அதுவும் திருட்டுக் குற்றமேயாகும். இதை பிரிவு 378-ன் கீழான (j) மற்றும் (k) எடுத்துக்காட்டுகள் பின்வருமாறு தெளிவாக்குகின்றன.

எடுத்துக்காட்டு (j): கடிகாரத்தைச் சரி செய்வதற்கு A தன் கடிகாரத்தை Z-யிடம் ஒப்படைக்கிறார். அதைச் சரி செய்த பிறகு, அதற்குண்டான பணத்தை அதன் உரிமையாளரான A, மேற்படி Z-க்கு தர வேண்டியிருந்தது. அதற்கு ஈடாக அக்கடிகாரத்தை மேற்படி Z தன் வசமே சட்டப்படியாக இருத்தி வைத்துக் கொள்கிறார். இந்நிலையில் A அக்கடிகாரத்தை Z-ன் உடைமையிலிருந்து நேர்மையற்ற கருத்துடன் எடுத்துக் கொண்டால், அவர் திருட்டுக் குற்றத்தை செய்தவரே ஆவார்.

எடுத்துக்காட்டு (k): Z-யிடம் A தனது கடிகாரத்தை அடகு (pawn) வைத்து, அதன் பேரில் கடன் பெறுகிறார். அக்கடனைத் திருப்பித் தராமல் Z-ன் சம்மதம் இல்லாமல், Z-ன் உடைமையிலிருந்து அக்கடிகாரத்தை A எடுத்துக் கொண்டால், அக்கடிகாரம் அவருடைய பொருளாகவே இருப்பினும், அதை நேர்மையற்ற முறையில் எடுக்கிற காரணத்தால் A திருட்டைச் செய்தவர் ஆவார்.

Sheikh Hussain[1] வழக்கில், குற்றவாளியின் பொருள், ஒரு காவலரின் (Constable) உடைமையிலும், பொறுப்பிலும் இருந்தது. அப்பொருளுக்கு கணக்கு காண்பிக்க வேண்டிய பொறுப்பு, அக்காவலரைச் சார்ந்தது. குற்றவாளி அப்பொருளை அக்காவலருக்கு தெரியாமல் நேர்மையற்ற கருத்துடன் எடுத்துச் சென்றுவிட்டான். இங்கு அப்பொருள் அக் குற்றவாளிக்கு உரித்ததாகவே இருப்பினும், அது குறித்து சட்டப்படி கணக்கு காண்பிக்க வேண்டிய பொறுப்பிலிருந்த காவலரிடமிருந்து எடுத்துச் சென்றுள்ளதால், அக்குற்றவாளி திருட்டுக் குற்றத்திற்காகவும் தண்டிக்கப் பட்டான்.

திருட்டுக் குற்றத்திற்கு தண்டனை - பிரிவு 379:

திருட்டைச் செய்கிற எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

முடிவுரை:

திருட்டுக் குற்றத்தின் மிகுதீங்கு நிலைகளாக அதாவது கட்டிடம், கூடாரம், படகு ஆகியவற்றில் திருடுவது **(பிரிவு 380),** வேலையாள் திருடுவது **(பிரிவு 381),** மரணம், காயம் ஆகியவைகளை விளைவிக்க முன்னேற்பாடு செய்து விட்டுத் திருடுவது **(பிரிவு 382)** ஆகியன அமைகின்றன. இவ்வாறு திருடுபவர்களுக்கு அதிக தண்டனையை மேற்படி பிரிவுகள் விதிக்கின்றன. **சில சமயங்களில் திருட்டுக் குற்றமே கொள்ளையடிக்கும் குற்றமாகவும் ஆகிறது. இது குறித்து வினா எண் 4-ல் விரிவாகக் காண்போம்.**

2. Discuss the following case laws with facts and principles:
K.N.Mehra v. State of Rajasthan (A.I.R. 1957 S.C. 369).

பின்வரும் வழக்கை அதன் பொருன்மைகள் மற்றும் கொள்கைகளுடன் விவாதிக்க.

K.N.மெஹரா-எதிர்-இராஜஸ்தான் மாநிலம் (ஏ.ஐ.ஆர். 1957 எஸ்.சி. 369)

விவாத தொடக்கம்:

இது ஒரு சுவையான வழக்காகும். இவ்வழக்கில் இருவர்

1. 1887 Cri. R. No. 36 of 1887 unrep. Criminial Case 323

விமானத்தையே திருடிக் கொண்டு போய் விட்டனர். பிறகு விமானத்தை திருட வேண்டும் என்ற நேர்மையற்ற கருத்து (dishonest intention) தங்களுக்கு இல்லை என்று வாதிட்டனர். ஆனால் அவர்களது திருட்டுக் குற்றம் அரசு தரப்பில் சந்தேகத்திற்கிடமில்லாமல் நிரூபிக்கப்பட்டு, தண்டனை வழங்கப்பட்டது. விரிவான வழக்கு விபரத்தை பின்வருமாறு காண்போம்.

வழக்கின் பொருண்மைகள் (Facts of Case):

இவ்வழக்கில் மெஹரா, பிலிப்ஸ் என்ற இரண்டு இளைஞர்கள் இந்திய விமானப்படையில் (Indian Air Force) பயிற்சி பெறும் மாணவர்கள். அவர்களில் பிலிப்ஸ் என்பவன் தீய நடத்தையின் காரணமாக பயிற்சியில் இருந்து நீக்கப்பட்டான். அவனுடைய நண்பன் மெஹரா, ஓம் பிரகாஷ் என்பவருடன் டக்கோடா (Dakota) விமானத்தில் அன்றைய தினம் பயிற்சி பெற வேண்டியிருந்தது. அவ்விமானத்தை ஓட்டுவதற்கு மெஹராவிற்கு அளிக்கப்பட்டுள்ள அதிகாரபூர்வமான நேரம் காலை 6.00 மணியிலிருந்து 6.30 மணி வரை ஆகும். ஆனால் சம்பவ தினத்தன்று காலை 5.00 மணிக்கு Dakota விமானத்திற்கு பதிலாக Harward T-22 ரக விமானத்தை மேற்படி மெஹராவும், பிலிப்சும் எவ்வித அனுமதி இல்லாமலும், மேலும் ஒரு விமானத்தை பறக்க வைப்பதற்கு முன் எடுத்துக்கொள்ளப்பட வேண்டிய முன் நடவடிக்கைகள் எதையும் மேற்கொள்ளாமலும், மேற்படி விமானத்தில் பறந்தனர். இவ்வாறு பறந்து சென்ற அவர்கள், இந்திய-பாகிஸ்தான் எல்லைக்கு 100 மைல் தொலைவில் பாகிஸ்தானில் ஓர் இடத்தில் தங்கள் விமானத்தை இறக்கினர். அதன் பின் ஒரு நாள் கழித்து கராச்சியில் உள்ள இந்திய தூதரைச் சந்தித்து, தாங்கள் விமானம் ஓட்டிக் கொண்டு வந்த பொழுது வழி தவறி விட்டதாகவும், அதனால்தான் விமானத்தை கட்டாயமாக இங்கு தரை இறக்க வேண்டியதாகிவிட்டதாகவும் கூறினர். தங்களை மீண்டும் டெல்லி சென்றடைய உதவுமாறும் கேட்டுக் கொண்டனர். இந்தியத் தூதுவரும் அவர்களை மற்றொரு விமானத்தில் அனுப்பி வைத்தார். ஆனால் இடையில் ஜோத்பூரில் அவர்கள் திருட்டுக் குற்றத்திற்காக கைது செய்யப்பட்டனர்.

குற்றவாளிகளின் எதிர்வாதம் (Defence):

"நாங்கள் விமானத்தை திருட வேண்டும் என்ற நேர்மையற்ற கருத்து கொண்டிருந்தால், கராச்சியில் உள்ள இந்தியத் தூதுவரை சந்தித்திருக்க மாட்டோம். ஆகவே நாங்கள் எக்குற்றமும் புரியவில்லை" என மேற்படி மெஹராவும், பிலிப்சும் வாதாடினார்கள்.

அரசு தரப்பின் வாதம் (Prosecution side):

குற்றவாளிகளின் மேற்படி கூற்று ஒன்று மட்டுமே அவர்கள் குற்றமற்றவர்கள் என்பதை நிரூபித்துவிடாது, என்று அரசு தரப்பில் கூறப்பட்டது. மேலும் டக்கோடா விமானத்திற்கு பதிலாக ஹார்வார்டு விமானத்தை எடுத்துச் சென்றுள்ளனர். திட்டப்படி காலை 6 மணிக்கு புறப்பட வேண்டிய மெஹரா, தன்னுடன் பயணிக்க இருந்த ஓம் பிரகாஷுக்கு

காத்திருக்காமல், காலை 5 மணிக்கே பிலிப்சுடன் விமானத்தை எடுத்துக் கொண்டு சென்று விட்டான். இந்திய விமான தளத்திலிருந்து அவர்களுக்கு அனுப்பப்பட்ட வயர்லெஸ் செய்திகளுக்கு கூட அவர்கள் பதில் கூற மறுத்துவிட்டனர்.

வழக்கின் தீர்ப்பு:

ஹார்வர்டு டி-22 ரக விமானத்தை எடுத்துச் செல்ல நேர்மையற்ற கருத்து கொண்டிருந்தனர் என்பதும், அவர்கள் செய்தது திருட்டுக் குற்றமேயாகும் என்பதும் அரசு தரப்பில் மேற்கண்டவாறு தெளிவாக நிரூபிக்கப்பட்டது. விமானத்தைத் திருடிய குற்றத்திற்காக அவர்கள் இருவரும் தண்டிக்கப்பட்டனர்.

வழக்கில் விளைந்த கொள்கை:

இவ்வழக்கில் தற்காலிகமாக ஒரு பொருளை ஒருவரது 'சட்ட உடமையிலிருந்து தவறான இலாபத்திற்காக எடுத்து வைத்திருந்தாலே, அதுவே திருட்டுக்குப் போதும். அதன் மூலம் முழுமையான இலாபம் அடைந்திருக்க வேண்டிய அவசியமில்லை எனக் கருத்து கூறப்பட்டது.

(ii) அச்சுறுத்திப் பறித்தல் [Extortion]

(பிரிவுகள் 383 முதல் 389 முடிய)

3. What is Extortion? Distinguish Extortion from theft. (அச்சுறுத்திப் பறித்தல் என்றால் என்ன? அச்சுறுத்திப் பறித்தலையும் திருட்டையும் வேறுபடுத்துக.)

(அல்லது)

Extortion - Write short notes. (அச்சுறுத்திப் பறித்தல் - சிறு குறிப்பு வரைக.)

அச்சுறுத்திப் பறித்தல் - பிரிவு 383 கூறும் வரையறை:

ஒருவரை, அவருக்கோ அல்லது அவரைச் சேர்ந்த மற்றொருவருக்கோ தீங்கு விளைவிக்கப் போவதாக அச்சுறுத்தி, அந்த அச்சத்தின் விளைவாக ஒரு பொருளையோ அல்லது மதிப்புள்ள பத்திரத்தையோ (valuable security) அல்லது மதிப்புள்ள பத்திரமாக மாற்றத்தக்க ஒன்றையோ அவர் அளிக்கும்படி நேர்மையற்ற முறையில் தூண்டுதல் 'அச்சுறுத்திப் பறித்தல்' என்ற குற்றமாகும்.

அச்சுறுத்திப் பறித்தல் குற்றத்தின் உட்கூறுகள் (Ingredients):

1. ஒருவரை அவருக்கோ அல்லது அவர் சார்ந்த மற்றவருக்கோ தீங்கு விளைவிக்கப் போவதாக அச்சுறுத்தல்.

2. அவ்விதம் அச்சம் ஊட்டப்பட்டவர் ஒரு பொருளையோ, மதிப்புள்ள பத்திரத்தையோ அல்லது மதிப்புள்ள பத்திரமாக மாற்றத்தக்க ஒன்றையோ அளிக்குமாறு நேர்மையற்ற முறையில் தூண்டுதல்.

பிரிவு 383-ன் கீழான எடுத்துக்காட்டுகள்:

(a) பணம் கொடுக்காவிட்டால், A-யைப் பற்றி அவதூறு வெளியிடப் போவதாக Z அச்சுறுத்துகிறார். இங்கு Z அவ்வாறு அச்சுறுத்துவதன் மூலம் பணத்தை கொடுக்க A-வைத் தூண்டுவதால் அச்சுறுத்திப் பறித்தலை Z செய்தவராகிறார்.

(b) ஒரு தொகையை A-க்கு Z கொடுக்கக் கட்டுப்படுத்தும் ஒரு கடனுறுதிச் சீட்டில் கையொப்பம் போடாவிட்டால் Z -ன் குழந்தையை அடைத்து வைப்பதாக A, Z-அய் அச்சுறுத்துகிறார். இதனால் Z அதில் கையொப்பம் இடுகிறார். அச்சுறுத்திப் பறித்தலை A செய்தவராகிறார்.

(c) A-க்கு ஒரு குறிப்பிட்ட விளைச்சலைக் கொடுக்க அதற்காக Z-அய் ஒரு அபராதத்திற்கு கட்டுப்படுத்தும் ஒரு பத்திரத்தில் Z கையொப்பமிட்டுக் கொடுக்காவிட்டால், Z-ன் வயலைத் தம் அடியாட்களை விட்டு உழுது விடுவதாக A அச்சுறுத்துகிறார். மற்றும் அதன் மூலம் அப்பத்திரத்தில் கையொப்பமிட்டுக் கொடுக்குமாறு Z-அய்த் தூண்டுகிறார். இங்கு அச்சுறுத்திப் பறித்தலை A செய்தவராகிறார்.

(d) கொடுங்காயம் ஏற்படுமென Z-அய் அச்சம் கொள்ளச் செய்து ஒரு வெற்றுக் காகிதத்தில் கையொப்பமிட்டு, அல்லது தம்முடைய முத்திரையை இட்டு A-விடம் கொடுக்குமாறு நேர்மையற்ற முறையில் Z-அய் A தூண்டுகிறார். அந்தக் காகிதத்தில் Z கையொப்பமிட்டு A-விடம் கொடுக்கிறார். இங்கு அவ்வாறு கையொப்பமிடப் பெற்ற அந்தக் காகிதம் ஒரு மதிப்புள்ள பத்திரமாக பின்னர் மாற்றப்படக் கூடுமாகையால் A அச்சுறுத்திப் பறித்தலை செய்தவராகிறார்.

அச்சுறுத்திப் பறித்தலுக்குண்டான தண்டனை - பிரிவு 384:

அச்சுறுத்திப் பறித்தல் குற்றத்தை செய்யும் எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

முக்கிய வழக்குகள்:

Purshottam Jethanand v. State of Kutch[1] - இவ்வழக்கில், பாஸ்போர்ட்களை சோதனை செய்யும் பொறுப்பு, காவல்துறை அதிகாரி ஒருவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. அவர், ஒரு நபரின் பாஸ்போர்ட்டை தம் வசம் வைத்துக் கொண்டு அதை திருப்பிக் கொடுக்க ரூ.800/- கேட்டார். அதன்படி அந்நபர் ரூ.800/- கொடுக்கவே, பாஸ்போர்ட்டை திருப்பித்

1. A.I.R. 1954 S.C. 700 : 1954 Cri. L.J. 1751

தந்துவிட்டார். இங்கு அச்சுறுத்திப் பறித்த குற்றத்திற்காக அக்காவல்துறை அதிகாரி பிரிவு 384-ன் கீழ் தண்டிக்கப்பட்டார். ஆனால், அந்நபரை அச்சுறுத்துவதன் மூலம், தாம் எதையும் பெறவில்லை; எனவே தனது செயல் அச்சுறுத்திப் பறித்ததாகாது என்று கூறி அக்காவல் துறை அதிகாரி உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தார். ஆனால் உச்ச நீதிமன்றம் இதை ஏற்றுக் கொள்ளாமல் பின்வருமாறு தீர்ப்பளித்தது.

அதன்படி, பாஸ்போர்ட்டை சோதனை செய்யும்பொழுது எங்கே தனது பாஸ்போர்ட் சந்தேகத்தின் அடிப்படையில் பறிக்கப்பட்டு, தன் மீது குற்ற வழக்கிடப்பட்டு விடுமோ என்ற அச்சுறுத்தல் பாஸ்போர்ட் சோதனைக்குள்ளான அனைவரின் மனதிலும் உட்கிடையாக அக்காவலரால் ஏற்படுத்தப் பட்டுள்ளதற்கு சாட்சியங்கள் இருந்தன. எனவே, உண்மையான பாஸ்போர்ட்டாக இருப்பினும், முறையற்ற விதத்தில் அது பறிக்கப்பட்டு விடுமோ எனும் அச்சம், பிரிவு 383-ல் கூறப்பட்டுள்ளவாறு தீங்கிழைக்கப் படும் என்ற அச்சத்திற்கு (fear of injury) ஒப்பானதாகும் என்று கூறி, உச்ச நீதிமன்றம் பிரிவு 384-ன் கீழ் அக்காவலதிகாரிக்கு விதிக்கப்பட்ட தண்டனையை ஊர்ஜிதம் செய்தது.

Vishnu Shiv Ram Bhoir v. State of Maharashtra[1] என்ற வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள் பத்து பேர், யாகூப் என்பவரையும், அவரது ஆட்களையும் சுற்றி வளைத்துக் கொண்டு, அவர்கள் உயிருடன் செல்ல வேண்டுமென்றால் அதற்கு விலையாக ரூ.300/- கொடுக்க வேண்டுமென அச்சுறுத்தினர். எனவே வேறு வழியில்லாது யாகூப் ரூ.300/- கொடுத்தார். மேற்படி குற்றஞ் சாட்டப்பட்டவர்களுக்கு பிரிவு 384-ன் கீழ் அச்சுறுத்திப் பறித்தல் குற்றத்திற்காக கடுஞ் சிறைத் தண்டனையும் ஆயிரம் ரூபாய் அபராதமும் விதிக்கப்பட்டது.

திருட்டு, அச்சுறுத்திப் பறித்தல் - வேறுபாடு:

1. திருட்டில் குற்றவாளி, ஒருவரின் உடைமையிலிருந்து ஒரு பொருளை அவரது சம்மதம் இல்லாமல் எடுத்துக் கொள்கிறான். அச்சுறுத்திப் பறித்தலில் நேர்மையற்ற முறையில் சம்மதம் பெறப்படுகிறது.

2. திருட்டு, அசையும் பொருளை மட்டும் சார்ந்தது; அச்சுறுத்திப் பறித்தல், அசையாப் பொருளை சார்ந்ததாகவும் அமையலாம்.

3. திருட்டில், வன்முறைக்கு இடமில்லை; அச்சுறுத்திப் பறித்தலில் தீங்கு விளையும் என்ற அச்சத்தின் வாயிலாக செயல் நடைபெறுகிறது.

4. திருட்டில், குற்றம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நடைபெறுகிறது; அச்சுறுத்திப் பறித்தலில் குற்றம் நேரடியாக நடைபெறுகிறது.

---

1. A.I.R. 1979 S.C. 1943

(iii) கொள்ளை மற்றும் கூட்டுக் கொள்ளை [Robbery and Decoity]

(பிரிவுகள் 390 முதல் 402 முடிய)

4. What is Robbery? Discuss. (கொள்ளை என்றால் என்ன? விவாதிக்க.)

(அல்லது)

Explain the statement that "in all robbery there is theft or extortion". ("எல்லாவிதமான கொள்ளையிலும் திருட்டோ அல்லது அச்சுறுத்திப் பறித்தலோ அடங்கியுள்ளது" என்ற கூற்றை விளக்கவும்.)

கொள்ளை - பிரிவு 390 கூறும் வரையறை:

பிரிவு 390 : எல்லாவிதமான கொள்ளையிலும் திருட்டோ அல்லது அச்சுறுத்திப் பறித்தலோ அடங்கியுள்ளது.

திருட்டானது எப்போது கொள்ளையாகும்?: திருடுவதற்கு அல்லது திருடும் பொழுது அல்லது திருட்டினால் பெற்ற பொருளை எடுத்துச் செல்வதில், அல்லது எடுத்துச் செல்ல முயல்வதில் குற்றவாளி அது நிறைவேறுவதற்காக, எவருக்கேனும் மரணம் அல்லது காயம் அல்லது முறையின்றித் தடுத்தல் அல்லது உடனடி மரணம், உடனடி காயம் அல்லது உடனடி முறையற்ற தடுத்தல் ஏற்படும் என்ற அச்சத்தை தன்னிச்சையாக விளைவித்தால் அல்லது விளைவிக்க முயன்றால், திருட்டானது கொள்ளை ஆகும்.

அச்சுறுத்திப் பறித்தலானது எப்போது கொள்ளையாகும்: குற்றவாளி அச்சுறுத்திப் பறிக்கும் சமயத்தில் அச்சுறுத்தப்பட்ட நபருடன் இருந்தால், மற்றும் அவரை, அவருக்கு அல்லது வேறு ஒருவருக்கு மரணம், காயம் அல்லது முறையற்ற தடுத்தல் உடனடியாக ஏற்படுமென்று அச்சம் கொள்ளச் செய்து அச்சுறுத்திப் பறித்தால், மற்றும் அவ்வாறு அச்சம் கொள்ளச் செய்து, அவ்வாறு அச்சங்கொள்ளச் செய்யப்பட்டவரை அச்சுறுத்திப் பறிக்கும் பொருளை அந்த இடத்திலேயே அப்பொழுதே கொடுத்து விடுமாறு தூண்டினால், அச்சுறுத்திப் பறித்தலானது கொள்ளை ஆகும்.

விளக்கம் : மரணம், காயம், முறையற்ற தடுத்தல் உடனடியாக ஏற்படும் என்கிற அச்சங் கொள்ளச் செய்வதற்கு போதுமான அளவு அண்மையில் மற்றொருவர் இருந்தால், குற்றவாளி உடனிருக்கிறார் என்று கூறப்படும்.

எடுத்துக்காட்டுகள்:

(a) Z-அய்க் கீழே தள்ளிப் பிடித்து Z-ன் பணத்தையும் நகைகளையும் Z-ன் இசைவின்றி Z-ன் உடைமையிலிருந்து A மோசடியாக எடுத்துக் கொள்கிறார். இங்கு A திருட்டைச் செய்தவராகிறார். மற்றும் அந்தத்

திருட்டை புரியும் பொருட்டு தன்னிச்சையாக Z-க்கு முறையற்ற தடுத்தலை செய்திருக்கிறார் எனவே A கொள்ளையடித்தவர் ஆகிறார்.

(b) Z-அய் A நெடுஞ்சாலையில் சந்திக்கிறார். அவர் ஒரு கைத் துப்பாக்கியைக் காட்டி Z-ன் பணப்பையைக் கேட்கிறார். இதனால், Z தம் பணப்பையை கொடுத்து விடுகிறார். இங்கு Z-க்கு உடனடி காயம் ஏற்படுமென்று, அவரை அச்சம் கொள்ளச் செய்து, மற்றும் அவரோடு உடன் இருந்து கொண்டு பணப்பையை A அச்சுறுத்திப் பறித்திருக்கிறார். ஆகையால் A கொள்ளையடித்தவர் ஆகிறார்.

(c) A, Z-ன் குழந்தையை தூக்கிக் கொண்டு, பணப்பையை கொடுக்காவிட்டால் குழந்தையை பாறையிலிருந்து வீசி எறிந்து விடுவதாக Z-அய் அச்சுறுத்துகிறார். குழந்தைக்கு உடனடி காயம் விளையுமென்ற அச்சத்தை உண்டாக்கியதால் Z பணப்பையை A-யிடம் கொடுக்கிறார். இவ்வாறு நிகழ்ந்த அச்சுறுத்திப் பறித்தல், கொள்ளையாகிறது.

(d) "உம்முடைய குழந்தை என்னுடைய கூட்டத்தாருடன் இருக்கிறது. நீர் எங்களுக்கு பத்தாயிரம் ரூபாய் அனுப்பாவிட்டால், அதைக் கொன்று விடுவோம்" என்று சொல்லி Z-யிடமிருந்து A பொருளைப் பெறுகிறார். இது அச்சுறுத்திப் பறித்தலாகும் மற்றும் அவ்வாறே தண்டிக்கக் கூடியதாகும். ஆனால் தம்முடைய குழந்தைக்கு உடனடி மரணம் விளையுமென்று Z பயங்கொள்ளச் செய்யப்படாவிட்டால், அது கொள்ளையடித்தலாகாது.

கொள்ளைக் குற்றத்திற்கு தண்டனை - பிரிவு 392:

கொள்ளையடிக்கும் எவரொருவருக்கும் பத்தாண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும். அந்தக் கொள்ளை நெடுஞ்சாலையில், சூரியனின் மறைவிற்கும் உதயத்திற்குமிடையே செய்யப்படுமாயின், பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

முக்கிய வழக்குகள்:

Harindar Singh v. State of Punjab[1] - இவ்வழக்கில், போக்குவரத்துக் கழகத்தில் பணிபுரியும் துப்பாக்கி ஏந்திய பாதுகாப்பு பணியாளர் ஒருவர், அதே இடத்தில் பணிபுரியும் காசாளர் (Cashier) ஒருவரை தாக்கி விட்டு, அங்கிருந்த 32,936/- ரூபாயை எடுத்துக்கொண்டு, அவரை அவர் இருந்த அறையிலேயே பூட்டி விட்டு சென்றுவிட்டார். பின்னர் இரண்டரை மாதங்கள் கழித்து பிடிபட்டார். அக்காவல்காரர் கொடுங்காயம் விளைவிக்க முயற்சித்து அதன் மூலம் அச்சுறுத்தி ரூபாயை பறித்தது, கொள்ளைக் குற்றமாகும் என்று கூறி, அவரை பிரிவுகள் 290 மற்றும் 397[2]-ன் கீழ் நீதிமன்றம் தண்டித்தது.

1. A.I.R. 1993 S.C. 91

2. மரணம் அல்லது கொடுங்காயம் விளைவித்ததற்கான முயற்சியுடன் கொள்ளை அல்லது கூட்டுக் கொள்ளை - பிரிவு 397.

Mohindar Singh v. State of Haryana[1] -இவ்வழக்கில் இருவர் ஒரு காரை வாடகைக்கு அமர்த்திக் கொண்டு அதில் ஏறினர். வாடகை முன்பணமாக நானூறு ரூபாயை அதன் ஓட்டுநரிடம் கொடுத்தனர். காரில் சிறிது தூரம் சென்றவுடன், அதில் ஒருவன் துப்பாக்கியை அந்த ஓட்டுநரின் கழுத்தில் வைத்து அழுத்தி, தாங்கள் கொடுத்த நானூறு ரூபாயை திருப்பிக் கேட்டான். இதனால் அச்சமடைந்த அந்த ஓட்டுநர் அவர்கள் கேட்டபடி நானூறு ரூபாயை திருப்பிக் கொடுத்து விட்டார். அப்பணத்தைப் பெற்றுக் கொண்டு அவ்விருவரும் அந்த ஓட்டுநரை காரை விட்டு வெளியே தள்ளிவிட்டு, காரை ஓட்டிச் சென்று விட்டனர். இது குறித்து ஓட்டுநர் காவல் நிலையத்தில் புகார் செய்தார். அன்று மாலையிலேயே அவ்விருவரும் கைது செய்யப்பட்டனர். நீதிமன்றத்தில் பிரிவு 390-ன் கீழான கொள்ளைக் குற்றத்திற்காக அவ்விருவரும் தண்டிக்கப்பட்டனர்.

முடிவுரை:

கொள்ளையடிக்க முயற்சித்தலை ஏழாண்டுகள் வரையிலான கடுஞ் சிறைத் தண்டனை விதித்து பிரிவு 393 தண்டிக்கிறது. கொள்ளையடிக்கும் பொழுது தன்னிச்சையாக காயம் விளைவித்தால், அதற்கு பத்தாண்டுகள் வரையிலான கடுஞ் சிறைத் தண்டனை விதித்து, பிரிவு 394 தண்டிக்கிறது. மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிப்பதற்கான முயற்சியுடன் கொள்ளை அல்லது கூட்டுக் கொள்ளையடித்தலை, ஏழாண்டுகளுக்கு மேலான சிறைத் தண்டனை விதித்து பிரிவு 397 தண்டிக்கிறது. அபாயகரமான ஆயுதத்துடன் கொள்ளை அல்லது கூட்டுக் கொள்ளையடிக்க முயற்சித்தலை, ஏழாண்டுகளுக்கு மேலான சிறைத் தண்டனை விதித்து பிரிவு 398 தண்டிக்கிறது. இவையெல்லாம் கொள்ளைக் குற்றத்தின் மிகு தீங்கு நிலைகளாக (aggravated forms of robbery) உள்ளன.

5. Distinguish between Extortion and Robbery.

வேறுபடுத்திக் காட்டுக அச்சுறுத்திப் பறித்தல் மற்றும் கொள்ளை.

1. அச்சுறுத்திப் பறித்தலில் சம்மதத்தை தவறான முறையில் பெறுவதன் (wrongful obtaining of consent) மூலம் குற்றம் புரியப்படுகிறது. கொள்ளை என்பது திருட்டு மற்றும் அச்சுறுத்திப் பறித்தலின் மிகுதீங்கு நிலையாகும். அதில் பொருளானது சம்மதம் இல்லாமலேயே (without consent) எடுத்துக் கொண்டு செல்லப்படுகின்றது.

2. அச்சுறுத்திப் பறித்தலில் ஒருவருக்கோ அல்லது அவரைச் சார்ந்த மற்றொருவருக்கோ காயம் விளைவிப்பேன் என அச்சுறுத்தி அதன் மூலம் பொருள்களைத் தருமாறு தூண்டப்படுகிறது. கொள்ளையில் வன்முறை

1. 1996 (4) Crimes 11 (S.C.)

(அல்லது தாக்குதல்) (force) என்பது ஒரு முக்கியமான காரணியாக இருந்தாலும், அதனைப் பயன்படுத்தாமலும் கொள்ளை நடக்கலாம்.

3. அச்சுறுத்திப் பறித்தலில் பயம் (fear) உள்ளது. அச்சுறுத்திப் பறித்தல் மூலமான கொள்ளையிலும் பயம் உள்ளது. ஆனால் திருட்டு மூலமான கொள்ளையில் பயம் இருப்பதில்லை.

4. அச்சுறுத்திப் பறித்தலில் பாதிக்கப்பட்டவரே தனது பொருளைக் கொடுக்கிறார். திருட்டு மூலமான கொள்ளையில் பாதிக்கப்பட்டவர் பொருளைக் கொடுப்பதில்லை.

6. Decoity - Write short notes. (கூட்டுக் கொள்ளை - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

When theft amounts to decoity? (திருட்டுக் குற்றம் எப்பொழுது கூட்டுக் கொள்ளையாகிறது?)

கூட்டுக் கொள்ளை - பிரிவு 391 கூறும் வரையறை:

பிரிவு 391 : அய்ந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்கள் ஒரு கொள்ளையை கூட்டாக செய்யும் பொழுது அல்லது செய்ய முயற்சிக்கும் பொழுது, அது கூட்டுக் கொள்ளை ஆகும். அத்தகு செய்கைக்கு அல்லது முயற்சிக்கு உதவுகிறவர்களும் அய்ந்து அல்லது அதற்கு மேற்பட்டிருப்பின் அவர்களும் கூட்டுக் கொள்ளை செய்ததாக சொல்லப்படுவர்.

கூட்டுக் கொள்ளை - பிரிவு 395 கூறும் தண்டனை:

பிரிவு 395 : கூட்டுக் கொள்ளை புரியும் எவரொருவருக்கும் ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் வரையிலான கடுங்காவல் சிறைத் தண்டனையுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

கூட்டுக் கொள்ளை குற்றத்தின் மிகுதீங்கு நிலை (Aggravated form):

பிரிவு 396 : கூட்டு சேர்ந்து கூட்டுக் கொள்ளையடிக்கும் அய்ந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களில் எவர் ஒருவர் அவ்வாறு கூட்டுக் கொள்ளையடிக்கையில் கொலை செய்தாலும், அவர்களில் ஒவ்வொருவருக்கும் மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படலாம்.

முக்கிய வழக்கு:

Debi[1] என்ற வழக்கில் கூட்டுக் கொள்ளையடித்ததாக அய்வர் குற்றம் சாட்டப்பட்டனர். இதில் இருவர் நிரபராதிகள் என்று விடுதலை செய்யப்

1. (1952) Raj. 177

பட்டனர். ஆனால் மீதமுள்ள மூவருக்கு கூட்டுக் கொள்ளைக்குண்டான தண்டனையை கொடுக்க முடியாது. ஏனெனில் கூட்டுக் கொள்ளையை அய்வருக்கு குறைந்து நிகழ்த்த முடியாது என முடிவு கட்டப்பட்டது.

திருட்டுக் குற்றம் எப்பொழுது கூட்டுக் கொள்ளையாகிறது?

திருட்டுக் குற்றத்துடன் அல்லது அச்சுறுத்திப் பறித்தல் குற்றத்துடன் உடனடி மரணம், காயம் அல்லது முறையின்றி தடுத்தல் அல்லது அதற்கான உடனடி அச்சம் ஏற்படுத்தினால், அது கொள்ளைக் குற்றமாகும் (Robbery). அய்வருக்கும் குறையாத நபர்கள் அக்குற்றத்தில் ஈடுபட்டிருந்தால், அது கூட்டுக் கொள்ளைக் குற்றமாகும் (Decoity). கொள்ளைக் குற்றம், கூட்டுக் கொள்ளையெனக் கொள்வதற்கு அய்வர் இருந்தால் போதுமானது.

(iv) குற்றமுறு சொத்துக் கையாடல்
[Criminal Misappropriation of Property]

(பிரிவுகள் 403 மற்றும் 404)

7. Explain the ingredients of the offence of Criminal misappropriation and distinguish it from criminal breach of trust. (கையாடல் குற்றத்தின் முக்கிய கூறுகளை விளக்கி அதனை நம்பிக்கை மோசடிக் குற்றத்திலி ருந்து வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

Define "Criminal misappropriation". Point out the difference between English law and Indian law. Distinguish it with 'criminal breach of trust. (குற்றமுறு கையாடலை வரையறை செய்க. இந்திய சட்டத்திற்கும் இங்கிலாந்து சட்டத்திற்குமுள்ள வேறுபாட்டைக் குறிப்பிடுக. இதனை நம்பிக்கை மோசடிக் குற்றத்துடன் வேறுபடுத்திக் காட்டுக.)

(அல்லது)

Criminal misappropriation - Write short notes. (குற்றமுறு கையாடல் - சிறு குறிப்பு வரைக.)

குற்றமுறு கையாடல் - பிரிவு 403 கூறும் வரையறை:

பிரிவு 403 : ஓர் அசையும் பொருளை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்வதும் அல்லது தமது சொந்த உபயோகத்திற்காக மாற்றிக் கொள்வதும் குற்றமுறு சொத்து கையாடல் ஆகும். இக்குற்றத்திற்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 403-ன் முக்கிய ஆக்கக்கூறுகள் (Ingredients):

1. நேர்மையற்ற முறையில் பிறருடைய பொருளை (சொத்தை) தன்னுடையதாக்கிக் கொள்ள வேண்டும்.

2. அப்பொருள், அசையும் பொருளாக (Movable Property) இருக்க வேண்டும்.

எடுத்துக்காட்டுகள்:

(a) Z-ற்கு சொந்தமான பொருளை தனது என்று நம்பி நல்லெண்ணத்துடன் அதை A எடுத்துக் கொள்கிறார். இங்கு A திருட்டைச் செய்யவில்லை. ஆனால் A தன் தவற்றை உணர்ந்து கொண்ட பின்னும் அப்பொருளை தன் சொந்த உபயோகத்திற்கு உபயோகப்படுத்தி வந்தால், அவர் இப்பிரிவின் கீழ் குற்றமிழைத்தவர் ஆகிறார்.

(b) Z-ம் A-ம் நண்பர்கள். ஒருமுறை Z இல்லாதபோது A அவருடைய நூலகத்தினுள் சென்று Z-ன் வெளிப்படையான சம்மதம் இல்லாமல் ஒரு புத்தகத்தை படித்துவிட்டு திருப்பித்தரும் எண்ணத்துடன் எடுத்துச் செல்கிறார். இங்கு A, Z-ன் மறைமுகமான சம்மதம் தமக்கிருக்கலாம் எனக் கருதுவது சாத்தியமான ஒன்றாகும். அது A-யின் எண்ணமாகயிருப்பின் A திருட்டுக் குற்றம் புரியவில்லை. ஆனால் அப்புத்தகத்தை A விற்றுவிட்டால் தனது சொந்த நலனுக்காக அவர் குற்றமுறு கையாடல் செய்த குற்றத்திற்கு உள்ளாவார்.

(c) A-யும் B-யும் ஒரு குதிரைக்கு கூட்டு உரிமையாளர்கள். A அதை உபயோகிக்கும் கருத்துக் கொண்டு B-யிடமிருந்து குதிரையை எடுத்துச் செல்கிறார். இங்கு குதிரையை உபயோகிக்கும் உரிமை A-க்கு உண்டு. அவர் அதை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்யவில்லை. ஆனால் A அக்குதிரையை விற்று, அதனால் வந்த தொகை (proceeds) முழுவதையும் தமது சொந்த உபயோகத்திற்காக உரியதாக்கிக் கொண்டால், அவர் இப்பிரிவின் கீழ் குற்றம் செய்தவராகிறார்.

பிரிவு 403-ன் கீழான இரு விளக்கங்கள் (Exceptions):

விளக்கம் 1 : கொஞ்ச காலத்திற்கு மட்டுமே நேர்மையற்ற முறையில் செய்யும் கையாடல், இப்பிரிவின் கீழ் கையாடல் ஆகிறது.

எடுத்துக்காட்டு: Z-க்கு சொந்தமான அரசு கடனுறுதிச் சீட்டு ஒன்றை A கண்டெடுக்கிறார். சீட்டு Z-க்கு சொந்தமானது என்று A அறிந்தே, பின்னொரு காலத்தில் Z-யிடம் மீண்டும் ஒப்படைக்கும் கருத்துடன் ஒரு கடனுக்கு ஜாமீனாக அதை ஒரு வங்கியரிடம் அடகு வைக்கிறார். இங்கு A மேற்கண்ட குற்றமிழைத்தவராகிறார்.

விளக்கம் 2 : யார் வசமும் இல்லாத பொருளைக் கண்டு, அதைப் பாதுகாக்க அல்லது சொந்தக்காரரிடம் அதை திரும்ப ஒப்படைக்கும் பொருட்டு அந்தப் பொருளை எடுக்கிற ஒருவர், அதை நேர்மையற்ற முறையில் எடுக்கவில்லை. ஆகவே, அவர் இக்குற்றம் புரிந்தவராகார். ஆனால் அதன் சொந்தக்காரரை அறிந்திருக்கிறபோது அல்லது அறிந்து கொள்ள வழியிருக்கிற போது அல்லது சொந்தக்காரரை கண்டுபிடித்து

அறிக்கையனுப்ப நியாயமான வழிகளைப் பயன்படுத்தி மற்றும் அந்தச் சொந்தக்காரர் அதற்கு உரிமை கோர அவரை இயல்விப்பதற்கு நியாயமான ஒரு கால அளவு வரை, அந்தப் பொருளை வைத்திருப்பதற்கு முன்பு, தம் சொந்த உபயோகத்திற்காக அதை உரியதாக்கிக் கொண்டால், அவர் குற்றமுறு கையாடல் குற்றம் செய்தவராகிறார்.

எடுத்துக்காட்டுகள்: (1) சாலையில் A ஒரு ரூபாயை அது யாருக்குச் சொந்தமானது என அறியாத நிலையில், அதை எடுத்துக் கொள்கிறார். மேற்கண்ட விளக்கத்தின்படி அவர் குற்றம் புரியவில்லை.

(2) வங்கிப் பணச் சீட்டு (bank note) அடங்கிய கடிதமொன்றை A சாலையில் கண்டெடுக்கிறார். அந்தக் கடிதத்தின் குறிப்புக்களிலிருந்தும் உள் அடங்கியுள்ள விஷயத்திலிருந்தும் அந்தப் பணச் சீட்டு யாருக்குச் சொந்தம் என்று அவர் அறிந்து கொள்கிறார். அந்தப் பணச் சீட்டை தமக்கு உரிமையாக்கிக் கொள்கிறார். அவர் மேற்படி விளக்கத்தின்படி குற்றமுறு கையாடல் குற்றம் செய்தவராகிறார்.

(3) விலையுயர்ந்த மோதிரமொன்றை அது யாருக்குச் சொந்தமானது என்று தெரியாமல் A கண்டெடுக்கிறார். சொந்தக்காரரைக் கண்டுபிடிக்க முயற்சிக்காமல், A அதை உடனே விற்றுவிடுகிறார். A மேற்படி பிரிவின்படி குற்றம் செய்தவராகிறார்.

முக்கியமான வழக்குகள்:

Abdool[1] என்ற வழக்கில் கையாடல் செய்த பொருளை உண்மையிலேயே தனதாக்கம் செய்திருக்க வேண்டும். குற்றவாளி கண்டெடுத்த பொருளைத் தன் உடைமையில் வைத்திருந்தது மட்டும் இப்பிரிவின் கீழ்க் குற்றமாகாது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

R. v. Ramakrishna[2] என்ற வழக்கில் வருமான வரி கணக்காளர் ஒருவர், ஒரு நபரிடம் இருந்து வசூல் செய்த வரித் தொகையை வரவு வைக்காமலும், அரசுக் கருவூலத்தில் செலுத்தாமலும், தன் சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்திக் கொண்டது, கையாடல் குற்றமாகும் எனத் தீர்ப்பானது.

Albano Dias v. State[3] எனும் வழக்கில் காசாளர் (Cashier) ஒருவர் பெயர்ப் பட்டியல் உள்ள நபர்களுக்கு பணத்தை கொடுக்காததோடு மட்டுமில்லாமல், அவ்வாறு பணம் கொடுக்கப்பட்டுவிட்டதாக அதில் பொய்யாக எழுதியும் விட்டார். இது கையாடல் செய்ய வேண்டுமென்ற அவரது நேர்மையற்ற கருத்தையும் திட்டமிட்ட செயல்பாட்டையும் தெளிவாகக் காண்பிக்கிறது; என்று கூறி, அவரை குற்றமுறு கையாடல் குற்றத்திற்காக நீதிமன்றம் தண்டித்தது.

1. (1868) 10 W.R. (Cr.) 23A
2. I.L.R. 12 Mad. 49
3. 1981 Cri. L.J. 677

Phuman v. R[1] குற்றமுறு கையாடல் குற்றமானது, மற்றவரின் பொருளை நேர்மையற்ற முறையில் ஒருவன் எப்பொழுது தனது சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்த ஆரம்பிக்கிறானோ, அப்பொழுதுதான் ஆரம்பிக்கிறதே தவிர, வெறுமனே பொருளை எடுத்து வைத்துக் கொள்வது மட்டும் குற்றமுறு கையாடல் குற்றம் ஆவதில்லை. மேற்படி வழக்கில், ஜன நெருக்கடி மிகுந்த கோவில் வாசற்படியில் கண்டெடுத்த பணப்பையைத் தன் சட்டைப்பையில் போட்டுக் கொண்டதும், பின்னர் உடனே கைது செய்யப்பட்டதும் பிரிவு 403-ன் கீழ் குற்றமுறு கையாடல் ஆகாது. ஏனெனில், பணப்பையைக் கண்டெடுத்ததும், அதைத் தன் சட்டைப்பையில் போட்டதை மட்டிலும் வைத்து அதிலுள்ள பணத்தை தனதாக்கிக் கொள்ளும் கருத்துடன் அப்பணப்பையை எடுத்தவர், அவ்வாறு செய்தார் என்று அனுமானிக்க முடியாது என்று மேற்படி வழக்கில் கூறப்பட்டது.

R. v. Sita[2] என்ற வழக்கில் சீதா ஒரு மோதிரத்தை கண்டெடுத்தாள். அதை அடுத்த நாள் விற்றுவிட்டாள். விற்பனை 12.10.1882-ல் நடந்தது. குற்றமுறு கையாடலின் கீழ் 12.12.1892-ல் அவள் குற்றவாளி ஆகிறாள் எனத் தீர்ப்புக் கூறப்பட்டது. அவள், இத்தீர்ப்பினை எதிர்த்து பம்பாய் உயர் நீதிமன்றத்திற்கு மேல்முறையீடு செய்து கொண்டாள். 9.3.1893-ல் உயர்நீதிமன்றம் வழக்கினை மேல்விசாரணைக்கு எடுத்துக் கொண்டது. ஆனால் அந்தத் தேதி வரையிலுமே மோதிரத்தை கேட்டு யாருமே விண்ணப்பித்துக் கொள்ளாததால், அவள் குற்றமற்றவள் என்று விடுவிக்கப்பட்டாள். கீழமை நீதிமன்றம் விதித்த தண்டனை ரத்து செய்யப்பட்டது.

குற்றமுறு கையாடல் - இந்திய மற்றும் இங்கிலாந்து சட்ட வேறுபாடு:

இங்கிலாந்து சட்டப்படி, ஒரு பொருளை நேர்மையற்ற முறையில் அல்லாமல் தனது உடைமையில் எடுத்துக் கொண்டு (innocent taking), அதை பின்னர் தனது சொந்த உபயோகத்திற்காக மாற்றுவது ஒரு உரிமையியல் தீங்காகுமே (civil wrong) தவிர, குற்றமுறு கையாடல் குற்றமாகாது. ஆனால் இந்திய தண்டனைச் சட்டத்தின்படி, மேற்படி செயலும் குற்றமுறு கையாடல் குற்றமே ஆகும். இவ்வேறுபாட்டை நாம் முன்னர் கண்ட பிரிவு 403-ன் கீழான 2-வது விளக்கம் தெளிவுபடுத்துகிறது. சுருங்கக்கூறின், இங்கிலாந்து சட்டப்படி, குற்றமுறு கையாடல் குற்றத்திற்கு, ஒரு பொருளை எடுத்துக் கொள்ளும் பொழுதே, குற்றவாளியின் மனதில், நேர்மையற்ற கருத்து (dishonest intention) இருக்க வேண்டும்.

குற்றமுறு கையாடல் குற்றத்தின் மிகுதீங்கு நிலை:

பிரிவு 404-ன்படி, இறந்து போனவரிடம், அவரது இறப்பின் போது இருந்த பொருளை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்யும்

1. 8 Cri. L.J. 250 : (1907) P.R.No. 11 of 1908
2. 18 Bom. 212

எவரொருவருக்கும், மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும். மேலும் குற்றவாளி, அச்சமயத்தில் இறந்தவரிடம் ஓர் எழுத்தராகவோ அல்லது பணியாளராகவோ பணிபுரிந்து கொண்டிருந்திருப்பின், சிறைத் தண்டனை ஏழாண்டுகள் வரை நீடிக்கலாம்.

குற்றமுறு கையாடல் மற்றும் நம்பிக்கை மோசடி - வேறுபாடு:

வினா எண் (11)-ல் காண்க.

8. Distinguish between
Theft and Criminal Misappropriation.

வேறுபடுத்துக
திருட்டு, குற்றமுறு கையாடல்.

1. திருட்டில், பொருள் எடுத்துக் கொள்ளப்பட்ட உடனே திருட்டு ஆரம்பமாகிறது. ஆனால் கையாடலில் பொருள் எடுத்தல் ஆரம்பத்தில் சட்டப்படியானதாக இருக்கலாம். பிறகுதான் சட்ட முரணானதாக மாறும்.

2. திருட்டில், மற்றவர் பொருளின் உடைமையை நேர்மையற்று கொண்டிருத்தல். ஆனால் குற்றமுறு கையாடலில் மற்றவர் பொருளின் உடைமையை கொண்டிருந்தால் மட்டும் போதாது. அதை தன் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி இருக்க வேண்டும்.

3. திருட்டில், பொருளை கொண்டு போக நகர்த்தினாலே போதும். ஆனால் குற்றமுறு கையாடலில் நகர்த்தல் (moving) சட்டப்படியானதாக இருந்தாலும், பொருளில் கையாடல் ஏற்பட்டிருக்க வேண்டும்.

4. திருட்டில், உரிமையாளரின் அனுமதி இல்லாமல் பொருள் எடுத்துச் செல்லப்படுகிறது. ஆனால் குற்றமுறு கையாடலில் பொருளை உரிமையாளரின் அனுமதியுடன் எடுத்துச் சென்றிருந்தாலும், அதைத் தன் உபயோகத்திற்கு பயன்படுத்தினால் அக்குற்றம் பூர்த்தியாகிறது.

5. திருட்டில் நேர்மையற்ற கருத்து, பொருளை எடுத்தவுடன் ஏற்படும். ஆனால் குற்றமுறு கையாடலில் நேர்மையற்ற கருத்து, பொருள் கையாடும் பொழுது ஏற்படுகிறது.

(v) குற்றமுறு நம்பிக்கை மோசடி [Criminal Breach of Trust]

(பிரிவுகள் 405 முதல் 409 முடிய)

9. Criminal breach of trust - Write short notes. (குற்றமுறு நம்பிக்கை மோசடி - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Explain the offence of "Criminal breach of trust" with ingredients. ('நம்பிக்கை மோசடி' என்ற குற்றத்தினை ஆக்கக்கூறுகளுடன் விளக்குக.)

(அல்லது)

Explain Criminal breach of trust with the help of the explanations and illustrations. (நம்பிக்கை மோசடிக் குற்றத்தை விளக்கங்கள் மற்றும் எடுத்துக்காட்டுகளின் துணையோடு விளக்குக.)

நம்பிக்கை மோசடி - பொது விளக்கம்:

ஒருவர் தனது உடமையில் உள்ள பிறரது சொத்தை (பொருளை) நேர்மையின்றி, தனதாக்கிக் கொண்டால் அல்லது தனது நலனுக்குப் பயன்படுத்தினால் அது 'நம்பிக்கை மோசடி' (Breach of trust) எனப்படும்.

குற்றமுறு நம்பிக்கை மோசடி - பிரிவு 405-கூறும் வரையறை:

பிரிவு 405: எந்த முறையிலும் ஒரு சொத்து ஒப்படைக்கப்பட்டிருந்து, அல்லது சொத்தின் மீது ஆதிக்கம் பெற்றிருந்து, அந்தச் சொத்தை நேர்மையற்ற முறையில் கையாடல் செய்கிற, அல்லது அந்தச் சொத்தை தமது சொந்த உபயோகத்திற்காக மாற்றுகிற, அல்லது அந்த ஒப்படைக்கப்பட்ட பொறுப்பு இன்ன முறையில் நிர்வகிக்கப்பட வேண்டுமென்று வகை செய்யப்பட்ட சட்டத்தின் எந்தக் கட்டளையையும், அல்லது ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதை ஒட்டி வெளிப்படையாக அல்லது மறைமுகமாக அவர் செய்து கொண்டிருக்கிற சட்டப்படியான ஒப்பந்தத்தையும் மீறி நேர்மையற்ற முறையில் அந்தச் சொத்தை உபயோகிக்கிற அல்லது கையாளுகிற அல்லது மற்றொருவரை அவ்வாறு செய்ய, வேண்டுமென்றே அனுமதிக்கிற எவரொருவரும் 'குற்றமுறு நம்பிக்கை மோசடி' செய்தவராகிறார்.

பிரிவு 405-ன் கீழான விளக்கங்கள்:

விளக்கம் 1: 1952-ஆம் ஆண்டின் பணியாளர் வருங்கால சேம நிதி மற்றும் பல வகைப்பட்ட வகைமுறைகள் சட்டத்தின் 17-வது பிரிவின் கீழ் விலக்களிக்கப்பட்ட அல்லது அவ்வாறு விலக்களிக்கப்படாத நிறுவன மொன்றின் பணி அளிப்பவர் (employer) ஒருவரால், அவ்வப்போது அமலிலிருக்கிற ஒரு சட்டத்தினால் நிறுவப்பட்ட வருங்கால சேம நிதி (Provident Fund) அல்லது குடும்ப ஓய்வு ஊதிய நிதியில் (Family Pension Fund) வரவு வைப்பதற்காக பணியாளர் (employee) ஊதியத்திலிருந்து கழிக்கப்படும் பங்குத் தொகை (contribution) அவரிடமே ஒப்படைக்கப் பட்டதாக கருதப்படுதல் வேண்டும். மற்றும் சம்பந்தப்பட்ட சட்டத்தை மீறி மேற்படி நிதிக்கு அத்தகைய பங்குத் தொகையை செலுத்த அவர் தவறினால், மேற்சொன்னபடி சட்டத்தின் ஒரு கட்டளையை மீறி சம்பந்தப்பட்ட பங்குத் தொகையை அவர் நேர்மையற்ற முறையில் உபயோகித்ததாக கருதப்படுதல் வேண்டும்.

விளக்கம் 2 : 1948-ஆம் ஆண்டின் பணியாளர் அரசு ஈட்டுறுதிச் சட்டத்தின்படி (Employees' State Insurance Act, 1948) நிறுவப்பட்ட

பணியாளர் அரசு ஈட்டுறுதி நிறுவனம் வைத்திருக்கிற மற்றும் நிர்வகிக்கிற பணி அளிப்பவர் ஒருவரால், பணியாளர் அரசு ஈட்டுறுதி நிதியில் (Employees' State Insurance Fund) வரவு வைப்பதற்காக பணியாளருக்குக் கொடுக்க வேண்டிய ஊதியத்திலிருந்து கழிக்கப்படும் பங்குத் தொகையை அவர் மேற்படி சட்டத்தை மீறி மேற்படி பங்குத் தொகையை செலுத்தத் தவறினால், அவ்வாறு கழிக்கப்பட்ட அப்பங்குத் தொகை அவரிடம் ஒப்படைக்கப்பட்டதாக கருதப்படல் வேண்டும். மற்றும் மேற்படி நிதிக்கு மேற்படி பங்குத் தொகையை மேற்படி சட்டத்தின் ஒரு கட்டளையை மீறி நேர்மையற்ற முறையில் அவர் உபயோகித்ததாக கருதப்படுதல் வேண்டும்.

பிரிவு 405-ன் கீழான எடுத்துக்காட்டுகளில் சில:

1. இறந்தவரின் உயிலை நிறைவேற்றுபவராகிய A உயிலின்படி சொத்துக்களை பிரித்துக் கொடுக்க கட்டளையிடுகிற சட்டத்தை நேர்மைற்ற முறையில் மீறி அவற்றை தமது சொந்த உபயோகத்திற்கு உரியதாக்கிக் கொள்கிறார். A மேற்படி குற்றத்தைப் புரிந்தவராகிறார்.

2. A என்பவர் பொருள்கள் பாதுகாப்பு அறை ஒன்றின் காப்பாளர் ஆவார். Z என்பவர் வெளியூர் செல்லும்பொழுது, அந்த அறைக்கு நிர்ணயிக்கப்பட்ட தொகை ஒன்றினை செலுத்துவதின் பேரில், தனது மேசை, நாற்காலி போன்ற பொருட்களை திரும்பக் கொடுக்க வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் கீழ் அவற்றை பாதுகாப்பிற்காக A-யிடம் ஒப்படைக்கிறார். A அப்பொருட்களை நேர்மையற்ற முறையில் விற்றுவிடுகிறார். A குற்றமுறு நம்பிக்கை மோசடி செய்தவராகிறார்.

3. A என்ற வருவாய் அலுவலரிடம், பொதுப் பணம் ஒப்படைக்கப் பட்டிருக்கிறது. அவர் வைத்திருக்கிற அனைத்து பொதுப் பணத்தையும் ஒரு கருவூலத்தில் செலுத்த வேண்டும் என்று அவர் சட்டத்தினால் கட்டளையிடப்பட்டிருக்கிறார். அல்லது அரசுடன் வெளிப்படையான அல்லது உட்கிடையான ஓர் ஒப்பந்தத்தினால் கட்டுப்படுத்தப்படுகிறார். A நேர்மையற்ற முறையில் அப்பணத்தை தமக்கு உரியதாக்கிக் கொள்கிறார். A நம்பிக்கை மோசடி செய்தவராகிறார்.

குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றத்தின் முக்கிய ஆக்கக்கூறுகள் (Ingredients):

1. ஒரு சொத்தோ அல்லது சொத்தின் அதிகாரமோ ஒருவரிடம் நம்பி ஒப்படைக்கப்பட்டிருக்க வேண்டும்;

2. ஒப்படைவு பெற்றவர் (அ) அச்சொத்தை நேர்மையின்றிக் கையாடல் செய்யவோ அல்லது தன்னுடைய உபயோகத்திற்காக மாற்றம் செய்யவோ வேண்டும்.

(ஆ) அச்சொத்தை நேர்மையின்றி உபயோகப்படுத்தவோ அல்லது கையாளவோ அல்லது வேண்டுமென்றே பிறரை அவ்விதம் செய்யவோ அனுமதிக்க வேண்டும். அதாவது,-

(i) அது எந்த விதத்தில் செயல்படுத்தப்படல் வேண்டும் என்று பொறுப்புரிமை பற்றிக் கூறுகின்ற சட்டம் கட்டளையிடுவதை மீறியதாகவோ; அல்லது

(ii) அப்பொறுப்புரிமை, சம்மந்தப்பட்ட சட்டப்படியான ஒப்பந்தத்தை மீறியதாகவோ இருக்க வேண்டும்.

குற்றமுறு நம்பிக்கை மோசடி - பிரிவு 406 கூறும் தண்டனை:

பிரிவு 406: குற்றமுறு நம்பிக்கை மோசடி புரிபவருக்கு மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

முக்கிய வழக்குகள்:

Bhimla Charan Roy[1] வழக்கில் நகராட்சிக்குச் சொந்தமான நீர் வழங்குத் துறை ஆய்வாளரிடம், தண்ணீர் வழங்குவதை மேற்பார்வை செய்யும் பொறுப்பு ஒப்படைக்கப்பட்டிருந்தது. இதன் காரணமாக அவரிடம் நகராட்சிக்கு சொந்தமான தண்ணீரை பிரித்து வழங்கும் அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது எனக் கொள்ளலாம். அந்தத் தண்ணீரை அவர் நேர்மையின்றித் தன்னுடைய உபயோகத்திற்காகவோ அல்லது அதற்கென வரி செலுத்தாத அவருடைய வாடகைதாரர்களுக்கோ நகராட்சிக்குத் தெரியாமலோ அல்லது அனுமதியின்றியோ வழங்கினால் அது குற்றமுறு நம்பிக்கை மோசடியாகும் என்று மேற்படி வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

Keshab Chandra Boral v. Nithyanund Biswas[2] - ஒரு பொருள் ஒப்படைக்கப்படும் பொழுது எந்த நோக்கத்திற்காக ஒப்படைக்கப்பட்டதோ, அதற்காகவே அதை உபயோகப்படுத்த வேண்டும். அதை மீறி நேர்மையற்ற முறையில்அப்பொருளை உபயோகப்படுத்தினாலும் (dishonestly uses), அது குற்றமுறு நம்பிக்கை மோசடியேயாகும். மேற்படி வழக்கில் ஒரு நிறுவனம் தன்னிடம் உள்ள விற்பனைப் பொருட்களின் பட்டியலை (catalogue) அச்சடிக்கக் கொடுத்த அச்சுப் பாளக் கட்டைகள் (Blocks) சிலவற்றை, அச்சடிப்பவர் போட்டி நிறுவனத்தின் பட்டியலை அச்சடிக்கப் பயன்படுத்தியது குற்றமுறு நம்பிக்கை மோசடி எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Jage Ram[3] - குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றத்தில் முக்கிய அங்கம் வகிக்கும் கூறு, 'நம்பிக்கையுணர்வு நிலை' (Trust) ஆகும். இந்நிலை பொறுப்புரிமை ஒப்படைத்தவர் - பொறுப்புரிமை பெற்றவர், அடகு வைத்தவர் - அடகு பெற்றோர், கணவன் - மனைவி, பங்குதாரர்கள் (Partners) ஆகியோர்களிடையே உள்ளதாக சட்டம் கொள்கிறது. ஆனால் கடனீந்தவர், கடன் பெற்றவரிடையே மேற்படி நம்பிக்கையுணர்வு கிடையாது.

1. (1913) 35 All. 361
2. (1901) 6 C.W.N. 203
3. (1951) 4 Pun. 286

மேற்படி வழக்கில் A என்பவன் B-யினுடைய சைக்கிளை இரண்டு அல்லது மூன்று நாட்களில் திருப்பித் தருவதாக வாக்குறுதியளித்துவிட்டு இரவல் வாங்கினான். குற்றவாளி அவ்வாக்குறுதியை மீறி, அதை விற்றுப் பணத்தை தனதாக்கிக் கொண்டான். A-க்கும், B-க்கும் இடையே உள்ள தொடர்பு ஒப்படைப்பு அளித்தவர் - ஒப்படைவு பெற்றவர் (Bailor - Bailee) நிலையில் உள்ளது என்றும், B தன்னுடைய சைக்கிளைக் குறிப்பிட்ட காலத்திற்குள்ளாக பயன்படுத்திவிட்டு அதை தன்னிடம் ஒப்படைத்துவிட வேண்டும் என்ற ஒப்பந்தத்தின் பேரில் அதைக் கொடுத்தான் என்றும், அதை A நேர்மையின்றி விற்றதும், அப்பணத்தைத் தனதாக்கிக் கொண்டதும், இப்பிரிவின் கீழ் குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றமே என மேற்படி வழக்கில் தீர்ப்பளிக்கப்பட்டது.

Jaswantrai Manilal Akhaney v. State of Bombay[1] என்ற வழக்கில் பிறரது பொருளை நேர்மையற்ற முறையில் தனது நலனுக்காக அப்பொழுதைக்கு மட்டும் தற்காலிகமாக கையாடல் (உபயோகப் படுத்தினாலும்) செய்தாலே (temporary misappropriation) அது குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றத்தை உருவாக்க போதுமானதாகும் என்று உச்ச நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

Surendra Prasad Verma v. State of Bihar[2] என்ற வழக்கில் பிறரது பொருட்கள் அடங்கிய பாதுகாப்பு பெட்டகம் (Safe) ஒன்றின் சாவிகள் குற்றஞ் சாட்டப்பட்டவனிடம் இருந்தன. எனவே, அப்பெட்டகத்தை அவனைத் தவிர வேறு எவரும் திறக்கவியலாது. இந்நிலையில் அதிலுள்ள பொருட்கள் காணாமற் போயின. இதற்கு குற்றஞ் சாட்டப்பட்டவன்தான் பொறுப்பு என்று கூறி, அவனைக் குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றத்திற்காக நீதிமன்றம் தண்டித்தது.

Jaikrishnadas Mohandas Desai and another v. State of Bombay[3] - என்ற வழக்கில் துணிகளுக்கு சாயமேற்றிக் கொடுக்க அரசால் ஏலப்புள்ளி (Tender) கோரப்பட்டது. அப்பொழுது துணிகளுக்கு சாயமேற்றிக் கொடுக்கும் நிறுவனம் ஒன்றின் நிர்வாக இயக்குநரும், அதன் தொழில் நுட்ப இயக்குநரும் 2,51,050-3/4 அடி நீளமுள்ள துணியை சாயமேற்றிக் கொடுக்க குறைந்த பட்ச ஏலப்புள்ளியை முன் வைத்தனர். இதனால் மேற்படி நீளமுள்ள துணி, அரசால் அவர்களிடம் ஒப்படைக்கப் பட்டது. ஆனால் அவர்கள் அத்துணிக்கு சாயமேற்றிய பின்னர், 1,11,000 அடி நீளமுள்ள துணியை மட்டுமே அரசிடம் திரும்ப ஒப்படைத்தனர்; மீதித் துணியை ஒப்படைக்கவில்லை. காரணம் கேட்டதற்கு, அத்துணியை கறையான் தின்று விட்டதாக தெரிவித்தனர். ஆனால் அது பொய்யென்று கண்டுபிடிக்கப்பட்டது. இதனால் அவர்கள் இருவரும் குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றத்திற்காக தண்டிக்கப்பட்டனர்.

1. A.I.R. 1956 S.C. 575
2. A.I.R. 1973 S.C. 488; 1972 Cri. L.J. 1202
3. A.I.R. 1960 S.C. 889

இவ்வழக்கில், ஒரு நேர்மையற்ற கையாடல் அல்லது அதை சொந்த உபயோகத்திற்காக மாற்றுதல் என்பது சாதாரணமாக நேரடி நிரூபணத் திற்குரிய விஷயமாகாது என்றும், அது எந்நபரிடம் ஒப்படைக்கப் படுகிறதோ அவர் அல்லது எந்நபர் அச்சொத்தின் மீது ஆதிக்கம் கொண்டிருக்கிறாரோ அவர் அதை திரும்ப ஒப்படைக்கத் தவறும் பொழுது, அதற்காக ஒரு பொய் விளக்கத்தை கூறுவாரேயாயின் அங்கு நேர்மையற்ற கருத்துடன் கூடிய கையாடல் நடந்துள்ளது என்பதை உடனடியாக அனுமானம் செய்யலாம் என்றும் உச்ச நீதிமன்றம் தெளிவாகக் கூறியது.

ஒப்புவிக்கப்பட்ட பணத்தை மோசடியாகக் கையாடல் செய்தல் (Embezzlement):

இந்திய தண்டனைச் சட்டத்தில் குற்றமுறு நம்பிக்கை மோசடியை Criminal breach of trust எனக் குறிப்பிடுகிறோம். இது ஆங்கில நாட்டு சட்டத்தில் Embezzlement என அழைக்கப்படுகிறது. ஏறத்தாழ இரண்டும் ஒன்றாக இருப்பினும் Embezzlement-அய்ப் பொறுத்தவரை குறிப்பிட்ட சில வேறுபாடுகள் உள்ளன. அஃதாவது,

பொது ஊழியர் என்ற நிலையில், பெறுகின்ற பணத்தை அன்றைய கையிருப்புத் தொகையில் குறிப்பிடாது, மீதி உள்ளதை பதிவேட்டில் குறிப்பிட்டால், அன்றைய தினம் அப்பணம் மோசடியாக கையாடல் செய்யப்பட்டுள்ளது எனக் கூறலாம். மேலும் அரசுக்குச் சொந்தமான பணத்தை தனக்குப் பதிலாக திடீரென நியமனம் பெற்று பொறுப் பேற்பவரிடம் அன்றே கொடுக்கவில்லை என்றால், அவர் அப்பணத்தை மோசடியாக கையாடல் (Embezzlement) செய்துள்ளதாகக் கொள்ளப்படும்.

ஒரு வேலையாள் தனது எஜமானருக்கு சேரவேண்டிய பணத்தைப் பெற்றுக் கொண்டவுடன், அதில் ஒரு சிறு தொகையை மட்டும் தனது எஜமானரின் கணக்கில் வரவு செய்துகொண்டால், அது தன்னிடம் ஒப்புவிக்கப்பட்ட பணத்தை மோசடியாக கையாடல் (Embezzlement) புரிந்த குற்றத்தின் பாற்படும்.

Nirmalabai[1] எனும் இந்திய வழக்கில், ஒருவர் பிறரது பொருளை கையாடல் (தனது நலனுக்கு பயன்படுத்தாமல்) ஏதும் புரியாமல், அதனை வெறுமனே தன்னிடம் தக்கவைத்துக் கொண்டிருந்தால், அது குற்றமுறு நம்பிக்கை மோசடி ஆகாது எனக் கூறப்பட்டது.

தவணைமுறை விற்பனை:

தவணைமுறை விற்பனையில் (Hire Purchase) வாங்கும் பொருட்கள் இறுதித் தவணை செலுத்தப்படும் வரை இரவல் பொருளாகவே கருதப்படுவதால், அதுவரை சொத்துரிமை மாற்றம் ஏற்படுவதில்லை. எனவே ஒப்பந்தத்தை மீறி நேர்மையற்று அதை விற்று அதன் வருவாயைத் தனதாக்கம் செய்தால், அது இப்பிரிவின் கீழ் குற்றமாகும்.

1. (1953) Nag. 813

குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றத்தின் மிகுதீங்கு நிலைகள் (Aggravate forms):

சரக்கேற்றி (Carrier) முதலியவற்றால் செய்யப்படும் குற்றமுறு நம்பிக்கை மோசடியை **பிரிவு 407** தண்டிக்கிறது. எழுத்தர் அல்லது பணியாள் ஆகியவர்களால் செய்யப்படும் குற்றமுறு நம்பிக்கை மோசடியை, **பிரிவு 408** தண்டிக்கிறது. அதுபோல், பொது ஊழியர், வங்கியர், வணிகர் அல்லது முகவரால் செய்யப்படும் குற்றமுறு நம்பிக்கை மோசடியை **பிரிவு 409** தண்டிக்கிறது.

10. Embezzlement - Write short notes.

(முந்தய வினாவின் விடையில் பார்க்க)

11. Distinguish between
Criminal misappropriation and Criminal breach of trust.

வேறுபடுத்துக
கையாடலையும் நம்பிக்கை மோசடி குற்றத்தையும்.

1. கையாடலில், குற்றவாளி ஏதேனும் ஒரு விதத்தில் தன்வசம் வந்த பொருளை கையாடல் செய்கிறார். நம்பிக்கை மோசடியில் குற்றவாளிக்கும், பொருளைக் கொடுத்தவருக்கும் இடையே ஒரு நம்பிக்கை உணர்வு (ஒப்படைப்பு செய்தவர் - ஒப்படைப்பு ஏற்றவர் போன்ற உறவு) இருத்தல் அவசியம். அப்பொருளை தனது சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்த வேண்டும்.

2. கையாடலில் தரப்பினர்களுக்கிடையே எவ்வித ஒப்பந்த உறவும் (Contractual relationship) கிடையாது. நம்பிக்கை மோசடியில் அப்படிப்பட்ட ஒப்பந்த உறவு உண்டு.

3. கையாடலில், குற்றவாளிக்கு பொருள் ஏதேனும் ஒரு விதத்தில் அவன் வசம் வருகிறது. அதன் பிறகு கையாடல் புரிகின்றான். ஆனால் நம்பிக்கை மோசடியில் முதலில் குற்றவாளியிடம் ஒரு பொருளானது நம்பி ஒப்படைக்கப்படுகிறது. அதன் பிறகு அவன் அதை தன் சொந்த உபயோகத்திற்கு பயன்படுத்தி நம்பிக்கை மோசடி புரிகின்றான்.

(vi) திருட்டுப் பொருளை (சொத்தை) பெற்றுக் கொள்ளுதல் [Receiving of Stolen Property]

(பிரிவுகள் 410 முதல் 414 முடிய)

12. What is stolen property? When a person will be made liable for receiving or retaining stolen property? (திருட்டுப் பொருள் என்றால் என்ன? எப்பொழுது ஒரு நபர் களவுப் பொருள் பெற்றமைக்கு அல்லது வைத்திருந்தமைக்கு தண்டிக்கப்படுவார்?)

(அல்லது)

Stolen Property - Write short notes. (திருட்டுச் சொத்து - சிறு குறிப்பு வரைக)

(அல்லது)

Receipt of Stolen Property - Write short notes. (திருட்டுச் சொத்தைப் பெறுதல் - சிறு குறிப்பு வரைக.)

எது திருட்டுச் சொத்தாகும்? - பிரிவு 410 கூறும் விளக்கம்:

பிரிவு 410 : திருட்டு, அச்சுறுத்திப் பறித்தல், கொள்ளை, குற்றமுறு கையாடல், குற்றமுறு நம்பிக்கை மோசடி முதலியவற்றை புரிவதன் மூலம் பெறப்படும் சொத்து இந்தியாவிற்கு உள்ளோ அல்லது வெளியோ மாற்றம் செய்யப்பட்டிருந்தாலும் அது திருட்டுச் சொத்தாகும். ஆனால் பின் அது, அதன் உரிமையாளர் வசம் வரும் பொழுது திருட்டுச் சொத்து என்ற நிலை அற்றுப் போய்விடுகிறது.

திருட்டுச் சொத்தைப் பெறுதல் (Receiving of Stolen Property) - பிரிவு 411 கூறுவதாவது:

பிரிவு 411 : திருட்டுச் சொத்து எதனையும் அது திருட்டுச் சொத்து என்று அறிந்திருந்தும் அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்தும், நேர்மையற்ற முறையில் பெறுவதும் அல்லது வைத்துக் கொண்டிருப்பதும் குற்றமாகும். இதற்கு மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

திருட்டுச் சொத்தைப் பெறுதல் குற்றத்திற்கான முன்று ஆக்கக்கூறுகள் (Ingredients):

(1) சம்பந்தப்பட்ட சொத்து, திருட்டுச் சொத்தாக இருக்க வேண்டும்;

(2) அதை நேர்மையற்ற முறையில் பெற்றுக் கொண்டிருக்க வேண்டும் அல்லது வைத்துக் கொண்டிருக்க வேண்டும் (dishonestly received or retained); மற்றும்

(3) அது திருட்டுச் சொத்து என்று, குற்றஞ் சாட்டப்பட்டவர் அறிந்திருக்க வேண்டும் அல்லது நம்பக் காரணம் பெற்றிருக்க வேண்டும்.

முக்கிய வழக்குகள்:

Re Gaune Vithu Ghodu[1] என்ற வழக்கில் திருடப்பட்ட தங்க நகையை உருக்கி தங்கத் துண்டுகளாக ஆக்கினாலும் அது திருட்டுப் பொருள்தான் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Cowell v. Green[2] என்ற வழக்கில், திருடப்பட்ட ஆட்டின் இறைச்சியும் திருட்டுப் பொருள்தான் என முடிவு செய்யப்பட்டது.

1. 1942 Cri. Appeal No. 187 of 1942 Unrep. (Bom.)
2. 1796 2 East P.C. 617

Balinath v. State[1] என்ற வழக்கில் திருட்டுச் சொத்து என்று அறிந்தே அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்தே அதைப் பெறுவதுடன், அதை வைத்துக் கொண்டிருத்தலையும் பிரிவு 411 தண்டிக்கிறது. மேற்படி வழக்கில், குற்றஞ் சாட்டப்பட்டவர் **நேர்மையான முறையில்** சொத்தொன்றைப் பெறுகிறார். ஆனால் பின்னர் அது திருடப்பட்டது என்று தெரிந்த பிறகு, **நேர்மையற்ற முறையில்** தன் வசமே வைத்துக் கொள்கிறார் (retain it dishonestly). இதுவும் திருட்டுச் சொத்தைப் பெற்ற குற்றமே என்று நீதிமன்றம் கூறியது.

Kishan Lal v. State[2] என்ற வழக்கில், ஒருவர் திருட்டுப் பொருளானது திருடப்பட்டது என அறிந்தே வாங்கினார் என்பதற்கு சாட்சியம் எதுவும் இல்லை. மேலும் அவர் பொருளை நல்லெண்ணத்துடன் சரியான விலை கொடுத்து வாங்கியுள்ளார் எனக் கூறி நீதிமன்றம் அவரை விடுவித்தது.

மேற்படி குற்றத்தின் மிகுதீங்கு நிலைகள் (Aggravated forms):

பிரிவு 412-ஆனது, கூட்டுக் கொள்ளையில் திருடப்பட்ட சொத்தை, நேர்மையற்ற முறையில் பெற்றுக் கொண்டால், அவ்வாறு பெறுபவருக்கு பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையையும், அபராதத்தையும் விதிக்கிறது. **பிரிவு 413**-ஆனது, வாடிக்கையான திருட்டுச் சொத்தைப் பெறுகிறவருக்கு அல்லது கையாளுபவருக்கு (habitually dealing in stolen property), பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையையும், அபராதத்தையும் விதிக்கிறது. **பிரிவு 415**-ஆனது, திருட்டுச் சொத்தை மறைப்பதற்கு உதவி செய்பவருக்கு, மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையையோ அல்லது அபராதத்தையோ அல்லது இரண்டையுமோ விதிக்கிறது.

(vii) ஏமாற்றல் [Cheating]

(பிரிவுகள் 415 முதல் 420 முடிய)

13. Examine the essential ingredients of 'cheating'. ('ஏமாற்றல்' என்ற குற்றத்தின் அடிப்படைக் கூறுகளை ஆராய்க.)

(அல்லது)

State the essential ingredients that are to be established for obtaining conviction in cheating. (ஏமாற்றுதல் என்னும் குற்றத்திற்காக தண்டனை பெறுவதற்காக என்ன முக்கிய உட்கூறுகளை மெய்ப்பிக்க வேண்டும் என்பதைக் கூறுக.)

(அல்லது)

Explain the offence of cheating. Distinguish it from Extortion.

1. I.L.R. (1957) Cut. 112
2. 1979 Cri. L.J. 309 (All.)

(ஏமாற்றுதல் குற்றத்தை விளக்குக. அச்சுறுத்திப் பறித்தலிலிருந்து அதை பிரித்துக் காட்டுக.)

(அல்லது)

Cheating - Write short notes. (ஏமாற்றுதல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Deceitfully - Write short notes. (வஞ்சகமாக - சிறு குறிப்பு வரைக.)

ஏமாற்றுதல் - பிரிவு 415 கூறும் வரையறை:

எவரையேனும ஏமாற்றுவதன் (deceiving) மூலம் அவ்வாறு வஞ்சிக்கப்பட்டவர், பொருள் (சொத்து) எதனையும் எவருக்காவது கொடுக்கும்படி யோ அல்லது எவரேனும் பொருள் எதையேனும் நிறுத்தி வைத்துக் கொள்வதற்கு சம்மதிக்கும்படியோ, மோசடியாக அல்லது நேர்மையற்ற முறையில் தூண்டுகிற எவரொருவரும், 'ஏமாற்றுதல்' குற்றம் புரிந்தவராவார். மேலும் மேற்கண்டவாறு வஞ்சிக்கப்பட்டவர் அவ்வாறு வஞ்சிக்கப்பட்டிராவிட்டால், எந்தச் செயல் அல்லது செயல் தவிர்க்கை, அவரது உடல், மனம், நற்பெயர் அல்லது பொருளுக்கு சேதம் அல்லது தீங்கு உண்டாக்குகிறதோ அல்லது அநேகமாக உண்டாக்கக்கூடுமோ, அந்தச் செயலை அல்லது செயல் தவிர்க்கையை முறையே செய்ய விரும்பியிருக்க மாட்டாரோ, அதை செய்யும்படி அல்லது தவிர்க்கும்படி கருத்துடன் தூண்டுகிற எவரொருவரும் 'ஏமாற்றுதல்' குற்றம் செய்தவராவார்.

விளக்கம்: பொருண்மைகளை நேர்மையற்ற முறையில் மறைத்து வைத்தல், இப்பிரிவின் பொருளின்படி 'வஞ்சித்தல்' (deception) ஆகும்.

ஏமாற்றுதல் குற்றத்தின் முக்கிய ஆக்கக்கூறுகள் (Ingredients):

மேற்படி பிரிவு 415-ஆனது, ஏமாற்றுதல் குற்றத்தை **இரு பகுதிகளாக (Two Parts)** கூறுகிறது. அப்பிரிவின் சொற்றொடர் அமைப்புகள், சற்று கடுமையாக இருந்தாலும், பின்வரும் சுருக்கமான உட்கூறுகள் ஏமாற்றுதல் குற்றத்தை எளிதாக விளங்க வைக்கின்றன. அக்கூறுகளைக் காண்போமா?

(1) வஞ்சனையால் ஒருவரை மோசடியாகவோ அல்லது நேர்மையற்ற விதத்திலோ தூண்டி, அவரை,

(i) ஒரு பொருளைப் பிறர்க்குக் கொடுக்கும்படி செய்வது; அல்லது

(ii) ஒரு பொருளைப் பிறர் வைத்துக் கொள்வதற்கு சம்மதிக்கச் செய்வது ஏமாற்றுதல் எனும் குற்றமாகும்; அல்லது

(2) வஞ்சனையால் ஒருவரைத் தூண்டி, அவருடைய உடல், உள்ளம், பொருள், நற்பெயர் இவற்றிற்கு சேதம் அல்லது தீங்கு விளைவிக்கத்தக்க வகையில்

(i) ஒன்றை செய்ய கருத்துடன் தூண்டுவது; அல்லது

(ii) ஒன்றைச் செய்யாதிருக்க கருத்துடன் தூண்டுவது ஏமாற்றுதல் குற்றமாகும்.

ஏமாற்றுதல் குற்றத்திற்காக குற்றம் சாட்டப்பட்ட ஒருவரைத் தண்டிக்க பின்வரும் கூறுகள் மெய்ப்பிக்கப்பட வேண்டும்:

முதல் பகுதிக்கான ஏமாற்றுதல் குற்றத்திற்கு (for the First Part):

(1) குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு நபரை வஞ்சித்துள்ளார் (The accused deceived some person);

(2) அந்த வஞ்சனையின் மூலம் அந்நபரை தூண்டியுள்ளார்[1] (By deception he induced that person);

(3) மேற்படி தூண்டுதல் மோசடியானதாகவோ அல்லது நேர்மையற்ற முறையிலோ இருந்திருக்க வேண்டும் (The above inducement was fradulent and dishonest);

(4) அவ்வாறு தூண்டப்பட்ட அந்நபர், பொருள் எதையாவது எவருக்கேனும் கொடுத்திருக்க வேண்டும் அல்லது பொருளை எவரேனும் வைத்துக் கொள்ள அவர் சம்மதிக்கும்படி செய்திருக்கப்பட வேண்டும். (The person so induced delivered some property to or consented to the retention of some property by any person).

இரண்டாம் பகுதிக்கான ஏமாற்றுதல் குற்றத்திற்கு (for the Second Part):

(1) குற்றம் சாட்டப்பட்டவர் ஒரு நபரை வஞ்சித்துள்ளார் (The accused deceived some person);

(2) அந்த வஞ்சனையின் மூலம் அந்நபரை தூண்டியுள்ளார் (The accused thereby induced him);

(3) அப்படிப்பட்ட தூண்டுதல் கருத்துடன் செய்யப்பட்டுள்ளது (Such inducement was intentional);

(4) அப்படி தூண்டப்பட்ட நபர் செயல் எதையேனும் செய்தார் அல்லது செய்யத் தவிர்த்தார் (The person so induced did or omitted to do something);

(5) அச்செயல் அல்லது செயல் தவிர்க்கை, தூண்டப்பட்ட அந்நபரின் உடலுக்கு, மனதிற்கு, நற்பெயருக்கு அல்லது பொருளுக்கு சேதம் அல்லது தீங்கு விளைவித்தது அல்லது தீங்கு விளைவிப்பதாக இருந்தது (Such act or omission caused or was likely to cause damage or harm to the person in body, mind, reputation or property).

1. 'இணங்க வைக்கிறர்' என்றும் கூறலாம்.

வஞ்சகமாக (Deceitfully) - விளக்கம்:

மேற்படி பிரிவு 415-ல் 'வஞ்சனை' எனும் பதம் வருவதை நாம் கண்டோம். எனவே அதன் விளக்கத்தை அறிந்து கொள்வதும் இங்கு அவசியமானது. **'வஞ்சகம்' (deception)** என்பது, ஒரு செயலின் பின்விளைவு மற்றொருவருக்கு பாதகமாக இருக்கும் என்பதை முன்னரே அறிந்து, அத்தகு பாதகமான செயலை அவருக்கு ஏற்படுத்த வேண்டும் என்று ஒருவரின் மனதில் ஏற்படும் கருத்தே ஆகும்.

ஏமாற்றுதல் குற்றத்திற்கு, ஏமாற்றுபவரின் வஞ்சகமான கருத்தே அடிப்படையாக உள்ளது. **"வஞ்சிக்கும் கருத்து இல்லையெனில், ஏமாற்றுதல் குற்றம் எழுவதில்லை"** என்று கூட கூறலாம்.

வாங்கிய கடனை ஒருவர் கொடுக்காது இருக்கலாம். செய்து கொண்ட ஒப்பந்தத்தை ஒருவர் நிறைவேற்றாது இருக்கலாம். கொடுத்த வாக்குப்படி ஒருவர் நடக்காது இருக்கலாம். இவையெல்லாம் ஏமாற்றுக் குற்றங்களாகி விடுவதில்லை. கடனை வாங்கும் பொழுதே அதைத் திருப்பிக் கொடுக்கப் போவதில்லை என்ற வஞ்சகமான கருத்துடன் ஒருவர் இருந்திருந்தால், அதை ஏமாற்றுதல் என்று கூறலாம். ஒப்பந்தம் செய்து கொண்டபொழுதே அதை நிறைவேற்றுவதில்லை என்ற கருத்து ஒருவருக்கு இருந்திருந்தால், அதுவும் ஏமாற்றுதல் ஆகும். அவ்வாறான, வஞ்சனைக் கருத்து இருந்ததா என்பதை அந்தந்த சூழ்நிலைகளிலிருந்தே ஊகித்தறிய வேண்டியிருக்கிறது. வஞ்சனைக் கருத்து இல்லாத பொழுது ஏமாற்றும் குற்றம் எழுவதில்லை.

இனி ஏமாற்றுதல் குற்றத்திற்கு பிரிவு 415-ல் கூறப்பட்டுள்ள சில எடுத்துக்காட்டுகளை கவனிப்போமா?

ஏமாற்றுதல் குற்றம் - எடுத்துக்காட்டுகள்:

(1) A குடிமைப் பணியில் (Civil Service) இருக்கிறவர் என்று பொய்யாகப் பாவனை செய்து கொண்டு கருத்துடன் Z-அய் வஞ்சிக்கிறார். மற்றும் அதன்படி சாமான்களுக்குப் பணம் கொடுக்கும் எண்ணமில்லாமல், கடனாகத் தமக்குத் தரும்படி நேர்மையற்ற முறையில் Z-அய் இணங்க வைக்கிறார். இங்கு A ஏமாற்றுகிறார்.

(2) A ஒரு பொருளின் மீது ஒரு போலிக் குறியை (Counterfeit mark) போடுவதால், அந்தப் பொருள் ஒரு குறிப்பிட்ட புகழ் பெற்ற உற்பத்தியாளரால் செய்யப்பட்டது என்று Z-அய் நம்பச் செய்து கருத்துடன் வஞ்சிக்கிறார். A ஏமாற்றுகிறார்.

(3) A ஒரு பொருளின் போலி மாதிரி (false sample) ஒன்றை Z-க்குக் காட்டி அந்தப் பொருள், காட்டிய மாதிரியைப் போன்றதே என்று Z-அய் நம்புமாறு கருத்துடன் வஞ்சித்து மற்றும் அதனால் அந்தப் பொருளை Z பணம் கொடுத்து வாங்க நேர்மையற்ற முறையில் தூண்டுகிறார். இங்கு A ஏமாற்றுகிறார்.

(4) A தாம் பணம் போட்டு வைக்காத ஒரு வணிக நிறுவனத்தின்[1] மீது Z-யிடம் வாங்கிய ஒரு பொருளின் விலையைச் செலுத்துவதற்கு ஒரு பணச் சீட்டைத் (Bill) தருகிறார். அப்பணச் சீட்டு செல்லுபடியாகாதென்று A-க்குத் தெரியும். இங்கு A, Z-அய் கருத்துடன் வஞ்சித்து அப்பொருளுக்கு பணம் தரும் கருத்தின்றி Z அதனால் நேர்மையற்ற முறையில் பொருளைத் தம்மிடம் ஒப்படைப்பதற்கு இணங்க வைக்கிறார். எனவே A ஏமாற்றுகிறார்.

(5) 'வைரம்' அல்ல என்று தாம் அறிந்திருக்கிற பொருள்களை வைரம் என்று A, Z-யிடம் அடகு வைத்து Z-அய் கருத்துடன் வஞ்சிக்கிறார். மற்றும் Z-அய் கடன் தரும்படி அதன்மூலம் இணங்க வைக்கிறார். A ஏமாற்றுகிறார்.

(6) Z-வுடன் செய்து கொண்ட ஒப்பந்தத்தை Z நிறைவேற்றாமலே அந்த ஒப்பந்தத்தில் தம் பகுதியை நிறைவேற்றி விட்டதாக Z-அய் நம்ப வைத்து கருத்துடன் வஞ்சித்து மற்றும் அதனால் Z-அய்ப் பணம் தரும்படி அவரை நேர்மையற்ற முறையில் இணங்க வைக்கிறார். இங்கு A ஏமாற்றுகிறார்.

ஏமாற்றும் குற்றத்திற்கு தண்டனைகள்:

பிரிவு 417: ஏமாற்றும் எவரொருவருக்கும், ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 420: ஏமாற்றி அதன் மூலம் வஞ்சிக்கப்பட்டவரை எந்தப் பொருளையாவது எவருக்காவது கொடுக்க அல்லது மதிப்புள்ள பத்திரத்தை அல்லது கையொப்பமிடப்பட்ட அல்லது முத்திரை வைக்கப்பட்ட ஒரு மதிப்புள்ள பத்திரமாக மாற்றப்படக் கூடிய தன்மையுடையதுமான எதையும் முழுவதையுமோ அல்லது எந்தப் பகுதியையோ எழுதும்படி, மாற்றும்படி அல்லது அழிக்கும்படி நேர்மையற்ற முறையில் இணங்கச் செய்கிற எவரொருவருக்கும், ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

முக்கியமான வழக்குகள்:

Narain Rao[2] என்ற வழக்கில் கடனாளி 70 ரூபாயை கடன் கொடுத்தவருக்கு திருப்பிக் கொடுக்க வேண்டியுள்ளது. இவர் ஒரு அஞ்சல் உறையில் 70 ரூபாய்க்கு பதிலாக 7 ரூபாயை மட்டும் வைத்து அதை 70 ரூபாய்க்கான காப்புறுதி (insurance) செய்து, கொடுத்தவருக்கு அனுப்பினார். இது இப்பிரிவின் கீழ் ஏமாற்றுதலாகும்.

Kishnan[3] வழக்கில் போக்குவரத்து தலைமைக் காவலர் ஒருவர் (Traffic Head Constable) விண்ணப்பதாரர்களிடமிருந்து பணத்தைப் பெற்றுக்

1. 'வங்கி நிறுவனம்' (Banking House) என்று கொள்ளலாம்.
2. (1948) All. 374
3. (1948) Mad. 578

கொண்டு சோதனைக்குள்ளாக்கப்படாமலேயே வாகனம் ஓட்டுவதற்கான உரிமம் (Driving License) வாங்கித் தருவதாக வாக்குறுதி அளிக்கிறார் பின்னர் விண்ணப்பதாரர்களுக்காக அவரே அனைத்து ஏற்பாடுகளையும் செய்து, அதற்கு வேண்டிய விண்ணப்பத்தையும் அவரே நிறைவு செய்து, சோதனையில் தேறியது போல் காண்பித்து, போலியான சான்றிதழ் ஒன்றினையும் இணைத்து, அதற்கான பதிவுப் புத்தகங்களில் வேண்டிய இடங்களில் பதிவு செய்து அவ்விண்ணப்பத்தை மேலதிகாரிக்கு அனுப்பியுள்ளார். அதன் அடிப்படையில் உரிமம் முறைப்படி வழங்கப்பட வேண்டிய ஒன்றாகும். குற்றவாளியின் ஏமாற்றுக் குற்றம், பிரிவு 415-ன் முதல் பகுதிக்கு (first part) உட்பட்டது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது. (அதாவது ஒருவரை வஞ்சித்து மோசடியாக அல்லது நேர்மையற்று வஞ்சிக்கப் பட்டவரைத் தூண்டி அவரிடம் உள்ள ஒரு சொத்தை பிறருக்குக் கொடுக்கச் செய்தல். இங்கு போக்குவரத்துக் காவலர் தன்னுடைய மேலதிகாரிகளை மோசடியாக வஞ்சித்து, அவரிடம் உள்ள சொத்தான உரிமத்தை பிறருக்கு கொடுக்கும்படி தூண்டுகிறார்)

Rakma[1] வழக்கில், ஆடவன் ஒருவன், ஒரு விலைமகள் தனக்கு எவ்வித பால்வினை நோயும் (V.D.) கிடையாது என்று சொன்னதை நம்பி, அவளுடன் உடலுறவு கொள்கிறான். ஆனால் அவளிடமிருந்து Syphilis என்ற பால்வினை நோய் அவனுக்கு தொற்றிவிடுகிறது. இங்கு மேற்படி விலைமகள் ஏமாற்றுதல் குற்றம் புரிந்துள்ளார் எனத் தீர்மானிக்கப்பட்டது.

Mehervanji Bejanji[2] வழக்கில், ஒருவர் டிக்கெட் இல்லாமல் இரகசியமாக பொருட்காட்சியில் (exhibition) நுழைந்த உடனே அவர் பிடிக்கப்பட்டார். ஆனால் இது ஏமாற்றுதல் குற்றமாகாது எனப்பட்டது. **Lal Mohamed**[3] எனும் மற்றொரு மாறுபட்ட வழக்கில், ஒருவர் பொருட்காட்சி நுழைவாயிலில் நிற்கும் டிக்கெட் சேகரிப்பவரிடம், தன்னிடம் டிக்கெட் உள்ளது எனக் கூறிய பின் உள்ளே நுழைந்தார். அவரது இச்செயல் ஏமாற்றுதல் ஆகும் எனக் கூறப்பட்டது.

State v. Ramados Naidu[4] - இதில் கிணறு தோண்டவும், ஆயில் இஞ்சின் வாங்கவும் குற்றவாளிகள் தங்கள் சொத்தை காப்பீடாக (security) வைத்து நிலவள வங்கியிலிருந்து கடன் பெற்றனர். ஆனால் அக்கடனை அவர்கள் மேற்கண்ட உபயோகத்திற்கு பயன்படுத்தவில்லை. இருந்த போதிலும், வங்கி எவ்வித நட்டத்தையும் அடையவில்லை. ஏனெனில் கடனானது காப்பீட்டிலிருந்து ஈடு செய்யப்பட்டது. எனினும் கடனாளிகள் வங்கியிடம் நேர்மையற்ற முறையில் (திரித்துக்காட்டி) (dishonest representation) கடன் பெற்றதால் அவர்கள் பிரிவு 415 மற்றும் 420-ன்

1. (1886) 11 Bom. 59
2. (1869) 6 B.H.C. (Cr.C.) 6
3. (1874) 22 W.R. (Cr.) 82
4. 1977 Cri. L.J. 2048 (Mad.)

கீழ் தண்டிக்கப்பட வேண்டும் என நீதியரசர் S. நடராஜன் தனது தீர்ப்பில் கூறினார்.

Swami Dhirendra Brahmachari v. Shailendar Bhushan[1] எனும் வழக்கில் சுவாமி பிரம்மச்சாரி என்பவர் யோகா கற்றுத் தருவதாகவும், தனது யோகா நிறுவனம் இந்திய அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டதெனவும், பொய்யான வாக்குறுதிகள் கொடுத்து யோகா கற்க வந்த மாணவர்களிடம் வைப்புத் தொகையாக ரூ.1,000/- வாங்கிக் கொண்டது, ஏமாற்றுதல் குற்றம் எனப்பட்டது.

Dr. Sharma's Nursing home v. Delhi Administration[2] என்ற வழக்கில் ஒரு மருத்துவமனையில் குளிர்சாதன வசதி செய்யப்பட்ட அறைகள் உள்ளன என அம்மருத்துவமனை நிர்வாகம் கொடுத்த உத்திரவாதத்தின் பேரில், A என்பவர் தனது சகோதரரை அம்மருத்துவமனையில் சேர்த்தார். ஆனால் அவருக்கு அளிக்கப்பட்ட அறையில் குளிர்சாதன வசதி இல்லை. ஆனால் அதற்குண்டான கட்டணம் மட்டும் 'பில்'-லில் சேர்க்கப்பட்டிருந்தது. கீழமை நீதிமன்றம் இது பிரிவு 415 மற்றும் 429-ன் கீழ் ஏமாற்றுதல் குற்றமாகும் என்று தீர்ப்பளித்தது. ஆனால் இதை எதிர்த்து மருத்துவமனை நிர்வாகம் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தது. அங்கு, பிரிவு 415-ன் ஆக்கக் கூறுகளை ஆராய்ந்தறிய கீழமை நீதிமன்றம் தவறிவிட்டது என்றும், புகாரிலோ அல்லது வேறு ஆவணங்களிலோ, A என்பவரின் சகோதரரை குளிர்சாதன வசதி உள்ள அறையில் சேர்க்கும்படி நேர்மையற்ற முறையில் தூண்டியதற்காக (இணங்கச் செய்ததற்கான) (dishonest inducement) ஆதாரம் ஏதுமில்லை என்றும், இக்கூறு மெய்ப்பிக்கப்படாததால், அங்கு ஏமாற்றுதல் குற்றம் ஏதும் நடைபெறவில்லை என்றும் உச்ச நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

அச்சுறுத்திப் பறித்தலிலிருந்து ஏமாற்றுதல் வேறுபடும் விதம்:

அச்சுறுத்திப் பறித்தல் குற்றத்தில் சம்மதத்தினை நேர்மையின்றிப் பெறுவது போன்றே, ஏமாற்றுதல் குற்றத்திலும் சம்மதத்தினை பெற்றிருக்க வேண்டும். ஆனால் இரண்டிற்குமுள்ள முக்கிய வேறுபாடு யாதெனில் அச்சுறுத்திப் பறித்தலில் சம்மதமானது, மிரட்டுதல் (intimidation) மூலம் பெறப்படுகிறது. ஏமாற்றுதல் குற்றத்தில் சம்மதமானது, வஞ்சனையால் (deception) பெறப்படுகின்றது.

14. Cheating by Personation - Write short notes. (ஆள்மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல் - சிறு குறிப்பு வரைக.)

பிரிவு 416 கூறும் வரையறை:

பிரிவு 416 : தாம் வேறொருவராக பாவனை (பாசாங்கு) செய்வதன்

1. 1995 Cri. L.J. 1810 (Del.)
2. 1998 (8) S.C.C. 745

மூலம் அல்லது அறிந்தே ஒருவரை வேறொருவருக்குப் பதிலாக மாற்றி வைப்பதன் மூலம் அல்லது தம்மை அல்லது வேறொருவரை உண்மையில் தாம் அல்லாத அல்லது அந்த வேறொருவர் அல்லாத ஒருவர் என்று எடுத்துரைப்பதன் (representation) மூலம் ஏமாற்றுகிறவர் 'ஆள்மாறாட்டத்தின் மூலம் ஏமாற்றுவதாகச்' சொல்லப்படுகிறார்.

விளக்கம் : மேற்படி குற்றம் ஆள்மாறாட்டம் செய்யப்படுகிறவர் உண்மையான ஆளாக இருந்தாலும் சரி அல்லது கற்பனையான ஆளாக இருந்தாலும் சரி, குற்றமே.

எடுத்துக்காட்டுகள்:

(1) தம் பெயரைப் போன்ற அதே பெயருடைய ஒரு குறிப்பிட்ட பணக்கார வங்கியர் தாமே என்று A பாவனை செய்து ஏமாற்றுகிறார். A ஆள்மாறாட்டத்தால் ஏமாற்றுகிறார்.

(2) இறந்து போன B தாம்தான் என்று A பாவனை செய்து ஏமாற்றுகிறார். A ஆள்மாறாட்டத்தால் ஏமாற்றுகிறார்.

பிரிவு 419 கூறும் தண்டனை:

பிரிவு 419 : ஆள்மாறாட்டத்தால் ஏமாற்றுகிற எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

முக்கியமான வழக்கு:

Krishnamurthi v. State of Andhra Pradesh[1] - சென்னை மருத்துவப் பணியில் சிவில் அஸிஸ்டெண்ட் சர்ஜனாக குற்றம் சாட்டப்பட்டவர் தற்காலிகமாக பணிபுரிந்து வந்தார். தன்னுடைய பணி நிரந்தரமாவதற்கு சென்னை பப்ளிக் சர்வீஸ் கமிஷனுக்கு (MPSC) விண்ணப்பித்தார். அவ்விண்ணப்பத்தில் தாம் ஒரு M.B.B.S. பட்டதாரி என்று தன் பெயர், ஊர், தகப்பனார் பெயர் போன்றவற்றையும் பொய்யாக எடுத்துரைத்திருந்தார் (falsely represented). இத்தகுதிகளை அப்பணி நிரந்தரத்திற்கு MPSC கேட்டிருந்தது. இவர் நேர்முகத் தேர்விற்குப் பிறகு, நிரந்தரப் பணிக்காகத் தேர்ந்தெடுக்கப்பட்டு பல வருடம் ஊதியம் பெற்றார். இறுதியாக இவரின் மூலம் 'ஆள்மாறாட்டம் ஏமாற்றுதல்' கண்டுபிடிக்கப் பட்டு பிரிவு 419-ன்படி தண்டிக்கப்பட்டார்.

(viii) சொத்தழித்தல் (அல்லது) அழிம்பு
[Mischief]

(பிரிவுகள் 425 முதல் 440 முடிய)

15. What are the essential ingredients of 'Mischief'? Describe the

1. A.I.R. 1965 S.C. 333

various aggravated forms of mischief. (சொத்தழிப்புக் குற்றத்தின் முக்கியக் கூறுகள் யாவை? சொத்தழிப்புக் குற்றத்தின் வன்மையான வகைகளை விவரிக்க.)

(அல்லது)

Explain the circumstances under which a person may be guilty of "mischief by destroying his own property". (ஒரு நபர் எந்த சூழ்நிலைகளில் 'தன் சொத்தையே அழித்து சொத்தழித்தல் குற்றம் செய்தவராவார்' என்பதை விவரிக்கவும்.)

(அல்லது)

Mischief by destroying his own property - Write short notes. (தனது சொத்தையே அழித்து சொத்தழித்தல் குற்றம் புரிதல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Mischief - Write short notes. (அழிம்பு - சிறு குறிப்பு வரைக.)

சொத்தழித்தல் (அல்லது) அழிம்பு - பிரிவு 425 கூறும் வரையறை:

பிரிவு 425 : பொதுமக்களுக்கு அல்லது வேறு எவருக்கும் முறையற்ற நஷ்டம் அல்லது சேதம் (Wrongful loss or damage) விளைவிக்கும் கருத்துடன் அல்லது அநேகமாக விளைவிக்கக் கூடும் என்று அறிந்திருந்து, சொத்து எதற்கேனும் அழிவை விளைவிக்கிற அல்லது அதன் மதிப்பை (value) அல்லது பயன்படும் தன்மையை (utility) அழித்து விடுகிற அல்லது குறைத்து விடுகிற வகையில் சொத்து எதிலும் அல்லது அது அமைந்திருக்கும் நிலையில் அத்தகைய ஒரு மாற்றத்தை உண்டாக்குகிற அல்லது அதற்கு தீங்கு விளைவிக்கும் வகையில் பாதிப்பு ஏற்படுத்துகிற எவரொருவரும் 'சொத்தழித்தல்' (அழிம்பு) செய்கிறார்.

விளக்கம் 1 : தீங்கிழைக்கப்பட்ட அல்லது அழிக்கப்பட்ட சொத்தின் சொந்தக்காரருக்கு நஷ்டம் அல்லது சேதம் விளைவிக்க வேண்டும் என்னும் கருத்தை குற்றவாளி கொண்டிருக்க வேண்டும் என்பது இந்த 'சொத்தழித்தல்' குற்றத்திற்கு முக்கியமானது அன்று. எந்தச் சொத்துக்காயினும், சொத்து அவரைச் சேர்ந்தவரானாலும் இல்லாவிட்டாலும், தீங்கு இழைப்பதால் எவருக்காயினும் முறையற்ற நஷ்டம் அல்லது சேதம் விளைவிக்க கருத்து கொண்டால் அல்லது அநேகமாக விளைவிக்கக் கூடும் என்று அறிந்திருந்தால், அது போதுமானது.

விளக்கம் 2: அந்தச் செய்கையைச் செய்பவருக்கு அல்லது அவருக்கும் மற்றவர்களுக்கும் கூட்டாகச் சொந்தமாயிருக்கிற சொத்தைப் பாதிக்கும் ஒரு செய்கை மூலம் 'சொத்தழித்தல்' செய்யப்படலாம்.

சொத்தழித்தல் குற்றத்தின் முக்கிய ஆக்கக்கூறுகள் (Ingredients):

1. (அ) பொதுமக்களுக்கு; அல்லது (ஆ) வேறு எவருக்கும்,

முறையற்ற நஷ்டம் அல்லது சேதம் விளைவிக்கும் ஒரு கருத்து அல்லது அநேகமாக விளையக்கூடும் என்று அறிந்திருத்தல் [அதாவது சொத்தழித்தலுக்கான குற்றமனம் (mens rea)];

2. சொத்து எதற்கேனும் அழிவை விளைவித்தல் அல்லது அதில் மாற்றங்கள் ஏதேனும் செய்தல் அல்லது அது அமைந்திருக்கும் நிலையில் மாற்றங்கள் ஏதேனும் செய்தல்; [அதாவது சொத்தழித்தலுக்கான குற்றச் செயல் (actus reus)];

(3) அப்படிப்பட்ட மாற்றம் அச்சொத்தின் மதிப்பை அல்லது அதன் பயன்படும் தன்மையை அழிக்க வேண்டும் அல்லது குறைக்க வேண்டும் அல்லது அதற்கு தீங்கிழைக்க வேண்டும். [அதாவது மாற்றத்தின் விளைவு (effect of change)].

சொத்தழித்தலுக்கு பிரிவு 425-ன் கீழான சில எடுத்துக்காட்டுகள்:

(1) Z-க்கு முறையற்ற நஷ்டம் உண்டாக்கும் கருத்துக் கொண்டு Z-க்குச் சொந்தமான ஒரு மதிப்புள்ள பத்திரத்தை A தன்னிச்சையாக எரித்துவிடுகிறார். A சொத்தழித்தல் செய்தவராகிறார்.

(2) Z-க்கு சொந்தமான ஒரு பனிக்கட்டி (Ice) அறையினுள், A நீரைப் புகுத்துகிறார். மற்றும் அதனால் Z-க்கு முறையற்ற நஷ்டம் உண்டாக்கும் கருத்துக் கொண்டு பனிக்கட்டியைக் கரைய வைக்கிறார். A சொத்தழித்தல் செய்தவராகிறார்.

(3) Z-க்குச் சொந்தமான ஒரு மோதிரத்தை, அவருக்கு முறையற்ற நஷ்டம் உண்டாக்க வேண்டும் என்ற கருத்துடன் A தன்னிச்சையாக அதை ஆற்றில் எறிகிறார். இங்கு A சொத்தழித்தல் செய்தவராகிறார்.

தனது சொத்தையே அழித்து சொத்தழித்தல் குற்றம் புரிதல்:

நாம் மேலே கண்ட விளக்கம் - 2, இது குறித்து கூறுகிறது. அது உணர்த்தும் பொருள் யாதெனில், ஒருவர் தனக்குச் சொந்தமாயிருக்கிற அல்லது தனக்கும் மற்றவர்களுக்கும் கூட்டாகச் சொந்தமாயிருக்கிற சொத்தைப் பாதிக்கும் ஒரு செய்கையைச் செய்வதும் சொத்தழித்தல் குற்றமாகும்.

ஒரு சொத்து ஒருவருக்குச் சொந்தமாயிருக்கலாம். ஆனால் அதை அவர் அழித்துவிட்டால், அதனால் மற்றவர்களுக்கு முறையற்ற நஷ்டம் அல்லது சேதம் ஏற்படும் என்ற நிலையிருப்பின், அவரது செயல் சொத்தழித்தல் குற்றமாகிவிடும். இந்நிலைப்பாடு, அச்சொத்து அவருக்கும் மற்றவர்களுக்கும் சொந்தமான கூட்டுச் சொத்தாக இருக்கும் பொழுது, மேலும் சரியாகப் பொருந்தும்.

எடுத்துக்காட்டுகள்: (1) A என்பவர் தனது கப்பலை Z எனும் காப்பீட்டு நிறுவனத்திடம் (Insurance Company) காப்பீடு செய்திருந்தார்.

அவர் அந்நிறுவனத்திற்கு சேதம் உண்டாக்க வேண்டுமென்ற கருத்துடன், தனது கப்பலை தன்னிச்சையாக கைவிட்டுவிடுகிறார். இங்கு கப்பல் A-க்குச் சொந்தமாக இருப்பினும், அவரது செயல் Z எனும் காப்பீட்டு நிறுவனத்திற்கு சேதம் உண்டாக்கியதால், அவர் சொத்தழித்தல் குற்றம் செய்தவராவார்.

(2) தனது கப்பலின் பேரில் கப்பலீட்டுப் பத்திரத்தின் (bottomary bond) அடிப்படையில் கடன் கொடுத்திருக்கும் Z-க்கு முறையற்ற நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துக் கொண்டு A அக்கப்பலை கைவிட்டு விடும்படி (cast away) செய்விக்கிறார். A சொத்தழித்தல் செய்தவராகிறார்.

(3) Z-க்கு முறையற்ற நஷ்டத்தை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்துக் கொண்டு தமக்கும் Z-க்கும் பொதுச் சொத்தாக இருக்கும் ஒரு குதிரையை A சுட்டுவிடுகிறார். A சொத்தழித்தல் செய்தவராகிறார்.

சொத்தழித்தல் குற்றத்திற்கு பிரிவு 426 கூறும் தண்டனை:

பிரிவு **426** : சொத்தழித்தல் (அழிம்பு) செய்கிற எவரொருவருக்கும் மூன்று மாதங்கள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

முக்கிய வழக்குகள்:

Sri Ram v. Emperor[1] எனும் வழக்கில் குற்றம் சாட்டப்பட்டவர், A என்பவர் செல்வதற்கு அவருக்கு தட பாத்தியம் உள்ள பாதையொன்றில் ஒரு சாக்கடையைத் தோண்டினார். இது சொத்தழிப்பு குற்றமாகும் எனப்பட்டது.

Bihar State Electricity Board v. Nand Kishore Tamakhuwala[2] எனும் வழக்கில் தனது அறவை மில்லுக்கு நான்கு நாட்களாக மாநில மின்சார வாரியம் மின்சாரம் அளிக்கவில்லையென்றும், அதனால் தனது மில்லுக்கு நஷ்டம் ஏற்பட்டுவிட்டது என்றும், இதனால் மின்சார வாரியம் சொத்தழித்தல் குற்றம் புரிந்துள்ளது என்றும் கூறி மில்லின் உரிமையாளர் மின்சார வாரியத்திற்கு எதிராக நீதிமன்றத்தில் தனிப்பட்ட குற்றமுறையீடு (private complaint) செய்தார். மேல்முறையீட்டில், அக்குற்றமுறையீட்டை கூர்ந்து ஆராய்ந்த உச்ச நீதிமன்றம், அதில் பிரிவு 425-ல் கூறப்பட்டுள்ளவாறு மின்சார வாரியம் மில் உரிமையாளரின் சொத்தான மில்லை அழித்ததற்கோ அல்லது அதில் அல்லது அது அமைந்திருக்கிற தன்மையில் மாற்றங்கள் ஏதேனும் ஏற்படுத்தியதற்கோ குற்றச்சாட்டுகள் ஏதும் காணப்படவில்லை என்றும், அப்பிரிவின் வரையறைக்குட்பட்டபடி முதற் தோற்ற குற்ற வழக்கு ஏதும் (*prima facie* case) அவரால் சுட்டிக்காட்டப்படவில்லை என்றும் கூறி, அக்குற்றமுறையீட்டை தள்ளுபடி செய்துவிட்டது.

Palaniandi Muthirian v. Ramaswamy Reddi[3] எனும் வழக்கில்

1. A.I.R. 1948 Oudh. 97
2. A.I.R. 1986 S.C. 1653 : 1986 Cri. L.J. 1246
3. A.I.R. 1942 Mad. 724 : 1944 Cri. L.J. 140

குற்றஞ் சாட்டப்பட்டவர் தனது கால்நடைகளை அடுத்தவர் நிலத்தில் மேய அனுப்பியது, சொத்தழித்தல் குற்றமாகும் என்று சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

Byomkesh Bhattacharya v. L.N. Datta[1] எனும் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர்கள், தனது வீட்டிற்கு தண்ணீர் வரவிடாமல், தண்ணீர் குழாயின் 'வால்வை' மூடிவிட்டதாக A என்பவர் குற்றமுறையீடு செய்தார். அச்செயல், பிரிவு 425-ல் கூறப்பட்டுள்ளவாறு A என்பவரது வீட்டின் மதிப்பை அல்லது பயன்படு தன்மையை குறைக்கக் கூடியதாகும். எனவே, இது சொத்தழிப்புக் குற்றமாகும் என்று கூறி, அதற்காக குற்றஞ் சாட்டப்பட்டவர்களை கல்கத்தா உயர்நீதிமன்றம் தண்டித்தது.

சொத்தழித்தல் குற்றத்தின் மிகுதீங்கு நிலைகள் (வன்மை வகைகள்) (Aggravated forms of Mischief):

பிரிவு 427-ன்படி, அய்ம்பது ரூபாய் பெறுமான அல்லது அதற்கு மேற்பட்ட சேதத்தை உண்டாக்குகிற சொத்தழித்தலை செய்கிற எவரொருவருக்கும், இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 428-ன்படி, பத்து ரூபாய் பெறுமான அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமானமுள்ள விலங்கைக் கொன்று அல்லது ஊனமாக்கி சொத்தழித்தல் செய்கிற எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 429-ன்படி, எந்தப் பெறுமானமேனுமுடைய கால்நடை[2] முதலியவற்றை அல்லது அய்ம்பது ரூபாய் பெறுமானமுள்ள அல்லது அதற்கு மேற்பட்ட பெறுமானமுள்ள வேறு எந்த விலங்கையாவது கொன்று அல்லது ஊனமாக்கி சொத்தழித்தல் செய்கிற எவரொருவருக்கும், அய்ந்து ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 430-ன்படி, நீர்ப்பாசன அமைப்புகளுக்கு தீங்கு விளைவித்து அல்லது நீரின் போக்கை முறையற்ற விதத்தில் திருப்பி விட்டு சொத்தழித்தல் செய்கிற எவரொருவருக்கும் அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 431-ன்படி, பொதுச் சாலை, பாலம், ஆறு அல்லது வாய்க்காலுக்கு தீங்கு விளைவிப்பதன் மூலம், சொத்தழித்தல் செய்கிற எவரொருவருக்கும் அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

1. 1978 Cri. L.J. 848 (Cal.)
2. யானை, ஒட்டகம், குதிரை, கோவேறு கழுதை, எருமை, காளை, பசு, எருது போன்றவை.

பிரிவு 432–ன்படி, பொதுச் சாக்கடைக்கு சேதம் விளையும்படி அதில் உள்ள நீரை வழிந்தோடும்படி செய்தல் அல்லது தடங்கலை ஏற்படுத்தல் மூலம் சொத்தழித்தல் செய்கிற எவரொருவருக்கும், அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 433–ன்படி, கலங்கரை விளக்கம் (Light House) அல்லது கடற்குறி (Sea-mark) எதொன்றையும் அழித்து, நகர்த்தி அல்லது பயன்பாடு குறைந்ததாக ஆக்கி சொத்தழித்தல் செய்கிற எவரொருவருக்கும், ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 434–ன்படி, பொது அதிகாரியினால் நாட்டப்பட்ட ஒரு நிலைக் குறியை (landmark) அழித்து அல்லது நகர்த்தி சொத்தழித்தல் செய்கிற எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 435–ன்படி, நூறு ரூபாய் மதிப்புள்ள அல்லது (வேளாண்மை மகசூலாயின்) பத்து ரூபாய் மதிப்பிற்கு சேதம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்தோடு தீ அல்லது வெடிபொருட்களால் சொத்தழித்தல் செய்கிற எவரொருவருக்கும், ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 436–ன்படி, வீடு முதலியவற்றை அழிக்கும் கருத்துடன் தீ அல்லது வெடிபொருட்களால் சொத்தழித்தல் செய்கிற எவரொருவருக்கும், பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

பிரிவு 437–ன்படி, மேல்தளமுடைய ஒரு கப்பலை (decked vessel) அல்லது இருபது டன் எடையுடைய ஒன்றை அழிக்கும் அல்லது பாதுகாப்பற்றதாக்கும் கருத்துடன் சொத்தழித்தல் செய்யும் எவரொருவருக்கும், பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

பிரிவு 438–ன்படி, மேற்கண்ட 437-வது பிரிவில் விவரிக்கப்பட்ட சொத்தழித்தலை, தீ அல்லது வெடிபொருளால் செய்யும் பொழுது, அவ்வாறு செய்யும் எவரொருவருக்கும் பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

பிரிவு 439–ன்படி, திருட்டு முதலியவற்றைச் செய்யும் கருத்துடன் கப்பலை வேண்டுமென்றே தரை தட்ட (aground) அல்லது கரை தட்ட (ashore) வைத்தலைச் செய்யும் எவரொருவருக்கும், பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

பிரிவு 440–ன்படி, மரணம் அல்லது காயம் விளைவிப்பதற்காக முன்னேற்பாடு செய்த பிறகு, சொத்தழித்தல் செய்யும் எவரொருவருக்கும் அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

முடிவுரை:

நாம் ஏற்கனவே கண்ட திருட்டு, அச்சுறுத்திப் பறித்தல், கொள்ளை, கூட்டுக் கொள்ளை, கையாடல், நம்பிக்கை மோசடி, திருட்டுப் பொருளைப் பெறுதல், ஏமாற்றுதல் ஆகிய குற்றங்கள் அசையும் பொருள்களுக்கு (movable property) எதிரானவையாகும். நாம் தற்பொழுது கண்ட சொத்தழித்தல் எனும் குற்றம் அசையும் பொருள் மற்றும் அசையாப் பொருள்கள் எனும் இருவகைப் பொருள்களுக்கும் எதிரானவையாகும்.

(ix) குற்றமுறு அத்துமீறல்
[Criminal Trespass]
(பிரிவுகள் 441 முதல் 462 முடிய)

16. "We have given the name of trespass to every usurpation, however slight of dominion over property" (Draftsmen of the Code) - Elucidate. ["சொத்தின் ஆளுகைக்கு எதிராக ஏதேனும் சிறிதளவு ஊறு ஏற்படினும் அதற்கு அத்துமீறல் என்னும் பெயரை நாம் அளித்துள்ளோம்" (இந்திய தண்டனைச் சட்டத்தை வரைந்தோர்) - கூர்ந்தாராய்க.]

(அல்லது)

Criminal Trespass - Write short notes. (குற்றமுறு அத்துமீறல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

'குற்றமுறு அத்துமீறல்' என்பது பொதுவாக அசையாப் பொருட்களுக்கு (immovable properties) எதிராகச் செய்யப்படுபவையாகும். எனினும் மோட்டார் வாகனம், விமானம், கப்பல், இரயில் பெட்டி ஆகிய அசையும் பொருட்களிலும் அத்துமீறி, குற்றங்கருதி நுழையும் செயல், குற்றமுறு அத்துமீறலேயாகும். இதன் வரையறையை பிரிவு 441-ம், இதற்குண்டான தண்டனையை பிரிவு 447-ம் கூறுகின்றன. 442 முதல் 446 வரையிலான மற்றும் 448 முதல் 462 வரையிலான பிரிவுகள், குற்றமுறு அத்துமீறலின் மிகுதீங்கு நிலைகளை (Aggravated forms) விளக்குகின்றன.

அத்துமீறலும் (Trespass) குற்றமுறு அத்துமீறலும் - பொது விளக்கம்:

ஒருவர் நிலத்திலோ, வீட்டிலோ அச்சொத்திற்குள்ள எல்லை வகுக்கப்பட்டிருக்கிறது. அந்த எல்லையைத் தாண்டி வந்தால்தான், ஒரு சொத்தை ஆக்கிரமிப்பு செய்ய முடியும். இவ்வாறு சொத்தின் எல்லையைத்

தாண்டி வருவதை 'அத்துமீறல்' என்று கூறுகிறோம். ஒரு சொத்தில் அத்துமீறி நுழைவது அச்சொத்தை உடையவரின் உடைமைகளைப் பாதிக்கும் செயலாகிறது.

ஒரு நிலத்தின் மீது அல்லது வீட்டின் மீது ஒருவருக்கு உரிமை உள்ளதா அல்லது பிறிதொருவருக்கு உரிமை உள்ளதா என்று பூசல் எழுந்து, அதனால் அத்துமீறுதல் ஏற்பட்டால் **அது உரிமையியல் வழக்காகி விடுகிறது (civil case).** உரிமையியல் நீதிமன்றங்களில்தான் அத்தகைய அத்துமீறுதல் பற்றிய வழக்குகள் ஆராயப்படுகின்றன. எனவே, எல்லாவித அத்துமீறுதல்களையும் குற்றங்களெனக் கொள்ளுதற்கில்லை.

பின் எத்தகைய அத்துமீறல்கள்தான் குற்றங்களெனக் கொள்ளப் படுகின்றன? (1) குற்றமொன்றைச் செய்யக் கருதியோ, அல்லது (2) ஒரு சொத்தின் உடைமையில் இருப்பவரை மிரட்டுவதற்கு, அவமானப் படுத்துவதற்கு அல்லது தொந்தரவு செய்வதற்கு அச்சொத்தினில் அத்துமீறி நுழைதலே 'குற்றமுறு அத்துமீறலாகிறது'. இது **குற்ற வழக்காகி (criminal case)** குற்றவியல் நீதிமன்றங்களினால் விசாரிக்கப்படுகிறது.

சுருங்கக்கூறின், ஒரு சொத்தின் எல்லையைத் தாண்டி உள்ளே நுழைவது அத்துமீறல்தான். அதில் அய்யமொன்றுமில்லை. ஆனால் அது தானாகவே ஒரு குற்றச் செயல் ஆகிவிடுவதில்லை. மாறாக, அத்துமீறி நுழைந்தது, குற்றங்கருதி இருப்பின் அது குற்றமுறு அத்துமீறல் ஆகிறது.

இதைத்தான், **இந்திய தண்டனைச் சட்டத்தை வரைந்தோர் (The Draftsmen of the Code)** பின்வருமாறு குறிப்பிடுகின்றனர்.

"சொத்தின் ஆளுகையில் செய்யப்படும் தகாமுறை உரிமைப் பறிப்பு ஒவ்வொன்றையும் (usurpation), அது எவ்வளவு சிறிதாக இருப்பினும், அதற்கு அத்துமீறல் என்ற பெயரை நாம் கொடுத்திருக்கிறோம். அத்துமீறல் செய்யப்பட்ட சொத்தில் அக்கறை கொண்டுள்ள நபர் எவருக்கேனும் தீங்கு விளைவிக்கத் தக்க குற்றம் புரிவதற்காக அந்த அத்துமீறல் செய்யப்படும் பொழுது, அல்லது அப்படிப்பட்ட ஒரு நபருக்கு தொந்தரவு விளைவிப் பதற்காக இருக்கும் பொழுது தவிர, வேறு சூழலில் அந்த அத்துமீறலை நாங்கள் ஒரு குற்றமாக ஆக்குவதற்கு விழையவில்லை. அப்படி இருப்பினும், அந்த அத்துமீறல் மிகுதீங்கான சூழலில் செய்யப்படாத பொழுது, அதனை குறைவான தண்டனையுடன் பார்வையிடவே நாங்கள் விழைகின்றோம்[1]"

1. ""We have given the name of trespass to every usurpation, however slight, of domination over property. We do not propose to make trespass, as such, an offence, except when it is committed in order to the commission of some offence injurious to some person interested in the property on which trespass is committed, or for the purpose of causing annoyance to such a person. Even then we propose to visit it with a light punishment, unless it be attended with aggravating circumstances"" - The Draftsmen of the Code.

இந்நிலைப்பாடுதான் பிரிவு 441-ல் பின்வருமாறு விளக்கப் பட்டுள்ளது.

குற்றமுறு அத்துமீறல் - பிரிவு 441 கூறும் வரையறை:

பிரிவு 441 : வேறு ஒருவரின் உடைமையிலிருக்கும் ஒரு சொத்தினுள் அல்லது சொத்தின் மீது, அத்தகைய சொத்தை உடைமையில் வைத்திருக்கும் எவருக்கும் ஒரு குற்றம் செய்யும் அல்லது அவரை மிரட்டும், அவமானப்படுத்தும் அல்லது தொந்தரவு செய்யும் கருத்துடன் நுழைகிற,

அல்லது அச்சொத்தினுள் அல்லது அதன்மீது சட்டப்படி நுழைந்த பிறகு அத்தகையவரை மிரட்டும், அவமானப்படுத்தும் அல்லது தொந்தரவு செய்யும் கருத்தோடு அல்லது குற்றமொன்றைச் செய்யும் கருத்தோடு அங்கேயே சட்ட விரோதமாக தங்கியிருக்கிற

எவரொருவரும் 'குற்றமுறு அத்துமீறல்' செய்வதாகச் சொல்லப் படுகிறார்.

குற்றமுறு அத்துமீறலுக்குண்டான ஆக்கக்கூறுகள் (Ingredients):

(1) வேறு ஒருவரின் உடைமையில் உள்ள சொத்தினுள் அல்லது சொத்தின் மீது நுழைதல்;

(2) அவ்வாறு நுழைவது சட்டப்படியானதாக இருப்பின், பின்னர் அச்சொத்தினுள் சட்ட விரோதமாக தங்கியிருத்தல்;

(3) அவ்வாறு நுழைவதும் தங்கியிருத்தலும் பின்வரும் கருத்துடன் இருக்க வேண்டும்;

(a) குற்றமொன்றைச் செய்வதற்காக; அல்லது

(b) அச்சொத்து எவரது உடைமையில் உள்ளதோ அவரை மிரட்டுவதற்காக (intimidate), அவமானப்படுத்துவதற்காக (insult) அல்லது தொந்தரவு செய்வதற்காக (annoy) இருக்க வேண்டும்.

குற்றமுறு அத்துமீறலுக்கு பிரிவு 447 கூறும் தண்டனை:

பிரிவு 447 : குற்றமுறு அத்துமீறல் செய்கின்ற எவரொருவருக்கும் மூன்று மாதங்கள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அய்ந்நூறு ரூபாய் வரையிலான அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

முக்கியமான வழக்குகள்:

Venkatesu v. Kesamma[1] எனும் வழக்கில் நிலத்தின் குத்தகைதாரர் இல்லாத சமயத்தில், வேறொருவர் அந்நிலத்தில் நுழைந்து, அதை உழுவதற்கு ஆரம்பித்தார். மேற்படி அத்துமீறி நுழைந்த செயலும், நிலத்தை உழுத

1. (1934) 54 Mad. 515

செயலும் குத்தகைதாரருக்கு தொந்தரவு விளைவிப்பதாகும் என்று கூறி, குற்றமுறு அத்துமீறலுக்காக நீதிமன்றம் தண்டித்தது.

State of Maharashtra v. Tanba Sadadhio Kumbi[1] - எனும் வழக்கில் குற்றஞ் சாட்டப்பட்டவர் பள்ளிக் குழு ஒன்றின் துணைத் தலைவர் ஆவார். அவர் அப்பள்ளியினுள் நுழைந்து, தனது உடன்பிறந்தார் மகனுடன் (nephew) சண்டையிட்டதற்காக இரண்டு மாணவர்களை அடித்துவிடுகிறார். அச்சமயத்தில் அப்பள்ளியின் தலைமை ஆசிரியர் வெளியில் சென்றிருந்தார். பின்னர் அவர் பள்ளிக்குத் திரும்பி, அத்துணைத் தலைவரிடம், "மரியாதைக்குரிய நபராகிய நீங்கள் பள்ளியில் அத்துமீறி நுழைந்து, மாணவர்களை அடித்திருக்கக் கூடாது" என்று எச்சரித்தார். ஆனால் அத்துணைத் தலைவரோ, அத்தலைமை ஆசிரியரையே தகாத வார்த்தையால் திட்டி, அவரையும் தாக்க முனைந்தார். அப்பொழுது அவர் அத்துணைத் தலைவரை பின்னுக்கு தள்ளி விட்டார். எனினும், அத்துணைத் தலைவர் பள்ளியை விட்டு வெளியேறும் பொழுது, தலைமை ஆசிரியருக்கு உடற்காயம் ஏற்படுத்தப் போவதாக மிரட்டிவிட்டுச் சென்றார். அத்துணைத் தலைவரின் மேற்படி செயல்கள், பிரிவு 441-ன் இரண்டாவது பகுதியின் படியிலான குற்றமுறு அத்துமீறலாகும் என்று பம்பாய் உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

17. Define house trespass. When it will become lurking house trespass? (வீட்டினுள் அத்துமீறி நுழைதலை வரையறை செய்க. அஃது எப்பொழுது ஒளிந்து வீட்டினுள் அத்துமீறலாக மாறும்?)

(அல்லது)

House trespass - Write short notes. (வீட்டினுள் அத்துமீறி நுழைதல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Lurking house trespass - Write short notes. (ஒளிந்து மனை அத்துமீறல் - சிறு குறிப்பு வரைக.)

வீட்டினுள் அத்துமீறி நுழைதல் (House trespass) - பிரிவு 442 கூறும் வரையறை:

பிரிவு 442 : மனிதர்கள் வசிக்கும் இடமாகப் பயன்படுத்தப்படுகிற கட்டிடம், கூடாரம் அல்லது கப்பல் எதிலும் அல்லது வழிபாட்டிடமாக அல்லது பொருளைப் பாதுகாக்கிற இடமாகப் பயன்படுத்தப்படுகிற கட்டிடம் எதிலும் நுழைவதன் மூலம் அல்லது தங்கியிருப்பதன் மூலம் குற்றமுறு அத்துமீறலைச் செய்கிற எவரொருவரும், வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்வதாகச் சொல்லப்படுகிறார்.

விளக்கம் : குற்றமுறு அத்துமீறலை செய்பவரது உடலின் எந்தப்

1. A.I.R. 1964 Bom. 82; 1964 (1) Cri. L.J. 395

பாகத்தையாவது வீட்டினுள் புகுத்துவது, வீட்டினுள் அத்துமீறி நுழைவதாக அமைவதற்குப் போதுமானதாகும்.

வீட்டினுள் அத்துமீறி நுழைதலுக்கு பிரிவு 448 கூறும் தண்டனை:

பிரிவு 448 : வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிற எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

வீட்டினுள் அத்துமீறி நுழைதலின் மிகுதீங்கு நிலைகள் (Aggravated forms of house trespass):

பிரிவு 449-ன்படி, மரண தண்டனைக்குரிய குற்றம் செய்யும் பொருட்டு வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிற எவரொருவருக்கும், ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகளுக்கு மிகாத கடுங்காவல் சிறைத் தண்டனையோ விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

பிரிவு 450-ன்படி, ஆயுள் தண்டனைக்குரிய குற்றம் செய்யும் பொருட்டு வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிற எவரொருவருக்கும், பத்தாண்டுகளுக்கு மிகாத சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

பிரிவு 451-ன்படி, சிறைத் தண்டனைக்குரிய குற்றம் செய்யும் பொருட்டு வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிற எவரொருவருக்கும், இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம். மேலும் செய்யக் கருத்துக் கொள்ளப்பட்ட குற்றம் திருட்டாக இருக்குமானால், சிறைத் தண்டனையின் கால அளவு ஏழாண்டுகள் வரை நீட்டிக்கப்படலாம்.

பிரிவு 452-ன்படி, காயம், தாக்க முனைதல் அல்லது முறையின்றி தடுத்து வைத்தலுக்கான முன்னேற்பாட்டைச் செய்த பிறகு, வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிற எவரொருவருக்கும், ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதல் (Lurking House trespass) (அல்லது) வீட்டினுள் அத்துமீறி நுழைதல் எப்பொழுது ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதலாகிறது?

வீட்டினுள் அத்துமீறி நுழைதலை யாரும் பார்க்கா வண்ணம் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை செய்த பிறகு, அவ்வீட்டினுள் அத்துமீறி நுழைதலே ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதல் எனப்படுகிறது. இதைத்தான் பிரிவு 443 பின்வருமாறு கூறுகிறது.

பிரிவு 443 : அத்துமீறுதலுக்கு உட்பட்ட கட்டிடம், கூடாரம் அல்லது கப்பலிலிருந்து அத்துமீறி நுழைபவரை விலக்குவதற்கு அல்லது வெளியேற்றுவதற்கு உரிமை பெற்றிருப்பவரிடமிருந்து, வீட்டினுள் அத்துமீறி நுழைவதை மறைப்பதற்கான முன்னெச்சரிக்கையானவைகளைச் செய்த பிறகு, வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிற எவரொருவருக்கும், அவர் 'ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச்' செய்கிறதாகச் செயல்படுகிறார்.

இதற்கு பிரிவு 453 கூறும் தண்டனை:

பிரிவு 453 : ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிற அல்லது கன்னமிடுதலைச் (house breaking) செய்கிற எவரொருவருக்கும் இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

இரவில் ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதல் (Lurking House Trespass by Night) - பிரிவு 444 கூறும் வரையறை:

பிரிவு 444 : சூரியன் மறைந்த பிறகும், சூரியன் உதிப்பதற்கு முன்பும் ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிற எவரொருவரும், இரவில் ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்வதாகச் சொல்லப்படுகிறார்.

இதற்கு பிரிவு 456 கூறும் தண்டனை:

இரவில் ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதலை அல்லது இரவில் கன்னமிடுதலை (house breaking by night) செய்கிற எவரொருவருக்கும், மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

18. House breaking - write short notes. (கன்னமிடுதல் - சிறு குறிப்பு வரைக.)

கன்னமிடுதல் - பிரிவு 445 கூறும் வரையறை:

பிரிவு 445 : ஒரு வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்பவர் இதற்குப்பின் விவரிக்கப்பட்ட ஆறு வழிகளில் ஏதேனுமொன்றின் மூலமேனும் அவ்வீட்டினுள் அல்லது அதன் எந்தப் பகுதியிலாவது நுழைந்து விடுவாரானால், அல்லது ஒரு குற்றத்தை செய்யும் பொருட்டு நுழைவாரானால், அல்லது ஒரு குற்றத்தைச் செய்துவிட்டு அவ்வழிகளில் வெளியேறுவாரானால், அவர் 'கன்னமிடுதல்' எனும் குற்றத்தைச் செய்தவராவார்.

முதலாவதாக.– வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்வதற்காகத் தம்மால் அல்லது அந்த வீட்டினுள் அத்துமீறி நுழைதலுக்கு உடந்தையாய் இருப்பவர் எவராலும் செய்யப்பட்ட பாதை மூலம் அவர் உள்ளே

நுழைந்தால் அல்லது வெளியேறினால்;

இரண்டாவதாக.– சுவரின் மீது ஏறியோ அல்லது பாதையாக இல்லாத ஊடு வழியைப் பயன்படுத்தியோ வீட்டினுள் நுழைந்தால் அல்லது வெளியேறினால்;

மூன்றாவதாக.– வீட்டின் தாழ்ப்பாளைத் திறந்து, அந்த வழிமூலம் அவர் வீட்டினுள் நுழைந்தால் அல்லது வெளியேறினால்;

நான்காவதாக.– வீட்டின் பூட்டைத் திறந்து கொண்டு அவர் வீட்டினுள் நுழைந்தால் அல்லது வெளியேறினால்;

அய்ந்தாவதாக.– ஒருவரைத் தாக்கியோ, தாக்க முனைந்தோ அல்லது தாக்கப்போவதாக அச்சுறுத்தியோ, அவர் வீட்டினுள் நுழைந்தால் அல்லது வெளியேறினால்;

ஆறாவதாக.– வீட்டினுள் நுழைவதை அல்லது வெளியேறுவதை தடுக்கக் கட்டப்பட்டுள்ள வழி என்பதை அறிந்தே, தம்மால் அல்லது தமக்கு அந்த வீட்டினுள் அத்துமீறி நுழைதலுக்கு உடந்தையாய் இருப்பவரால் தடை அகற்றப்பட்ட அவ்வழி மூலம் அவர் நுழைந்தால் அல்லது வெளியேறினால்.

எடுத்துக்காட்டுகள்:

1. Z-ன் வீட்டுச் சுவரில் துளை செய்து, அத்துளையின் வழியாக கையை நுழைப்பதால் A வீட்டினுள் அத்துமீறி நுழைதலை செய்கிறார். இது கன்னமிடுதலாகும்.

2. கப்பலின் தளங்களுக்கு இடையேயுள்ள துளைகளின் வழியாக ஊர்ந்து சென்று கப்பலுக்குள் நுழைவதால் A அத்துமீறி நுழைதலைச் செய்கிறார். இது கன்னமிடுதலாகும்.

3. ஒரு ஜன்னலின் வழியாக Z-ன் வீட்டிற்குள் A நுழைவதால் அவர் வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிறார். இது கன்னமிடுதல் ஆகும்.

4. அடைக்கப்பட்டிருந்த கதவைத் திறந்து கொண்டு, அந்தக் கதவின் வழியாக Z-ன் வீட்டிற்குள் A நுழைவதால், அவர் அத்துமீறி நுழைதலைச் செய்கிறார். இது கன்னமிடுதலாகும்.

5. கதவில் இருக்கிற ஒரு துளையின் வழியாக ஒரு கம்பியை விட்டுத் தாழ்ப்பாளை தூக்கிவிட்டு, அந்த வாயிலின் வழியாக Z-ன் வீட்டினுள் A நுழைவதால் அவர் வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிறார். இது கன்னமிடுதலாகும்.

6. Z காணாமல் போக்கிவிட்ட Z-ன் வீட்டுக் கதவு சாவியை கண்டெடுத்து அந்தச் சாவியைக் கொண்டு கதவைத் திறந்து Z-ன் வீட்டிற்குள் A நுழைவதால், அவர் வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிறார். இது கன்னமிடுதலாகும்.

7. Z தம் வீட்டு வாயிலில் நின்று கொண்டிருக்கிறார். A, Z-அய் அடித்து கீழே தள்ளுவதால் பலவந்தமாக வழியுண்டாக்கி வீட்டினுள் நுழைவதால், வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிறார். இது கன்னமிடுதலாகும்.

8. Y-ன் வாயில் காவலராகிய Z, Y-ன் வீட்டு வாயிலில் நின்று கொண்டிருக்கிறார். அங்கு வந்த A, Z-அய் அடித்து விடுவதாக அச்சுறுத்தினார். மேலும் தான் நுழைவதை எதிர்க்கவிடாமல் Z-அய் செய்துவிட்டு A, Y-யின் வீட்டில் அத்துமீறி நுழைகிறார். இது கன்னமிடுதல் ஆகும்.

கன்னமிடுதலுக்கு பிரிவு 453 கூறும் தண்டனை:

பிரிவு 453 : ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதலைச் செய்கிற அல்லது கன்னமிடுதலைச் செய்கிற[1] எவரொருவருக்கும், இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

இரவில் கன்னமிடுதல் (House breaking by night) - பிரிவு 446 கூறும் வரையறை:

பிரிவு 446 : சூரியன் மறைந்த பின்பும் உதயமாவதற்கு முன்பும் கன்னமிடுதல் செய்கிற எவரொருவரும், 'இரவில் கன்னமிடுதல்' செய்வதாக சொல்லப்படுவார்.

இரவில் கன்னமிடுதலுக்கு பிரிவு 456 கூறும் தண்டனை:

பிரிவு 456 : இரவில் ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதலை அல்லது இரவில் கன்னமிடுதலைச் செய்கிற எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

1. ஒளிந்து வீட்டினுள் அத்துமீறி நுழைதல் குற்றத்திற்கும், கன்னமிடுதல் குற்றத்திற்கும் மேற்படி பிரிவு 453 எனும் ஒரே சட்டப்பிரிவிலேயே மேற்படி ஒத்த தண்டனை கொடுக்கப்பட்டுள்ளது.

(ஈ) ஆவணங்கள் சம்பந்தமான குற்றங்கள்
[Offences relating to Documents]

(பிரிவுகள் 463 முதல் 477-A முடிய)

1. Explain the ingredients of forgery. Under what circumstances a person's own signature may amount to forgery? (பொய்யாவணம் புனைதல் என்ற குற்றத்தின் கூறுகளை விளக்கவும். எந்தச் சூழ்நிலைகளில் ஒருவரின் சொந்த கையொப்பமே பொய்யாவணம் புரியும் குற்றமாகும்?)

(அல்லது)

What is forgery? Whether a person can commit forgery of his own signature? (கள்ளப் பத்திரம் உண்டாக்குதல் என்றால் என்ன? ஒருவர் தனது கையொப்பத்தையிட்டு கள்ளப் பத்திரம் தயாரிக்க முடியுமா?)

(அல்லது)

Making a false document - Write short notes. (பொய்யாவணம் புனைதல் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Forgery - Write short notes. (பொய்ப் பத்திரம் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

எப்பொழுது 'எழுதுதல்' (Writing) என்பது ஆரம்பித்துவிட்டதோ, அப்பொழுதிருந்தே பொய்யாவணம் புனைதலும் ஆரம்பித்து விட்டது என்று கூறலாம். **R. v. Riley**[1] என்ற வழக்கில், "பொய்யாவணம் புனைதல் என்பது வஞ்சனை (ஏமாற்றுதல்) செய்யும் கருத்துடன் பொய்யாக ஒரு ஆவணத்தை தயாரித்தல்[2]" என்று கூறப்பட்டது.

பொய்யாவணம் புனைதலை **'சிருஷ்டனை செய்தல்', 'கள்ளப் பத்திரம் தயாரித்தல்'** என்றும் அழைப்பதுண்டு. இனி இதன் வரையறையைக் காண்போமா?

பொய்யாவணம் புனைதல் - பிரிவு 463 கூறும் வரையறை:

பிரிவு 463 : பொதுமக்களுக்கு அல்லது எவருக்கேனும் சேதம் அல்லது தீங்கு விளைவிக்கும் அல்லது கோரிக்கை அல்லது பாத்தியதை எதையும் ஆதரிக்கும் அல்லது ஒருவரைத் தம் சொத்தை இழக்குமாறு செய்யும் அல்லது ஏதேனும் வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தம் செய்யும் கருத்துடன் அல்லது மோசடி செய்யும் அல்லது மோசடி

1. (1896) 1 Q.B. 321
2. "forgery is the making of a false document with intent to deceive" - R. v. Riley.

செய்யப்படலாம் என்னும் கருத்துடன் ஒரு பொய்யான ஆவணத்தை அல்லது பொய்யான மின்னியக்க ஆவணத்தை (false electronic record)[1] அல்லது அப்படிப்பட்ட ஆவணத்தின் ஒரு பகுதியைத் தயாரிக்கிற எவரொருவரும் பொய்யாவணம் புனைதலைச் செய்வதாகச் சொல்லப்படுவார்.

பொய்யாவணம் புனைதலின் உட்கூறுகள் (Ingredients):

1. ஒரு பொய்யான ஆவணத்தை அல்லது ஒரு பொய்யான மின்னியக்க ஆவணத்தை அல்லது அந்த ஆவணத்தின் ஒரு பகுதியை தயாரித்தல்.

2. அத்தயாரிப்பு பின்வரும் கருத்துடன் (intent) செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

(a) பொதுமக்களுக்கு அல்லது எவருக்கேனும் சேதம் அல்லது தீங்கு விளைவிக்கும் கருத்துடன், அல்லது

(b) கோரிக்கை (claim) அல்லது பாத்தியதை (title) எதையும் ஆதரிக்கும் கருத்துடன், அல்லது

(c) ஒருவரைத் தம் சொத்தை இழக்குமாறு செய்யும் கருத்துடன், அல்லது

(d) வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தம் செய்யும் கருத்துடன், அல்லது

(e) மோசடி செய்யும் அல்லது மோசடி செய்யப்படலாம் என்ற கருத்துடன் செய்யப்பட்டால், அது பொய்யாவணம் புனைதல் என்று கூறப்படும்.

பொய்யாவணம் புனைதலின் முக்கிய நோக்கம் ஏமாற்றுதல் ஆகும். அதாவது பொய்யான ஆவணத்தின் மூலம், சொத்தை முறையற்ற விதத்தில் பகிர்ந்தளித்தல் ஆகும். பொய்யாவணம் புனைதலிலும் ஏமாற்றுதலிலும் 'பொய்யாக எடுத்துரைத்தல்' (false representation) எனும் உட்கூறு உள்ளது. எனினும், ஏமாற்றுதல் என்பது, வாய்மொழியானது. ஆனால் பொய்யாவணம் புனைதல், முற்றிலும் எழுத்து வடிவம் கொண்டது.

யார் பொய்யாவணம் தயாரித்தவராகிறார்? (அல்லது) பொய்யாவணம் தயாரித்தல் (making a false document) - பிரிவு 464 கூறுவதாவது:

[2]**[பிரிவு 464 :** பின்வரும் எவரும் பொய்யான ஆவணம் அல்லது பொய்யான மின்னியக்க ஆவணம் (false electronic record) தயாரிப்பதாகச் சொல்லப்படுகிறார்.

1. 'மின்னியக்க ஆவணம்' எனும் பதம் மேற்படி பிரிவு 463-ல் 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தால் (The Information Technology Act, 2000) சேர்க்கப்பட்டது.
2. பிரிவு 464, 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தால் மேற்கண்டவாறு மாற்றப்பட்டுள்ளது.

முதலாவதாக, எவரால் அல்லது எவருடைய அதிகாரத்தின் பேரில் ஒரு ஆவணம், அல்லது ஆவணத்தின் ஒரு பகுதி, இலக்கமுறை குறியீட்டுக் கையெழுத்து கொண்ட மின்னியக்க ஆவணம் (electronic record of digital signature) தயாரிக்கப்படவில்லை, கையொப்பமிடப்படவில்லை, முத்திரையிடப்படவில்லை, எழுதிக் கொடுக்கப்படவில்லை, அனுப்பப்படவில்லை (transmitted) அல்லது பதியப்படவில்லை (affixed) என்று தாம் அறிகிறாரோ அவரால், அல்லது அவருடைய அதிகாரத்தின் பேரில் அது தயாரிக்கப்பட்டது, கையொப்பமிடப்பட்டது, முத்திரையிடப் பட்டது, எழுதிக் கொடுக்கப்பட்டது அல்லது பதியப்பட்டது என்று நம்பும்படிச் செய்யும் கருத்துடன் நேர்மையற்ற முறையில் அல்லது மோசடியாக (a) ஒரு ஆவணத்தின், அல்லது ஆவணத்தின் ஒரு பகுதியைத் தயாரிக்கிறவர், கையொப்பமிடுகிறவர், முத்திரையிடுகிறவர், அல்லது எழுதிக் கொடுக்கிறவர்; (b) ஒரு மின்னியக்க ஆவணத்தின் அல்லது அதன் ஒரு பகுதியை தயாரிக்கிறவர் அல்லது அனுப்புகிறவர்; (c) மின்னியக்க ஆவணம் எதிலும் இலக்கமுறை குறியீட்டுக் கையெழுத்தைப் பதிக்கிறவர்; (d) ஒரு ஆவணம் எழுதிக் கொடுக்கப்பட்டதை அல்லது இலக்கமுறை குறியீட்டுக் கையெழுத்தின் நம்பத்தக்க நிலையை (authenticity of the digital signature) குறிப்பதற்கு அடையாளம் ஏதேனும் இடுகிறவர், அல்லது

இரண்டாவதாக, தம்மாலோ அல்லது வேறு எவராலுமோ ஒரு ஆவணம் அல்லது மின்னியக்க ஆவணம் தயாரிக்கப்பட்டு, எழுதிக் கொடுக்கப்பட்டு அல்லது இலக்கமுறை குறியீட்டு கையெழுத்து பதியப்பட்டதற்குப் பிறகு இரத்து செய்வதன் மூலம், அல்லது மற்றபடி சட்டப்பூர்வமான அதிகாரமின்றி நேர்மையற்ற முறையில் அல்லது மோசடியாக அதன் முக்கியமான ஒரு பகுதியில் மாற்றம் செய்கிறவர், அத்தகைய மாற்றம் செய்யப்பெறும் சமயத்தில் அத்தகைய வேறு எவரும் உயிருடன் இருந்தாலும் சரி, அல்லது இறந்து போயிருந்தாலும் சரி, அல்லது

மூன்றாவதாக, எவரேனும் புத்தி சுவாதீனமற்ற, அல்லது போதையின் காரணமாக, அல்லது வஞ்சித்தலுக்கு அவரை ஆளாக்கியதன் காரணமாக ஒரு ஆவணத்தின் அல்லது மின்னியக்க ஆவணத்தின் உள்ளடக்கத்தை, அல்லது மாற்றத்தின் தன்மையை அறிந்து கொள்ள முடியாதவராக இருக்கிறார் என்று அறிந்து நேர்மையற்ற வகையில், அல்லது மோசடியாக அத்தகையவரை ஒரு ஆவணத்தில் அல்லது மின்னியக்க ஆவணத்தில் கையொப்பமிடும்படியோ, முத்திரையிடும்படியோ, எழுதிக்கொடுக்கும் படியோ, அல்லது மாற்றம் செய்யும்படியோ, அல்லது மின்னியக்க ஆவணம் எதிலும் அவரது இலக்கமுறை குறியீட்டுக் கையெழுத்தை பதியும்படியோ செய்கிறவர்.]

பிரிவு 464-ன் கீழான சில எடுத்துக்காட்டுகள்:

1. Z-ஆல் எழுதப்பட்ட B-யிடமிருந்து 10,000 ரூபாய் பெறுவ கற்கான வணிக உறுதிக் கடிதத்தை (letter of credit) A வைத்திருக்கிறார். A,

B-யை மோசடி செய்யும் பொருட்டு, Z-ன் அந்தக் கடிதத்தை அவ்வாறு B நம்ப வேண்டுமென்னும் கருத்துக் கொண்டு 10,000 என்னும் எண்ணுடன் மற்றொரு பூஜ்ஜியத்தைச் சேர்த்துத் தொகையை 1,00,000 என்றாக்குகிறார். A பொய்யாவணம் புனைந்தவராகிறார்.

2. Z-யிடமிருந்து A-க்கு ஒரு சொத்தை மாற்றுவதாகப் புலப்படும் ஒரு ஆவணத்தில் அந்தச் சொத்தை B-க்கு விற்று, அதன் மூலம் விற்பனைத் தொகையை பெற்றுக் கொள்ளும் கருத்துடன் Z-ன் உத்திரவின்றி A, Z-ன் முத்திரையை இடுகிறார். A பொய்யாவணம் புனைந்தவராகிறார்.

3. B-யினால் கையொப்பமிடப்பட்டுக் கொணர்பவர் குறிப்பிட்ட வங்கியில் பெறக் கூடிய, ஆனால் தொகை எதுவும் அதில் குறிக்கப் பெறாத, ஒரு காசோலையை A வழியில் கண்டெடுக்கிறார். பத்தாயிரம் ரூபாய் என்னும் தொகையைக் குறிப்பிட்டு, A மோசடியாக அந்தக் காசோலையைப் பூர்த்தி செய்கிறார். A பொய்யாவணம் புனைந்துள்ளார்.

4. A என்னும் முதல்வர் தன்னுடைய முகவரான B-யிடம் ஒரு வங்கியின் மீது காசோலை (Cheque) ஒன்றினை எழுதி அதில் தொகையை குறிப்பிடாமல் 10,000 ரூபாய்க்கு மேற்படாத தொகையை பூர்த்தி செய்து கொள்ள அதிகாரம் அளிக்கிறார். ஆனால் முகவரான B அக்காசோலையில் மோசடியாக 20,000 ரூபாய் என்று பூர்த்தி செய்து கொள்கிறார். இங்கு B பொய்யாவணம் தயாரித்தவர் ஆவார்:

5. Z என்பவர் தன் உயிலில், தன்னுடைய எஞ்சிய சொத்துக்கள் எல்லாம் A, B, C ஆகியோர்களுக்கு சரிசமமாக பிரித்துக் கொடுக்கப்பட வேண்டும் என்று எழுதியிருக்கிறார். ஆனால் A என்பவர் C-க்கும் தனக்கும் மட்டுமே கொடுக்கப்பட்டது என்று நம்பும்படி செய்யும் கருத்துடன் மோசடியாக B-யின் பெயரை சுரண்டி எடுத்துவிடுகிறார். இங்கு A என்பவர் பொய்யாவணம் தயாரித்தவர் ஆவார்.

6. Z என்பவர் சொல்லச் சொல்ல A என்பவர் Z-ன் உயிலினை எழுதுகிறார். ஆனால் சொத்து யாருக்குச் சேர்ந்து அடைய வேண்டுமோ, அவர் பெயருக்கு பதிலாக வேறு ஒரு நபரின் பெயரை A கருத்துடன் எழுதுகிறார். அவ்வுயில் Z-ன் கட்டளைப்படி தயாரிக்கப்பட்டிருப்பதாகக் கூறி, அதில் Z-அய் கையொப்பமிட A தூண்டுகிறார். இங்கு A பொய்யாவணம் தயாரித்தவர் ஆவார்.

பிரிவு 464 -ன் கீழான முன்று விளக்கங்கள்:

ஒருவரின் சொந்தக் கையொப்பமே பொய்யாவணம் புனைதலாக ஆகும் சூழல்: இது குறித்து பிரிவு 464-ன் கீழான விளக்கம் 1 பின்வருமாறு கூறுகிறது.

விளக்கம் 1 : ஒருவர் தமது சொந்தப் பெயரை கையொப்பமிடுவதே பொய்யாவணம் புனைதல் ஆகலாம்.

இவ்வாறு ஆகும் சூழ்நிலைகளை பின்வரும் எடுத்துக்காட்டுகள் விளக்குகின்றன.

எடுத்துக்காட்டுகள்:

1. ஒரு மாற்றுச் சீட்டில் (bill of exchange) தமது சொந்தப் பெயரில், அந்தச் சீட்டு அதே பெயருடைய வேறு ஒருவரால் வரையப்பட்டதாக நம்பப்படலாம் என்ற கருத்துடன் A கையொப்பமிடுகிறார். A பொய்யாவணம் புனைந்த குற்றத்திற்குள்ளாவார்.

2. Z-ன் பெயரில் ஒரு மாற்றுச் சீட்டை B வரைந்தது போன்று பின்னர் B ஒரு தாளில் எழுதிக் கொள்ளலாம் என்று ஒரு துண்டுத்தாளில் 'ஏற்கப்பட்டது' (accepted) என்ற சொல்லை எழுதி மற்றும் Z-ன் பெயரில் A அதில் கையொப்பமிடுகிறார் மற்றும் Z அதனை ஏற்றுக்கொண்டது போன்று அந்தச் சீட்டைச் செலவாணி செய்கிறார். A பொய்யாவணம் புனைந்த குற்றம் செய்கிறார். மேலும் B அந்தப் பொருண்மையை அறிந்து A-யின் கருத்தின்படி அந்தத் தாளில் சீட்டை வரைந்தால் B-யும் பொய்யாவணம் புனைந்த குற்றம் செய்கிறார்.

3. அதே பெயருடைய வேறு ஒருவரின் உத்திரவின்படி, கொடுப்பதற்குரிய ஒரு மாற்றுச்சீட்டை A கண்டு எடுக்கிறார். யாருடைய உத்திரவின்படி அது கொடுப்பதற்குரியதாகுமோ அவர் பெயரால் மேற்குறிப்பு இடப்பட்டதென்று நம்பும்படி செய்யும் கருத்துடன் அந்தச் சீட்டில் தமது சொந்தப் பெயரில் A மேற்குறிப்பிடுகிறார். இங்கு A பொய்யாவணம் புனைதல் குற்றம் செய்தவராகிறார்.

4. B-க்கு எதிராக ஒரு தீர்ப்பாணையை நிறைவேற்றுகையில் விற்கப்பட்ட ஒரு சொத்தை A வாங்குகிறார். சொத்து கைப்பற்றப்பட்ட பின் Z-உடன் வஞ்சகக் கூட்டாக சேர்ந்து அந்தச் சொத்தை ஒரு பெயரளவான வாடகைக்கு மற்றும் நீண்ட காலத்திற்கு ஒரு குத்தகை ஆவணத்தை B எழுதிக் கொடுக்கிறார். மற்றும் A-யை மோசடி செய்யவும், கைப்பற்றப்படுமுன் குத்தகைக்கு விடப்பட்டது என்று நம்பும்படி செய்யும் கருத்துடன் குத்தகை ஆவணத்தில் சொத்து கைப்பற்றப்படுவதற்கு ஆறு மாதங்களுக்கு முந்தின தேதியை இடுகிறார். தமது சொந்தப் பெயரில் B குத்தகை ஆவணம் எழுதிக் கொடுத்திருந்தாலும், அதில் முன் தேதியிடுவதால் B பொய்யாவணம் புனைதல் குற்றம் செய்கிறார்.

விளக்கம் 2 : உள்ளவர் ஒருவரால் அந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது என்று நம்பச் செய்யும் கருத்துடன், கற்பனையான ஒருவரின் பெயரில், அல்லது ஒருவர் ஆயுள் காலத்தில் அவரால் அந்த ஆவணம் தயாரிக்கப்பட்டது என்று நம்பும்படி செய்யும் கருத்துடன் இறந்த ஒருவரின் பெயரில் பொய்யாவணம் ஒன்றை தயாரித்தல் பொய்யாவணம் புனைதல் ஆகலாம்.

எடுத்துக்காட்டு : கற்பனையான ஒருவர் பெயருக்கு ஒரு மாற்றுச் சீட்டை A எழுதி, மற்றும் அதைச் செலவாணியாக்கும் கருத்துடன் அந்தக் கற்பனையானவரின் பெயரில் ஏற்றுக்கொள்கிறார். A பொய்யாவணம் புனைந்தவராகிறார்.

[1][**விளக்கம் 3 :** மேற்படி பிரிவு 464-ன் நோக்கங்களுக்காக 'இலக்கமுறை குறியீட்டுக் கையெழுத்தை பதித்தல்' (affixing digital signature) எனும் சொற்றொடருக்கு 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தின் பிரிவு 2(1)(d)-யில் அளிக்கப்பட்டுள்ள பொருளே பொருந்தக் கூடியதாகும்.]

பொய்யாவணம் புனைதலுக்கு பிரிவு 465 கூறும் தண்டனை:

பிரிவு 465 : பொய்யாவணம் புனைகிற எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

முக்கியமான வழக்குகள்:

Dr. Vimala v. Delhi Administration[2]

இதில் Dr. விமலா, தன் சொந்தப் பணத்தில், தன் மகளின் பெயரில் (நளினி, 6 மாத வயது) ஒரு காரை வாங்கினார். அந்தக் காரை காப்பீடு (Insurance) செய்யும் பொழுது காப்பீட்டுப் பத்திரத்தில் (Insurance Policy) தன் மகளின் பெயரைத் தானே கையொப்பமிட்டார். அதன்பின் தனது காருக்கு விபத்தின் காரணமாக விளைந்த சேதத்திற்கு காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து நஷ்டஈடு பெற்றார். நஷ்டஈட்டுக் கோரிக்கை உண்மையானது. மேலும் அவர் நஷ்டஈட்டை வேண்டும் கோரிக்கைப் படிவத்தில் (Claim form) தன் மகளின் பெயரையே கையொப்பமிட்டு பணத்தையும் பெற்றுக் கொண்டார்.

நளினியின் பெயரானது அதிர்ஷ்டத்தை விளைவிக்கும் என்ற எண்ணத்தில், விமலா நளினியின் பெயரில் காரை வாங்கினார். நளினி என்ற தனது மகளின் பெயரில் காப்பீடு செய்து, தானே நளினி என்று கையொப்பமிட்டதினால், விமலாவுக்கு எவ்விதமான பண ஆதாயமோ அல்லது காப்பீடு நிறுவனத்திற்கு எவ்விதமான நஷ்டமோ விளையவில்லை.

தன்னுடைய சொந்தப் பெயரிலேயே காப்பீடு செய்து காப்பீட்டு நிறுவனத்திடமிருந்து Dr. விமலா பணத்தை பெற்றிருந்தாலும், காப்பீட்டு நிறுவனம் எதையும் செய்திருக்க முடியாது. விமலாவின் மகள் நளினியின் பெயரில் காப்பீடு செய்யப்பட்டு நஷ்டஈடு எவ்வளவு கொடுக்கப்பட்டதோ அதே தொகையை, Dr. விமலா பெயரில் காப்பீடு செய்யப்பட்டிருந்தாலும்,

1. 2000-ஆம் ஆண்டின் தகவல் தொழில்நுட்ப சட்டத்தால் பிரிவு 464-ல் சேர்க்கப்பட்டது.
2. A.I.R. 1963 S.C. 1572 : 1963 (2) Cri. L.J. 434

காப்பீட்டு நிறுவனம் கொடுத்திருக்க வேண்டும். விமலா தன் மைனர் மகளின் பெயரை தானே கையொப்பமிட்டதால் பணத்தை குறைக்கவோ அல்லது கொடுக்காமல் இருக்கவோ காப்பீட்டு நிறுவனத்திற்கு முடியாது. மேலும் இதனால் விமலாவிற்கு எவ்வித முறையற்ற பண லாபமோ அல்லது காப்பீட்டு நிறுவனத்திற்கு சட்டவிரோதமான நஷ்டமோ கிடையாது. பிரிவு 463, 464 ஆகியவற்றின்படி விமலா குற்றவாளியா எனக் கேள்வி எழுந்தபோது மேற்கண்ட காரண அடிப்படையில் Dr. விமலா குற்றவாளி அல்ல, அவர் எந்த பொய்யான ஆவணத்தையும் புனையவில்லை எனத் தீர்ப்பானது.

G.S. Bansal v. Delhi Administration[1] - வாரிசுச் சான்றிதழ் பெற்று, மூன்று மாத காலம் காத்திருந்து, பணத்தைப் பெற வேண்டியிருப்பதால், குற்றவாளி தன்னுடைய இறந்த தந்தையாரின் கையொப்பத்தை தானே இட்டு தன் தந்தை பெயரில் அஞ்சலகத்தில் உள்ள பணத்தைப் பெற்றார். இதனால் அவருக்கு வாரிசுச் சான்றிதழ் வாங்கும் செலவு மிச்சமாகிறது. மேலும் மூன்று மாத காலம் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை. குற்றவாளி தன்னுடைய இச்செயலின் மூலம் முறையற்ற இலாபத்தை பெற முனைந்திருக்கிறார். ஆகவே அவ்வாறு கையொப்பமிடப்பட்டது, பிரிவு 463-ன்படி பொய்யாவணம் புனைந்த குற்றமாகும் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

Dr. S. Dutt v. State of U.P.[2] என்ற வழக்கில் பொய்யாக புனையப்பட்ட ஆவணம், எவருக்கேனும் முறையற்ற ஆதாயத்தையோ அல்லது முறையற்ற நஷ்டத்தையோ ஏற்படுத்தும் நோக்குடன் பயன்படுத்தப் படவில்லையெனில், அப்பொய்யாவணம் புனைந்தவரை தண்டிக்கவியலாது எனப்பட்டது.

R. v. Sabapathi[3] என்ற வழக்கில் A-யின் பெயருக்கு பணவிடை (Money Order) அனுப்பப்பட்டிருந்தது. அதை A-க்கு பட்டுவாடா செய்ய வேண்டிய தபால் அலுவலர், A-யின் கையொப்பத்தை தானே இட்டு அப்பணத்தை தனதாக்கிக் கொண்டார். அத்தபால் அலுவலர் பொய்யாவணம் புனைந்த குற்றம் புரிந்ததற்காக தண்டிக்கப்பட்டார்.

பொய்யாவணம் புனைதல் குற்றத்தின் மிகுதீங்கான நிலைகள் (Aggravated forms):

பிரிவு 466 : நீதிமன்றத்தின் பதிவுக்கட்டு (Record of Court) அல்லது பொதுப் பதிவேடு (Public Register) முதலியவற்றை பொய்யாக புனைகிற எவரொருவருக்கும் ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 467 : மதிப்புள்ள பத்திரம் (Valuable security), உயில் முதலியவற்றை பொய்யாகப் புனைகிற எவரொருவருக்கும் ஆயுள் தண்டனை

1. A.I.R. 1963 S.C. 1577 : 1963(2) Cri. L.J. 439
2. A.I.R. 1966 S.C. 523
3. I.L.R. XI Mad. 411

அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 468 : ஏமாற்றும் பொருட்டு பொய்யாவணம் புனைகின்ற எவரொருவருக்கும் ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 469 : எவருடைய பெயரையேனும் கெடுக்கும் பொருட்டு பொய்யாவணம் புனைகிற எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 477-A : பொய்க் கணக்கு (Falsification of account) தயாரிக்கிற எவரொருவருக்கும் ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

(உ) சொத்து மற்றும் பிற அடையாளக் குறிகள் சம்பந்தமான குற்றங்கள்
[Offences relating to Property and other marks]

(பிரிவுகள் 478 முதல் 489 முடிய)

Trade mark and Property Mark - Write short notes. (வணிகக் குறி மற்றும் சொத்து அடையாளக் குறி - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

'குறிகள்' (Marks) இரு வகைப்படும். அவை 1. வணிகக் குறி (Trade Mark) 2. சொத்து (பொருள்) அடையாளக் குறி (Property Mark). இவற்றின் விளக்கத்தைப் பின்வருமாறு காண்போமா?

வணிகக் குறி (Trade Mark):

இந்திய தண்டனைச் சட்டம் இயற்றப்பட்ட காலத்தில் 'வணிகக் குறியின்' வரையறையை பிரிவு 478 செய்தது. பின்னர் **1958-ஆம் ஆண்டில் வணிக மற்றும் வணிகச் சரக்கு சட்டம் (The Trade and Merchandise Act, 1958)** இயற்றப்பட்டது. இது மேற்படி பிரிவு 478-அய் இந்திய தண்டனைச் சட்டத்திலிருந்து நீக்கிவிட்டு, தன்னுடன் இணைத்துக் கொண்டது. இதனால் தற்பொழுது வணிகக்குறி தொடர்பான குற்றங்கள் மேற்படி சட்டத்தின் கீழாகவே தொடுக்கப்பட்டு வருகின்றன; குற்றவாளிகளும் அச்சட்டத்தாலேயே தண்டிக்கப்படுகின்றனர். எனவே, வணிகக்குறியை இந்திய தண்டனைச் சட்டப்படி, வரையறுக்க முடியாது போனாலும், ஒரு வணிகக் குறி என்பது, பொருட்களின் (சரக்குகளின்) உற்பத்தியாளர் அல்லது தரத்தைக் குறிப்பிடுவதற்காக இடப்படும் (denotes the manufacture or quality of the goods) ஒரு அடையாளக் குறி என்று விளக்கமளிக்கலாம். சுருங்கக்கூறின், பொருட் களைப் பற்றிக் குறிப்பிடுவது, வணிகக் குறியாகும்.

சொத்து அடையாளக் குறி (Property Mark):

'சொத்து அடையாளக் குறி' என்பது, பொருட்களின் (சரக்குகளின்) உரிமையாளரைக் குறிப்பிடுவதற்காக இடப்படுவதாகும் (denotes the ownership of goods). சுருங்கக்கூறின், பொருட்கள் யாருக்கு உரிமை யானவை என்பதை அக்குறி விளம்புகின்றது. மேற்படி திருத்தத்திற்குப் பின்னர் இந்திய தண்டனைச் சட்டத்தில் சொத்து அடையாளக் குறி சம்பந்தமான குற்றங்களே செயலாக்கத்தில் உள்ளன. வணிகக் குறி சம்பந்தமான குற்றங்கள் மேற்படி வணிக மற்றும் வணிகச் சரக்குச் சட்டத்தால் மேற்கண்டவாறு நீக்கப்பட்டு விட்டன.

சொத்து அடையாளக் குறி - பிரிவு 479 கூறும் வரையறை:

பிரிவு 479 : அசையும் பொருட்களின் மீது அவை யாருக்குச்

சொந்தமானவை என்பதைக் காண்பிக்கும் பொருட்டு இடப்படும் ஒரு குறி 'சொத்து அடையாளக் குறி' என்பப்படுகிறது.

பிரிவு 479 உணர்த்தும் பொருள்: ஒரு அசையும் பொருள், ஒருவருக்குச் சொந்தமானது என்பதைக் காண்பிக்கும் வகையில் அந்தப் பொருளின் மீது குறிகள் இடப்படுவது வழக்கம். ஒருவர் பெயரின் முதல் எழுத்துக்களையோ அல்லது வேறு அடையாளக் குறிகளையோ பெட்டி, சாமான்கள், கட்டுகள், மூட்டைகள், பாத்திரங்கள் ஆகியவை மீது எழுதி அல்லது பதித்து அவை இன்னாருக்குச் சொந்தமானவை என்பதை காண்பிக்கின்றோம். இவ்வாறு பொருட்களின் உரிமையாளரைச் சுட்டிக் காண்பிப்பதற்காக இடப்படும் குறி, மேற்படி சொத்து அடையாளக் குறியாகும்.

பொய்யான சொத்து அடையாளக் குறியை பயன்படுத்தல் (Using a false property mark) - பிரிவு 481:

பிரிவு 481 : ஒருவருடையனவற்றை மற்றொருவருடையன என்று பிறர் நம்பும்படியாக அசையும் பொருட்கள், சாமான்கள், அந்தப் பொருட்களுடைய பெட்டகங்கள், மூட்டைகள் ஆகியவற்றின் மீது குறிகள் இடுவது அல்லது பயன்படுத்துவது, "பொய்யான சொத்து அடையாளக் குறியை பயன்படுத்துவது' எனும் குற்றமாகும்.

பிரிவு 482 : மேற்கண்டவாறு பொய்யான சொத்து அடையாளக் குறியை பயன்படுத்துகிற எவரொருவருக்கும், அவர் மோசடி செய்யும் கருத்துடன் நடந்து கொள்ளவில்லை என்று மெய்ப்பிக்கப்பட வில்லையானால், ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

சொத்து அடையாளக் குறி சம்பந்தமான பிற குற்ற நிலைகள்:

பிரிவு 483-ன்படி, மற்றொருவரால் பயன்படுத்தப்படும் சொத்து அடைய்ாளக் குறியை கள்ளத் தயாரிப்பு செய்யும் (Counterfeiting a property mark used by another) எவரொருவருக்கும் இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 484-ன்படி, பொது ஊழியரால் பயன்படுத்தப்படும் ஒரு சொத்து அடையாளக் குறியை கள்ளத் தயாரிப்புச் செய்யும் (Counterfeiting a mark used by a public servant) எவரொருவருக்கும், மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 485-ன்படி, ஒரு சொத்து அடையாளக் குறியைக் கள்ளத் தனமான தயாரிப்பதற்கான கருவி எதையேனும் செய்யும் அல்லது தம் வசம்

வைத்திருக்கும் (making or possession of any instrument for counterfeiting a property mark) எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 486-ன்படி, கள்ளத்தனமான சொத்து அடையாளக் குறியிட்ட சரக்குகளை விற்பனை செய்யும் (Selling goods marked with a counterfeit mark) எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 487-ன்படி, சரக்குகளைக் கொண்ட பெட்டகம் எதன் மீதும் ஒரு பொய்யான அடையாளக் குறியை இடும் (making a false mark upon any receptacle containing goods) எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 488-ன்படி, மேற்கண்டவாறான பொய்யான அடையாளக் குறி எதையும் பயன்படுத்துகிற (making use of any such false mark) எவரொருவருக்கும் மேற்படி பிரிவு 487-ன் கீழான குற்றத்தை புரிந்தது போலவே தண்டனை விதிக்கப்படும்.

பிரிவு 489-ன்படி, தீங்கு விளைவிக்கும் கருத்துடன் சொத்து அடையாளக் குறியில் மாற்றம் செய்யும் (Tampering with property mark with intent to cause injury) எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

(ஊ) பணத் தாள்கள் மற்றும் வங்கித் தாள்கள் சம்பந்தமான குற்றங்கள்
[Offences relating to Currency Notes and Bank Notes]

(பிரிவுகள் 489-A முதல் 489-E முடிய)

1. Counterfeit currency notes - Write short notes. (கள்ள நோட்டு சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

"Currency" என்பதை பணம், ரூபாய் என்று கூறலாம். "Currency Note" என்பதை பணத் தாள், நாணயத் தாள், ரூபாய் நோட்டு என்று கூறலாம். இவை அரசால் வெளியிடப்படுகின்றன. அதுபோல், செலாவணி செய்யத் தக்க வகையில் வங்கியால் வெளியிடப்படும் தாள்கள் 'வங்கித் தாள்கள்' (Bank Notes) எனப்படுகின்றன. ஒரு நாட்டின் பொருளாதார நிலைக்கு அந்நாட்டின் நாணயச் செலாவணியே அடிப்படையாகும். மேற்கண்ட பணத் தாள்களும் வங்கித் தாள்களும் கள்ளத்தனமாக (Counterfeit) தயாரிக்கப்படும் பொழுது, அது நாட்டின் பொருளாதாரத்தையே சீர்குலையச் செய்கின்றன. எனவே, இதைக் கடுமையான குற்றமென இந்திய தண்டனைச் சட்டம் தனது 489-A முதல் 489-E வரையிலான சட்டப் பிரிவுகளின் வழியாக விதிக்கின்றன.

அச்சட்டப் பிரிவுகள் வருமாறு:

பிரிவு 489-A-ன்படி, பணத்தாள்கள் அல்லது வங்கித் தாள்களைக் கள்ளத்தனமாக தயாரிக்கும் (Counterfeiting currency notes or bank notes) எவரொருவருக்கும் ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

மேற்படி பிரிவு **கள்ளப் பணத்தாள் (அதாவது கள்ள நோட்டு) அல்லது கள்ள வங்கித் தாள்** தயாரிக்கிற அல்லது அதை தயாரிக்கும் செய்முறையில் எந்தப் பகுதியையாவது அறிந்தே செய்கிற கயவர்களைத் தண்டிக்கிறது.

பிரிவு 489-B-ன்படி, பொய்யாகப் புனையப்பட்ட அல்லது கள்ளத் தனமாக தயாரிக்கப்பட்ட பணத் தாள்களை அல்லது வங்கித் தாள்களை உண்மையானவை போல பயன்படுத்தும் (using as genuine, forged or counterfeit currency notes or bank notes) எவரொருவருக்கும் ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ விதிக்கப்படும். மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

பிரிவு 489-C-யின்படி, பொய்யாகப் புனையப்பட்ட அல்லது

கள்ளத்தனமாக தயாரிக்கப்பட்ட பணத் தாள்களை அல்லது வங்கித் தாள்களை கைவசம் வைத்திருக்கும் (possession of forged or counterfeit currency note or bank notes) எவரொருவருக்கும் ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 489-D-யின்படி, பணத் தாள்களை அல்லது வங்கித் தாள்களை பொய்யாகப் புனைய அல்லது கள்ளத்தனமாக தயாரிக்கக் கருவிகளை அல்லது மூலப்பொருட்களைச் செய்யும் அல்லது கைவசம் வைத்திருக்கும் (making or possessing instruments or materials for forging or counterfeiting currency notes or bank notes) எவரொருவருக்கும் பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 489-E(1)-ன்படி, பணத் தாள்கள் அல்லது வங்கித் தாள்கள் போலத் தோன்றும் ஆவணங்களைச் செய்யும் அல்லது பயன்படுத்தும் (making or using documents resembling currency notes or bank notes) எவரொருவருக்கும் நூறு ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்படும்.

(2) மேற்படி ஆவணத்தின் மீது காணப்படுகிற பெயருக்கு உரியவர் எவரேனும் அதை அச்சிட்டோரின் அல்லது தயாரித்தவரின் பெயரையும் முகவரியையும் ஒரு காவல் அலுவலருக்கு, அவ்வாறு கோரப்பட்டதன் பேரில், சட்டப்படியான காரணமின்றி வெளிப்படுத்த மறுத்தால், அவருக்கு இருநூறு ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்படும்.

(எ) மண வாழ்க்கை சம்பந்தமான குற்றங்கள்
[Offences relating to Marriage]

(பிரிவுகள் 493 முதல் 498-A முடிய)

1. Discuss the offences relating to Marriage. (திருமண சம்பந்தமாக குற்றங்களை விவாதிக்க.)

(அல்லது)

Discuss the various offences relating to marriage as provided in Chapter XX of the Indian Penal Code. (இந்திய தண்டனைச் சட்டத்தின் 20-வது அத்தியாயத்தில் திருமணம் குறித்த பல்வேறு குற்றங்களை எடுத்தியம்புக.)

(அல்லது)

What is Bigamy? State briefly the offences relating to marriage under Indian Penal Code. (இருதுணை மணம் என்றால் என்ன? இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் திருமணம் குறித்த குற்றங்களை சுருக்கமாக எடுத்துரைக்க.)

(அல்லது)

Bigamy - Write short notes. (இருமணம் என்னும் குற்றம் - சிறு குறிப்பு வரைக.)

(அல்லது)

Distinguish between
Adultery and Rape.

வேறுபடுத்துக
பிறன்மனை புணர்தல் மற்றும் வன்புணர்ச்சி.

முன்னுரை:

திருமணம் என்பது சமுதாயம் நிலைக்க வழிகோலும் அஸ்திவாரம் ஆகும். திருமண வாழ்வில் பிரச்சனைகள் தோன்றினால் குடும்பத்தில் மொத்த மகிழ்ச்சி கெடுவதோடு மட்டுமல்லாமல் நற்சமுதாய வளர்ச்சியும் பாதிக்கப்படுகிறது. ஆகவே சட்டமானது உரிமையியல் (Civil) வழிகளில் தீர்வுகளைக் கொடுப்பதன் மூலமாகவும், குற்றவியல் (Criminal) வழிகளில் தண்டனைகளைக் கொடுப்பதன் மூலமாகவும் திருமண வாழ்க்கையைப் பாதுகாக்கிறது.

திருமணக் குற்றங்களை பின்வருமாறு வகைப்படுத்தலாம்:

1. பாசாங்கான அல்லது செல்லத்தகா திருமணங்கள் (Mock or invalid marriages) **(பிரிவுகள் 493 மற்றும் 496)**

2. இருமணம் (Bigamy) **(பிரிவுகள் 494 மற்றும் 495)**

3. பிறன்மனை புணர்தல் (Adultery) **(பிரிவு 497)**

4. குற்றக் கருத்துடன் மணமான பெண்ணை ஆசை காட்டி கடத்திச் செல்லல் (Criminal Elopement - Seduction) **(பிரிவு 498)**

5. கணவர் அல்லது கணவரது உறவினர்களால் கொடுமை (Cruelty by husband or relatives of husband) **(பிரிவு 498-A)**[1]

(1) பாசாங்கான அல்லது செல்லத்தகா திருமணங்கள் [Mock or Invalid Marriages]

இத்தலைப்பின் கீழ் நாம் இரு குற்றங்களை பிரிவுகள் 493 மற்றும் 496 ஆகியவற்றின் வழியாகக் காண உள்ளோம்.

பிரிவு 493:

சட்டபூர்வமாகத் திருமணம் செய்து வைக்கப்பட்டதாக நம்புமாறு வஞ்சனையாகத் தூண்டி ஆடவர் ஒருவரால் செய்யப்படும் உடனுறைவு அல்லது பாலியல் உடலுறவு குற்றமாகும் (Cohabitation or sexual intercouse caused by a man deceitfully inducing a belief of lawful marriage).

மேற்படி குற்றத்தின் உட்கூறுகளும் தண்டனையும் (Ingredients and Punishment): (1) தமக்குச் சட்டப்படி திருமணம் செய்து வைக்கப்படாத பெண்ணை வஞ்சித்து, தனக்கும் அவருக்கும் திருமணம் செய்து வைக்கப்பட்டுள்ளது என்று நம்பவைத்தல். (2) அத்தகைய நம்பிக்கையின் பேரில் தன்னுடன் கணவன்-மனைவியாக உடனுறையச் (வாழ்விக்கச்) (Cohabitation) செய்தல் அல்லது பாலியல் உடலுறவு (Sexual intercourse) கொள்ளும்படி செய்தல். (3) அப்படிச் செய்கிற எவரொரு ஆடவருக்கும் பத்தாண்டு காலம் வரை சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

பிரிவு 496:

சட்டபூர்வமல்லாத திருமணத்திற்காக மோசடியாகச் செய்யப்பட்ட திருமணச் சடங்கில் பங்கெடுத்துக் கொள்ளல் குற்றமாகும் (Marriage ceremony fradulently gone through without lawful marriage)

மேற்படி குற்றத்தின் உட்கூறுகளும் தண்டனையும் (Ingredients and Punishments): (1) தனது திருமணம் தன்னை சட்டப்படி திருமணம் செய்து கொண்டவராக ஆக்காது என்று அறிந்திருந்தும், திருமணச் சடங்கில்

1. 1983-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தால் மேற்படி பிரிவு 498-A இந்திய தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்பட்டது.

பங்கேற்றல் (2) அவ்வாறு திருமணம் செய்து கொள்பவர் நேர்மையற்ற முறையில் அல்லது மோசடி செய்யும் கருத்துடன் செயல்பட்டிருக்க வேண்டும். (3) அவருக்கு பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை யும் அபராதமும் விதிக்கப்படும்.

(2) இருமணம் [Bigamy]

இருமணம் - பிரிவு 494 கூறும் வரையறை:

பிரிவு 494 : கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கும் பொழுது அவர்களில் யாரேனும் வேறு திருமணம் செய்து கொண்டால், அந்த வேறு திருமணம் கணவன் அல்லது மனைவி உயிருடன் இருக்கையில் செய்யப்படுவதால் இல்லாநிலையது (void). இவ்வாறு திருமணம் புரிந்து கொள்ளும் எவரொருவருக்கும் ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

விதிவிலக்குகள்:

1. தகுதி வாய்ந்த நீதிமன்றம் முதல் திருமணம் இல்லாநிலையது என தீர்ப்பு கூறியிருப்பின், அல்லது

2. முந்திய கணவன் அல்லது மனைவி உயிரோடு இருக்கும்போது, எவராவது திருமணம் செய்து கொண்டால், அந்தப் பிந்திய திருமணம் நடந்த போது, அத்தகைய கணவன் அல்லது மனைவி ஏழு ஆண்டுக் காலத்திற்குத் தொடர்ந்து அவருடன் இல்லாமலிருந்து, மேலும் அந்த காலத்தில் உயிரோடு இருந்தார் என்று அறியப்படாமலிருந்து, அப்பிந்திய திருமணத்தைச் செய்து கொண்டவர் அத்திருமணம் நடக்கும் முன்பே, தமக்குத் தெரிந்துள்ள சங்கதிகளின் உண்மை நிலவரத்தைத் தாம் திருமணம் செய்து கொள்கிறவரிடம் தாம் அறிந்த வரையில் தெரிவித்திருப்பின்,

மேற்கண்ட பிரிவு பொருந்தாது.

முக்கியமான வழக்குகள்:

R. v. Tolson[1]

இவ்வழக்கில் திருமதி டால்சன், A என்பவரை 1880-ல் மணம் புரிந்தார். மேற்படி A, 1881-ல் அமெரிக்கா செல்லும்போது கடலில் மூழ்கிவிட்டதாக தகவல் தெரிய வந்தது. அதன்பின், 1887-ல் திருமதி டால்சன் மற்றொருவரை தன் கணவனாக மணம் புரிந்து கொண்டார். ஆனால் எதிர்பார்த்தது போல் A இறந்திருக்கவில்லை. அவர் திரும்பி வந்து தன் மனைவியான திருமதி டால்சன் மீது இருமணக் குற்றத்திற்கான வழக்குத் தொடர்ந்தார்.

விசாரணையின் போது, திருமதி டால்சன், தன் கணவன் காணாமல் போய் ஏழாண்டுகள் வரை அவரைப்பற்றி எந்தத் தகவலும் கிடைக்கப்

1. 1889 23 Q.R.D. 168 C.C.R.

பெறாமல், இறுதியில் தனது கணவர் இறந்துவிட்டதாக நம்பி, வேறு மணம் புரிந்து கொண்டுள்ளார், எனக் கூறப்பட்டது. வேறு மணம் புரிய இது ஒரு விதிவிலக்காகும். ஆகவே நீதிமன்றம் திருமதி டால்சனை விடுதலை செய்தது.

Gopal Lal v. State of Rajasthan[1]

திருமணங்கள் சட்டப்படி செல்லத்தகு தன்மை பெறுவதற்கு சில கட்டுவரம்புகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். அப்படி பூர்த்தி செய்யப் படாமல் போனால் அத்திருமணம் செல்லா மற்றும் இல்லாநிலையை அடையும். ஒருவர் செய்து கொள்ளும் இரண்டாவது திருமணம் சட்டப்படி செல்லுபடியானால்தான் இருமணக் குற்றம் உண்டாகும்.

இதில், கோபால் லால் ஏற்கனவே திருமணமான ஓர் இந்து; இவர் மீண்டும் வேறொரு பெண்ணை மணம் புரிந்து கொண்டார். (அதாவது முதல் மனைவி உயிருடன் உள்ள பொழுதே). ஆனால், அவ்வாறு செய்து கொண்ட இரண்டாவது திருமணம் இந்து திருமணச் சட்டம் பிரிவு 17-ன்படி இல்லாநிலையதாகியது (void). (பிரிவு 17-தேவையான முக்கிய சட்ட சடங்குகள் இல்லாமல் நடக்கும் திருமணம் இல்லாநிலையது). ஆகவே, இங்கு கோபால் லால் செய்து கொண்ட இரண்டாவது திருமணம் சட்டப்படி செல்லுபடி ஆகாததால், அவர் இருமணக் குற்றம் செய்யவில்லை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

முதல் திருமணம் செல்லுபடியாகாது என்றால், இரண்டாவது திருமணம் புரிந்து கொள்வது குற்றமாகாது. எடுத்துக்காட்டாக, A, B-யை தடுக்கப்பட்ட உறவுமுறையில் திருமணம் செய்து கொண்டான். இத்திருமணம் சட்டப்படி செல்லாது. பின்னர் A, C-யை திருமணம் செய்து கொண்டான். இங்கு B-யுடன் செய்து கொண்ட திருமணம் மேற் கண்டவாறு தடுக்கப்பட்ட உறவுமுறையில் செய்து கொள்ளப்பட்டதால், செல்லுபடி ஆகாது. எனவே, C-யுடன் செய்து கொண்ட திருமணந்தான் செல்லும். இதனால் A இருமணக் குற்றம் புரியவில்லை.

Skinner v. Orde[2]

இவ்வழக்கில் ஒரு கிறித்துவர் முதல் திருமணம் அமலிலிருக்கும் போது முஸ்லீமாக மதம் மாறுவதன் மூலம் வேறொரு மணம் புரிந்து கொண்டாலும், இருமணக் குற்றத்திலிருந்து தப்பமுடியாது எனத் தீர்ப்பானது.

பிரிவு 495:

முந்திய திருமணத்தைப் பற்றிய உண்மையைப் பிந்திய திருமணத்தைச் செய்து கொள்கிறவரிடம் மறைத்து வைத்து, பிரிவு 494-ன் படியிலான இருமணக் குற்றத்தைச் செய்கிற எவரொருவருக்கும் பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்.

1. A.I.R. 1979 S.C. 713 : 1979 Crl. L.J. 652
2. (1871) 14 M.I.A. 309, 324

(3) பிறன்மனை புணர்தல் [Adultery]

பிறன்மனை புணர்தல் - பிரிவு 497-ன் உட்கூறுகள் (Ingredients):

ஒரு நபர் பிறன்மணை புணர்ந்ததாக எப்பொழுது தண்டிக்கப்படுகிறார் என்றால் அவர்,

1. ஒரு பெண்ணுடன் உடலுறவு கொள்ள வேண்டும்;
2. அப்பெண் வேறு ஒருவரின் மனைவியாக இருக்க வேண்டும்;
3. அப்பெண் வேறு ஒருவரின் மனைவி என அவர் அறிந்திருக்க வேண்டும் அல்லது அவ்வாறு நம்புவதற்கேற்ற காரணத்தை அவர் கொண்டிருக்க வேண்டும்;
4. அப்பெண்ணின் கணவருடைய சம்மதமோ அல்லது ஆதரவோ இல்லாமல் இருக்க வேண்டும்;
5. அப்படிப்பட்ட உடலுறவு வன்புணர்ச்சிக் குற்றம் ஆகாமல் இருக்க வேண்டும்.

தண்டனை:

பிறன்மனை புணரும் குற்றம் செய்கிற எவரொருவருக்கும் அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும். அத்தகைய சந்தர்ப்பத்தில் அந்த மனைவி ஓர் குற்ற உடந்தைக் குற்றவாளியாகத் தண்டிப்பதற்கு உரியவராக மாட்டார்.

ஆங்கிலச் சட்டப்படி, பிறன்மனை புணர்தல் ஒரு குற்றமல்ல. அது ஒரு தீங்கு (Torts). இங்கு குற்றவாளி தண்டனைக்குள்ளாக வழி இல்லை. மாறாக கணவன் நஷ்டஈட்டிற்காக குற்றவாளியை எதிர்த்து வழக்குத் தொடரலாம்.

Yusuf Abdul Aziz v. State of Bombay[1] - பால் (Sex) அடிப்படையில் வேறுபாடு காணப்படக்கூடாது என்று இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 15-வது ஷரத்து கூறுகிறது. ஆனால் பிறன்மனை புணரும் குற்றத்தில் பெண்கள் தண்டிக்கப்படக் கூடாது என்ற கூறு மேற்கண்ட ஷரத்து 15-அய் மீறுவதாக உள்ளது; இதனால் பிரிவு 497-அய் அரசியலமைப்பற்றதென விளம்ப வேண்டுமெனக் கோரி மேற்படி வழக்கிடப்பட்டது. இவ்வழக்கை விசாரித்த **தலைமை நீதியரசர் சோக்லா** தனது தீர்ப்பில் ஷரத்து 15-ன் உட்பொருள் யாதெனில், பால் அடிப்படையில் வேறுபாடு காணாமல் பெண்களைப் பாதுகாக்கத் தனிச் சட்டங்கள் இயற்றப்பட வேண்டும் என்பதுதான். மேலும் பெண்கள் இச்சமுதாயத்தில் நலிந்த நிலையில் உள்ளனர். ஆகவே பிறன்மனைப் புணரும் குற்றத்தில்

1. A.I.R. 1951 Bom. 472 confirmed by the Supreme Court in 1954 S.C.J. 385 : 1954 S.C.R. 930

பெண்கள் குற்ற உடந்தைக்காக தண்டிக்கப்படக்கூடாது; எனவே பிரிவு 497 அரசியலமைப்பிற்குட்பட்டதுதான், என்று கூறினார்.

கணவனின் மறைமுக ஆதரவுடன் (connivance) பிறன்மனை புணர்வுக் குற்றத்திற்கு அவனது மனைவியை உட்படுத்தினால், குற்றவாளி, குற்றப் பொறுப்புக்கு ஆளாக மாட்டான் என்று **Allen v. Allen**[1] வழக்கில் தீர்ப்புக் கூறப்பட்டது.

பிறன்மனை புணர்தல், வன்புணர்ச்சி (Adultery and Rape) - வேறுபாடு:

1. பிறன்மனை புணர்தலில் பெண் திருமணமானவளாக இருக்க வேண்டும்; வன்புணர்ச்சியில் திருமணமாகியோ அல்லது ஆகாமலோ இருக்கலாம்.

2. பிறன்மனை புணர்தலில் பெண்ணின் கணவனின் சம்மதம் இல்லாமல்; வன்புணர்ச்சியில் பெண்ணின் சம்மதம் இல்லாமல், மேலும் அவள் பதினாறு வயதிற்குட்பட்டவளாக இருப்பின் அவள் சம்மதம் பெற்றோ அல்லது பெறாமலோ.

3. பிறன்மனை புணர்தலில் பெண்ணின் கணவன் புகார் கொடுத்தல்; வன்புணர்ச்சியில் பாதிக்கப்பட்ட பெண்ணே புகார் கொடுத்தல்.

(4) குற்றக் கருத்துடன் மணமான பெண்ணை ஆசை காட்டி கடத்திச் செல்லல் [Criminal Elopement - Seduction]

பிரிவு 498 : பிறருடைய மனைவியாக இருக்கிற, அல்லது பிறர் ஒருவரின் மனைவி என்று தாம் அறிந்த அல்லது நம்பக் காரணம் பெற்றிருக்கிற எந்தப் பெண்ணையும், அவள் கணவனிடமிருந்து அல்லது அவர் சார்பாக அவளைத் தம் பாதுகாப்பில் வைத்திருக்கும் எவரிடமிருந்தும், வேறு ஒருவருடன் கள்ளத்தனமாக உடலுறவு செய்விக்கலாம் என்ற கருத்துடன் கொண்டு செல்வதோ அல்லது ஆசை காட்டி கடத்திச் செல்வதோ அல்லது அக்கருத்துடன் அப்பெண்ணை மறைத்து வைப்பதோ அல்லது நிறுத்தி வைப்பதோ குற்றமாகும். இக்குற்றம் புரியும் எவரொருவருக்கும் இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

(5) கணவர் அல்லது கணவரது உறவினர்களால் கொடுமை (அல்லது) துன்புறுத்தல் [Cruelty by Husband or Relatives of Husband]

புதிய சட்டப் பிரிவு:

ஒரு பெண், அவரது கணவரால், அல்லது கணவரது உறவினர்களால்

1. 30 L.J. Mat. 2

கொடுமைப்படுத்தப்படல் (cruelty) என்பது மிகவும் கண்டிக்கத்தக்கதொரு விஷயமாகும். அப்படிப்பட்ட கொடுமை எத்தகையது, அதற்குண்டான தண்டனை யாது என்பது குறித்து விளக்கமளிப்பதற்காக இந்திய தண்டனைச் சட்டத்தில் 498-A எனும் சட்டப்பிரிவு 1983-ஆம் ஆண்டின் திருத்தச் சட்டத்தால் சேர்க்கப்பட்டது.

பிரிவு 498-A கூறுவதாவது:

ஒரு பெண்ணின் கணவரோ அல்லது அவரது உறவினர்களோ அப்பெண்ணை கொடுமைக்குள்ளாக்கினால், சம்பந்தப்பட்ட நபருக்கு மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம் விதிக்கப்படும்.

கொடுமை (Cruelty) - விளக்கம்:

கொடுமை என்றால்,

(a) ஒரு பெண்ணை தற்கொலை செய்து கொள்ள தூண்டுமளவிற் குண்டான செயலை விருப்பத்துடன் செய்தல் (wilful conduct) அல்லது அப்பெண்ணின் உடல்நலத்திற்கு (மனம் அல்லது உடல்) அல்லது வாழ்விற்கு தீங்கு அல்லது அபாயம் விளைவித்தல், அல்லது

(b) சொத்து அல்லது பண மதிப்பு கொண்ட பத்திரம் எதற்காகவும் செய்யப்படும் சட்ட முரணான கோரிக்கையை நிறைவேற்றித் தர வற்புறுத்தும் நோக்குடன் ஒரு பெண்ணையோ அல்லது அவர் சார்ந்த மற்றவர்களையோ தொந்தரவு (harassment) செய்தல்.

Anil Kumar v. State of Punjab[1] - பிரிவு 498-A-யில் 'உறவினர்கள்' (relatives) எனும் பதம் வருகிறது. ஆனால் அதில் எவரெல்லாம் அடங்குவர் என்பதற்கான வரையறை இந்திய தண்டனைச் சட்டத்தில் தரப்படவில்லை. எனவே, வழக்கு வழிச் சட்டங்களை ஆராய்ந்து பார்க்கையில், 'உறவினர்கள்' என்ற பதத்தில் பொதுவாக கணவனின் பெற்றோர்கள், சகோதரிகள், சகோதரர்கள் ஆகியோர் அடங்குகின்றனர். எனவே இவர்கள் மீது மேற்படி பிரிவு 498-A-யின் கீழ் மேற்படி குற்றத்திற்காக குற்ற வழக்கிடலாம். மேற்படி வழக்கில் உறவினரல்லாத ஆனால் கணவரின் நண்பராக இருக்கும் நபர் ஒருவர் மேற்படி 'உறவினர்கள்' என்ற பதத்தில் வருவாரா என்ற வினா எழுந்த பொழுது, கணவரின் நண்பர், கணவரின் உறவினராக மாட்டார்; எனவே மேற்படி குற்றத்திற்காக அவர் மீது குற்ற வழக்கிட முடியாது, என்று நீதிமன்றம் கூறியது.

2. (a) State the ingredients of offence of enticement of a married woman. How does it differ from kidnapping?

(b) Can a married woman, who is enticed, be punished as an abettor of the offence of enticement?

1. 1997 (2) AI Cri.L.R. 638 (P&H)

(அ) திருமணம் ஆன பெண்ணை பசப்பி கடத்திச் செல்லுதல் என்ற குற்றத்தின் கூறுகளைக் கூறுக. இது ஆட்கடத்தலிலிருந்து எவ்வாறு வேறுபடுகிறது?

(ஆ) பசப்பி கடத்திச் செல்லப்பட்ட திருமணம் ஆன பெண்ணை மேற்படி குற்றத்தின் உடந்தையாளராக தண்டனை வழங்க முடியுமா?

(a) திருமணம் ஆன பெண்ணை பசப்பி (ஆசை காட்டி) கடத்திச் செல்லல் - கூறுகள்:

(முந்தைய வினாவின் விடையில் (4)-வது தலைப்பில் காண்க)

இது ஆட்கடத்தலிலிருந்து வேறுபடும் விதம்:

ஆட்கடத்தல் என்பது, பொதுவாக சிறுவர்களையும், குழந்தைகளையும் கடத்துவதைக் குறிப்பிடுகின்றது. ஆனால் மேற்படி பிரிவு 498-ன்படி, திருமணம் ஆன பெண்கள் மட்டுமே பசப்பி கடத்திச் செல்லப்படுகின்றனர். ஆட்கடத்தலில் கடத்தப்படுபவரின் அல்லது அவரது சார்பாக சம்மதம் தர சட்டப்படி அதிகாரம் பெற்றவரின் சம்மதமின்மை மிகவும் முக்கியம். ஆனால், திருமணமான பெண்ணை பசப்பிக் கடத்திச் செல்லலில் சம்பந்தப்பட்ட பெண்ணின் சம்மதம் முக்கியமில்லை. அவள் சம்மதத்துடன் இணங்கி வந்திருந்தாலும், பிரிவு 498-ன்படி குற்றமே.

(b) பசப்பிக் கடத்திச் செல்லப்பட்ட திருமணமான பெண்ணை மேற்படி குற்றத்தின் உடந்தையாளராக தண்டனை வழங்க முடியாது. இதன் காரணத்தை மேற்படி 498-வது பிரிவே உணர்த்துகிறது.

3. Cruelty by husband or relatives of husband - Write short notes.(கணவர் அல்லது கணவரது உறவினர்களால் துன்புறுத்தல் - சிறு குறிப்பு வரைக)

(வினா எண் 1-ன் விடையில் 5-வது தலைப்பில் காண்க)

(ஏ) மதம் சம்பந்தமான குற்றங்கள்
[Offences relating to Religion]
(பிரிவுகள் 295 முதல் 298 முடிய)

1. State briefly the provisions of the Indian Penal Code regarding "Offences relating to Religion". What changes are required in the existing law? (மதம் சம்பந்தமான குற்றங்களை குறித்து இந்திய தண்டனைச் சட்டத்தின் வகைமுறைகளை சுருக்கமாக எடுத்துக் கூறவும். தற்பொழுதைய சட்டத்தில் என்ன மாற்றங்கள் தேவை?)

(அல்லது)

"The object of Chapter XV of the Indian Penal Code is to allow every man to follow his own religion and that no man should be allowed to insult the religion of another" - Explain this statement. Do you think that the existing provisions are sufficient to meet out the needs of the time? ("ஒவ்வொரு மனிதரும் தங்களுக்கு சொந்தமான மதத்தை பின்பற்றுவதை உறுதி செய்வதும் எந்த மனிதரும் மற்றவர்களின் மதத்தை புண்படுத்தக் கூடியது என்பதுமே இந்திய தண்டனையியல் சட்டத்தின் அத்தியாயம் 15-ன் நோக்கமாகும். இக்கூற்றை ஆராய்க. தற்போதுள்ள வழிமுறைகள் தற்காலத்தின் தேவைக்கு போதுமானவை என தாங்கள் கருதுகின்றீர்களா?)

(அல்லது)

Enumerate the various offences relating to religion as provided under the Indian Penal Code. Do you think these provisions are sufficient to cope up with the need of the time? Give reasons. (இந்திய தண்டனைச் சட்டத்தில் கூறியுள்ளபடி மதங்கள் குறித்த பல்வேறு குற்றங்களை எடுத்தியம்புக. தற்பொழுதைய தேவைகளுக்கு இந்த வழிமுறைகள் போதுமானவை என தாங்கள் கருதுகிறீர்களா? காரணங்கள் தருக.)

முன்னுரை:

இந்தியா ஒரு மதச் சார்பற்ற நாடாக இருப்பினும், குடிமக்களின் மத உணர்வுகளை மதித்து, அவர்கள் தாங்கள் விரும்பிய எந்த மதத்தையும் பின்பற்ற அவர்களுக்கு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 25 முதல் 28 வரையுள்ள ஷரத்துகளின் வழியாக உரிமை உள்ளது. எனவே, ஒவ்வொரு மனிதனும் தான் விரும்பிய மதத்தைப் பின்பற்ற அவனுக்கு சர்வ சுதந்திர உரிமை உண்டு. ஒருவனுக்கு, மற்றவனது மதத்தை பழிக்க உரிமை கிடையாது. அப்படி பழித்தல், அவமதித்தல் ஆகியவை இந்திய தண்டனைச் சட்டத்தின்படி தண்டிப்பதற்குரிய குற்றங்களாகும்.

மதம் சம்பந்தமான குற்றங்களின் வகைப்பாடு:

மதம் சம்பந்தமான குற்றங்களை இந்திய தண்டனைச் சட்டமானது

தனது 295 முதல் 298 வரையிலான அய்ந்து சட்டப் பிரிவுகளின் வாயிலாக விளக்குகிறது. அந்த அய்ந்து சட்டப் பிரிவுகளையும் பின்வரும் மூன்று தலைப்புகளின் கீழ் வகைப்படுத்தலாம்.

1. வழிபாட்டிற்குரிய இடங்களின் அல்லது பொருள்களின் புனிதத் தன்மையைக் கெடுத்தல் (Defilement of places of worship or objects of veneration) **(பிரிவுகள் 295 மற்றும் 297).**

2. மத உணர்வுகளை அவமதித்தல் (Outraging the religious feelings) **(பிரிவுகள் 295-A மற்றும் 298).**

3. மதக் கூட்டங்களுக்கு இடையூறு விளைவித்தல் (Disturbing religious assemblies) **(பிரிவு 296).**

இவற்றை ஒன்றன்பின் ஒன்றாக பின்வருமாறு சற்று விளக்கமாகக் காண்போமா?

1. வழிபாட்டிற்குரிய இடங்களின் அல்லது பொருள்களின் புனிதத் தன்மையைக் கெடுத்தல் - பிரிவுகள் 295 மற்றும் 297

பிரிவு 295 : ஒரு வகுப்பினரால் புனிதமாகக் கருதப்படும் ஒரு வழிபாட்டிடத்தை அல்லது ஒரு பொருளை, அத்தகைய வகுப்பினரின் மதத்தை நிந்திக்கும் கருத்துடன் அல்லது அவர்களின் மதம் நிந்திக்கப் படும் என்று அறிந்திருந்தும் அழிக்கிற, சிதைக்கிற அல்லது தீட்டுப்படுத்துகிற எவரொருவருக்கும் இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

இந்துக்களுக்கு கடவுளின் சிலை வழிபடற்குரிய பொருள்; இஸ்லாமியர்களுக்கு இஸ்லாமியத் துறவிகளின் சமாதி வழிபடற்குரிய பொருள்.

S. Veerabadran Chettiar v. E.V. Ramaswami Naicker and others (Ganesa Idol Case)[1] - **இது கணபதி விக்கிரக வழக்கு** என அழைக்கப்படுகிறது. இவ்வழக்கில் திருச்சி டவுன் ஹால் மைதானத்தில் ஈ.வெரா. இந்து சமூகத்தின் மத உணர்வுகளை தாம் பழிப்பதாகக் கூறி ஒரு சிறிய விநாயகர் சிலையை பொதுமக்கள் முன்னிலையில் கீழே போட்டு உடைத்தார். இவர் மேற்படி பிரிவு 295-ன் கீழ் தண்டிக்கப்பட்டார். **"கடவுள் சிலை சிறிதாக இருப்பினும், அதன் புனிதத்தன்மைதான் பெரிது"** என்பது இவ்வழக்கில் நிலைநிறுத்தப்பட்டது.

பிரிவு 297 : வழிபாட்டிடம் அல்லது இடுகாடு அல்லது ஈமச்சடங்குகள் செய்வதற்காக ஒதுக்கப் பெற்றுள்ள இடங்கள் அல்லது

1. A.I.R. 1958 S.C. 1032 : 1958 Cri. L.J. 1565

இறந்தவர்களின் அஸ்தியை வைப்பதற்கான இடம் எதிலும் ஒருவருடைய உணர்வுகளை புண்படுத்தும் அல்லது ஒருவருடைய உணர்வுகள் அநேகமாக புண்படக் கூடுமென்று அல்லது அதனால் ஒருவருடைய மதம் அநேகமாக இழிவுபடுத்தப்படக் கூடுமென்று அறிந்திருந்தும் அவற்றில் அத்துமீறி நுழைவது குற்றமாகும், அல்லது

ஒரு மனித பிரேதத்திற்கு அவமதிப்பு எதையும் செய்தாலும், அல்லது ஈமச்சடங்குகளை செய்வதற்குக் கூடியுள்ளவர்கள் எவர்களுக்காவது இடையூறு விளைவிக்கும் செயலைப் புரிந்தாலும் குற்றமாகும்.

இக்குற்றம் புரிகிற எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்

Ratna Mudali v. Queen Empress[1] என்ற வழக்கில், இந்து மதத்தைச் சார்ந்த ஒருவன் இஸ்லாமியர்கள் தொழும் ஒரு துறவியின் சமாதிக்கு (Mohammeden Fakir) அருகே உள்ள இடத்தில், இரவில் ஒரு பெண்ணுடன் இரகசியமாக உடலுறவு கொண்டான். இது பிரிவு 297-ன்படி, குற்றமெனப்பட்டது. ஏனெனில், அவனது செயல் இஸ்லாமியர்களின் வழிபாட்டிடத்தில், அவர்களுடைய மத உணர்வுகளை தனது செயல் அநேகமாக புண்படுத்தக் கூடுமென்று அறிந்தும், அதில் அத்துமீறி நுழைந்து, மேற்படி உடலுறவுச் செயலைப் புரிந்துள்ளான், எனப்பட்டது.

2. மத உணர்வுகளை அவமதித்தல் - பிரிவுகள் 295-A மற்றும் 298

பிரிவு 295-A : வாய்மொழியிலான அல்லது எழுத்தாலான சொற்களால், அல்லது சைகைகளால், அல்லது தெரியக்கூடிய உருவ அமைப்புகளால், அல்லது வேறுவிதமாக இந்தியக் குடிமக்களின் ஒரு வகுப்பினரின் மத உணர்வுகளைத் திடுக்கிடும் வகையில் புண்படுத்தும் பொருட்டு, வேண்டுமென்றே குரோதமான கருத்துடன், அந்த வகுப்பினரின் மதத்தையோ அல்லது மத நம்பிக்கைகளையோ நிந்திக்கிற அல்லது நிந்திக்க முயலுகிற எவரொருவருக்கும் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

பிரிவு 298 : ஒருவருடைய மத உணர்வுகளை வேண்டுமென்றே புண்படுத்தும் கருத்துடன், அவரின் காதில்படும்படி ஒரு சொல்லை உபயோகித்தாலும் அல்லது ஒலியை உண்டாக்கினாலும் அல்லது அவர் பார்க்கும்படியாக சைகை காட்டினாலும் அவர் கண் முன் ஒரு பொருளை வைத்தாலும் குற்றமாகும். அப்படிச் செய்கிற எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

1. I.L.R. 10 Mad. 126

3. மதக் கூட்டங்களுக்கு இடையூறு விளைவித்தல் - பிரிவு 296

பிரிவு 296 : மத வழிபாட்டை அல்லது மதச் சடங்குகளைச் செய்வதில் சட்டப்படியாக ஈடுபட்டுள்ள கூட்டம் எதற்கும், தன்னிச்சையாக இடையூறு விளைவிக்கிற எவரொருவருக்கும் ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

Ataullah v. Azimullah[1] இதில் ஒருவன் பொது மசூதியில் தொழும் போது, "அமின்" என உரக்கக் கூவினான். இதற்கு அவன் பிரிவு 295-ன்படி, குற்றப் பொறுப்பாளி ஆக்கப்படவில்லை. ஏனெனில், இது அங்கு தொழுகை செய்யும் கூட்டத்தினருக்கு இடையூறு விளைவித்திருக்க முடியாது என்றும், மேலும் அப்படி கூவியது அவனின் ஆழமான மத உணர்வைக் காட்டுகிறது என்றும் தீர்ப்பளிக்கப்பட்டது.

முடிவுரை:

இந்து மதத்தின் பெயரில் ஆங்காங்கே வன்முறை நடக்கிறது. தீவிரவாதம் தோன்றியுள்ளது. இது நாட்டின் ஒற்றுமையை குலைக்கும் அளவிற்கு சென்று கொண்டுள்ளது. எனவே இதற்கான வகைமுறைகள் இந்திய தண்டனைச் சட்டத்தில் சேர்க்கப்பட வேண்டும். மேலும் தண்டனைகளின் காலத்தை அதிகப்படுத்த வேண்டும்.

1. 12 A. 491

(ஒ) அவதூறு [Defamation]

(பிரிவுகள் 499 முதல் 502 முடிய)

1. Write an essay on defamation according to Indian Penal Code. (இந்திய தண்டனைச் சட்டத்தினைக் கருத்தில் கொண்டு அவதூறு என்னும் குற்றம் குறித்து கட்டுரை ஒன்றினை வரைக.)

(அல்லது)

Explain the ingredients of the offence of defamation. Under what circumstances defamation is not considered as an offence? (அவதூறு குற்றத்தின் இன்றியமையாத கூறுகளை விளக்குக. எந்தச் சூழ்நிலைகளில் அவதூறு ஒரு குற்றமாக கருதப்படுவதில்லை?)

(அல்லது)

What must be proved for conviction for an offence of Defamation? (ஒரு அவதூறுக் குற்றத்திற்கு தண்டனை வழங்க எது நிருபிக்கப்பட வேண்டும்?)

(அல்லது)

What are the defences available to an accused prosecuted for the offence of defamation? (அவதூறு குற்றத்திற்காக குற்ற வழக்கிடப்பட்ட குற்றஞ் சாட்டப்பட்டவர் ஒருவருக்கு கிடைக்கும் எதிர்வாதங்கள் யாவை?)

(அல்லது)

What is defamation under the Indian Penal Code and what are the defences to it with case laws? (அவதூறு என்றால் என்ன? அதற்கே உரிய சிறந்த எதிர்வாதங்களைத் தீர்ப்பு வழிச் சட்டங்களுடன் விளக்குக.)

(அல்லது)

"The ten exceptions to Section 499 state cases in which an imputation prima facie defamatory may be excused". Discuss the ten exceptions. ("ஒரு கூற்று மேலோட்டமாக அவதூறாக இருப்பினும் அது மன்னிக்கப்படக்கூடிய நிலைகளை பிரிவு 499-க்கான பத்து விதிவிலக்குகளும் கூறுகின்றன." பத்து விதிவிலக்குகளையும் விவாதிக்க.)

(அல்லது)

Give atleast six exceptional circumstances in which a person will be exempted from liability for a charge of defamation. (அவதூறு குற்றஞ் சார்ந்த பொறுப்புரிமையிலிருந்து விலக்குப் பெறும் சூழ்நிலைகளில் குறைந்தது ஆறினைத் தருக.)

(அல்லது)

Point out the distinction between defamation and criminal insult and mention the special defence available to a person charged with defamation. (அவதூறுக்கும் குற்ற அவமதிப்புக்கும் உள்ள வேறுபாட்டை

சுட்டிக்காட்டுக. அவதூறால் குற்றம் சாட்டப்பட்ட நபருக்குள்ள சிறப்பு எதிர்வாதங்களை குறிப்பிடுக.)

(அல்லது)

Define Defamation and distinguish it from Criminal Insult. (அவதூறை வரையறுத்து அதனை குற்ற அவமதிப்பிலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.)

முன்னுரை:

உயிருக்கும் உடைமைக்கும் அடுத்தபடியாக மனிதன் முக்கியத் துவத்தைத் தருவது தனது நற்பெயருக்குத்தான். அவதூறு என்றால் அது ஒரு நபரின் நற்பெயருக்கு தீங்கு விளைவிப்பதாகும். சுருங்கக்கூறின் நற்பெயருக்கு களங்கம் கற்பிப்பதாகும். உதாரணமாக, சமுதாயத்தில் நல்ல அந்தஸ்துடனும் நல்ல பெயருடனும் ஒருவர் இருக்கிறார் என வைத்துக் கொள்வோம். மேற்படி அவருடைய நல்ல பெயருக்கு களங்கம் கற்பிக்கும் வண்ணம் அவரைப்பற்றி தவறாகச் சொல்லினாலோ, செயலினாலோ அல்லது எழுத்தினாலோ ஏதேனும் செய்தால் அது அவதூறு ஆகும். இதற்கான வரையறையை, பிரிவு 499 செய்கிறது. அதனைக் காண்போமா?

அவதூறு (Defamation) - பிரிவு 499 கூறும் வரையறை:

பிரிவு 499 : ஒருவருடைய நற்பெயரை பங்கப்படுத்தி தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது அத்தகைய தீங்கு ஏற்படும் என்று அறிந்திருந்து அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்து பேச்சால், எழுத்தால், அடையாளங்களால் அல்லது காட்சிப் பொருள்களால் அவரைப் பற்றி பழிச்சாட்டுதல் எதனையும் செய்கிற அல்லது வெளியிடுகிற எவரொருவரும், இதற்குப் பின்னால் விலக்கு (exceptions) அளிக்கப்பட்ட சந்தர்ப்பங்களில் தவிர, அவதூறு செய்ததாக சொல்லப்படுகிறார்.

அவதூறு குற்றத்தின் ஆக்கக்கூறுகள் (Ingredients) அல்லது அவதூறு குற்றத்திற்கு நிருபிக்கப்பட வேண்டியவை:

1. ஒரு நபரைப் பற்றி பழிச்சாட்டுகிற (imputation) எதனையும் செய்தல் (making) அல்லது வெளியிடல் (publishing) வேண்டும்.

2. அத்தகு பழிச்சாட்டுதல் பின்வரும் முறையில் செய்யப்பட்டிருக்க வேண்டும்.

(a) பேச்சால்

(b) எழுத்தால்

(c) அடையாளங்களால் (signs)

(d) காட்சிப் பொருள்களால் (visible representations).

3. அத்தகு பழிச்சாட்டுதல் ஒருவருடைய நற்பெயரை பங்கப்படுத்தி தீங்கை விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது அத்தகைய தீங்கு

ஏற்படும் என்று அறிந்திருந்து அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்து செய்யப் பட்டிருக்க வேண்டும்.

4. அது பிரிவு 499 கூறும் பத்து விதிவிலக்குகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் வருதல் கூடாது.

பிரிவு 499-ன் கீழான விளக்கங்கள் (Explanations):

விளக்கம் 1 : ஒருவர் உயிருடனிருக்கும் பொழுது, அவருடைய நற்பெயருக்குத் தீங்கு விளைவிக்கும்படியான பழிச்சாட்டினை, அவர் இறந்த பிறகு கூறினாலும் குற்றமாகும். அவருடைய குடும்பத்தினர் அல்லது உறவினர்களின் உணர்ச்சிகளை புண்படுத்த வேண்டும் என்ற கருத்துடன் அந்த பழிச்சாட்டு செய்யப்படுவதால், அது குற்றமாகிறது.

விளக்கம் 2 : ஒரு கூட்டு நிறுவனம் அல்லது ஒரு கழகம் அல்லது பல நபர் கூடி இயங்கும் ஓர் அமைப்பு இவை பற்றி பழிச்சாட்டுவது அவதூறாக ஆகலாம்.

விளக்கம் 3 : இரண்டில் ஒன்றாக கருதப்படட்டும் என்ற முறையில் செய்யப்பட்ட ஒரு பழிச்சாட்டுதல் அல்லது மறைமுக நிந்தனையாக வெளிப்படுத்தப்பட்ட ஒரு பழிச்சாட்டுதல், அவதூறாக ஆகலாம்.

விளக்கம் 4 : நேரடியாக அல்லது மறைமுகமாகப் பழிச் சாட்டுதலானது, பிறருடைய மதிப்பில் ஒருவருடைய ஒழுக்கத்தின், அல்லது அறிவின் பண்பை தாழ்த்துவதாக அல்லது அவருடைய சாதி அல்லது தொழில் சம்பந்தமாக அவருடைய பண்பைத் தாழ்த்துவதாக, அல்லது அவருடைய நாணயத்தைத் தாழ்த்துவதாக, அல்லது அவருடைய உடல் அருவருக்கத்தக்க நிலையில் (loathsome) இருக்கிறது என்று அல்லது பழிப்புக்கிடமானது (disgraceful) என்று பொதுவாகக் கருதப்படுகிற நிலையில் இருக்கிறது என்று நம்புமாறு செய்கிறதாக இருந்தால் தவிர, எந்தப் பழிச்சாட்டுதலும் ஒருவருடைய நற்பெயரைக் கெடுக்கும் என்று சொல்லப்படுவதில்லை.

எடுத்துக்காட்டுகள் (Illustrations):

1. Z என்பவர் B-யின் கைக்கடிகாரத்தைத் திருடவே செய்தார் என நம்பும்படி செய்யும் கருத்துடன், "Z ஒரு நேர்மையான மனிதர், B-யின் கடிகாரத்தை அவர் திருடவே இல்லை" என A கூறுகிறார். விதிவிலக்குகளில் ஒன்றாக இது அமையாவிட்டால், இது ஓர் அவதூறாகும்.

2. B-யின் கைக்கடிகாரத்தைத் திருடியது யார் என A வினவப் படுகிறார். B-யின் கைக்கடிகாரத்தை Z திருடினார் என்று நம்புமாறு செய்யும் கருத்துடன் A, Z-அய்ச் சுட்டிக்காட்டுகிறார். விதிவிலக்குகளில் ஒன்றாக அமைந்தால் அன்றி, இது ஓர் அவதூறாகும்.

3. B-யின் கைக்கடிகாரத்தை Z திருடினார் என்று நம்பும்படி செய்யும் கருத்துடன் B-யின் கைக்கடிகாரத்துடன் Z ஓடுவதாக ஒரு சித்திரத்தை A வரைகிறார். விதிவிலக்குகளில் ஒன்றாக அமைந்தால் அன்றி, இது ஓர் அவதூறாகும்.

அவதூறு குற்றத்திற்கு விதிவிலக்குகள் (Exceptions) அல்லது அவதூறால் குற்றம் சாட்டப்பட்ட நபருக்கு கிடைக்கும் சிறப்பு எதிர்வாதங்கள் (Special defences):

முதலாவது விதிவிலக்கு : பொதுநலன் கருதி, ஒருவரைப் பற்றி உண்மையான பழிச்சாட்டினை வெளியிடுவது அவதூறாகாது. அப்பழிச்சாட்டு பொதுநலத்திற்காகவா, இல்லையா என்பது ஒரு பொருண்மை பற்றிய பிரச்சனையாகும் (question of fact).

இரண்டாவது விதிவிலக்கு : ஒரு பொது ஊழியர் தம் பொதுப் பணிகளை ஆற்றும் போது, அவரது நடத்தை சம்பந்தமாக அல்லது அந்நடத்தையில் அவரது பண்பு சம்பந்தமாக எந்த அபிப்ராயத்தையாவது நல்லெண்ணத்தோடு தெரிவிப்பது அவதூறு ஆகாது.

மூன்றாவது விதிவிலக்கு : ஒரு பொதுப் பிரச்சனையை ஒட்டிய எவரொருவரது நடத்தையைப் பற்றியும், மற்றும் அந்நடத்தையில் அவரது பண்பு பற்றியும் எந்த அபிப்பிராயத்தையாவது நல்லெண்ணத்தோடு தெரிவிப்பது அவதூறு ஆகாது.

எடுத்துக்காட்டு : ஒரு பொதுப் பிரச்சனை சம்பந்தமாக அரசுக்கு மனுச் செய்து கொண்ட அல்லது ஒரு பொதுப் பிரச்சனையைப் பற்றிய ஒரு கூட்டம் கூட்டுவதற்கான வேண்டுகோளில் கையெழுத்திட்ட, அந்தக் கூட்டத்தில் தலைமை வகித்து அல்லது கலந்து கொண்ட அல்லது பொதுமக்கள் ஆதரவை வேண்டுகிற ஒரு சங்கத்தை உருவாக்கிய அல்லது அதில் சேர்ந்த அல்லது பொதுமக்கள் அக்கறை கொண்டுள்ள கடமைகளைத் திறம்பட நிறைவேற்றுவதற்கான ஒரு நிலைமையில் ஒரு குறிப்பிட்ட வேட்பாளருக்காக வாக்களித்த அல்லது பிரச்சாரம் செய்த Z-ன் நடத்தை பற்றி எதாவது ஒரு அபிப்பிராயத்தை நல்லெண்ணத்துடன் A தெரிவிப்பது அவதூறு ஆகாது.

நான்காவது விதிவிலக்கு : நீதிமன்ற நடவடிக்கைகளைப் பற்றி, அல்லது அத்தகைய நடவடிக்கைகளின் முடிவைப் பற்றி உள்ளதை உள்ளபடி உண்மையாக அறிக்கை வெளியிடுவது அவதூறு ஆகாது.

விளக்கம் : ஒரு நீதிமன்றத்தில் விசாரணை செய்யப்படுவதற்கு முதல் நிலையாக பகிரங்கமாக விசாரணை நடத்துகிற ஓர் அமைதிக்காப்பு நீதிபதி (Justice of Peace), அல்லது வேறு அலுவலர், மேலேயுள்ள பிரிவின் பொருளின்படி ஒரு நீதிமன்றமாகும்.

அய்ந்தாவது விதிவிலக்கு : ஒரு நீதிமன்றத்தில் முடிவு செய்யப்பட்ட

உரிமையியல் அல்லது குற்றவியல் வழக்கின் தகுதி பற்றி அல்லது அவ்வழக்கின் தரப்பினர், சாட்சி அல்லது முகவரின் நடத்தை சம்பந்தமாக நல்லெண்ணத்தோடு அபிப்ராயம் எதனையும் தெரிவிப்பது அவதூறு ஆகாது.

எடுத்துக்காட்டுகள் : 1. "அந்த விசாரணையில் Z-ன் சாட்சியம் அவர் புத்தியில்லாதவராக அல்லது நேர்மையற்றவராக இருக்க வேண்டும் என்னும் அளவுக்கு முரணானதாக நான் நினைக்கிறேன்" என்று A சொல்கிறார். இதை A நல்லெண்ணத்தில் சொல்வாரானால், இந்தவிதிவிலக்கிற்கு உட்பட்டவ ராகிறார். ஏனெனில், அவர் தெரிவிக்கும் கருத்து தோன்றுகிற அளவுக்கு, அதற்கு மிகாமல், ஒரு சாட்சி என்னும் முறையில் Z நடத்தையில் Z-ன் பண்புநலன் பற்றியதாக இருக்கிறது.

2. ஆனால், "அந்த விசாரணையில் Z வலியுறுத்திச் சொன்னதை நாம் நம்பவில்லை; ஏனென்றால் நான் அவரை உண்மை பேசாத ஒருவரென அறிவேன்" என்று A சொன்னால், Z-ன் பண்புநலன் குறித்து அவர் தெரிவிக்கும் கருத்து சாட்சி என்னும் முறையில் Z-ன் நடத்தையை அடிப்படையாகக் கொண்ட ஒரு கருத்தாக அமையாத காரணத்தால் A இந்த விதிவிலக்கிற்கு உட்பட்டவராக மாட்டார்.

ஆறாவது விதிவிலக்கு : ஒரு படைப்பை வழங்கிப் பொதுமக்களின் தீர்ப்புக்காக விட்டுவிடுகிற படைப்பாளி ஒருவரது படைப்பின் தகுதி பற்றி அல்லது அப்படைப்பாளியின் பண்பு (Character) பற்றி, நல்லெண்ணத்தோடு ஒரு அபிப்ராயத்தை தெரிவிப்பது அவதூறு ஆகாது.

விளக்கம் : ஒரு படைப்பாளி வெளிப்படையாகவோ அல்லது குறிப்பாக உணர்த்தும் தனது செயலாலோ தன் படைப்பை பொதுமக்களின் தீர்ப்புக்கு விடலாம்.

எடுத்துக்காட்டுகள் : 1. ஒரு புத்தகத்தை வெளியிடும் ஒருவர் பொதுமக்களின் கருத்திற்காக அந்தப் புத்தகத்தை முன் வைக்கிறார்.

2. பொதுவிடத்தில் சொற்பொழிவாற்றும் ஒருவர், அந்தச் சொற் பொழிவைப் பொதுமக்களின் கருத்திற்காக முன்வைக்கிறார்.

3. பொது மேடையில் தோன்றுகிற ஒரு நடிகர் அல்லது பாடகர் தம்முடைய நடிப்பை அல்லது பாட்டைப் பொதுமக்களின் கருத்திற்காக முன்வைக்கிறார்.

4. Z வெளியிட்டுள்ள ஒரு புத்தகம் குறித்து A என்பவர் "Z-ன் புத்தகம் முட்டாள்தனமானது; Z பலவீனங்கள் உள்ளவராக இருக்க வேண்டும் Z -ன் புத்தகங்கள் ஆபாசமானது; Z தூய்மையற்ற ஒரு மனிதராக இருக்க வேண்டும்" என்கிறார். A இதை நல்லெண்ணத்தில் செய்வாரானால், Z-அய்ப் பற்றி அவர் தெரிவிக்கும் கருத்து, Z-ன் புத்தகத்திலிருந்து தோன்றுகிற அளவிற்கு, அதற்கு மிகாமல் Z-ன் பண்புநலன் சம்பந்தப்பட்டதாக இருப்பதால் A இந்த விதிவிலக்கிற்கு உட்பட்டவராகிறார்.

5. ஆனால், "Z-ன் புத்தகம் முட்டாள்தனமாகவும் ஆபாசமான தாகவும் இருப்பதைக் கண்டு நான் ஆச்சரியப்படவில்லை; ஏனென்றால் அவர் பலவீனங்கள் உள்ளவர்; மற்றும் ஒழுக்கக் கூட்டுப்பாடற்றவர்" என்று A சொன்னால் Z-ன் பண்புநலன் குறித்து அவர் தெரிவிக்கும் கருத்து Z-ன் புத்தகத்தின் அடிப்படையில் அமையாத கருத்தாக இருக்கின்ற காரணத்தால் Z இந்த விதிவிலக்கிற்கு உட்பட்டவராக மாட்டார்.

ஏழாவது விதிவிலக்கு : சட்டபூர்வமாக தமக்கு அளிக்கப் பட்டிருக்கும் அதிகாரத்தின்படி அல்லது சட்டபூர்வமான ஓர் ஒப்பந்தத்தின் படி ஒருவர் மற்றொருவரின் நடத்தைக்கு நல்லெண்ணத்துடன் கண்டனம் எதையும் தெரிவிப்பது அவதூறாகாது.

எடுத்துக்காட்டு : ஒரு சாட்சி அல்லது நீதிமன்றத்தின் ஓர் அலுவலரின் நடத்தைக்கு நல்லெண்ணத்தில் ஒரு நீதிபதி கண்டனம் தெரிவித்தல்; தம் உத்தரவுக்கு கீழ்ப்பட்டவர்களுக்கு நல்லெண்ணத்தில் ஒரு அரசியல் தலைவர் கண்டனம் தெரிவித்தல்; மற்றக் குழந்தைகளின் முன்னிலையில் ஒரு குழந்தைக்கு நல்லெண்ணத்தில் பெற்றோர் கண்டனம் தெரிவித்தல்; மற்ற மாணாக்கர்களின் முன்னிலையில், ஒரு மாணக்கனுக்கு நல்லெண்ணத்தில் பெற்றோரிடமிருந்து அதிகாரம் பெற்ற ஒரு பள்ளி ஆசிரியர் கண்டனம் தெரிவித்தல்; பணிபுரிவதில் கவனக்குறைவாக இருந்த ஒரு வேலைக்காரருக்கு, நல்லெண்ணத்தில் அவரது எஜமானர் கண்டனம் தெரிவித்தல்; தம்முடைய வங்கிக் காசாளருக்கு அத்தகைய காசாளர் என்னும் முறையில் அவரது நடத்தைக்காக, நல்லெண்ணத்தில் ஒரு வங்கியர் கண்டனம் தெரிவித்தல் ஆகிய இவை இந்த விதிவிலக்கிற்கு உட்பட்டவையாகும்.

எட்டாவது விதிவிலக்கு : ஒரு நபர் மீது சட்டப்படியான அதிகாரம் செலுத்தக் கூடியவர்களில் எவரிடமாவது, அந்நபருக்கெதிராக நல்லெண்ணத் துடன் செய்யப்படும் குற்றச்சாட்டு அவதூறு ஆகாது.

எடுத்துக்காட்டு : A என்பவர் Z என்னும் வேலைக்காரரைப் பற்றி அவரது எஜமானரிடம் நல்லெண்ணத்தில் குற்றஞ்சாட்டுதல்; A என்பவர் Z என்னும் சிறுவனின் நடத்தையைப் பற்றி அவனது தந்தையிடம் நல்லெண்ணத்தில் முறையிடல்.

ஒன்பதாவது விதிவிலக்கு : ஒருவருடைய பண்புநலனைப் பற்றி செய்யப்படும் பழிச்சாட்டுதல், அவ்வாறு செய்பவரின் அல்லது வேறு ஒருவரின் நலனைப் பாதுகாப்பதற்காக அல்லது பொது நன்மைக்காக நல்லெண்ணத்தோடு செய்யப்படுமானால், அது அவதூறு ஆகாது.

எடுத்துக்காட்டுகள் : 1. A என்னும் கடைக்காரர் தம் வியாபாரத்தை நிர்வகிக்கும் B-யிடம் உடனடியாகப் பணம் கொடுத்தாலன்றி, C-க்கு எதையும் விற்க வேண்டாம். ஏனென்றால், அவருடைய நாணயத்தில் நல்ல அபிப்ராயமில்லை என்று சொல்கிறார். தன் சொந்த நலன்களைப் பாதுகாக்க, A, C-யின் மீது அவ்வித பழிச்சாட்டை நல்லெண்ணத்துடன் கூறியிருந்ததால், அது அவதூறாகாது.

2. A என்னும் குற்றவியல் துறை நடுவர் (Magistrate) தனக்கு மேலுள்ள அதிகாரிக்கு அறிக்கை அனுப்பும் போது, Z-ன் பண்புநலனைப் பற்றி ஒரு பழிச்சாட்டைச் செய்கிறார். இங்கு, அந்தப் பழிச்சாட்டு நல்லெண்ணத்திலும் பொதுநன்மைக்காகவும் செய்யப்பட்டிருந்தால், அது அவதூறாகாது.

பத்தாவது விதிவிலக்கு : ஒருவருடைய நன்மைக்காக, அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள மற்றவரின் நன்மைக்காக அல்லது பொது நன்மைக்காக, அவரிடம் வேறு ஒருவரைப் பற்றி நல்லெண்ணத்துடன் எச்சரிப்பது அவதூறு ஆகாது.

அவதூறு - பிரிவு 500 கூறும் தண்டனை (Punishment for Defamation):

பிரிவு 500 : இன்னொருவருக்கு அவதூறு செய்கிற எவரொருவருக்கும் இரண்டாண்டுகள் வரை வெறுங்காவல் சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

வேறு வழியிலான அவதூறுகள்:

பிரிவு 501–ன்படி, எந்த விஷயத்தையும், அத்தகைய விஷயம் ஒருவரைப் பற்றிய அவதூறு என்று அறிந்து அல்லது நம்புவதற்கு காரணம் பெற்றிருந்து அச்சிடுகிற (printing) அல்லது செதுக்குகிற (engraving) எவரொருவருக்கும், இரண்டாண்டுகள் வரையிலான வெறுங்காவல் சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 502–ன்படி, அவதூறான விஷயம் அடங்கியுள்ள ஓர் அச்சிடப்பட்ட அல்லது செதுக்கப்பட்ட பொருளை, அது அத்தகைய விஷயத்தைக் கொண்டிருப்பதை அறிந்தே விற்பனை செய்கிற அல்லது விற்க முன்வைக்கிற எவரொருவருக்கும், இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

முக்கிய வழக்குகள்:

Thiagaraya v. Krishnaswami[1] என்ற வழக்கில் T என்பவர் பிராமண சாதியைச் சேர்ந்தவர். பிராமண சாதியின் நிர்வாகக் குழு அவரை அவரது சில துவேஷ செயல்களுக்காக சாதியை விட்டு நீக்கியது. அதற்குண்டான பரிகாரச் சடங்குகளை செய்த பின்னர், அவர் திரும்பவும் பிராமண சாதியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். ஆனால் இவ்வாறு சேர்த்துக் கொள்ளப்பட்டதை K என்பவர் எதிர்த்து, ஆறு மாதங்கள் கழித்து, T எனும் அப்பிராமணரை ஒரு "பாபி" (பாவம் செய்தவர் - Sinner) என்று ஒரு சிறு தாளில் அச்சடித்து அதை கடைவீதியில் விநியோகம் செய்தார். இவ்வாறு செய்தது, அப்பிராமணருக்கு எதிரான அவதூறு என்று நீதிமன்றம்

1. A.I.R. 1915 Mad. 214

தீர்ப்பளித்தது. ஏனெனில், தனது பாவங்களைக் கழுவி சாதிமுறைப்படி பரிகாரம் தேடிக் கொண்ட அப்பிராமணரை, மீண்டும் "பாபி" என்று கூறியது, அவரது நற்பெயருக்கு தீங்கு விளைவித்த செயலாகும் என்று நீதிமன்றம் விளக்கமளித்தது.

Mohan Lal v. Ramcharan[1] என்ற மற்றொரு வழக்கில் விருந்துண்ண வந்த இந்து மதத்தைச் சார்ந்த ஒருவரை "சமூகத்தால் ஒதுக்கப்பட்டவர் என்றும், பந்தியில் அமர தகுதியற்றவர் என்றும்" குற்றஞ் சாட்டப்பட்டவர் கூறினார். இது அவதூறு செய்த குற்றமாகும் என்று கூறி அவரை நீதிமன்றம் தண்டித்தது.

பிரசுரிக்கப்பட்ட செய்திகள் (Printed Matters):

ஏதேனும் அவதூறான செய்தியை பிரசுரித்தால் அப்பத்திரிக்கையின் ஆசிரியர், அச்சடித்தவர், பதிப்பகத்தார் மேலும் விநியோகஸ்தர்களும் அதற்கு பொறுப்பாவார்கள்.

Balasubramania Mudaliar v. Rajagopalachariar[2] இவ்வழக்கில், எழுத்துமூலமான அவதூற்றிற்கு (libel) ஒரு பத்திரிக்கையின் ஆசிரியர் பொறுப்பாகும்பொழுது, அவர் ஒரு சாதாரண குடிமகனைவிட மிக இக்கட்டான நிலையில் இருக்கிறார். மேலும், அப்படி எழுத்துமூலமான அவதூற்று உரையை உண்டாக்கும் பொழுது அவர் சரியான கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் செயல்பட கடமை கொண்டு உள்ளார் எனக் கூறப்பட்டது. ஆனால்,

Ramasamy v. Lokananda[3] என்ற முந்திய வழக்கில், ஒரு பத்திரிக்கை ஆசிரியர், தான் இல்லாத சமயத்திலும், மேலும் தன் அறிவுக்கு எட்டாத வகையிலும் அந்த அவதூறான செய்தி பிரசுரிக்கப்பட்டது என்றும், அச்சமயத்தில், தகுதி வாய்ந்தவர்களிடம் அப்பத்திரிக்கையின் தற்காலிக நிர்வாகமானது ஒப்படைக்கப்பட்டிருக்கிறது என்ற நல்லெண்ணத்தில், தான் இருந்ததாகவும் நிரூபித்தால், அதுவே அவதூறு குற்றத்திலிருந்து விடுபட போதுமானது எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

P.Ramasamy v. M.Karunanidhi[4] ஒரு விபரம் குறித்து நியாயமான கருத்துரை (Fair Comment) செய்வது தடுக்கப்படமாட்டாது. ஆனால் அக்கருத்துரை செய்ய பொருத்தமாக அமைந்த பொருண்மைகள் நிரூபிக்கப்பட வேண்டும். பொருண்மைகளால் உத்திரவாதமளிக்கப்படாத ஒரு நபரைப் பழிச்சாட்டுகிற பாரபட்சமான மற்றும் கீழ்த்தரமான நோக்கங்கள் அக்கருத்துரையில் இருப்பின், தாம் உண்மையைத்தான் பிரசுரிப்பதாக நல்லெண்ணத்துடன் நம்பினேன், என்ற பிரசுரித்தோரின் எதிர்வாதம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எதிர்வாதமாக அமையாது.

1. 1928 26 A.L.J.R. 361
2. 1944 M.W.N. 322
3. 1886 (9) Mad. 387
4. 1970 L.W. (Cri.) 245

எதிர்வாதம் ஒரு குறிப்பிட்ட காலத்தில் எதிர்வாதமாக அமையாது. நல்லெண்ணம் (Good Faith) என்பது சரியான பொறுப்பையும் கவனத்தையும் குறிக்கிறது. சரியான பொறுப்பு மற்றும் கவனம் (due care and attention) என்பது, எழுத்துமூலமான அவதூற்றை வெளியிடுபவர், தான் உண்மையைக் கண்டறிய தகுந்த நடவடிக்கைகளை எடுத்திருப்பதாகவும், மேலும் தாம் திருப்தியுற்று ஒரு உண்மையான முடிவுக்கு வந்ததாகவும் காண்பித்தல் அவசியம் என்பதைக் குறிக்கிறது. ஒரு நல்லெண்ணத்தின் மற்றும் பொதுநலத்தின் அடிப்படையில் அச்செய்தி வெளியிடப்பட்டுள்ளது என்பதற்கு சாதகமாக அமைய உண்மையான அடிப்படையற்ற (Objective basis) வெறும் மேம்போக்கான நம்பிக்கைகள் மட்டும் (Subjective belief) அப்பத்திரிக்கை நடைபெற உதவாது என மேற்கண்ட முக்கியமான வழக்கில் தீர்மானிக்கப்பட்டது.

Shatrugan Prasad Sinha v. Rajbhan Suraj@al Rathi[1] - மேற்படி வழக்கு "ஸ்டார்டஸ்ட்" (Stardust) என்ற பத்திரிக்கையில் "மார்வாரி" (Marwari) சமூகத்தை பாதிக்கும் விஷயங்கள் இருந்ததாக அப்பத்திரிக்கையின் ஆசிரியர் மீது பிரிவு 500-ன் கீழ் அவதூறு குற்றத்திற்காக செய்யப்பட்ட புகாரின் அடிப்படையில் எழுந்ததாகும். மேல்முறையீட்டில் மேற்படி வழக்கை ஆராய்ந்த உச்ச நீதிமன்றம், பிரிவு 499-ன் கீழான 4-வது விளக்கத்தின்படி, மற்றவரின் பார்வையில், ஒருவரின் நற்பெயர் அல்லது பண்பு தாழ்த்தப்பட்டால்தான், அது அவதூறு ஆகும் என்றும், அப்படி தங்கள் 'மார்வாரி' சமூகம் 'ஸ்டார்டஸ்ட்' பத்திரிக்கையில் வந்த விஷயத்தால் தாழ்த்தப்பட்டதாக வழக்கிட்டவர் தனது புகாரில் குறிப்பிடவில்லை என்றும், எனவே இது ஒரு அவதூறாகாது என்றும் கூறி, அப்புகாரை நீதிமன்றம் தள்ளுபடி செய்துவிட்டது.

உச்ச நீதிமன்றம் மேற்படி வழக்கில் வழங்கிய தீர்ப்பை அடிப்படையாகக் கொண்டு, அதைப் பின்பற்றி, **J.Jayalalitha v. Arcot N.Veerasamy**[2] எனும் வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியது. அச்சமயத்தில் தமிழக அரசின் அமைச்சர் பொறுப்பில் இருந்த ஆற்காடு N. வீராசாமி, 17-8-1996-ஆம் தேதியில் தமிழக முன்னாள் தலைமைச் செயலர் மீது செய்யப்பட்ட தாக்குதல் தொடர்பாக முன்னாள் முதலமைச்சர் J. ஜெயலலிதாவிற்கு எதிராக அவதூறான கருத்துகளை வெளியிட்டார். இதை எதிர்த்து J. ஜெயலலிதா அவர்கள் பிரிவு 500-ன் கீழ் ஆற்காடு N. வீராசாமி மீது அவதூறு குற்றத்திற்காக தனிப்பட்ட குற்றமுறையீடு (Private Complaint) ஒன்றை தாக்கல் செய்தார். அக்குற்றமுறையீட்டை பிரிவு 499-ன் கீழான 4 விளக்கத்தை கருத்தில் கொண்டு சென்னை உயர் நீதிமன்றம் ஆராய்ந்தது. அக்குற்றமுறையீட்டில், மற்றவர்களின் பார்வையில் அல்லது மதிப்பில், தனது நற்பெயரைத் தாழ்த்தும் வண்ணம் தொடர்புடைய பழிச்சாட்டு (imputation) (அதாவது அவதூறான

1. 1997 Cri.L.J. 212 (S.C.)
2. 1997 Cri.L.J. (Mad.)

கருத்துகள்) அமைந்துள்ளது என்று J. ஜெயலலிதா குறிப்பிட்டுக் கூறவில்லை. அப்படிக் குறிப்பிடாத நிலையில், அதனை அவதூறாகக் கொள்ள முடியாது என்றும் அக்குற்றமுறையீட்டின் அடிப்படையில் மேல்நடவடிக்கை எடுப்பதற்கு அடிப்படை முகாந்திரம் எழவில்லை என்றும் கூறி, அதனை தள்ளுபடி செய்துவிட்டது.

அவதூறுக்கும், அவமதிப்பிற்கும் உள்ள வேறுபாடு:

அவதூறு (Defamation)	அவமதிப்பு (Insult)
1. அவதூறின் நோக்கம் ஒருவரின் நற்பெயருக்கு களங்கம் அல்லது தீங்கு ஏற்படுத்துவதாகும்.	அவமதிப்பின் நோக்கம், ஒருவர் அமைதியைக் குலைக்க வேண்டும் என்ற காரணத்திற்காக, அவரை கருத்துடன் தூண்டுவதாகும்.
2. அவதூறு எப்பொழுதுமே அவ மதிப்பை உள்ளடக்கி உள்ளது.	அனைத்து அவமதிப்புகளும் அவதூறாகி விடாது.
3. அவதூறுக் குற்றத்திற்கு ஒருவரைப் பற்றி அவதூறாக அவரிடமே கூறாமல், அவரைத் தவிர்த்து உள்ள மற்ற நபர் களிடம் கூறுதல் இன்றியமையாத தாகும்.	அவமதிப்புக் குற்றத்திற்கு ஒருவரை அவமதிப்பாக அவரிடமே கூறல் அவசியம்.
4. ஒருவரைப் பற்றிய உண்மையான கூற்று (அது நல்லதோ கெட்டதோ) அவதூறு ஆகாது.	ஒரு உண்மையான கூற்று அவமதிப்பாகலாம்.

முடிவுரை:

"மரியாதை கொடுத்து மரியாதை வாங்குதல்" என்பதே இன்றைய சமுதாயத்தில் சாத்வீகமான வழியாகும். மற்றவர்களைப் பற்றி அநாவசியமாக குறை கூறுமுன், நம்மைப் பற்றி நாம் அறிந்து கொள்ளல் நலம். இப்படி இருந்துவிட்டால், இந்திய தண்டனைச் சட்டத்தில் 500-வது பிரிவிற்கு வேலையே இல்லை.

(ஓ) குற்றமுறு மிரட்டல், அவமதிப்பு மற்றும் தொந்தரவு செய்தல்
[Criminal Intimidation, Insult and Annoyance]
(பிரிவுகள் 503 முதல் 510 முடிய)

1. Criminal Intimidation - Write short notes. (குற்றமுறு மிரட்டல் - சிறு குறிப்பு வரைக.)

முன்னுரை:

ஒருவரின் உடல், நற்பெயர், சொத்து ஆகியவற்றிற்கு தீங்கு விளைவிக்கும் கருத்துடன், அவரை எவரேனும் அச்சுறுத்தினால், அது குற்றமுறு மிரட்டலாகும். இதையே பிரிவு 503 பின்வருமாறு சற்று விளக்கமாகக் கூறுகிறது.

குற்றமுறு மிரட்டல் - பிரிவு 503 கூறும் வரையறை:

பிரிவு 503 : ஒருவருடைய உடலுக்கு, நற்பெயருக்கு அல்லது சொத்துக்கு, அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள ஒருவரின் உடலுக்கு அல்லது நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கப்போவதாக அவருக்கு பீதி உண்டாக்கும் கருத்துடன், அல்லது அத்தகைய மிரட்டல் நிறைவேற்றப் படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அவர் சட்டப்படி செய்யக் கட்டுப் பட்டிராத செயல் எதனையும் செய்வதை அல்லது சட்டப்படி அவர் செய்ய உரிமை பெற்றிருக்கிற செய்கை எதனையும் செய்யாது விடுவதை விளைவிக்க அச்சுறுத்துகிற எவரொருவரும் 'குற்றமுறு மிரட்டலை' செய்வதாகக் கருதப்படும்.

விளக்கம் : அச்சுறுத்தப்பட்டவர் அக்கறை கொண்டுள்ள இறந்த ஒருவரின் நற்பெயருக்குத் தீங்கு விளைவிக்கப் போவதாக அச்சுறுத்தல், மேற்படி பிரிவில் அடங்கும்.

எடுத்துக்காட்டு:

ஓர் உரிமையியல் வழக்கை நடத்துவதைத் தவிர்க்க B-யை இணங்கச் செய்யும் பொருட்டு B-யின் வீட்டை எரித்து விடுவதாக A அச்சுறுத்துகிறார். A குற்றமுறு மிரட்டலைச் செய்கிறார்.

குற்றமுறு மிரட்டல் - உட்கூறுகள் (Ingredients):

'குற்றமுறு மிரட்டல்' என்ற குற்றத்தில் இரு பகுதிகள் உண்டு. ஒன்று அச்சுறுத்தல்; மற்றொன்று அச்சுறுத்துபவரின் கருத்து.

1) **அச்சுறுத்தல் :** ஒருவருடைய உடல், நற்பெயர், சொத்து அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள மற்றொருவரின் உடல், நற்பெயர் இவற்றில் ஒன்றுக்கு தீங்கு விளைவிக்கப் போவதாக அவரை அச்சுறுத்துவது.

2) **அச்சுறுத்துபவரின் கருத்து** : (i) அச்சுறுத்தப்படுபவரின் மனதில் பீதியை ஏற்படுத்த வேண்டும் என்ற கருத்து; அல்லது

(ii) சட்டப்படி செய்யக் கட்டுப்பட்டிராத செயல் எதனையும் செய்யச் சொல்லி அல்லது சட்டப்படி செய்ய உரிமை பெற்றிருக்கிற செயல் எதனையும் செய்யாமல் விடச் சொல்லி அச்சுறுத்துப்படுபவரை நிர்ப்பந்திக்கும் கருத்து.

குற்றமுறு மிரட்டல் - பிரிவு 506 கூறும் தண்டனை:

பிரிவு 506 : குற்றமுறு மிரட்டலைச் செய்கிற எவரொருவருக்கும் இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

அந்த அச்சுறுத்தலானது மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிப்பதாக அல்லது சொத்து எதையும் தீயினால் அழிவதை விளைவிப்பதாக அல்லது மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அல்லது ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ விதித்துத் தண்டிக்கப்படுதற்குரிய குற்றத்தை விளைவிப்பதாக அல்லது ஒரு பெண்ணின் கற்புக்கு களங்கத்தைச் சுமத்துவதாக இருக்குமானால், ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ, அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

அநாமதேய தகவல் அனுப்புவதன் முலம் குற்றமுறு மிரட்டல் (Criminal intimidation by an anonymous communication) - பிரிவு 507:

அநாமதேயத் தகவலொன்றை அனுப்புவதன் மூலம் அல்லது மிரட்டல் செய்பவரின் பெயர் அல்லது இருப்பிடத்தை மறைக்க முன்னெச்சரிக்கை எடுத்துக் கொண்டு குற்றமுறு மிரட்டலைச் செய்கிற எவரொருவருக்கும் முன்கண்ட பிரிவு 506-ல் வகைசெய்யப்பட்ட தண்டனையோடு கூடுதலாக இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படும்.

முக்கியமான வழக்கு:

Ramesh Chandra Arora v. State[1] - இரமேஷ் சந்திர அரோரா (இனி சுருக்கமாக 'இரமேஷ்' என்றழைப்போம்) என்பவன், பெண்களை மயக்கி, அவர்களை நிர்வாணமாக புகைப்படம் எடுத்து, அதை சம்பந்தப் பட்டவரின் உறவினர்களிடம் காண்பிக்கப் போவதாக அச்சுறுத்தி, அதைத் தவிர்ப்பதற்கு பணம் தர வேண்டும் என மிரட்டி, சம்பந்தப்பட்டவரிடமிருந்து கணிசமான தொகையொன்றை பெறுவதைத் தொழிலாகக் கொண்டவன்.

இப்படி அவன் ஒரு பெண்ணைக் காதலிப்பது போல நடித்து, அவளை நிர்வாணமாகப் புகைப்படம் எடுத்துவிட்டான். பின்னர் அவளது தந்தைக்கு அந்தப் புகைப்படங்களை இணைத்து கடிதமொன்றை எழுதினான்.

1. A.I.R. 1960 S.C. 154 : 1960 Cri. L.J. 177

அதில், தனக்கு ஒரு குறிப்பிட்ட பெருந் தொகையை தராது போனால், அப்புகைப்படங்களை அவரது உறவினர்களுக்கு அனுப்பி வைக்கப் போவதாக அச்சுறுத்தி இருந்தான். இதனடிப்படையில் இரமேஷ் மீது குற்றமுறு மிரட்டலுக்காக பிரிவு 506-ன் கீழ் குற்றப் பத்திரிக்கை தாக்கல் செய்யப்பட்டது. வழக்கை விசாரித்த கீழமை விசாரணை நீதிமன்றம் அவனுக்கு ஓராண்டு கடுங்காவல் சிறைத் தண்டனை விதித்தது. மேல் முறையீட்டில், இத்தண்டனையை இரண்டாண்டுகள் கடுங்காவல் சிறைத் தண்டனையாக உயர்த்தியது, உயர் நீதிமன்றம்.

ஆனால் இதை எதிர்த்து இரமேஷ் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தான். அங்கு இரமேஷ், தான் குற்றம் ஏதேனும் புரிந்துள்ளதாக குற்றஞ் சாட்டப்படுமேயானால், அது பிரிவு 506-ன் கீழான குற்றமுறு மிரட்டல் குற்றம் ஆகாது; மாறாக பிரிவு 384[1] -ன் கூடிய பிரிவு 511[2] -ன் (Section 384 r/w 511) கீழான அச்சுறுத்திப் பறித்தலுக்கான முயற்சியாக வேண்டு மானால் இருக்கலாம், என்று எதிர்வாதம் புரிந்தான். இதனை உச்ச நீதிமன்றம் ஏற்றுக் கொள்ளாமல் பின்வருமாறு கூறியது. இரமேஷின் நோக்கம், அப்பெண்ணின் தந்தையை அச்சுறுத்தி பீதியை உண்டாக்குவது மட்டுமல்ல; அதற்கும் மேலாக அந்நிர்வாண புகைப்படங்களை வெளியிடாமல் இருக்க ஒரு பெருந் தொகையை அப்பெண்ணின் தந்தை கொடுக்குமாறு செய்வதும் ஆகும். எனவே, இரமேஷின் செயல், குற்றமுறு மிரட்டலை வரையறுக்கும் பிரிவு 503-ன் உட்கூறுகளை தெளிவாக உள்ளடக்கி நிற்கிறது. இதனால் இரமேஷின் செயல் குற்றமுறு மிரட்டல் ஆகுமே தவிர, அச்சுறுத்திப் பறிக்கும் முயற்சியாகாது என்று உச்ச நீதிமன்றம் கூறி, அவனுக்கு உயர் நீதிமன்றம் வழங்கிய இரண்டாண்டுகள் சிறைத் தண்டனையை ஊர்ஜிதம் செய்து தீர்ப்பு வழங்கியது.

அச்சுறுத்திப் பறித்தலும் குற்றமுறு மிரட்டலும் (Extortion and Criminal Intimidation) - வேறுபாடு:

குற்றமுறு மிரட்டுதல் அச்சுறுத்திப் பறித்தல் போன்றதுதான். ஆனால் அச்சுறுத்திப் பறித்தலில் குற்றவாளியின் உடனடி நோக்கம் பணமோ அல்லது மதிப்புள்ளவற்றையோ பெறுவது ஆகும். குற்றமுறு மிரட்டுதலில் குற்றவாளியின் உடனடி நோக்கம், சட்டப்படி செய்ய வேண்டியதை செய்யாதிருக்குமாறும், செய்ய வேண்டியதைச் செய்யத் தூண்டுவதுமாகும்.

2. Criminal Insult - Write short notes. (குற்றமுறு அவமதிப்பு - சிறு குறிப்பு வரைக.)

பிரிவு 504 கூறுவதாவது:

ஆத்திரமூட்டுதலால் ஒருவர் பொது அமைதி மீறுதலை விளைவிக்கக்

1. பிரிவு 384 - அச்சுறுத்திப் பறித்தல்
2. பிரிவு 511 - குற்றங்கள் செய்ய முயற்சி

கருத்துக் கொண்டு (intentional insult with intent to provoke breach of the peace) அல்லது வேறு எந்தக் குற்றத்தையும் செய்வதை விளைவிக்க கருத்துக் கொண்டு அல்லது அநேகமாக விளைவிக்கக் கூடும் என்று அறிந்து கருத்துடன் அவரை வேண்டுமென்றே அவமதிக்கிற மற்றும் அதனால் அவருக்கு அத்தகைய ஆத்திரமூட்டுதலை உண்டாக்குகிற எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

சில வழக்குகள்:

Bhimji Naraji Dala[1] எனும் வழக்கில் "ஒழிந்து போ" ('go to hell') என ஒருவன் வாய்ச்சண்டைக்கு (altercation) பிறகு மற்றொருவனை நோக்கிக் கூறியது பிரிவு 504-ன் படியிலான குற்றமாகும் என்று தீர்ப்பளிக்கப்பட்டது.

Bakthawar Lal[2] என்ற மற்றொரு வழக்கில் ஒருவரை "பீமா" (Bheema) என்று அழைத்தது, மேற்படி குற்றமே என்று தீர்ப்பளிக்கப் பட்டது.

பொதுவாக ஆபாசமான கெட்ட வார்த்தையில் திட்டுவது மேற்படி குற்றமாகிறது.

3. Insulting the modesty of a woman - Write short notes. (பெண்ணின் கற்புநெறியை அவமதித்தல் - சிறு குறிப்பு வரைக.)

பிரிவு 509-ன்படி, ஒரு பெண்ணின் கற்புநெறியை அவமதிக்கும் வண்ணம், அப்பெண் காணும்படி அல்லது கேட்கும்படி எவரேனும் ஒரு சொல்லைக் கூறுவதும், ஒலியெழுப்புவதும், சைகை காட்டுவதும் அல்லது அந்தப் பெண்ணின் அந்தரங்கத்தில் குறுக்கிடுவதும் மேற்படி குற்றமாகும். இவ்வாறு செய்பவருக்கு ஓராண்டு வரையிலான வெறுங்காவல் சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

Re Tarak Das Gupta[3] எனும் வழக்கில், குற்றவாளி திருமணமாக ஒரு செவிலியரிடம் (Nurse) ஆபாசமான வாசகங்கள் அடங்கிய தனது காதற் கோரிக்கையை கடிதம் மூலம் எழுதி அனுப்பினான். இவ்வாறு ஆபாச நோக்குடன் கடிதம் அனுப்பியதே ஒரு பெண்ணின் கற்புநெறியை அவமதித்த குற்றமாகும்; இங்கு அக்கடிதம் அப்பெண்ணுக்குச் சென்று சேர்ந்ததா, இல்லையா என்பது ஒரு பொருட்டல்ல என்று நீதிமன்றம் கூறி, அவனை மேற்படி பிரிவின் கீழ் தண்டித்தது.

4. Annoyance - Write short notes. (தொந்தரவு - சிறு குறிப்பு வரைக.)

பிரிவு 510-ன்படி, குடிபோதை நிலையில் ஒரு பொது இடத்தில்

1. 1927 unrep. Bombay
2. 1922 A.I.R.L. 459
3. A.I.R. 1926 Bom. 159 : 1927 Cri. L.J. 455

அல்லது எந்த இடத்தில் அவர் நுழைவது அத்துமீறுதலாகுமோ அந்த இடத்துக்குச் சென்று மற்றும் அங்கு எவருக்கேனும் தொந்தரவு விளைவிக்கும் விதத்தில் நடந்து கொள்கிற எவரொருவருக்கும் இருபத்து நான்கு மணி நேரம் வரையிலான வெறுங்காவல் சிறைத் தண்டனையோ அல்லது பத்து ரூபாய் வரை அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

மேற்படி குற்றத்திற்காக குற்றவாளியை தண்டிக்க, அவனுக்கு குற்றமனம் (Mens rea) இருந்ததா என்பதை ஆராய வேண்டிய அவசியமில்லை. அவன் குடித்திருந்ததும், பொது இடத்தில் தொந்தரவு தரும் வண்ணம் நடந்து கொள்ளுவதும் மட்டுமே அவனை பிரிவு 510-ன் கீழ் தண்டிக்கப் போதுமானதாகும்.

- 0 -

பகுதி - II. தீர்க்கப்பட்ட பிரச்சனைகள் [Solved Problems]

சட்டமும் மனித நெறிமுறைகளும் (Law and Ethics)

1. A sees B drowning and could save him by holding out his hand. A does not do so and B is drowned. Explain the liability of A. ('ஆ' என்பவர் மூழ்குவதை 'அ' என்பவர் பார்க்கிறார். தனது கையைக் கொடுத்து அவரை காப்பாற்ற இயலும். ஆனால் 'அ' அவ்வாறு செய்யவில்லை. 'ஆ' என்பவர் நீருக்குள் மூழ்குகின்றார். 'அ'-வின் பொறுப்புரிமையை விளக்குக.)

ஒரு உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பது மனித நேய நெறியாகும் (Ethics). ஆனால் மனித நெறிமுறைகளும் சட்டமும் (Law and Ethics) வேறுபட்டதாகும். மேற்படி பிரச்சனையில் B-யைக் காப்பாற்ற வேண்டிய எவ்வித சட்டக் கடமையும் (legal duty) A-க்கு கிடையாது. எனவே அவர் சட்டக் கடமையிலிருந்து தவறியதாக கூறப்பட முடியாது. காப்பாற்ற வாய்ப்பிருந்தும் காப்பாற்றவில்லையே என்பது மனித நெறிமுறைகளுக்கு மட்டுமே விரோதமானதாகும். அதற்காக A-யை தண்டிக்கவியலாது.

செயல் தவிர்க்கை (Omission)

2. A, a Jailor, has the charge of Z, a prisoner. A intending to cause Z's death, illegally omits to supply food to Z, in consequence of which Z is much reduced in strength, but the starvation is not sufficient to cause his death. A is dismissed from office and B succeeds him. B, without collusion or co-operation with A, illegally omits to supply Z with food, knowing that he is likely thereby to cause Z's death. Z dies of hunger. Decide. (A என்ற ஜெயிலரின் கண்காணிப்பில் Z என்ற கைதி உள்ளான். Z-அய்க் கொல்ல வேண்டும் என்ற கருத்துடன் மேற்படி A ஆனவர், Z-க்கு சட்ட முரணாக உணவு ஏதும் அளிக்காமல் தவிர்க்கிறார். இதன் விளைவாக Z-க்கு உடற்சக்தி குறைந்து போனதேயொழிய, அது அவரது மரணத்தை உண்டாக்குமளவிற்கு போதுமானதாக இல்லை. இந்நிலையில் A பதவி நீக்கம் செய்யப்பட்டு அவருக்குப்பின் B என்ற ஜெயிலர் பதவிக்கு வருகிறார். A-யுடன் உடன்பாடோ அல்லது வஞ்சகக் கூட்டோ இல்லாமல் மேற்படி B-யும் Z-க்கு சட்ட முரணாக உணவு அளிக்காமல் தவிர்க்கிறார். அது Z-ற்கு மரணம் உண்டாக்கும் என்பது B-க்குத் தெரியும். Z பசியால் இறந்து விடுகிறார். தீர்க்க.)

குற்றச் செயல்களும் அதன் விளைவுகளும் சங்கிலித் தொடர் போன்றவை. ஒரு சங்கிலித் தொடர் அறுபட்டாலும், விளைவித்த காரணம் (causation) எது என்று ஆராய்வதில் சந்தேகங்களும் சிக்கல்களும் ஏற்பட்டு விடும். செயலுக்கும் அதனால் ஏற்படுத்தப்படும் விளைவிற்கும் நேரடித் தொடர்பு இருக்க வேண்டும். செயலின் விளைவு உடனடி நிகழ்வுறா திருப்பினும், நீண்ட கால இடைவெளி ஏற்பட்டிருக்கவோ அல்லது

இடைப்பட்ட நிகழ்ச்சியால் (intervening causes) இரண்டிற்குமிடையே உள்ள தொடர்பு அறுந்து போயிருக்கவோ அல்லது தெளிவுற்றிருக்கவோ அல்லது இரண்டிற்குமிடையேயுள்ள தொடர்பு இயற்கையாகவே இல்லாமற் போகுமளவிற்குத் தெளிவுற்றிருக்கவோ செய்தால், செயலைச் செய்தவர் குற்றப் பொருப்பிற்கு ஆளாகாமற் போக இடமிருக்கிறது.

'ஹாரிஸ்' எனும் அறிஞர் தனது **குற்றவியல் சட்டம் (Harris' Criminal Law)** எனும் நூலில் பின்வரும் ஒரு எடுத்துக்காட்டைக் கூறியுள்ளார். அது குற்றத்தின் காரண-காரியத் தொடர்புக் கொள்கையைத் (Causation of Crime) தெளிவாக விளக்குகிறது. அதன்படி, A என்பவர் B என்பவரைச் சாகடிக்கும் கருத்துடன் சுடுகின்றான். ஆனால் அது சிறு காயத்தை மட்டிலும் ஏற்படுத்துகின்றது. A-க்கு B-யைக் கொல்ல வேண்டும் என்ற குற்ற மனம் இருந்தது என்பதில் சந்தேகமில்லை. உடனடியாக B-யை வண்டியில் மருத்துவமனைக்கு எடுத்துச் செல்கின்றார். செல்லும் வழியில் கட்டிடம் ஒன்றின் மேல்மாடியிலிருந்து ஒரு செங்கல் பெயர்ந்து B மீது விழுகிறது. அதனால் B-க்கு மரணம் ஏற்படுகிறது. A-யின் துப்பாக்கிச் சூட்டிற்குப் பின்னர் ஏற்பட்ட நிகழ்வினால் B மரணமடைந்தார். இதற்கு A-வை பொறுப்பாக்க முடியாது. ஏனெனில் காரண காரியத் தொடர்பு இங்கு அறுந்து போய்விட்டது. A-யின் துப்பாக்கிச் சுட்டினால் ஏற்பட்ட சிறுகாயம் மட்டுமே B-யின் மரணத்திற்கு காரணமாக இருந்திருப்பின், A-வைக் கொலைக் குற்றத்திற்குள்ளாக்கலாம்.

நமது மேற்படி பிரச்சனையும் மேற்கண்ட எடுத்துக்காட்டை ஒத்ததே. A என்ற ஜெயிலர், Z-அய்க் கொல்ல வேண்டும் என்ற கருத்துடன் அவருக்கு உணவளிக்காமல் பட்டினி போடுகிறார். ஆனால் இது மேற்படி Z-ன் உடற்சக்தியை குறைக்கிறதேயொழிய அவன் இறக்குமளவிற்கு போதுமானதாக இல்லை. இந்நிலையில் A பதவி நீக்கம் செய்யப்பட்டு B என்ற ஜெயிலர் பதவிக்கு வருகிறார். B-யும் மேற்கண்டவாறே Z-அய் நடத்துகிறார். இதன் விளைவாக பசியால் துடித்து Z இறக்கிறான். இங்கு A-யின் செயலால் Z இறக்கவில்லை. A-க்கு Z-அய் கொல்ல வேண்டும் என்ற குற்றமனம் இருந்திருக்கலாம். ஆனால் அவர் செயலானது நேரடி மற்றும் உடனடியான காரண விளைவை ஏற்படுத்தவில்லை. மேலும் A-க்கும் B-க்கும் Z-அய்க் கொல்ல வேண்டும் என்பதில் எவ்வித உடன்பாடும் வஞ்சகக் கூட்டும் கிடையாது. எனவே Z-ன் மரணத்திற்கு A பொறுப்பல்ல. மாறாக, B-யின் பட்டினிச் செயலே Z-ன் மரணத்தை நேரடியாக உண்டாக்கி இருப்பதனால், B என்ற ஜெயிலரே கொலைக் குற்றத்திற்காளாவார். ஒரு கைதிக்கு உணவளிக்க வேண்டிய சட்டக் கடமையிலிருந்து தவறியதற்காக வேண்டுமானால் A-யைத் தண்டிக்கலாம்.

நீதிவரம்பு (Jurisdiction)

3. A, who is a citizen of India commits murder in Uganda. Can he be tried and convicted in Madras where he was found? (A என்னும் இந்தியக்

குடிமகன் உகாண்டா நாட்டில் கொலை ஒன்றை செய்துவிடுகிறார். அவர் சென்னையில் காணப்பட்டதால், அங்கேயே அவரை விசாரித்து தண்டிக்கலாமா?)

தண்டிக்கலாம். விரிவாக பக்கம் எண் 76-ல் பிரிவு 4-யும் அதன் கீழான எடுத்துக்காட்டையும் படித்தறியவும்.

மீட்டொப்படைத்தல் (Extradition)

4. A, who is a citizen of France commits rape in Germany and escapes to India and was found in Pondicherry. (ஃபிரான்சு நாட்டு குடிமகனான A என்பவர் ஜெர்மனியில் கற்பழிப்பு குற்றமொன்றை செய்துவிட்டு இந்தியாவிற்கு தப்பி வந்து விடுகிறார். அவர் பாண்டிச்சேரியில் தங்கியிருப்பது கண்டுபிடிக்கப்பட்டது. அவரை அங்கேயே மேற்படி குற்றத்திற்காக விசாரித்து தண்டிக்கலாமா?)

தண்டிக்க முடியாது. ஏனெனில் A என்பவர், இந்தியக் குடிமகனல்ல. மேலும் குற்றமானது இந்தியாவிற்குள் நிகழவில்லை. எனவே தப்பிவந்த வேற்று நாட்டு குற்றவாளியை விசாரித்து தண்டிப்பதற்காக அவனது தாய்நாடாகிய ஃபிரான்சிடம் இந்தியா மீட்டொப்படைக்க (extradited) வேண்டும்.

புகலிடம் அளித்தல் (Hoarbouring)

5. A knows that B has committed an offence. A supplies food to him. Examine the liability of A. (குற்றம் புரிவதில் 'ஆ' ஈடுபட்டுள்ளதாக தெரிந்திருந்தும், அவருக்கு 'அ' உணவு அளிக்கிறான். 'அ'-வின் பொறுப்புநிலையை ஆராய்க.)

மேற்படி குற்றமானது, 'குற்றவாளிகளுக்கு புகலிடம் அளித்தல்' (Harbouring) எனப்படும். இது குறித்து பிரிவு 52-A கூறுகிறது. அதன்படி, 'புகலிடம் அளித்தல்' என்னும் சொல், குற்றவாளி ஒருவருக்கு தங்குமிடம் உணவு, பானம், பணம், உடை, ஆயுதங்கள், வெடிமருந்து அல்லது வாகன வசதி வழங்குவதையோ அல்லது கைது செய்வதைத் தவிர்க்க எந்த வழியிலேனும் ஒருவருக்கு உதவி செய்வதையோ உள்ளடக்கும்.

நமது மேற்படி பிரச்சனையில் குற்றம் புரிவதில் 'ஆ' ஈடுபட்டு உள்ளதாகத் தெரிந்திருந்தும் அவருக்கு 'அ' உணவு அளிக்கிறான். எனவே 'அ' மேற்படி பிரிவின்படி புகலிடம் அளித்த குற்றத்திற்கு ஆளாகின்றான். 'ஆ' என்ன குற்றம் புரிந்துள்ளாரோ அதற்கு என்ன தண்டனை வழங்கப் படுமோ, அதற்கொப்ப 'அ'-க்கு தண்டனை வழங்கப்படும். உதாரணமாக, புகலிடம் அளிக்கப்பட்ட குற்றவாளி மரண தண்டனைக் குற்றம் புரிந்திருந்தால் (கொலைக் குற்றம்), புகலிடம் அளித்தவருக்கு 5 வருடங்கள் சிறைக் காவலுடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும். **(பிரிவு 212).** *ஆனால், கணவன் குற்றவாளி என அறிந்திருந்தும் அவனுக்கு புகலிடம் அளிக்கும் மனைவி மேற்படி குற்றம் புரிந்தவளாக மாட்டாள். அவ்வாறே*

மனைவிக்கு புகலிடம் வழங்கும் கணவனும் அக்குற்றத்திற்காகத் தண்டிக்கப் படமாட்டான்.

6. A, the wife harboured her husband knowing that he has committed a murder. What is the offence committed by her for which she can be convicted? ('அ' என்னும் மனைவி தன் கணவன் கொலைக் குற்றம் செய்திருக்கிறான் என்பதை நன்கு அறிந்திருந்தும் அவருக்குப் புகலிடம் கொடுக்கின்றார். அவர் செய்த குற்றம் என்ன? அவருக்கு என்ன தண்டனை வழங்கப்படும்?)

பிரிவு 52-A புகலிடம் அளித்தலை வரையறுக்கிறது. பிரிவு 212 புகலிடம் அளிப்பவரை தண்டனைக்குள்ளாக்குகிறது. (இவை இரண்டையும் நாம் முந்திய பிரச்சனையின் தீர்விலேயே கண்டுள்ளோம்.) பிரிவு 52-A-க்கு பிரிவு 212-ல் விதிவிலக்கு ஒன்று உண்டு. அதன்படி மனைவி கணவனுக்கோ அல்லது கணவன் மனைவிக்கோ புகலிடம் அளிப்பது, தண்டனைக்குரிய தன்று. எனவே A எனும் மனைவியை, குற்றம் புரிந்த கணவனுக்கு புகலிடம் அளித்த குற்றத்திற்காக தண்டிக்கவியலாது. (மேலும் விரிவான விளக்கத்திற்கு இந்நூலின் பக்கம் எண் 49-ல் காண்க.)

7. A, a neighbour of B, knowing that B has committed decoity, knowingly conceals B in order to screen him from legal punishment. Has A committed any offence? ('ஆ' என்பவரின் அண்டை வீட்டுக்காரராகிய 'அ' என்பவர் 'ஆ' என்பவர் கூட்டுக் கொள்ளை செய்த குற்றத்தை அறிந்திருந்தும், அறிந்தே சட்டப்படியான தண்டனையில் இருந்து அவரை மறைக்கிறார். 'அ' குற்றம் ஏதும் புரிந்தவரா?)

மேற்படி பிரச்சனை குற்றவாளிக்கு புகலிடம் அளித்தலை வரையறுக்கும் பிரிவு 212-ன் கீழான எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். பிரிவு 212-அய் இந்நூலின் பக்கம் எண் 49-ல் காணவும்.

புகலிடம் அளிப்பவருக்கு எந்த அளவில் தண்டனைக் காலம் அமைய வேண்டும் என்பதற்குண்டான விளக்கம் பிரிவு 212-ல் கூறப்பட்டுள்ளது. எடுத்துக்காட்டாக, ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு புகலிடம் அளிப்பவருக்கு மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். இவ்வாறு குற்றவாளிகள் செய்த குற்றத்திற்குண்டான தண்டனையின் கால அளவைப் பொறுத்து, புகலிடம் அளிப்பவரின் தண்டனையும் பிரிவு 212-ல் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

மேற்படி பிரச்சனையில் கூட்டுக் கொள்ளையடித்த B-யை A மறைக்கிறார். (அதாவது புகலிடம் கொடுக்கிறார்.) இங்கு A பிரிவு 52A-யின்படி புகலிடம் அளித்த குற்றத்தைச் செய்தவராவார். எனவே, பிரிவு 212-ன்படி தண்டனைக்குரியவர். கூட்டுக் கொள்ளையடித்தலுக்கு, இந்திய

தண்டனைச் சட்டம் விதிக்கும் தண்டனை, ஆயுட்கால சிறைத் தண்டனையாகும். எனவே, அவருக்கு புகலிடம் அளித்த A-க்கு பிரிவு 212-ன்படி கிடைக்கக்கூடிய தண்டனை, மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை மற்றும் அபராதம்.

குற்றத்திற்கு பின் துணையர் (Accessary after the fact)

8. A knowing that B has murdered Z assists B to hide the body of Z with the intention of screening B from punishing. Decide. (A என்பவருக்கு B என்பவர் Z-அய்க் கொலை செய்துள்ளார் என்று தெரிந்திருந்தும், B-யை தண்டனையிலிருந்து தப்புவிக்கும் கருத்துடன், Z-ன் பிணத்தை மறைத்து வைப்பதற்கு B-க்கு உதவிபுரிகிறார். தீர்க்க.)

குற்றச் செயல் நிறைவேற்றப்பட்ட பின்னர் குற்றவாளி தண்டனையிலிருந்து தப்பித்துக் கொள்வதற்காக, அவருக்கு பாதுகாப்போ, புகலிடமோ அளிப்பவர்கள், குற்றத்திற்குப் பின் துணை புரிந்தவர்களாக (Accessary after the fact) கருதப்படுவர். குற்றவாளியைக் கைது செய்யாவிடாமல், அவரை மறைவாகப் பாதுகாத்து வருவது அல்லது அவருக்கெதிரான சாட்சியங்களை இல்லாமல் ஆக்குவது போன்றவைகள் இப்பிரிவில் அடங்கும்.

மேற்படி பிரச்சனையில் B என்பவர் Z-அய்க் கொலை செய்துள்ளார். Z-ன் பிணம் கண்டுபிடிக்கப்பட்டால், காவல்துறையினர் துப்புதுலக்க ஆரம்பித்துவிடுவர். மேற்படி Z-ன் பிணம் B-க்கு எதிரான ஒரு சாட்சியமாகும். B-யை தண்டனையிலிருந்து தப்புவிக்கும் கருத்துடன், Z-ன் பிணத்தை மறைத்து வைப்பதற்கு B-க்கு A உதவிபுரிகிறார். எனவே இவர் குற்றத்திற்கு பின் துணையராக கருதப்படுகிறார்.

மேற்படி பிரச்சனை பிரிவு 201-ன் கீழான எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். இங்கு B செய்துள்ளது கொலைக் குற்றமாகும். இதனால் B-க்கு மரண தண்டனை விதிக்கப்படும். இவ்வாறு மரண தண்டனைக்குரிய குற்றச் செயலுக்குண்டான சாட்சியத்தை (இங்கு Z-ன் பிணத்தை) மறைக்க A, B-க்கு உதவி புரிந்துள்ளதால், பிரிவு 201-ன்படி A-க்கு ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும்.

பொருண்மைத் தவறு (Mistake of Fact)

9. A, a soldier fires on a mob by the order of his superior officer, in confirmity with the commands of the law. Has A committed any offence? (தம் மேல்நிலை அலுவலரின் கட்டளைப்படி சட்டத்தின் ஆணைகளுக்கிணங்கிய வகையில் கலைப்படை வீரரான 'அ' என்பவர் ஒரு கும்பலைப் பார்த்துச் சுடுகிறார். 'அ' என்பவர் ஏதேனும் குற்றம் செய்திருக்கிறாரா?)

பிரிவு 76-ன்படி, A குற்றம் ஏதும் செய்யவில்லை. (பக்கம் 106 மற்றும் 107-ல் காண்க)

10. X, a police officer empowered with a warrant to arrest Z, arrests Y believing that Y is Z. Y proceeds against X with a court of law. Defend X stating the grounds of defence. (X என்ற காவல் அதிகாரி Y-யை Z என்று நம்பிக் கொண்டு Z-யை கைது செய்யக்கூடிய பிடியாணையினால் Y-யை கைது செய்கிறார். X-க்கு எதிராக நீதிமன்றத்தில் Y நடவடிக்கை மேற்கொள்கிறார். X-க்கான வழக்குரைக் காரணங்களைக் கூறி எதிர் வழக்குரை.

பிரிவு 76-ன்படி, X எக்குற்றமும் செய்யவில்லை. (விரிவான விளக்கத்திற்கு பக்கம் எண் 106-ல் பிரிவு 76 கூறும் வரையறையும், பக்கம் எண் 107-ல் இரண்டாவது எடுத்துக்காட்டையும் கவனிக்கவும்)

11. A gives B a liquid thinking it is medicine. In fact it is poison. B dies. Has A committed any offence? ('அ' என்பவர் தான் மருந்தைக் கொடுப்பதாக நினைத்துக் கொண்டு 'ஆ'-விற்கு ஒரு திரவத்தைக் கொடுக்கிறார். உண்மையில் அது விஷம். 'ஆ' இறக்கிறார். 'அ ஏதேனும் குற்றமிழைத்தவரா?)

இப்பிரச்சனை பொருண்மைத் தவறின் (mistake of fact) கீழ் வருகிறது. பொருண்மைத் தவற்றின் காரணமாக ஏற்படுபவை குற்றங்களாகா என பிரிவு 76-ம் 79-ம் கூறுகின்றன. அதன்படி, ஒரு திரவத்தை மருந்தென A நல்லெண்ணத்துடன் நம்புகிறார். அது விஷம் என்ற பொருண்மையை A அறிந்திருக்கவில்லை. அப்பொருண்மைத் தவற்றினால், அவ்விஷத்தை மருந்தென குடித்த B இறக்கிறார். இங்கு B-யைக் கொல்ல வேண்டும் என்ற கருத்து A-க்கு கிடையாது. எனவே A-யை குற்றமிழைத்தவராக கூற முடியாது.

தற்செயல் நிகழ்ச்சி (Accident)

12. A is at work with a hatchet; the head flies off and kills a man who is standing by. Has A committed any offence? ('அ' என்பவர் ஒரு கைக்கோடாலியுடன் வேலை செய்கிறார். அக்கோடாலியின் தலைப்பாகம் தெறித்து, அருகே நின்று கொண்டிருந்தவரைக் கொன்று விடுகிறது. மேற்படி 'அ' ஏதேனும் குற்றம் புரிந்திருக்கிறாரா?)

பிரிவு 80-ன்படி, A குற்றம் ஏதும் புரியவில்லை. (விரிவாக பக்கம் எண் 114-ல் காண்க.)

13. A attempts to take the purse of B who has a loaded pistol in his pocket. A touches the trigger. The pistol goes off and B is killed. Has A committed any offence? (A என்பவர் B என்பவரின் பாக்கெட்டில் இருந்து பணப்பையை எடுக்க முயல்கிறார். B தன் பாக்கெட்டில் தோட்டாக்கள் அடங்கிய துப்பாக்கி வைத்திருக்கிறார். A துப்பாக்கியின் விசையைத் தொடுகிறார். துப்பாக்கி வெடித்து B மரணமடைகிறார். A என்பவர் ஏதாவது குற்றம் புரிந்துள்ளாரா?)

இங்கு A என்பவர் மரணம் விளைவித்த குற்றமோ (Culpable Homicide) அல்லது கொலைக் குற்றமோ (murder) புரியவில்லை. ஏனெனில்

B-யைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தோ (Intention) அல்லது தனது செயல் B-க்கு மரணம் விளைவிக்கும் என்ற அறிவோ (knowledge) A-க்கு கிடையாது.

பிரிவு 299-ன் கீழ்வரும் 3-வது எடுத்துக்காட்டை இங்கு காணல் நலம். அதாவது, ஒரு பறவையைக் கொன்று அதை திருடும் கருத்துடன் A சுடும்பொழுது புதருக்குப் பின் இருந்த B கொல்லப்படுகிறார். இங்கு A சட்ட விரோதமான ஒன்றைச் செய்தாலும் B-யைக் கொல்ல வேண்டும் என்ற கருத்தோ அல்லது தன் செய்கை B-யின் மரணத்தில் முடியும் என்ற அறிவோ A-க்கு கிடையாது. எனவே A மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாகமாட்டார்.

நமது மேற்படி பிரச்சனையிலும் மேற்கண்ட எடுத்துக்காட்டின்படி A மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாகமாட்டார்.

மேலும் பேராசிரியர் **P.S. அச்சுதன் பிள்ளை அவர்கள்** தனது **குற்றவியல் சட்டம்** எனும் நூலில் மேற்படி பிரசிசனை குறித்து 'தற்செயல் நிகழ்ச்சி' (Accident) என்ற அத்தியாயத்தின் கீழ் பின்வருமாறு விவாதிக்கிறார். அதாவது பாக்கெட்டில் இருந்து பணப்பையை எடுக்கும் பிக்பாக்கெட்டர்கள் அனைவரின் கருத்தும் திருடுவதேயாகும். அதில் ஒரு பிக்பாக்கெட்டாரின் துரதிர்ஷ்ட நேரம் காரணமாக, தான் கை வைக்கும் நபரின் பையில் துப்பாக்கி இருந்து, அது வெடித்து அந்நபர் இறந்தால், அதற்காக அந்த பிக்பாக்கெட் திருடரை கொலைக் குற்றத்திற்காக தண்டிக்கவியலாது. அது ஒரு தற்செயல் நிகழ்ச்சி ஆகும். ஏனெனில் அந்நபரை கொல்ல வேண்டும் என்ற கருத்து அத்திருடனுக்கு கிடையாது. மேலும் அந்நபர் பையில் பணத்திற்கு பதிலாக துப்பாக்கியை வைத்திருப்பார் என்று அத்திருடனுக்கு எப்படித் தெரியும்? எனவே பொதுவாக திருடும் எண்ணம் மட்டுமே கொண்ட பிக்பாக்கெட்டர்களில் ஒருவருக்கு சாதாரண சிறைத் தண்டனையும், பிக்பாக்கெட் செய்யும் பொழுது தற்செயலாக ஏற்பட்ட மரணத்திற்காக மற்றொரு பிக்பாக்கெட்டரை தூக்குமேடைக்கும் அனுப்புவது என்பது நியாயமற்றது என்று பேராசிரியர் பிள்ளை அவர்கள் கூறுகிறார். எனவே, மேற்படி A என்பவரை பிக்பாக்கெட் செய்ய அல்லது திருட முயற்சித்த குற்றத்திற்காக மட்டுமே தண்டிக்கவியலும் என்று தீர்வு பகர்கிறார். தற்செயலாக ஏற்பட்ட மரணத்திற்கு A-வைக் காரணமாக்க முடியாது என்றும் கூறுகிறார்.

தேவை (Necessity)

14. A in a great fire, pulls down houses in order to prevent the conflagration from spreading. Refer to the law in solving the problem.
(ஒரு பெருந்தீயின் சுவாலை பரவுவதைத் தடுப்பதற்காக 'அ' என்பவர் வீடுகளை இடித்துத் தள்ளுகிறார். இந்தப் பிரச்சனைக்கு சம்பந்தமான சட்டத்தினை விளக்கி தீர்வு காணவும்.)

பிரிவு 81-ன்படி, A எக்குற்றமும் புரியவில்லை. (விரிவாக பக்கம் எண் 117-ல் பிரிவு 81-யும், பக்கம் 118-ல் இரண்டாவது எடுத்துக்காட்டையும் காணவும்.)

15. A and B who are swimming in the sea after a ship-wreck, got hold of a plank which is not large enough to support two persons. A pushes off B who is drowned in the sea. Discuss whether A has committed any offence. (ஒரு கப்பல் சிதறுண்ட பிறகு A-யும், B-யும் நடுக்கடலில் நீந்திக் கொண்டிருக்கையில் ஒரு மரத்துண்டைப் பற்றிக் கொள்கிறார்கள். அம்மரத்துண்டு இரண்டு நபர்களை தாங்கக் கூடியதாக இல்லை. B-யை A தள்ளிவிடுகிறார். B கடலில் முழ்கிப் போகிறார். A ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா என்பதை விவாதிக்க.)

பிரிவு 81-ன்படி, A எக்குற்றமும் புரியவில்லை. (விரிவான விளக்கத்திற்கு பக்கம் எண் 119-ல் உள்ள இறுதிப் பகுதியில் காணவும்.)

16. A, a person, aged 57, and a Jehovah's witness was seriously injured. He carried a card stating that no blood was to be administered under any circumstances. The doctor administered blood transfusion which he considers necessary to preserve the victim's life. Has the doctor committed any offence? ('அ' என்னும் 57 வயதுடைய மற்றும் ஜெகோவா சாட்சி சம்பிக்கையுள்ள நபருக்கு கடுமையான உடலூறு ஏற்பட்டது. எந்த நிலையிலும் இரத்தம் தன் உடம்பில் செலுத்தக் கூடாது என்னும் கூற்றுடைய அட்டையை தன்வசம் வைத்திருந்தார். காயமடைந்த நபரின் உயிரை பாதுகாப்பதற்காக அவர் உடம்பில் இரத்தத்தை மருத்துவர் செலுத்தினார். மருத்துவர் ஏதேனும் குற்றம் இழைத்துள்ளாரா?)

மருத்துவர் எந்தக் குற்றமும் இழைக்கவில்லை. ஏனெனில் பிரிவு 81-ன்படி, தேவையின்பாற் செய்யப்படுவது குற்றமாவதில்லை (*quid necessitatus non habet legam*).

பிரிவு 81-ன்படி, தீங்கு செய்ய வேண்டும் என்ற கருத்து இல்லாமலும், ஆளுக்கு அல்லது சொத்துக்கு வேறு தீங்கு ஏற்படுவதைத் தடுக்கும் அல்லது தவிர்க்கும் பொருட்டு நல்லெண்ணத்துடன் ஏதேனும் செய்யப்படுமானால், அது அநேகமாக தீங்கை விளைவிக்கக் கூடும் என்ற அறிவுடன் செய்யப்படுகிறது என்ற காரணத்தால் மட்டுமே, ஒரு குற்றமாகாது.

மேற்படி பிரச்சனையில் A-க்கு தீங்கு செய்ய வேண்டும் என்ற கருத்து மருத்துவருக்கு இல்லை. மாறாக A-யின் உயிரை பாதுகாக்க வேண்டும் என்ற நல்லெண்ணம்தான் உள்ளது. அதாவது A-க்கு வேறு தீங்கு (இங்கு மரணம்) ஏற்படுவதை தவிர்க்க வேண்டும் என்று மருத்துவர் நல்லெண்ணத்துடன் அவரது உடலில் இரத்தம் செலுத்துகிறார். இது, எந்த நிலையிலும் தனது உடலில் இரத்தம் செலுத்தக் கூடாது என்று A கொண்டிருக்கும் ஜெகோவா சாட்சி நம்பிக்கைக்கு தீங்கு விளைவிப்பதாக இருந்தாலும், அவ்வாறு இரத்தம்

செலுத்துவது அவரது உயிரைக் காப்பாற்றுவதற்கு ஒரு தேவையாக உள்ளது என்ற நிலையில் மருத்துவர் தனக்குள்ள மருத்துவக் கடமைகளின்படி நல்லெண்ணத்தில் செயல்பட்டுள்ளதால் அவர் எக்குற்றத்திற்கும் ஆளாகார். இங்கு மருத்துவர், A-யின் உடலில் இரத்தம் ஏற்றிய செயல், A-யின் நம்பிக்கைக்கு தீங்கு விளைவிக்கக் கூடியது (புண்படுத்தக் கூடியது) என்பதை அவர் அறிந்து கொண்டிருந்தும், அவ்வாறு இரத்தம் செலுத்தியுள்ளார் என்பதை மட்டும் கொண்டு அவரை ஒரு குற்றவாளியாக்க முடியாது.

குழந்தைத் தன்மை (Infancy)

17. X, a child of six year steals a gold necklace in a house and A obtains that necklace from X for Rs.10. Is A guilty of any offence? (X என்ற ஒரு ஆறு வயது குழந்தை ஒரு வீட்டில் கழுத்து ஆபரணத்தை திருடுகின்றது. A என்பவர் அந்த கழுத்து ஆபரணத்தை பத்து ரூபாய்க்கு பெறுகின்றார். A ஏதேனும் குற்றம் செய்தாரா?)

மேற்படி பிரச்சனை **Makhulshah**[1] எனும் வழக்கின் அடிப்படையில் அமைந்ததாகும். அதில் கொடுக்கப்பட்ட அதே தீர்ப்பை, நாம் மேற்படி பிரச்சனைக்குண்டான தீர்வாக அளிக்கலாம்.

முதற்கண் பிரிவு 82-ன்படி, ஏழு வயதிற்குட்பட்ட குழந்தை ஒன்றால் செய்யப்படும் செயல் எதுவும் ஒரு குற்றமாவதில்லை. மேற்படி பிரச்சனையில் குழந்தையின் வயது ஆறுதான் ஆகிறது. எனவே, அக்குழந்தையின் செயல் ஒரு குற்றமன்று. இதனால், அக்குழந்தையிடமிருந்து அந்த கழுத்து ஆபரணத்தை பத்து ரூபாய்க்கு பெற்றுக் கொண்ட A-யையும் தண்டிக்க முடியாது. அதாவது, திருட்டுப் பொருளை பெற்றுக் கொண்டதற்காக பிரிவு 411-ன்படி தண்டிக்கவியலாது. ஆனால், இதே மேற்படி A, அந்த ஆபரணம் இன்னாருக்குச் சொந்தமானது என்று அறிந்திருந்து, அதை நேர்மையற்ற முறையில் தனது சொந்த உபயோகத்திற்காக மாற்றிக்கொண்டிருந்தால், A-யை பிரிவு 403-ன் கீழ் "குற்றமுறு சொத்தைக் கையாடலுக்காக" (criminal misappropriation of property) தண்டிக்கலாம்.

சம்மதம் (Consent)

18. Disclose the offence, if any, committed in the following:

(a) A, a surgeon knowing that a particular operation is likely to cause death of Z, who suffers under a painful complaint but not intending to cause Z's death and intending in good faith for Z's benefit, performs the operation on Z, with Z's consent and Z dies.

(b) A is in a house which is on fire, with Z, a child. People below hold out a blanket. A drops the child from the house-top, knowing it to

1. (1886) 1 Weir 470

be likely that the fall may kill the child, but not intending to kill the child and intending in good faith the child's benefit. The child is killed by the fall.

மேற்கண்ட இரண்டு பிரச்சனைகளிலும் குற்றம் எதுவும் நிகழவில்லை. (முதல் பிரச்சனைக்கு பக்கம் எண் 140-ல் பிரிவு 88-அய்க் காணவும். இரண்டாம் பிரச்சனைக்கு பக்கம் எண் 143-ல் பிரிவு 92-அய்க் காணவும். மேலும் பக்கம் எண் 144-ல் உள்ள 4-வது எடுத்துக்காட்டைக் காணவும்.)

19. X shot at a tiger which was carrying away his friend Z. The shot hit Z and Z was killed. Discuss the liability of X. (X அவருடைய நண்பர் Z-யைத் தூக்கிக் கொண்டு செல்லும் புலியைச் சுடுகிறார். அதில் அடியுண்டு Z கொல்லப்படுகிறார். X-னுடைய பொறுப்புநிலையை விவாதிக்கவும்.)

X, பிரிவு 92-ன்படி குற்றம் எதுவும் புரியவில்லை. ஏனெனில் பிரிவு 92-ன்படி, ஒருவரின் சம்மதம் இன்றி, அவருடைய நலனுக்காக நல்லெண்ணத்துடன் செய்யப்படும் செயல் எதுவும், அது அவருக்கு தீங்கு விளைவிக்கலாம் என்றாலும்கூட, ஒரு குற்றமாகாது. மேற்படி பிரச்சனை, பிரிவு 92-ன் கீழான எடுத்துக்காட்டுகளில் மூன்றாவது எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். அதை இந்நூலின் பக்கம் எண் 144-ல் காணலாம்.

நல்லெண்ணத்தோடு தெரிவிக்கப்படும் தகவல் (Communication made in good faith)

20. A, a surgeon, in good faith, communicates to a patient his opinion that he (the patient) cannot live. The patient dies in consequence of the shock. Discuss the liability of surgeon. (ஓர் அறுவைச் சிகிச்சை மருத்துவரான 'அ' என்பவர் ஒரு நோயாளியிடம் அவர் பிழைக்க மாட்டார் என்ற தனது அபிப்பிராயத்தை நல்லெண்ணத்தோடு அறிவிக்கிறார். அந்த அதிர்ச்சையின் விளைவாக அந்நோயாளி மரணமடைகிறார். மேற்படி மருத்துவரின் பொறுப்புநிலையை விவாதிக்க.)

இந்திய தண்டனைச் சட்டத்தின் 93–வது பிரிவு நல்லெண்ணத்தோடு தெரிவிக்கப்படும் தகவல் (Communication made in good faith) பற்றி கூறுகிறது. அதன்படி, ஒரு செய்தியானது ஒரு நபரின் நன்மை கருதி நல்லெண்ணத்தோடு கூறப்பட்டு அதன் விளைவாக அச்செய்தி கேட்ட நபருக்கு துன்பம் ஏதேனும் ஏற்படின், அதற்காக அச்செய்தியை நல்லெண்ணத்துடன் கூறிய அந்நபரை தண்டிக்கவியலாது. அவரது செயல் ஒரு குற்றமாகாது.

நமது மேற்படி பிரச்சனையில், 'அ' என்னும் மருத்துவர் நல்லெண்ணத்தோடு நோயாளியின் நன்மையைக் கருதி (இறுதிகாலச் செலவிற்கும், தான் சம்பாதித்த சொத்துக்களை அடைவதில் தனது

வாரிசுதாரர்களுக்குள் தகராறு ஏதும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு உயில் எழுதி வைப்பதற்கும், அவர் செய்து வந்த நற்பணிகளைத் தொடரவும்) அவர் பிழைக்க மாட்டார் என்ற தகவலை அவரிடமே கூறியுள்ளார். இதனால் அதிர்ச்சியடைந்து அந்நோயாளி இறந்துவிட்டார். இவ்வாறு நல்லெண்ணத்துடன் கூறப்பட்ட செய்தியினால், அதைக் கேட்டவருக்கு பாதிப்பு ஏதும் ஏற்பட்டாலும், அதற்கு அச்செய்தியைக் கூறிய அந்நபரை குற்றப் பொறுப்பிற்கு உள்ளாக்க முடியாது என்று பிரிவு 93 கூறுகிறது. எனவே மேற்படி மருத்துவர் நல்லெண்ணத்துடன் செயல்பட்டிருப்பதால், அவர் மீது மேற்படி பிரிவின்படி குற்றப்பொறுப்பு ஏதும் சுமத்தவியலாது. அது ஒரு குற்றச் செயலும் அல்ல.

தற்காப்புரிமை (Private Defence)

21. Z under the influence of madness, attempts to kill A. A, in order to save himself, shoots Z with his revolver and Z died. Is A guilty of any offence? (Z என்பவர் பித்துநிலை மயக்கத்தில் A என்பவரை கொலை செய்ய முயற்சிக்கிறார். A தன்னைக் காத்துக்கொள்ள Z என்பவரை தன்னுடைய கைத்துப்பாக்கியால் சுடுகின்றார். Z இறக்கிறார். A என்பவர் ஏதேனும் குற்றம் செய்தவரா?)

இந்திய தண்டனைச் சட்டத்தின் 96 முதல் 106 வரை உள்ள பிரிவுகள் தற்காப்புரிமையை விளக்குகிறது. அதில் பிரிவு 98 ஆனது பின்வருமாறு கூறுகிறது. அதாவது, "இளமை, புரிந்து கொள்ளும் பக்குவமின்மை, சித்த சுவாதீனமின்மை (பித்துநிலை) அல்லது போதை - இவற்றின் காரணமாக ஒருவர் புரியும் குற்றச் செயலை ஒரு குற்றமாக கருத இயலாது. ஆனால் அந்தச் செயல் குற்றமாக உள்ள பொழுது என்ன தற்காப்புரிமையை ஒவ்வொருவரும் பெற்றிருப்பாரோ அதே தற்காப்புரிமையை பெற்றிருப்பார்." மேற்படி பிரிவின் உட்பொருள் யாதெனில், ஒருவர் தனது தற்காப்புரிமையை பயன்படுத்த மேற்கண்ட 4 உடல் தன்மைகள் ஒரு தடையாக இருக்காது என்பதே ஆகும்.

நமது மேற்படி பிரச்சனையில், Z என்பவர் பித்துநிலை மயக்கத்தில் A என்பவரை கொலை செய்ய முயற்சிக்கிறார். A என்பவருக்கு Z என்பவர் பித்துநிலையில் உள்ளாரா அல்லது நல்ல நிலையில் உள்ளாரா என்பது தெரிந்திருக்க நியாயமில்லை. எனவே Z என்பவரை பற்றி சுவாதீனம் உடையவராகவே A கருதிக் கொண்டு, தன்னைத் தாக்க வந்தவரிடமிருந்து தற்காத்துக் கொள்ளும் பொருட்டு, A என்பவர் Z-ஐ சுட்டு விடுகிறார். இதனால் Z இறக்கிறார். இங்கு A தனது தற்காப்புரிமையை பயன்படுத்தியுள்ளதால் மேற்படி 98-வது பிரிவின்படி எக்குற்றத்திற்கும் ஆளாகார்.

22. A a farmer at the sight of his neighbour's cow, grazing in his paddy field, cuts its legs with his scythe. Has A committed any offence?

(தன்னுடைய நெல் வயலில் அண்டை வீட்டுக்காரரின் பசு மேய்வதைக் கண்டு கோபமுற்று குடியானவரான 'அ' அதன் கால்களை புல்லரிவாளால் வெட்டிவிடுகிறார். 'அ' குற்றம் புரிந்தவரா?)

இந்தப் பிரச்சனையில், 'அ'வைக் குற்றம் புரிந்தவராக கருத முடியாது. ஏனெனில், அவருக்கு இந்திய தண்டனைச் சட்டப் பிரிவு 105-ன்படி, சொத்து தற்காப்புரிமை உள்ளது. தன்னுடைய நிலத்தில் அண்டை வீட்டுக்காரரின் பசு அத்துமீறி நுழைந்து மேய்வதைக் கண்டு, தன்னுடைய சொத்தை காப்பாற்றிக் கொள்ள அப்பசுவை விரட்டும் முயற்சியில், அவர் அதன் கால்களை வெட்டி விடுகிறார். மேலும் விரட்டும் முயற்சியில் பசு மிரண்டு அவர் மீதே பாய்ந்து அவருடைய உயிருக்கு கூட அபாயம் விளைவிக்கக்கூடிய நிலையும் இங்குள்ளது. எனவே, பிரிவு 97-ன்படி, உடல் தற்காப்புரிமையும் உண்டு.

23. A is attacked by a mob who attempts to murder him. He cannot effectively exercise his right of private defence without firing on the mob, and he cannot fire without risk of harming young children who are mingled with the mob. A causes the death of a child. Discuss the liability of A. ('அ' என்பவர் அவரைக் கொலை செய்ய முயல்கின்ற ஒரு கும்பலால் தாக்கப்படுகிறார். அக்கும்பலின் மீது துப்பாக்கியால் பிரயோகம் செய்யாமல் பயன்தரும் வகையில் தற்காப்புரிமையை அவர் பயன்படுத்த முடியாது. மற்றும் அந்தக் கும்பலில் கலந்திருக்கும் சிறிய குழந்தைகளுக்கு தீங்கு ஏற்படுத்தும் ஆபத்தில்லாமலும் அவர் சுட முடியாது. 'அ' என்பவர் ஒரு குழந்தையின் மரணத்தை விளைவிக்கிறார். 'அ'-வின் பொறுப்புநிலைமையை விவாதிக்க.)

மேற்படி பிரச்சனை பிரிவு 106-ன் கீழான எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். பிரிவு 106-ன்படி, மரணம் ஏற்படும் என்னும் அச்சம் உண்டாக்கக் கூடிய தாக்குதலுக்கு எதிராக தன்னை தற்காத்துக் கொள்ளும் தற்காப்புரிமையைப் பயன்படுத்தும் போது, தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் நிரபராதி (அதாவது கபடமற்ற அப்பாவி, மேற்படி பிரச்சனையின்படி 'குழந்தைகள்') ஒருவருக்கு தீங்கு விளைவித்துவிட்டால், அது ஒரு குற்றமாகாது. எனவே, A-யின் செயல், பிரிவு 106-ன்படி, ஒரு குற்றமல்ல. (மேலும் விளக்கமாக அறிந்துகொள்ள வேண்டுமெனில், இந் நூலின் பக்கம் எண் 159-ல் பிரிவு 106-ல் காண்க.)

குற்ற உடந்தை (Abetment)

24. (a) A instigates B to murder C. B refuses to do so. Is A guilty of the offence of abetment? Discuss and decide.(C-யைக் கொலை செய்யுமாறு A, B-யைத் தூண்டுகிறார். B அவ்வாறு செய்ய மறுக்கிறார். A குற்ற உடந்தைக் குற்றம் புரிந்தவரா? விவாதித்து முடிவு செய்க.)

(b) A instigates B to murder D. In pursuance of the instigation, B stabs D. D recovers from the injury. Examine the liability of A. (D-யைக் கொல்ல A, B-யைத் தூண்டுகிறார். அதன் விளைவாக B, D-யைக் கத்தியால் குத்தி விடுகிறார். D அக்காயத்திலிருந்து குணமடைகிறார். A-யின் பொறுப்புநிலையை ஆராய்க.)

மேற்கண்ட இரண்டு பிரச்சனைகளிலும் A குற்ற உடந்தைக் குற்றம் புரிந்தவரே. (விளக்கத்திற்கு, இந்நூலின் பக்கம் எண் 52-ல் உள்ள பிரிவு 108-ன் கீழான 2-வது விளக்கத்தில் காணவும்.)

25. A, in India, instigates B, a foreigner in America, to commit a murder in London. Discuss and Decide. (இந்தியாவிலுள்ள 'அ' என்பவர், அமெரிக்காவிலுள்ள 'ஆ' என்னும் அயல்நாட்டினரை இலண்டனில் ஒரு கொலை செய்யும்படி தூண்டுகிறார். ஆராய்ந்து தீர்மானம் காண்க.)

பிரிவு **108-A-யின்படி**, A குற்ற உடந்தையர் ஆகிறார். (விளக்கமாக, பக்கம் எண் 55-ல் உள்ள 8(ஆ) வினாவின் விடையில் காணவும்.)

26. A instigates a child to put poison into the food of Z and gives him poison for that purpose. The child in consequence of the instigation by mistake puts the poison into the food of Y which is by the side of that of Z. Y dies. Examine the liability of A. (Z-யின் உணவில் நஞ்சினைக் கலக்க ஒரு குழந்தையை A தூண்டுகிறார். அதற்காக நஞ்சினையும் தருகிறார். அக்குழந்தை அத்தூண்டுதலின் விளைவாக Z-யின் அருகில் இருக்கும் Y-யின் உணவில் தவறுதலாக நஞ்சினைக் கலக்கிறது. Y இறக்கிறார். A-யின் பொறுப்புநிலையை ஆராய்க.)

பிரிவு 107-ன் முதலாவது கூறின்படி, ஒருவர் ஒரு குற்றச் செயலைச் செய்ய மற்றொருவரைத் தூண்டுவது குற்ற உடந்தை (Abetment) எனப்படும். அவ்வாறு தூண்டுகிறவர் பிரிவு 108-ன்படி, குற்ற உடந்தையர் (abettor) எனப்படுவர்.

அந்த வகையில், நமது மேற்படி பிரச்சனைக்கு தீர்வு காண, நாம் பிரிவு 111-அய் காண வேண்டியுள்ளது. பிரிவு 111-ன்படி, ஒரு செயலுக்கு உடந்தையாயிருந்து வேறொரு செய்கை செய்யப்படும்போது, செய்யப்பட்ட அந்தச் செயலுக்கு உடந்தைக் குற்றவாளி, நேரடியாக உடந்தையாக இருந்தது போன்ற முறையிலும், உடந்தையாக இருந்தது போன்ற அளவுக்கும் அவர் பொறுப்புடையவராவார் (liability of abettor when one act abetted and different act done).

மேற்படி பிரச்சனையானது, மேற்கண்ட 111-வது பிரிவின் முதல் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும்.

Z-அய்க் கொல்ல ஒரு குழந்தையைத் தூண்டி அதனிடம் A நஞ்சினைக் கொடுக்கிறார். இது A-யின் குற்ற உடந்தை நிலையைக் காண்பிக்கிறது.

அடுத்து அக்குழந்தை அந்நஞ்சினை Z-யின் உணவில் இடுவதற்குப் பதிலாக, தவறுதலாக Y-ன் உணவில் இட்டு விடுகிறது. இதனால் Y இறந்துவிடுகிறார். இங்கு மேற்படி பிரிவு 111-ன்படி, Y-ன் உணவில் நஞ்சிடும்படி அக்குழந்தையை நேரடியாக A தூண்டியிருந்தால் எப்படியோ அதே முறையில், அதே அளவிற்கும் A குற்றப் பொறுப்பிற்குடையவர் ஆவார். எனவே A -க்கு பிரிவு 109-ல்படி வகை செய்யப்பட்டுள்ளபடி கொலைக் குற்றத்திற்குண்டான தண்டனை விதிக்கப்படும்.

27. A tells B to assault C. B acts beyond his instruction and kill C. Discuss the liability of A and B. (A என்பவர் B என்பவரிடம் C என்பவரைத் தாக்கும்படி சொல்கிறார். ஆனால் B, A-வின் குறிப்பினை மீறி C-அய் கொன்று விடுகிறார். A மற்றும் B-ன் பொறுப்புநிலையை விவாதிக்கவும்.)

இந்திய தண்டனைச் சட்டத்தின் 107, 108 மற்றும் 113-வது பிரிவு, மேற்படி பிரச்சனைக்கு விடை பகர்கிறது. பிரிவு 107-ன்படி, ஒரு குற்றத்தை செய்ய ஒருவர் மற்றொருவரை தூண்டும் பொழுது, அவர் அக்குற்றத்தைச் செய்வதில் உடந்தையாயிருக்கிறார் என்று பொருளாகும். பிரிவு 108-ன்படி, ஒரு குற்றத்தைச் செய்ய மேற்கண்டவாறு தூண்டப்பட்ட நபர், தன்னைத் தூண்டியவருக்குள்ள (குற்ற உடந்தையர்) அதே கருத்துடனோ அல்லது அறிவுடனோ செயல்பட்டு அக்குற்றத்தைச் செய்திருக்க வேண்டும்.

மேற்படி பிரச்சனையில் A-யின் கருத்து, C-யைத் தாக்க வேண்டும். அதற்கு B-யைத் தூண்டுகிறார். ஆனால் அதனை மீறி B, C-யைக் கொன்று விடுகிறார். C-யைக் கொல்ல வேண்டும் என்பது A-யின் கருத்தல்ல. இங்கு A-க்கு இருந்த C-யினைத் தாக்க வேண்டும் என்ற கருத்தினை மீறி B செயல்பட்டு, C-யைக் கொன்று விடுவதால், A -யைக் கொலைக் குற்றத்திற்கு உடந்தையாயிருந்தவர் எனத் தண்டிக்கவியலாது. C-யைத் தாக்க முனைந்த குற்றத்திற்கு உடந்தையாயிருந்ததற்கு மட்டுமே A-யைத் தண்டிக்கவியலும். B-யைக் கொலைக் குற்றத்திற்காக தண்டிக்கலாம்.

ஆனால் பிரிவு 113-ன்படி, C-யைத் தாக்குவது அவருக்கு மரணத்தை ஏற்படுத்தலாம் என A முன்னரே அறிந்திருந்து அதன்படி B-க்கு குறிப்பு வழங்கியிருந்தால், A-வைக் கொலைக் குற்றத்திற்கு உடந்தையாக இருந்ததற்காக தண்டிக்கலாம். (பிரிவு 113 : உடந்தையாயிருந்த செய்கையால் விளைவிக்கப்பட்டதும், குற்ற உடந்தையர் கொண்டிருந்த கருத்திலிருந்தும் வேறுபட்ட ஒரு விளைவுக்கு, குற்ற உடந்தையரின் பொறுப்பு)

தேர்தல்கள் சம்பந்தமான குற்றங்கள் (Offences relating to Elections)

28. A candidate informed the voters that he was Chalanti Vishnu and representative of Lord Jagannath himself and that any person who did not vote for him would be a sinner against the Lord and the Hindu religion. Whether the candidate had committed any offence? Give reasons. (வேட்பாளர் ஒருவர் தான் சலநதி விஷ்ணு என்றும் ஜெகநாதப்

பெருமானின் பெயராளர் என்றும் வாக்காளர்களிடம் கூறி, தனக்கு வாக்களிக்காதவர்கள் பெருமாளுக்கு மற்றும் இந்து மதத்திற்குப் பாவம் செய்தவர்களாவார்கள் என்றார். வேட்பாளர் குற்றம் ஏதேனும் செய்துள்ளாரா? காரணங்கள் தருக.)

பிரிவு 171-C(1)-ன்படி, தேர்தல் உரிமை எதனையும் தடையின்றிச் செயல்படுத்துவதில் தன்னிச்சையாகத் தலையிடுகிற அல்லது தலையிட முயல்கிற எவரொருவரும் தேர்தலில் தகாத முறையில் செல்வாக்கைப் (undue influence at elections) பயன்படுத்தும் குற்றத்தைச் செய்தவராவார்.

பிரிவு 171-C(2)-ன்படி, ஒரு வேட்பாளருக்கோ அல்லது வாக்காளருக்கோ அல்லது அவர்கள் அக்கறை கொண்டுள்ள மற்றவருக்கோ எவ்விதமான தீங்கும் ஏற்படுத்துவதாக அச்சுறுத்துகிற அல்லது ஒரு வேட்பாளரை அல்லது வாக்காளரை அவரோ அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள எவரேனுமோ தெய்வக் கோபத்திற்கு (Divine displeasure) அல்லது ஆன்மீகக் கண்டனத்திற்கு (spiritual censure) ஆளாவார் என்று நம்பும்படி தூண்டுகிற அல்லது தூண்ட முயல்கிற எவரொருவரும்,

மேற்படி பிரிவு 171-C(1)-ன் வரையறைப்படி, அத்தகைய வேட்பாளர் அல்லது வாக்காளரின் தேர்தல் உரிமையை தடையின்றி செயல்படுத்துவதில் தலையிடுவதாகக் கொள்ளப்படும்.

ஒரு வேட்பாளர், தனக்கு வாக்களிக்காதவர் பெருமாளுக்கு மற்றும் இந்து மதத்திற்குப் பாவம் செய்துள்ளவர்கள் என்று கூறுகிறார். இது மேற்படி பிரிவு **171-C**-ன்படி அவ்வேட்பாளர் தேர்தலில் தகாத முறை செல்வாக்கைப் பயன்படுத்தி, வாக்காளர்களின் ஓட்டுக்களை பெற முயல்வதை தெளிவாகச் சுட்டிக்காட்டுகிறது. எனவே, அவரை பிரிவு 171-F-ன்படி, ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கலாம்.

Narbaba Prasad v. Chhaganlal[1] எனும் வழக்கில் Narbaba Prasad என்பவர் இந்தியாவில் பசு வதையை ஒழிக்காத காங்கிரஸ் கட்சிக்கு எவரும் ஓட்டுப்போட வேண்டாமென்றும், அப்படியும் மீறி ஓட்டுப் போட்டால் அவர்கள் பசுவை வதை செய்த பாவத்தைச் ("*go-hatya*" - sin of cow-slaughter) செய்தவராவார்கள் என்று கூறி, 'ஜன் சங்க்' (Jan Sangh) எனும் கட்சிக்கு ஆதரவாக வாக்காளர்களிடையே பிரச்சாரம் செய்தார். இதனால் தேர்தலில் ஜன் சங்க் கட்சிக்கு அதிக ஓட்டு கிடைத்து, அது வெற்றி பெற்றது. இத்தேர்தலை இரத்து செய்யக் கோரி காங்கிரஸ் கட்சி வழக்கிட்டது. வழக்கை மேல்முறையீட்டில் ஆராய்ந்த உச்ச நீதிமன்றம், ஜன் சங்க் கட்சி மேற்கண்டவாறு பிரச்சாரம் செய்தது, தேர்தலில் தகாத முறை செல்வாக்கைப் பயன்படுத்திய குற்றமாகும் என்றும், அவ்வாறு பிரச்சாரம் செய்த அக்கட்சியைச் சார்ந்த Narbaba Prasad என்பவர் பிரிவு 171-F-ன்படி

1. A.I.R. 1969 S.C. 395

குற்றமிழைத்தவர் ஆகிறார் என்றும், எனவே அத்தேர்தல் சட்ட முறையற்றது என்றும் கூறி, அதனை இரத்து செய்ய உத்திரவிட்டது.

கொலை (Murder)

29. A intentionally gives B a sword-cut sufficient to cause the death of a man in the ordinary course of nature. B dies in consequence. A did not however intend to kill B. Is A guilty of murder? (சாதாரணமாக ஒரு மனிதனுக்கு மரணத்தை விளைவிக்கப் போதுமான ஒரு வாள் வெட்டினை A என்பவர், B-க்கு வேண்டுமென்றே கொடுக்கிறார். இதனால் B இறக்கிறார். ஆனால் அவர் B-யைக் கொல்ல கருதவில்லை. A கொலைக் குற்றத்திற்கு ஆளாவாரா?)

பிரிவு 300-ன் கீழான மூன்றாவது எடுத்துக்காட்டின்படி, A கொலைக் குற்றத்திற்கு ஆளாவார். பிரிவு 300-யும், அவ்வெடுத்துக்காட்டையும், முறையே பக்கம் எண் 232 மற்றும் 233-ல் காண்க.)

30. A without any excuse, fires a loaded canon into a crowd of persons and kills one of them. A had no premeditated design to kill any one. Examine A's liability. (ஒரு மக்கள் கூட்டத்திற்குள் காரணமேதுமின்றி ஒரு வெடிமருந்து அடைக்கப்பட்ட பீரங்கியைச் சுட்டுக் கூட்டத்தில் ஒருவரை A கொன்று விடுகிறார். யாரையும் கொல்ல வேண்டும் என்று A முன்கூட்டியே திட்டமிடாதவராக உள்ளார். A-யின் பொறுப்புநிலையை ஆய்க.)

பிரிவு 300-ன் நான்காவது பத்தியின்படி, மரணத்தை விளைவிக்கும் செய்கையைச் செய்கின்றவர், அது பெரும்பாலும் (Probability) உறுதியாக நிகழ்தற்குரிய மரணத்தையோ அல்லது மரணத்தை அநேகமாக விளைவிக்கக் கூடிய உடற்காயத்தையோ விளைவிக்கவோ செய்யும் என்னும் அளவுக்கு உடனடி அபாயகரமானது என்பதை அறிந்து, மரணத்தையோ அல்லது மேற்சொன்னவாறான காயத்தையோ விளைவிக்கும் ஆபத்தை மேற்கொள்வதற்கு யாதொரு காரணமுமில்லாமல் அத்தகு செய்கையைச் செய்வாரானால், அச்செயல் கொலைக் குற்றமாகும்.

நமது மேற்படி பிரச்சனையிலும், கூட்டத்தின் நடுவே வெடிமருந்து அடைக்கப்பட்ட பீரங்கியை சுடுவது, உறுதியாக யாருடைய மரணத்தையாவது விளைவிக்கும் என்பது யாவரும் அறிந்தது. அந்த ஆபத்தை யாதொரு காரணமுமில்லாமல் A செய்கிறார். இதற்காக A முன்கூட்டியே திட்டமிடவில்லையென்றாலும், அவர் கொலைக் குற்றத்தைச் செய்தவராகிறார். (பக்கம் எண் 233-ல் எடுத்துக்காட்டு 4-அய்க் காண்க.)

31. A, under the influence of passion excited by a provocation given by Z, intentionally kills Y, Z's child. Decide the liability of A. (Z என்பவர் ஆத்திரமூட்டியதன் விளைவாக உணர்ச்சி வசப்பட்டு இருக்கும்போது A என்பவர்

Z-ன் குழந்தையாகிய Y-யைக் கொல்ல வேண்டுமென்ற கருத்தோடு கொன்று விடுகின்றார். A-யின் பொறுப்புநிலையை தீர்மானிக்க.)

இந்திய தண்டனைச் சட்டத்தின் 300-வது பிரிவானது, கொலைக் குற்றத்தைப் பற்றி கூறுகிறது. அதில் அய்ந்து விதிவிலக்குகள் கூறப்பட்டுள்ளன. அம்மாதிரியான விதிவிலக்கான சந்தர்ப்பங்களில், மரணம் விளைவிக்கும் குற்றம், கொலைக் குற்றமாகாது எனக் கூறப்பட்டுள்ளது. (மரணம் விளைவிக்கும் குற்றத்திற்கு தண்டனை குறைவு. அதாவது பத்தாண்டுகள் வரை சிறைக் காவல் (பிரிவு 304). ஆனால் கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ விதிக்கப்படும் (பிரிவு 302). எனவே, ஒரு கொலைக் குற்றம் பிரிவு 300-ல் கூறப்பட்டுள்ள அய்ந்து விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் ஏதேனும் ஒன்றின் கீழ் வருமானால், அது மரணம் விளைவிக்கும் குற்றமாக கருதப்படும்.)

முதல் விதிவிலக்கு, கடுமையான மற்றும் திடீர் ஆத்திரத்தின் (sudden provocation) விளைவாக மரணம் விளைவித்தல். அதன்படி, குற்றவாளி கடுமையாகவும் திடீரென்றும் ஆத்திரமூட்டப்பட்டுத் தம்மை அடக்கிக் கொள்ளும் சக்தியை இழந்த நிலையில் ஆத்திரமூட்டியவருடைய மரணத்தை விளைவித்தால், அல்லது வேறு எவருடைய மரணத்தைத் தவறுதலாக அல்லது தற்செயலாக விளைவித்தால், அது கொலைக் குற்றமாகாது. மரணம் விளைவிக்கும் குற்றமேயாகும்.

நமது மேற்படி பிரச்சனையில் A-க்கு Z ஆத்திரமூட்டியுள்ளார். ஆனால் அதன் விளைவாக A, Z-அய்க் கொல்லவில்லை. அதற்கு மாறாக Z-ன் குழந்தையாகிய Y-யைக் கொல்ல வேண்டுமென்ற கருத்தோடு A கொன்று விடுகின்றார்.

மேற்கண்ட விதிவிலக்கின்படி, ஆத்திரமூட்டியவருக்கு, குற்றவாளி மரணம் விளைவித்திருக்க வேண்டும் அல்லது வேறு எவருடைய மரணத்தை தவறுதலாகவோ அல்லது தற்செயலாகவோ விளைவித்திருக்க வேண்டும். ஆனால், மேற்படி பிரச்சனையில் தனக்கு ஆத்திரமூட்டிய Z-அய் A கொல்லவில்லை. மேலும் Z-ன் குழந்தையாகிய Y-யை தவறுதலாகவோ அல்லது தற்செயலாகவோ கொல்லவில்லை. அக்குழந்தையை கொல்ல வேண்டுமென்ற கருத்துடனே A கொன்றுள்ளார். எனவே மேற்படி விதிவிலக்கின் பலனை A பெற முடியாது. அவர் செய்தது கொலைக் குற்றமாகும். மரணம் விளைவிக்கும் குற்றமல்ல. (பக்கம் எண் 237-ல் விதிவிலக்கு 1-அய்க் காணவும்.)

32. A finds his wife having sexual intercourse with Y. A is suddenly and gravely provoked and kills Y. A is charged of murder. Decide. (A தன் மனைவி Y-வுடன் உடலுறவில் ஈடுபடுவதை காண்கிறார். A திடீரெனவும் கடுமையாகவும் ஆத்திரமூட்டப்படுகிறார். உடனே Y-யைக் கொலை செய்கிறார். A மீது கொலைக் குற்றம் சாட்டப்படுகிறது. முடிவு செய்க.)

பிரிவு 300-ஆனது, மரணம் விளைவிக்கும் (Culpable Homicide) எப்பொழுதெல்லாம் கொலைக் குற்றமாகிறது எனபதைக் கூறுகிறது. ஆனால் அதே பிரிவின் கீழான அய்ந்து விதிவிலக்குகள், எப்பொழுதெல்லாம் மரணம் விளைவிக்கும் குற்றம் கொலைக் குற்றமாகாது எனபதைக் கூறுகிறது. அவற்றில் விதிவிலக்கு 1-ன்படி, குற்றவாளி கடுமையாகவும் திடீரென்றும் ஆத்திரமூட்டப்பட்டுத் தம்மை அடக்கிக் கொள்ளும் சக்தியை இழந்த நிலையில் ஆத்திரமூட்டியவருடைய மரணத்தை விளைவித்தால், அல்லது வேறு எவருடைய மரணத்தைத் தவறுதலாக அல்லது தற்செயலாக விளைவித்தால், அது கொலைக் குற்றமாகாது. மரணம் விளைவிக்கும் குற்றமேயாகும்.

மேற்படி பிரச்சனையின்படி, தனது மனைவி Y-உடன் உடலுறவில் ஈடுபடுவது கண்டு, A திடீரெனவும், கடுமையாகவும் ஆத்திரமூட்டப்பட்ட நிலையை அடைகிறார். இதனால் Y-அய்க் கொன்று விடுகிறார். ஆனால் இது மேற்படி விதிவிலக்கின்படி அமைவதால், அவர் மீது பிரிவு 300-ன்படி கொலைக் குற்றம் (Murder) சாட்ட முடியாது. பிரிவு 304-ன்படி, கொலைக் குற்றமாகாத மரணம் விளைவித்த குற்றத்தையே (culpable homicide) சுமத்த முடியும். இதற்காக ஆயுள் தண்டனை அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதித்து தண்டிக்கலாம். (மேற்படி தீர்விற்கு ஆதாரமாக **R. v Balku** மற்றும் **R. v. Chanan Khan** ஆகிய வழக்குகளை தேர்வில் சுட்டிக்காட்டலாம். அவை இந்நூலின் பக்கம் எண் 238-ல் விளக்கப் பட்டுள்ளன)

33. The accused, a shop keeper in a sudden quarrel, hit his wife on the head with an iron weight of 200 grams which resulted in her death. The medical evidence showed that the injury was a simple nature and there was no evidence that the deceased dies of shock caused by the injury. Discuss the liability of the accused. (கடை வைத்திருக்கும் குற்றம் சாட்டப்பட்டவர் திடீர் சண்டையின் போது தனது மனைவியின் தலையில் 200 கிராம் இரும்பு எடையால் அடித்ததால், மனைவி மரணம் அடைந்தார். ஊறு சாதாரண தன்மை வாய்ந்தது எனவும், ஊறு ஏற்பட்டதால் அவருக்கு அதிர்ச்சி ஏற்படவில்லை எனவும், மருத்துவ சான்று கூறியது. குற்றம் சாட்டப்பட்டவரின் பொறுப்புநிலையை விவாதிக்க.)

பிரிவு 300-ன் கீழான 4-வது விதிவிலக்கின்படி, திடீர் சண்டையின் பொழுது ஒருவர் மற்றொருவரின் மரணத்தை ஏற்படுத்தினால், அது கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றமாகும் (culpable homicide not amounting to murder). மேற்படி பிரச்சனையிலும் திடீர் சண்டையின் பொழுதுதான் குற்றஞ் சாட்டப்பட்டவர் தனது மனைவியின் மரணத்தை, 200 கிராம் உள்ள இரும்பு எடையால் தலையில் அடித்ததால் ஏற்படுத்தியுள்ளார்.

குற்றஞ் சாட்டப்பட்டவருக்கு, பிரிவு 299-ன்படி, தனது மனைவியின்

மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்தோ அல்லது மரணத்தை அநேகமாக விளைவிக்கக் கூடிய உடல் காயத்தை விளைவிக்கும் கருத்தோ அல்லது அத்தகைய செய்கையால் தாம் மரணம் அநேகமாக விளைவிக்கக் கூடும் என்ற அறிவோ கிடையாது.

இதற்கு வலு சேர்க்கும் விதத்தில் மருத்துவ சான்றும் அமைந்துள்ளது. அதன்படி குற்றஞ் சாட்டப்பட்டவரால் விளைவிக்கப்பட்ட ஊறு (காயம்) சாதாரண தன்மை வாய்ந்தது என்றும், ஊறு ஏற்பட்டதால் அதிர்ச்சி ஏற்பட்டு அம்மனைவி இறக்கவில்லை என்றும் அது கூறுகிறது. இம்மருத்துவ சான்றை ஒரு வலுவான சாட்சியமாகக் கொண்டால், குற்றஞ் சாட்டப்பட்டவரை கொலைக் குற்றமாகாத மரணம் விளைவித்த குற்றத்திற்காக தண்டிக்க முடியாது. அவரை, பிரிவு 323-ன் படி தன்னிச்சையாக ஊறு (காயம்) விளைவித்த குற்றத்திற்காக தண்டிக்கலாம்.

ஆனால் மருத்துவ சாட்சியத்தை அப்படியே நீதிமன்றங்கள் ஏற்றுக் கொள்ள வேண்டுமென்பது கட்டாயமல்ல. அதை வேறு சாட்சியங்களின் அடிப்படையில் நீதிமன்றங்கள் நிராகரிக்கவும் செய்யலாம். அப்படிப்பட்ட சந்தர்ப்பத்தில் குற்றஞ் சாட்டப்பட்டவர் தமது செய்கையால் தாம் மரணத்தை அநேகமாக விளைவிக்கக் கூடும் என்பதை அறிந்திருந்தார் [பிரிவு 299(c)] என்பது மெய்ப்பிக்கப்பட்டால், அவர் பிரிவு 304-ன்படி கொலைக் குற்றமாகாத மரணம் விளைவித்த குற்றத்திற்காக தண்டிக்கப்படலாம். இம்மாதிரியானதொரு தீர்ப்பு **Sarbeswar Malik v. State**[1] எனும் வழக்கில் ஓரிஸ்ஸா உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்டது. இதில் குற்றவாளிக்கு பிரிவு 304-ன் இரண்டாவது பகுதியின்படி கொலைக் குற்றமாகாத மரணம் விளைவித்த குற்றத்திற்காக தண்டனை விதிக்கப்பட்டது.

34. The accused a murderer was undergoing life imprisonment. He went to his house on parole. There he committed another murder. Decide with case law, whether he can be convicted of death sentence.
(கொலைக் குற்றத்தின் பொருட்டு ஆயுள் தண்டனை அனுபவித்து வந்த கைதி பரோலில் வீட்டிற்கு வந்த சமயம் மற்றொரு கொலைக் குற்றத்திற்கும் ஆளானார். அவருக்கு மரண தண்டனை வழங்கக் கூடுமா? வழக்குகளுடன் தீர்மானிக்கவும்.)

பிரிவு 303-ஆனது, ஆயுள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருக்கும் கைதி ஒருவர், கொலை செய்தால், அவருக்கு மரண தண்டனை விதிக்கப்படும், என்று கூறுகிறது.

மேற்படி பிரச்சனையிலும் ஆயுள் தண்டனை பெற்ற கைதி ஒருவர், பரோலில் வெளி வந்த சமயம் மற்றொரு கொலையைச் செய்து விடுகிறார். இதனால் அவருக்கு மேற்படி பிரிவு 303-ன்படி மரண தண்டனை விதிக்கலாம். ஆனால், இங்கு அந்த 303-வது பிரிவே, முதற்கண் இந்திய அரசியலமைப்பு சட்டப்படி செல்லுபடியாகுமா என்ற வினா பின்வரும்

1. 1986 Cri. L.J. 1721

வழக்குகளில் எழுந்தது. எனவே, மேற்படி பிரச்சனைக்கு சரியானதொரு தீர்வு கொடுக்க அவ்வழக்குகளையும் நாம் காண வேண்டியுள்ளது.

Mithu v. State of Punjab[1] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றத்தின் ஒரு அரசியலமைப்பு ஆயம் (Constitutional Bench of Supreme Court) பின்வருமாறு கூறியது. அதன்படி, " .....இந்திய தண்டனைச் சட்டத்தின் 303-வது பிரிவு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் 14-வது ஷரத்தால் உத்திரவாதமளிக்கப்பட்டுள்ள சமத்துவ உரிமையையும் (Right of Equality), அது போல் எந்த நபரின் வாழ்வும் தனிப்பட்ட சுதந்திரமும், சட்டத்தால் உண்டாக்கப்பட்ட நடைமுறைகளில் தவிர, பிற வழிகளில் மீறப்படக்கூடாது என்று ஷரத்து 21-ஆல் வழங்கப்பட்டுள்ள உரிமையையும் மீறுவதாக உள்ளது. ஆயுள் தண்டனைக் கைதிகள், சிறையில் சிறைப் பணியாளர்களை தாக்க முயற்சிக்கும் செயலை தடை செய்வதற்கு, ஒரு சட்டப் பிரிவு வேண்டும் என்று ஆரம்பத்தில் சட்டமன்றம் கருதியது. ஆனால் சட்டமன்றமோ தனது கருத்தை மிகவும் மீறிய ஒரு மொழிநடையைத் தேர்ந்தெடுத்து அதனை மேற்கண்டவாறு பிரிவு 303-ன் கீழ் கொடுத்து விட்டது. மேலும் மேற்படி பிரிவு ஆயுள் தண்டனை அனுபவித்து வரும் கைதிகளை மனித குலத்தின் அபாயம் மிக்க ஒரு இனமாக அனுமானிக்கிறது. இந்த அனுமானத்திற்கு ஆதாரமாக, விஞ்ஞானபூர்வமான விபரங்கள் ஏதும் இல்லை—". இவ்வாறு அந்த ஆயம் பிரிவு 303-அய் இடித்துரைக்கிறது.

Dilip Kumar Sharma v. State of M.P.[2] என்ற வழக்கில் உச்ச நீதிமன்றம் பின்வருமாறு கூறியது. அதன்படி," — பிரிவு 303-அய் கடுமையில் கொடூரமானது, செயல்பாட்டில் இரக்கமற்றது மற்றும் கருணை காட்டாதது. இந்நீதிமன்றம் பிரிவு 303-அய் அரசியலமைப்பற்றது என நீக்கிவிட்டு, அதை இல்லாநிலையது என்று விளம்புகிறது. எனவே, தற்பொழுது அனைத்து கொலை வழக்குகளும் பிரிவு 302-ன் கீழ் வரக்கூடியது என்பதையும், கொலைக் குற்றத்திற்கு மரண தண்டனைதான் அளிக்கப்பட வேண்டுமென்பது கட்டாயமானதல்ல என்பதையும் சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை" என்று பிரிவு 303-அய் இந்திய அரசியலமைப்புப்படி செல்லாத ஒன்று என்று உச்ச நீதிமன்றம் தெளிவுபடுத்துகிறது.

மேற்படி பிரச்சனையின் சாயலில் உள்ள **Surjit Singh v. State of Punjab**[3] எனும் வழக்கில், கொலைக் குற்றத்திற்காக ஆயுள் தண்டனையை அனுபவித்துக் கொண்டிருந்த கைதி ஒருவர் பரோலில் விடுவிக்கப்பட்டார். அவர் மேலும் மூவருடன் சேர்ந்து கொண்டு, ஒருவரை இரவில் தாக்குகின்றார். இதனால் அவர் இறந்து விடுகிறார். இதனால் கீழ் நீதிமன்றம் பரோலில் வெளிவந்துள்ள அக்கைதிக்கு பிரிவு 303-ன்படி, மரண தண்டனை விதித்தது. மேல்முறையீட்டில், உச்ச நீதிமன்றம், தான் ஏற்கனவே பிரிவு 303-அய்

1. A.I.R. 1983 S.C. 473
2. A.I.R. 1976 S.C. 133
3. A.I.R. 1983 S.C. 838

அரசியலமைப்பற்றது என்று நீக்கிவிட்ட காரணத்தால், அக்கைதிக்கு மரண தண்டனை அளிக்கப்பட வேண்டும் என்பது தேவையற்றதெனக் கூறி, அதனை ஆயுள் தண்டனையாக குறைத்தது.

மேற்கண்ட மூன்று வழக்குகளின் அடிப்படையில் மேற்படி பிரச்சனையில் வரும் கைதிக்கு மரண தண்டனை வழங்கப்படக் கூடாது, ஆயுள் தண்டனை வழங்கப்படலாம், என்பதே தீர்வாகும்.

கொலை முயற்சி (Attempt to Murder)

35. A, intending to murder B, buys a gun, loads it and fires the gun at B. B is wounded. Discuss the offence committed by A. ('ஆ'-வைக் கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் 'அ' துப்பாக்கி ஒன்றை வாங்கி, அதில் மருந்தை நிரப்பி 'ஆ'-வின் மேல் சுடுகிறார். 'ஆ' காயப்படுத்தப் படுகிறார். 'அ' புரிந்த குற்றத்தை விவாதிக்கவும்.)

'ஆ'வை கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் 'அ' துப்பாக்கி ஒன்றை வாங்கி, அதில் மருந்தை நிரப்பி, 'ஆ'-வின் மேல் சுடுகிறார். 'ஆ' காயப்படுத்தப்படுகிறார்.

மேற்படி பிரச்சனையில் 'அ' புரிந்த குற்றம் கொலை முயற்சி ஆகும். இப்பிரச்சனை, இந்திய தண்டனைச் சட்டத்தின் 307-வது பிரிவின் கீழான (c) என்ற எடுத்துக்காட்டின் பாற்பட்டதாகும். கொலை முயற்சியின் விளைவாக எவருக்கேனும் காயம் ஏற்பட்டால், கொலை முயற்சி செய்தவருக்கு ஆயுள் தண்டனையோ, அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையுடன் கூடிய அபராதமோ விதிக்கப்படும். வேறு சூழ்நிலையில், பத்தாண்டுகள் சிறைத் தண்டனையும் அபராதமும் குற்றவாளிக்கு விதிக்கப்படும், என பிரிவு 307 கூறுகின்றது. இதை பின்வரும் எடுத்துக்காட்டு (பிரிவு 307-ல் எடுத்துக்காட்டு (c) எளிதாக விளக்கும்)

'அ', 'ஆ'-வைச் சுட்டுக் கொல்ல வேண்டுமென்ற கருத்தோடு, ஒரு துப்பாக்கியை விலைக்கு வாங்குகிறான். அதில் குண்டுகளைப் போட்டு வைத்துக் கொள்கிறான். இது கொலைக் குற்ற முயற்சி நிலையை அடையவில்லை. 'ஆ'-வை நோக்கிச் சுட்டு விடுகிறான். ஆனால் குறி தவறிவிடுகிறது. இப்பொழுது கொலை முயற்சிக் குற்றம் நிறைவேறிவிட்டது. 'அ'-விற்குரிய தண்டனை பத்தாண்டுக் காலம் வரை சிறையாகும். அவ்வாறு சுட்டதால் 'ஆ'-விற்குக் காயம் விளைகிறது. ஆனால் அவன் இறக்கவில்லை. இப்பொழுது, 'அ'-க்குரிய தண்டனை ஆயுட்காலச் சிறையாகும்.

மேற்படி எடுத்துக்காட்டின்படி, 'அ' புரிந்த குற்றம் கொலை முயற்சி. அதற்கு 'அ'விற்கு ஆயுள் தண்டனை விதிக்கப்படும்.

தற்கொலைக்கு உடந்தையாயிருத்தல் (Abetment of Suicide)

36. A, by instigation, voluntarily causes Z, a person under eighteen

years of age to commit suicide. What is the offence committed by A? (18 வயதிற்குட்பட்ட Z என்பவரை தற்கொலை செய்துகொள்ளுமாறு A என்பவர் அவரை தன்னிச்சையாக தூண்டுகிறார். இங்கு A என்ன குற்றம் புரிந்துள்ளார்?)

தற்கொலை முயற்சியை பிரிவு 309 தண்டிக்கிறது. அதே போன்று ஒருவர் தற்கொலை செய்து கொள்ளத் தூண்டும் (உடந்தையாயிருக்கும்) நபர்களை பிரிவு 305 மற்றும் 306 தண்டிக்கிறது.

பிரிவு 305-ன்படி, 18 வயதிற்குட்பட்டவர், பைத்தியம் பிடித்தவர், வெறி பிடித்தவர், முட்டாள் அல்லது குடிபோதையிலிருக்கும் எவரேனும் தற்கொலை செய்து கொண்டால், அத்தகைய தற்கொலை செய்து கொள்ளப்படுவதற்கு உடந்தையாயிருக்கிற எவரொருவருக்கும் மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத் தண்டனையோ விதிக்கப்படும் மேலும் அவருக்கு அபராதமும் விதிக்கலாம்.

மேற்படி பிரச்சனையில் Z என்பவர் 18 வயதிற்குட்பட்டவர். அவரை தற்கொலை செய்து கொள்ளும்படி A தூண்டுகிறார். எனவே, A மேற்படி பிரிவின்படி, "தற்கொலைக்கு உடந்தையாயிருத்தல்" (Abetment of Suicide) என்ற குற்றத்தைப் புரிந்தவராகிறார். (மேலும் விளக்கத்திற்கு பக்கம் எண் 256-ல் காண்க)

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் (Offences against Children)

37. A mother abandoned her child with the intention to cause death and the child died in consequence of the abandonment. Can she be punished for both the offence i.e. for abandoning her child and causing death of child? (ஒரு தாய் தனது குழந்தையை பராமரிக்காமல் கைவிட்டு விடுகிறாள். அவ்வாறு செய்வதனால் அக்குழந்தை இறந்துவிடும் என்பது அவளுக்குத் தெரியும். இதன் விளைவாக, அக்குழந்தையும் இறந்துவிடுகிறது. தற்பொழுது குழந்தையைக் கவனிக்காது கைவிட்ட குற்றம் மற்றும் குழந்தைக்கு மரணம் விளைவித்த குற்றம் ஆகிய இரண்டிற்காகவும் அத்தாயை தண்டிக்கலாமா?)

பெற்ற குழந்தையை பேணி வளர்ப்பது பெற்றோர்களின் சட்டக் கடமையாகும் (legal duty). சட்டக் கடமையிலிருந்து தவறுபவர்களை இந்திய தண்டனைச் சட்டம் தண்டிக்கிறது. ஆனால் இதே, ஒரு குழந்தை பசியால் அழும்போது அதை பெற்றோர் அல்லாத மற்ற மூன்றாம் நபர்கள் கவனிக்காது அல்லது உணவு கொடுக்காமல் விடுத்தால், அவர்களை சட்டம் தண்டிக்கவியலாது. ஏனெனில் அது அவர்களின் அறக்கடமை (moral duty) மட்டுமேயாகும், பெற்றோர்கள் அவ்வாறு செய்யும்போதுதான், அவர்கள் சட்டக் கடமையிலிருந்து தவறியதற்காக தண்டிக்கப்படுவார்கள்.

மேற்படி பிரச்சனையில் ஒரு தாய், தன் குழந்தையை பராமரிக்காது

முழுமையாக கைவிட்டுவிடுகிறாள். இதனால் அக்குழந்தை இறந்துவிடும் என்பதும் அவளுக்குத் தெரியும். இந்நிலையில் அப்படிப்பட்ட கைவிடுதலினால் அக்குழந்தை இறந்தும் போகிறது. எனவே, அத்தாய் தன் குழந்தையைப் பேணி வளர்க்க வேண்டும் என்ற சட்டக் கடமையிலிருந்து தவறியவளாகிறாள்.

இதைத்தான் **பிரிவு 317** பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, பனிரெண்டு வயதிற்கு குறைந்த ஒரு குழந்தையின் தந்தையாக அல்லது தாயாக இருக்கிற அல்லது அத்தகைய குழந்தையை பராமரிக்கிறவர், அக்குழந்தையை முழுவதும் கைவிட்டுவிட வேண்டும் என்ற கருத்துடன் விட்டுவிடுதல். அல்லது அபாயத்திற்கு உள்ளாக்குதல் குற்றமாகும். இதற்கு 7 ஆண்டுகள் சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

விளக்கம் : அபாயத்திற்கு உள்ளாக்குதலின் விளைவாக அந்தக் குழந்தை இறந்து விடுமாயின், அவ்வாறு அக்குழந்தையை கைவிட்ட நபரை மரணம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாக்கலாம்.

மேற்கண்ட பிரிவு மற்றும் அதன் கீழான விளக்கத்தின்படி, குழந்தையை பராமரிக்காமல் கைவிட்ட குற்றம், அதனால் அக்குழந்தை இறந்து போனது ஆகிய இரண்டிற்காகவும் அந்த ஈவு இரக்கமற்ற தாயை தண்டிக்கலாம்.

கொடுங்காயம் (Grievous hurt)

38. A, intending to permanently disfigure Z's face, given a blow which does not permanently disfigure Z's face, but it caused Z to suffer severe bodily pain for a span of 20 days. Examine what offence if any has A committed? (Z-ன் முகத்தை நிலைபேறாக உருக்குலைக்கும் எண்ணத்துடன் Z-அய் A அடிக்கிறான். அவ்வடி Z-ன் முகத்தை நிலைபேறாக உருக்குலைக்கவில்லை. ஆனால் ஒரு 20 நாட்கள் கால அளவிற்கு அதிகமான உடம்பு வலியால் வருந்தும்படி அது செய்கிறது. A புரிந்த குற்றம் ஏதேனும் இருப்பின், அதை ஆராய்க.)

பிரிவு 322-ன்படி, A, Z-க்கு தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்த குற்றத்தைச் செய்தவராவார். (அப்பிரிவு 322-அய் பக்கம் எண் 265-லும், அதன் கீழான எடுத்துக்காட்டை பக்கம் எண் 266-லும் காண்க)

முறைகேடான சிறைவைப்பு (Wrongful Confinement)

39. 'அ' என்பவர், 'ஆ' என்பவரின் உடைகளை அவர் குளித்துக் கொண்டிருக்கும்போது எடுத்துச் சென்றதின் விளைவாக 'ஆ' என்பவர் குளியல் அறையை விட்டு வெளியே வர இயலவில்லை. 'அ' குற்றம் எதையேனும் புரிந்துள்ளாரா?

ஆம். 'அ' என்பவர் பிரிவு 340-ன்படி 'முறைகேடான சிறை

வைப்பு' (Wrongful Confinement) என்ற குற்றத்தைப் புரிந்துள்ளார். பிரிவு 340-ன்படி, ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட எல்லையை மீறிச் செல்ல முடியாத வகையில் எவரையேனும் முறைகேடாக தடுப்பதை முறைகேடான சிறை வைத்தல் என்று கூறப்படுகிறது.

மேற்படி பிரச்சனையில் 'ஆ' என்பவரின் உடைகளை அவர் குளித்துக் கொண்டிருக்கும்போது 'அ' எடுத்துச் சென்றதினால், 'ஆ' குளியல் அறையை விட்டு வெளியே வரமுடியவில்லை. அறைக்குள் அடைபட வேண்டிய தாயிற்று. எனவே 'அ' முறைகேடான சிறைவைப்புக் குற்றத்திற்குள்ளாகிறார். 'அ'-க்கு பிரிவு 342-ன் கீழ் தண்டனை உண்டு.

தாக்க முனைதல் (Assault)

40. A begins to unloose the muzle of a ferocious dog intending or knowing it to be likely that he may thereby cause to believe that he is about to cause the dog to attack. Has A committed any offence? (அ' தன்னுடைய நாயை 'ஆ' மீது ஏவிவிடப் போவதாக அவர் நினைக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது தெளிவுடன் நாயைக் கட்டவிழ்த்துவிட முனைகிறார். 'அ' குற்றம் ஏதேனும் புரிந்துள்ளாரா?)

பிரிவு 351-ன்படி 'அ' தாக்க முனைதல் (Assault) குற்றத்தைப் புரிந்தவராகிறார். (விளக்கமாக பக்கம் எண் 275-ல் "தாக்க முனைதல்" எனும் தலைப்பின் கீழ் (ஆ) எடுத்துக்காட்டைப் பார்க்கவும்)

திருட்டு (Theft)

41. A cuts down a tree on Z's ground, with the intention of dishonestly taking the tree out of Z's possession. What offence is A committed? (A என்பவர் Z-ன் நிலத்தில் உள்ள மரத்தை Z-ன் உடைமையிலிருந்து நேர்மையற்ற முறையில் எடுத்துக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்துடன் வெட்டி வீழ்த்துகிறார். A என்ன குற்றம் புரிந்தவராகிறார்?)

A என்பவர் பிரிவு 378-ன்படி, திருடடுக் குற்றம் புரிந்தவராகிறார். அப்பிரிவின் முதல் விளக்கத்தின்படி (Explanation 1), பூமியில் பிணைக்கப் பட்டுள்ள ஒரு பொருள், பூமியிலிருந்து பிரிக்கப்பட்ட பின், அது திருட்டுக்கு உட்படக் கூடியதாகிறது. மேலும் அப்பொருள் (இங்கு மரம்) ஒருவர் உடைமையிலிருந்து நேர்மையற்ற முறையில் எடுத்துக்கொள்ளப் பட்டிருப் பதால், A திருட்டுக் குற்றம் புரிந்தவராகிறார். (விரிவாக பக்கம் எண் 299-ல் காண்க)

42. What offence has been committed by A in the following cases?

(a) A cuts of trees standing on Government land.

(b) A, a creditor, takes movable property out of debtor's possession without his consent, with the intention of coercing him to pay his debt.

பின்வரும் வழக்குகளில் 'அ' என்பவர் என்ன குற்றம் செய்துள்ளார்?

(அ) அரசு நிலத்திலுள்ள மரங்களை 'அ' என்பவர் வெட்டுகிறார்.

(ஆ) கடன் பெற்றவரின் உடைமையிலுள்ள அசையும் பொருட்களை அவரின் இசைவின்றி கடனை திருப்பிச் செலுத்த வற்புறுத்தும் உட்கருத்துடன் 'அ' என்னும் கடன் கொடுத்தவர் எடுக்கின்றார்.

(a) ஒருவரது உடைமையிலுள்ள அசையும் பொருளை அவரது சம்மதமில்லாமல், அதனை அவரது உடைமையிலிருந்து எடுத்துச் கொள்ள வேண்டும் எனும் நேர்மையற்ற கருத்துடன், அதனை நகர்த்துவது பிரிவு 378-ன்படி திருட்டுக் குற்றமாகும்.

பிரிவு 378-ன் கீழான (a) எடுத்துக்காட்டின்படி, Z என்பவரின் உடைமையிலிருந்து அவரது சம்மதமில்லாமல் நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்துடன், Z-ன் நிலத்தில் வளர்ந்துள்ள ஒரு மரத்தை A என்பவர் வெட்டி வீழ்த்துகிறார். அவ்வாறு எடுத்துக் கொள்வதற்காக, A நிலத்திலிருந்து மரத்தை பிரித்த உடனேயே அவர் திருட்டைச் செய்தவராகிறார்.

மேற்படி பிரச்சனையில் மேற்கண்டவாறு அரசு நிலத்திலுள்ள மரங்களை A என்பவர் வெட்டுகிறார். இங்கு பிரிவு 378-ன்படி A திருட்டுக் குற்றத்தைச் செய்தவராகிறார். எவ்வாறெனில், முதலில், அம்மரம் ஒரு அசையும் பொருள்; இரண்டாவதாக, அது அரசின் உடைமையிலுள்ள நிலத்தில் வளர்ந்துள்ளது; மூன்றாவதாக, அரசு நிலத்திலுள்ள மரங்களை வெட்ட முறையாக உரிமம் பெற்றிருக்க வேண்டும். இங்கு அவ்வாறு பெற்றிருப்பதாக மேற்படி பிரச்சனையில் பொருண்மை ஏதும் கொடுக்கப் படவில்லை. எனவே அம்மரங்களை தனது உடைமையில் கொண்டுள்ள அரசின் சம்மதமின்றி, A அவற்றை வெட்டியுள்ளார்; நான்காவதாக, உரிமம் பெறாமல் மரத்தை வெட்டியதிலிருந்து, அதை நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொள்ள வேண்டும் என்ற கருத்து A-க்கு இருந்தது என்பது புலனாகிறது; அய்ந்தாவதாக, A மரத்தை வெட்டி முடித்துவிட்டார். இதனால் அது பூமியின் பிடியிலிருந்து பிரிந்து விட்டது. அதாவது நகர்ந்து விட்டது. பிரிவு 378-ன்படி ஒரு திருட்டுக் குற்றத்திற்கு தேவையான அய்ந்து ஆக்கக்கூறுகளும் இங்கு பூர்த்தியாகி விட்டன. எனவே A திருட்டுக் குற்றத்தைப் புரிந்துள்ளது தெள்ளத் தெளிவாகிறது.

இதற்கு அவருக்கு பிரிவு 379-ன்படி மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும்.

Yeok Kuk[1] சம்பந்தப்பட்ட வழக்கில், உரிமம் பெறாமல் தேக்கு மரங்களை வெட்டி எடுத்துக் கொண்டது, அரசு மரங்களை திருடிய குற்றமாகும் எனப்பட்டது.

1. (1928) 6 Ran. 386

Hanmanta[1] சம்பந்தப்பட்ட வழக்கில், வனத்துறை ஆய்வாளர் (Forest Inspector) ஒருவரின் உடைமையில் இருக்கும் மரங்கள், அரசாங்கத்தின் உடைமையில் இருக்கும் மரங்களுக்கு ஒப்பானதாகும். அதற்குண்டான கட்டணம் ஏதும் செலுத்தாமல், ஆனால் அந்த வனத்துறை ஆய்வாளரின் சம்மதத்துடன், நேர்மையற்ற முறையில் அகற்றிச் சென்றது திருட்டாகும் எனப்பட்டது. ஏனெனில் இங்கு சம்மதமானது, அதிகாரபூர்வமற்ற முறையிலும் (unauthorised) மோசடியாகவும் (fradulent) பெறப் பட்டுள்ளதாக நீதிமன்றத்தால் கூறப்பட்டது.

(b) ஒருவரின் உடைமையிலுள்ள ஒரு பொருள் சம்மதமில்லாமல் (அதாவது இசைவில்லாமல்) எடுத்துச் செல்வது, திருட்டுக் குற்றமாகும். இங்கு A அவ்வாறு கடன் பெற்றவரின் உடைமையிலுள்ள பொருள்களை, அவரது சம்மதமில்லாமல் எடுத்துச் சென்றுள்ளார். எனவே, A-யின் செயல் பிரிவு 378-ன்படி திருட்டுக் குற்றமாகும்.

மேற்படி பிரச்சனை **H.J.Ramson v. Triloki Nath**[2] எனும் வழக்கின் அடிப்படையில் அமைந்ததாகும். அதில் தவணைக் கொள்முதல் ஒப்பந்தத்தின் (Hire Purchase agreement) அடிப்படையில் அளிக்கப்பட்ட கடன் தொகைகளைக் கொண்டு வாங்கப்பட்ட லாரியை, கடன் பெற்றவர் கடனை சரிவர திரும்ப செலுத்தவில்லை எனும் காரணத்திற்காக கடன் கொடுத்த நிறுவனத்தினர் கடன் பெற்றவரின் சம்மதமில்லாமல், லாரியை பறிமுதல் செய்து கொண்டு போனது, திருட்டுக் குற்றமாகும் என்று நீதிமன்றம் கூறியது. ஏனெனில் திருட்டுக் குற்றத்தை ஊர்ஜிதப்படுத்த, "சம்மதமின்மை" எனும் கூறு ஒரு முக்கிய காரணியாகும். (மேலும் விளக்கத்திற்கு இந்நூலின் பக்கம் எண் 306-ல் காண்க.)

43. A lays out net and catches fish from a portion of a river where B has exclusive right of fishing. Can A be prosecuted for theft? (B-க்கு மட்டுமே மீன்பிடிக்கும் உரிமை உள்ள ஆற்றின் ஒரு பகுதியில் A வலையை வைத்து மீன் பிடிக்கிறார். A மீது திருட்டுக் குற்றம் சாட்டப்படலாமா?)

பொதுவானதும், குறிப்பிட்ட எல்லைக்கு உட்படாததுமான ஆறு, குளம், கால்வாய்களில் மீன்பிடித்தால் அது திருட்டுக் குற்றமாகாது. ஏனெனில் மீன் ஓரிடத்திலேயே இருப்பதில்லை. அவை நீரோட்டத்திற்கேற்ப அங்குமிங்கும் நீந்திச் செல்லக் கூடியவை. சம்பந்தப்பட்ட சொத்தானது யாருடைய உடைமையிலாவது இருக்க வேண்டியது, திருட்டுக் குற்றத்திற்கு தேவையான ஒரு முக்கியக் கூறாகும். ஆற்றில், கால்வாய்களில் வாழும் மீன் அவ்வாறு ஒருவருடைய உடைமையில் உள்ள பகுதியில் மட்டும் இருப்பதில்லை. நீந்திக் கொண்டேயிருக்கும்.

Govind Majhi v. Arobinda Kar[3] என்ற வழக்கில் குற்றம் சாட்டப்

1. (1877) 1 Bom. 610
2. 1942 17 Luck. 663
3. A.I.R. 1950 Orissa 106

பட்டவர் நீரோட்டம் மிகுந்ததும், புகார் கொடுத்தவருக்கு உரிமம் வழங்கப்பட்ட ஆற்றுப் பகுதியிலுமான இடத்தில் மீன் பிடித்ததற்காக திருட்டுக் குற்றம் சாட்டப்பட்டார். ஆனால் அங்கு வாழும் மீன்கள், புகார் கொடுத்தவரின் உடைமையில் இருப்பவையல்ல. ஏனெனில் அவை அவரது பகுதியில் வரும்; அதேபோல் வெளியேறும். இதனை உடைமை எனக் கொள்ள முடியாது. ஆகவே, இது திருட்டுக் குற்றமாகாது எனக் கூறி குற்றஞ்சாட்டப்பட்டவர் விடுதலை செய்யப்பட்டார்.

இக்கொள்கை **Krishna Reddi v. Muniappa Reddi**[1] என்ற முந்திய வழக்கிலும் விரிவாக சென்னை உயர்நீதிமன்றத்தால் கூறப்பட்டுள்ளது. அதன்படி, ஒரு குளத்தில் தண்ணீர் உள்வரலும் வெளியேறலும் இருந்து, அதில் மீன்கள் உள்நுழைந்து வெளியேறுவதாக இருப்பின், அவை சுதந்திரமாகவும், யாருடைய உடைமையிலும் இல்லாமலும் இருப்பதாகக் கருதப்படும். அக்குளத்தின் உரிமையாளருக்கு அம்மீன்கள் சொந்தமானவை அல்ல. (அதாவது ஒருவரது தோட்டத்தில் உள்ள மரத்தில் பறவைகள் அமர்ந்து பறந்து செல்வதால் அப்பறவைகள் அவருக்கு உரிமையானவையல்ல. அவைகளை மற்றொருவன் சுட்டு கைப்பற்றுவதால், அவன் திருட்டுக் குற்றம் புரிந்தவனாக மாட்டான்)

ஆனால், மீன்கள் குளத்தில் நுழைந்த பிறகு வெளியேற வழியில்லாது, பொறியில் சிக்கியது போல் அகப்பட்டால், அது அக்குளத்தின் உரிமையாளருக்கு சொந்தமானவையாகும். அங்கு மற்றொருவன் மீன்பிடித்தால் அவன் திருட்டுக் குற்றம் புரிந்தவனாக கருதப்படுவான்.

மேற்கண்ட வழக்கு முடிவுகளே, நமது மேற்படி பிரச்சனையை தீர்ப்பதற்கும் உதவுகிறது. அதாவது ஆறு ஒன்றின் குறிப்பிட்டதொரு பகுதியில் B மட்டுமே மீன் பிடிக்க உரிமை படைத்துள்ளார். அந்த ஆறில் மீன்கள் வந்துபோக வாய்ப்புண்டு எனக் கொண்டால், A அங்கே மீன் பிடித்தலை ஒரு திருட்டுக் குற்றமாக கருத முடியாது. வெறும் உரிமை மீறலாக மட்டுமே கருத முடியும். ஆனால் அதே சமயத்தில் ஒரு தரம் மீன்கள் B-க்கு உரிமம் வழங்கப்பட்ட பகுதியில் நுழைந்தபின் வெளியேற வாய்ப்பில்லை என்ற நிலை இருந்து, அங்கு A மீன்பிடித்தால், அவர் திருட்டுக் குற்றம் புரிந்தவராகிறார். ஏனெனில் மீன்கள் B-யின் உடைமையில் உள்ளன.

44. A takes an article belonging to Z out of Z's possession, without Z's consent, with the intention of keeping it until he obtains money from Z as a reward for its restoration. Has A committed any offence? Give reasons. ('ஔ'-வின் சம்மதமில்லாமல் 'ஔ'-வின் உடைமையிலிருந்து 'ஔ'விற்கு சொந்தமான ஒரு பொருளை மீண்டும் 'ஔ'விடம் சேர்ப்பிப்பதற்கு ஒரு வெகுமதியாக பணம் பெறுகிற வகையில் அதைத் தம்மிடம் வைத்திருக்கும் கருத்துடன் 'அ' என்பவர் எடுத்துக் கொள்கிறார். 'அ' ஏதேனும் குற்றம் செய்துள்ளாரா? தங்கள் விடைக்கு காரணங்கள் தருக.)

1. A.I.R. 1943 Mad. 34

மேற்படி பிரச்சனை பிரிவு 378-ன் கீழான (l) எனும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். பிரிவு 378, "திருட்டு" எனும் குற்றத்தின் வரையறையை விளக்குகிறது.

மேற்படி பிரச்சனையில் A என்பவர் திருட்டுக் குற்றம் புரிந்துள்ளார். இதற்கு காரணம் யாதெனில், Z-ன் உடைமையிலிருந்து Z-க்குச் சொந்தமான ஒரு பொருளை அவரது சம்மதமில்லாமல் எடுத்துக் கொள்ளும் A-யின் நேர்மையற்ற கருத்தே (dishonest intention) ஆகும்.

பிரிவு 378-ன்படி, திருட்டுக் குற்றத்திற்கு பின்வரும் அய்ந் ஆக்கக் கூறுகள் வேண்டும். அதாவது (1) சம்பந்தப்பட்ட பொருள், அசையும் பொருளாக இருக்க வேண்டும்; (2) அது யாருடைய உடைமையிலாவது இருக்க வேண்டும்; (3) அதை அவரது உடைமையிலிருந்து நேர்மையற்ற கருத்துடன் எடுத்துக் கொள்ள வேண்டும்; (4) அவ்வாறு எடுத்துக் கொள்வது, அந்நபரின் சம்மதமில்லாமல் இருக்க வேண்டும்; மற்றும் (5) அவ்வாறு எடுத்துக் கொள்வதற்காக அப்பொருளை நகர்த்தி இருக்க வேண்டும்.

மேற்கண்ட ஆக்கக்கூறுகள் அனைத்தும், மேற்படி பிரச்சனைக்குத் தெளிவாகப் பொருந்துகிறது. முக்கியமாக அப்பொருளை A, Z-ன் உடைமையிலிருந்து நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொண்டுள்ளார். இங்கு, அப்பொருளை Z-யிடம் சேர்ப்பிப்பதற்கு ஒரு வெகுமதியாக பணம் பெறுகிற வகையில் அதைத் தம்மிடம் வைத்திருக்கும் கருத்து, A-யின் நேர்மையற்ற நிலைப்பாட்டை எவ்வித அய்யப்பாடும் இல்லாமல் தெளிவாக மெய்ப்பிக்கிறது.

45. A is the paramour of B's wife. She gives a valuable property, which A knows that it belongs to her husband B and she has no authority to give. A takes the property dishonestly. What is the liability of A? ('அ' என்பவர் 'ஆ' என்பவருடைய மனைவியின் காதலன். அவள் தன் கணவனுடைய ஆபரணத்தை 'அ'-விற்கு கொடுக்கிறாள். அவ்வாறு கொடுப்பதற்கான அதிகாரம் அவளுக்கு கிடையாது என்பதை 'அ' அறிவான். அப்படி தெரிந்திருந்தும் 'அ' அந்த ஆபரணத்தை நாணயமற்ற முறையில் பெற்றுக் கொள்கின்றார், 'அ'-வின் பொறுப்புநிலை என்ன?)

இங்கு 'அ' பிரிவு 378-ன்படி திருட்டுக் குற்றத்தைப் புரிந்தவராவார். அதாவது, பிரிவு 378-ன்படி, ஒரு நபரின் உடைமையிலிருந்து அசையும் பொருள் எதையேனும் அவரது அனுமதியின்றி (சம்மதமின்றி) நேர்மையற்ற முறையில் எடுத்துக் கொள்ளும் கருத்துடன் அப்பொருளை நகர்த்தினால், அப்படி நகர்த்துபவர் திருட்டுக் குற்றத்தைப் புரிந்தவராவார். மேற்படி வழக்கில் 'அ' அந்த ஆபரணத்தை நேர்மையற்ற முறையில் அது தனது கள்ளக் காதலியின் கணவனுக்கு சேர்ந்தது என்பதை தெரிந்தும், அதை தனக்குக் கொடுக்க தனது கள்ளக் காதலிக்கு, அவளது கணவனிடமிருந்து அனுமதி கிடையாது என்பதை அறிந்தும், பெற்றுக் கொள்வதால், 'அ' பிரிவு 378-ன்படி திருட்டுக் குற்றத்தைப் புரிந்தவராவார்.

குற்ற மனமில்லாச் செயல் குற்றமாவதில்லை
(Actus non facit reum nisi mens sit rea)

46. A, notices a boy drowing in a stream. Inspite of his calls for help, A does not try to save him. Discuss the offence committed by A . (ஒரு சிறுவன் நீரோடையில் மூழ்கிக் கொண்டிருப்பதை "A" கவனிக்கிறார். அந்த சிறுவன் உதவிக்காக அழைத்த போதும் "A" காப்பாற்ற முயற்சிக்கவில்லை. "A" செய்த குற்றத்தை விவாதிக்கவும்.)

மேற்கண்ட பிரச்சனையின்படி. இங்கு "A" என்பவர் எந்த குற்றமும் புரியவில்லை. எனவே அவர் தண்டனை எதற்கும் பொறுப்புடையவர் அல்ல.

இதற்குக் காரணங்கள் வருமாறு:-

(1) ஒரு குற்றத்திற்கு (அ) குற்ற மனம் (mens rea) (ஆ) குற்றச் செயல் (actus reus) எனும் இரண்டு கூறுகள் இருக்க வேண்டிய அவசியம் என்பது குற்றவியல் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடு ஆகும். அந்த வகையில் "குற்ற மனமில்லாச் செயல் குற்றமாகாது" என்பதை "Actus non facit reum nisi mens sit rea" என்று இலத்தின் சட்ட முதுமொழி ஒன்று கூறுகிறது. எனவே ஒரு குற்றத்திற்கு குற்றமனமும், அதனடிப்படையில் அமைந்த குற்றச் செயலும் தேவை.

(2) மேற்படி பிரச்சனையில் "A" என்பவருக்கு குற்ற மனம் ஏதுமில்லை. அதாவது ஓடையில் மூழ்கிக் கொண்டிருக்கும் சிறுவனைக் கொல்ல வேண்டும் என்ற குற்றக் கருத்து அவருக்கு இல்லை.

(3) மேலும் அந்தச் சிறுவன் மூழ்கிக் கொண்டிருக்கையில், அங்கு நிலவிய சூழ்நிலையில் "A" என்பவர் விருப்பப்பூர்வமான பங்கு எதையும் எடுத்துக் கொண்டிருக்கவில்லை.

(4) இத்தோடு மட்டுமல்லாமல், ஒரு உயிரைக் காப்பாற்ற வேண்டும் என்பது மனித நேய நெறியாகும் (Ethics). ஆனால் மனித நெறிமுறைகளும் சட்டமும் (Law and Ethics) வேறுபட்டதாகும். மேற்படி பிரச்சனையில் அச்சிறுவனைக் காப்பாற்ற வேண்டிய சட்டக் கடமை (legal duty) எதுவும் "A"-க்குக் கிடையாது. எனவே அவர் சட்டக் கடமையிலிருந்து தவறியதாக கூறப்பட முடியாது. காப்பாற்ற வாய்ப்பிருந்தும் காப்பாற்றவில்லையே என்பது மனித நெறிமுறைகளுக்கு மட்டுமே விரோதமானதாகும். அதற்காக "A"-யைத் தண்டிக்கவியலாது.

எனவே மேற்கண்ட காரணங்களுக்காக "A"-என்பவர் எக்குற்றமும் செய்யவில்லை. அவர் தண்டனைக்கும் பொறுப்பாளி அல்லர் என்பதே தீர்வு. (இப்பிரச்சனையானது, பிரச்சனை எண். 1-அய் அடியொற்றியதாகும்)

47. A, a beggar who has been starving for the past one week requests B, a rich man, food to eat. B refuses wantonly. The next day A dies due to

hunger. Whether B is liable for any offence. (கடந்த ஒரு வாரமாக பசியாயிருந்த "அ" என்ற ஒரு பிச்சைக்காரன் பணக்காரனான "ஆ"விடம் சாப்பிட உணவு கோருகிறார். வேண்டுமென்றே "ஆ" மறுக்கிறார். பசியினால் மறுநாள் "அ" இறக்கிறார். "ஆ" ஏதாவது குற்றம் புரிந்ததற்கு பொறுப் பாவாரா?)

மேற்கண்ட பிரச்சனையின்படி இங்கு "ஆ" என்பவர் எந்த குற்றமும் புரியவில்லை. எனவே அவர் தண்டனை எதற்கும் பொறுப்புடையவர் அல்ல.

இதற்குக் காரணங்கள் வருமாறு:-

(1) ஒரு குற்றத்திற்கு (அ) குற்ற மனம் (mens rea) (ஆ) குற்றச் செயல் (actus reus) எனும் இரண்டு கூறுகள் இருக்க வேண்டிய அவசியம் என்பது குற்றவியல் சட்டத்தின் அடிப்படைக் கோட்பாடு ஆகும். அந்த வகையில் "குற்ற மனமில்லாச் செயல் குற்றமாகாது" என்பதை "Actus non facit reum nisi mens sit rea" என்று இலத்தின் சட்ட முதுமொழி ஒன்று கூறுகிறது. எனவே ஒரு குற்றத்திற்கு குற்றமனமும், அதனடிப்படையில் அமைந்த குற்றச் செயலும் தேவை.

(2) குற்றமனம் என்பது மனிதனின் தன்னிச்சையான நடத்தையை உள்ளடக்கியது ஆகும். அந்த நடத்தையின் விளைவு, முன்கூட்டியே எதிர் பார்க்கக் கூடிய (result of the conduct must be foreseen one) ஒன்றாக இருக்க வேண்டும்.

(3) குற்றச் செயல் என்பது மனிதச் செயல், அதன் விளைவு மற்றும் சூழ்நிலையை உள்ளடக்கியதாகும். அதாவது செயலும், விளைவும் சட்டம் குறித்துரைக்கும் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையில் நிகழ்ந்தால்தான் அங்கு ஒரு குற்றச் செயல் உருவாகிறது. செயல் என்பதில் செய்ய வேண்டிய செயலை செய்யாது விடுத்தலும் (inclusive of act and omission) அடக்கம்.

(4) "அ"-வை பட்டினி போட வைக்க வேண்டும்; அதனால் அவருக்கு மரணம் ஏற்பட வேண்டும் என்ற குற்ற மனம் (no mens rea) ஏதும் "ஆ" எனும் பணக் காரருக்கு கிடையாது.

(5) இங்கு, "அ" எனும் பிச்சைக்காரருக்கு "ஆ" எனும் பணக்காரர் உணவளிக்காது விடுத்தது, ஒரு செயல்தவிர்க்கை ஆகும். இதுவும் "செயல்" என்பதில் அடங்கும். எனினும் அவ்வாறு "அ"-க்கு உணவளிக்க வேண்டும் என்ற சட்டக் கடப்பாடு அல்லது கடமை (legal obligation or duty) ஏதும் "ஆ"-க்கு கிடையாது. (அப்படிப்பட்டதொரு சட்டக் கடமை இருந்து அதை அந்த "ஆ" எனும் பணக்காரர் மீறியிருப்பின், அது குற்றச் செயல் ஆகலாம்)

(6) குற்ற மனம் எனும் போது நாம் முன்கண்டவாறு செயலின் விளைவை முன்கூட்டியே எதிர்பார்த்திருக்க வேண்டும். இங்கு "அ"-இன் மரணத்தை முன்கூட்டியே "ஆ" எதிர்பார்த்திருக்கவில்லை.

(7) மேலும் "அ"-இன் மரணம் நிகழ்வதற்கு முன் இடைப்பட்ட காரண-காரியங்களும் (intervening causes) உள்ளன. "ஆ" என்பவர் "அ"-க்கு உணவளிக்க மறுத்தார் என்பது ஒரு பக்கம் இருந்தபோதும், "அ" என்பவர் ஏற்கனவே ஒரு வார காலமாக உணவு ஏதும் உட்கொள்ளாமல் பசியோடு இருந்திருக்கிறார். இதனால் "அ" இறந்துவிட்டார். எனவே "ஆ" என்பவர் "அ"-க்கு ஒருநாள் மட்டும் உணவளிக்க மறுத்தது, "அ"-வின் இறப்பிற்கான காரணமாக அமைய முடியாது.

எனவே மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில், "அ" எனும் பிச்சைக்காரரின் இறப்பிற்கு "ஆ" எனும் பணக்காரரை பொறுப்பாக்க முடியாது என்பதே இங்கு நாம் வழங்கும் தீர்வாகும்.

பொருண்மைத் தவறு (Mistake of Fact)

48. "A" before going to market, fired off and left his gun empty. "B" in the mean time, went out shooting with the gun and left it loaded. "A" on returning to his house took up the gun for cleaning while doing so the gun went off and killed his wife. Discuss the liability of "A". (கடை வீதிக்குப் போவதற்கு முன்னர் துப்பாக்கியை சுடா நிலையில் வைத்துவிட்டு, "A" சென்றார். அந்நேரத்தில் "B" அதனை எடுத்துச் சென்று பயன்படுத்திவிட்டு அதனை சுடும் நிலையில் வைத்துவிட்டார். "A" வீட்டிற்கு திரும்பி வந்து அந்த துப்பாக்கியை சுத்தம் செய்யும் போது துப்பாக்கிக் குண்டு பாய்ந்து அவரது மனைவி இறந்துவிடுகிறாள். "A"யின் பொறுப்பு நிலையை விவாதி.)

ஒன்றைச் சரியென்று நல்லெண்ணத்துடன் நம்பிச் செய்யும்போது, அதன் விளைவு வேறுவிதமாக ஆகிவிட்டால், அது தவறுதலாகச் செய்யப் பட்டுவிட்டது என்கிறோம். அதாவது ஒரு பொருண்மையானது தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டு, அதன்படி செயல்படும்போது ஏற்படும் வேறு விளைவு "பொருண்மைத் தவறு" (mistake of fact) எனப்படுகிறது. ஒரு பொருண்மையை தவறாகப் புரிந்து செயல்பட்டதாக குற்ற வழக்கொன்றில் நிலைநாட்டுவது, நல்லதொரு எதிர்வாதமாக அமைகிறது. அச்சமயத்தில், தொடர்புடைய செயல் குற்றமாவதில்லை. இதனை சட்டம் மன்னிக்கிறது. ஆனால் சட்டத்தை தவறாகப் புரிந்து கொண்டு செயல்பட்டதாக கூறுவதை சட்டம் மன்னிப்பதில்லை. இதைத்தான் "சட்டத் தவறு மன்னிக்கப்படக் கூடியதல்ல; பொருண்மைத் தவறு மன்னிக்கப்படக் கூடியது" என்று சட்ட முதுமொழி (Ignorantia juris non excusat; ignorantia facit excusat) ஒன்று கூறுகிறது.

ஒரு பொருண்மை (சங்கதி) பற்றி ஒருவருக்குத் தெரிந்திராத சமயத்தில், அவரது நடத்தையை, அதற்குத் தொடர்புடைய சுருத்தாக எடுத்துக் கொள்ளக் கூடாது.

சர் மைக்கேல் ஃபாஸ்டர் (Sir Michael Foster) என்பவர் இதற்கு

நல்லதொரு எடுத்துக்காட்டைக் கூறுகிறார். அதன்படி, ஒரு நபர் கிறுத்தவ தேவாலயத்திற்கு செல்லும்முன்னர், தனது துப்பாக்கியை சுடா நிலையிலும், குண்டுகள் எதையும் நிரப்பாமலும் வைத்துவிட்டு சென்றார். அவர் இல்லாத அந்த நேரத்தில் வேறு எவரோ அத்துப்பாக்கியை எடுத்துச் சென்று பயன் படுத்திவிட்டு அதனை சுடும் நிலையில் வைத்துவிட்டார். இந்நிலையில் தேவாலயத்திலிருந்து திரும்பி வந்த அந்த நபர் அத்துப்பாக்கியை எடுத்து அதன் விசையைத் தொட்டார். உடனே அதிலிருந்து குண்டுகள் வெளிப்பட்டு, அதே அறையில் அமர்ந்திருந்த அவரது மனைவியின் உடலில் பாய்ந்தது. இங்கு அந்த நபர், அந்த துப்பாக்கியில் குண்டுகள் ஏதும் நிரப்பப்பட்டிருக்க வில்லை என்று நம்புவதற்கு நியாயமான காரணங்கள் கொண்டிருந்தார். (ஏனெனில், அவர்தானே அத்துப்பாக்கியை சுடா நிலையிலும், குண்டுகள் ஏதும் நிரப்பாமலும் வைத்துவிட்டுச் சென்றார்). எனவே பொருண்மைத் தவற்றின் காரணமாக நிகழ்ந்த மரணத்திற்கு அந்த நபர் பொறுப்பல்ல என்று நீதிமன்றம் விடுதலை செய்தது. [**ஆதாரம் :** பி.எஸ்.ஏ அச்சுதன் பிள்ளை எழுதிய "குற்றவியல் சட்டம்", 9-ஆம் பதிப்பு, பக்கம் 73 மற்றும் Foster 265 TAC].

இந்த எடுத்துக்காட்டை அப்படியே பின்பற்றி அமைந்ததே மேற்படி பிரச்சனை. எனவே அதன்படி, பொருண்மைத் தவற்றின் காரணமாக விளைந்த மனைவியின் மரணத்திற்கு "A" பொறுப்பல்ல என்பதே தீர்வு.

தேவை அல்லது தவிர்க்க முடியாத விபத்து (Necessity or Inevitable Accident)

49. A, a surgeon kills a child in the act of birth, as the only way to save the mother. Discuss the criminal liability of the surgeon. ("A" என்னும் அறுவை மருத்துவர் ஒரு குழந்தைப் பிறக்கும் போது அதன் தாயாரைக் காப்பாற்றிட வேண்டும் என்னும் ஒரே நோக்கத்துடன் குழந்தையை கொன்று விடுகிறார். அறுவை மருத்துவரின் குற்றப் பொறுப்பு நிலையை விவாதிக்க.)

மேற்படி பிரச்சனையில் வரும் A எனும் அறுவை மருத்துவரின் செயலை பிரிவு 81-இன் வரையறைக்குள் ஒரு இக்கட்டான தேவை அல்லது தவிர்க்க முடியாத விபத்து (Necessity or Inevitable accident) என்றே கூற வேண்டும். எனவே மருத்துவர் எந்த குற்றமும் செய்யவில்லை என்பதே இங்கு தீர்வாகும். அதற்கு காரணங்கள் வருமாறு:-

(1) பிரிவு 81-இன்படி, "தீங்கு செய்ய வேண்டும் என்ற கருத்து இல்லாமல், ஆளுக்கு அல்லது சொத்துக்கு வேறு தீங்கு ஏற்படுவதைத் தடுக்கும் அல்லது தவிர்க்கும் பொருட்டு நல்லெண்ணத்துடன் ஏதேனும் செய்யப்படுமானால், அது அநேகமாகத் தீங்கை விளைவிக்கக்கூடும் என்ற அறிவுடன் செய்யப் படுகிறது என்ற காரணத்தால் மட்டுமே, ஒரு குற்றமாகாது."

(2) எனவே பிரிவு 81-இன்படி ஒரு தீங்கைத் தவிர்ப்பதற்கென இன்னொரு தீங்கை விளைவிக்கலாம். ஆனால் இதற்கு முக்கிய நான்கு கூறுகள் அவசியம்.

அவை,

(அ) தவிர்க்கக் கருதப்பட்ட தீங்கு, செய்யப்பட்ட தீங்கை விட பெரிதாக இருக்க வேண்டும் - இங்கு தாயின் உயிரே பிரதானம். அதைக் காப்பாற்ற வேண்டுமெனில் குழந்தையை உயிருடன் கருப்பையிலிருந்து வெளிக் கொணர முடியாது. தவறினால் தாயின் உயிருக்கு ஆபத்து.

(ஆ) அந்தப் பெரிய தீங்கைத் தவிர்ப்பதற்கு வேறு வழிகள் ஏதும் இல்லாதிருக்க வேண்டும் - இங்கு தாயின் உயிரைக் காப்பாற்ற வேண்டுமெனில் குழந்தையை இழந்தே ஆக வேண்டும்; அதை விடுத்தால் வேறு வழிகள் இல்லை என்ற இக்கட்டான நிலை.

(இ) பெரிய தீங்கைத் தவிர்ப்பதற்கு எந்த அளவிற்கு தேவையாக உள்ளதோ அந்த அளவிற்கே செய்யப்பட்ட தீங்கும் அமைதல் வேண்டும் - இங்கு இரு உயிர்களையும் இழப்பதை விட ஒரு உயிரையாவது காப்பாற்ற சிறிய உயிருக்கு தீங்கு இழைக்கப்படுகிறது. தாயின் உயிர் பெரிதா அல்லது பிறக்கவிருக்கும் குழந்தையின் உயிர் பெரிதா எனும் போது, தாயின் உயிரே பெரிது. எனவே குழந்தையின் உயிரை இழப்பதால், தாயின் உயிர் காக்கப் படுகிறது.

(ஈ) முக்கியமாக குற்றக் கருத்து ஏதுமில்லாமல் நல்லெண்ணத்துடன் அது செய்யப்பட்டிருக்க வேண்டும் - இந்தப் பிரச்சனையைப் பொருத்தவரை தாயின் உயிரைக் காப்பாற்ற மருத்துவர் குழந்தையை கொன்ற செயல் நல்லெண்ணத்துடன் கூடியது. இதில் குற்றக் கருத்து இல்லை.

எனவே மருத்துவர் குற்றம் புரியவில்லை என்பதே தீர்வு.

சம்மதம் அல்லது இசைவு (Consent)

50. 'B' is drowning in a pond, 'A' found that he is drunken and insensible 'A' pulls him out with a sharp hook which causes injury to "B". What is the criminal liability on the part of "A"? (குடிபோதை மற்றும் உணர்ச்சியற்ற நிலையில் 'B' என்பவர் ஒரு குளத்தில் மூழ்குவதை 'A' பார்க்கிறார். ஒரு கூரிய கொக்கியின் உதவியுடன் 'B'யை காப்பாற்றும் பொழுது 'B'க்கு காயம் ஏற்படுகிறது. இதில் 'A'ன் குற்றப் பொறுப்பு நிலை யாது?)

இப்பிரச்சனைக்கு தீர்வு காண நாம் பிரிவு 92-அய்க் காண வேண்டியது அவசியமாகும். அப்பிரிவின் சாரம் வருமாறு. "சில சூழ்நிலைகளில் எவருடைய நன்மைக்காக ஒரு செயல் செய்யப்படுகிறதோ, அவருடைய சம்மதத்தைப் பெறுவது இயலாததாகிவிடலாம்; அல்லது சம்மதம் கொடுக்க வேண்டியவர், அவ்வாறு கொடுக்க திறனற்றவராகியிருக்கலாம்; மேலும் அவரது காப்பாளரின் சம்மதத்தைப் பெற முடியாத சூழலும் ஏற்பட்டிருக்க லாம். அச்சமயங்களில் சம்பந்தப்பட்டவரின் சம்மதம் இன்றியே அவருடைய நலனுக்காக நல்லெண்ணத்துடன் செய்யப்படும் செயல் எதுவும், அது அவருக்கு தீங்கு எதையும் விளைவிக்கலாம் என்றாலும் கூட, ஒரு குற்றமாகாது.

தற்போது இப்பிரிவை மேற்கண்ட பிரச்சனைக்கு பொருத்திப் பார்த்தால், தீர்வு கிடைத்துவிடும்.

(1) B என்பவர் குளத்தில் மூழ்குவதை A பார்க்கிறார்;

(2) அவரைக் காப்பாற்ற வேண்டும் என்ற நல்லெண்ணத்துடன் அருகில் கிடந்த ஒரு கூரிய கொக்கியின் உதவியுடன் அவரைப் பிடித்து இழுக்கிறார். அவ்வாறு இழுக்கும் போது அவருக்கு காயங்கள் ஏற்படலாம் என்பது A-க்குத் தெரியும்.

(3) அந்தக் கொக்கியைப் பிடித்துக் கொண்டு B என்பவரால் மேல் வர முடியாது. மேலும் கொக்கியைப் பிடித்து இழுக்கலாமா, வேண்டாமா என்று கேட்பதற்கும் முடியாது. ஏனெனில் B என்பவர் குடிபோதையிலும் உணர்வற்ற நிலையிலும் இருந்தார். அதாவது சம்மதம் கொடுக்க திறனற்றவராக இருந்தார். மேலும் அவருக்காக சம்மதம் கொடுக்கவும் காப்பாளர் எவரும் இல்லை.

(4) A இவ்வாறு கூரிய கொக்கியைக் கொண்டு B-யை இழுப்பது அவரது நலனுக்காகத்தான். விட்டால், B என்பவர் குளத்தில் மூழ்கி இறந்துவிடுவார். அதைத் தடுக்க வேண்டும்.

(5) இங்கு B-க்கு அதனால் காயம் ஏற்படுகிறது.

(6) ஆனாலும் இது மேற்கண்ட சூழ்நிலையில் ஏற்பட்டதால், பிரிவு 92-இன்படி A என்பவர் எக்குற்றமும் செய்யவில்லை என்பதே தீர்வாகும்.

(7) இச்செயல் ஒரு தவிர்க்க முடியாத தேவையின்போது (necessity) செய்யப்பட்டது என்று பிரிவு 81-இன்படியும் A என்பவர் எதிர்வாதம் புரியலாம்.

தற்காப்புரிமை (Private Defence)

51. A has an apprehension that B is going to kill him by witch-craft. In order to protect himself A kills B. Discuss the criminal liability of A. (B என்பவர் பில்லி சூனியத்தினால் தன்னைக் கொலை செய்யப் போகிறார் எனும் அச்சம் A-க்கு உள்ளது. A என்பவர் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக B என்பவரை கொலை செய்கிறார். A வினுடைய குற்றப் பொறுப்பு நிலையை விவாதி.)

இப்பிரச்சனைக்கு தீர்வளிக்க "உடலைத் தற்காத்துக் கொள்ளும் உரிமை மரணம் விளைவிக்கும் அளவிற்கு எப்பொழுது நீடிக்கிறது" (When the right of private defence of the body extends to causing death) என்பதைக் கூறும் பிரிவு 100-அய் கவனிக்க வேண்டும். அதன்படி,

உடலைத் தற்காத்துக் கொள்ளும் பொருட்டு மரணம் அல்லது வேறு தீங்கு ஏதும் எதிரிக்கு விளைந்தால், அது பின்வரும் ஆறு சூழ்நிலைகளில் எனில் அதைக் குற்றமாகக் கருத முடியாது. தற்காப்புரிமை இங்கு நீடிக்கிறது. அவை,

(1) சம்பந்தப்பட்டவரை எதிரி தாக்கி மரணம் விளைவிக்கலாம் என்ற அச்சத்தை உண்டாக்கத்தக்கதான ஒரு தாக்க முனைதலின் (assault) பொழுது;

(2) சம்பந்தப்பட்டவரை எதிர் தாக்கி கொடுங்காயம் (grievous hurt) விளைவிக்கலாம் என்ற அச்சத்தை உண்டாக்கத்தக்கதான ஒரு தாக்க முனைதலின் பொழுது;

(3) வன்புணர்ச்சி (rape) செய்யும் கருத்துடன் தாக்க முனைதலின் பொழுது;

(4) இயற்கைக்கு மாறான காம இச்சையைத் (unnatural lust) திருப்தி செய்து கொள்ளும் கருத்துடன் தாக்க முனைதலின் பொழுது;

(5) ஆட்கவரும் (kidnapping) அல்லது ஆட்கடத்தும் (abduction) கருத்துடன் தாக்க முனைதலின் பொழுது;

(6) சட்டப்பூர்வமான பொது அதிகாரிகளை அணுகி உதவி (aid) பெற முடியாத நிலையில் ஒருவரை முறையின்றி அடைத்து வைக்கும் கருத்துடன் தாக்க முனைதலின் பொழுது.

மேற்குறிப்பிடப்பட்ட ஆறு வகை தாக்க முனைதலில் ஏதேனும் ஒன்றிற்கு உள்ளானால், தற்காப்புக்காக அவ்வாறு தாக்குபவரைக் கொல்லவும், அல்லது எவ்விதமான உடற்காயத்தையும் விளைவிக்கலாம். இச்செயல் மேற்படி பிரிவு 100-இன்படி ஒரு குற்றமாகாது.

மேற்படி பிரச்சனையில்,

(1) B என்பவர் பில்லி சூனியத்தினால் தன்னைக் கொலை செய்யப் போகிறார் எனும் அச்சம் A-க்கு உள்ளது.

(2) A என்பவர் தன்னை பாதுகாத்துக் கொள்வதற்காக B என்பவரை கொலை செய்கிறார்.

(3) இங்கு மேற்கண்ட ஆறு வகைகளில் எவ்வித தாக்குதலும் நடக்கவில்லை. அப்படியிருக்க, A என்பவர் B என்பவரை கொலை செய்தது தற்காப்புரிமைச் செயல் அல்ல. மாறாக, பிரிவு 300-இன்படி கொலைக் குற்றமாகும். இதுவே A-இன் குற்றப் பொறுப்பு நிலையாகும்.

குற்ற உடந்தை (Abetment)

52. 'A' instigats 'B' to burn 'C''s house. 'B' sets fire to the house and at the same time commits theft of property there. Discuss the liability of 'A'. ("இ" என்பவரின் வீட்டை எரிக்கும்படி "ஆ" என்வரை "அ" என்பவர் தூண்டுகிறார். "ஆ" அந்த வீட்டிற்கு தீ வைத்து, அதே சமயத்தில் அங்குள்ள சொத்தைத் திருடும் குற்றத்தையும் செய்கிறார். "அ" என்பவரின் பொறுப்பு நிலையை விளக்குக.)

இந்திய தண்டனைச் சட்டத்தின் 111-ஆவது பிரிவு, ஒரு செய்கைக்கு

உடந்தையாயிருந்து வேறொரு செய்கை செய்யப்படும்போது உடந்தைக் குற்றவாளியின் பொறுப்புநிலை (Liability of abettor for an effect caused by the act abetted different from that intended by the abettor) பற்றிக் கூறுகிறது. அதன்படி,

"ஒரு செய்கைக்கு உடந்தையாயிருந்து வேறொரு செய்கை செய்யப் படும் போது, செய்யப்பட்ட அந்தச் செய்கைக்கு உடந்தைக் குற்றவாளி நேரடியாக உடந்தையாக இருந்தது போன்ற முறையிலும், உடந்தையாக இருந்தது போன்ற அளவுக்கும் அவர் பொறுப்புடையராகிறார்."

ஆனால் இதற்கு வரம்புரையாக (Proviso) விதிவிலக்கு ஒன்று உண்டு. அதன்படி, "செய்யப்பட்ட அச்செய்கையானது உடந்தையினால் நிகழ்தற்குரிய ஒரு பின் விளைவாகவும் இருந்து, தூண்டுதலின் பாதிப்பினால் அல்லது உடந்தையாக அமைந்த சதியின் உதவியுடன் அல்லது அதைத் தொடர்ந்து செய்யப்பட்டதாகவும் இருக்க வேண்டும்." அப்போதுதான் ஒரு செய்கைக்கு உடந்தையாயிருந்து வேறொரு செய்கை செய்யப்படும் போது உடந்தைக் குற்றவாளி பொறுப்புடையவர் ஆவார்.

நமது மேற்படி பிரச்சனை மேற்படி 111-ஆவது பிரிவின் கீழான (ஆ) - எனும் எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். எனவே அதன்படி,

(1) "இ" என்பவரின் வீட்டை எரிக்கும்படி "ஆ" என்வரை "அ" என்பவர் தூண்டுகிறார்.

(2) "ஆ" அந்த வீட்டிற்கு தீ வைத்து, அதே சமயத்தில் அங்குள்ள சொத்தைத் திருடும் குற்றத்தையும் செய்கிறார்.

(3) இங்கு "அ" என்பவர், ("ஆ" என்பவரால்) வீட்டிற்கு தீ வைக்கப் பட்ட குற்றத்திற்கு மட்டும் உடந்தையாக இருந்த குற்றப் பொறுப்புநிலைக்கு ஆளாவாரே தவிர, திருட்டுக் குற்றத்திற்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்கு ஆளாகமாட்டார். ஏனெனில், இங்கு அத் திருட்டானது, வீட்டிற்கு தீ வைத்த செய்கையிலிருந்து வேறுபட்ட ஒரு தனிச் செய்கையாகும்.

(4) மேலும் மேற்படி பிரிவு 111-இன் வரம்புரை வாசகத்தின்படி, அத்திருட்டுச் செய்கையானது, உடந்தையினால் நிகழ்தற்குரிய ஒரு பின் விளைவாக அமைந்திருக்கவில்லை. (the theft was a distinct act, and not a probable consequence of the burning).

எனவே நமது பிரச்சனையில் வீட்டிற்கு தீ வைக்கப்பட்ட குற்றத்திற்கு உடந்தையாக இருந்த குற்றத்திற்கு மட்டுமே "அ" என்பவர் பொறுப்பாளி என்பதே தீர்வாகும்.

பொய்ச் சாட்சியம் புனைதல் (Fabricating False Evidence)

53. "A" digs a hole in "B"s premises and places contraband articles in it so that the discovery of the articles will incriminate "B". Examine the liability

of "A". ("ஆ" என்பவரின் மனையில் "அ" என்பவர் ஒரு துவாரம் ஏற்படுத்தி அதில் கள்ளச் சரக்குகளை வைக்கிறார். இதனை அவர் அந்தக் கள்ளச் சரக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு "ஆ" குற்றம் செய்தலுக்கு உள்ளாவார் என்ற நோக்கோடு செய்கிறார். "அ"-வின் குற்றப் பொறுப்பு நிலையை ஆராய்க.)

இப்பிரச்சனையில் "அ" என்பவர் பிரிவு 192-இன்படி பொய்ச் சாட்சியம் புனைந்த குற்றம் (fabricating false evidence) புரிந்தவராகிறார். எனவே இதற்காக அவர் பிரிவு 193-இன்படி தண்டிக்கத் தக்கவர். இதற்குக் காரணங்கள் வருமாறு.

முதற்கண் பிரிவு 192-இன்படி, "நீதிமன்ற நடவடிக்கை, பொது ஊழியர் அல்லது இசைவுத் தீர்ப்பாளர் நடத்தும் சட்டப்படியான நடவடிக்கை ஆகியவற்றில் சம்பந்தப்பட்டவர்கள் அதிலும் ஒரு முக்கியமான விடயம் குறித்து தவறான அபிப்பிராயம் கொள்ள வேண்டும் என்ற கருத்தோடு ஒரு சூழ்நிலை உண்டாக்குதல் (any circumstance to exist) அல்லது புத்தகத்திலோ, பதிவேட்டிலோ பதிவு எதையும் பொய்யாக (false entry) செய்தல் அல்லது பொய்யுரையைக் கொண்ட பொய்யான ஆவணம் ஒன்றை உண்டாக்கி (false document containing false statement) அதன் மூலம் அந்த நடவடிக்கைகான பொய்ச் சாட்சியம் உண்டாக்குதல், பொய்ச் சாட்சியம் புனைந்த குற்றமாகிறது."

இப்பிரிவின் கீழான முதல் எடுத்துக்காட்டின்படி, " Z என்பவருக்குச் சொந்தமான பொட்டியில் நகைகளை, அந்தப் பெட்டியில் அவை காணப் படலாம் என்றும், அந்தச் சூழ்நிலை Z திருட்டுக் குற்றத்திற்காக தீர்ப்புத் தண்டனை பெறுவதற்கு காரணமாகலாம் என்ற கருத்துடன் A என்பவர் போடுகிறார். இங்கு A என்பவர் பொய்ச் சாட்சியம் புனைந்திருக்கிறார்."

இந்த எடுத்துக்காட்டின் அடிப்படையில் அமைந்ததுதான் நமது மேற்படி பிரச்சனையும். மேற்படி பிரச்சனையில்,

(1) "அ" என்பவர் ஒரு சூழ்நிலையை உண்டாக்குகிறார். அதாவது, "ஆ" என்பவரின் மனையில் துவாரம் ஒன்றை ஏற்படுத்தி அதில் கள்ளச் சரக்குகளை வைக்கிறார்;

(2) அந்தக் கள்ளச் சரக்குகள் கண்டுபிடிக்கப்பட்டு "ஆ" குற்றம் செய்தலுக்கு உள்ளாவார் என்ற கருத்துடன் "அ" அவ்வாறு செய்கிறார்.

(3) அந்தக் கள்ளச் சரக்குகள் "ஆ"-இன் மனையில் கண்டுபிடிக்கப் படும்போது, அது "ஆ" என்பவரின் மீது தவறான அபிப்பிராயம் ஒன்றை பொது ஊழியர் நடத்தும் சட்டப்படியான நடவடிக்கைகளில் (அதாவது காவல்துறையினரின் புலனாய்வு நடவடிக்கையில்) ஏற்படுத்தும் என்பது நிச்சயம்.

எனவே இங்கு "அ" என்பவர் பிரிவு 192-இன்படி பொய்ச் சாட்சியம் புனைந்த குற்றத்திற்கு ஆளாகிறார். பிரிவு 193-இன்படி மேற்கண்ட பொய்ச் சாட்சியம் நீதிமுறை நடவடிக்கை ஒன்றில் பயன்படுத்தப்படுவதாக இருப்பின்,

அவருக்கு ஏழாண்டுகள் வரையிலான சிறைவாசம் மற்றும் அபராதம் தண்டனையாக விதிக்கப்படும். வேறு நடவடிக்கை எனில், மூன்றாண்டுகள் வரையிலான சிறைவாசமும், அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

கொலையாகாத மரணம் விளைவிக்கும் குற்றம் (Culpable Homicide not amounting to Murder)

54. A quarrel arose between A and B. A struck B with a thin iron rod. B immediately struck A with an axe on the head and killed him. Discuss the liability of B. (A வுக்கும் B வுக்குமிடையே சச்சரவு ஏற்பட்டது. A ஒரு மெல்லிய கம்பியினால் B யை அடித்தார். B உடனே ஒரு கோடாரியால் A வின் தலையில் அடித்து கொன்றார். B யின் குற்றப் பொறுப்பு நிலையை விவாதிக்க.)

இந்திய தண்டனைச் சட்டத்தின் 300-ஆவது பிரிவின் கீழான 4-ஆவது விதிவிலக்கானது, முன்கூட்டித் திட்டமிடாத திடீர் சண்டையின் (sudden fight without premeditation) போது ஒருவர் மற்றொருவரின் மரணத்தை ஏற்படுத்தினால், அது கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றமாகும் (culpable homicide not amounting to murder). இங்கு யார் சண்டையை தூண்டியவர், மேலும் யார் முதல் தாக்குதலை புரிந்தவர் என்பது ஒரு பொருட்டன்று.

அதாவது முன் ஆலோசனையின்றி ஏற்படும் திடீர் சண்டையில் உணர்ச்சி வேகத்தில் மரணம் ஏற்படுகிறது. அச்சண்டையில் குற்றவாளி தகாத முறையில் தமக்கு எதிரியிடமிருந்து அனுகூலம் தேடிக் கொள்வதில்லை. மேலும் செயலானது கொடூரமாகவோ அல்லது அசாதரணமானதாகவோ நடப்பதில்லை. ஆகவே இது கொலைக் குற்றமாகாது. மரணம் விளைவித்த குற்றமாகும்.

மேற்படி பிரச்சனையில்,

(1) A-க்கும் B-க்குமிடையே சச்சரவு (சண்டை) ஏற்பட்டுள்ளது.

(2) A ஒரு மெல்லிய கம்பியினால் B-யை அடித்துள்ளார்.

(3) B அதிலிருந்து சமாளித்துக் கொண்டு உடனே ஒரு கோடாரியை எடுத்து A-யின் தலையில் அடித்துக் கொன்றார். இதனால் B இறந்துவிட்டார்.

(4) இங்கு அவ்வாறு அடிக்க வேண்டும் என்று முன்கூட்டித் திட்டமிடல் அல்லது யோசனை ஏதுமில்லை.

(5) இங்கு A என்பவர் தகாத முறையில் B என்பரிடமிருந்து அனுகூலம் எதையும் எடுத்துக் கொள்ளவில்லை.

(6) B என்பவர் A-யைக் கொலை செய்த செயல் கொடூரமானதாக அல்லது அசாதரணமானதாக இல்லை.

(7) எனவே பிரிவு 300-இன் 4-ஆவது விதிவிலக்கின்படி B என்பவர் கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்தைப் புரிந்தவர் ஆவார்.

(8) இதற்கு ஆதாரமாக Somirudden எனும் வழக்கைச் சுட்டிக் காட்டலாம். அதனை இந்நூலின் பக்கம் எண். 242-இல் காண்க.

பிரிவு 304-இன்படி மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது மரணத்தை விளைவிக்கும் உடற்காயத்தை ஏற்படுத்தும் கருத்துடன் கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்தை புரிபவருக்கு ஆயுள் தண்டனை அல்லது 10 ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை விதிக்கப் படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும். அல்லது தனது செயல் மரணத்தை விளைவிக்கும் என்ற அறிவுடன் அல்லது மரணத்தை விளைவிக்க வேண்டும் என்று கருத்து இல்லாமல் அல்லது மரணத்தை விளைவிக்கும் உடற்காயத்தை ஏற்படுத்தும் கருத்து இல்லாமல் கொலைக் குற்றமாகாத மரணம் விளைவிக்கும் குற்றத்தைப் புரிபவருக்கு 10 ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனை அல்லது அத்துடன் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

மேற்படி பிரச்சனையில் B என்பவருக்கு A என்பவரைக் கொலை செய்ய வேண்டும் என்ற கருத்து ஏதும் இல்லை. அல்லது தன்னால் விளைவிக்கப் பட்ட உடற்காயம் மரணம் விளைவிக்கும் அளவிற்கு செல்லும் என்ற அறிவும் இல்லை. எனவே B என்பவருக்கு 10 ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும், அத்துடன் அபராதமும் விதிக்கப்படும்.

இதனையே தனது உடலைத் தற்காத்துக் கொள்வதற்காக தற்காப்பு உரிமையை பயன்படுத்தும் போது B என்பவர் A என்பவருக்கு மரணம் விளைவிக்க நேரிட்டது என்று பிரிவு 102-இன் கீழும் வாதுரைத்து, அதனால் B-க்கு விடுதலை வழங்க வேண்டும் என்றும் வாதிடலாம். **Deo Narain v. State of U.P.**[1] எனும் வழக்கைச் சுட்டிக்காட்டலாம். அதனை இந்நூலின் பக்கம் எண். 158-இல் காண்க.

காயம் (Hurt)

55. 'A' hits 'B' on forehead with a stick thereby causing 'B' to die. Discuss the offence committed by 'A' ("அ" என்பவர் "ஆ" என்பவரது முன் தலையில் குச்சியினால் அடிக்கின்றார். அதனால் "ஆ" என்பவர் இறக்கிறார். "அ" என்பவர் செய்த குற்றத்தை விவாதிக்கவும்.)

மேற்படி பிரச்சனையில் "அ" என்பவர் இந்திய தண்டனைச் சட்டத்தின் பிரிவு 323 உடன் சேர்ந்து வாசிக்கத்தக்க பிரிவு 319-இன்படி (Section 319 r/w Section 323) "ஆ" என்பவருக்கு காயம் விளைவித்த குற்றத்தைச் செய்தவராவார்.

இந்திய தண்டனைச் சட்டத்தின் 319-ஆவது பிரிவு, "ஒருவருக்கு உடல் வலி, நோய் அல்லது பலவீனம் விளைவிக்கிற எவரும், காயம் விளைவிக்கிறார்

1. 1973 II S.C.J. 137

என்று சொல்லப்படுவார்" என்று கூறுகிறது. ஆனால் இதற்கு இரண்டு முன் நிபந்தனைகள் உள்ளன. அவை,

அத்தகு காயம் தன்னிச்சையாக விரும்பி விளைவிக்கப்பட்டதாக இருக்க வேண்டுமே தவிர, தற்செயலானதாக இருத்தல் கூடாது. மேலும் காயம் விளைவிக்கும் நபர், தனது செய்கையானது மற்றவருக்கு அநேகமாக காயம் விளைவிக்கும் என்று கருத்தைக் கொண்டிருக்க வேண்டும் அல்லது அறிந்திருக்க வேண்டும். (must have the intention or knowledge that his act is likely to cause hurt)

ஆனால் மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்து இல்லாமலும், தான் விளைவித்த காயத்தால் அநேகமாக மரணம் விளையலாம் என்பதை அறிந்திருக்காமலும் காயம் விளைவித்து, அக்காயம் கொடுங்காயமாக இல்லாத போது, அவர் காயம் விளைவித்த குற்றத்திற்கு மட்டுமே பொறுப்பாவார். மாறாக கொலைக் குற்றத்திற்கு பொறுப்பாக மாட்டார்.

மேற்படி பிரச்சனையின்படி,

(1) "அ" என்பவர் "ஆ" என்பவரது முன்தலையில் குச்சியினால் அடிப்பதன் விளைவாக "ஆ" என்பவருக்கு காயம் விளைவிக்கிறார்.

(2) இது தன்னிச்சையாக செய்யப்பட்டது. மேலும் தனது செய்கையால் காயம் விளையும் என்று அறிந்து செய்யப்பட்டது. எனவே இது தற்செயலாக நிகழ்ந்ததல்ல (voluntarily with knowledge and not accidental).

(3) ஆனால் இங்கு "ஆ"-விற்கு மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்து "அ"-க்கு கிடையாது. மேலும் தன்னால் விளைவிக்கப்பட்ட காயம், "ஆ"-இன் மரணத்திற்கு வழிவகுக்கும் என்பதை "அ" அறிந்திருக்கவில்லை.

(4) "அ"-வால் விளைவிக்கப்பட்ட காயம் உள்ளபடியாக கொடுங் காயம் அல்ல. ஆனால் அதனால் "ஆ"-விற்கு மரணம் ஏற்படுகிறது.

மேற்கண்ட காரணங்களால், "அ" பிரிவு 323-வுடன் இணைந்து வாசிக்கத்தக்க பிரிவு 319-இன்படி காயம் விளைவித்த குற்றத்திற்கு ஆளாகிறார். பிரிவு 323-ஆனது காயம் விளைவித்த குற்றத்திற்கு தண்டனையைப் பகர்கிறது. அதன்படி காயம் விளைவித்த "அ" என்பவருக்கு ஓராண்டு வரையிலான சிறைவாசம் அல்லது ரூ1000/- வரையிலான அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படலாம்.

இதற்கு ஆதாரமாக புகழ்பெற்ற சட்ட நூலாசிரியர் திருமிகு பி.எஸ்.ஏ. அச்சுதன்பிள்ளை எழுதி, வி.சுரேஷ் மற்றும் டி.நாகசைலா அவர்கள் திருத்தி பட்டர்வொர்த் நிறுவனம் வெளியிட்டுள்ள "குற்றவியல் சட்டம்" எனும் 9-ஆம் பதிப்பின் 663 மற்றும் 664-ஆம் பக்கங்களில் உள்ள வழக்குகளையும் விளக்கங்களையும் சுட்டிக்காட்டுவது உகந்தது. அந்த வழக்கின்படி (AIR 1963 MB 262; AIR 1941 Mad; 1942 Cri LJ 707), "அ" என்பவர் "ஆ" என்பவருக்கு ஓரணா திருப்பிக்கொடுக்க வேண்டும். அதை "ஆ" திருப்பிக் கேட்டார். "அ"

என்பவரோ தம்மிடம் தற்போது பணம் இல்லை என்றும், பின்னர் கொடுப்ப தாகவும் கூறினார். இதைக் கேட்டவுடன், "ஆ" என்பவர் "அ" என்பவரின் வயிற்றில் இரண்டு முறை எட்டி உதைத்தார். இதனால் "அ" என்பவர் சுருண்டு விழுந்து, அதிர்ச்சியின் காரணமாக இறந்துவிட்டார். இங்கு "அ" என்பருக்கு மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்து "ஆ"-க்கு இல்லையென்றும், வயிற்றில் உதைத்த காரணத்தால் மரணம் ஏற்படும் என்ற அறிவு "ஆ"-க்கு கிடையாது என்றும் மெய்ப்பிக்கப்பட்டது. எனவே "ஆ"-வை கொலைக் குற்றத்திற்காக தண்டிக்காமல், காயம் விளைவித்த குற்றத்திற்காக பிரிவு 323-இன்படி நீதிமன்றம் தண்டித்தது.

மேற்படி வழக்கில் பின்வரும் குற்றங்களில் மரணம் ஏற்பட்டிருந்தாலும், அவை யாவும் காயம் விளைவித்த குற்றங்களே என்று நீதிமன்றம் தீர்ப்புரை தந்துள்ளது. அவை,

(1) கை மற்றும் கால்களால் தாக்குதல். இதனால் காயம் அடைந்தவர் இறந்துவிட்டார். இது பிரிவு 323-இன்படி காயம் விளைவித்த குற்றமே.

(2) உடலின் பிட்டத்திலும் தொடைகளிலும் குச்சியால் அடித்தல். இங்கு மரணத்தை விளைவிக்க வேண்டும் என்ற கருத்து இல்லை அல்லது மரணம் ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பும் இல்லை.

(3) இரவில் வேளாண் பயிர்களை திருடியவனை மக்கள் பலரும் சேர்ந்து தங்கள் கைகளால் அடித்ததால், அவன் இறந்துவிடுகிறான். இங்கு அவர்கள் பிரிவு 323-இன்படி காயம் விளைவித்த குற்றத்திற்கே பொறுப்பாகின்றனர். மாறாக கொலைக்குற்றத்திற்கு அல்ல.

(4) கழுத்தில் வெறுங்கையால் ஒரேயொரு முறை அடிக்கப்பட்டது. இதற்கு பின்னிட்டு எந்த வன்முறையும் நிகழவில்லை. எனினும் அந்த அடியால் கழுத்து எலும்பு முறிந்து, சம்பந்தப்பட்டவர் இறந்துவிட்டார். எனினும் இது பிரிவு 319 மற்றும் 323-இன்படி காயம் விளைவித்த குற்றமே எனப்பட்டது.

(5) ஒருவருக்கு வயிற்றில் ஒரேயொரு குத்து விழுந்தது. அவரது இருதய இரத்த நாளத்தில் கொழுப்பு மிகுந்து இருந்ததாலும், ஈரல் வீங்கிப் பெரிதாக இருந்ததாலும் இறந்துவிட்டார். எனினும் இது காயம் விளைவித்த் குற்றமே எனப்பட்டது.

மேற்கண்ட எடுத்துக்காட்டுகள் யாவும், காயம் விளைவிக்க வேண்டும் என்று கருத்துடன் செயல் ஒன்றைத் தன்னிச்சையாக செய்தவருக்கும் அல்லது தனது செய்கையினால் அநேகமாக காயம் விளையலாம் என்ற அறிவுடன் செய்தவருக்கும் காயம் விளைவித்ததற்கான தண்டனைதான் வழங்கப்பட வேண்டும். முழுமையாக எதிர்பார்த்தறியாத அல்லது தற்செயலாக ஏற்பட்ட மரணம் போன்ற விளைவுகளுக்காக மாறுபட்ட ஒரு பெருங்குற்றத்திற்காக காயம் விளைவித்தவரை தண்டித்தல் இயலாது என்பது இங்கு சட்டமும், வழக்குகளும் காட்டும் கொள்கையாகும்.

எனவே மேற்படி பிரச்சனையில் "அ" என்பவர் பிரிவு 319-இன்படி

காயம் விளைவித்த குற்றம் செய்தவராகிறார். அவர் பிரிவு 323-இன்படி தண்டனைக்குள்ளாவார்.

56. A, a police officer, tortures B to induce him to point out where certain stolen property is deposited. Has A committed any offence? Substantiate your answer with reasons. ("A" என்னும் காவல்துறை அலுவலர் "B" என்பவரிடம் களவுப் பொருட்களை எங்கு மறைத்து வைத்துள்ளார் என்று கூறத் தூண்டி அவரை துன்புறுத்துகிறார். "A" ஏதேனும் குற்றம் செய்துள்ளரா? தங்களது விடையை காரணங்களுடன் நிறுவுக.)

மேற்படி பிரச்சனையானது பிரிவு 330-இன் கீழான (b) எனும் எடுத்துக் காட்டை அப்படியே பின்பற்றி அமைந்ததாகும். "ஒப்புதலுரையை அச்சுறுத்திப் பெறுவதற்கு அல்லது சொத்தைக் கட்டாயப்படுத்தி மீட்பதற்கு தன்னிச்சையாக காயம் விளைவித்தல்" (Voluntarily causing hurt to extort confession, or to compel restoration of property) குற்றம் என்று கூறுகிறது.

பிரிவு 330-இன்படி, "ஒரு குற்றத்தை அல்லது ஒரு தீய நடத்தையை கண்டு பிடிப்பதற்கு வழி செய்கிற ஒப்புதலுரை எதையேனும் அல்லது தகவல் எதையேனும் வேதனைக்குள்ளாவோரிடமிருந்து, அல்லது அத்தகையவர் மீது அக்கறை கொண்ட எவரிடமிருந்தும் அச்சுறுத்திப் பெறுவதற்காக, அல்லது சொத்து அல்லது மதிப்புடைய ஆவணம் எதையேனும் மீட்பதற்காக அல்லது மீட்கும்படி செய்வதற்காக, அல்லது பாத்தியதை அல்லது கோரிக்கை எதையேனும் தீர்ப்பதற்காக, அல்லது ஒரு சொத்து அல்லது மதிப்புடைய ஆவணம் எதையும் மீட்கும்படி செய்வதற்கு வழிசெய்கிற தகவலைக் கொடுக்கும்படி செய்வதற்காக அத்தகையவரையோ, அல்லது அத்தகையவர் மீது அக்கறை கொண்டுள்ளவரையோ வற்புறுத்தும் பொருட்டு, தன்னிச்சையாக காயம் விளைவிக்கும் எவரொருவருக்கும், ஏழு ஆண்டுகள் வரை நீடிக்கக்கூடிய சிறைத்தண்டனையுடன் அபராதமும் விதிக்கப்படும்."

மேற்படி பிரச்சனையில்,- "A" என்னும் காவல்துறை அலுவலர் "B" என்பவரிடம் களவுப் பொருட்களை எங்கு மறைத்து வைத்துள்ளார் என்று கூறத் தூண்டி அவரை துன்புறுத்துகிறார். அதாவது சித்ரவதை (torture) செய்கிறார். இது தன்னிச்சையான காயம் விளைவித்தல் ஆகும். இவ்வாறு காயம் விளைவித்தது மேற்படி பிரிவின்படி ஒரு சொத்தை மீட்கும்படி செய்வதற்கு வழி செய்கிற தகவலைக் கொடுக்கும்படி வற்புறுத்துவதற்காக என்பதால், "A" என்னும் காவல்துறை அலுவலரின் சித்ரவதைச் செயல் மேற்படி பிரிவின்படி குற்றமாகும். எனவே அவருக்கு மேற்படி பிரிவின் இறுதியில் கூறப்பட்டவாறு ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனையும், அபராதமும் உண்டு.

கொடுங்காயம் மற்றும் பொய்ச் சாட்சியம் புனைதல் (Grievous Hurt and Fabricating False Evidence)

57. A hits his wife with a plough shire rendering senseless and believing

her dead, he hanged her in order to make an appearance that she committed suicide. The wife died due to asphyxia, What is the offence committed by A. (அ என்பவர் தன் மனைவியை ஒரு கலப்பையின் முனை கொண்டு தாக்கியதில் அவள் உணர்விழந்தாள். அவள் இறந்துவிட்டதாக நம்பிய அவன், தானாக அவள் தற்கொலை செய்து கொண்டாள் என்ற தோற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு அவளை தூக்கிலிட்டான். அவள் மூச்சுத் திணறி இறக்கிறாள். "அ" செய்த குற்றம் என்ன?)

மேற்படி பிரச்சனையில் "அ" என்பவர் பிரிவு 322-இன்படி கொடுங்காயம் விளைவித்த குற்றமும், பிரிவு 192-இன்படி பொய்ச் சாட்சியம் புனைந்த குற்றமும் புரிந்தவராகிறார். இக்குற்றங்களுக்காக அவர் முறையே பிரிவு 325-இன்படியும், பிரிவு 193-இன்படியும் தண்டிக்கப்படத்தக்கவராவார்.

பிரிவு 322-இன்படி, "தன்னிச்சையாக காயம் ஒன்றை விளைவிப்பவர், தாம் விளைவிக்க வேண்டும் என்று கருத்து கொள்கிற அல்லது தம்மால் அநேகமாக விளைவிக்கக் கூடும் என்று தாம் அறிகிற காயம் கொடுங்காயமாக இருக்குமானாலும், மற்றும் அவர் விளைவிக்கிற காயம் கொடுங்காயமாக இருக்குமானாலும், அவர் தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவிப்பதாக (voluntarily to cause grievous hurt) சொல்லப்படுவார்". இதற்கு **பிரிவு 325-இன்** படி ஏழாண்டுகள் வரையிலான சிறைவாசம் மற்றும் அபராதம் தண்டனையாக விதிக்கப்படும்.

பிரிவு 192-இன்படி, "நீதிமன்ற நடவடிக்கை, பொது ஊழியர் அல்லது இசைவுத் தீர்ப்பாளர் நடத்தும் சட்டப்படியான நடவடிக்கை ஆகியவற்றில் சமபந்தப்பட்டவர்கள் அதிலும் ஒரு முக்கியமான விடயம் குறித்து தவறான அபிப்பிராயம் கொள்ள வேண்டும் என்ற கருத்தோடு ஒரு சூழ்நிலை உண்டாக்குதல் (any circumstance to exist) அல்லது புத்தகத்திலோ, பதிவேட்டிலோ பதிவு எதையும் பொய்யாக (false entry) செய்தல் அல்லது பொய்யுரையைக் கொண்ட பொய்யான ஆவணம் ஒன்றை உண்டாக்கி (false document containing false statement) அதன் மூலம் அந்த நடவடிக்கைகான பொய்ச் சாட்சியம் உண்டாக்குதல், பொய்ச் சாட்சியம் புனைந்த குற்றமாகிறது." இதற்கான தண்டனை பற்றி **பிரிவு 193** கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில்,

(1) அ என்பவர் தன் மனைவியை ஒரு கலப்பையின் முனை கொண்டு தாக்கியதில் அவள் உணர்விழந்தாள். இது பிரிவு 322-இன்படி தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்த செயலாகும். இதனை பிரிவு 325 தண்டிக்கிறது.

(2) அ என்பவர் தனது மனைவியை தாக்கும்போது அவளுக்கு மரணம் சம்பவிக்கவில்லை.

(3) மேற்படி அ-க்கும், தனது மனைவிக்கு மரணம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்து ஏதும் இல்லை.

(4) அவர் தனது மனைவி இறந்துவிட்டதாக நம்புகிறார். அதனால் அவள்

தானாக தற்கொலை செய்து கொண்டாள் என்ற தோற்றத்தை ஏற்படுத்தும் பொருட்டு அவளை தூக்கிலிட்டான். அதாவது தவறான அபிப்பிராயம் கொள்ளத்தக்க ஒரு பொய்யான சூழ்நிலையை உண்டாக்குகிறார். இச்செயல் பிரிவு 192-இன்படி பொய்ச் சாட்சியம் புனைந்த குற்றமாகிறது. இதனை பிரிவு 193 தண்டிக்கிறது.

இங்கு அ-இன் மனைவி மூச்சுத் திணறி இறந்து போகிறார். எனினும், அவளைக் கொல்ல வேண்டும் என்ற கருத்து அ-க்கு இல்லாத காரணத்தால், அ கொலைக் குற்றத்திற்கு ஆளாகமாட்டார். (1) அவளை கலப்பையின் முனை கொண்டு தாக்கும்போது, அ தன்னிச்சையாக கொடுங்காயம் விளைவித்த குற்றத்திற்கும், (2) அவளை தூக்கிலிட்ட போது, பொய்ச் சாட்சியம் புனைந்த குற்றத்திற்கும் ஆளாகிறார். இதுவே அ-இன் குற்றங்கள் ஆகும்.

முதல் குற்றத்திற்கு பிரிவு 325-இன்படி ஏழாண்டுகள் வரையிலான சிறை வாசமும் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்; இரண்டாவது குற்றத்தைப் பொருத்தவரை, பிரிவு 193-இன்படி ஒரு நீதிமுறை நடவடிக்கையில் பயன்படுத்தப்படுவதற்காக பொய்ச் சாட்சியம் புனைந்த குற்றத்திற்காக ஏழாண்டுகள் வரையிலான சிறை வாசமும் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

இப்பிரச்சனை புகழ்பெற்ற **பழனி கவுண்டன் வழக்கை**[1] அப்படியே அடியொற்றியதாகும். (பார்க்க இந்நூலின் பக்கம் எண்.249).

குற்றமுறு தாக்குதல் அல்லது குற்றமுறு வன்முறை (Criminal Force)

58. A intentionally pulls up a woman's veil without her consent knowing that he may thereby annoy her. Explain the liability of A. (அ என்பவர் ஒரு பெண்ணை அவளது சம்மதமில்லாமல், தனது செயல் அவளுக்கு தொந்தரவு விளைவிக்கும் என்பதை அறிந்து கொண்டே அவளது முகத்திரையை பிடித்து தெரிந்தே இழுக்கிறார். அ-ன் பொறுப்புநிலையை விளக்குக.)

மேற்கண்ட பிரச்சனை பிரிவு 350-இன் கீழான (f) எனும் எடுத்துக் காட்டை அப்படியே அடியொற்றி அமைந்ததாகும். பிரிவு 350-இன்படி, குற்றமான ஒரு செயலைச் செய்வதற்கென்று, ஒருவருடைய சம்மதமின்றி அவரைத் தாக்குவதும், ஒருவருக்கு தீங்கு, அச்சம், தொந்தரவு விளைவிக்கும் கருத்துடன் அவருடைய சம்மதமின்றி அவரைத் தாக்குவதும் "குற்றமுறு தாக்குதல்" **(Criminal Force)** எனப்படும்.

மேற்படி பிரச்சனையில்,

(1) அ என்பவர் ஒரு பெண்ணின் முகத்திரையை தெரிந்தே பிடித்து இழுக்கிறார்.

1. 1919 42 Mad. 547 (FB)

(2) இதனால் அப்பெண்ணுக்கு தொந்தரவு ஏற்படும் என்பதை அ என்பவர் அறிந்துள்ளார்.

(3) இதற்கு அப்பெண் சம்மதம் எதுவும் தெரிவிக்கவில்லை.

எனவே இங்கு அ என்பவர் மேற்படி பிரிவு 350-இன்படி குற்றம் இழைத்துள்ளார். இதற்கு பிரிவு 352-இன்படி அவருக்கு மூன்று மாதம் வரையிலான சிறைத்தண்டனை அல்லது அய்ந்நூறு ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

தாக்க முனைதல் (Assault)

59. "A" takes up a stick, saying to Z "I will give you a beating" - Is "A" liable for any offence. (ஒரு குச்சியுடன் "A" என்பவர் "Z" ஐ பார்த்து "உனக்கு ஒரு அடி தருவேன்" என்று கூறுகிறார். "A" ஏதேனும் குற்றம் புரிந்தவரா?)

இப்பிரச்சனையில் "A" என்பவர் **பிரிவு 351-இன்படி** தாக்க முனைதல் (Assault) குற்றத்தைப் புரிந்துள்ளார். இதற்கு மூன்று மாதம் வரையிலான சிறைவாசம் அல்லது அய்ந்நூறு ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும் என்று **பிரிவு 352** கூறுகிறது.

இதற்கான காரணங்கள் வருமாறு:-

(1) பிரிவு 351-இன்படி ஒருவர், தன் முன்னுள்ள மற்றொருவர் குற்றமுறு தாக்குதலை (criminal force) பயன்படுத்தப் போகிறார் என்னும் அச்சத்தை அவருக்கு விளைவிக்கும் கருத்துடன் ஒரு சைகையோ, முன்னேற்பாடோ செய்தல், தாக்க முனைதல் என்ற குற்றமாகும்.

(2) மேற்படி பிரிவின் கீழ் கூறப்பட்டுள்ள விளக்கத்தின்படி, "வெறும் சொற்களால் மட்டுமே தாக்க முனைதல் ஏற்படாது. ஆனால் ஒருவருடைய சைகைகள் (gestures) அல்லது முன்னேற்பாடுகளைத் தாக்க முனைதலாக ஆக்கும் அளவிற்கு அவர் பயன்படுத்தும் சொற்கள் அவருடைய சைகைகள் அல்லது முன்னேற்பாடுகளுக்குப் பொருள் கொடுக்கலாம்.

(3) மேற்படி பிரிவின் கீழான எடுத்துக்காட்டுகளில் (இ) எனும் எடுத்துக்காட்டை பின்பற்றி அமைந்ததே நமது மேற்படி பிரச்சனையும். அந்த எடுத்துக்காட்டின்படி, "நான் உன்னை அடிக்கப் போகிறேன்" என்று "Z" என்பவரிடம் சொல்லிக் கொண்டே "A" என்பவர் ஒரு தடியை எடுக்கிறார். இங்கு "A" பயன்படுத்திய சொற்கள் எந்தச் சந்தர்ப்பத்திலும் தாக்க முனைகிற குற்றமாகாது. மேலும் வேறு சூழ்நிலையோடு சேர்ந்து வராத போது, வெறும் சைகை மட்டுமே தாக்க முனைகிற குற்றமாகக் கூடியதல்ல. எனினும், சொற்களால் விளக்கப்பட்ட சைகை தாக்க முனைகிற ஒரு குற்றமாகக் கூடும்.

(4) மேற்படி எடுத்துக்காட்டில் சொற்களால் விளக்கப்பட்ட சைகை உள்ளது. அதாவது, "நான் உன்னை அடிக்கப் போகிறேன்" என்பன "A" பயன்படுத்திய சொற்கள். இதற்கு விளக்கம் கூறும் முகமாக "A" என்பவர் ஒரு

தடியை எடுக்கிறார். இது அச்சொற்களால் விளக்கப்பட்ட சைகை. எனவே "A" தாக்க முனைகிற குற்றத்தைப் புரிந்துள்ளார்.

(5) இந்நிலைப்பாட்டை நமது மேற்படி பிரச்சனைக்கும் பொருத்திப் பார்த்தால், தீர்வு கிடைத்து விடும். அதாவது "A" என்பவர் "Z"ஐ பார்த்து "உனக்கு ஒரு அடி தருவேன்" என்று கூறுகிறார். இவை "A" பயன்படுத்திய சொற்கள். இங்கு வெறும் சொற்கள் மட்டும் தாக்க முனைகிற குற்றமாகாது. ஆனால் அதே சமயத்தில் "A" என்பவர் குச்சி ஒன்றை எடுக்கிறார். இது அச்சொற்களை விளக்கும் சைகையாகும். இதனால் குற்றமுறு தாக்குதல் ஒன்றை பயன்படுத்தவிருக்கிறார் எனும் அச்சத்தை "Z" என்பவருக்கு "A" என்பவர் விளைவித்துள்ளார். எனவே "A" என்பவர் பிரிவு 351-இன்படி தாக்க முனைகிற குற்றத்தைப் புரிந்தவராவார்.

(6) "A" என்பவர் பிரிவு 352-இன்படி மூன்று மாதம் வரையிலான சிறைவாசம் அல்லது அய்ந்நூறு ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டும் விதித்து தண்டிக்கத்தக்கவராவார்.

ஆட்கவர்தல் மற்றும் ஆட்கடத்தல் (Kidnapping and Abduction)

60. A takes away his wife aged 22 years from his father-in-law's house by force, where she was residing with her parents due to misunderstanding with her husband. "A" has taken his wife in order to live happily with her. Whether "A" has committed any offence. (தனக்கும், தன் கணவனுக்கும் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டின் காரணமாக தனது பெற்றோர்களுடன் வசித்து வரும் மனைவியை, "A" என்ற கணவன் தனது மாமனார் வீட்டிற்குச் சென்று பலாத்காரமாக அழைத்து வருகிறார். அவருடன் சந்தோசமாக வாழ வேண்டும் என்பதற்காகத்தான் அவளை "A" அழைத்து வந்தார். "A" ஏதாவது குற்றம் புரிந்தவரா?)

இப்பிரச்சனைக்கு விடை காண, நாம் பின்வரும் இரண்டு குற்றங்கள் நிகழ்ந்துள்ளதா என்பதை கவனிக்க வேண்டும். அவை (1) **ஆட்கவர்தல் (Kidnapping)**; (2) **ஆட்கடத்தல் (Abduction).**

பிரிவு 359-ஆனது ஆட்கவர்தல் என்பது, (1) இந்தியாவிலிருந்து கவர்தல் என்றும், (2) சட்டப்பூர்வமான பாதுகாப்பிலிருந்து கவர்தல் என்றும் இரு வகைப்படும் என்று கூறுகிறது.

பிரிவு 360-ஆனது இந்தியாவிலிருந்து கவர்தல் பற்றி விளக்குகிறது. அதன்படி, "ஒருவரை அவரது சம்மதம் இல்லாமல் அல்லது அவர் பொருட்டு சம்மதம் தரச் சட்டப்படி அதிகாரம் பெற்ற ஒருவரது சம்மதமின்றி, அவரை இந்திய எல்லைக்கு அப்பால் கொண்டு சென்றால், இந்தியாவிலிருந்து ஆளைக் கவர்ந்து செல்லல் என்று சொல்லப்படும்.

பிரிவு 361-ஆனது சட்டப்பூர்வமான பாதுகாப்பிலிருந்து கவர்தல் பற்றி

விளக்குகிறது. அதன்படி, "பதினாறு வயதிற்குட்பட்ட ஓர் ஆணை அல்லது பதினெட்டு வயதிற்குட்பட்ட ஓர் பெண்ணை அல்லது புத்தி சுவாதீனம் இல்லாத ஒருவரை, அவர்களின் சட்டப்பூர்வமான காப்பளரிடமிருந்து சம்மதம் பெறாமல் ஆசை காட்டி இழுத்துக் கொண்டு அல்லது தூக்கிக் கொண்டு போவது, சட்டப்பூர்வமான பாதுகாப்பிலிருந்து கவர்தல் என்று சொல்லப்படும்.

மேற்படி பிரச்சனையில் "A" என்ற தனது மனைவியை இந்திய நாட்டிலிருந்து வேறு நாட்டிற்கு கொண்டு செல்லவில்லை. எனவே பிரிவு 360 பொருந்தாது. அதுபோல் அந்த மனைவியின் வயதோ 22 ஆகும். கருத்து வேறுபாட்டின் காரணமாக தனது கணவனான "A" என்பவரிடமிருந்து பிரிந்து தனது பெற்றோர் வீட்டில் வாழ்கிறாள். இதனால் அவர் (1) 18 வயதிற்கு மேற்பட்டவர் என்பதும், (2) புத்தி சுவாதீனம் உடையவர் என்பதும் தெளிவு. இங்கு அப்பெற்றோர்தாம் அந்த நேரத்தில் அவளுடைய சட்டப்பூர்வமான காப்பாளர் மற்றும் அவர்களது சம்மதம் பெறாமல் அவளை "A" பலாத் காரமாக அழைத்துச் செல்கிறார் என்றாலும், மேற்கண்ட இரண்டு காரணங்களின் அடிப்படையில் பிரிவு 360-ம் பொருந்தாது.

சரி அடுத்ததாக "A" ஆட்கடத்தல் குற்றம் புரிந்துள்ளாரா என்பதை கவனிக்க வேண்டும். **பிரிவு 362-ஆனது** ஆட்கடத்தல் என்பதற்கு வரையறை தருகிறது. அதன்படி, "ஓர் இடத்திலிருந்து செல்லும்படி ஒருவரை வன் முறையால் கட்டாயப்படுத்துகிற (by force comples) அல்லது வஞ்சனையான முறை எதனாலும் தூண்டுகிற (by any deceitful means induces) எவரொருவரும், அவரை ஆட்கடத்துகிறார் என்று சொல்லப்படுவார்.

ஆனால் வெறும் ஆட்கடத்தல் மற்றும் தண்டிக்கத்தக்கதல்ல. அது பிரிவு 364, 365 அல்லது 366 ஆகிய பிரிவுகளில் கூறப்பட்டுள்ள குற்றக் கருத்துடன் செய்யப்பட்டிருக்க வேண்டும். அதாவது, பிரிவு 364-இன்படி கொலை செய்யும் கருத்துடன் அல்லது பிரிவு 365-இன்படி மறைவாகவும், முறை கேடாகவும் சிறை வைக்கும் கருத்துடன் அல்லது பிரிவு 366-இன்படி பெண் ஒருவரை திருமணம் செய்து கொள்ள கட்டாயப்படுத்தும் கருத்துடன் ஆட்கடத்தல் நடந்திருந்தால் மட்டுமே தண்டிக்கவியலும்.

மேற்படி பிரச்சனையில் இத்தகு குற்றக்கருத்துகள் ஏதுமில்லை. மாறாக தனது மனைவியுடன் மகிழ்ச்சியாக வாழ வேண்டும் என்ற நல்ல கருத்துடனே, "A" என்பவர் அவளை தனது மாமனார் வீட்டிலிருந்து அழைத்துச் செல்கிறார்.

எனவே இங்கு "A" என்பவர் ஆட்கவர்தல், ஆட்கடத்தல் உள்ளிட்ட எந்தக் குற்றமும் புரியவில்லை என்பதே தீர்வு.

தகாத துணிச்சல் மற்றும் கவனமின்மையால் மரணம் விளைவித்தல் (Casuing Death by Rash and Negligent Act)

61. In the course of an altercation between A and B one night, A aimed

a blow with his stick on the head of B. To ward off the blow, B's wife, who had a child on her shoulder, intervened between them. The blow missed its aim, fell on the head of the child which led to its sudden death. Discuss the liability of A. (ஓர் இரவு "A"க்கும் "B"க்கும் தகராறு ஏற்பட்ட போது "A", "B"யின் தலையில் தடியைக் கொண்டு தாக்க முனைந்தார். "B"யின் மனைவி தடுக்க எண்ணி இடைமறித்ததின் விளைவாக குறி தவறி அடி அவர் மனைவி தோள் மீது வைத்திருந்த குழந்தையின் தலை மீது விழுந்து அக்குழந்தை இறந்துவிட்டது. "A"யின் பொறுப்பு நிலையை விவாதிக்க.)

மேற்படி பிரச்சனையில் "A" என்பவர் பிரிவு 304-A-இன்படி தகாத துணிச்சலினாலும் கவனமின்மையினாலும் "B"-யின் குழந்தைக்கு மரணம் விளைவித்த குற்றத்திற்கு பொறுப்பாகிறார் (liable for causing death by rash and negligent act). அப்பிரிவின் கீழான தண்டனைக்கும் உரியவர் ஆவார்.

பிரிவு 304-A-இன்படி, "மரணம் விளைவிக்கும் குற்றமாகாமல், தகாத துணிச்சலினால் அல்லது கவனமின்மையான செய்கை எதனாலும் எவருக்கும் மரணத்தை விளைவிக்கிற எவரொருவருக்கும் இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

கொலைக் குற்றம் பற்றி பிரிவு 300 கூறுகிறது. ஆனால் இது மேற்படி பிரிவு 304-A-க்குப் பொருந்தாது. ஏனெனில் முந்தைய கொலைக்குற்றத்தில் குற்றச் செயல் குற்றக் கருத்துடன் அல்லது அறிவுடன் செய்யப்படுகின்றது. ஆனால் பிரிவு 304-A-இன்படியான குற்றத்தில் அவ்வாறு புரியப்படுவதில்லை. இங்கு தகாத துணிச்சல் அல்லது கவனமின்மையே முக்கியக் கூறாக உள்ளது.

மேற்படி பிரச்சனையில் "A" என்பவர் "B" என்பவரை தடியால் தாக்க முனைந்தார். அச்சமயத்தில் தோளில் குழந்தையுடன் "B"-யின் மனைவி இடையில் வந்ததால், அந்தத் தாக்குதல் குறி தவறி, அக்குழந்தையின் மீது விழுந்து விடுகிறது. இதனால் அக்குழந்தை இறந்துவிடுகிறது. இங்கு அந்தக் குழந்தையைக் கொல்ல வேண்டும் என்று கருத்து அல்லது "B"-யை தாக்குவதன் காரணமாக அக்குழந்தை இறந்துவிடலாம் என்ற அறிவு "A"-க்கு இல்லை. எனவே "A" என்பவர் பிரிவு 304-A-இன்படி தகாத துணிச்சல் மற்றும் கவனமின்மையினால் "B"-யின் குழந்தைக்கு மரணம் விளைவித்த குற்றத்திற்கு பொறுப்பாகிறார். இதற்கு அவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறை வாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

62. B struck violent blows on the head and shoulders of a woman who was carrying an infant child in her arms. One of th eblows fell on the child and killed it while the women received simple injuries. What offence has B committed? (கைக் குழந்தை ஒன்றை தனது கைகளில் பிடித்துக் கொண்டிருந்த ஒரு பெண்ணின் தலையிலும் தோள்களிலும் ஆ என்பவர் பலமான அடிகள் கொண்டு தாக்கினார். அவற்றில் ஒரு

அடி அக்குழந்தையின் மீது விழுந்து, அது இறந்துவிட்டது. அதே சமயத்தில் அந்தப் பெண்ணுக்கு சிறிய காயங்கள் ஏற்பட்டன. இங்கு ஆ செய்த குற்றம் என்ன?)

இப்பிரச்சனையும் முந்தைய பிரச்சனையை ஒட்டி அமைந்த ஒன்றாகும். அதில் குழந்தை மட்டும் இறந்துவிடுகிறது. ஆனால் இதில் குழந்தை இறப்பதோடு மட்டுமல்லாமல், அதன் தாய்க்கும் சிறிய காயங்கள் ஏற்படுகின்றன. எனவே ஆ என்பவர் தகாத துணிச்சலினாலும் கவனமின்மையினாலும் அக்குழந்தைக்கு மரணம் விளைவித்த குற்றத்திற்கு பிரிவு 304-A-இன்படி பொறுப்பாகிறார். இதற்காக அவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப் படும்.

குழந்தையின் தாய்க்கும் சிறிய காயங்களை ஆ என்பவர் தனது அடியினால் விளைவிப்பதால், அவர் தன்னிச்சையாக காயம் விளைவித்த குற்றத்திற்காக பிரிவு 321-இன்படி பொறுப்பாகிறார். இதற்காக அவருக்கு பிரிவு 323-இன்படி ஓராண்டு வரையிலான சிறைவாசம் அல்லது ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்.

எனவே ஆ என்பவர் பிரிவு 304-A மற்றும் பிரிவு 323-இன்படி தண்டனைக்குள்ளாவார்.

வரதட்சணை மரணம் மற்றும் தற்கொலைக்கு உடந்தையாக இருத்தல் (Dowry Death and Abetment of Suicide)

63. A, frequently beats his wife and demands dowry. The wife commits suicide. What offence is committed by A? State the essential ingredients of that crime. ("A" என்பவர் சீதனம் கேட்டு தனது மனைவியை அடிக்கடி அடிக்கிறார். மனைவி தற்கொலை செய்து கொள்கிறார். "A" என்ன குற்றம் செய்துள்ளார்? அக்குற்றத்தின் முக்கிய ஆக்கக் கூறுகளை கூறுக.)

மேற்படி "A" என்பவர் வரதட்சணை கேட்டு அவரது மனைவியை அடிக்கடி அடித்ததால், அவர் தற்கொலை செய்து கொள்கிறார். எனவே இதை வைத்துக் கொண்டு, இது பிரிவு 304-B-யின் கீழான வரதட்சணை மரணம் (Dowry Death) என்பதில் வருமா என்பதை முதலில் காண வேண்டும்.

பிரிவு 304-B-யின்படி, திருமணமான ஏழு ஆண்டுகளுக்குள் தீப் புண்களினால் அல்லது உடற்காயங்களினால் அல்லது இயற்கையான சூழ்நிலைகளில் அல்லாத வேறுவிதமாக ஒரு பெண்ணிற்கு மரணம் ஏற்பட்டிருந்து, அவள் இறப்பதற்கு முன் வரதட்சணை கோருதல் தொடர்பாக அவளது கணவனால் அல்லது அவளது கணவனின் உறவினர்களால் அப்பெண் கொடுமைக்குள்ளாக்கப்பட்டிருப்பதோ, தொந்தரவுக்குள்ளாக்கப் பட்டிருப்பதோ சுட்டிக்காட்டப்படுமானால், அந்த மரணம் "வரதட்சணை மரணம்" எனப்படும்.

மேற்படி பிரச்சனையில் சம்பந்தப்பட்ட பெண்ணிற்கு வரதட்சணை கொடுமை நடந்துள்ளது. "A" என்பவர் அவளை அடிக்கடி அடித்துத் துன்புறுத்தியுள்ளார். அடி பொருக்காமல் மனைவி தற்கொலை செய்து கொள்கிறார். அதாவது மேற்படி பிரிவின்படி அவளது மரணம் இயற்கையான சூழ்நிலைகளில் அல்லாமல் வேறுவிதமாக நிகழ்ந்துள்ளது. அப்பிரிவில் கூறப்பட்டுள்ள அனைத்தும் இங்கு மேற்படி பிரச்சனையுடன் பொருந்தி வருகிறது, ஒன்றைத் தவிர. அதாவது திருமணமான எத்தனை ஆண்டுகளுக்குள் அப்பெண் தற்கொலை செய்து கொள்கிறாள் என்பது மேற்படி பிரச்சனையில் கொடுக்கப்படவில்லை. ஏனெனில் திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்குள் அவள் தற்கொலை செய்து கொண்டிருந்தால்தான் மேற்படி பிரிவு பாயும். வரதட்சணை கொடுமை செய்த அவளது கணவனுக்கு ஏழாண்டுகளுக்கு குறையாத ஆனால் ஆயுள் தண்டனை வரை நீடிக்கக் கூடிய சிறைத்தண்டனை கிடைக்கும்.

எனவே திருமணமாகி ஏழு ஆண்டுகளுக்கு மேற்பட்ட ஒரு கால அளவிற்குள் அப்பெண் தற்கொலை செய்து கொண்டிருந்தால், அவளைத் தற்கொலை செய்து கொள்ள தூண்டிய குற்றத்திற்காக அவளது கணவனான "A" என்பவரை பிரிவு 306-இன்படி தண்டிக்கலாம். பிரிவு 306-இன்படி ஒருவர் தற்கொலை செய்து கொண்டால், அவ்வாறு தற்கொலை செய்து கொள்ளுமாறு தூண்டுபவர்களுக்கும், துணை நிற்பவர்களுக்கும் பத்து ஆண்டுகள் வரையிலான சிறைத்தண்டனையும் அபராதமும் விதிக்கப்படும். எனவே மேற்படி பிரச்சனையில் "A" என்பவர் பிரிவு 306-இன்படி தண்டிக்கப்படத்தக்கவர்; 304-B-படி அல்ல என்பதே இங்கு தீர்வு.

தற்கொலை முயற்சியும் தற்கொலைக்கு உடந்தையாக இருத்தலும் (Attempt to Commit Suicide and Abetment of Suicide)

64. A and B, lovers, decide to commit suicide since their parents do not give consent for their marriage. Both of them jump into a water falls. B, the girl dies but A survives. Whether A has committed any offence. (தங்களது பெற்றோர்கள் திருமணத்திற்கு இசைவு தர மறுப்பதால் காதலர்கள் A-யும் B-யும் தற்கொலை செய்ய முடிவு எடுக்கிறார்கள். இருவரும் ஒரு அருவியில் குதிக்கிறார்கள். அருவியில் B இறக்கிறாள். ஆனால் A உயிர் பிழைக்கிறான். A ஏதேனும் குற்றம் புரிந்தவரா?)

முதற்கண் மற்றவர்களின் உயிரைப் பறிப்பதற்கு எப்படி ஒருவனுக்கு உரிமை இல்லையோ, அவ்வாறே தன் உயிரை போக்கிக் கொள்ளவும் ஒருவனுக்கு உரிமை கிடையாது. அந்த வகையில், "யாராவது தற்கொலை செய்து கொள்ள முயன்று, அதற்கென ஏதாவது ஒரு செயலைப் புரிந்திருந்தால் அதற்கு ஓராண்டு வரையிலான வெறுங்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்" என்று பிரிவு 309 கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில்,

(1) A என்பவர் தற்கொலை செய்ய முயன்று அருவிக்கு வருகிறான்.

(2) அவன் தற்கொலைக்காக அருவியில் குதிக்கிறான்.

எனவே, இது பிரிவு 309-இன்படி தற்கொலை முயற்சியாகும் (attempt to commit suicide). இதற்கு அவனுக்கு இப்பிரிவின்படி தண்டனை உண்டு.

இரண்டாவதாக A என்பவர் தனது காதலியான B-யுடன் அருவியில் குதிக்கிறான். இங்கு அக்காதலி இறந்துவிடுகிறாள். ஆனால் அவன் பிழைத்துக் கொள்கிறான். இதற்கும் A-க்கு தண்டனை உண்டு. அதாவது பிரிவு 306-இன்படி, "ஒருவர் தற்கொலை செய்து கொண்டால், அவ்வாறு தற்கொலை செய்து கொள்ளுமாறு தூண்டுபவர்களுக்கும், துணை நிற்பவர்களுக்கும் பத்தாண்டுகள் வரையிலான சிறைவாசத்துடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும்.

மேற்படி பிரச்சனையில்,

(1) A என்பவர் தனது காதலி B-யும் தன்னுடன் அருவியில் குதித்து தற்கொலை செய்து கொள்ள தூண்டியிருக்கிறார்; துணை நிற்கிறார்.

(2) B-யும் அவ்வாறே அருவியில் குதித்து இறந்துவிடுகிறாள்.

எனவே இது மேற்படி பிரிவு 306-இன்படி தற்கொலைக்கு உடந்தையாக இருந்த குற்றமாகும் (abetment of suicide). எனவே இப்பிரிவின்படியும் A-க்கு தண்டனை உண்டு.

முடிவாக, A என்பவர் பிரிவுகள் 309 மற்றும் 306-இன்படி குற்றம் புரிந்தவராவார் என்பதே இங்கு தீர்வாகும்.

65. A, a women ran to a well stating that she would jump into it. She was caught before she could do so. Whether A is liable for any offence. (A என்னும் ஒரு பெண் கிணற்றினுள் குதிக்கப் போவதாக சொல்லிக் கொண்டு ஓடினாள். அவள் அவ்வாறு செய்யுமுன்னர் அவளை பிடித்துவிட்டனர். ஏதாவது குற்றத்தை செய்த பொறுப்பாவரா?)

நாம் ஏற்கனவே சென்ற பிரச்சனையில் கண்டவாறு, மற்றவர்களின் உயிரைப் பறிப்பதற்கு எப்படி ஒருவனுக்கு உரிமை இல்லையோ, அவ்வாறே தன் உயிரை போக்கிக் கொள்ளவும் ஒருவனுக்கு உரிமை கிடையாது. அந்த வகையில், "யாராவது தற்கொலை செய்து கொள்ள முயன்று, அதற்கென ஏதாவது ஒரு செயலைப் புரிந்திருந்தால் அதற்கு ஓராண்டு வரையிலான வெறுங்காவல் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்" என்று பிரிவு 309 கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில்,

(1) A எனும் பெண் கிணற்றுக்குள் குதிக்கப் போவதாக சொல்லிக் கொண்டு ஓடினாள்.

(2) ஆனால் அவ்வாறு குதித்துவிடவில்லை. அதற்கு முன் அவள் தடுத்து நிறுத்தப்படுகிறாள்.

(3) எனவே தற்கொலைக்கான முயற்சி முழுமையடையவில்லை. இது ஒரு முன்னேற்பாட்டு (preparation) நிலையுடனே நின்றுவிட்டது. முயற்சி (attempt) எனும் நிலைக்கு செல்லவில்லை. மேலும் அப்பெண் அவ்வாறு ஓடும் பொழுது, தன் மனதை மாற்றிக் கொண்டு தற்கொலை செய்து கொள்ளாமல் இருக்கவும் வாய்ப்புண்டு.

எனவே, இது பிரிவு 309-இன்படி ஒரு தற்கொலை முயற்சியல்ல. அவளை தண்டிக்க முடியாது. இது **Ramakka** எனும் வழக்கின் பொருண்மைகளை அப்படியே அடியொற்றி அமைந்த பிரச்சனையாகும். அதனை இந்நூலின் பக்கம் எண். 255-இல் காண்க.

குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அல்லது கொலை முயற்சி (Offences against Children or Attempt to Murder)

66. 'A' with the intention of causing the death of his child of four years old exposes it in a desert place. The death of the child does not ensue. Discuss the liability of 'A'. ("அ" என்பவர் தன்னுடைய நான்கு வயது குழந்தையை சாகடிக்க வேண்டும் என்ற உட்கருத்துடன் பாலை வனத்தில் விட்டுவிடுகிறார். ஆனால் குழந்தை சாகவில்லை. "அ"ன் பொறுப்புநிலையை விவாதிக்க.)

இப்பிரச்சனைக்கு தீர்வு காண நாம இந்திய தண்டனைச் சட்டத்தின் 317-ஆவது பிரிவை கவனித்தல் அவசியமாகும். அப்பிரிவின்படி, "பனிரண்டு வயதிற்கு குறைந்த ஒரு குழந்தையின் தந்தையாக அல்லது தாயாக இருக்கிற அல்லது அத்தகைய குழந்தையை பராமரிக்கிறவர், அக்குழந்தையை முழுவதும் கைவிட்டுவிட வேண்டும் என்ற கருத்துடன் விட்டுவிடுதல் அல்லது அபாயத்திற்கு உள்ளாக்குதல் குற்றமாகும். இதற்கு ஏழாண்டுகள் வரையிலான சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் தண்டனையாக விதிக்கப்படும்."

இப்பிரிவின் கீழ் ஒரு விளக்கம் கொடுக்கப்பட்டுள்ளது. அதன்படி "அபாயத்திற்கு உள்ளாக்குதலின் விளைவாக அந்தக் குழந்தை இறந்து விடுமாயின், குற்றம் செய்தவரை கொலை அல்லது மரணம் விளைவித்த குற்றத்திற்காக (murder or culpable homicide) வழக்கு விசாரணை செய்யலாம். இதை மேற்படி பிரிவு தடுக்காது."

மேற்படி பிரச்சனையில்,

(1) குழந்தையின் வயது நான்கு. எனவே மேற்படி பிரிவின்படி அந்தக் குழந்தையின் வயது பனிரண்டிற்கு குறைவாக உள்ளது.

(2) அக்குழந்தைக்கு தந்தையாக இருக்கிறவர் அதனை பாலைவனம் ஒன்றில் விட்டுவிட்டுச் சென்று விடுகிறார்.

(3) அக்குழந்தையை சாகடிக்க வேண்டும் என்ற கருத்துடன் அவ்வாறு செய்கிறார். இது அக்குழந்தைக்கு அபாயம் விளைவிக்க வேண்டும் என்ற அவரது கருத்தைச் சுட்டிக்காட்டுகிறது.

(4) ஆனால் குழந்தை சாகவில்லை.

(5) எனினும் மேற்படி பிரிவின் 317-இன்படி அவர் குற்றமிழைத்த பொறுப்பிற்கு ஆளாகிறார். இதற்கு அவருக்கு ஏழாண்டுகள் வரையிலான சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்.

(6) ஒருவேளை அக்குழந்தை இறந்துவிட்டிருப்பின், அவரை கொலை அல்லது மரணம் விளைவித்த குற்றத்திற்காக கைது செய்து விசாரணை செய்யலாம்.

மேற்கண்ட இதே பிரச்சனையில் **"தன்னுடைய நான்கு வயது குழந்தையை" (his child of four years)** எனுமிடத்தில் **"ஒரு குழந்தை" (a child)** என்று இடம் பெற்றிருந்தால், மேற்படி பிரிவு பொருந்தாது. ஏனெனில், குழந்தைக்கு தந்தையாக அல்லது தாயாக இருப்பவர்கள் அக்குழந்தையை பராமரிக்காது விடுக்கும்போது ஏற்படும் குற்றச் செயல்பற்றித்தான் மேற்படி பிரிவு 317 கூறுகிறது. எனவே பொதுவாக ஒரு குழந்தையை ஒருவர் மேற் கண்டவாறு பாலைவனத்தில் விட்டுச் சென்றால், அது பிரிவு 307-இன்படி "கொலை முயற்சி" (attempt to murder) குற்றமாகும். இதற்காக அவருக்கு பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையும் அபராதமும் விதிக்கப் படும். இப்படிப்பட்டதொரு நிலைப்பாடு, பிரிவு 307-இன் கீழ் (ஆ) எனும் எடுத்துக்காட்டாக கொடுக்கப்பட்டுள்ளது. (பிரிவு 307-இன் வரையறையை பக்கம் எண். 257-இல் காண்க.)

முறைகேடாக சிறைவைத்தல் (Wrongful Confinement)

67. A causes B to go with him to the terrace of A's house with the help of a ladder. Later, A climbs down and removes th eladder before B could down and B is thereby disabled from coming down from the terrace. Discuss the liability of A. (அ என்பவர் தன்னுடன் ஆ என்பவரை ஒரு ஏணியின் உதவியுடன் வீட்டின் கூரைதளத்திற்கு கூட்டிச் செல்கிறார். பின்னர் அ கீழே இறங்கிவிட்டு ஆ கீழிறங்குவதற்கு முன் ஏணியை எடுத்துவிடுகிறார். இதனால் கூரைதளத்திலிருந்து கீழே இறங்கி வர முடியாதநிலைக்கு ஆ உள்ளாகிறார். அ-இன் பொறுப்புநிலையை விவாதிக்க.)

மேற்படி பிரச்சனையில் அ என்பவர் பிரிவு 340-இன்படி ஆ என்பவரை முறைகேடாக சிறைவைத்த (wrongful confinement) குற்றம் புரிந்த பொறுப்புக்கு ஆளாகிறார்.

பிரிவு 340-இன்படி, ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட எல்லையை மீறிச் செல்ல முடியாத வகையில், எவரையேனும் முறைகேடாக தடுப்பதை

முறைகேடாக சிறைவைத்தல் (முறைகேடாக அடைத்து வைத்தல்) எனப்படும்.

மேற்படி பிரச்சனையில்,

(1) அ தன்னுடன் ஆ என்பவரை கூட்டிக் கொண்டு ஒரு ஏணியின் உதவியுடன் வீட்டின் கூரைதளத்திற்கு செல்கிறார்.

(2) அ என்பவர் அதே ஏணியின் வழியாக கீழே இறங்கி வந்துவிட்டார்.

(3) ஆனால் ஆ இறங்கி வருவதற்கு முன் அந்த ஏணியை அ எடுத்து விட்டார். இதனால் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட எல்லையை மீறி ஆ என்பவரால் செல்ல முடியவில்லை. அதாவது கூரைதளத்தின் ஒரு குறிப்பிட்ட வரம்பிற்குட்பட்ட எல்லையை (circumscribing limits) மீறி வேறு எங்கும் செல்ல இயலவில்லை. ஏணி இருந்தால் மட்டுமே கீழே இறங்கி வர முடியும்.

(4) எனவே அ என்பவர் ஆ என்பவரை முறைகேடாக சிறைவைத்த குற்றத்திற்கு உள்ளாகிறார்.

(5) இதனால் ஆ என்பவருக்கு பிரிவு 342-இன்படி ஓராண்டு வரையிலான சிறைத்தண்டனை கிடைக்கும் அல்லது ஆயிரம் ரூபாய் வரையிலான அபராதம் விதிக்கப்படும் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்.

திருட்டு (Theft)

68. "A" is the paramour of Z's wife. She gives a valuable property which "A" knows to belong to her husband Z. "A" accepts the valuables. Is "A" committed any offence? (Z-ன் மனைவி தனது கள்ளக்காதலன் A-க்கு மதிப்புறு பொருட்களை கொடுக்கிறார். அவை Z-க்கு சொந்தமானவை என்பது தெரிந்தே A அவற்றை பெற்றுக் கொள்கிறார். இதில் A ஏதும் குறறம் புரிந்துள்ளரா?)

இங்கு A என்பவர் பிரிவு 378-இன் வரையறைக்குள் திருட்டுக் குற்றம் புரிந்துள்ளார். (திருட்டின் வரையறை இந்நூலின் பக்கம் எண். 298, 299-இல் காண்க).

மேற்கண்டவாறு நாம் அளித்துள்ள தீர்விற்கு பிரிவு 378-இன் கீழான எடுத்துக்காட்டுகளில் (n), (o) எனும் இரண்டைக் கணுதல் அவசியமாகும். அவற்றில் எடுத்துக்காட்டு (n)-இன்படி, "Z-இன் மனைவியிடமிருந்து A என்பவர் தானம் கேட்கிறார். அவருடைய கணவனான Z-க்குச் சொந்தமானவை என்று A அறிந்திருக்கிற பணம், உணவு மற்றும் உடையை அவள் A-க்குத் தருகிறாள். இங்கு தானமாக கொடுப்பதற்கு வேண்டிய அதிகாரத்தை Z-இன் மனைவி பெற்றிருக்கிறார் என A கருதியிருக்கலாம் என்பது அநேகமாக சாத்தியமானதொன்றாகும். இது A-இன் எண்ணமாகயிருந்தால், A திருட்டைச் செய்தவர் ஆகார்."

எடுத்துக்காட்டு (o)-இன்படி, "A என்பவர் Z -இன் மனைவியின் கள்ளக்

காதலர் ஆவார். மதிப்புடைய பொருள் ஒன்றை அவளது கணவன் Z -க்குச் சொந்தமானது என்றும், அத்தகு பொருளை கொடுப்பதற்கு Z -ன் அதிகாரம் அவளுக்கு இல்லை என்றும் அறிந்திருக்கிற A-க்கு அவள் கொடுக்கிறாள். A-அதை நேர்மையற்ற முறையில் பெற்றுக் கொண்டால், அவர் திருட்டைச் செய்தவர் ஆவார்.

மேற்படி பிரச்சனையிலும் இத்தகு ஒரு நிலைப்பாடு உள்ளது. ஆனால் A-க்கு அத்தகு பொருளைக் கொடுப்பதற்கு Z-இன் மனைவிக்கு Z அதிகாரம் வழங்கியுள்ளாரா, இல்லையா என்பது பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை.

முன் கண்ட எடுத்துக்காட்டு (n)-இன்படி, இங்கு தானமாக கொடுப்பதற்கு வேண்டிய அதிகாரத்தை Z-இன் மனைவி பெற்றிருக்கிறார் என A கருதுவதற்கு சாத்தியம் உண்டு. ஏனெனில் இயலாதவர் ஒருவர் தானம் கோருகிறார். இந்த வீட்டில் கேட்டால் தானம் கொடுக்கப்படலாம் எனும் நம்பிக்கையில், நல்லெண்ணத்தில் A கேட்கிறார். எனவே இங்கு நேர்மையற்ற கருத்து ஏதும் இல்லை. எனவே A திருட்டுக் குற்றம் புரிந்தவர் ஆகார். ஆனால் பிந்தைய எடுத்துக்காட்டு (o)-இன்படி தொடக்கத்திலேயே குற்றக் கருத்து உள்ளது. அதாவது A என்பவருக்கும் Z -இன் மனைவிக்கும் உள்ள உறவு கள்ளக்காதல். எனவே அவருக்கு Z -இன் மனைவி Z -இன் விலையுயர்ந்த பொருளை கொடுப்பதும், அது Z -க்குச் சொந்தமானது என்று அறிந்து கொண்டே அதனை A பெறுவதும் A-யின் நேர்மையற்ற கருத்தை தெள்ளத்தெளிவாக பறைசாற்றுகிறது. எனவே மேற்படி பிரச்சனையில் A என்பவர் திருட்டுக் குற்றம் புரிந்தவர் ஆவார்.

அச்சுறுத்திப் பறித்தல் (Extortion)

69. A threatens to publish a defamatory libel concerning B unless B gives him money. B is thus induced to give money to A. Discuss with reasons the nature of offence committed by A. ('ஆ' என்பவர் பணம் கொடுத்தாரென்று 'ஆ'வைப் பற்றி எழுதப்பட்ட அவதூறை வெளியிடப் போவதாக 'அ' என்பவர் பயமுறுத்துகிறார். 'ஆ' என்பவரும் அவ்வாறு பணம் கொடுக்கத் தூண்டப்படுகிறார். 'அ' செய்த குற்றத்தின் தன்மையை காரணங்களுடன் விவாதிக்க.)

மேற்படி பிரச்சனை, பிரிவு 383-ன் கீழான (a) எடுத்துக்காட்டை அப்படியே அடியொற்றியதாகும். A என்பவர் பிரிவு 383-ன்படி அச்சுறுத்திப பறித்தல் (Extortion) குற்றத்தைச் செய்தவராவார். (மேலும் விளக்கத்திற்கு இந்நூலின் பக்கங்கள் 310 மற்றும் 311-ல் காண்க.)

70. A postman enters a house to deliver a letter. After delivering the letter, he threatens the house owner with a knife and snatches away his wrist watch. What offences the postman has committed? (தபால் காரர் ஒருவர் கடிதம் பட்டுவாடா செய்ய ஒரு வீட்டினுள் நுழைகிறார். கடிதத்தை கொடுத்த பின்னர் அந்த வீட்டின் உரிமையாளரைக் கத்தியைக் கொண்டு

மிரட்டுகிறார். மிரட்டி அவருடைய கைக்கடிகாரத்தைப் பறித்துச் செல்கிறார். தபால்காரர் என்னென்ன குற்றங்களைப் புரிந்ததாக தண்டிக்கப்படலாம்?)

முதற்கண், தபால்காரர் கத்தியைக் காட்டி மிரட்டி, வீட்டு உரிமையாளரிடமிருந்து கைக்கடிகாரத்தை பறித்துச் செல்வது, பிரிவு 383[1]-ன்படி, அச்சுறுத்திப் பறித்தல் குற்றமாகும். இதற்கு அவருக்கு பிரிவு 384-ன் கீழ் மூன்றாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.

அடுத்து, தபால்காரர் அவ்வீட்டினுள் தபால் கொடுக்க நுழைந்தது, சட்டப்படியான செயல். ஆனால் அவ்வாறு சட்டப்படியான முறையில் நுழைந்து, பின்னர் அங்கு சட்ட விரோதமாக தங்கியது, குற்றமொன்றைப் புரியும் கருத்திற்காக (அதாவது அச்சுறுத்திப் பறிக்கும் குற்றக் கருத்திற்காக) ஆகும். எனவே, இது பிரிவு 441[2]-ன் இரண்டாவது பகுதியின்படி, "குற்றமுறு அத்துமீறல்" (Criminal Trespass) ஆகும். அத்தபால்காரர், குற்றமொன்றைப் புரியும் கருத்துடன் அவ்வீட்டினுள் அத்துமீறி நுழைந்துள்ளதால், அவர் பிரிவு 442[3]-ன்படி, வீட்டினுள் அத்துமீறி நுழைந்த (House Trespass) குற்றத்தைச் செய்துள்ளார். இதற்காக அவரை பிரிவு 447-ன்படி, மூன்று மாதங்கள் வரையிலான சிறைத் தண்டனையோ, அல்லது அய்ந்நூறு ரூபாய் வரையிலான அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கலாம்.

மேலும், கைக்கடிகாரத்தை கொடுக்காவிட்டால் கத்தியால் குத்தி விடுவேன் என்று அத்தபால்காரர் மிரட்டியது பிரிவு 503[4] -ன்படி குற்றமுறு மிரட்டலாகும் (Criminal Intimidation). ஏனெனில் அவ்வீட்டின் உரிமையாளர் சட்டப்படி செய்யக் கட்டுப்பட்டிராத செயல் ஒன்றைச் செய்யும்படி (அதாவது கைக்கடிகாரத்தைக் கொடுக்கும்படி) அத்தபால் காரரால் மிரட்டப்படுகிறார். எனவே, அவரை மரணம் அல்லது கொடுங்காயம் விளைவிப்பதாக மிரட்டியதற்காக பிரிவு 506-ன் இரண்டாவது பகுதிப்படி, ஏழாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதித்து தண்டிக்கலாம்.

கொள்ளை (Robbery)

71. A meets Z on the highway, shows a pistol and demands Z's purse. Z in consequence surrenders his purse. What offence A has committed? (Z-அய் A என்பவர் நெடுஞ்சாலையில் சந்திக்கிறார். ஒரு கைத்துப்பாக்கியைக் காட்டி Z-ன் பணப்பையைக் கேட்கிறார். அதன் காரணமாக Z தம் பணப்பையைக் கொடுத்துவிடுகிறார். A என்பவர் எக்குற்றத்தைப் புரிந்துள்ளார்?)

1. பிரிவு 383-ன் வரையறையை இந்நூலின் பக்கம் எண் 310-ல் காண்க.
2. பிரிவு 441-ன் வரையறையை இந்நூலின் பக்கம் எண் 343-ல் காண்க.
3. பிரிவு 442-ன் வரையறையை இந்நூலின் பக்கம் எண் 344-ல் காண்க.
4. பிரிவு 503-ன் வரையறையை இந்நூலின் பக்கம் எண் 384-ல் காண்க.

ஒருவருக்கு தீங்கிழைக்கப்படும் என்ற அச்சத்தை கருத்துடன் உண்டாக்கி அவரிடமிருந்து ஒரு சொத்தை எவருக்கேனும் கொடுக்குமாறு நேர்மையற்ற முறையில் எவரேனும் தூண்டினால், அவர் "அச்சுறுத்திப் பறித்தல்" (Extortion) குற்றத்தைச் செய்தவராவார் என பிரிவு 383 கூறுகிறது.

இவ்வாறு அச்சுறுத்திப் பறிப்பதானது, நேரிடையாக செய்யப் பட்டால் அதாவது அச்சுறுத்துபவர் தன்னால் அச்சுறுத்தப் படுபவருடன் இருந்தால் அது "கொள்ளை" (Robbery) ஆகிறது என பிரிவு 390 கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில், பணப்பையைக் கொடுக்குமாறு Z-யை A நேரடியாக அச்சுறுத்துகிறார். அதாவது Z-க்கு உடனடி காயம் ஏற்படுமென்று அச்சம் கொள்ளச் செய்து மற்றும் அச்சுறுத்திப் பறித்தல் நிகழும் தருணத்தில் அவரோடு உடன் இருந்து கொண்டு பணப்பையை A அச்சுறுத்திப் பறித்திருக்கிறார். எனவே A, Z-அய் கொள்ளையடித்த குற்றத்திற்குள்ளாகிறார்.

கூட்டுக் கொள்ளை (Decoity)

72. A, B and three others go to the house of X for committing robbery. A watches outside as others go inside. When resistance is offered by X, B stabs him to death. Examine the liability of A. (A, B என்பவர்களும் மற்றும் மூன்று நபர்களும் X என்பவரின் இல்லத்திற்கு கொள்ளையடிப்பதற்காக செல்கின்றார். A என்பவர் இல்லத்தின் வெளியில் நின்று காவல் பார்க்கிறார். X-னால் எதிர்ப்பு தெரிவிக்கப்பட்டதும் B அவரைக் குத்தி கொலை செய்கிறார். A-யின் பொறுப்புநிலையை ஆராய்க.)

மேற்படி பிரச்சனையில் A, B மற்றும் மூன்று நபர்கள் X என்பவரின் இல்லத்திற்கு கொள்ளையடிப்பதற்காக சென்றனர் என்று கூறப்பட்டுள்ளது. A, B-யுடன் அந்த மூன்று நபர்களும் சேர்ந்தால் மொத்தம் **அய்ந்து நபர்கள்** ஆகின்றனர். ஒரு கொள்ளை அய்ந்து அல்லது அதற்கு அதற்கு மேற்பட்டவர்களால் கூட்டாக செய்யப்படும்பொழுது, அது பிரிவு 391-ன்படி கூட்டுக்கொள்ளையாகி (Decoity) விடுகிறது. இவ்வாறு கொள்ளையடிக்கையில், B என்பவர், அந்த இல்லத்தின் உரிமையாளரான Z-யை குத்திக் கொலை செய்து விடுகிறான். இப்பொழுது அந்த இல்லத்தின் வெளியில் நின்று காவல் பார்த்துக் கொண்டிருந்த A-யின் பொறுப்புநிலையை ஆராய, நாம் பிரிவு 396-அய் காண வேண்டியுள்ளது.

பிரிவு 396-ன்படி, கூட்டு சேர்ந்து கொள்ளையடிக்கும் அய்ந்து அல்லது அதற்கு மேற்பட்டவர்களில் எவர் ஒருவர் அவ்வாறு கூட்டுக் கொள்ளையடிக்கையில் கொலை செய்தாலும், அவர்களில் ஒவ்வொரு வருக்கும் மரண தண்டனையோ அல்லது ஆயுள் தண்டனையோ அல்லது பத்தாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ விதிக்கப்படும். மேலும் அபராதமும் விதிக்கப்படும்.

எனவே, Z-அய்க் கொலை செய்த B-க்கு மட்டுமல்லாமல், காவல் பார்த்துக்கொண்டிருந்து A-க்கும், மற்றுமுற்ற மூன்று நபர்களுக்கும் பிரிவு 396-ன் கீழ் ஒத்த தண்டனை விதிக்கப்படும். "B-தானே கொலை செய்தார்; எனவே அவருக்கு விதிக்கப்பட்ட அதே தண்டனையை வெளியில் காவல் பார்த்துக் கொண்டிருந்த எனக்கும் எப்படி விதிக்க முடியும்?" என்று A எதிர்வாதம் புரியவியலாது. ஏனெனில் கொள்ளையடிக்கும் பொதுக் கருத்துடன் கூடிய கூட்டுப் பொறுப்பு (joint liability) உள்ளது. இதைத்தான் பிரிவு 396 தெளிவுபடுத்துகிறது. எனவே செயல் வேறுபட்டாலும் தண்டனையில் பாகுபாடு இல்லை.

குற்றமுறு கையாடல் (Criminal Misappropriation)

73. A finds a rupee on the high road, not knowing to whom it belongs. A picks the rupee. Discuss the liability of A. (யாருக்கு உரியது என்று அறியாமல் A ஒரு ரூபாயை நெடுஞ்சாலையில் கிடக்க காண்கிறார். அந்த ரூபாயை A எடுத்துக்கொள்கிறார். A-யின் பொறுப்புநிலையை விளக்குக.)

இங்கு மேற்படி A எக்குற்றத்தையும் புரியவில்லை. ஏனெனில் அவர் அந்த ரூபாயை எடுக்கும்பொழுது, அதன் உரிமையாளர் யார் என்பது அவருக்குத் தெரியாது. ஒருவேளை அந்த ரூபாயின் உரிமையாளர் யார் எனத் தெரிந்திருந்து, அதனை அவரிடம் ஒப்படைக்காமல் தனது சொந்த உபயோகத்திற்காக A செலவழித்திருந்தால், அவரை பிரிவு 403-ன் கீழ், "குற்றமுறு கையாடலுக்காகத்" (Criminal Misappropriation) தண்டிக்கலாம். ஆனால் இங்கு A-க்கு அந்த ரூபாயின் உரிமையாளர் யார் எனத் தெரியாது. ஆகவே அந்த ரூபாயை எடுத்துக் கொண்ட செயல் ஒரு குற்றமாகாது.

ஒரு நபரை குற்றமுறு கையாடலுக்காக தண்டிக்க வேண்டுமெனில், அவர் சம்பந்தப்பட்ட சொத்தை நேர்மையற்ற முறையில் தனது உபயோகத்திற்காக பயன்படுத்தியிருக்க வேண்டும். மேற்படி பிரச்சனையில் அவ்வாறில்லை. எனவே A எக்குற்றமும் புரிந்தவரல்ல (மேலும் அறிந்து கொள்ள பக்கம் எண் 317-ல் விளக்கம் 2-யும் அதன் கீழான எடுத்துக் காட்டுகளையும் கவனிக்கவும்)

74. A finds a valuable ring not knowing to whom it belongs. A sells it immediately without attempting to trace the owner. Is A guilty of any offence? (விலையுயர்ந்த மோதிரமொன்றை அது யாருக்கு சொந்தமானது என்று தெரியாமல் A கண்டெடுக்கிறார். சொந்தக்காரரை கண்டுபிடிக்க முடியாமல், A அதை உடனே விற்று விடுகிறார். A ஏதேனும் குற்றம் செய்தாரா?)

மேற்படி பிரச்சனை பிரிவு 403-ல் விளக்கம் 2-ன் கீழான 3-வது எடுத்துக்காட்டை[1] அப்படியே அடியொற்றியதாகும். அதன்படி A குற்றமுறு கையாடல் குற்றத்தைச் (Criminal misappropriation of property) செய்தவராவார்.

1. பக்கம் எண் 317 மற்றும் 318-ல் காண்க.

குற்றமுறு நம்பிக்கை மோசடி (Criminal Breach of Trust)

75. A, being an executor to the will of a deceased person, dishonestly disobeys the law which directs him to divide the effects according to the will, and appropriate them to his own use.

இங்கு A என்பவன் பிரிவு 405-ன்படி குற்றமுறு நம்பிக்கை மோசடி (Criminal Breach of Trust) எனும் குற்றத்தைப் புரிந்துள்ளான். மேலும் விரிவாக பக்கம் எண் 322-ல் பிரிவு 405-ன் கீழான 1-வது எடுத்துக்காட்டைப் பார்க்கவும்)

76. A gives a gold ring to B and askes him to pledge it for fifty rupees and to give the money to him. B pledges the ring for one hundred rupees and gives A fifty rupees only. Examine the liability of B. (ஒரு மோதிரத்தை A என்பவர் B என்பவரிடம் கொடுத்து அய்ம்பது ரூபாய்க்கு அடகு வைத்து பணத்தை தன்னிடம் எடுத்து வரும்படி கூறுகிறார். B அந்த மோதிரத்தை நூறு ரூபாய்க்கு அடகு வைக்கு A-விடம் அய்ம்பது ரூபாய்தான் கொடுக்கிறார். B-யின் பொறுப்புநிலையை ஆராய்க.)

பிரிவு 405-ன்படி, B குற்றமுறு நம்பிக்கை மோசடிக் (Criminal breach of trust) குற்றத்தைப் புரிந்துள்ளார். பிரிவு 405-ன் பிற்பகுதியில் வரும் வாசகங்களின்படி, ஒரு சொத்தைப் பொறுத்து ஒருவரால் மற்றவரிடம் ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை நிறைவேற்றுவதை ஒட்டி வெளிப்படையாக அல்லது மறைமுகமாக அவர் செய்து கொண்டிருக்கிற சட்டப்படியான ஒப்பந்தத்தையும் மீறி நேர்மையற்ற முறையில் அந்தச் சொத்தை உபயோகிக்கிற அல்லது கையாளுகிற எவரொருவரும் குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றத்தைச் செய்தவராவார்.

இப்பிரச்சனையில், A என்பவர் ஒரு மோதிரத்தை B என்பவரிடம் கொடுத்து அதை அய்ம்பது ரூபாய்க்கு அடகு வைத்து பணத்தைத் தன்னிடம் கொடுக்கக் கோருகிறார். இங்கு அம்மோதிரத்தைப் பொறுத்து A, B-யிடம் ஒப்படைக்கப்பட்ட அய்ம்பது ரூபாய்க்கு அடகு வைக்கும் பொறுப்பை நிறைவேற்றுவதை ஒட்டி A-க்கும் B-க்கும் இடையே மறைமுகமான சட்டப்படியான ஒப்பந்தம் ஏற்பட்டுள்ளது. இதை மீறி B அம்மோதிரத்தை நூறு ரூபாய்க்கு அடகு வைத்து, அதில் அய்ம்பது ரூபாயைத்தான் A-யிடம் கொடுக்கின்றார். இங்கு மேற்படி ஒப்பந்தத்தை மீறி நேர்மையற்ற முறையில் B அம்மோதிரத்தை தனது சொந்த நலனுக்காக (அதாவது மீதமுள்ள அய்ம்பது ரூபாயை தனதாக்கிக் கொள்ளும் பொருட்டு) கையாளுகை செய்துள்ளார். அது நம்பி ஒப்படைக்கப்பட்ட பொறுப்பை மீறிய செயலாகும். எனவே B செய்தது குற்றமுறு நம்பிக்கை மோசடியாகும்.

மேற்படி பிரச்சனை **Gurumakanty Appalasami**[1] எனும் வழக்கின்

1. (1894) 1 weir 464

பொருண்மைகளை அடி-யொற்றியதாகும். மேற்படி வழக்கில், A என்பவர் தோடுகளை (ear rings) அடகு வைத்து உடனாக. ஏழு ரூபாய் பெற்றுக் கொடுக்கும்படி அதை B என்பவரிடம் ஒப்படைக்கிறார். ஆனால் B அவற்றை ஏழு ரூபாய்க்கும் அதிகமான மதிப்பிற்கு அடகு வைத்து, ஏழு ரூபாயை மட்டும் A-க்கு கொடுத்துவிட்டு, மீதியை தனது உபயோகத்திற்காக எடுத்துக் கொள்கிறார். இங்கு B செய்தது, குற்றமுறு நம்பிக்கை மோசடி என்று நீதிமன்றம் கூறியது.

77. A pledges what is pledged to him. Has A committed any crime? ıbstantiate your answer by quoting appropriate provisions of law d reasons therefor. ('அ' என்பவர் தன்னிடம் அடகு வைக்கப்பட்டவற்றை டகு வைக்கிறார். 'அ' ஏதேனும் குற்றமிழைத்துள்ளாரா? தங்களது விடையை நந்த சட்ட வழிமுறைகளையும் காரணங்ளையும் கூறி நிறுவுக.)

இதே பிரச்சனையை வேறொரு வடிவத்தில் நாம் ஏற்கனவே முந்தய பிரச்சனையில் கண்டோம். அங்கு அளிக்கப்பட்ட தீர்ப்பே, இப்பிரச்சனையின் தீர்வாக உள்ளது.

ஒருவர் தனது உடைமையில் ஒப்படைக்கப்பட்ட பிறரது சொத்தை (பொருளை) நேர்மையின்றி தனதாக்கிக் கொண்டால் அல்லது தனது சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்திக் கொண்டால், அது "குற்றமுறு நம்பிக்கை மோசடி" (Criminal breach of trust) ஆகும். இது பிரிவு 405[1] உணர்த்தும் பொருளாகும். மேற்படி பிரச்சனையின்படி A என்பவரிடம் அடகு வைக்கப்பட்ட (அதாவது ஒப்படைக்கப்பட்ட) பொருளை அவர் மீண்டும் அடகு வைக்கிறார். இங்கு அவ்வாறு திரும்பவும் அடகு வைப்பதன் வாயிலாக அதிகப்படியான தொகையைப் பெற்று, அடகு வைத்தவர் கோரிய தொகையை மட்டும் அவரிடம் கொடுத்துவிட்டு, மீதித் தொகையை A தனது சொந்த உபயோகத்திற்காக பயன்படுத்திக்கொண்டால், அவர் குற்றமுறு நம்பிக்கை மோசடிக் குற்றத்தைப் புரிந்தவராவார்.

ஆனால் அடகு வைத்தவர் என்ன தொகைக்கு அடகு வைத்து பணம் பெற்றுத் தரும்படி கூறி பொருள் அடகு பெறுபவரிடம் ஒப்படைத்தாரோ, அதே தொகைக்கு அவர் அப்பொருளை திரும்பவும் வேறு நபர்களிடம் அடகு வைத்து அத்தொகையை அப்படியே அடகு வைத்தவரிடம் ஒப்படைத்தால், அது குற்றமுறு நம்பிக்கை மோசடியாகாது. இப்படிப்பட்டதொரு தீர்ப்பு **Nemichand Parakh**[2] சம்பந்தப்பட்ட வழக்கில் வழங்கப்பட்டது.

ஏமாற்றுதல் (Cheating)

78. A sells milk adultered with water to B, by representing that it is pure

1. பிரிவு 405-ன் வரையறையை இந்நூலின் பக்கம் எண் 321-ல் காண்க.
2. (1938) Mad. 639

milk. Is A guilty of any offence? (பாலில் தண்ணீர் கலந்து A, B க்கு சுத்தமான பால் எனக் கூறி விற்கிறார். A ஏதேனும் குற்றம் புரிந்தவரா?)

A என்பவர் பிரிவு 415-இன்படி ஏமாற்றுதல் குற்றம் புரிந்தவர் ஆவார். (பிரிவு 415-இன் வரையறையை இந்நூலின் பக்கம் எண். 329 மற்றும் 330-இல் காண்க). இப்பிரிவின் கீழான எடுத்துக்காட்டு ஒன்று பின்வருமாறு கூறுகிறது. அதன்படி, "வைரம்" அல்ல என்று தாம் அறிந்திருக்கிற பொருள்களை வைரம் என்று A என்பவர், Z-யிடம் அடகு வைத்து Z-அய் கருத்துடன் வஞ்சிக்கிறார். மற்றும் Z-அய் கடன் தரும்படி அதன் மூலம் நேர்மையற்ற முறையில் இணங்க வைக்கிறார். இங்கு A ஏமாற்றுகிறார்.

இந்த எடுத்துக்காட்டை ஒத்ததுதான் மேற்கண்ட பிரச்சனையும். இதில்,-

(1) பாலில் தண்ணீர் கலந்து, அதைச் சுத்தமான பால் என்று A என்பவர் B-க்கு விற்கிறார்.

(2) கலப்பட பாலை சுத்தமான பால் எனக் கூறி விற்க வேண்டும் என்ற வஞ்சிக்கும் கருத்து A-க்கு உள்ளது.

(3) சுத்தமான பாலுக்குரிய விலையை B-யிடமிருந்து நேர்மையற்ற முறையில் A பெறுகிறார்.

(4) எனவே பிரிவு 415-இன்படி A என்பவர் B-யை ஏமாற்றுகிறார்.

(5) இவருக்கு பிரிவு 417-இன்படி ஓராண்டு வரையிலான சிறைத் தண்டனை அல்லது அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

திருட்டுச் சொத்தைப் பெறுதல் (Receipt of Stolen Property)

79. "A" an adult purchased from a child aged 6 years two pieces of cloth worth Rs. 150 for Rs. 15, and it appeared that the child had taken them from the house of a third person. Discuss the liability of "A" ("A" என்னும் வயது வந்தவர் 6 வயதுடைய ஒரு குழந்தையிடமிருந்து ரூபாய் 150 மதிப்புள்ள இரண்டு துணிகளை ரூபாய் 15க்கு வாங்கினார். அந்தக் குழந்தை இரண்டு துணிகளையும் மூன்றாவது நபர் ஒருவரின் வீட்டிலிருந்து எடுத்ததாக தோன்றுகிறது. "A" **என்பவரின் பொறுப்பு நிலையினை விவாதிக்க.)**

பிரிவு 82-இன்படி ஏழு வயதிற்குட்பட்ட குழந்தையொன்று செய்யும் குற்றச் செயல் எதுவும் குற்றமாவதில்லை. மேற்படி பிரச்சனையில் குழந்தையின் வயது 6 ஆகும். அது இரண்டு துணிகளையும் மூன்றாவது நபர் ஒருவரின் வீட்டிலிருந்து எடுத்துக் கொண்டு வந்துள்ளது. இது திருட்டுச் செயலாகும். எனினும் மேற்படி பிரிவு 82-இன்படி அக்குழந்தையை திருட்டுக் குற்றத்திற்கு உள்ளாக்க முடியாது. ஆனால் ரூ.150/- மதிப்புள்ள அத்துணிகளை ரூ.15/-க்கு வாங்கிய A என்பவர் பிரிவு 411-இன்படி "திருட்டுச் சொத்தைப் பெற்ற" குற்றம்

புரிந்துள்ளார். (பிரிவு 411-இன் வரையறையை பக்கம் எண். 327-இல் காண்க.) ஏனெனில், ஒரு குழந்தை மூன்றாம் நபர் ஒருவரின் வீட்டிலிருந்து துணிகளைக் கொண்டு வந்து கொடுத்துள்ளது என்பதால், A என்பவர் அது திருட்டுச் சொத்து என்பதை அறிந்துள்ளார். எனவே A என்பவருக்கு பிரிவு 411-இன்படி மூன்றாண்டுகள் வரையிலான சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்.

ஆள்மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல் (Cheating by Personation)

80. A falsely represented himself to B at a University examination, got a hall ticket under B's name. Discuss the liability of A. ('அ' என்னும் நபர் தன்னை 'ஆ' என்று பொய்யாக அடையாளம் கூறி பல்கலைக்கழகத் தேர்வு ஒன்றில் 'ஆ' என்பவர் பெயரில் தேர்வு அனுமதிச் சீட்டு வாங்கி 'ஆ' என்பவர் பெயரில் தேர்வு எழுதினார். 'அ' என்பவரின் பொறுப்புநிலையை விவாதிக்க.)

இப்பிரச்சனையில் 'அ' செய்தது, ஆள்மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல் (Cheating by personation) செய்த குற்றமாகும்.

பிரிவு 416-ன்படி, (i) ஒருவர் மற்றொருவராக பாவனை செய்வது (நடிப்பது) (cheating by personation), (ii) ஒருவரை மற்றொருவருக்குப் பதிலாக்குவது; (iii) தன்னை அல்லது மற்றொருவரை மாற்றி வேறொருவர் என்று தெரிவிப்பது, ஆகியவற்றில் ஏதேனும் ஒரு வழியைக் கையாண்டு ஏமாற்றுக் குற்றம் செய்யப்பட்டால், அது ஆள் மாறாட்டம் செய்து ஏமாற்றுதல் என்ற குற்றமாகிறது. இதற்கு பிரிவு 419-ன்படி மூன்றாண்டுக் காலம் வரையிலான சிறை அல்லது அபராதம் அல்லது இரண்டுமோ தண்டனையாக விதிக்கப்படும்.

மேற்படி பிரச்சனையின்படி, 'ஆ' என்ற மாணவன் பல்கலைக்கழக தேர்வு எழுத வேண்டும். ஆனால் 'அ' என்ற மாணவன் தன்னை 'ஆ' என்று பொய்கூறி 'ஆ'-வின் பெயரில் நுழைவுச் சீட்டு பெற்று, 'ஆ' பெயரிலேயே விடைத்தாளை எழுதுகிறார். எனவே இங்கு 'அ' ஆள்மாறாட்டம் மூலம் ஏமாற்றுதல் குற்றம் புரிந்தவராகிறார். அவருக்கு பிரிவு 419-இன்படி தண்டனை விதிக்கப்படும், என்பதே மேற்படி பிரச்சனைக்கு தீர்வாகும்.

மேலும் 'ஆ' பெயரிலேயே விடைத்தாளை எழுதுவதால், பிரிவு 463-இன்படி 'அ' என்பவர் பொய்யாவணம் புனைந்த குற்றத்திற்கும் (Forgery) ஆளாகிறார். 'ஆ'-ஆல் அந்த விடைத்தாள் எழுதப்பட்டதாக நம்பப்பட வேண்டும் என்ற மோசடி செய்யும் கருத்துடன் 'அ' அவ்வாறு எழுதுகிறார். இது பிரிவு 465-இன்படி தண்டிக்கத்தக்கது.

எனவே 'அ' என்பவர் ஆள் மாறட்டம் மூலம் ஏமாற்றுதல் குற்றம் மற்றும் பொய்யாவணம் புனைந்த குற்றத்திற்காக தண்டனைக்குள்ளாவார்.

81. 'A' falsely represented himself as B and obtained a passport under 'B's name. Discuss the liability of A. ("அ" என்னும் நபர் தன்னை "ஆ"

என்று பொய்யாக அடையாளம் கூறி "ஆ" பெயரில் பாஸ்போர்ட் வாங்கினார். "அ" என்பவரின் பொறுப்புநிலையை விவாதிக்க.)

இப்பிரச்சனையும் மேற்சென்ற பிரச்சனையின் அடிப்படையில் அமைந்த ஒன்றாகும். எனவே அப்பிரச்சனைக்கு அளிக்கப் பட்ட தீர்வின்படி, "அ" என்பவர் பிரிவு 416-இன்படி ஆள்மாறட்டம் மூலம் ஏமாற்றுதல் (cheating by personation) குற்றம் செய்தராகிறார். எனவே அவருக்கு பிரிவு 419-இன்படி மூன்றாண்டு வரை சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும். (விளக்கங்களுக்கு இந்நூலின் பக்கம் எண். 422 மற்றும் 423-இல் காண்க.)

சொத்தழித்தல் (Mischief)

82. A causes cattle to enter upon a field belonging to B, intending to cause, and knowing that he is likely to cause damage to B's crop. What offence, if any, is committed by A? ('அ' என்பவர் 'ஆ' என்பவரது பயிருக்கு சேதம் விளைவிக்கக் கூடும் என்று அறிந்திருந்தும் தனது கால்நடைகளை 'ஆ'-க்கு சொந்தமான நிலத்தில் நுழையச் செய்கிறார். 'அ' குற்றம் எதையேனும் புரிந்துள்ளாரா?)

பிரிவு 425-ன்படி, பொதுமக்களுக்கோ அல்லது தனிநபருக்கோ, முறையற்ற நஷ்டம் அல்லது சேதம் (Wrongful loss or damage) விளைவிக்கும் கருத்துடன் அல்லது அநேகமாக விளைவிக்கக்கூடியது என்று அறிந்திருந்து, சொத்தின் மதிப்பு அல்லது அதன் உபயோகத்தை அழித்து விடுகிற அல்லது குறைக்கக்கூடிய செயலைப் புரிந்தாலும் அல்லது தீங்கு விளைவிக்கும் செயலைப் புரிந்தாலும் "சொத்தழித்தல்" (mischief) செய்யப் படுவதாக கருதப்படும்.

மேற்படி பிரச்சனையில், 'அ' என்பவர் 'ஆ' என்பவரது பயிருக்கு சேதம் விளைவிக்கக்கூடும் என்று அறிந்திருந்தும், தனது கால்நடைகளை 'ஆ'-க்கு சொந்தமான நிலத்தில் நுழைய செய்கிறார். இது மேற்படி பிரிவு 425-ன் வரம்பிற்குள் வருவதால், மேற்படி 'அ' சொத்தழித்தல் குற்றத்தைச் செய்தவர் ஆவார். மேற்படி பிரச்சனை **Palaniandi Muthirian v. Ramaswamy Reddi**[1] எனும் வழக்கின் பொருண்மைகளை அப்படியே அடியொற்றியதாகும்.

83. A voluntarily throws into a river a ring belonging to Z with the intention of thereby causing wrongful loss to Z. Whether A committed any offence?

A என்பவர் சொத்தழித்தல் (mischief) குற்றம் புரிந்துள்ளார். (பக்கம் எண் 337-ல் பிரிவு 425-ன் கீழான 3-வது எடுத்துக்காட்டை கவனிக்கவும்.)

84. A having joint property with Z in a horse, shoots the horse and kills.

1. A.I.R. 1942 Mad. 724 : 1944 Cri. L.J. 140

What offence has A committed? (குதிரை ஒன்றின் மீது Z-வுடன் கூட்டுச் சொத்துரிமையை கொண்ட A என்பவர் அக்குதிரை சுட்டுக் கொன்று விடுகிறார். A என்ன குற்றம் புரிந்துள்ளார்?)

A என்பவர் பிரிவு 425-இன்படி சொத்தழித்தல் (Mischief) குற்றம் செய்தவர் ஆவார். அதற்கான காரணங்கள் வருமாறு:-

(1) மற்றொருவரின் சொத்திற்கு முறையற்ற நட்டம் அல்லது சேதம் விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் அதற்கு அழிவை விளைவிக்கிற எவரும் சொத்தழித்தல் குற்றம் புரிந்தவர் ஆவார் என்பது பிரிவு 425-இன் சுருக்கம் ஆகும்.

(2) இப்பிரிவின் கீழான 1-ஆவது விளத்தின்படி, அழிக்கப்பட்ட சொத்தின் சொந்தக்காரருக்கு நட்டம் அல்லது சேதம் விளைவிக்க வேண்டும் என்னும் கருத்தை குற்றவாளி கொண்டிருக்க வேண்டும் என்பது இந்த "சொத்தழித்தல்" குற்றத்திற்கு முக்கியமானதன்று. சொத்தழித்தலால் சம்பந்தப் பட்டவருக்கு முறையற்ற நட்டம் அல்லது சேதம் விளைவிக்க கருத்து கொண்டிருந்தால் அல்லது அநேகமாக விளைவிக்கக் கூடும் என்று அறிந்திருந்தால் அதுவே போதுமானது.

(3) அதுபோல் 2-ஆவது விளக்கத்தின்படி, "சொத்தழித்தல் செயலைச் செய்பவருக்கு அல்லது அவருக்கும் மற்றவர்களுக்கும் கூட்டாகச் சொந்தமாக இருக்கிற சொத்தைப் பாதிக்கும் ஒரு செயல் மூலமும் சொத்தழித்தல் செய்யப்படலாம்.

(4) இங்கு ஒரு குதிரை, A மற்றும் Z-க்கு கூட்டாக சொந்தமானது ஆகும். அதாவது அதில் Z-க்கும் சொத்துரிமை உள்ளது.

(5) A என்பவர் அதனைச் சுட்டுக் கொன்று விடுகிறார். இங்கு அதனை அழிக்க வேண்டுமென்ற கருத்து அவருக்கு இருந்ததா, இல்லையா என்பதை 1-ஆம் விளக்கத்தின்படி கவனிக்க வேண்டியதில்லை. குதிரையை சுட்டுக் கொல்வதால் Z -க்கு முறையற்ற நட்டம் உண்டாகியுள்ளது. இவ்வாறு நட்டம் உண்டாகும் என்பது A -இன் அறிவிற்குட்பட்டது.

(6) எனவே A என்பவர் சொத்தழித்தல் குற்றம் செய்தவர் ஆவார்.

(7) மேற்படி பிரச்சனையில் குதிரை ஒன்றை A என்பவர் சுட்டுக் கொன்று சொத்தழித்தல் செய்துள்ளதால், அவருக்கு பிரிவு 429-இன்படி அய்ந்தாண்டுகள் வரையிலான் சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்.

கன்னமிடுதல் (House-breaking)

85. A commits house-trespass by entering Z's house through an open window. For what offence is A liable? (A என்பவர் B என்பவருடைய வீட்டினுள் திறந்த ஜன்னல் ஒன்றின் வழியாக அத்துமீறி நுழைகிறார். A என்ன குற்றத்திற்கு பொறுப்பாவார்?)

ஒரு வீட்டில் அனுமதி பெற்று நுழைவதே முறை. அவ்வாறு அனுமதி பெறாமல் அவ்வீட்டினுள் வசிப்பவர்களை தொந்தரவு செய்யும் கருத்துடன் நுழைந்தால் அது 'வீட்டினுள் அத்துமீறி நுழைதலாகும்' (House-Trespass). அவ்வாறு அத்துமீறி நுழைதலானது, அவ்வீட்டின் ஜன்னல் வழியாகவோ அல்லது சுவரேறிக் குதித்தோ அல்லது பூட்டை உடைத்துக் கொண்டோ நுழைவதாக இருப்பின், அது 'கன்னமிடுதல்' என்ற குற்றமாகும் என பிரிவு 445 கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் A என்பவர் B என்பவரின் வீட்டினுள் திறந்த ஜன்னல் ஒன்றின் வழியாக அத்துமீறி நுழைகிறார். இங்கு வீட்டினுள் அத்துமீறி நுழைந்த குற்றம் ஏற்கனவே நிகழ்ந்துள்ளது. அதனுடன் அவ்வீட்டின் ஜன்னல் வழியாக A உள் நுழைந்ததால், அவர் மேற்படி பிரிவு 445-ன்படி, 'கன்னமிடுதல்' குற்றத்தைப் புரிந்தவராகிறார். எனவே எங்கும் அனுமதி பெற்று, அதன் வாசல் வழியாக உள் நுழைவதும் வெளியேறுவதுமே சட்டப்படியான முறையாகும்.

86. A in order to commit theft, enters Z's house through a window which had no bars and shutters. Has A committed any offence? (A திருடுவதற்காக Z-ன் வீட்டில் கம்பிகளும், கதவுகளும் இல்லாத ஜன்னல் வழியாக நுழைகின்றார். A ஏதாவது குற்றம் செய்தவராவாரா?)

இப்பிரச்சனையும் முந்தைய பிரச்சனையைப் போன்றதே. இங்கு முதற்கண் A என்பவர் Z-இன் வீட்டில் அத்து மீறி நுழைந்த (house trespass) குற்றத்தை பிரிவு 442-இன்படி செய்தராகிறார். இதற்கான தண்டனையை பிரிவு 448 கூறுகிறது. ஆனால் மேற்படி பிரச்சனையில் திறந்த ஜன்னல் வழியாக A என்பவர் Z-இன் வீட்டில் அத்துமீறி நுழைகிறார். இதனால் இது பிரிவு 445-இன்படி வீட்டை உடைத்து நுழைதல் அதாவது வீட்டை கன்னமிடுதல் (house breaking) குற்றம் புரிந்தவராகிறார். இதற்கான தண்டனையை பிரிவு 453 கூறுகிறது. அதன்படி A என்பவருக்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைவாசம் மற்றும் அபராதம் தண்டனையாக விதிக்கப்படும். (பிரிவுகளின் விளக்கத்திற்கு இந்நூலின் பக்கம் எண். 344 மற்றும் 346-இல் காண்க)

87. A intending to steal jewels from B's house enters B's house at midnight through the tiled roof by removing a few tiles. Having so entered the house, A is shocked to find B about to commit suicide by hanging. Immediately he intervenes, saves B, pacifies him and then goes away without stealing. What offence has A committed? (ஆ-இன் வீட்டிலிருந்து நகைகளை திருடும் கருத்துடன் அ, ஆ-இன் வீட்டினுள் நள்ளிரவில், சில ஓடுகளைப் பிரிந்து அந்த ஓட்டுக் கூரையின் வழியாக நுழைகிறான். அவ்வாறு நுழைந்த பிறகு, ஆ என்பவர் தூக்கிலிட்டு தற்கொலை செய்து கொள்ளவிருப்பதை கண்டு அதிர்ச்சியடைகிறான். அவன் உடனே தலையிட்டு, ஆ-வைக் காப்பாற்றி சமாதானப்படுத்துகிறான். பின் திருடாமல் சென்று விடுகிறான். அ என்ன குற்றம் புரிந்துள்ளார்?)

மேற்படி பிரச்சனையின்படி, அ என்பவர் பிரிவு 457-இன்படி இரவில் கன்னமிடுதல் குற்றம் (house breaking by night in order to commit an offence) புரிந்தராகிறார். காரணங்கள் வருமாறு:-

(1) பிரிவு 457-இன்படி, சிறைத்தண்டனையுடன் தண்டிக்கத்தக்க குற்றமொன்றைப் புரிவதற்காக இரவில் ஒளிந்து அத்துமீறல் அல்லது இரவில் கன்னமிடுதலைச் செய்யும் எவரொருவரும், அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைத்தண்டனையும் அபராதமும் விதித்துத் தண்டிக்கப்படத் தக்கவராவார். செய்யக் கருதப்பட்ட குற்றமானது திருட்டாக இருப்பின், சிறைத்தண்டனையின் காலஅளவு 14 ஆண்டுகளுக்கு நீட்டிக்கப்படலாம். (2) மேற்படி பிரச்சனையில் அ என்பவர் ஆ-இன் வீட்டில் இரவில் அவரது வீட்டின் கூரை ஓடுகளைப் பிரித்து உள்ளே நுழைகிறான். எனவே இது இரவில் கன்னமிடுதல் குற்றமாகும். (3) அந்த வீட்டில் குற்றமொன்றை புரிவதற்காக (அதாவது திருடுவதற்காக) அ என்பவர் கன்னமிட்டுள்ளார். (4) ஆனால் திருடவில்லை. (5) எனவே பிரிவு 457-இன்படி அவருக்கு அய்ந்தாண்டுகள் வரையிலான சிறைவாசத்துடன் அபராதமும் தண்டனையாக விதிக்கப்படும். (6) இங்கு ஆ-வை தற்கொலை செய்து கொள்வதிலிருந்து காப்பாற்றி, அவரை அமைதிப்படுத்தியதால், அ-இன் குற்றச் செயல் மறைந்து விடாது. இருப்பினும் அ-விற்கெதிரான வழக்கை நீதிமன்றம் இரக்கத்துடன் அணுகி, தண்டனையின் அளவை குறைக்கலாம்.

பொய்யாவணம் புனைதல் (Forgery)

88. A without B's authority writes a letter and signs it in B's name certifying A's character, intending thereby to obtain a job under C. Has A committed any offence? ('அ' என்பவர் 'ஆ'-வின் அதிகாரமின்றி 'ஆ'-வின் பெயரால் கடிதமொன்று எழுதி கையெழுத்திட்டு 'இ' என்பவரின் கீழ் வேலை ஒன்று பெறுவதற்காக 'அ' என்பவரின் நடத்தைக்கு சான்றளிக்கின்றார். 'அ' ஏதாவது குற்றம் செய்துள்ளாரா?)

இங்கு 'அ' செய்தது பிரிவு 463-ன்படி, பொய்யாவணம் புனைதல் குற்றமாகும். மேற்படி பிரச்சனையில், 'அ' என்பவர் பிரிவு 463(2)(d)-ன்படி, வெளிப்படையான அல்லது உட்கிடையான ஒப்பந்தம் செய்யும் கருத்துடன் (இங்கு 'இ' என்பவரின் கீழ் வேலை ஒன்று பெறுவதற்கான) 'ஆ'-வின் அதிகாரமின்றி, 'ஆ'-வின் பெயரால் கடிதமொன்று எழுதி கையெழுத்திட்டு, தனது நடத்தைக்கு 'ஆ' சான்றளிப்பதாக தயாரித்துக் கொள்கிறார். அது 'அ'-வின் பொய்யாவணம் புனைந்த குற்றமாகும். பிரிவு 464-ன் முதலாவது பத்திப்படி, 'அ' பொய்யாவணம் புனைந்தவராவார். இவருக்கு பிரிவு 465-ன்படி இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படும். (சட்டப்பிரிவுகளின் விரிவான விளக்கத்திற்கு பக்கம் எண் 349-ல் காணவும்.)

89. A signs the name of a well known artist on a picture painted by

himself and exhibits it for sale. Examine the liability of A. ('அ'என்பவர், தன்னால் வரையப்பட்ட ஒரு ஓவியத்தின் மீது பிரபலமான கலைஞர் ஒருவர் பெயரை கையொப்பமாக இடுகிறார். அதன் ஓவியத்தை விற்பனைக்காகவும் காட்சிப்படுத்துகிறார். 'அ'-வின் பொறுப்புநிலையை ஆராய்க.)

இது பொய்யாவணம் புனைந்த குற்றமாகும் (Forgery). பிரிவு 464-ன்படி, எவரால் ஒரு ஆவணம் கையொப்பமிடப்படவில்லையோ அது அவரால் கையொப்பமிடப்பட்டதாக நம்பும்படிச் செய்யும் கருத்துடன் நேர்மையற்ற வகையில், கையொப்பமிடும் ஒருவர், பொய்யாவணம் புனைந்த குற்றத்தைப் புரிந்தவராகக் கருதப்படுவார்.

இங்கு, A என்பவர் தான் வரைந்த ஓவியத்தை ஒரு பிரபலமான கலைஞர் வரைந்த ஒன்றாக பிறர் நம்ப வேண்டும் என்ற கருத்துடன் அவரது பெயரை கையொப்பமிட்டுள்ளார். அத்தோடு மட்டுமல்லாமல் அதை விற்பனைக்காகவும் காட்சிப்படுத்தியுள்ளார். இதிலிருந்து சட்ட விரோதமான வழியில் பணம் சம்பாதிக்க வேண்டும் என்ற A-யின் நேர்மையற்ற கருத்தும் புலனாகிறது. எனவே A பொய்யாவணம் புனைந்த குற்றத்திற்கு பொறுப்பாவார். பிரிவு 465-ன்படி, A-க்கு இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைத் தண்டனை விதிக்கப்படலாம்.

90. A, a trader, in anticipation of insolvency, lodges effects with B for A's benefit and with intent to defraud his creditors, and in order to give a colour to the transaction, writes a promissory note binding himself to pay to B a sum for value received, and ante dates the note, intending that it may be believed to have been made before A was in the point of insolvency. Discuss the liability of A. ('அ' என்னும் வணிகர் தம் நொடிப்புநிலையை எதிர்பார்த்து 'அ'-வின் நன்மைக்காகவும், அவரது கடன்காரர்களை மோசடி செய்யும் உட்கருத்துடனும் 'ஆ'-விடம் சொத்துக்களை கொடுத்து வைக்கிறார். அந்த நடவடிக்கைக்கு ஓர் உண்மைத் தோற்றம் தரும் பொருட்டு ஒரு பெறுமானத்தைப் பெற்றுக் கொண்டதற்காக 'ஆ'-வுக்கு ஒரு தொகையைச் செலுத்துவதற்கு தம்மைக் கட்டுப்படுத்திக் கொண்டு, கடனுறுதிச் சீட்டு எழுதி, மற்றும் அவர் நொடிப்புநிலைக்கு முன்பு அது செய்யப்பட்டதாக நம்பவைக்கும்படி உட்கருத்துடன் அதன் உறுதிச் சீட்டில் முன் தேதியிடுகிறார். 'அ'-வின் பொறுப்புநிலையை விவாதிக்க.)

மேற்படி பிரச்சனை பொய்யாவணம் தயாரித்தலுக்குண்டான (making false document) வரையறையை விளக்கும் 464-வது பிரிவில் விளக்கம் 1-ன் கீழான எடுத்துக்காட்டு (c)-யை அப்படியே அடியொற்றியதாகும். மேற்படி பிரச்சனையின் பொருண்மைகளின்படி, A (அதாவது 'அ') பொய்யாவணம் புனைந்த (forgery) குற்றத்திற்குள்ளாவார். ஏனெனில் A என்பவர், தனது கடன்காரர்களை மோசடி செய்யும் கருத்துடன் தனது நொடிப்புநிலைத் தறுவாய்க்கு முன்பே, தாம் B-க்கு கடனுறுதிச் சீட்டு ஒன்றை எழுதிக் கொடுத்து கடன் பெற்றுக் கொண்டதாக தனது கடன்காரர்களை நம்ப

வைக்கும் கருத்துடன், அதில் முன்தேதியிடுதல், பிரிவு 464-ன் முதலாவது பகுதியின்படி,[1] பொய்யாவணம் புனைதல் குற்றமாகும். எனவே, அவருக்கு பிரிவு 465-ன் கீழ், இரண்டாண்டுகள் வரையிலான சிறைத் தண்டனையோ, அல்லது அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்பட வேண்டும்.

91. A signs his own name on a bill of exchange intending that it may be believed that the bill was drawn by another person of the same name. Discuss the liability of A. (ஒரு மாற்றுச் சீட்டில் அ என்பவர் தனது பெயரில் ஆனால் அதே பெயரைக் கொண்ட மற்றொரு நபரால் வரையப்பட்டதாக நம்பப்பட வேண்டும் என்று கருத்துடன் கையொப்பமிடுகிறார். அ-ன் பொறுப்புநிலையை விவாதிக்க.)

பிரிவு 464, பொய்யாவணம் தயாரித்தலை (making a false document) விளக்குகிறது. அதன் கீழான 1-ஆவது கூறின்படி, எவரால் ஒரு ஆவணம் கையொப்பமிடப்படவில்லையோ அது அவரால் கையொப்பமிடப்பட்டதாக நம்பும்படி செய்யும் கருத்துடன் நேர்மையற்ற வகையில், கையொப்பமிடும் ஒருவர் பொய்யாவணம் தயாரித்த குற்றம் செய்தவர் ஆவார். இது பிரிவு 463-இன் வரையறைக்குள் பொய்யாவணம் புனைந்த (forgery) குற்றமாகிறது.

மேற்படி பிரச்சனையில், அ என்பவர் மாற்றுச் சீட்டு ஒன்றை தனது பெயரில் கையொப்பம் இடுகிறார். ஆனால் அதே பெயரைக் கொண்ட மற்றொருவரால் அது வரையப்பட்டதாக நம்பப்பட வேண்டும் என்ற கருத்துடன் அதில் கையொப்பமிடுகிறார். இதில் அ என்பரின் நேர்மையற்ற கருத்து புலனாகிறது. எனவே அ என்பவர் பிரிவு 464 உடன் இணைந்து வாசிக்கத்தக்க பிரிவு 463-இன்படி பொய்யாவணம் தயாரித்த மற்றும் புனைந்த குற்றம் செய்தராகிறார். இவருக்கு பிரிவு 465-இன்படி இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்.

அவதூறு (Defamation)

92. A, the chairman of a Municipal Council publicly defamed the character of a nurse of a local hospital and wrote a letter of complaint to the civil suregon. The chairman was prosecuted for defamation. Decide. (A என்கிற நகராண்மை கழகத் தலைவர் ஒரு உள்ளூர் மருத்துவமனையில் நோயாளிகளை குணமாக்கும் பெண்ணின் நன்மதிப்பை வெளிப் படையாக பழித்துக் கூறி, பொதுத்துறை சார்ந்த அறுவை மருத்துவருக்கு ஒரு குற்றச்சாட்டுக் கடிதம் அனுப்பினார். தலைவர் அவதூறு குற்றத்திற்கு உள்ளாகிறார். தீர்க்க.)

இந்திய தண்டனைச் சட்டத்தின் 499-வது பிரிவு 'அவதூறு'

1. பிரிவு 464, இந்நூலின் 381-வது பக்கத்தில் விளக்கப்பட்டுள்ளது. அப்பிரிவின் கீழான முதலாவது பகுதியை மேற்படி தீர்வின் ஒரு அங்கமாக தேர்வு விடைத் தாளில் சுட்டிக்காட்ட வேண்டும். அப்போதுதான் பூரண மதிப்பெண்கள் கிட்டும்.

(defamation) குற்றத்தைப் பற்றிக் கூறுகிறது. அதன் முக்கியமான உட்கூறுகள் வருமாறு:

(1) ஒரு நபரைப் பற்றி பழிச்சாட்டுகிற (imputation) எதனையும் செய்தல் (making) அல்லது வெளியிடல் (publishing); (2) அத்தகு பழிச் சாட்டுதல் கீழ்வரும் முறையில் செய்யப்பட்டிருக்க வேண்டும். (i) பேச்சால் ; (ii) எழுத்தால்; (iii) சைகையால் (signs); (iv) காட்சிக் பொருள்காளால் (visible representations); (3) அத்தகு பழிச்சாட்டுதல் ஒருவருடைய நற்பெயருக்கு தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் அல்லது அத்தகைய தீங்கு ஏற்படும் என்று அறிந்திருந்து அல்லது நம்பக் காரணம் பெற்றிருந்து செய்யப் பட்டிருக்க வேண்டும்.(4) அது பிரிவு 499 கூறும் பத்து விதிவிலக்குகளில் ஏதேனும் ஒன்றின் கீழ் வருதல் கூடாது.

நமது மேற்படி பிரச்சனையில் A என்கிற நகராண்மைக் கழகத் தலைவர் மீது அவதூறு குற்றத்திற்கான வழக்கினைத் தொடுத்தது சரியே. ஏனெனில், அவதூறு குற்றத்திற்கான முதல் உட்கூறின்படி, அவர் உள்ளூர் மருத்துவ மனையில் நோயாளிகளை குணமாக்கும் பெண்ணின் நன்மதிப்பைப் பழித்துள்ளார். அதை இரண்டாவது உட்கூறின்படி பேச்சால் செய்துள்ளார். மேலும் அதனை பொதுத்துறை சார்ந்த அறுவை மருத்துவருக்கு குற்றச் சாட்டு கடிதம் மூலம் அனுப்பியிருப்பதால் எழுத்தாலும் அப்பெண்ணின் நன்மதிப்பை பழித்துள்ளார். மூன்றாவது உட்கூறின்படி ஒரு பெண்ணின் நன்மதிப்பைப் பழித்தால், அது அவளது வாழ்க்கையையே கெடுக்கும் என்பது எந்தவொரு சாதாரண மனிதரும் அறிந்த விஷயமாகும். நமது பிரச்சனையில், A என்பவர் ஒரு நகராண்மை கழகத் தலைவர். எனவே, மேற்படி பழிச்சாட்டுதல் அந்நர்ஸின் நப்பெயரை பாதிக்கும் என்ற விஷயத்தை அறியாதவராக அவரைக் கருதமுடியாது. ஆகவே தன்னுடைய பழிச் சாட்டுதல் அப்பெண்ணின் நற்பெயருக்கு (நன்மதிப்பிற்கு) தீங்கு விளைவிக்கும் என்பதை அறிந்தவராகவே A-யைக் கருத வேண்டும். மேலும் இது நான்காவது உட்கூறின்படி, பிரிவு 499 கூறும் பத்து விதிவிலக்குகளில் எதன் கீழும் வரவில்லை. அதாவது, முதல் விதிவிலக்கின்படி, இது பொது நலன் கருதி கூறப்பட்ட பழிச்சாட்டாக தெரியவில்லை. ஏனெனில், ஒரு நர்ஸின் நற்பெயரை பழிப்பதால் பொதுநலன் மேம்பட்டுவிடும் என்பது ஏற்றுக் கொள்ளக் கூடியதாக தெரியவில்லை. இரண்டாவது விதிவிலக்கின் படி, பொது ஊழியர்கள் பொதுப்பணிகள் ஆற்றும்பொழுது அவர்களது நடத்தையைப் பற்றி அபிப்பிராயம் தெரிவிக்கலாம். ஆனால் அது நல்லெண்ணத்துடன் (good faith) இருக்க வேண்டும். மேற்படி பிரச்சனையில் A நல்லெண்ணத்துடன் செயல்பட்டார் அல்லது பழித்துக் கூறினார் என்று எங்கும் கூறப்படவில்லை. 3 முதல் 10 வரையுள்ள விதிவிலக்குகள் மேற்படி பிரச்சனைக்கு தொடர்புடையதல்ல. மேலும் "நல்லெண்ணம்" என்ற கூறு நாம் ஏற்கனவே கண்டது போல் A-க்கு கிடையாது. எனவே, நர்ஸின் நன்மதிப்பிற்கு அவதூறு விளைவித்த குற்றத்திற்காக, A தண்டிக்கப்படக் கூடியவரே.

93. A draws a picture of Z running away with B"s watch, intending it to

be believed that Z stolen B's watch. Disclose the offence. (Z என்பவர் B-யின் கடிகாரத்தைத் திருடினார் என்று நம்பும்படி செய்யும் கருத்துடன் B-யின் கைக்கடிகாரத்துடன் Z ஒடுவதாக ஒரு சித்திரத்தை A வரைகிறார். இது என்ன குற்றம் என்பதை சுட்டிக்காட்டுக.)

மேற்கண்ட சித்திரம் பிறருடைய மதிப்பில் Z என்பவரின் ஒழுக்கத்தை மற்றும் நாணயத்தை தாழ்த்துவதாக உள்ளதால், A என்பவர் Z-ன் நற்பெயருக்கு அவதூறு விளைவித்த குற்றத்திற்கு ஆளாவார். இங்கு அவதூறு (defamation) குற்றம் நிகழ்ந்துள்ளது. (பிரிவு 499-ன் விளக்கம் எண் 4-அய்க் காணவும். பக்கம் எண் 377-ல் காண்க.)

94. A says of a book published by Z, "I am not surprised that Z's book is foolish and indecent for he is a weakman and libertine." What is the offence committed by A? (A என்பவர் Z என்பவர் வெளியிட்டுள்ள ஒரு புத்தகத்தைப் பார்த்து, "Z என்பவரின் புத்தகம் முட்டாள்தனமாகவும், அசிங்கமாகவும் இருப்பதனால், அவர் ஒரு திறமையற்றவராகவும், காமாந்தகாராகவும் இருப்பதில் நாம் ஆச்சரியமடைய ஏதுமில்லை" என்று கூறுகிறார். A புரிந்த குற்றம் யாது?)

A என்பவர் அவதூறு குற்றத்தைப் (defamation) புரிந்துள்ளார். மேலும் இது விதிவிலக்குகள் எதன் கீழும் வரவில்லை. பிரிவு 499-ன் 6-வது விதிவிலக்கு, ஒரு படைப்பை வழங்கிப் பொதுமக்களின் தீர்ப்புக்காக விட்டுவிடுகிற படைப்பாளி ஒருவரது படைப்பின் தகுதி பற்றி அல்லது அப்படைப்பின் பண்பு (character) பற்றி நல்லெண்ணத்தோடு ஒரு அபிப்பிராயத்தை தெரிவிப்பது அவதூறு ஆகாது, என்று கூறுகிறது. ஆனால் நமது மேற்படி பிரச்சனையில் A என்பவர் Z வெளியிட்ட புத்தகத்தைப் பற்றி மட்டும் தனது அபிப்பிராயத்தை தெரிவித்திருந்தால் பரவாயில்லை. ஆனால் அதை எழுதிய Z-ன் ஒழுக்கத்தையும், அறிவின் பண்பையும் தாழ்த்தும் வகையில் அவரையும், A பழிச்சாட்டியுள்ளார். எனவே A அவதூறு குற்றம் புரிந்தவராகிறார். (பக்கம் எண் 379-ல் காண்க.)

குற்றமுறு மிரட்டல் (Criminal intimidation)

95. A, for the purpose of inducing B to desist from prosecuting a civil suit, threatens to burn B's house. What is the liability of A? ('அ' தன் மீது 'ஆ' என்பவர் ஓர் உரிமை இயல் வழக்கைப் போடாமல் தடுப்பதற்காக அவருடைய வீட்டை எரித்து விடுவேன் என்று 'ஆ'-வை மிரட்டுகிறார். 'அ'-வின் பொறுப்புநிலை என்ன?)

ஒருவருடைய உடலுக்கும், உடைமைக்கும் நற்பெயருக்கும் தீங்கு விளைவிக்க வேண்டும் என்ற கருத்துடன் மிரட்டினால், அது குற்றமுறு மிரட்டலாகும் (Criminal intimidation) என பிரிவு 503 கூறுகிறது.

மேற்படி பிரச்சனையில் தன் மீது உரிமையியல் வழக்கு தொடுத்தால்,

B-யின் வீட்டை எரித்துவிடுவேன், என A மிரட்டுகிறார். இங்கு B-யின் உடைமைக்கு தீங்கிழைக்கப்படவிருப்பதாக அச்சுறுத்தப்படுகிறது. எனவே, மேற்படி பிரிவு 503-ன்படி, A குற்றமுறு மிரட்டல் குற்றத்தைப் புரிந்தவ ராகிறார். எனவே, அவர் பிரிவு 506 -ன்படி, தண்டிக்கப்படக் கூடியவர்.

குற்றமுறு மிரட்டல் மற்றும் பிறன்மனை புணர்தல் (Criminal Intimidation and Adultery)

96. A threatens B that he would expose her love letters to her husband unless she consents to have sexual intercourse with him. She consents. A has sexual intercourse with B. Discuss the liability of A. (அ என்பவன் ஆ என்பவளை தன்னுடன் உடலுறவு கொள்ள சம்மதிக்குமாறும், அவ்வாறு சம்மதிக்கவில்லையானால், அவளது காதல் கடிதங்களை அவளது கணவனிடம் காட்டப்போவதாகவும் அவளை மிரட்டுகிறான். அவளும் சம்மதிக்கிறாள். அ, ஆ-வுடன் உடலுறவு கொள்கிறான். இங்கு அ-வின் பொறுப்புநிலையை விவாதி.)

இங்கு அ என்பவன் பிரிவு 503-இன்படி குற்றமுறு மிரட்டுதல் (criminal intimidation) குற்றத்தையும், பிரிவு 497-இன்படி பிறன்மனை புணர்ந்த குற்றத்தையும் (adultery) செய்தவராகின்றான்.

(1) பிரிவு 503-இன்படி, ஒருவரது அல்லது அவர் அக்கறை கொண்டுள்ள மற்றொருவரது உடலுக்கு, நற்பெயருக்கு அல்லது சொத்துக்கு தீங்கு விளைவிக்கப் போவதாக அவருக்கு பீதி உண்டாக்கும் கருத்துடன் மிரட்டுவது அல்லது அத்தகைய மிரட்டல் நிறைவேற்றப்படுவதைத் தவிர்க்கும் பொருட்டு, அவர் சட்டப்படி செய்யக் கட்டுப்பட்டிராத செயல் எதையும் செய்வதை அல்லது சட்டப்படி அவர் செய்ய உரிமை பெற்றிருக்கிற செய்கை எதையும் செய்யாது விடுவதை விளைவிக்க மிரட்டுவது, குற்றமுறு மிரட்டுதல் குற்றமாகும்.

(2) இங்கு அ என்பவன் ஆ-வின் காதல் கடிதங்களை அவளது கணவனிடம் காட்டப்போவதாக மிரட்டுகிறான். இதனால் அவளது நற்பெயருக்கு தீங்கு விளைவிக்கத் துணிகிறான்.

(3) மேலும் அ என்பவர், அக்காதல் கடிதங்களை அவளது கணவனிடம் காட்டாமல் இருக்க வேண்டுமெனில், அவளை தன்னுடன் உடலுறவு கொள்ளச் சம்மதிக்குமாறும் மிரட்டுகிறான். இங்கு ஆ என்பவள் அ என்பவனுடன் உடலுறவு கொள்ள சட்டப்படி எந்த வகையிலும் கட்டுப் பட்டரல்ல. இவை யாவும் மேற்படி பிரிவு 503-இன் வரம்பிற்குள் வருகின்றன. எனவே அ என்பவன் குற்றமுறு மிரட்டுதல் குற்றம் செய்தவனாகின்றான்.

(4) இத்துடன், அந்த உடலுறவிற்கு ஆ சம்மதித்ததால், அ, அவளுடன் உடலுறவு கொள்கிறான். மாற்றான் மனைவியுடன் உடலுறவு கொண்டதால், பிரிவு 497-இன்படி "பிறன்மனை புணர்ந்த குற்றத்திற்கும்" ஆளாகின்றான்.

எனவே குற்றமுறு மிரட்டுதல் குற்றத்திற்காக பிரிவு 506-இன்படி இரண்டு ஆண்டுகள் வரையிலான சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்; பிறன்மனை புணர்ந்த குற்றத்திற்காக பிரிவு 497-இன்படி அய்ந்துண்டுகள் வரையிலான சிறைவாசம் அல்லது அபராதம் அல்லது இரண்டும் சேர்ந்து தண்டனையாக விதிக்கப்படும்.

குற்ற முயற்சி (Attempt)

97. A intending murder Z, buys a gun and loads it. Has A committed any offence? (A என்பவர் Z என்பவரைக் கொல்வதற்காக ஒரு துப்பாக்கி வாங்கி தோட்டாக்கள் நிரப்பி வைத்துள்ளார். A ஏதாவது குற்றம் புரிந்துள்ளாரா?)

குற்றச் செயல் ஒன்றிற்கு நான்கு படிநிலைகள் (stages) உள்ளன. 1. கருதுதல் (intention); 2. முன்னேற்பாடு (ஆயத்தம்) செய்தல் (preparation); 3. முயற்சித்தல் (attempt); 4. செயலை நிகழ்த்துதல் (commission). முதல் நிலையை சட்டம் தண்டிப்பதில்லை. இரண்டாவது நிலையை மிகச் சில சூழ்நிலைகளின் கீழ் மட்டுமே சட்டம் தண்டிக்கிறது. இறுதி இரண்டு நிலைகளை சட்டம் கண்டிப்புடன் தண்டிக்கிறது.

நமது மேற்படி பிரச்சனையில், A என்பவர் Z-அய்க் கொல்ல வேண்டும் என்று கருதுகிறார். இது முதல்நிலை ஆகும். அதற்காக துப்பாக்கி வாங்கி அதில் தோட்டாக்கள் நிரப்பி வைத்துள்ளார். இது இரண்டாம் நிலையாகிய முன்னேற்பாடு செய்தலாகும். ஆனால் இன்னும் சுடவில்லை. அதாவது Z-அய் சுடுவதற்காக முயற்சிக்கவில்லை. எனவே கருத்து மற்றும் முன்னேற்பாட்டு நிலை மட்டும் கொண்டு A-அய்த் தண்டிக்கவியலாது. ஒருவேளை சுட முயற்சித்திருந்து, அதிலிருந்து Z தப்பித்துக் கொண்டிருந்தால் A-யை கொலை முயற்சிக்காக தண்டிக்கலாம். அவ்வாறே A சுட்டதில், ஒருவேளை Z மரணமடைந்திருந்தால், A-அய்க் கொலைக் குற்றத்திற்காக தண்டிக்கலாம். மேற்படி இரண்டும் நிகழாததால், A குற்றம் ஏதும் புரியவில்லை என்று தீர்மானிப்பதே சரி.

98. A with intent to steal jewels, breaks upon Z's box and finds that there is no jewel in it. Discuss the liability of A. (A என்பவர் ஒரு பெட்டியை உடைத்து சில நகைகளை திருடுவதற்காக முயற்சி செய்கிறார். ஆனால் பெட்டியை திறந்த பிறகு ஒன்றும் இல்லாததை காண்கிறார். A ஏதேனும் குற்றத்திற்கு ஆளாவாரா?)

பிரிவு 511-ன் கீழான முதல் எடுத்துக்காட்டின்படி, A திருட்டு முயற்சி குற்றத்தைச் செய்துள்ளார். (விளக்கத்திற்கு பக்கம் எண் 64-ல் பிரிவு 511-அய்க் காண்க)

-o0o-

வாழ்க தமிழ்!
வளர்க சட்டத் தமிழ்!!

பகுதி - III. சட்ட பல்கலைக்கழக வினாத்தாள்கள்

தமிழ்நாடு டாக்டர் அம்பேத்கர் சட்டப்பல்கலைக்கழக வினாத்தாள்கள்

மூன்றாண்டு சட்டக்கல்வி

B.L. DEGREE EXAMINATION, MAY 2013

Three Year Regular Course
First Semester/First Year
LAW OF CRIMES

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 X 16 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

1. Mistake of law is not an excuse. Is there any exception to this rule? Explain.
"சட்டத் தவறு மன்னிப்பு தரக் கூடியது அல்ல". இந்த விதிக்கு ஏதேனும் விதிவிலக்கு உள்ளதா? விளக்குக.

2. Discuss with reference to decided cases the issue of Mens rea in statutory offences.
முடிவு செய்யப்பட்ட வழக்குகளைக் கொண்டு செய் சட்ட குற்றங்களில் குற்றமன வாத அடிப்படையை விவாதிக்கவும்.

3. (a) Examine the essential ingredients of the offence of kidnapping.
(b) Distinguish kidnapping from the offence of adbuction.
(அ) பிள்ளைபிடித்தல் குற்றத்தின் அடிப்படைக் கூறுகளை ஆராய்க.
(ஆ) பிள்ளை பிடித்தலை ஆட்கடத்தல் குற்றத்திலிருந்து வேறுபடுத்திக் காட்டுக.

4. Explain the law regarding joint liability in criminal law.
குற்றச் சட்டத்தில் கூட்டுப் பொறுப்பு நிலையைச் சார்ந்த சட்டத்தை சுருக்கமாக விளக்குக.

5. When does murder becomes culpable homicide?
கொலை எப்பொழுது மரணம் விளைவிக்கும் குற்றமாக மாறும்?

PART B - (8 X 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.
ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை அளிக்க.

(a) House trespass
வீட்டினுள் அத்துமீறல்

(b) Giving false evidence
பொய் சாட்சி அளித்தல்

(c) Death sentence
மரண தண்டனை

(d) Criminal intimidation
குற்றமுறு மிரட்டல்

(e) Extortion
அச்சுறுத்திப் பறித்தல்

(f) Sedition
அரசு அவதூறு

(g) Criminal force
குற்றமுறு வன்முறை

(h) Dishonestly
கள்ளமனதுடன்

(i) Riot
கலகம்

(j) Insanity
பித்துநிலை

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கோர்வையாக கூறி விடையளிக்கவும்.

7. B an offender resists when A a police officer attempts to arrest him. In order to overcome the resistance of B, A uses tremendous force as a result of which B dies. Examine the liability of A.

ஆ என்னும் குற்றவாளியை அ என்னும் காவல்துறை அதிகாரி கைது செய்ய முயற்சிக்கையில் எதிர்ப்பு தெரிவிக்கிறார். அந்த எதிர்ப்பை நீக்க அ அதிக பலத்தைப் பயன்படுத்துகிறார். அதன் விளைவாக ஆ இறக்கிறார். அ–வினுடைய பொறுப்பு நிலையை ஆராய்க.

8. A forcibly carries B away from his home in order that B may be sacrificed to an idol. Has A committed any offence?

ஒரு விக்கிரகத்திற்கு பலி கொடுப்பதற்காக ஆ என்பவரை அவர் வீட்டிலிருந்து அ என்பவர் பலவந்தமாக அவரை தூக்கி வருகின்றார். அ குற்றம் ஏதும் செய்தள்ளாரா?

9. A intending to murder B buys a gun, loads it and fires the gun at B. B is wounded. Discuss the offence committed by A.

ஆவை கொலை செய்ய வேண்டுமென்ற எண்ணத்துடன் அ துப்பாக்கி ஒன்றை வாங்கி அதில் மருந்தை திணித்து ஆவின் மேல் சுடுகிறார். ஆ காயப்படுத்தப்படுகிறார். அ புரிந்த குற்றத்தை விவாதிக்கவும்.

10. A, a thief, when pursued threw away the stolen articles. The pursuit continued. With a view to scare the pursuers, he fired a gun. One of the pursuers was wounded in the leg. Explain what offence, if any, committed by A.

அ என்னும் திருடன் தொடரப்பட்ட பொழுது திருட்டு சாமான்களை எறிந்துவிடுகிறான். தொடருவது நீடித்ததால் தொடருபவர்களை அச்சுருத்தும் நோக்கம் கொண்டு ஒரு துப்பாக்கியால் அவன் சுட்டான். தொடர்பவர்களில் ஒருவருக்கு காலில் காயம் ஏற்பட்டது. அ என்பவர் ஏதேனும் குற்றம் செய்திருக்கிறாரா? விளக்குக.

11. A finds a valuable ring. A sells it immediately without attempting to discover the true owner. Has A committed any offence.

ஒரு விலைமதிப்புள்ள மோதிரத்தை அ என்பவர் கண்டு எடுக்கிறார். அதன் உரிமையாளரை கண்டுபிடிக்க யாதொரு முயற்சி எடுக்காமல், அதனை உடனே விற்று விடுகிறார். அ குற்றமேதேனும் புரிந்துள்ளாரா?

12. A says in good faith that "I think that B's evidence in the trial is so contradictory that he must be stupid or dishonest". Discuss the liability of A.

ஆ என்பவர் முட்டாளாகவோ அல்லது நேர்மையற்றவராகவோ இருக்க வேண்டும், என்று விசாரணையில் அவருடைய முரண்பாடான சான்றுறுரையிலிருந்து நான் எண்ணுகிறேன் என்று அ நல்லெண்ணத்துடன் கூறுகிறார். அ வினுடைய குற்றப் பொறுப்பினை விவாதிக்கவும்.

B.L. DEGREE EXAMINATION, NOVEMBER 2013

First Semester/First Year

LAW OF CRIMES

Time: Three hours Maximum: 100 marks

PART A -(3 x 16 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

1. "The jurisdiction of the Indian Penal Code is territorial as well as extra - territorial" - Discuss.

"இந்திய தண்டனைச் சட்டத்தின் அதிகாரவரம்பானது நிலவரையில் மட்டுமின்றி நிலவரைக்கு அப்பாலும் செயல்படும்" – விவாதிக்க.

2. Explain the essentials of the offence of theft. State the circumstances under which it will become Robbery and Decoity.

திருட்டுக் குற்றத்தின் இன்றியமையாத கூறுகளை விளக்குக. எந்தச் சூழ்நிலைகளின் கீழ் அது "கொள்ளை'யாகவும், "கூட்டுக் கொள்ளை"யாகவுமாகிறது என்பதை எடுத்துக் கூறுக.

3. Define 'Abduction'. Whether Abduction itself is an offence under the Indian Penal Code? Distinquish between "Abduction" and "Kidnapping".

"ஆள் கடத்தல்" என்பதை வரையறை செய்க. "ஆள்கடத்தல்" செயல் மட்டுமே இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றமாகுமா? ஆள் கடத்தல் மற்றும் கவர்ந்து செல்லல் இவற்றை வேறுபடுத்திக் காட்டுக.

4. Define the offence of "sedition" and explain it with the help of Balagangadar Tilak case and Kedarnath Case.

அரசு எதிர் பகை மூட்டுக் குற்றம் என்பதினை வரையறை செய்க. பாலகங்காதரதிலக் வழக்கு, மற்றும் கேதர்நாத் வழக்கு ஆகியவற்றின் துணை கொண்டு இக்குற்றத்தை விளக்குக.

5. Define defamation. Discuss the defences to a charge of defamtion.

அவதூறு குற்றத்தை வரையறுக்க. அவதூறு குற்றம் சாட்டப்பட்டதற்கு உள்ள எதிர்வாதங்களை விவாதிக்க.

PART -B - (8 x 6 = 48 marks)

6. Write short answers on **EIGHT** of the following not exceeding 2 pages each.

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடை அளிக்க.

(a) Enhanced Punishment
அதிகரிக்கப்பட்ட தண்டனை

(b) Extradition
அயல்நாட்டிடம் மீட்டொப்படைத்தல்

(c) Assault
தாக்குதல்

(d) Mischief
சொத்தழிப்பு

(e) Lurking House Trespass
பதுங்கி வீட்டினுள் அத்துமீறி நுழைதல்

(f) Doli incapax
குற்றஞ் செய்ய இயலாமை

(g) Dowry death
வரதட்சணை கொலை

(h) Wrongful restraint
முறைகேடான தடுப்பு

(i) R Vs. Dudley and Stephen
அரசு எதிர் டட்லி மற்றும் ஸ்டீபன்

(j) Matura Rape case
மதுரா கற்பழிப்பு வழக்கு

PART C - (4 X 4 = 16 marks)

Answer **FOUR** of the following (not exceeding 2 pages each) by referring to provisions of law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கோர்வையாக கூறி விடையளிக்கவும்.

7. A voluntarily throws into a river a ring belonging to Z with the intention of thereby causing wrongful loss to Z. What offence A has committed?

Z க்குச் சொந்தமான ஒரு மோதிரத்தை A தன்னிச்சையாக ஆற்றில், Zக்கு முறையற்ற நட்டம் உண்டாக்கும் உட்கருத்துடன் எறிந்து விடுகிறார். A செய்த குற்றம் என்ன?

8. A inserts his hand into the pocket of B with intent of stealing but A finds nothing in his pocket. Is A liable for any offence?

திருட வேண்டும் என்ற எண்ணத்தில் A தனது கையினை Zயின் பைக்குள் நுழைக்கிறார். ஆனால் அங்கு ஒன்றும் காணப்படவில்லை. A ஏதேனும் குற்றத்திற்கு பொறுப்பாவாரா?

8. 'A' in good faith, believing property belonging to 'Z' to be A's own property, takes that property out of Z's possession. Decide the liability of 'A'.

'அ' என்பவர் நல்லெண்ணத்துடன், தனது பொருள் என எண்ணி 'ஔ'வின் பொருஔ அவரின் உடைமையிலிருந்து எடுக்கிறார். இதில் 'அ'வின் பொறுப்படைவினை தீர்மானிக்கவும்.

9. 'A', for the purpose of inducing 'B' to desist from prosecuting a civl suit, threatens to burn B's house. Has 'A' committed an offence?

'அ' என்பவர் 'ஆ' என்பவரின் உரிமையியல் வழக்கினை கைவிடுமாறு தூண்டும் நோக்கில், அவரின் வீட்டை எரித்து விடுவேன் என்று மிரட்டுகிறார். 'அ' குற்றம் புரிந்துள்ளாரா?

10. 'A' holds 'Z' and fraudulently takes Z's money and jewels from Z's cloths, without Z's consent and in order to commit such an offence, he caused wrongful restraint to 'Z'. Explain the offence committed by 'A'.

'அ' 'ஔ' என்பவரை ஏமாற்றும் எண்ணத்துடன் கீழே தள்ளி அவரின் பணம் மற்றும் நகைகளை, அவருடைய இசைவின்றி, அவரின் ஆடையிலிருந்து எடுகிகிறார். அப்போது அவர்

'ஔ' விற்கு முறையின்றி தடை ஏற்படுத்துகிறார். இதில் 'அ' செய்த குற்றத்தினை கூறுக.

11. 'A' finds a valuable ring not knowing to whom it belongs. 'A' sells it immediately without attempting to discover the owner. Decide the liability of 'A'.

'அ' என்பவர் மதிப்புமிக்க மோதிரம் ஒன்றினை கண்டெடுக்கிறார். அது யாருடையது என அவருக்கு தெரியாது. அதன் உரிமையாளரை கண்டறிய எவ்வித முயற்சியும் மேற்கொள்ளாமல் அதனை உடனடியாக விற்று விடுகிறார். இதில் 'அ'வின் பொறுப்படைவினை தீர்மானிக்கவும்

12. 'A' commits house trespass by making a hole through the wall of Z's house and he putting his hand through the aperture. Has 'A' committed an offence.

'அ' என்பவர் 'ஔ'வின் வீட்டில் அத்து மீறி நுழைந்து அவ்வீட்டின் சுவரில் ஒரு துவாரத்தை ஏற்படுத்தி அவர் கை நுழையும் அளவிற்கு வழிசெய்து வைக்கிறார். இதில் 'அ' குற்றம் புரிந்துள்ளாரா?

B.A.B.L./B.A.LL.B., DEGREE EXAMINATION, MAY 2017

Five Year Regular Course
Second Semester/First Year
LAW OF CRIMES

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

1. "A crime is a legal wrong that can be followed by criminal proceeding which may result in punishment" - Explain the statement.

"குற்றம் என்பது ஓர் சட்டத்தவறு; அதனைத் தொடரும் குற்ற வழக்குச் செயல்முறைகள் தண்டனையில் முடியலாம்" – இக்கூற்றை விளக்குக.

2. Explain various theories of punishment and which theory is more appropriate for the present day society.

பல்வேறு வகையான தண்டனைக் கருத்தியல்களை விளக்கவும். தற்காலச் சமூகத்திற்கு எந்தக் கருத்தியல் மிகவும் பொருத்தமானதாக அமையும்?

3. Explain the circumstances under which a person can exceed his right of private defense of body and property upto causing death.

எந்தெந்தச் சூழ்நிலைகளில் ஒருவர் தனது உடல் மற்றும் உடமைத் தற்காப்புரிமையை மரணம் விளைவிக்கும் அளவிற்குப் பயன்படுத்தலாம்?

4. Explain the essentials of the offence of theft. State the circumstances under which it will become robbery and dacoity.

திருட்டுக் குற்றத்தின் இன்றியமையாதக் கூறுகளை விளக்குக. எந்தச் சூழ்நிலைகளில் அது கொள்ளை மற்றும் கூட்டுக் கொள்ளைக் குற்றமாகிறது என்பதனைக் கூறுக.

5. What are the valid defences available for the offence of defamation?

அவதூறுக் குற்றத்திற்குரிய எதிர்வாதங்கள் யாவை?

PART B - (8 X 6 = 36 Marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக

(a) Abetment.
குற்ற உடந்தை.

(b) Bonafide act for another's benefit.
பிறர் நலன் கருதிச் செய்யும் நற்செயல்.

(c) Cheating.
ஏமாற்றுதல்.

(d) Death by Negligence.
கவனக்குறைவால் ஏற்படும் மரணம்.

(e) Election offences.
தேர்தல் தொடர்பானக் குற்றங்கள்.

(f) Fabricating false Evidence.
பொய்ச் சான்று புனைதல்.

(g) Grave and sudden provocation.
அதீத மற்றும் திடீர் ஆத்திரம்.

(h) House trespass.
மனை அத்துமீறல்.

(i) Ignorantia juris non excusat.
சட்ட அறியாமை மன்னிக்கத்தக்கதல்ல.

(j) Joint liability principle.
கூட்டுப் பொறுப்பு நெறி.

PART C - (4 X 4 = 16 Marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

7. 'A' an officer of Court of Justice, being ordered by that Court to arrest 'Y'. After due enquiry, believing 'Z' to be 'Y' he arrests 'Z'. Whether 'A' has committed any offence.

'A' என்கிற நீதிமன்ற அலுவலர் 'Y' என்பவரைக் கைது செய்ய நீதிமன்றத்தால் ஆணை யிடப்படுகிறார். உரிய முறையில் விசாரித்த பின் 'Z' என்பவரை 'Y' எனக் கருதி கைது செய்கிறார். இதில் 'A' ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

8. 'A' a school master, corrects a scholar by giving punishment in a manner

not intended or likely to injure him, using due care. The scholar dies. What is the offence committed by the school master?

'A' என்ற பள்ளி ஆசிரியர் ஓர் மாணவனைத் திருத்தும் விதமாக எவ்விதக் காயமும் ஏற்படாமலிருக்கும் பொருட்டு உரிய எச்சரிக்கையுடன் தண்டனை அளிக்கிறார். ஆனால் மாணவர் இறந்துவிடுகிறார். இதில் பள்ளி ஆசிரியர் புரிந்தக் குற்றம் யாது?

9. 'A' a citizen of India instigates 'B', a foreigner in Pakistan, to commit a murder in Pakistan. Is 'A' guilty of any offence.

'A' என்ற இந்தியக் குடிநர் இந்தியாவில் இருந்து கொண்டு பாக்கிஸ்தானில் உள்ள 'B' என்பவரை அந்த நாட்டில் ஓர் கொலையைச் செய்யுமாறு தூண்டுகிறார். இதில் 'A' ஏதேனும் குற்றம் புரிந்து உள்ளாரா?

10. 'A' knowing that her husband 'B' has committed dacoity, knowing by conceals 'B' in order to save him from punishment. What was the offence committed by 'A'?

'A' என்பவர் தனது கணவர் 'B' கூட்டுக் கொள்ளையில் ஈடுபட்டுள்ளார் என்பது தெரிந்தே அவரைத் தண்டனையில் இருந்து விடுவித்துக் கொள்ள மறைத்து வைக்கிறார். இதில் 'A' புரிந்துள்ள குற்றம் யாது?

11. A patient named 'B' suffering from cancer, for which there was not hope to recover, requests 'C', her husband, to relieve her of her agonies by shortening her life. 'C' therefore kills 'B' one night while she is asleep. Is the husband liable for any offence?

'B' என்ற பெயருடைய புற்று நோயால் அவதியுறும், குணமடைய இயலாத ஓர் நோயாளி தன் கணவரான 'C'யிடம் தான் உயிர் பிழைக்க வாய்ப்புகள் இல்லை எனவும் ஆதலால் தன்னைக் கொன்று விடுமாறும் வேண்டுகிறார். இதனால் ஓர் இரவில் உறங்கும்போது 'C' தனது மனைவியைக் கொன்று விடுகிறார். இதில் கணவர் ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

12. 'A' intending to administer to pregnant woman something capable of causing a miscarriage, infact administers a harmless substance not capable of causing the intended harm. Can 'A' be convicted for any offence.

'A' என்ற நபர் கருச்சிதைவு ஏற்படுத்தும் பொருட்டு ஓர் கருவுற்ற பெண்ணிற்கு தீங்கும் ஏதும் விளைவிக்காத ஓர் பொருளைக் கொடுக்கிறார். அப்பொருள் கருச்சிதைவை ஏற்படுத்தக் கூடியது. அவை 'A'–வை ஏதேனும் குற்றத்திற்காகத் தண்டிக்க இயலுமா?

B.A.B.L./B.A.LL.B., DEGREE EXAMINATION, NOVEMBER 2017

Five Year Regular Course
Second Semester/First Year

LAW OF CRIMES

Time: Three hours Maximum: 100 marks

PART A - (3 X 12 = 36 marks)

Answer **THREE** of the following not exceeding 6 pages each

1. Explain the nature and extent of unsoundness of mind required to exempt a person from criminal liability. Refer to leading cases.

ஒரு பித்து நிலையரைக் குற்றப் பொறுப்பிலிருந்து விலக்களிக்க அவரின் பித்து நிலை எத்தன்மை மற்றும் பரப்புடன் இருக்க வேண்டும் என்பதை முக்கியமான வழக்குகளுடன் விளக்குக.

2. What is giving false evidence? Distinguish it from fabricating false document.

பொய் சான்று அளித்தல் என்றால் என்ன? அதை பொய்யாவணம் புனைவிலிருந்து வேறுபடுத்துக.

3. What is hurt? Explain the circumstances under which it becomes grievous hurt. Illustrate.

காயம் என்றால் என்ன? எந்தச் சூழ்நிலைகளில் அது கொடுங்காயம் ஆகும் என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

4. What is kidnapping from lawful guardianship? How does it differ from abduction?

சட்டக் காப்பாளரிடமிருந்து பிள்ளைபிடித்தல் என்றால் என்ன? ஆட்கடத்தலில் இருந்து அது எவ்வாறு வேறுபடுகிறது?

5. What is Murder? How is it distinguished from Culpable homicide which does not amount to murder?

கொலை என்றால் என்ன? அது எப்போது கொலையாகா மரணம் விளைவிக்கும் குற்றத்திலிருந்து வேறுபடுத்தப்படுகிறது?

PART B - (8 X 6 = 36 Marks)

6. Write short answers on EIGHT of the following in not exceeding 2 pages each:

ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல் பின்வருவனவற்றுள் எட்டிற்கு குறுகிய விடைகள் எழுதுக

(a) Parties to crime.
குற்றத்தரப்பினர்கள்.

(b) Solitary confinement.
தனிச்சிறை.

(c) Public servant.
பொது ஊழியர்.

(d) Criminal consiracy.
குற்றமுறு சதி.

(e) Criminal force.
குற்றமுறு வன்முறை.

(f) Theft.
திருட்டு

(g) Causing miscarriage.
கருச்சிதைவு ஏற்படுத்துதல்.

(h) Adultery.
பிறன்மனை புணர்தல்.

(i) Exception for defamation.
அவதூறு வழக்கின் விதிவிலக்குகள்.

(j) Attempt to commit offence.
குற்றங்கள் புரிவதற்கான முயற்சிகள்.

PART C - (4 X 4 = 16 Marks)

Answer FOUR of the following (not exceeding 2 pages each) by referring to provisions of Law and decided cases with cogent reasons.

பின்வருவனவற்றுள் நான்கிற்கு (ஒவ்வொரு கேள்விக்கும் இரண்டு பக்கங்களுக்கு மிகாமல்) சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்

7. A, who is a citizen of India, commits murder in London. Decide which country's court is empowered to try 'A'.

இந்திய குடிஞராகிய 'A' என்பவர் லண்டனில் கொலை ஒன்றைச் செய்கிறார். 'A' என்பவர் எந்நாட்டு நீதிமன்றத்தால் விசாரிக்கப்படுவார் என்பதைத் தீர்மானிக்க.

8. A, a surgeon, in good faith communicates to a patient his opinion that he cannot live and the patient dies in consequence of the shock. Discuss the liability of the surgeon.

'A' என்ற அறுவை சிகிச்சை மருத்துவர் நல்லெண்ணத்துடன் ஒரு நோயாளியிடம் அவர் பிழைக்கமாட்டார் என்ற தனது கருத்தை வெளியிடுகிறார். அந்த அதிர்ச்சியின் விளைவாக நோயாளி இறக்கிறார். இந்நேர்வில் மருத்துவரின் பொறுப்பை விவாதிக்கவும்.

9. A, a citizen of India, instigates B, a foreigner in Goa, to commit murder in Goa. What is the offence committed by A?

இந்திய குடிஞராகிய 'A' என்பவர் கோவாவில் உள்ள வெளிநாட்டினரான 'B' யைக் கோவாவில் ஒரு கொலையைச் செய்ய தூண்டுகிறார். இந்நிகழ்வில் 'A' புரிந்துள்ள குற்றம் என்ன?

10. Ravi knowing that Sekar has commited dacoity, conceals Sekar in order to screen him from punishment. Discuss the liability of Ravi.

சேகர் கூட்டுக் கொள்ளையிழைத்தார் என ரவி அறிந்திருந்தும் அவரைத் தண்டனையில் இருந்து காப்பதற்காக சேகரை மறைத்து வைக்கிறார். ரவி என்பவரது பொறுப்படைவினை விவாதி.

11. A finds a rupee on the high road not knowing to whom the rupee belongs. A picks up the rupee and the same is kept by him. What is the offence committed by A?

A என்பவர் நெடுஞ்சாலையில் செல்லும்போது ஒரு ரூபாயை கண்டெடுத்து அது யாருடையது என அறிய விழையாது அந்த ரூபாயை A எடுத்துக் கொள்கிறார். இந்நிகழ்வில் A புரிந்துள்ள குற்றம் என்ன?

12. A voluntarily throws into a river a ring belonging to Z with the intention of thereby causing loss to Z. Has A committed any offence?

Z என்பவருக்குரிய ஒருமோதிரத்தை A என்பவர், Zக்கு இழப்பு ஏற்படுத்தும் உட்கருத்துடன் தன்னிச்சையாக ஓர் ஆற்றில் விட்டெறிகிறார். அதனால் Zக்கு இழப்பு ஏற்படுகிறது. இங்கு A ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

புதிய வடிவிலான வினாத்தாள்கள்

(For the candidates admitted during 2017-2018 onwards)

B.A., LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2018

(Five Years Regular Course)

First year - Second Semester

LAW OF CRIMES

Time: 2 ½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain the various stages in commission of a crime with illustrations.

குற்றம் நிகழ்வற்கான வெவ்வேறு படிநிலைகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

2. Define and distinquish culpable homicide and murder.

மரணம் விளைவிக்கும் குற்றம் மற்றும் கொலையை வரையறுத்து வேறுபடுத்து.

3. What is hurt? Explain the circumstances under which it becomes grievous hurt? Illustrate.

காயம் என்றால் என்ன? எந்தச் சூழ்நிலைகளில் அது கொடுங்காயம் ஆகும் என்பதை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

PART B - (2 X 7 = 14 Marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றில் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the doctrine of mens rea with decided case laws.

குற்றமனக் கோட்பாட்டை தீர்மானிக்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக.

5. Examine in brief offences relating to marriage.

திருமணம் தொடர்பான குற்றங்களை சுருக்கமாக ஆய்வு செய்க.

6. Explain the principles laid down in Chirangi Vs. State 1952 Cr.LJ 1212 (MP).
சிராங்கி எதிர் ஸ்டேட் 1952 Cr.LJ 1212 (MP) வழக்கின் கொள்கைகளை விளக்குக.

PART C - (5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Affray
சச்சரவு

(b) Public Servant
பொது ஊழியர்

(c) Criminal Brach of Trust
குற்றமுறு நம்பிக்கை மோசடி

(d) Sedition
அரசு எதிர் பகைமூட்டுக் குற்றம்

(e) Enhanced Punishment
அதிகரிக்கப்பட்ட தண்டனை

(f) Fabricating false evidence
பொய் ஆவணம் புனைதல்

(g) Private Defence
தற்காப்பு

PART D - (2 X 6 = 12 Marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A instigates B to murder C. B refuses to do so. Whether A has committed any offence?

C-யைக் கொலை செய்ய Bயை A தூண்டுகிறார். அவ்வாறு செய்ய B மறுக்கிறார். A ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

9. A being Z's servant and entrusted by Z with the care of Z's plate dishonestly runs away with the plate, without Z's consent. Has A committed theft?

Z என்பவரின் பணியாளராக இருக்கும் A என்பவர் பாதுகாக்கத் தன்னிடம் கொடுக்கப் பட்டிருக்கும் Z இன் தட்டினை Z இன் இசைவு இல்லாமல் நேர்மையின்றி எடுத்துக் கொண்டு ஓடி விடுகிறார். A திருட்டுக் குற்றம் செய்துள்ளாரா?

10. 'A' who is a citizen of India, commits a murder in Uganda. Where an A be tried and convicted?

இந்தியக் குடிமகனாகிய 'A' என்பவர் உகாண்டாவில் கொலை ஒன்றைச் செய்கிறார். 'A'

என்பவர் எவ்விடத்தில் கொலைக் குற்றத்திற்காக விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்படலாம்?

(For the candidates admitted during 2017-2018 onwards)

B.A., LL.B. DEGREE EXAMINATIONS, MAY 2019

(Five Years Regular Course)
First year - Second Semester

LAW OF CRIMES

Time: 2 ½ hours Maximum: 70 marks

PART A - (2 x 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. What is infancy? Explain the law relating to infancy under the Indian Penal Code.

குழந்தைத் தன்மை என்றால் என்ன? இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குழந்தைத் தன்மை தொடர்பான சட்டங்களை விளக்கவும்.

2. Define criminal conspiracy. Discuss about its severity of punishment prescribed under the Indian Penal Code.

குற்றமுறு சதியை வரையறு. இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் குற்றமுறு சதிக்கான தண்டனையின் கடுமைத் தன்மையை விவாதிக்க.

3. Define theft and explain its ingredients with illustrations.

திருட்டு குற்றத்தினை வரையறுத்து அதன் முக்கிய கூறுகளை எடுத்துக்காட்டுகளுடன் விளக்குக.

PART B - (2 X 7 = 14 Marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றில் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Discuss about various theories of punishment.
பல்வேறு வகையான தண்டனைக் கருத்தியல்புகளை விவாதிக்க.

5. Discuss joint liability with leading cases.
கூட்டுப் பொறுப்பு நிலையை முன்னணி வழக்குகளுடன் விவாதிக்க.

6. Explain the offence of criminal force and differentiate with assault
குற்றமுறு வன்முறையை விளக்கி அதனுடன் தாக்குதல் குற்றத்தினை வேறுபடுத்துக.

PART C - (5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following:
பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Adulteration of food
உணவுக் கலப்படம்

(b) Countefeiting coin
கள்ள நாணயம் தயாரித்தல்

(c) Fabricating false evidence
பொய்சாட்சியம் புனைதல்

(d) Dowry Death
வரதட்சணை மரணம்

(e) Wrongful restraint an wrongful confinemet
சட்டவிரோதமாகத் தடுத்து வைத்தல் மற்றும் சட்ட விரோதமாக அடைத்து வைத்தல்

(f) Valuable security
மதிப்புமிக்க பத்திரம்

(g) Abduction
ஆட்கடத்தல்

PART D - (2 X 6 = 12 Marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A takes an article belonging to Z out of Z's possession, without Z's consent, with the intention of keeping it until he obtains money from Z as a reward for its restoration. A has committed what offence?

Z- யின் சம்மதமில்லாமல் Z யிடமிருந்து Z ற்கு சொந்தமான ஒரு பொருளை மீண்டும் Z யிடம் சேர்ப்பதற்கு ஒரு வெகுமதியாகப் பணம் பெறுகிற வகையில் அதுவரை A அதைத் தம்மிடம் வைத்திருக்கும் எண்ணத்தில் A எடுத்துக் கொள்கிறார். A எவ்வகையான குற்றம் புரிந்துள்ளார்.

9. A makes an attempt to pick the pocket of Z by thrusting his hand into Z's pocket. A fails in the attempt in consequence of Z having nothing in his pocket. Whether A has committed any offence?

A என்பவர் Z ன் பையில் தனது கையை நுழைத்து பணம் அல்லது பொருளினை திருட முயற்சி செய்கிறார். Z இன் பையில் ஒன்றும் இல்லாததால் அந்த முயற்சியில் A தோல்வி அடைகிறார். இங்கே A ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

10. 'A' knows Z to be behind a bush. B does not know it. A intending to cause, or knowing it to be likely to cause Z's death, induces B to fire at the bush. B fires and kills Z. Decide the liaiblity of A and B.

Z என்பவர் புதருக்கு பின் இருப்பது 'A' என்பவருக்குத் தெரியும். ஆனால் B என்பவருக்குத் தெரியாது. 'Z' ன் மரணம் விளைவிக்கும் நோக்கத்தில் B யை அந்தப் புதரை நோக்கிச் சுடும்படி A தூண்டுகிறார். 'B' சுடுவது மூலம் 'Z' யைக் கொன்றுவிடுகிறார். இங்கு 'A' மற்றும் 'B' யின் பொறுப்பு நிலையை தீர்மானிக்க.

(For the candidates admitted during 2017-2018 onwards)

B.A., LL.B. DEGREE EXAMINATIONS, NOVEMBER 2019

(Five Years Regular Course)
First year - Second Semester
LAW OF CRIMES

Time: 2 ½ hours Maximum: 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Examine the territorial and extra territorial jurisdiction of the Indian Penal Code.

இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் நில ஆள்வரையை மற்றும் புறநிலப்பகுதி ஆள்வரையை ஆய்வு செய்க.

2. State the law regarding joint liability in criminal law.

குற்றவியல் சட்டத்தில் கூட்டுப் பொறுப்பு நிலையைக் குறித்த சட்டத்தை எடுத்துக் கூறுக.

3. What are the different kinds and theories of punishment?

தண்டனையின் பல்வேறு வகைகள் மற்றும் கோட்பாடுகள் யாவை?

PART B - (2 X 7 = 14 Marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றில் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Discuss the provisions of the Indian Penal Code regarding offences against public peace.

இந்திய தண்டனை சட்டத்தின் கீழ் பொது அமைதிக்கு எதிரான குற்றத்தின் பிரிவுகளை விவாதி.

5. Define the offence of defamation and discuss the exceptions provided for it.

அவதூறு என்ற குற்றத்தினை வரையறுத்து சட்டத்தில் கூறப்பட்டுள்ள விதிவிலக்குகளை விவரி.

6. What is hurt? Explain the circumstances under which it becomes grievous hurt - Illustrate.

காயம் என்றால் என்ன? எந்தச் சூழ்நிலைகளில் அது கொடுங்காயம் ஆகும் என்பதை எடுத்துக்காட்டுடன் விளக்குக.

PART C - (5 X 4 = 20 Marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் வரைக.

(a) Mens rea
குற்ற மனம்

(b) House breaking
மனை வன்மீறல்

(c) Criminal breach of trust
குற்றமுறு நம்பிக்கை மோசடி

(d) Private defence
தற்காப்பு

(e) Enhanced punishment
அதிகரிக்கப்பட்ட தண்டனை

(f) McNaughtens's case
மெக் நாட்டன் வழக்கு

(g) Sedition
அரசு எதிர் பகை மூட்டும் குற்றம்

PART D - (2 X 6 = 12 Marks)

Answer TWO of the following by referring to relevant provisions of Law and decided cases. Give cogent reasons

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளைக் கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A who is a citizen of India commits murder in Uganda. Where can A be tried and convicted?

இந்தியக் குடிமகனாகிய A என்பவர் உகாண்டாவில் கொலை ஒன்றைச் செய்கிறார். A என்பவர் எவ்விடத்தில் கொலைக் குற்றத்திற்கான விசாரணை செய்யப்பட்டு தண்டிக்கப்படலாம்?

9. A a police officer, without warrant, apprehends Z who has committed murder. Is A guilty of any offence?

A என்ற காவல்துறை அதிகாரி Z என்ற கொலையாளியை பிடியாணை இல்லாமல் பிடித்து வைத்துள்ளார். A என்பவர் மீது குற்றம் சாட்டஇயலுமா?

10. 'A' being legally bound to produce a document before a district court, intentionally omits to produce the same. What is the offence committed by A?

ஒரு மாவட்ட நீதிமன்றம் முன்னிலையில் சட்டப்படி ஓர் ஆவணத்தைக் கொண்டு வந்து தர கடப்பாடு கொண்ட 'A' என்பவர் அதை உட்கருத்துடன் தராமல் விட்டு விடுகிறார். இங்கே B என்பவர் என்ன குற்றம் புரிந்துள்ளார்?.

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, JANUARY 2021

(Five Year Regular Course)

First Year - Second Semester

LAW OF CRIMES

Time : 2 1/2 hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Discuss the defence of insanity with leading cases.

பித்துநிலை என்ற எதிர்வாதத்தை முக்கிய வழக்குகளுடன் விவாதிக்க.

2. What is Abetment? How far an abettor has been punished under the IPC?

குற்ற உடந்தை என்றால் என்ன? இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் ஒரு உடந்தைக் குற்றவாளிக்கு எந்த அளவிற்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளது?

3. Define and explain the offence of Forgery.

பொய்யாக புனைதல் குற்றத்தினை வரையறை செய்து விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. What are the kinds of punishment under the Indian Penal Code?

இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழுள்ள பித்துநிலை என்ற எதிர்வாதம் எவ்வாறு செயல்படுகிறது?ல் குறிப்பிடப்பட்டுள்ள தண்டனையின் வகைகள் யாவை?

5. Define and explain the offence of Unlawful Assembly.

சட்டவிரோதக் கூட்டம் குற்றத்தினை வரையறுத்து அதனை விளக்குக.

6. "Robbery is a special and aggravated form of either theft or extortion" - Explain.

"கொள்ளையடித்தல் என்பது திருட்டு அல்லது மிரட்டி பணம்பறித்தலின் ஒரு தனிவகையான மற்றும் மோசமான வடிவமாகும்" – விளக்குக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Extra - Territorial Offences.

ஆட்சி மண்டலத்திற்கு அப்பால் செய்யப்படும் குற்றங்கள்.

(b) Bribery.

இலஞ்சம்.

(c) Riot.

கலகம்.

(d) Personation at Elections.

தேர்தல்களில் ஆள்மாறாட்டம்.

(e) Electronic Records.

மின்னணு பதிவுரு.

(f) Giving false Evidence.

பொய்ச்சாட்சியம் கொடுத்தல்.

(g) Public Nuisance.

பொதுத்தொல்லை.

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A, army soldier, fires on a mob by the order of his Superior Officer, in conformity with the commands of the law. Whether A has committed any offence?

தரைப்படை வீரரான 'அ' என்பவர் தனது மேல்நிலை அலுவலரின் சட்டத்திற்குட்பட்ட கட்டளைப்படி, ஒரு கும்பலைப் பார்த்துச் சுடுகிறார். 'அ' ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

9. A, in support of a just claim which B has against Z for One Thousand Rupees, falsely swears on a trial that he heard Z admit the justice of B's claim. Whether A has committed an offence of giving false evidence?

ஆயிரம் ரூபாய்க்காக 'இ'–க்கு எதிரான 'ஆ'–வின் நியாயமான கோரிக்கைக்கு ஆதரவாக 'அ' –வின் கோரிக்கையின் நியாயத்தை 'இ' ஒப்புக்கொண்டதைத் தாம் கேட்டதாகப் பொய் சொல்கிறார். 'அ' பொய்ச்சாட்சியம் கொடுத்த குற்றத்திற்கு உள்ளாவாரா?

10. A by instigation voluntarily causes Z, a person under eighteen years of age to commit suicide. Whether 'A' has committed an offence?

'அ' என்பவர் தனது தன்னிச்சையான தூண்டுதலினால் பதினெட்டு வயதுக்கு உட்பட்ட 'ஔ' என்பவரை தற்கொலை செய்து கொள்ளும்படி செய்கிறார். 'அ' என்பவர் குற்றம் புரிந்துள்ளாரா?

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, FEBRUARY 2022

(Five Year Regular Course)

First Year - Second Semester

LAW OF CRIMES

Time : 2 1/2 hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. The expression "fraudulently" is wider than the term of "dishonestly". Analyse it.

"மோசடி" என்பதின் வெளிப்பாடானது 'நேர்மையற்றது' என்ற பதத்தினை விட பரந்தது ஆகும். கூர்ந்தாய்வு செய்க.

2. What is capital punishment? Explain it with the principle of "rarest of rare cases".

மரண தண்டனை என்றால் என்ன? "அரிதிலும் அரிதான வகை வழக்குகள்" என்ற கோட்பாடுடன் இதனை விளக்குக.

3. Define "cheating". Explain the essential ingredients of cheating.

'ஏமாற்றுதல்' குற்றத்தை வரையறு. இக்குற்றத்தின் முக்கிய கூறுகளை விளக்குக.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. What are the limitations provided for exercising the right of private defence under the Indian Penal code.

இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள தற்காப்பு உரிமையின் கட்டுபாடுகள் யாவை?

5. Explain Criminal Conspiracy with decided case laws.

குற்றச் சதி குற்றத்தினை தீர்க்கப்பட்ட வழக்குகளுடன் விளக்குக.

6. Explain the offence of Robbery and state the circumstances under which theft will become Robbery.

கொள்ளை குற்றத்தினை விளக்கி, எச்சூழ்நிலைகளில் ஒரு திருட்டு குற்றமானது கொள்ளையாக மாறுகிறது என்பதனைக் கூறுக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Abettor.

குற்ற உடந்தையர்.

(b) Bribery.

கையூட்டு

(c) Criminal Intimidation.

குற்றமுற மிரட்டல்.

(d) Defamation.

அவதூறு

(e) Elements of crime.

குற்றத்தின் மூலக்கூறுகள்.

(f) Fabricating false evidence.

பொய்ச் சாற்றுரைத்தல்

(g) Grievous hurt.

கொடுங்காயம்

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகைபங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. A magistrate exercising jurisdiction in respect of a charge on which he has power only to commit for trial to another court, whether he is a judge? decide.

ஒரு குற்றச்சாட்டைப் பொறுத்தமட்டில் வேறு ஒரு நீதிமன்றத்துக்கு மேல் விசாரணைக்காக அனுப்புவதற்கு மட்டுமே அதிகாரம் பெற்றிருந்து, அதைப் பொறுத்து அதிகாரம் செலுத்துகின்ற ஒரு நடுவர் நீதிபதி ஆவாரா? தீர்மானிக்க.

9. A, a soldier, fires on a mob by the order of his superior officer, in conformity with the commands of the law. Whether 'A' has committed any offence?

தனது மேல்நிலை அலுவலரின் கட்டளைப்படி, படைவீரரான 'அ' என்பவர் ஒரு கும்பலைப் பார்த்துச் சுடகிறார். 'அ' ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

10. A, by instigation voluntarily causes B, a person under eighteen years of age to commit suicide. Whether 'A' has committed an offence?

பதினெட்டு வயதிற்கு உட்பட்ட 'ஆ' என்பவரை, 'அ' என்பவர் தனது தூண்டுதலினால் தற்கொலை செய்துகொள்ளும்படி செய்கிறார். இங்கு 'அ' ஏதேனும் குற்றம் புரிந்துள்ளாரா?

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, JUNE 2022

(Five Year Regular Course)
First Year - Second Semester
LAW OF CRIMES

Time : 2 1/2 hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. "The jurisdiction of the Indian Penal Code is territorial as well as extra territorial" - Discuss.

"இந்திய தண்டனை சட்டத்தின் அதிகார வரம்பானது நில ஆள்வரைக்கு மட்டுமன்றி ஆள்வரைக்கு அப்பாலும் உள்ளது" – என்பது குறித்து விவாதிக்க.

2. "All murders are culpable homicides; but all culpable homicides are not murders" - Examine.

"அனைத்து கொலையும் மரணம் விளைவிக்கக் கூடிய குற்றங்கள். ஆனால் அனைத்து மரணம் விளைவிக்கக் கூடிய குற்றங்களும் கொலை குற்றங்களாகா" – ஆய்க.

3. Explain the essential ingredients of the offence of kidnapping. Examine the

various intentional sources of committing kidnapping.

பிள்ளை பிடித்தல் குற்றத்தின் அடிப்படைக் கூறுகளை விளக்குக. பிள்ளைபிடித்தல் குற்றத்தில் பல்வேறு வகையான குற்றமுறு எண்ணங்ளை ஆய்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Explain the law regarding joint liability in criminal law.

குற்றச் சட்டத்தில் கூட்டுப் பொறுப்பு நிலையைச் சார்ந்த சட்டத்தை விளக்குக.

5. Explain the offences relating to elections under the Indian Penal Code.

இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் கூறப்படும் தேர்தல் தொடர்பான குற்றங்களை விளக்குக.

6. Define hurt and grievous hurt. Enumerate the various kinds of injuries which can be grouped under grievous hurt.

காயம் மற்றும் கொடுங்காயம் பற்றி விளக்குக. கொடுங்காயத்தின் கீழ் வகைப்படுத்தக் கூடிய பல வகையான காயங்களை வரிசைப்படுத்துக.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Voluntary intoxication.

தன்னிச்சையான போதை.

(b) Giving False Evidence.

பொய்சாட்சி அளித்தல்.

(c) R v Prince.

அரசு எதிர் பிரின்ஸ்.

(d) Sedition.

ஆட்சி எதிர்ப்புக் கிளர்ச்சி.

(e) Criminal misappropriation.

குற்றமுறு கையாடல்.

(f) Enhanced Punishment.

அதிகரிக்கப்பட்ட தண்டனை.

(g) Riot.

கலகம்.

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. 'A' shot at a tiger which was carrying away his friend 'B'. The shot hit 'B' and 'B' was killed. Explain the liability of 'A'.

'அ' என்பவருடைய நண்பர் 'ஆ' வை இழுத்துக் கொண்டு செல்லும் புலியை நோக்கி 'அ' சுடுகிறார். அந்தத் துப்பாக்கி குண்டு 'ஆ' மீது பாய்ந்து அவர் கொல்லப்படுகிறார். 'அ' வினுடைய பொறுப்பு நிலையை விளக்கவும்.

9. 'A' finds a diamond ring on the road, not knowing to whom it belongs. 'A' sells it immediately without attempting to trace the owner. Is 'A' guilty of any offence?

'அ' என்பவர் சாலையில் கிடந்த வைரமோதிரம் ஒன்றை அது யாருக்கு சொந்தமானது என்பது தெரியாமல் கண்டெடுக்கிறார். அதன் உரிமையாளரை கண்டுபிடிக்க முயலாமல் 'அ' அதனை உடனே விற்று விடுகிறார். 'அ' ஏதேனும் குற்றம் செய்தாரா?

10. 'A', notices a boy drowing in a pond. 'A' does not try to save him even though he knows swimming. Discuss the offence committed by 'A'.

'அ' என்பவர் ஒரு சிறுவன் குளத்தில் மூழ்கிக் கொண்டிருப்பதை கவனிக்கிறார். அவருக்கு நீச்சல் தெரிந்திருந்தும் அந்த சிறுவனை காப்பாற்ற முயற்சிக்கவில்லை. 'அ' செய்த குற்றத்தை விவாதிக்கவும்.

B.A.LL.B. DEGREE (SEMESTER) EXAMINATION, DECEMBER 2022

(Five Year Regular Course)
First Year - Second Semester
LAW OF CRIMES

Time : 2 1/2 hours Maximum : 70 marks

PART A - (2 X 12 = 24 marks)

Answer any TWO of the following in about 500 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 500 சொற்களில் விடையளிக்கவும்

1. Explain in detail the necessity of existence of mens rea in offences relating to State with decided cases.

அரசுக்கு எதிரான குற்றங்களில், குற்றமனத்தின் முக்கிய பங்கு குறித்து முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் விரிவாக விளக்கவும்.

2. In Indian Penal Code, under what circumstances the right of private defence against body and property can extend to cause death of another person.

இந்திய தண்டனைச் சட்டத்தின் கீழ் ஒருவர் எந்த சூழலில் மற்ற நபருக்கு எதிராக தற்காப்பு உரிமையை உடைமையையும் உயிரையும் பாதுகாக்கும் நோக்குடன் மரணம் விளைவிக்கக் கூடிய அளவிற்கு பிரயோகிக்க முடியும் என்பதைக் கூறுக.

3. What is criminal conspiracy? Discuss the essential of criminal conspiracy under the Indian Penal Code with decided case laws.

குற்றமுறு சதி என்றால் என்ன? குற்றமுறு சதியின் இன்றியமையாக் கூறுகளை முடிவு செய்யப்பட்ட வழக்குகளுடன் விவாதிக்க.

PART B - (2 X 7 = 14 marks)

Answer TWO of the following in about 300 words each

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு ஒவ்வொரு வினாவிற்கும் ஏறத்தாழ 300 சொற்களில் விடையளிக்கவும்

4. Define defamation. What are the defences available against the charge of defamation?

அவதூறு குற்றத்தை வரையறுக்க. அவதூறு குற்றச்சாட்டிற்கு எதிராக என்ன எதிர்வாதங்கள் உள்ளன?

5. Explain the provisions governing joint and constructive liability under the Indian Penal Code.

இந்திய தண்டனைச் சட்டத்தின் படி கூட்டுப்பொறுப்பு மற்றும் கொள்முறை பொறுப்பு பற்றிய பிரிவுகளை விளக்கவும்.

6. Discuss the circumstances under which theft will become robbery and dacoity.

எந்தச் சூழ்நிலைகளில் திருட்டு கொள்ளையாகவும், கூட்டுக்கொள்ளையாகவும் ஆகிறது என்பது குறித்து விவாதிக்கவும்.

PART C - (5 X 4 = 20 marks)

7. Write short notes on FIVE of the following:

பின்வருவனவற்றுள் ஐந்திற்கு சிறு குறிப்புகள் எழுதுக.

(a) Accident.

விபத்து.

(b) Abduction.

ஆளைக்கடத்துதல்

(c) Grievous hurt .

கொடுங்காயம்.

(d) Unnatural Offence.

இயற்கைக்கு முரணான குற்றம்.

(e) Bigamy

இருதார மணம்.

(f) Criminal breach of Trust.

குற்றமுறு நம்பிக்கை மோசடி.

(g) Culpable homicide.

மரணம் விளைவிக்கும் குற்றம்.

PART D - (2 X 6 = 12 marks)

Answer TWO of the following by referring to provisions of law and decided cases. Give cogent reasons.

பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சட்ட வகையங்கள் மற்றும் தீர்மானிக்கப்பட்ட வழக்குகளை கூறி தகுந்த காரணங்களுடன் விடையளிக்கவும்.

8. "A" falsely represents himself as "B" and obtains a passport in B's name. Discuss the liability of "A".

'அ' என்பவர் தன்னை "ஆ" என்று பொய்யாக அடையாளம் கூறி "ஆ" என்பவரின் பெயரில் கடவுச்சீட்டு பெறுகிறார். "அ" என்பவரின் பொறுப்புறுதியினை விவாதி.

9. "A", a man, ran towards a well saying that he would jump into it. He was caught before he could do so. Whether "A" is liable for any offence?

'அ' என்னும் நபர் கிணற்றுக்குள் குதிக்கப் போவதாக கூறிக்கொண்டு ஓடினார். அவர் அவ்வாறு செய்யும் முன் அவரைப் பிடித்து விட்டனர். "அ" ஏதேனும் குற்றத்தை செய்த பொறுப்பாவாரா?

10. 'A' instigates "B" to murder "C". "B" refuses to do so. What is the offence committed by "A" and whether "B" is liable? Decide.

'அ' என்பவர் "இ" என்பவரை கொலை செய்வதற்கு "ஆ"வை தூண்டுகிறார். "ஆ" அவ்வாறு செய்ய மறுக்கிறார். "அ" என்பவர் செய்த குற்றம் என்ன? "ஆ" என்பவர் பொறுப்படைவு பெற்றவரா? தீர்மானிக்க.

பிற்சேர்கை
Addendum

- குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 – ஒரு பார்வை
- இந்திய தண்டனைச்சட்டம் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 2021 – வகைமுறைகள்
- சட்டப்பல்கலைக்கழக பாடத்திட்டம்
- தேர்வில் அடிக்கடி வினாக்கள் கேட்கப்படும் பகுதிகள் – ஒரு சிறு விளக்கம்
- இந்திய தண்டனைச்சட்டத்தேர்வை எப்படி எழுத வேண்டும் ? – சில முக்கிய குறிப்புகள்

குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2019 [The Criminal Law (Amendment) Bill, 2019]

- ஒரு ஆய்வு

முப்பெரும் குற்றவியல் சட்டங்களில் ஒன்றான இந்திய தண்டனைச்சட்டமானது, பின்வரும் முக்கிய திருத்தச்சட்டங்களால் பல்வேறு திருத்தங்களுக்கு ஆளானது. அவை,–

(1) குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2005
[The Criminal Law (Amendment) Act, 2005]

(2) குற்றவியல் நடைமுறை (திருத்தச்) சட்டம், 2005
[The Code of Criminal Procedure (Amendment) Act, 2005]

(3) குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2013
[The Criminal Law (Amendment) Act, 2013]

(4) குற்றவியல் சட்டம் (திருத்தச்) சட்டம், 2018
[The Criminal Law (Amendment) Act, 2018]

இவற்றையடுத்து இந்திய தண்டனைச் சட்டமானது, **2019-இல் ஜம்மு மற்றும் காஷ்மீர் மறுச்சீரமைப்பு சட்டத்தால் (The Jammu and Kashmir Reorganisation Act, 2019)** திருத்தப்பட்டது. இத்திருத்தச்சட்டத்தின் விளைவாக, ஜம்மு மற்றும் காஷ்மீர் மாநிலம் நீங்கலாக நமது நாட்டில் செயல்விளைவில் (அமலில்) இருந்து வந்த இந்திய சாட்சியச் சட்டம், தற்போது ஜம்மு மற்றும் காஷ்மீர் உள்ளடங்கலாக இந்திய நாடு முழுமைக்கும் பொருந்தும் சட்டமாக ஆனது.

இந்நிலையில் மேற்சொன்ன திருத்தச்சட்டங்களில் மிக முக்கியமானவை என எடுத்துக் கொண்டால் 3 மற்றும் 4 இலக்கமிட்டதைக் குறிப்பிடலாம். காரணம், இவை இரண்டும் பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு எதிரான வன்புணர்வு உள்ளிட்ட பாலியல் குற்றங்கள் பற்றி பல்வேறு திருத்தங்களை இந்திய தண்டனைச் சட்டத்தில் செய்தன. குறிப்பாக பாலியல் தொடர்பாக பல புதிய குற்றங்களை அறிமுகப்படுத்தின. மேலும் பாலியல் குற்றங்களுக்கு ஏற்கனவே இருந்து வந்த தண்டனையின் அளவை அதிகப்படுத்தின.

இவ்வாறு இந்திய தண்டனைச்சட்டத்தில் கொண்டு வரப்பட்ட திருத்தங்களுக்கு இயைந்தவாறு, குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியச்சட்டம், பாலியல் குற்றங்களிலிருந்து குழந்தைகளைப் பாதுகாத்தல் சட்டம் ஆகியவற்றின் வகைமுறைகளிலும் அவ்விரு சட்டங்களும் திருத்தங்களைக் கொண்டு வந்தன.

இந்நிலையில்தான் பாலியல் குற்றங்கள் என்றாலே பெண்கள் மட்டுமே பாதிக்கப்பட்டவர்

களாக இருக்க வேண்டுமா? அவர்கள் மட்டுமே அக்குற்றங்களிலிருந்து சட்டப்பாதுகாப்புடையவர்களா? ஏன் ஒரு ஆணோ, ஓரினச்சேர்க்கையாளரோ, இருபால் சேர்க்கையினரோ அல்லது ஒரு முன்றாம் பாலினத்தவரோ வன்புணர்வு உள்ளிட்ட பாலியல் குற்றங்களால் பாதிக்கப்படுபவர்களாக ஆகும் இடர் இல்லாதவர்களா? நமது இந்திய அரசியலமைப்பு பாலினத்தைக் கொண்டு பாகுபாடு காட்டுவதைத் தடுக்கிறது. மேலும் திருநங்கை நபர்களை மூன்றாம் பாலினத்தவராக **(Transgender Persons as the 'Third Gender')** உச்ச நீதிமன்றம் வழக்கொன்றில்[1] அங்கீகரித்து, அவர்களுக்கும் சட்டத்தின் முன் சமமான உரிமையும் சம பாதுகாப்பையும் வழங்க வேண்டும் என்று கூறுகிறது.

எனவே வன்புணர்வு உள்ளிட்ட பாலியல் குற்றங்கள், 'பெண்' என்ற ஒரு பாலினத்திற்கு மட்டும் எதிரானது என்ற நிலையிலிருந்து மாறி, அவை பாலின பாகுபாடு அற்றது **(Gender-neutral)** என்ற நிலையை உருவாக்க வேண்டும் என்ற கருத்து வலுப்பெற்றது. பாலியல் குற்றங்கள் தொடர்பான சட்டங்களில் 'பெண்' என்று வரும் இடங்களில் 'நபர்' என்ற சொல்லை மாற்றீடாக்கி வைக்க வேண்டும் என்றும், அதுபோல் 'ஆண்', 'பெண்' என்ற சொற்கள் வரும் இடங்களில் அவர்களுக்கடுத்து, 'திருநங்கை' சொல்லும் இடம் பெற வேண்டும் என்றும், இதன் அடிப்படையில் இந்திய தண்டனைச் சட்டத்தில் பாலியல் குற்றங்களைப்பற்றி கூறும் வகை முறைகளைத் திருத்த வேண்டும் என்றும், இதற்கிணங்க குற்றவியல் நடைமுறைச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டத்தைத் திருத்த வேண்டும் என்றும் கோரிக்கை எழுந்தது.

இவற்றின் அடிப்படையில் இந்தியாவில் பாலியல் குற்றங்களை பாலின பாகுபாடற்றதாக ஆக்க வேண்டுமென்ற நோக்கில் 2019 ஆம் ஆண்டு ஜூலைத்திங்கள் 12–ஆம் தேதியில் மூத்த வழக்குரைஞரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு. கே.டி.எஸ்.துள்சி என்பவர் சட்டமுன்வடிவு ஒன்றை மாநிலங்களவையில் அறிமுகப்படுத்தி னார்.

மொத்தம் நான்கு இயல்களைக் கொண்ட இந்த சட்ட முன் வடிவின் நோக்கம் இந்திய தண்டனைச் சட்டம், இந்திய சாட்சியச் சட்டம், 1872, குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ஆகியவற்றை மேலும் திருத்துவது[2] ஆகும்.

இச்சட்டமுன்வடிவு இந்திய தண்டனைச் சட்டத்தில் மிக விரிவான திருத்தங்களைக் கொண்டு வந்துள்ளது. அதே நேரம் அவற்றுக்கு இயைந்தவாறு குற்றவியல் நடைமுறைச் சட்டம் மற்றும் இந்திய சாட்சியச் சட்டத்திலும் சில திருத்தங்களைச் செய்துள்ளது.

இந்தச்சட்டமுன்வடிவு இப்பதிப்பு அச்சேறும் வரையில் சட்டமாக்கப்பட்டு செயல் விளைவுக்கு கொண்டு வரப்படவில்லை. அவ்வாறு வரும் நேர்வில், அது அடுத்த பதிப்பில் விரிவாகச் சேர்க்கப்படும்.

1. National Legal Services Authority v. Union of India, (2014) 5 SCC 438
2. A BILL further to amend the Indian Penal Code, 1860; the Code of Criminal Procedure, 1973 and the Indian Evidence Act, 1872.

இந்திய தண்டனைச்சட்டம் (தமிழ்நாடு திருத்தச்) சட்டம், 2021

[Indian Penal Code (Tamil Nadu Amendment) Act, 2021[1]]

Under Rule 130 of the Tamil Nadu Legislative Assembly Rules, the following Bill which was introduced in the Legislative Assembly of the State of Tamil Nadu on 5th February, 2021 is published together with Statement of Objects and Reasons[2] for general information:—

L.A. Bill No. 5 of 2021

A Bill further to amend the Indian Penal Code, 1860 in its application to the State of Tamil Nadu.

Be it enacted by the Legislative Assembly of the State of Tamil Nadu in the Seventy-second Year of the Republic of India as follows:—

1. Short title, extent and commencement.- (1) This Act may be called the Indian Penal Code (Tamil Nadu Amendment) Act, 2021.

---

1. Published in Tamil Nadu Government Gazeette Ex-IV-1-68—1E dated 5/2/2021

[2]STATEMENT OF OBJECTS AND REASONS

The Hon'ble Chief Minister made an announcement on the 16th September 2020 under rule 110 of the Tamil Nadu Legislative Assembly Rules that, in order to enhance the punishment for offences committed against women and children, action would be taken to amend the provisions contained in sections 304-B, 354-B, 354-D, 372 and 373 of the Indian Penal Code, in its application to the State of Tamil Nadu. To give effect to the said announcement, the Government have decided to amend the Indian Penal Code (Central Act XLV of 1860) suitably for the purpose.

2. The Bill seeks to give effect to the above decision.

C.Ve. SHANMUGAM,
Minister for Law, Courts and Prisons.

Chennai-600 009,
5th February 2021.

K. SRINIVASAN,
Secretary.

(2) It extends to the whole of the State of Tamil Nadu.

(3) It shall come into force on such date as the State Government may, by notification, appoint.

2. Amendment of section 304-B.- In section 304-B of the Indian Penal Code (hereinafter referred to as the principal Act), in sub-section (2), for the expression "seven years", the expression **"ten years"** shall be substituted.

3. Amendment of section 354-B.- In section 354-B of the principal Act, for the expressions "three years" and "seven years", the expressions "five years" and **"ten years"** shall, respectively, be substituted.

4. Amendment of section 354-D.- In section 354-D of the principal Act, in sub-section (2), for the expression "five years", the expression **"seven years"** shall be substituted.

5. Amendment of section 372.- In section 372 of the principal Act, for the expression "which may extend to ten years,", the expression **"which shall not be less than seven years, but which may extend to imprisonment for life"** shall be substituted.

6. **Amendment of section 373.-** In section 373 of the principal Act, for the expression "which may extend to ten years,", the expression **"which shall not be less than seven years, but which may extend to imprisonment for life"** shall be substituted.